JL
V2;1194:19(3JM)m,
N39
N44
69411

புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம் வருஷம் மார்ச்சுமீ 4உ [ந. 187


தேசீய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

**பிரஸங்கம் CLXXXVII.**

## ஜப்பானியரின் பிராசீனமான பாஸிஸ்டு தத்வம்.

---

நேசதேசத்தார்கள் அச்சுநாடுகளின் கொடுங்கோன்மையையும், அடிமைத்தனத்தையும் கொடுமையையும் சகிப்புத்தன்மையின்மையையும் ஒழித்துவிடப் போர் நடத்திவருகிறார்கள். சென்ற அநேக வருஷங்களாக ஜெர்மன் மக்கள் யதேச்சாதிகாரிகளின் அமுலுக்குட்பட்டு வருகிறார்களென்று சொல்லப்படுகிறது. இந்த யதேச்சாதிகாரம் கிருஸ்துவின் ஜனன காலம் முதல் ஜப்பானின் நடவடிக்கையில் காணப்படுகிறது.

தலைவரைப் பூஜிப்பது ( இதற்கு நாம் ஹிட்லருக்கு நன்றி செலுத்தவேண்டும் ) என்பது கி. மு. 600-ம் வருஷத்தில் ஆரம்பமாயிற்று. அப்பொழுது சூரிய தேவதையின் பிரபௌத்திரனான ஜிம்மு சக்ரவர்த்தி ஜப்பானில் ஆக்ஷிபுரிந்துவந்தார். ஜப்பானியர்களின் அபிப்பிராயப்படி மன்னரும் ஒரு தலைவர்தான். அவர் தெய்வீக சக்தியுள்ள தலைவர். இந்த கற்பனை புகட்டவேண்டியதில்லை. இது ஜப்பானியக் குழந்தைக்கு ஸ்வபாவமாக ஏற்படக்கூடிய குணம். இந்த குணம் அவர்களிடம் தொன்றுதொட்டு காணப்படுகிறது.

நாஸிகளின் ஆயுதங்களில் மிகவும் பரிஷ்காரமானதென்றும் மிகவும் பயங்கரமானதென்றும் கருதப்படும் ரகசியப் போலீஸார்கள் 1939—40-ம் வருஷத்தில் இந்த வேலையை எவ்விதம் செய்வதென்பதை அறியும்பொருட்டு ஜப்பானுக்கு ஒரு தூது கோஷ்டியை அனுப்பினார்கள். ஒன்றுபட்ட பொறுப்பென்ற ஹிட்லரின் கொள்கை சமீப காலத்தில் தோன்றியது. அநேக நூற்றாண்டுகளாக ஜப்பானிய அதிகாரிகள் நகரங்களிலுள்ள ஜனத்தொகையை ஐந்து ஐந்து குடும்பங்களாக பிரித்துவிட்டார்கள். அந்தப் பிரிவினையைச் சேர்ந்த ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் மற்றவர்களின் நடவடிக்கைகளுக்கு ஜவாப்தாரியாவார்கள். ஜப்பானில் எல்லா உத்தியோகங்களையும் இரு உத்தியோகஸ்தர்கள் கவனித்துவருகிறார்கள். ஒருவரை ஒருவர் நம்பியிருப்பார்கள்.

### போலீஸ் ஆக்ஷி.

ஒவ்வொரு மாதமும் ஒரு உத்தியோகஸ்தர் டோகியோவிலுள்ள ஒவ்வொருவரையும் பார்வையிடுவார். அவருடைய மாகாணத்திலுள்ள வீடுகளிலுள்ள ஒவ்வொருவருடைய நடைமுறைகளையும் அவர் தன்னுடைய புத்தகத்தில் பதிவு செய்துகொள்ளுவார். சந்தேகப்

படக்கூடிய நடவடிக்கைகளுடையவர்களை சாதாரண உடை தரித்த ஜப்பானியர்கள் கவனித்து வருவார்கள். ரகசியப் போலீஸார் எல்லா ஜப்பானியர்களையும் கண்காணிப்புச் செய்து வருகிறார்கள்.

புத்தகங்களை நாஸிகள் தீக்கிரையாக்கியதைக் கண்டு உலகம் நடுக்கம் கொண்டது. ஜப்பானியர்கள் புத்தகங்களை எரிக்க தேவை ஏற்படவில்லை. ஜப்பானியச் சக்ரவர்த்தியுடையவும் அவருடைய ஆலோசகர்களுடையவும் ஆமோதனத்துக்குட்படாமல் அச்சிடப்பட்ட புத்தகங்கள் ஜப்பானில் கிடையாது. ஜெர்மானியர்கள் உயர்தர ஜாதியாரென்றும் ஜெர்மானியர்கள் உலக ஆதிக்கம் பெறவேண்டுமென்றும் போதிக்கப்படும். நாஸிக் கல்வி முறைகள் அநேக வருஷங்களாக ஜப்பான் கையாண்டுவரும் நடவடிக்கையுடன் ஒப்பிட்டால் பதர் போன்றவை.

ஹிட்லரின் கியாதி வெளியாகுமுன் ஜப்பானியப் பள்ளிக்கூடத்தில் பாட புத்தகமாக வைக்கப்பட்டிருந்த புத்தகத்தில் பின்கண்ட மேற்கோள் காணப்படுகிறது. "உலகத்திற்கு ஜப்பான் எவ்வளவு நன்மையளித்திருக்கிறதென்பதை ஜப்பானியர்கள் மறந்துவிடக்கூடாது. இந்த அறிவுதான் கர்வமும், அகம்பாவமும் உள்ள நாடுகளை நாம் ஜெயித்து உலகத்தை ஆளுவதற்கு நமக்கு சக்தியைக் கொடுக்கும். ஒரு சமயத்தில் உலகத்திலுள்ள ஆபாசத்தை ஒழித்தும் அகம்பாவமும் மரியாதையற்றதுமான நாடுகளையும் அடக்கியாண்ட பின்னர் ஜப்பான் உலகத்தின் சக்ரவர்த்தியாகவும் ஸர்வலோக ரக்ஷகராகவுமிருக்கும்.

69411

## ராணுவப் பொம்மைகள்.

ஜப்பானியர்களின் ராணுவப் பயிற்சி ஐந்து வயதில் துவக்கப்படும். அதற்கு முன் சிறு பிள்ளைகள் விளையாட உபயோகிக்கும் பொம்மைகள் ராணுவத்தைச் சேர்ந்த உருவங்கள். 10 வயது ஆகும்பொழுது அவர்கள் யுத்த முறைகளில் நன்கு பயிற்சிபெற்றுவிடுவார்கள்.

உலகத்தார்கள் ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று ஹிட்லர் தன்னுடைய கக்ஷியிலுள்ளவர்களை ஒழுங்குபடுத்தியதைக் கண்டு இது ஐரோப்பிய ராஜ்யத்தில் நூதனமான நடவடிக்கையென்று சொல்லிவந்தார்கள். ஜப்பானில் மந்திரிகளை மாற்றுவதற்குக் கொலைதான் நிகுதியான முறை என்பதை அவர்கள் காணக்கூடவில்லை. 1936-ம் வருஷத்தில் சேனைத் தலைவர்கள் பகிரங்கமாகத் தாங்கள் சக்ரவர்த்திக்காக உயிர் துறந்துவருகிறோமென்று சொன்னபொழுது பொக்கிஷ மந்திரியாகயிருந்த, மதிப்புப் பெற்ற, அன்புமிக்க டாகாஹாஷி பின்வருமாறு சொன்னான். "சேனைகள் தங்கள் உயிரைத் துறக்கவில்லை. பிரதம மந்திரிகள் தான் கொலை செய்யப்படுகிறார்கள்." சில மாதங்களுக்குப் பின் அவர் பேரில் சேனைத் தலைவர்கள் யந்திர பீரங்கி பிரயோகம் செய்து அவரைக் கொன்றுவிட்டார்கள்.

ஹிட்லரின் ஆக்ஷியின் மற்ற அம்சங்கள் எவை? அக்கிரமப்போர் தொடுத்து தேசங்களை ஆக்கிரமிப்பது? ஜப்பானியர்களும் 1931-ம் வருஷத்தில் மஞ்சூரியாப்போரைத் துவக்கினார்கள். கொரியாவையும் மற்ற நாடுகளையும் ஹிட்லர், ஜெர்மனியை விஸ்தாரப்படுத்தவேண்டுமென்று நினைத்து திட்டம் போட்டதுபோல் ஜப்பானியர்களும் கைப்பற்றி ஜப்பானை விஸ்தாரப் படுத்தினார்கள். ஐரோப்பாவில் வியவசாய முதலாளிகளும் அவர்களை அண்டியிருக்கும் அடிமைகளுமிருக்கவேண்டுமென்றும் ஜெர்மனியில் தொழிற்சாலைகள் மிகுதியாகயிருக்க வேண்டுமென்றும் நினைக்கும் ஜெர்மன் பொருளாதார திட்டமானது, ஜப்பானைப் பின்பற்றியது. ஆசியா கண்டத்திலுள்ள நாடுகளில் அடிமைத்தனத்தை ஜப்பான் நிறுவியிருக்கிறது. அது போல ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பிய நாடுகளில் ஹிட்லர் புதிய உலக அமைப்பு திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர முயற்சித்து வருகிறான். ஹிட்லரின் அபிப்பிராயங்களுக்கு முரணான மதக்கொள்கைகளை ஹிட்லர் அடக்கியாளும் நடவடிக்கை ஜப்பானைப் பின்பற்றியது. ஜப்பானில் சக்ரவர்த்திதான் தெய்வமென்ற மேற்கோளை எந்த மதஸ்தரும் எந்த வேதாந்தியும் விசாரம் பண்ண அனுமதிக்கப்படமாட்டார்கள்.

கடைசியாக வாசஸ்தல விஸ்தரிப்பு என்பதையும் கூறுவோம். இந்தக் கொள்கை ஜப்பானில் 50 வருஷங்களாக நிலைபெற்றிருக்கிறது. ஆகையால் நாஸிகளைப் பின்பற்றி ஜப்பானியர்கள் தங்களுடைய நடவடிக்கைகளை நிறுவியிருக்கிறார்களென்று பொது ஜனங்கள் அபிப்பிராயப்படுவது முற்றிலும் தவறானது. உண்மைக்கு விரோதமானது. உலகம் தோன்றியது முதல் பலமாக வேரூன்றியிருக்கும் ஒரு முறையை அழிப்பதைவிட சென்ற சில வருஷங்களாக நிலை பெற்றிருக்கும் கெடுதலான ராஜீய முறைகளையும் யதேச்சாதிகாரக் கொள்கைகளையும் ஒழிப்பது மிகவும் சுலபமான காரியமாகும்.



# வார யுத்தச் செய்திகள்.

## (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 21—2—44 (திங்கட்கிழமை). | ருஷ்யர்கள் ஸால்ட்சியையும் கோமையும் ஆக்கிரமித்தனர். |
| 22—2—44 (செவ்வாய்க்கிழமை). | ஜெர்மனியிலுள்ள விமான உற்பத்தி தொழிற்சாலைகளான பெர்பர்க், ஆஷெர்ஸெல்பன், ரீஜன்ஸ்பர்க் முதலிய இடங்கள் பிரிடனிலிருந்தும் இதாலியிலிருந்தும் சென்ற விமானங்களால் தாக்கப்பட்டன. நாஸிகள் 133 சண்டை விமானங்களை இழந்தனர். ருஷ்யர்கள் நீபர் நதி வளைவிலுள்ள கிரிவாய்ராக்கைக் கைப்பற்றினார்கள். |
| 23—2—44 (புதன்கிழமை). | நேசதேச விமானங்கள் ஸ்டெயிரிலுள்ள விமான உற்பத்தி தொழிற்சாலைகளை நொருக்கின. |
| 24—2—44 (வியாழக்கிழமை). | நேசதேச விமானப்படைகள் கோதா, ஷ்வீன்பர்ட், ஸ்டெயிர் முதலிய ஜெர்மன் தொழிற்சாலைகளை பலமாகத் தாக்கின. எதிரிகளுக்கு 156 சண்டை விமானங்கள் நஷ்டமாயின. |
| 25—2—44 (வெள்ளிக்கிழமை). | நேசதேச விமானங்கள் ரீஜன்ஸ்பர்க்கிலும், ஆக்ஸ்பர்க்கிலும், பர்த்திலும், ஸ்டட்கார்ட்டிலுமுள்ள ஜெர்மன் விமான உற்பத்தி தொழிற்சாலைகளைத் தாக்கின. ஜெர்மனிக்கு 146 சண்டை விமானங்கள் நஷ்டம். யூகோஸ்லாவியப்படைகள் டால்மேஷியா தீவுகளைச் சேர்ந்த பிராக்கிலிறங்கின. |
| 26—2—44 (சனிக்கிழமை). | ருஷ்யர்கள் பின்லாந்தின் தலைநகரமான ஹெல்சிங்கியை பலமாக வெடிகுண்டுகள் மூலம் தாக்கினார்கள். ருஷ்யர்கள் போர்காவைப் பிடித்தனர், |
| 27—2—44 (ஞாயிற்றுக்கிழமை). | நேசதேசத்தார்கள் பர்மாவிலுள்ள அரக்கான் போர்முனையில் 8,000 ஜப்பானியர்களை அழித்தனர். ஜப்பானியர்களுக்கு பெருந் தோல்வி கிடைத்தது. |

## (B)-செய்திச் சுருக்கம்.

**ருஷ்யா.**—ருஷ்யப்போர் முக்கியமாக வடக்குப்பக்கத்தில் லாட்வியா, எஸ்தோனியா எல்லைச்சரகத்தை நோக்கியும், மத்திய பாகத்தில் வெண்மை ருஷ்யாவின் தலைநகரமான மின்ஸ்கை நோக்கியும், தெற்குப்பகுதியில் ஒடெஸ்ஸா—வார்ஸா இருப்புப்பாதையை நோக்கியும் முன்னேறுவதாக நடைபெற்றுவருகிறது.

லெனின்கிராட் அல்லது வடக்குப் போர்முனையில் ருஷ்யப்படைகள் பெஸ்காவை அடைந்துவிட்டன. கீழே குறிப்பிட்ட இடங்கள் இவ்வாரத்தில் பிடிபட்டன. ஸ்ட்ருகி-காஸ்நியே, டுனோ, மியல்நிட்ஸி, பெஷாநிட்ஸி, ஸாபெலேயி, புஸ்டோஸ்கா, காராமிஷேயோ, ஸ்லாவ்கோவிசி, போஷெரெவிகி, ஸ்லோபோடா, நோவொரிஷெவ், போகொரெல்கா, டால்கோ ரெயிட்ஸா.

மத்திய பிரதேசத்தில் ஜெர்மானியர்கள் வைடப்ஸ்கிலுள்ள தங்கள் அரணைக் காலி செய்துவிட்டனர். ருஷ்யர்கள் வெண்மை ருஷ்யாவின் மத்தியிலுள்ள ரோகாசெவ்வைப் பிடித்தனர். இதன்மூலம் ஜெர்மானியர் வசமிருக்கும் வெண்மை ருஷ்யாவின் தலைநகரமான மின்ஸ்குக்கு ஆபத்து உண்டாகிவிட்டது.

நீபர் நதிப் போர்முனையில் நோவோ வோரொண்ஸோங்கா, ஸ்கிரோகோயி, இங்குலெட்ஸ், வைஸோகோபோலியே, முதலிய இடங்கள் பிடிக்கப்பட்டன.

**இதாலி.**—ஒரு வாரமாக கால நிலையின் அசௌகரியத்தினால் ஆன்சியோ போர்முனையில் ஓய்வு ஏற்பட்டிருக்கிறது. கிடைத்த அவகாசத்தில் இருதரப்பாரும் தங்களுடைய பலத்தைப் பெருக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

சென்ற சில நாட்களில் எதிரி காரசெடோவுக்கும் சிஸ்டெர்னியாவுக்கும் மத்தியில் கபடமாக ஊடுருவிச்செல்ல முயற்சித்தான். அது பயன்படவில்லை. முன்னேறும் வாசலில் மற்ற இடங்களில் சில்லரைப்போர்கள் நடைபெற்றன. பிரிடிஷ் துருப்புகள் பிப்ரவரி மாதம் 27-ம் தேதியன்று இரண்டு முக்கியமான ஸ்தானங்களைக் கைப்பற்றினார்கள். ஜெர்மனி செய்த மூன்றாவது தாக்குதலை நாம் துரத்தியடித்தோம். போர் நின்று விட்டது.

5-ம் படை காசினோ நகரத்தில் மூன்றில் ஒரு பங்கைப் பிடித்துவிட்டது.

எட்டாவது சேனையிருக்கும் போர்முனையில் பிரிடிஷ் துருப்புகள் ஆர்ஸோக்னாவுக்குத் தென்மேற்கில் ஐந்து மைல்களிலிருக்கும் கார்டியா கிரெலிக்குத் தென்கிழக்கில் சற்று முன்னேறியிருக்கிறார்கள். இங்கே இந்தியத் துருப்புகள் ஜெர்மன் எல்லைப்புற தற்காப்பு நிலயங்களை அழித்திருக்கிறார்கள். இந்திய பீரங்கிப்படையினர் ஜெர்மன் சட்டி பீரங்கிகளை நொருக்கியிருக்கிறார்கள்.

யூகோஸ்லாவிய கொரில்லாப்படைகள் டால்மேஷியாத் தீவுக்கூட்டத்தைச்சேர்ந்த பிராக்கிலிறங்கிவிட்டார்கள். டால்மேஷியா கடற்கரைக்கருகிலுள்ள ராச், பாக் என்ற தீவுகளைக் கைப்பற்றினார்கள்.

**விமான நடவடிக்கை.**—பிப்ரவரி மாதம் 22-ம் தேதியன்று ஜெர்மன் விமான உற்பத்தி தொழிற்சாலைகள் மூன்று தடவை தாக்கப்பட்டபொழுது 310 ஜெர்மன் சண்டை விமானங்கள் அழிந்தன. தரையிலிருந்த அநேக விமானங்களும் நொருக்கப்பட்டன. கீழ்கண்ட இடங்கள் குண்டுவீச்சுக்குட்பட்டன. ஜெர்மனியிலுள்ள பீடர்ஹாஸன், ஆஷெர்ஸ்லேபென், பெர்ன்பர்க், ரீஜன்ஸ்பர்க், ஆஸ்திரியாவிலுள்ள ஸ்டெயிர். இதாலியிலிருந்து புறப்படும் விமானங்கள் மற்றொரு இடத்தில் தாக்குதலைச் செய்தன.

அன்று தினம் 175 ஜெர்மன் விமானங்கள் இங்கிலாந்தின் கடற்கரைக்கு வந்தன. அவைகளில் 100 லண்டன் பிரதேசத்துக்கு வந்தன.

பிப்ரவரி 23-ம் தேதியன்று 8-வது விமானப்படை கோதாவிலுள்ள விமான உற்பத்தி தொழிற்சாலையையும் ஷ்வீன்பர்ட்டிலுள்ள ரசகுண்டுகளை உற்பத்தியும் தொழிற்சாலையையும் தாக்கின. ஜெர்மன் விமானப்படை பூராவும் எதிர்த்துப் போராடின. இந்த நடவடிக்கை பூராவிலும் நேசதேச விமானப்படை மேன்மையுடன் போர்புரிந்தது. 700-மைல்கள் தூரத்தை அவைகள் 3½-மணிக்குள் கடந்தன.

பிப்ரவரி 24-ம் தேதியன்று 250-க்கு மேற்பட்ட விமானங்கள் ஹாலந்திலுள்ள நான்கு ஜெர்மன் விமான தளங்களை நொருக்கின. அவைகள் பின்வருமாறு:—ஜெர்மன் எல்லைச் சரகத்திலுள்ள டீலன், ப்ரீஸ்லாந்திலுள்ள லீயூவார்டன், கிஸ்லி, ரீஜன், எதிர்ப்பு சொல்பமாக இருந்தது.

அன்று தினம் ஏழு மாதங்களுக்குப்பின் லண்டனில் பகலில் விமான எதிர்ப்புச் சங்கு ஒலித்தது. எதிரியின் 10 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. குழந்தைகளின் நஷ்டம் அதிகம். சில பழமையான சித்திர வேலைகள் நாசமாகிவிட்டன.

பிப்ரவரி மாதம் 25-ம் தேதி ரீஜன்ஸ்பர்க், ஆக்ஸ்பர்க், யர்த், ஸ்டட்கார்ட் முதலிய இடங்கள் தாக்கப்பட்டபொழுது எதிரியின் 145 விமானங்கள் நாசமாகிவிட்டன. ரீஜன்ஸ்பர்க்கிலும் யர்த்திலும் விமானத்தின் கூடுகளைச்செய்யும் பாகங்கள் தயாரிக்கப்படுகின்றன. ஸ்டட்கார்ட்டில் மெஸ்ஸர் ஸ்மிட் விமானங்கள் கட்டப்படுகின்றன. ஆக்ஸ்பர்க்கில விமானங்கள் பரீக்ஷை பார்க்கப்படுகின்றன.

ருஷ்ய விமானங்கள் பின்லாந்திலுள்ள ஆபோவையும் ஹெல்ஸிங்கியையும் தாக்கின.

**பஸிபிக் போர்.**—காரொலைன் தீவுக்கூட்டங்களுக்கு வடக்கிலும் டோக்கியோவுக்கு 1,300-மைல்களுக்கப்பாலிலுள்ள மாரியானா தீவுக்கூட்டத்தைச் சேர்ந்த ஸைபான், டினியன் தீவுகள் தாக்கப்பட்டன.



நியூகினியாவில் ஸைதார் பிராந்தியத்தில் நேசதேச தரைப்படைகள் காபூமி என்னும் கிராமத்தைப் பிடித்தனர். மோட் நதியில் முன்னேறும் வாசலை ஸ்தாபித்தனர்.

**பர்மா**—இந்த வாரத்தில் 14-வது சேனை அரக்கான் போர்முனையில் மகத்தான வெற்றி பெற்றது. அரக்கான் போர்முனையிலுள்ள நேசதேசப்படைகளை அழித்துவிட்டு இந்தியாவுக்குள் புகுந்துவிடுவதென்று எதிரி செய்த பிரயத்தனம் வீணாகப்போனதுடன் அவனுக்குப் படு தோல்வியும் நாசமும் ஏற்பட்டது. மாயூ மலைகளிலிருக்கும் ஙியாக்யேடா கணவாயைக் கைப்பற்றி அதற்கு இருபக்கத்திலுமுள்ள நேசதேசப்படைகளை, துண்டித்து விடுவதென்று எதிரி திட்டம்போட்டிருந்தான. ஆரம்பத்தில் அவன் கணவாயையும் அதற்கு சமீபத்திலிருந்த ரஸ்தாவையும் வெற்றிகரமாகப் பிடித்தான். மூன்று வாரங்களாக கோரமான போர் நடைபெற்றது. போரில் ஈடுபடாத இந்தியர்கள் துருப்புகளுக்கு ஸப்ளைகளைக் கொண்டு போனார்கள். இப்பொழுது எதிரி துரத்தியடிக்கப்பட்டுவிட்டான். எதிரியை வேட்டையாடி அழித்துவருகிறார்கள். எதிரியை அழிக்கும் வேலை பலமாக நடைபெற்றுவருகிறது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**20—2—44.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—(12 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

விமானத் தொழிற்சாலைகள்.—லீப்ஸிக் (Leipzig), கோதா (Gotha), பெர்பெர்க் (Berberg).

இதர தொழிற்சாலைகள்.—லீப்ஸிக் (Leipzig), பிரன்ஸ்விக் (Brunswick).

இரவு.—(10 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

மோட்டார் தொழிற்சாலைகள்.—மேற்கு ஜெர்மனியிலுள்ள ஸ்டட்கார்ட் (Stuttgart).

இலக்குகள்.—எதிரி ஆக்கிரமித்த பிரதேசங்கள்; மியூனிச் (Munich).

சுரங்கவெடி பரவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

**இதாலி (Italy).**

ஸப்ளைக் குவியல்கள், ஸ்தாபனங்கள், பீரங்கி ஸ்தாபனங்கள்.—ஆன்சியோ (Anzio) முனை.

கப்பல்கள்.—வியாரெஜ்யோ (Viareggio).

**ருஷ்யா (Russia).**

(11 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

பார்முஷிரோ (Parmvshiro) தீவு.

ஜப்பானியத் தீவுகள்.—கிழக்கு மார்ஷல் (East Marshall) தீவுக் கூட்டங்கள்.

எதிரி சைனியங்கள்.—ஹன்ஸா பே (Hansa Bay).

**பர்மா (Burma).**

டாங்குப் (Tangup).

ரயில்வே மோட்டார் போக்குவரத்துகள்.—வடக்கு முனிவா (Monywa).

எதிரி சைனியங்கள்.—அரக்கான் (Arakan) முனை.

படகுகள்.—தென் பர்மா (South Burma) நீர்நிலைகள்.

ரயில்வே ஜங்ஷன்கள், ஸப்ளை பிரதேசங்கள்.—வடக்கு பர்மா (Northern Burma).

**21—2—44.** (திங்கட்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—விமானத் தொழிற்சாலைகள்—பிரன்ஸ்விக் (Brunswick).

விமான நிலயங்கள்.—வடமேற்கு ஜெர்மனி (N. W. Germany).

இரவு.—ராணுவ இலக்குகள்—மேற்கு ஜெர்மனி (West Germany), ஆக்கிரமித்த பிரதேசங்கள்.

சுரங்கவெடி பரவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.—(1 நேசதேச விமானம் காணப்படவில்லை).

**இதாலி (Italy).**

ரயில்வே தளங்கள்.—ஓர்ட்டி (Orte).

கப்பற்கட்டுந்துறைகள்.—இம்பீரியா (Imperia), லெக்ஹார்ன் (Leghorn).

எதிரி துருப்புகள், பீரங்கி ஸ்தாபனங்கள், ஸப்ளை பிரதேசங்கள்.—யுத்தம் நடக்கும் முனைகள்.

**ருஷ்யா (Russia).**

(8 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயங்கள்.—ரபால் (Rabaul).—(26 ஜப்பானிய விமானங்கள் நாசமாக்கப்பட்டன.

ஸப்ளைக் குவியல்கள்.—அராவி (Arawe).

ஜப்பானியக் கப்பல்கள்—வீவாக் (Wewak).

எதிரி சைனியங்கள்.—ஹன்ஸா பே (Hansa Bay).

### பர்மா (Burma).

ஜப்பானிய சைனியங்கள்.— பூதிடாங்கிற்கு (Buthidaung) வடகிழக்கு, சகெய்ங், (Sagaing), வாடாங் (Wataung).

எதிரி இலக்குகள் —அரக்கான் (Arakan), ஹோமாலின் (Homalin).

ரஸ்தா நதி இலக்குகள்.—தெற்கு, மத்திய பர்மா (Burma) பிரதேசங்கள்.

தொழிற்சாலைகள், களஞ்சியங்கள்.—வுந்தோ (Wuntho), காலின் (Kawlin).

**22—2—44.** (செவ்வாய்க்கிழமை).

### ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

(133 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன; 52 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

விமானத் தொழிற்சாலைகள்.— பெர்பெர்க் (Berberg), ஆஸ்செர்ஸெல்ஸென் (Ascherselsen), ஹால்பர்ஸ்டாட் (Halberstadt), ரீகன்ஸ்பர்க் (Regensburg).

விமான நிலயம், இதர இலக்குகள்.—மத்திய ஜெர்மனி, தெற்கு ஜெர்மனி (Southern Germany), ஹெல்ஸிங்கி (Helsinki).

ரயில்வே தளங்கள்.-பீடர்ஹாஸென் (Peterhausen).

இரவு.—இலக்குகள்—மேற்கு, தென்மேற்கு ஜெர்மனி (Western and S. Western Germany).

துறைமுகம்.—ஆபோ (Abo).

### இதாலி (Italy).

### பால்கன் நாடுகள் (Balkans).

(50 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன, 15 நேச விமானங்கள் காணப்படவில்லை).

விமான நிலயம்.—யூகோஸ்லாவியாவிலுள்ள ஸாக்ரெப் (Zagreb).

ரயில்வே போக்குவரத்துகள்.—போலிக்னோ (Foligno), ஆல்பேனியா (Albania), மொண்டால்டோ (Montalto), டிகாஸ்ட்ரோ (Dicastro).

துறைமுகங்கள்.—ஸாரா (Zara), ஸிபெனிக் (Sibenik).

துருப்பு ஸ்தாபனங்கள், பீரங்கி ஸ்தாபனங்கள், ஸப்ளைக் குவியல்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

எதிரி கப்பற்கூட்டங்கள்.— ஹெராக்ளியான் (Heraklion).

### ருஷ்யா (Russia).

(20 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

எதிரி சைனியங்கள்.—நியூ கினியிலுள்ள மடாங் (Madaung).

ரபால் (Rabaul).

### பர்மா (Burma).

புரோம் (Prome), அக்யாப் (Akyab).

படகுகள்.—மாயூ (Mayu), கலடான் (Kaladan) பிரதேசங்கள்.

ஜப்பானியத் துருப்புகள், பீரங்கி ஸ்தாபனங்கள்.—அரக்கான் (Arakan) பிரதேசம்.

**23—2—44.** (புதன்கிழமை).

### ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமானத் தொழிற்சாலைகள்—ஸ்டெர் (Steyr)

இலக்குகள்.—வடக்கு பிரான்ஸ் (Northern France).

விமான நிலயம்.—ஹாலந்து (Holland).

இரவு.—இலக்குகள்.—மேற்கு ஜெர்மனி (Western Germany).

### இதாலி (Italy).

(36 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன, 7 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

எதிரி சைனியங்கள் துருப்புகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

கப்பல்கள்.—டால்மேஷியன் (Dalmatian) கடற்கரை, கோஸ்டிகிளியோநெல்லோ (Coastiglionello).

### ருஷ்யா (Russia).

(18 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

ஸெய்பான் (Saipan), டினியன் (Tinian).

ஸப்ளை தளங்கள்.-ஹன்ஸா பே (Hansa Bay)

விமான நிலயங்கள்.—ரபால் (Rabaul).

கப்பல்கள்.—காவியெங் (Kavieng).

### பர்மா (Burma).

விமான நிலயங்கள்.—மாக்வி (Magwe), அக்யாப் (Akyab)

படகுகள்.—ரயில்வே ஸ்டேஷன்கள்.—மோல்மீன் (Moulmein), மார்டபான் (Martaban).

எதிரி சைனியங்கள்.—படகுகள் இலக்குகள்—அரக்கான் (Arakan), மாயு (Mayu), கலடான் (Kaladan).

**24—2—44.** (வியாழக்கிழமை).

### ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமானத் தொழிற்சாலைகள்—கோதா (Gotha), ஸுவெயின்பர்ட் (Schweinfurt), ஸ்டெர் (Steyr), (59 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை. / 156 எதிரி விமானங்கள் காணப்படவில்லை).

கடற்கரை பிரதேசங்கள்.—வடக்கு பிரான்ஸ் (Northern France).

விமான நிலயங்கள்.—ஹாலந்து (Holland), வடக்கு பிரான்ஸ் (Northern France).

இரவு.—(35 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை, 3 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).



தொழிற்சாலைகள்.—ஜெர்மானியிலுள்ள ஸுவெயின்பர்ட் (Schweinfurt).

இலக்குகள்.—வடமேற்கு ஜெர்மனி.

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

### இதாலி (Italy).

(36 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன, 21 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

எண்ணைக் கிணறுகள்.—பியூம் (Fiume).

விமான நிலயம்.—பேப்ரிகாடி ரோமா (Fabricadi Roma).

கப்பல்கள்.—யூகோஸ்லாவியாக் கடற்கரை.

ராணுவ இலக்குகள்.—டால்மேஷியன் கடற்கரை (Dalmatian).

### ருஷ்யா (Russia).

(47 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன),

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—ரபால் (Rabaul).

விமான எதிர்ப்பு பீரங்கிகள்.—வீவாக் (Wewak).

விமான நிலயம்.—ஹன்ஸா பே (Hansa Bay).

படகுகள்.—மாட்சின் (Matchin Bay) குடா.

ஸ்தாபனங்கள் —காதரைனி (Katherine), லபோர் (Labor).

ட்யூக் ஆப் யார்க் தீவு.—செயிண்ட் ஜார்ஜ் கோட்டை (Cape St. George),

### பர்மா (Burma).

விமான நிலயம்—மாக்வீ (Magwe), அக்யாப் (Akyab).

நாஸி இலக்குகள்—அரக்கான் (Arakan).

பைவானக் (Bivonoc)-ஸப்ளை பிரதேசங்கள் வடக்கு பர்மா (Northern Burma).

**25—2—44.** (வெள்ளிக்கிழமை).

### ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—(142 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன. 44 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

விமான நிலயம்.—பெல்ஜியம் (Belgium), ஹாலந்து (Holland).

இலக்குகள்.—வடக்கு பிரான்ஸ் (Northern (France).

விமானத் தொழிற்சாலைகள்.—ரீகன்ஸ்பர்க் (Regensburg), ஆக்ஸ்பர்க் (Augsburg), பர்த் (Furth), ஸ்டட்கார்ட் (Stuttgart).

இரவு.—(24 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

விமானத் தொழிற்சாலைகள்.—ஆக்ஸ்பர்க் (Augsburg).

இலக்குகள்.—தென் மேற்கு ஜெர்மனி.

விமான நிலயம்.—லோ கண்ட்ரீஸ் (Low Countries).

சுரங்கவேடி பாவுதல்—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

### இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

துறைமுகங்கள்.—ஸாரா (Zara), போலா (Pola).

துறைமுகம் ரயில் ஸாதனங்கள் —பியூம் (Fiume).

துருப்பு முகாம்கள்.—ஆன்ஸியோ (Anzio).

மோட்டார் போக்குவரத்துகள்.-டால்மேஷியா (Dalmatia), ரோமிற்கு வடக்கு (Rome).

கப்பல்கள்.—டோடிகானீஸ் (Dodecanese).

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—ரபால் (Rabaul).

கப்பல்.—காவியெங (Kavieng).

ஜப்பானிய இலக்குகள்.—கியூ கியாங் (Kiukiang), குஹு (Kuhu).

கப்பற்கட்டுந்துறைகள்.-பொனபி (Ponape).

எதிரி ஆக்கிரமித்த மார்ஷல் தீவுக் கூட்டங்கள்.—குஷாய் (Kusaie), நாரு (Nauru).

### பர்மா (Burma).

சேமிப்புகள், பாலங்கள் மோட்டார் போக்குவரத்துகள்.—தென் பர்மா (Southern Burma).

இலக்குகள்.—மாயூ (Mayu), சின் மலைகள் (Chin Hills), அக்யாப் (Akyab), அரக்கான் (Arakan).

ரயில்வே இலக்குகள்.-மேமியோ (Maymyo).

படகுகள்.—ஐராவதி (Irrawaddy).

**26—2—44** (சனிக்கிழமை).

### ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—ஒரு தகவலும் இல்லை.

இரவு.—ராணுவ நிலயங்கள் தொழிற்சாலைகள்.—பின்லாந்திலுள்ள ஹெல்சிங்கி (Helsinki).

### இதாலி (Italy).

வேவுபார்த்தல்.-யுத்தம் நடக்கும் பிரதேசம்.

ஸப்ளை பிரதேசங்கள் மோட்டார் போக்குவரத்துகள்.—ஆன்ஸியோ (Anzio)முனை.

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

கப்பல்.—நியூ ஹனோவர் (Hanover).

கப்பல் ஸ்தாபனங்கள்.—காவியெங் (Kavieng).

யுத்த தளவாடக் குவியல்கள் மின்சார நிலயங்கள்.—ரபால் (Rabaul).

துறைமுகம்.—வீவாக் (Wewak).

எதிரி சைனியங்கள் இதர இலக்குகள்.—மாயூ (Mayu), அரக்கான் (Arakan), கலடன் (Kaladan).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**21—2—44.** (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

லண்டன் (London), பாகங்கள் கிழக்கு ஆங்கிலியா (East Anglia).

இதாலி (Italy).

நேசதேச முனை.—ஆன்ஸியோ (Anzio).

ருஷ்யா (Russia),

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**22—2—44.** (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

(9 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

லண்டன் பிரதேசம்.—சில இடங்கள்—இங்கிலாந்தின் கீழ்கரை.

ருஷ்யா (Russia),

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**23—2—44.** (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

லண்டன் (London) பிரதேசம்.

ருஷ்யா (Russia),

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**24—2—44.** (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

லண்டன் பிரதேசம்.—(10 ஜெர்மன் விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

ருஷ்யா (Russia),

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**25—2—44.** (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

ஒரு தகவலும் இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

விமானச் சண்டைகள்.—மார்ஷல்ஸ் தீவுகள்.

**26—2—44.** (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia),

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**27—2—44.** (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia),

தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

**மிஸ்டர் சர்ச்சிலின் யுத்த விமர்சனம்.** காமன்ஸ் சபையில் சென்ற செவ்வாய்கிழமையன்று மிஸ்டர் சர்ச்சில் ஆற்றிய சொற்பொழிவை ஆழ்ந்த கவனத்துடனும் ஜாக்கிரதையுடனும் படிப்பதன் மூலம் அவருக்கு நாம் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம். அவர் சமீப காலத்தில் செய்யும் பிரசங்கங்கள் சிறந்தவை. அவைகளில் சொல்வன்மை எப்பொழுதும் ததும்புகிறது. தேக அசௌக்கியமும் அதிகாரத்தின் சிரமங்களும் அவருடைய சொற்பொழிவைக் கெடுத்துவிடவில்லை. வழக்கம் போல அவர் செவ்வாயன்று ஆற்றிய சொற்பொழிவில், சிறந்த நம்பிக்கையும், உயர்வான புத்திசாலித்தனமும், லக்ஷியத்தில் உறுதியும் காணப்படுகின்றன.

அவர் பின் வருமாறு பேசத்துவங்கினார்.

“துக்கப்படுவதற்கும், சந்தோஷப்படுவதற்கும் இது தருணமில்லை. ஆயத்தம் செய்வதற்கும், முயற்சி செய்வதற்கும் தீர்மானத்துடனிருப்பதற்கும் இது தான் தருணம். யுத்தம் நடைபெற்று வருகிறது. ஐரோப்பிய யுத்தத்தின் முடிவு சமீபித்துவிட்டதென்று நான் ஒரு பொழுதும் நினைக்கவில்லை. ஹிட்லரின் வீழ்ச்சி சீக்கிரம் ஏற்படுமென்றும் நான் நினைக்கவில்லை. 1944-ம் வருஷத்தில் ஐரோப்பிய யுத்தம் முடிந்து விடுமென்று நான் எதிர் பார்க்கவுமில்லை. அவ்விதம் உத்தரவாதமும் செய்யவில்லை. அதற்கு மாறாக நான் உத்தரவாதமும் செய்யவில்லை.”

அவர் பின்வாறு சொற்பொழிவை முடித்தார். ஏராளமான முயற்சிகளும் தியாகங்களும் செய்யப்பட்டு மகத்தான நடவடிக்கைகள் நடைபெறும் இந்நாளில் ஐகபத்தியமென்ற பெருந்தன்மையான குணங்கள் நம்மிடம் குடிகொண்டிருக்குமென்றும், உள்நாட்டிலோ அல்லது அயல் நாடுகளிலோ நமக்குள் பிளவு ஏற்பட்டு, ஒவ்வொரு நாடுகளிலுள்ள அற்பர்களுக்கு இரையாகிவிடமாட்டோமென்றும் யுத்தம் என்ற கோரமான தேரைச் சுற்றி நின்று யுத்தப் போக்கைக் கண்டு குதூகலமடையவோ அல்லது இகழ்ச்சி பெறவோ நினைக்கமாட்டோமென்றும் எனக்கு நம்பிக்கையிருக்கிறது.



“டெகரன் மகாநாட்டில் நாங்கள் செய்துகொண்ட முடிவுகளில் ஒன்றின்படி நாங்கள் எதிரியை தரை மூலமாகவும் கடல் மூலமாகவும், ஆகாய மார்க்கமாகவும் எங்களுடைய பூரா சக்தியையும் உபயோகத்து வரப்போகும் வசந்த காலத்திலும் வேனீர் காலத்திலும் தாக்கப் போகிறோம். இந்த லக்ஷியத்தைப்பற்றித்தான் நாம் ஒவ்வொரு நாளும் தீர்மானம் செய்து வரவேண்டும். இந்த லக்ஷியத்தை பூர்த்தி செய்வதில் தான் நம்மிடமுள்ள ஆத்மீக குணங்களை உபயோகப்படுத்தவேண்டும்.

“நம்முடைய காரியம் மகத்தானது. நாம் அதிகமாக பிரயாசை எடுத்துக்கொள்ள வேண்டும். நமக்குக் கடுமையான சோதனை ஏற்படும். ஆகிலும் ஒவ்வொருவரும் அவராலியன்றதைச் செய்துவரவேண்டும். வெற்றி வெகு தூரத்திலில்லை. இறுதியில் நமக்குத் தான் வெற்றி.”

மேலே சொல்லப்பட்டிருக்கும் சொற்பொழிவின் குறிப்புகள் ஆரம்பத்திலும் முடிவிலும் சொல்லப்படும் சொல்வன்மை என்று நினைக்கவேண்டாம். அவைகளில் மிஸ்டர் சர்ச்சிலின் மனதில் தோன்றும் எண்ணங்கள் காணப்படுகின்றன. கலக பிரியர்களிடமிருந்து அவருக்கு அநேக சங்கடங்கள் ஏற்பட்டன. “கிருஸ்துவரின் சகிப்புத் தன்மையை” அவைகள் சோதிக்கப்போதுமானவை என்று அவர் சொல்லியிருக்கிறார். ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவதற்கு முன் சகஜமாகக் காணக்கூடிய விஷம பிரசாரம் அட்லாண்டிக் கடலின் மற்றொரு பக்கத்திலிருந்து அவரை பாதித்தது. ஒன்று பட்டு வேலை செய்து வரும் 40 தேசங்கள் கொண்ட ஒரு கோஷ்டியில் சில்லரைச் சச்சரவுகள் உண்டாகுகின்றன. ஆகிலும் மிஸ்டர் சர்ச்சில் கவலைப்படவில்லை, துக்கப்படவில்லை. அவருக்கு இயற்கையான இனிமையுடன் அவர் பின் வருமாறு எச்சரிக்கை செய்கிறார். “இப்பொழுது வியவகாரம் செய்வதற்கும், கீர்த்தி பெறுவதற்கும் அல்லது இகழ்ச்சியை சம்பாதிப்பதற்கும் தருணமில்லை. நாம் சரியான நடவடிக்கைகளை இப்பொழுது கையாளவேண்டும். நாம் மகத்தான காரியத்தைச் செய்து முடித்துவிடவேண்டும். அநேக பிரயத்னங்களைச் செய்யவேண்டும். யுத்தம் ஓய்ந்த பாடில்லை.” அவரைக் கலக்கக் கூடிய அநேக நிகழ்ச்சிகள் நேர்ந்திருந்த போதிலும் அவர் கலக்கமடையவில்லை. ஆனால் திடமான சித்தத்துடன் எதிரியைத் தாக்கி நொருக்கவேண்டுமென்ற ஒரு லக்ஷியத்தின் பேரில் கவனம் செலுத்தியிருக்கிறார். அவருடைய சொற்பொழிவு ஜனங்களை பிரோத்சாகம் செய்வதுடன் யுத்த தந்திரத்தைப் பற்றியும் ராஜ தந்திரத்தைப் பற்றியும் விரிவான விமர்சனம் செய்திருக்கிறது.

வி வி வி வி வி

**விமானப் போரின் மேன்மை.** நவீன யுத்தத்தில் பெரும் பங்கெடுத்துக் கொள்ளும் விமான ஆதிக்கம் தான் வெற்றியை சம்பாதிக்குமென்று எண்ணும் கோஷ்டியில் மிஸ்டர் சர்ச்சிலும் சேர்ந்துவிட்டார். நடைபெறப்போகும் ஐரோப்பிய படையெடுப்புக்கு விமானத் தாக்குதல் தான் அஸ்திவாரம் போடுகிறது. ஜெர்மனியை ஆகாயத்திலிருந்து தரைமட்டமாக்கிவிடலாம். விமான பலத்தைக் கொண்டு வெற்றி பெற்றுவிடலாமென்று ஜெர்மனி நினைத்தது. அதே பலத்தைக் கொண்டு ஜெர்மனியை அழித்துவிடலாம். ஜெர்மனியின் விமான உற்பத்தி தொழிற்சாலைகளையும் விமான தளங்களையும் நொருக்குவது தான் நம்முடைய சமீப காலத்திய திட்டம். தாக்கும் முறை பின்வருமாறு. பிரிடிஷ் வெடி விமானங்கள் இரவிலும், அமெரிக்க வெடி விமானங்கள் பகலிலும் அடிக்கடி இடைவிடாது எதிரிக்கு ஆச்வாசம் செய்து கொள்ளக்கூட அவகாசமன்னியில் பலமாகத் தாக்குவது. இரவில் விமானங்கள் பிரதேசங்களை முதலெடுப்பில் நொருக்கிவிடும். அமெரிக்க வெடி விமானங்கள் பகலில் குறிதவறுமல் அதே பிரதேசங்களைத் தாக்கி நாசத்தைப் பூர்த்தி செய்துவிடும். இந்த வாரத்தில் தாக்குதல் செய்யப்பட்ட இடங்கள் இந்த விஷயத்தைத் தெளிவுப்படுத்துகின்றன. லீப்சிக், ஸ்டட்கார்ட், ரீஜன்ஸ்பார்க், ஸ்டெயிர், ஆக்ஸ்பர்க், பீடர் ஹாஸன், ஆஷெர் ஸ்லேபன், பேர்ன்பர்க் முதலிய இடங்கள், விமானங்களையோ அல்லது அதன் உருபுகளையோ உற்பத்திசெய்யும் பிரதேசங்கள். ஹூவார்டன், கிஸ்லி, ரீஜன் போன்ற இடங்கள் விமான நிலயங்கள். அவைகளில் சில லக்ஷியங்கள் பிரிடனுக்கு சமீபத்திலிருக்கின்றன. சில லக்ஷியங்கள் ஜெர்மனியின் மத்தியிலும் ஆஸ்திரியாவிலுமிருக்கின்றன. ஆகிலும் எல்லா லக்ஷியங்களையும் நூற்றுக்கணக்கான வெடி விமானங்கள் ஒரே சமயத்தில் சென்று நொருக்கிவிடுகின்றன. உத்தியோக முறையில் மதிப்பிடப்பட்டிருக்கிறபடி இவ்வாரத்திய விமானத் தாக்குதலின் பயனாக ஜெர்மனியின் விமான உற்பத்தி அளவு மொத்தமாக 60 சதவிகிதம் குறைந்துவிட்டது. உள் புள்ளியில் “இரண்டு எஞ்சின்களுள்ள சண்டை விமான உற்பத்தி 80 சத விகிதமாகவும், ஒரு என்ஜினிலுள்ள சண்டை விமான உற்பத்தி 60 சதவிகிதமாகவும் வெடி விமான உற்பத்தி 25 சதவிகிதமாகவும் குறைந்துவிட்டது. டெயிலி டெலிகிராப் பத்திரிக்கையில் சொல்லியிருப்பதுபோல் உதவிப் படைகள் வாராததால் ஜெர்மன் விமானப் படை அதன் விமான தளங்களில் அழிந்துபோய்விடுகிறது.

**தாக்குதலின் வலிமை.** பெர்லினைத் தாக்குவதை நிரந்தரமாகக் கையாண்டுவரும் பிரிடிஷ் விமானப்படை ஐரோப்பாவில் இதுவரையில் 9,00,000 தடவைகள் பாய்ந்து சென்றிருக்கிறது. பிரிடனிலுள்ள அமெரிக்க வெடி விமானப் படை பிரிடிஷ் வெடி விமானப்படையைவிட அதிகமானது. இன்னும் விமானங்கள் குவிந்து கொண்டிருக்கின்றன. இவ்விரண்டும் ஒன்றுபட்டு ஒரே லக்ஷியத்தைத் தாக்குகின்றன. சில சமயங்களில் பிரிடனிலும் இதாலியிலுமுள்ள நிலயங்களிலிருந்து புறப்பட்டுத் தாக்குகின்றன. மொத்தமாக அவைகள் 1,000 மைல்களுக்குமேல் பிரயாணம் செய்கின்றன.

வாசகர்களறிந்த பிரகாரம் பெர்லின் பாழாகி விட்டது. அது தலைநகரமில்லை. மேலும் தொழிற்சாலைகளின் தலைநகரம் என்ற அதன் கீர்த்தியும் போய்விட்டது. ஜெர்மனியிலுள்ள தொழிற்சாலைகளெல்லாம் பெர்லினிலிருந்த தலைமை காரியாலயத்தின் போதனையை அனுசரித்தும் அமுலுக்குட்பட்டும் வேலை செய்துவந்தன. இப்பொழுது தஸ்தவேஜுகளும் நிர்வாக காரியாலயங்களும் தீக்கிரையாகி அழிந்துவிட்டன.

வி வி வி வி வி

**இதாலியிலும்.** விமானபலம்தான் முக்கியமானது. காரொசெடோவிலும், ஸிஸ்டர்னியாவிலும் ஜெர்மானியர்கள் வேகமாக முன்னேற முடியாததற்கு நேசதேசத்தாரின் விமானபலம் ஒரு காரணம். 10 டிவிஷன் துருப்புகளுடன் போர் புரியும் கெஸ்ஸல்ரிங் ஆன்ஸியோவில் திருப்பித் திருப்பி முறியடிக்கப் படுவதற்கும் ரோமுக்கு வடக்கிலுள்ள இருப்புப்பாதை மார்க்கங்களை நேசதேச விமானங்கள் நொருக்கி விடுவதுதான் காரணம்.

வி வி வி வி வி

**பசிபிக்கில் விமானபலம்.** தூரக்கிழக்கில் யுத்த முறை வேறு விதமாகயிருக்கக்கூடும். இங்கு கடல் யுத்தம்தான் முக்கியமானது. இங்கும் மற்ற படைகளுடன் விமானப்படை ஒத்துழைத்ததன் பயனாக ஜப்பானியர்கள் தென்மேற்கு பஸிபிக்கிலுள்ள ஸாலமன்ஸ் தீவுகளிலிருந்தும் மத்திய பசிபிக்கிலுள்ள மார்ஷல்ஸ் தீவுகளில் இருந்தும் வடக்கு பசிபிக்கிலுள்ள அலூஷியன் தீவுகளிலிருந்தும் துரத்தியடிக்கப்பட்டார்கள். இந்த விசாலமான கடல் பிராந்தியத்தில் விமான தளங்கள்தான் டோக்கியோவுக்குச் செல்லும் பாய்ச்சல் ஸ்தலங்கள்.

வி வி வி வி வி

**அரக்கானில் வெற்றி.** அரக்கானில் சமீபத்தில் கிடைத்த வெற்றிக்கும் விமான பலம்தான் காரணம். வெற்றிக்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று படைகளின் விடா முயற்சியும், உயர்வான மன உறுதியும், பயிற்சியும். இரண்டாவது விமானப் படையின் ஆதிக்கம்.

பர்மா எதிரி வசமானது முதல் வெடிகுண்டு வீச்சு தினசரி நடைபெற்று வருகிறது.

இவ்விதமாக ஒவ்வொரு போர்முனையிலும், நேசதேச விமான நடவடிக்கை மூலம் எதிரியின் பலம் நொருக்கப்பட்டு சிதைவு படுகிறது.

விமானபலம் மட்டும் யுத்தத்தில் வெற்றியை சம்பாதித்து விடுமாவென்பது சர்ச்சைக் குறியது. ஆகிலும் விமான ஆதிக்கம்தான் வெற்றிக்கு வழிதேடுமென்று வெளியாகிவிட்டது.

வி வி வி வி வி

**படையெடுப்பு விமானப்படை.** இதற்கு முன் மத்திய கிழக்கில் நடமாடிக்கொண்டிருந்த ஒன்பதாவது அமெரிக்க விமானப்படை இப்பொழுது இங்கிலாந்துக்கு வந்துவிட்டதென்றும், படையெடுப்பு விமானப்படையுடன் ஒத்துழைக்குமென்றும் தகவல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. போலந்திலுள்ள எண்ணெய் பிரதேசங்களை வெகுதூரம் சென்று தாக்கிய 9-வது அமெரிக்க விமானப்படை பாஸ் டி கலே பிரதேசத்தை இப்பொழுது தாக்கிவருகின்றது. பிரிடிஷ் விமானப் படையைச் சேர்ந்த வ்யூகப்படைகள் இந்த வேலைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. நேசதேசப் படையெடுப்பு விமானப் படைகள் அநேக மாதங்களாக ஒத்திகை செய்து தேர்ச்சி பெற்றிருக்கின்றன. அவர்கள் கஷ்டமான நிலைமையையும் சமாளித்திருக்கிறார்கள். அவர்கள் அநேகம் தடவை சலனம் செய்திருக்கிறார்கள். இதே சமயத்தில் பிரான்ஸின்மீது வெடிகுண்டுகளை வீசவும் சென்றிருக்கிறார்கள்.

வி வி வி வி வி

**இதாலியப் போர்.** ஒரு வாரத்திய ஓய்வுக்குப் பின் எதிரி மூன்றாவது தாக்குதலைச் செய்தான். அவன் முறியடிக்கப்பட்டு துரத்தியடிக்கப்பட்டான். மற்றொரு கோரமான யுத்தம் துவக்கப்படுமென்பதில் ஐயமில்லை. இருதரப்பாரும் தயாராக இருக்கிறார்கள். ஜெர்மானியர்கள் வட இதாலியிலிருந்து ஏராள



மான துருப்புகளைக் கொண்டுவந்திருக்கிறார்கள். நேசதேசத்தார்களுக்கு ஆகாயத்திலும் பீரங்கிப் படையிலும் கவசம் பூண்ட முஸ்தீப்புகளிலும் ஆதிக்கமிருக்கிறது. இந்த யுத்தத்தில் ஜெர்மானியர்களை அநேகம் தடவைகளில் எதிர்த்துப் போராடியிருக்கும் ஜெனரல் அலெக்ஸாண்டர் பிரிடனுக்கு இறுதியில் வெற்றியென்று நம்பிக்கையுடனிருக்கிறார்.

வி வி வி வி வி

**இதாலி முக்கியமான போர்முனை.** நேசதேசப் படைகள் ஆன்ஸியோவிலிறங்கிய பொழுது கொஞ்சம்கூட எதிர்ப்பு இல்லை. இப்பொழுது எதிரிகள் இங்கே கடுமையாகப் போராடுகிறார்கள். ஹிட்லர் தன்னுடைய யோசனையை மாற்றி ஸ்டாலின்கிராட்டிலும் நீபர் நதி வளைவிலும் சமாளித்து நிற்க முயன்றதுபோல் இந்த முன்னேறும் வாசலையும் எப்பாடு பட்டும் மூர்க்கத் தனத்துடனும் தற்காப்பு செய்து ரோமாபுரியைக் காப்பாற்றுவது என்று முடிவு செய்து விட்டான். இவ்விதமாக ஹிட்லரே இதாலியில் ஒரு பெரிய இரண்டாம் போர்முனையை ஏற்படுத்திவிட்டான். நேசதேசத்தார்களுக்கு ஒரு போர்முனையை அவன் அமைத்திருக்கிறான். நேசதேசத்தார்கள் இந்த சவாலை ஏற்றுக்கொண்டு விட்டார்கள். ஹிட்லர் தெற்கு இதாலிக்கு 18 டிவிஷன் துருப்புகளையும் அதற்கு ஒத்தாசைக்காக 5 லக்ஷம் துருப்புகளையும் அனுப்பியிருப்பதை யுத்த தந்திர முறையில் நேசதேசத்தார்கள் வரவேற்கிறார்கள். ஜெர்மானியர்களுடன் போர் தொடுத்து அவர்களை பலஹீனப்படுத்தவேண்டும். அந்த யுத்தம் இதாலியில்தான் நடைபெறட்டும் என்று நினைக்கிறார்கள்.

வி வி வி வி வி

**ஹிட்லரின் ஐரோப்பிய அரணுக்கு ஆபத்து.** இதாலிக்கு ஏராளமான ஜெர்மன் படைகள் சென்று விட்டதால் ஹிட்லரின் ஐரோப்பிய அரணின் எல்லா பாகங்களிலும் பலஹீனம் உண்டாகிவிட்டது. வடக்கு இதாலியிலிருந்து அவன் 10 டிவிஷன் துருப்புகளை அப்புறப்படுத்தி விட்டான். நேசதேசத்தார்கள் படைகளை இறக்கக்கூடிய மேற்குப் பக்கத்தில் உள்ள படைகளையும் அவன் குறைத்து விட்டான்.

வி வி வி வி வி

**ருஷ்யப் போர்முனை.** ருஷ்யர்களுக்கு வெற்றிக்கு மேல் வெற்றி கிடைத்து வருகின்றன. இந்த வாரத்தில் வடக்கு, மத்திய, தெற்குப் போர்முனைகளில் சிலாகிக்கத் தகுந்த நடவடிக்கைகள் நடைபெற்றன.

வடக்குப் போர்முனையில் மூன்று வாரங்களுக்குள்ளாக லெனின்கிராட்டிலிருந்து பால்டிக் நாடுகளின் எல்லைச்சரகத்திற்கு 100 மைல்கள் வரையில் ஜெர்மானியர்கள் துரத்தியடிக்கப்பட்டிருக்கிறார்கள். ஸ்டாரயாரஸ்ஸா போன்ற மகத்தான அரண்கள் நொறுக்கப் பட்டுவிட்டன. பீபஸ் ஏரியிலிருந்தும், இல்மென் ஏரியிலிருந்தும், நோவோஸோகோல்னிகியிலிருந்தும் குவிந்து வந்த மூன்று படைகள் லாட்வியாவின் எல்லைச்சரகத்திலுள்ள பெஸ்காவுக்குள் புகுந்து விட்டன. அவர்கள் முன்னேறும் பொழுது டனோ, கோம், பேர்காவ் முதலிய இடங்களைப் பிடித்தார்கள். மற்றொரு சேனை நார்வா நதியைத் தாண்டி எஸ்தோனியா எல்லைச்சரகத்தை நோக்கி முன்னேறுகிறது. தெற்குப் பகுதியில் இரும்பு உலோக உற்பத்தி நிலையமான கிரிவாய்ராக் விழுந்து விட்டது. மேலும் மூன்று ருஷ்ய சேனைகள் சமகோடாக பக் நதியை நோக்கியும் கருங்கடல் துறைமுகமான கெர்ஸானை நோக்கியும் ருமேனியாவின் எல்லைச்சரகத்தில் ஜெர்மனியின் முக்கிய போக்குவரத்து அரணான ஒடெஸ்ஸா—வார்ஸா இருப்புப்பாதையை நோக்கியும் முன்னேறுகின்றன.

மத்திய முனையில் வைடப்ஸ்க் என்ற முக்கியமான ஜெர்மன் தற்காப்பு அரண் காலி செய்யப்பட்டது. வெண்மை ருஷ்யாவின் தலை நகர்மான மின்ஸக்குக்கு வாசற்படி போன்ற ராகாசேவை ருஷ்யர்கள் பிடித்து விட்டார்கள்.

வி வி வி வி வி

**ருஷ்யப் போரின் அதிர்ச்சிகள்.** ருஷ்யப் படைகள் பால்டிக் எல்லைச்சரகத்தையும் ருமேனியாவையும் சமீபித்து வருவதாலும் போலந்தில் முன்னேறி வருவதாலும் அங்குள்ள நாடுகளில் குழப்பம் உண்டாகியிருக்கிறது. திருத்தியமைக்கப் படும் ஐரோப்பாவில் தானும் ஒரு ஸ்தானம் வகிக்கவேண்டுமென்று ஒவ்வொரு நாடும் முயற்சி செய்து வருகிறது. பின்லாந்து சமாதானப் பேச்சுகளை ஆரம்பிக்கிறது. போலந்து யுத்தத்துக்கு முன்னிருந்த எல்லைச்சரகத்தை அமைக்கவேண்டுமென்று வற்புறுத்துகிறது. தேசாபிமானப் படைகளும், கொரில்லாப் படைகளும், நேசதேசத்தாருடன் ஒத்துழைப்பவர்களும் பால்கன் நாடுகளில் பலமான நடவடிக்கைகளைத் துவக்கி ஆதிக்கம் பெறுவதற்குப் போர் நடத்தி வருகிறார்கள். கிரீஸில் உள்நாட்டுக் கலகம் உண்டாகிவிட்டது. பூகோஸ்

லாவியாவில் டிடோவும் மிகைலோவிச்சும் போர் தொடுத்து விட்டார்கள். இதாலியில் மன்னர் ஆட்சியை ஆதரிக்கிறவர்களுக்கும் ஜனநாயகக் கட்சிக்குமிடையே சச்சரவு மூண்டு விட்டது. நேசநாடுகள் இந்த சந்தர்ப்பத்தில் சாத்தியமானபடி நடு நிலைமை வகித்து வருகிறார்கள். மிஸ்ட்டர் சர்ச்சில் சொன்ன பிரகாரம் ஒருவருக்குச் சலுகை காட்டுவதற்கு இது தருணமில்லை. அரசாங்க அமைப்பைப்பற்றியும் சிந்திக்க இது தருணமில்லை. யுத்தத்தில் வெற்றி பெருவதற்கு ஒத்தாசை செய்யக்கூடிய எந்த அரசாங்கத்துடனும் எந்தக் கட்சியுடனும் நேசதேசத்தார்கள் ஒத்துழைப்பார்கள்.

வி வி வி வி வி

**போலந்து.** இந்தச் சச்சரவுகளில் போலந்தின் எதிர்கால நிலைமை முக்கியமான ஸ்தானம் வகித்து வருகிறது. சில நிஷ்டூரிகள் சொல்லுவது போல போலந்தைக் காப்பாற்றத்தான் பிரிடன் யுத்தத்தை மேற்கொண்டது என்பதை பிரிடன் மறந்து விடவில்லை. போலந்தின் ஸ்வதந்திரத்தை நிலை நாட்டி விடவேண்டுமென்று பிரிடன் இன்னும் தீவிரமான எண்ணம் கொண்டிருக்கிறது. போலந்தின் ஒற்றுமையமைப்பை மதித்து விடுவதாக ஸ்டாலின் அடிக்கடி சொல்லியிருக்கிறாரென்பது திருப்திகரமாகயிருக்கிறது. ஆகிலும் ஸ்வதந்திரமும் எல்லைச்சரக நிர்த்தாரணமும் வெவ்வேறு விஷயங்கள். தேசங்கள் ஸ்வதந்திரத்துடனிருந்து வரலாம். ஆகிலும் சந்தர்ப்பங்களுக்குத் தக்கவாறு எல்லைச்சரகங்கள் மாறுதலடையக்கூடும். ருஷ்யாவின் பத்திரத்தை உத்தேசித்து போலந்தின் எல்லைச்சரகத்தை கிழக்குப் பக்கத்தில் குறைத்தும் மற்றொரு பக்கத்தில் விஸ்தாரப்படுத்துவதிலிருந்து போலந்தின் ஸ்வதந்திரம் பாதிக்கப்படாது. போலந்து, ருஷ்யா ஆகிய இருவர்களின் பாத்தியங்களும் கவனிக்கப்பட வேண்டியவைதான். போலந்து தீரமாக நின்று கஷ்டங்களை அனுபவித்திருக்கிறது. ருஷ்யர்கள் நேசதேசத்தார்களுக்காக பிராண த்யாகம் செய்திருக்கிறார்கள். இன்னும் ருஷ்யா போர் புரிந்து வருகிறது. போலந்து உள் நாட்டில்தான் எதிர்த்து நிற்கிறது. ருஷ்யாவின் உதவியன்னியில் போலந்து தன்னை விடுவித்துக்கொள்ளமுடியாது. ருஷ்யாவின் மேற்கு எல்லைச்சரகத்தின் பத்திரக் குறைவினால் மத்திய ஐரோப்பாவிலுள்ள கொள்ளைக்கூட்டத்தார்கள் அடிக்கடி ருஷ்யாவைத் தாக்கியிருக்கிறார்கள். ஆகையால் ருஷ்யாவின் பத்திரத்தையும் ஐரோப்பாவின் எதிர் காலத்தையும் உத்தேசித்து எதிர் காலத்தில் தொந்திரவு ஏற்படாமல் ருஷ்யாவின் எல்லைச்சரகத்தை இயற்கையான தற்காப்புகள் உள்ள பிரதேசத்தில் அமைத்து விடவேண்டுமென்பது அத்தியாவசியமானது. இந்த விஷயத்தில் மிஸ்ட்டர் சர்ச்சில் தீவிரமான நம்பிக்கையுடனிருந்து வருகிறார். காமன்ஸ் சபையில் அவர் பின்வருமாறு சொன்னார்.

"ருஷ்ய சரித்திரத்தில் இரண்டு தடவை ருஷ்யாவை ஜெர்மானியர்கள் பலமாகத் தாக்கியிருக்கிறார்கள். அநேக மிலியன் ருஷ்யர்கள் மாண்டு போனார்கள். ஜெர்மனியின் அக்கிரமப்போரின் பயனாக ருஷ்யாவின் விசாலமான பூப்பிரதேசங்கள் பாழாகிவிட்டன.

"மேற்குப் பக்கத்திலிருந்து எதிர் காலத்தில் தாக்குதல் ஏற்படாமல் செய்துவிட வேண்டுமென்று ருஷ்யா கேட்பதில் ஞாயமிருக்கிறது. இந்த அபிப்பிராயத்தை ருஷ்யர்கள் தங்களுடைய படை பலத்தினாலும் நேசதேசத்தார்களின் சம்மதத்தின் பேரிலும் பூர்த்தி செய்து கொள்ளுவதில் நாமும் ஒத்தாசை செய்வோம்."

வி வி வி வி வி

**பின்லாந்து.** நாம் சொன்னதுபோல பின்லாந்து சமாதானத்தை விரும்புகிறது. ஆகிலும் திடமான முடிவுக்கு அது வரவில்லை. அதன் புத்தி சஞ்சலமாகயிருக்கிறது. 1940-ம் வருஷத்தில் பின்னிஷ்—ருஷ்ய ஒப்பந்தத்தின் ஷரத்துக்களை ஒத்து சமாதானம் செய்துகொள்ளலாமென்று ருஷ்யா ஸ்பஷ்டமாகச் சொல்லிவிட்டது. பின்லாந்தின் தலைநகரமான ஹெல்ஸிங்கியை ஆக்கிரமணம் செய்வதாக ருஷ்யாவுக்கு அபிப்பிராயமில்லை. பின்லாந்து நிபந்தனையற்ற சரணாகதி செய்ய வேண்டுமென்றும் ருஷ்யா எதிர்பார்க்கவில்லை. ஜெர்மனியுடன் பின்லாந்துக்குள்ள உறவை அது ரத்துசெய்ய வேண்டுமென்றுதான் ருஷ்யா வேண்டுகிறது. போரை நிறுத்திக் கொள்ளுவதற்கும் சமாதான உடன்படிக்கைக்கும் வித்தியாசமுண்டு. யுத்த நிறுத்த உடன்படிக்கையின் ஷரத்துப்படி பின்லாந்திலிருக்கும் ஜெர்மன் துருப்புகளை பின்லாந்தில் அடைத்துவிடவேண்டும். யுத்த காலத்துக்கு மட்டும் பின்லாந்திலுள்ள தளங்களை நேசதேசத்தாரிடம் ஒப்படைப்பதற்கும் நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். ருஷ்யர்கள் இந்த ஷரத்துக்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

பின்லாந்துடன் யுத்த நிறுத்தம் செய்வது அல்லது சமாதானம் செய்துகொள்ளுவது என்ற நடவடிக்கை ருஷ்யா சம்பந்தமான பிரச்னை மட்டுமில்லை. பொதுவாக சொல்லுமளவில் இந்த பிரச்னையில் எல்லா நேசதேசத்தார்களுக்கும் அக்கரை உண்டு. ஆகிலும்



அமெரிக்கா மட்டும் பின்லாந்துடன் போர் தொடுத்திருக்கவில்லை. 1942-ம் வருஷத்திய பிரிடிஷ்—ருஷ்ய ஒப்பந்தப்படி ருஷ்யா மட்டும் மற்றவருடைய சம்மதமன்னியில் போர் புரிந்துவரும் எந்த தேசத்துடனும் யுத்தத்தை நிறுத்தவோ அல்லது சமாதானம் செய்து கொள்ளவோ முடியாது.

பின்லாந்து காலஹரணம் செய்து வருகிறது.

இந்த விஷயத்தில் ஜெர்மானியர் செய்துவரும் பிரசாரம் எச்சரிக்கையும் அமெரிக்கையும் நிரம்பியிருக்கிறது. ஸ்டாக்ஹோமிலுள்ள ருஷ்ய, பின்னிஷ் பிரதிநிதிகளான மாடம் கோலோண்டேக்கும், பாஸிகிவிக்குமிடையே நடைபெறும் சமாதானப் பேச்சுகள், நேசதேசத்தார்கள் எதிரிகளைக் கலக்கச்செய்யும் யுத்த தந்திரங்களில் ஒன்று என்று ஜெர்மானியர்கள் சொல்லி வருகிறார்கள். எதிரியின் இவ்விதமான அலக்ஷியப் புத்திக்குப்பின் பீதியும் அமைதிக்குறைவும் காணப்படுகின்றன. பின்லாந்து கட்சி மாறிச் சென்றுவிட்டால் ராஜீய முறையிலும் ராணுவ முறையிலும் என்ன விளைவுகள் உண்டாகுமென்றும் ஜெர்மனியின் மன உறுதியையும் பால்கன் நாடுகளின் மனப்பான்மையையும் அது எவ்விதம் பாதிக்குமென்றும் ஜெர்மானியர்கள் அறிவார்கள்.

வி வி வி வி வி

**பஸிபிக் யுத்தம்.** கில்பெர்ட், மார்ஷல்ஸ் தீவுக்கூட்டங்களைச் சேர்ந்த முக்கியமான தீவுகளைப்பிடித்தபின் அமெரிக்கர்கள் காரொலைன் தீவுக்கூட்டத்திலுள்ள டிரக் என்னும் முக்கியமான பெரிய ஜப்பானிய கடற்படை தளத்தைத் தாக்கினார்கள். எதிரிக்கு 19 கப்பல்களும் 201 விமானங்களும் நஷ்டமாகி விட்டனவென்று இப்பொழுது ஊர்ஜிதமாகி விட்டது. நேசதேசத்தார்களின் தாக்குதல் விவரம் பூராவும் வெளிவரவில்லை. ஆகிலும், நூற்றுக்கணக்கான அமெரிக்க விமானங்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டன வென்றும் விமானந் தாங்கிக்கப்பல்கள் உபயோகப்படுத்தப்பட்டன வென்றும் அமெரிக்கக் கப்பல்கள் துறைமுகத்திற்குள் சென்று ஜப்பானியக் கடற்படையை வலுச்சண்டைக்கு இழுத்தனவென்றும் எதிரி இந்த சவாலை ஏற்றுக்கொள்ளவில்லையென்றும் வெற்றி கிடைத்ததென்று பாத்தியம் கொண்டாடுவதற்காக அமெரிக்கர்கள் இறங்கினார்களென்றும் ஆனால் துரத்தி அடிக்கப்பட்டார்கள் என்றும் ஒரு கட்டுக் கதையை ஜப்பான் ஜோடித்துவிட்டதென்றும் தெரியவருகிறது.

டிரக் நடவடிக்கை மத்திய பஸிபிக்கில் நேசதேசத்தார்களுக்கு ஆகாய ஆதிக்கமும் கடலாதிக்கமும் ஏற்பட்டு விட்டதென்பதை வெளிப்படுத்துகிறது. யாதொரு விதமான எதிர்ப்பன்னியில் அமெரிக்கப்படைகள் பஸிபிக் சமுத்திரங்களில் சுயேச்சையுடன் சஞ்சாரம் செய்யலாம். தென்மேற்கு பஸிபிக்கிலுள்ள தற்காப்பு பிரதேசங்களுக்கு எதிரி கொண்டு போகும் ஸப்ளைகளையும் அமெரிக்கப்படைகள் அழித்துவிடக்கூடும்.

வி வி வி வி வி

**தென்மேற்கு பஸிபிக்கில்.** கடைசியாகக் கிடைத்த தகவல்களிலிருந்து நேசதேசத்தார்கள் பிஸ்மார்க் கடலின் வடக்கு வாசலிலிருக்கும் அட்மிராலிடி தீவுகளிலிறங்கி விட்டார்கள். ஸாலமன்ஸ், நியூ பிரிடன், நியூ அயர்லாந்து தீவுகளில் அமைக்கப்பட்டிருக்கும் ஜப்பானைச் சுற்றியுள்ள வளையத்தில் மற்றொரு ஆணி அடிக்கப்பட்டுவிட்டது. தென்மேற்கு பஸிபிக்கில் யுத்த நிலைமையைப்பற்றி டைம்ஸ் பத்திரிகையில் எழுதியிருக்கும் கட்டுரையின் குறிப்புகள் குறிப்பிடத்தக்கவை.

"ஸாலமன்ஸ் தீவுகளில் வெகுகாலமாக நடைபெற்ற போர் முடிவடைந்துவிட்டது. அமெரிக்கப்படைகளும் நியூஸிலாந்துப் படைகளும் பூகாத்தீவுக்கும் போகன் வில்லாத் தீவின் வடக்குக்கோடிக்கும் நியூ பிரிடனுக்கும் மத்தியிலுள்ள கிரீன் தீவுகளைப்பிடித்ததன் மூலம் நடவடிக்கை பூர்த்தியாய்விட்டது. இந்த நடவடிக்கைகள் மூலம் போகன்வில்லாவிலும், சாயிஸாலிலும், பூகாவிலும், ஷார்ட்லாந்து தீவிலும் உள்ள ஜப்பானிய ரக்ஷகப்படைகளுக்கு உதவி வராமல் தடைபட்டுவிட்டது. ஏனென்றால் நியூ பிரிடனிலிருக்கும் சமீபத்தளமான ரபால் அடிக்கடி தாக்கப்படுகிறது. அதின் துறைமுகத்திலுள்ள கப்பல்களுக்கு அடிக்கடி அபாயம் உண்டாகுகிறது. போகன்வில்லாவிலுள்ள துருப்புகள் அதனிடம் உள்ள அற்பமான ஐச்வரியங்களை உபயோகித்துப் பிழைத்திருக்க முடியுமா என்பது சந்தேகமானது. சாயிஸாலிலும் மற்ற தீவுகளும் ஐச்வர்யக் குறைவு உள்ளவைகள். அதில் அகப்பட்டுக்கொண்டிருக்கும் படைகளுக்குப் போதுமான ஆகாரம் கிடையாது. அவர்கள் முற்றுகைக்குள்ளாகி வியாதியஸ்தர்களாகயிருக்கிறார்கள். அவர்களின் நிலைமை மோசமாகிவிட்டது. ஆகாயத்திலிருந்து ஸப்ளைகளைப் போட்டாலும் அவர்களுடைய தேவைகளுக்குப்போதாது. துணையன்னியில் படகுகளில் சாமான்களை அபாயத்துக்குட்பட்டு நியூ கினியாவின் கடற்கரை ஓரமாகவும் அல்லது இரவில் ஜலசந்தியைத் தாண்டியும் அனுப்பக்கூடும். விசாலமான ஸமுத்திரப்பரப்பிலும், விமான, கடற்படை துணைக்காவலன்னி

யிலும் செல்லும் அப்படகுகள் சுலபமாக அழிக்கப்படலாம். முக்கியமான ரபாலும், டிரக்கும் தாக்கப்படும்பொழுது படகுகளுக்குத் துணைக்காவல் அனுப்ப எதிரி எங்கு போவானென்று புலப்படவில்லை.

ஸாலமன்ஸ் தீவுகளின் கடைசி நிகழ்ச்சிகளிலிருந்து இன்னும் சில பயன்கள் ஏற்படலாம். முதலாவதாக போகன்வில்லித் தீவில் முன்னேறும் வாசல்களில் அமைக்கப்பட்டிருக்கும் அமெரிக்கத்துருப்புகள் மலைப்பாங்கான உள்நாட்டுப் பிரதேசத்திற்குள் முன்னேற வேண்டிய அவசியம் நின்றுவிட்டது. அவைகளை வறுமை, ஜுரம் முதலிய கெடுதல்களிடம் ஒப்படைத்துவிட்டால் அந்த தீங்குகள் அவைகளை சமாப்த்தி செய்துவிடும். இந்த முடிவுகள் சரியானவை என்று எண்ணினால் வடக்கு ஸாலமன்ஸ் தீவுகளையும் நாம் சுற்றிக்கொண்டு சென்று விடலாம்.

வி வி வி வி வி

**அரக்கான் வெற்றி.** பர்மாவில் அரக்கான் போர்முனையில் நேசதேசத்தாருக்கு மகத்தான வெற்றிகிடைத்ததென்று தகவல் கிடைத்திருக்கிறது. அரக்கானிலுள்ள நேசதேசப்படைகளை அழித்துவிட்டு இந்தியாவில் படையெடுப்பதென்று உத்தேசித்து ஜப்பானியர் செய்த முன்னேறித்தாக்குதல் முறியடிக்கப்பட்டது. மாயூ மலைகளிலுள்ள நீயோகியே டாக்கணவாயைக் கைப்பற்றிக் கொண்டு பிரிடிஷ் இந்தியப்படைகளை இரண்டு பாகமாகத் துண்டித்துவிடுவதென்றும் 7-வது இந்தியப்படைக்கு ஸப்ளைகள் போகாமல் தடுத்துவிடுவதென்றும் ஜப்பானியர்கள் திட்டம் போட்டிருந்தார்கள். மற்றொரு ஜப்பானியப்படை சமீபத்திலுள்ள ரஸ்தாவைத் துண்டித்துவிடுவதற்கும் அனுப்பப்பட்டது. இதே சமயத்தில் இரண்டு இந்தியப்படைகளையும் அழிப்பதற்கும் அதன்பின் இந்தியாவுக்குள் முன்னேறுவதற்கும் நேசதேசப்படைகளை நேர்முகமாகத்தாக்கவேண்டுமென்றும் ஜப்பான் திட்டம் போட்டிருந்தது. 7,000 ஜப்பானிர்கள் கபடமாக முன்னேறி, நியாகியேடாக் கணவாயையும் பாலிபஸாஞ்—மாங்டா ரஸ்தாவையும் பிடித்தனர். 7-வது இந்தியப்படையையும் அவர்கள் பலமாகத் தாக்கினார்கள். இந்தத் தாக்குதலை நாம் சமாளித்து ஜப்பானியரைத் துரத்தியடித்து விட்டோம். எதிரி சிதைபட்டு வேட்டையாடப்பட்டான். அநேகம் பேர்கள் மாண்டுவிட்டார்கள். சிலர் அடிபட்டு காயமடைந்து காடுகளின் வழியாக ஓடிவிட்டார்கள்.

இந்த அரிய செய்கையில் பயோனியர்களும், மதராஸ் மகாணத்தைச் சேர்ந்தவர்களும் மற்ற இந்தியர்களும் கீர்த்திபெற்று விட்டார்கள். அவர்கள் யுத்தத்திலீடுபடாத போதிலும், ரஸ்தாக்களையும் விமான தளங்களையும் அமைக்கும் தங்களுடைய வேலையை நிறுத்திவிட்டு போர்புரிந்துவரும் இந்தியத் துருப்புகளுக்கு இராக்காலங்களில் மலையின் உச்சிகளைத் தாண்டி தங்களுக்கு ஏற்படக்கூடிய அபாயத்தையும் பொருட்படுத்தாமல் ஸப்ளைகளைக் கொண்டு போனார்கள்.

## திருத்தியமைக்கப்படும் ஐரோப்பாவில் பிரான்ஸின் நிலைமை.

கிரு பிரபு.

(மாஞ்செஸ்டர் கார்டியன்.)

யுத்த நிறுத்தம் ஏற்படும்பொழுது பிரான்ஸின் கதி என்ன ஆகுமென்று அங்கு வசித்துவந்தவர்களும் பிரெஞ்சு மக்களுடன் உத்தியோக முறையிலும் வியாபார முறையிலும் சம்பந்தமுள்ளவர்களும் கவலைப்படுகிறார்கள். இந்த பிரச்னை இத்துடன் முடிவு பெறாது. பிரான்ஸ் மறுபடியும் அதனுடைய பழைய ஸ்திதியை அடைந்து கலைஞானத்துக்கும் நாகரீகத்துக்கும் சிறந்த சேவை செய்யும்படியான வசதியைப் பெறாத போனால் புதிய ஐரோப்பாவை பலமாக ஸ்தாபிப்பதென்பது இயலாது என்று ஒவ்வொருவரும் அறியவேண்டும். ஆகையால் தான் “தூங்கியபின் பலசாலி எழுந்திருப்பது போல, பிரான்ஸும் அதிகவலிமையுடன் எழுந்திருக்கவேண்டுமென்றும் பிரான்ஸும் உலக ஸமஷ்டியில் ஒரு ஸ்தானம் வகிக்கவேண்டுமென்றும்” நாம் பிரார்த்திக்கிறோம். நம்மாலியன்ற அளவில் அதற்கு நாம் உதவி செய்வோம்.

பிரான்ஸின் வீழ்ச்சிக்கு ஜவாப்தாரியல்லாததும் அதின் எதிர்கால க்ஷேமத்திற்காகப் பாடுபட்டுவரும் பிரெஞ்சுக்காரர்கள் ஆதரவளிப்பதோ அல்லது அதிகமாகக் கண்டனம் செய்வதோ என்று பொருள்படும்படியான நடவடிக்கைகளைக்கண்டு ஆக்ரோஷமடைகிறார்கள். ஸ்வதந்திர வாழ்க்கையுள்ள நாம் விதி வசத்தினால் கஷ்டங்களை அனுபவித்து வரும் தேசத்துக்கு சிலாக்கியமான திட்டங்களைப் புகட்டும் வேளையிலீடுபடப்போவதில்லை. பிரெஞ்சு மக்களின் வீர அக்னி இன்னும் ஜ்வலித்துக்கொண்டிருக்கிறது. 1940-ம் வருஷத்தில் எதிர்பாராத வண்ணம் துருப்புகள் சரணடைந்தபின் கடல் தாண்டியிருக்கும் பிரெஞ்சு நாடுகளில்



போரை நடத்தப்போதுமான துருப்பு வசதிகளை அளிக்கவில்லை. ஆகிலும் குடியேற்ற நாடுகளில் திரட்டப்பட்ட சேனையில் திறமையுடன் போர்புரியும் அநேகர்களிருக்கிறார்கள். ஆகிலும் அவர்களுக்கு நூதனமான யுத்த முஸ்தீப்புகள் வழங்கப்படவில்லை. கார்ஸிகாவிலும் பனி உறைந்திருக்கும் மலைகளுள்ள இதாலியிலும் மிச்ரமான படைகள் தங்களுடைய சிறந்த ஐதீகத்தைக் காப்பாற்றி வருகின்றன. ஐரோப்பிய சமாதானத்தை சாச்வதமாக அமைக்கமுற்படும் பொழுது, நல்ல மார்க்கத்தில் உதவியளிக்க ஆசைப்படும் பிரான்ஸின் புத்திசாலித்தனமும் உபயோகப்படக்கூடும். ஜனரஞ்சகமான நிர்வாகத்துக்கு அடையாளம் பகிரங்கமாக கக்ஷிகளும் நபர்களும் அபிப்பிராய பேதம் அறிவுக்கும் உரிமைதான். ஆனால் ஆபத்து காலத்தில் விவாதம் செய்வதென்னும் விஷயமானது சீர்படுத்த முடியாதபடி அந்த நிர்வாகத்தை அழித்துவிடும். நெருக்கடி ஏற்பட்ட பொழுது பிரான்ஸ் வீழ்ச்சி பெற்றது. இந்த விஷயம் இப்பொழுது தோன்றியதில்லை. ஒரு பக்கத்தில் பழைய நிர்வாகம்தான் புனிதமானதென்று எண்ணும் ஒரு கோஷ்டியார்களிருந்தார்கள். மற்றொரு பக்கத்தில் ருஷ்யாவைப் போல் புரக்ஷி ஏற்படவேண்டுமென்று கனவு கொண்டிருந்த ஒரு கக்ஷியிருந்தது.

ருஷ்யாவில் மத்தியகாலத்திலிருந்த கொடுங்கோன்மை ஆக்ஷியை ஒழித்து லெனின் நிறுவிய கார்ல்மார்க்ஸின் கொள்கையை அடிப்படையாக உள்ள திட்டத்தைக் கடைப்பிடித்து எல்லாவிடங்களிலும் முதலாளித்வத்தை அகற்றிவிடுவதென்று நம்பப்பட்டபொழுது ஜெர்மனியிலும், இதாலியிலும் யதேச்சாதிகாரிகள் தோன்றுவதற்கு சந்தர்ப்பம் வாய்த்தது. ஆகிலும் இவ்விரு முறைகளையும் வெறுத்த அநேகவிதமான கொள்கையுள்ளவர்கள் பீதி அடைந்தார்கள். இதே விதமாகத்தான் பிரான்ஸிலும் பீதி உண்டாகிற்று. இதே காரணத்தினால் தான் குடியரசு ஆக்ஷியை ஒழித்த பிடேனின் நடவடிக்கையை சிலகாலம் வரையில் ஜனங்கள் சமாதானத்துடன் ஒப்புக்கொண்டிருந்தார்கள். ஆகிலும் எல்லோரும் அதை அங்கீகாரம் செய்யவில்லை. மேதாவியான ஜெனரல் டிகால் நவீன யுத்தத்திற்காக கவசம் பூண்ட முஸ்தீப்புகளைத் தயாரிக்கவேண்டுமென்று அநேகம் தடவைகளில் யாதொரு பயனன்றியிலும் சொல்லி வந்தார். ஆகையால் பிரான்ஸின் கதி மோக்ஷத்திற்கு வெளியிலிருந்து ஏற்பாடாக எதிர்த்து நிற்பதுதான் சிறந்த வழி என்று கண்டு கொண்டார். இன்னும் அநேகர்களும் பிரான்ஸுக்கு ஏற்படப்போகும் சீர்கேட்டை அறிந்தார்கள். சமாதான உடன்படிக்கை ஏற்படுவதற்கு முன்பே விஷி நிர்வாகமானது ஆபிரிக்காவுக்குச் சென்றிருக்கலாம். அந்த நிர்வாகத்தை நாம் ஒரு பொழுதும் ஒப்புக்கொள்ளவில்லை. இரு நடவடிக்கைகளுக்கும் அனுவாதங்கள் கூறப்பட்டன. ஆகிலும் அதிலுள்ளவர்கள் அற்பர்களாயிருந்ததால் அவர்கள் அவ்விதம் வெளியில் செல்லாததே நலமாகிவிட்டது.

பிரிடிஷ் அமெரிக்கப்படைகள் ஆபிரிக்காவிலிறங்கியவுடன் அங்கிருந்த பிரெஞ்சுக்காரர்கள் தங்களுடைய ஸ்வதந்திரத்தை நிலைநாட்டி விட்டார்கள். ஆபிரிக்காவிலிருந்து எதிரியைப் பூண்டில்லாமல் துரத்தியடித்த பொழுது ஜெனரல் டிகாலின் தலைமையில் லண்டனில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த கமிட்டியைத் திருத்தியமைத்து விஸ்தாரப்படுத்தி ஆல்ஜியர்ஸில் அது தேசிய விடுதலைக் கமிட்டி என்ற பெயருடன் அமைக்கப்பட்டது. அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதில் சிறிது சிரமம் ஏற்பட்டது. கடைசியில் அயல் நாட்டில் வசித்து வரும் பிரெஞ்சுக்காரர்களுடையவும் பிரான்ஸில் ஜெர்மானியர் வசம் அகப்பட்டுக்கொண்டிருக்கும் தேசாபிமானிகளின் பிரதிநிதிகளடங்கிய ஒரு சபை நிறுவப்பட்டது. தேசாபிமானிகள் இன்றைக்கும் தயையில்லாத எதிரியையும் அவனைச் சேர்ந்த அடிமைத்தனமுள்ள துரோகிகளையும் துர்பலமுள்ளவர்களையும் தொந்தரவு செய்து வருகிறார்கள்.

ஏற்பாடு செய்யப்பட்ட சபையோர்கள் பிரான்ஸின் புனரமைப்பு திட்டத்தின் பொதுவான முறைகளைப்பற்றித் தீர்மானம் செய்து விட்டார்கள். இந்த வேலை சுலபமாக முடியக்கூடியதில்லை. ஏராளமான யுத்தக்கைதிகளும் ஜெர்மன் தொழிற்சாலைகளில் அடிமைகளைப் போல வேலை செய்து வரும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும் இறுதி முடிவிற்கு தங்களுடைய ஆதரவை வழங்க வேண்டும். எல்லாம் ஸ்வதந்திரம் பெறக் கையாளப்படும் சம்பவங்களைப் பொருத்திருக்கிறது. பிரெஞ்சு மக்கள் எவ்விதமான நிர்வாகத்தை அமைத்துக் கொள்ளுவார்களென்று ஜோஸ்யம் சொல்லுவது அயல் நாட்டாரின் அலுவலல்ல.

## ஒரு பரப்பின் பேரில் வெடி குண்டு வீசுவதின் நீதி முறை.

(டெயிலி டெலகிராப்).

பிரபுக்கள் சபையில் ஒரு பிரதேசத்தை வெடி குண்டுகளால் தாக்குவதினால் உண்டாகும் விளைவுகளுக்கு எஸ்ஸென் உதாரணமென்று, லார்டு கிரான்போர்ன் சொன்னார். இந்த நடவடிக்கை மூலமாக அங்கிருந்த கிரப்ஸ் யுத்த தளவாட உற்பத்திசாலை உபயோகமில்லாமல் அழிந்துவிட்டதென்று அவர் சொன்னார்.

நியாயமற்ற நடவடிக்கையென்று டாக்டர் பெல்லும், லாங்க் பிரபுவும் விவாதிக்கும் ஹாம்பர்க்கை நொறுக்கியதிலிருந்து தற்காப்பில்லாத ஆயிரக்கணக்கான ஆடவர்களை மூழ்கடித்திருக்கக்கூடிய யூ படகுகளைக் கட்டும் சாதனங்கள் அழிக்கப்பட்டனவென்றும், பெர்லினைத் தாக்கியதிலிருந்து அநேக நாஸிகளுக்கு சங்கடம் ஏற்பட்டுவிட்டதென்றும் கிரான்போர்ன் பிரபு சொல்லியிருக்கலாம்.

இவ்விதம் நடைபெருததினால்தான் ஜெர்மானியர்கள் ஒரே நூற்றுண்டில் நான்காவது தடவையாக தங்களுடைய சுய நலத்தைக்கருதி போர் தொடுத்துவிட்டார்கள். தன்னுயிருக்கு ஆபத்து உண்டாகும்பொழுது எதிரியைக் கொன்றுவிடுவதில் நியாயமிருக்கிறதென்று ஒரு உயர்தர அதிகாரி ஒப்புக்கொண்டிருக்கிருர்.

வெடி விமானத் தாக்குதலின் மூலம் சாச்வதமான சமாதானத்தைத் துரிதமாகப் பெருவதற்கு எவ்வளவு சாதகம் ஏற்படுகிறதென்று ஆராய்ச்சி செய்வோம். ஜெர்மனி இது வரையில் நடத்திய போர்களில் ஜெர்மன் தொழிற்சாலையும், ஜெர்மன் கட்டடங்களும் கொஞ்சம்கூட நாசம் செய்யப்படவில்லையென்பது வாஸ்தவம். இதே காரணத்தினுல்தான் ஜெர்மனி வெற்றிபெற்ருலும், தோல்வியுற்ருலும், மற்ெருரு யுத்தத்தைத் துவக்க அது ஆயத்தம் செய்து வந்தது. யுத்தத்தின் கொடுமைகளை யுத்தத்தில் கலந்துகொண்ட எல்லா தேசங்களும் அனுபவிக்கவேண்டுமென்று இப்பொழுதுதான் ஜெர்மனிக்கு அறிவு உண்டாகி இருக்கிறது. கொடுமைகளுக்கு வரம்பு ஏற்படுத்த முடியுமா? ஒரு கக்ஷியிலுள்ளவர்கள் மனசாக்ஷிக்கு விரோதமாக நடவடிக்கைகளைக் கையாளும்பொழுது வரம்புகளை ஏற்படுத்துவதும் அதன்படி அனுஷ்டிப்பதும் மிகவும் கஷ்ட சாத்தியமானவை. வரம்புக்குட்பட்டு நடந்து வந்தால் நம்முடைய ஜனங்களின் ஹானிக்கு நாம் உடந்தையாகயிருந்தது போலாகும். ஆகிலும், கிரான்போர்ன் பிரபு சொன்ன பிரகாரம், நேசதேச விமானிகள் இது வரையில் ஒரு அளவுக்குட்பட்டு தாக்குதல் செய்து வந்தார்கள். இந்த வரம்பை இனிமேலும் மீறிச் செல்லமாட்டார்கள். ராணுவ லக்ஷியங்களாக இல்லாத இடங்களை அவர்கள் தாக்க மாட்டார்கள். ஜெர்மானியர்கள் வீடுவாசலில்லாமல் நிர்க்கதியாக ரஸ்தாக்கள் மார்க்கமாகச்செல்லும் பொழுதும் அவர்கள் பேரில் குண்டுகளைப் போடமாட்டார்கள். நேபிள்ஸ் புத்தகசாலை போன்ற நாகரீகச் சின்னங்களையும் அவர்கள் அக்கிரமமாகவும் பிடிவாதமாகவும் நாசம் செய்யமாட்டார்கள்.

"பிரிடிஷ் கவர்ன்மெண்டாருக்கு வாடிகன் நகரத்தின் பேரிலும், தவிர்க்க முடிந்தால், ரோம் பேரிலும் வெடி குண்டுகளை வீசுவதாக உத்தேசமில்லை" என்று கிரான் போர்ன் பிரபு சொல்லியிருக்கிருர். டாக்டர் பெல் கவலைப்பட்டபோதிலும், நேசதேசத்தாருக்கும் ஜெர்மானியருக்கும் உள்ள கொள்கைகளில் வித்தியாசமுண்டு.

டாக்டர் பெல்லுக்கும் இன்னும் சிலருக்குமிடையே உள்ள அபிப்பிராய பேதம் மிகவும் பழமையானது. இந்தப் பாகுபாடு மனித வர்க்கத்தினிடம் அன்பு உள்ளவர்களென்றும் அன்பில்லாதவர்களென்பதுடன் நின்றுவிடவில்லை. இந்த வித்தியாசம் தத்வதரிசிகளுக்கும் உண்மையை அறியாதவர்களுக்குமிடையேதான் காணப்படும். உண்மையைச் சொல்லும் பக்ஷத்தில் இப்பொழுது வெடி குண்டு வீசும் முறைகளைக் குறைத்துக்கொண்டால், அதைச் தொடர்ச்சியாக நடத்திவருவதிலிருந்து ஏற்படக்கூடிய கெடுதல்களைவிட மிருதியான கெடுதல்கள் நாகரீகத்துக்கு உண்டாகிவிடும். காலக்கிரமத்தில் நிரபராதியான ஜனங்கள் அவஸ்தைப் படவேண்டி நேரிடும். ஏதோ ஒரு இடத்தில் அழிவு ஏற்பட்டுவிட்டதென்று கண்டு வியசனப்படும் டாக்டர் பெல், இந்த நடவடிக்கையை நிறுத்துவதன் மூலம் வெகு காலம் வரையில் நிரபராதிகளும், போர் வீரர்களும் பொதுஜனங்களும் நாசம் செய்யப்படுவார்கள் என்ற தோற்றத்தை மறந்து விட்டார் போலும்.

---

## பெர்லின் முதல் முன்னேறும் வாசல் வரையில் விமானத் தாக்குதல்.

(விங்க் கமாண்டர் L. V. பிரேஸர்.)

நேசதேசங்களின் கனமான வெடி விமானங்கள் ஜெர்மனியின் யுத்த தொழிற்சாலைகளின் ஹிருதயம் போன்ற பெர்லினையும் இதாலியில் ஹிட்லர் காபந்து செய்யமுயன்றுவரும் எல்லைப்புற தற்காப்பு அரண்களையும் நமக்கு சாதக மேற்படும் படியாகத் தாக்கி வருகின்றன. இன்னும் சில விமானங்கள் பாஸ் டி கலே பிராந்தியத்திலுள்ள ராணுவ லக்ஷியங்களில் செல்லும் போக்குவரத்து சாதனங்களை நொருக்கி வருகின்றன.

பிப்ரவரி மாதம் 15-ம் தேதியன்று பிரிடனின் கனமான வெடி விமானங்கள் 20 நிமிஷங்களுக்குள்ளாக பெர்லின் பேரில் 2,500 டன்கள் மொத்த எடைமானமுள்ள வெடி குண்டுகளைப் பொழிந்த நிகழ்ச்சி இதாலியில் முன்னேறும் வாசலில் நடைபெறும் போரைவிட



அதிகமாக நம்முடைய கவனத்தைக் கவர்ந்துவிட்டது. ஆகிலும் அநேக மைல்கள் வித்தியாசமுள்ள இரண்டு இடங்களை வெற்றியுடன் பெருவதற்காகப் பலமாகத் தாக்கக் கூடிய சக்தி வாய்ந்த நேசதேச விமானப் படையின் உயர்வை மதிக்கவேண்டுமானுல் எல்லா நடவடிக்கைகளையும் ஒன்று சேர்த்துப் பார்க்கவேண்டும்.

### கேந்திர ஸ்தானங்களைத் தாக்குவது.

ஆன்ஸியோ—நெட்டுனே முன்னேறும் வாசலில் நமது கனமான வெடி விமானங்கள் டெட்டரின தாக்குதல் தந்திரத்தை மேற்கொண்டு எதிரியின் ஸ்தானங்களையும், துருப்பு சேமிப்புகளையும் பீரங்கி நிலயங்களையும் நொருக்கி வருகின்றன. ஆல்பேனே, ஸிஸ்டெர்னியா, ஸெச்சினு, வாலட்ரி, கம்போலியானே முதலிய இடங்கள் அடிக்கடி தாக்கப்படுகின்றன. இரவில் பிரிடனுடைய கனமான வெல்லிங்டன் வெடி விமானங்கள் அநேக உபரியான லக்ஷியங்களைக் குறிதவருது நொருக்கி வருகின்றன. மேலும் பிரிடிஷ் மஸ்கிடோ விமானங்களும் போஸ்டன் விமானங்களும் எதிரிக்கு ஓய்வன்னியில் இரவு பகலாகத் துருப்புகளின் நடமாட்டத்தை நாசம் செய்து வருகின்றன.

ஆகாயத்தில் அமெரிக்க பரக்கும் கோட்டை விமானங்களும், லிபரேடர் விமானங்களும் சஞ்சாரம் செய்வது நேசதேசப்படைகளுக்கு உற்சாகம் ஊட்டுகிறது. சென்ற ஸெப்டம்பர் மாதத்தில் ஸாலர்னேவில் வெளியானது போல் எதிரியின் பதில் தாக்குதலை சீர்கேடு செய்யவும் எதிரியின் படைகளைச் சிதற அடிக்கவும் அவைகள் சக்தியுள்ளவைகள்.

### தொடர்ச்சியாகத் தாக்குதல் நடைபெறவேண்டும்.

போக்குவரத்துகளை அழிக்கும் விமான நடவடிக்கையில் அயர்வு ஏற்படக்கூடாது. எதிரியையும் எதிரிக்கு ஒத்தாசைக்கு அனுப்பப்படும் படைகளையும், ஸப்ளைகளையும் துண்டித்துவிட வேண்டுமானுல் முக்கியமான ஸ்தானங்களை அடிக்கடி நொருக்கி வரவேண்டும். முக்கியமான ரஸ்தா ஜங்ஷன்களையும், இருப்புப்பாதை ஜங்ஷன்களையும் வெடி குண்டுகளால் தாக்கி, வழிகளைச் சின்னுபின்னப்படுத்தியும் மார்க்கங்களில் கட்டடம் உடைந்த குப்பைகளை நிறப்பியும் செய்து விடவேண்டும். வெடி குண்டுகளினுல் ஏற்பட்ட சேதங்களைக் காட்டும் ஒளிப் படங்கள் விவரிக்க முடியாத குழப்பம் ஏற்பட்டிருக்கிறதென்பதை வெளிப்படுத்துகின்றன. ஆகிலும் 48 மணிகள் நேரம் சுறுசுறுப்பாக எஞ்சினியர்கள் வேலை செய்தால் ரஸ்தாவையும் இருப்புப் பாதையையும் சீர்படுத்திவிடலாம். பாலங்கள் உடைந்து போனுலும் இடையூரைச் சுற்றி ரஸ்தா மூலமாகப் போக்குவரத்து நடைபெறலாம்.

ஜனவரி மாதம் 21-ம் தேதியன்று இரவில் ஆன்ஸியோ நெட்டுனே பிராந்தியத்தில் துருப்புகள் இறங்கு முன் ரோமுக்குச் செல்லும் போக்கு வரவு மார்க்கங்கள் மூடப்பட்டு விட்டன. 5-ம் படைக்கு எதிர் பாராத சங்கடம் ஏற்பட்டது. ஆகிலும் ஒரு ரஸ்தாவையோ அல்லது இருப்புப் பாதையையோ துண்டித்துவிட்டு அதைச் சீர்படுத்தாமல் காபந்து செய்யவேண்டுமானுல் ஒரே கேந்திர ஸ்தானத்தைத் திரும்பித் திருப்பி அடிக்கடி வெடி குண்டுகளால் தாக்கி வரவேண்டும். ஒரு சமயத்தில் ரோமிலிருந்து வடக்கிலும் வட மேற்கிலும் செல்லும் மூன்று இருப்புப் பாதைகள் துண்டிக்கப்பட்டன. கடற்கரை யோரமாகச் செல்லும் கப்பல்கள் நமது கடற்கரை விமானப்படையின் தாக்குதலுக்கு உப்பட்டிருந்த போதிலும் ஜெர்மனி சாமான்களை கடல் மூலமாக அனுப்பி வந்தது.

### கால நிலைமையினுல் ஏற்பட இன்னல்கள்.

நாம் புதிய முன்னேறும் வாசலை நிர்மாணம் செய்ததிலிருந்து இதாலியின் கடுமையான மாரிகாலம் நமது விமான நடவடிக்கைக்கு இன்னல்களை உண்டு பண்ணியதுடன் எதிரிக்கு சௌகரியத்தையும் அளித்து வந்தது. இதாலிய தீபகற்பத்தில் எங்கு பார்த்தாலும் எதிரியின் போக்குவரத்துகளைத் தாக்க நேசதேச விமானப் படைகளுக்கு இயலாமலிருந்த காலத்தில் ஜெர்மனி இருப்புப்பாதை மூலமாகவும், ரஸ்தாக்கள் மூலமாகவும் படைகளைக் குவித்து எதிர்த் தாக்குதல் செய்ய ஆயத்தம் செய்துவிட்டது.

இந்த முன்னேறும் வாசலின் முக்கியத்வத்தை ஹிட்லர் மதித்துப் பார்த்துவிட்டான். நேசநாடுகள் வெற்றி பெற்று ரோம் வீழ்ச்சி பெற்றல் இதாலியின் வடக்கு பாகத்திலுள்ள தொழிற்சாலை பிரதேசத்திலுள்ள இதாலியர்களை நாஸிகள் அடக்கியாளுவது பாதிக்கப்படும். ரோமில் ஆக்ஷிபுரிகிறவர் இதாலியை ஆளுகிறவர் என்று இதாலியப் பொதுமக்கள் மதித்துவிடுவார்கள். ஜெர்மானியருக்கு சிறிய வெற்றி கிடைத்தாலும் கிழக்குப் பக்கத்தில் ருஷ்யாவில் கிடைத்து வரும் படு தோல்விகளையும் ஜெர்மன் நகரங்களை பிரிடிஷ் வெடி விமானங்கள் நொருக்கி பாழாக்கி வருவதையும் கண்டு மன உறுதி குலைந்து நிற்கும் ஜெர்மன் மக்களுக்கு ஒரு சிறிது ஆறுதலாகயிருக்கும்.

சில அறிய சந்தர்ப்பங்களில் தான் எதிரியின் விமானப்படை இதாலிய தீபகற்பத்தில் பலமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. ஆகிலும் அடிக்கடி F. W. 190 வெடி விமானங்கள் M. E. 190, விமானங்கள், சண்டை விமானங்களின் துணைகொண்டு முன்னேறும்

வாசலில் தாக்கி வருகின்றன. ஜனவரி மாதம் 27-ம் தேதி முதல் 30-ம் தேதிக்குள் ஜெர்மன் விமானப் படை இதாலியில் 153 விமானங்களை இழந்தது. ஜனவரி மாதம் 27-ம் தேதியன்று 50 விமானங்கள் அழிக்கப்பட்டன. அவைகளில் 25 முன்னேறும் வாசலில் சுட்டுவீழ்த்தப் பட்டன. மறுநாள் 36 விமானங்கள் அழிக்கப்பட்டன. ஜனவரி மாதம் 30-ம் தேதி ஜெர்மானியர்களுக்குக் கரி நாள். விமானப் போரில் ஜெர்மனி 63 விமானங்களை இழந்தது. இதாலியப் போரில் இது தான் மிகவும் அதிகமான தினசரி நஷ்டம். அதே சமயத்தில் நேச தேசப் படைகளுக்கு இதாலியக் கடற்கரையோரமாக ஸப்ளைகளைக் கொண்டுவரும் கப்பல் களைத் தாக்குவதற்காக பிரெஞ்சு அட்லாண்டிக் கடற்கரையிலிருந்து நான்கு எஞ்சின்களுள்ள H. E 177 வெடி விமானங்களையும் ஜெர்மானியர்கள் இங்கு கொண்டு வருகிறார்கள். சாதாரணமாக இந்த வெடி விமானங்கள் பிரிடனுக்கு மேற்குப் பக்கத்திலிருந்து வரும் கப்பல்களை வழிமறிக்க உபயோகப்படுத்தப்பட்டு வந்தன. இப்பொழுது அவைகள் இதாலிக்குச் சென்று விட்டதால் நமக்கு அட்லாண்டிக்கில் ஏற்பட்டிருந்த சங்கடம் சற்றுக்குறைந்துவிட்டது.

---

## ருஷ்ய அரசாட்சி முறையில் ஏற்பட்ட மாறுதல்களின் அர்த்தம்.

### *பிரதேச அயல்நாட்டு அதிகாரிகளின் குறிப்பான அலுவல்கள்.*

**(W. N. யூயர்.)**

ருஷ்யாவின் அரசாட்சி முறையில் ஏற்பட்ட மாறுதல்களைப்பற்றி வெளியிடப்படும் வியாக்யானங்கள் அவைகளின் குழப்பமான மாறுபாடுகளைக் கவனிக்கும் பொழுது கோமாளித்தனமாக முதலெடுப்பில் தோன்றுகின்றன. ஆகிலும் பிரிடனிலுள்ள நிதானமும் அறிவும் மிகுந்த எழுத்தாளர்கள் மாறுதல்களிலிருந்து விளைந்த பயன்களை அமைதியுடன் மதித்து விட்டார்கள். அவர்கள் சரியாகவே மதித்து விட்டார்களென்று இப்பொழுது தோன்றுகிறது. அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள். முதலாவதாக ஒவ்வொரு குடியரசு நாடும் ருஷ்ய சமஷ்டியிலிருந்து விலகிக்கொள்ளலாமென்ற ஷரத்து நூதனமானதில்லை. இந்த உரிமை ஆரம்பகாலம் முதல் அமுலிலிருந்து வந்திருக்கிறது. ஆகிலும் சமஷ்டியிலுள்ள குடியரசு நாடுகளுக்கிடையே நெருங்கிய பாந்தவ்ய மேற்பட்டுவிட்டதால் இனிமேல் விலகிக் கொள்ளுவதென்பது நடைமுறையில் சாத்தியமானதில்லை.

இரண்டாவது, ஒவ்வொரு குடியரசு நாடும் அதனுடைய அயல்நாட்டு வியவகாரங்களைத் தீர்த்துக்கொள்ளும் என்று அதில் ஸ்பஷ்டமாகச் சொல்லப்படவில்லை. ஒவ்வொரு குடியரசு நாட்டிலும் அயல் நாட்டு அதிகாரிகளிருந்து வருவார்கள். அவர்களும் ருஷ்ய சமஷ்டி குடியரசு நிர்வாகத்தின் தூண்டுதலின் படிக்கும், அமுலுக்குட்பட்டும் அவர்களுடைய அலுவல்களைச் செய்துவரவேண்டும். மத்திய அயல்நாட்டு காரியாலயம்தான் அயல்நாட்டு சம்பந்தங்களின் போக்கை நிர்த்தாரணம் செய்யும். மேலும் பிரிடனுக்கு 17 தனிப்பட்ட ருஷ்ய குடியரசு நாடுகளின் அயல் நாட்டு மந்திரிகளை அனுப்புவதாகவாவது அல்லது பிரிடன் ஒவ்வொரு குடியரசு நாட்டிற்கும் ஒரு அயல் நாட்டுமந்திரியை அனுப்பவேண்டு மென்றாவது இந்த மாறுதல்களில் காணப்படவில்லை. அவ்விதம் செய்வதென்பது மனித பலத்தையும் பொருளையும் வீண் செலவுசெய்வதுடன் முடிவற்ற குழப்பத்துக்கும் ஹேது வாகும். சர்வதேச மகாநாடுகளில் 17 வோட்டுகளைப்போடக்கூடிய ருஷ்ய கோஷ்டியிருக்க வேண்டுமென்று நினைப்பவர்கள் இந்த மகாநாட்டின் நடவடிக்கைகளைப்பற்றி ஒன்று மறியாதவர்கள். மகாநாட்டில் முடிவுகள் வோட்டுகளை எண்ணுவதின் மூலம் நடைபெறுகிற தென்றும் சமாதான மகாநாட்டில் ருஷ்ய நிர்வாகத்தின் செல்வாக்கு அதில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளைப் பொருத்ததென்றும் அவர்கள் நினைத்துவருகிறார்கள். ஆகையால் அரசாட்சி மாறுதலின் லக்ஷியம் என்ன என்று பார்ப்போம். தனிப்பட்ட குடியரசு நாடுகளின் அயல்நாட்டு தூதர்களின் அலுவல்கள் எவை? முன்போல ருஷ்ய சமஷ்டி குடியரசு தான் அயல்நாடுகள் சம்பந்தமான உயர்தர நடவடிக்கைகளை நிறுவவேண்டும். ஆகிலும், M. மாலடோவ் ஸ்பஷ்டமாக வெளியிட்ட பிரகாரம், பொருளாதாரம், கலைஞானம் போன்ற அநேக விஷயங்களை பிரதேசத்திலமைக்கப்பட்டிருக்கும் நிர்வாகங்கள் திறமையுடன் கவனித்துவரக்கூடும். சாதாரண காலங்களில் ஆர்மீனியாவிலுள்ள குடியரசு நிர்வாகம் பூகோள சம்பந்தமான காரணங்களால் அதற்கும் ருஷ்யாவுக்குமுள்ள சம்பந்தங்களை திறமையுடனும் சீக்கிரமாகவும் சரிப்படுத்திக்கொள்ளலாம். மாஸ்கோவிலிருந்து நடவடிக்கைகளை முடிப்பதைவிட எரிவானிலிருந்து சுலபமாக காரியத்தை சாதித்துவிடலாம். ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்குமிடையே உள்ள எல்லைச்சரகம் ஆயிரக்கணக்கான மைல்கள் நீளமாகவும் ஆங்காங்கு உள்ள மக்களின் நிலைமை மாறுபாடாகவும் இருப்பதால், பொதுப்படையான முக்கியமான கொள்கைகளை பாதிக்கக்கூடாத சிறிய எல்லைச்சரக பிரச்னைகளை ஆங்காங்கிலிருக்கும் குடியரசுகள் தீர்த்துக்கொள்ளுவது சுலபமென்று தோன்றுகிறது.

ருஷ்ய அரசாட்சி மாறுதல் சம்பந்தமாக மற்ற நாடுகளில் ஏற்பட்ட உணர்ச்சியைக் கவனிக்கும்பொழுது, சமஷ்டியைக்கலைப்பதற்கு செய்யப்பட்ட சிறந்த நடைமுறை திட்ட



மென்றும் இது சிலாக்கியமானதென்றும் பிரிடன் கருதுகிறது. இதைப் பூர்த்திசெய்வதற்கு அயல்நாட்டு நிர்வாகங்களின் ஒத்துழைப்பு அத்தியாவசியமானது. ஏனென்றால் அந்நாடுகள் சில விஷயங்கள் சம்பந்தமாக மாஸ்கோவுடன் நடவடிக்கைகளைச் செய்யாமல் ஆங்காங்குள்ள பிரதேச உத்தியோகஸ்தர்களுடன் இனிமேல் சம்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். உதாரணமாக இந்தியாவுக்கு சமீபத்திலுள்ள டர்க்மான், டெட்ஜெக் குடியரசு நாடுகளிலிருந்து அயல்நாட்டு தூதர்கள் வருவார்கள். இந்தியாவிலிருந்து அந்நாடுகளுக்கும் தூதர்களை அனுப்பவேண்டும். யூக்ரேன் போன்ற பெரிய குடியரசுநாடு பிரிடனுக்கு ஒரு தூதரை அனுப்பவும் அங்கிருந்து ஒரு தூதர் கீவில் வசிக்கவும் பிரியப்படும்.

காலக்கிரமத்தில் இந்தப் புதிய ஆட்சிமுறையை அமுலுக்குக்கொண்டு வருவதற்கு மாஸ்கோவிலிருந்து யோசனைகள் விடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ராஜதந்திர முறையில் சொல்லும் பாஷையில் அந்த சிபார்சுகளை நாம் அன்புடன் ஆராய்ச்சி செய்வோம் என்றும் இந்தப் புதிய நிர்வாகமுறை சகஜமாக அமைக்கப்படுவதற்குக் கூடுமான ஒத்தாசையை பிரிடிஷ் அரசாங்கத்தார் செய்து வருவார்களென்றும் சொல்லலாம். அவ்விதம் செய்தால்தான் சர்வதேசங்களுக்கிடையே உள்ள சம்பந்தங்களைத் தெளிவுபடுத்தக்கூடிய பிரச்னைகளை துரிதமாகவும் திறமையுடனும் தீர்த்துவிடமுடியும்.

---

## பழிக்குப் பழிவாங்கும் வாடுடின்.

### *ஸண்டே டெஸ்பாச் பத்திரிகையில் ரால்ப் ஹீவின்ஸ்.*

ஜெனரல் நிகோலை வாடுடினுக்கு எதிரியை ஈவு இரக்கமன்னியில் துரத்திச் செல்லுவ தென்பது ராணுவ நடவடிக்கை யென்பதுமட்டுமில்லை. இது அவனுடைய சொந்த நடவடிக் கையும் கூட. ஜெர்மானியர்களுடன் தீர்த்துக்கொள்ளவேண்டிய பழிக்குப் பழிவாங்கும் கணக்கு பாக்கியிருக்கிறது. ஏனெனில் அவன் யூக்ரேனில் ஜனித்து வளர்ச்சி பெற்றவன்.

அவனுக்கு 38 வயதாகிறது. வாலிபத்தின் ஊக்கம் அவனிடம் மிகுந்திருக்கிறது. அவன் ஸாரின் ஆக்ஷிமுறையை அறிந்தவனல்ல. புரக்ஷியை அவன் ஆதரிக்கிறவன்.

இந்த யுத்தத்தில் செம்படையில் அவன் அற்புதமான கீர்த்தியைப் பெற்றுவிட்டான். அதைப்போல் ஸ்டாலின் கிராட்டின் ரக்ஷகரான 37 வயதுள்ள ஜெனரல் ரோகோஸோவ்ஸ்கியும் புகழ் பெற்றிருக்கிறான்.

இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பித்தபொழுது வாடுடின் ஒரு கர்னலாக இருந்தான். ஜெர்மானியர்கள் உட்புகுமுன் கிழக்கு போலந்தையும், பெஸ்ஸாரபியாவையும் செம்படை ஆக்கிரமிக்கச்சென்றபொழுது மார்ஷல் செமியான் டிமோஷெங்கோவுடன் ஸ்டாப் ஆபீஸராகச் சென்றார். ருஷ்யாவுக்குள் ஜெர்மானியர்கள் படையெடுத்தபொழுது மத்தியப் போர்முனையில் ஜெனரலாகயிருந்து இப்பொழுது மார்ஷலாக ஆகிவிட்ட கிரிகரி ஸுகாவிடம் அவர் ஜூனியர் தளகர்த்தராகயிருந்தார்.

ஸுகாவ் புத்திசாலிகளை ஆதரிக்கும் திறமையுடையவர் 1941-ம் வருஷத்தில் டிசம்பர் மாதத்தில் வியாஸ்மாவைத் தாக்குவதற்கு அவர் வாடுடினை அனுப்பினார்.

இந்தப் போரில் வெற்றியையும் அபஜெயத்தையும் பொருத்துத்தான் ருஷ்யாவின் மர்ம ஸ்தானமாகிய மாஸ்கோவின் பத்திரம் நிலைபெற்றிருந்தது.

வாடுடின் வியாஸ்மாவைப் பிடித்தார். இந்த வெற்றிதான் ராஸ்டாவை ருஷ்யர்கள் ஏற்கனவே பிடித்தபின் ஏற்பட்ட முதல்வெற்றி. வாடுடின் கியாதிபெற்றதும் இப்பொழுது தான். இதுதான் அவனுடைய தொடர்ச்சியான அநேக வெற்றிகளுக்கு அஸ்திவாரம்.

1942-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் ஸ்டாலின்கிராட்டில் பதில் தாக்குதல் செய்வதற்காக ஸுகாவ் திட்டம் போட்டபொழுது மத்திய டான் நதிபிரதேசத்தில் ஸ்டாலின்கிராட்டின் பக்கத்தில் ஏற்பட்டிருந்த பிளவை மூட வாடுடின் அனுப்பட்டான். நாலு நாட்கள் போர் நடத்தியபின் 19-ம் தேதியன்று வாடுடின நதியைத் தாண்டி 27-ம் தேதியன்று வான்னேஷ் ராஸ்டாவ் இருப்புப்பாதையைத் துண்டித்துவிட்டார். சென்ற வருஷம் ஜனவரி மாதத்தில் ருஷ்யாவின் உயர்தர ராணுவ கௌரவ அடையாளமான சுவராவ் பதக்கத்தை ஸ்டாலின் அவருக்கு அளித்து அவருடைய தீரத்தைப்பாராட்டினார்.

ஒரெலையும், பேயலோகிராட்டையும் தாக்கி வெற்றிகரமாக அவைகளைத் திருப்பி பிடித்ததற்காக ஆகஸ்டு 5-ம் தேதியன்று ஸ்டாலின் அவரை நேராடிப் போற்றினார்.

ஆகஸ்டு 23-ம் தேதியன்று அவன் பலமான ஜெர்மன் தற்காப்பு நிலையமான கார்காவைத் திருப்பிப் பிடித்தான்.

ஸெப்டம்பர் 2-ம் தேதியன்று முக்கியமான ரயில்வே நிலயமான சூமி பிடிக்கப்பட்டது. அதன் பின் 6-ம் தேதியன்று ருஷ்யாவின் புனிதமான நகரமும் வாடுடின் மத சம்பந்தமானதும் ஜாதி சம்பந்தமானதும்மான தலைநகரமுமான கீவ் விழுந்தது.

அவனுக்குக் கிடைத்த வெற்றிகளுக்குக் காரணங்கள் யாது? முதலாவது அவன் ருஷ்ய பீரங்கிப் பயிற்சியளிக்கும் பள்ளிக்கூடத்தில் சிறப்புடன் பயிற்சி பெற்றவன். இரண்டாவதாக செம்படையில் நூதனமான தந்திரங்களைக் கற்பனை செய்வதில் அவன் சிறந்தவனென்று சொல்லப்படுகிறது.

இந்த இரண்டு குணங்களையும் ஒன்றுபடுத்தியதின் பயனாக இந்த யுத்தத்தில் ஒரு புதிய தந்திரம் கையாளப்பட்டது. டாங்கிகளுடன் முன்னணியில் பீரங்கிப் படைகளையும் உபயோகிப்பது. டாங்கிகள் இல்லாவிட்டாலும் அல்லது தரைப் படைகளில்லாவிட்டாலும் அவைகளை உபயோகிக்கலாம்.

1941-ம் வருஷத்தில் மாஸ்கோ முற்றுகைக்குட்பட்டிருந்தபொழுது அனுஷ்டானத்துக்கு முதனாக கையாளப்பட்ட இந்த பீரங்கி பிரயோகம் இப்பொழுது செம்படையின் யுத்த முறையின் ஒரு அம்சமாக அமைக்கப்பட்டுவிட்டது.

---

## இதாலியைப்பற்றி மாஸ்கோவில் வெளியிட்ட உறுதிமொழி கௌரவிக்கப்படுகிறது.

*டெயிலி எக்ஸ்பிரஸின் நேபிள்ஸ் நிருபரான நார்மன் ஸ்மார்ட் எழுதியது.*

நேசதேசத்தார்கள் செய்திருக்கும் உத்தரவின்படி பிப்ரவரிமாதம் 14-ம் தேதியன்று நடு இரவிலிருந்து 10 மிலியன் ஜனங்கள் படோக்ளியோவின் ஆக்ஞைக்குட்பட்டுவிட்டார்கள்.

பிடிபட்ட இதாலியும், ஸிஸிலியும், ஸார்டீனியாவும், இதாலிய நிர்வாகத்தின் வட்டாரத்துக்குட்பட்டுவிட்டன.

நேசதேச கண்ட்ரோல் கமிஷனின் உதவித் தலைவரான லெப்டினண்ட் ஜெனரல் ஸர் நோயல் மேஸன் மாக்பர்லேன் இந்த உத்தரவை வெளிப்படுத்தினார்.

மத்தியதரைக்கடலில் நேசதேசப்படைகளின் சேனாதிபதியான ஜெனரல் ஸர் ஹென்றி மெயிட்லாந்து வில்ஸன் சமாதான உடன்படிக்கையின்படி நேசதேசத்தாரின் சார்பாக அனுபவித்துவரும் உரிமைகளுக்குக் குந்தகமன்னியில் அரசாங்க நிர்வாகத்தின் பூரா அதிகாரங்களும் இதாலியர் வசமிருந்துவரும்.

விடுதலை செய்யப்பட்ட பிரதேசத்தில் இதாலிய தீபகற்பத்தில் ஸாலர்னோ, போடென்சா, பாரி ஆகிய மாகாணங்களின் வடக்கு எல்லைச்சரகங்களுக்குத் தெற்கிலுள்ள எல்லா பாகமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இந்த வட்டாரத்தில் ராணுவ முக்கியத்வமுள்ள பாண்டலேரியாவும், லாம்படூஸாவும், லினோஸாவும் சேர்க்கப்படவில்லை.

இந்த உத்தரவின் பிரகாரம் ரோம் வீழ்ச்சிபெற்றபின் படோக்ளியோ நிர்வாகத்துக்கு பிரிடன் சலுகை காட்டுவதென்பதில்லை. ரோம் பிடிக்கப்படும்பொழுது இதாலிய மக்கள் விரும்பினால் வேறு அரசாங்கத்தை நிர்மாணம் செய்யத்தயாராகயிருப்பதாக படோக்ளியோ சொல்லிவிட்டான். விடுதலைபெற்ற நாடுகளில் எல்லாம் ஜெனரல் வில்ஸன் தலைமை வகிக்கும் நேசதேச கண்ட்ரோல் கமிஷனைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் இதாலிய ஆபீஸர்களுக்கு ஆலோசனை சொல்லி உதவியுமளித்துவருவார்கள். இதற்குமுன் அதிகாரம் செலுத்திய நேசதேச ராணுவ நிர்வாக அதிகாரிகள் வாபஸ் பெற்றுக்கொள்ளப்படும்.

இந்த மாறுதல்களை வெளிப்படுத்த படோக்ளியோவும் நேசதேச கண்ட்ரோல் கமிஷனின் ஆக்டிங் தலைவருமான ஜெனரல் அலெக்ஸாண்டரும் வெளியிட்டிருக்கும் பிரகடனங்கள் கவர்களில் ஒட்டப்பட்டிருக்கின்றன.

ஜெனரல் மாக்பர்லேன் பின்வருமாறு சொல்லுகிறார். "இதாலிய நிர்வாகத்துக்கு அதன் நாடுகளைத் திருப்பி வழங்குவதென்பது முதன் முதலான மகத்தான நடவடிக்கை. இந்த நடவடிக்கையின் வெற்றியைப்பொருத்துத்தான் அதற்கு அடுத்தாற்போல் அதிகாரம் மாற்றப்படும் நடவடிக்கைகள் நடைபெறும். நாம் எதிர்பார்க்கிறபடி இதாலிய நிர்வாகம் தன்னுடைய சக்தியை வெளிப்படுத்திவிட்டால், நாம் நியமித்திருக்கும் நேசதேச ஆலோசகர்கள் காலக்கிரமத்தில் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைக்கப்படுவார்கள்.

"ராணுவ நிர்வாகத்தையும், நேசதேச கமிஷனையும் ஒரு கோஷ்டியாக அமைப்பதுதான் முக்கியமான வேலை. இதுதான் ஐரோப்பாவின் புனருத்தாரணத்துக்கு முற்போக்கான பரிசையாகும். இங்கு நாம் வெற்றிகரமாகச் செய்து முடித்துவிட்டால் எதிர்காலத்தில் மற்ற இடங்களிலும் வெற்றிகரமாக இந்த முறைகளைக் கையாண்டுவிடலாம்."



அதன்பிறகு மாக்பர்லேன் நேசதேச கண்ட்ரோல் கமிஷனின் நோக்கங்களை விவரித்தார். அவை பின்வருமாறு (1) சமாதான உடன்படிக்கையின் ஷரத்துக்களின்படி இதாலியில் நிர்வாகம் அமைதியுடன் நடைபெறவேண்டும். நேசதேச யுத்தமுயற்சிகளுக்கு எல்லா வகையிலும் சாத்தியமான அளவு ஒத்தாசையளிக்க இதாலிக்கு வசதியளிப்பது. (3)இதாலியில் நேசதேசப் படைத்தலைவரான ஜெனரல் அலெக்ஸாண்டர் போர் நடத்திவரும்பொழுது பின்புறத்தைக் காபந்துசெய்துகொள்ளவேண்டிய அவசியத்தை நிவர்த்திப்பது. மாஸ்கோவில் மிஸ்டர் ஈடனும், மிஸ்டர் ஹல்லும், மிஸ்டர் மாலடோவும் மகாநாடு கூடிப் பேசியதன் விளைவாக, ஜனநாயகக் கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு அரசாங்கஸ்தாபனங்களையும் இதர இலாகாக்களையும் அமைத்துக்கொள்ள இதாலியர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுமென்று முடிவு செய்யப்பட்டதென்றும் அதன் பிரகாரம் இப்பொழுது இதாலியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டதென்றும் ஜெனரல் மாக்பர்லேன் சொல்லியிருக்கிறார்.

இந்த மாறுதலை வெளியிடும் உத்தரவில்கண்ட சில குறிப்புகள் பின்வருபவை. "நேசதேசத்தார்கள் இதாலியை ஆக்கிரமித்தபொழுது அது ராணுவ அவசியத்தைப் பொருத்திருந்தது. பொதுமக்களிடையே ஒழுங்குமுறையை ஸ்தாபித்து அதை பரிபாலிக்கவேண்டியிருந்தது. அவ்விதம் செய்தால்தான் யுத்தத்திலீடுபட்டிருக்கும் துருப்புகள் சௌகரியமான நிலைமையில் போர்புரிந்து வரக்கூடும்.

### மானிட வர்க்கத்தினிடம் அனுதாபம்.

"மானிட வர்க்கத்தினிடம் உள்ள அனுதாபத்தினால், ஆக்கிரமிப்பு நாடுகளிலுள்ள ஆடவர்களையும், ஸ்திரீகளையும், குழந்தைகளையும் ராணுவ நடவடிக்கையினால் விளைந்த கஷ்டங்களிலிருந்தும் சாத்யமான வரையில் விடுவிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

"ஆகையினால்தான் சர்வதேச நீதிமுறைப்படி நேசதேச ராணுவ நிர்வாகம் முதலில் அமைக்கப்பட்டது. அக்டோபர்மாதம் 13-ம் தேதியன்று ஜெர்மனிபேரில் இதாலி போர் தொடுத்தானது ஜெர்மானியர்களின் அமுலுக்குட்பட்ட பாஸிதத்வத்தையும் இதாலிய மக்கள் துறந்துவிட்டார்களென்பதை வெளிப்படுத்தியது. 'நவம்பர்மாதம் 1-ம் தேதியன்று அமெரிக்காவும், பிரிடனும் ருஷ்யாவும் இதாலி சம்பந்தப்பட்டமட்டில் அவர்களுடைய கொள்கையை மாஸ்கோ அறிக்கை மூலம் வெளிப்படுத்தினார்கள்.' 'பாஸிதத்வத்தையும் அதன் அமுக்கமான தீங்குகளையும் அதன் பிரிவுகளையும் அறவே ஒழித்துவிடவேண்டும்' என்று அதில் சொல்லப்பட்டது. இதையொட்டி நேசதேச கண்ட்ரோல் கமிஷன் நியமிக்கப்பட்டது. இதாலிய நிர்வாகத்தினிடம் தேசங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றிவிடவேண்டுவதற்கு திட்டங்களை நிறுவும்படிக்கும் இந்தக் கமிஷனுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. யோக்கியப்பொறுப்பும், ஜனநாயகத்தில் நம்பிக்கையுமுள்ள இதாலியர்கள் இதாலியின் எதிர்கால க்ஷேமத்திற்கு அஸ்திவாரம் போடவேண்டும்."

---

## துருக்கியைப்பற்றிய ஆராய்ச்சி.

மாஞ்செஸ்டர் கார்டியன் என்ற பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையொன்றில் இஸ்தான்புல்டானின் என்ற பத்திரிகையின் ஆசிரியரான ஹூசேன் காஹித் யால்சின் என்பவர் "பிரிடனின் நேசரான துருக்கி இன்னும் யுத்தத்தில் ஈடுபடாததற்குள்ள காரணங்களை முற்றிலும் உலக மக்கள் அறியவில்லை" என்று கூறியுள்ளார்.

### முந்திய சரிதை.

அந்தக் கட்டுரையினின்றும் பொறுக்கியெடுக்கப்பட்ட பாகம் பின்வருவதாகும். "1939-ம் வருஷத்தில் பிரிடனும் பிரான்ஸூம் ஒரு புறமாகவும், ஜெர்மனி ஒரு புறமாகவும் இருந்து போரிட்டபொழுது ஏற்பட்ட அங்காரா உடன்படிக்கையின்படி, தற்காத்தலே முக்கியமாயிருந்ததால், துருக்கி யுத்தத்தில் ஈடுபடவேண்டிய அவசியமில்லை. பிரிடன், பிரான்ஸ் இந்நாடுகளின்மேல் ஜெர்மனி ஆக்கிரமித்ததின் பலனாய் மத்தியதரைக்கடலில் போர் ஏற்பட்டகாலத்தும், பிரிடன் கொடுத்த வாக்குறுதிப்படி பால்கன் நாடுகளின் உதவிக்கு வந்த காலத்தும் துருக்கி, நேசக்கட்சிக்கு தன் முழு பலத்துடன் உதவிசெய்யவேண்டும். மேலும் துருக்கியில் நேசக்கட்சிக்கு துருக்கி உதவி செய்வதால் ருஷ்யாவிற்கும் துருக்கிக்கும் ஏதும் போர் ஏற்படுத்துவதற்கல்ல. சமாதானத்தின் சட்ட திட்டங்களை ஒதுக்கிப் பார்த்தாலும், துருக்கி யுத்தத்தில் இறங்கி இருந்தால் துருக்கிக்கும் அதன் நேசநாட்டிற்கும் ஆபத்து ஏற்படுவதுமட்டும் நிச்சயம். துருக்கியும் பிரிடனும் வெகு தூரத்திலிருக்கின்றன. ருஷ்யாவுடன் யுத்தம் ஒரு புறமிருக்க, இதாலி யுத்தத்தில் ஈடுபட்டபின்னும், பிரான்ஸ் தோல்வியுற்று டங்கர்க்கை விட்டு பின்வாங்கிய பின்னும் யுத்தம் மத்தியதரைக்கடலை நோக்கிச் சென்ற காலத்து துருக்கி யுத்தத்தில் இறங்கியிருந்தாலும் பிரிடன், துருக்கிக்கு வேண்டிய சிறிய உதவியும் செய்திருக்க முடியாது. துருக்கியினிடம் இருந்த சேனை பால்கன் நாடுகளால்

பயப்படத்தக்கதாய் இருந்தாலும், நாஸிகளுக்குமுன் போரிட மிகவும் பழையதாய், ஜெர்மனியைத் தாக்குவதற்கு தகுந்ததாயில்லை.

### துருக்கியின் ராணுவ பலம்.

"துருக்கி யுத்தத்தில் இறங்கவில்லை. ஆனால் இது, பிரிட்டனுக்கு ஒரு பெரும் போரில் கிடைத்த வெற்றியைவிட, மிகவும் அதிகமான உதவியாகும். ஸிரியா, இராக், எகிப்து இவைகளுக்குச் செல்லும் வழிகளை மறைத்தானது வடக்கு ஆபிரிக்காவில் இருந்த பிரிடிஷ் படைகளைக் காத்தது போன்றதாகும். நாஸிகளுக்கு எதிரியாய் துருக்கி அக்காலத்தில் யுத்தத்தில் முனைந்திருந்தால் ஜெர்மானியர்களுக்கு எகிப்து மாஸ்கோ ஆகிய இடங்களுக்குப் போகும் பாதைகளில் இடையூறின்றி அவர்கள் போக ஏதுவாயிருந்திருக்கும்.

"துருக்கிமட்டும் போரிட்டிருந்தாலும்கூட, கிழக்கு அல்லது மேற்கு யுத்த அரங்களில் அடைந்த ஜெர்மன் நிலைமைகளை மாற்றத்தக்கவாறு அத்தகைய ஜெர்மன் படைப்பகுதிகள் பல, ஜெர்மனியை எதிர்த்துப் போரிடவேண்டிய அவசியமில்லை. எனவே அது ஒரு உதவியாகவும் ஆகாது. ஜெர்மானியர்களிடம் பல்கேரியப்படைகள் இருக்கின்றன. பால்கன் நாடுகளில் ஜெர்மன் படைகளுமிருக்கின்றன. ஒன்றுபட்ட பல்கேரிய, ஜெர்மன் படைகளுடன் வெற்றியுடன் போரிடத்தக்க அத்தனை பலமும் நவீன முறையுடன் கூடிய சேனையும் துருக்கியிடம் உளதா? நேசக்கட்சியின் ராணுவ நிபுணர்களை இக்கேள்விக்கு பதில் தருமாறு நாம் முழுமனதுடனும், நம்பிக்கையுடனும் விட்டு வைக்கலாம். ஆனால் நம் கருத்தைப் பொருத்தவரையில் துருக்கியின் சேனை இன்னும் முன்னேற்றமடையவேண்டும்.

"துருக்கி தளங்களை உபயோகப்படுத்துவதனால் நேசக்கட்சிக்கு வெற்றியோ அல்லது யுத்தத்தை குறைந்த நாட்களில் முடிக்கும் திறனோ ஏற்படப்போவதில்லை. ஆனால் யுத்தம் செய்வதெனக்கூறி சக்தியற்ற நிலையில் துருக்கி இருப்பதென்றால் துருக்கியில் பல முக்கிய பாகங்களுக்கு சேதம் ஏற்படுவதுமட்டும் நிச்சயம். ஷொங் எல்டாக், இஸ்பிர், இஸ்தாம்புல் போன்ற பலமற்ற, காவலற்ற நகரங்களின்மேல் எதிரிகள் படையெடுப்பதுதான் முடிவான பலனாகும். மேலும் ஜலசந்தி வழியாய் செல்லும் பாதையானது எதிரிகளின் ஆதீனத்திற்குட்பட்டு ருஷ்யாவிற்கு உதவி அனுப்புவதும் முடியாமல் போய்விடும்."

## இந்தியாவில் மேற்கு ஆபிரிக்கத் துருப்புகள்.

மேற்கு ஆபிரிக்கத் துருப்புகள் இந்தியாவிற்கு வந்து சேர்ந்திருக்கின்றன என்று அரசாங்கத்தார்களால் விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறது. நைஜீரியா, பொன் கடற்கரை, ஸியெர்ராலியோனி, காம்பியா ஆகிய இடங்களிலிருந்து வந்தவர்களுடன் பிரிடிஷ் உத்தியோகஸ்தர்களும், அவர்களுக்கு பயிற்சியளித்த இதர உத்தியோகஸ்தர்களும் வந்திருந்தனர். அவர்களில் காலாட்படையும், யுத்ததள பீரங்கி யாட்கள், விமான எதிர்ப்பு பீரங்கி சுடுவோர், இஞ்ஜினியர்கள், சைகை காட்டுவோர், மருத்துவர், போக்குவரத்து வசதியளிப்போர் ஆகிய எல்லோரும் இருக்கின்றனர். அவர்களில் பலருக்கு தங்கள் சொந்த ஊரைவிட்டு சில மைல்கள் தூரத்திற்கு அப்பால் வந்திருப்பது இதுதான் முதல்தடவையாகும்.

ராயல் மேற்கு ஆபிரிக்க எல்லைப்புறப்படை, யுத்த ஆரம்பம் முதல் சிறிய படையாக இருந்தது. இப்பொழுது பெரிதாய் முழுதும் பயிற்சியுடையதாய், இக்கால யுத்தமுறையில் யுத்தம் புரிய தக்கதாய் உளது. பொன் கடற்கரை, நைஜீரியா இவைகளின் படைகள் அபிஸீனியாவில் போரிட்டுக்கொண்டிருக்கும்பொழுது, இந்த நான்கு மாகாணங்களில் உள்ள கிராமாந்திரங்களிலும் உள்ள காடுகளிலும், புதர்களிலும், மிகவும் அதிகமான படைகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டன.

பெரும் தலைவர்கள் ஒத்துழைத்தனர். படையினைப் பெரிதாக்க, வேடுவர்களும், செம்படவர்களும், இதர தொழிலாளிகளும், பள்ளியில் பயிற்சி பெற்றவர்களும் இந்த கைதேர்ந்த படையில் சேர்ந்துகொண்டனர்.

முற்றிலும் புதிதான முன்னேற்றம் காணப்பட்டது. முன்பெல்லாம் கல்வி அறிவற்றவர்களை, விமான எதிர்ப்பு பீரங்கிகளைச் சுடுவதற்கும், உயரத்தில் பறப்பனவைகளைக் கண்டுபிடிக்கவும், அவைகளை சுடவும் பயிற்சி அளிக்கப்பட்டனர்.

மேற்கு ஆபிரிக்கப் படைகளின் பயிற்சிக்கும் இதரவைகளுக்கும் ஜெனரல் ஸர் ஜார்ஜ் ஜே. ஜிப்போர்ட் G. C. B., D. S. O. பொதுப்பட்ட தளபதியாயிருந்தார். புதுவருஷ மரியாதைகள் அளித்தபொழுதுதான் ஜெனரல் ஜிப்போர்டுக்கு ஜி. ஸி. பி. (நீராட்டத்தின் மிகப் பெருந்தன்மையான தொகுதியின் மேன்மையான சிலுவையோடுகூடிய வீரன்) என்ற பட்டம் அளிக்கப்பட்டது.

1941, 1942-ஆண்டில் நேசக்கட்சியளிக்கும் ஜெர்மனியர் ஆக்கிரமித்த பிரான்ஸுக்கு உள்ள சம்பந்தத்திலிருந்த சில அனிகளின்படி இப்படை துரிதமாய் பெருகிற்று.



1942-ம் வருஷம் நவம்பர்மாதம் பிரெஞ்சு மேற்கு ஆபிரிக்கா நேசக்கட்சியினருக்காக யுத்தம் துவக்கியபொழுது, எல்லைபுறப் படைக்கு மேற்கு கடற்கரையில் "பாராக்கொடுக்க வேண்டியவேலை" ஒய்ந்தது. ஒவ்வொரு வருஷத்திற்கும் அங்கு உழைத்துவந்த பிரிடிஷ் உத்தியோகஸ்தர்களில் அங்குள்ள காலநிலையில் சிலர் இறந்தனர். மிகுதிப்பேர் நீண்டகாலம் தங்கள் நாடுவிட்டு தூரநாடுகளில் உழைத்து, அதன் தொடர்ச்சியாய் இந்தியாவுக்குவந்து உழைக்கின்றனர். அவர்களின் உழைப்பும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேற்கு ஆபிரிக்க படைகள் இந்த யுத்தத்தில் மிகவும் போற்றத்தக்க பங்கு எடுத்துக்கொண்டிருக்கிறது. மேற்கு ஆபிரிக்கப் பகுதி ஆபிரிக்காவில் நடந்த யுத்தங்களில் மிகவும் உழைத்திருக்கின்றனர். முக்கியமாய் 1941-ல் ரஷ்யா முதல் இதாலிய ஸோமாலிலந்துவரையிலும் முன்னேறியபோதும், அபிஸீனியாவில் முன்னேறியபோதும் பெரிதும் உழைத்திருக்கின்றனர். உஷ்ணப் பிரதேசங்களில் போரிடும் சிரமமில்லாது உஷ்ண பிரதேசங்களில் பழகியவர்களும், பர்மா, மலேயா முதலிய இடங்களில் உள்ள காட்டுப்பிரதேசங்களின் காலநிலையை ஒத்த இடங்களில் பழகியிருப்பதாலும், இப் பெரும்படை ஜப்பானியர்களை எதிர்த்துப் போரிடவேண்டி கொடுக்கப்படும் பயிற்சியை சுலபமாய் ஏற்றுக்கொள்ளுகிறது.

வடக்கு ஆபிரிக்காவினின்றும் ஜெர்மானியர்கள் துரத்தப்பட்டபின் மேற்கு ஆபிரிக்கப் படைகளை வேறு எங்கும் உபயோகப்படுத்த ஏதுவிருந்தது. எனவே பிரிடிஷ் எண்ணப்படி, ஜப்பானியர் எதிர்க்கவும், மேற்கில் வெற்றிக்கு மேல வெற்றி கிடைப்பதாலும், இப்படை இங்கு உபயோகப்படுத்தப்படுகிறது.

## இந்தியப் படைகளின் சபை.

பெரிதானதும் அன்றுடம் வளர்ந்து வருவதுமான இந்தியப்படைகளின் சபையானது ஒவ்வொரு வருஷத்திலும் ஆயிரக்கணக்கான பிரச்னைகளைத் தீர்த்து வருகிறது. அதன் முக்கியவேலை, படைகளினின்றும் விலகியவருடையவும், யுத்தத்தில் ஈடுபட்டவர்களின் குடும்பங்களுடையவும் நன்மையைக் கருதுவதாகும்.

இந்தியா முற்றிலும் வியாபித்திருக்கும் இச்சபைகள் 163-க்கும் மக்களிடையே மனோதிடம் குலையாது பாதுகாத்தலே முக்கிய வேலையாகும். கடல் கடந்துள்ளவர்கள், தங்கள் குடும்பத்தினர் கஷ்டப்படுகின்றனர் என்ற கவலையின்றி போரிடலாம். அக்குடும்பங்களும் யுத்தமிடும் தங்கள் உறவினர்களுக்கு கேடு சம்பவித்தால், அவர்களுக்காக உழைக்கும் உத்தியோகஸ்தர்களிடம் தங்கள் கஷ்டங்களை உரைக்கலாம் என்பதை அறிந்திருக்கின்றனர்.

### நிலையான விரிவு.

இந்தியப் படைகளின் சபையானது சென்ற யுத்தத்திற்குப் பிறகு ஸ்தாபிக்கப்பட்டு கலைக்கப்பட்ட வீரர்களுக்கு வாழ்க்கையில் உதவியளிக்குமாறு விடப்பட்டது. 1939-வருஷ முதல் இச்சபை நிலையாய் விரிவடைந்து வருகிறது. 1939-ல் 79 ஜில்லா படைச்சபைகள் இருந்தன. இன்று 135. பிரிடிஷ் இந்தியாவிலும், 28 இந்திய சமஸ்தானங்களிலும் உள. நியூ டில்லியில் தலைமை சபை இருந்துகொண்டு மாகாணசபைகளின் உழைப்பிற்கு ஒத்துழைத்துக்கொண்டு இந்திய சேனைக்கும் ஆட்களுக்கு பயிற்சி அளிக்கிறது.

ஜில்லா சபைகள் மாகாணசபைகளின்கீழ் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஜில்லா சபைகளுக்கு, டிபுடி கமிஷனர், அல்லது கலெக்டர்தான் தலைவர். இச்சபை போலீசாராலும் விவசாய இலாகா உத்தியோகஸ்தர்களாலும், உத்தியோகங்களின்றும் விலகியிருப்பவர்களாலும், மக்களாலும் உதவிசெய்யப்படுகிறது.

### பரந்த நடவடிக்கைகள்.

இச்சபைகள் பரந்த அளவு பிரதேசங்களில் தங்கள் வேலையைச் செய்து வருகின்றன. போர் வீரர்களின் குடும்பங்களுக்கு, கல்வி விஷயமான விவரங்கள் இச்சபைகள் கொடுக்கின்றன. தூரதேசங்களில் போரிடுவோர்களின் தபால் விலாசங்களை அக்குடும்பத்தினருக்கு இச்சபைகள் கூறுகின்றன. இந்தியப்படை வழக்குச் சட்டப்பிரகாரம் போர்வீரர்கள் இங்கில்லாதபோதே அவர்களுடைய வியாஜ்யங்களை நடத்துகின்றன. அப் போர் வீரர்களின் குடும்பங்களுக்கு மருத்துவ உதவிகளும் புரிகின்றன. சில சமயங்களில் கஷ்டம் ஏற்பட்டால் பண உதவியும் செய்கின்றன. அவர்களின் பெண்களின் கலியாணங்களில் ரொக்கமாய் சீதனங்கள் வழங்குகின்றன. உதவிகள், பணஉதவிகள், பென்ஷன்கள் முதலியனவும் வழங்குகின்றன.

இச்சபைகள் செய்த முக்கியவேலைகளுக்கு அத்தாக்ஷியாக, இரண்டு விஷயங்கள் உள. இரண்டு வீரர்கள் வேலைக்கு லாயக்கில்லாமல் போக அவர்களுக்கு ரொக்கமாய் பொருளுதவி செய்ததன்னியில் அவர்களின் நன்மைக்கும் பாடுபட்டது. முதலாவதான ஒருவர் வாத வியாதியால் கஷ்டப்பட்டார். அவர் வியாதியினின்றும் சுகம் பெருதல் என்பது நம்பமுடியாத விஷயம். அவரை கிராமத்தினின்றும் அப்புரப்படுத்தி பெரும் நகரங்களில் கொண்டுபோய் வைத்து, மேற்பார்த்துக்கொள்ளவும் தேவைகளை செய்து முடிக்கவும் வேண்டிய ஏற்பாடுகளை இச்சபை செய்தது.

இரண்டாவதாக, ஒருவர் சின்னாட்கள் வியாதியாய் இருந்து இறந்தபின் அவரின்கீழ் வாழ்ந்தவர்களுக்கு உதவிகள் இச்சபை புரிந்துவருகின்றன. இவைகள் நிற்க உடல்பாகம் குறைந்த வீரர்களுக்கு காலொடிந்தோர்களுக்கு செயற்கையான கால்கள் கொடுப்பது போன்ற பேருதவிகளை மத்தியசபை செய்துவருகிறது.

வீரர்களின் குடும்பங்களுக்கு சௌகரியமும், சந்தோஷமும் அளிப்பதும், குடும்பங்களை விட்டு ஆயிரக்கணக்கான மைல்கள் அப்பால் போரிடும் வீரர்களின் மனதிற்கு சந்தோஷமும் உற்சாகமும் அளிப்பதுமான சிறு விஷயத்தை கூட இச்சபை சொல்லாமலிருப்பதில்லை. உதாரணமாக பால்கள் கெட்டுப் போவதை விசாரித்தும், சரியான விவரங்களை நிச்சயப்படுத்தியும், வீரர்களிடமிருந்து அவர்கள் குடும்பத்திற்கும், அங்கிருந்து வீரர்களுக்கும் தபால் வந்து சேருமாறு இச்சபை செய்துவருகிறது.

நியூ டில்லியிலுள்ள மத்தியசபை, முக்கியமாக பாதுகாப்பு படைகளுக்கு உதவி நிதி, இந்தியசேனை பரோபகார நிதி, இவைகள் போன்ற பலவித நிதிகள் சேர்த்து, போர் வீரர்களின் குடும்பங்களின் சம்ரக்ஷணைக்கும், அவர்களின் குழந்தைகளின் கல்விக்கும் அளிக்கிறது. இந்திய சேனையில் குருடாகியவர்களுக்கு மாதம் 5 ரூபாய்கள் பென்ஷன் கொடுக்கப்படுகிறது.

சில நாட்களின் முன்பு, இந்திய விமானப்படை வீரர்களுக்கும், ராயல் இந்தியக் கடற்படை வீரர்களுக்கும்கூட இந்த உதவிகள் செய்யவேண்டுமென்று ஜில்லா சபைகளுக்கு உத்திரவுகள் அனுப்பப்பட்டுள்ளது.

## தென் இந்தியாவில் ராணுவத் திலில்லாத பொது மக்களுக்கு சேனையின் உதவி.

லெப்டினண்ட் ஜெனரல் ஸர் நோயல் பொரஸ் போர்ட்பியேர்ஸ், தென் சேனையின் ஜெனரல் ஆபீஸர் கமாண்டிங்கின் சார்ஜ், மதாராஸில் பேசிய பொழுது ராணுவத்திலல்லாத போதுமக்களுக்கு சேனையிலுள்ளவர்கள் செய்யும் பலவித உதவிகளையும் அதில் முக்கியமாய் உணவுப் பொருள் சம்பந்தப்பட்டன செய்யும் பேருதவிகளையும் விரிவாய் எடுத்துச் சொன்னார். அவர் சொன்னதாவது "ஒவ்வொரு சேனைக்கும் புதிதாய் உணவு வருங்காலத்தில் அதிகமாய் சேனை தங்கியிருக்கும் நாட்டிலிருந்து தான் உணவு வரவேண்டும்.

"தென் சேனையின் தேவைகளை, ராணுவ முறைகளினால் உதவி செய்யப்பட்டு பொது மக்களினால் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் அனுப்புவது குறைக்கப்பட்டிருக்கிறது."

### காய்கறிகள்.

காய்கறிகள் உற்பத்தி சம்பந்தமாய் செய்யப்பட்ட சேனைகளின் திட்டப்படி 100-க்கு 75 விகிதம் (பிரிடிஷ், இந்திய, அமெரிக்க) சைனியங்களின் தேவைக் காய்கறிகளை சேனையின் உத்திரவாதமுள்ள திட்டங்களின்படி, மாகாண அல்லது ஸமஸ்தான அரசாங்கத்தார்களால் சேனைகளுக்காக உற்பத்தி செய்யப்பட்டு அனுப்பப்படுகிறது. அப்பயிர்களை எடுத்துக் கொள்வதாயும் சேனை உத்திரவாதம் கொடுக்கிறது. சேனைக்குச் செலவானது போக எஞ்சியுள்ளதை பொது ஜனங்களுக்குப் பிரயோஜனப்படும்படியாய் மார்க்கெட்டுகளில் விற்கப்படுகின்றன. அதில் ஏதாவது நஷ்டம் ஏற்பட்டால், வாங்கிய விலைக்கு, விலையில் குறைந்து விற்று அதனால் ஏற்படும் நஷ்டத்தை, விவசாயிகளுக்கு சேனையிலிருந்தும் கொடுக்கப்பட்டு, அந்நஷ்டத்தை சேனை நஷ்டப்படுகிறது.

### பணம்.

இந்த வழிகள் பின்வருமாறு நடத்தப்படுகின்றன. அரசாங்கத்தார்களும் சைனியமும் அதிகப்பட்ட செலவில் சரி பங்கெடுத்துக்கொள்ளுகின்றன. அதாவது உபரியான உத்தியோகஸ்தர்களின் சம்பளம் வகையரா, விவசாய உத்தியோகஸ்தர்களின் பிரயாணப்படி முதலியவைகளாகும். புதிதாய் ஸ்பெஷல் உத்தியோகஸ்தர்களின் மூலம் சேனையினின்றும் விவசாயிகளுக்கு விதைகளும் வீடும் வாங்க பொருளுதவி செய்யப்படுகிறது.

விவசாய இலாகாவில் சேனையினால் 6½ லக்ஷம் ரூபாய்கள் பொதுவாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொருளைக் கொண்டு, விவசாயி ஒருவன் தான் உற்பத்தி செய்த பொருளை பணத்திற்கு விற்கவிரும்பினால் அவனிடத்தில் பணத்தைக் கொடுத்து பெற்றுக்கொள்ளவேண்டியது. இதனால் விவசாயிகள், தங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களைக் கொண்டு வந்து கொடுப்பதற்கு பிரியத்துடன் ஏற்றுக்கொள்ளுவதைத் தூண்டுகிறது.

### உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள்.

மதராஸ் அரசாங்க வியவசாய இலாகா கையாண்ட முறைகளில் வெற்றியடைந்த முக்கியமானமுறை நீலகிரி மலையில் காய்கறி உற்பத்தி செய்ததாகும். சேனை இங்கிருந்து வருஷத்திற்கு 3,000 டன்கள் நிறையுள்ள இங்கிலீஷ் காய்கறிகளைப் பெறுகிறது.



நீலகிரியில் மதராஸ் அரசாங்கம் 4,000 ஏகரா நிலங்களை சாகுபடிக்கு சேர்த்திருப்பதால், அங்கு உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டு பொதுஜனங்களின் தேவைக்கு குறைவின்றி உருளைக்கிழங்குகளை ஸப்ளை செய்து, சேனைக்கும் வேண்டிய அளவு உருளைக்கிழங்கு ஸப்ளை செய்ய முடிகிறது.

இதர காய்கறி உற்பத்தி முறைகள் மதராஸ் மகாணத்தில் யோசனையில் இருக்கின்றன.

## இந்தியா நமது சொர்ப்பன தேசம்.

பல்வேறு காக்ஷிகளும், வேறுபாடான குணங்களும், வேறுபாடான பிரச்னைகளும் கொண்டு இந்தியா ஒரு விசாலமான பரந்த தேசமாயுள்ளது. நாம் நமது கிராமங்களையும், நம் வீதிகளையும் அறிந்திருப்பதுபோல வேறு யாரும் இந்தியாவை அறியமுடியாது.

நம் எல்லோருக்கும் இந்தியாவின் சில பாகங்கள் நன்கு தெரியும். மீத பாகங்கள் எல்லாம் கற்பனையிலேதான் இருக்கிறபடியால் இந்தியா நம் எல்லோரின் சொர்ப்பன தேசமாகும். சரித்திரங்களின் மூலம் புத்தர் கால இந்தியா, கிருஷ்ணர் கால இந்தியா, ராமாயண கால இந்தியா, மகாபாரத கால இந்தியா, ராஜபுத்திரர்களின் இந்தியா, முஸல்மான் மன்னர்களின் இந்தியா இவ்வாறு பலவாறான சொர்ப்பன இந்தியா இருக்கிறது. சமாதானமும் வேண்டியவைதயும் அளவுடன் கொடுத்து தம் நாட்டு மக்களை காப்பாற்றுவதாய் உறுதியளிப்பதும், கீர்த்தி வாய்ந்த கொள்கைகளை மேல்நாட்டு நாகரீகத்துடன் கலந்து வாழ்ந்து அதனால் கௌரவமும், மரியாதையும் அடையும் பிற்கால சொர்ப்பன இந்தியா ஒன்று இருக்கிறது. சொர்ப்பனமாகக்கூறுமல், பங்கு செய்தல், ஒருவருக்கொருவர் நம்பிக்கையில்லாமை, ஒரு தலைவருக்குள் மற்றொரு தலைவருக்கு நம்பிக்கை இல்லாமை, அரசாங்கத்தினர்மேல் நம்பிக்கையற்ற தன்மை என்ற இத்தகைய கனுக்கள் என்று சொல்லக்கூடிய இவைகளுடன் கூடியது இன்றைய சொர்ப்பன இந்தியா.

இத்தகைய கனுக்களில் பல நிஜமற்றவைகளாகும். அறிவில்லாமல் நம்பிக்கையின்றி கட்டப்பட்டவைகளேயாம். அறிவில்லாமையுடனும் பங்கு செய்தல என்ற நோக்கத்தோடும் இருக்கும் இச்சொர்ப்பனங்களை அழித்து நம் குறிக்கோள்களோடு பிற்கால இந்தியாவை உருவாக்கவேண்டியது நம் கடனாகும். நாம் இந்தியாவின் பெருமைகளை வெளிப்படுத்த வேண்டும்; இந்திய மக்களின் பழக்க வழக்கங்களையும், இந்தியாவின் பரந்த நிலப்பரப்பையும், திரண்ட மூலப்பொருள்களையும், மனித பலத்தையும், உணர்ச்சியையும் அறிந்திருக்கும் நாம் இந்தியாவின் விதிக்கு எவ்வாறு நம்பிக்கை வைக்கமுடியும்; பிற்கால உலகில் இந்தியா ஒரு பெருமிதமான நாடாய் விளங்கும்போது நாமும் நமது கௌரவத்துடன் இருந்துகொள்ள எவ்வாறு நமது சக்தியை நம்பமுடியும்.

### நம்பிக்கை.

நாம் தைரியத்துடன் நடவடிக்கைகளில் காண்பிக்கும் நம்பிக்கையும், யுத்த அரங்கங்களில் நமது வீரர்கள் திடத்தோடு புரிந்த வீரச்செயல்களில் உள்ள நம்பிக்கையும், வீரர்களின் உறவினர்களும் சிநேகிதர்களும் தைரியமாய் இந்தியாவில் பல்வேறு கிராமங்களில் வாழ்ந்து வந்ததினால் ஏற்பட்ட நம்பிக்கையும், வெற்றியின்மேல் நம்பிக்கையும், வெற்றிக்காக சலியாத உழைப்பும் இவைகளினால் நம்முள் ஏற்படும் நம்பிக்கைதான் பிறகால உலகம் என்ற கதவுகளின் திறவுகோலாகும்.

## உணவுப்பொருள்களை சேதப்படுத்தாதீர்கள்.

### தேவைக்குமேலும் வைத்துக்கொள்ளாதீர்கள்.

ஜனவரி மாதம் 20-ந் தேதியன்று இந்திய அரசாங்கத்தில் உணவு சம்பந்தப்பட்ட அங்கத்தினரான கனம் ஸர். ஜே. பி. ஸ்ரீ. வஸ்தவா கீழ்க்கண்டவாறு ஒவ்வொருவரும் உணவுப்பொருள்களை சேதமாக்கக்கூடாது என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"உள்நாட்டு விளைவு குறைவினாலும், உணவுப்பொருள்களின் அதிகப்பட்ட விலையினாலும் கஷ்டப்படும் நாட்டிலுள்ள மக்களுக்கு சேதமாக்குவது கூடாது என்பது ஞாபகப்படுத்தவேண்டிய அவசியமில்லை. தாத்காலிகமாக கஷ்டங்கள் குறைக்கப்பட்டிருந்தாலும் முற்றிலும் நீக்கப்படவில்லை. மேலும் இந்தியாவும் இவ்வுலகின் பல பாகங்கள்போல மூலப்பொருள்களைப் பத்திரப்படுத்தி பாதுகாக்கப்படவேண்டிய காலத்தை எதிர்பார்க்கவேண்டும். இதற்கென நம்மில் பலர் முடிந்த உதவிகள் செய்யக்கூடியவர், பலரைவிட கஷ்டமில்லாதிருப்பவர்கள்தான் உதாரணமாய் இருந்து எல்லா மக்களுக்கும் முன் நிற்க வேண்டும். எனவே ஒவ்வொருவரும் வீண் சேதம் செய்யாமலும், தேவைக்கு மேற்பட்ட அளவு வைத்துக்கொள்ளாமலும் இருக்கவேணுமாய் நான் வேண்டிக்கொள்ளுகிறேன். விருந்துகளும், களியாட்டங்களும் இந்தக் காலத்திற்குப் பொருந்தியதல்ல. எனவே நம் வீடுகளில் முறையுடன் நடந்துகொண்டு நம் நாட்டிற்கு நலம் உண்டாக்குவோம்."

## கைத்தொழிலாளர்களின் பயிற்சி.

புதுக்கோட்டை ஸமஸ்தானம் மாட்சி தங்கிய மகாராஜா அவர்கள் கல்லூரியிலும், மராமத்து இலாகா ஒர்க்ஷாப்பிலும் அமைக்கப்பட்டிருக்கும் தொழிற்பயிற்சி நிலயங்களில் பிட்டர், மின்சார வேலை, கொல்லுவேலை, தையல்வேலை, தச்சுவேலை முதலியவைகள் கற்றுக் கொடுக்கப்படும். அபேக்ஷையுள்ளவர்கள் மனுச் செய்து கொள்ளலாம்.

2. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் ஸ்கூல் பைனல் பரிக்ஷையில் தேறியவர்களுக்கு மாதா மாதம் ரூ. 29-ம், பரிக்ஷை பாஸ் செய்யாதவர்களுக்கு ரூ. 24-ம், பயிற்சியளிக்கப்படும் காலத்தில் சம்பளமாகக் கொடுக்கப்படும்.

3. இந்தப் பயிற்சி திட்டத்தைப்பற்றிய பூரா விவரங்களையும் ஸ்டேட் இன்ஜினியரிடமிருந்தாவது அல்லது கல்லூரியின் பிரின்ஸிபாலிடமிருந்தாவது அறிந்துகொள்ளலாம்.

4. மனு பாரங்கள் ஸ்டேட் இன்ஜினியரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

5. மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் கமிட்டியார்கள் ஒவ்வொருமாதமும் 22-ம் தேதியன்று பகல் 11-மணிக்கு புதுக்கோட்டை ஸ்டேட் இன்ஜினியர் அவர்கள் ஆபீஸில் மாணவர்களைப் பொருக்கியெடுப்பார்கள்.

**பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.**

**அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.**

### புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் **187** (3-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4- 3-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 8- 3-44 | ராமச்சந்திரபுரம் | ... மாலை | 7.00 |
| 5- 3-44 | சூரக்காடு | ... ,, | 7.00 | ,, | ராயவரம் | ... ,, | 7.30 |
| ,, | கோட்டைக்காடு | ... ,, | 7.30 | 9- 3-44 | வாளரமாணிக்கம் | ... ,, | 7.00 |
| 6- 3-44 | திருவரங்குளம் | ... ,, | 7.00 | ,, | ஏம்பல் | ... ,, | 7.30 |
| ,, | வம்பன் | ... ,, | 7.30 | 10- 3-44 | விராலிமலை | ... ,, | 7.00 |
| 7- 3-44 | மழையூர் | ... ,, | 7.00 | ,, | பொருவாய் | ... ,, | 7.30 |
| ,, | காரம்பக்குடி | ... ,, | 7.30 | | | | |

பிரஸங்கம் **188** (4-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 11- 3-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 15- 3-44 | நார்த்தாமலை | ... மாலை | 7.00 |
| 12- 3-44 | ஆலங்குடி | ... ,, | 7.00 | ,, | உப்பிலியக்குடி | ... ,, | 7.30 |
| ,, | ராசியமங்கலம் | ... ,, | 7.30 | 16- 3-44 | அண்டக்குளம் | ... ,, | 7.00 |
| 13- 3-44 | புத்தாம்பூர் | ... ,, | 7.00 | ,, | கிள்ளனூர் | ... ,, | 7.30 |
| ,, | வைத்திக்கோவில் | ... ,, | 7.30 | 17- 3-44 | கொடும்பாளூர் | ... ,, | 7.00 |
| 14- 3-44 | வடவாளம் | ... ,, | 7.00 | ,, | விராலூர் | ... ,, | 7.30 |
| ,, | சம்மட்டிவிடுதி | ... ,, | 7.30 | | | | |

**யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.**

| | | | |
|---|---|---|---|
| 4—3—44 | பொன்னமராவதி. | 11—3—44 | வெட்டன்விடுதி. |
| 5—3—44 | கீத்தான்விடுதி. | 12—3—44 | மருதன்கோன்விடுதி. |
| 7—3—44 | குடுமியாமலை. | 14—3—44 | கோனாபட்டு. |
| 9—3—44 | ஆலங்குடி. | 16—3—44 | கீழாநிலை. |
| 10—3—44 | புதுக்கோட்டை. | 17—3—44 | பாப்பாபட்டி. |

Sri Brihadamba State Press, Pudukkottai, 1,800—7-3-44.


# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம் வருஷம் மார்ச்சு மீ 11உ [நெ. 188


தேசீய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் **CLXXXVIII.**

## இந்தியப் பொருளாதாரப் போர்முனை.

(*Mr. V. சத்தியமூர்த்தி அய்யர், தேசீய யுத்த முன்னணி, டவுன் ஆர்கனைசர் எழுதியது*).

இந்த உலகத்தின் ஒவ்வொரு மூலை முடுக்குக்கும் பரவியிருக்கும் இந்த யுத்தம் தனிப்பட்ட பொதுமக்களின் சொந்த வாழ்க்கையைப் பல முறைகளில் பாதித்திருக்கிறது.

யுத்தத்திலீடுபட்டிருக்கும் பிரிடன், ருஷ்யா போன்ற நாடுகள் தரையிலும், ஆகாயத்திலும், கடலிலும் போர் நடத்தவேண்டியதிலிருந்து அவசியமான கஷ்டங்களை அனுபவித்துவருகிறார்கள். இந்தியா, தெற்கு ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் கடற்கரை ஓரங்களில் சொற்பமான குண்டுவீச்சும், கடல்களில் சில்லரைச் சண்டைகளும் நடைபெறுவதைத் தவிர அந்நாடுகள் ஐரோப்பிய நாடுகளைப்போல அதிக கஷ்டங்களை அனுபவிக்கவில்லை.

தயை தாக்ஷண்யமில்லாத ஒரு எதிரியை சமாளிக்க பிரிடன் தற்காப்புகளை பலப்படுத்திக்கொண்டு, அதன் பொருளாதார முறைகளையும் சிறப்பாகத் திருத்தி அமைத்துக்கொண்டிருக்கிறது. அதனால் யுத்தத்தை மும்முரமாக நடத்தவும், இயற்கைப் பொருள்களுக்காக அயல்நாடுகளையே நம்பியிருக்கும் ஒரு தேசத்திற்கு பொதுஜனங்களுக்கும், ராணுவத்துக்கும் தேவையான ஸப்ளைகளை அபரிமிதமாக அனுப்புவதற்காகவும் உற்பத்தி செய்ய சக்தி பெற்றுவிட்டது.

பிரிடனுக்குச் செல்லும் கடல் மார்க்கங்கள் பத்திரமாகயில்லாவிட்டால் பிரிடிஷ் மக்கள் வறுமையினால் வாடவேண்டியிருக்கும். ஆனகையால் கப்பல் போக்குவரத்துக்கு ஆபத்து விளைவிக்கும் யூ படகுகளை பிரிடன் வேட்டையாடவேண்டும்.

ஆனால் இந்தியாவில் நிலமை முற்றிலும் மாறுபட்டது. இந்தியாவில் ஏராளமான தாதுப்பொருள்களிருக்கின்றன. சாமான்களை பிற தேசங்களுக்கு ஏற்றுமதி செய்து அதன் செல்வ நிலமையைப் பெருக்கிக்கொள்ள இந்தியாவிற்கு சௌகரியமிருக்கிறது.

தென்கிழக்கு ஆசியா கமாண்டின் நடவடிக்கைகளுக்கு இந்தியா முக்கியமான தளமாக உபயோகிக்கப்படுமென்று வெளியிட்டிருப்பது மிகவும் முக்கியமானது. இந்தியாவின் பொருளாதார ஐசுவர்யங்கள் பூராவும் இந்தப் போரை நடத்த உபயோகப்படுத்தப்படவேண்டும்.

போர் செய்துவரும் படைகளுக்கு ஸப்ளைகளை தாராளமாக அனுப்புவதற்காக நாட்டிலுள்ள மனித பலம், பொருள், தளவாடங்கள் எல்லாவற்றையும் ஒன்று திரட்டவேண்டியது மெத்த அவசியம். யுத்தத் தேவைகள் மிகவும் முக்கியமானதால், பொதுமக்களுக்குத் தேவையான சாமான்களை, அவர்கள் வீண் செலவு செய்யாமலும் அதே சமயத்தில் அவர்களுடைய மன உறுதி குலைந்துவிடாமலிருக்கும்படியாக விநியோகம் செய்யவேண்டும்.

இந்த விநியோகமானது பங்கீடு திட்டமூலமாகவும், உணவுப்பொருள் கட்டுப்பாடு மூலமாகவும் செய்யப்படுகிறது. இந்த நடவடிக்கைகளுக்கு பொதுமக்களின் பலமான

ஆதரவு இருக்கவேண்டும். அவர்கள் ஒத்தாசை செய்யாதபோனால் நிறுவப்படும் சட்டதிட்டங்கள் பயன்படாமல் போய்விடும்.

அளவுகடந்து உணவுப்பொருள்களைச் சேமித்துவைப்பவர்களைக் கண்டுபிடித்து அவர்களைத் தண்டிக்காதபோனாலும், அமித லாபம் சம்பாதிக்கிறவர்களைக் கண்டனம் செய்யாவிட்டாலும், கல்வியறிவில்லாத மக்களிடையே செலாவணியில் பீதியுண்டாகும்படி செய்துவிட்டாலும் அவைகளிலிருந்து பொதுமக்கள்தான் கஷ்டங்களை அனுபவிக்க நேரிடும். அவர்கள் வறுமைக்குட்பட்டுவிடுவார்கள். நாட்டில் எங்குபார்த்தாலும் பஞ்சம் தோன்றிவிடும்.

ஆகையால், எல்லோருக்கும் உணவுப்பொருளை சமமாக பங்கீடு செய்வதிலும் அமித லாபம் சம்பாதிப்பதற்காக அளவுகடந்து பொருள்களைச் சேமித்துவைப்பதைத் தடுப்பதிலும் அரசாங்கத்தார் செய்துவரும் முயற்சிகளில் நாமும் ஒத்துழைக்க கடமைப்பட்டிருக்கிறோமென்று நம்முடைய சகோதரர்களுக்குப் போதிக்கவேண்டியது நமது கடமையாகும்.

யுத்தகாலத்தை முன்னிட்டு வருமானம் அளவுகடந்து அதிகமாகிவிட்டதால் செலாவணிப் பொருள்களும் பெருகிவிட்டன. அதன் விளைவாக விலைவாசிகள் உயர்ந்துவிட்டன. அரசாங்கத்தின் நாணயங்களின் மதிப்புக் குறைந்துவிட்டது. இதைத் தடுக்கவேண்டுமானால் முதலாளிகளையும், சொல்பமான பொருளைச் சேமித்துவைப்பவர்களையும் அரசாங்க சேமிப்புகளிலும், கடன் பத்திரங்களிலும் பொருளைப் போடும்படி கேட்டுக்கொள்ளவேண்டும்.

இந்த நடவடிக்கை மூலம் உபரியாகயிருக்கும் பொருள் செலாவணியிலிருந்து குறைந்துவிடுவதுடன் அரசாங்கத்தாரின் யுத்த முயற்சிகளுக்கும் ஒத்தாசை செய்தது போலாகும். சிறிய சேமிப்பு திட்டமும், அதிருஷ்டப் பரிசு பத்திரங்களும், தற்காப்பு கடன் பத்திரங்களும், போஸ்டாபீஸ் சர்டிபிகேட்டுகளும் நமக்கு சிக்கன முறைகளைக் கையாள உத்சாகம் ஊட்டுகின்றன. மேலும் யுத்தத்துக்குப் பின் விலைவாசிகள் குறைந்துவிடுமாகையால் நமக்குத் திருப்பிக் கொடுக்கப்படும் பணத்தைக்கொண்டு அதிக பொருமானமுள்ள சாமான்களை நாம் வாங்க ஹேதுவாகயிருக்கும்.

இந்த முறைகளினால் நாம் இந்தியாவின் பொருளாதார நிலையை பலப்படுத்திவிடலாம். அவ்விதம் செய்தால் இந்த கோரமான யுத்தம் கூடிய சீக்கிரத்தில் வெற்றிகரமாக முடிவதற்கு நாம் அரசாங்கத்தாருக்கு ஒத்தாசை செய்ததுபோலாகும்.

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 29—2—44 (செவ்வாய்க்கிழமை). | "ஜெர்மனியின் இறுதித்தோல்வி சமீபித்துவிட்டது" என்று ஸ்டாலின் சொல்லுகிறார். |
| 1—3—44 (புதன்கிழமை). | நேசதேசப் படைகள் அட்மிராலிடி தீவுகளில் இறங்கினார்கள். பின்லாந்துடன் சமாதானம் செய்துகொள்ளும் ஷரத்துகளை ருஷ்யா வெளியிடுகிறது. |
| 2—3—44 (வியாழக்கிழமை). | ருஷ்யப்படைகள் எஸ்தோனியாவிலுள்ள நார்வா நதியைத் தாண்டிவிட்டனர். நேசதேசத்தார்கள் இதாலியில் ஆன்சியோ முன்னேறும் வாசலில் ஜெர்மானியரின் மூன்றாவது தாக்குதலைத் துரத்தியடித்தனர். |
| 4—3—44 (சனிக்கிழமை). | அமெரிக்க விமானப்படைகள் பெர்லின் பேரில் பகலில் வெடிகுண்டுகளைப் போட்டனர். |
| 5—3—44 (ஞாயிற்றுக்கிழமை). | ருஷ்யர்கள் யூக்ரேனியப் போர்முனையில் முதல் தடவையாக ஊடுருவிச் சென்றனர். பிரிடிஷ் மஸ்கிடோ வெடிவிமானங்கள் பெர்லின் பேரில் குண்டுகளைப் பொழிந்தன. |
| 6—3—44 (திங்கட்கிழமை). | அமெரிக்க வெடிவிமானங்கள் பெர்லின் மாகாணத்தில் பகலில் வெடிகுண்டுகளைப் பொழிந்தன. அமெரிக்கப்படைகள் பர்மாவில் நடவடிக்கைகளை ஆரம்பித்தன. ருஷ்யர்கள் ஒடெஸ்ஸா-ல்வோவ் இருப்புப்பாதையை டார்னோபோலுக்கும் புரோஸ்குரோவுக்கும் மத்தியில் ஊடுருவிச்சென்றனர். |



### (B)-செய்திச் சுருக்கம்.

**ருஷ்யா.**—பால்டிக் நாடுகளுக்கான போர் பலமாக நடைபெறுகிறது. முக்கியமாக நான்கு பகுதிகளில் போர் நடைபெறுகிறது. நார்வா, பெஸ்காவ், ஆஸ்ட்ராவ், வைடெப்ஸ்க்.

ஆஸ்ட்ராவ் பகுதியில்: ஸாஷிகினோ, ஸாமோஷி, ஸெர்கினோ, பிடிபட்டன.

ருஷ்யப்படைகள் நார்வாவுக்கு மேற்கில் பின்லாந்து வளைகுடாவை அடைந்துவிட்டன. நார்வாவிலிருக்கும் ஜெர்மன் படைகள் பின்வாங்கமுடியாமல் துண்டிக்கப்பட்டுவிட்டன. பெஸ்காவில் ஜெர்மனியின் நிலமை மோசமாகிவிட்டது. ஆஸ்ட்ரோவை ருஷ்யப்படைகள் சூழ்ந்துவருவதால் அதற்கு ஆபத்து உண்டாகிவிட்டது. வைடெப்ஸ்க்கில் ருஷ்யர்கள் பலமாகத் தாக்கிவருகிறார்கள்.

யூக்ரேனியப் போர்முனையில் ருஷ்யர்கள் மற்றொரு இடத்தில் புதிதாக ஊடுருவிச் சென்றார்கள். இந்தப்பகுதியில் இஸியாஸ்லவால், ஷேயிஸ்க், யாம்போல், ஆஸ்ட்ரோபோல் முதலிய இடங்கள் பிடிபட்டன. வினிட்ஸாவிலிருந்து யூமானுக்குப்போகும் இருப்புப்பாதை நொருக்கப்பட்டது.

மற்றொரு தாக்குதல் மூலம் ஒடெஸ்ஸா-வார்ஸா இருப்புப்பாதை டார்னோபோலுக்கும் புரோஸ்க்ரோவுக்கும் மத்தியில் துண்டிக்கப்பட்டுவிட்டது.

நீபர் நதியின் நுணிபாகத்தில் ருஷ்யப்படைகள் இங்குலட்ஸ் நதியைத்தாண்டி நிகோலோகோஸியிஸ்க் என்ற நகரத்தைப் பிடித்தனர். கருங்கடல் கரையிலுள்ள கெர்ஸானையும் நிகோலேயெவ்வையும் நோக்கி முன்னேறுகிறார்கள்.

**இதாலி.**—செவ்வாய்க்கிழமையன்று எதிரி மூன்றாவது தாக்குதலைத் துவக்கினான். இரண்டாவது தாக்குதலைப்போல் அவ்வளவு பிரமாதமானதல்ல. முதல் தாக்குதல் மூன்று நாள் நடைபெற்றது. 17 டிவிஷன் துருப்புகள் தாக்கின. மூன்றாவது எதிர்ப்பு 28 மணி நேரம் நிலைத்து நின்றது. மூன்று ஜெர்மன் டிவிஷன்கள் தாக்கின. காரோசெடிக்கும் சிஸ்டர்னாவுக்கும் மத்தியில் 1,000 கஜம் நீளமுள்ள போர்முனையில் போர் நடந்தது. எதிரிகள் கொஞ்சம்கூட முன்னேறவில்லை.

இந்தத் தோல்விக்குப்பின் புதன்கிழமையன்று அமெரிக்கர்களிருக்கும் போர்முனையில் இரண்டு தாக்குதல்கள் செய்யப்பட்டன. இரண்டு தாக்குதல்களும் சமாளிக்கப்பட்டன.

ஞாயிறன்று சிஸ்டர்னா பிரதேசத்தில் அமெரிக்கர்கள் தாக்கப்பட்டார்கள். ஜெர்மன் படைகள் சிதறியடிக்கப்பட்டனர்.

எட்டாம் படையிருக்கும் போர்முனையில் ஜெர்மானியர்கள் மார்ச்சு ௴ 5-ந்தேதியன்று இந்தியர்களிருக்கும் பிரதேசத்தில் தாக்கினார்கள். பிறகு அவர்கள் பின்வாங்கினார்கள். இந்த நடவடிக்கை இரண்டு மணி நேரங்கள் நடைபெற்றது.

#### எதிரி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவில் விமான நடவடிக்கை.

நான்கு நாட்கள் ஓய்வுக்குப்பின் மார்ச்சு ௴ 1-ம் தேதியன்று முக்கிய தொழிற்சாலை நகரமான ஸ்டட்கார்ட்டை பிரிடிஷ் விமானப்படை தாக்கிற்று. 600 விமானங்கள் ஈடுபட்டன. அன்று தினம் மஸ்கிடோ விமானங்கள் மியூனிச்சையும், பிரான்ஸிலும் ஹாலந்திலுமுள்ள ராணுவ லக்ஷியங்களையும் தாக்கின. நேசதேசத்தார்கள் 4 விமானங்களை இழந்தார்கள். இதுவரையில் ஸ்டட்கார்ட் ஐந்து தடவைகள் தாக்கப்பட்டிருக்கிறது.

மார்ச்சு ௴ 3-ம் தேதியன்று அமெரிக்க வெடிவிமானங்கள் பெர்லினைப் பகலில் தாக்கின. இப்பொழுதுதான் அமெரிக்க வெடிவிமானங்கள் முதல் முதலில் பெர்லினைத் தாக்கின. அன்றிரவு பிரிடிஷ் மஸ்கிடோ விமானங்கள் பெர்லினைத் தாக்கின. ஒரு விமானங்கூட நஷ்டமேயில்லை. மறுநாளும் பெர்லினை அமெரிக்க வெடிவிமானங்கள் தாக்கின. பெர்லின் மறுபடியும் மஸ்கிடோ விமானங்களால் 5-ம் தேதியன்றும் அமெரிக்க வெடி விமானங்களால் 6-ம்வயன்று பகலிலும் இரவிலும் தாக்கப்பட்டன. பெர்லின் இடைவிடாது தாக்கப்பட்டது.

பாரிஸ் பிராந்தியத்தில் பிரிடிஷ் விமானங்கள் தாக்குதல் செய்தன. அங்கு அநேக யுத்த தளவாடம் உற்பத்திசாலைகளும் எதிரி வசமுள்ள விமான தளங்களுமிருக்கின்றன. அமெரிக்க பறக்கும் கோட்டை விமானங்கள் டூலோனையும் மத்தியதரைக்கடல் கரையிலுள்ள கடற்படை தளத்தின்பேரிலும் குண்டுகளைப்போட்டன.

**பசிபிக் போர்.**—பிஸ்மார்க்குத் தீவுக்கூட்டத்தைச் சேர்ந்த அட்மிராலிடி தீவுகளைச் சேர்ந்த அநேக தீவுகள் ஆக்கிரமிக்கப்பட்டன.

**பர்மா.**—பூதிடாங்குக்கு வடக்கிலும், வடகிழக்கிலுமுள்ள அநேக புதிய ஸ்தானங்கள் கைப்பற்றப்பட்டன.

அமெரிக்கப்படைகள் சீனப்படைகளுடன் சேர்ந்துகொண்டு நடவடிக்கைகளைத்துவக்கம் செய்தன. வாலாபமும், மெயிக்வானும் பிடிபட்டன. சீனப்படைகள் ரிடுகோலவை ஆக்கிரமித்தன.

## சத்துருவினுடையவும், சத்துருவினுல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**27—2—44.** (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல், இரவு.—ஒரு தகவலும் இல்லை.

இதாலி (Italy).

விமானச் சண்டைகள்.—ஆன்ஸியா (Anzio) பிரதேசம்.—(1 எதிரி விமானம் சுட்டுத் தள்ளப்பட்டது).

விமான நிலயங்கள்.—ரோம் (Rome).

போக்குவரத்துகள்.—ஆன்ஸியோ (Anzio).

ருஷ்யா (Russia).

(98 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள, விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

எதிரி கப்பல்கள்.—காவியங் (Kavieng) பிரதேசம், ஸ்டெபென்ஸ் (Steffens) ஜலசந்தி.

விமான நிலயம்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul); அட்மிராலிட்டித் தீவுக் கூட்டத்திலுள்ள லோரெங்கா (Lorengau); மாமோட் (Mamote).

எதிரி ஸ்தாபனங்கள்.— நியூ கினியிலுள்ள வீவாக் (Wewak).

ஸப்ளைக் குவியல்கள்.— நியூ கினியிலுள்ள மடாங் (Madaung), அலெக்ஸிஸ்ஷாபன் (Alexishafen).

எதிரி சைனியங்கள்.—பொகெய்ன்வில்லி (Bougainville).

பர்மா (Burma).

ரயில்வே தளங்கள்.—பெகு (Pegu).

எதிரி சைனியங்கள்.—மாயூ (Mayu), அரக்கான் (Arakan); கலடான் (Kaladan) நதிகள்.

தளவாடங்கள், குவியல்கள்.— சிகோபி (Chikobi).

ரயில்வே இலக்குகள்.—மித்கினு(Myitkyina)

**28—2—44.** (திங்கட்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—ராணுவ இலக்குகள்— வடக்கு பிரான்ஸ் (Northern France), பாஸ் டி கலே (Pas De Calais)—(6 நேசதேசமானங்கள் காணப்படவில்லை; 1 விரோதி விமானம் சுட்டுத்தள்ளப்பட்டது).

இதாலி (Italy).

விமான நிலயங்கள்.— குடோனியா (Guidonia), லிட்டோரியா (Dittoria), மார்கிக்லியனு (Marcigliana).

விமானமிறங்குமிடங்கள்.-காமினே(Camino).

கப்பல்கள்.—டால்மீஷியன் கடற்கரையில் உள்ள அங்கோனு (Ancona).

ரயில், ரோடு நடமாட்டம்.—செட்டி (Chetti). டெர்னி (Terni).

ருஷ்யா (Russia).

(36 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

எதிரி ஸப்ளை பிரதேசங்கள்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul).

விமான நிலயங்கள்.— நியூ பிரிடனிலுள்ள வீவாக் (Wewak), டாட்ஜி (Tadji).

ராணுவ நிலயங்கள் -முஸ்ச்சி (Muschy) தீவு.

விமான நிலயங்கள்.—மடாங் (Madaung), அலெக்ஸிஸ்ஷாபன் (Alexishafen).

படகுகள்.—செய்டார் (Saidor).

விமான நிலயம்.—வேக் (Wake) தீவு.

எதிரி தளங்கள்.—மார்ஷல் (Marshalls) தீவுகள்.

பர்மா (Burma).

ரயில்வே ஸ்டேஷன்.—ஷ்வேபோ(Shwebo).

ரயில் ரோடு—கினு (Kinu), பிந்தா (Pintha).

இலக்குகள்.-அரக்கான் (Arakan), சின் மலைப் (Chin Hill) பிரதேசம்.

ஜப்பானிய முகாம்கள்.—ஹாகா (Haka) தீவுகள்.

ரயில் தளங்கள்.—மாண்டலே (Mandalay), அக்யாப் (Akyab), மொனிவா (Monywa).

ஜப்பானியத் தலைமை ஸ்தாபனம்.—பகோக்கு (Pakokku).

**29—2—44.** (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—(9 நேச விமானங்கள் காணப்படவில்லை).

விமானத் தொழிற்சாலைகள்.— பிரன்ஸ்விக் (Brunswick).

ராணுவ இலக்குகள்.—வடக்கு பிரான்ஸ் (N. France), பாஸ் டி கலே (Pas De Calais).

இதாலி (Italy).

ஜெர்மன் துருப்புகள், போக்குவரத்து சாதனங்கள்.—யுத்தம் நடக்கும் முனைகளில்.

விமான நிலயம்.—வைடெர்போ (Viterbo).

லிட்டோரியா ரயில்வே தளங்கள்.—ரோம் (Rome).

ருஷ்யா (Russia).

(9 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன),

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள், பீரங்கி ஸ்தாபனங்கள், கிட்டங்கிகள்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul); ஸப்ளை பைவானக் (Bivonac).

நியூ கினியிலுள்ள வீவாக் (Wewak).



விமானங்கள், பீரங்கி ஸ்தாபனங்கள்.—ஹன்ஸா பே (Hansa Bay).

படகுகள்.-பொகெய்ன்வில்லி (Bougainville) தீவு.

ரயில்வே தளங்கள்.—ரங்கூன் (Rangoon).

பாலங்கள்.—யீ-யூ (Ye-U).

ரயில் ரோட் பாலங்கள்.—காலின் (Kawlin).

பைவானக், ஸ்டோர் பிரதேசங்கள்.—ஷாட்ஸுப் (Shadzup).

**1—3—44.** (புதன்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

இரவு.—தொழிற்சாலை மத்யஸ்தலம்—ஸ்டட்கார்ட் (Stuttgart).

இலக்குகள்.—மியுனிச் (Munich), லோ கண்ட்ரிஸ் (Low Countries), (4 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இதாலி (Italy).

கப்பல்கள்.—டால்மேஷியன் (Dalmatian) கடற்கரை.

எதிரி போக்குவரத்துகள்.—ஆன்ஸியோ (Anzio).

வேவுபார்த்தல்.—ஆன்ஸியோ (Anzio).

ருஷ்யா (Russia).

(24 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப் பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—ரபால் (Rabaul).

படகுகள்.—பூயிரியடா (Puriata) நதி (7 படகுகள்).

இலக்குகள்.—சாய்ஸுவல் (Choiseul bay) குடா.

விமான நிலயங்கள்.-நியூ கினியிலுள்ள (New Guinea) வீவாக் (Wewak).

இலக்குகள்.—ஹன்ஸா பே (Hansa Bay).

பர்மா (Burma).

ஸப்ளை தளங்கள்.—டாங்குப் (Tangup).

இலக்குகள்.—அரக்கான் (Arakan).

போக்குவரத்துகள்.—தென் பர்மா (South Burma), சின் (Chin Hills) மலைகள்.

**2—3—44.** (வியாழக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

(1 நேசதேச விமானம் காணப்படவில்லை).

பகல்.—இலக்குகள்.-தென்மேற்கு ஜெர்மனி (S.W. Germany), லோ கண்ட்ரீஸ் (Low Countries), வடக்கு பிரான்ஸ் (Northern France).

ராணுவ இலக்குகள்.—பாஸ் டி கலே (Pas de calais).

ரயில்வே தளங்கள்.—பிரான்ஸிலுள்ள அமீன்ஸ் (Amiens).

இரவு.—விமானத் தொழிற்சாலைகள்.— பாரிஸ் (Paris).

இலக்குகள்.—மேற்கு ஜெர்மனி (Western Germany).

சுரங்கவேடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

இதாலி (Italy),
பால்கன் நாடுகள் (Balkans).

எதிரி ஆக்கிரமித்த சைனியங்கள்.—கர்ரோஸெட்டி (Carroceta), வெல்லெட்ரி சிஸ்டெர்னு (Velletri-Cisterna) பிரதேசம்.

கடற்கரை கப்பல்கள், ரஸ்தா போக்குவரத்துகள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).

ரயில்வே தளங்கள்.—ரோம் (Rome).

ருஷ்யா (Russia).

(45 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

எதிரி ஆக்கிரமித்த தீவுகள்.—மார்ஷல்ஸ் (Marshalls) தீவுக் கூட்டங்கள்.

துருப்புகள் ஏற்றப்பட்ட படகுகள்.—நியூ அயர்லந்திலுள்ள நாபுடோ பே (Nabuto bay).

எதிரி தளங்கள்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul), டியுக் ஆப் யார்க் (Duke of York) தீவு.

விமான நிலயங்கள்.—ஹன்ஸா பே (Hansa Bay), வீவாக் (Wewak).

விமான நிலயங்கள்.—பொகெய்ன்வில்லித் தீவு.

படகுகள்.—பொகேய்ன்வில்லித் (Bougainville) தீவின் தென்கடற்கரை.

குரைல் (Kurile) தீவுகள்.

பர்மா (Burma).

குவியல் பிரதேசங்கள்.—புரோம் (Prome).

எதிரி சைனியங்கள்.—பூதிடாங் (Buthidaung), சின்மலைகள் (Chin hills), மேல சிண்ட்வின் (Upper Chindwin).

**3—3—44.** (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—இலக்குகள்—பெர்லின் (Berlin), வடமேற்கு ஜெர்மனி (N. W. Germany).

ஜெர்மன் விமான நிலயம்.-பிரான்ஸ்(France).

இரவு.—இலக்குகள்.—மேற்கு ஜெர்மனி (Western Germany).

இதாலி (Italy).

ரயில்வேக்கள்.—ரோம் (Rome), லிட்டோரியோ(Littorio), ஆஸ்டியென்ஸ்(Ostiense), டர்பர்டினு (Tirburtina).

விமான நிலயங்கள்.—வைடெர்போ (Viterbo), காமினே (Camino), பாப்ரிகா டி ரோமா (Fabrica Di Roma).

மான்டிலிரோ (Montelero)ல் டன்னல் ஸ்டேஷன்.—ஸான் பெனடெட்டோ (San Benedetto).

பீரங்கி ஸ்தாபனங்கள், ரஸ்தா போக்குவரத்துகள்.—ரோம் (Rome) பிரதேசம்.

கப்பல்கள்.— டால்மேஷியன் (Dalmatian) கடற்கரை.

துறைமுகம்.—ஸாரா (Zara).
போக்குவரத்துகள்.—இதாலி (Italy)யின் மேற்குக் கரை.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

எதிரி சைனியங்கள்.—அட்மிராலிடி (Admirality) தீவுகள்.—(8 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).
எதிரி இலக்குகள்.—ஸெயிண்ட் ஜார்ஜ் (Cape St. George), நாமாடானை (Namatanai).
படகுகள்.—ஹாஸ்கின்ஸ் (Cape Hoskins) முனை.
விமான நிலயம்.—நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata).
படகுகள், இதர இலக்குகள்.—அலெக்ஸிஷ்ஷாபன் (Alexishafen).
காஹிலி (Kahili).
பீரங்கி ஸ்தாபனங்கள்.—பலாலி (Ballale).
விமான நிலயம்.—ஸாலமன்ஸிலுள்ள (Solomons) புகா (Buka).

பர்மா (Burma).

போர்ட்ஒயிட் (Fortwhite).
எதிரி சைனியங்கள்.—அரக்கான் (Arakan), மாயூ (Mayu), கலடான் (Kaladan) பிரதேசங்கள்.
நீராவியந்திரங்கள், சேமிப்புகள், படகுகள்.—வடபர்மா (Northern Burma) முழுவதும்.
விமான நிலயம்.—ஷ்வெபோ (Shwebo).

**4—3—44** (சனிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—பெர்லின் (Berlin).
இலக்குகள்.—கிழக்கு ஜெர்மனி (East Germany).
ராணுவ இலக்குகள்.—வடக்கு பிரான்ஸ் (Northern France), பாஸ் டி கலே (Pas-de-calais).
கடற்கரை இலக்குகள்.—கிரிஸ் முனை (Cap Griz)க்கும் போலோனுக்கும் (Boulogne) இடையில்.
இரவு.—இலக்குகள்—பெர்லின் (Berlin), மேற்கு ஜெர்மனி (Western Germany).

இதாலி (Italy),

கப்பல்கள்.—இதாலியின் மேற்கு கடற்கரை போர்ட்டோ ஸான் ஸ்டெபானோ (Porto-san stefano).
தாக்குதல்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள் (1 எதிரி விமானம் சுட்டுத்தள்ளப்பட்டது. 2 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

ருஷ்யா (Russia).

(49 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய தளம்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul).
படகுகள்.—நியூ பிரிடனின் கடற்கரை.
பீரங்கி ஸ்தாபனங்கள்.—அலெக்ஸிஸ்ஷாபன் (Alexishafen).
எதிரி சைனியங்கள்.—சுயா (Sua) நதி.
கடற்கரை சைனியங்கள், படகுகள்.—எம்ப்ரஸ் அகஸ்டா பே (Empress Augusta Bay).

பர்மா (Burma).

நகரம்.—பாமோ (Bhamo).
எதிரி விமான நிலயங்கள்.—தென் பர்மா (Southern Burma).
எதிரி சைனியங்கள்.—கலடான் (Kaladan), அரக்கான் (Arakan) பிரதேசங்கள்.
இலக்குகள்.—சின் (Chin) மலைகள், சிண்ட்வின் (Chindwin).
துருப்புகள், ஸ்டோர்கள்.—வடக்கு பர்மா (Northern Burma).

## *விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்*

**28—2—44.** (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia),
தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**29—2—44.** (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

லண்டன் (London), சில இடங்கள்—தென் கிழக்கு இங்கிலாந்து.

ருஷ்யா (Russia),
தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**1—3—44.** (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

லண்டன் (London) பிரதேசம்,

ருஷ்யா (Russia).

ஒரு தகவலும் இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

விமானச் சண்டைகள்.—ரபால் (Rabaul). (1 ஜப்பானிய விமானம் சுட்டுத்தள்ளப்பட்டது).

**2—3—44.** (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia),
தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**3—3—44.** (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia),
தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.



இதாலி (Italy).

வேவுபார்த்தல்.—யுத்தம் நடக்கும் பிரதேசம்.

**4—3—44.** (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**5—3—44.** (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia),
தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

**ஒற்றுமையும், வேற்றுமையும்.** 1943-ம் வருஷத்தில் அநேக வெற்றிகள் கிடைத்த போதிலும், அந்த வருஷத்தில் ஆயத்தம் மிகுதியாகச் செய்யப்பட்டது. ஆப்பிரிக்காவில் வெற்றிபெற்றபொழுது, யூ-படகுகளின் அபாயத்துக்குட்பட்ட கடலாதிக்கம் சம்பாதிக்கப்பட்டது. பிரிடிஷ் அமெரிக்கத் துருப்புகளின் வலிமை அதிகரித்தது. 1943-ம் வருஷம் முதல் மூன்று மாதங்களில் கப்பல் நஷ்டம் மிகுதியாக இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக திருப்திகரமான நிலமை தோன்றிற்று. ஆப்பிரிக்காவில் துருப்புகளை இறக்குவதற்கு 850 கப்பல்கள் உபயோகப்படுத்தப்பட்டன. ஸிஸிலிய நடவடிக்கையில் 3,950 கப்பல்கள் ஈடுபட்டன. மே மாதத்தில் யூ-படகுகளை அழிக்கும் யுத்தம் ஆரம்பமாகிற்று. வருஷ முடிவில் யுத்த ஆரம்பத்திலிருந்து நஷ்டமான கப்பல்களின் நஷ்ட ஈடு செய்யப்பட்டனவென்று கர்னல் நாக்ஸ் பிரசுரம் செய்தார். எதிரிகள் ஒப்புக்கொண்டபடி இந்த வருஷம் ஜனவரி மாதத்தில் யூ-படகு நடவடிக்கைகள் மூலம் ஏற்பட்ட நேசதேசக் கப்பல் நஷ்டங்கள் சென்ற அநேக மாதங்களைவிட மிகவும் குறைவானவை. இப்பொழுது இருவகைப்பட்ட நடவடிக்கைகளைத் துவக்க தருணம் வந்துவிட்டது. இப்பொழுது கடலில் நேசதேசத்தாருக்கு மிகுதியான ஆதிக்கம் ஏற்பட்டுவிட்டது.

மற்றொரு பக்கத்தில் 1943-ம் வருஷத்தில் ஜெர்மனியின் வலிமை குலைந்துவிட்டது. அதன் கப்பல்கள் பெரும்பாலும் மூழ்கடிக்கப்பட்டன அல்லது கலைக்கப்பட்டன. விமானப் படையின் வலு குலைந்துவிட்டது. எதிரியின் தரைப்படையின் வலு இன்னும் குறைவுபடாத போதிலும், ருஷ்யாவில் அது சக்தியை இழந்தது. படைகள் ஐரோப்பிய கடற்கரை பூராவிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. படைகளுக்குத் தாங்கமுடியாத சிரமம் ஏற்பட்டிருக்கிறது. ஸ்டாலின்கிராடிலும் கானியேவிலும் ஜெர்மன் படைகள் அழிக்கப்பட்டதின் விளைவுகள் இதுதான். காகஸஸ் அடிவாரங்களுக்குச் சென்ற ஜெர்மன் பான்சர் படைகள் ருஷ்யாவில் பின்வாங்கி ஓடியதன் விளைவுகளும் அதிகம். இதே பலஹீனத்தினால் ஜெர்மன் படைகள் இதாலியில் படைகளிறங்கியபொழுதும் சும்மாவிருந்தன. ஸிஸிலியை இழந்தன. இதாலியில் குதிகால் பாகத்திலிருந்து ஸாலர்னோவுக்குப் பின்வாங்கின. இப்பொழுது அவைகள் ஆன்ஸியோவில் நிலைபெற்றிருக்கின்றன. 1943-ம் வருஷத்தில் ஜெர்மனிக்கு நெருக்கு ஏற்பட்டிருக்கிறது.

மற்றொரு பக்கத்தில் நேசதேசத்தாரின் கை ஓங்கிவிட்டது. இப்பொழுது நேசதேசப் படைகளில் 5-ம் படையும், 8-ம் படையும்தான் போரை நடத்திவருகின்றன. 14-வது சேனை போன்ற அமெரிக்க, நேசதேசப்படைகளிருக்கின்றன: ஜெர்மன் மதிப்பு பிரகாரம் பிரிடனில் மட்டும் 50 டிவிஷன் துருப்புகளிருக்கின்றன. 80-டிவிஷன் துருப்புகளிருக்கின்றனவென்று அமெரிக்கர்கள் சொல்லுகிறார்கள். படையெடுப்பு ஆரம்பமாகி அநேகப் போர்முனைகள் திறக்கப்படும்பொழுது இந்தப் படைகள் எதிரியை வளைத்துக்கொள்ளும். மின்னல் தாக்குதல் உச்ச நிலமையை அடைந்துவிடும். இந்த இறுதித் தாக்குதல் எதிரியைத் திணரசெய்துவிடும்.

வி வி வி வி வி

**மின்னல் எதிர்ப்பு.** 1940-ம் வருஷத்திய ஜெர்மன் மின்னல் எதிர்ப்பைப்போல் அவ்வளவுதூரம் ஜனங்களின் கவனத்தைக் கவரக்கூடியதாக இல்லாவிட்டாலும் பிரிடிஷ் தாக்குதல்கள் ஒன்றுபட்டு வெற்றியளிக்கக்கூடியதாக இருக்கும்.

வி வி வி வி வி

**ஆன்ஸியோ போர்முனை.** கடல் மூலமாகவும், தரை மூலமாகவும் துவக்கப்பட்ட நடவடிக்கையில் பல கட்டங்களிருக்கின்றன. முதலில் கடற்படை பீரங்கிகளின் உதவிகொண்டு முன்னேறும் வாசல் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் பிறகு பலத்தைப் பெருக்கிக்கொள்ள ஓய்வு காணப்பட்டது. அதன்பின் படைகள் முன்னேறுகின்றன. எதிரிகள் ஏமாற்றமடையும்படியாக படைகளை இறக்கிவிட்டாலும் ஓய்வு ஏற்பட்டால்

எதிரிகள் விழித்துக்கொண்டுவிடுவார்கள். எதிரியின் படைகள் குவிந்து தாக்குகின்றன. இவ்விதமாக இருவகைப்பட்ட நடவடிக்கை பாதிக்கப்பட்டுவிட்டது.

ஆன்ஸியோவில் மத்திய கட்டம் ஆரம்பமாகிவிட்டது. முன்னேறும் வாசல் பலமாகிவிட்டது. உதவிப்படைகள் குவிக்கப்படுகின்றன. எதிரியின் பதில் தாக்குதல்கள் முறியடிக்கப்படுகின்றன. மூன்றாவது கட்டம் கூடிய சீக்கிரம் ஆரம்பமாகும். நேசதேச முக்கியஸ்தர் சொல்லுகிறபடி "தற்காப்பு முறையை நேசதேசத்தார்கள் வெகுகாலம் வரைக் கையாண்டுகொண்டு நிற்கமாட்டார்கள்."

நேசதேசத்தார்கள் முன்னேறித்தாக்க ஆரம்பித்துவிட்டார்களென்று ரோமில் உள்ள ஜெர்மன் ரேடியோ சொல்லுகிறது. இதன் உண்மை வெளிப்படவில்லை. புதிய தாக்குதலைத் துவக்க மார்ஷல் கெஸ்ஸல்ரிங்க் படைகளைத் திருத்தியமைத்து வருகிறான். எதிர்காலத்தில் கடும்போர் நடைபெறக்கூடும். மிஸ்டர் சர்ச்சில் பிப்ரவரி மாதம் 22-ம் தேதி சொன்ன பிரகாரம் ராணுவ அதிகாரிகள் இறுதி வெற்றியில் நம்பிக்கையுடனிருக்கிறார்கள். பிரிடிஷ், அமெரிக்க, இந்திய, சாம்ராஜ்ய, பிரெஞ்சு, போலிஷ் துருப்புகள் தோளோடு தோள் நின்று முன்னேறித் தாக்கும் உத்சாகத்துடனிருக்கின்றன.

வி வி வி வி வி

**ஒன்றுபட்ட தாக்குதல்.** இந்த வாரத்தில் பெர்லின் நூதன முறையில் தாக்கப்பட்டது. பிரிடிஷ் வெடி விமானங்களும் அமெரிக்க விமானங்களும் இடைவிடாது இரவு பகலாக பெர்லினைத்தாக்கின. மார்ச்சு மாதம் 1-ம் தேதியன்று அமெரிக்க வெடிவிமானங்கள் பகலிலும் மஸ்கிடோ விமானங்கள் இரவிலும் பலமாகத் தாக்கின. மறுநாளும் அமெரிக்க வெடி விமானங்கள் தாக்கின. மறுபடியும் 5-ம் தேதி இரவில் மஸ்கிடோ விமானங்கள் பெர்லின் பேரில் குண்டுகளை வீசின.

சென்ற வாரத்தில் எதிரியின் விமான நிலயங்களும் விமான உற்பத்திசாலைகளும் பலமாகத் தாக்கப்பட்டனவென்று சொன்னோம். அதன் விளைவுகள் இங்கு குறிக்கப்பட்டிருக்கின்றன.

| | தேதி. | | லக்ஷியம். | விமான நஷ்டம். நேசதேசம். | எதிரி. |
|---|---|---|---|---|---|
| 1 | பிப்ரவரி | 19—20 | இரவு லீப்ஸிக் | ... 79 | ... |
| 2 | „ | 20 | பகல் லீப்ஸிக் | ... 22 | 126 |
| 3 | „ | 20—21 | இரவு ஸ்டட்கார்ட் | ... 10 | ... |
| 4 | „ | 21 | பகல் பிரன்ஸ்விக் | ... 15 | 51 |
| 5 | „ | 22 | பகல் பிரன்ஸ்விக், ரீஜன்ஸ்பர்க் | ... 15 | 123 |
| 6 | „ | 24 | பகல் ஷ்வின்பர்ட், ஸ்டேயர் | ... 56 | 156 |
| 7 | „ | 24—25 | இரவு „ | ... 36 | 3 |
| 8 | „ | 25 | பகல் ரீஜன்ஸ்பார்க், ஸ்டட்கார்ட் ஆக்ஸ்பர்க். | ... | 27 |
| 9 | „ | 25—26 | இரவு „ | ... 24 | ... |
| | | | | 257 | 486 |

ஸ்டேயரையும், ரீஜன்ஸ்பர்க்கையும் தாக்கியதைத்தவிற மற்ற இடங்களைத்தாக்கிய விமானங்கள் பிரிடனிலிருந்து புறப்பட்டன. ஸ்டேயரையும், ரீஜன்ஸ்பர்க்கையும் இதாலியிலிருந்த விமானங்கள் தாக்கின. பிரிடிஷ் விமானங்கள் இரவில் தாக்கின. அமெரிக்க வெடி விமானங்கள் பகலில் தாக்கின.

1, 3 லக்கமிட்ட தாக்குதல்களில் 2,300, 2,000 டன்கள் மொத்த எடைமானமுள்ள வெடிகுண்டுகளும் 1 முதல் 8 முடிய உள்ள தாக்குதல்களில் 13,000 டன்கள் எடைமானமுள்ள குண்டுகளும் வீசப்பட்டன. 2, 4, 7 லக்கமிட்ட தாக்குதல்களில் 2,000, 1,000 வெடி விமானங்கள் ஈடுபட்டன.

வி வி வி வி வி

**புதிய முறைகள்.** இவைகளின் முக்கியமான அம்சங்கள்.

(1) வெடி விமானங்களுக்குத் துணையாகச்சென்ற நேசதேச வெகுதூரம் செல்லும் சண்டை விமானங்கள் ரீஜன்ஸ்பர்க்கைத் தாக்கக்கூடிய சக்தியைப் பெற்றுவிட்டன.

(2) இருவகைப்பட்ட விமான நடவடிக்கை பிரிடனிலும் இதாலியிலுமுள்ள 500 விமான தளங்களிலிருந்து துவக்கப்பட்டது. இரு தளங்களிலிருந்து புறப்படும் விமானங்கள் ஒரே லக்ஷியத்தை ஒன்றுபட்டு தாக்குகின்றன.



(3) எதிரிகளுக்கும் நேசதேசத்தாருக்கு மேற்பட்ட நஷ்டக் கணக்கு ஸ்வாரஸ்யமானது. எதிரிக்குச் சண்டை விமானங்கள் நஷ்டம். சண்டை விமானங்களைவிட வெடி விமானங்களில் அநேக ஆட்கள் வேலைசெய்து வருவதால் அவைகளில் நஷ்டம் பலமானது. ஜெர்மனியின் வாராவார உற்பத்தியைவிட விமான நஷ்டம் அதிகம்.

(4) விமானப்படை குறிப்பை வெளியிட்டபொழுது விமானப்போர் உச்ச நிலமையை அடைந்துவிட்டதென்று ஸர் ஆர்சிபால்ட் ஸின்க்ளேர் வெளியிட்டார். வசந்த காலத்தில் தாக்குதல் அதிகரிக்குமென்று எதிர்பார்க்கலாம்.

(5) நமது வெடி விமானங்களும் சண்டை விமானங்களும் இரண்டு ரகங்களின் வேலையையும் செய்துவருகின்றன.

(6) நேசதேச விஞ்ஞான சாஸ்திரிகள் புதாக விமானங்களை உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்திவருகிறார்கள். ஜெர்மனியின் விஞ்ஞான சாஸ்திரிகள் நாஸிகளின் கொடுமையினால் மறந்துவிட்டார்கள்.

(7) இவ்வருஷத்தின்முதல் ஏழு வாரங்களில் பிரிடிஷ், சாம்ராஜ்ய, நேசதேச, அமெரிக்க இலேசான மத்தியதரை வெடி விமானங்கள் பிரிடிஷ் டைபூன், ஸ்பிட்பைடர், ஹரிகேன் சண்டை விமானங்களின் துணைகொண்டு பிரிடனிலிருந்து ஐரோப்பாவுக்கு 15,000 தடவை சென்றிருக்கின்றன. இந்தக் கணக்கில் அமெரிக்க நான்கு இஞ்ஜின்களுள்ள வெடி விமானங்களின் துணைக்காவல்கொண்ட நடவடிக்கைகள் சேர்க்கப்படவில்லை. மாரி காலத்தின் கொடுமையினால் விமானங்கள் செல்லக்கூடாத நாட்களைத்தவிர மற்ற தினங்களில் ஒரு நாளையில் 1,000 விமானங்கள் சராசரியாகச் சென்றிருக்கின்றன.

(8) இந்த நடவடிக்கைகளை எதிர்க்க ஜெர்மன் விமானப்படை பலமான நடவடிக்கையைத் துவக்கவில்லை. நேசதேச விமானங்கள் எதிரியின் விமானம் சுடும் பீரங்கிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டன. நேசதேச விமானப்படையுடன் வரும் சண்டை விமான ரக்ஷணையை நொருக்குவது இயலாது என்று ஜெர்மானியர் எண்ணிவிட்டார்கள். ஜெர்மன் சண்டை விமானங்கள். போர்புரியத் துணியவில்லை.

(9) விமான பலம் புதிய முறையானதால் அதன் உபயோகத்தைப்பற்றி இன்னும் மதிக்கக் கூடவில்லை. சாதாரண மக்களுக்கு தரையில் ஒரு கிராமத்தைப் பிடிப்பதைவிட ஒரு தொழிற்சாலையை விமானமூலம் தாக்குவது அற்பமான நடவடிக்கையென்று தோன்றுகிறது. விமான எதிர்ப்பு மூலம் யுத்தத்தில் வெற்றிபெற்றுவிட முடியுமாவென்ற பிரச்னைக்கு ஜெர்மனி தகுந்த பதிலுரைக்கும். இந்தப் பரிக்ஷை ஜெர்மனியைத் தாக்குவதன்மூலம் நடைபெறுகிறது.

(10) விமானத் தாக்குதல்மூலம் அநேக உயிர்களைக் காப்பாற்றிவிடலாம். ஆப்பிரிக்காவில் எல் அலாமினிலிருந்து ஆல்ஜியர்ஸ் வரையில் நமது படைகள் சென்றபொழுது எதிரி பக்கத்தில் $2\frac{1}{2}$-லக்ஷம் துருப்புகள் சரணடைந்தன. நேசதேசத்தாருக்கு 40,000 ஜனங்கள் நஷ்டமாயின. சென்ற யுத்தத்தில் வாஸண்டேலில் மட்டும் அதிக நஷ்டம் ஏற்பட்டது. விமானப் படை தாக்குதலால் நஷ்டம் குறைந்துவிட்டது.

எதிர் காலத்திய படையெடுப்பிலும் மனித நஷ்டம் குறைவுபடும். விமானத்தாக்குதல் எதிரியின் ஆயுத உற்பத்தி சக்தியையும் போர் செய்யும் உத்சாகத்தையும் குலைத்துவிடுகின்றன.

வி வி வி வி வி

**ஜெர்மனியின் பதில் முறைகள்.** விமான நடவடிக்கைக்குப் பின்னும் ஜெர்மன் நிலமை பாதிக்கப்படவில்லையென்றும், வாசஸ்தலங்கள் தாக்குண்டனவென்றும், ஜெர்மன் படை இன்னும் மிகுதியான பலம் பொருந்திருக்கிறதென்றும், மேற்குப் பக்கத்தில் மகத்தான படையெடுப்பு ஏற்படும்பொழுது அதன் சக்தி வெளிப்படுமென்றும், ஜெர்மன் ஒலிப்பரப்புகள் வெளியிடுகின்றன.

இரண்டாவதாக, தாதுபுஷ்டி ஏற்படக்கூடிய நடவடிக்கைகளை கோயபல்ஸ் மேற்கொண்டு வருகிறான். வெடிகுண்டு வீச்சின் மூலம் வாசஸ்தலங்களை இழந்தவர்களுக்கு உத்சாகம் ஊட்டப்படுகிறது. ஜெர்மன் பாடகர்கள் புதிய பாடல்களைக் கவனம் செய்யவேண்டுமென்றும் வாத்தியங்களை பலமாக கோஷிக்க வேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. மூன்றாவதாக, பதில் நடவடிக்கை முறையில் அற்பமான விமான நடவடிக்கை பிரிடனில் நடைபெறுகிறது. இந்த குண்டு வீச்சில் ஸ்திரீகளும் குழந்தைகளும் கொல்லப்படுகிறார்கள். பள்ளிக்கூடங்களும் ஆஸ்பத்திரிகளும் தாக்கப்படுகின்றன. ஒவ்வொரு தாக்குதலின் பொழுது எதிரி விமானங்கள் அழிக்கப்படுகின்றன. எதிரிக்கு ஏற்படும் நஷ்டத்துடன் ஒப்பிட்டால் நமது நஷ்டம் மிகவும் குறைவானது. ஜெர்மன் விமானங்கள் பிரிடனுக்கு அதிக உயரத்தில் பறந்து சென்று, கண்மூடித்தனமாகக் குண்டுகளைப் போட்டுவிட்டு, அழிந்ததுபோக பாக்கிப்படும் விமானங்கள் பிரான்ஸுக்கு ஓடிவிடுகின்றன.

**பால்டிக் நாடுகளுக்காக யுத்தம்.** லெனின் கிராடின் விடுதலைக்காக ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கை எஸ்தோனியா, லாட்வியா, லிதுவேனியா முதலிய பால்டிக் நாடுகளின் விடுதலைக்கும் பரவிவிட்டது. பின்லாந்து வளைகுடாவிலிருந்து ஸிலோபினிலுள்ள ஜெர்மன் அரண் வரைக்கும் 500 மைல்கள் கொண்ட போர் முனையில் யுத்தம் துவங்கி விட்டது. எஸ்தோனியா வடக்குக் கோடியிலிருக்கிறது. இந்தப் பகுதியில் ருஷ்யர்கள் பீபஸ் ஏரிக்கும் பின்லாந்து வளைகுடாவுக்கும் மத்தியில் 30 மைல்கள் அளவில் முன்னேறிவருகின்றன. நார்வா நதியைத்தாண்டி பாலமுனையை ஸ்தாபித்துக் கொண்டனர். பிறகு நார்வாவுக்கும் எஸ்தோனியாவின் தலைநகரமான டாலினுக்கும் செல்லும் இருப்புப்பாதை துண்டிக்கப்பட்டுவிட்டது. இப்பொழுது நார்வா நகரம் வளைக்கப்பட்டுவிட்டது. அங்கிருக்கும் ஜெர்மன் படைகள் தப்பி ஓட முயன்றுவருகின்றன.

பீபஸ் ஏரியின் தென்கோடியில் ருஷ்யப்படைகள் லாட்வியா வென்ற மத்திய தேசத்திற்குப்போகும் வாசற்படிபோன்ற பெஸ்காவை நோக்கி குவிந்துவருகின்றன. பெஸ்காவை அநேகமாகச் சுற்றிவளைக்கப்பட்டுவிட்டது. பெஸ்காவில் ஒன்றுகூடும் ஆறு இருப்புப்பாதைகளில் நான்கு துண்டிக்கப்பட்டிருக்கின்றன. அதற்குத் தெற்கில் மற்ற ருஷ்யப்படைகள் லாட்வியாவின் எல்லைச்சரகத்துக்குப் போகும் இருப்புப்பாதையிலுள்ள ஒபோச்கா இட்ரிட்ஸாவை நோக்கி முன்னேறுகின்றன. இந்த இரண்டு நாடுகளுக்குமிடையே ஆஸ்ட்ரோவ், டுனோ, கோம் முதலிய ஜெர்மன் அரண்களுக்கு அபாயம் உண்டாகிவிட்டது.

வி வி வி வி வி

**மற்ற தாக்குதல்.** வெண்மை ருஷ்யாவில், லிதுவேனியாவுக்குப்போகும் வழியிலுள்ள வைடப்ஸ்க்குக்கும், போப்ருயிஸ்க்கும் ஆபத்து உண்டாகிவிட்டது. வடக்கே நார்வாவிலிருந்து தெற்கில் ஸிலோபின் வரையில் ஜெர்மன் படை வரிசைகளுக்கு ஆட்டம் கண்டுவிட்டது.

நீபர் 'நதியின் நுணிபாகத்தில் புதிய தாக்குதல் துவக்கம் செய்யப்பட்டிருக்கிறது. ருஷ்யப்படைகள் இங்கு வெட்ஸ் நதியைத் தாண்டிவிட்டன.' ஒடெஸ்ஸா-வார்ஸா இருப்புப் பாதையைச் சேர்ந்த வினிட்ஸா-ஊமான் இருப்புப்பாதை துண்டிக்கப்பட்டது.

வி வி வி வி வி

**ராஜீய நடவடிக்கை.** ராணுவ நடவடிக்கைகளுக்குப்பின் ராஜீய திட்டங்களும் நடைபெறுகின்றன. ருஷ்யாவின் கண் காணிப்புக்குட்பட்டு பால்கன் நாடுகளுக்கு ஸ்வதந்திரம் வழங்குவதாக ருஷ்யா வெளியிட்டு விட்டது. நாஸிகளின் புதிய ஐரோப்பிய திட்டத்துக்கு அது முறணானது, வேறுபட்டது. பால்டிக் நாடுகள் ருஷ்யாவுடன் சேர்ந்துவிட்டால் பின்லாந்து துண்டிக்கப்படும். அது சமாதானம் செய்துகொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும்.

ருஷ்யப்படைகள் பின்லாந்து வளைகுடாவின் கடற்கரைக்கு வந்துவிட்டபடியால் மாஸ்கோ ஒலிபரப்பில் ருஷ்யா பின்லாந்துக்கு விடுத்த சமாதான ஷரத்துகளை வெளியிட்டிருக்கிறது. ருஷ்யாவுக்கு நெருக்கடியான சமயத்தில் பின்லாந்து நழுவி விட்டதென்பதில் ருஷ்யா வெளியிட்டிருக்கும் நிபந்தனைகள் மிதமானவைதான். புத்திசாலிகளாகயிருந்தால் பின்லாந்து நிர்வாகம் அதை ஒப்புக்கொள்ளும். இதன் பிறகு ஷரத்துக்கள் கடுமைப்படும்.

ஆகிலும் பின்லாந்தின் நிலைமை கஷ்டமானது. இதாலி சரணமடைந்ததற்குமுன் படோக்ளியோவின் நிர்வாகமிருந்த நிலைமைக்கு அதை ஒப்பிடலாம்: பின்லாந்திலுள்ள செம்பு, நிக்கல் சுரங்கங்களை ஏழு ஜெர்மன் டிவிஷன் துருப்புகள் ரக்ஷித்து வருகின்றன. இவைகளை வெளியே துறத்தவேண்டும், அல்லது அவைகளை காவலுக்குட்படுத்தவேண்டும். பின்லாந்து அவர்களைத் துறத்தியடிக்காவிட்டால் ருஷ்யர்கள் அவ்வேலையை மேற்கொள்ளுவார்கள்.

எதிர்பார்த்தபடி பின்னிஷ் நிர்வாகம் தயங்கிவருகிறது. ருஷ்யாவின் சமாதானங்களை வெளியிடும்பொழுது ருஷ்யாவுடன் சமாதானப்பேச்சுக்கள் நடைபெறவில்லை யென்று ஹெல்ஸிங்கி ஒலிபரப்பில் சொல்லப்பட்டது. ஹெல்ஸிங்கியிலிருந்து அநேக பிரமுகர்களும் பின்லாந்து பாங்கியின் தலைவரும் விமானம் மூலம் சமாதானம்பேச ஸ்டாக்ஹோமுக்குச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் வெளிப்படையாகச் சொல்லுகிறபடி பின்னிஷ் நிர்வாகம் பகுத்தறிவு அற்றதல்ல அல்லது அலக்ஷிய புத்தியுடனிருக்கவில்லை. பெர்லினுக்கும் சிலர் ரகசியமாகச் சென்றிருக்கிறார்களாம்.

ருஷ்யப்பத்திரிகையான பிராவ்டா தெளிவாகக் கூறிவிட்டது. ருஷ்ய நிபந்தனைகள் தாராளமானவை. பின்னிஷ் பத்திரிகைகள் அவைகளைப்போற்றுகின்றன. சமாதானத்தை விரும்புகிறோமென்று பின்லாந்து நிர்வாகிகள் சொல்லும்பொழுது அந்தப் பேச்சில் அந்தரங்க சுத்தியில்லை. பெருந்தன்மையைப்பற்றி இது பலஹீன மென்று பின்லாந்து நினைத்தால் அது ஏமாற்றமடையவேண்டியதுதான்.



# யுத்தத்தின் ராஜதந்திர பின் திறை.

( *W. N.* ஐயர். )

காமன்ஸ் சபையில் மிஸ்டர் சர்ச்சில் செய்த பிரசங்கத்தின் ராஜீய அம்சத்தில் ஒரு முக்கியமான பத்தியிருக்கிறது. அதில் நேசதேசத்தார்கள் அல்லது நடுநிலைமை வகிக்கும் நாடுகள் இவைகளின் நிர்வாக சம்பந்தமாக பிரிடிஷ் அரசாங்கத்தாரின் மனப்பான்மையானது மற்ற நாடுகளின் உள்நாட்டு வியவகாரங்களில் எந்தக் கக்ஷியையும் தனியாக ஆதரிக்க இது தருணமில்லை என்ற எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த விஷயத்தைப்பற்றி விரிவான தவறான அபிப்பிராயங்கள் கிளம்பிவிட்டன. இதாலி, யூகோஸ்லாவியா சம்பந்தப்பட்டமட்டில் பிரிடனுக்கும் ருஷ்யாவுக்குமிடையே அபிப்பிராய பேதங்களிருக்கின்றனவென்று சொல்லப்படுகிறது. இதாலியில் பிரிடன் விக்டர் எமானுவல் மன்னரை ஆதரிக்கிறதென்றும், ருஷ்யர்கள் அவரை உடன்காலத்தில் பரிஹரித்துவிடவேண்டுமென்கிறார்களென்றும் சொல்லப்படுகிறது.

யூகோஸ்லாவியா சம்புந்தப்பட்டமட்டில் விசித்திரமான சில அபிப்பிராயங்களைக் கொண்டு பிரிடன் மிகைலோவிச்சை ஆதரித்துவருகிறதென்றும், ருஷ்யா மார்ஷல் டிடோவை ஆதரிக்கிறதென்றும் சொல்லப்படுகிறது.

இந்த இரண்டு நடவடிக்கைகளிலும் இவ்விதமான பேச்சுக்களுக்குத் துளிகூட நியாயமில்லை. இரண்டு நாடுகளிலும் அமெரிக்காவும், பிரிடனும், ருஷ்யாவும் ஒன்றுபட்ட நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்கள்.

இதாலி சம்பந்தப்பட்டமட்டில், நேசதேசத்தார்கள் ரோமாபுரியைப் பிடித்து அங்கு மறைந்து நிற்கும் ராஜீய நிர்வாக மேதாவிகளை விடுவிக்கும்வரையில் இதாலிய ராஜீய நிலைமையை விமர்சனம் செய்வதில்லை என்று மூன்று வல்லரசுகளும் முடிவுசெய்துவிட்டார்கள்.

யூகோஸ்லாவியாவில் மூவகைப்பட்ட சிக்கலான நிலைமை உண்டாகியிருக்கிறது. கெய்ரோவில் நியாயமான நிர்வாகமிருந்துவருகிறது. இதை நேசதேசத்தார்கள் ஆமோதித்து அத்துடன் அயல்நாட்டு சம்பந்தமான வியவகாரங்களை நடத்திவருகிறார்கள். ஜெனரல் மிகைலோவிச்சு இன்றும் அரசாங்க யுத்த மந்திரியென்று விளங்கிவருகிறான். ஒரு பக்கத்தில் மார்ஷல் டிடோ இருக்கிறான்.

ஆரம்ப சமயத்தில் மிகைலோவிச்சிடம் அவநம்பிக்கை கொள்ளக்கூடவில்லை. மிஸ்டர் சர்ச்சில் சொல்லுகிறபடி இப்பொழுது அவனிடம் அவநம்பிக்கை கொள்ள அநேக காரணங்களிருக்கின்றன. ஆரம்பத்தில் அயல்நாடுகளுக்கு டிடோ முக்கியமானவனென்று தோன்றவில்லை. இப்பொழுது மிகைலோவிச்சைக்காட்டிலும் டிடோ மகத்தான வீரனாகிவிட்டான். ஆகையினால் நமக்கு சாத்தியமானவரையில் அவனுக்கு ஒத்தாசை செய்வதென்று நாம் உத்தேசித்துவிட்டோம்.

ஆகிலும் கெயிரோவிலுள்ள மன்னர் நிர்வாகத்துடனும் யூகோஸ்லாவியாவிலுள்ள டிடோ, மிகை லோவிச்சுடனும் பிரிடிஷ், அமெரிக்க, ருஷ்ய நிர்வாகங்கள் இதாலியில் நடைபெறுவது போல ஒன்றுபட்ட நடவடிக்கையைக் கையாண்டு வருகிறார்கள். இரண்டு நாடுகளிலும் மிகவும் நுட்பமான சிரமசாத்தியமான ராஜீய பிரச்னை இருக்கிறது. அதை ஒன்றுபட்டு தீர்த்துவைக்க முயற்சிக்கப்படுகின்றது. பிரிடனுக்கும், அமெரிக்காவுக்கும், ருஷ்யாவுக்கும் கொள்கைகளில் அபிப்பிராய பேதமில்லை.

போலிஷ்-ருஷ்யா சம்பந்தப்பட்டமட்டிலும் பிரதம மந்திரி எச்சரிக்கையுடன் பேசினார். ஏனென்றால் சமாதானப் பேச்சுகள் இப்பொழுதும் நடைபெற்றுவருகின்றன. ஆகிலும் தகராரின் முக்கிய பாகமான எல்லைச்சரக பிரச்னையைப்பற்றி அவர் இரண்டு குறிப்புகளை வெளியிட்டார். இதுதான் பிரிடிஷ் மக்களின் அபிப்பிராயமும்கூட. ஒன்று பிரிடனின் அபிப்பிராயப்படி நியாயமும், நீதியுமுள்ள எல்லைச்சரகமானது 1919-ம் வருஷத்தில் கர்ஸான் கோட்டை ஏற்படுத்துவதன்மூலம் அமைக்கப்பட்டது. இரண்டாவது எல்லைச்சரகங்களை நிர்த்தாரணம் செய்துகொள்ளும் வேலை யுத்த முடிவுக்கு ஒத்திவைக்கவேண்டுமென்றாலும் உண்மைகளை கவனிக்கும்பொழுது இப்பொழுதுதானே ஒரு ஏற்பாடு அவசியம் செய்துவிடவேண்டும். இதன் அர்த்தம் தெளிவானது. முடிவான உருவான ஏற்பாடு யுத்தத்துக்குப்பின் செய்துகொள்ளப்படவேண்டுமென்றும், தாத்காலிகமான வியவகார முறையில் கர்ஸான் கோட்டை இருதரப்பாரும் ஒப்புக்கொள்ளவேண்டுமென்றும் பொருள்படுகிறது. இந்த அபிப்பிராயத்தை போலிஷ், ருஷ்ய நிர்வாகங்கள் ஒப்புக்கொள்ளுவார்களாவென்பது நாளடைவில்தான் அறியக்கூடும். ஆகிலும் சிலாக்கியமான முடிவுகளைச் செய்துவிடுவதைவிட நடைமுறையில் உபயோகமுள்ள ஏற்பாடுகளைச் செய்ய முன்வரும் பிரிடனுக்கு இது ஞாயமான, உபயோகமுள்ள யோசனை என்றுதான் தோன்றுகிறது.

ஒரு ஐரோப்பிய விஷயத்தைப்பற்றி அவர் மௌனம் சாதித்தார். பின்லாந்துக்கும், நேசதேசத்தார்களுக்குமிடையே நடைபெறும் சமாதானப் பேச்சுகளைப்பற்றி அவர் ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை. இதற்குத் தகுந்த முகாந்திரமிருக்கிறது. ஸ்டாக்ஹோமில் ஏதோ நடந்துகொண்டிருக்கிறதென்பது ஸ்பஷ்டமானது. அங்கு என்ன நடைபெற்று வருகிறதென்பதை ஜெர்மன் சாரர்கள் கண்டுபிடிக்க மிகவும் சிரமப்படுகிறார்கள். இந்த ரகஸியத்தைத் துலக்கிவிடுவது மிஸ்டர் சர்ச்சிலின் ஜோலியில்லை.

பின்லாந்தின் நடவடிக்கைகளை ஜெர்மனி தீவிரமாகவும் ஆழ்ந்த கவலையுடனும் கவனித்து வருகிறது. அவைகள் முக்கியமானவைகள். பின்லாந்துக்கும், நேசநாடுகளுக்கும் தனிப்பட்ட சமாதானம் ஏற்படுவதிலிருந்து உண்டாகும் விளைவுகளை ஜெர்மானியர்கள் தெளிவாய் அறிவார்கள். ராணுவம் சம்பந்தப்பட்டமட்டில் வடக்கு பின்லாந்திலுள்ள ஜெர்மனியின் ஏழு டிவிஷன் துருப்புகளை அது இழக்கவேண்டும். அல்லது அவைகளை துரிதமாக பின்லாந்தை விட்டு வெளியேற்றவேண்டும். பின்னிஷ் எல்லைச்சரகத்தில் வைக்கப்பட்டிருக்கும் ருஷ்யப் படைகள் அங்கிருந்து விடுவிக்கப்பட்டு தெற்குப்பக்கத்தில் போர்புரிய வந்துவிடும். ராஜீய முறையில் அதிக விளைவுகள் ஏற்படும். ஜெர்மனி யுத்தத்தில் தோல்வியடையுமென்றும், அதனுடன் நட்புக்கொண்டிருக்கும் தேசங்களைக் காப்பாற்ற அதனிடம் போதுமான சக்தி இல்லையென்றும், அந்நாடுகளை பலாத்காரம் செய்யவும் அது சக்தியற்றதென்றும் ஜெர்மனியைச் சேர்ந்த ஒரு தேசம் முடிவுக்கு வந்துவிட்டதென்று உலகத்தாருக்கும் ஜெர்மன் மக்களுக்கும் பிரகடனம் செய்யப்பட்டுவிடும். ஜெர்மனியை அண்டியிருக்கும் மற்ற நாடுகளிலும் ஜெர்மன் மக்களிடமும் ஏற்படும் அதன் விளைவுகள் அதிக முக்கியத்வமுள்ளவை. கடைசியாகச் சொல்லும்பொழுது இதையொட்டித்தான் ராஜீய நடவடிக்கைகளை நாஸி நிர்வாகம் இப்பொழுது திருத்தியமைத்துக்கொள்ளவேண்டும்.

ஆகையினால் ஜெர்மனி கவலையுடன் ஸ்டாக்ஹோமில் நடைபெறும் விஷயங்களைக் கவனித்துவருகிறது. மிஸ்டர் சர்ச்சில் புத்திசாலித்தனமாக மௌனம் சாதித்துவருகிறார்.

---

# ஜப்பானின் அவநம்பிக்கையை அகற்ற ஹிட்லர் செய்துவரும் பிரயத்னம்.

## தூரக்கிழக்கில் ஜெர்மன் யூ-படகுகள்.

(A. J. மாக்வின்னி).

சமீபகாலத்தில் ஜெர்மன் யூ படகுகள் தூரக்கிழக்கில் சஞ்சாரம் செய்துவருகின்றன என்று ஜெர்மன் ரேடியோவில் சொல்லப்பட்டபோதிலும், அடிப்படையாக அச்சுநாடுகளிடையே அவநம்பிக்கை உண்டாகியிருக்கிறது.

ஹிட்லரும், அவனுடைய கடற்தளபதியான கார்ல் டோனிட்ஸூம் நேசதேசத்தாரின் ஸப்ளைகளை அழிப்பதற்கு, அட்லாண்டிக் கடல் மார்க்கங்களைத் தாக்குவதுதான் முக்கியம் என்று அறிவார்கள். நேசதேசத்தார்களுக்கு ஸப்ளைகள் வரும் மார்க்கங்களை பலமாகத் தாக்குவதற்கு யூ படகுகள் மிகுதியாக அட்லாண்டிக் கடலில் சஞ்சாரம் செய்யவேண்டும். ஆகையால் அவசியமாக உள்ள சமீபக் கடல்களில், யூ படகுகளின் பலத்தைக் குறைத்துவிட்டு, அவைகளை ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலிலுள்ள ஜப்பானிய சமுத்திரங்களுக்கு அனுப்புவதற்குக் காரணங்கள் என்ன?

முதலெடுப்பில் ஜெர்மனியின் கடற்படை சக்தி குறைந்துவிட்டதென்றும், அதனால் அதிக பயன்கள் ஏற்படாதென்றும் கோபம் கொண்டிருக்கும் டோஜோவை சமாதானப்படுத்த ஹிட்லர் முயற்சி செய்துவருகிறானென்று தோன்றும். அதைத் தவிர வேறு காரணங்களும் உண்டு. இனிமேல் ஜப்பான் உதவியளிக்குமென்று ஹிட்லர் எதிர்பார்க்கமுடியாது. ஆசியாவில் அச்சு நாடுகள் ஒன்றுகூடிவிடுவது என்ற ஆசை இனிமேல் பூர்த்தியடைய முடியாது. இரு அச்சு நாடுகளுக்குமிடையே முற்றுகையைத் தாண்டிச் செல்லும் கப்பல்கள்தான் தொடர்பு ஏற்படுத்தி வருகின்றன. கடல் முற்றுகை பலமாகவும், விரிவாகவும் போடப்பட்டிருப்பதால் கப்பல்கள் செல்லுவது சிரமசாத்தியமாகிவிடுகிறபடியால் இந்த சம்பந்தமும் கஷ்டசாத்தியமாகயிருக்கிறது.

### ஜப்பானிடம் உபரிக்கப்பல்கள் கிடையாது.

கடல் முற்றுகையைத் தாண்டிச் செல்லும் அபாயம் பொருந்திய நடவடிக்கையை ஜெர்மானியர்களும், ஜெர்மன் கப்பல்களும்தான் அநேகமாகக் கையாண்டுவருகின்றனவென்று ஜெர்மானியர்கள் அறிவார்கள். ஜப்பான் யுத்தம் துவக்கிய காலம் முதல் இது வரையில் ஒரு ஜப்பானியக் கப்பலாவது ஜெர்மனிக்கு யுத்தத் தளவாடங்களை ஏற்றிக்கொண்டு முற்றுகையைத் தாண்டிச் சென்றதென்று ஒரு ருஜுவும் கிடையாது. நன்னம்பிக்கை



முனையைத் தாண்டி 14,000 மைல்கள் நீளமுள்ள அபாயம் பொருந்திய கடலைத் தாண்டிச் செல்ல ஜப்பானிடம் கப்பல்களில்லை என்று டோஜோ சொல்லிவிட்டான்போல் தோன்றுகிறது.

ஜெர்மனியின் கடற்படையைப் பெருக்கும் யுத்த முயற்சி குன்றிவருவதால், பெர்லினுடன் ஒத்துழைக்க ஜப்பானியர்கள் வரவர ஆசையை இழந்துவருகிறார்கள். ஜப்பானைத் தாக்குவதற்குப் போதுமான கப்பல்களை அனுப்பமுடியாமல், பிரிடனைத் தடுக்க அதன் யுத்தக் கப்பல்களில் அநேகத்தை ஜெர்மன் கடற்படை அழிக்கக்கூடவில்லையென்பதைக் கண்டு டோக்கியோவிலுள்ளவர்கள் மனம் கசிந்துகொள்ளுகிறார்கள்.

இவ்விதமாக ஏற்பட்டிருக்கும் நம்பிக்கைக் குறைவையும், பிரயோஜனமற்ற சொற்பனங்களையும் அச்சுநாடுகளுக்குள் ஒற்றுமையின்மையையும் அகற்றத்தான் ஹிட்லரும், டோனிட்ஸூம் ஜப்பானுடன் சேர்ந்துகொண்டு போர்புரிவதற்காக கிழக்கு சமுத்திரங்களுக்கு யூ படகுகளை அனுப்பியிருக்கிறார்கள். எவ்வளவு யூ படகுகள் அனுப்பப்பட்டிருக்கின்றனவென்பதற்குப் புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை. அநேகமாக ஆறு யூ படகுகள் சென்றிருக்கலாம். அவைகள் வெகுதூரம் செல்லவேண்டியிருப்பதாலும், அநேக அபாயங்களுக்குட்படவேண்டியிருப்பதாலும் இந்த ஆறு நீர்மூழ்கிகளும், ஜெர்மனியின் முதல்தரமான யூ படகுகளாகத்தானிருக்கவேண்டும். அட்லாண்டிக் கடல் போருக்குத்தான் சிலாக்கியமான நீர்மூழ்கிகள் அத்தியாவசியமானவை.

### விசாலமான இந்து மகா சமுத்திரம்.

ஜப்பானியர்களுடன் ஒத்துழைப்பதென்பது திட்டத்தின் ஒரு அம்சம்தான். ஜப்பானியர்கள் தங்களுடைய கடற்படை நிலைமையைப் பலப்படுத்த எவ்வித முயற்சி செய்துவருகிறார்களென்று கவனித்து, ஜெர்மனிக்குத் தகவல் அனுப்புவதற்காகத்தான் அவைகள் கிழக்குப் பிராந்தியத்துக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. இந்து மகா சமுத்திரத்தின் விசாலமான பரப்பில் எண்ணெய் நிறப்பிக்கொள்ளவும், பழுதுபார்க்கவும் வசதிகளில்லாமல் யூ படகுகள் அங்கே சஞ்சாரம் செய்யமுடியாது. ஆகையால் இந்த ஜெர்மன் யூ படகுகள் சிங்கப்பூர், பினாங்கு போன்ற ஜப்பானியத் தளங்களிலிருந்து எண்ணெய், சாமான்கள், சில்லரை பாகங்கள் முதலியவற்றைப் பெற்று வருகின்றன என்று தோன்றுகிறது. ஆகிலும் ஜப்பானியர்கள் யூ படகுகளை வெகு ஜாக்கிரதையுடன் கவனித்துவருகிறார்கள்.

யுத்த நடவடிக்கை சம்பந்தப்பட்டமட்டில் தங்களுடைய சொந்தத் துறைமுகங்களிலிருந்து வெகு தூரத்திலுள்ள சமுத்திரங்களில் யூ படகுகள் சஞ்சாரம் செய்யச் சென்றிருக்கின்றன என்பதில் ஒரு விசேஷமுமில்லை. தூரக்கிழக்கு சமுத்திரங்களில் பிரிடிஷ் நீர்மூழ்கிகளும் சென்று வெற்றிகரமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றன. சமீபகாலத்தில் இங்கிலாந்தில் டார்ஸெட்டில் வசிக்கும் லெப்டினண்ட் கமாண்டர் L. W. A. பானிங்டன் மலாக்கா ஜலசந்தியில் நடவடிக்கையைத் துவக்கி, ஒரு ஜப்பானிய சஞ்சாரியையும், மூன்று ஜப்பானிய சாமான் கப்பல்களையும் மூழ்கடித்திருக்கிறான்.

ஐரோப்பாவின் விடுதலைக்குப் பாய்ச்சல் ஸ்தலம்போன்ற பிரிடனுக்கு அட்லாண்டிக் கடல்தாண்டி ஏராளமான முஸ்தீப்புகள் கொண்டுவரப்படுகின்றனவென்று ஜெர்மனிக்குத் தெரியவரும். குறைவான லக்ஷியங்களும், ஆகிலும் நீர்மூழ்கியை எதிர்க்கும் சாதனங்கள் பரிஷ்காரமாகவுமுள்ள இந்துமகா சமுத்திரத்தில் சஞ்சரிப்பதைவிட 100 சத விகிதம் பத்திரமாக சாமான்களைக் கொண்டுபோகும் துணைக்காவல் கப்பல்கள் செல்லும் அட்லாண்டிக் கடல் மார்க்கங்களில்தான் யூ படகுகள் சஞ்சரிக்குமென்று நாம் சகஜமாக எதிர்பார்க்கலாம்.

---

# ஜெர்மனியின் இருப்புப்பாதை நெருக்கடி.

ஜெர்மனி எதிர்பார்த்தவிதமாக அதிகமாக உபயோகப்படாத சமயத்தில் ஜெர்மனி ரெயில்வே என்ஜின்களை ஏராளமாகக் கட்டி முடித்தது. இப்பொழுது அதற்கு சாமான் வண்டிகளின் குறைவினால் அதிக நெருக்கடி உண்டாகியிருக்கிறது. பிரான்ஸிலும் பெல்ஜியத்திலும் ரெயில்வே என்ஜின்களின் குறைவினால் சங்கடமுண்டாகியிருக்கிறது. ஜெர்மனி ருஷ்யாவில் கிடைத்த படுதோல்விகள் மூலம் ருஷ்யப் போர்முனைக்கு அனுப்பவேண்டிய எஞ்ஜின்களின் அளவு குறைந்து விட்டதால் என்ஜின்கள் அபரிமிதமாகக் கிடைத்துவிட்டன. ருஷ்யாவில் வெற்றி கிடைக்குமென்று எதிர்பார்த்து ஏராளமான எஞ்ஜின்களை உற்பத்தி செய்யும் திட்டம் வகுக்கப்பட்டது. அங்கே பெருந்தோல்வி கிடைத்துவிட்டதால் எஞ்ஜின்கள் ஏராளமாகக் கைவசமிருக்கின்றன.

இந்த சௌகரியங்களை நிஷ்பிரயோஜனமாகச் செய்ய சாமான் வண்டிகளின் குறைவு ஏற்பட்டிருக்கிறது. இந்தக் குறைவு சென்ற வேனிற்காலத்திலிருந்து விருத்தியடைந்து வருகிறது. மழைக் குறைவினால் ஜலமார்க்கமாகக் கொண்டுபோகப்பட்ட போக்குவரத்து

களும் அறுவடைகாலத்தில் தானியங்களும் இருப்புப் பாதைகள் மூலம் கொண்டுபோகப் பட்டன. சாதாரணமான இருப்புப்பாதைப் போக்குவரத்தில் நெருக்கடி உண்டாகிற்று. இந்த சங்கடத்தை அதிகார வர்க்கத்தார் சமாளிக்குமுன் பிரிடிஷ் வெடி விமானங்களின் ஓய்வற்ற நாசம் விளைவிக்கும் தாக்குதலால் ஜெர்மன் நகரங்களைக் காலிசெய்யவேண்டிய அவசியம் தோன்றிவிட்டது. ராணுவப் போக்குவரத்து எப்பொழுதும் சிக்கலான பிரச்னையாகயிருந்தது. இதாலி வீழ்ச்சிபெற்றபின் இது பலமடைந்துவிட்டது. அப்பொழுது ஏராளமான படைகளை இருப்புப்பாதை மூலம் அனுப்பவேண்டியதாயிற்று. மாரிகாலம் கடுமையாக இருக்கவில்லை. ஆகிலும் மாரிகாலத்தின் குணங்கள் மலைப்பாங்கான இடங்களில் செல்லும் இருப்பாதைகளின் சக்தியை விசேஷமாக பாதித்தது. இன்புளூவன்சா ஜுரத்தில் ரெயில்வே வேலைக்காரர்களின் அழிவு ஏற்பட்டது. அநேக வருஷங்களாக யுத்தங்களை நடத்தியபின் அவர்கள் களைத்துப்போய்விட்டார்கள். இந்த இரண்டு காரணங்களால் ஜெர்மன் இருப்புப் பாதைகளின் நடமாட்டம் குறைந்துவிட்டது. உற்பத்திக் குறைவிலிருந்து சாமான் வண்டிகளின் உற்பத்தியும் குறைவுபட்டது. இந்த நிலைமையை சமாளிக்க பிரயாணிகள் போக்குவரவு அதமபக்ஷத்துக்குக் குறைக்கப்பட்டுவிட்டது. வண்டிகள் கூடுமான அளவு உபரி பாரத்தை வகிக்கும்படி செய்யப்பட்டிருக்கின்றன. சாமான்களை ஏற்றுவதும் இறக்குவதும் துரிதமாக நடைபெறவேண்டுமென்று நூதனமான சட்ட திட்டங்களும் நிறுவப்பட்டிருக்கின்றன. இந்த முயற்சிகள் பிரயோஜனமளிக்கவில்லை. உள்நாட்டுக் கலகத்தையும் நேசதேசப்படையெடுப்பையும் சமாளிக்கும் உத்தேசத்துடன் ஆக்கிரமிப்பு நாடுகளுக்கு குறைவுபட்டதும் அதிகத் தேர்ச்சிபெறாததுமான ரெயில்வே வேலைக்காரர்களில் ஆயிரக்கணக்கானவர்களை வெளியேற்றியும்கூட ஜெர்மனியின் உள்நாட்டு நிலைமை சாந்தமாகவில்லை.

பிப்ரவரி மாதம் 27-ம் தேதியன்று காமன்ஸ் சபையில் மிஸ்டர் சர்ச்சில் பேசியபொழுது பின்வருமாறு சொன்னார்.

"ஜெர்மன் தொழிற்சாலைகள் எவ்வளவு தூரத்தில் அமைக்கப்பட்டிருந்தாலும் ஜெர்மன் தளவாட ஸப்ளைகளைத் தடைசெய்யவும் நொருக்கிவிடவும் நாம் முயலவேண்டும். எல்லா ஜெர்மன் தொழிற்சாலைகளிலும் யுத்த தளவாட உற்பத்தி நடைபெறாத வண்ணம் செய்துவிடவேண்டும்".

ஜெர்மனியை நேசதேச விமானப்படை சமீப காலத்தில் பலமாகத் தாக்கியதிலிருந்து எதிர்காலத்திய நடவடிக்கை தெளிவுபடுகிறது. வெடிகுண்டு வீச்சின் பயனாக ஜெர்மனியின் போக்குவரத்து மார்க்கங்கள் சீர்கெட்டுவிட்டன. ஜெர்மனியில் வாசஸ்தல அமைப்பும், இடிந்த வீடுகளைப் பழுது பார்ப்பதும், நகரங்களைக் காலிசெய்வதும் முக்கியமான பிரச்னைகளாகிவிட்டன. வெடிகுண்டுகளால் அழிக்கப்பட்ட தொழிற்சாலையுள்ள பிரதேசங்களில் பொது ஜனங்களின் நாணயத்தின் செலாவணியைப் பற்றி சந்தேகம் கொண்டுவிட்டார்கள். பெர்லினில் உத்தியோக முறையில் பண்டம் மாற்றும் சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதிலிருந்தே நாணயத்தின் பொருமானத்தை அவமதித்துவிட்டு பண்டம் மாற்றும் உணர்ச்சி ஜெர்மன் மக்களிடையே உண்டாகிவிட்டதென்று ருஜுவாகிவிட்டது. இதேவிதமாக டாக்டர் பங்கும் ஒப்புக்கொண்டு பின்வருமாறு பேசியிருக்கிறார். "பண்டம் மாற்றும் முறைகளை அதிகாரவர்க்கத்தார் ஒப்புக்கொண்டு நடத்திவருகிறபோதிலும், இந்த முறை நமது பொருளாதார நிலைமையை அழித்துவிடும்."

---

## பிரிகேடியர் டேவிஸ். பால்கன் நாடுகளில் நடவடிக்கை.

மற்றொரு பிரிடிஷ் வீரர் பால்கன் நாடுகளிலுள்ள கொரில்லாப் படைகளுடன் சேர்ந்து போர்புரிந்தாரென்று கெயிரோவில் சொல்லப்பட்டது. பிரிகேடியர் எட்மண்ட் பிராங்க் டேவிஸ் M. C. என்பவர் காயமடைந்து ஜெர்மானியரிடம் கைதியாகிவிட்டாரென்றும் சொல்லப்பட்டது. அவர் ஆல்பேனியாவிலுள்ள கொரில்லாப் படைகளுக்கு நேசதேசத்தார் அனுப்பிய ராணுவ கோஷ்டியின் தலைவர்.

துரோகம்தான் டேவிஸ் பிடிபட்டதற்குக் காரணம். சென்ற மாதத்தின் துவக்கத்தில் அவரையும் அவருடைய ஆபீஸர்களையும் கொரில்லாப் படைகளின் ஒரு பகுதியையும் ஜெர்மானியர்கள் ஆல்பேனியாவின் தலைநகரமான டிரானாவுக்கு வட மேற்கில் தாக்கினார்கள். எதிரிகளின் படை மிகுதியைக் கண்டு இந்த கோஷ்டியார்கள் புதிய ஒளிக்குப் பின் வாங்கினார்கள். சில நாட்களுக்குப் பின் சில ஆல்பேனியர்கள் சிநேகபாவமுள்ளவர்கள்போல் பாசாங்கு செய்து அவ்விடம் வந்து சேர்ந்தார்கள். இந்த கோஷ்டியார்கள் அகப்பட்டுக்கொண்டார்கள்; வந்த ஆல்பேனியர்கள் குயிஸ்லிங்குகள். ஆகிலும் துவந்துவ யுத்தம் நடைபெற்றது. பிரிகேடியர் டேவிஸ் கக்ஷியிலிருந்த அநேக ஆல்பேனியர்கள் மாண்டனர். தலைவருக்குப் படுகாயம் ஏற்பட்டது.



அவரை ஜெர்மானியர் கைதுசெய்தபின் டிரானாவிலுள்ள ஆஸ்பத்திரிக்கு அவரைக் கொண்டுபோனார்கள். கடைசியாக வந்த தகவல்களிலிருந்து அவர் இன்னும் அபாயமான நிலைமையிலிருக்கிறாரென்று தெரியவருகிறது. இவ்விதமாக ஒருவருடைய சரித்திரம் தாத்காலிகமாக முடிந்துவிட்டது. அதன் பூரா விவரங்களும் வெளிவரும்பொழுது தீரச் செய்கைகளில் ஒன்றாக அவருடைய சேவை கருதப்படும்.

### கொரில்லாப்படையில் தானாகச் சேர்ந்துகொண்டார்.

டேவிஸுக்கு 43 வயதுதான். பிரிடிஷ் அல்ஸ்டர் ரைபிள்ஸ் படையில் அவர் ஒரு சிப்பாய். உறுதியுள்ளவர், சாந்தமாகப் பேசுகிறவர், ஏற்பாடு செய்வதில் தீரர், சிறந்த தலைவர். தானாகவே கொரில்லாப்படைகளில் சேர்ந்துகொண்டார். 1941-ம் வருஷத்தில் ஜெர்மனி பால்கன் நாடுகளை ஆக்கிரமித்த உடன்காலத்திலேயே மத்திய கிழக்கிலுள்ள பிரிடிஷ் அதிகாரிகள், யூகோஸ்லாவியாவிலும், கிரீஸிலும், ஆல்பேனியாவிலுமுள்ள எதிர்ப்பு கோஷ்டிகளுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள முயன்றார்கள்.

ராஜவிசுவாசிகளுக்கு ஒத்தாசை செய்வதற்காக வாலண்டியர்களை கள்ளத்தனமாக அனுப்புவதற்காக வாலண்டியர்கள் அபேக்ஷை என்று வேண்டுகோள் செய்யப்பட்டது. டேவிஸ் ஒரு வாலண்டியராக முன்வந்தார்.

அவர் மத்திய கிழக்கில் அநேக வருஷங்கள் வேலைபார்த்துவந்ததால் அதைப்பற்றி அதிக அனுபவம் பெற்றிருந்தார். பால்கன் நாடுகளைப்பற்றியும் அவருக்கு சிறிது பழக்கமுண்டு. அவருக்கு இயற்கை குணமான பிரயாசையுடன் அவர் பால்கன் நாடுகளின் பாஷைகளையும் எதிரியை எதிர்த்துநிற்கும் கொரில்லாப்படைகளின் விசேஷ பிரச்னைகளையும் கவனித்துவந்தார். அவரும் மற்றவர்களும் யூகோஸ்லாவியாவிற்குள் கள்ளத்தனமாக எவ்விதம் நுழைந்தார்களென்பது ராணுவ ரகசியம்.

### ராணுவ கோஷ்டியில் சேர்ந்துகொண்டார்.

அவர் அந்நாட்டிலுள்ள ராணுவ கோஷ்டியில் சேர்ந்துகொண்டு உள்நாட்டிலுள்ள ஜனங்களை நவீன யுத்த முறைகளில் தயார்செய்துவந்தார். முதலெடுப்பில் ஆல்பேனியாவில் எதிர்த்துப் போராடுவது நிலையில்லாததாகயிருந்தது. எதிரியின் கஷ்டங்கள் அதிகரித்த உடன் எதிர்ப்பும் வலுவடைந்தது. கிரேக்கர்களும், யூகோஸ்லாவியர்களும் அதிகமான வெற்றிகளைப் பெற்றுவந்தார்கள்.

இறுதியில் டேவிஸ்ஸை ஆல்பேனியாவுக்கு அனுப்பி அங்கு ஒரு ஸ்தாபனத்தை ஏற்பாடு செய்யும்படி முயற்சிக்கவேண்டியதென்று முடிவு செய்யப்பட்டது. எதிரியின் படை மிகுதியையும், அபரிமிதமான அபாயங்களையும் பொருட்படுத்தாமல் அவர் சிறந்த வெற்றிகளைப் பெற்றார். இப்பொழுது மலைப்பாங்கான நாடுகளில் அநேக கொரில்லாப்படை கோஷ்டிகளிருக்கின்றன. ஆக்கிரமித்திருக்கும் ஜெர்மானியர்களுக்கு அவைகள் ஆபத்தை உண்டுபண்ணுகின்றன. பதில் நடவடிக்கையாக ஜெர்மானியர்கள் ஜனங்களைக் கொலை செய்துவருகிறார்கள். கிராமங்களை தீக்கிரையாக்குகிறார்கள். டேவிஸ் மறைந்துவிட்டாலும் இந்த எதிர்ப்பு நடவடிக்கை குறைவுபடாது.

---

## புரொபெல்லர் இல்லாமல் ஓடும் விமானம்.

**பிரிடிஷ் தொழிற்பயிற்சி பத்திரிகாசிரியரும், விமானப்படை நிபுணருமான**
**S. P. கர்னகன், B. Sc.**

ஹெலி காப்டர் விமானத்தைக் கட்டியபொழுது இறக்கைகளில்லாமல் விமானங்கள் பறந்தன. பிரிடனில் வாயுக் குழாய் மூலம் தள்ளப்படும் விமானம் கண்டுபிடிக்கப்பட்ட பின் புரொபெல்லர்கள் மறைந்துவிட்டன. விமான உற்பத்தி சரித்திரத்தில் புதிய பகுதி எழுதப்பட்டுவிட்டது. விருந்து நடைபெறும்பொழுது உபயோகப்படும் இறைச்சி புகைக்கூண்டுகளை எடுத்து அதில் காற்றை நிறப்பித் திடீரென்று திறந்துவிட்டால் அதில் காற்றிருக்கும் வரையில் அது சப்திக்கும். இதுதான் வாயுக்குழலினால் ஓட்டப்படும் விமானத்தின் தெளிவான வர்ணனை.

புரொபெல்லர் இல்லாமல் பிரிடனில் கட்டப்பட்டிருக்கும் விமானத்தின் அமைப்புகள் மிகவும் சுலபமானவை. வாயுக்குழலினால் ஓட்டக்கூடிய விமானங்களையும், கப்பல்களையும் அமைக்க எல்லா தேசங்களிலுள்ள கற்பனா சக்தியுள்ளவர்களும் உரிமையைப் பெற்றிருந்தார்கள். அதன் அடிப்படையான முறை பழமையானது. இயற்கை அமைப்பிலும் இது காணப்படுகிறது. எட்டுக்கால் பூச்சி ஜலத்தில் வாயுக்குழலின் உதவியால் நீந்திச்செல்லுகிறது. அதன் சரீரத்தில் அது தண்ணீரை நிறப்பிக்கொண்டு பிறகு அதை வெளியே கக்கிவிடுகிறது.

வாயுக்குழலினால் ஓட்டப்படும் முறையைப்பற்றிய விருத்தாந்தம் காப்டன் விட்டிலின் தலைமையில் வேலை செய்துவரும் பிரிடிஷ் விஞ்ஞான சாஸ்திரிகளின் கீர்த்தியை அதிகப்படுத்துகிறது. உலகத்திலுள்ள தொழிற்பயிற்சி பெற்றவர்கள் அநேக நாட்களாக இதற்குமுன் வெற்றிபெறாமல் சர்ச்சை செய்துவந்த ஒரு முறையை பிரிடிஷ் நிபுணர்கள்தான் திறமையுடன் கண்டுபிடித்துவிட்டார்கள்.

### இதற்குக் காரணம்.

ஐக்யதேசத்தார்கள் இந்த விமானத்தை மிகுதியாக உபயோகிப்பார்களென்று தோன்றுவதால் அதைப்பற்றிய விவரங்கள் ஒன்றும் வெளிவராது. ஆகிலும் பொதுப்படையாக புரொபெல்லர் இல்லாத விமானத்தின் அவசியமென்னவென்றும் வாயுக்குழலினால் ஓட்டப்பட்ட விமானம் எவ்விதம் பறந்து செல்லும் என்றும் சொல்லுவோம்.

சாதாரணமான விமானத்தில் யந்திர சக்தியானது புரொபெல்லரின் உதவியால் முன் செல்லுகிறது. புரொபெல்லர் காற்றை அதிக வேகத்துடன் பின்புறமாகத் தள்ளுகிறது. இந்த நடவடிக்கையில் காற்று எதிர்த்துத் தள்ளுவதால் விமானம் முன்னே செல்லுகிறது. விமானம் வேகமாகச் செல்ல முயன்றவுடன் இறக்கைகள் மூலமாகச் செல்லும் காற்று விமானத்தை உயரக் கிளப்பிவிடுகிறது.

குறிப்பிட்ட அளவுக்கு புரொபெல்லர் சிலாக்கியமாக உதவுகிறது. புரொபெல்லரின் சுழலும் சக்தி மணிக்கு 770 மைல்கள் வேகமாகச் செல்லும்பொழுதும் 36,000 அடி உயரத்தில் செல்லும் பொழுதும் குறைந்துவிடுகிறது. ஆகாய மண்டலத்தில பலமான அலைகள் மோதுகின்றன. விமானம் ஓடும் சக்தி குறைந்துவிடுகிறது. என்ஜீனின் சக்தியை அதிகப்படுத்தினாலும் பயன்படுவதில்லை.

நவீன முறையில் உபயோகப்படும் யுத்த விமானங்கள் வெகு உயரத்தில் பறந்து துரிதமாகவும் செல்லுகின்றன. புரொபெல்லர்கள் 10 சதவிகிதம் குறைவான வேகத்துடன் சுற்றுகின்றன. ஆகையால் விமானத்தின் வேகத்தை அதிகப்படுத்த வேண்டுமானால் புரொபெல்லரை அகற்றிவிடக்கூடிய ஒரு முறையைக் கண்டுபிடிக்கவேண்டும்.

### இரண்டு ரகங்கள்.

வாயுக் குழலின்மூலம் ஓட்டும் முறையானது ஒரு உபாயகமாகத் தோன்றிற்று. வெளிப்பக்கத்தில் புரொபெல்லர் இல்லாமல் அது விமானத்தை முன் செல்லும்படி செய்துவிடுகிறது.

வாயுக் குழலினால் தள்ளப்படும் முறைகள் இருவகைப்படும். குளிர்ந்த காற்றுள்ளது சுலமான் அமைப்பு. உஷ்ணக் காற்றுள்ளது மிகவும் சக்திவாய்ந்த அமைப்பு. சிற்றுண்டியில் வைக்கப்படும் கூண்டு குளிர்ந்த காற்றுள்ள குழல். அதன் முறை பின்வருமாறு:—விமானம் ஓடும்பொழுது மூக்குவழியாக வாயுவை ஆகர்ஷிக்கிறது. பிறகு அது உஷ்ணப்படுத்தப்படுகிறது. அதன் பிறகு விமானத்தில் பின்புறத்திலுள்ள துவாரத்தின் வழியாக அது வெளியே செல்லுகிறது. இவ்விதமாக வாயுவை ஆகர்ஷித்து வெளியே அனுப்பக்கூடிய சக்தியிருந்தால் குளிர்காற்றுள்ள வாயுக்குழலுள்ள விமானம் நிச்சயமாகப் பறந்துசெல்லும்.

ஆகிலும் குளிர்காற்றுள்ள வாயுக்குழலால் உற்பத்தி செய்யப்படும் யந்திர சக்தியானது சாதாரணமாக என்ஜீனும் புரொபெல்லரும் உள்ள விமானத்தின் சக்தியுடன் ஒப்பிடக் கூடவில்லை. ஆகையால் சக்தியை அதிகரிப்பதற்கு சில உபாயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

### உஷ்ண வாயுக் குழலினால் ஓட்டப்படும் முறை.

இந்த முறையும் பிராசீனமாகயிருந்து வந்திருக்கிறது. ஆகாசவாணம் என்பது உஷ்ணமான வாயுக்குழல் என்று சொல்லலாம். ஏனென்றால் வாணத்திலுள்ள வெடி மருந்து தீப்பற்றி எரிந்து உஷ்ணக் காற்றாகமாறி அதைத் தள்ளிவிடுகிறது. ஆகாசவாணமென்பது தாத்காலிகமான உஷ்ணக்குழலுள்ள யந்திரம். அதில் வெடிமருந்து திடீரென்று வெடித்துவிடுகிறது. விமானத்திற்கு உஷ்ணக்காற்று உற்பத்திமூலம் ஏற்படும் சக்தி தொடர்ச்சியாக அநேக மணிகள் வரையில் நீடித்திருக்கவேண்டும்.

கற்பனா சக்தியுள்ளவர்கள் இரண்டையும் ஒன்றுபடுத்தி குளிர்காற்றுள்ள குழலுக்கு ஒரு புதிய அமைப்பைச் சேர்த்துவிட்டார்கள். இந்த ஏற்பாட்டிலும் வாயு விமானத்தின் மூக்கின் வழியாக உள்ளே ஆகர்ஷிக்கப்படும். பிறகு அது உஷ்ணப்படுத்தப்படும். அதன் பிறகு அது பின்புறமுள்ள ஒரு குழலில் நிறப்பப்படும். உஷ்ணப்படுத்தும் முறையின் ஆரம்ப காலத்திலேயே, பெட்ரோல் போன்ற கனமான திரவபதார்த்தங்களை உபயோகித்து நீராவி உண்டுபண்ணப்படுகிறது. எண்ணெயை உஷ்ணப்படுத்தினால் அது அபரிமிதமான உஷ்ணக்



காற்றை உண்டுபண்ணுகிறதென்று எல்லோரும் அறிவார்கள். இதன்மூலம் வாயுக் குழலில் அதிக சக்தியுண்டாகி வாயுக் குழலின்மூலம் விமானங்களின் உபயோகம் அதிகரித்துவிடும்.

### அதன் உபயோகங்கள்.

1930-ம் வருஷத்திலும், 1936-ம் வருஷத்திலும், வெளிவந்த விபரங்களிலிருந்து காப்டன் விட்டில் தகன சக்திமூலம் ஓடும் சக்கரங்களுள்ள அமைப்பினால் வாயுவை உண்டாக்கும் சக்திமூலம் விமானத்தை ஓட்டி வந்தார் என்று தெரியவருகிறது. பெட்ரோல் மூலம் ஓட்டப்படும் சக்தியானது சிலாக்கியமென்று என்ஜினீயர்கள் எதிர்பார்த்தார்கள்.

ஆகையால் இந்தப் புதிய விமானத்திலும் அவ்விதமான காற்றினால் ஓட்டப்படும் சக்கரங்களிருக்கின்றன என்று நினைக்கலாம். இவ்விதமான அமைப்பை விமானத்துக்குமட்டுமில்லாமல் மற்ற பலவிதமான உபயோகங்களுக்கும் ஏற்றுக்கொள்ளலாம்.

இந்த நூதன அமைப்பில் விட்டிலுடன் நீராவி சக்திமூலம் ஓடும் முறைகளைக் கண்டுபிடித்த ஸர் சார்லஸ் பார்ஸன்ஸூம் சரித்திரத்தில் புகழ் பெற்றுவிட்டார்.

---

## ஜப்பானியர்கள் பின்வாங்கும்பொழுது சாவையும் அழிவையும் விளைவிக்கிறார்கள்.

### ஹூபேயிலும் ஹூனானிலும் அக்கிரமங்கள்.

#### சீன பத்திரிகாசிரியர் கண்ணாறக்கண்ட அனுபவம்.

சென்ற வருஷம் வேனிற்காலத்தில் செங்டேயிலிருந்து ஹூனான்-ஹூபேயின் எல்லைச் சரகத்திலுள்ள செழிப்பான, சுபீக்ஷமாகயிருந்த தேசத்தின் வழியாக ஜப்பானியர்கள் பின்வாங்கும்பொழுது செய்த அக்கிரமச்செய்கைகளைப்பற்றி சைனாவின் மத்திய அறிக்கை நிலயத்தைச்சேர்ந்த C. J. ஸூ என்பவர் முதல்தரமான விருத்தாந்தத்தை வெளியிட்டிருக்கிறார்.

எதிரி பின்வாங்கிச்சென்ற மார்க்கத்தைப் பின்பற்றி சாண்டோபிங்கிலிருந்து ஸின்ஷிவுக்கு 250 கிலோமீட்டர்கள் தூரம் நான் கால்நடையாகப் பிரயாணம் செய்திருக்கிறேன். எங்கு பார்த்தாலும் கோரமான அழிவும் துக்கமும் நிறம்பியிருக்கிறதாகக் கண்ணுற்றேன்; செவியுற்றேன். கிராமங்களும், நகரங்களும் பூராவாக அழிக்கப்பட்டுவிட்டன. தீக்கிரையாகி கரியாகயிருக்கும், உத்திரங்களும், செங்கல்களும்தான் காணப்படுகின்றன. ஓடுகளும் உடைபட்ட பாத்திரங்களும்தான் வீடுகளிருந்த இடங்களை அடையாளம் காட்டுகின்றன. அநேக மைல்கள் வரையில் ஒரு மனிதனும் என் கண்ணுக்குப் புலப்படவில்லை. நாய் குலைக்கும் சப்தமும், காக்காய் கத்தும் சப்தமும்கூட என் காதில் விழவில்லை. தோற்றம் மிகவும் நிசப்தமாகவும், ஜீவனற்றதாகவுமிருந்ததால் உலகம் முடிவடைந்துவிட்டதோ என்றுகூட நான் நினைத்தேன்.

நான் மானிடர்களைச் சந்தித்தபொழுது அவர்களுடைய முகங்களில் பீதியும், ஆயாசமும் காணப்பட்டன. அவர்களில் அநேகர்கள் எதிரியின் கொடுமையையும், ஹத்தியையும் தப்பி ஓடிப்பிழைத்திருப்பவர்கள். எதிரி என்ன செய்தானென்று நான் அவர்களில் நூற்றுக் கணக்கானவர்களை வினவினேன். ஒரேவிதமாக அவர்கள் எல்லோரும் பின்வருமாறு பதிலுரைத்தார்கள். "கோரமானது. அவர்கள் பொது மக்களைக் கொலைசெய்தார்கள், வீடுகளுக்கு நெருப்பு வைத்தார்கள், ஸ்திரீகளின் கற்பை அழித்தார்கள், மனிதர்களைத்தூக்கிக் கொண்டுபோனார்கள், சொத்துக்களைக் கொள்ளையடித்தார்கள்."

ஹூனர்கள் மறுபடியும் யதேச்சையாகக் கிளம்பி அவர்கள் சென்ற இடமெல்லாம் தேசங்களை அழிப்பதும், கொடுமைகளை இழைப்பதுமாக ஆரம்பித்துவிட்டார்களென்று தோன்றிற்று. எதிரிகள் முன்னேறும் பொழுதும், பின்வாங்கும்பொழுதும் அழிவும், துயரமும் மிகுதியாக விளைவிக்கப்பட்டன.

எங்கு பார்த்தாலும் தேசம் பாழாகி விட்டது. சாங்கியாங், மோஷி, நீர்சியாஹோ, ஷெங்க்சியாபிங்க் இன்னும் மற்ற இடங்களிலுள்ள கொலைக்களங்கள் வழியாகச்சென்றபொழுது மத்திய காலத்தில் நாகரீக மற்றவர்கள் விளைவித்த நாசங்களின் மத்தியில் நடந்து செல்லுவது போலத்தோன்றிற்று. இருபது மைல்கள் சென்றாலும் உணவுப்பொருள் வழங்கக் கூடிய சிற்றுண்டிகளையும், ஸ்டோரையும் காணக்கூடவில்லை. இருள் மூடியவுடன் இரவில்

தங்குவதற்கு லாயக்குள்ள தங்குமிடமும் தென்படவில்லை. அநேகம் தடவைகளில் நான் குடியானவர்களுடைய வீடுகளுக்குச்சென்று அங்கே ஒரு வேளைசாப்பாட்டிற்கும், படுக்க இரண்டு பெஞ்சுகளையும் தயார்செய்து கொள்ளுவேன்.

### சாங்கோவில் படுகொலை.

பூர்த்தி செய்யப்படாத புள்ளி விவரங்களைப்பார்த்தால் இடுவில் 5,000-க்கு மேற்பட்ட வீடுகளும், சாங்சியாங்கில் 3,000 வீடுகளும் தீக்கிரையாகின என்று தெரியவருகிறது. பொதுவாகப் பேசினால், ஜப்பானிர்கள் காலடிவைத்த இடங்களிலுள்ள வீடுகளில் 40 முதல் 100 சதவிகிதம் அழிக்கப்பட்டுவிட்டன. ஜப்பானியர்களின் தீவைக்கும் அக்கிரமங்கள் இன்னும் அதிகமாகயிருந்திருக்கும். சீனர்கள் அவர்களை விடாமல் பின்பற்றித் துறத்தியடித்தாலும் பொது மக்களைச் சேர்ந்த தீயணைக்கும் படைகள் எதிரிகள் சென்றவுடன் தீயை அணைத்துவிட முயற்சி எடுத்துக்கொண்டதாலும் நாசம் குறைந்தது.

அநேக இடங்களில் ஜப்பானியர்கள் பொதுமக்களில் பதினாயிரக்கணக்கானவர்களைக் கொலைசெய்திருக்கிறார்கள். மிகவும் கோரமான கொலைகள் டங்க்டிங் ஏரி பிரதேசத்திலுள்ள ஹானஷௌ மாகாணத்தில் சாங்கோவில் நடைபெற்றன. சமாதானம் நிறம்பியிருந்த நகரத்தை ஜப்பானியர்கள் அங்கு வந்தவுடன் கொலைக்களமாக மாற்றிவிட்டார்கள். அந்நகர வாசிகளும், ஏரி பிராந்தியத்திலிருந்து ஓடிவந்த அகதிகளும் தயை தாக்ஷிண்யமன்னியில் கொலை செய்யப்பட்டார்கள். சாங்கோவில் அடைக்கலம் புகுந்தவர்களெல்லாம் சாங்கோவைச் சுற்றிலும் எல்லாபககத்திலும் ஜலமயமாகயிருந்ததால் அகப்பட்டுக்கொண்டார்கள். கொலை ஐந்து நாட்கள் வரையில் நடைபெற்றது. அப்பொழுது ஜப்பானியர்கள் வீடுகளையும், காடுகளையும், புதர்களையும், தானியமுள்ள வயல்களையும் சோதனை செய்தார்கள். ஜலத்தின் வழியாய் ஜனங்கள் தப்பி ஓடாமல் தடுப்பதற்காக படகுகளில் ரோந்துப்படைகள் அனுப்பப்பட்டனர். வெடிமருந்தை உபயோகிக்காமல் பத்திரப்படுத்துவதற்காக அவர்கள் தற்காப்பற்ற ஜனங்களை சனியன்களால் குத்திக்கொன்றார்கள். அந்த நகரத்தில் எங்குபார்த்தாலும் சவங்கள் கிடந்தன. ஏரியில் சவங்கள் மிதந்து கொண்டிருந்தன.

சாங்கோவை சீனர்கள் திருப்பிப்பிடித்தவுடன் சீன அதிகாரிகள் முதல் முதலில் சவங்களைப் புதைத்து விட்டார்கள். சவங்கள் ஏராளமாகயிருப்பதாலும் சுகாதார வசதிகள் குறைவாகயிருப்பதாலும் தொத்துவியாதி உண்டாகும் என்று பீதி உண்டாகியிருக்கிறது.

### காமப்புரக்ஷிக் கொடுமை.

ஜப்பானியர்கள் ஒரு கிராமத்திலோ அல்லது நகரத்திலோ புகுந்தவுடன் அங்கிருக்கும் வாலிபமுள்ள அழகான இளம் பெண்களை அவர்கள் தேடிச் சென்றார்கள். ஜப்பானியர்கள் சோராவரி செய்த மேற்கு ஹூபேயிலும் டங்க்டிங் ஏரி பிரதேசத்திலுள்ள 20 வயதுக்கு மேற்பட்ட ஸ்திரீகளும், 7 வயதுள்ள சிறுபெண்களும் ஆயிரக்கணக்காக பலாத்காரப் புணர்ச்சி செய்யப்பட்டார்கள். ஜப்பானியர்களின் காமப்புரக்ஷிக் கொடுமைகளை வெளியிட்டவர்கள் சனியன்களால் குத்திக்கொல்லப்பட்டார்கள். இடுமாகாணத்திலுள்ள 3,000 ஸ்திரீகள் எதிரிகளால் கற்பழிக்கப்பட்டார்களென்று அதன் மாஜிஸ்திரேட்டு என்னிடம் சொன்னார்.

டங்க்டிங் ஏரிக்கு மேற்கில் லிக்ஸியானிலுள்ள சியாசியா கிராமத்தில் ஜப்பானியர்கள் பிரவேசித்தபொழுது கிராமப் பிரதிநிதிகள் அவர்களை வரவேற்று நீங்கள் எங்களுடைய ஸ்திரீகளைத் தொந்தரவு செய்யாமலிருந்தால் உங்களுக்கு வேண்டிய சௌகரியங்களையெல்லாம் தருகிறோமென்று ஜப்பானியரிடம் சொன்னார்கள். ஜப்பானியப்படை தலைவர் அவர்களுடைய கொள்கையை உதரித்தள்ளிவிட்டார்.

ஜப்பானியர்கள் ஆயிரக்கணக்கான மனிதர்களை அடிமைகளாக்கி அவர்களை மூட்டைகளைச் சுமந்து செல்லுவதற்கும் அல்லது மற்ற கஷ்ட சாத்தியமானவேலைகளைச் செய்வதற்கும் ஏவினார்கள். எதிரி பின்வாங்கியபொழுது அவர்கள் யாங்க்ட்ஸ் நதியின் வடக்குக் கரைக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். தப்பி ஓடிவந்தவர்களில் சிலர் ஜப்பானின் கொடுமைகளையும், மிருகத்தன்மையையும் விளக்கிக்காட்டக்கூடிய அநேக நடவடிக்கைகளை வெளியிட்டார்கள். ஜப்பானியர்கள் கெட்ட எண்ணங்கொண்டு நாசவேலையைச் செய்துவந்தார்கள். அவர்கள் முன் தென்பட்ட எருதுகளையும், பசுக்களையும் அவர்கள் வதைத்தார்கள். பூர்வாங்க விசாரணைப்படிக்கு இடுவில் 4,000 எருதுகளும், பசுக்களும், சாங்சியாங்கில் 3,000-ம் கொல்லப்பட்டன என்று வெளியாகுகிறது. எருதையோ பசுவையோ கொன்றபின் அதிலிருந்து ஒரு துண்டு இரைச்சியை சேதித்துவிட்டு பாக்கி சவத்தை அழுகும்படி அப்படியே போட்டுச்சென்று விடுவார்கள்.



ஜப்பானியக் கொள்ளைக்காரர்கள் சமையல் பாத்திரங்கள் எல்லாவற்றையும் உடைத்துவிட்டு அணுக்குகளை எடுத்துச்சென்றார்கள். மேலும் அவர்கள் கிண்ணங்களையும், கோப்பைகளையும், தட்டுகளையும் நொருக்கிவிட்டார்கள். கொண்டுபோக முடியாத தானியங்களை தீவைத்துப் பொசுக்கினார்கள். டங்க்டிங் பிராந்தியத்தில் எதிரிகள் படையெடுத்தபொழுது அறுவடை ஆகாததினால் அவர்கள் தானியத்தை அதிகமாகக் கொள்ளையடித்துச் செல்லவில்லையென்று வியவசாயிகள் என்னிடம் சொன்னார்கள். களஞ்சியங்களிலிருந்த தானியங்கள் தான் கொள்ளையடிக்கப்பட்டன அல்லது நாசம் செய்யப்பட்டன.

ஜப்பானியப்படைகள் சீனர்களிடமிருந்த பஞ்சு மெத்தையையும், ஆடைகளையும் அபகரித்துக் கொண்டார்கள். பஞ்சுமெத்தைகளை மழை பெய்வதினால் சகதி அதிகமாகயிருக்கும் பாதைகளில் விரித்தார்கள். ஆடைகளைக் கிழித்து குதிரைகளின் கால்களையும், கழுதைகளின் கால்களையும் கட்ட உபயோகப்படுத்தினார்கள். நிர்மானுஷமான நாடுகளின் வழியாகச் சென்றபோதிலும் மார்க்கங்களில் பாழடைந்த வீடுகளும் காணப்பட்டதால் நான் மார்க்கத்தை சுலபமாகக் கண்டுபிடிக்க இயன்றது.

### நாசவேலையை புரோத்ஸாகம் செய்வது.

நாசவேலையை ஜப்பானியர்கள் மேற்கொண்டதுடன் பொம்மை சீன, மங்கோலிய நிர்வாகத்தைச் சேர்ந்த துருப்புகளையும் அவ்விதம் செய்யும்படி தூண்டிவிட்டார்கள். எதிரியின் குதிரைப்படைகளில் சில மங்கோலியர்களிருந்தார்களென்று கிராமவாசிகள் என்னிடம் சொன்னார்கள். அவர்கள் உயரமாகவும் தாடி வைத்துக்கொண்டுமிருந்தார்களென்று அவர்கள் விவரணம் செய்தார்கள். கிராம வாசிகளுடன் பொம்மைத்துருப்புகள் சல்லாபம் செய்தால் அவர்களுடன் நட்புகொண்டு விடுவார்களோவென்று சீனர்களுடன் சம்பாஷணை செய்யக்கூடாதென்று பொம்மைத் துருப்புகளுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஆகிலும் ஜப்பானியர்களின் முன் எச்சரிக்கையையும் மீறி அநேக பொம்மைத்துருப்புகள் சீன அரசாங்கத்துருப்புகளிடம் சரண்புகுந்து விட்டனர். அவர்கள் கக்ஷிமாறி வருவதற்கு முன் ஜப்பானிப்படைத் தலைவர்கள் கொன்றுவிட்டுச் சென்றார்கள்.

பூர்வாங்கமாகத் தயாரிக்கப்பட்ட கணக்குகளைப் பார்க்கும் பொழுது மேற்கு ஹூபேயிலும் வடக்கு ஹூனனில் டங்க்டிங் ஏரி பிராந்தியத்திலும் ஒரு மாகாணத்தில் 18,75,000 பவுன்கள் பொருமானமுள்ள நஷ்டமும், ஒரு கிராமத்தில் 1,25,000 பவுன்கள் பொருமானமுள்ள நஷ்டமும் ஏற்பட்டன என்று வெளியாகுகிறது.

விதை தானியங்கள் பொசுக்கப்பட்டதாலும், கால்நடைகள் அழிக்கப்பட்டுவிட்டதாலும், விவசாய ஆயுதங்கள் நாசம் செய்யப்பட்டதாலும் அநேக பூப்பிரதேசங்கள் தரிசாகக்கிடக்கின்றன. வீடுகள் தகர்க்கப்பட்டும், சொத்து சுகங்கள் கொள்ளையடிக்கப்பட்டும் போய்விட்டதால் லக்ஷக்கணக்கான ஜனங்களுக்கு வாசஸ்தலமில்லை, ஜிவனோபாயமில்லை. இலையுதிர்காலமும் மாரிகாலமும் வரும்பொழுது அவர்கள் வறுமையினாலும், குளிரினாலும் கஷ்டப்படவேண்டியிருக்கும். மத்திய நிர்வாகமும் மாகாண அதிகாரிகளும் கஷ்டநிவாரண ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்கள். 1,30,00,000 (chip) பொருமானமுள்ள பொருளை கஷ்டநிவாரணத்துக்கு ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். எதிரி விளைவித்திருக்கும் நாசத்தை கவனிக்குமளவில் நிவாரண வேலை மகத்தானதென்று தோன்றுகிறது.

---

## நியூகினியிலுள்ள காட்டுப்பிரதேசங்கள்.

---

ஆஸ்திரேலியா யுத்த நிருபர் சொன்னதை ஸ்லெஸ்ஸர் நியூகினியிலுள்ள காட்டுப் பிரதேசங்களைப்பற்றி கீழ்வருமாறு கூறுகிறார். இக்காட்டுப் பிரதேசங்களில்தான் ஆஸ்திரேலியத் துருப்புகள் அமெரிக்கத் துருப்புகளுடன் இருந்து ஹூவான் தீபகற்பத்திலிருந்து ஜப்பானியர்களைத் துரத்தியடித்ததாகும்.

"இப்பிரதேசங்களில் மரம், செடிகள் அடர்ந்தில்லாமலும், இருண்ட பிரதேசமாயில்லாததுமாய் ஒரு சதுர அடிகூட இல்லை என்றுதான் சொல்லவேண்டும். இப்புதர்களின் கீழ் மரங்கள் அடர்ந்து பூமி இருப்பது உண்மைதான். எனினும் ஆகாயத்திலிருந்து கண்ணால் காணமுடியாது. மரங்களும், புதர்களும் அடர்ந்து, எங்கும் இலையாகவும், மரக்கிளைகளாகவும் தென்பட்டு அங்குள்ளோரை மறைதது வைக்கத் தக்கதாயுள்ளது. அவ்வாறுள்ள காடுகள் சிறிது குறைந்துள்ள பிரதேசங்களில் குனை (Kunai) என்ற புல் பிரதேசம் உளது. இடுப்பளவு உயர்ந்து வளர்ந்தும் மிகவும் காடானதும், உலோகத்தைப்போன்று கூர்மையானது

மான புல் பிரதேசமாகும் இது. நதிக்கரைகளின் மேல் வேர்கள் காணப்படுகின்றன. கொடிகளும் பலவாறு காணப்படுகின்றன. நிலப்பிரதேசங்களில் தென்னந்தோப்புகளும் இருக்கின்றன. இவைகள் நிற்க, நந்தவனங்களும், மஞ்சள் நிறப் பூக்களும், அடர்ந்த நந்தவனங்களும் மேகங்கள்வரை எட்டியுள்ள பல மலை பிரதேசங்களும் உள.

" இம்மலைகளின்மேல் சில சமயங்களில் 10,000 அடிகள் உயரம் வரையிலும்கூட 40, 50 பவுண்டுகள் நிறையுள்ள சாமான்களைத் தூக்கிக்கொண்டு ஏறுவது மிகவும் கஷ்டமாகும். இவைகளன்னியில், வழுக்கியும் விடும்; சில சமயங்களில் மனிதன் தன் கால்களையும், கைகளையும் உபயோகித்துக்கொண்டு மலைப்பிரதேசங்களில் ஏறுகிறான். இது மிகவும் கஷ்டமான செயலாகும். மழைக்காலங்களில் மிகவும் கஷ்டமும் ஏற்படுகிறது".

---

## நான்காம் வருஷ யுத்தத்தில் இந்தியாவின் பங்கு.

சென்ற வருஷ நடவடிக்கைககளைப் பொருத்தவரையில் சிறிது சிந்தித்துப் பார்த்தால் இந்தியாவின் வீரர்களை மிகவும் பெருமைப்பட கௌரவிக்க முடியும். ஐக்கிய தேசங்களின் படைகள் சென்ற வருஷத்தில் அச்சு நாடுகளை பல இடங்களில் தோற்கடித்து நிர்மூலமாக்கப்பட்ட போதெல்லாம் இந்தியாவின் வீரர்கள் தான் முக்கிய பாகம் எடுத்துக் கொண்டு முதன்மையாய் போரிட்டிருக்கின்றனர்.

நான்காம் இந்தியப்படை வடக்கு ஆபிரிக்காவில் செய்த கியாதி வாய்ந்த பல நடவடிக்கைகள் சரித்திரத்தில் குறிப்பிடத்தக்கது. பலகாலம் வரையில் மிகவும் அசௌகரியமான கஷ்டங்களோடு பயங்கரமாய் வாழ்ந்திருக்கின்றனர். ஸ்வதந்திரத்தை நிலைநாட்டும் பொருட்டு பலர் உயிர் விட்டிருக்கின்றனர். பலர் சிறைச்சாலையிலேயே கஷ்டப்படுகின்றனர். இவ்வாறு எல்லோருமாக இந்திய ராணுவ சரித்திரத்தின் பக்கங்களுக்கு மிகவும் கியாதி வாய்ந்த விஷயத்தை விடுத்திருக்கிறார்கள்.

டுனிஸியா யுத்த அரங்கங்களில், யுத்தமிடும் நாலாம் படை செய்த கியாதி வாய்ந்த செயல்கள் ஒருபுறமிருக்க, அவர்களின் நாட்டினர் தங்கள் நாடுகளில் செய்யும் முயற்சிகளிலும் உலைக்களத்திலும் தொழிற்சாலைகளிலும், வயல் வரப்புகளிலுமாக உழைத்தும் இந்தியாவை ஒரு உண்மையான படைவீடாகவே செய்திருக்கின்றனர்.

இந்தியாவின் கிழக்கு எல்லையில் 9-ம்தேதி டிஸம்பர் மாதம் மத்தியில் ஆரம்பித்து 1943-ம் வருஷம் மே மாதத்தில் மாங்டா, பூதிடாங் முதலிய பிரதேசங்களினின்றும், நம் துருப்புகள்பின்வாங்கியதோடு முடிவான அரக்கான் யுத்தமானது முடிவில்லாததாயிருக்கிறது. இதனிடையில் இந்த யுத்தத்தில் பர்மாவிற்குள் பெருந் தாக்குதல்கள் செய்வதாய் எண்ணம் இல்லையெனினும் அதிக லாபம் நமக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால் அக்யாப் பிடிப்பதான நமது முக்கிய குறிக்கோள் முடிவடையாவிட்டாலும், எதிரிகளின் யுத்த முறைகளை நாம் நன்கறிந்துகொண்டோம். நமது இந்திய பிரிடிஷ் துருப்புகள் தங்களில் உயிர்ச்சேதம் ஏற்படாமல் காப்பாற்றிக்கொண்டு, எதிரிகளுக்கு கணக்கற்ற உயிர் சேதத்தை உண்டுபண்ணி இருக்கின்றனர்.

எதிரி ஆக்கிரமித்த பர்மாவில் முக்கிய பாகம் ஒன்றில் துணிவுடன் இந்தியாவில் இருந்து இந்தியப் படை ஒன்று நுழைந்ததானது ஜப்பானியர்களிற்கு எதிரியாய் இந்த வருஷத்தில் இந்தியர்கள் ராணுவ முறையை அடைந்த பெறும் வெற்றி என்றுதான் சொல்லவேண்டும். பிரிகேடியர் O. C. வின்கேட் D. S. O. என்பவரால் நடத்தப்பட்டு கூர்கா வீரர்களையும், இதர இந்தியத் துருப்புகளையும் கொண்ட இப்படை பாலங்களை குண்டுகளால் சுட்டு எரித்தும், ரயில்வேப் பாதைகளை துண்டு பண்ணியும் எதிரிகளைக் கண்ட இடத்தில் தாக்கியும் போர் புரிந்தது. ஜப்பானியப் பெரும் படை ஒன்று இவர்களை மடக்க நினைத்தவர்களை இங்கு மங்குமாக ஓடும்படியாக செய்தது மிகவும் போற்றத்தக்க செயலாகும்.

சென்ற 12 மாதங்களில் இந்தியாவின் யுத்த முயற்சி இருமடங்காய், என் நான்கு மடங்காய் பெருகி இருக்கிறது. யுத்தமிடும் படையும் இப்பொழுது முன்னிருந்ததைவிட மிகவும் அதிகமாய் விரிவடைந்துள்ளது; இந்தியச் சேனையின் எண்ணிக்கை இப்பொழுது 20 லக்ஷம் என்று சொல்லவேண்டும். அதாவது சென்ற வருஷத்தைவிட 8 லக்ஷம் படைகள் இவ்வருஷம் உபரியாய் சேர்ந்திருக்கிறது.



### ராயல் இந்திய கடற்படையின் வேலை.

ராயல் இந்தியக் கடற்படையின் பல்வேறு பகுதிகளிலும் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் இந்த 12 மாதங்களிலும் நிலையாய் விரிவடைந்ததாகும். அதிலுள்ள உத்தியோகஸ்தர்களும் இதர வேலையாட்களும், யுத்தம் ஆரம்பித்தபோது இருந்ததைவிட 10 மடங்கு அதிகப்பட இருக்கின்றனர்.

அரக்கான் யுத்தத்தில் ராயல் கடற்படையும், ராயல் இந்தியக் கடற்படையும், பர்மியக் கடற்கரைப் படையும் ஜப்பானியப் படைகள் திரும்பவும் பலப்படுத்தப்படாமல் மிகவும் திறமையுடன் தடுத்தனர்.

மத்தியதரைக் கடலிலும் H. M. I. கப்பல்கள் யுத்தக் கப்பல்களை பின் தொடர்ந்து சென்று பல ஆயிரக்கணக்காய் போக்குவரத்து சாதனங்களை நடத்தியும், 1943-ம் வருஷம் ஜூலை மாதத்தின் இரண்டாவது வாரத்தில் ஸிஸிலியின் தென்கிழக்கு கரைகளில் வட ஆபிரிக்காவிலிருந்து பல விமானங்களை இறக்கியும் பாடுபட்டது. நேசதேசத்தாருக்கு நஷ்டம் சிறிதுதான். ஸப்ளைகளும் திரும்பவும் பலப்படுத்த வேண்டிய சேனைகளும் உடனுக்குடன் வந்தன. இவ்வாறு வருமாறு செய்தது ராயல் கடற்படையும், ராயல் இந்திய கடற்படையும், நேசதேசக் கடற்படையுமாகும்.

### இந்திய விமானப்படை.

இந்திய விமானப்படை ஆரம்பித்து ஏப்ரல் மாதம் முதல் தேதியுடன் 10 வருஷம் ஆகிறது. அப்படை இப்போது மிகவும் விரிவடைந்து வருகிறது. முக்கியமான விஷயமானது இப்படைக்கு ஒரு இன்ஸ்பெக்டர் ஜெனரலை நியமித்து, உழைப்பிற்கும், பராமரிப்பிற்குமாய் இந்தியர்களைக் கொண்டே ஒரு பெரும் விமானப்படையை உண்டாக்குவதாகும். இரண்டாவதாக முகர்ஜி என்பவரை விங் கமாண்டராக நியமித்து கொஹாத் என்ற ஸ்டேஷனின் பராமரிப்பை ஒப்புவித்ததாகும். ஒரு நடவடிக்கை நடத்தும் ஸ்டேஷனை இந்திய அதிகாரியின் கீழ் ஒப்புவித்தது இதுதான் முதல் தடவையாகும்.

இந்த வருஷத்தில் பர்மாவில் நடவடிக்கைகள் நடத்திய படையொன்று முக்கியமான விஷயங்களை மேற்பார்த்தது. எதிரிகள் ஆக்கிரமித்திருந்த பிரதேசங்களை கூர்மையாய் கவனித்து அங்கிருந்து பல புகைப்படங்களையும் இப்படை கொண்டுவந்துள்ளது. வடகிழக்கு எல்லையில் இந்திய விமானப்படை கவனிப்பதற்கும் நடவடிக்கைகள் நடத்துவதற்கும் முழுதும் விடப்பட்டிருக்கிறது.

### புதுப்படை.

இந்திய பாதுகாப்பு படையில் இரண்டு புதிய பகுதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்திய சேனை மருத்துவப்படை ஒன்றும் இந்திய எலக்டிரிகல் அண்டு மெக்கானிகல் இஞ்சினியர்களின் படை ஒன்றுமாக இவ்விரு படைகளாகும். இதில் முதன்மையில் கூறப்பட்டது, இந்திய மருத்துவ படையைச் சேர்ந்த, I. M. S., I. M. D., I. H. C. ஆகிய இவைகள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து பெரிதாய் செய்யப்பட்ட இந்திய சேனை மருத்துவப்படை பகுதியாகும். I.M.D.-யைச் சேர்ந்தோர்கள் எமர்ஜன்ஸி கமிஷன் கொடுக்கப்பட்டு இப் புதுப்படையில் சேர்க்கப்பட்டும், இதர L. M. P.-களுக்கும் கமிஷன் கொடுத்தும் இப்படையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

இந்தியசேனை ஆர்டினன்ஸ் படையில் செய்துவந்த வேலைகளைக் கண்காணிப்பதற்கு அந்த இஞ்சினியரிங், டெக்னிகல் தொழில் செய்வதற்குமாய் I. E. M. E. படை சேர்க்கப்பட்டிருக்கிறது. 1943-ம் வருஷம் மே மாதம் 1-ந் தேதியன்று சேர்க்கப்பட்டுள்ள இப்படையில் சேருவதற்கு இளம் இந்தியர்கள் வரவேற்கப்படுகின்றனர். அவர்களுக்கு தகுந்த நல்லதருணம் இதுவேயாகும்.

இந்திய சப்ளை ஸர்வீஸும் இவ்வருஷத்தில், உள்நாட்டிலும் கடல் கடந்தும் வேண்டிய அளவு தேவைகளைக் கொடுத்து விரிவடைந்திருக்கிறது. வட ஆப்பிரிக்காவில் செய்த ஸப்ளைகள் மிகவும் முக்கியமாய் குறிப்பிடத் தக்கதாகும்.

மனிதர்கள், யந்திரங்கள் இவைகள் ஒருபுறமிருக்க, யுத்த அரங்கங்களுக்கு வேண்டிய அளவு, ரயில்வே வாகன்கள் முதல் விமானங்கள், மின்சார டார்ச்சுகள் முதலியவைகள் வரை ஸப்ளை செய்திருக்கிறது. இந்தியா எஃஹினால் செய்யப்பட்ட, வேலைகளுக்கென உபயோகப்படும் இரும்பு குடிசைகளும், கூடாரங்களும் ராணுவங்களுக்கு வேண்டிய ஆஸ்பத்திரிகளையும் விமானத் தாங்கிகளையும், செய்து கொடுத்திருக்கிறது. இந்திய மருத்துவ சாமான்கள், கூடார சாமான்கள், யுத்த தளவாடங்கள் முதலியன பெருத்த அளவில் இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்டிருக்கிறது.

## கைத்தொழிலாளர்களின் பயிற்சி.

புதுக்கோட்டை ஸமஸ்தானம் மாட்சி தங்கிய மகாராஜா அவர்கள் கல்லூரியிலும், மராமத்து இலாகா ஒர்க்ஷாப்பிலும் அமைக்கப்பட்டிருக்கும் தொழிற்பயிற்சி நிலயங்களில் பிட்டர், மின்சார வேலை, கொல்லுவேலை, தையல்வேலை, தச்சுவேலை முதலியவைகள் கற்றுக் கொடுக்கப்படும். அபேக்ஷையுள்ளவர்கள் மனுச் செய்து கொள்ளலாம்.

2. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் ஸ்கூல் பைனல் பரிக்ஷையில் தேறியவர்களுக்கு மாதா மாதம் ரூ. 29-ம், பரிக்ஷை பாஸ் செய்யாதவர்களுக்கு ரூ. 24-ம், பயிற்சியளிக்கப்படும் காலத்தில் சம்பளமாகக் கொடுக்கப்படும்.

3. இந்தப் பயிற்சி திட்டத்தைப்பற்றிய பூரா விவரங்களையும் ஸ்டேட் இன்ஜினியரிடமிருந்தாவது அல்லது கல்லூரியின் பிரின்ஸிபாலிடமிருந்தாவது அறிந்துகொள்ளலாம்.

4. மனு பாரங்கள் ஸ்டேட் இன்ஜினியரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

5. மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் கமிட்டியார்கள் ஒவ்வொருமாதமும் 22-ம் தேதியன்று பகல் 11-மணிக்கு புதுக்கோட்டை ஸ்டேட் இன்ஜினியர் அவர்கள் ஆபீஸில் மாணவர்களைப் பொருக்கியெடுப்பார்கள்.

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 188. (4-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 11- 3-44 | முனிஸிபல் ஆபீஸ் | மாலை | 6.00 | 15- 3-44 | நார்த்தாமலை | மாலை | 7.00 |
| 12- 3-44 | ஆலங்குடி | „ | 7.00 | „ | உப்பிலியக்குடி | „ | 7.30 |
| „ | ராசியமங்கலம் | „ | 7.30 | 16- 3-44 | அண்டக்குளம் | „ | 7.00 |
| 13- 3-44 | புத்தாம்பூர் | „ | 7.00 | „ | கிள்ளனூர் | „ | 7.30 |
| „ | வைத்திக்கோவில் | „ | 7.30 | 17- 3-44 | கொடும்பாளூர் | „ | 7.00 |
| 14- 3-44 | வடவாளம் | „ | 7.00 | „ | விராலூர் | „ | 7.30 |
| „ | செம்மட்டிவிடுதி | „ | 7.30 | | | | |

### பிரஸங்கம் 189. (5-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 18- 3-44 | முனிஸிபல் ஆபீஸ் | மாலை | 6.00 | 22- 3-44 | வெள்ளனூர் | மாலை | 7.00 |
| 19- 3-44 | கீரப்பழனி | „ | 7.00 | „ | செம்பாட்டூர் | „ | 7.30 |
| „ | ஆலூர் | „ | 7.30 | 23- 3-44 | புலியூர் | „ | 7.00 |
| 20- 3-44 | திருமெய்யம் | „ | 7.00 | „ | கண்ணங்குடி | „ | 7.30 |
| „ | மேலூர் | „ | 7.30 | 24- 3-44 | கொன்னையூர் | „ | 7.00 |
| 21- 3-44 | பள்ளிவாசல் | „ | 7.00 | „ | பொ. புதுப்பட்டி | „ | 7.30 |
| „ | பில்லமங்கலம் | „ | 7.30 | | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 11—3—44 | வெட்டம்விடுதி | 18—3—44 | திருமெய்யம். |
| 12—3—44 | மருதன்கோன்விடுதி. | 19—3—44 | எம்பல். |
| 14—3—44 | கோனுபட்டு. | 21—3—44 | ராமச்சந்திரபுரம். |
| 16—3—44 | கிழாநிலை. | 23—3—44 | குழிபிறை. |
| 17—3—44 | பாப்பாபட்டி. | 24—3—44 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai, 1,800—16-3-44.

# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம்௵ மார்ச்சு௴ 18௳ [நெ. 189

தேசீய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CLXXXIX.

## பின்லாந்து பின்வாங்குவதிலிருந்து உண்டாகும் பொருளாதார விளைவுகள்.

### இந்த சம்பவத்தைப்பற்றி ஜெர்மனியின் பீதி.

(ஆஸ்வால்ட் டச்சு).

யுத்தத்திலிருந்து விலகிக்கொள்ளவேண்டுமென்று பின்லாந்து பிரியப்படுகிறதென்று கேட்டு பிப்ரவரி மாதம் முதல் ஜெர்மனியில் கலவரம் ஏற்பட்டு விட்டது. இதற்குத் தகுந்த காரணங்களுமுண்டு. அவைகள் ராணுவ, ராஜீய, பொருளாதார சம்பந்தமுள்ளவைகள். இந்த மூன்றிலும் பொருளாதார விளைவுகள்தான் முக்கியமானவை.

ஜெர்மானியர்கள் பெஸ்கோவுக்குப் பின் வாங்கியபின் தூர வடக்குப் போர் முனையின் முக்கியத்வம் போய்விட்டது. ஆகிலும் பின்லாந்தின் தூரவடக்கு பிரதேசத்திலுள்ள ஆறு அல்லது எழு ஆல்பைன் துருப்புகளை ஜெர்மனி வெற்றிகரமாகப் பின்வாங்கும்படி செய்யக் கூடுமாவென்பது சந்தேகமாகயிருக்கிறது.

பின்லாந்தின் வீழ்ச்சியிலிருந்து பொருளாதார விளைவுகளும் மிகுதியாகயிருக்கும். இதாலியில் பாஸிதத்வம் குலைந்ததற்குப் பின். ஜெர்மனியின் அமுலுக்குட்பட்ட நாடுகள் ஜெர்மனியிடம் காட்டிவரும் விசுவாசம் குலைந்து விட்டது.

பொருளாதார முறையில் ஜெர்மனி தேசங்களை இழந்தால் ஜெர்மன் ராணுவ அதிகாரிகளுக்கு மிகுதியான கவலை உண்டாகிவிடும். ஜெர்மன் யுத்த முயற்சிகளுக்கு பின்லாந்து தாதுப் பொருள்களை அனுப்பியதுடன் கடற்கரையிலுள்ள பீரங்கிகளும், கடற்படை தற்காப்புகளும் ஸ்வீடனுக்குப் போகும் ஜெர்மன் கடல் மார்க்கங்களையும் காபந்து செய்து வந்தன. பால்டிக் கடலின் ஆதிக்கத்தை நம்பியிருக்கும் எந்த வல்லரசுக்கும். டாலினுக்கும், ஹெல்ஸிங்கிக்கும் நடுவிலுள்ள கால்வாயும் ஹாங்கோ கடற்படை தளமும் முக்கியத்வமுள்ளவை. சமீப காலத்தில் ஏற்பட்ட வியாபார ஒப்பந்தப்படி ஜெர்மனிக்கு ஏற்றுமதி செய்யப்படும் இரும்பு உலோகம் 30 சதவிகிதம் குறைக்கபட்டுவிட்டது. ஆகிலும் ஸ்வீடனிலுள்ள உயர்தரமான தாதுப்பொருள் சுரங்கங்கள் ஜெர்மன் யுத்த தளவாட உற்பத்திக்கு அத்தியாவசியமானவை.

ஜெர்மனிக்கு பின்லாந்து ஏராளமான மொரும்பையும், மாலிப்டனம், நிக்கல், செம்பு போன்ற உலோகங்களையும் ஸப்ளை செய்து வருகிறது. இது வரையில் பின்னிஷ்

மொரும்புகள் ஜெர்மன் சேர்மான சாமான்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளின் அவசியத்துக்குத் தேவையான பொருள்களை ஸப்ளை செய்தன. மொரும்புத் தேவை அதிகப்பட்டுவிட்ட பின்லாந்து செய்துவரும் ஸப்ளைகளுக்கு உபரியாக ஆஸ்திரியாவிலும், ஸெக்கோஸ்லாவாகியாவிலும், யூகோஸ்லாவியாவிலும், ருமேனியாவிலும், போலந்திலுமுள்ள காடுகளும் அழிக்கப்பட்டன. நடுநிலைமை வகிக்கும் மேதாவிகள் சொல்லுவதிலிருந்து காட்டிலாகாவின் சகஜமான நடவடிக்கையில் 30, 40 வருஷங்கள் கிரமித்து அழிக்கக்கூடிய காடுகளெல்லாம் இப்பொழுது அழிக்கப்பட்டுவிட்டன. ஜெர்மனியின் யுத்த முயற்சிகளுக்கு மொரும்பு அவசியமானதுடன் மோட்டார் கரியாக உபயோகப்படுத்தி கரி வாய்வு உண்டாக்குவதற்கும் அவைகள் பிரயோஜனப்படுத்தப்படுகின்றன.

### ஜெர்மனிக்கு வேண்டிய நிக்கல் உற்பத்தி.

ஜெர்மனிக்குத் தேவையான உலோகங்களில் பின்லாந்தும், நார்வேயும் 100 சத விகிதம் மாலிப்டனத்தையும், 64 சத விகிதம் நிக்கலையும், 21 சத விகிதம் செம்பையும் ஸப்ளை செய்கின்றன. நாபனிலுள்ள நார்வேஜிய மாலிப்டனம் உற்பத்தியாகும் மூலஸ்தானங்கள் அழிவுபட்ட பின் ஜெர்மனிக்கு பின்லாந்திலிருந்து அனுப்பப்படும் மாலிப்டனம் ஸப்ளை அதிகரித்துவிட்டது. ஆகையால் ஜெர்மனிக்கு பின்லாந்திலிருந்து தான் சமீப காலத்தில் மாலிப்டனம் ஸப்ளை செய்யப்படுகிறதென்று வைத்துக்கொள்ளலாம். ஜெர்மனிக்குத் தேவையான நிக்கல் மூன்றில் இரண்டு பாகம் வடக்கு பின்லாந்திலிருந்து அனுப்பப்படுகிறது. செம்பு உலோக ஸப்ளை தான் ஜெர்மனியின் குறைவான பாகம். உலக உற்பத்தியுடன் ஒப்பிட்டால் நார்வே, பின்லாந்து உற்பத்திகளின் அளவு அற்பமானது. ஆகிலும் அந்நாடுகளிலிருந்து ஜெர்மனிக்கு ஐந்தில் ஒரு பாகம் செம்பு ஸப்ளை செய்யப்படுகிறது.

மொரும்பு, உலோகம் ஸப்ளை செய்யப்படுவதுடன் பின்லாந்திலிருந்து கட்டட வேலைக்குறிய சாமான்களும் ஏராளமாக அனுப்பப்படுகின்றன. நேசதேச வெடி விமான நடவடிக்கைகளுக்குப் பின் ஜெர்மன் துறைமுகங்களில் கட்டடங்கள் கட்டுவதற்கு அவைகள் உபயோகப்படுத்தப்பட்டன.

பிரிடிஷ் பொருளாதார இலாகா மந்திரியான ஸெல்போர்ன் பிரபு சமீபத்தில் ஆற்றிய சொற்பொழிவில் ஜெர்மன் யுத்த தளவாடங்களும் இயற்கைப் பொருள்களும் சரிக்கட்டி வந்ததுபோக, இப்பொழுது யுத்த தளவாட உற்பத்திகளுக்காக ஜெர்மனியின் அமுலுக்குட்பட்டிருக்கும் நாடுகளிலிருந்து அனுப்பப்படும் அல்பமான உதவிகளையும் ஜெர்மனி ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. தனிப்பட்ட ஒவ்வொரு இயற்கைப் பொருள்களும் குறைந்து விட்டால் ஜெர்மன் யுத்த தளவாட உற்பத்தி நாளடைவில் குறைந்துவிடும். ஆகையினால் பின்லாந்து சரணாகதி செய்துவிட்டால் ராணுவ, ராஜீய விளைவுகளை விட பொருளாதார முறையில் அதிக சிரமம் ஏற்படுமென்று நாஸித்தலைவர்கள் பயப்படுகிறார்கள்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 6—3—44 (திங்கட்கிழமை). | அமெரிக்க வெடி விமானக்கூட்டம் பகலில் பெர்லின் பேரில் வெடி குண்டுகளைப் பொழிந்தது. ஜெர்மனிக்கு 176 விமானங்கள் நஷ்டம். |
| | யூக்ரேனியப் போர் முனையில் ஜெர்மனியின் ஜீவனாடி போன்ற ஒடெஸ்ஸா-லுவ்வா இருப்புப் பாதையை செம்படை துண்டித்துவிட்டது. |
| 7—3—44 (செவ்வாய்க்கிழமை). | மத்தியதரைக் கடல் பக்கத்தில் பிரெஞ்சு கடற்படை தளமான டுலோனை அமெரிக்க விமானப் படை தாக்கிற்று. |
| 8—3—44 (புதன்கிழமை). | அமெரிக்க வெடி விமானங்கள் பெர்லினைப் பகலில் தாக்கின. |



### (A)-முக்கியமான சம்பவங்கள்—தொடர்ச்சி.

| | |
|---|---|
| 9—3—44 (வியாழக்கிழமை). | அமெரிக்க வெடி விமானங்கள் பகலில் பெர்லினைத் தாக்கின. |
| | ருஷ்யர்கள், தெற்கு ருஷ்யாவிலுள்ள ஜெர்மன் தற்காப்பு அரண்களை நொருக்கினார்கள். |
| 10—3—44 (வெள்ளிக்கிழமை). | ருஷ்யர்கள் பக் நதிக்கரையிலுள்ள ஊமானைப் பிடித்தார்கள். |
| 11—3—44 (சனிக்கிழமை). | அச்சுநாட்டு அயல் நாட்டு காரியாலயங்களை மூடிவிடவேண்டுமென்று அமெரிக்கா செய்துகொண்ட வேண்டுகோளை அயர்லாந்து பிரதம மந்திரியான டீ வேலரா மறுத்துவிட்டார். |
| | ருஷ்யர்கள் நீபர் நதியின் நுனி பாகத்திலுள்ள பெரிஸ்லாவாலைப் பிடித்தனர். |
| | நேசதேசத்தார்கள் பர்மாவில் பூதேடாங்கைப் பிடித்தனர். |
| 12—3—44 (ஞாயிற்றுக்கிழமை). | ருஷ்யர்கள் கெயிவோரனை ஆக்கிரமித்தனர். |
| 13—3—44 (திங்கட்கிழமை). | ராணுவ அவசியத்தை முன்னிட்டு பிரிடனுக்கும், அயர்லாந்துக்கும் பிரயாணம் பிரிடனால் தடை செய்யப்பட்டது. |
| | ருஷ்யர்கள் கருங்கடல் துறைமுகமான கெர்ஸானைப் பிடித்தனர். |
| | நேசதேசப் படைகள் அட்மிராலிடி தீவுக் கூட்டத்தில் பின்னும் இரண்டு தீவுகளில் இறங்கினார்கள். |

### (B)-செய்திச் சுருக்கம்.

**ருஷ்யா.**—தெற்கு ருஷ்யாவில் யூக்ரேனில் மூன்று முனைகளில் ருஷ்யத் தாக்குதல் நடைபெறுகிறது. யுத்தத்துக்கு முன்னிருந்த போலந்திலிருந்து நீபர் நதியின் முகத்துவாரத்திலுள்ள டார்னோபோல், புரோஸ்குராவ், வினிட்ஸா, நிகோலேயேவ், கெர்ஸான் ஆகிய மூன்று நகரங்களைப் பிடிக்க ருஷ்யர்கள் முயன்று வருகிறார்கள். மூன்றுவது யூக்ரேனியப் போர்முனையில் இங்குலெட்ஸ் நதியை ருஷ்யப்படை கடந்தது. யூக்ரேனியாவிலுள்ள நான்கு சேனைகளும் ஒன்று சேர்ந்துவிட்டன. கெர்ஸான் பிடிபட்டது. நிகோலாயேவையும் டார்னோபோலையும் பிடிக்க போர் நடைபெறுகிறது.

**இதாலி.**—பருவகாலக்கோளாறினால் யுத்த நடவடிக்கை பாதிக்கப்படுகிறது. நேசதேசத்தார்கள் காசினோ நகரத்தை முற்றிலும் அழித்துவிட்டார்கள். நகரம் ஒரே கட்டடத்தூள்களாக காணப்படுகிறது. நகரத்தின் நான்கில் மூன்று பாகம் நமது வசமாகிவிட்டது. நகரத்துக்கு வாசற்படி போன்ற காசில் குன்று பிடிபட்டது.

**விமான நடவடிக்கை.**—இந்த வாரத்தில் பெர்லின் அதிகமாகத் தாக்கப்பட்டது. 6 நாட்களுக்குள்ளாக மறுபடியும் 8-ம் தேதியன்று பெர்லினை அமெரிக்க வெடி விமானங்கள் தாக்கின. 3,50,000 எரி வெடிகளும் 10,000 உயர்தர வெடி குண்டுகளும் வீசப்பட்டன. ரசகுண்டு பாகங்களை உற்பத்தி செய்யும் எர்க்னர் தொழிற்சாலையும், மீன் வெடிகளின் பாகங்களை உற்பத்தி செய்யும் பெர்லினர் மாசின் கான் தொழிற்சாலையும் தாக்கப்பட்டன.

**பஸிபிக்.**—நேசதேசப் படைகள் ஸாலமன்ஸ் தீவுகளில் போகன்வில்லிக்கு சமீபத்திலுள்ள மாகினோ தீவுகளிலும், அட்மிராலிடி தீவுகளைச் சேர்ந்த ஹாவே, பட்ஜோலுவோ முதலிய தீவுகளிலும் இறங்கினார்கள். கடற்படையைச் சேர்ந்த விமானங்கள் பாராமூஷிரோ பேரில் வெடி குண்டுகளைப் போட்டனர்.

**பர்மா.**—பூதேடாங் பிடிபட்டது. நேசதேசப் படைகள் சிண்ட்வின் நதியைத் தாண்டிவிட்டன.

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**5—3—44.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—(6 எதிரி விமானங்கள் நாசமாக்கப் பட்டன).

விமான நிலயங்கள், இதர ராணுவ இலக்குகள்.—வடக்கு பிரான்ஸ் (Northern France).

இரவு.—இலக்குகள்— மேற்கு ஜெர்மனி (Western Germany)—(நேசக் கக்ஷிக்கு நஷ்டமில்லை).

**இதாலி (Italy).**

எதிரி பீரங்கி ஸ்தாபனங்கள், மோட்டார் போக்குவரத்துகள், இதர போக்குவரத்து ஸ்தானங்கள்.-ஆன்ஸியோ (Anzio) முனை.

**ருஷ்யா (Russia).**

(20 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப் பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.— அட்மிராலிடி (Admiralty) தீவுகள்.

விமான நிலயங்கள்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul); நியூகினியிலுள்ள வீவாக் (Wewak).

படகுகள்.—ஹன்ஸா (Hansa Bay) வளைகுடா.

கடற்கரை இலக்குகள்.—மடாங் (Madang).

விமான நிலயங்கள்.—பொகெய்ன்வில்லியிலுள்ள புகா (Buka), டொராமினு (Toromina).

படகுகள்.—ஆல்டாரா (Altara).

துறைமுகப் பிரதேசங்கள்.- காரோலைன்ஸிலுள்ள பொனபி (Ponape), குஸேயி (Kusaie).

மார்ஷல் (Marshall) தீவுகள்.

**பர்மா (Burma).**

ஜப்பானிய விமான நிலயங்கள்.-தெற்கு பர்மா (S. Burma).

எதிரி சைனியங்கள்.—அரக்கான் (Arakan), மாயு (Mayu). சின் மலைகள் (Chin Hills).

**6—3—44.** (திங்கட்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—(176 ஜெர்மன் விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

இலக்குகள்.—பெர்லின் (Berlin) ஜில்லா.

ராணுவ இலக்குகள்.—பிரான்ஸ் (France), பிரெஞ்சு (French) கடற்கரை.

ரயில்வே தளங்கள்.—பெல்ஜியன் (Belgian) எல்லை.

விமான நிலயம்.-பாரிஸ் (Paris), போவாய் (Beauvais).

ராணுவ இலக்குகள்.—பாஸ் டி கலே (Pas De Calais).

இரவு.—வியாபாரக் கப்பல்கள்-நார்வீஜியன் (Norwegian) கடற்கரை.

ரயில்வே இலக்குகள்.-டிராப்ஸ் (Trappes), பாரிஸ் (Paris)ஸின் சமீபத்தில்.

இலக்குகள்.—வடமேற்கு ஜெர்மனி (North-West Germany).

**இதாலி (Italy).**

பீரங்கி ஸ்தாபனங்கள்.—ஆன்ஸியோ முனை (Anzio).

ராணுவ இலக்குகள்.—பிராஸினோன் (Frosinone), லிட்டோரியா (Littorio).

விமான நிலயம்.—ஆர்வியெட்டோ (Orvieto), பாப்ரிகாடி ரோமா (Fabricadi Roma), வைடெர்போ (Viterbo).

ரயில்வே ஸ்தாபனங்கள்.—பிளாரென்ஸ் (Florence).

**ருஷ்யா (Russia).**

(71 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

துறைமுகம், விமானதளங்கள்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul).

டாலா கடல் (Tala Sea), ஹாஸ்கின்ஸ் (Hoskins Cape).

விமான நிலயம், ஸப்ளை பிரதேசங்கள்.—நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata)விற்கு கிழக்கு.

படகுகள்.-நியூகினி(New Guinea) கடற்கரை.

எதிரி சைனியங்கள்.—சாயு (Saua) நதி; நியூகினியிலுள்ள மொனாய்டு(Monoitu), புக்புக் (Pukpuk), மாலை (Malai) கிராமம்.

விமானத் தொழிற்சாலை.—தாய்லாந்தின் தலைநகரான பாங்காக் (Bangkok).

**பர்மா (Burma).**

பாலங்கள்.—மோல்மீன் (Moulmein).

விமான நிலயம்.—அனிஸாகன் (Anisakan).

ஜப்பானியத் துருப்புகள் ஸப்ளை நிலயம்.—, மெயிங்வா (Maingkwa), வாலபம் (Walawbum), ஷாடுஸுப் (Shaduzup) பிரதேசங்கள்.

எதிரி சைனியங்கள் துவியல்கள்.—கலடான் (Kaladan), மாயு (Mayu), அரக்கான் (Arakan), சின் மலைகள் (Chin hills), தெற்கு பர்மா (South Burma).

**7—3—44.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—பிரெஞ்சு மத்தியதரைக் கடல் கடற்படை தளம்.—டுலோன் (Toulon).



அச்சுக் கப்பற் கூட்டம்.—நார்வீஜியன் (Norwegian) கடற்கரை.

இரவு.—ரயில்வே தளங்கள்.—பிரான்ஸில் உள்ள லெ மான்ஸ் (Le mans).

இலக்குகள்.—மேற்கு ஜெர்மனி (Western Germany), நேசதேச விமான நஷ்டம் இல்லை.

கப்பற் கட்டுந் துறைகள், கப்பல்கள் ஸ்டோர்கள்.—பிரான்ஸிலுள்ள டுலோன் (Toulon).

**இதாலி (Italy).**

ரயில் தளங்கள்.—பிராட்டோ (Prato). பான்டெஸீவ் (Pontasieve), காஸ்டல் பாரான் ஸியோனு (Forentiono).

விமான நிலயம்.—ஆர்வியெட்டோ (Orvieto), வைடெர்போ (Viterbo), பாப்ரிகா டி ரோமா (Fabrica di Roma).

ரயில்வே தளங்கள்.—ஆஸ்டியென்ஸ் (Ostiense), லிட்டோரியா (Littorio).

கப்பற் கட்டுந் துறைகள் கோட்டைகள்.—ஸான் ஸ்டெபானோ (San Stefano).

**ருஷ்யா (Russia).**

(98 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

எதிரி சைனியங்கள்.—லொரங்கா (Lorengau).

விமான நிலயம்.-ரபால் (Rabaul), (5 ஜப்பானிய விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

இலக்குகள்—மடாங் (Madang) கடற்கரை, மாய்லா (Moila) முனை, டொரோகினு (Torokina) எல்லை.

**பர்மா (Burma).**

எதிரி சைனியங்கள் போக்குவரத்துகள் துவியல்கள்.—அரக்கான் (Arakan), கலடான் (Kaladan), மாயு (Mayu) பிரதேசங்கள்.

**8—3—44.** (புதன்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

(125 விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன. 54 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை.)

பகல்.—தொழிற்சாலை இலக்குகள்-பெர்லின் (Berlin) பிரதேசம்.

தொழிற்சாலைகள்.—எர்க்னர் (Erkner).

விமான நிலயம்.—ஹாலந்து (Holland).

ராணுவ இலக்குகள்.—வடக்கு பிரான்ஸ் (Northern France).

**இதாலி (Italy).**

(6 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன, 9 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

ரயில்வே தளங்கள்.—ஆர்டி (Orte).

துறைமுகம்.—ஸான் ஸ்டெபானோ (San Stefano).

ரஸ்தா ரயில் சந்திப்பு.—மாண்டல்டோ டி காஸ்ட்ரோ (Montalto Di Castro).

இலக்குகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

எதிரிக் கப்பல்கள்.—எட்ரியாடிக் (Adriatic), டிரேனியன் (Tyrrhenian) கடல்கள்.

**ருஷ்யா (Russia).**

(58 விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியத் தளம்.—குரைல்ஸ் தீவுக் கூட்டத்திலுள்ள பாராமுஷிரோ (Paramushiro).

விமான நிலயங்கள்.-மார்ஷல்ஸ் (Marshalls), நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul).

இலக்குகள்.—நியூ கினியிலுள்ள மடாங் கடற்கரை.

**பர்மா (Burma).**

விமான நிலயங்கள்.-ஷுவெபோ (Shwebo), அனிஸாகன் (Anisakan), ஆன்பால் (Onbaul).

எதிரி சைனியங்கள்.—அர்க்கான் (Arakan), சின் (Chin) மலைகள்.

விமான நிலயங்கள்.—காதா(Katha),இண்டா (Indaw).

**9—3—44.** (வியாழக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

(8 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

பகல்.-தொழிற்சாலை லக்ஷியங்கள்-பெர்லின் (Berlin), மத்திய ஜெர்மனி (Central Germany).

ராணுவ இலக்குகள்.—வடக்கு பிரான்ஸ் (Northern France).

இரவு.—விமானத் தொழிற்சாலைகள்—மாரிக்னேனி (Marignane).

இலக்குகள்.—மேற்கு ஜெர்மனி (Western Germany).

**இதாலி (Italy).**

ரயில்வே தளங்கள்.—ரோம் (Rome), போர்ட்டோ ஸான் ஸ்டெபானோ (Porto San Stefano), மாண்டால்டா டி காஸ்ட்ரா (Montalto di Castro).

பீரங்கி ஸ்தாபனங்கள்.—காம்போ லியோன் Campo (Leone).

ரயில்வேக்கள்.-காபாரானிகா (Caparanica).

எதிரி சைனியங்கள்.—ஆன்ஸியோ (Anzio) முனை.

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

மார்ஷல் (Marshall) தீவுக்கூட்டம்.

இலக்குகள்.—அட்மிராலிடித் தீவுக் கூட்டத்திலுள்ள லொரெங்கா (Lorengau).

பனுபை விமான நிலயம்.—நியூ அயர்லாந்து (New Ireland).
இலக்குகள்.—போர்பொப் (Borpop), நாமாடானே (Namatanai), லெமெரிஸ் முனே (Cape Lemeris).
சிறிய கப்பல்.—மாலாகுனு (Malaguna).
விமான நிலயம்.—வீவாக் (Wewak). (17 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன).

பர்மா (Burma).

எதிரி சைனியங்கள், துவியல்கள், போக்குவரத்துகள்.—மாயூ (Mayu), அரக்கான் (Arakan), கலடான் (Kaladan), சிண்ட்வின் (Chindwin), சின் மலைகள் (Chin Hills), வடமேற்கு பர்மா (N.W. Burma).
ரயில்வேப் பாலம்.—நாம்கின் (Namkin).
ரஸ்தாப் பாலம்.—கமெய்ங் (Kamaing).

**10—3—44.** (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

(1 நேசதேச விமானம் காணப்படவில்லை).
இரவு.—13 விமானத் தொழிற்சாலைகள், ஒரு சிறிய வெடிமருந்து தொழிற்சாலை—மத்திய பிரான்ஸ் (Central France), தென் பிரான்ஸ் (South France).
இலக்குகள்.—மேற்கு ஜெர்மனி.

இதாலி (Italy).

ரயில்வே தளங்கள்.—ரோம் (Rome).
பாலம்.—ஆர்வியேட்டோ (Orvieto).
பீரங்கி ஸ்தலங்கள், துருப்பு முகாம்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

ருஷ்யா (Russia).

(27 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய தளங்கள்.—மார்ஷல் தீவுகள் (Marshall), கரோலைன் தீவுகள் (Caroline).
விமான நிலயம்.—பொனுபி (Ponape), குசேயி (Kusaie), ரபால் (Rabaul).

பர்மா (Burma).

எதிரி சைனியங்கள் துவியல்கள்.—மாயூ (Mayu), அரக்கான் (Arakan), கலடான் (Kaladan), சிண்ட்வின் (Chindwin).
சின் மலைகள் (Chin Hills), தென்மேற்கு (N. W. Burma).

**11—3—44** (சனிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—இலக்குகள்—மேற்கு ஜெர்மனி (Western Germany), பாஸ் டி கலே (Pas de calais).
விமான நிலயங்கள்.—ஹாலந்து (Holland).
கப்பற் கட்டுந்துறைகள்.—பிரான்ஸிலுள்ள டூலான் (Toulon).

இதாலி (Italy).

(36 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன. 14 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
ரயில்வே தளங்கள்.—பாடுவா (Padua, பிளாரென்ஸ்(Florence), ஆர்வியெட்டோ. (Orvieto).
பீரங்கி ஸ்தாபனங்கள், பாலங்கள் ஸப்ளைக் துவியல்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.
ஜீனோ (Genoa).
ரயில்வே இலக்குகள்.—இதாலியின் மேற்கு கடற்கரை.

ருஷ்யா (Russia).

(35 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

2 ஜப்பானிய வியாபாரக் கப்பல்கள்.—ஹாலண்டியா (Hollandia).
விமான நிலயங்கள்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul).
ஸாலமன்ஸிலுள்ள போனு (Bona).
வீவாக் (Wewak).
நாரும் முனை (Cape Narum), பார் பாப் (Bor Pop), நமடனை (Namatanai), காவியெங் (Kavieng).
துருப்புகள் ஏற்றப்பட்ட படகுகள்.—ஹால்மன் (Cape Hollman), உபிலி (Ubili).

பர்மா (Burma).

யுத்த தளவாடங்கள் ஸ்டோர் துவியல்கள் துருப்புகள்.—வடக்கு பர்மா (Northern Burma).
இலக்குகள்.—அரக்கான் (Arakan), மாயு (Mayu), கலடான் (Kaladan).

## *விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.*

**6—3—44.** (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

நேசதேச சைனியங்கள்.—பர்மாவிலுள்ள அரக்கான் (Arakan).

**7—3—44.** (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia),
தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.



**8—3—44.** (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

லண்டன் (London) பிரதேசம் (விமான எச்சரிப்புமட்டும்).

ருஷ்யா (Russia).

ஒரு தகவலும் இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

நேசதேச சைனியங்கள்.—அட்மிரால்டி தீவுகள் (Admiralty).

**9—3—44.** (வியாழக்கிழமை).

ருஷ்யா (Russia).
பிரிடன் (Britain),

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

மார்ஷல் தீவுக்கூட்டத்திலுள்ள எனிவாடாக் (Eniwetok).

**10—3—44.** (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia),

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**11—3—44.** (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

சில இடங்கள்—தென்கிழக்கு கடற்கரை.

ருஷ்யா (Russia).
தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**12—3—44.** (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

லண்டன் (London) பிரதேசம், 2 இடங்கள் தென்கிழக்கு இங்கிலாந்து.
ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).
ஒரு தகவலும் இல்லை.

---

# *யுத்தக் குறிப்புகள்.*

**இந்தியாவின் தோனி.** ஸர் சுல்தான் ஆமத்தின் வெளியீட்டை நாம் வரவேற்கிறோம். இந்திய அரசாங்கத்தின் அறிக்கை, பிரசார மந்திரியான அவர் இந்தியாவிலிருந்து தூரக்கிழக்கு நாடுகளுக்கு ஒலிபெருக்க வசதிகள் அதிகரிக்கப்படுமென்று சொல்லியிருக்கிறார். இந்தியாவிலிருக்கும் ஒலிபெருக்கும் கருவிகள் எல்லாவற்றையும்விட மிகவும் சக்திவாய்ந்த பெரிய கருவிகள் புதிய டில்லியில் அமைக்கப்படும். இந்தியாவிலுள்ள முக்கியமான பாஷைகளிலும், தூரக்கிழக்கு பாஷைகளிலும் ஜப்பானிய பாஷையிலும் செய்திகள் வெளியிடப்படும். இதுவரையில் இந்தியாவிலுள்ள ஒலிபெருக்கும் அமைப்பு உள்நாட்டுக்காகவும் தற்காப்புக்காகவும் அமைக்கப்பட்டிருந்தது. இதற்குப்பின் ராணுவ முறையிலும் பிரசார முறையிலும் முன்னேற்றம் ஏற்படும். இதுவரையில் கபட சித்தமுள்ள எதிரி பொய்வதந்திகளை ஒலிபெருக்கிவந்தான். அதையும் அநேக முட்டாள்கள் செவியுற்றிருக்கிறார்கள். இதேவிதமாக மதிமயங்கிக்கிடக்கும் ஜனங்கள் பர்மாவிலும் எதிரி ஆக்கிரமித்திருக்கும் மற்ற நாடுகளிலும் இருக்கக்கூடும். ஜப்பானியர்களும் அபாண்டமான பொய்களை நம்பும்படி செய்யப்படுகிறார்கள். அவர்களும் உண்மையை அறியவேண்டிய காலம் வந்துவிட்டது. இந்த வேலையை இந்தியா மேற்கொள்ளும்.

வி வி வி வி வி

**தேசீய யுத்த முன்னணியின் அலுவல்கள்.** ஸர் சுல்தான் ஆமத் தேசீய யுத்த முன்னணி மெம்பர்கள் இப்பொழுது நான்குவிதமான வேலைகளைச் செய்துவரவேண்டுமென்றும் ஞாபகப்படுத்தியிருக்கிறார்.

ஜனங்களிடம் பின்வருமாறு சொல்லிவரவேண்டும் :—(1) எதிரியின் பிரசாரத்துக்குச் செவி கொடுக்கக்கூடாது. (2) விலைவாசிகளைக் கட்டுப்பாடு செய்வதில் அவர்கள் உதவி அளிக்கவேண்டும். (3) செலாவணிப் பெருக்கைத் தடுக்கவேண்டும். (4) பிரயாணத்தைக் குறைத்துக்கொள்ளவேண்டும்.

வி வி வி வி வி

**எதிரியின் பிரசாரம்.** ஸர் சுல்தான் செய்திருக்கும் வேண்டுகோள் சந்தர்ப்பத்துக் குறியதுதான். ஆகிலும் எதிரியின் பிரசாரத்தைக் கேட்கமுடியாமல் இந்திய ஒலிபரப்பு அட்டவணையில் சங்கீதம், மற்ற பொழுதுபோக்குகளைச் சேர்த்துவிடுவோமென்று அவர் சொல்லியிருப்பது நடைமுறையில் உபயோகப்படுமென்பது சந்தேகாஸ்பதமானது. சங்கீதம் இனிமையானதுதான். ஆகிலும் புழுகுகள் ஜனங்களின் மனதைப் பலமாகக் கவர்ந்துவிடும். பொய்ப்பிரசாரத்தை உண்மையான பிரசார மூலமாகவும் ரேடியோ மூலமாகவும் பலமாகத் தடுத்துவரவேண்டும். ரேடியோ பிரசாரத்தை எல்லா ஜனங்களும் அறியமுடியாது. ஆகையால் பிரசங்கங்கள் மூலமாகவும், வீடுவீடாக தேசீய யுத்த முன்னணி சேவையாளர்கள் சென்று கிராமத்தார்களுக்குத் தெளிவுபடக்கூடிய கொச்சை பாஷையில் அவர்களுக்கு உண்மைகளை போதிக்கவேண்டும்.

**விலைவாசி கட்டுப்பாடு.** இது பொருளாதார நடவடிக்கை. இதற்கு அரசாங்கத்தாரின் சட்ட திட்டங்களும் பொது ஜனங்களின் ஒத்துழைப்பும் அவசியமாகும். அமிதலாபம் சம்பாதிக்கிறவர்களையும் அக்கிரம வியாபாரம் செய்கிறவர்களையும் எதிர்த்துப்போராடவேண்டும். இந்த நடவடிக்கையை அரசாங்கத்தாரின் உத்தரவுகளை அமுல்நடத்தும் கையளவு உத்தியோகஸ்தர்கள்மட்டும் செய்யமுடியாது. பொதுமக்களும், சாமான்களை வாங்கும் ஸ்திரீகளும் உதவிசெய்யவேண்டும். வியாபாரக் கொடுமையை வெளிப்படுத்துவதுதான் முக்கியமான தந்திரம்.

வி வி வி வி வி

**செலவாணிப்பெருக்கு.** இதைத் தடுக்க, பெரியதும், சிறியதுமான தற்காப்புப் பத்திரங்களில் பொருளைப் போடுவதுதான் சிறந்த நடவடிக்கையாகும். இதை அடைவதற்கு தேசீய யுத்த முன்னணி அங்கத்தினர்கள் முதலாளிகளுக்கு வேண்டுகோள் செய்யவேண்டும்.

பொருளில்லாதவர்களுக்கு பிரயாணத்தைக் குறைத்துக்கொள்ளவேண்டுமென்று அவர்கள் சொல்லவேண்டும். பணமுள்ளவர்கள் உல்லாசமாகப் பிரயாணம் செய்யப்பொருளைச் செலவிடலாம். பொருளில்லாதவர்களின் நிலைமை வேறுவிதமானது. அவர்கள் ரயில் வண்டிகளில் புளி அடைவதுபோல் அடைந்து செல்லவேண்டும். ஸ்திரீகளும் குழந்தைகளும் திணறிப்போய் விடுவார்கள்.

வி வி வி வி வி

**அயர்லாந்தும் படையெடுப்பும்.** படையெடுப்புக்கான ஆயத்தங்கள் பூர்த்தியாகி வருகின்றன. அமெரிக்க கடற்படை காரியதரிசியான கர்னல் பிராங்க் நாக்ஸ் இப்பொழுது மிகவும் மகத்தான படையெடுப்பு ஏற்படும் தருணம் வந்துவிட்டதென்று சொல்லியிருக்கிறார். பிரிடிஷ் உற்பத்தி இலாகா மந்திரி காப்டன் ஆலிவர் லிட்டில்டன் துருப்புகளை இறக்கும் படகுகள் உள்பட எல்லாவிதமான முஸ்திப்புகளும் தயாராகிவிட்டனவென்று சொல்லுகிறார். ஆகிலும் இப்பொழுது ஒரு சங்கடம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு அயர்லாந்துதான் ஜவாப்தாரி. சாரவேலை செய்வதற்கு எதிரி அயர்லாந்தை பயன்படுத்தி வருகிறான். அயர்லாந்து நடுநிலைமை வகிக்கிறதென்று சொல்லப்படுகிறது. ஆகிலும் அங்கிருக்கும் ஜெர்மன் ஜப்பானிய அயல்நாட்டு காரியாலயங்கள் ராணுவ ரகசியங்களை ராஜதந்திரமுறையில் ஒலிபரப்புமூலம் தங்களுடைய நிர்வாகங்களுக்கு அனுப்பிவருகிறார்கள். ஒலிபெருக்கும் கருவிகளுடன் ஜெர்மன் குடைத்துருப்புகள் அயர்லாந்தில் இறங்கிவிட்டன. படையெடுப்பு திட்டத்துக்கும் லக்ஷக்கணக்காக பிரிடனிலிருக்கும் துருப்புகளுக்கும் ஆபத்து வந்துவிட்டது. அமெரிக்கா அயர்லாந்துக்குக் கப்பல்களை அனுப்பிவந்தது. ஜெர்மன் யூ-படகுகள் அவைகளை மீன்வெடிகளால் தாக்கின. அயர்லாந்து இதை ஆக்ஷேபிக்கவில்லை. ஆகையால் அயர்லாந்து தன்னுடைய நடவடிக்கைகளைத் திருத்திக்கொள்ளவேண்டுமென்று உத்தரவிடுவது அவசியமாயிற்று. ஜெர்மன், ஜப்பானிய அயல்நாட்டு காரியாலயங்களை மூடிவிடவேண்டுமென்று கோரிக்கை செய்யப்பட்டது. அயர்லாந்து ஒத்துழைக்க மறுதளித்துவிட்டது. அயர்லாந்துக்கு ஜனங்கள் பிரயாணம் செய்யக்கூடாதென்று பிரிடன் பதில் நடவடிக்கையை மேற்கொண்டது. எண்ணெய், பெட்ரோல், கோதுமை, யந்திரங்கள் முதலிய ஸப்ளைகளை நிறுத்திவிடும் நடவடிக்கை பின்தொடரும்.

வி வி வி வி வி

**படையெடுப்புக்கு முன்.** இரண்டாம் போர்முனை துவங்கிவிட்டதென்று ஜெனரல் மாண்ட் காமரி சொல்லிவிட்டார். இதை விவரித்துச் சொல்லும் முறையில் ஜெர்மன் தலைநகரத்தை நொருக்கிவரும் விமானப்போர் படையெடுப்புக்கு முற்போக்கான நடவடிக்கையென்று ஜெனரல் ஈசன் ஹவர் சொல்லியிருக்கிறார். மார்ச்சு மாதம் 6-ம் தேதிக்குப்பின் பிரிடிஷ் அமெரிக்க விமானத்தாக்குதல் வடமேற்கு, மத்திய ஜெர்மனியில் சூடார் கடலிலிருந்து பெர்லின் வரைக்கும் பரவியிருக்கிறது. இந்த விமான நடவடிக்கை இதுவரையில் நடைபெறுத வகையிலும் மதிக்கப்படாத முறையிலும் ஆரம்பிக்கப்படுமென்று மிஸ்டர் சர்ச்சில் காமன்ஸ் சபையில் சொல்லியதை ஊர்ஜிதப் படுத்துகிறது.

இந்த மகத்தான தாக்குதல்கள் எதிர்காலத்தில் இதைவிட பலமாகயிருக்கும். காலநிலையின் அபிவிருத்தியை நேசதேசத்தார்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். பிரகாசமான கால நிலைமை 30 அல்லது 60 நாட்கள் காணப்பட்டால் விமானத்தாக்குதலின் விளைவுகள் அதிகரிக்குமென்று அமெரிக்க பிரசுரம் ஒன்று வெளியிடுகிறது.



இதற்குத்தகுந்த காரணங்களிருக்கின்றன.

(1) பிரிடிஷ் வெடிவிமானங்கள் தாக்குதலுடன் அமெரிக்க விமானப்படையின் நடவடிக்கையும் சேர்ந்துவிட்டது. பிரிடனிலிருக்கும் விமான தளங்களுடன் இதாலிய தளங்களும் ஒன்றுபட்டுவிட்டன.

(2) அமெரிக்க யுத்த தளவாட உற்பத்தியில் ஒரு பெரிய வெற்றி கிடைத்துவிட்டதென்று ட்ரூமான் ஸெனட் கமிட்டி அமெரிக்காவில் ரிபோர்ட் செய்திருக்கிறது.

(3) சில நாட்களுக்குமுன் பிரிடிஷ் விமான உற்பத்தியின் அதிகரிப்புக்காக பிரிடிஷ் விமானப்படை உற்பத்தி இலாகா மந்திரியை மிஸ்டர் சர்ச்சில் பாராட்டினார்.

(4) தொழிற்சாலைகளில் கட்டப்பட்ட விமானங்களின் யதாம்சம்தான் உபயோகிக்கப்படுகிறது. பூரா விமானபலமும் உபயோகப்படுத்தப்படும்பொழுது மிகவும் பலமான தாக்குதல்கள் நடைபெறும்.

(5) விமான யுத்தம் விமானங்களின் சங்கியையை மட்டும் பொருத்ததில்லை. விமானங்களின் சிலாக்கியத்தையும் பொருத்திருக்கிறது. விமானங்களின் அமைப்பு மேன்மையும் அவசியமிருக்கவேண்டும். ஆகாயப்போர் விஞ்ஞான சாஸ்திரப் போராகும். பிரிடனுக்காக நடைபெற்ற விமானப்போரில் ஜெர்மன் விமானப்படை எண்ணிக்கையில் அதிகமாகயிருந்தபோதிலும் ஸ்பிட் பையர், லங்காஸ்டர் விமானங்களின் உயர்வினால் துறத்தியடிக்கப்பட்டது. புதிய டில்லியில் புரொபெஸர் ஹில் சொன்னவிதமாக, காதோட் கிரணக் குழாய்களுக்குப் பின் உட்கார்ந்து வேலை செய்த வாலிபமுள்ள விஞ்ஞான சாஸ்திரிகளின் அறிவினாலும், சாமர்த்தியத்தினாலும் பிரிடன் காப்பாற்றப்பட்டது. சமீபகாலத்தில் கட்டப்பட்ட ஸ்பிட் பையர், லங்காஸ்டர், மஸ்கிடோ விமானங்களுக்கு இணை கிடையாது.

பழைய ரகங்களைப் பரிஷ்காரப்படுத்துவதுடன் பிரிடிஷ் விஞ்ஞான சாஸ்திரிகள் வாயுக் குழலினால் ஓடும் புதிய விமானங்களையும் கட்டிவருகிறார்கள். 1,200 ராத்தல் கனமுள்ள, கட்டடங்களை நொருக்கும் சாதனம் மற்றொரு புதிய அமைப்பு. ஒரு விமானத்தைக் கட்டுவதற்கு வேண்டிய கால அளவும் பரிசிரமும் இந்தப் பெரிய சாதனத்தை அமைக்கத் தேவையாகயிருந்தது. அதனுடைய அழிக்கும் சக்தி அபாரமானது. அவைகளில் சில விமானங்கள் நோம்—ரோன் விமான உற்பத்திசாலையை அழித்தன. அதன் தாக்குதலால் ஏற்படும் நாசத்தைவிட அதன் சப்தம் அதிக நாசத்தை விளைவிக்கும். வாணவெடித் துப்பாக்கி மற்றொரு நூதன ஏற்பாடு. வாணவெடிகள் அல்லது வெடிகுண்டுகள் ஆகாயத்தில் அதிவேகமாகச்சென்று எதிரியின் விமானங்களை அழித்துவிடுகின்றன.

வி வி வி வி வி

**பிப்ரவரி மாதத்திய புள்ளி விபரங்கள்.** "பிப்ரவரி மாதத்திய விமான நடவடிக்கை புள்ளி விபரங்கள் ஸ்வாரஸ்யமானவை. நேசதேச 8-வது, 15-வது விமானப்படைகள் பிரிட்டனிலிருந்தும், இதாலியிலிருந்தும் புறப்பட்டு 24,000 டன்கள் மொத்த எடைமானமுள்ள வெடி குண்டுகளைப் பொழிந்து, எதிரி ஒரு மாதத்தில் உண்டுப்பண்ணக்கூடியதைவிட அதிகமாக 905 எதிரி விமானங்களை அழித்திருக்கின்றன. 8-வது விமானப்படை 17 விமான உற்பத்திசாலைகளை 20 தடவை பலமாகத்தாக்கியிருக்கிறது. 15-வது விமானப்படை 20 தொழிற்சாலைகளை 22 தடவை தாக்கியிருக்கிறது.

வி வி வி வி வி

**இவ்வாரத்திய நடவடிக்கை.** இவ்வாரத்தில் பெர்லின் அடிக்கடி தாக்கப்பட்டது. 3,50,000 எரி வெடிகளும், 10,000 உயர்தர வெடி குண்டுகளும் ரசகுண்டுபாகங்களை உற்பத்திசெய்யும் எர்க்னர் தொழிற்சாலைபேரிலும், பெர்லினர் மாசினேபூ என்னும் மீன்வெடி பாகங்களை உண்டுபண்ணும் தொழிற்சாலை பேரிலும் வீசப்பட்டன. பெர்லினுக்குச்செல்லும் நேசதேச வெடிவிமானங்களை வழிமறிக்கச் செல்லமுடியாதபடி ஹாலந்தின் இரண்டு விமான தளங்களிலிருந்த ஜெர்மன் விமானங்களை 150 மத்தியதரமான வெடி விமானங்கள் நொருக்கின.

வி வி வி வி வி

**கடற்படைப் போர்.** கடல் யுத்தம் நமக்குச் சாதகமாக நடந்துவருகிறது. நேசதேசக் கப்பல்களின் நஷ்டத்துக்கு உபரியான யூ படகுகள் பிப்ரவரி மாதத்தில் அழிக்கப்பட்டன. சரணாகதியடைந்த இதாலிய கடற்படையின் விநியோகத்தைப்பற்றிய கடினமான பிரச்னை எல்லோருக்கும் திருப்தியளிக்கும்முறையில்

தீர்க்கப்பட்டுவிட்டது. தாத்காலிகமாக அந்த கப்பற்படை மத்தியதரைக் கடலில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். 12 பிரிடிஷ் அமெரிக்கக் கப்பல்களும் மற்ற இருபது கப்பல்களும் ருஷ்யாவுக்கு அனுப்பப்படும். இதாலியக் கடற்படையின் மூன்றில் ஒரு பாகத்தையோ அல்லது அதற்கு சமானமான கடற்படையையோ ருஷ்யாவுக்கு தானம் செய்வதென்பது ஒத்தி வைக்கப்பட்டுவிட்டது.

வி வி வி வி வி

**இதாலியப் போர்முனை.** காலக்கோளாரினால் போர் தடைபட்டிருக்கிறது. ஆன்சியோ முன்னேறும் வாசலைப் பார்வையிட்டுத் திரும்பியிருக்கும் இதாலியிலிருக்கும் நேசதேசப்படைகளின் சேனாதிபதியான ஜெனரல் ஸர் ஹாரால்ட் அலெக்ஸாண்டர் நம்பிக்கையுடனிருக்கிறார். மூன்று வாரங்களுக்கு முன்னிருந்ததைவிட இப்பொழுது நிலைமை திருப்திகரமாகயிருக்கிறதென்று அவர் வெளியிடுகிறார். அவர் மேலும் பின்வருமாறு சொல்லுகிறார். "நாம் எப்பொழுது முன்னேறுவோமென்று சொல்லமுடியாது. ஆகிலும் மற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன."

யுத்தத்தில் வெற்றிபெருவதற்கு மனித பலமும், முஸ்தீப்புகளும், நாயகர்களும், ஊக்கமும், விடாமுயற்சியும், நம்பிக்கையும் அவசியமானவை. காசினோ நகரம் பூராவும் அழிக்கப்பட்டுவிட்டதென்று நாம் கேள்விப்படுகிறோம். அந்த நகரத்தில் நான்கில் மூன்று பாகம் நமது வசமாகிவிட்டது.

வி வி வி வி வி

**மகத்தான நடவடிக்கை.** தெற்கு ருஷ்யாவில் மேற்கு யூக்ரேனிலுள்ள மான்ஸ்டீனின் படைகளைச் சுற்றிவளைக்கும் நடவடிக்கை பலப்பட்டுவருகிறது. லூவாவ்-ஒடெஸ்ஸா இருப்புப்பாதையை புரோஸ்குராவிலும், டார்னோபோலிலும் துண்டிப்பதன்மூலம் எதிரியை நீஸ்டர் நதி, பெஸ்ஸாரபியா, கார்பேதியன் மலைகளுக்குப் பின்வாங்கும்படி செய்வது என்று திட்டம் போடப்பட்டிருக்கிறது. இந்த மகத்தான தாக்குதல் டார்னோபோல், புரோஸ்குராவ், வினிட்ஸா, நிகோலேயேவ், கெர்ஸான் என்ற இடங்களை நோக்கி நடைபெறுகிறது. கெர்ஸான் பிடிபட்டுவிட்டது. டார்னோபோலில் தெருச்சண்டை நடைபெறுகிறது.

வி வி வி வி வி

**ஐரோப்பிய விஷயங்கள்.** (1) ருஷ்யா-படோக்ளியோ நிர்வாகத்தை அங்கீகாரம் செய்து தூதர்களை அனுப்புவதாக ஒப்புக்கொண்டது.

(2) துருக்கியுடன் நடந்த பேச்சுகள் முறிவடைந்ததற்கு இதாலி கடற்படை நிர்வாகத்தைப்பற்றிச் செய்யப்பட்ட முடிவுகள்தான் காரணமென்று இப்பொழுது தெளிவாகிவிட்டது. முன்னால் நிறுவியத் திட்டப்படி கருங்கடல் கரையிலுள்ள ருமேனியாவிலும், பல்கேரியாவிலும் படைகளை இறக்குவதற்காக ருஷ்யாவுக்கு இதாலிய கடற்படையின்மூன்றில் ஒரு பாகம் கொடுக்கப்படவேண்டும். கப்பல்கள் போகும் வழியில் துருக்கி ஜலசந்தியைத் தாண்டிச் செல்லவேண்டும்.

துருக்கியுடன் பேச்சுகள் முறிந்துவிட்டதால் டார்டனலீஸ் ஜலசந்தியை உபயோகப் படுத்தக்கூடவில்லை.

இந்த சந்தர்ப்பத்தில் நேசதேசத்தார்கள் இதாலியக் கடற்படையைத் தனியே விட்டுவிட்டு மர்மான்ஸ்க் வழியாக உபயோகப்படுத்துவதற்காக பிரிடிஷ்—அமெரிக்கக் கப்பல்களை ருஷ்யாவுக்குக் கொடுத்துவிட்டார்கள்.

(3) பல்கேரியாவைக் கக்ஷி மாறும்படிச்செய்ய சகலவிதமான பிரயத்னங்களும் செய்யப்படுகின்றன. ருஷ்யத் தாக்குதலும், நேசதேச குண்டுவீச்சும் ஜனங்களின் மன உறுதியைக் கலைத்துவிட்டிருக்கின்றன. ஹிட்லரை பல்கேரிய மக்கள் ஆதரிப்பதற்கு யூகோஸ்லாவியாவிலும், கிரீஸிலும் அவர்களுக்குக் கிடைத்திருக்கும் தேசத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம்தான் காரணமாகும். பல்கேரியாவில் அநேக கக்ஷிகளிருக்கின்றன. மேதாவிகள், நாஸிகளை ஆதரிப்பவர்கள், பொதுவுடமைக் கொள்கையுள்ள நாச வேலைக்காரர்கள். இரண்டு ஓரங்களிலுள்ள இரு கக்ஷிகளுக்குமிடையே ஜெர்மன் சக்தியைப் பாராட்டும். ஆனால் நாஸி தத்துவத்தை வெறுக்கும் ஜனநாயக கோஷ்டியிருக்கிறது. அவர்கள் ருஷ்யர்களை ஆதரிக்கிறார்கள். ஆனால் பொது உடமையை வெறுக்கிறார்கள். பால்கன் சமஷ்டியை அவர்கள் ஆதரிக்கிறார்கள். ஆனால் பல்கேரியாவுக்குக் கிடைத்த நாடுகளை இழக்க அவர்களுக்கு சம்மதமில்லை. இந்தக் கக்ஷிதான் பல்கேரியாவில் மிகவும் சக்தி வாய்ந்தது என்பதனால் சமாதானப் பேச்சுகளைத் துவக்க தாமதம் ஏற்படுகிறது.



(4) ருமேனியாவின் ஸ்டிர்பே இளவரசர் சமாதானப் பேச்சுகளைத் துவக்க புகாரெஸ்டுக்குச் சென்றிருக்கிறார். அவர் நேசதேச அதிகாரிகளுடன் சம்பாஷணைகளைத் துவக்கிவிட்டதாகத் தெரியவருகிறது.

(5) ருஷ்யாவிலுள்ள யூகோஸ்லாவியா அயல் நாட்டு தூதரும், யூகோஸ்லாவியாவின் ராணுவ கோஷ்டியின் தலைவரும், யூகோஸ்லாவிய மன்னர் அரசாக்ஷியுடன் சம்பந்தங்களை ரத்துசெய்துவிட்டார்கள். ஜெனரல் டிடோவுடன் சேர்ந்துகொண்டார்கள்.

(6) நேசதேசத்தார்கள் பிராங்கோவுக்கு இன்னும் சலுகை காட்டிவருகிறார்கள். ஸ்பெயினுக்கு பெட்ரோல் சப்ளையை நிறுத்தி ஒரு மாதமாகிவிட்டபோதிலும், இப்பொழுதும் பெட்ரோல் கொஞ்சம் கொஞ்சமாக ஸ்பெயினுக்கு அனுப்பப்படுகிறதென்று தெரியவருகிறது.

வி வி வி வி வி

**ஹாங்காங்.** வட பர்மாவில் மெயிங்க்வானுக்கும், வாலாபமுக்கும் நடைபெற்ற போரில் நாம் வெற்றிபெற்றுவிட்டோம். 2,000 ஜப்பானியர்கள் கொல்லப்பட்டார்கள். துடைப்பு வேலை நடைபெறுவருகிறது. சைனாவில் அமெரிக்கப்படைகளின் தளகர்த்தரான ஜெனரல் ஸ்டில்வெல் கூடிய சீக்கிரத்தில் ஹாங்காங் பள்ளத்தாக்கு பூராவும் பிடிபட்டுவிடுமென்று சொல்லிவிட்டார்.

"நான் அடிக்கடி தவறாகச் சொல்லியிருப்பினும் ஹாங்காங் பள்ளத்தாக்கு கூடிய சீக்கிரம் பிடிக்கப்பட்டுவிடும் என்று துணிவுகரமாகச் சொல்லுகிறேன்" என்று அவர் சொன்னார். பூதேடாங்கு விழுந்துவிட்டது.

---

# பின்லாந்துக்கு ருஷ்யா விடுத்திருக்கும் தாராளமான சமாதான ஷரத்துக்கள்.

*ஸட்ராடஜிஸ்டு.*

பின்லாந்துக்கு ருஷ்யா விடுத்திருக்கும் சமாதான உடன்படிக்கை ஷரத்துகளை விமர்சனம் செய்யும் லண்டனிலுள்ள வியாக்யானிகள் லண்டன் பத்திரிகைகளில் வெளி வந்திருக்கும் சில அபிப்பிராயங்களைப்பற்றி கவனம் செலுத்தவேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள்.

டைம்ஸ் பத்திரிகையில் ராஜ தந்திர நிருபர் எழுதுகிறார். "ஷரத்துகளின் மிதமான தன்மையை லண்டனிலுள்ளவர்கள் சந்தோஷத்துடன் வரவேற்கிறார்கள். அவைகளை ஒப்புக்கொள்ளவேண்டுமென்று பின்லாந்து ஜனங்கள் முடிவு செய்து விடுவார்களென்று நம்பிக்கையும் உண்டாகியிருக்கிறது. ருஷ்யர்கள் பிரிடிஷ், அமெரிக்க நிர்வாகங்களுக்கு ஷரத்துகளை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அமெரிக்கா பின்லாந்துடன் போர் தொடுக்கவில்லை. ருஷ்யாவுடனும் ராணுவ ஒப்பந்தமும் செய்துகொள்ளவில்லை. 1942-ம் வருஷத்திய பிரிடிஷ்—ருஷ்ய ஒப்பந்தத்தின்படி இருதரப்பாரும் மற்றொருவருடைய சம்மதமன்னியில் யுத்த நிறுத்தத்தையோ அல்லது சமாதானத்தையோ செய்துகொள்ளக்கூடாதென்று ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிபந்தனையை பின்லாந்து சம்பந்தமாக ருஷ்யா காப்பாற்றி வந்திருக்கிறது. இதாலி சம்பந்தப்பட்ட மட்டில் அமெரிக்கர்களும் நாமும் அந்த நிபந்தனையின்படி நிறைவேற்றியிருக்கிறோம்.

பொது உடமை டெயிலி ஒர்க்கர் எழுதுகிறார். "பின்லாந்தின் நிர்வாகிகள் தன்னிச்சையாகவே 1941-ம் வருஷத்திய ருஷ்ய—பின்னிஷ் ஒப்பந்தத்தை ரத்து செய்தார்கள். இது திடீரென்றாவது அல்லது கட்டாயத்தின் பேரிலாவது முடிவு செய்யப்பட்டதில்லை. ருஷ்ய உடன்படிக்கை ஷரத்துகள் தாராளமானவை. பின்லாந்துக்கு ருஷ்யா விடுத்திருக்கும் நிபந்தனைகளின் சிலாக்கியத்தை ருமேனியாவும், ஹங்கேரியாவும், பல்கேரியாவும் அறிய வேண்டும்".

டெயிலி எக்ஸ்பிரஸ் பத்திரிகை எழுதுகிறது. "கிழக்கு ஐரோப்பாவில் ருஷ்யாவின் பத்திரத்தை ஸ்தாபித்துக்கொள்ள அதற்கு உரிமை உண்டென்று பிரிடன் மதித்துவிட்டது. ருஷ்யாவிற்கு தூர வடக்கில் பத்திரம் ஏற்படும்படியாகவும் பின்லாந்து எதிரிக்கு இனிமேல் உதவியளிக்காமலும் இருக்கும்படியாக ஷரத்துகள் ஏற்பட்டால் அவைகள் தாராளமானவைதான். பின்னிஷ் ஜனங்கள் அவைகளை சீக்கிரமாக ஒப்புக்கொள்ளட்டும்".

சென்ற இரண்டரை வருஷ யுத்த நடவடிக்கைகளை ருஜுச் செய்திருப்பதுபோல் 1940-ம் வருஷ ஒப்பந்தம் ருஷ்யாவின் பத்திரத்துக்குப்போதுமான அதமபக்ஷமான க்ஷாத்துகளை நிறுவிற்று என்று லண்டன் வியாக்யானிகள் சொல்லுகிறார்கள். பின்லாந்தின் கிழக்கு எல்லைச் சரகத்தில் ருஷ்யாவுக்குக் காட்டப்பட்ட சலுகைகள் சொற்பமாகயிருந்தபோதிலும் மர்மான்ஸ்கிலிருந்து செல்லும் முக்கியமான இருப்புப்பாதையை பத்திரப்படுத்துவதற்காக நடைபெற்ற நடவடிக்கைகள். இந்த பூப் பிரதேச பரிவர்த்தனையினால் ருஷ்ய ஜெர்மன் போரில் ருஷ்யாவுக்கு நேசதேசத்தார்கள் ஏராளமான தளவாடங்களை அனுப்ப வசதி கிடைத்தது. ருஷ்யாவுக்கு பின்லாந்து வழங்கின காரிலியன் பூசந்தியும், வைபுரி நகரமும் ருஷ்யாவின் இரண்டாவது பெரிய நகரமான லெனின்கிராட்டின் பத்திரத்துக்கு முக்கியமானவை. ஹாங்கோ கடற்தளத்தைக் கடனாகக் கொடுத்ததென்பது குரோன்ஸ்டாட் என்ற ருஷ்ய தளத்துக்குப்போகும் மார்க்கத்தை காப்பாற்றுவதன்மூலம் லெனின்கிராட்டை கடல் மார்க்கமாகக் காப்பாற்றப்படுகிறது. மர்மான்ஸ்க் என்னும் முக்கியமான துறைமுகத்துக்கு சமீபத்திலுள்ள பெட்ஸாமோ பிராந்தியத்தைப்பற்றி பின்பு தீர்த்துக்கொள்ளலாமென்று ருஷ்யா சொல்லிவிட்டது.

பின்லாந்தின் சமாதானப் பேச்சுக்களின் மூலம் ஜெர்மனியில் ஏற்பட்டிருக்கும் அதிர்ச்சிகளைப்பற்றி ந்யூஸ்கிரானிகிளின் ராஜ தந்திர நிருபரான வெர்னன் பார்ட்லட் பின்வருமாறு எழுதுகிறார். பின்லாந்து ஜெர்மன் துருப்புகளை சாத்தியமானாலும் காவற்படுத்திவிடாதென்று மாஸ்கோ அறிந்துவிட்டது என்று ஜெர்மானியர்கள் பிரசாரம் செய்து வருகிறார்கள். இந்தத் துருப்புகளின் சக்தியைக் குலைத்துவிடவேண்டுமென்ற க்ஷாத்து ருஷ்யப் படைகள் பின்லாந்தை ஆக்கிரமிப்பதற்கும் பிறகு அந்நாட்டை அநேக வருடங்கள் வரையில் ஆக்கிரமணம் செய்வதற்கும் செய்யப்பட்ட ஒரு தந்திரம். ஜெர்மனியை எதிர்க்கும் ராணுவ நடவடிக்கைகள் முடிவடைந்தவுடன் பின்லாந்துக்கு அனுப்பப்பட்ட துருப்புகளை ருஷ்யா வாபஸ் செய்துவிடுமென்று அது உத்தரவாதம் செய்யுமென்று சொல்லலாம்.

---

## ருஷ்யாவிலிருந்து சென்று ஸ்விடனுக்கு தூது சென்ற ஸ்திரீ கொலோந்தே.

தூது சென்று ஸ்டாக்ஹோமிலுள்ள ருஷ்ய ஸ்திரீ ஸ்ரீமதி அலெக்ஸாண்ட்ரா கொலோந்தே 73 வயதுடையவளாய் ஸோவியத் மாகாணங்களில் இன்றும் நல்ல அழகுள்ள ஸ்திரீயாய் விளங்குகிறாள் என்று டெயிலி ஹெரால்ட் பத்திரிகை கூறுகிறது. அவள் மிகவும் பெரிய புரட்சிக்காரி. அம்மடந்தையின் தந்தையார் ஸாரின் அரசாங்க ஜெனரல். அவர் இம்மாதினை நன்முறையில் பழக்க முயன்றார். ஆனால் பயனில்லை. புரட்சி இயக்க உணர்ச்சிகளிலும், நோக்குகளினின்றும் இவளை அப்புறப்படுத்தி வைக்க நினைத்தார். பிறகு போலீஸார் இம்மாது ஒரு தொழிற்சாலை அடைப்பிற்கு முயல்வதாய் அறிந்தனர். அதன்பின் இம்மாதினை ருஷ்யாவினின்றும் அப்புறப்படுத்த வேண்டிய முயற்சிகள் செய்யப்பட்டன. அதற்கிடங்கொடாமல் பாரிஸிலும், லண்டனிலும், ஜெனிவாவிலும் உழைக்கும் புரட்சிக்காரர்களுடன் இம்மாது கண்டுபிடிக்கப்பட்டாள். ஐரோப்பாவின் பெரும் பகுதியில் பிரிடன், இதாலி, ஸ்காண்டினேவியா, லோ கண்ட்ரீஸ், பிரான்ஸ், ஜெர்மனி இப்பகுதிகளில் இம்மாது பிரயாணம் செய்திருக்கிறாள்.

ராஜீய விஷயங்களைப் படித்து, பல பாஷையிலும் நல்ல தேர்ச்சிபெற இம்மங்கை விரும்பினாள். லண்டனில் லெனினை சந்தித்தாள். தன் எண்ணங்களும் லெனினின் கருத்துக்களும் பலவாறு ஒன்றுபட்டிருக்கக்கண்டு ராஜீய விவகாரியாக தீர்மானித்துக்கொண்டாள். 1915-ல் பெரும் புரட்சி காரணமான பேச்சாளி என்றும் எழுத்தாளி என்றும் பெயர் பெற்றாள்.

அடுத்த வருஷத்தில் நோவிமிர் என்ற புரட்சி வாரப்பத்திரிகை சம்பந்தமான டிராட்ஸ்கி, புக்காரின் என்ற இவர்களுடன் இருந்தாள். 1917-ல் இப்பத்திரிகையும் அதன் தொழிலாளிகளும் ருஷ்யாவிற்கு திரும்பினர். புரட்சியினை ஒடுக்க கடைசி முறையாய் அக்கால அரசாங்கம் செய்த முயற்சிகளின் பலனாய் இவள் சிறைவாசம் செய்யவேண்டியதாயிற்று.

புரட்சி ஆரம்பித்த 3 நாட்களில் இவள் போல்ஸ்விக் காங்கிரஸின் அங்கத்தினராய் வெளிப்படுத்தப்பட்டாள். குடும்பத்தினை வெறுத்து பெண்களின் சார்பில் உழைக்க ஆரம்பித்தாள். இருப்பினும் இப்புது அரசாங்கத்தை அவள் திருப்தியுடன் ஏற்றுக்கொள்ளவில்லை எனினும் ஸோவியத் அரசாங்கத்தில் விஸுவாசமாய் நடந்தாள்.



நல்ல நகைகளுடனும், ஒளிவீசும் வைரக்கற்களுடனும் அரசாங்க காரியங்கள் நடக்கும் இடங்களில் தோன்ற இவளுக்கு பெரிமித ஆசையுண்டு. கல்யாணமாகி மனைவியாய் வாழ இரு முறை முயன்றாள். முதலில் ஒரு ருஷ்யனையும் பிறகு ஒரு பால்டிக் கடலிலுள்ள ஒரு கப்பல் ஓட்டியையும் கணவனாக ஏற்றுக்கொள்ள விரும்பினாள். 1923-ல் நார்வேக்கு ருஷ்ய தேச சார்பில் தூது சென்றாள். 1930-ல் அங்கேயே தங்கும்படியாய் ஏற்பாடாயிற்று.

---

## ஜெர்மன் கடற்படையில் ஒழுங்குமுறை குறைந்து வருகிறது.

(*A. J.* மாக்வின்னி.)

பிரென்சு ரிவீரா கடற்கரைக்கருகில் ஜெர்மனியின் இரண்டு யுத்த தளவாடக் கப்பல்களை மூழ்கடித்த பிரிடிஷ் நீர்மூழ்கி தலைவரான லெப்டினண்ட் R. பாயிட், D. S. O., அவர் முதல் மீன்வெடியைப் போட்டவுடன் துணைக்காவல் புரிந்த இரண்டு ஜெர்மன் யுத்தக் கப்பல்களும் பீதியடைந்து கண்மூடித்தனமாக பீரங்கி பிரயோகம் செய்தனவென்று ருஜுக்களை சமர்ப்பித்தார். பிரிடிஷ் நாசகாரி தண்ணீருக்குள் மூழ்கிச் சென்றது. ஆகிலும் ஜெர்மன் துணைக்காவல் கப்பல்கள் குழப்பமடைந்து தங்களுடைய பீரங்கிகளை உபயோகித்தன.

பிரிடிஷ் யுத்தக்கப்பல்கள் பீரங்கி பிரயோகம் செய்யும்பொழுது அவைகள் ரணத்தைச் சேதிக்கும் டாக்டர், விஞ்ஞானிகளின் அமைதியுடன் வேலை செய்துவரும். ஆரவாரம் கிடையாது. குழப்பமான நிலைமை கிடையாது. லக்ஷியத்துடனும் ஒழுக்க முறையுடனும் நடவடிக்கைகளைத் துவக்கும். இரண்டு ஜெர்மன் தளவாடக் கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டவுடன் ஜெர்மன் துணைக்காவல் கப்பல்கள் சமத்வமல்லாத போரிலிருந்து விலகிக்கொண்டு கடற்கரைக்குச் சென்று பின்புறத்தைத் திருப்பிக்கொண்டு மாரிகாலக் காற்றின் பொழுது கால்நடைகள் நிற்பதுபோல நின்றுகொண்டன என்று லெப்டினண்ட் பாயிட் சொன்னார். ஜெர்மன் மன உறுதியை வெளிப்படுத்தும் இந்த விருத்தாந்தம் கவனார்கமுள்ளது. ஏனென்றால் பிஸ்கே விரிகுடாவில் இரண்டு பிரிடிஷ் நாசகாரிகளைக் கண்டு 11 ஜெர்மன் நாசகாரிகள் ஓடினபின் தொடர்ச்சியாக இந்த சம்பவம் நடைபெற்றது.

ஹிட்லரின் கடற்படை தளகர்த்தரான டோனிட்ஸ் அவனுக்குள்ள மற்ற கவலைகளுடன் அவனிடமுள்ள குறைவுபட்டுவரும் கடற்படையின் மன உறுதியையும் சக்தியையும் பரிபாலித்து வரவேண்டும். ஜெர்மனியின் விசித்திரமான நடவடிக்கைகளுக்கு இரண்டு காரணங்களைச் சொல்லலாம். மாலுமிகளாக அனுப்பப்படுகிறவர்களுக்குக் குறைவான பயிற்சியும் அனுபவமும்தான் ஏற்பட்டிருக்கிறது. அல்லது ஜெர்மனியின் நீர்மூழ்கிகளைத் தாக்கும் ஆயுதங்களை உபயோகிக்கும் மனிதர்கள் சக்தி பெற்றிருக்கிறார்கள்.

### இழுப்புப் படைகள் பலமாகச் சண்டை போடுகின்றன.

ரிவீரா கடற்கரைப் போரில் ஈடுபட்ட ஜெர்மன் துணைக்காவல் படையில் சிறிய ரக யுத்தக்கப்பல்கள்தான் சென்றன என்று சொல்லுவது அபத்தமான ஜவாப்பு. பிரிடிஷ் இழுப்புப் படகுகளும், நீர்மூழ்கிகளை அழிக்கும் கப்பல்களும் சிறியவைகள்தான். ஆகிலும் அவைகள் பூ படகுகளை அநேகம் தடவைகளில் சாதுர்யத்துடனும் சாஸ்திர முறைப்படிக்கும் அமைதியுடனும் அழித்திருக்கின்றன.

உதாரணமாக, இம்பீரியலிஸ்ட் என்று ஒரு சிறிய இழுப்புக் கப்பல் பிஸ்கே விரிகுடாவிற்கு வெளியே கப்பல்களைத் தாக்கிற்று. 1939-ம் வருஷம் வரையில் அது ஹல்லிலிருந்து புறப்படும் மீன் படகாகயிருந்தது. அது முதல்முதலில் யுத்தத்தில் ஈடுபட்டபொழுது அட்லாண்டிக்கில் சென்ற துணைக்காவல் கப்பல் கூட்டத்தைத் தாக்கின. காண்டார் விமானத்தை அது சுட்டு வீழ்த்தியது. சில நாட்களுக்குப் பின் முற்றுகையைத் தாண்டிச் சென்ற அதைவிட மிகப் பெரிய கப்பல் ஒன்றை அது கைவசப்படுத்திற்று. பிஸ்கே விரிகுடாவில் அட்லாண்டிக் கடலில் அதன் சிறந்த நடவடிக்கை நடைபெற்றது. அதன் குறுகலான பாலத்தின் சப்தவேதி அமைப்புப் பெற்ற நீர்மூழ்கி வேலைக்காரர்கள் தண்ணீருக்குள் பூ படகு செல்லுவதை செவியுற்றார்கள். உடனே குண்டுகளை வர்ஷித்து அந்த நீர்மூழ்கியை சமுத்திர மட்டத்துக்குக் கொண்டுவந்தார்கள்.

### யூ படகுகள் அழிக்கப்பட்டன.

இம்பீரியலிஸ்டு என்னும் இழுப்புப் படகு அதன் நான்கு அங்குல வாயுள்ள பீரங்கிகளை பிரயோகம் செய்து யூ படகிலிருந்த பீரங்கியை நொருக்கிவிட்டன. அநேக குண்டுகள் யூ படகின்பேரில் போடப்பட்டன. யூ படகு மறுபடியும் மூழ்கிற்று. இம்பீரியலிஸ்டு மறுபடியும் குண்டுகளைப் பொழிந்தது. இழுப்புப் படகு நிச்சயமாக யூ படகை பலமாக காயப்படுத்தியிருக்கிறது.

அன்றிரவு ஒரு பிரிடிஷ் நாசகாரி சமுத்திர மட்டத்தில் சென்றுகொண்டிருந்த நீர்மூழ்கியை மூழ்கடித்து அதன் வேலையாட்களை கைதுசெய்தது.

பிரிடிஷ் கடற்படை வட்டாரங்கள் ஜெர்மானியரின் பீதியையும், மன உறுதிக் குறைவையும் வெளிப்படுத்தும் ஒரு சில சம்பவங்களைக் கண்டு பொதுப்படையாக ஜெர்மன் மன உறுதி குலைந்துவிட்டதென்று சொல்லுவதில்லை. இரண்டு ஜெர்மன் கப்பல்களைப்போல் நீர்மூழ்கியோடு செய்த போரில் எந்த பிரிடிஷ் யுத்தக் கப்பலின் மாலுமியாவது குழப்பமான நிலைமையுடன் நடந்துகொண்டிருந்தால் உடன்காலத்தில் லண்டனில் விசாரணைக் கமிட்டி நியமிக்கப்படும். யுத்தத்தின் நெருக்கடியான இந்த சமத்தில் மற்ற ஜெர்மன் கடற்படை உத்தியோகஸ்தர்களுக்கு அறிவு ஏற்படும்படியாக மாலுமிகளின் யோக்யதைக் குறைவை வெளிப்படுத்தும்படியான நடவடிக்கைகளை ஜெர்மனி துணிவுகரமாக மேற்கொள்ளுமென்று சொல்ல முடியாது.

இரண்டு பிரிடிஷ் கப்பல்களைக் கண்டு பிஸ்கே விரிகுடாவிலிருந்த 11 நாசகாரிகள் ஓடிவிட்டபின் கோயபல்ஸ் வெளிக்காட்டிவரும் நடவடிக்கையிலும் இந்த பீதி பிரதிபலித்துவிட்டது. இந்த நிகழ்ச்சியை ஜெர்மனியின் மகத்தான வெற்றியென்று சொல்லவேண்டுமென்று கோயபல்ஸ் முடிவு செய்தான். உண்மைகளுக்கும், அனுமானத்துக்கும் விரோதமாக ஒரு கடல் போரில் அநேக பிரிடிஷ் நாசகாரிகள் மூழ்கடிக்கப்பட்டனவென்று கோயபல்ஸ் சொன்னான். ஒரு பிரிடிஷ் நாசகாரிகூட மூழ்கவில்லை என்று பிரிடன் ருஜுச் செய்துவிட்டது.

---

## இரண்டாம் போர்முனையில் விமானப்படையின் உதவி.

---

ஸர் ஆர்க்கிபால்ட் சின்கிளேர் ஆற்றிய சொற்பொழிவில் தாக்குதல் முறைதான் விமானப் படையின் முக்கிய லக்ஷியமாகக் காணப்பட்டது. இதற்குத் தகுந்த நியாயமிருக்கிறதென்று எதிரி ஒப்புக்கொள்ளவேண்டுமென்று டெயிலி டெலகிராப் பத்திரிக்கையில் எழுதப்பட்டிருக்கிறது.

அநேக காலமாக பிரிடிஷ் விமானப் படை ஐரோப்பாவில் முன்னேறித் தாக்கியிருக்கிறது. சமீப காலத்தில் அமெரிக்க விமானப் படையுடன் ஒன்றுபட்டு ஜெர்மனியை பகலும் இரவும் இடைவிடாது தாக்கி ஜெர்மன் விமானப் படைக்கும் ஜெர்மன் அமைப்புக்கும் நாசம் விளைவிக்கக்கூடியவகையில் வெடி குண்டுகளைப் போட்டிருக்கின்றன. பிப்ரவரி—மார்ச்சு மாதத்தில் இந்த யுத்தத்தில் முடிவான கட்டம் ஏற்பட்டது என்று தோன்றக்கூடும்.

இந்தக் கால அளவில் ஜெர்மனிக்கு பலமான நஷ்டம் ஏற்பட்டபோதிலும் நேசதேச விமானத் தாக்குதலின் வலிமை உச்ச நிலைமையை அடையவில்லை. ஒன்றுபட்ட தாக்குதலில் இன்னும் ஏராளமான விமானங்கள் ஈடுபடவேண்டும்.

சென்ற வருஷம் பிரகாசமாகயிருந்ததென்று நேசதேசத்தார்கள் கருதுகிறார்கள். சென்ற வருஷத்தில் விமானப் படையின் வலிமைதான் பூர்ணமாக விருத்தியடைந்திருக்கிறது. மகத்தான ஆயத்தங்கள் வெற்றிகரமாகச் செய்து முடிக்கப்பட்டன. பலவகை ரகங்களைக் கண்டுபிடிப்பதில் நமது திறமை வெளிப்பட்டிருக்கிறது.

பருந்து பாய்ச்சல் விமானங்களைக் கட்டவேண்டுமென்று பிரேரேபணை செய்தபொழுது பருந்து பாய்ச்சல் விமானத்தைவிட வெற்றிகரமாக சண்டை வெடி விமானம் தாழப் பறந்து தாக்கக்கூடுமென்றும் ஜெர்மானியர்கள் இதையறிந்து சண்டை வெடி விமான உற்பத்தியை அதிகரிக்க முயன்று வருகிறார்களென்றும் காப்டன் பால்பூர் சொன்னார். ஆரம்பம் முதற்கொண்டு திட்டமும் உற்பத்தி முறையும் சிறந்த முறையில் நிறுவப்பட்டன.



ஆகிலும் அவைகளை இன்னும் உற்பத்தி செய்யவேண்டும். இந்த வேலையும் நடைபெற்று வருகிறது. நம்முடைய தளவாடங்களை அபிவிருத்தி செய்வதில் அமெரிக்க பிரிடிஷ் விஞ்ஞான சாஸ்திரிகள் பூர்ணமாக ஒத்துழைக்கும்பொழுது நாஸிகளின் கொடுமையினால் ஜெர்மன் விஞ்ஞான சாஸ்திரிகளின் கோஷ்டி கலைக்கப்பட்டு பலஹீனமடைந்துவிட்டது.

வடக்கு ஆபிரிக்காவிலும், இதாலியிலும் விமானப் படையின் உபயோகத்தைப்பற்றி பிரிடிஷாரும், அமெரிக்கர்களும் கொண்ட அபிப்பிராயம் பரீக்ஷை செய்யப்பட்டு சிலாக்கியமானதென்று முடிவு செய்யப்பட்டது.

ஒன்றுபட்ட நடவடிக்கையென்பது சேனைத் தலைவர்கள் விமானப் படையை உபயோகித்து வருவதென்பது இல்லை. விமானப் படையை ஒன்றுபடுத்தி லக்ஷியத்தைத் தாக்குவது எனபதுதான் புதிய முறை. விமானப் படையும், கடற்படையும் ஒத்துழைத்தன. இதாலியப் போரில் விமானப் படையின் உபயோகம் அதிகரித்துவிட்டது. சிறந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய போக்குவரத்துப் படை ஸ்தாபிக்கப்படப்போவதினால் வருங்காலத்தில் மகத்தான அலுவல்களை மேற்கொள்ள அவைகள் உபயோகமுள்ளதாகயிருக்கும்.

சென்ற வருஷத்தில் விமானப் படையும் கடற்படையும் ஒத்துழைத்து சிறந்த வெற்றிகளைப் பெற்றன. யூ படகுகளை பலமாகத்தாக்கி அழித்த கடற்படை உத்தியோகஸ்தர்களும் துணைக் காவல் கப்பல்களுக்கு உதவி செய்த விமானிகளுக்கு தங்களுடைய கடமையைச் செலுத்துகிறார்கள். இதே நடவடிக்கையை மேற்கொண்டு, மேற்கு ஐரோப்பாவில் தரை மார்க்கமான போக்கு வரத்தைக் குறைக்கவும், வடக்கு நார்வேயிலிருந்து ஜெர்மன் துறை முகங்களுக்கு இரும்பு உலோகத்தைக் கொண்டுவரவும் முயன்ற ஜெர்மன் கப்பல்கள், கடல் விமானப் படையின் தாக்குதலுக்குட்படவேண்டியதாயிற்று. அநேகம் கப்பல்கள் சமாளித்துச் செல்ல முடியவில்லை. இந்த இரண்டு படைகளும் ஒத்துழைத்து சாதித்துக்கொண்ட வெற்றிகள் மூலம் வெளிவந்திருக்கும் சாமர்த்தியம் மத்தியதரைக் கடலில் மேற்கொள்ளப்பட்ட மூவகைப்பட்ட நடவடிக்கைகளையும் மகத்தான முறையில் தாக்குல் ஆரம்பிக்கப்படும்பொழுது உபயோகமுள்ளதாகயிருக்குமென்பதைக் குறிப்பிடுகிறது. படையெடுப்பில் விமானப் படையின் பங்கு எவ்வளவுயென்று விவரிக்கும்பொழுது ஸர் ஆர்க்கிபால்ட் சின்கிளேர் பின்வருமாறு சொன்னார். "விமானப் படை மார்ஷல் கோனிங்ஹாமிடமுள்ள இரண்டாவது பிரிடிஷ் விமானப் படையும் ஜெனரல் பிரெடனிடமுள்ள அமெரிக்க விமானப் படையும் ஐரோப்பிய நடவடிக்கைகளுக்கு ஒத்தாசை செய்துவரும்பொழுது விமானப் படை மார்ஷல் ஹல்லிடமுள்ள விமானப் படை பிரிடிஷ் தீவுகளைப் பகலிலும் இரவிலும் காபந்து செய்துவரும்.

"லண்டனை ஜெர்மன் விமானங்கள் மறுபடியும் தீர்க்கிவருவதற்கு பெர்லினைத் தாக்கியதற்கு பதில் நடவடிக்கையென்றும், நம்முடைய படையெடுப்புத் திட்டங்களைக் குலைக்க இவைகள் நடைபெறுகின்றனவென்றும் ஜெர்மனி சொல்லி வந்தாலும், இந்தத் தாக்குதல் தொடர்ச்சியாக நடைபெறுமென்று நாம் எதிர் பார்க்கவேண்டும். தாக்குதல்கள் கடுமையாகவுமிருக்கும். அவைகளிலிருந்து ஏற்படும் கஷ்ட நஷ்டங்களை ஒருவரும் குறைத்துக்கூற முடியாது. எதிர்காலநிலைமை எவ்விதமிருக்குமென்று நாம் யோசித்துப் பார்த்தால் எதிரியின் விமான நஷ்டம் மிகுதியாகயிருக்கும். ஜெர்மனிக்குள் வெகு தூரம் சென்று பலமாகத் தாக்கிவரும் நமது சொற்பமான விமானங்களுக்குக் குறைவான நஷ்டம் ஏற்படும். ஆகிலும் ஆகாயப் போரிலும், தரைப் போரிலும் முன் சென்று தாக்குவதுதான் சிறந்த தற்காப்பு முறையாகும்."

---

## அட்லாண்டிக்கிலுள்ள பல வழிகளை கடற்கரை படைகள் மூடுகின்றன.

### வெற்றி பெறத்தகும் கௌரவத்துடன் பலப்படும் படை.

(விங் கமாண்டர் L. V பிரேஸர்.)

ராயல் விமானப் படையும், அமெரிக்க விமானப் படையின், பறக்கும் கோட்டைகளும் லிபரேடர் விமானங்களும், பகல் இரவு என்று பாராமல் ஜெர்மனியையும், ஜெர்மனி ஆக்கிரமித்த பிரான்ஸையும் தாக்குதல்செய்யும்போது ராயல் விமானப்படையைச் சேர்ந்த கடற்கரைப்படைதான் வேலையையும் செய்துவந்தது. ஸர் ஆர்ச்சிபால்ட் சிங்ளேயர் என்ற விமானம்

சம்பந்தப்பட்ட காரியதரிசி, ஸப்மரீன்களை எதிர்த்துப் போரிடுதல் மிகவும் முக்கியம் என்று கூறுகிறார். எதிரி பெரிதும் ஆச்சரியம் அடையவேண்டும். அப்படியே செய்யப்பட்டுமிருக்கிறான்.

ஜனவரி மாதத்தில் எதிரியின் யூ படகுகள் மூழ்கடித்த கப்பல்களின் எண்ணிக்கை குறைவு என்று கூறப்பட்டதன்னியில், நமது கடற்கரைப் படை, 10,00,00,000 மைல்கள் பறந்துசென்று இருக்கின்றனவென்பது மிகவும் முக்கிய விஷயம்.

இந்த மொத்தமான 1,00,000 மைல்கள் யுத்தம் ஆரம்பித்தது முதல் சாராசரி மாதத்திற்கு 2,000 மைல்கள் கணக்கில் உளது. 1940-ல் 1,000-க்கு குறைந்த அளவுதான் மாதத்திற்கு பறக்க முடிந்தது. இவைகள் சில மைல்கள் பறக்கும் விமானங்களால் பறக்கப்பட்டன.

1941, 1942-ல் மாதம் 2,000 தளவாடங்கள் பறக்க முடிந்தது. 1943-ல் 3,000 தடவைகள். அதாவது ஒவ்வொரு நாளும் 100 விமானங்கள் யூ படகுகளைத் தேடிக்கொண்டு பறந்து எதிரிகளின் சம்பந்தப்பட்ட விஷயங்களை வேவு பார்த்தும் படங்களைப்பிடித்தும் திரும்பின.

ஜெர்மனியின் யூ படகுகளை அழிக்கப்பாடுபட்ட நேசதேச தளங்களோடும், விமானங்களோடும் இந்தக் கடல் விமானங்கள் மிகவும் உழைத்திருக்கின்றன.

முதல் பத்து லக்ஷம் மைல்கள்வரை கிரேட் பிரிடனிலிருந்தும், ஐஸ்லாந்திலிருந்தும் பறந்து சென்ற முயற்சிகளில் அமெரிக்க கடற்கரை விமானங்களும், லிபரேட்டர்களும், கட்கிலினுஸ்களும், வெஞ்சுராஸ் விமானங்களும் பெரிதும் உழைத்திருக்கின்றனவென்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கடற்கரை விமானப் படையில் தளவாடங்களும், வேகமான விமானங்களும் மேலுக்கு மேல் சேர்க்கப்பட்டுள்ளன என்பதற்கு, முதல் 50 லக்ஷம் மைல்கள் பறந்ததற்கு 2 வருஷங்களும், 10 மாதங்களும், ஆகியிருக்க, பின் 50 லக்ஷம் மைல்கள் பறக்க 18 மாதங்களேயாயினவென்பது அத்தாட்சியாகும்.

சென்ற 18 மாதங்களில் கடற்கரை விமானப் படை மிகவும் பலமுள்ள படையாய்ச் செய்யப்பட்டு, இப்பொழுது இடைவிடாமல் எதிர்த்தவைகளை நார்வே, ஹாலந்து பிரான்ஸ் இவைகளின் கடற்கரையிலுள்ள யூ படகுகளை ஆர்டிக் முதல் ஈக்வேடர் வரையிலும் வேட்டையாடியுள்ளன.

கடற்கரை விமானப் படையிலுள்ள் தற்கால ஹாலிபாக்ஸ், பறக்கும் கோட்டைகள், லிபரேட்டர்கள், சண்டர்லாண்ட் விமானங்கள், காடாலைன்ஸ், போ சண்டை போடும் விமானங்கள், பெல்லாமன்ஸ், ஹட்சவை, உதவி செய்யப்படும் விமானங்களான மஸ்கிடோ, ஸ்பிட்பயர்ஸ், அல்பகோர்கள் இவைகளைக்கொண்டு அட்லாண்டிக்கிலுள்ள பல வழிகளை அடைத்தலான பெரும் பிரச்னையை இப்பொழுதுதான் இந்தக் கடற்கரை விமானப்படை தீர்த்திருக்கிறது. பிரிடனிலிருந்து நடவடிக்கைகளை நடத்தும் தளத்திலுள்ள விமானங்களுடன் ஐஸ்லாந்தில் லிபரேட்டர்களும் நியூஸிலாந்திலுள்ள R. C. A. F. கிழக்கு விமானப்படை இவை சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இதற்குள்ளாக, அஸோர்ஸ் விமானங்கள் பறக்கும் கோட்டைகளுக்கு உதவியாய் கடற்கரை விமானப் படைகளுக்கு எதிரி ஸப்மரீன்களை அழிக்க உதவுகிறது.

---

## விமான ஆதிக்கம் உயிர்களைக் காப்பாற்றுகிறது.

லெப்டினன்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக்.

பிரிடனிலும் இதாலியிலுமுள்ள தளங்களிலிருந்து ஜெர்மனியை இரு பக்கங்களிலிருந்து கோரமாகத் தாக்கும் விமான நடவடிக்கை சென்ற சில தினங்களில் முக்கியமான யுத்தச் செய்திகள். இதைப்போல் இதுவரையில் நடைபெற்றதில்லை. ஆகிலும் இனிமேல் இதைவிட அதிகமாக நடைபெறும் மாறுதல்களை மனிதர்கள் சாவதானமாகத்தான் ஏற்றுக்கொள்ளுவார்கள். ஆகிலும் நான் சந்திக்கும் யுத்த மாணவன் ஜெர்மனியையும் ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பா பேரிலும் செய்துவரும் விமான நடவடிக்கையைப்பற்றி சரியான அபிப்ராயம் கொண்டிருக்கவில்லையென்று எனக்கு விந்தையாகயிருக்கிறது.



ஆன்சியோ முன்னேறும் வாசலில் எதிரியின் பதில் தாக்குதலைத் துறத்தியடித்ததும், நீபர் நதியின் மத்திய பாகத்தில் 10 ஜெர்மன் டிவிஷன் துருப்புகளைக் கைது செய்ததும், பர்மாவில் ஜப்பானியர்களை தரைப்போரில் முதல் முதலாக பிரிடிஷார்கள் தோற்கடித்ததும் ஸ்வாரஸ்யமான விளைவுகளை உண்டாக்கிற்று. ஆகிலும் விமானப்படையின் வலிமையை சரியாக ஒருவரும் மதிக்கவில்லை. சிலர் இந்தப் பொருள் நஷ்டமும் உயிர்ச்சேதமும் அவசியமில்லை என்று குறை கூறுகிறார்கள். ஆகிலும் விமான நடவடிக்கை உயிர்களை அழிப்பதைவிட காப்பாற்றுவதுதான் அதிகம். ஜெர்மனியின் தொழிற்சாலைகளை நாசம் செய்ததிலிருந்து ஐரோப்பாவில் தரைமூலமாகவும் கடல் மூலமாகவும் படைகள் இறங்கித் தாக்கும்பொழுது அநேக உயிர்கள் காப்பாற்றப்படும். வட ஆபிரிக்காவில் கிடைத்த வெற்றியில் நமக்கு ஏற்பட்ட நஷ்டத்தையும், சென்ற யுத்தத்தில் பிரான்ஸில் நடைபெற்ற போரில் ஏற்பட்ட நஷ்டக் கணக்கையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இது நன்கு விளங்கும். நமது விமான ஆதிக்க சக்தினால்தான் நமது படைகள் ஆபிரிக்காவில் பத்திரமாக இறங்கி எல் அலாமீனிலிருந்து ஆல்ஜியர்ஸ் வரையில் முன்னேறி 2½ லக்ஷம் துருப்புகள் கொண்ட வான் ஆர்னீமுடைய சேனையை நமக்கு 40,000 துருப்புகளின் நஷ்டத்துடன் அழிக்கமுடிந்தது. பான்சண்டையில் மட்டும் 2½ லக்ஷம் ஜனங்கள் உயிர் துறந்தார்கள் என்றதை யோசித்துப் பாருங்கள்.

ஜெர்மனிபேரில் நடைபெரும் விமானத்தாக்குதல் சிறந்த விமான ஆதிக்கத்தின் நடவடிக்கையாகும். சென்ற சில நாட்களில் பகலிலும், இரவிலும் ஜெர்மனி 10 தடவை பலமாகத் தாக்கப்பட்டிருக்கிறது. 15,000 டன்கள் எடைமானமுள்ள வெடிகுண்டுகள் வீசப்பட்டன. அநேகர்களுக்கு உயிர்ச் சேதமேற்பட்டிருக்கிறது. தாக்குதலின் விளைவுகளை இவ்விதமாக மதித்துப் பார்க்கக்கூடாது. உபயோகமற்ற காரியங்களில் உயிரை மாய்த்துக்கொள்ளுவது பிரயோஜனமற்றது. ஒரு லக்ஷியத்தை அடைவதற்காகச் செய்யப்படும் தியாகம் யுத்த அவசியத்தை முன்னிட்டது.

பிரிடிஷ் அமெரிக்க நேசதேச விமானிகள் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் பிரயோஜனமற்றதாக இல்லை. ருஷ்யப் போர்முனையில் சிறந்த தரை வெற்றிகளும் அட்லாண்டிக் கடலில் யூ படகுகளை அழிக்கும் யுத்தத்தைப்போல விமானத் தாக்குதலும் ஒவ்வொரு அம்சத்திலும் யுத்தத்தின் வெற்றிக்கு சாதகம் அளிக்கும். கருங்கடலிலிருந்து பின்லாந்து வளைகுடாவரையில் நடைபெறும் ருஷ்ய முன்னேறித் தாக்கும் போருக்கு பிரிடனிலிருந்தும் இதாலியிலிருந்தும் செல்லும் விமானங்களின் தாக்குதலும் உப பலமாகயிருக்கும். நவீன யுத்தத்தில் தரைப்போரும் கடல்போரும் விமானப்படை உதவியன்னியில் வெற்றிகரமாக நடைபெறமுடியாது.

விமானப்படை மட்டும் யுத்தத்தில் வெற்றியளிக்கக் கூடுமாவென்று நாளடைவில்தான் வெளியாகும். இதற்கு ஜெர்மனியின் அழிவு பதிலுரைக்கும்.

---

## விமானி இல்லாத விமானிகள் பிரிடிஷ் விமான நிபுணர்களுக்கும் புதிதல்ல.

எதிரி, விமானியில்லாத விமானங்களை இனிமேல் பிரிடன்மேல் செய்யும் தாக்குதல்களில் பிரயோஜனப்படுத்துவான் என்ற பிரதம மந்திரி காமன்ஸ் சபையில் கூறியபொழுது அங்குள்ளோர் அனைவருக்கும் ஆச்சரிய மேற்பட்டு இது யுத்தத்திலே புதுமுறை எனக் கருதினார்கள். இருப்பினும் விஷயம் அப்படி அல்ல என்று மாஞ்செஸ்டர் கார்டியன் பத்திரிகையில் விமான நிருபர் கூறுகிறார். ஜெர்மானியர் இம்மாதிரி விமானங்கள் உற்பத்தி செய்கிறார்கள் என்றால், ஒருவித ஒலிமுறையில் சுற்றி விமானங்களை, விமானிகளின்றி சென்ற யுத்த இறுதியில் பிரிடிஷ் விஞ்ஞானிகள் உபயோகப்படுத்திய அதேமுறையைத்தான் எதிரிகள் கையாளப்போகிறார்கள். அவர்களின் கொள்கையானது விமானங்களில் குண்டுகள் ஏற்றி இயந்திர முறையில் குறிப்பிட்ட இடங்களுக்கு அனுப்புவதாகும்.

1917, 1918 இவ்விரு வருஷங்களிலும் பலவித விமானங்கள் கட்டி வெற்றியுடன் பறக்கவிட்டும் இருக்கிறார்கள். இம்முறையில் விமான தொழிற்சாலையில் வேலைசெய்து வந்த காப்டன் ஸர் ஜெப்ரி ஹவில்லாண்டு என்பவர் முக்கியபாகம் எடுத்துக்கொண்டார். 20 அடிகள் நீளமுள்ள இறக்கையைக்கட்டி கனமான விமானத்தை பறக்கவிட்டு 40 குதிரைவேகம் A. B. C. இஞ்சினை இதற்காக அமைத்து இயந்திரத்தால் விமானத்தை அனுப்பியதாகும்.

முழுவிஷயமும் மிகவும் ரகஸியமாய் கையாளப்பட்டது. அவ்விமானம் பயிற்சிக்காக விடப்பட்டபொழுது, அது வேவு பார்ப்போர்கள் பாராக்கள் அமைக்கப்பட்ட விமான நிலயத்தின்மேல் பறந்தது. பரீக்ஷார்த்த ஸ்டேஷன் காணுதவாறு ஸெக்ஸ் ஆகும். இம்மாதிரி யாகரகஸிய விமானியில்லாத விமானம் பறக்கும்முறை 26 வருஷங்களுக்குமுன்கையாளப்பட்டு சென்ற யுத்தத்தின் பின் பகுதியின் வெற்றிகரமாய் உபயோகப்படுத்தப்பட்டு, 1936-ல் எர்ஸ்பிடாகுவின் வாங் U. என்ற 350 குதிரை வேகமுள்ள இரட்டை விமானமொன்று, விமான எதிர்ப்பு பீரங்கிப் பயிற்சிக்காக உபயோகப்படுத்தப்பட்டதுடன் இப்பழக்கம் நிறுத்தப் பட்டது.

எதிரியின் புதுமாதிரியாகக் கருதப்பட்ட முறையான Mr. சர்ச்சில் கூறுகிறார். இதனை நாம் லெகுவாய் வெல்லமுடியும். ஏனெனில் சென்ற யுத்தத்தில் பிரிடிஷ் மக்களுக்கு விமானியில்லாத விமானத்தின் பழக்கமுடையது. ஆதலின் அதில் நல்ல திறனும் வேண்டிய அறிவும் உடையோராயிருத்தலால் அத்தாக்குதல்களை சுலபமாய்கண்டுபிடித்துவிடலாம்.

---

## சில ஜவாப்புகள்.

லெனின்கிராட் போர்முனை நெருங்கிவிட்டது. ஜெர்மன் பொதுமக்கள் ஊக்கத்தை இழந்து விடாமல் செய்யப்படவேண்டியதற்காக சில ஸ்வாரஸ்யமான பிரசாரங்கள் செய்யப் படவேண்டும். ஜனவரி மாதம் 25-ம் தேதியன்று பெர்லின் ஒலிபரப்பில் D. N. B-யின் ராணுவ வியாக்யானியான மார்டின் ஹாலன் ஸ்லேபன் சொல்லிய சில விஷயங்கள் குறிப் பிடத்தக்கவை. ஜெர்மானியர்கள் ஒலி பெருக்கும் கருவிக்கு சமீபத்தில் உட்கார்ந்து ஆறு தலையும், அறிவிப்பையும் கேட்கவிரும்பும்பொழுது அவன் காதில் பின்கண்ட செய்திகள் விழுகின்றன.

"கிழக்குப்போர் முனையில் வடக்குப் பகுதியில் ருஷ்யரின் மகத்தான தாக்குதல் காணப்படுகிறது. ருஷ்யர்கள் ஏராளமான படைகளையும் தளவாடங்களையும் குவித்துக் கொண்டு ஊடுருவிச்செல்ல முயன்றுவருகிறார்கள். எதிரியின் பலமான தாக்குதலை சமாளிக்க ஜெர்மானியர்கள் அசைந்து கொடுக்கும். யுத்த தந்திரத்தைக் கையாண்டு வருகிறார்கள். போர் புரியும் அவசியம் ஏற்பட்டால் நாம் போரை நடத்துவதில்லை".

அவ்வளவு திருப்திகரமாக யில்லை.

ஹாலன்ஸ் லேபன் மேலும் சொல்லுகிறார். "இல்மன் ஏறிக்கும் லெனின் கிராட்டுக்கும் மத்தியில் நடைபெறும் போரில் சென்ற சில மாதங்களில் மற்ற போர் முனைகளில் ஏற்பட்ட அனுபவத்திற்கு மேலான அனுபவத்தைக் கொடுக்கக்கூடிய எந்த அம்சமும் காணக்கூட வில்லை.

ஆமாம். இதுவும் பழங்கதைதான்.

பிறகு ஹாலன் ஸ்லேபன் சொல்லுகிறான். "இந்த யுத்தத்தில் இதுவரையிலில்லாத வண்ணம் பீரங்கிகளை எதிரி குவித்து வருகிறாரென்பதிலிருந்து ருஷ்யர்கள் ஜெர்மன் தற்காப்பு முறையின் வலிமையையும் குணத்தையும் அறிந்து விட்டார்களென்று தோன்றுகிறது. இவ்விதமாக நடுத்தரமானதும் கனமானதுமான பீரங்கிகளை உபயோகித்ததினால்தான் ஜெர்மன்படை வரிசைக்கோடுகள் வளைவாக அமைக்கப்பட்டன.

இந்த வளைவுகள் கெடுதலாகத் தோன்றுகின்றன. வெற்றி முரசுள்ளவர்கள்போல் அவன் பின்வருமாறு கூறிமுடித்தான். "விஷயங்களை கவனிக்கும்பொழுது யுத்த நிலைமையைக் கண்டு கொண்டு ஜெர்மானியர்கள் ஏற்கனவே தங்களுடைய ஸ்தானங்களிலிருந்து காலி செய் திருக்கவேண்டும்."

மறுபடியும் காலிசெய்வது. நாமும் அப்படித்தான் நினைத்தோம்.

இப்பொழுது ஜெர்மன் ஒலிபரப்புக் கேட்பவர் பொது நிலைமையை அறிந்திருக்க வேண்டும். மற்றொரு வெற்றிகரமான பின்வாங்குதல் நடைபெற்றதென்ற செய்திவந்து விட்டது.



## லெப்டினண்ட் ஜெனரல் கிரிஸ்டிஸான். அரக்கான் யுத்தத்தில் வெற்றிபெற்ற வீரர்.

(டெயிலி எக்ஸ்பிரஸ்).

லெப்டினண்ட் ஜெனரல் அலெக்ஸாண்டர் F. P. கிரிஸ்டிஸான், பர்மாவில் நடந்த அரக்கான் யுத்தத்தின் வெற்றிக்கு காரணமானவர்களில் ஒருவராகும். அவர் பழிக்குப்பழி வாங்கும் நோக்கத்தோடு ஒரு யுத்தம் புரிகிறார்.

இவரின் 15-ம் படை வெற்றியடைந்து நெருங்கும். ஒவ்வொரு மலைப்பிரதேசமும், காட்டுப்பிராந்தியமும், இவருடைய ஒரே மகன் லெப்டினண்ட் ஜான் அந்தோனி அலெக் ஸாண்டர் கிரிஸ்டிஸான் என்ற 25 வயதுடைய இளைஞன், இரு வருஷங்களுக்கு முன்பு ஜப்பானியர்களை எதிர்த்தும் போரிட்டு இறந்த இடத்தை சீக்கிரமாய் அடையும்படி செய்கிறது.

லிமப்ஸ்டோன்டவானைச் சேர்ந்த ஸர் ராபர்ட் அலெக்ஸாண்டர் கிரிஸ்டிஸான் என்பவர், "என் சகோதரர். பழிக்குப்பழி வாங்கி தனக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களை ஜப்பானியர்களின்பேரில் ஏற்படுத்துவார்" என்று கூறினார்.

"அவர் 1937–38-ல் தானே ஒரு படையினை நடத்திக்கொண்டு டியூக் ஆப் வெல்லிங் குன்ஸ் தீவுகளில் போரிட்டார். ஆனால் என் சகோதரர் அவர் மகன் கொல்லப்பட்டபோது டவெட்டாவில் 25-ம் படையினை நடத்திக்கொண்டிருந்தார். அவர் மகன் இறந்ததால் எங்களுக்கு உரிமையான பாரோனெட் என்ற பட்டம் முடிவடைகிறது. நான் இறந்தபின் என் சகோதரர் அடைவார். அதற்கு பின் அதற்கு வார்சு இல்லை."

ஒருவித கிராஸ் தான் எங்கள் கிரிஸ்டிஸான் குடும்பத்தின் கிரெஸ்ட்டாகும். எங்கள் குடும்பத்தின் கொள்கை. "எங்கள் வாழ்க்கையை அது நடத்தட்டும்" என்பதாகும்.

கிரிஸ்டிஸான் வாழ்க்கையின், 50 வருஷங்களில், பெரும்பான்மையான வாழ்க்கை சைனிய. வீரராகவே இருந்து கழித்துள்ளார். சென்ற யுத்தத்தின் போது ஆக்ஸ்போர்ட் O. T. C.-யிலிருந்து நேரே பிரான்ஸ் சென்றார். 1941—1942-ல் சின்னாட்கள் இந்நாட்டில் இருந்த காலம் தவிர மற்ற காலத்தை இந்தியாவிலேயே கழித்தார். 15-ம் படையை நடத்த இவருக்கு அதிகாரம் சில மாதங்களுக்கு முன் கொடுக்கப்பட்டது.

---

## பர்மாவைப்பற்றிய விவரணம்.

(டெயிலி எக்ஸ்பிரஸ்.)

இந்த மகத்தான யுத்தத்தைப்பற்றி அறிந்துகொள்ள மனிதனுடைய அறிவு போதாது. மனித ஆத்மாவின் விடுதலைக்காக நடைபெற்றுவரும் இந்த உலக யுத்தத்திலீடுபட்டிருக்கும் ஒவ்வொரு சிப்பாயையும், மாலுமியையும், விமானியையும் நாம் மனதார ஆதரிக்கிறோம். ஆகிலும் மனிதனுடைய இயல்பினால் சுவாரஸ்யமான விஷயங்களைத்தான் நாம் கவனித்து வருகிறோம். மற்ற போர்முனைகளின் தோற்றத்தில் பிரகாசமான ஜோதி தோன்றும் வரையில் அவைகள் நம்முடைய கவனத்திலிருந்து மறைந்து விடுகின்றன.

சமீப காலங்களில் ஐரோப்பிய யுத்தம் நமது கவனத்தைக் கவர்ந்தது. அயோக்யனை நமது எதிரி விமானத் தாக்குதல்களின் பயனாக அவஸ்தைப்படுகிறான். அவனுடைய காட்டுமிராண்டித்தனமான துருப்புகள் ஆன்சியோ முன்னேறும் வாசலில் வியர்த்தமாக முன்னேறித் தாக்கினார்கள். அந்தப் போர்முனையின் சக்தியிலும், கடுங்குளிரிலும் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கும் நமது வாலிபர்களைப்பற்றி நாம் கவலை கொண்டோம். இன்று நமது கவனம் பர்மாவின் ஜோதியால் இழுக்கப்பட்டுவிட்டது. இங்கு தீரமும், பயங்கரமும், திடமும், தியாகமும், சகிப்புத்தன்மையும் நம்முடைய கவனத்தைக் கவர்ந்துவிட்டது. இந்த நடவடிக்கையில் 14-வது படையைச்சேர்ந்த 5-வது, 7-வது டிவிஷன் துருப்புகள் அரக்கானில் ஈடுபட்டனர். ஜெனரல் கிரிஸ்டியன் சொல்லுகிறபடி இவர்கள் தரைப்போரில் ஜப்பானியர்களைப் பலமாக முறியடித்துவிட்டார்கள். இவர்கள் லங்காஷையரிலிருந்தும்,

மேற்கு யார்க்ஷயரிலிருந்தும், எல்லைச்சரகங்களிலிருந்தும் வந்தவர்கள். ஜெர்மனிபேரில் ஆகாயத்திலும் அபினைன்மலைப் பள்ளத்தாக்குகளிலும் சண்டை போடுவதுபோல நமது படைகள் பர்மாவின் சதுப்பு நிலங்களில் போர்புரிந்து வருகின்றன. இது விசித்திரமான கோரமான யுத்தம். ரத்தவெறி பிடித்த எதிரி காயம்பட்டவர்களிடம் அனுதாபம் காட்டுவதில்லை. மிருகங்களைப்போல அவர்களைக் காடுகளிலும், வைத்தியசாலைகளிலும், வைத்திய முகாம்களிலும் கொலைசெய்துவருகிறான். ஒரு பிரிடிஷ் ஆபீஸர் பின்வருமாறு சொன்னார். "அவர்கள் அங்குமிங்கும் நடமாடுவதைக் கேட்டுக்கொண்டு நான் இரவு பூராவும் விழித்திருந்தேன். இடைவெளிகளில் நோயாளி 'வேண்டாம், வேண்டாம்' என்று கூச்சலிடுவான். பிறகு நிசப்தமாகிவிடும்."

காடுகளில் ஜப்பானியர்களின் அட்டகாசமும், பாம்பும், விஷ ஜந்துக்களும் சாவை விளைவிக்கும் இந்தப்போர் மிகவும் விசித்ரமானது, பயங்கரமானது. மேலும் பலவகை ஜுரங்கள் வலிமையும் சுகாதாரமுள்ள துருப்புகளையும் பலஹீனப்படுத்திவிடும்.

இவைகளைச் சொல்லுவதுடன் இவைகளையும் அனுபவித்து வெற்றிபெற்ற வாலிபர்களின் கீர்த்தியையும் இங்கு கூறுவோம். சில வருஷங்களுக்குமுன் அவர்களுடைய ஜீவிய வாழ்க்கை குமாஸ்தா உத்தியோகத்தில் அமருவது, வீட்டில் குடும்பத்தாருடன் சேர்ந்து வாழ்வது, சனிக்கிழமையன்று சொக்கட்டான் ஆடுவது என்ற முறையாக நிறுவப்பட்டது. உஷ்ணப் பிரதேசத்தில் அவர்கள் துணிவுகரமான செய்கைகளில் ஈடுபடுவோமென்று அப்பொழுது நினைத்தால் அது சிறு பிள்ளைகளின் கனவாகத்தோன்றியிருக்கும். இப்பொழுது அவர்களுக்கு வேறுவிதமான கனவு உண்டாகியிருக்கிறது. அவர்களின் மனைவிகளும் தாய்களும் வேறு விதமாகக் கவலைகொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் போர் புரிகிறார்கள். காடுகளின் பயங்கரமும் ஜப்பானியர்களின் இழிவான கொடுமைகளும் அவர்களுடைய திடசித்தத்தைக் கலைத்துவிடமுடியாது. நியாக்யெடாக் கணவாயில் தீரமுள்ள 7-வது படை சுற்றிவளைக்கப்பட்டபொழுது திடமாக நின்றது. மாயூ மலைகளின் வழியாகப் போர்தொடுத்து வளையத்தைப் பிளந்துசென்றது. இந்த நடவடிக்கையை ஜப்பான் நமது படைகளின் நிர்மூலமென்று குதூகலத்துடன் வரவேற்கிறது. இப்பொழுது ஜப்பானியர்கள் பின்வாங்கி வருகிறார்கள்.

உலக யுத்தத் தோற்றத்தின் கண் பர்மாவில் நியாக்யெடாக்கு கணவாய்க்காக நடைபெற்ற போர் அற்பமானதாகக் காணப்படலாம். ஆகிலும் தைரியமும், பொருமையும் சகிப்புத் தன்மையும் அடிப்படையாக உள்ள சிறந்த நிகழ்ச்சி மிகவும் கீர்த்தி வாய்ந்தது.

---

## பர்மாவின் உள்நாட்டு நிலைமை.

---

கிரென் சிப்பாய் வெளியிட்ட இந்த விருத்தாந்தம் ஜப்பானியரின் ஆக்ஷிக்குட்பட்ட பர்மா ஜனங்களின் தினசரி வாழ்க்கையைப் பற்றி விரிவான தோற்றத்தை வெளியிடுகிறது.

பர்மாவுக்குள் செல்ல எனக்கு சந்தர்ப்பமளிக்கப்பட்டபொழுது நான் அதை சந்தோஷத்துடன் வரவேற்றேன். என்னுடைய குடும்பத்தார் அங்கு வசித்து வந்தார்கள். ஆகையால் ஒரு நாள் விடியற்கால சமயத்தில் நான் விசாலமான சிண்ட்வின் நதியைத்தாண்டிச் சென்றேன்.

நதியின் எதிர்த்த கரைப்பக்கத்தில் எங்களுக்கு குறிப்பான அலுவல்கள் ஏற்பட்டிருந்தன. நாங்கள் கடுமையாகப் போர்செய்ய வேண்டியிருந்தது. நாங்கள் அதையும் செய்து முடித்தோம். பிறகு நாங்கள் இந்தியாவுக்குத் திரும்பி வரவேண்டுமென்று உத்திரவிடப்பட்டோம்.

ஜப்பானியரைக்கண்டு கிராமத்து ஜனங்கள் நடுங்குகிறார்களென்று நாங்கள் கண்டுபிடித்தோம். உணவுப்பொருள்களை எங்களுக்கு விக்கிரயம் செய்ய அவர்கள் பிரியப்பட்டபோதிலும் அவ்விதம் செய்ய அவர்கள் துணியவில்லை. அரிசி சம்பாதிப்பதற்காக நாங்கள் ஒரு கிராமத்தை நோக்கிச்சென்றோம். வழியில் ஒரு ஜப்பானிய ரோந்து கோஷ்டியைக் கண்டோம். எங்களைப்போகும்படி அவர்கள் அனுமதித்தார்கள். அடுத்த ரோந்து கோஷ்டியார்கள் எங்களைக் கைது செய்தனர், எங்களை காவல் கூடத்தில் அடைத்து விட்டனர். காவல்



கூட்டத்திற்குள் சென்றிருந்தவர்களுக்கு இது மிருகங்கள் அடைத்து வைத்திருக்கும் கூண்டு போல் தோற்றிற்று. ஆகிலும் மனிதன் என்ற ஒரு பிராணியை அடைத்து வைக்கத்தான் இந்தக் கூடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. மற்ற கைதிகளும் அதிலடைபட்டிருந்தார்கள். அங்கே காவல்வேலை பார்த்து வந்த ஒரு பெரிய போலீஸ்காரருடன் நான் சம்பாஷணை செய்தேன். ஜப்பானியர்களுக்கு அந்த கிராமவாசிகள் தொண்டுவேலை செய்யும்படி கட்டாயப்படுத்தப்பட்டார்களென்று அவன் சொன்னான். அறுவடைசெய்ய வேண்டுமென்று நினைத்த ஒருவன் தொழிலாளர் கூட்டத்துடன் அநேக மைல்கள் தூரம் செல்ல ஆக்ஷேபித்தான். அவனை மரத்துடன் சேர்த்துக்கட்டி கசையால் அடித்தார்கள். அவனுடைய காதிற்குள் சுடு தண்ணீரை ஊற்றினார்கள். அதன் பிறகு ஒருவரும் ஆக்ஷேபிக்கவில்லை. எனக்கு அனுபவம் கிடைத்த மட்டில் ஜப்பானியர்கள் அவ்விதச் செய்கைகளை மேற்கொண்டிருப்பார்களென்று நம்புகிறேன்.

கொஞ்ச காலத்துக்குப்பின் என்னை மற்றொரு ஜெயிலுக்குக்கொண்டு போனார்கள். நல்ல உடுப்புகளைப் போட்டுச் சென்றவர்களிடமிருந்த மேல் சட்டைகளும், கால் சட்டைகளும் அப்புறப்படுத்தப்பட்டன. சிலருக்குக் கிழிந்த ஆடைகள் வழங்கப்பட்டன. கைதிகள் கடுமையாக நடத்தப்பட்டார்கள். ஜப்பானியர்கள் எங்களை உதைத்தார்கள். முகத்தில் அடித்தார்கள். மலைப்பாங்கான இடத்தில் குளிரைப்போக்க எங்களுக்குப் போதுமான ஆடைகள் கிடையாது. எங்களுக்கு அளிக்கப்பட்ட உணவு சிலாக்கியமானதல்ல. சிறந்த இந்தியர் ஒருவரை ஜெயிலிலிருந்து மிருகங்களை நடத்துவது போல் கயிற்றைக்கட்டி இழுத்துக்கொண்டு போனார்கள். மண்வெட்டியும் பிக்காசும்கொண்ட ஒரு கோஷ்டியும் சென்றது. ஒரு டாக்டரும் கூடச்சென்றார். அவருக்கு ரத்தக்குழாய் மூலம் விஷமருந்து செலுத்தப்பட்டு அவர் கொல்லப்பட்டார். அவர்கள் பரிக்ஷை பார்த்தார்கள் போல் தோன்றுகிறது. அநேக டாக்டர்கள் கினியா பன்றிகள் பேரிலும் எலிகள் பேரிலும் பரிக்ஷை செய்வதுண்டு. ஜப்பானியர்கள் மனிதர்களைக்கொண்டு பரிக்ஷை செய்தார்கள்.

பிறகு நானும் இன்னும் சிலரும் தப்பித்து வந்தோம். பர்மா என்னுடைய நாடென்றும் நான் ஓடிவிட மாட்டேனென்றும் சிப்பாய்களிடம் நம்பிக்கை உண்டு பண்ணினேன். ஆகையால் அவர்கள் என்னை சுமை தூக்கியாக உபயோகித்தார்கள். நானும் மற்றவர்களும் காட்டுக்குள் ஓடிவிடுவதாகச் சதிசெய்தோம்.

தப்பி ஓடிவந்த முதல்நாள் இரவில் நான் விழித்திருந்து கடவுளிடம் பிரார்த்தனை செய்தேன். "நாம் பிடிபட்டால் என்ன ஆகுமென்று" நான் ஆலோசனை செய்தேன். என்ன ஆகுமென்றும் எனக்குத் தெரியவரும். மற்றவர்கள் அவஸ்தைப்படுவதையும் கீச்சிடுவதையும் நான் கேழ்வியுற்றிருக்கிறேன். மறுநாள் காலையில் மற்ற கூலிகள் எங்களுக்கு அரிசியும், உப்பும், தீக்குச்சியும் கொடுத்துதவினார்கள். எங்களுக்கு ஆசி கூறினார்கள். எங்களுக்கு ஊக்கமுண்டாகிற்று. காட்டுக்குள் ஓடுவது மிகவும் சுலபம். ஆகிலும் இராக்காலத்தில் மறைமுகமாகத் திருட்டுத்தனமாக ஓடுவதும் மனிதர்களையும் மிருகங்களையும் கண்டு பீதியடைவதும் ருசிகரமானவையல்ல. எங்களுடைய உணவுப்பொருள்கள் அற்றுப்போய் விட்டன. எங்களுக்கு ஜுரம் வந்து விட்டது. "நாம் கடவுளிடம் வழிபடுவோம்" என்று சொன்னோம். ஹிந்து, முகமதியர், கிறிஸ்துவர், எவராகயிருந்தாலும், இப்பொழுது உதவி புரிய வேண்டுமென்று நாங்கள் பிரார்த்துத்தோம். கடைசியாக நான் தூங்கிவிட்டேன்.

நாங்கள் பிறகு ஒரு கிராமத்துக்குச் சென்றோம். அங்கே எங்களுக்கு உணவுப்பொருள் கிடைத்தது. ஜப்பானியர்கள் டில்லியை ஆக்கிரமித்து விட்டார்களென்ற வதந்தி உண்மையாவென்று அவர்கள் என்னைக்கேட்டார்கள். நாங்கள் இதைக்கண்டு வியப்புற்றோம். அவர்களும் சந்தோஷமடைந்தார்கள். நம்முடைய விமானங்கள் காடுகளின்பேரில் பறந்து செல்ல வேண்டுமென்று அவர்கள் ஆசைப்படுகிறார்கள். அக்னி குண்டத்தைச் சுற்றி உட்கார்ந்துகொண்டு ஜப்பானியர்களின் வருகைக்கு முன்னிருந்த சுகமான வாழ்க்கையைப்பற்றி அவர்கள் சம்பாஷணை செய்தார்கள்.

ஜப்பானிய சிப்பாய்கள் அவர்களுடைய பாஷையைக் கற்றுக்கொள்ள முயன்றார்களாவென்று நாங்கள் கேட்டோம். ஒரு வயது முதிர்ந்த கிழவி வாயிலிருந்த குழாயை எடுத்துவிட்டு எச்சிலை உமிழ்ந்தாள். ஒரு சில வார்த்தைகள்தான் அவர்கள் கற்றுக்கொண்டார்கள். "எங்களுக்கு வண்டிதேவை. கோழிக்குஞ்சுகளிருக்கின்றனவா? இங்கு ஸ்திரிகள் இருக்கிறார்களா?" என்ற சில பதங்கள்தான் அவர்களுக்குத் தெரியும். இங்கு ஒருவரும் பத்திரமாகயில்லை. நாங்கள் புகார் செய்தால் பர்மாவின் விடுதலைக்காக நடைபெறும் போரில்

ஜப்பானியத் துருப்புகள் அநேக கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்களென்றும் அவர்களுக்கு உதவி செய்வதில் பெருமைகொள்ள வேண்டுமென்றும் எங்களுக்குப் போதிக்கப்படுகிறது" என்று அவன் சொன்னான்.

நாங்கள் அங்கு மூன்று நாட்கள் தங்கிவிட்டு பிறகு புறப்பட்டோம். நாங்கள் ஒரு பாதை வழியாகச் சென்று கடைசியில் ஒரு பிரிடிஷ் ரோந்து கோஷ்டியை சந்தித்தோம்.

## ஜப்பானின் கொடுமை.

சேனையின் உற்று நோக்காளரைக்கண்டு பேசியபொழுது ஒரு குர்க்கா சிப்பாய் தன்னுடைய ஆபீஸரின் கைகளை ஜப்பானியர்கள் சேதித்த பின் அவர் மீட்கப்பட்டார் என்று விருத்தாந்தத்தை வெளியிட்டார்.

அவர் சொல்லுகிறார் "நாங்கள் அஸ்ஸாம்—பர்மா எல்லைச் சரகத்தில் ரோந்து வேலை செய்தோம். 23 வயது உள்ள வயது முதிர்ந்த லெப்டினண்ட் உள்பட ஆறு பேர்கள் வேலை செய்து வந்தோம். எங்களை ஜப்பானிய கோஷ்டி வளைத்துக்கொண்டது. எங்களுடைய சுழல் துப்பாக்கியின் உதவியால் நாங்கள் சமாளித்து வெளியே சென்றோம். ஆகிலும் எங்களுடைய ஆபீஸர் காலில் காயம் பட்டுக் கீழே விழுந்துவிட்டார். எதிரிகளின் சங்கியை மிகவும் அதிகமாகயிருந்ததால் அவரை நாங்கள் காப்பாற்ற முடியவில்லை.

இரண்டு நாள் கிரமித்து நாங்கள் ஜப்பானியர்கள் இருந்த ஒரு கிராமத்துக்கு பலமான ரோந்து கோஷ்டியை அனுப்பினோம். எங்களுடைய வருகையைக் கேட்டு ஜப்பானியர்கள் கிராமத்தைக் காலி செய்தனர். ஜப்பானியர்கள் அவருடைய இரண்டு கைகளையும் சேதித்து அவைகளை புகையிலையினால் சேர்த்துக் கட்டி வைத்திருந்தார்கள். ஆகிலும் அவர் உயிருடனிருந்தார்.

## தகவல் கொடுக்க மறுக்கிறவர்களை ஜப்பானியர்கள் சிரச்சேதம் செய்துவிடுகிறார்கள்.

கொலைபாதகர்களின் பெயர்கள் வெளிவந்துவிட்டன. ஜப்பானிய கொலைபாதகர்களின் ஜாபிதாவில் புதிதாக ஆறு பேர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

லெப்டினெண்ட் கர்னல் ஓகாடா, லெப்டினண்ட் அராகி, ஸுகாஹாரா, டாமாகி, யோஷிக்கா, உசிமோரா முதலியவர்கள் இந்திய, பிரிடிஷ் யுத்தக் கைதிகளைக் கொலை செய்திருக்கிறார்கள்.

தப்பி ஓடிவந்த ஒரு மொழி பெயர்ப்பாளர் நேசதேசப் படைகளின் அமைப்புகளைப் பற்றிய தகவல்களைக் கொடுக்க மறுக்கிற யுத்தக் கைதிகள் கொலை செய்யப்பட்டார்கள் என்று சொன்னார். யுத்தக் கைதிகளை மரத்தில் சேர்த்துக் கட்டி அவர்களை பிரச்னம் பண்ணுவார்கள். மறு மொழிகள் திருப்திகரமாகயில்லாவிட்டால் கைதிகளைக் கன்னத்தில் அறைந்தும், காலால் உதைத்தும் விடுவார்கள். அதன்பின் ஆகாரமன்னியிலும் தண்ணீரன்னியிலும் அப்படியே விட்டுச் சென்றுவிடுவார்கள். இந்த நடவடிக்கையும் பயன்படாமல் போனால் கைதியை அவிழ்த்துவிட்டு, அவனை மண்டிபோடச் செய்வார்கள். வாளினால் பிறகு அவன் தலை சேதிக்கப்படும்.

ஒரு சமயம் காயம்பட்ட ஒரு ஆபீஸரின் தலை சேதிக்கப்பட்டது. இதற்கு காரணம் அவனுக்குக்கொடுக்க மருந்து இல்லை என்று ஜப்பானியர்கள் அலக்ஷியமாகச் சொல்லுகிறார்கள்.



## நேசதேசப் படைகளுக்கு வசதியளிக்கும் சேவைப்படையும் துருப்புகளும்.

### தெற்கு இந்திய பிரசுரம்.

கவர்னர் மாளிகையில் அமைக்கப்பட்டிருக்கும் டெப்போவுக்கு அடிக்கடி விஜயம் செய்யும் ஜனங்களில் ஒருவர் எங்களை சர்வலோக "ஆண்டஸ்கள்" என்று குறிப்பிட்டார். எங்களுக்கு விசித்திரமான கடிதங்களையும் துருப்புகள் எழுதுகிறார்கள். துருப்புகள் அவர்களுக்குச் சில தேவைகளிருக்கின்றனவென்று கடிதம் எழுதுகிறார்கள். நாமும் அதே விதமாக எழுதுகிறோம்; சில படைகள் ஏகாந்தமான ஸ்தலங்களில் வாழ்க்கை வசதிகளில்லாமல் சிறிய கோஷ்டிகளாகத் திரிகிறார்கள். தங்களுடைய தலைமை காரியாலயத்திலிருந்து பண்டகசாலைக்கு மின்சார விளக்குகளை அமைக்கும் வேலையைச்செய்து அதிக சௌகரியத்தைச் சம்பாதிக்கலாம். அவர்கள் கம்பிகளை அமைத்து விடலாம். ஆகிலும் அவர்களுக்கு விளக்குக் கம்பங்களும், விளக்கு ஷேட்டுகளும், விளக்குகளும், ஸ்விச்சுகளும் கிடைப்பதரிது. அரசாங்கத்தாரிடம் சலுகை காட்டவேண்டுமென்று கேட்பதில் பிரயோஜனமில்லை. ஆகையால் ஆண்டஸுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இது உபயோகப்பட்டது. அவர்கள் கம்பிகளை சம்பாதித்துக்கொடுத்தது உபயோகமுள்ளதாகயிருந்தது. அது இல்லாவிட்டால் ஆண்டஸின் வேலை நிஷ்பிரயோஜனமாகியிருக்கும்.

மற்றொரு கோஷ்டியார்கள் தங்களுடைய வயர்லெஸ் கருவிவேலை செய்யவில்லையென்று புகார் செய்தார்கள். அதையும் பழுது பார்க்க அனுப்பும்படி வேண்டப்பட்டது. அதைப் பரிசோதனை செய்து எங்களுடைய வியாபாரி பின்வருமாறு எழுதினான். "வயர்லெஸ் கருவியை அலக்ஷியம் செய்து விட்டதால் அதில் சிறிய பறவைகள் கூடுகட்டி குஞ்சு பொறித்திருக்கின்றன. மேலும் எலிகள் தாராளமாகச்சென்று அதிலிருந்த சேர்மானங்களைத் துண்டித்திருக்கின்றன. நாங்கள் அந்தக் கருவியைப் பழுது பார்த்தோம். ஆகிலும் ஆண்டஸ் துருப்புகளுக்கு அச்சமயம் எச்சரிக்கையை விடுத்தது."

கிராமபோன் பிளேட்டுகளையும் மற்ற விவரங்களையும் அனுப்பியதற்காக உங்களுக்கு வந்தனம். அவைகள் பொழுது போக்குக்கு லாயக்குள்ளவைகள். துருப்புகள் அவைகளைக் கொண்டாடுகிறார்கள். துருப்புகளுக்காக இன்னும் மூன்று கிராமபோன் பெட்டிகளை வாங்க வேண்டுமென்று பிரியப்படுகிறேன். எங்களுடைய கோஷ்டி விருத்தியடைந்து வருகிறது. புதிதாகச் சேர்ந்தவர்களுக்கு இரண்டு பெட்டியும் கமிஷனல்லாத உத்தியோகஸ்தர்கள் சங்கத்துக்கு ஒன்றும் தேவை. தென் இந்தியாவிலுள்ள இருப்புப்பாதை படங்களை அனுப்பினாலும் சௌகரியமாகவிருக்கும். ருசியற்ற படைமுகாமில் அவைகளின் வர்ண அமைப்புகள் வாலிபமுள்ள புதிய சிப்பாய்களின் மனதுக்கு உல்லாசமளிக்கும். நான் நாடகசபை ஒன்றை ஸ்தாபிக்கப்போகிறேன். பழைய சாமான்களையும், சிகையையும், வீசையையும் எங்களுக்கு அனுப்பினால் நலம். நீங்கள் இதுவரையில் செய்திருக்கும் உபகாரத்துக்காக இந்த பட்டாளம் வந்தனம் செலுத்துகிறது." எங்களுக்கு சிகையும் வீசையும் சுலபமாகக் கிடைத்தன. கிராமபோன்களும், போஸ்டர்களும் சரிவரக்கிடைப்பதில்லை. கிராமபோன்களையும், வர்ணம் மிகுதியான படங்களையும் எவரேனும் விற்கத்தயாராகயிருந்தால் நாங்கள் வாங்கிக்கொள்ளத் தயாராகயிருக்கிறோம்.

14-ம் படையுடன் ஒத்துழைக்கும் ஒரு பகுதியிடமிருந்து மற்றொரு கடிதம் வந்தது. "எங்களுக்கு வசதியளிக்கக்கூடிய எந்த பொருள்களையும் நாங்கள் அன்புடன் வரவேற்போம். எங்களுடைய நன்கொடைகளில் மீன் பிடிக்கும் வீசவலைகளை அனுப்பினால் சௌகரியமாகயிருக்கும்." இதற்குமுன் அவர்கள் வேண்டிக்கொண்ட க்ஷவரக் கத்திகளையும் எழுதுவதற்கு வேண்டிய தளவாடங்களையும் அனுப்பியிருக்கிறோம். மேலும் தமிழ், தெலுங்கு, மலையாளம் முதலிய பாஷைகளில் புஸ்தகங்களையும் ஓய்வு நேரங்களில் அரைகளில் விளையாடுவதற்கு விளையாட்டுக் கருவிகளும் அனுப்பியிருக்கிறோம். இன்னும் அவைகளை ஏராளமாக அனுப்பி இருக்கிறோம். வீசும் வலைகளைத் தயாரிக்க நிபுணர்களை நியமித்திருக்கிறோம்.

ஆகிலும் எல்லா கடிதங்களிலும் சாமான்கள் தேவையென்று மட்டும் எழுதப்படவில்லை. வந்தனம் செலுத்தியும் சில கடிதங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. ஒன்றில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது. "இந்த பிராந்தியத்தில் கிடைக்காத மிட்டாய்களை நீங்கள் துருப்புகளுக்கு அனுப்பியதில் நாங்கள் எல்லோரும் நன்றி பாராட்டுகிறோம். அவர்கள் அதை அன்புடன் உட்கொள்ளுகிறார்கள். எல்லா விஷயங்களிலும் அவர்களுடைய வசதிகளை வழங்கி

வரும் உங்கள் கமிட்டிக்கு எங்களுடைய வந்தனத்தைச் செலுத்துகிறோம்." மற்றொரு கடிதம் ஒரு பீரங்கிப் படையாளரிடமிருந்து வந்தது. "நீங்களறிந்த விதமாக, L. A. A. படைகள் தூக்குத் தூக்காகயிருக்கின்றன. 36 தனிப்பட்ட பீரங்கி நிலயங்களும், மற்ற 13 சிறிய தலைமை காரியாலயங்களும் என் கண் காணிப்புக்குள்ளிருக்கின்றன. தலைமை காரியாலயங்களை நான் சௌகரியமாகக் கவனித்துக்கொள்ளமுடியும். தமிழ்ப் பத்திரிகைகளும், விளையாட்டுக் கருவிகளும் பீரங்கி நிலயங்களுக்குத்தேவை. அவைகளை அனுப்பினால் நலமாக இருக்கும்"

இந்தக் கடிதங்கள் சென்ற வாரத்தில் எங்களுக்கு அனுப்பட்டவை. பழைய பைல்களிலிருந்து எடுக்கப்படவில்லை. மூன்று மாதங்களுக்கு முன்வந்த ஒரு கடிதம் ராணுவப் படையினிடமிருந்து வரவில்லை. வேலை செய்துவரும் எங்களுடைய கோஷ்டியினிடமிருந்து வந்தது. "இந்த மாதத்திலும் அவர் என்னுடைய மருமகள் மூலம் உரோமத்தை அனுப்பித்தார். துரதிருஷ்டவசமாக அவள் சென்று கொண்டிருந்தபொழுது ஒரு பருந்து ரோமத்தின் ஒரு பாகத்தைத் தூக்கிக்கொண்டு போய்விட்டது. சிறு பெண்ணுக்குக்காயம் ஏற்படாமல் தப்பியதென்பதில் கடவுளுக்கு நான் நன்றி செலுத்துகிறேன். இந்த எதிர் பாராத தகவலை எழுதவேண்டி நேரிட்டதற்காக வருந்துகிறேன்." இந்த அபாயத்திலிருந்து தப்பித்த பின் நாங்களும் அரை அவுன்ஸ் ரோமம் செலவாகி விட்டதென்று கணக்கில் எழுதி விட்டோம்.

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டென்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 189. (5-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 18- 3-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 22- 3-44 | வெள்ளனூர் | ... மாலை | 7.00 |
| 19- 3-44 | நீர்ப்பழனி | ... ,, | 7.00 | ,, | செம்பாட்டூர் | ... ,, | 7.30 |
| ,, | ஆவூர் | ... ,, | 7.30 | 23- 3-44 | புலியூர் | ... ,, | 7.00 |
| 20- 3-44 | திருமெய்யம் | ... ,, | 7.00 | ,, | கண்ணங்குடி | ... ,, | 7.30 |
| ,, | மேலூர் | ... ,, | 7.30 | 24- 3-44 | கொன்னையூர் | ... ,, | 7.00 |
| 21- 3-44 | பள்ளிவாசல் | ... ,, | 7.00 | ,, | பொ. புதுப்பட்டி | ... ,, | 7.30 |
| ,, | பில்லமங்கலம் | ... ,, | 7.30 | | | | |

### பிரஸங்கம் 190. (6-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 25- 3-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 29- 3-44 | அன்னவாசல் | ... மாலை | 7.00 |
| 26- 3-44 | கீழாநிலை-புதுப்பட்டி | ... ,, | 7.00 | ,, | ஆரியூர் | ... ,, | 7.30 |
| ,, | கீழாநிலை | ... ,, | 7.30 | 30- 3-44 | மலம்பட்டி | ... ,, | 7.00 |
| 27- 3-44 | பெருமாநாடு | ... ,, | 7.00 | ,, | பேராம்பூர் | ... ,, | 7.30 |
| ,, | புல்வயல் | ... ,, | 7.30 | 31- 3-44 | மலைக்குடிப்பட்டி | ... ,, | 7.00 |
| 28- 3-44 | சடயம்பட்டி | ... ,, | 7.00 | ,, | தலையானூர் | ... ,, | 7.30 |
| ,, | ஒலியமங்கலம் | ... ,, | 7.30 | | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 18—3—44 | திருமெய்யம். | 25—3—44 | பொன்னமராவதி. |
| 19—3—44 | எம்பல். | 26—3—44 | கொடும்பாளூர். |
| 21—3—44 | ராமச்சந்திரபுரம். | 29—3—44 | வடகாடு. |
| 23—3—44 | குழிபிரை. | 30—3—44 | ஆலங்குடி. |
| 24—3—44 | புதுக்கோட்டை. | 31—3—44 | புதுக்கோட்டை. |



# குப்பனும் சுப்பனும்.

*(By Mr. S. Panchapagesan, Director, Sri Brahadambal Gana Sabha, Western Palace, Pudukkottai.)*

(Contributed For National War Front Propaganda.)

## "GROW MORE FOOD AND STILL MORE FOOD"

(குப்பனும் சுப்பனும் சந்தைக்குச் செல்லும் ஒரு சாலை நடுவில் தலையில் மூட்டைகளுடன் சந்தித்தல்.)

குப்பன்.—வாண்ணே! ரொம்பநாளா எங்கே சந்தைப் பக்கமே காணலீங்களே ஒங்களை.

சுப்பன்.—வெள்ளாமை வெளைச்சலைக் கவனிச்சிட்டிருந்தேண்ணே. அதான் இந்தப் பக்கமே தலைநீட்ட முடியலீங்க. குப்பண்ணே! சவுரியமாண்ணே?

கு.—சவுரியந்தானுங்க. ஒங்க நாட்டிலே மழைகிளை உளுந்திருக்கா. வெள்ளாமைச்சேதியெப்படி?

சு.—நல்லா, மழை ரெண்டு மாதத்து தண்ணிபோல உளுந்திருக்கு. எல்லாம் பாடுபட்டுத் தானிருக்கோம். கடவுள் பூராக் கண்ணைத்திறந்து பாக்கணும்.

கு.—அண்ணே! நல்லாச் சொன்னே. பாடுபட்டா அதுக்குத்தக்க பலனு கிடைக்காமலா போயித்ரும். நம்ம கவிராயருங்க சொன்னாப்போல இந்தக்காலத்திலே உளுது சாப்பிட்ரவங்கதான் மேம்பட்டவங்க.

சு.—அதுலே சந்தேகமே யில்லேண்ணே. இப்பக்கூட எங்ஙனை பாத்தாலும் நம்ம விவசாயிங்களை முன்னுக்குக் கொண்டாரத்துக்கு அதிகாரிங்க ரொம்ப பிரயாசை எடுத்துக்கிட்டு சாகுபடிங்களே அதிகப்படுத்தச் சொல்ராகன்னு சேதி கிடைச்சிச்சு.

கு.—ஆமா. அதாண்ணே நல்லது. நாம்ம செய்யவேண்டிய கடமைங்களை செஞ்சுக்கிட்டா கடவுள் நல்லாக் கொடுப்பாரு. போன வாரத்லே சந்தேலே நடந்துச்சே பிரஜங்கம் அதை கவனிச்சீங்களா?

சு.—நான்தான் 4 சந்தையா வல்லையேண்ணே. என்ன சொன்னுக அவுக. சொல்லேன். கேட்டுக்கினுவம்.

கு.—ஆமாண்ணே நீவல்லேங்கிரதை மறந்தே விட்டேனுங்க. இங்ஙணயே குந்திக்கினு சொல்ரேன். (இருவரும் உட்கார்தல்.) போன சந்தேலே நம்மவூரு யுத்த நிலையத்லேருந்து யாரோ ஒத்தரு பிரஜங்கம் செஞ்சாக. அவுக சொன்னுக நம்ம தேசம் ரொம்ப மேம்பட்டதுன்னுக.

சு.—தேசம்னு?

கு.—இது தெரியாதாண்ணே. தேசம்னு நம்ம நாடு. இந்தியாங்க.

சு.—இம். இம். நம்ம நாடுங்களா. புரிஞ்சிச்சு. மேலே சொல்லுங்கண்ணே.

கு.—நம்ம தேசத்லே பொன்போட்டா பொன் விளையும். காலமறிஞ்சு விதைங்களை போட்டா ஏராளமா விளையும்னு.

சு.—காலமறிஞ்சுன்னுதானே சொன்னுக. அதைத்தான் நம்ம பண்ணிக்கிட்டுவாரமே. வெள்ளாமைக்காலத்லேதானே விளைச்சலைக் காணலாம்.

கு.—இல்லேண்ணே அதுக்குத்தான் அவுங்க சொன்னுக. எந்தக் காலத்லே எதுதுங்களைப் பயிரிடணுமோ அப்படி செஞ்சுகிட்டா நல்லாத்தானியங்கள் விளையும். நம்ம ஒளிஞ்ச நேரங்கள்ளே புஞ்சைக்காடுங்களே செய்நேத்திபண்ணி புஞ்சை தானியங்களைப் போடணும். நம்ம கொல்லேங்கள்ளேயும் இம்புட்டு காகறிங்களே போட்டுவச்சா நல்லதுண்ணும் சொன்னுக.

சு.—அவுங்க சொன்னது நல்ல வளிதாண்ணே. நாம்ப நஞ்சைலே வருஷத்லே 8-மாதந்தானே பாடுபட்டுகிட்டுக்கிடக்கிரம். பாக்கி 4-மாதங்கள்ளே புஞ்சைக்காடு கொல்லைக்காடு இதுங்கள்ளே பாடுபட்டா நல்ல மிச்சம்னுதான் தோத்துது.

து.—நம்ம நல்லாரிக்கணும்னு தானே, அதிகாரிங்க சொல்ராக. "குடி உயரக் கோனுயரும்"னு தெரியாமலா நம்ம பெரியவங்க சொல்லிக்கிட்டாக.

சு.—ஆமா இம்புட்டும் அவுக சொல்ராகளே நமக்கு ஏதாச்சும் ஒத்தாசை கித்தாசை அவுக பண்ணுவாங்களா?

து.—ஓ! நல்லாச் செய்வாகளாம். அதை ஒங்கிட்ட சொல்ல மறந்துட்டேண்ணே.

சு.—என்ன ஒத்தாசை செய்யரதாகச் சொன்னுக. ஏதும் விதைகிதை கொடுப்பாங்களா? ஒளவுமாடு வாங்கணும். கலப்பே செய்யணும். சண்டைனாலே மம்பிட்டி விலை ஏறிப் போச்சு. மம்பிட்டி வாங்கணும். குப்பையடிக்க வண்டி வேணும். மாடுங்கவேணும். விவசாயம்னு எம்புட்டுக் காரியங்கயிருக்கு, அம்புட்டுச் சவுரியங்களேயும் அவுங்க செஞ்சாங்கன்னு தேவலை.—

து.—சுப்பண்ணே! கொஞ்சம்பொறு. நானும்தான் பாத்துக்கிட்டிருக்கேன் சும்மா தஞ்சாவூரு கோபுரம் காட்டியும் அம்புட்டுதூரம் அடுக்கிக்கிட்டுப் போரயேண்ணே. மொத்தமா அவுங்க சொன்னதைச் சொல்லிட்ரேன் கேட்டுக்க. குடியானவங்களுக்குவேண்டிய அம்புட்டு ஜாமானும் வாங்க பணம் தருவாங்களாம். அதைக் கடனுக வாங்கிக்கிட்டு தவணையாக கொஞ்சம் கொஞ்சமா திருப்பிடலாம்னுக. இன்னும் அக்கம்பக்கத்லே ஏதும் ஸர்க்கார் நிலங்க சும்மா கிடந்துச்சுன்னு அதைச் சாகுபடி பண்ணிக்கிட சும்மாக்கூட அடமானம் செஞ்சு குடுப்பாங்களாம். இன்னும் என்ன ஒத்தாசைங்க வேணும் அண்ணே ஒனக்கு?

சு.—ரொம்ப நல்லதாச்சுங்களே. அப்படின்னு நம்ம வேலைங்களை ஒளுங்காக் கவனிச்சிட்டிருக்கலாம். வருஷம் முடியும்தொட்டு நல்ல பலனடைஞ்சிட்டிருப்போம்னு தோத்துதே.

து.—அதெலென்ன சந்தேகமண்ணே. அவங்கவுங்க வேலைங்களே ஒளுங்கா செஞ்சாங்கன்னு சோம்பேரித்தனமில்லாமே திருட்டு பெரட்டுங்க நடக்காமே கொரையில்லாமே அவுங்கவுங்க வவுத்துக்குக் கஞ்சி ஆப்டும். அதைங்காட்டியும் நம்ம மேலுக்கும் நல்ல பலம் ஏற்படும்னு சொன்னுக.

சு.—ஆமா. பாடுபடரத்தாலே தேசத்துக்கு நல்ல வலுவ. அதையும் காட்டியும் நம்ம கையினாலே பயிரிட்டு பலன்கொடுக்கிற தானிய வகைகளோ, காகறிங்களோ அலாதி ருசியாத்தானிருக்குது.

து.—அவுக இன்னும் சொன்னுக. நாம இப்படி செஞ்சிட்டிருந்தா நம்பநாட்லே பஞ்சமே தெரியாமே ஏராளமா சாப்பாட்டுக்குத் தானியங்களும் காகறி வகைங்களும் கிடைச்சு எல்லோரும் ஜங்தோசமாயும் சுருசுருப்பாயும் தெம்புள்ளவங்களாயம் இருப்போம். தவிற நாம்பளும் ஏதோ நம்பளாலே முடிஞ்ச சேவைங்களே நாட்டுக்கு செஞ்சவங்களாயிட்ரம்னும் சொன்னுக.

சு.—ஆமா. சண்டேலேசேந்து சண்டைபோட்டாத்தான் சேவைனு, யாரும் அந்த சண்டைலே சேந்தவங்களுக்கு ஆகாரம் தயார் செஞ்சு அனுப்பவேண்டாமா. நாம்ப பாடுபட்டாத் தானே ஆகாரம் அவுங்களுக்குக் கொடுக்கலாம்.

து.—அத்தாண்ணே! அப்படித்தாண்ணே அவுக சொன்னுக.

சு.—நம்ப நாட்டுக்கு அவுங்க சண்டைபோட்டா அவங்களுக்கு ஆகாரத்துக்கு ஏற்பாடு பண்ணி அனுப்பிக்கிறதாலே நாமும் நம்ப நாட்டுக்கு ஒத்தாசை செஞ்சவங்களாகிடரம் சரி இன்னும் ஏதாச்சும் சொன்னுங்களோ.

து.—எம்புட்டோ சங்கதிங்க சொன்னுக. நம்ம கிராமாந்திரங்கள்ளே எப்படி சுத்தமாயிருக்கனும், தானியங்க பணங்க இதுங்களை எப்படி சேமிச்சுவைக்கணும் எப்படி செலவு செய்யணும், ஒரு ஜாமானையும் வீணுக்காமல் எப்படி உபயோகப்படுத்தணும், நல்ல போதுங்களை எப்படிக் கழிக்கணும், சண்டை சச்சரவுங்க இல்லாமே எப்படி யிருக்கணும்னும் ரொம்ப நன்னுச் சொன்னுக.

சு.—நேரமாயிருச்சு சந்தைப்பக்கம் தலைநீட்டி 4 வாரமாயிரிச்சு. அடுத்தவாரம் பாக்கியைக் கேட்டுக்கிறேன்.

து.—சரி. அப்படியே செஞ்சுக்குவோம். கொஞ்சம் வெத்திலைச்சருகு இருந்துச்சுன்னு கொடண்ணே.

(இருவரும் வெற்றிலைபோட்டுக்கொண்டு பிரிதல்.)

Sri Brihadamba State Press, Pudukkottai, 1,800—22-3-44.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம் வருஷம் மார்ச்சுமீ 25உ [ந. 190

தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிருர். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CXC.

## ஜப்பானின் புதிய தாக்குதல்.

### கவலைப்படுவதற்கு இடமில்லை.

ஜெனரல் ஆசின்லெக் அரசாங்க நிர்வாக சபையில் செய்த பிரசங்கம்.

இந்த சபையின் கூட்டம் சில நாட்களுக்கு ஒத்திவைக்கப்படுமுன் சபையின் அங்கத்தினர்களுக்கு தெற்கு ஆசியா கமாண்டின் இன்றைய யுத்த அறிக்கையில் வெளியிட்டிருக்கும் சில விவரங்களை ஆதாரமாகக்கொண்டு பர்மா போர் முனையின் மத்திய அரங்கத்தில் ஏற்பட்டு இருக்கும் நிலைமையைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

இப்பொழுது பர்மா எல்லைச்சரகத்திலுள்ள மணிப்பூர் ஸமஸ்தானத்தின் நிலைமையைப் சுருக்கமாகச் சொல்லுகிறேன். டிஸம்பர் மாதம் 13-ம் தேதியன்று நான் ஒலிபெருக்கியில் பேசியபொழுது நேசதேசத்தார்களுக்கு இந்தியா முக்கியத்வமுள்ளதென்றும் நம்முடைய யுத்த முயற்சிகளைக் கெடுக்க அவர்களாலியன்றதை ஜப்பான் செய்யக்கூடுமென்றும் நான் சொன்னேன். நேசதேசத்தார்களின் தாக்குதல் அதிகரித்துவரும்பொழுது நம்முடைய அமைதியைக் குலைக்க ஜப்பானியர்கள் முரட்டுத்தனமான நடவடிக்கைகளை மேற்கொண்டு விமானத் தாக்குதல் மூலமாகவும் படையெடுப்பு மூலமாகவும் நமது நாட்டில் கலவரத்தையும் பீதியையும் உண்டுபண்ண முயற்சி செய்வார்களென்று எச்சரிக்கை செய்தேன்.

யுத்த நிலைமையைப் பற்றிவும் இந்தியத் துருப்புகளின் அரிய சேவைகளைப்பற்றியும் கனம் ராஜா யுவராஜ் தத்தாசிங் விடுத்த கேள்விக்கு மறுமொழி கூறும்பொழுது இந்த சபையில் ஒரு அறிக்கையை சமர்ப்பித்தேன்.

#### அதிக நம்பிக்கைகொண்ட தாக்குதல்.

சென்ற மாதத்தில் அரக்கானில் நமது 7-வது படையை விலாப்பக்கத்திலும் பின்புறத்திலும் தாக்க எதிரி செய்த துணிவுகரமான, சிலாக்கியமான, ஆனால் அளவுகடந்த நம்பிக்கை கொண்ட தாக்குதல் எதிரிக்கு உண்டாகியிருக்கும் அதிர்ச்சியின் முதல் நடவடிக்கையாகும். அதற்கு வடக்கில் மற்றொரு நடவடிக்கையை எதிரி மேற்கொள்ளுவானென்று நாம் எதிர் பார்த்திருந்தோம். இந்த நடவடிக்கை மணிப்பூர் ஸமஸ்தானத்தின் காடடர்ந்த மலைப் பிராந்தியங்களில் துவங்கிவிட்டது.

அரக்கான் போர்முனையில் நம்முடைய பலமான தாக்குதலை சமாளிக்க எதிரி செய்த பிரயத்னம் வீணாகப்போனபின் எதிரிகள் மணிப்பூர் பிராந்தியத்தில் அதே நடவடிக்கையை ஆரம்பித்திருக்கிறார்கள். எதிரி போர் துவக்கியிருக்கும் கரடுமுரடான மலைப்பிரதேசத்தில் கோர்வையாக தற்காப்புகளை அமைப்பது கஷ்ட சாத்தியமானது.

சென்ற இரண்டு வருஷங்களாக, சிண்ட்வின் நதிக்கரையில் குவித்துவரும் எதிரியின் துருப்புகளை சமாளிக்கப் போதுமான படைகளை அனுப்ப காடுகள்மூலமாக ரஸ்தாக்களை அமைக்க நாம் பிரயத்னம் செய்து வந்தோம்.

இப்பொழுது ஜப்பானியர்கள் பலமான துருப்புகளை அனுப்பி, நமக்கு வரும் ஸப்ளைகளைத் துண்டிப்பதனால் நம்முடைய முன்னணிப் படைகளைப் பின்வாங்கும்படி செய்யவும் அவர்கள் முயற்சி செய்துவருகிறார்கள்.

எதிரி உத்தேசித்தால் அமானுஷமான இந்த மலைபிராந்தியத்திற்குள் படைகளை அனுப்புவதில் எதிரிக்கு ஒருவரும் தடைசெய்ய முடியாதென்று நாம் அறிவோம். இந்தியா பேரில் பேடிஜமாகப் படையெடுப்புச் செய்ய எதிரிக்கு எப்பொழுதும் சௌகரியமிருந்தது.

ஆகிலும் நம்மைவிட இந்தத் துணிவுகரமான செய்கையில் எதிரிக்கு அதிக சிரமங்கள் ஏற்படக்கூடும். சென்ற வருஷத்தில் பர்மாவுக்குள் துணிவுகரமாகச் சென்ற வின்கேட்டின் கோஷ்டியார்களுக்குத் தரைமார்க்கமான ஸப்ளைகளைத்தவிர விமான மூலமாக அதிக சாதகம் கிடைத்து வந்தது.

### நேசதேசத்தார்களின் விமான ஆதிக்கம்.

நேசதேசத்தார்கள் தங்கள் விமான ஆதிக்கத்தைப் பரிபாலித்து வந்திருக்கிறார்கள். ஒரு வருஷத்துக்கு முன்னிருந்ததைவிட விமான ஆதிக்கம் இப்பொழுது மிகுதியாகயிருக்கிறது. அதன் விளைவாக 14-வது சேனையைச் சேர்ந்த படைகள் பர்மாவுக்குள் வெகுதூரம் முன்னேறியிருக்கின்றன. நமது துருப்புகளுக்கு விமானப்படை உதவியிருப்பது போல் எதிரியின் விமானப்படையின் பலஹீனத்தினால் அவனுடைய துருப்புகளுக்கு ரக்ஷணை கிடைக்காது.

ஆகையினால் நமது படைகளின் கவனத்தை வேறுபக்கம் திருப்ப எதிரி செய்யும் நடவடிக்கை வெகுதூரம் செல்லமுடியாது. சொற்ப ஆகாரத்தை உட்கொண்டும் ஜனநெருக்கமில்லாத நாடுகளிலுள்ள சாமான்களைக் கொள்ளையடித்தும் போரை நடத்திவிடலாமென்று எதிரி நம்பியிருக்கலாம்.

சபையில் யுத்த அங்கத்தினராகவும் இந்திய சேனாதிபதியுமான நான் நமது எல்லைச்சரக நடவடிக்கையைப்பற்றி நேசதேச உயர்தர சேனாதிபதியிடமிருந்து அடிக்கடி தகவல்களை அறியக்கூடும். நம்முடைய துருப்புகளின் மேன்மையும் திறமையும் ஜப்பானியரின் எதிர்த் தாக்குதலை கூடியசீக்கிரத்தில் துறத்தியடித்துவிடுமென்று நான் இச்சபைக்கு உறுதி கூறுகிறேன்.

இந்தியாவின் எல்லைச்சரகத்திலுள்ள வனாந்திரமான ஜனநெருக்கமில்லாத காடுகளில் எதிரிகள் முன்னேறிவருகிறார்களென்பதைக்கண்டு அதிகமாக பீதியடைய முகாந்திரமில்லை.

### துருப்புகளிடம் நம்பிக்கை.

அஸ்ஸாமிலுள்ள நமது இருப்புப்பாதையையும், நதிமார்க்கங்களையும், விமான தளங்களையும் தாக்க வசதியளிக்கக்கூடிய ஸ்தானங்களுக்கு ஜப்பானியர்கள் முன்னேறினால்தான் நமக்கு உண்மையான அபாயம் ஏற்படும்.

இதை சாதித்துக்கொள்ள ஜப்பானியர்கள் உயரமான மலைகளையும் அடர்ந்த காடுகளையும் தாண்டிவரவேண்டும். விமானப்படையின் ரக்ஷணையும் உதவியும் பெறாத எதிரி நமது துருப்புகளை அழிக்காமலும் அல்லது துறத்தியடிக்காமலும் அவனுடைய முன்னேற்றத்தை சமாளித்துக்கொள்ள முடியாது.

நமது படைகள் இந்த நெருக்கடியான காடுகளில் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அங்கே போர் புரியவும் அவர்கள் சக்தியுள்ளவர்கள். அவர்களிடம் போர்புரியும் ஊக்கம் ததும்புகிறது.

இந்தப் போர்முனையில் இறுதி நடவடிக்கையைப்பற்றி எனக்குத் திடமான நம்பிக்கை உண்டு. ஆகிலும் நமது சேனைத் தலைவர்களுக்குத் திருப்திகரமான நடவடிக்கை ஏற்படுவதற்கு சிறிது காலதாமதம் ஏற்படும்.



# வார யுத்தச் செய்திகள்.

## (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 14—3—44 (செவ்வாய்க்கிழமை). | நேசதேசப் படைகள் நியூ பிரிடனின் வடக்குக் கரையிலுள்ள எலியோனோரா விரிகுடாவில் இறங்கினார்கள். ருஷ்யர்கள் நீபர் நதியின் நுனிபாகத்தில் மற்றொரு ஜெர்மன் சேனையை வளைத்துக்கொண்டார்கள். |
| 15—3—44 (புதன்கிழமை). | ருஷ்யர்கள் வோருவிட்ஸாவையும், டிரோஸ்டினட்ஸையும் பிடித்தனர். |
| | ருஷ்ய சமாதான நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளாவிட்டால் பின்லாந்துக்கு ஆபத்து நேரிடுமென்று பிரிடிஷ் ஒலிபரப்பு நிலயம் எச்சரிக்கை செய்திருக்கிறது. |
| | 1,000 பிரிடிஷ் வெடி விமானங்கள் ஸ்டட்கார்ட்டைத் தாக்கின. |
| 16—3—44 (வியாழக்கிழமை). | யுத்தத்திலிருந்து வெளியேறும்படி ரூஸ்வெல்டு பின்லாந்துக்குச் செய்தி அனுப்பியிருக்கிறார். |
| | ருஷ்யர்கள் ஒடெஸ்ஸா—லுவோவ் இருப்புப் பாதையைத் துண்டித்துவிட்டனர். |
| 17—3—44 (வெள்ளிக்கிழமை). | நீஸ்டர் நதியைத் தாண்டிவிட்டு ருஷ்யர்கள் பெஸ்ஸாராபியாவுக்குள் புகுந்தனர். |
| | அமெரிக்க வெடி விமானங்கள் பகலில் வியன்னா பேரில் வெடி குண்டுகளைப் பொழிந்தன. |
| | நேசதேசப் படைகள் பர்மாவில் ஜப்பானியப் படைகளுக்குப் பின் ஒரு தளத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். |
| 18—3—44 (சனிக்கிழமை). | ருஷ்யர்கள் நீஸ்டர் நதியின் கிழக்குக் கரையிலுள்ள யாம்போலையும் ரிப்னிஸ்டாவையும் பிடித்தனர். |
| | அமெரிக்க பறக்கும் கோட்டை விமானங்கள் பகலில் ஆக்ஸ்பர்க்கைப் பலமாகத் தாக்கின. |
| | 1,000 பிரிடிஷ் விமானங்கள் பிராங்பர்ட்டைத் தாக்கின. |
| 19—3—44 (ஞாயிற்றுக்கிழமை). | ருஷ்யர்கள் மால்டேவியாவிலுள்ள சாரோகா நகரத்தைப் பிடித்தனர். |
| | நேசதேசப்படைகள் பர்மாவிலுள்ள சின்மலையில் ஜப்பானிய ஸ்தானங்களை ஊடுறுவிச் சென்றனர். |
| | இரண்டாம் போர்முனைக்குப் பூர்வாங்கமாக பிரிடிஷ் இருப்புப்பாதைகள் ரகசிய சேவைக்கு அமர்த்தப்பட்டு விட்டன. |

## (B)-செய்திச் சுருக்கம்.

ருஷ்யா.—பக் நதியிலுள்ள எதிரியின் தற்காப்புகளில் 60 மைல்கள் விசாலமான பிளவு ஏற்படுத்தப்பட்டது. ஒடெஸ்ஸா பிரதேசத்தின் மாகாண ஸ்தலங்களான வாருட்ஸும் டிரோஸ்டினெட்ஸும் பிடிபட்டன. ஒடெஸ்ஸாவுக்கு ஆபத்து உண்டாகிவிட்டது.

இந்தப் பிளவு வழியாக ருஷ்யப்படைகள் முன்னேறி ஒடெஸ்ஸா—லுவோவ் இருப்புப் பாதையை மற்றொரு இடத்தில் துண்டித்து வாப்னியார்கா, சிமெரின்கா என்ற இடங்களைப் பிடித்தனர். இதற்குமுன் அந்த இருப்புப்பாதை புரோஸ்குராவிலும், டார்னோபோலிலும் துண்டிக்கப்பட்டது.

பக் போர்முனையில் நடைபெற்ற 10 நாள் யுத்தத்தில் ஜெர்மானியர்கள் 36,000 துருப்புகளை இழந்தனர். 13,000 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஜெர்மன் 6-ம் படை நிர்மூலமாக்கப்பட்டிருக்கிறது.

நீஸ்டர் நதியை 30 மைல் விஸ்தீரணத்தில் ருஷ்யர்கள் கடந்து மால்டேவியாவுக்குள் புகுந்துவிட்டார்கள். சாரோகா என்ற நகரம் விழுந்துவிட்டது.

வினிட்ஸா, புரோஸ் குராவ், நிகாலேயேவ் சுற்றி வளைக்கப்பட்டன. இந்த வாரத்தில் கீழ்கண்ட பிரதேசங்கள் பிடிபட்டன.

**நிகோலேயேவ் பகுதி:** ஷிரோகாயா—பால்கா, நோராயா—ஒடெஸ்ஸா.

**கிரோவாய்கிராட் பகுதி:** பாட்விஸ்கோயி, நோவோ ஆக்கான்கெலக், பாப்ரினெட்ஸ், ராவ்னோயி.

**வினிட்ஸா பகுதி:** டல்சின், நெமிராவ், ட்யூஷ்கி, கென்வான், டோராஸ்போல், கிரிஷோபோல், செசில்னிக், பெஸ்ஸான்கா.

**போலந்தில்**—டப்னோ.

**ஊமானுக்குத் தென்மேற்கில்.**—பிராட்ஸ்லாவ்.

**நீபருக்குக் கிழக்கில்.**—யாம்போல், ரிப்னிட்ஸா.

**இதாலி.**—நேசதேசப்படைகள் காசினோ நகரத்தின் பெரும் பாகத்தையும் காசினோ இருப்புப்பாதை ஸ்டேஷனையும் ஆக்கிரமித்தனர்.

**விமான நடவடிக்கை.**—இந்த வாரத்தில் பிராங்க்பர்ட்டும், பிரன்ஸ்விக்கும், ஸ்டட்கார்ட்டும், ஆக்ஸ்பர்க்கும் வியன்னாவும், ஸோபியாவும் தாக்குண்டன. மத்தியதரைக்கடலிலுள்ள விமான தளங்களிலிருந்து சென்ற விமானங்கள் முதன் முதலாக வியன்னாபேரில் குண்டுகளைப் போட்டன. இடைவிடாது 1,500 அல்லது 2,000 விமானங்கள் தாக்கின. ஸ்டட்கார்ட் பேரில் 3,000 டன்கள் எடைமானமுள்ள வெடிகுண்டுகள் போடப்பட்டன.

**பஸிபிக் போர்.**—நேசதேசப்படைகள் நியூ பிரிடனில் வடக்குக் கரையிலுள்ள எலியோனோரா வளைகுடாவில் லாங்க்ட்லிங்காவில் இறங்கின. மேலும் அட்மிராலிடி தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த மேனஸ் தீவிலும் அப்படைகள் இறங்கி அதிலுள்ள லோராங்கா விமான தளத்தைக் கைப்பற்றிவிட்டன.

ஸாலமன்ஸ் தீவில் போகன்வில்லியில் நேசதேசத்தாரின் முன்னேறும் வாசலை ஜப்பானியர் பதில் தாக்குதல் செய்தது முறியடிக்கப்பட்டது. புதன்கிழமையன்று டிரக் தீவு தாக்கப்பட்டது.

**சைனு.**—சீனர்கள் தென்மேற்கு ஷான்ஸி மாகாணத்தில் ஹெலிங்க்வான் என்ற முக்கியமான கணவாயைத் திரும்பிப் பிடித்தார்கள்.

**பர்மா.**—வடக்கு பர்மா போர்முனையில் சீனர்கள் டிங்காக் சாகாவைப் பிடித்தனர்.

மாங்க்டா—பூதேடாங் ரஸ்தாவிலுள்ள முக்கியமான ஜப்பானிய தளமான ராஸாபில் பிடிபட்டது. ராஸாபில்லுக்குத் தெற்கே பிரிடிஷ், மேற்கு ஆபிரிக்கப்படைகள் எதிரியின் விலாப்பக்கத்திலிறங்கி ஆறு கிராமங்களைப் பிடித்தனர். கான்விண்டினும், டோடானும் பிடிக்கப்பட்டன.

வட பர்மாவின் மத்தியில் ஜப்பானுடைய 18-வது டிவிஷன் படைகளுக்குப்பின் கிளைடர்கள் மூலமாகப் படைகளை இறக்கி நேசதேசத்தார்கள் ஒரு ஸ்தானத்தை அமைத்துவிட்டார்கள். சென்ற வெள்ளிக்கிழமையன்று நேசதேசப்படைகள் சின் மலைகள் பிராந்தியத்தில் டிட்டிமுக்கு வடக்கிலுள்ள ஜப்பானிய ஸ்தானத்தை ஊடுருவிச் சென்றனர்.

பதில் தாக்குதல் செய்யும் முறையில் ஜப்பானியப்படைகள் அஸ்ஸாம் எல்லையைத் தாண்டி மணிப்பூர் ஸமஸ்தானத்துக்குள் ஒன்று அல்லது இரண்டு இடங்களில் நுழைந்துவிட்டனர்.



## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**12—3—44.** (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—ராணுவ இலக்குகள்—பாஸ் டி கலே (Pas De Calais) பிரதேசம்.

இரவு.—சுரங்க வெடி பாவுதல்—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

இதாலி (Italy).

எதிரி பீரங்கி ஸ்தாபனங்கள், ஸ்டோர்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

ருஷ்யா (Russia).

(23 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

வேக் (Wake) தீவு, கில்பெர்ட் தீவுகளின் அருகிலுள்ள நாரு (Nauru).

துறைமுகம்.—நியூ பிரிடன் (N. Britain), நியூ கினி (N. Guinea).

பர்மா (Burma).

ரயில் ரோட் ஸ்டேஷன்.—ஷ்வேபோ (Shwebo).

இலக்குகள்.-கலடான் (Kaladan), அரக்கான் (Arakan).

எதிரி சைனியங்கள், துருப்பு ஸ்தாபனங்கள், ஸப்ளைக் குவியல்கள்.—சின் மலைகள் (Chin Hills), சிண்ட்வின் (Chindwin), வடமேற்கு பர்மா (N. W. Burma).

ஜப்பானிய ஸ்டோர்கள்.—மானிவெட் (Manywet) டிற்கு வட மேற்கில்.

**13—3—44.** (திங்கட்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—இலக்குகள்—வடக்கு பிரான்ஸ் (North France).

(2 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இரவு.—(2 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன. 3 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

ரயில்வே இலக்குகள்.—லெ மான்ஸ் (Le Mans).

பிராங்பர்ட் (Frankfurt).

இதர இலக்குகள்.—மேற்கு ஜெர்மனி (Western Germany).

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

இதாலி (Italy).

எதிரி சைனியங்கள், ஸப்ளைக் குவியல்கள்.—ஆன்ஸியோ முனை (Anzio).

ரயில்வே தளங்கள்.—ரோம் (Rome).

ருஷ்யா (Russia).

(20 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

துறைமுகம் கப்பல்கள்.—நியூ பிரிடன் (New Britain), நியூ கினி (New Guinea).

பர்மா (Burma).

எதிரி சைனியங்கள், துருப்பு முகாம்கள், போக்குவரத்து ஸாதனங்கள்.—சின் மலைகள் (Chin Hills), சின்ட்வின் (Chindwin) வட மேற்கு பர்மா (N.W. Burma).

ஜப்பானிய தலைமை ஸ்தாபனம்.—ஹோமாலின் (Homalin).

போக்குவரத்து ஸாதனங்கள்.—தெற்கு பர்மா (South Burma).

**14—3—44.** (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

இரவு.—தொழிற்சாலை இலக்குகள்—ஜெர்மனியிலுள்ள டஸ்ஸல்டார்ப் (Dusseldorf).

இதாலி (Italy).

(4 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன. 1 நேசதேச விமானம் காணப்படவில்லை).

ரயில்வே தளங்கள்.—ரோம் (Rome), பியாம்பினோ (Piombino), மாரினாடி பைஸா (Marinadi Pisa).

பீரங்கி ஸ்தாபனங்கள், துருப்பு முகாம்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

ருஷ்யா (Russia).

(35 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

7 ஜப்பானிய தளங்கள்.—காரோலைன்ஸ் (Carolines), மார்ஷல்ஸ் (Marshalls).

விமான நிலயங்கள்.—ரபால் (Rabaul).

எதிரி தளங்கள்.—நியுகினியிலுள்ள வீவாக் (Wewak).

பர்மா (Burma).

ஸப்ளைக் குவியல்கள்.—ரங்கூன் (Rangoon) பிரதேசம், புரோம் (Prome).

வேட்டை விமானத் தாக்குதல்கள்.—மோல்மீன் (Moulmein), ஸயாம் (Siam).

இலக்குகள்.—அரக்கான் (Arakan), கலடான் (Kaladan), மாயு (Mayu), சின் மலைகள் (Chin hills), சிண்ட்வின் (Chindwin), வடமேற்கு பர்மா (N.W. Burma).

**15—3—44.** (புதன்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

விமானத் தொழிற்சாலை.—ப்ரன்ஸ்விக். (Brunswick). (36 நாஸி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன, 8 நேச தேச விமானங்கள் காணப்படவில்லை).

ராணுவ இலக்குகள்.—வடக்கு பிரான்ஸ் (North France).

விமான நிலயம்.—பெல்ஜியம் (Belgium).

கடற்கரை கப்பல்கள்.—டச்சுத் தீவுகள்.

இரவு.—(40 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

தொழிற்சாலை, இலக்குகள்.—ஸ்டட்கார்ட் (Stuttgart).

மியூனிச் (Munich), இதர இலக்குகள் வடமேற்கு ஜெர்மனி.

ரயில்வே இலக்குகள்.—பிரான்ஸிலுள்ள அமீன்ஸ் (Amiens).

**இதாலி (Italy).**

எதிரி சைனியங்கள்.—காஸினோ (Cassino), ஆன்ஸியோ (Anzio) முனை.

**ருஷ்யா (Russia).**

(42 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

எதிரி தளங்கள்.—காவியெங் (Kavieng), நமடானை (Namatanai), ஸெயின்ட் ஜார்ஜ் முனை (Cape St. George), ரபால் (Rabaul).

விமான நிலயம்.-நியூ பிரிடனிலுள்ள டோபெர்ரா (Tobera); நியூ கினியிலுள்ள அய்ட்டாபி (Aitape).

எதிரி சைனியங்கள்.—வீவாக் (Wewak)—(10 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

எதிரி தளங்கள்.—முஸ்ச்சு (Muschu) தீவு. (4 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமான நிலயம், விறதுக்துவியல்கள், இதர இலக்குகள்.—டிரக் (Truk).

**பர்மா (Burma).**

எண்ணெய்க் கிணறுகள்.—சாக் (Chauk), லானிவா (Lanywa), காலின் (Kawlin), பின்லெபு (Pinlebu).

இலக்குகள்.—கலடான் (Kaladan), மாயூ (Mayu), சின்ட்வின் (Chindwin).

**16—3—44.** (வியாழக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—(125 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

இலக்குகள்.—தென்மேற்கு ஜெர்மனி (S. W. (Germany)—(76 எதிரி விமானங்கள் சுட்டுத்தளளப்பட்டன, 35 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இலக்குகள்.—வடக்கு பிரான்ஸ் (N.France). (4 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இரவு.—மிச்சிலின் ரப்பர் டயர் தொழிற்சாலை.—கிளெர்மாண்ட் பெர்ராண்ட் (Clermont Ferrand).

ரயில்வே இலக்குகள்.—அமீன்ஸ் (Amiens).

இலக்குகள்.—மேற்கு ஜெர்மனி (West Germany).

சுரங்கவேடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியஙகளில்.

பல்கேரியாவின் தலைநகரிலுள்ள சொபையா (Sofia).

**இதாலி (Italy).**

(3 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன; 4 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

பீரங்கி ஸ்தலங்கள்.—பாண்டிகார்வோ—பியெட்மான்டி (Ponticorvo—Piedmonte) பிரதேசம்.

பீரங்கி ஸ்தாபனங்கள்.—எஸ்பிரியா (Espria).

கப்பற் கட்டுந் துறைகள்.— லெக்ஹார்ன் (Leghorn).

கப்பல்கள்.—மேற்கு இதாலியின் கடற்கரை.

**ருஷ்யா (Russia).**

(10 ஜெர்மன் விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

எதிரி சைனியங்கள்.—மானஸ் (Manus) தீவு.

துறைமுகம், படதுகள்.—ரபால் (Rabaul), வீவாக் (Wewak), முஸ்ச்சு (Muschu).

**பர்மா (Burma).**

விமான நிலயங்கள்.—யாடங் (Ywatung).

வடக்கு பர்மா (N. (Burma)விலுள்ள ஸாவேலி (Saweli).

எண்ணெய்க் கிணறுகள்.—லானிவா (Lanywa).

எதிரி சைனியங்கள், போக்குவரத்துகள்.—அரக்கான் (Arakan), மாயூ (Mayu).

எண்ணெய் கொண்டுபோகும் படகுகள்.—தென் பர்மா (S. Burma).

**17—3—44.** (வெள்ளிக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.–எதிரி தொழிற்சாலைகள், சுரங்கங்கள்–வியென்னா (Vienna).

ரயில்வே தளங்கள்.—ஸொபையா (Sofia),

விமான நிலயங்கள்.—வடக்கு பிரான்ஸ் (N. France), ஹாலந்து (Holland).–(3 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

இரவு.—இலக்குகள்—மேற்கு ஜெர்மனி (Western Germany).



**இதாலி (Italy).**

ரயில்ரோட் பாலம்.—செஸ்ஸினா (Ceccina).

ரயில் தளங்கள்.—மாண்டி பெஸ்காலி (Monte Pescali).

பீரங்கி ஸ்தானங்கள், ஸப்ளைக் துவியல்கள்.—பிராஸினோன்-பெரான்டினோ (Frosinone-Ferentino).

எதிரி சைனியங்கள்.—ஆன்ஸியோ (Anzio).

**ருஷ்யா (Russia).**

(37 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

எதிரி கடற்படை தளம்.—ஜவாவிலுள்ள சௌராபாயா (Sourabaya).

விமான நிலயங்கள், ஸப்ளைப் பிரதேசங்கள்.–ரபால் (Rabaul).

பைவானக் ஸப்ளைப் பிரதேசங்கள், பீரங்கி ஸ்தாபனங்கள்.—நியூ கினியிலுள்ள வீவாக் (Wewak).

ஜப்பானிய தளங்கள்.—குரைல் தீவுகள் (Kurile).

**பர்மா (Burma).**

எதிரி விமான நிலயங்கள்.—தென் பர்மா, ஆன்பாக் (Onbauk), ஷுவேபோ (Shwebo).

விமான நிலயம்.—ஹெஹோ (Heho).

இலக்குகள்.—அரக்கான் (Arakan), மாயு (Mayu), கலடான் (Kaladan).

துவியல்கள்.—கோங்கி (Kongy).

**18—3—44.** (சனிக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

(82 நாஸி விமானஙகள் சுட்டுத்தள்ளப்பட்டன).

பகல்.—ராணுவ இலக்குகள்-ஒபர்போபென் ஹோபென் (Oberpfoffen Hoffen).

லெச்பெல்டு (Lechfeld), லாண்ட்ஸ்பர்க் (Landsberg), பிரயெட்ரிக்ஷாபன் (Friedrichshafen), ஆக்ஸ்பர்க் (Augsburg).

விமானத் தொழிற்சாலை.—ஹாலண்டு (Holland).

விமான் நிலயங்கள் இதர இலக்குகள்.–வடக்கு பிரான்ஸ் (N. France).

இரவு.—தொழிற்சாலை ஸ்தலம்—பிராங்பர்ட் (Frankfurt). (22 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

பெரிய வெடிகுண்டு தொழிற்சாலை.—பெர்கொராக் (Bergerac).

ரயில்வே ஜங்ஷன்.—புலோடிவ் (Plodiv).

**இதாலி (Italy),**

(65 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன.)

விமான நிலயங்கள்.—யுடைன் (Udine), வில்லா ஆர்பா (Villa Orba), லாவாரியானோ (Lavariano), கோரிஸா (Goriza), மானியாகோ (Maniago).

ரயில் தளங்கள்.—ஆர்வியெட்டோ (Orvieto), போலிக்னோ (Foligno).

கப்பற் கட்டுந் துறைகள்.—பியாம்பினோ (Piombino), லெக்ஹார்ன் (Leghorn).

மோட்டார் போக்குவரத்துகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசஙகள்.

கப்பல்கள்.—டால்மேஷியன் (Dalmation) கடற்கரை.

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

எதிரிக் கப்பல் கூட்டங்கள்.—ஹாலண்டியா (Hollandia).

நிலயங்கள், ஸப்ளைப் பிரதேசங்கள்.–வீவாக் (Wewak).

எதிரி சைனியங்கள்.—பொகெய்ன்வில்லி (Bougainville).

ஜப்பானிய கடற்படை தளம்.—ஜாபா (Jaba) நதி.

ஜப்பானியர் கையிலுள்ள தீவுகள்.—மார்ஷல்ஸ் (Marshalls).

**பர்மா (Burma).**

துவியல்கள்.—கொங்கி (Kongy).

போக்குவரத்து எதிரி சைனியங்கள்.—அரக்கான் (Arakan), கலடான் (Kaladan).

ஸப்ளைக் துவியல்கள்.—தென் பர்மா (South Burma).

இலக்குகள்.-மித்கினா (Myitkyina), காமெய்ங் (Kamaing), மொகாங் (Mogaung).

தொழிற்சாலைகள்.—மத்தியபர்மா (Central Burma).

## *விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.*

**13—3—44.** (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain).**

இங்கிலாந்தின் தெற்கும் தென் கிழக்குப் பாகங்களும்.

**ருஷ்யா (Russia).**

ஒரு தகவலும் இல்லை.

**தூரக்கிழக்கு (Far East).**

நேசதேச சைனியங்கள் முன்னேறித்தாக்கும் பிரதேசங்கள்.—வடக்கு பர்மா.

(4 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

14—3—44. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

லண்டன் (London) பிரதேசம்.
(13 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

ருஷ்யா (Russia),
தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

15—3—44. (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

லண்டன் (London) பிரதேசம்.

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

16—3—44. (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

கிழக்கு ஆங்கிலியா (East Anglia)விலுள்ள ஒரு பட்டணம்.

ருஷ்யா (Russia).

ஒரு தகவலும் இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

நேச சைனியங்கள் முன்னேறித்தாக்கும் இடங்கள்.—பர்மா (Burma).

17—3—44. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

லண்டன் (London) பிரதேசம், (எச்சரிக்கை மட்டும்).

ருஷ்யா (Russia),
தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

18—3—44. (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

கிழக்கு ஆங்கிலியா (East Anglia), கிழக்கு மிட்லாண்டின் (East Midlands) சில பாகங்களும். (4 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

ருஷ்யா (Russia),
தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

19—3—44. (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia),
தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**ருஷ்ய வெற்றிகள்.** ராணுவ நடவடிக்கைகளுக்கு காலநிலை சௌகரியமாகயில்லாதபோதிலும், ருஷ்யாவில் நேசதேசத்தார்களுக்கு அநேக வெற்றிகள் கிடைத்திருக்கின்றன. ஜெனரல் சூகாவை "அன்பு மிக்க" என்ற சொற்களால் அழைப்பதற்குத் தகுந்த முகாந்திரமிருக்கிறது. 1941-ம் வருஷத்தில் அவர் ஜெர்மானியர்களை மாஸ்கோவிலிருந்து பின்காட்டி ஓடும்படி செய்தார். 1942-ம் வருஷத்தில் ஸ்டாலின்கிராட்டில் ஜெர்மன் துருப்புகளை அவர் வளைத்துக்கொண்டார். 1943-ம் வருஷத்தில் லெனின்கிராட்டின் முற்றுகையை அகற்றினார். வடக்குப்பகுதியை விட்டுவிட்டு தெற்குப்பகுதியில் யுத்தத்தை அவர் துவக்கி லூவோவ்—ஒடெஸ்ஸா இருப்புப்பாதையைத் துண்டித்துவிட்டார். மற்றொரு தீரம் பொருந்திய தளகர்த்தர் நிகோலோயேவைச்சுற்றி வளைத்து பெரிஸ்ஸாவைப் பிடித்துக்கொண்டார். மற்றொரு தாக்குதல் மூலம் நீஸ்டர் நதி தாண்டப்பட்டது. நதியின் இருபக்கங்களிலுமுள்ள 140 கிராமங்களும், நகரங்களும் பிடிபட்டன. பக் நதியின் தாழ்வரையில் பத்து நாள் நடைபெற்ற போரில் 50,659 ஜெர்மானியர்கள் உயிர் துறந்தார்கள், அல்லது காயமுற்றார்கள். ருஷ்யப்படைகள் பெஸ்ஸாராபியாவுக்குள் நுழைந்துவிட்டன. மால்டேவியாவில் சாரோகா பிடிபட்டுவிட்டது. 1941-ம் வருஷம் வரையில் பெஸ்ஸாரபியா ருஷ்யர் வசமிருந்தது. அதன்பின் அதை ருமேனியா கைவசப்படுத்திக்கொண்டது,

வி வி வி வி வி

**ஜெர்மனிக்கு ஆதீனமான** தேசங்களில் குதூகலமில்லை. அச்சு நாடுகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டதைப் பற்றி அவர்கள் துக்கிக்கிறார்கள். அந்நாடுகளிலுள்ள குயிஸ்லிங் நிர்வாகம் ஸ்திரமாகயில்லை. அவைகள் ஜனரஞ்சகமாக இருக்கவில்லை. நாஸிகளின் குறவளைப் பிடிப்பு பலமாகயிருப்பதால் ஜெர்மன் கொடுங்கோன்மையிலிருந்து தப்பித்துக்கொள்ள அவர்களுக்கு மார்க்கம் புலப்படவில்லை.

வி வி வி வி வி

**பின்லாந்து.** இது ஜெர்மனியின் அமுலுக்குட்பட்ட தேசம். அச்சு அழிந்துவரும்பொழுது, தன்னுடைய சொந்த நலத்தைப் பொருட்படுத்தாமல், சமாதானப் பேச்சுக்களை பின்லாந்து நிராகரித்து வருகிறது. சமாதானத்தை தாராள மனப்பான்மையுடன் ருஷ்யா கோரிவருகிறது. பின்லாந்தின் உணர்ச்சியை மதித்து ருஷ்யா சமாதான நிபந்தனைகளைக் குறைத்துவிட்டது. ஹாங்



கோவுக்கு பதிலாக பேட்ஸாமோவைத் தரவேண்டுமென்று கோருகிறது. பின்லாந்திலுள்ள ஜெர்மன் படைகளைத்துண்டித்துவிடவேண்டுமென்று அது ஏற்பாடு செய்திருக்கிறது. பிரிடன் பின்லாந்துக்குக் கடுமையான வார்த்தைகளைச் சொல்லி புத்தியுறைத்திருக்கிறது. பின்லாந்துடன் அமெரிக்காவுக்கு உள்ள சம்பந்தங்களை நிறுத்திவிடுவேனென்று அமெரிக்கா பயமுறுத்துகிறது. பின்லாந்துக்குப் போதனை செய்வதில் ஸ்வீடனின் கஸ்டாவ் மன்னரும் சேர்ந்துவிட்டார். ஆகிலும் பின்லாந்து மறுதளித்துவிட்டது. பின்னிஷ் போர்முனையில் ருஷ்யா புதிய தாக்குதலைத் துவக்கிவிட்டது. ஆகிலும் நம்பிக்கையை இழப்பதற்கு இடமில்லை. ஏனெனில் ருஷ்யா நியாயமான கோரிக்கையை விடுத்திருக்கிறது. நேசதேசத்தார்கள் சமாதானம் செய்துகொள்ளும் மனப்பான்மையுடனிருந்து வருகிறார்கள். வெளிப்படையாக பிடிவாதமாகயிருந்தபோதிலும் பின்னிஷ் நிர்வாகம் இப்பவும் சமாதானப் பேச்சுகளைத்துவக்க மனமில்லாமலில்லை.

வி வி வி வி வி

**அயர்லாந்து.** ஐரோப்பாவில் மற்றொரு நாடும் பிடிவாதத்துடனிருக்கிறது. உலகம் பூராவிலும் பத்திரமின்மை ஏற்பட்டிருக்கிறபொழுது அயர்லாந்து நடுநிலைமையையும் சுயேச்சையையும்பற்றிப் பேசுகிறது. அச்சு நாட்டாரின் அபாயமிருக்கும்பொழுது இந்தப் பதங்களுக்கு ஒரு அர்த்தமுமில்லை.

டப்ளினிலுள்ள எதிரியின் அயல் நாட்டு காரியாலயங்களை மூடிவிடவேண்டுமென்ற கோரிக்கையை டிவேலராவின் நிர்வாகம் நிராகரித்துவிட்டது. டப்ளினிலிருந்து முக்கியமான ராணுவத் தகவல்கள் எதிரியின் நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. இதற்குப் பதில் நடவடிக்கையாக அயர்லாந்துக்குப் பிரயாணம் செய்வது தடைபட்டுவிட்டது. தெற்கு அயர்லாந்தைத் துண்டித்துவிடுவதற்கு இன்னும் சில முறைகளும் ஆலோசனை செய்யப்பட்டு வருகின்றன. காமன்ஸ் சபையில் மிஸ்ட்டர் சர்ச்சில் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்.

"நமது மூவகைப்படைகளில் அநேகர் ஐரிஷ் ஜனங்கள் தீரத்துடன் போர் புரிந்து அநேக வியாதிகளைப் பெற்றிருக்கிறார்களென்று நினைக்கும் பொழுது, இம்மாதிரியான நடவடிக்கைகளைக் கையாளவேண்டி நேர்ந்து விட்டதற்கு நான் வருந்துகிறேன்.

"நாங்கள் அவசரமாக நடவடிக்கைகளை ஆரம்பித்து விட்டோமென்று ஒருவரும் சொல்லமாட்டார்கள். எங்களைப்போல் எந்த தேசமும் பொறுமையுடனிருக்கமுடியாது. பிரிடிஷ் சாம்ராஜ்யப் படைகள், நேசதேசப் படைகள் ஆகிய எல்லோருக்கும் ஆபத்து நேரிடக்கூடுமாதலால் எதிர் காலத்தில் நடவடிக்கைகளின் பத்திரத்தைக் கோரி கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாயிற்று.

"டப்ளினில் ஜெர்மன், ஜப்பானிய தூதர்களிருப்பதனால் நேசதேசப் படைகளுக்கு அழிவு ஏற்படுமானால் அப்பொழுது பிரிடனுக்கும் தெற்கு அயர்லாந்துக்குமிடையே சரிப்படுத்த முடியாத பலமான பிளவு ஏற்பட்டுவிடும்.

"அமெரிக்கத் துருப்புகளை ரக்ஷிக்க நம்மாலியன்ற நடவடிக்கைகளை நாம் கையாளாவிட்டால் அமெரிக்காவுக்கு பிரிடிஷ் நிர்வாகம் சமாதானம் சொல்ல வேண்டிவரும்".

வி வி வி வி வி

**ருமேனியா.** ருமேனியாவின் நடவடிக்கை வேறு விதமானது. ருமேனியாவும் சமாதானத்தைக் கோருகிறது. ஆனால் ருஷ்யாவின் நிபந்தனையை ஒத்த சமதானமில்லை. ருஷ்யா, ருமேனியாவுடன் சமாதானப் பேச்சுக்களைத் துவக்கமறுத்து விட்டது. ருஷ்யா ஒரு பெரிய கபலத்தை விழுங்க உத்தேசிக்கிறதென்று ருமேனியா நினைத்துவிட்டது. ஆகிலும் தூதர்கள் ரகசியமாக அங்காராவில் ருஷ்ய, துருக்கி உத்யோகஸ்தர்களைச் சந்தித்து சமாதானப் பேச்சுகளைத் துவக்கியிருக்கிறார்கள். இப்பொழுதுள்ள யதேச்சாதிகாரியான மார்ஷல் அண்டோனஸ்குவையும் வெளியேற்ற அவர்கள் தயாராக இருக்கிறார்கள். இந்த நடவடிக்கை மார்ஷல் அண்டோனஸ்குவின் போதனையின் பேரிலும் ஆதரவின் பேரிலும் நடைபெறுகிறதென்று சொல்லக்கூடும். ஏனெனில் ருஷ்யர்கள் ருமேனியாவுக்குள் ஊடுருவிச் செல்லும் காலம் வந்து விட்டதால் அச்சு நாடுகளுடன் நட்பு வைத்திருப்பது பிரயோஜனமற்றதென்ற தோற்றம் பலப்பட்டு வருகிறது. இந்த அபிப்பிராயத்துடன் அரசாங்க கோஷ்டியும் எதிர்தரப்பும் ஒன்றுபட்டிருக்கின்றன. ஜெர்மானியர்களுக்கு வெளிப்படையாக அண்டோனஸ்குவின் நிர்வாகம் ஆதரவளித்துவந்தாலும் எதிர்த்து நிற்கும் கோஷ்டிகள் யுத்தத்துக்கு எதிர்ப்புள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதையும் தூண்டிவிடுகிறது.

ருமேனியாவின் சமாதான தூதரான ஸ்டர்பே இளவரசர் நேசதேசத்தாருடன் சம்பாஷணை செய்ய மத்தியக்கிழக்குக்கும், கெயிரோவுக்கும் சென்றிருப்பதாகத் தெரியவருகிறது. ருமேனி

யாவையும், மைகேல் மன்னனின் ஆக்ஷியையும் காப்பாற்ற அவர் கடைசியாக ஒரு பிரயத்னம் செய்வதுபோல் தோன்றுகிறது. அவன் இதற்குமுன் சக்திவாய்ந்த வல்லரசாயிருந்த போதிலும், அவன் அப்பொழுது சக்தியை இழந்துவிட்டான். யுத்த நிறுத்தத்தைக் கோரினால் நேசதேசத்தார்கள் எவ்விதமான சலுகையும் காட்டக்கூடுமென்று கண்டுபிடிக்க அச்சுநாடுகள் அனுப்பிய தூதராகவும் அவனிருக்கக்கூடும். அவனுடைய யோக்கியப்பொறுப்பைப்பற்றிப் பூரா விவரங்களும் வெளிவரும் வரையில் அவனுடைய தூதிலிருந்து அதிக பயன் ஏற்படுமென்று எதிர்பார்ப்பதற்கில்லை.

வி வி வி வி வி

**ஹங்கேரி.** ஹங்கேரிக்கு ஏற்பட்ட கதியானது அச்சு நாடுகளிடம் மதிமயங்கிக்கிடக்கும் மற்ற தேசங்களுக்கு வழிகாட்டியாகயிருக்கும். பேராசை கொண்டு 1939-ம் வருஷத்தில் கோமிண்டர்னை எதிர்க்கும் ஒப்பந்தத்தில் ஹங்கேரி கையெழுத்திட்டது. 1940-ம் வருஷத்தில் மூன்று வல்லரசு ஒப்பந்தத்தில் கலந்துகொண்டது. ருஷ்யா பேரில் அச்சு நாடுகளுக்கு உதவி செய்து படையெடுத்தது. அதற்கு வெகுமதியாக யூகோஸ்லாவியாவிலிருந்தும், ருமேனியாவிலிருந்தும் சில பாகங்களைத் துண்டாடி ஹங்கேரிக்கு ஜெர்மனி தானம் செய்தது. அதற்கு தண்டனை காலம் வந்துவிட்டது. ஹங்கேரியா மத்தியிலிருக்கிறது. அதற்கு மேற்கில் ஜெர்மனியும், கிழக்கில் ருமேனியாவும், தெற்கில் யூகோஸ்லாவியாவும், வடக்கில் ஸெக்கோஸ்லாவாக்கியாவுமிருக்கின்றன. ருஷ்யப் படைகள் ருமேனிய எல்லைச் சரகத்தை நெருங்கி வருவதால் ஹிட்லர் ஹங்கேரி பூராவையும் தன் வசப்படுத்தி அதன் நிர்வாகியைக் கைது செய்து ஜெர்மன் மந்திரிகளை நியமித்துவிட்டான். ஹங்கேரியை ரக்ஷிக்க ஒரு படைப்பகுதியை வைத்துவிட்டு ருஷ்ய—ருமேனிய எல்லைச் சரகத்திலுள்ள கார்பேதியன் மலைவழிகளைத் தற்காப்பு செய்ய அவன் சென்றிருக்கிறான்.

வி வி வி வி வி

**இதாலி.** ஆன்ஸியோவில் மூன்றுவது தாக்குதலிலும் செஸ்ஸல்ரிங் தோல்வியுற்ற பின், காஸினோ என்ற ஜெர்மன் தற்காப்பு அரண் தவிடுபொடியாகிவிட்டது. காஸினோவுக்காக கடும் போர் நடைபெறுகிறது.

வி வி வி வி வி

**வடக்கு இதாலி.** வடக்கு இதாலியில் எதிர்த்து நிற்கும் நடவடிக்கைகள் விருத்தியடைந்து வருகின்றன. மிலானில் ஏற்பட்ட இத்தாலியத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் பரவிவிட்டது. டஸ்கனி எல்லைச் சரகத்திலிருந்து பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்விட்ஸர்லாந்து வரையிலுள்ள 1,30,000 சதுர கிலோ மீடர்கள் கொண்ட பிரதேசம் பூராவிலும் கிளர்ச்சி உண்டாகிவிட்டது.

வி வி வி வி வி

**யூகோஸ்லாவியா.** கொரில்லாப் படைகள் ஜெர்மன் போக்குவரத்து மார்க்கங்களைத் தாக்கி அழித்து வருகின்றன.

வி வி வி வி வி

**கடல் போர்.** இது திருப்திகரமாக நடைபெறுகிறது. சென்ற வாரத்தில் நேசநாட்டாருக்கு 1 சதவிகிதம் தான் கப்பல் நஷ்டமென்று சொன்னோம். இப்பொழுது புள்ளிவிவரங்கள் கிடைத்திருக்கின்றன. சென்ற வருஷத்தில் எதிரிக்கு 200 யூ படகுகளும், 10,000 மாலுமிகளும் நஷ்டம். இந்தக் கால அளவில் பிரிடன் ஆர்க்டிக் மார்க்கமாக மர்மானஸ்க்குக்கு 88 சதவிகிதம் சாமான் கப்பல்களைக் கொண்டு போயிருக்கிறது.

வி வி வி வி வி

**சேர்ந்தாற் போல் வெற்றி.** இந்த வாரத்தில் கடலில் மகத்தான வெற்றிகள் கிடைத்துவிட்டன. பிரிட்டிஷ் கடற்படையைச் சேர்ந்த கப்பல்கள் வடக்கு அட்லாண்டிக் கடலில் ஒரு ஜெர்மன் யூ படகுக் கூட்டத்தைத் தாக்கி 20 நாட்கள் வரையில் போர் செய்து 6 யூ படகுகளை அழித்துவிட்டன. அவைகளில் மூன்று 16 மணி நேரத்திற்குள் மூழ்கடிக்கப்பட்டன. துணைக்காவல் கப்பல் கூட்டத்துக்கு ஒரு கப்பல் கூட நஷ்டம் ஏற்படவில்லை.

வி வி வி வி வி

**இடைவிடாத விமானப் போர்.** ஜெர்மனி பேரில் குண்டு வீச்சேற்படாது என்று கோயரிங் சொல்லியபின் இப்பொழுது தாக்குதல் உச்சநிலைமையை அடைந்துவிட்டது. மார்ச் மாதம் 4-ம் தேதி முதல் பலப்பட்ட விமானத் தாக்குதல் மேன்மேலும் அதிக நஷ்டத்தை விளைவிக்கிறது. இந்த வாரத்தில், பிரன்ஸ்விக், ஸ்டட்கார்ட்,



சோபையா, வியன்னா, ஆக்ஸ்பர்க், பிராங்க்பர்ட் முதலிய இடங்கள் தாக்கப்பட்டன. இந்தத் தாக்குதல்களில் 1,000 வெடி விமானங்கள் ஈடுபட்டன. 3,000 வெடி குண்டுகள் போடப்பட்டன. 10,000 உயர்தர வெடி குண்டுகளும் 3,50,000 எரி வெடிகளும் போடப்பட்டன. பெர்லின் மட்டும் 109 தடவை தாக்கப்பட்டிருக்கிறது. 25,000 டன்கள் மொத்த எடைமானமுள்ள வெடி குண்டுகள் வீசப்பட்டன. ஜனவரி மாதம் 1-ம் தேதி முதல் மார்ச்சு மாதம் 2-ம் தேதி முடிய 46,000 டன்கள் எடைமானமுள்ள வெடி குண்டுகள் வீசப்பட்டன. சராசரி தினசரி 150 டன்கள் வீதம் குண்டுகள் வீசப்பட்டன.

வி வி வி வி வி

**ஜெர்மன் விமானப்படை எங்கே?** முன்போல ஜெர்மன் விமானப்படை வலுவுடனிருந்துவருகிறதென்று ஜெர்மானியர்கள் உலகத்தாருக்குச் சொல்லி வருகிறார்கள். அந்த விமானப்படை எங்கு சென்று விட்டது. என்ன செய்து கொண்டிருக்கிறது? நிச்சயமாக அது ருஷ்யாவிலில்லை. ஏனென்றால் அநேகப் போர்முனைகளில் சண்டை போடும் பொழுதும்கூட ருஷ்யாவின் 600 விமானங்கள் பின்லாந்தின் தலைநகரமான ஹெல்ஸிங்கியைத் தாக்கி வருகின்றன. விமானப்படை ஆன்ஸியோவிலுமில்லை. அங்கே இருந்திருந்தால் இதற்குள்ளாக முன்னேறும் வாசலை அது தவிடுபொடியாக்கியிருக்கும். பிரிடனையும் அது பலமாகத் தாக்கவில்லை. ஏனென்றால் ஒரு சில விமானங்கள்தான் லண்டனுக்குத் திருட்டுத்தனமாக வந்து சேர்ந்தன. நேசதேசத் தாக்குதலை எதிர்த்து நிற்காததிலிருந்தே ஜெர்மன் விமானப்படை ஜெர்மன் நகரங்களையும் ரக்ஷித்து வரவில்லை.

வி வி வி வி வி

**படையெடுப்பு.** படையெடுப்பு காலம் வந்து விட்டது. மன்னர்பிரான் விமானப்படைகளையும், கவசம்பூண்ட படைகளையும் வேவு பார்க்கும் படைகளையும் மறை பொருளாக்கும் முஸ்தீப்புகளையும் பார்வையிட்டார். அரசாங்கத்தார் பிரிடனிலுள்ள இருப்புப்பாதைகளை உபயோகிக்கத் துவங்கி விட்டார்கள். கடற்கரை சுத்தி செய்யப்படுகிறது. படையெடுப்புக்கான ஆயத்தங்கள் தயாராகி வருகின்றன.

வி வி வி வி வி

**எதிரி பிரசாரம்.** அமெரிக்காவிலுள்ள பிரிடிஷ் அயல்நாட்டு தூதரான ஹாலிபாக்ஸ் பிரபு சொன்ன பிரகாரம் ஜெர்மானியர்களின் அதோகதி வந்து விட்டதென்று ஜெர்மன் மக்கள் அறிவார்கள். சமாதானம் பேசுவது அல்லது நேசதேசங்களிடையே பிளவை உண்டுபண்ணுகிறதென்று அவர்கள் நம்பியிருக்கிறார்கள். இதே சமயத்தில் ஜெர்மன் தலைவர்கள் வாணவெடி பீரங்கிகளையும், தானுகச் சுடும் பீரங்கிகளையும், மற்றப்படையெடுப்பு எதிர்ப்பு உபாயங்களையும் கையாண்டு வருகிறார்கள். வாப்பன் S. S. துருப்புகள் தான் ஜெர்மனியின் உள்நாட்டு பத்திரத்துக்குச் சிறந்தவையென்று ஹிம்லர் ஸ்தோத்திரம் செய்து வருகிறார். பிரிடன் பேரில் ஜெர்மன் விமானப்படை சிறந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிறது என்று கோயபல்ஸ் மிகையான விருத்தாந்தங்களை வெளியிடுகிறான். ஜெர்மனிக்கு வெற்றி பெறும் நாள் வரப்போகிறதென்றும் அவன் ஜெர்மன் மக்களிடம் புகட்டுகிறான். மேற்குப் போர் முனையில் போர் துவக்கப்படும்பொழுது அங்கே ஆபிரிக்கப் பாலைவனங்களிலும், கிழக்குப் போர் முனையிலும் போர்புரிந்த நிபுணர்கள் தற்காப்பு செய்வார்களென்று டிட்மார் பகிரங்கப்படுத்தி வருகிறான். இந்தத் துருப்புகள் வெற்றிகரமாகப் பின் வாங்குவதிலும், ஓடுவதிலும், சரண் புகுவதிலும் அனுபவம் வாய்ந்தவர்களென்று நினையுங்கள். மாகினோ அரணிலிருந்த படைகளைப் போல் ஜெர்மன் சேனை ஊக்கக் குறைவுடனிருக்கவில்லையென்று பீல்ட் மார்ஷல் ரண்ட்ஸ்டட் பத்திரிகாசியர்களிடம் சொல்லி இருக்கிறான். ஜெர்மனி வெற்றி பெற்றால் ஐரோப்பாவில் யுத்தத்துக்குப்பின் அழகான அமைப்பு ஏற்படுமென்று டாக்டர் லே சொல்லுகிறார். ஐரோப்பிய நாடுகளைக் கெஞ்சிக் கேட்கும் முறைகள் அனுஷ்டிக்கப்படுகின்றன. சிறிய தேசங்களுக்கு சுதந்திரம் வழங்குவதற்காகத்தான் ஜெர்மனி போர் புரிந்து வருகிறதென்று சொல்லும் முறையில் குரோஷியாவிலுள்ள குயிஸ்லிங்குகள் ஹிட்லரின் தலைமை காரியாலயத்திற்கு வரும்படி அழைக்கப்பட்டார்கள். ருஷ்யாவின் அநாகரீகத்திலிருந்து ஸெக்கோஸ்லாவாகியாவின் கலைஞானத்தைக் காப்பாற்றத்தான் ஜெர்மனி போரை நடத்திவருகிறதென்று ஸெக்கோஸ்லாவாகியா நிர்வாகத்துக்குச் சொல்லப்படுகிறது. ஆகிலும் ஸெக்கர்கள் லிடிஸ், லெஸாகி நடவடிக்கைகளையும் ஐந்து வருஷ அடிமைத் தன்மைகளையும் மறந்து விடவில்லை. விடுதலை பெறும் நாளை அவர்கள் எதிர்பார்த்து நிற்கிறார்கள். தங்களுடைய எல்லைச் சரகத்திலிருந்து நூறு மைல்களுக்குள் ருஷ்யர்கள் வந்து விட்டார்களென்று அவர்கள் குதூஹலப்படுகிறார்கள்.

அடிக்கும் காலம் வந்துவிட்டதென்று நினைத்த டாக்டர் பெனஷ் பலமாகப் போராடுங்கள் என்று ஸெக்கியர்களுக்குச் செய்தி அனுப்பியுள்ளார்.

**பசிபிக் போர்.** தீவு தீவாகப் பிடிப்பதுடன் டோக்கியோவுக்குப்போகும் முக்கியமான ஸ்தானங்களும் இப்பொழுது பிடிக்கப்பட்டு வருகின்றன. அட்மிராலிடித் தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த மானஸ் தீவு பிடிபட்டுவிட்டது. நியூ பிரிடனிலுள்ள லாங்க்ட்லிஸ்காவிலும் பிஸ்மார்க் தீவுக்கூட்டத்தில் அமிராஎலோமூஸோவிலும் படைகளிறங்கிவிட்டன. போகன்வில்லியில் ஜப்பானியர்கள் செய்த பதில் தாக்குதல் பயன்படவில்லை. பிஸ்மார்க் ஸாலமன்ஸ் பிராந்தியத்தில் 1,00,000 ஜப்பானியர்கள் அகப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எதிரியின் முக்கியமான மார்க்கங்கள் குறைவுபட்டுவிட்டதால் எதிரி கூடிய சீக்கிரத்தில் டிரக்கையும், ரபாலையும் விட்டுப்போய்விடுவானென்று கடற்தளபதி நிமிட்ஸு சொல்லுகிறார். ஆகிலும் ஜப்பானிய பிரமுகர்கள் வேறு விதமான பிரசாரம் செய்துவருகிறார்கள். ரபால் முன்போல் பலமாகயிருக்கிறதென்றும் அங்கிருக்கும் விமானிகள் பேஸ்பந்து, பிங்க்பாங்க் போன்ற விளையாட்டுகளில் ஈடுபட்டிருக்கிறார்களென்றும், தோட்டங்களில் காய்கறிகளைப் பயிரிடுகிறார்களென்றும் பிரசாரம் செய்யப்படுகிறது. இந்த வீண் புகல் ஜனங்களின் மன உறுதியை நிலைநாட்டச்செய்யப்பட்ட கற்பனை. உண்மையில், இந்த பிரசாரம் நடந்துவரும்பொழுது, அமெரிக்க வெடிவிமானங்கள் ரபாலைப் பலமாகத் தாக்கியிருக்கின்றன.

வி வி வி வி வி

**பர்மா.** இங்கே மகத்தான நடவடிக்கைகள் ஆரம்பமாகும். டில்லியில் படையெடுப்போம் என்று ஜப்பானியர்கள் வீண் ஜம்பம் பேசியதற்கு மறுமொழியாக நேசதேசப் படைகள் வடக்கு பர்மாவுக்குள் நுழைந்துவிட்டன. முன்னேற்றம் மூன்று பகுதிகளில் நடைபெறுகிறது. (1) ஹுகாங்க் பள்ளத்தாக்கில் லேடோ போர் முனையில் ஸ்டில்வெல்லிடமுள்ள அமெரிக்கர்களும் சீனத்துருப்புகளும் சிண்ட்வின் நதியைத் தாண்டி மெயின்க்வாங்க், வாலாபன் முதலிய இடங்களைப் பிடித்துவிட்டார்கள். (2) டாமு—டிட்டிம் போர்முனை. இங்கு பிரிடிஷ், இந்தியத்துருப்புகள் ஜப்பானியப் படைகளுடன் போர்புரிகின்றன. (3) அரக்கான் போர்முனை. இங்கு பிரிடிஷ், மேற்கு ஆபிரிக்க, இந்தியப்படைகள் பிரிடிஷ் டாங்கிகள், ஸ்பிட் பையர் விமானங்களின் உதவி கொண்டு, ராசாபிலைப் பிடித்துவிட்டு, ராசாபிலுக்குத் தெற்கில் ஆறு கிராமங்களிலிறங்கிவிட்டார்கள். வடக்கு பர்மாவின் மத்தியில் ஜப்பானிய 18-வது டிவிஷன் துருப்புகளுக்குப் பின்புறத்தில் கிளைடர்கள் மூலமாகப் படைகளையிறக்கி நேசதேசத்தார்கள் ஒரு தளத்தை ஸ்தாபித்திருக்கிறார்கள். மிட்சினியாவிலுள்ள ஜப்பானிய இருப்புப்பாதை நிலயத்தையும் வளைத்துக்கொள்ள படைகள் குவிந்துவருகின்றன. அது வீழ்ச்சிபெற்றால் மாண்டலேக்குப்போகும் ஜப்பானியப் போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டுவிடும்.

மத்தியப் போர்முனையில் டிட்டிமுக்கும் இம்பாலுக்கும் மத்தியில் ஜப்பானியப்படைகள் பதில் தாக்குதலை ஆரம்பித்திருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. இங்கே ஜப்பானியப் படைகள் அஸ்ஸாம் எல்லைச் சரகத்தைத்தாண்டி ஒன்று அல்லது இரண்டிடங்களில் மணிப்பூர் ஸமஸ்தானத்துக்குள் நுழைந்து விட்டதாகத் தெரியவருகிறது. பர்மா எல்லைச் சரகத்தில் ஜப்பானியர்கள் கபடமாக முன்னேறிய நடவடிக்கைகளை நிவர்த்தித்ததுபோல இதையும் நாம் துரத்தியடித்து விடுவோம். முதன் முதலாக எதிரி இந்தியா எல்லைக்குள் வந்துவிட்டதென்பதைக்கண்டு இந்நாட்டிலுள்ள முட்டாள்களும் விஷமிகளும் தங்களுடைய கடமையை அறிவார்களென்று நாம் எதிர் பார்க்கிறோம். யுத்தம் இந்தியாவுக்கு வந்துவிட்டது.

வி வி வி வி வி

**இந்தியத் தொழிலாளர் படை.** இந்தப் படைகளின் வேலைகள் சாவதானமாகத்தான் நடைபெறக்கூடும். அஸ்ஸாமுக்குக் கிழக்கிலுள்ள மலைகளும், காடுகளும் சில விஷயங்களில் சௌகரியத்தையும், சில விஷயங்களில் இன்னல்களையும் விளைக்கின்றன. அவைகள் இரண்டு வருடங்களுக்கு முன் ஜப்பானியப் படையெடுப்பைத் தவிர்த்தன. இப்பொழுது அவைகள் நேசதேசத்தாரின் முன்னேற்றத்துக்கு சங்கடம் உண்டுபண்ணுகின்றன. போர்முனையானது இந்தியாவிலுள்ள சமீப இருப்புப் பாதையிலிருந்து 300 மைல்கள் தாண்டியிருக்கிறது. அவ்விடத்திற்கு ரஸ்தாக்கள் மூலம் தான் செல்ல முடியும். புல்டோஜர் யந்திரங்களும் இந்திய சேவைப்படையும் இந்த ரஸ்தாவை எதிரி ஆக்கிரமித்திருக்கும் காடுகளில் விஸ்தாரப்படுத்துகின்றன. டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகையைச் சேர்ந்த பிரான்ஸிஸ்லோ அந்த முனைக்குச்சென்று திரும்பியிருக்கிறார். அவருடைய விருத்தாந்தம் பின் வருமாறு :—

“தொழிலாளர்களைப்பற்றி நான் இரண்டு கதைகளைக் கேள்வியுற்றேன். புல்டோஜர் யந்திரத்தின் டிரைவர் செங்குத்தான பாறையில் ஒரு பாதையை அமைத்து வந்தான், அப்பொழுது அவனுடைய வண்டி மலையிலிருந்து நழுவி விட்டது. வண்டி இரண்டு குட்டிக்



கரணம் போட்டபின் நிலைபெற்றது. வண்டியில் தன்னுடைய ஸ்தானத்தில் பலமாக நின்ற டிரைவர் படுகாயமடைந்தபோதிலும், ஒரு நொடிப்பொழுதில் வண்டியைப் பள்ளத்தாக்கின் அடிவாரத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தான். மற்றொரு புல்டோஜரிலிருந்த பிரிடிஷார்களின் கதை பின்வருமாறு :—ஒரு தபால் கொண்டுவரும் தூதர் காடுகளின் வழியாகச் சென்ற ஒரு புல்டோஜரைப் பார்த்தான். முன்னணித் துருப்புகள் எங்கிருக்கின்றனவென்று அவன் வினவினான். “அவைகள் இரண்டு மைல்களுக்குப்பின்னிருக்கின்றன” வென்று டிரைவர் சொன்னான்.

“பர்மா சேவைப்படையில் ஏராளமான மோட்டார் படைகளும், கழுதைகளுமிருக்கின்றன. முன்னணியில் ஏராளமான தூசி கிளம்புகிறது.

“போர்முனையிலிருக்கும் தேர்ச்சிபெற்ற விமானிகளும் சாதாரண சிப்பாயும் எதிரியுடன் போர் புரியத் துடித்துக்கொண்டிருக்கிறான். போர் படைகளுக்கும் உதவிப் படைகளுக்கும் இடையே சகோதர பாவமும் சிலாக்கியமும் காணப்படுகின்றன. சேனைக்கு வீரம் பொருந்திய வகுப்பிலிருந்துதான் ஆட்களைப் பொருக்குவது என்ற காலம் போய்விட்டது. சாதாரண மக்கள் இப்பொழுது யந்திரப் பயிற்சி தேவையுள்ள படைகளில் சேர்ந்துகொள்ளுகிறார்கள். இந்திய விமானப்படை பகுதியிலும், போக்குவரத்துப் படைகளிலும் சமிஞ்ஞை காட்டும் கோஷ்டியிலும், மற்ற உதவிப் படைகளிலும், மதராஸிகளும், பார்ஸிகளும், வங்காளத்தைச் சேர்ந்தவர்களும் சந்தோஷமாக ஒன்றுகூடி ஒத்துழைப்பதை நான் கண்டேன். ஸீக்கியர் தலைமை உத்தியோகம் வகித்த ஒரு இந்தியப்படையில் ஸாடாரா வாலா என்ற ஒரு கனவானைக் கண்டேன். அவர் ஸாடாராவிலிருந்து வந்த பார்சி. கலப்பு ஜாதியார்களிருக்கும் படையில் இந்தியர்கள் தங்களுடைய பொறுப்பை நடத்திவருகிறார்கள். சமிஞ்ஞைப் படையைச் சேர்ந்த பிரிடிஷ் உயர்தர ஆபீஸர் தன்னிடமிருக்கும் தூதர்கள் இந்தியர்களென்று சொன்னார். அவர்கள் மிகவும் அபாயம் பொருந்திய வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். கரடுமுரடான ரஸ்தாக்களும் பருவகால அசௌகரியங்களும் அநேக ஆபத்துகளை விளைவிக்கின்றன. ஆகிலும் அவர்கள் கலக்கமடைவதில்லை. யந்திரம் கெட்டுப்போனபின் ஒரு இந்திய தூதர் ஐந்து நாட்களில் 100 மைல்கள் நடந்துசென்று செய்தியை ஒப்படைத்து வந்தாரென்று அந்த ஆபீஸர் சொன்னார். இந்த சம்பவம் 14-வது படையின் ஊக்கத்தையும் வெளிபடுத்துகிறது. போக்குவரத்து, ஸப்ளை, பரிபாலனப் பகுதிகளில் யந்திரப் பயிற்சி சாலைகளிலிருந்தும் கலாசாலைகளிலிருந்தும் ஏராளமான இந்திய ஆபீஸர்கள் வந்துவிட்டார்கள். எதிர்காலத்திய இந்திய சேனை தயாராகி வருகிறது”.

---

# இரண்டாம் போர்முனையின் யுத்த தந்திர மாறுதல்.

## வெகுதூரம் செல்லும் அமெரிக்க விமானங்களின் நடவடிக்கை விளைவு.

(டெயிலி எக்ஸ்பிரஸ்).

பெர்லினைப் பகலில் வெற்றிகரமாக அமெரிக்க சண்டை விமானங்கள் தாக்கின என்பது விமான யுத்தத்தில் ஒரு புதிய மாறுதலைக் குறிப்பிடுகிறது. இரண்டாம் போர் முனையில் போர் புரிவதில் எதிரிக்கு அதிக சிரமம் ஏற்படக்கூடியது என்று டெயிலி எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் பெசில் கார்டியூ எழுதுகிறார்.

வெடி விமானங்களுக்குத் துணைக்காவல் செய்த விமானங்கள் ஒரு இன்ஜினுள்ள சண்டை விமானங்கள். அவைகளில் ஒரு விமானிதான் சென்றான். ஆகிலும் அவைகள் ஸ்பிட்பையர் வேகத்துடனும் சுடும் சக்தியுடனும் 600 மைல்கள் தூரம் சென்று தாக்கின. நூற்றுக்கணக்கான தண்டர் போல்ட்ஸ், மஸ்டாங்ஸ் விமானங்கள் பெர்லின் பேரிலும், பெர்லினுக்கு சமீபத்திலும் நடவடிக்கைகளை நடத்தியபோதிலும், இரண்டு இஞ்ஜின்களுள்ள லைட்னிங் விமானங்கள் உள்பட 11 விமானங்கள்தான் நஷ்டமாகின. அவைகள் 93 ஜெர்மன் விமானங்களைச் சுட்டுவீழ்த்தின. வெடி விமானங்கள் 83 விமானங்களைச் சுட்டுவீழ்த்தின. மொத்த விமான நஷ்டம் 176. இந்த நடவடிக்கையிலிருந்து படையெடுப்பு சமீப தூரத்தில்தான் நடைபெறவேண்டுமென்று ஏற்படவில்லை. வெகுதூரம் செல்லும் ஒருவர் போகக்கூடிய சண்டை விமானங்கள் தங்களுடைய தளங்களிலிருந்து வெகுதூரம் சென்று போர்புரியக்கூடியவை.

இரண்டாம் போர்முனைத் திட்டத்தை நிறுவியிருப்பவர்கள் பிரிடனிலுள்ள முன்னணி விமான தளங்களிலிருந்து 100 மைல்களுக்குள்ளிருக்கும் பிரதேசத்தில்தான் படைகள் இறங்கவேண்டுமென்று நினைக்கவேண்டாம். கொஞ்சதூரம் செல்லும் சண்டை விமானங்கள்

100 மைல்களுக்குள்ளிருக்கும் பிராந்தியத்தை ரக்ஷிக்கக்கூடும். நார்வேயிலிருந்து ஸ்பானிஷ் எல்லைச்சரகம் வரையிலுள்ள எதிரிவசமுள்ள கடற்கரை பூராவையும் ஒருவர் செல்லக்கூடிய சண்டை விமானங்கள் காப்பாற்றக்கூடுமென்று நேசதேசப்படைத் தலைவர்கள் அறிய வேண்டும். இந்தப்புதிய நிகழ்ச்சிக்கு அமெரிக்கர்கள்தான் பொறுப்பாளிகள். வெடி விமானங்களுக்குப் பகலில் துணைக்காவல் செய்ய ஸ்பிட்பையரின் சக்திவாய்ந்த வெகுதூரம் செல்லும் சண்டை விமானங்களை உற்பத்திசெய்வதில் அமெரிக்கா கவனம் செலுத்திவந்தது. அவைகளுக்குத் தேவையான விமானிகளையும் அவர்கள் தயாரித்தார்கள். மஸ்டங் விமானத்தைக் கட்ட பிரிடன்தான் முதலில் திட்டம் போட்டது. வெடிவிமானங்களுக்குத் துணைக்காவல் புரிந்துகொண்டு 600 மைல்கள் செல்லுவதற்கு மஸ்டங் விமானங்களுக்கும் தண்டர் போல்ட் விமானங்களுக்கும் உதவி எண்ணெய் வசதிகளை உபயோகித்ததும் பிரிடன் தான். எண்ணெய் அற்றுப்போனவுடன் டாங்கிகளைக் கீழேபோட்டு விடுவார்கள். வழி மறைக்கவரும் ஜெர்மன் விமானங்களை எதிர்க்கும் பொழுதும் டாங்கிகளை அந்த விமானங்கள் கீழே போட்டுவிடும்.

---

## பெர்லினைத் தாக்குவது—வெடி விமான நடவடிக்கையின் உச்சநிலைமை.

(விமானப் படைத் தலைவர் ஜான் ஸ்ட்ராகி).

வெடி விமானப் படையின் நடவடிக்கையில் பெர்லினைத் தாக்கியதுதான் சிறந்த நடவடிக்கை. ஆகையினால் நடைபெறப்போகும் படையெடுப்புக்கு அது மிகுந்த சாதகமளிக்கும். இந்த மாரிகாலத்தில் விமான நடவடிக்கையை உத்தமபக்ஷத்துக்கு அதிகரித்தால் இறுதிப் போர் நடைபெறும்பொழுது லக்ஷக்கணக்கான உயிர்களை நாம் காப்பாற்றிவிடக்கூடும். நான் சொல்லுவதை அன்யதாகிரஹணம் செய்யவேண்டாம். ஜெர்மனிபேரில் வெடிகுண்டுகளை வர்ஷிப்பதென்பது படையெடுப்புக்காகச் செய்யப்படும் பீரங்கி பிரயோக ஒத்திகை என்று நான் சொல்லவில்லை. அதுவும் அப்படியில்லை. மேற்கில் தரை மூலம் தாக்குதல் ஏற்பட்டாலும் இது ஓய்ந்துவிடாது. இவ்விதம் ஏற்படுமென்று ஜெர்மானியர்கள் நம்பியிருந்தால் அவர்கள் பலமாக ஏமாற்றம் அடைந்துவிடுவார்கள்.

நம்முடைய தரைத் தாக்குதல் ஜெர்மன் தற்காப்புகளின் பலமான அரணைப் பிளக்கக் கூடியதாகயிருக்கவேண்டும். இந்தக் கடினமான தற்காப்பிற்குள் என்ன இருக்கிறது. ஜெர்மனி இன்னும் உறுதியுடனும் ஊக்கத்துடனுமிருந்து வருமா? அதை மாகாண மாகாணமாகவும் ஒவ்வொரு மைலாகவும் முறியடிக்க வேண்டுமா? அல்லது பொருளாதாரத்திலும் மனஉறுதியிலும் சிதைவுபட ராணுவ பலமுள்ள ஜெர்மன் தேசத்தை நாம் எதிர்க்கவேண்டுமா? இதற்கு மறுமொழியை பிரிடிஷ் அமெரிக்க வெடி விமானத் தாக்குதல்களின் வெற்றிகள் தான் அளிக்கும்.

பெர்லினைத் தாக்கி வரும் விமான நடவடிக்கை எதிரியின் தலைநகரத்தை அழிக்கும் உறுதியான போராகும். பிரிடிஷ் வெடி விமானங்கள் பெர்லினை ஜெர்மானியர்கள் உபயோகிக்காதபடிச் செய்து வருகின்றன. பெர்லின் ஹிட்லரின் தலைநகரம் என்பதோடு இல்லாமல் ஹிட்லரின் அடிமை ,ஐரோப்பாவின் தலைநகரமும்கூட. இதுவரையில் வெடி விமானங்கள் தாக்கிய எஸ்ஸன், டஸ்ஸல்டார்ப், ஹாம்பர்க் போன்ற நகரங்களுக்கும் பெர்லினுக்கும் வித்தியாசமுண்டு. பெர்லின் உலகத்திலேயே நான்காவது மிகப் பெரிய நகரம். ஒரு தேசம் மட்டுமில்லாமல் உலகத்தின் ஒரு பிரதேசம் பூராவும் நம்பியிருக்கும் உலகத்திலுள்ள ஆறு நகரங்களில் பெர்லினும் ஒன்று. பெர்லினில் மிகவும் முக்கியமான தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஆகிலும் பெர்லினிலுள்ள பொருளாதார, வியாபார, நிர்வாக, போக்குவரத்துகளின் வசதிகள் மூலம்தான் மத்திய ஐரோப்பாவின் பொருளாதார வாழ்க்கை நடைபெற்று வருகிறது என்பதினால் பெர்லின் முக்கியத்வமுள்ளது. இவ்விதமான ஒரு நிலையம் நொருக்கப்படுவதிலிருந்து என்ன விளைவுகள் ஏற்படுமென்று சொல்லுவதற்கில்லை. இது போன்ற சம்பவம் இதுவரையில் நடைபெறவில்லை. வெடி விமான நடவடிக்கைமூலம் நாம் எதையும் சாதிக்கக்கூடுமானால் அதை நாம் வரப்போகும் சில மாதங்களில் அறிவோம். பெர்லினில்லாமல் நாஸி சாம்ராஜ்யம் நடத்தப்படுமென்று நான் நிச்சயமாகச் சொல்லுவேன். ஆகிலும் பெர்லின் பாழாகிவிடில் ஜெர்மனி பலஹீனமடைந்துவிடும். அதன் பயனாக ஜெர்மனி இறுதித் தாக்குதலை சமாளித்து நிற்க முடியாது. பெர்லின் ஏற்கனவே அழிக்கப்பட்டுவிட்டதென்று நாம் தவறான அபிப்பிராயம் கொள்ளக்கூடாதென்பதினால் பெர்லின் அழிக்கப்படுமானால் என்று சொல்லியிருக்கிறேன்.

செஸ்ஸல் போன்ற சில நகரங்களை பெர்லின் பேரில் ஒரு இரவில் போடப்படும் வெடி குண்டுகளைக்கொண்டு நொருக்கிவிடலாம். இவ்விதமான பலமான ஒரு நடவடிக்கைக்குப்பின்



ஜெர்மனியில் ஒரு கோரமான பேச்சுக் கிளம்பிவிட்டது. ஜெர்மனியிலுள்ள ஜனங்கள் ஒருவரோடு ஒருவர் பின்வருமாறு சம்பாஷணை செய்துவருகிறார்கள். "சென்ற இரவில் 23 பிரிடிஷ் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. நம்முடைய ஒரு நகரம் மறைந்துவிட்டது." ஆகிலும் பெர்லினுடைய கதை வேறு விதமானது. பெர்லினை ஒரே தாக்குதல்மூலம் அழித்துவிட முடியாது. பெர்லினையும் ஹாம்பர்க்கையும் ஒப்பிட்டுப் பார்த்தால் பிரிடிஷ் விமானப்படையின் வேலைத் திறமை நன்கு விளங்கும். ஹாம்பர்க்கும் பெரிய நகரம்தான். லண்டனைத் தவிர பிரிட்டனிலுள்ள பாக்கி நகரங்களைவிட இரண்டு மடங்கு விஸ்தாரமுள்ளது. ஹாம்பர்க்கில் 18,00,000 ஜனங்கள் வசித்து வந்தார்கள். 8,332 ஏகரா கொண்ட பிரதேசத்தில் அழகான கட்டடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. பெர்லினில் 44,00,000 ஜனங்கள் வசித்து வந்தார்கள். 23,000 ஏகரா கொண்ட பிரதேசத்தில கட்டடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இப்பேர்ப்பட்ட நகரத்தை நாஸிகளுக்கு உபயோகமில்லாமல் செய்யவேண்டுமானால் பலமான அநேக தாக்குதல்கள் செய்யப்படவேண்டும். மேலும் வெடி விமானங்கள் எதிரியின் வழி மறிப்பன்னியில் பெர்லினை சுலபமாகத் தாக்கமுடியாது. டிசம்பர் மாதம் 3-ம் தேதியன்று நடைபெற்ற விமானத் தாக்குதலைப்போல நாம் அடுத்தபடியாக எங்கு தாக்குவோமென்று எதிரி பிரமித்துக்கொண்டிருக்கும்படி நாம் தாக்கி வரவேண்டும். வெடி விமானங்கள் பெர்லினைத் தாக்குவதுபோல் பாசாங்கு செய்துவிட்டு பிறகு லீப்சிக்குப் பாய்ந்து சென்றன. இதேவிதமாக எதிரி அநேக ஆச்சரியமான நடவடிக்கைகளை எதிர்பார்க்கலாம்.

### பிரிடனின் பிரயாசையின் விளைவு.

பாம்பர் படையின் தாக்குதல் பிரிடிஷ் மக்களின் புத்திசாலித்தனம், திறமை, தைரியம், பரிசிரம் இவைகளின் பிரதிபலமென்று நிச்சயமாகச் சொல்லலாம். கிடைத்திருக்கும் வெற்றியிலிருந்து வெடி விமானத்தாக்குதல் என்பது ஏராளமான வெடிவிமானங்களைக் கட்டி ஜெர்மனிக்கு அனுப்பி, வெடிகுண்டுகளைத் தள்ளிவிட்டு தாயகம் திரும்பி வருவது என்று பொது ஜனங்கள் நினைக்கலாம். ஆகிலும் வெடி விமானங்களின் நடவடிக்கையின் வெற்றிக்கு எதிரியின் விருத்தியடைந்து வரும் தற்காப்புகளை பங்கப்படுத்தக்கூடிய ஏற்பாடுகளை நாம் செய்து முடித்திருப்பதுதான் காரணமாகும். இதில் சற்று தாமதம் ஏற்பட்டிருந்தாலும் ஆபத்து உண்டாகியிருக்கும். பாம்பர் படைகளை எதிர்த்துத் தாக்கும் சண்டை விமானங்களின் உபயோகம் ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது. இதற்குப் பதில் நடவடிக்கையை நாம் தயாரிக்க வேண்டும். அவ்விதமாக நாம் தயார் செய்துவிட்டோம்.

உதாரணமாக, இன்று பெர்லினை இரண்டு வருஷங்களுக்குமுன் நாம் உபயோகித்த வெடி விமானங்களைக் கொண்டு தாக்கினால் அவைகள் ஒன்று அல்லது இரண்டு தாக்குதல்களில் அழிக்கப்பட்டிருக்கும். அதுபோல் இன்று நமது லங்காஸ்டர் ஹாலிபாக்ஸ், ஸ்டர்லிங் விமானங்கள் 1942-ம் வருஷமிருந்த ஜெர்மன் தற்காப்புகளை எதிர்க்கவேண்டியிருந்தால் அவைகள் தங்களுக்குக் குறைந்த நஷ்டத்துடன் ஜெர்மனியிலுள்ள ஒவ்வொரு தொழிற்சாலை பிரதேசத்தையும் அழித்திருக்கும்.

சமீப காலத்தில் லக்ஷியத்தைத் துலக்கிக் காட்டும் படைகளின் விருத்தாந்தம் நமக்குக் கிடைத்திருக்கிறது. லக்ஷியத்துக்குப் போகும் வழியைக் காட்டும் வேலை அவசியமானது. ஏனெனில் தற்காப்புகளின் திருஷ்டிகோசரத்துக்குட்படாமல் வெடி விமானம் இருட்டினால் மறைக்கப்படுவதுபோல், வெடிகுண்டின் திருஷ்டியிலிருந்து லக்ஷியமும் இருளினால் மறைக்கப்படுகிறது.

லக்ஷியத்தைத் துலக்கிக் காட்டும் விமானங்கள் லக்ஷியத்தை ஸ்பஷ்டமாகச் செய்வதினால் பலமான குண்டு வீச்சு ஏற்படுவதற்கு சாதகம் ஏற்படுகிறது. ஜெர்மனிக்கு இதுதான் பயங்கரமான நடவடிக்கை. குறிப்பிட்ட கால அளவில் ஒரு குறிப்பிட்ட லக்ஷியத்தின் பேரில் ஒரு நிமிஷத்திற்கு ஏராள்மான டன்கள் எடைமானமுள்ள வெடிகுண்டுகளைப் போடுவதைப் பொறுத்துத்தான் தாக்குதலின் மேன்மை விளங்கும்.

---

## துர்ப்பாக்கியம் பெற்ற பின்லாந்து.

(J. C. ஜான்ஸ்டன்.)

இந்த யுத்தத்தில் பின்லாந்து விசித்தரமான ஒரு ஸ்தானத்தை வகித்து வருகிறது. உண்மையான ஜனநாயக நாடாகயிருந்த போதிலும் அது நேசதேசத்தார்களை எதிர்த்து நின்று போராடுகிறது. அச்சுநாடுகளின் ஒப்பந்தத்தில் கையெழுத்திடாமல் போர் புரியும் நாடும் பின்லாந்துதான். ஜெர்மனிக்குட்பட்ட நாடுகளுக்கும் அதற்கும் வித்தியாசம் பாராட்டி அது ஜெர்மனியுடன் சம அந்தஸ்துள்ள நாடென்று சொல்லி வருகிறது. யுத்தம் பூராவிலும் அமெரிக்காவுடன் அதற்குள்ள பிராசீனமான நட்பு ஒரு பக்கமும் ருஷ்யாவுடன் அதற்

குள்ள விரோதம் மற்ருெரு பக்கமும் அதை சங்கடத்தில் இழுத்துவிட்டது. சென்ற யுத்தக் கடன்களை ஒழுங்காக பின்லாந்து திருப்பிக் கொடுத்துவிட்டதென்பதில் அது அமெரிக்காவின் மதிப்பை சம்பாதித்துவிட்டது.

இதுவரையில் அமெரிக்காவின் நட்பைவிட ருஷ்யாவுடன் அதற்கு ஏற்பட்டிருந்த விரோதம் அதன் நடவடிக்கைகளுக்குத் தகுந்த முகாந்திரமாகயிருந்தது. டஸார்களின் ஆக்ஷியின் கீழ் சென்ற 25 வருஷங்களில் பின்லாந்து அனுபவித்த கொடுமைகளை அது ஞாபகப்படுத்திக்கொள்ளுகிறது. ருஷ்யர்களிடமிருந்தும் அவர்களின் பரம்பரையார்களிடமிருந்தும் அதை விடுவித்துக்கொள்ள பின்லாந்து கோரமான போர் செய்திருக்கிறதென்றும் அதற்குத் தெரியும். மேலும் 1939—40-ம் வருஷத்திய யுத்தத்துக்குப் பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்றும் பின்லாந்து எண்ணம் கொண்டிருக்கிறது.

## பழிக்குப்பழி வாங்கும் எண்ணம்.

பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்ற பின்லாந்தின் மனப்பான்மை அதன் ராஜீய பகுத்தறிவைக் குலைத்துவிட்டது. அதை திருப்தி செய்துகொள்ளுவதற்காக மனிதவர்க்கத்தினிடம் காட்டுமிராண்டித் தனமான கொடுமையைக் காண்பிக்க ஹிட்லருக்கு அது ஒத்தாசை செய்வதில் உடந்தையாகயிருக்கிறது. நார்வே, ஸெக்கோஸ்லாவோக்கியா, கிரீஸ், போன்ற சிறிய நாடுகளுக்கும், மற்ற நாடுகளுக்கும் ஹிட்லர் இழைத்த தீங்குகளையும் கவனியாது அவன் ருஷ்யா பேரில் 1941-ம் வருஷம் ஜூன் மாதத்தில் போர் தொடுத்த ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்குள்ளாக அது ருஷ்யா பேரில் போர் தோடுத்தது. அதைக் கட்டாயப்படுத்தப் போதுமான முன் எச்சரிக்கைகளை அவன் எடுத்துக்கொண்டிருந்தான். 1940-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்தில் துருப்புகளைக் கொண்டு போவதற்கு பின்லாந்தினிடமிருந்து அவன் ஒரு ஒப்பந்தத்தைப் பெற்ருன். 1941-ம் வருஷம் ஜூன் மாதத்திற்குள் பின்லாந்துக்குள் அவன் நான்கு டிவிஷன் துருப்புகளை அனுப்பிவிட்டான். ஆகிலும், பின்லாந்து மனதாரவும், நாஸிகளின் கட்டாயமன்னியிலும் யுத்தத்தில் புகுந்ததென்பதில் யாதொரு சந்தேகமுமல்லை. பின்லாந்தின் எண்ணங்களை பிரிடனும், அமெரிக்காவும் பாராட்டினுலும் அதின் குற்றச் செய்கைக்கு அது தகுந்த முகாந்திரமென்று அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. ஜூலை மாதம் இறுதியில் பிரிடனுடனிருந்த அதன் உறவை பின்லாந்து தானுக ரத்து செய்து கொண்டபோதிலும், பிரிடன் பல விதமான ஆக்ஷேபனைகளைச் செய்து பயன்படாமல் போனபின் டிசம்பர் மாதம் 6-ம் தேதியன்று தான் பின்லாந்து பேரில் போர் தொடுத்தது. ஆதிமுதற்கொண்டு பின்லாந்தை அதன் கெட்ட மார்க்கத்திலிருந்து திருப்ப அமெரிக்கா அநேக பிரயத்னங்களைச் செய்து வந்தது. 1941-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் யுத்தத்திலிருந்து வெளியேறினுல் 1940-ம் வருஷத்துக்கு முன்னிருந்த எல்லைச் சரகத்தை ஒப்புக்கொள்ளுவதாக ருஷ்யா விடுத்த சலுகையை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று பின்லாந்துக்கு அமெரிக்கா சிபார்சு செய்தது. மத்தியஸ்தம் செய்யும் அநேக முயற்சிகள் பயன்படாமல் போகவே சென்ற ஏப்ரல் மாதத்தில் அமெரிக்கா தன்னுடைய அயல் நாட்டு மந்திரியையும் மற்ற உத்தியோகஸ்தர்களையும் ஹெல்ஸிங்கியிலிருந்து திருப்பி அழைத்தது. ஆகிலும், ராஜதந்திரஉறவுகள் அற்றுப் போகவில்லை.

பின்லாந்தின் நடவடிக்கையில் குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில் 1941-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் அதன் எண்ணங்களுக்கு திருப்திகரமான கோட்டை பின்னிஷ் படைகள் அடைந்த உடன் அத்துருப்புகள் போர் புரிவதை நிறுத்திவிட்டன. ஜெர்மானியர்களுக்கு உதவி செய்யவுமில்லை. சில ருஷ்ய டிவிஷன் துருப்புகளைக் கலைத்து அங்கே போர் புரியும் படி செய்திருக்கிறது.

பின்லாந்து ஒரு முக்கியமான கட்டத்தில் நிற்கிறது. இந்த சந்தர்ப்பத்தை ஏற்றுக்கொண்டால், காலதாமதத்தின் பேரிலாவது அது பச்சாத்தாபம் தெரிவித்ததாகும். அவ்விதம் செய்தால் ஜெர்மன் ஆக்கிரமணத்துக்குட்பட்ட மற்ற நாடுகளைவிட பின்லாந்துக்கு அதிக சலுகை காட்டப்படும்.

---

# ஸ்டாலினின் சமாதான திட்டங்கள்.

## டாக்டர் பெனஷுடன் பேட்டி.

(டெயிலி-எக்ஸ்பிரஸ் பத்திரிகை.)

ஸெக்கோஸ்லாவாகியாவின் தலைவரும் மாஸ்கோவுக்கு சமீபகாலத்தில் சென்ற நேசதேச ராஜ தந்திரியுமான டாக்டர் எட்வர்ட் பெனஷ் அவர் கிரெம்லினுக்குச் சென்ற தூதின் விவரத்யையும் ஸோவியத் தலைவர்களுடன் அவர் நடத்திய சம்பாஷணைகளைப்பற்றியும் ஸ்டாலினின் விவரத்தை சமாதான திட்டங்களைப்பற்றியும் விரிவாகச் சொன்னுர்.



இந்த விருத்தாந்தத்தில் பால்கன் நாடுகளை குறித்து ஸ்டாலினின் கொள்கைகளும், அவைகளிடமிருந்து அவன் எதை எதிர்பார்க்கிருன் என்றும் அவர்களுடைய உரிமைகள் என்னவென்று ஸ்டாலின் மதிக்கிருனென்றும், தெற்குப்பக்கத்தில் ஹிட்லரின் ஸகாக்களாக இருக்கும் நாடுகளின் சஞ்சலமான புத்தியை மாற்றிக்கொள்ள அவைகளுக்கு எவ்விதம் உதவியளிப்பது என்றும் அநேக குறிப்புகள் காணப்படுகின்றன. ருஷ்யாவின் நடவடிக்கைகளில் விசேஷ மாறுதல் ஏற்படுத்தக்கூடிய இத்தருணத்தில் துருக்கிக்கு மறுபடியும் வாக்குறுதி செய்கிறது. மறுபடியும் யுத்ததளமாக மாற்றிவிட போலந்துக்கு அது எதிர்காலத்தில் க்ஷேமத்தை உத்தரவாதம் செய்கிறது. உலகத்தின் கண் ஜெர்மனி போட்டிருக்கும் பெரிய பிரச்னையான—பொதுவாகக் கிடைக்கக்கூடிய வெற்றியைப் பயன்படுத்தி ஸ்டாலின் ருஷ்யாவுக்கு சமீபத்திலுள்ள நாடுகளை ருஷ்ய மயமாக்கிவிடுவானு? என்பதை ஸ்பஷ்டமாகத் தீர்த்துவிட்டிருக்கிறது.

இந்தக் கேழ்விக்கு டாக்டர் பெனஷ் அழுத்தமாக "இல்லை" என்று விடையளித்திருக்கிருர்.

லண்டனிலுள்ள ஸெக்கோஸ்லாவாக்கியா அயல் நாட்டு தூதர் காரியலாயத்தில் அவருடைய அறையில் டாக்டர் பெனஷைச் சந்தித்தார். சாந்த குணமுள்ள சிறிய ஆகிருதியுள்ளவர், சாதாரண உடை தரித்திருந்தார். குறிப்பாகவும், யதார்த்தத்துடனும் அவர் பேசினுர். டாக்டர் பெனஷ் ருஷ்யத்தலைவர்களை நன்ருய் அறிவார். இருபது வருஷமாக ருஷ்யாவின் ஒத்துழைப்பைப் பெருவது தான் அவருடைய முக்கியமான அயல் நாட்டுக்கொள்கையாக இருந்து வருகிறது. ஸ்டாலின் உலக கீர்த்தியைப் பெறுவதுடன் மிகவும் சந்தோஷமுள்ளவர், கபடமற்றவர். சரசி என்றும் அவர் பாராட்டுகிருர். யுத்தத்துக்குப் பின் ருஷ்யாவும், போலந்தும், ஸெக்கோஸ்லாவாக்கியாவும் ஜெர்மனியின் அக்கிரம ஆக்கிரமணத்தை எதிர்க்க ஒன்றுபட்டுவிட வேண்டுமென்று அவர் சொன்னுர்.

அவர் மேலும் சொன்னதாவது "நான் சம்பந்தப்பட்டமட்டில் நான் ருஷ்யர்களிடம் நம்பிக்கையை உண்டுபண்ணிவிட்டேன். அவர்கள் சொல்லுவதைச் செய்துவிடுவார்கள். ருஷ்யர்கள் பிரிடனுடனும் அமெரிக்காவுடனும் விசுவாசத்துடன் ஒத்துழைப்பார்கள். டெகரானில் செய்த முடிவுகளின்படி அநேக நூற்ருண்டுகளுக்கு உலகத்தில் சமாதானம் நிலைபெறக்கக்கூடிய நடவடிக்கைகளை ருஷ்யாவும் நிச்சயமாய்க் கையாளக்கூடும்.".

டான்யூப் நதிக்கரையிலுள்ள நாடுகளின் கதி என்ன? ஜெர்மனியுடன் சேர்ந்து போர் புரிந்துவரும் பல்கேரியா, ருமேனியா, ஹங்கேரியாவின் கதி என்ன? பொது ஜனங்களின் சேனைக்குத் தலைமை வகிக்கும் மார்ஷல் டிடோயிருக்கும் யூகோஸ்லாவியின் கதி என்ன? இந்த வட்டாரத்தில் தான் ஸ்டாலின் நாடுகளை ருஷ்யமயமாக்க உத்தேசிக்கிருனென்ற கலகப்ரதமான பிரகாரத்தை ஜெர்மானியர்கள் கபடமாக நடத்தி வருகிருர்கள். ருஷ்யா அதற்கு சமீபத்திலுள்ள நாடுகளின் உள் நாட்டு வியவகாரங்களில் தலையிடுமென்று டாக்டர் பெனஷ் நம்பவில்லை.

இந்த நாடுகளில் பொதுவுடமைக் கொள்கைகளைப் பரவச் செய்ய ஸ்டாலின் பலமாக ஆக்ஷேபிக்கிருனென்று டாக்டர் பெனஷ் சொன்னுர். ஸ்டாலின் தத்வதரிசி என்றும், தேசாபிமான உணர்ச்சியை மதிக்கிறவரென்றும், பொது ஜனங்களின் இஷ்டப்படி அமைக்கப்படாத ஸ்திரமற்ற ஒரு நிர்வாகத்தை பால்கன் நாடுகளில் அமைத்தால் அது ருஷ்யாவுக்குப் பயன்படாதென்று அறிவானென்றும் சொன்னுர். டாக்டர் பெனஷின் அபிப்பிராயப்படி இந்த பிராந்தியத்தை அடக்கியாள வேண்டுமென்றும் ஸ்டாலின் விரும்பவில்லையாம்.

சமாதானத்தைக் கலைக்க ஜெர்மனியுடன் சேர்ந்துகொண்ட பல்கேரியாவிலுள்ள போரிஸஸ், ஹங்கேரியாவிலுள்ள ஹோர்தீஸ் போன்ற பாஸிக் கொள்கைகொண்ட முதலாளி ஆக்ஷியுள்ள முறை ஒழியவேண்டுமென்றுதான் அவன் விரும்புகிருன்.

ஹங்கேரி சம்பந்தப்பட்டமட்டில், ஹிட்லர் அதற்குக்கொடுத்திருக்கும் தேசத்தைத் திரும்பிப்பிடித்து விடவேண்டுமென்று ஸ்டாலின் சொல்லிவிட்டான். இந்த பிரதேசம்தான் டிரான்ஸில்வேனியா என்பது. அந்த பிரதேசம் ருமேனியர்களின் குணங்களை ஒத்திருக்கிறதென்று ருஷ்யர்கள் சொல்லுகிருர்கள். இந்த அபிப்பிராயம் அதிக முக்கியத்வமுள்ளது. ஏனென்ருல் இந்த பிரதேசத்தைப்பற்றித்தான் ருஷ்யாவும் ருமேனியாவும் கைகலந்து கொள்ளக்கூடும். இந்த அறிக்கை நாஸிகளை ஆதரிக்கும் ஹங்கேரிய நிர்வாகிகளுக்குக் கலக்கம் உண்டாக்கும். ருமேனியாவில் சமாதான இயக்கத்தைத் துவக்கும்.'

இந்த யுத்தம் பூராவிலும் ருஷ்யாவிடமிருந்து துருக்கிக்கு அபாயம் ஏற்படுமென்று மிகவும் ஜாக்கிரதையாக ஜெர்மனி பிரசாரம் செய்து வந்திருக்கிறது. ருஷ்யர்கள் டார்டனல்ஸ் ஜலசந்தியைக் கவருவார்களென்று இதற்குக் காரணமும் சொல்லப்படுகிறது. ருஷ்யா

துருக்கி பேரில் ஏதாவது பாத்தியம் கொண்டாடுகிறதா என்று நான் வினவினேன்: "எனக்குத் தெரிந்த மட்டில் ருஷ்யர்கள் யாதொரு பாத்தியங்களையும் கொண்டாடவில்லை. ருஷ்யர்கள் துருக்கி பேரில் கெட்ட எண்ணம் கொண்டிருக்கிறார்களென்று சொல்லுவதற்கு நியாயமில்லை என்றும் எனக்குத் தோன்றுகிறது" என்று அவர் பதிலுரைத்தார்.

மாஸ்கோ மகாநாட்டில் ஆஸ்திரியாவுக்குச் ஸ்வதந்திரம் வழங்கப்படவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அதற்குப் பக்கத்தில், ஸெக்கோஸ்லாவாக்கியா அமைதியுள்ள நண்பனாகயிருக்கும். ஆகிலும் அவைகளுக்குள்ள சம்பந்தங்களை நிர்த்தாரணம் செய்வது யுத்தத்துக்குப் பின் என்று ஒத்திவைக்கவேண்டுமென்று டாக்டர் பெனஷ் ஒப்புக்கொள்ளுகிறார். ஸெக்கோஸ்லாவாக்கியாவின் முன்னேற்றத்தைப்பற்றி டாக்டர் பெனஷ் பூர்ணமான நம்பிக்கையுடனிருக்கிறார். அவர் கண்களில் பிரகாசம் தோன்ற பின்வருமாறு சொல்லுகிறார். "சமயம் வரும்பொழுது எங்களுடைய ஜனங்கள் தாக்கிவிடுவார்கள். எங்கள் நாட்டிற்கு நல்ல காலம் வந்து விட்டது. ஜெர்மனி தோல்வியுற்றால் என்னுடைய நாட்டில் நல்ல முறைகள் மறுபடியும் ஏற்பட்டுவிடும். நான் திரும்பிச்சென்ற ஆறு மாதங்களுக்குள், நூதனமான தேர்தல் ஏற்படும். நான் திரும்பிச் செல்லும் பொழுது எங்கள் நாட்டில் ஒரு கலவரமும் ஏற்படாது."

---

## பின்னிஷ் சமாதானப் பேச்சுகளில் நேசதேசத்தார்களின் ஒத்துழைப்பு.

### இதாலியுடன் உபமானம் செய்யப்படுகிறது.

(W. N. ஈயர்).

பின்லாந்துடன் யுத்த நிறுத்த ஏற்பாடுகள் சம்பந்தமான முன் சடங்குகள் நேசதேசத்தார்களின் ராஜ்ய தந்திர ஒத்துழைப்பை வெளிப்படுத்திவிட்டன. இதாலிய யுத்த நிறுத்தம் பிரிடிஷ் அமெரிக்க நிர்வாகங்களின் அலுவல் என்பதுபோல பின்லாந்துடன் யுத்த நிறுத்தம் செய்வது ருஷ்யாவின் பொறுப்பாகும். இதாலி சம்பந்தமாக ஏற்படுத்திய நிபந்தனைகளை இதாலிக்கு அனுப்புமுன் அவைகளை ருஷ்யா ஆமோதித்ததுபோல பின்லாந்துக்கு ருஷ்யா அனுப்பிய ஷரத்துகளை பிரிடிஷ் அரசாங்கத்தாரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதன் பின் தான் மாடம் கொல்லாண்டே M. பாஸிகிவிக்கு அதை சமர்ப்பித்தாள்.

அமெரிக்க நிர்வாகம் இந்த நடவடிக்கையில் தலையிடவில்லை. ஏனென்றால் அமெரிக்கா பின்லாந்துடன் போர் தொடுக்கவில்லை. ஆகிலும், அமெரிக்காவுக்கு அவ்வப்பொழுது நடவடிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

பிரிடனும், ருஷ்யாவும் சம்பந்தப்பட்டமட்டில் யுத்த நிறுத்த ஷரத்துகளை இரு தேசத்தாரும் ஒப்புக்கொள்ள வேண்டுமென்பது ஆங்கிலோ-ருஷ்ய ஒப்பந்தத்தின் இரண்டாவது பிரிவின்படி நடைபெற்றதாகும். ஆகிலும், இருவரும் ஒருவரை ஒருவர் கலந்தாலோசிப்பதென்பது ஒப்பந்த ஷரத்தைப் பூர்த்திசெய்வதுடன் ராஜீய முறையிலும், ராஜதந்திர முறையிலும் இருதேசங்களுக்கிடையே ஒத்துழைப்பும், நெருங்கிய பாந்தவ்யமும் அதிகரித்து வருவதென்பதை வெளிப்படுத்துகிறது. பின்லாந்துடன் போர் தொடுத்திருக்கும் பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகள் உள்பட எல்லா ஐக்கிய தேசத்தார்களும் இறுதி நடவடிக்கைகளில் கலந்துகொள்ள சௌகரியங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இதாலி சம்பந்தப்பட்டமட்டில் ஜெனரல் ஈசன்ஹவர் நேசதேசத்தார்களின் சார்பாகத்தான் யுத்த நிறுத்த ஷரத்துகளை பிரகடனம் செய்தார்.

ஷரத்துகளின் தாராளப்பான்மை பிரிடனில் அநேகருக்கு வியப்பை உண்டாக்கவில்லை. ஆகிலும், தற்போதிய பின்னிஷ் நிர்வாகத்துடனும், சேனைத் தலைவர்களுடனும் ருஷ்யா பேரம் செய்யாது என்று நினைத்தவர்கள் இதில் விலக்கானவர்கள்.

யுத்த நிறுத்த உடன்பாடு உண்மையாக பலிக்கவேண்டுமானால் ஷரத்துகளின்படி அமுல் நடத்த சக்தி வாய்ந்த ஒரு அதிகாரவர்க்கத்தாருடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும். உடன்படிக்கையில் கையொப்பமிடும் அரசாங்க அதிகாரியின் அல்லது ராணுவ அதிகாரியின் குணாதிசயத்தை ஆமோதிக்க வேண்டுமென்பதில்லை.

மறுபடியும் இதாலிய நடவடிக்கையை ஒப்பிட்டுச் சொல்லலாம். நேசதேசத்தார்களின் எந்த நிர்வாகமும் மார்ஷல் படோக்ளியோவையும், விக்டர் எமானுவல் மன்னரையும் வரவேற்கவில்லை. ஆகிலும், மன்னரும், மார்ஷலும் மற்றவரைப்போலும் சமாதானம் செய்து கொள்ள லாயக்குள்ளவர்கள்தான்.



இதாலியிலும், பின்லாந்திலும் எதிர்காலத்தில் அமைக்கப்படும் நிர்வாகம் இதாலிய மக்களின் பொறுப்பாகும். ஆகிலும், தாத்காலிகமாக அமைக்கப்படும் நிர்வாகமானது அவர்களுடைய வாக்குறுதிகளைக் காப்பாற்றக்கூடிய மனிதர்களிடம் ஒப்படைக்கப்படவேண்டுமென்று நேசதேசத்தார்கள் வற்புறுத்தலாம்.

எல்லா ஐரோப்பாவும் முக்கியமாக ஜெர்மனியின் ஆதீனத்துக்குட்பட்ட ஹங்கேரி, பல்கேரியா, ருமேனியா போன்ற நாடுகளும் பின்லாந்தின் நடவடிக்கையை ஜாக்கிரதையாகக் கவனித்துவருகிறார்கள். இதற்குமுன் லாபகரமாய் இருந்து இப்பொழுது பளுவாகயிருக்கும் ஜெர்மன் நட்பிலிருந்து கூடுமானால் அந்த மூன்று நாடுகளும் விடுவித்துக்கொள்ள பிரியப்படும். ஆகையால் பின்லாந்து வெற்றிகரமாக இந்த கஷ்டசாத்தியமான ஒத்திகையில் கியாதிபெற்று விடக்கூடுமாவென்று அவர்கள் கவலையுடன் கவனித்துவருகிறார்கள்.

வடக்கு பின்லாந்தில் டீடலின் ஏழு ஜெர்மன் டிவிஷன் துருப்புகளிருப்பதுதான் பின்லாந்துக்கு மிகவும் கடினமான பிரச்னையாகும். இந்தப் படைகள் அங்கு இருந்திராவிட்டால் பின்லாந்து நேசதேசத்தாருடன் அநேக வாரங்கள் அல்லது அநேக மாதங்களுக்கு முன் சமாதானம் செய்துகொண்டிருக்கும்.

ஜெர்மனி அதன் அமுலுக்குட்பட்டிருக்கும் நாடுகளை ஒருபொழுதும் நம்பவில்லை. அந்நாடுகளையும், அதன் நிர்வாகிகளையும் ஜெர்மனியுடன் நெருங்கிய நட்புக்கொள்ளத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் ஜெர்மனி கையாண்டது. டிரான்ஸில்வேனியாவில் ருமேனியாவுக்கும், ஹங்கேரியாவுக்கும் உள்ள பழமையான விரோதத்தைக் கிளப்பிவிட்டு அவர்களுடைய படைகளை ருஷ்யப் போரில் ஈடுபடும்படி ஜெர்மனி தூண்டிவிட்டது. கிரீஸைச் சேர்ந்த திரேஸிலும், ஸெர்பியாவைச் சேர்ந்த மாஸிடோனியாவிலும் சகிக்கமுடியாத கொடுமைகளை இழைக்கும்படி பல்கேரியாவை அது தூண்டிவிட்டது. ஜெர்மன் துருப்புகளை ஒவ்வொரு நாட்டிலும் வைத்து எந்த நாடாவது ஜெர்மன் ஆதிக்கத்தை ஆக்ஷேபித்தால் உடன்காலத்தில் அந்த நாட்டில் போர் துவக்கப்படுமென்று அந்நாடு அறியவேண்டுமென்றும் ஜெர்மனி பயமுறுத்திவருகிறது. ஆகிலும் எல்லா நாடுகளும் தயங்கிக்கொண்டு பின்லாந்தின் நடவடிக்கையை ஜாக்கிரதையுடன் கவனித்துவருகின்றன.

---

## நாஸிகளும், மதமும்.

---

காஸினோ மலையிலுள்ள மடத்தை நேசதேசத்தார்கள் வெடிகுண்டுகளால் தாக்கியது அக்கிரமம் என்று பெர்லின் சமீபத்தில் பிரசாரம் செய்துவருகிறது. அதன் உண்மையான நிலைமை நாஸிகளின் குற்றப் பத்திரிகையிலிருந்து வெளியாகுகிறது. நேசதேசத்தாரின் அக்கிரமத்தைக்கண்டு திகைப்பதுபோல் நாஸிகள் பாசாங்கு செய்வது நேசதேசத்தார்களைத் தூஷிக்க கோயபல்ஸ் செய்திருக்கும் உபாயமென்று சொல்லப்பட்டிருக்கிறது. மத சம்பந்தமாகவும் லௌகிக சம்பந்தமாகவுமுள்ள கட்டடங்களைக் கொள்ளையடிப்பதும், அழிப்பதும் ராணுவ ஆக்கிரமணத்துக்குட் படுத்தவும் ஜெர்மானியர்கள் செய்த அக்கிரமங்களும், கலைஞான சின்னங்களைக் கொள்ளையிடுவது, மத குருக்களைத் துன்புறுத்துவது போன்ற குற்றங்களும் எந்நாளும் மறக்கமுடியாதவைகள். காஸினோ மலை மடத்தை ஜெர்மானியர்கள் பலமான அரணாக மாற்றியதினால் நேசதேசத்தார்கள் அதன்பேரில் வெடி குண்டுகளைப் போட்டனர். இன்று நேசதேசத்தார்கள் அதிக்ரமமான காரியங்களைச் செய்துவிட்டார்களென்று அவர்கள் குற்றம் சாட்டி வருகிறார்களென்றால் அவர்களுடையபோக்கிரித்தனத்தைக் காட்டக்கூடிய குற்றச் செய்கையை மறைத்து அதிலிருந்து தப்பித்துக்கொள்ள அவர்கள் முயற்சி செய்து வருகிறார்களென்றுதான் நாம் சொல்லவேண்டும் என்றும் அழிக்க முடியாத நாஸிகள் செய்த சில அக்கிரமங்களை இங்கு கூறுவோம்.

### மாதாக் கோவில்கள்.

இதாலியில், காசினோ மடத்தின் பேரில் வெடிகுண்டுகளைப் போடுமுன் மாதாக் கோவில்களில் ஜெர்மன் துருப்புகளிருப்பதை நேசதேசப் படைகள் கவனித்தன. ஒரு கிராமத்தில் ஜெர்மன் ராணுவ காரியாலயம் ஒரு மாதாக் கோவிலில் அமைக்கப்பட்டிருந்தது. துருப்புகள் பின்வாங்கும்பொழுது அதில் சுரங்க வெடிகளையும், பொறிகளையும் அமைத்து வைத்திருந்தார்கள். நார்வேயில் சாரிஸாவிலுள்ள கியாதிபெற்ற மாதாக் கோவில் முதலில் வெடி மருந்து சாலையாக உபயோகிக்கப்பட்டது. பிறகு அதை அரணாக மாற்றியமைத்து

விட்டார்கள். இதுபோல் அநேகக் கோவில்களும் ராணுவ உபயோகத்துக்கு மாற்றியமைக்கப்பட்டன. ஹாலந்தில் ஐந்து கோவில்களை அழித்து அரண் அமைத்திருக்கிறார்கள். அவைகளில் கோரின்ஹெம் மில் மதத்துக்காக உயிர் துறந்தார்களின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட கதோலியர்களின் மாதாக் கோவிலும் ஒன்று. பிரெஸ்லாவின் பிரதம பாதிரியான கார்டினல் பெர்ட்ராம் சொல்லுவதுபோல, போலந்திலுள்ள கோவில்களெல்லாம் மூடப்பட்டுவிட்டன. சிலவற்றை சாமான் கிட்டங்கிகளாக ஜெர்மானியர் உபயோகிக்கிறார்கள். பொன்னுசிலுள்ள மடத்தை மாகாணப் பள்ளிக்கூடமாக மாற்றியமைத்துவிட்டார்கள். பெல்பீன் மாகாணத்தில் பாதிரியின் வீடும் கல்விச் சாலையும் ஜெர்மனியின் ரகசியப் போலீஸின் உபயோத்துக்கு விடப்பட்டது. கோவில் மோட்டார் நிற்குமிடமாக மாற்றி அமைக்கப்பட்டுவிட்டது. ருஷ்யாவில் உலகப்பிரசித்திபெற்ற பெசெர்ஸ்சி மடம் ஜெர்மன் கோட்டைகளாக மாறிவிட்டது. ஆஸ்திரியாவில் லின்ஸுக்கு சமீபத்தில் வில்பெரிங்கில் உள்ள கியாதிபெற்ற சிஸ்டர்ஸியன் கோவில் ஹிட்லரின் ஞாபகார்த்த சின்னமாக அமைக்கப்பட்டுவிட்டது. வடக்கு முனையிலிருந்து பிரனிஸ் மலை வரையிலுமுள்ள புனிதமான கட்டடங்கள் ஜெர்மன் தற்காப்பு அரண்களாக அமைக்கப்பட்டுவிட்டன.

### கலைச் செல்வம்.

கலைச் செல்வங்களையும் நாஸிகள் அழித்திருக்கிறார்கள். "கெண்ட் கோவிலிலிருந்த பெல்ஜியத்தைச் சேர்ந்த பத்தாவது நூற்றாண்டின் பலி பீடம் இப்பொழுது ஜெர்மன் கண்காக்ஷி சாலையில் காணப்படுகிறது. பிரான்ஸில் ஸாராஸ்பரோ கோவிலிலிருந்த கியாதிபெற்ற காபெலின் தொங்கு சேலைகளும், மற்ற செல்வங்களும் ஜெர்மன் துருப்புகளால் கொண்டு போகப்பட்டன. ஸெக்கோஸ்லாவாக்கியாவில் பிராக்கிலிருந்த விலையுயர்ந்த மதசம்பந்தமான செல்வங்களும் ஸ்டிவிடஸ் கோவிலிலிருந்த விலை உயர்ந்த வெள்ளியும் ஜெர்மானியர்களால் அபகரிக்கப்பட்டன. போலந்தில் கியாதிபெற்ற பால்பீயன் மாகாண புத்தகசாலை கலைக்கப்பட்டுவிட்டது. அதிலிருந்து மதிப்புள்ள புஸ்தகங்கள் பெர்லினுக்குக் கொண்டுபோகப்பட்டன. மற்றவைகள் அங்கிருந்த தொழிற்சாலை அக்னியில் போடப்பட்டன.

### மத குருக்கள்.

அக்கிரமங்கள் இத்துடன் நின்றுவிடவில்லை. 4,500 பாதிரியார்கள் டாசாக் காவல் முகாமுக்குச் சென்றுவிட்டார்கள். காவல் முகாமிலிருந்து ஸ்விட்ஸர்லாந்துக்கு ஓடிவந்த கைதிகள் ஒரு வருஷத்தில் 1,500 பாதிரிகள் மாண்டனரென்று சொல்லுகிறார்கள். மேற்கு போலந்தில் 1,600 பாதிரிகள் உயிர் துறந்தார்களென்று சொல்லப்படுகிறது. போலந்தில் ஒரு மாகாணத்தில் இதற்குமுன் 600 பாதிரிகளிருந்த இடத்தில் இப்பொழுது 60 பேர்கள் தான் இருக்கிறார்கள்.

### புனிதமான கட்டடங்கள்.

புனிதமான கட்டடங்களை நாஸிகள் கௌரவிக்கும் முறைகளை போலந்தின் ஜெர்மன் கவர்னரான ஹர் பிராங்கு விவரித்திருக்கிறார். கிராகோவில் வாவல் கோவிலைப்பற்றி பேசும்பொழுது "இந்தக் கோவில் இப்பொழுது ஜாதி உயர்வு கொண்டாடும் ஜெர்மானியர்களின் உபயோகத்துக்கு மாற்றியமைக்கப்பட்டுவிட்டது" என்று சொன்னார். இப்பேர்ப்பட்ட தங்கு தடையற்ற, தயையற்ற, கிருஸ்து மதத்துக்கொவ்வாத மத விரோதமான, நாகரீகமற்ற மதாபிமான மற்ற நாஸிக்கொள்கையானது ஐரோப்பா பூராவிலும் மத சம்பந்தமான பல வகைப்பட்ட ஸ்தாபனங்களையும் அழித்துவருகிறது.

---

## யுத்தத்துக்குப் பொருளுதவி செய்வதில் பரஸ்பர உதவிக் கொள்கை.

### அலாஸ்கா ரஸ்தாவின் உதாஹரணம்.

யுத்தத்துக்குப் பொருளுதவி செய்வதில் பரஸ்பர உதவிக் கொள்கையின் பிரயோஜனத்தை விளக்கிக்காட்டுவதில் அலாஸ்கா ரஸ்தாவை அமைத்து அதைப் பரிபாலிப்பதையும் சமகோடான விமானக்கூடங்களை அமைத்து பரிபாலிப்பதையும்விட சிறந்த உதாஹரணங்களே கிடையாது என்று டைம்ஸ் பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறது. இந்த விமான தளங்களின் உதவி கொண்டுதான் அமெரிக்க, கனேடிய வெடி விமானங்கள் வடமேற்கில் வெற்றிகரமாக முன்னேறித் தாக்குகின்றன.



ரஸ்தாவும், விமானப் போக்குவரத்து மார்க்கமும் ஜப்பானைத் தாக்கும் போரில் அமெரிக்காவுக்கும், கனடாவுக்கும் முக்கியமானவை. மேலும் அலாஸ்கா தாக்குதலுக்கு உட்படக்கூடிய பிரதேசம். ஜப்பானைத் தாக்குவதற்கு அலாஸ்கா பாய்ச்சல் ஸ்தலம் போன்றது. இந்த இரண்டு அவசியங்களினால் அமெரிக்காவின் மேற்குக் கரையிலுள்ள ஆயுதசாலைகளுக்கும், அலாஸ்காவிலுள்ள ராணுவ கடற்படை தளங்களுக்கும் தொடர்பு அத்தியாவசியமானது. ஆல்பெர்டாவிலுள்ள எட்மாண்டனிலிருந்து அலாஸ்காவுக்கும் கனேடிய யூகானுக்கும் மத்தியில் எல்லைச்சரகத்திலுள்ள டாஸன் வரையில் கனடாவில் கோர்வையாக அநேக விமான தளங்களிருப்பதினால் இந்த வேலை சிலாக்கியமானதாகவும், சுலபசாத்தியமாகவுமிருந்தது. பெர்ல் துறைமுக நடவடிக்கைக்குச் சில மாதங்களுக்குள்ளாக விமான தளங்களை அபிவிருத்தி செய்வதற்கும் அபாயத்துக்குட்பட்ட பிரதேசத்தைத் தாண்டியிருக்கும் பிரதேசத்தின் வழியாகச் செல்லும் ரஸ்தாவுடன் அவைகளைச் சேர்த்து அமைப்பதன் மூலம் பஸிபிக்கின் தூர வடக்குக் கடற்கரையிலுள்ள அமெரிக்க எல்லைப்புற தற்காப்புகளுக்குச் செல்ல பத்திரமான போக்குவரத்து மார்க்கத்தை ஸ்தாபிப்பதற்கும் கனேடிய அமெரிக்க நிர்வாகங்களுக்குள் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த வேலை அபாரமான வேகத்துடன் பூர்த்தி செய்யப்பட்டது. இந்த ரஸ்தா 1942-ம் வருஷம் முடிவில் போக்குவரத்துக்குத் திறக்கப்பட்டது. அதன் பிறகு அது அடிக்கடி அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறது. கனடா விமான போக்குவரத்து மார்க்கங்கள் ஏராளமான பொருளைச் செலவிட்டுப் பழுதுபார்த்தால் அமெரிக்கா யுத்த காலத்தில் ரஸ்தாவை அமைத்து அதைப் பரிபாலித்துவரும் செலவை ஒப்புக்கொண்டது. அதன்பின் அமெரிக்க விமானப்படையின் தேவையை முன்னிட்டு இந்த விமான தளங்களை சீர்திருத்தம் செய்வதில் கனடா அதிகப் பொருளைச் செலவிட்டுவருகிறது.

அமெரிக்காவின் யுத்த அவசியத்துக்காக நிரந்தரமான சாதனங்களையும் அபிவிருத்திகளையும் அமெரிகா, கனடா செலவிட்ட பொருளை அது திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தாது என்று இப்பொழுது சொல்லப்படுகிறது. விமானப் போக்குவரவு மார்க்கத்தில் சாசுவதமான வேலைகளைச் செய்வதில் அமெரிக்கா செலவிட்டிருக்கும் பொருளைத் திருப்பிக் கொடுத்துவிடுவதாகவும் கனடா வாக்களித்துவிட்டது.

இந்த அறிக்கையை வெளியிட மிஸ்டர் ஹௌ பின்வருமாறு சொல்லுகிறார். "தூர வடமேற்குக்குச் செல்லும் இந்த மார்க்கத்தை உபயோகிக்கும் உரிமையானது விமானப் போக்குவரத்தில் சர்வதேச ஒத்துழைப்பு ஏற்படவேண்டுமென்ற பொதுவான திட்டத்தின் ஒரு அம்சமாகுமென்று கனடா நம்பியிருக்கிறது. ரஸ்தாவும் அதற்கு சமகோடாகச் செல்லும் விமான மார்க்கமும் அநேக பயன்களை அளிக்கக்கூடும். இந்த இரண்டு சாதனங்களையும் இரண்டு பெரிய வட அமெரிக்க தேசங்கள் ஒத்துழைத்து ஆரம்பித்து பரிபாலித்து வருகின்றன. சமாதான காலத்தில் நிரந்தரமாக நிறுவப்படவேண்டிய லக்ஷியங்களிலும் விரிவான ஒத்துழைப்பு ஏற்படுவதற்கு இந்த நடவடிக்கைகள் உற்சாகம் அளிக்கும்.

---

## ஏறக்குறைய லக்ஷம் ஜப்பானியத் துருப்புகள் துண்டிக்கப்பட்டன.

### சமீபத்தில் பசிபிக்கில் நேசதேசத்தார்கள் கையாண்ட நடவடிக்கையின் விளைவுகள்.

---

சமீப காலத்தில் பசிபிக்கில் நேசதேசத்தார்கள் கையாண்ட நடவடிக்கையின் விளைவாக பிஸ்மார்க்—ஸாலமன்ஸ் பிராந்தியத்தில் ஏறக்குறைய லக்ஷம் ஜப்பானியத் துருப்புகள் துண்டிக்கப்பட்டு கைவிடப்பட்டார்களென்று டெயிலி டெலிகிராப்பின் கடற்படை நிருபர் எழுதுகிறார்.

அவைகளில் 14,200 துருப்புகள் ஜப்பானியர் வசமுள்ள ஸாலமன்ஸ் தீவுகளிலிருக்கின்றன. 50,000 முதல் 60,000 துருப்புகள் நியூ பிரிடனிலும் நியூ அயர்லாந்திலுமிருக்கின்றன.

தென் மேற்கு பசிபிக்கில் சமீபத்தில் நடைபெற்ற நேசதேசத்தார்களின் நடவடிக்கைகளைக் கவனித்தால் தென் மேற்கு பசிபிக்கிலுள்ள நேசதேச சேனாதிபதியான ஜெனரல்

மாக்ஆர்தரின் தந்திரமும் பசிபிக்கில் அமெரிக்கக் கடற்படையின் கடற்தளபதியான நிமிட்ஸின் தந்திரமும் ஒன்றுபட்டது தான். எதிரியின் படை சேமிப்புகளுக்குப் போகும் ஸப்ளை மார்க்கங்களைத் துண்டித்து அதைச் சுற்றிச் செல்லுவது தான் யுத்த தந்திரம். எதிரியின் துருப்புகளுக்கு உதவிப் படையும் ஸப்ளைகளும் வரமுடியாதென்று அவர்களுக்குத் தெரியும்.

கிரீன் தீவுகளை ஆக்கிரமித்ததிலிருந்து ஸாலமன்ஸிலுள்ள ரக்ஷணைப் படைகளுக்கு நியூ அயர்லாந்திலிருந்தும், நியூ பிரிடனிலிருந்தும், அல்லது பிஸ்மார்க் கடலில் தளமான ரபாலிலிருந்தும் உதவிவராமல் துண்டிக்கப்பட்டுவிட்டது. காரொலைன் தீவுகளுக்கும் அதைத் தாண்டியும் கடற்தளபதி நிமிட்ஸு சென்றதிலிருந்து ரபாலுக்கு வடக்கிலிருந்து வரும் மார்க்கம் துண்டிக்கப்பட்டுவிட்டது.

அட்மிராலிடி தீவுகளை ஜெனரல் மாக் ஆர்தர் ஆக்கிரமித்ததிலிருந்து நியூ பிரிடனிலும், நியூ அயர்லாந்திலுமுள்ள ஜப்பானிய ரக்ஷணைப் படைகளுக்குச் செல்லும் உதவிப் படைகள், ஸப்ளை மார்க்கங்கள் மூடப்பட்டுவிட்டன. இந்த ஸப்ளை மார்க்கமானது நியூ கினியாவின் வடக்குக் கடற்கரையோரமாகச் சென்று சிறிய கப்பல்கள் மூலமாக சாமான்கள் கொண்டு போகப்பட்டன. அநேக கப்பல்கள் நியூ பிரிடனுக்கும் சென்றன. நேச்தேசத்தார்கள் நியூ கினியாவில் மாடாங்கு வரையில் முன்னேறவில்லை. நியூ கினியாவின் வடக்குக் கரைக்குப் பிறகும் மாடாங்கிலிருந்து வட மேற்கில் 250 மைல்களிலுமுள்ள அட்மிராலிடி தீவுகளில் நேசதேசப் படைகள் இறங்கியதின் பயனாக கடற்கரை யோரமாகச் செல்லும் ஜப்பானின் கடல் மார்க்கமான போக்குவரத்துக்கு அபாயம் ஏற்படும்.

அட்மிராலிடி தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த மானஸ், லாஸ், நீக்ரோஸ் தீவுகளை ஆக்கிரமித்து பலப்படுத்தியதிலிருந்து இரண்டு குணங்கள் தோன்றும். ரபாலைச் சுற்றி வளைக்க முன்னேறி வரும் நேசதேசத்தார்களின் மேற்கு விலாப்பக்கத்தை ரக்ஷிக்க அது ஒரு பலமான எல்லைச் சரக தற்காப்பாகும். மாடாங் வீவாக் பிராந்தியங்களில் நியூ கினியா கடற்கரையோரமாக முன்னேறி வரும் நேசதேசத் துருப்புகளை எதிர்த்து நிற்கும் படைகளுக்கு உதவிப் படைகளையும், ஸப்ளைகளையும் அனுப்பும் நடவடிக்கைகளுக்கு விலாப்பக்கம் நமது வசமிருந்து வரும். காரொலைன் தீவுகளில் போர் தொடுக்க மனமில்லாமல் தயங்கி நிற்கும் ஜப்பானியக் கடற்படையினால் கைவிடப்பட்ட 1,00,000 ஜப்பானியத் துருப்புகளைத் துடைக்கும் நடவடிக்கைகள் கூடிய சீக்கிரம் துவக்கமாகும். சில தீவுகளில் ஜப்பானியர்களுக்குப் போதுமான ஆகாரம் இருக்கிறது. ஆகிலும் மற்ற தீவுகளை விட அதிகமான இயற்கைப் பொருள்கள் வசதியுள்ள நியூ கினியாவிலுள்ள ஜப்பானியத் துருப்புகளுக்கு உணவுப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது என்று ரிப்போர்ட்டுகள் கிடைத்திருக்கின்றன. இந்தப் போர்முனையில் நேசதேசத்தார்களின் யுத்த தந்திரம் பின்வருமாறு. துடைப்பு வேலைக்காக காலஹரணம் செய்வதில்லை. ஒரு தாக்குதலுக்குப் பின் எதிரிக்கு ஆச்வாசப்படுத்திக்கொள்ள அவகாசம் கொடுப்பதில்லை. அதற்குள் மற்றொரு தாக்குதல் செய்யப்படவேண்டும். ஆசியா பக்கத்திலும் தெற்கு பசிபிக் போரிலும் அடிக்கு மேல் அடியாகத் தாக்குவது தான் முக்கிய யுத்த தந்திரம்.

---

## ஸியாமிய நிர்வாகம் கலைக்கப்பட்டுவிட்டது.

(தூரக்கிழக்கு நியூஸ் லெட்டர்.)

அரசாங்க இலாகாக்களைப் பிரித்து அமைக்கும் ஏற்பாட்டின் முதல் நடவடிக்கையாக பிப்ரவரி மாதம் 7-ம் தேதி சாயங்காலம் கர்னல் சுவாங் சாவெஸ்ஸாக் ஸாங்கிராமை உதவி மந்திரியாகவும் அவருக்கு காரியாலயம் பெச்சாபன் என்றும் ஸியாமிலுள்ள பீபல் நிர்வாகம் உத்தியோக முறையில் அறிக்கையை வெளியிட்டது. நிர்வாக இலாகாக்கள் கொண்டு போகப்படும் ஒவ்வொரு பிரதேசத்துக்கும் ஒவ்வொரு உதவி மந்திரி நியமிக்கப்படுவாரென்றும் தெரியவருகிறது. பிப்ரவரி மாதம் 15-ம் தேதியன்று மற்றொரு மத்திய நிர்வாக இலாகா பிராகின்பூரி, பீபல், ஸாங்கிராம் மாகாணங்களின் எல்லைச் சரகத்திலுள்ள பானோம் டோங்கிராக் மலையிலுள்ள ஒரு இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதென்றும் அதற்கு போலஸ் ஜெனரல் அடல்டெஜ்சாராஸ் உதவி மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறாரென்றும் சொல்லப்பட்டது. தற்காப்பு மந்திரி இலாகாவில் மற்றொரு ஸ்தானம் உண்டுபண்ணப்



பட்டதும் அதற்கு பிராயூரா பாமரோ மந்திரியைத் தலைவராக நியமித்ததும் பிப்ரவரி மாதம் வெளிவந்த கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டது. அவரையும் ஒரு மந்திரியாக நியமிக்கக் கூடுமென்று தோன்றுகிறது. அது எவ்விதமிருப்பினும் கர்னல் சுவாங் (அவருடைய பெயரை அன்வயப்படுத்தினால் மன உறுதியை நிலைநாட்டுகிறவர் என்று பொருள்படும்). பாங்காக்கிலிருந்து தன்னுடைய குடும்பத்தாருடன் 300 கிலோமீட்டர்கள் சென்று மன உறுதியைக் காப்பாற்றப்போகிறார். சுகாதார மந்திரியாக இருந்து பாங்காக்கிலும், டான்பூரிலுமுள்ள ஜனங்களின் க்ஷேமத்தைப் பரிபாலிக்கும் வேலையை அவர் துறந்துவிட்டார். அவரும் அவருடைய குடும்பத்தாரும் மார்ஷல் பீபலின் கோஷ்டியின் அபிப்பிராயப்படி விமானத் தாக்குதலிலிருந்து வெளியேறிவிட்டார்கள். பாங்காக்கிலுள்ள ஜனங்கள் விமானத்தாக்குதலை சமாளிக்கவேண்டும். கூடிய சீக்கிரத்தில் மார்ஷல் பீபலும் அவனுடைய கோஷ்டியாரும் ஒளிந்துகொள்ளுவார்கள். மார்ஷல் பீபல் இந்நாளில் அபூர்வமாகத்தான் வெளியே வருகிறான்.

மத்திய நிர்வாகத்தைப் பிரித்து அமைக்கும் முறையானது மார்ஷல் பீபலுக்கும் அவனுடைய கோஷ்டிக்கும் சாதகமளிக்கும். பொதுஜனங்களுக்கு அதிக கஷ்டமும், அசௌகரியமும் பத்திரமின்மையும் ஏற்படும். முக்கியமான குறைவுபாடுகள்; பொது மக்களுக்கும், நிர்வாகத்துக்கும் தொடர்பு கிடையாது. பொதுமக்களை நிர்வாகம் ரக்ஷிக்கவில்லை. நிர்வாக இலாகாக்கள் பிரித்து அமைக்கப்பட்டுவிட்டால் முன்போல அவர்கள் தங்களுடைய அலுவல்களைச் சரிவர நடத்தமுடியாது. மேலும் யுத்தம் நடைபெறும் பொழுது இது சிரமசாத்தியமானது. இப்பொழுது பாங்காக்கிலும், டான்பூரியிலுமுள்ள ஜனங்கள் நிர்வாக் அதிகாரிகளுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளவில்லை. ஏனென்றால் அநேக உத்தியோகஸ்தர்கள் பாங்காக்கிலிருந்து வெளியேறிவிட்டார்கள். காலக்கிரமத்தில் இந்தக் கஷ்டங்கள் அதிகரித்துவிடும். ஜனங்களின் ரக்ஷணைக்கான நடவடிக்கைகளில் பாங்காக்கிலிருக்கும் பாக்கியிருக்கும் முனிஸிபல் நிர்வாக அங்கத்தினர்கள் விமானப்படையெடுப்பின்பொழுது ஒளிந்துகொள்ளவேண்டுமென்றும் காய்ச்சின தண்ணீரைக் குடிக்க வேண்டுமென்றும் கூடுமானவரையில் சீக்கிரமாக நாட்டுப்புறத்துக்குச் செல்லவேண்டுமென்றும் போதிக்கலாம். இவைகள் வெறும் பேச்சே ஒழிய காரியாம்சையில் பலப்படுவதில்லை. ஆகையினால்தான் அநேக ஜனங்கள் பாங்காக்கை விட்டு வெளியேற முடியவில்லை.

மேலும், டான்புரியில் வைசூரி மிகுதியாயிருக்கிறது. தொத்துவியாதியை பரவவொட்டாமல் தடுக்கும் சுகாதார அதிகாரிகள் தங்களுடைய எஜமானனுடன் பெச்சபனுக்குப் போய்விட்டார்கள். பாங்காக்கிலும் டான்புரியிலுமுள்ள ஜனங்கள் தொத்துவியாதி, யுத்தம் முதலியவற்றின் அபாயங்களுக்குட்படவேண்டியிருக்கும். அரசாங்க அங்கத்தினர்களை வெளியேற்றுவதில் நிர்வாகம் அக்கரை எடுத்துக்கொண்டதுபோல் ஜனங்களையும் வெளியேற்றுவதில் கவலை கொண்டால் ஜனங்களின் நிலைமை பிரகாசமாகயிருக்கும். இதுவரையில் அரசாங்கத்தார் ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. தலைநகரமில்லாமலும் நிர்வாக இலாகாக்களைப் பிரித்து அமைப்பதும் செய்வது பாங்காக்கிலும், டான்பூரிலும் உள்ள பெரும்பான்மையோருக்கு சௌகரியமளிக்கவில்லை. ஏனென்றால் அவர்களைக் கை விட்டுவிட்டார்கள். மற்றொரு பக்கத்தில் நிர்வாக இலாகாக்கள் புதிதாக அமைக்கப்பட்ட பிரதேசங்களில் யுத்த அவசியங்களினின்றும் அபாயம் ஏற்படும். ஏனென்றால் எதிர்த்து நிற்கிறதற்கு ஆயத்தம் செய்ய அரசாங்கத்தார் முற்பட்டிருக்கிறார்களென்றும் உதை பட்டால் அவர்கள் நகரங்களைக் காலி செய்யவில்லையென்றும் அரசாங்கத்தார் சொல்லி வருகிறார்கள். நேசநாடுகளுடன் போர் புரிய ஜப்பானியர்களுக்கு உதவியளிப்பதற்காக ஸியாமிய நிர்வாகம் பிரித்து அமைக்கப்பட்டிருப்பதினால் நேசதேச விமானங்கள் ஆங்காங்கு தாக்கக் கூடும்.

பிப்ரவரி மாதம் 18-ம் தேதியன்று பாங்காக் ஒலிபரப்பில் அரசாங்க அங்கத்தினர்களும் சேனாதிபதியும் பத்திரமாக உள்ள ஒரு மலையின் சமீபத்திற்குச் சென்று விட்டார்களென்று சொல்லப்பட்டது. "தங்களுடைய பத்திரத்துக்காகவாவது அல்லது பீதியடைந்தாவது அவர்கள் பாங்காக்கை விட்டு வெளியேறவில்லையென்றும் தாய்லாந்தின் ஜனங்களின் சௌகரியத்துக்காகத்தான் அவர்கள் வெளியே சென்றார்களென்றும் சொல்லப்பட்டது.

---

# சைனுவில் மற்றொரு ஸ்டாலின்கிராட்.

## செய்ங்டேயை சீனப்படையின் 57-வது டிவிஷன் தற்காப்பு செய்த சரித்திரம், யுத்த சரித்திரத்தில் மிகவும் கீர்த்திபெற்றதும் கோரமானதுமான சம்பவம்.

நவம்பர் மாதம் 18-ம் தேதியன்று ஜப்பானியர்கள் 75 மில்லிமீட்டர் பீரங்கிகளையும் கண்ணீர் வாய்வு, தும்மல் வாய்வுவையும் பருந்துப் பாய்ச்சல் விமானங்களையும், யந்திர பீரங்கிகளையும் உபயோகப்படுத்தி கைத்துப்பாக்கிகளும், வெடிகுண்டுகளும், யந்திர பீரங்கிகளும்கொண்ட சீனத்துருப்புகளைத்தாக்கினார்கள். அந்த நகரத்திலிருந்த 1,50,000 பொது ஜனங்கள் அதைக் காலிசெய்துவிட்டனர். தற்காப்பு செய்துவரும் துருப்புகளுக்கு வேறு விதமான உதவி கிடையாது. எதிரிகளின் வெடிகுண்டு வீச்சினால் உணவுப்பொருள் குவியல்கள் அழிக்கப்பட்டன. இரண்டாவது வெடி மருந்துகளும் அற்றுப்போயின. இவ்விதமான நெருக்கடியான சமயத்தில் கட்டுக்கதையில் போகெஸ்டே நடந்துகொண்டவிதமாக நடைமுறையில் ஜெனரல் யூ செங்க்வான் நடத்திக்காட்டினார். அவனுக்குக் கிடைத்த உதவியெல்லாம் இரவுகளில் மதில் சுவர்கள்போல் வைக்கப்பட்டிருந்த வைக்கோல் நிறப்பிய ஆடைகள் உள்ள மனித உருவங்கள்தான். அவைகளைக் காலையில் ஜப்பானியர்கள் கண்டு ஜீவனுள்ள மனிதர்கள் என்று எண்ணினார்கள். தோட்டாக்களை மீதப்படுத்துவதற்காக மதிலிலிருந்த சிப்பாய்களுக்கு இரும்பு நுனியுள்ள மர ஈட்டிகள் வழங்கப்பட்டன. அவைகளைக்கொண்டு அவர்கள் மதிலின் உச்சிக்கு ஏறிவரும் அநேக ஜப்பானியர்களைக் குத்திக் கொன்றுவிட்டார்கள். தினே தினே அந்த நகரத்திலுள்ள 10,000 கட்டங்களில் 9,970 அழிந்துபோனபோதிலும் அவர்கள் தீக்கிரையாகி புகைந்துகொண்டிருக்கும் கொட்டகைகளிலிருந்து எதிரிகளைப் பலமாகத் துரத்தியடித்தனர். கோட்டையின் உச்சியை அடைய முடியாமல் ஜப்பானியர்கள் வெடிகுண்டுகளை நீண்ட மூங்கில்களின் நுனியில் கட்டி அவைகளைச் சுவர்களின்பேரில் எறிந்தார்கள். எந்த ஜப்பானியராவது அகஸ்மாத்தாக சுவரின் பேரில் ஏறிவிட்டால் அவன் உடனே கொல்லப்பட்டுவிடுவான். ஆகிலும் மனிதனின் சகிப்புத் தன்மைக்கு ஒரு எல்லையுண்டு. அதுபோல் செய்ங்க்டெயிலுள்ள சீன சிப்பாயும் அளவுகடந்த பொருமையுடனிருந்திருக்கிறான். அவர்களுடைய தீரத்தை ஸ்டாலின் கிராட்டின் போர் வீரர்களின் தீரத்துக்கு ஒப்பிடலாம். பாக்கியிருந்த 300-பேர்கள் அங்கே இருந்துவந்தால் உயிர்துறப்பது நிச்சயம். அவர்கள் காயம்பட்டு அசையமுடியாமல்போனால் அவர்களை ஜப்பானியர்கள் சனியன்களால் குத்திக்கொன்றுவிடுவார்கள். ஆகையால் ஜெனரல் யூ செய்க்வான் தப்பி ஓடுவதென்று தீர்மானித்தான்.

மிகவும் சுபிக்ஷமாக செழித்தோங்கிய செய்ங்க்டே நகரம் இன்று கருப்புமயமான கட்டடத்தூள்கள் நிரம்பியும் புதைக்கப்படாத ஜப்பானிய, சீன பிரதேசங்களின் துர்க்கந்தம் நிரம்பியும் காணப்படுகிறது. செங்க்டே கோட்டைக்குள் ஒரு கட்டடம் கட்ட நிலைபெற்றிருக்கவில்லை. மதில் சுவர்களும், ஜப்பானிய பீரங்கி பிரயோகம், சட்டி பீரங்கி விமானத் தாக்குதல்களின்மூலம் நொருங்கிவிட்டன. இந்தக்கோட்டையில் தற்காப்பு செய்துவந்த சீன 57-வது டிவிஷன் துருப்புகளும் அழிந்துபோய்விட்டன.

இப்பொழுது செங்க்டே சுதந்திரமடைந்துவிட்டது. ஆகிலும், பாழாகக்கிடக்கிறது. பொதுமக்கள் கொஞ்சம் கொஞ்சமாகப் பாக்கியிருக்கும் சாமான்களைப் பொருக்கிக்கொண்டு நகரத்துக்குள் திரும்பிவருகிறார்கள்.

---

# இந்தியாவின் ஐந்தாவது யுத்த வரவு செலவு திட்டம்.

---

1944-45ம் வருஷ வரவு செலவு திட்டத்தை பொக்கிஷ மெம்பர் பிரேரேபணை செய்தபொழுது அவர் ஆற்றிய சொற்பொழிவில், ஆச்வாசமும், சங்கடங்களைத் தாண்டியதும், நெருக்கடியான காலம் போய்விட்டபோதிலும் வருங்காலத்தில் அநேக அபாயங்கள் ஏற்படக்கூடுமென்றும் வெளிப்பட்டன. அவர் மேலும் சொல்லுகிறார் "சென்ற 18 மாதங்களில் இந்தியாவில் பொருளாதாரப் புயல்காற்று வீசிற்று. அதற்குக் காரணம் அபாரமான ராணுவச் செலவு, உள்நாட்டு கலவரங்கள், இயற்கையான அவகேடுகள், அமித



லாபம், அளவுகடந்து சேமித்தல் போன்ற ஜன சமூகத்து விரோதமான அநேக தீங்குகள். சுருக்கமாகச் சொன்னால், ராணுவ அபாயத்தைப்போல பொருளாதார சங்கடங்களும் இந்தியாவைக் கலங்கும்படி செய்தன. அவைகள் ஒருவாறு பின்வாங்கியிருக்கிறதென்றாலும், அதன் விளைவாக மனிதர்கள் கஷ்டங்களை அனுபவிக்கும்படி நேரிட்டுவிட்டது. இந்தக் கோரமான யுத்த சரித்திரத்தில் ஜனங்களின் அவஸ்தையும் ஒருபுறம் எழுதப்படவேண்டும்." இப்பொழுது நிலைமை விருத்தியடைந்துவிட்டது. கெடுதலான சக்திகளை அடக்க அரசாங்கத்தார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளுக்கு பொதுஜன ஆதரவும், பொதுஜன நம்பிக்கையும் கிடைத்துவிட்டன. இன்னமும் கவலைப்படுவதற்கும் அடிக்கடி ஜாக்கிரதையுடனிருப்பதற்கும் காரணங்களிருப்பினும், வீண் வதந்திகளையும் கலவரத்தையும் நம்பக்கூடிய இந்நாட்டில் தோல்வி மனப்பான்மையினாலும் வதந்திகளாலும் உண்டுபண்ணக்கூடிய கெடுதலான உணர்ச்சியைப் போக்கடிப்பதற்காக உயர்தரமான லக்ஷியத்தைப் புகட்டுவது மெத்த அவசியமானது.

### பொருளாதார ஸ்தைரியம் அவசியம்.

யுத்த வரவு செலவு திட்டமாகயிருந்தபோதிலும் யுத்தத்துக்காக மட்டும் பொருளைச் செலவிடக்கூடாதென்ற ஒரு கொள்கையையும் அது கடைப்பிடித்திருக்கிறது. பிரிடனுடைய கொள்கைப்படி யுத்த அவசியத்துக்காகச் செலவிடப்படும் பொருளுக்கு உயர்தர அளவு ஒன்றும் ஏற்படுத்தப்படவில்லை. பிரிடனில் ஜனசமூக, பொருளாதார அமைப்பும், ஏராளமான விலைவாசி அடக்குமுறைகளும் சாவதானமாக தன்னிச்சையாக பொருள்களின் மிகுதி ஏற்படும்படியான நிலைமையை உண்டுபண்ணிவிட்டன. தற்காப்பு அவசியத்துக்கு போதுமான ஐசுவர்யங்கள் ஏராளமாகயிருக்கின்றன. இந்தியாவிலோவென்றால் சுலபமாக அறிந்துகொள்ளக்கூடிய காரணங்களினால், இந்தியா செலவைப் பொருத்துக்கொள்ளாவிட்டாலும் இந்தியாவிலிருந்து மிகுதியான உயர்தர மனித பலமும், தளவாடங்களும் அனுப்பப்படவேண்டுமானால் அதன் பொருளாதாரத்துக்கு உபரியான சிரமம் ஏற்படும்படியான நிலைமை ஏற்பட்டுவிடும். இந்த அபாயத்தை நாம் உணர்ந்துவிட்டோம். ஆகையினால் இந்தியாவின் கோச நிலையானது, இந்திய மக்களின் க்ஷேமமும் இந்தியா ஒரு முக்கிய யுத்ததளமாக அமைக்கப்படுவதற்கும் ஒத்ததான பொருளாதார ஸ்தைரியத்தை நிலைநாட்டும் கொள்கையை அடிப்படையாகக் கொள்ளவேண்டும்.

முதல்முதலாக இந்தியாவின் கோசம் பொருத்துக்கொள்ளவேண்டிய படைகளுடையவும், முஸ்தீப்புகளுடையவும் செலவானது இந்தியாவின் தற்காப்பு அவசியத்துக்கு அதிகமானதாகயிருக்கக்கூடாதென்று இந்திய நிர்வாகம் முடிவு செய்துவிட்டது. ஆகையால் தென் கிழக்கு ஆசியா கமாண்டின் செலவு இந்தியாவின் கணக்கில் எழுதப்படமாட்டாது. மேலும் யுத்தச் செலவு சம்பந்தமாக பிரிடனும், இந்தியாவும் செய்துகொண்ட ஒப்பந்தம் நிலைபெற்றிருக்கும். 1943-44-ம் வருஷம் முடிய ஐந்து வருஷங்களில் இந்தியாவில் தற்காப்பு விஷயமாகவும், ஸப்ளை சேவைப்படைகள் சம்பந்தமாகவும் செலவிடப்பட்டிருக்கும் பொருளில் இந்தியா 800 கோடி ரூபாய் பொருமானமுள்ள செலவை பொறுத்துக்கொள்ளவேண்டுமென்றும் பிரிடன் 940 கோடி ரூபாய்கள் பொருமானமுள்ள செலவைப் பொருத்துக்கொள்ளவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. பிரிடன் பொறுத்துக்கொண்டிருக்கும் செலவில் சாட்பீல்ட் கமிட்டி சிபார்சு செய்த அளவும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

### இந்தியாவின் மேன்மையான யுத்த முயற்சி.

மேலே கூறியதிலிருந்து இந்தியா செய்திருக்கும் மகத்தான யுத்த முயற்சிகளையும், அதன் விளைவாக நமக்குக் கிடைத்திருக்கும் முக்கியமான வெற்றிகளையும் நாம் குறைத்துச் சொல்லுவதாக பொருள்படாது. பொக்கிஷ மெம்பர் பின்வருமாறு சொல்லுகிறார் :—

" வடக்கு ஆபிரிக்காவிலும், இதாலியிலும் இந்தியர்கள் தீரத்துடன் போர் புரிந்ததை இந்த அஸெம்பிளியிலுள்ள அங்கத்தினர்கள் அறிவார்கள். இதைப்பற்றி அவர்கள் பெருமை பாராட்டவும் கூடும். ஆகையால் நான் அவைகளை இங்கு மறுபடியும் கூறப்போவதில்லை. இந்தப் போர்முனைகளில் வெற்றி பெருவதற்கு இந்தியாவின் பயிற்சிபெற்ற துருப்புகளும், தளவாடப்பெருக்கும் பேருதவி செய்தன என்று நான் சொல்ல விரும்புகிறேன் ".

தற்காப்புக்காக 262·64 கோடி ரூபாய்கள் என்பது அபாரமானது. இதில் விலைவாசிகளின் உயர்வினால் அதிகமான 13·01 கோடி ரூபாயும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இது வருமானத்தைக் குறைக்கிறது. இதை வினா 38·30 கோடி ரூபாய்கள் பொருமானமுள்ள தற்காப்புச் செலவு நாட்டிற்கு சாச்வதமான சௌகரியங்களை அளிக்கக்கூடும். அதன்

விவரம் பின்வருமாறு. விமான தளங்கள் 14·67 கோடி ரூபாய்கள். தொழிற்சாலை அபிவிருத்தி 6 கோடி ரூபாய்கள். பரஸ்பர உதவிக்காக விமான தளங்கள் 10·85 கோடி ரூபாய்கள். இந்தியக் கடற்படைக்காக புதிய திட்டங்கள 2·58 கோடி ரூபாய்கள். டெயிலி போக்குவரத்து திட்டத்தில் மூலதனம் 4·20 கோடி ரூபாய்கள். போர் புரியும் படைகளை அபிவிருத்தி செய்யவும், விஸ்தாரப்படுத்தவும் சில குறிப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 1943-ம் வருஷம் ஜூலை மாதம் முதற்கொண்டு இந்தியத் துருப்புகளுக்கு முன்னைவிட சிலாக்கியமான ஆகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னிருந்ததை விட இப்பொழுது படைகளின் க்ஷேமத்தைக் கோரி ஏராளமான பொருள் செலவிடப்பட்டிருக்கிறது. இரண்டாவதாக இந்தியக் கடற்படையின் கப்பல் பலம் அதிகரித்திருக்கிறது. இதேசமயத்தில் விமானிகளின் எண்ணிக்கைக்குத் தகுந்தபடி 10 பகுதிகளுள்ள விமானப்படையைத் தயாரிக்க இந்தியா முயன்றுவருகிறது. இந்தியாவிலுள்ள விமானப் படையைச் சேர்ந்த புகைக்கூண்டு சேவைப்படைகள் இந்தியர் மயமாக்கப்படுகிறது. இந்திய விமானப் பயிற்சி சேவைப்படையும் ஸ்தாபிக்கப்பட்டுவிட்டது.

அமெரிக்காவிலிருந்து குத்தகைக் கடன் திட்டம் மூலமாக இந்தியாவுக்கு வரும் ஸப்ளைகளின் பொருமானத்தை இப்பொழுது நிர்த்தாரணம் செய்யக்கூடவில்லை. ஏனெனில் பிரிடிஷ் அரசாங்கத்தாருக்கும், இந்தியா அரசாங்கத்தாருக்கும் அனுப்பப்பட்ட பொருள்களின் பொருமானம் இன்னும் விபாகம் செய்யப்படவில்லை. ஆகிலும் 1944-45ம் வருஷம் முடிய 350 கோடி ரூபாய்கள் பொருமானமுள்ள தளவாடங்கள் அனுப்பப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சௌகரியத்தில் இந்தியா மூன்றில் ஒரு பங்கை அடையுமென்று சொல்லிவிடலாம். 1944-45ம் வருஷம் முடிய இந்தியா பிரத்தியுபகாரமாக அமெரிக்காவுக்கு அனுப்பியிருக்கும் பொருள்களின் பொருமானம் 81 கோடி ரூபாய்களுக்கு அதிகமானதென்றும் சொல்லலாம்.

### பொதுஜனங்களின் சார்பில் செலவு.

பொதுஜன உபயோகத்துக்காக 1943-44ம் வருஷத்தில் திட்டம் வகுக்கப்பட்ட 76·78 கோடி ரூபாய்கள் இப்பொழுது 84·29 கோடி ரூபாய்களுக்கு அதிகரித்துவிட்டது. இந்த அதிகரிப்புக்கு விவரம் பின்வருமாறு.

1. எதிரிகளிடம் அகப்பட்டுக்கொண்டிருக்கும் குடும்பத்தாருக்கும், அகதிகளுக்கும் நன்கொடை 2 கோடி ரூபாய்கள்.

2. பயிர் மிகச்செய் இயக்கத்திற்காக மாகாணங்களுக்கும், ஸமஸ்தானங்களுக்கும் நன்கொடை 2 கோடி ரூபாய்கள்.

3. வங்காளத்தின் பஞ்ச நிவாரணத்திற்காக மத்திய நிர்வாகத்தின் நன்கொடை 3 கோடி ரூபாய்கள்.

அடுத்த வருஷ வரவு செலவு திட்டத்தில் தொழிலாராய்ச்சிக்காக 10 லக்ஷம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதை விட யுத்தத்துக்குப் பின் மூன்று அல்லது நான்கு வருஷ தபாவில் ஒன்றுபட்ட ஆராய்ச்சி திட்டத்தை நிலவுவதற்காக 1 கோடி ரூபாய் ஒதுக்கப்படுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆராய்ச்சி வேலைக்காக விஞ்ஞான தொழிற்சாலை ஆராய்ச்சி சபையார்கள் இப்பொழுதே திட்டங்களை வகுத்துவருகிறார்கள். இந்தியாவின் தொழிலபிவிருத்தியில் அரசாங்கத்தாருக்கு உள்ள அக்கரை இவ்விதமாக நடைமுறையில் காண்பிக்கப்பட்டிருக்கிறது.

### செலாவணிப் பெருக்கை ஒழிக்க நடவடிக்கை.

சென்ற வருஷத்தில் விலைவாசிகளின் அதிகரிப்பினால் ஏற்பட்ட செலாவணிப் பெருக்கு என்னும்மகத்தான சங்கடத்தை அரசாங்கமும், பொதுமக்களும் சமாளிக்கவேண்டியதாயிற்று. யுத்த காலத்திய சிலாக்கியமான பொருள் நிலைமை என்பது அரசாங்கத்தார் வெளிப்படுத்தும் பணத்துக்குத் தகுதியான பண்டம் வாங்கும் சக்தியை நிலைநாட்டுவதாகும். இந்த நடவடிக்கை யுத்த அவசியத்துக்காக ஜனங்களின் மிகுதியான பொருளைத் திரட்டுவது என்று மட்டும் பொருள்படாது. முக்கியமாகவும் இந்தியா சம்பந்தப்பட்டமட்டிலும் செலாவணிப் பெருக்கையும், அதனால் ஏற்படும் தீங்குகளையும் குறைக்க அது ஹேதுவாகயிருக்கும். ஆகையால் இந்த சந்தர்ப்பத்தில் பணப் பெருக்கைத் தடுக்கக்கூடிய நடவடிக்கைகள் அவசியமானவை. இந்த நடவடிக்கைகள் சட்ட பூர்வமாக விலைவாசியை கட்டுப்படுத்தல், அமிதமாகச் சேமித்து வைப்பவர்களையும், அமித லாபம் சம்பாதிப்பவர்களையும் சிக்ஷித்தல் போன்ற முறைகளால் சாதிக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகளை இந்தியப் பொதுமக்கள் வரவேற்றார்கள். மேலும் அதிகமான சாமான்களும், பணமும் ஜனங்களுக்குக் கிடைக்கும்படியாகச் செய்வதன்மூலம் அரசாங்கத்தார் பணப் பெருக்கைத் தடுக்க முயன்றார்கள்.



இந்த முறையில் அரசாங்கத்தார் "மீதப்படுத்திக் கடன் கொடு" என்ற முக்கியமான மற்றொரு நடவடிக்கையையும் மேற்கொண்டார்கள். இந்த நடவடிக்கைகளுக்கு ஜனங்கள் மிகுதியாக அனுவாதம் செய்தார்கள். 1943-ம் வருஷம் ஜனவரி மாதம் 31-ம் தேதி முதல் 1944-ம் வருஷம் ஜனவரி மாதம் முடிய தற்காப்புக் கடன் பத்திரங்களுக்கு வழங்கப்பட்ட ரூபாய் 115 கோடியாகும். முந்திய வருஷத்தைவிட இது மூன்று மடங்கு அதிகமானது. சிறிய சேமிப்பு இயக்கமொன்று விரிவான அமைப்புடன் ஆரம்பிக்கப்படும். பிரிடனில் யுத்தச் செலவுக்காகப் பொருள் இந்தியாபோலில்லாமல் வரி விகிதத்தையே பொருத்திருக்கிறதென்றாலும், "மீதப்படுத்திக் கடன் கொடு" என்ற கொள்கையும் சிறிய சேமிப்பு இயக்கமும் பிரிடிஷ் கோசத்தின் அபிவிருத்திக்கு மார்க்கங்களை கற்பித்திருக்கின்றன. மேலும் அவைகள் செலாவணிப் பெருக்கைத் தடுத்துவிடுகின்றன. ஆகையால் தேசத்தின் பொருளாதார சுகத்தை உத்தேசித்து மேன்மேலும் அரசாங்கத்தாருக்குக் கடன் கொடுக்க வேண்டுமென்று பொக்கிஷ மெம்பர் வற்புறுத்தினாரென்பதில் ஆச்சரியமில்லை.

### புதிய வரி விகிதங்கள்.

புதிய வரி விகிதங்கள் பின்வருமாறு. தேயிலை, காப்பி, பாக்கு முதலியவைகளுக்கு ராத்தலுக்கு இரண்டணா உபரி வரி. 10 கோடி ரூபாய் அதிக வருமானம் வரக்கூடியவரையில் புகையிலைக்கு உபரி வரி. சாராயத்துக்கும், புகையிலைக்கும் விதிக்கப்பட்ட வரி 20 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதத்துக்கு அதிகரிப்பு. 15,000 ரூபாய்க்கு மேற்பட்ட வருமானத்துக்கு விதிக்கப்படும் வரியில் அதிகரிப்பு. 35,000-க்கு மேல் 2 லக்ஷம் ரூபாய் வருமானமுள்ளவர்களுக்கு விதிக்கப்படும் வரியில் $\frac{1}{2}$ அணா உயர்வு. நகரச் சுங்க வரி 1 அணாவிலிருந்து மூன்று அணாக்களுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. சில தகுதியான கேஸ்களில் ஒரு அணா வஜா செய்யப்படும். இவைகள் வருமான வரியில் அதிகமென்று நினைக்கலாம். ஆகிலும் இந்த வரி விகிதம் அதம்பக்ஷமாக 1,500 அல்லது 2,000 ரூபாய் வருமானத்திலிருந்துதான் ஆரம்பிக்குமென்பது குறிப்பிடத்தக்கது.

இது துணிவுகரமான வரவு செலவு திட்டம் என்று சொல்லப்படுகிறது. ஆகிலும் அதில் துணிவுகரமான திட்டங்கள் ஒன்றும் காணப்படவில்லை. கட்டாயமாக பொருளை சேமிப்புப் பத்திரங்களில் போடவேண்டுமென்ற திட்டமானது மூன்று மாதத்திற்கு ஒரு தரம் வருமான வரியைச் செலுத்த வசதியளிக்கிறது. அதற்கு இரண்டு சதவிகிதம் வட்டி கொடுக்கப்படும். மாகாணங்களில் மற்றொரு நூதன வரி விதிக்கப்படும். விவசாயத்துக்கு உபயோகிக்கப்படாத சொத்துக்கு வரி விதிக்கப்படும். இதன் நோக்கம் இருவகைப்படும். யுத்த காலத்தில் தோன்றியிருக்கும் பலமான சொத்து வித்தியாசங்கள் இந்த நடவடிக்கை மூலம் குறைக்கப்படும். இந்தியாவின் கோச நிலைமையிலுள்ள வெளி நிறப்பப்படுவதற்கும் யுத்தத்துக்குப் பின் உலக புனரமைப்புக்கும் இது உதவியளிக்கும்.

### எதிர்காலத்துக்கு கோச அஸ்திவாரம்.

யுத்தத்துக்குப் பின் உலக சீர்திருத்தம் செய்வதற்கான உருவான நடைபெறக்கூடிய திட்டங்களை அரசாங்கத்தார் நிறுவிவருகிறார்கள். மத்திய, மாகாணங்களின் கோச நிலைமை திருப்திகரமாகயிருக்கவேண்டுமென்று இதை ஒட்டித்தான் பொக்கிஷ மெம்பர் வற்புறுத்தினார். இதை சாதிப்பதற்கு மாகாணங்களின் வரி விகித ஏற்பாடுகள் சிறந்த முறையில் நடைபெறவேண்டும். யுத்தம் நின்ற பின் ஐந்து வருஷங்களுக்குள்ளாக கடன் வாங்குவதன் மூலமாகவும், வரி விகிதம் மூலமாகவும் புனருத்தாரணத்துக்காக இந்தியாவில் 1,000 கோடி ரூபாய்கள் சேமிக்கப்படவேண்டுமென்றும் அதன் பின் ஐந்து ஐந்து வருஷங்களில் இந்தத் தொகை அதிகரித்துவருமென்றும் அவர் மதிப்புப் போட்டார். வரவு செலவு திட்ட சொற்பொழிவில் மற்ற இரண்டு அம்சங்களும் குறிப்பிடத்தக்கவை. முதலாவதாக யுத்தத்துக்குப் பின் அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்குமிடையே வியாபாரத்தை அபிவிருத்தி செய்வதற்கா டாலர் நிதி ஒன்று ஸ்தாபிக்கப்படும். இரண்டாவதாக, இந்திய சட்டசபையில் விவாதிக்கப்பட்டபின் யுத்தத்துக்குப் பின் உலக அமைப்பில் சர்வதேச பொருளாதார நிலைமையைப் பற்றி இந்தியா கவர்ன்மெண்டார் தங்களுடைய அபிப்பிராயத்தை வெளியிடுவார்கள். இந்த திட்டங்கள் இந்தியப் பொதுமக்களின் உருவான அபிப்பிராயத்துக்கு ஒத்ததாக இந்திய அரசாங்கத்தாரின் கொள்கைகளும் மேற்கொள்ளப்பட்டன என்பதை வெளிப்படுத்துகின்றன.

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டென்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 190. (6-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 25- 3-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | 29- 3-44 | அன்னவாசல் | ... மாலை 7.00 |
| 26- 3-44 | ஜோதிகை-புதுப்பட்டி | ... „ 7.00 | „ | ஆரியூர் | ... „ 7.30 |
| „ | ஜோதிலை | ... „ 7.30 | 30- 3-44 | மலம்பட்டி | ... „ 7.00 |
| 27- 3-44 | பெருமாநாடு | ... „ 7.00 | „ | பேராம்பூர் | ... „ 7.30 |
| „ | புல்வயல் | ... „ 7.30 | 31- 3-44 | மலைக்குடிப்பட்டி | ... „ 7.00 |
| 28- 3-44 | சடயம்பட்டி | ... „ 7.00 | „ | தலையாஹூர் | ... „ 7.30 |
| „ | ஒலியமங்கலம் | ... „ 7.30 | | | |

### பிரஸங்கம் 191. (1-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1- 4-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | 5- 4-44 | பூக்குடி | ... மாலை 7.00 |
| 2- 4-44 | ரேஹூர் | ... „ 7.00 | „ | சத்தியமங்கலம் | ... „ 7.30 |
| „ | நாஞ்சூர் | ... „ 7.30 | 6- 4 44 | மிரட்டுநிலை | ... „ 7.00 |
| 3- 4-44 | பூவரசகுடி | ... „ 7.00 | „ | அரிமளம் | ... „ 7.30 |
| „ | வேங்கடகுளம் | ... „ 7.30 | 7- 4-44 | உடையாளிப்பட்டி | ... „ 7.00 |
| 4- 4-44 | பெருங்களூர் | ... „ 7.00 | „ | கிள்ளுகோட்டை | ... „ 7.30 |
| „ | ஆதனக்கோட்டை | ... „ 7.30 | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 25— 3—44 | பொன்னமராவதி. | 1— 4—44 | வெட்டம்விடுதி. |
| 26— 3—44 | கொடும்பாளூர். | | |
| 28— 3—44 | வடகாடு. | 2— 4—44 | விராச்சிலை. |
| 30— 3—44 | ஆலங்குடி. | | |
| 31— 3—44 | புதுக்கோட்டை. | 3— 4—44 | பேராம்பூர். |

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,800—30-3-44.


# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம் ஆண்டு ஏப்ரல் மீ 1௳ [ந. 191


தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CXCI.

## யுத்தத்தின் போக்கு.

*புதுக்கோட்டை ஸமஸ்தானம் முதலாவது கவுன்ஸிலர் 28—3—44௳ அன்று புதுக்கோட்டை சட்ட சபையில் பட்ஜெட் திட்டத்தை ஸமர்ப்பிக்கும் காலத்தில் ஆற்றிய சொற்பொழிவு.*

சென்ற வருஷம் நான் பட்ஜெட்டை ஆஜர் செய்த காலத்தில் நேசதேசப்படைகள் தினந்தோறும் கொஞ்சம் கொஞ்சமாக கால் ஊன்றி வருகிறார்கள் என்றும், ஜெர்மனி, ஜப்பான் இவர்களுடைய பேராசையையும், ஆவலையும், பொறிகலங்கும்படி அடித்துவருகிறார்கள் என்றும், குறிப்பிட்டுச் சொன்னேன். இந்த உலக யுத்தத்தில் அகில பிரிட்டனும், அதன் நேசதேசங்களும் இறுதியில் வெற்றி பெறுவார்கள் என்ற முடிவு உதயமாவதைத் தெளிவாகப் பார்த்தோம். அதுமுதல், என்ன நடந்திருக்கிறது? ஒரு யுத்தத்திற்குப் பிறகு மற்றொரு யுத்தத்தில் ஜெர்மானியர்களை ருஷ்ய சேனை தோற்கடித்து வருகின்றது. ஒரு பக்கத்தில் பின்லாந்தின் எல்லைக்கு அப்பால் அவர்கள் துரத்தி அடிக்கப்பட்டுவிட்டார்கள். மற்றொரு பக்கத்தில் ருமேனியாவையும், பால்கனையும் பயமுறுத்தி வருகிறார்கள். ருஷ்யாவிலிருந்து ஜெர்மானியர்களை முழுவதும் வெளிப்படுத்தும் நாள் கிட்டிவிட்டது. இதாலியர்களையும், ஜெர்மானியர்களையும் ஆபிரிக்காவைவிட்டு வெளியேற்றி ஆகிவிட்டது. மத்தியதரைக்கடலில் அவர்களைப்பற்றிய பயம் வெகுதூரமாய் ஒழிந்துவிட்டது. முஸோலினியை ராஜீநாமா செய்யும்படி துரத்தி ஆகிவிட்டது. மார்ஷல் படோக்ளியோவை தலைமைகொண்ட ஆளுகையில் இதாலிய கவர்ன்மெண்டு சரணமடைந்தது. நேசதேசப்படைகள் ரோமாபுரியை நோக்கி முன்னேறிவருகின்றன. இப்போது அதன் சமீபத்தில் இருக்கின்றன. ஜப்பானியர்களுக்கு விரோதமாகவும், யுத்தம் இப்போது நமக்கு சாதகமாகவே நடந்துவருகிறது. அவர்கள் தேசங்களை பிடித்துக்கொண்டு போகும் நாள் இனிமேல் இல்லை. ஒன்றன்பின் ஒன்றாக அவர்கள் துர்மார்க்கத்தில் சம்பாதித்ததை எல்லாம் வரவரக் கக்கிவிடும்படி அடிக்கப்பட்டார்கள். அரக்கான் போர்முனையில் இந்தியத் துருப்புகள் முன்னேற ஆரம்பித்து, இடைவிடாது முன்னேறி வருகின்றன. ஐக்கிய தேசங்களின் கப்பற்படையால் ட்ரெக் என்னும் இடத்திலிருந்த ஜப்பானிய முக்கிய கப்பற்படை தளத்திற்கு பயம் ஏற்பட்டபடியால், அந்தத் தளத்திலிருந்து ஜப்பானிய கப்பற்படை வெட்கமில்லாமல் வாபஸ் வாங்கிக்கொண்டது. தரைமேலும், கடல்மீதும், வானத்திலும், நமது விரோதிகளான ஜப்பானியர்களுக்கும் ஜெர்மானியர்களுக்கும் அழிவு மிகவும் அதிகம். எல்லா முனைகளிலும் இந்திய சேனை நல்ல பெயர் பெற்றிருக்கிறது. சென்ற வருஷம் தோன்றின இறுதி வெற்றி தினம் அருகே வந்து கொண்டிருக்கிறது. நேசதேசப் படைகளின் நிலைமை மூலை திரும்பிவிட்டது. இறுதி வெற்றியை அடைவதற்கு விரைவில் அடி எடுத்துவைக்க ஆரம்பித்து விட்டார்கள். பொதுவாக எதிர்பார்த்ததைவிட இப்போது அந்த வெற்றி சீக்கிரமே அடையப்பெறும்.

# வார யுத்தச் செய்திகள்.

## (A)-முக்கியமான சம்பவங்கள்.

**20—3—44 (திங்கட்கிழமை).** ஜெர்மன் துருப்புகள் ஹங்கேரியை ஆக்கிரமித்தன.

ருஷ்யர்கள் வினிஸ்டாவையும் மொகிலெவ் போடோவ்ஸ்கியையும் பிடித்தனர்.

**21—3—44 (செவ்வாய்க்கிழமை).** பின்லாந்து ருஷ்யாவின் சமாதான ஷரத்துகளை நிராகரித்தது.

ருஷ்யர்கள் செர்னுடி—பால்டி இருப்புப் பாதையைத் துண்டித்தனர்.

நேசதேசத்தார்கள் வடக்கு பர்மாவில் ஜம்பூபம், ஸம்பரா பம் முதலிய இடங்களைப் பிடித்தனர்.

அமெரிக்க மெரீன் படைகள் பிஸ்மார்க் தீவுக் கூட்டத்திலுள்ள அமிராவிலிறங்கின.

**22—3—44 (புதன்கிழமை).** இந்தோ—பர்மா எல்லைச்சரகத்திலிருக்கும் மணிப்பூர் ஸமஸ்தானத்துக்குள் ஜப்பானியப் படைகள் நுழைந்தன.

ருஷ்யர்கள் ஜெர்மனியின் முக்கிய தளமான பெர்வொமெயிஸ்க் என்னும் தளத்தைப் பிடித்தனர்.

பிஸ்மார்க் தீவுக்கூட்டத்தில் லொமுஸொ என்னும் தீவை அமெரிக்கர்கள் கைப்பற்றினார்கள்.

பிரிடிஷ் விமானப்படை ஜெர்மனியிலுள்ள ஸ்டட்கார்ட் பேரில் 3,000 டன்கள் மொத்த எடையானமுள்ள வெடிகுண்டுகளைப் போட்டது.

**23—3—44 (வியாழக்கிழமை).** ஜெர்மானியர்கள் ருமேனியாவை ஆக்கிரமித்தார்கள்.

ருஷ்யர்கள் காபுசின்ஸ்கி, டிரெம்பௌலா என்ற இடங்களை ஆக்கிரமித்தார்கள்.

**24—3—44 (வெள்ளிக்கிழமை).** பிரிடிஷ் விமானப்படை பெர்லின் பேரில் 2,500 டன்கள் மொத்த எடைமானமுள்ள வெடிகுண்டுகளைப் போட்டது.

**25—3—44 (சனிக்கிழமை).** ருஷ்யர்கள் புரோஸ்குரோவ் என்ற ஜெர்மன் அரண்களைப் பிடித்தார்கள்.

**26—3—44 (ஞாயிற்றுக்கிழமை).** ருஷ்யர்கள் பால்டியை ஆக்கிரமித்துவிட்டு ருமேனிய எல்லைச்சரகத்திற்கு முன்னேறிவிட்டார்கள்.

## (B)-செய்திச் சுருக்கம்.

**ருஷ்யா.**—ருஷ்யாவில் அநேக சம்பவங்கள் நடைபெற்றன. இந்த வாரத்தில் நான்கு முக்கியமான ஜெர்மன் அரண்கள் விழுந்துவிட்டன. பக் நதிக்கரையிலுள்ள வினிட்ஸா, ...ர் நதிக்கரையிலுள்ள மோகிலேவ் போடோஸ்கி, பால்டி, ஒடெஸ்ஸா—லவாவ்



இருப்புப்பாதையில் புரோஸ்குராவ். ருஷ்ய எல்லைச்சரகத்திலுள்ள பருத் நதியை ருஷ்யர்கள் அடைந்தனர். இந்த சம்பவத்தை ருஷ்யா 324 வேட்டுகளைப்போட்டுக் கொண்டாடிற்று. இம்மாதிரியாக லெனின்கிராடின் முற்றுகை அகற்றப்பட்டபொழுதும் கொண்டாடப்பட்டது. இந்த நடவடிக்கையில் மார்ஷல் சூகோவின் இரண்டாவது யூக்ரேனியப்படை புகழ் பெற்றது.

இதே சமயத்தில் ஜெனரல் கோனியெவிடமுள்ள முதலாவது யூக்ரேனியப்படை போலந்தில் முன்னேறி ஏற்கனவே ருஷ்யா வசமிருந்த ருமேனிய மாகாணமான பூகோவினா பக்கம் திரும்பி காமெண்ட்ஸ்—பொடோல்ஸ்கியைப் பிடித்துவிட்டு, ஹங்கேரியின எல்லைச் சரகத்திலுள்ள கார்பேதியன் மலையடிக்கு வந்துவிட்டது.

மூன்றாவது யூக்ரேனியப்படை கருங்கடல் துறைமுகமான நிகோலோயேவைப் பிடித்துவிட்டு ஒடெஸ்ஸாவுக்கு 75 மைல்களுக்குள்ளாக வந்துவிட்டது.

**இதாலி.**—காஸினோவுக்காகப் போர் நடைபெறுகிறது. முக்கியமாக பீரங்கிப்போர்கள் நடைபெறுகின்றன. நேசதேசத்தார்கள் ஜெர்மானியர் வசமுள்ள காண்டினெண்டல், டெஸ் ரோஸஸ் என்ற ஹோட்டல்கள் பேரில் குண்டுகளைப் பொழிகிறார்கள். ஜெர்மானியர்கள் இங்கு வியர்த்தமாகப் போர் நடத்துகிறார்கள். காஸினோ நமக்கு முக்கியமானதல்ல.

ஆன்ஸியோ முன்னேறும் வாசலில் ஜெர்மானியர்கள் செய்த மூன்று பதில் தாக்குதல்கள் விரட்டியடிக்கப்பட்டன.

**விமானப் போர்.**—பெர்லின் மறுபடியும் தாக்கப்பட்டது. 1,000 பிரிடிஷ் விமானங்கள் 2,500 டன்கள் மொத்த எடைமானமுள்ள வெடிகுண்டுகளைப் பொழிந்தன. கீலும், எஸ்ஸனும் தாக்குண்டன.

**பர்மா.**—நேசதேசப்படைகள் வடக்கு பர்மாவிலுள்ள ஜம்பூபம், ஸம்பரா பம், பின்ஸாகா முதலிய இடங்களைப் பிடித்தன.

சீனப்படைகள் ஷாடுஸாப்பை ஆக்கிரமித்தனர்.

மணிப்பூர் எல்லைச் சரகத்தில் ஜப்பானியரின் தாக்குதல் பலமடைந்து வருகிறது. இம்பாலுக்கு வடகிழக்கில் 40 மைல் தூரத்திலும் எல்லைச்சரகத்துக்கு 20 மைல்களுக்குள்ளும் உக்ருல் பிராந்தியத்தில் போர் நடைபெறுகிறது. ஜப்பானியர்களே ஒப்புக்கொள்வதுபோல இந்தத் தாக்குதல் தற்காப்புக்காகவே ஒழிய முன்னேறித் தாக்கும் நடவடிக்கை இல்லை. சங்கியையிலும் முஸ்தீப்புகளிலும் ஜப்பானியர்களைவிட மேன்மையடைந்திருக்கும் நமது துருப்புகள் எதிரியைத் தாக்கத்தயாராக இருக்கின்றன.

---

### சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**19—3—44.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—ராணுவ இலக்குகள்—வடக்கு பிரான்ஸ் (N. France), பாஸ் டி கலே (Pas De Calais) பிரதேசம் உள்பட.

விமானத் தொழிற்சாலைகள்.—க்ளாகன் பர்ட் (Klagenfurt), ஆராஸ் (Oraz).

ரயில் தளங்கள்.—நின் (Knin), மெட்கோவிக் (Metkovic).

இரவு.—இலக்குகள்.—மத்திய ஜெர்மனி (Central Germany), மேற்கு ஜெர்மனி (Western Germany).

**இதாலி (Italy).**

ஜெர்மன் சைனியங்கள்.—காஸினோ (Cassino), ஆன்ஸியோ (Anzio) முனை.

மோட்டார் வண்டிகள்.—கேட்டா (Gaeta) விற்கு தெற்கில்.

**ருஷ்யா (Russia).**

(61 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.-ருஷ்ய யுத்தரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய கடற்படை தளம்.-ஜாவாவிலுள்ள ரோயொபா பாஜா (Roerabaja).

ஸப்ளை தளங்கள்.—ரபால் (Rabaul) துறைமுகத்தில்.

கப்பல்கள்.—கபிரா (Kabira) வளைகுடா.

ஜப்பானிய நாஸகாரி—நியூ கினியிலுள்ள ஹாலந்து (Holland).

**பர்மா (Burma).**

எதிரி சைனியங்கள்.—சின் மலைகள் (Chin Hills), சிண்ட்வின் (Chindwin), வடமேற்கு பர்மா (N.W. Burma).

ரயில் பாலம்.—மொகாங் (Mogaung).

**20—3—44.** (திங்கட்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—தொழிற்சாலைகளும் ஒரு பெரிய ரயில்வே ஜங்ஷனும். பிராங்பர்ட் (Frankfurt).

இலக்துகள்.—தென்மேற்கு ஜெர்மனி (N. W. Germany).

இலக்துகள்.—பிரான்ஸ் (France).

இரவு.—வெடிகுண்டு தொழிற்சாலைகள்.—பிரான்ஸிலுள்ள ஆங்கோலமி (Angouleme).

இலக்துகள்.—மேற்கு ஜெர்மனி (Western Germany).

இதாலி (Italy).

(4 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன; 4 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

ரயில் ஸ்தாபனங்கள்.—ரோமிற்கு (Rome) வடக்கு.

இதாலியிலுள்ள ஆரேஸ்ஸோ (Arezzo).

புஸைன் (Bucine) பாலங்கள்.

ரஸ்தா போக்குவரத்து, பீரங்கி ஸ்தாபனங்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

கப்பல்கள்.—டால்மேஷியன் (Dalmatian) கடற்கரை.

பாலம்.—டார்குவிஞ (Tarquina).

ருஷ்யா (Russia).

(47 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியக் கப்பற் கூட்டங்கள்.—நியூ கினியிலுள்ள வீவாக் (Wewak). (5 ஜப்பானிய யுத்தக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன), காரோலைன்ஸ் தீவிலுள்ள பொனுபி (Ponape).

எதிரி போக்குவரத்துகள்.—சைனுவிலுள்ள யாங்ட்ஸி (Yangtse) நதி.

ஜப்பானியர் ஆக்கிரமித்திருந்த தீவுகள்.-கிழக்கு மார்ஷல்ஸ் (E. Marshalls).

பர்மா (Burma).

எதிரி சைனியங்கள் போக்குவரத்துகள்.—அரக்கான் (Arakan), மாயூ (Mayu), கலடான் (Kaladan).

கப்பல்கள்.—ராம்ரி (Ramree).

எதிரித் துருப்புகள்.—சின் (Chin Hills) மலைகள், சின்ட்வின் (Chindwin).

ஸப்ளைக் குவியல்கள்.—வட பர்மா (N. Burma).

இலக்துகள்.—மொகாங் (Mogaung), காமெய்ங (Kamaing).

**21—3—44.** (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

(23 அச்சு விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

பகல்.—ராணுவ இலக்துகள்— பாஸ் டி கலே (Pas de Calais) பிரதேசம்.

விமான நிலயங்கள், ஸ்தாபனங்கள்.-பிரனீஸ் (Pyrenees) முதல் பாரீஸ் (Paris) வரை.

இரவு.—இலக்துகள்—மேற்கு ஜெர்மனி (Western Germany).

இதாலி (Italy).

எதிரி சைனியங்கள், போக்குவரத்துகள்.—காஸினே (Cassino)

ருஷ்யா (Russia).

(29 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய தளம்.—நியூ அயர்லாந்திலுள்ள காவியெங் (Kavieng).

எதிரி சைனியங்கள்.—அமீரா (Amirau).

விமான நிலயங்கள், ஸப்ளைக் குவியல்கள்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul).

ஜப்பானிய சைனியங்கள்.—மார்ஷல்ஸ் (Marshalls).

பர்மா (Burma).

இலக்துகள்.—சின் மலைகள் (Chin Hills), சின்ட்வின் (Chindwin), அரக்கான் (Arakan), மாயூ (Mayu), கலடான் (Kaladan).

எதிரித் துருப்புகள், பீரங்கி குவியல்கள்.—வடக்கு பர்மா (N. Burma).

தளவாடக் குவியல்கள்.—பர்மாவிலுள்ள பாகாக் (Pahok).

எதிரி சைனியங்கள்.—மாலு (Mawlu).

ஸப்ளை தளங்கள்.—புரோம்( Prome).

**22—3—44.** (புதன்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—இலக்துகள்— பெர்லின் (Berlin) பிரதேசம், மேற்கு ஜெர்மனி (Western Germany).

இரவு.—தொழிற்சாலைகள்—ஸ்டட்கார்ட் (Stuttgart)—(33 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

பேர்லின் (Berlin), இதர இலக்துகள்.—மேற்கு ஜெர்மனி (Western Germany).

இதாலி (Italy).

முக்கிய ரயில்வே தளங்கள்.— பொலோஞ (Bologna), ரிமினி (Rimini), பாடுவா (Padua).

ரயில்வே.—வெரோஞ (Verona).

ரயில்வே பாலங்கள்.—போகிபான்ஸி (Poggibonsi), அரெஸ்ஸோ (Arezzo), போபோலி (Popoli).

கப்பல்கள்.—டால்மேஷியன் (Dalmation) கடற்கரை.

ரஸ்தா போக்குவரத்துகள்.— வடமேற்கு கிரீஸ் (N. W. Greece) கரை.



ருஷ்யா (Russia).

(24 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

காரோலைன்ஸ் தீவுக்கூட்டத்திலுள்ள பொனுபி (Ponape), குஸே (Kusaie).

ஜப்பானியர் ஆக்கிரமித்திருந்த தீவுகள்.—மார்ஷல்ஸ் (Marshalls).

விமான நிலையங்கள்.—ரபால் (Rabaul).

படகுகள்.—நியூ கினியிலுள்ள வீவாக் (Wewak).

பர்மா (Burma).

குவியல்கள்,—டாங்குப் (Taungup).

இலக்துகள்.—மத்திய பர்மா (Central Burma).

எதிரி சைனியங்கள், எதிரி ஆக்கிரமித்த கிராமங்கள், மோட்டார் போக்குவரத்துகள்.—சின்ட்வின் (Chindwin), சின் மலை மலைகள் (Chin Hills), அரக்கான் (Arakan), மாயூ (Mayu), கலடான் (Kaladan).

ஸ்டோர்கள்.—மொகாங் (Mogaung).

**23—3—44.** (வியாழக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—(61 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

ரயில்வே ஸ்தலங்கள்.-பாரிஸுக்கருகிலுள்ள பியெர்ரி ஜலசந்தி (St. Pierre), கிரெயில் (Creil).

ஜெர்மன் விமான நிலயங்கள்.—வடக்கு பிரான்ஸ் (North France).

இரவு.—ரயில்வே இலக்துகள்—லேயான் (Laon).

இலக்துகள்.—லியன்ஸ் (Lyons) பிரதேசம், மேற்கு ஜெர்மனி (West Germany), டார்ட்மண்ட் (Dortmund).

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

இதாலி (Italy).

ரயில்வே தளங்கள்.—காம்போடி மார்டி (Campodi Marte).

பாலங்கள்.-பொண்டாஸ்ஸிவ் (Pontassieve).

ரயில் ஸ்தானங்கள்.—பாடுவா (Padua).

பீரங்கி ஸ்தாபனங்கள்.—காஸினே (Cassino) பிரதேசம்.

பாலம்.-பாகோஞரா மாரிட்டிமா (Facoiean Marittima).

கப்பல்கள்.—டால்மேஷியன் (Dalmatian) கடற்கரை.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

எதிரி கப்பல்கள், பாதுகாப்பு ஸ்தாபனங்கள் ஸப்ளைப் பிரதேசங்கள்.—வீவாக்கிலுள்ள எய்டாப் (Aitap) முதல் மோயென் முனை (Cape Moen) வரை, (Wewak) நியூ கினி (N. Guinea), (9 கப்பல்களும், 23 படகுகளும் நாசமாக்கப்பட்டன).

விமான நிலயம்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul).

பர்மா (Burma).

எதிரி ஆக்கிரமித்திருந்த கிராமங்கள், மோட்டார்ப் போக்குவரத்து ஸாதனங்கள் ரஸ்தாக்கள்.—அரக்கான் (Arakan), மாயூ (Mayu), கலடான் (Kaladan), சின் மலைகள் (Chin Hills).

போக்குவரத்துகள்.—மத்திய தென் பர்மா, (South Burma).

ரயில்வே ஜங்ஷன்.—நாபா (Naba).

எதிரி தரை துருப்புகள்.—மாயூ (Mayu) பிரதேசம்.

**24—3—44.** (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe)

(8 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

பகல்.—தொழிற்சாலை இலக்துகள்— பிராங்பர்ட் (Frankfurt), ஸுவெய்ன்பர்ட் (Schweinfurt).

விமான நிலயங்கள்.—நான்ஸி (Nancy).

இரவு.—(73 நேசதேச விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

பேர்லின் (Berlin)—(2,500 டன்கள் நிறையுள்ள குண்டுகள் போடப்பட்டன).

கீல் (Kiel) இதர இலக்துகள்.—மேற்கு ஜெர்மனி (Western Germany).

இதாலி (Italy),

கப்பல்கள், கப்பற்கட்டுந்துறைகள்.—லெக்ஹார்ன் (Leghorn).

ரயில் ஸ்தலங்கள்.—ஆர்வியெட்டோ (Orvieto), ஸுல்மோஞ (Sulmona), பாஞே (Fano).

கப்பல்கள்.—இதாலியின் மேற்கு கடற்கரை டால்மேஷிடியன் (Dalmatian) கடற்கரை.

துருப்பு முகாம்கள்.—காஸினே (Cassino).

ரயில்வே தளங்கள்.—ரிமிணி (Rimini) அங்கோஞ (Ancona).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).
வேக் (Wake) தீவு.
4 ஜப்பானிய தளங்கள்.—மார்ஷல்ஸ் (Marshalls).
2 ஜப்பானிய தளங்கள்.—காரோலைன்ஸ் (Carolines).
துறைமுகம்.—நியூ பிரிடன் (N. Britain) லிஉள்ள ரபால் (Rabaul).

பர்மா (Burma).
எதிரி சைனியங்கள், துருப்புகள், போக்குவரத்துகள்.—கலடான் (Kaladan), மாயு (Mayu), சின் மலைகள் (Chin hills), சிண்ட்வின் (Chindwin), வடமேற்கு பர்மா (N. W. Burma) பிரதேசங்கள்.

### *விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.*

**20—3—44.** (திங்கட்கிழமை).
பிரிடன் (Britain).
எதிரி விமான நடவடிக்கை இல்லை.
ருஷ்யா (Russia).
தூரக்கிழக்கு (Far East).
ஒரு தகவலும் இல்லை.

**21—3—44.** (செவ்வாய்க்கிழமை).
பிரிடன் (Britain).
லண்டன் (London) பிரதேசம்.
(9 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).
ருஷ்யா (Russia),
தூரக்கிழக்கு (Far East).
ஒரு தகவலும் இல்லை.

**22—3—44.** (புதன்கிழமை).
பிரிடன் (Britain).
லண்டன் (London) பிரதேசம்.
சில இடங்கள்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia), தென்கிழக்கு இங்கிலாந்து (S. E. England).
(ருஷ்யா (Russia),
தூரக்கிழக்கு (Far East).
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**23—3—44.** (வியாழக்கிழமை).
பிரிடன் (Britain).
எதிரி விமான நடவடிக்கை இல்லை.
ருஷ்யா (Russia),
தூரக்கிழக்கு (Far East).
ஒரு தகவலும் இல்லை.

**24—3—44.** (வெள்ளிக்கிழமை).
பிரிடன் (Britain).
லண்டன் (London) பிரதேசம்.—(8 நாஸி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).
ருஷ்யா (Russia),
தூரக்கிழக்கு (Far East).
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**25—3—44.** (சனிக்கிழமை).
பிரிடன் (Britain).
ஒரு தகவலும் இல்லை.
ருஷ்யா (Russia),
தூரக்கிழக்கு (Far East).
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

---

## யுத்தக் குறிப்புகள்.

**மிஸ்டர் சர்ச்சிலின் ஒலிபரப்பு பிரசங்கம்.** ஞாயிறன்று மிஸ்டர் சர்ச்சில் செய்த பிரசங்கம் ருசிகரமானது. யுத்த நிலைமையின் விமர்சனம் அதில் காணப்படுகிறது. மிகவும் நெருக்கடியான சமயத்தில் அவருடைய உல்லாசம் காணக்கூடும். அவ்விதமாகவே "வாருங்கள். மஸ்கிடோ விமானத்தில் சென்று நாம் யுத்த அரங்கங்களைப் பார்வையிடுவோம். இப்போது நடக்கும் போர் நிலைமையைக் காண்பிக்கிறேன். அப்பொழுது நான் வெற்றியில் நம்பிக்கையுடனிருக்கும் அபிப்பிராயம் சரி என்று நீங்கள் காண்பீர்கள்" என்று அவர் ஒலிபெருக்கினார். ஞாயிறன்று அவர் அற்புதமான ஒரு சமாசாரத்தையும் சொல்லிவிடவில்லை. புதிர்களையும் தீர்த்து விடவில்லை. ஜோஸ்யம் சொல்லவுமில்லை. அவர் வெட்டவெளிச்சமாக எல்லாவற்றையும் சொல்லிவிட்டார். "மேதாவிகளும் கூட யுத்தம் திடீரென்று முடியுமா அல்லது நீடித்து நடக்குமாவென்று சொல்லமுடியாது. ஆகிலும் இறுதியில் வெற்றி நமக்குத்தான் என்று நான் திண்ணமாகச்சொல்லுவேன்" என்று அவர் சொன்னார். தத்வதரிசிகளுக்குள் அவர் சிறந்தவரானதால் அவர் ஈசுவரனுடைய சங்கல்பத்தை நம்பியிருக்கிறார். நம்பிக்கை கொள்ளக்கூடிய சமயத்திலும் நெருக்கடியான சமயத்திலும் தெய்வீக சக்திதான் நம்முடைய முயற்சிகளைத் திருவினையாக்குகிறதென்றும், இது விமோசனம் என்றும், ஈசுவரன்தான் பிரிடனை அபாயங்களிலிருந்து இதுவரையில் காப்பாற்றியிருக்கிறதென்றும், இறுதியில் வெற்றியளிக்குமென்றும் அவர் நம்பியிருக்கிறார். நம்பிக்கை அநேக காரியங்களை சாதித்துவிடும். இத்துடன் மிஸ்டர் சர்ச்சிலிடம் விவேகமும் காணப்படுகிறது. எல் அலாமீனிலும், ஸ்டாலின்கிராட்டிலும் ஆரம்பமான வெற்றிகள் மூலம் எதிரிகள் ஆபிரிக்காவிலிருந்து விரட்டியடிக்கப்பட்டார்கள். ருஷ்யாவிலிருந்து ஜெர்மானியர்கள் அநேகமாக வெளியேறிவிட்டார்கள். ஸிஸிலி, ஸார்டீனியா, கார்ஸிகா, இதாலியின் மூன்றில் ஒரு பாகம் நமது வசமாகிவிட்டன.



இதாலியில் பாஸிஸ்டு கொடுமை ஆட்சி ஒழிந்தது. வெற்றிகள் இத்துடன் நின்று விடவில்லை. பால்கன் நாடுகளுக்கு ஆட்டம் கண்டுவிட்டது. எதிரி அக்கிரமமாக சம்பாதித்த சொத்துக்களைக் கக்கிவிடும் வரையிலும், ஜெர்மனி சொந்த நாட்டிலே சிக்ஷிக்கப்படும்வரையிலும் இந்த நடவடிக்கை ஓயாதென்று மிஸ்டர் சர்ச்சில் நம்புகிறார். இதற்குத் தகுந்த காரணங்களிருக்கின்றன. இது கண்மூடித்தனமான நம்பிக்கையில்லை. அவருடைய அபிலாஷையில்லை. நேசதேசத்தார்களுக்கு மூவகைப்பட்ட படைகளிலும் ஆதிக்கம் ஏற்பட்டுவிட்டது. கடலில் பிரிடிஷ் கடற்படை அட்லாண்டிக்கடலிலிருந்து யூ படகுகளை விரட்டிவிட்டது. இரண்டாவதாக அமெரிக்க கடற்படை பலமான தளங்களிலிருந்து வெளியேறும்படிக்கும் ஒவ்வொரு இடமாக ஒளிந்து கொள்ளும்படிக்கும் ஜப்பானிய கடற்படையை நிர்பந்தம் செய்துவிட்டது. மூன்றாவதாக ஒன்றுபட்ட பிரிடிஷ் அமெரிக்க விமானப் படைகள் ஜெர்மன் விமானப்படையை ஐரோப்பாவில் நடமாடவொட்டாமல் தடுத்துவிட்டன. கடைசியாக வீரம் பொருந்திய செம்படை ருஷ்யாவை விடுவித்ததுடன் முன்னேறி எதிரியின் நாட்டை சமீபித்துவிட்டது. இந்த ஆதிக்கம் இனிமேல் விரும்பக்கூடியவையல்ல. இவைகள் கைகூடிவிட்டன. வெற்றி நிச்சயம் கிடைத்துவிடுமென்று மிஸ்டர் சர்ச்சில் நம்பி இருப்பதற்கு இவைகள்தான் நிராக்ஷேபனையான முகாந்திரங்கள். ஹிட்லரின் கொடுமைக்கு பல்கேரியாவையும், ருமேனியாவையும் அவன் சமீப காலத்தில் ஆக்கிரமித்ததைத் தவிர வேறு உதாரணம் தேவையில்லை.

மற்றொரு எதிரியையும் மிஸ்டர் சர்ச்சில் மறந்துவிடவில்லை. தூரக்கிழக்கு துரோகியையும் தாக்க பிரிடன் சக்தியுள்ளதென்று மிஸ்டர் சர்ச்சில் ஞாபகம் மூட்டினார். இந்த விஷயத்திலும் நாம் இனிமேல் திட்டம் வகுத்து ஆயத்தம் செய்ய வேண்டியதில்லை. காரியத்தை முடித்துக்கொள்ளும் காலம் ஆரம்பமாகிவிட்டது. அவர் சொல்லுகிறார் "நாம் எதிர்பார்த்ததற்கு அதிகவேகமாகவே பஸிபிக் போர் நடைபெறும். ஜப்பானியர்கள் பலஹீனமடைந்துவிட்டார்களென்று தெரியவருகிறது. ஒரு வருஷத்துக்குமுன் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் முன்கூட்டிச்சொன்னதுபோல் ஜப்பான் ஏராளமான எண்ணெய்க் கப்பல்களையும், விமானப்படைகளையும் இழந்து பலஹீனமடைந்து விட்டது."

சமீபத்தில் பர்மாவில் ஜப்பானிய காட்டுப் பூனை சுற்றி வளைக்கப்படுகிறது. விளைவுகளைப் பற்றி இப்பொழுது கூறுவது சாவதானமில்லை. ஜப்பானியர்களின் தந்திரம் இனிமேல் பயன்படாதென்று நிச்சயமாய் புலப்பட்டுவிட்டது. காடுகளில் போர்புரிவதில் திறமையை பிரிடிஷ், இந்திய சிப்பாய்கள் அடைந்துவிட்டார்கள். கொல்லப்பட்டவர்களும், காயம்பட்டவர்களும், காணாமற் போனவர்களுமாகச் சேர்ந்து ஜப்பானியர்களின் நஷ்டம் நம்முடையதைவிட மூன்று அல்லது நான்கு மடங்கு அதிகமானது.

இந்தப் போர்முனையில் ஜெனரல் ஸ்டில்வெல் மும்முரமாக முன்னேறிவருகிறார். கடற்தளபதி ஸோமர் வில்லிடமுள்ள கபற்படை இந்துமஹா சமுத்திரத்தில் ரோந்து செய்துவருகிறது. பர்மாவையும் பர்மா ரஸ்தாவையும் திரும்பிப் பிடிக்க குபெக்கில் சென்ற வருஷத்தில் போடப்பட்ட திட்டங்களின்படி நடத்த கடற்தளபதி மௌண்ட் பேடன் முயன்று வருகிறார்.

மகத்தான படையெடுப்பும் கூடிய சீக்கிரம் ஏற்படும். அமெரிக்காவின் கம்பீரமான படைகள் பிரிடனுக்கு வந்துவிட்டன. சிறந்த பயிற்சி பெற்றதும் சௌக்கியமான முஸ்தீப்புகளுமுள்ள பிரிடிஷ் துருப்புகள் அவர்களுடன் தோளோடு தோள் நின்றுவருகிறார்கள். "எதிரியை ஏமாற்றி மதிமயங்கும்படி செய்ய பொய்யான அநேக எச்சரிக்கைகளும், போக்குக் காட்டும் நடவடிக்கைகளும் ஒத்திகைகளும் நடைபெறக்கூடும். ஆகிலும் சமிக்ஞை காட்டியவுடன் பழிக்குப் பழி வாங்கும் எல்லா தேசங்களும் குவிந்து எதிரியின் பேரில் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்துவிடும்" என்று அவர் கூறினார்.

வி வி வி வி வி

**ருஷ்யா.** செம்படைக்கு அபாரமான வெற்றிகள் கிடைத்தன. நூறு நாட்களுக்குள்ளாக அவர்கள் ருமேனியாவின் எல்லைச் சரகத்திலுள்ள பிரத் நதியை அடைந்து விட்டார்கள். டார்னோபோலிலிருந்து கெர்ஸான் வரையிலுள்ள 400 மைல்கள் நீளமுள்ள வெளியில் நான்கு ருஷ்யப் படைகள் ஒன்று பட்டுத் தாக்கின. இப்பகுதியில் 5 லக்ஷம் துருப்புகள் கொண்ட 50 டிவிஷன்களை ஜெர்மானியர்கள் வைத்திருந்தார்கள். இப்பொழுது ஜெர்மானியர்கள் கிரிவாய்ராகிலுள்ள இரும்பு உலோகத்தையும், நிகோபோலிலுள்ள நிக்கல் உலோகத்தையும் கவர்ந்துவிடுவதாக உத்தேசிக்கவில்லை. இவ்விதமான பேராசைகளெல்லாம் அநேக காலத்துக்குமுன் அழிக்கப்பட்டுவிட்டன. ருமேனியாவையும், அதன் பின் ஜெர்மனியையும் காப்பாற்றுவதுதான் ஜெர்மனியின் முக்கிய நோக்கம். பால்கன் நாடுகளைத் தாக்கிவிட்டால் அப்பொழுது ஏற்படும் அழிவு பெர்லினின் வீழ்ச்சியுடன்தான் ஓய்ந்துவிடும். கொஞ்ச காலமாக ஜெர்மானியர்கள் ருஷ்யாவின் பனிக்கட்டி உறைந்து அவர்களுக்கு சாதகமளிக்குமென்று நம்பிக்கை கொண்டிருந்தார்

கள். பனி உருகிற்று. ஆனால் அது ஜெர்மனிக்கு உதவியளிக்கவில்லை. ருஷ்யர்களின் முன்னேற்றம் தொடர்ச்சியாக நடைபெற்றது. இதுதான் அவர்களுக்கு நாசகாரி. ருஷ்ய தளகர்த்தரான குகாவ் ஒரு சிறந்த தாக்குதலில் ஒடெஸ்ஸா-லூவாவ் இருப்புப் பாதையைத் துண்டித்துவிட்டார். சாவியேவ் பகுதியில் கீர்த்திபெற்ற கோனியேவ் அதை மற்றொரு இடத்தில் துண்டித்து பக் நதியைத் தாண்டினார். மூன்றுவது, நான்காவது ருஷ்யப்படைகள் இன்குலெட்ஸ், இன்குல் நதிகளைத் தாண்டி ஒடெஸ்ஸாவைச் சுற்றிக்கொண்டு கருங்கடலுக்கு வந்துவிட்டன.

இந்த வாரத்தில் அநேக முக்கியமான ஸ்தானங்கள் விழுந்துவிட்டன. பக் நதியின் மத்திய பாகத்தில் ஜெர்மன் தற்காப்பு அரணான வினிட்ஸா, மோகிலேவ், பொடோல்ஸ்கி, காமென்ட்ஸ் போடோல்ஸ்கி, நீஸ்டர் நதிக்கரையிலுள்ள ஜெர்மன் தற்காப்பு நிலயங்கள், ஒடெஸ்ஸா—லூவாவ் இருப்புப்பாதையிலுள்ள முக்கியமான இருப்புப்பாதை ஜங்ஷன், ருமேனியாவுக்குப் போகும் வழியிலுள்ள பால்டி.

ருஷ்யப் படைகள் பாத் நதியைத் தாண்டி ருமேனிய எல்லைக்குள் போர் புரிகின்றன.

மான்ஸ்டீன் எல்லாவிடங்களிலும் தோல்வியுற்றுப் பின்வாங்கிவரும்பொழுது ஹாஹா பிரபு ஒலிபெருக்கியில் கோஷித்துவருகிறான். ஜெர்மானியர்கள் பின்காட்டி ஓடுவது ஜெர்மனி தாளுகப்பின் செல்லுவதென்றும், அது சாஸ்திர முறைப்படி பரிஷ்காரமாக நடைபெறுகிறதென்றும், எதிர்காலத்திய தேவைகளுக்காக படைகள் சேமிக்கப்படுகிறதென்றும் அவன் பிரசாரம் செய்துவருகிறான்.

ஹாஹா பிரபுவைவிட புத்திசாலித்தனமாகவும், பொறுப்புடனும் ஹிட்லர் அபாயத்தைச் சரிவர மதித்து குயிஸ்லிங் ரீஜண்டுகளுக்கும், யதேச்சாதிகாரிகளுக்கும் அவன் கொடுத்த வாக்கை உல்லங்கனம் செய்துவிட்டு ருமேனிய எல்லைச்சரகத்துக்கு அவனுடைய துருப்புகளை துரிதமாகக் கொண்டுபோயிருக்கிறான். ஹிட்லரின் கொள்ளையடிப்பில் சேர்ந்துகொள்ள பிரியப்பட்டு அவனைப் பின்பற்றிய பால்கன் நாடுகளின் நிர்வாகிகள் இப்பொழுது காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். பால்கன் நாடுகள் கொள்ளையடித்த சொத்தைக் கக்கிவிடும்படியான சமயம் வந்துவிட்டது. மேலும் அவைகள் செய்த அக்கிரமங்களுக்கு அவர்களுக்கு நல்ல உதையும் கிடைக்கும்.

இவ்விதமான அவசரமான நடவடிக்கையை ஹிட்லர் மேற்கொண்டதற்குக் காரணம்யாது?

நீஸ்டர் நதி பிரதேசத்தில் ஜெனரல் சானியேவுக்குக் கிடைத்த வெற்றியும், ஹிட்லரின் முட்டாள்தனமும்தான் காரணங்கள். ஆச்சரியப்படத்தக்க முறையில் பிளக்கமுடியாத தற்காப்பு அரண் என்று நினைத்திருந்த நீஸ்டர் நதியை கோனியேவ் எதிர்பாராத வண்ணம் தாண்டிவிட்டான். பக் நதியை இழந்தபொழுது ஹிட்லர் நீஸ்டர் நதி தற்காப்புகளை நம்பியிருந்தான். நீஸ்டர் நதியை இழந்தபொழுது அவன் நம்பிக்கையை இழந்துவிட்டான். ஒருவகையில் ஹிட்லர் தான் செய்த தவறுதல்களின் பயனை அனுபவித்து வருகிறானென்று சொல்லலாம். பால்கன் நாடுகளுக்கு யுத்தம் வாராமல் காபந்துசெய்ய அவன் நீபர் நதியின் வளைவுஓரமாக ஏராளமான படைகளைக் குவித்தான். ஆனால் கானியேவில் மான்ஸ்டீன் ஒரு படை பூராவையுமிழந்தான். பக் நதியிலிருந்த மற்ற இரண்டு பெரிய படைகளும் நாசமாகின. நீஸ்டர் நதிக்குப்போகும் வழியிலிருந்த மற்ற படைகள் மத்தியில் இரண்டு துண்டாக துண்டிக்கப்பட்டன. இப்பொழுது செம்படை ருமேனிய எல்லைச் சரகத்துக்கு வந்துவிட்டது. ஹங்கேரியை காபந்துசெய்யும் கார்பேதியன் மலைகள் ருமேனியாவைக் காப்பாற்ற முடியாது. போலஸ்தி எண்ணெய்க் கிணறுகள் உள்பட டான்யூப் நதியின் சமவெளிகளுக்கு ஆபத்து உண்டாகிவிட்டது. ஹிட்லர் என்ன செய்யக்கூடும். கஷ்டப்படும் ஒருவன் கதியற்றுக் கையாளக்கூடிய நடவடிக்கையை ஹிட்லரும் மேற்கொண்டுவிட்டான். துர்பாக்கியம் பெற்ற ஹங்கேரி வழியாக துருப்புகளை ருமேனிய எல்லைச் சரகத்திற்குக்கொண்டு போயிருக்கிறான்.

வி வி வி வி வி

**கோயபல்ஸின் பிதற்றலும், விமானப்போரும்.** "ராணுவச் செய்திகளின் இல்லாமையை சரிப்படுத்த பிரிட்டனும், அமெரிக்காவும் தற்காப்பில்லாத பொது ஜனங்களைத் துன்புறுத்துகிறார்கள்" என்று கோயபல்ஸ் சொல்லுகிறான். இந்தப் பிதற்றலை நாம் பொருட்படுத்தவேண்டாம். இப்பொழுது மிகவும் பலமாக நடைபெறும் விமான நடவடிக்கைக்குக் காரணமான விமானப் போரின் சிலாக்கியமான அம்சங்களை இங்கு கூறுவோம்.

1. மனிதபலத்திலும், யந்திர அமைப்பிலும் நேசதேச விமானப்படை மேன்மை அடைந்துவிட்டதால் ஆயிரக்கணக்கான விமானங்களை இப்பொழுது அனுப்ப சாத்தியமாகிவிட்டது.

2. ஜெர்மன் விமானப்படை பலஹீனமடைந்துவிட்டதால் பெர்லின், மியூனிக் எஸ்ஸன் போன்ற முக்கியமான லக்ஷியங்களையும் அது தற்காப்பு செய்யக்கூடவில்லை



3. ஜெர்மன் சண்டை விமானங்களின் சங்கியை குறைந்துவிட்டதால் நேசதேசத்தார்கள் எதிரியின் கவனத்தை வேறுபக்கம் இழுக்க உபரியாக ஒரு விமானத்தாக்குதல் செய்வதை நிறுத்திவிட்டார்கள்.

4. நேசதேச வெடிவிமானங்கள் சண்டை விமானங்களின் துணையன்னியில் ஜெர்மனிக்கு வெளியேயிருக்கும் லக்ஷியங்களைத் தாக்கிவருகின்றன.

5. கால நிலைமை சௌகரியமாகயிருந்தாலொழிய ஜெர்மன் சண்டை விமானங்கள் செல்லுகிறதில்லை. இதிலிருந்து ஜெர்மனியின் சண்டை விமானப்படை குறைந்துவிட்டதென்றும் அல்லது அதன் அமைப்பு சிலாக்கியமானதல்லவென்றும் பொருள்படும்.

6. ஆகிலும் ஜெர்மன் விமானப்படை பூராவும் அழிந்துவிட்டதென்று முடிவு செய்வது தவறாகும். அதற்கு அதிக நஷ்டம் ஏற்படவில்லை. ஜெர்மன் விமான உற்பத்தி 50 சதவிகிதமும் அழிவுபட்டிருக்கிறது. சொல்ப காலத்திற்குள் இவ்வளவு அழிவை நாம் விளைவித்திருக்கிறோமென்பது சிலாகிக்கத்தகுந்தது.

7. மேன்மேலும் வெற்றியை பெறவேண்டுமானால் விமான நடவடிக்கையில் அயர்வு இருக்கக்கூடாது. எதிரிக்குக் கொஞ்சம்கூட ஓய்வு நேரம் அளிக்கக்கூடாது.

வி வி வி வி வி

**காஸினோ.** காஸினோ நமக்கு யுத்த அவசியமான ஸ்தானமாக இருக்கவில்லை. ஆகிலும் கௌரவத்தை நிலைநாட்ட ஜெர்மானியர்கள் இங்கு போர் நடத்திவருகிறார்கள். யுத்த வெறியினால் அவர்கள் ஏராளமான மனிதர்களையும், முஸ்திப்புகளையும் இழந்துவிட்டார்கள்.

வி வி வி வி வி

**பஸிபிக் போர்.** சமீபகாலத்தில் நேசதேசத்தாருக்கு அதிகமான வெற்றிகள் கிடைத்துவருவதற்கு முகாந்திரங்கள் என்னவென்று அமெரிக்க ராணுவ நிபுணரான மேஜர் ஜார்ஜ் பீல்டிங் எலியட் வியாக்கியானம் செய்கிறார். அமெரிக்க கடற்படை இப்பொழுது விரிவான அநேக இடங்களில் தாக்கிவருகிறது. எண்ணெய், மற்ற சாமான்களை நிரப்பிக்கொள்ளுவதற்கு அது அநேக மைல்கள் தூரம் திரும்பிச் செல்லவேண்டிய அவசியம் நின்றுவிட்டது. இப்பொழுது ஏராளமான எண்ணெய்க் கப்பல்களும், சாமான் கப்பல்களும், யுத்த தளவாடக் கப்பல்களும், பழுதுபார்க்கும் சாதனங்களுள்ள கப்பல்களும், வைத்திய வசதி உள்ள கப்பல்களும் யுத்தக்கப்பல் கூட்டத்துடன் செல்லுகின்றன. அல்லது கடலிலேயே அவைகளை சந்தித்து அவைகளில் எண்ணெய் சாமான்கள், யுத்த முஸ்திப்புகளை நிறப்பிவிடுகின்றன. இந்த ஏற்பாட்டினால் நிரந்தரமான தளங்களை அமைத்துக்கொள்ளவேண்டிய அவசியம் போய்விட்டது. இந்த ஏற்பாட்டினால் பஸிபிக்கில் நேசதேசத்தாரின் யுத்தப் போக்கு துரிதப்படுத்தப்பட்டுவிட்டது. இதனால்தான் 7-வது அமெரிக்க விமானப்படை 1,500 மைல்கள் முன்னேறி கில்பர்ட் தீவுகள் பேரில் வெடிகுண்டுகளைப் போட முடிந்தது. ஒரு நாளைக்கு அது சராசரி 17 மைல்கள் தூரம் முன்னேறியிருக்கிறது. டிரக் தீவைத் தாக்கியபின் அமெரிக்காவின் விமானந்தாங்கிக் கப்பல்களில் மூன்று கடலிலேயே எண்ணெயை நிரப்பிக்கொண்டு மாரியானஸ் தீவை தாக்க சௌகரியமேற்பட்டது.

மேலும் பிடிபட்ட தீவுகளிலுள்ள நிலயங்கள் மறுபடி பாய்ந்து செல்ல நன்றாய் திருத்தியமைக்கப்படுகின்றன. மேஜர் எலியட் ஒரு எச்சரிக்கையையும் விடுத்திருக்கிறார். "இந்த நடவடிக்கையிலிருந்து எதிரியை நாம் கடல் போரில் முறியடித்துவிட்டோமென்று பொருள்படாது. பஸிபிக் கடல் பிராந்தியங்களில் நேசதேசத்தாரின் முன்னேற்ற வேலைக்கு உதவக்கூடிய ஒரு கடற்படையை நாம் இங்கு பத்திரமாக வைத்துக்கொள்ளக்கூடுமென்றும் எந்த சமயத்திலும் ஜப்பானிய கடற்படையின் பூராபலத்தையும் நாம் எதிர்த்துப் போராட முடியுமென்றுதான் இதன் அர்த்தம்".

வி வி வி வி வி

**புதுக்கோட்டையில் யுத்த முயற்சிகள்.** செவ்வாய்க்கிழமையன்று புதுக்கோட்டை சட்ட நிர்மாண சபையில் இவ்வருஷத்திய வரவுசெலவு திட்டத்தை பிரேரேபணை செய்தபொழுது முதல் கௌன்ஸிலர் ஆற்றிய சொற்பொழிவிலடங்கியிருக்கும் சுருக்கமான தெளிவான யுத்த விமர்சனமடங்கிய குறிப்பை நமது சஞ்சிகையின் தலைப்பில் பிரசுரித்திருக்கிறோம். யுத்த முயற்சியை புரோத்ஸாகப்படுத்துவதற்கும் இந்த கஷ்டமான காலத்தில் சிரமங்களை பெரும்பாலும் தணித்துவிடுவதற்கும் இவ்வருஷத்தில் ஸமஸ்தானத்தில் அரசாங்கத்தார் எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கைகளை இங்கு கூறுவோம்.

முதன் முதலாக, உணவுப்பொருள்கள், தானியங்கள், சர்க்கரை, கிரோஸீன் முதலிய வஸ்துக்களின் விலைக்கட்டுப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பங்கீடு முறையை அனுஷ்டிக்காமலேயே இந்த நடவடிக்கைகளின் மூலம் புதுக்கோட்டை ஸமஸ்தானத்தில் விலைவாசிகள்

சமீபத்திலுள்ள பிரிடிஷ் மாகாணங்களைவிடக் குறைவாக நிர்த்தாரணம் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த வெற்றிக்குப் பல காரணங்கள் உண்டு. ஈ-தர்பார் அவர்களின் கண்காணிப்பும் ஆதரவும், உணவுப் பொருள்களின் ஏற்றுமதியில் தடையும், இறக்குமதியில் ஏற்பாடும், சாமான்களை நியாயமாக விநியோகம் செய்து, அமிதலாபம் சம்பாதிக்கிறவர்கள், அமிதமாகச் சேமித்துவைக்கிறவர்கள், அயோக்கியர்களின் அக்கிரமங்களை நிவர்த்தி செய்துவரும் கூட்டுறவு ஸ்டோர்களின் அறிய சேவையும் தான் காரணங்கள்.

இரண்டாவதாக, யுத்தத்துக்கு முன்னிருந்ததைவிட இப்பொழுது விலைவாசிகள் உயர்ந்துவிட்டதால், மாரிகாலம் பூராவும் உதவியளிக்காவிட்டாலும் விவசாயிகள் வரி விகிதங்களைத் துவக்கமன்னியில் செலுத்திவிடுகிறார்கள். இதன்மூலம் வரவு செலவு திட்டத்தில் இவ்வருஷத்தில் ஆதாயம் காண்பிக்கப்படுகிறது. மேலும் மூலதனமும் சேமித்துவைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

மூன்றாவதாக, பயிர் மிகச்செய் இயக்கத்தின் காரணமாக 30,600 ஏகரா நிலம் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

நான்காவதாக, யுத்த முயற்சிக்கு உதவியளிக்கும் முறையில் யுத்தக் கடன் பத்திரங்களில் 36,000 ரூபாய்கள் போடப்பட்டிருக்கிறது. யுத்தப் பத்திரங்களில் 4,30,400 ரூபாய்கள் போடப்பட்டிருக்கிறது. தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் அங்கத்தினர்கள் வெற்றிகரமாகப் பிரசாரம் செய்துவருகிறார்கள்.

ஐந்தாவதாக, அஸ்ஸாம் தொழிலாளர் படையில் புதுக்கோட்டை வாசிகளில் 800 பேர்களுக்கு வேலை கிடைத்திருக்கிறது. இன்னும் ஆயிரம் பேர்கள், யுத்தத்துக்காக தொழிற்பயிற்சி வேலைகளிலும் இதர சேவைப்படைகளிலும் அமர்ந்துவிட்டார்கள்.

ஆறாவதாக, பர்மாவிலிருந்தும், மலேயாவிலிருந்தும் தப்பி ஓடிவந்தவர்களுக்கு உதவி செய்ய விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. யுத்த சேவையில் ஈடுபட்டிருக்கும் குடும்பத்தார்களின் யோக க்ஷேமமும் கவனிக்கப்படுகிறது.

மாக்ஷிதங்கிய மன்னர்பிரான் அவர்களுக்கு அரசியல் உரிமை வழங்கப்பட்டபொழுது அவர் யுத்தத்துக்காக ஒரு மஸ்கிடோ விமானத்தை வழங்குவதாக வாக்குறுதி செய்ததையும் உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன். மேலும் புதுக்கோட்டை நிர்வாகமும், அதன் குடிகளும் ஏராளமான பொருளுதவி செய்திருக்கிறார்கள். இந்த வருஷ ஆரம்பத்தில் நமக்கு கிடைத்திருக்கும் புள்ளி விவரங்கள் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| (1) | யுத்த நிதி | ... | ரூ. 50,680 |
| (2) | வைத்திய வசதி மோட்டார் | ... | ,, 1,00,000 |
| (3) | வெள்ளி சாமான்கள் | ... | ,, 2,332 |
| (4) | யுத்த விமானம் | ... | ,, 78,565 |
| (5) | கிரேக்க சகாய நிதி | ... | ,, 1,000 |
| (6) | லண்டன் விமானப்போர் நஷ்ட நிதி | | |
| (7) | கஷ்ட நிவாரண நிதி | ... | ,, 598 |
| (8) | சீன தின நிதி | ... | ,, 5,500 |
| (9) | புதுக்கோட்டை யுத்த நிதி | ... | ,, 98,147 |
| (10) | செஞ்சிலுவை நிதி | ... | ,, 8,164 |
| (11) | போலீஷ் அகதிகள் நிதி | ... | ,, 1,440 |
| | | | 3,46,426 |

# இன்னும் அதிக பிரயாசைப்பட வேண்டும்.

(காப்டன் G. T. B. ஹார்வி).

(மதராஸிலுள்ள அகில இந்திய ரேடியோ ஒலிபரப்பு).

எனக்குக் கிடைத்த சொந்தக் கடிதத்தில் இதில் எழுதப்படும் விருத்தாந்தம் அடங்கியுள்ளது. யுத்த தளவாடங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை வேலைக்கு ஒருவன் தினசரி காலை 6·30 மணிக்கு வரவேண்டும். ஒருநாள் அவன் நேரம் தப்பி 6·40 மணிக்கு வந்தான். தொழிற்சாலை போர்மென் அவன் வரவில்லையென்று ரிபோர்ட்டு செய்துவிட்டான். "ஏன் கால தாமதம்" என்று போர்மென் வினவினான். "காலதாமதம் ஏற்பட்டதற்காக நான் வருந்துகிறேன். என்னுடைய குழந்தையை அதன் பாட்டியிடம் ஒப்படைக்க வேண்டியதால் தாமதம் ஏற்பட்டது" என்று வேலைக்காரன் பதிலுரைத்தான். "பாட்டியிடம் ஒப்புவிப்பானேன். உனக்கு சம்சாரம் இல்லையா" என்று போர்மென் மறுபடியும் வினவினான். அவன் பதிலுரைத்தான் "இருக்கிறாள். அவள் ஆப்டினில் காலை 6 மணிக்கு வேலைக்குப் போகிறாள். ஆகையால் குழந்தையை பாட்டியிடம் ஒப்படைக்கிறேன்."



"சரி. உன் சம்சாரம் காலை 6 மணிக்கும், நீ 6·30 மணிக்கும் வேலைக்கு ஆஜராக வேண்டுமென்று ஏற்பட்டிருக்கிறபொழுது நீ ஏன் உன் குழந்தையை முன்னதாகவே பாட்டியினிடம் ஒப்படைத்துவிடக்கூடாது" என்று போர்மென் கேட்டான். "என்னுடைய மாமியார் காலை 6·30 மணிக்குத்தான் இரவு வேலையிலிருந்து வெளியே வருகிறாள்" என்றான் வேலைக்காரன்.

என்னுடைய ஒலிபரப்புப் பிரசங்கத்தை இந்த முகவுரையுடன் நான் ஏன் ஆரம்பித்தேனென்றால், இந்த சிறிய கதை இங்கிலாந்தில் 100 சத விகிதம் ஜனங்கள் யுத்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்களென்பதையும், இதேமாதிரியாக பிரிடனிலும், ஐரோப்பாவிலும் எல்லா குடும்பங்களும் கஷ்டப்பட்டு வேலை செய்கிறார்களென்பதையும் வெளிப்படுத்துகிறது. எதிரியின் பலமான தாக்குதலை சமாளித்து நாம் பிழைத்துவிட்டோம். இப்பொழுது நேசதேசத்தார்களுக்கு வெற்றியும் அச்சுநாடுகளுக்குத் தோல்வியும் நிச்சயம் என்று திண்ணமாக ஏற்பட்டுவிட்டது. அப்படியிருந்தும் லக்ஷக்கணக்கான குடும்பங்கள் நான்கு வருஷங்களுக்குமுன் பரிசிரமப்பட்டதுபோல இப்பொழுதும் வேலை செய்தும் வருகிறார்கள். தேகவலிமையும் புத்திகூர்மையும் பூராவும் உபயோகிக்கப்படுகிறது. வாழ்க்கைக்குறிய வசதிகளும், சுகங்களும், சௌகரியங்களும் யுத்த அவசியத்துக்காக பரிகரிக்கப்பட்டுவிட்டன.

இங்கிருக்கும் நாம் வெபர்லஸ்களைக் கேட்கிறோம். பத்திரிகைகளைப் படிக்கிறோம். படங்களைக் கண் நோக்குகிறோம். நமது சிநேகிதர்கள், பந்துக்கள் நேசநாடுகளின் ஊக்கத்தையும், தீரத்தையும், தியாகத்தையும் போற்றுகிறோம். ஆகிலும் நாம் ஒவ்வொருவரும் யுத்தத்திலீடுபட்டிருக்கிறோமென்று அநேகர் அறிகிறார்களில்லை. இந்தியாவிலும் இப்பொழுது யுத்தம் துவங்கிவிட்டதென்று நான் சொல்ல விரும்புகிறேன்.

### கோரமான யுத்தம்.

சில ஜனங்கள் அதிக பிரயாசை எடுத்துக்கொள்ளுகிறார்கள். அநேகர்கள் ஏராளமான பொருளுதவி செய்திருக்கிறார்கள். இன்னும் சிலர் முணுமுணுக்காமல் உபரி வருமான வரியை கொடுத்து வருகிறார்கள். அல்லது உபரி வேலைகளையும் ஊதியமன்னியில் வேலைகளையும் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். இதை விட உலக யுத்தத்தின் அசௌகரியங்களை மிலியன் கணக்காக ஜனங்கள் சகித்துக் கொண்டிருக்கிறார்கள். உணவுப்பொருள், விறகு, உட்கொள்ளும் சாமான்கள் குறைந்துவிட்டன. போக்குவரத்துக்குக் குறைவான வசதியும் மிகுந்த சிரமமும் ஏற்பட்டிருக்கிறது. துணிவுகரமாக அயல் நாடுகளுக்குச் சென்று போர்க்களத்தில் போர்புரியும் தங்களுடைய பிள்ளைகளையும், சகோதரர்களையும்பற்றி அவர்கள் கவலைப்படுகிறார்கள். ஆகிலும் இந்தியாவிலுள்ள எல்லா ஜனங்களும் ஐரோப்பிய யுத்தத்தைபோல கோரமான கடும்போர் இந்தியாவுக்கும் வருமென்றும், அந்த யுத்தம் வெகு காலம் நீடிக்குமென்றும் நன்கு அறிவார்கள். இங்கிலாந்தில் நான் சொன்ன குடும்பத்தைப்போல நம்மில் ஒவ்வொருவரும் நிலைமையை உணர்ந்து சிலாக்கியமான முறையில் நடந்துகொள்ளாதபோனால் யுத்தம் பின்னும் அதிக காலம் நீடிக்கும். இத்துடன் நம்முடைய முயற்சி ஓய்ந்துவிட்டதென்று நினைக்கவேண்டாம். ஜப்பானுடன் நாம் நடத்திவரும் போரை நமக்கு சாதகமாகவும், எதிரிக்கு பாதகமாகவும் நாம் முடித்துக்கொள்ளவேண்டும். இந்நாட்டிலுள்ள பொருளாதார ராஜீய வியவகாரங்கள் தீர்க்கப்படவேண்டும். சமாதான காலத்திய நடவடிக்கைகளையும் நாம் மதித்துப்பார்த்து திட்டங்களை நிறுவவேண்டும். அவ்விதம் செய்தால்தான் பத்திரமும் சுகமான முன்னேற்றமும் ஏற்படும். இல்லாவிடில் குழப்பமும், துன்பமும் நாட்டில் தோன்றிவிடும்.

நான் குறிகூறுகிறவனல்ல. சக்தியற்ற காக்கையைப்போல் சதா காலமும் கூச்சலிடுவதிலும் ஆசைப்படுவதில்லை. ஆகிலும் நாம் நூறு சதவிகிதம் யுத்த முயற்சி செய்யவேண்டுமென்று அடிக்கடி வற்புறுத்துவது அவசியமென்று நினைக்கிறேன். இதற்கு அநேக காரணங்கள் உண்டு.

இதுவரையில், அசௌகரியம், சிரமங்கள், பசி, ஏழ்மைத்தனம், பிரிவு, பொருளழிவு போன்ற அநேக யுத்த சிரமங்களை அனுபவித்தபோதிலும் இன்னும் அநேக அசௌகரியங்களை அனுபவிக்க நாம் தயார் செய்து கொள்ளவேண்டும். ரத்த வெள்ளம் ஓடியும், நாசம் ஏற்படும் ஐரோப்பிய யுத்தம் முடிவடையும்பொழுதுதான் ஜப்பானியப்போர் பலமாக ஆரம்பமாகும். இரண்டு வருஷங்களுக்கு முன் அவன் துரோக புத்தியுடன் நம் பேரில் பாய்ந்தான். இந்தப் பாய்ச்சலில் அவனுக்கு லாபம் கிடைத்தது. நமக்கு அபாயம் ஏற்பட்டது. பர்மாவும், ஸியாமும், இந்தோ சைனாவும் அவைகளுக்குத் தெற்கிலுள்ள பெரிய தீவுகளும் இப்பொழுதும்கூட எதிரி வசமிருந்து வருகின்றன. அவன் அமெரிக்கர்களுக்கும் நமக்கும் சொந்தமான கடற் தளங்களையும் விமானக்கூடங்களையும் அயோக்கியத்தனமாகக் கைப்பற்றிக் கொண்டான். அவைகளை ஒன்றன்பின் ஒன்றாக அவன் இழந்துவந்த போதிலும் இன்னும் அவைகள் கொள்ளைக்கூட்டத்தாரின் இருப்பிடமாகயிருக்கக்கூடும். அவனிடம் ஏராளமான சேனையிருக்கிறது. அவனுடைய கடற்படையின் பெரும்பாகம் அழிக்கப்படவில்லை.

உயர்தரமான ஒழுக்கமுறையும் யுத்த ஆர்வமும் உள்ள உள்நாட்டுப் போர்முனை பலமும் அவனிடமிருந்து வருகிறது. அவன் மிகவும் கெடுதலான எதிரி. நாகரீகம் பொருந்திய உலக சமாஜத்தில் அது ஒரு அழுக்கான தேசம். அவனை நீதிமுறைக்குச் சரண் புகும்படி பலமாக உதைத்தாலொழிய கிழக்கு அர்த்த கோளத்தில் சமாதானமும், க்ஷேமமும் நிலைபெற்றிருக்க முடியாது. நாலரை வருஷமாகச் செய்த தீவிரமான முயற்சிக்குப்பின் நாம் ஜெர்மனிக்கும், இதாலிக்கும், பல்கேரியாவுக்கும், ருமேனியாவுக்கும் ஒரு சிறிது பாடம் கற்பித்திருக்கிறோம். அந்நாடுகளெல்லாம் பூகோள அமைப்பில் சேர்ந்தாற்போலிருக்கின்றன. ஆகையினால் பழிக்குப்பழி வாங்க உத்தேசிக்கும் நேசநாடுகளின் நடவடிக்கைகளிலிருந்து கடல் மார்க்கமாக வெகு தூரத்திலிருக்கும் ஜப்பானையும் அடி பணியச் செய்ய அவ்வளவு காலம் பிடிக்குமென்று நான் நினைக்கிறேன். ஜப்பானுக்கு சமீப தூரத்தில் அநேக விசாலமான தளங்களை நாம் ஏற்படுத்தவேண்டும். அவைகளில் இந்தியா ஒரு முக்கியமான தளமாயிருக்குமென்று தான் சொல்லுகிறேன். இதற்கு அநேக ஹேஷ்யங்கள் காணப்படுகின்றன. தெற்கு ஆசியா கமாண்டு இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. நாகரீகம் எதிர்த்துப் போராடவேண்டிய இழிவான, ஆனால் வலுமிக்க எதிரியான ஜப்பானை முறியடிக்க மூன்று வகைப்பட்ட நடவடிக்கைகளை பலமாகத் துவக்க இந்தியா பாய்ச்சல் ஸ்தலமாகயிருக்கவேண்டும். போரிலீடுபடாத நமக்கு இதன் அர்த்தம் யாதென்று யோசித்துப் பாருங்கள். டெப்போக்களுக்கும், டெப்போக்களிலிருந்தும் மிலியன் கணக்கான மனிதர்களும், போக்குவரத்து வண்டிகளும் செல்லுகின்றன. ஆயிரக்கணக்கான ரயில் வண்டித் தொடர்களில் துருப்புகளும், சாமான்களும், யுத்த தளவாடங்களும் அடிக்கடி போய்க்கொண்டிருக்கின்றன. ஆயிரக்கணக்கான விமானங்கள் தளங்களிலிருந்து புறப்படுவதும், திரும்பி வருவதுமாகக் காணப்படுகின்றன. ஆயிரக்கணக்கான கப்பல்கள் துறைமுகங்களுக்கு வருவதும் போவதுமாக கடலில் சஞ்சாரம் செய்து வருகின்றன. நாடெங்கும் நூற்றுக்கணக்கான சாமான் கிட்டங்கிகளும், பயிற்சி முகாம்களும், யுத்த தளவாட உற்பத்தி சாலைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த நடவடிக்கைகள் எல்லாம் சேர்ந்து இந்தியாவை எதிரியின் குறவளையின் பேரில் பாய்ந்து கொல்லுவதற்கு ராணுவ பாய்ச்சல் தளமாக அமைத்துவிட்டன. நாம் சொல்லிய தோற்றம் நம்முடைய வலிமையை வெளிப்படுத்துகிறது. இது ஆறுதலளிக்கிறது. நம்பிக்கை கொள்ளுவதற்கும் அசட்டு தைரியமாகயிருப்பதற்கும் வித்தியாசமுண்டு. இந்தப் படிப்பினையை நம் நாட்டிலுள்ள சிலர் இன்னும் அறிந்துகொள்ளவில்லை.

### தேசிய யுத்த முன்னணியின் முக்கியமான லக்ஷியங்கள்.

நான் பீதியடைந்தவனல்ல. ஜப்பானை இறுதியில் கடலிலும், தரையிலும், ஆகாயத்திலும் முறியடித்து விடுவோமென்று நான் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கிறேன். அசட்டு தைரியமுள்ளவர்களுக்கு நான் ஒரு கேள்வியை விடுக்கிறேன். அலூஷியன், கிஸ்கா தீவுகளிலிருந்து தெற்கு நோக்கியும், ஸாலமன்ஸ், மார்ஷல்ஸ், டிராக்கிலிருந்து வடக்கு நோக்கியும், இந்தியக் கடற்கரையிலிருந்து கிழக்கு நோக்கியும் ஜப்பானை நோக்கிக் குவிந்து வரும் பலமான தாக்குதலைக் கண்டு கவலைப்படும் ஜப்பானிய ராணுவ அதிகாரிகளில் நீங்கள் ஒருவரென்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது நீங்கள் என்ன செய்வீர்கள் என்று யோசியுங்கள். எதிரிக்குத் தடை செய்யாமல் அவனை உள்ளே புகுந்துவிடும்படி அனுமதித்து விடுவீர்களா, அல்லது ஒன்று திரண்டு முன்னேறி எதிரியின் தளங்களிலுள்ள சேமிப்புகளை அழித்துவிட முற்படுவீர்களா! இதை யோசித்துப் பார்த்தால் யுத்தம் இந்தியாவுக்குள் வந்துவிடாதென்று இன்னமும் தவறான அபிப்பிராயம் கொள்ளுவீர்களா? தரைப் போரினாலும் கடல் தாக்குதலினாலும், விமானத் தாக்குதலினாலும் எதிரியின் தாக்குதலை நிவர்த்தித்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி நமக்கு அக்கரையில்லை. ஆகிலும் கிழக்கு இந்தியா எதிரியின் லக்ஷியத்தைக் கவரக்கூடும். இந்தியாவிலுள்ள கல்வியறிவற்றவர்களையும், சஞ்சல புத்தி உள்ளவர்களையும் ரக்ஷித்து அவர்களைக் கலவரப்படாமலும், யுத்த முயற்சிகளை அவர்கள் கெடுத்து விடாமலும் காபந்து செய்யும் வேலையில் கல்விகற்ற மேதாவிகள் ஈடுபடவேண்டும். தேசிய யுத்த முன்னணியின் அலுவல் இதுதான். முன்னணியின் அங்கத்தினர்கள் விஷயம் அறியாதவர்களுக்கும், அலக்ஷிய புத்தியுள்ளவர்களுக்கும், அசட்டு தைரியமுள்ளவர்களுக்கும் தோல்வி மனப்பான்மையுள்ளவர்களுக்கும் விஷயங்களை அறிமுகப்படுத்துவதும், உத்சாகம் ஊட்டுவதும்தான் அவர்களின் கடமையாகும். ஆகிலும் சாதாரணமான ஆடவர்களும், ஸ்திரீகளும் தேசத்தின் மனஉறுதியை பலப்படுத்த அநேக மார்க்கங்களிருக்கின்றன. ஒவ்வொருவரும் சுயநலத்தைக் குறைத்துக்கொண்டு சிக்கன முறையைக் கையாள வேண்டும். பொருளை அனாவசியமாகச் செலவிடாமல் மீதப்படுத்தும் பழக்கத்தை அனுஷ்டிப்பதுடன் பிறருக்கும் போதிக்கவேண்டும். செலாவணிப் பெருக்கைத் தடுக்கவும் தனிப்பட்டவர்கள் முற்படவேண்டும். துருப்புகளுக்கு உதவியளிக்கும் சேவையிலீடுபடவேண்டும். முக்கியமாக, செஞ்சிலுவை, பலவகைப்பட்ட வசதிகள், தொழிலாளர்கள், முதலுதவி, பராமரிப்பு வேலை முதலியவைகள் அல்லது துருப்புகளின் குடும்பத்தாரின் க்ஷேமத்தைக் கோருவது, அதாவது



படைகளின் வெல்பேர் சேவை, துருப்புகள் சங்கங்களில் சேவை அல்லது தேசிய யுத்த முன்னணிக்கு உதவுவது, மனம் குழம்பி சங்கடப்பட்டுக்கொண்டிருக்கும் ஜனங்களைக் கண்டு பேசி நேசதேசத்தாரின் நம்பிக்கைக்கு மூலபலம் யாதென்றும், அதிக கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியது அவசியமென்றும், யுத்த முயற்சியில் சோர்வு கூடாதென்றும், அரசாங்கத்தார் ஏற்படுத்தும் எந்த நிபந்தனைகளையும் வேண்டுகோளையும் சந்தோஷமாக அனுவாதம் செய்யவேண்டுமென்றும், நம்முடைய ராணுவத் தலைவர்களை நம்பவேண்டுமென்றும் அவர்களுக்கு போதிக்கவேண்டும்.

இவைகளெல்லாம் ஸ்பஷ்டமாகயில்லாதது போல் தோன்றும். பொருளை மீதப்படுத்துவதும், சொற்பொழிவுகளை ஆற்றுவதும், மேஜோடுகளை நெய்வதும் பிரமாதமான காரியமில்லை. உன்னுடைய சொந்த செல்வாக்குதான் இந்த விஷயத்தில் பயனளிக்கக்கூடும். ஊதியமன்னியிலும், சொந்தச் செலவிலும் வெகுமதியை எதிர்பார்க்காமலும் எவ்வளவுக்கெவ்வளவு ஆடவர்களும், ஸ்திரீகளும் சகலவிதமான யுத்தசேவையில் ஈடுபடுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு தேசத்திற்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை அவர்கள் உணர்ந்ததாகும். தேசிய உணர்ச்சிதான் இப்பொழுது அவசியம். தனிப்பட்டவர்களின் நடவடிக்கைதான் ஜனங்களிடம் திடமான, வெற்றிகரமான மனஉறுதி ஏற்படுவதற்கு வழிகாட்டியாக இருக்கும்.

### எதிர்க் கக்ஷியின் அலுவல்.

இந்த சொற்பொழிவின் தலையங்கம் "அதிக வேலை செய்" என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆகிலும் இந்த புரோத்சாகம் நிச்சயமாய் அன்வயிக்காத சில நடவடிக்கைகளை இங்கு கூறுவோம். இந்நாட்டில் எதிர்க்கக்ஷியிலுள்ளவர்கள் எப்பொழுதும் எதிர்த்து நிற்கத்தான் வேண்டுமென்ற தீவிரமான அபிப்பிராயம் கொண்டுவிடக்கூடும். யுத்த சமயத்திலும்கூட இது பொருந்துமென்று நான் நினைக்கவில்லை. ராஜீய முறையில் பயனளிக்கக்கூடிய வகையில் குறைகூறுவதை நாம் வரவேற்கிறோம். ஒரு அரசாங்கம், கோஷ்டி, நபர் முதலியவைகளின் சமாதான காலக்கொள்கைகள் தன்னுடைய எண்ணங்களுக்கு பிரதிகூலமானவையென்பதை நினைத்து பொறுப்பற்ற முறையில் அவர்களைக் குறைகூறுவது யுத்த காலத்தில் கெடுதலான, அபாயம் பொருந்திய நடவடிக்கையாகும். இந்திய மக்கள் பிழைத்திருக்க வேண்டுமானால் அதற்காகப் பாடுபடும் ஒரு கக்ஷியின் முயற்சி திருவினையாகும்படி செய்யவேண்டும். உயர்தர ராஜீயக் கோஷ்டியிலிருந்தாலும், கக்ஷி பிரதி கக்ஷியில் கலந்து கொண்டாலும், அல்லது மத சம்பந்தமான மகாநாடுகளில் ஈடுபட்டாலும் சரி, நம்முடைய அபிப்பிராயங்கள் வியவகாரத்துக்குரியதாகவும், மிதமாகவும், காலதேச வர்த்தமானத்தின் அவசியத்துக்கு அனுகூலமுள்ளதாகவும் இருக்க வேண்டும்.

---

## ருஷ்யாவின் பருவகால நிலைமை ஜெர்மானியர்களுக்கு சாதகமளிக்கவில்லை.

(டைம்ஸ் பத்திரிகை).

ருஷ்யப்போரில் ஜெர்மன் யுத்த தந்திரத்தை பாதித்திருக்கும் இன்னல்களில் யுத்த நடவடிக்கைகளை பாதிக்கும் பருவகால அசௌகரியமும் ஒன்று. ருஷ்யர்களின் போர்புரியும் சக்தியைச் சரியானபடி மதித்துப்பார்க்கவில்லை என்ற பகுத்தறிவு உண்டாகும்படி ஜெர்மன் முன்னேற்ற வேகம் மாஸ்கோவின் வாசலில் தடைபட்டது. 1941-ம் வருஷம் வேனிர் காலத்திற்குள் ருஷ்யாவை முறியடித்து விடுவதாக ஜெர்மனி திட்டம் போட்டிருந்தது. மாஸ்கோவில் துரத்தியடிக்கப்பட்டபின் நடவடிக்கையில் ஓய்வு ஏற்படுமென்று ஜெர்மானியர்கள் சமாதானம் சொல்லிவந்தார்கள். அதற்குள்ளாக மாரிகால வாசஸ்தலங்களில் பத்திரமாக நின்று தங்களுடைய பலத்தைப் பெருக்கி 1942-ம் வருஷத்தில் பூர்ணமான வெற்றி பெற ஆயத்தம் செய்துவிடலாமென்று ஜெர்மனி கனவு கொண்டிருந்தது. அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக ருஷ்யாவின் கடுங்குளிரையும் லக்ஷியம் செய்யாமல் ருஷ்யர்கள் போர் தொடுக்க ஆரம்பித்தார்கள். தாங்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளலாமென்று நினைத்த காலத்தில் அவர்கள் போர்புரிந்து அநேக ஸ்தானங்களை இழக்கும்படி நேர்ந்தது. ஜெர்மனிக்கு அனுகூலமான காலநிலை தோன்றியபொழுது ஜெர்மானியர்களின் எண்ணம் பூர்த்தியாகுவதற்கு போதுமான அவகாசமில்லை. வால்கா நதி பிரதேசத்துக்கும் காகஸஸ் மலைகளுக்கும் ஜெர்மனி சென்றதிலிருந்து அவர்களை ஆபத்தில் புகுத்திவிட்டது. மேலும் வெற்றியும் கிடைக்கவில்லை. இந்தத்தடவை ஜெர்மானியர்கள் மாரிகாலத்திற்குள்ள விசேஷமான முஸ்தீப்புகளை தயார் செய்திருந்தபோதிலும், பனிக்கட்டிகளில் ருஷ்யர்கள் அதிக தீரத்துடன் போர் நடத்தியதால், ஜெர்மனி ஒரு சேனையை இழக்கவேண்டியதாயிற்று. மற்றொரு சேனை பனிக்கட்டிகள் வழியாகத் தலைவிரி கோலமாகப் பின்வாங்க நேரிட்டது.

வேனிர்காலம் அவர்களுடைய யுத்த தந்திரத்துக்கு சாதகமளிக்குமென்று அவர்கள் நினைத்து உற்சாகத்துடனிருந்தார்கள். 1943-ம் வருஷத்தில் வேனிர் காலமும் ஜெர்மனிக்கு ஒத்தாசை செய்யவில்லை. அநேக காலமாக அவர்கள் செய்திருந்த யுத்த ஏற்பாடுகள் சோர் வடைந்து விட்டன. ஓய்வன்னியில் வசந்தகால முடிவிலும், வேனிர் காலத்திலும், இலையுதிர் காலத்திலும், மாரிகாலத்திலும் நடைபெற்ற போரில் ருஷ்யர்கள் ஜெர்மானியர்களை டானட்ஸ் நதியிலிருந்து நீபர் நதிக்குத் துரத்தியடித்தார்கள். நதிக்கரையிலிருந்த ஜெர்மன் தற்காப்புகளை நொருக்கினார்கள். கீவைத் தாக்கினார்கள். மேற்கில் போலந்துக்குள் 250 மைல்கள் சென்று முன்னணி ஸ்தானத்தை ஏற்படுத்தினார்கள். அதன் பிறகு லெனின்கிராட்டை முற்றுகை செய்துவந்த ஜெர்மன் படைகளைத் தாக்கி, பூராப்படைகளை வளைத்துக்கொள்ள முயன்று, ஜெர்மன் படைகளை பால்டிக் நாடுகளின் எல்லைச் சரகங்களுக்குப் பின்வாங்கும்படி துரத்தியடித்துவிட்டார்கள்.

இவ்விதமான ஏராளமான தோல்விகளுக்குப் பின்னும் சிறிது அவகாசம் கிடைக்குமென்று எதிரி நம்பியிருந்தான். மாரிகால யுத்தத்தில் ருஷ்யர்களின் மேன்மை புலப்பட்டு விட்டது. வேனிர்காலத்திலும் ஜெர்மனியின் சக்தி இழிவு அடைந்துவிட்டது. ஆகிலும் வசந்த காலத்தில் பனி உருகும்பொழுது ருஷ்யப்படைகள் பின்பற்றிச் செல்லாதென்று அவன் எதிர்பார்த்திருந்தான். இந்த நம்பிக்கையும் வீணாகிவிட்டது. அவனுக்கு ஸ்வாஸ்தியம் குறைந்துவிட்டது. வசந்தகாலப் பனி யூக்ரேனில் முன்கூடியே வந்துவிட்டது. பனிகள் ஒரே சகதியாக உறைந்துவிட்டன. ஆகிலும் அதன் வழியாக செம்படை தன்னுடைய யுத்த அனுபவத்தைப் பயன்படுத்தி வருகிறது. எந்த சந்தர்ப்பத்தையும் எந்த இயற்கை இன்னல்களையும் சமாளிக்க ருஷ்ய யுத்த தந்திரங்கள் பயன்படக்கூடும். ஜெர்மன் படைகள் மேன்மேலும் பின்புறமாகத் துரத்தியடிக்கப்படுகின்றன. எல்லாவிடங்களிலும் செம்படையின் தாக்குதலின் வலிமை அதிகரித்து வருகிறது. பருவக்காலத்தின் சௌகரியம் அசௌகரியங்களையும் மீறி அதன் தாக்குதல் வேகம் பலமாகயிருக்கிறது.

---

## அரக்கான் வெற்றியில் விமானப்படையின் பங்கு.

(விங் கமாண்டர் *L. V.* பிரேஸர்).

கொடுமையாய் நடந்த அரக்கான் யுத்தத்தில் நேசதேசப்படைகள் வெற்றிபெற்ற சந்தோஷத்தைப் போற்றி லார்ட் லூயி மௌண்ட் பாட்டனைப்போற்றி சந்தோஷ அறிவிப்பு செய்தி அனுப்புகையில் மிஸ்டர் சர்ச்சில், நேசதேச விமானப்படைகளும், நிலப்படைகளும் மிகவும் ஒற்றுமையுடனும் ஊக்கத்துடனும் உழைத்திருக்கின்றன என்ற விஷயத்தை தெளிவாய் சொல்லியிருக்கின்றார்.

நேசதேச நிலப்படையினின்றும் பிரிந்து 7-ம் பகுதி தனித்துப் போரிட்டபொழுது விமானப்படை செய்துவந்த ஸப்ளைகளின் பயனாய்த்தான் இப்போரில் வெற்றிகிடைத்திருக்கிறது. இந்த யுத்தத்தில் தான் ஜப்பானியர்களுக்கு மிகவும் அதிகமான தோல்வி ஏற்பட்டது. சாதாரண நாட்களிலும்கூட, பர்மியக் காடுகளில் பாதை தெரியாத நிலையில் இப்பொழுது மேஜர் ஜெனரல் மாகப்ஸர்வியன் 7-ம் படைப்பகுதி விமானப்படையின் உதவியும், டகோடாகளிடமிருந்து ஸப்ளையும் கிடைக்காவிடில் ஜப்பானியர்களை எதிர்த்து நிற்கமுடியாது. இது மட்டும் போதாது. விமானப்படையும் தாக்குதல்கள் நடத்தி, சுற்றிலுமுள்ள ஜப்பானியப் படைகளுக்குள் சேதம் ஏற்படுத்தியது.

### பருந்து பாய்ச்சல் விமானங்களின் உதவி.

நேசதேச பருந்து பாய்ச்சல் விமானங்களும். சண்டையிட்டு குண்டுபோடும் விமானங்களும், ஒன்று சேர்ந்து முழுபலத்துடன் அடித்து ஜப்பானியர்களைத்துரத்தி நம் நிலப்படையின்முன் கொணர்ந்து நிர்மூலமாக்குமாறு செய்தது.

முன்னேறித்தாக்கும் படைகளுக்கு உதவியாய் இந்தக் கொடும் பருந்துப்பாய்ச்சல் விமானங்கள் குண்டுபோடுவதன்னியில் வேட்டை விமானங்களும் குண்டுபோடும் விமானங்களும் ஜப்பானிய ஸப்ளைகளையும், யுத்த தளவாடங்களையும், குண்டுபோட்டு நாசமாக்குகின்றன. இந்த அவசியமான சாமான்கள் வண்டிகளிலும் படகுகளிலும் ஏற்றிச் செல்லப்பட்டாலும், பீரங்கிகளாலும் நேசதேச வேட்டை விமானங்களாலும், பீரங்கி குண்டுகளால் தாக்கப்பட்டு நிர்மூலமாக்கப்படுகின்றன. மாயு தீபகற்பத்தின் வழியாய் வந்த படகுகளையும் நம் நேசதேச விமானங்கள் தாக்கி நாசப்படுத்தின. அப்படகுகளைத்தான் நம்பியிருந்தனர் ஜப்பானியர்.

இதற்கிடையில், அமெரிக்க, பிரிடிஷ் குண்டுபோடும் விமானங்கள் நடவடிக்கைகள் நடத்த ஆரம்பித்து தவறுமல் தாக்குதல்கள் செய்தன. தெற்கில் நேசதேச வேட்டை விமானங்கள் செல்ல முடியாத தூரத்திலுள்ள ஜப்பானிய தளங்களை இவைகள் தாக்கின. அரக்



கான் அரங்கத்தை திரும்பவும் பலப்படுத்த எண்ணிக்கொண்டு வந்த மிகவும் அதிகமான பொருள்களும் நெருப்புக்கிறையாக்கப்பட்டன. இந்தப் பொருள்களை அனுப்புவதற்கென நியமிக்கப்பட்ட ரயில்வேக்களும் கஷ்டப்பட்டன. சேமிப்புகளும் இஞ்ஜின்களும் தனித்தனியாய் பிரிக்கப்பட்டு பலவிதமான கஷ்டங்கள் ஏற்பட்டன.

### அரக்கான் யுத்த அரங்கம் முழுவதிலும் வெற்றி.

யுத்த அரங்கத்தில் நல்ல விமானபலம் இருந்ததலால்தான் இத்தகைய பெரும் வெற்றி நமக்கு கிடைத்தது. இங்கு பிரிடிஷ் ஸிபிட்பயர் விமானங்கள் தானேவந்து இங்கு யுத்தத்தில் ஈடுபட்டிருந்த நேசதேச விமானங்கள் அத்தனைக்கும் பாதுகாப்பு அளித்தன.

அரக்கான் யுத்த ஆரம்ப காலத்தில், ஜப்பானியர்கள் தங்களால் முடிந்த வரையில் விமானங்களை யுத்தத்தில் ஈடுபடுமாறு செய்தனர். இந்த யுத்தத்தினின்றும் நன்கு அறிந்து கொண்டு போதுமான விமானமின்றி போரில் வெற்றியடைதல் சுலபமல்ல எனநினைத்து பல விமானங்களை அனுப்பினார்கள். ஆனால் பயனில்லை.

அவர்களால் செய்ய முடிந்த காரியங்கள் எல்லாம் பயனற்றுப்போயின. அவர்களின் குண்டுபோடும் விமானங்கள் அடிக்கடி நாசமாக்கப்பட்டும், வேட்டை விமானங்கள் நம் வேட்டை விமானங்களை எதிர்த்தும் போர்புரிய சக்தியற்றவையாயும் ஆயின. நம் ஸ்பிட் பயர் விமானங்கள் உண்டாக்கிய நஷ்டத்தின் பயனாய் அவர்கள் விமானங்களை ஏவும் எண்ணத்தையே விட்டு விட்டனர். போதுமான துணையில்லாததால் அவர்களின் குண்டுபோடும் விமானங்கள் தளங்களைவிட்டு கிளம்பவேயில்லை. இவ்விதமாக எதிரிகளின் விமான யுத்த தந்திரங்கள் முற்றிலும் பயனற்றுப்போயின.

---

## பெர்லினை பகலில் தாக்கும் விமான நடவடிக்கை.

(கோல்ஸ்டர் ஷெப்பர்ட்).

பெர்லினுக்கு பிரிட்டினிலுள்ள விமான தளங்களிலிருந்து புறப்படும் அமெரிக்காவின் கனமான வெடி விமானங்கள் சென்றதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. ஒன்று படைகளை வ்யூகரசனை செய்யும் சாதுர்யம். அதை நடைமுறையில் நடத்திவைக்கப் போதுமான உற்பத்திமுறை.

இந்த அபிப்பிராயத்தை விவரித்துச்சொன்னால் உற்பத்திதான் இந்த நடவடிக்கைக்கு உயிர்நிலை போன்றது. வெடி விமான உற்பத்தியைவிட சண்டை விமான உற்பத்திதான் மிகவும் முக்கியமானது. பறக்கும் கோட்டை விமானங்களும் லிபரேடர்களும் சண்டை விமானங்களின் துணைக்காவலன்னியில் பெர்லினுக்குச் செல்லக்கூடுமென்று ஒருவரும் நினைக்க முடியாது. சில விமானங்கள் பெர்லினுக்குச் சென்று வெடி குண்டுகளைப்போட்டிருக்கக் கூடும். நஷ்டமானது போக பாக்கி விமானங்கள் தாயகம் திரும்பி வரக்கூடும். இந்த நடவடிக்கையில் அபாரமான நஷ்டங்களும் ஏற்பட்டிருக்கும். பறக்கும் கோட்டை விமானங்களையும், லிபரேடர்களையும் ஏராளமாகக் கட்டி நஷ்ட ஈடு செய்துவிடலாமென்றாலும் அவைகளை ஓட்ட விமானிகள் அவசியமாகும். பறக்கும் கோட்டை விமானத்தைக் கட்டத்தேவையான அவகாசத்தைவிட கனமான வெடி விமானத்தில் செல்லும் 10 அல்லது 11 வேலைக்காரர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு அதிக அவகாசம் வேண்டும். உயிர்களை அனாவசியமாக தியாகம் செய்யக்கூடாதென்ற மனிதவர்க்கத்தினிடம் தயை என்ற அபிப்பிராயம் ஒருபுறமிருந்தாலும், விமான நஷ்டத்தை விட விமானிகளின் நஷ்டம் வியசனிக்கத்தக்கதென்று நடைமுறையில் நாம் அறியவேண்டும். வெடி விமானங்களை அனுப்பி நஷ்டங்களை அனுபவிக்கிறதென்று தீர்மானம் செய்யப்பட்டபொழுது அதிவேகமாகச் செல்லும் வெடி விமானங்களைக் கட்டிவிடுவதென்ற திட்டம் போடப்படவில்லை. ரேடியோ கருவியின் உதவியற்ற எதிரியின் சண்டை விமானங்கள் கண் மூடித்தனமாக ஆகாயத்தில் உலாவக்கூடுமென்றும், அகஸ்மாத்தாக வெடி விமானங்களை வழிமறிக்கக்கூடுமென்றும், அநேக வெடிவிமானங்களை அவைகள் சுட்டு வீழ்த்த முடியாதென்றும், அப்பொழுது நினைத்திருந்தார்கள். மூன்று வருஷங்களில் ஏற்பட்ட அனுபவம் இந்த அபிப்பிராயத்தை மாற்றிவிட்டது.

எதிரியின் சண்டை விமானங்கள் வெடி விமானங்களை வழிமறித்து அநேக விமானங்களைச் சுட்டு வீழ்த்திவிடுகின்றன. ஒரு வருஷத்துக்குமுன் ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவில் எட்டாம் விமானப்படையைச் சேர்ந்த வெடிவிமானங்கள் விமானத்தாக்குதல் செய்தபொழுது இந்த உண்மை வெளிப்பட்டது. சிறிது காலம் வரையில் விமானப்படைகளை சாதுர்யமாக ரக்ஷணை செய்து ஒன்றுபட்ட பீரங்கி பிரயோகத்தினால் ஜெர்மானியர்களை அவர்கள் எதிர்த்துவந்தார்கள்.

ஜெர்மன் சண்டை விமானங்கள் கூட்டம் கூட்டமாகவரும்பொழுது உபரி விமான ரக்ஷணை அவசியமென்று விமானப்படை முடிவுசெய்தது. இந்த உதவியை ஏற்பாடு செய்து கொள்ளுவதில் அமெரிக்கர்கள் ஒரு சிறந்த வேலையைச் செய்திருக்கிறார்கள். தீர்க்கமுடியாது என்று நினைத்த ஒரு பிரச்னைக்கு அவர்கள் தகுந்த பரிகாரம் தேடிவிட்டார்கள். பிரிடிஷ் விமான தளங்களிலிருந்து பெர்லினுக்குச் செல்லும் கனமான வெடி விமானங்கள் போக வர முறையே 500 மைல்கள் செல்லவேண்டும். போகும்பொழுதும், வரும்பொழுதும் 300 மைல்கள் தூரம் வரையில் எதிரியின் எதிர்ப்பை சமாளிக்கவேண்டும்.

சண்டை விமானங்கள் இவ்விதமான ஒரு நடவடிக்கையை 1939-ம் வருஷத்தில் மேற்கொள்ளமுடியாது. ஒரு சண்டை விமானத்தில் 1,000 மைல்கள் செல்லுவதற்குப் போதுமான எண்ணெயை நிரப்பிக்கொள்ளவேண்டும். 600 மைல்கள் வரையில் போர் நடத்த வெடி மருந்துகள் எடுத்துச்செல்லவேண்டும். அப்பொழுது விமானம் பெரியதாகவும், கனமாகவும் அமைக்கப்படவேண்டும். அவ்விதமிருப்பினும் அது சிறிய தூரம் செல்லக்கூடிய ஒரு இஞ்சினுள்ள ஜெர்மன் சண்டை விமானங்களை எதிர்த்து நிற்க முடியாது. அப்பேர்ப்பட்ட சண்டை விமானத்தை இன்று கட்டமுடியாது. இவ்விதமான சங்கடங்களில் ஒரு அவசியத்தை மட்டும் பயன்படுத்தினால் சிக்கல் தீர்ந்துவிடும். ஒரு விமானி செல்லக்கூடிய சண்டை விமானத்தை வெகுதூரம் செல்லக்கூடிய சக்தியுள்ளதாக அமைக்கவேண்டுமென்று பிரிடிஷார்கள் கண்டுபிடித்து அதைப் பூர்த்திசெய்தார்கள். பிரான்ஸை விட்டுப் பின் வாங்கியபொழுது பிரிடனிலுள்ள தளங்களிலிருந்துதான் விமானங்கள் புறப்படவேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டது. அமெரிக்கர்களும் ஒரு புதிய உபாயத்தைக் கண்டுபிடித்தார்கள். வெளிப்புறத்தில் திடீரென்று அவிழ்த்து விடக்கூடிய ஒரு எண்ணெய் டாங்கியை அவர்கள் விமானத்தில் அமைத்துவிட்டார்கள். இந்த டாங்கிகள் இறக்கைக்கு அடிப்பக்கத்தில் ஓரங்களில் முட்டை வடிவமான தொட்டிகளாக அமைக்கப்பட்டிருக்கின்றன. பிரிடிஷ் ஸ்பிட் பயர் விமானங்களில் ஒரு முனையில் கூருன வடிவமுள்ள உதவி டாங்கிகள் இரக்கையின் மத்திய பாகத்திற்கடியில் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் 90 முதல் 150 காலன்கள் எண்ணெய் நிரப்பிச் செல்லக்கூடும். இரக்கைகளிலுள்ள டாங்கிகளைப் பழைய செருப்புகளைப்போல எதிரியுடன் போர் துவக்க நேரிடும் பொழுதும் அல்லது எண்ணெய் அற்றுப்போனபொழுதும் உதறித் தள்ளிவிடலாம். அந்தச் சுமையைப் போட்டுவிட்டபின் சண்டை விமானம் அதிவேகமாகச் செல்லவும் சாதுர்யமாக சலனம் செய்வதற்கும் சக்தி பெற்றுவிடும். தன்னுடைய திறமையைக் குறைத்துக்கொள்ளாமல் அது அதிக தூரம் செல்லும் சக்தியைப் பெற்றுவிட்டது. எதிரியைத் தாக்குவதற்குப்போதுமான அளவு வெடிமருந்து சக்திபெற்றிருக்கும் வரையில்தான் விமானம் வெகுதூரம் செல்லக்கூடும். அதன் வெடி மருந்து இருப்புக் குறைவு பட்டவுடன் சண்டை விமானம் தாயகம் திரும்பிவிடும். குண்டு வீசும் இயந்திரத்துடன் அமைத்திருக்கும் பொத்தானை ஆறுதடவைகள் அமுக்கிப் பயன்படாத பின்தான் சண்டை விமானங்களிலுள்ள விமானிகள் குண்டுகள் காலியாகி விட்டனவென்று அறிந்துகொள்ளுகிறார்கள். வெடி மருந்துகளின் அளவு ஒரு தடங்கலாக இருந்தது.

இந்தச் சங்கடத்தை நிவர்த்திக்கும் முறையில் குண்டுகள் காலியாகி சண்டை விமானங்கள் திரும்பிவரும் சமயத்தில் புதிய சண்டை விமானக் கூட்டத்தை அனுப்புவதென்று தீர்மானித்தார்கள். இப்பொழுதுதான் விமானங்களின் சப்ளை மிகுதியாகத் தேவைப்பட்டது.

நீண்ட பிரயாணத்தில் பல கட்டங்களில் துணைக் காவல் புரிவதற்கு விமானப் படைகளைக் கூட்டம் கூட்டமாக ஒன்றன்பின் ஒன்றாக அனுப்புவதற்கு ஏராளமான சண்டை விமானங்கள் அவசியமாகும். இப்பொழுது ஜெர்மனியைப் பகலில் தாக்க நூற்றுக்கணக்கான விமானங்கள் செல்லுகின்றன. அவைகளை வழிமறிக்க ஜெர்மானியர்களும் ஏராளமான சண்டை விமானங்களை அனுப்புகிறார்கள். பிரிடிஷ் வெடி விமானங்கள் பெர்லினைத் தாக்க முயன்றபொழுது அவைகளை 150 சண்டை விமானங்கள் எதிர்த்துத் தாக்கினவென்று ஒரு விமானி சொன்னான். வெகுதூரம் செல்லும் வெடி விமானங்களுக்குத் துணைக்காவல் செய்யும் மஸ்டாங் விமானங்களும் கூட்டமாகச் செல்லவேண்டும். ஆரம்பத்தில் துணைக்காவல் வேலையை லைட்னிங், தண்டர் போல்ட் விமானங்கள் செய்துவந்தன. வடக்குக் கடலைத் தாண்டி ஆக்கிரமிப்பு ஐரோப்பாவுக்குள் வெடி விமானங்கள் நுழையும் வரையில் பிரிடிஷ் ஸ்பிட் பயர் விமானங்கள் அவைகளுக்கு ரக்ஷணையளித்துவந்தன. ஆகையால் மற்ற துணைக் காவல் செய்யும் விமானங்கள் ஜெர்மன் விமானங்களை எதிர்த்துப்போராட சக்தி பெற்றிருந்தன.

வெகுதூரம் செல்லவேண்டிய சிரமத்தை நிவர்த்திக்க இவ்விதமான துணைக்காவல் சூயுக்தியான சிக்கலான முறையாகும். இந்த வேலையை நமது படைகள் சாதுர்யத்துடன் மேற்கொண்டுவருகிறார்கள். சண்டை விமானங்களும் திறமையுடன் வேலைசெய்து வருகின்றன. அவைகளின் நடவடிக்கையின் மூலம் ஜெர்மனியிலுள்ள ரக்ஷணைக்குட்பட்ட பாகங்களுக்கும் கனமான வெடி விமானங்கள் பகலில் சென்றுவிட வசதியேற்பட்டுவிட்டது.



சென்ற 18 மாதங்களாக பிரிடிஷ் விமானங்கள் இரவில் விமான நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதுபோல பலமான பகல் விமான நடவடிக்கைகளைத் துவக்குவதற்கு அவைகள் வழியை கற்பிக்கின்றன.

கடைசியாக 3,000, 4,000 மைல்களுக்கு அப்பாலில் அபரிமிதமாக இரைச்சிகளைப் போல விமானங்களைக் கட்டிவரும் அமெரிக்காவின் யுத்த முயற்சிக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும்.

---

## வெடி விமானங்கள் தானாக ஒளிப் படங்களை எடுக்கின்றன.

### சமீப காலத்திய நூதனமான அபிவிருத்திகள்.

(விங் கமாண்டர் L. V. பிரேசர்)

பெர்லினுக்காக நடைபெறும் விமானத்தாக்குதல்கள் தொழிற்சாலை பிரதேசங்களை ஸ்தம்பிக்கச் செய்வதுடன் குறிப்பாக் லக்ஷியங்களை அடிக்கின்றன. இதற்கு பிரிடிஷ் விமானப்படையைச் சேர்ந்த லக்ஷியத்தைத் துலக்கிக்காட்டும் விமானப்படையின் சுளுந்துகள் சாதகமளித்து வருகின்றன. இந்த நடவடிக்கையில் வெகுகாலமாக கஷ்ட சாத்தியமாகயிருந்த தொழிற்பயிற்சி ஆராய்ச்சியும் உச்ச நிலையை அடைந்து தீர்மானத்துக்கு வந்து விட்டது. அதன் மூலம் இரவில் ஒளிப்படம் எடுக்கும் முறையும் பரிஷ்காரப்பட்டு விட்டது.

1940-ம் ஹு மே மாதம் 31-ம் தேதியன்று பிரான்ஸுக்காக நடைபெற்ற போரில் ரயில்வண்டிகள் நிற்கும் இடத்தின் பேரில் வெடிகுண்டுகள் போடப்பட்டதைப்பற்றிய ஒளிப்படம் இரவில் வெற்றிகரமாக எடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு இரவு வெடிவிமானப் போரை நடத்தும் யுத்த தந்திரமும், முறைகளும் தலைகீழாக மாறுதலடைந்துவிட்டன. அதேசமயத்தில் குண்டு வீச்சுக்குட்பட்ட லக்ஷியத்தைக் காண்பிக்கும் ஒளிப்படம் எடுக்கும் முறைகளிலும் முக்கியமான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இரவில் ஒளிப்படம் பிடிக்கும் கோட்பாடு சுலபமானது. விமானத்திலிருந்து வீசப்படும் மாக்னிஷியமுள்ள வெடிகுண்டு வெடிக்கும் தருவாயில் ஒளிப்படம் எடுக்கும் பெட்டியின் வாயும் திறக்கப்பட்டு விடும்.

ஆகிலும் நடைமுறையில் இது அவ்வளவு சுலபமானதல்ல. காலநிலை, வெடிகுண்டு வீசும் உயரம், விமான எதிர்ப்பு பீரங்கிகளின் நடவடிக்கை எல்லாவற்றையும் கவனிக்கவேண்டும். தேடு விளக்குகளும், வெடிகுண்டுகளின் அடையாளங்களும், கீழே மினுமினு என்று தோன்றும் வெளிச்சங்களும் ஒரு விநாடியின் 30-ல் ஒரு பாகம் மட்டும் வெளிச்சத்தை ஏற்கும் பூதக்கண்ணாடியின் ஒளியை ஆகர்ஷிக்கும் சக்தியைக்கொடுத்து விடக்கூடும். மேலும் வெடிகுண்டுகளைத் தள்ளியவுடன் திடீரென்று விமானத்தை விமானி திருப்பிவிடக்கூடுமாதலால் ஒளிப்படம் எடுப்பதற்கு அதிக சிரமம் ஏற்படும். 20,000 அடி உயரத்திலிருந்து ஒரு வெடிகுண்டு இரவில் விழுந்து வெடிக்கும்பொழுது குறைகூறக்கூடாததும் தானாகவே வேலை செய்யக்கூடியதுமான ஒளிப்படம் பிடிக்கும் முறையைக் கண்டு பிடிக்கும்பொழுது மேலே சொல்லிய அநேக சிரமங்களையும் பொருட்படுத்தவேண்டும்.

அடிப்படையான சுலபமான கோட்பாடு இந்த சிக்கல்களின் மூலம் வியர்த்தமாகப் போய்விட்டது. ஆகையால் ஒவ்வொரு சிக்கலையும் நன்றாய் ஆராய்ச்சி செய்து அதற்குத் தகுந்த பரிஹாரம் தேடவேண்டியதாயிற்று.

### மின்னல் விமானிக்கு அறிவூட்டுகிறது.

இப்பொழுது முக்கியமான லக்ஷியங்களுள்ள பிரதேசங்களில் ஜெர்மானியர்கள் ஏராளமான விமான எதிர்ப்பு பீரங்கிகளை அமைத்திருப்பதால் மகத்தான விமானத்தாக்குதல் செய்வது மிகவும் அபாயம் பொருந்திய நடவடிக்கையாகி விட்டது.

விமானத்திலுள்ள ஒவ்வொரு வேலைக்காரரும் தன்னுடைய வேலையில் பூராவாக ஈடுபட்டிருப்பதால் பிறர் உதவியன்னியில் ஒளிப்படம் பிடிக்கும் பெட்டி தானாகச் சிறப்புடன் படத்தைப்பிடிக்கவேண்டும்.

மூன்று வருஷமாகத் தொடர்ச்சியாக நடைபெற்ற ஆராய்ச்சிக்குப்பின் பிரிடனிலுள்ள ஒளிப்படம் பிடிக்கும் நிபுணர்கள் அநேக சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறார்கள். படங்கள் எடுக்கப்படும்பொழுது விமானியின் யந்திர கோசத்தில் திடீரென்று ஒரு மின்னல் தோன்றுவதன் மூலம் விமானி தகுந்த தருணத்தை அறிந்து விடுகிறான். இந்த முறை வெற்றிகரமாகயிருப்பதால் இப்பொழுது புறப்படும் ஒவ்வொரு வெடி விமானத்திலும் ஒளிப் படம் பிடிக்கும் பெட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. தரையிலிருக்கும் ஒளிப்படத்தை எடுக்கும் வேலைக்காரர்கள் வெடிகுண்டு வீசும் விமானம் பறந்து செல்லும் உயரத்துக்குத் தக்கவாறு

படப்பெட்டியின் கண்ட்ரோல்களைத் திருத்தியமைப்பார்கள். வெடிகுண்டு வீசும் வேலைக்காரர் வெடிகுண்டைத்தள்ள பொத்தானை அழுத்திய உடன் சிறிது நேரத்தில் படப் பெட்டியின் மூடி திறந்து விடக்கூடிய எல்லா ஏற்பாடுகளும் ஜாக்கிரதையாகக் கவனத்துடன் செய்யப்பட்டுவிடும்.

மின்னல் வெடிகுண்டு ஒரு குயுக்தியான அமைப்பு. வெளித்தோற்றத்தில் சாதாரண வெடிகுண்டைப்போலிருக்கிறது. அது 3 அடி நீளமுள்ளது, $4\frac{1}{2}$ அங்குலம் குறுக்களவு உள்ளது. விமானம் பறக்கும் பாதி தூரத்தில் அது வெடிக்கக்கூடிய சாதகம் அமைக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமான வெடிகுண்டைவிட இந்த வெடிகுண்டின் வால் பக்கம், அதனளவிற்குச் சிறியதாகயிருக்கிறது. மற்றொரு முக்கியமான அம்சமும் இதிலிருக்கிறது. சாதாரண வெடிகுண்டைப் போலில்லாமல் இந்த மின்னல் குண்டு வெடிவிமானத்திற்குப் பின் புறத்தில் லக்ஷியத்தைத் துலக்கிக்காட்டக்கூடியதாகவும் ஒளிப்பெட்டியின் திருஷ்டி வட்டாரத்தைக் கெடுதல் செய்யாமலும் வெடித்துவிடும்.

ஒளிப்படம் பிடிக்கும் பெட்டியில் விசேஷ மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதுடன் மின்னல் வெடிகுண்டிலும் அநேக மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. வெளிச்சமுண்டாக்கும் சக்தி அபாரமாக அதிகரித்திருக்கிறது. இதற்கு முன்னனிருந்த மாக்னீஷியம் உள்ள வெடிகுண்டுகள் மூன்று அல்லது நான்கு மிலியன் காண்டில் சக்தியுள்ள வெளிச்சத்தை உண்டுபண்ணின. சமீபத்தில் உண்டுபண்ணப்பட்ட வெடி குண்டுகள் 170 மிலியன் காண்டில் சக்தியுள்ள வெளிச்சத்தை உண்டுபண்ணும் சக்தியுள்ளவைகள்.

மின்னல் வெடி வெடித்தவுடன் பிடிக்கப்படும் ஒளிப்படம்தான் மிகவும் சிலாக்கியமானது. வெடிகுண்டு கீழேசென்று லக்ஷியத்தை அடிக்கும்பொழுது ஒளிப்பெட்டியின் கதவுதிறந்து படமெடுக்கும் படியாக அவ்வளவு கணக்காக படமெடுக்கும் கருவி அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் விளைவுகளும் சிறந்தவைகள். எடுக்கப்பட்ட படம் அக்னி ஜுவாலைகள், தேடுவிளக்கு கிரணங்கள், விமான எதிர்ப்பு பீரங்கி வேட்டின் மின்னல்களின் பேரில் லக்ஷியத்தின் படம் அமைக்கப்பட்டதுபோல் தோன்றும்.

---

## யுத்தமும் கிரேக்கத்தீவுகளும்.

### (டைம்ஸ் பத்திரிகை).

(லண்டன் தந்தி.)

மத்திய கிழக்குப் பிரதேசங்களில் நடக்கும் யுத்த நடவடிக்கைகளைப் பற்றி செய்திகள் வருவது நின்றுவிட்டாலும், நடவடிக்கைகள் அங்கு நடந்துகொண்டுதானிருக்கின்றன.

கிரீஸின் கடற்கரைகளில் உள்ள தளங்களை கட்டவும், ஸப்ளைகள் அனுப்பவும், படைகள் தளவாடங்கள் அனுப்பவும் ஜெர்மானியர்களால் முடியாதபடி தடுத்துக்கொண்டு இருப்பதில் ராயல் விமானப்படையும், ராயல் கடற்படையும் வெற்றியுடனும் இடைவிடாமலும் வேலை செய்துவருகின்றன.

பகல் இரவு என்பது பாராமல், கால நிலை கெட்ட சிறிது காலங்களில் தவிர மற்ற நேரங்களில் எல்லாம், ராயல் விமானப்படையும். கிரீஸிலிருந்து ஏஜியான்கடலுக்கும், ஐயோனியன் கடலிலிருந்து தீவுகளிலுள்ள கோட்டைகளுக்கும் இடையேயுள்ள போக்குவரத்து சாதனங்களின்மேல் இடைவிடாது யுத்தமிடுகின்றனர்.

கப்பல்களின்மேல் செய்யப்படும் இத்தாக்குதல்கள் மிகவும் வெற்றிகரமானவை என்பதற்கு, எதிரிகளின் போக்குவரத்து சாதனங்கள் தாக்கப்படுவதன்னியில் எதிரிகளின் தீவுகளிலுள்ளவர்கள் பட்டினி கிடக்கின்றனர் என்பதே அத்தாட்சியாகும். சென்ற இரண்டு மாதங்களில் சுமார் 5,000 டன்கள் நிறையுள்ள 2 வியாபாரக்கப்பல்கள் நிர்மூலமாக்கப்பட்டிருக்கின்றன. இவைகளே ஜப்பானியக் கப்பல்களில் பெரிய கப்பல்களாகும் 300 டன்கள் முதல் 500 டன்கள்வரையிலும் ஏற்றிச்செல்லக்கூடிய படகுகளிலும்தான் இப்பொழுது ஸப்ளைகள் அனுப்படுகின்றன. இப்படி இப்படகுகளில் அனுப்பினாலும்கூட, போகும் வழிகளில் பல படகுகள் மூழ்கடிக்கப்படவே வாரக்கணக்காய் தீவுகளிலுள்ளோர்கள் ஸப்ளைகள் எல்லாம் பலமாதங்களில் கஷ்டப்படுகின்றனர்.

இத்தகைய சிறிய கப்பல்களிலும் இப்பொழுது கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ராயல் விமானப்படையைச் சேர்ந்த வேவுபார்க்கும் படையினர் கிரேக்கத் தீவுகளில் கப்பல்கள் கட்டப்படுகின்றன என்ற தகவலைக்கொண்டுவந்தவுடன் விமானங்கள் அனுப்பப்பட்டு அக்கப்பல்கள் நாசமாக்கப்படுகின்றன. இச் சிறிய கப்பல்கள் இரவு நேரங்களில் கடற்கரையில் வந்து பகல் நேரங்களில் குடாக்களிலும், பல இடைவெளிகளில் மறைந்துகொண்டு



இரவுகளில் வெளிவருகின்றன. இதனை நமது வேட்டை விமானங்கள் கண்டுபிடித்து நாசப்படுத்துகின்றன. எனவே கபடமாய் சப்ளைகள் அனுப்புவதென்றால் இப்பொழுது கப்பல்கள் காவலோடு போகின்றன. சன்டைகளுக்குமுன்பு ராயல் விமானப்படை 5,000 டன்கள் நிறையுள்ள கப்பல் ஒன்றையும், இரண்டு நாசகாரிகளையும், 16 விமானங்களையும் துணையாகக்கொண்டு வந்ததைக் கண்ணுற்றது. இவ்வாறு காவலுடன் வந்தாலும்கூட அக்கப்பல் நேசதேச விமானப்படையினால் தாக்கப்பட்டு எறிக்கப்பட்டது. நாசகாரிகளும் நாசமாக்கப்பட்டன. பல விமானங்களும் சுட்டுத்தள்ளப்பட்டன.

கப்பல்களின் குறைவினால் Ju. 528 விமானங்களை போக்குவரத்துக்காகப் பயன்படுத்த ஜெர்மானியர்கள் முயன்றனர். ஆனால் இதுவும் மிகவும் கஷ்டத்தை உண்டுபண்ணுகிறது. 15 விமானங்கள் 4 நாட்களில் நாசமாக்கப்படவே இப்பழக்கம் நிறுத்தப்பட்டது.

இந்த நடவடிக்கைகளில் அபாயம் இல்லாமலும் இல்லை. நாம் ஒரு விமானம் இழந்தோம். ஜெர்மானியர்களுக்கும் விமான நஷ்டம் அதிகம். அவர்கள் இழந்த மூலப்பொருள்களையும் திரும்பவும் உற்பத்திசெய்ய முடியாது. மத்திய கிழக்குப் பிரதேசங்களின் தளங்களில் நம் லிபரேட்டர் விமானங்கள், ஒலிபிக்ஸ் விமானங்கள், மிட்ரிசல், மராட்டார்ஸ், பால்டிமோர்கள், வெல்லிங்டன்கள், போபைட்டர் விமானங்கள் இடைவிடாமல் தாக்குதல்கள் புரிகின்றன. விஷயம் வெளிப்படாவிடினும் நல்ல நடவடிக்கைகள் நடத்துகின்றன.

---

## அபாரமான கடல் போரில் சொல்ப நஷ்டங்கள்.

(A. மாக்வின்னி)

இது வரையில் நடைபெற்ற மகத்தான இருவகைப்பட்ட நடவடிக்கைகளில் பிரிடிஷார் மதித்ததற்கு யதாம்சமாகத்தான் பிரிடனுக்குக் கப்பல்களின் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. கடற்படை சம்பந்தமான திட்டத்தை காமன்ஸ் சபைக்கு சமர்ப்பித்தபொழுது பிரிடனின் கடற்படை இலாகா முதல் பிரபு, மிஸ்டர் A. V. அலெக்ஸாண்டர் வெளியிட்ட கடற்படை நஷ்டங்களில் மத்தியதரைக்கடலில் பிரிடனுக்கு சொல்ப நஷ்டமென்பது குறிப்பிடத்தக்கது.

ஸிஸிலியில் படைகள் இறங்கிய பின் பிரிடிஷ் கடற்படை துணிவுகரமாக மத்தியதரைக் கடலில் அநேகதடவை சென்றிருக்கிறது. அப்பேர்ப்பட்ட எட்டுமாத நடவடிக்கைகளில் பிரிடனுக்கு, இரண்டு சஞ்சாரிகளும், ஒரு சுரங்க வெடி பாவும் கப்பலும், 10 நாசகாரிகளும், இரண்டு நீர்மூழ்கிகளும், 10 சிறிய கப்பல்களும் நஷ்டமாகின.

ஆன்ஸியோ முன்னேறும் வாசலில் படைகள் இறங்கியபொழுது பிரிடிஷ் கடற்படையின் பெரும்பாகம் நிர்ப்பயமாக வேலைசெய்த போதிலும் கடற்படை நஷ்டம் ஆச்சரியப்படத்தக்க முறையில் குறைவானது. அப்பொழுது இரண்டு சஞ்சாரிகளும், இரண்டு நாசகாரிகளும், ஐந்து பெரிய துருப்புகளை இறக்கும் கப்பல்களும்தான் நஷ்டமாகின.

### பெரிய கடற்படைகள்.

மகத்தான படையெடுப்புகளில் கடற்படையின் நடவடிக்கையை சரியானபடி மதித்து பார்க்கவேண்டுமானால் அதில் ஈடுபட்ட கடற்படையின் சங்கியைக் கவனிக்கவேண்டும். வட ஆபிரிக்காவில் படைகளையிறக்குவதற்கு 850 கப்பல்களும், ஸிஸிலியில் படைகளையிறக்குவதற்கு 3,250 கப்பல்களும் உபயோகிக்கப்பட்டன. ஆன்ஸியோவில் படையெடுப்பு ஏற்பட்டதற்கு எவ்வளவு கப்பல்கள் சென்றன என்ற விபரங்கள் கிடைக்கவில்லை. அவைகளும் அதிகமாகத்தானிருக்கவேண்டும்.

மத்தியதரைக்கடல் ஜிப்ரால்டரிலிருந்து அலெக்ஸாண்ட்ரியா வரையில் 2,000 மைல்கள் தூரம் பரவியிருக்கிறது. அதன் இருகரைகள் ஓரமாகவும் பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள் ரோந்து செய்தும் சாமான் கப்பல்களுக்குத் துணைக்காவல் புரிந்தும் வருகின்றன. அவைகள் ஜெர்மன் ஸ்தானங்களின் பேரிலும் பீரங்கி பிரயோகம் செய்து வருகின்றன. இந்தப் பின்திரையை அடிப்படையாகக்கொண்டு நமது கப்பல் நஷ்டங்களை ஆராய்ச்சி செய்யவேண்டும். துறைமுகங்களில் ஒளிந்து நிற்கும் கப்பல்கள் யுத்தத்தில் வெற்றியை சம்பாதிக்க முடியாது.

பிரிடிஷ் பார்லிமெண்டு சபையில் மிஸ்டர் அலெக்ஸாண்டர் வெளியிட்ட விவரங்கள் யுத்தத்தின் நெருக்கடியான இந்த சமயத்தில் ஜெர்மன் கடல்பலமும், விமான பலமும் பயன்படவில்லையென்று தெளிவாகக்கூறுகின்றன. அநேக உற்றறிவோர்கள் எதிர் பார்த்ததை விடவும் அநேக கெட்ட புத்தியுள்ள ஜெர்மானியர்கள் எதிர் பார்த்ததை விடவும் குறைவான கப்பல் நஷ்டங்கள்தான் பிரிடனுக்கு உண்டாகியிருக்கின்றன.

### படையெடுப்பில் ஏற்படக்கூடிய நஷ்டங்கள்.

ஹிட்லரின் ஆக்கிரமணத்துக்குட்பட்ட ஐரோப்பாவை விடுதலை செய்வதற்காக நடைபெறப்போகும் மகத்தான இருவகைப்பட்ட படையெடுப்பு கூடிய சீக்கிரம் நடைபெறும்.

ஐரோப்பாவில் முன்னேறும் வாசலை ஏற்படுத்திக்கொள்ளும் நடவடிக்கையில் அபாரமான நஷ்டங்கள் ஏற்படக்கூடுமென்று மிஸ்ட்டர் சர்ச்சிலும், மற்ற நேசதேச பிரமுகர்களும் கூறியிருக்கிறார்கள். மத்தியதரைக் கடல் நடவடிக்கையில் ஏற்பட்ட நஷ்ட விவரங்களிலிருந்து நேசதேசத்தார்கள் எதிர்பார்த்திருப்பதற்கு மிகவும் குறைவான கப்பல் நஷ்டங்கள்தான் இந்தப்படையெடுப்பில் ஏற்படக்கூடுமென்று நாம் நம்பியிருக்கலாம்.

பிரிடனிலிருந்து படையெடுக்கும் நடவடிக்கை ஒருபுறமிருக்க, அதேசமயத்தில் கடலில் மற்றொரு கடும்போர் நடைபெறக்கூடுமென்பது நிச்சயம். வடக்கு அட்லாண்டிக்கிலும், பஸிபிக்கிலும், இந்து மஹாசமுத்திரங்களிலும் தாக்குதல்களும் பதில் தாக்குதல்களும் ஏற்படுமென்று எல்லோரும் எதிர் பார்க்கலாம்.

### நீர்மூழ்கிகளை வேட்டையாடும் கப்பல்கள்.

அட்லாண்டிக்கடல் பக்கத்திலுள்ள பிரிடிஷ் துறைமுகங்களை சென்ற சில நாட்களாகப் பார்வையிட்டபின் எவ்விதமான யூ படகு தாக்குதலையும் சமாளிக்க பிரிடன் தயாராகயிருக்கிறதென்று அபாரமான ருஜு கிடைத்திருக்கிறது. யுத்தம் துவங்கியபின் இப்பொழுதுதான் யூ படகுக்கூட்டங்களைத்தாக்க ஏராளமான நாசகாரிகளும், பாய்மரக்கப்பல்களும், போர்க்கப்பல்களும், கார்வெட்டிகளும், கடற்கரையிலிருக்கும் விமானங்களும், விமானந்தாங்கியில் செல்லும் விமானங்களும் குவிக்கப்பட்டிருக்கின்றன. நீர்மூழ்கிகளைக் கண்டுபிடித்து அழிக்கும் நேசதேசத்தாரின் முஸ்தீப்புகளை சமாளிக்க யூ பட்குகள் சக்தியுள்ளவை என்பதற்கு இது வரையில் ஒரு ருஜுவும் கிடைக்கவில்லை. இந்த மூஸ்தீப்புகள்தான் யூ படகுகளை அழிப்பதற்கு பிரிடிஷ் கடற்படைக்கு சக்தியளித்திருக்கின்றனவென்று கடற்தளபதி டொனிட்ஸ் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

---

## கடற்படை யுத்தம்.

### (டைம்ஸ் பத்திரிகை).

கடற்படை இலாகாவின் முதல் பிரபு மார்ச்சு மாதம் 7-ம் தேதியன்று கடற்படை சம்பந்தமான வரவு செலவு திட்டத்தை பிரேரேபித்தபொழுது கடற்படை யுத்தத்தின் வருஷாந்தர விமர்சனத்தைச் செய்தார்.

எதிரியின் செவிக்கு எட்டக்கூடிய மற்ற சொற்பொழிவுகளைப்போல் இந்த சொற்பொழிவும் கடற்படையின் விசித்திரமான நடவடிக்கைகளைக் கோடி காட்டக்கூடியது. வெகு தூரத்தில் மசண்டையாக பிரிடனின் பெரிய சிறிய கப்பல்களின் பிரதாபம் தோன்றுகின்றது. ரகஸியத்தை வெளிப்படுத்தக்கூடாதென்ற அவசியமேற்படாவிட்டாலும் கடல் யுத்தத்தைப் பற்றி விரிவான வர்ணனையைச் செய்யமுடியாது. இந்த நாடகத்தின் மகத்துவத்தை அனுமானிக்க புத்தி சக்தி கிடையாது. இந்த நாடகம் உலகமளாவி நடைபெறுகிறது. ஒரே ஒரு நடவடிக்கைதான். இந்த நாடகத்தில் யுத்த ஆரம்பம் முதல் எதிரிகள் சரணாகதி செய்யும் வரையில் முக்கியமாக நிலைபெற்றிருக்கும்.

சொற்பொழிவின் ஆரம்பத்தில் மிஸ்ட்டர் அலெக்ஸாண்டர் சொன்ன பிரகாரம் இந்த வருஷத்தில் நெருக்கடி சமயம் அநேகம் தடவைகளில் ஏற்பட்டது. இதாலிய கடற்படை மால்டாவின் துறைமுகங்களில் சென்று நங்கூரம் பாய்ச்சி நின்றதென்பது ஒரு சிறந்த நடவடிக்கை. பலம் பொருந்திய ஷார்ன் ஹார்ஸ்ட், நமது கப்பல்களால் தாக்கப்பட்டு அடிபட்டு ஆர்க்டிக்கடலில் மூழ்கிற்று என்பது மற்றொரு சம்பவம். இரண்டும் மிகவும் வெற்றிகரமான நடவடிக்கைகள். இவ்விரண்டு நடவடிக்கைகளையும் உலகத்தார்கள் பாராட்டுகிறார்கள். அதற்குப் பின் சில நாட்களுக்குள்ளாக அட்லாண்டிக்கடலில் மற்றொரு சிறந்த சம்பவம் நேரிட்டது. சாமான் கப்பல்களின் நஷ்டம் மூன்றில் இரண்டு பங்கு குறைந்து மிகவும் சொற்பமாக ஏற்பட்டது. அதன் பின் கப்பல் நஷ்டம் அந்த அளவுக்குமேல் அதிகரிக்கவில்லை.

அட்லாண்டிக்கடலில் ஏற்பட்ட மாறுதல் யுத்தப்போக்கின் தலை கீழான மாறுதலினால் ஏற்படவில்லை. இதை சாதிக்க அநேக வருஷங்களாக திட்டங்கள் போடப்பட்டன. அதன்படி அநேக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. கடும்போர் நடைபெற்றபின் யூ படகுகளின் அழிக்கும் சக்தி குலைக்கப்பட்டது. ஆகிலும் இந்த நடவடிக்கைகளைப்பற்றி ஒரு விவரங்களும் வெளிவரவில்லை.

அட்லாண்டிக்கடலில் வெற்றி பெருவதற்கும் கிடைத்த வெற்றிகளைப் பரிபாலித்துவருவதற்கும் கடற்படை மேலும் அதிகமாக பிரயாசை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று முதல் பிரபு எச்சரிக்கை செய்தார். இந்தப் போர் பிராந்தியத்தில் மட்டும் எதிரி தன்னுடைய நடவடிக்கைகளை ஒரு பொழுதும் நிறுத்திவிடமாட்டான். சென்ற வருஷத்தில் நாம் அநேக யூ படகுகளை அழித்த பின்னரும், எதிரியின் யூ படகுகள் நூதனமுறையில் நமக்கு அபாயத்தை விளைவிக்கக்கூடும். அவைகளுக்குப் புதிய பரிகாரங்களை நாம் தேடவேண்டும்.



ஆகையால் கடற்படை நடவடிக்கையில் யூ பட்குகளை அழிக்கும் யுத்த தந்திரம் தான் முதன்மையானதென்று கருதப்படுகிறது.

கடல் படையின் முக்கியமான அலுவல் உலகம் பூராவிலுமுள்ள போக்குவரவு மார்க்கங்களைக் காபந்து செய்வதுதான். நேசதேசத்தாருக்கு அட்லாண்டிக்கடல் மார்க்கத்தைத் தற்காப்பு செய்வது மெத்த அவசியமான நடவடிக்கை. பிரிடிஷ் சாம்ராஜ்யத்துக்கு மத்தியதரைக்கடல், சூயஸ் கால்வாய் மூலமாகச்செல்லும் கடல் மார்க்கத்தைப் பத்திரம் செய்வது அடுத்த நடவடிக்கையாகும். இந்த பிராந்தியத்தில் நேசதேசக் கப்பல்கள் தாராளமாக சஞ்சாரம் செய்ய வசதி ஏற்படுத்தியது இவ்வருஷத்திய முக்கியமான நடவடிக்கை. விமானப் படையின் உதவிகொண்டு கடல் மார்க்கங்களைக் காபந்து செய்துகொண்டு கடற்படை மூலம் யுத்த தளவாடங்கள் ஸிஸிலியிலும், இதாலியிலும் இறக்கப்பட்டன. அதன் பின் டிர்பிட்ஸ் முடமானதிலிருந்தும், ஷார்ன் ஹார்ஸ்ட் மூழ்கியதிலிருந்தும் ஐரோப்பியப்போரில் வடக்கு சமுத்திரத்தில் மூன்றாவது கடல் மார்க்கம் பத்திரமாகிவிட்டது. அதன் மூலம் கிழக்குப் போர் முனையில் செம்படை அரிய வெற்றிகளைப்பெற சௌகர்யம் ஏற்பட்டது.

மிஸ்ட்டர் அலெக்ஸாண்டரின் அடக்கமான சொற்பொழிவில் கடல் போரில் விஞ்ஞான சாஸ்திரத்தின் நூதன ஆராய்ச்சிகள் ஏராளமான சிக்கல்களை உண்டுபண்ணியிருக்கின்றனவென்றும் குறிப்புகள் காணப்படுகின்றன. கடல் போரில் எந்த பிராந்தியத்திலும் விமானப் படை கலந்து கொள்ளுவதினால் இதற்கு முன் அநேக யுத்தங்களில் கிடைத்த அனுபவம் உபயோகமற்றதாகிவிட்டது. புதிய தேவைகளுக்காக புதிய யுத்த தந்திரங்கள் கண்டு பிடிக்கப்படுவதால் கடற்படை அதிகாரிகள் பழமையான முறைகளைத் தள்ளிவிட்டு புதிய முறைகளை ஆரம்பத்திலிருந்து கற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது.

விஞ்ஞான சாஸ்திர முறையில் நடைபெறும் பந்தயத்தில் கடற்படையின் கற்பனை சக்தி அதிகமென்றும் அதை நடைமுறையில் சிறப்புடன் நடத்திவைக்கும் மாலுமிகளின் சாதுர்ய அதிகமென்றும் அதை நடைமுறையில் சிறப்புடன் நடத்திவைக்கும் 'மாலுமிகளின் சாதுர்யமும், தீரமும் அபாரமானதென்றும் விளைவுகளிலிருந்து தெரியவருகின்றன.

சொற்பொழிவின் முடிவில் கடற்படைப் போரில் உச்சநிலை ஏற்படுமென்று மிஸ்ட்டர் அலெக்ஸாண்டர் சொன்னார். இறுதிப்போர் உலகத்தின் மற்றொரு பக்கத்திலுள்ள கடற் படை பலத்திலும் மாலுமிகளிலும் வலு மிக்க மற்றொரு தீபகற்பத்தில் வசிப்பவருடன் நடைபெறும். ஐரோப்பியப் போர் முனையைவிட தூரக்கிழக்குப் போர் முனையில் கடல் மார்க்கங்களை அடக்கியாளுவதுதான் முக்கியமான நடவடிக்கையாகும். ஏனெனில் ஒரு பெரிய ராணுவ வல்லரசை முறியடிக்கப்போதுமான யுத்த தளவாடங்களை உலகத்தின் பாதி பாகத்தைத் தாண்டிக்கொண்டுபோகவேண்டும். அங்கு சென்றாலும் உலகத்திலேயே மகத்தான கடல் மார்க்கத்தில் அவைகள் சஞ்சாரம் செய்யவேண்டும், மிஸ்ட்டர் அலெக்ஸாண்டர் சொல்லுவதுபோல, ஜெர்மனியுடன் போர் செய்வதற்காக அநேக வல்லரசுகள் சேர்ந்து தயாரித்திருக்கும் மகத்தான கடற்படையும் விமானப் படையும் ஜெர்மனி சரணடைந்தபின் ஜப்பானைத்தாக்க அனுப்பப்படும். இத்துடன் மேற்குக் கடல்களில் போர் புரிந்துவரும் பிரிடிஷ் கடற்படையும் சேர்ந்துவிடும். சமுத்திர மட்டத்தில் செல்லும் கப்பல்களும், நீர் மூழ்கிகளும், விமானப் படையும் தூரக்கிழக்குக்கு வந்து சேருவதுடன், நான்கு வருஷங்களுக்கு மேலாக நிரந்தரமான பக்தியுடன் ஒத்துழைத்திருக்கும் சாமான் கப்பல்கள் மூலமாக ஏராளமான தரைப்படைகளும் வந்துவிடும். ஜப்பானின் அந்தியகாலம் அப்பொழுது ஏற்படும்.

---

## வடக்கு இதாலியில் ஏற்பட்ட வேலை நிறுத்தத்தின் படிப்பினைகள்.

### எதிர்ப்பு ஆர்வம் வலுவடைந்து வருகிறது.

### (டைம்ஸ் பத்திரிகை.)

ஜெர்மனி வசமுள்ள ரோம் ஒலிபரப்பில் ஒப்புக்கொண்ட பிரகாரம் வடக்கு இதாலியில் சமீபகாலத்தில் ஏற்பட்ட வேலை நிறுத்தம் ஜெர்மனிக்கும், ஜெர்மனிக்குட்பட்ட நாடுகளுக்கும் மிகுதியான சங்கடத்தை உண்டுபண்ணிவிட்டது.

2,00,000 தொழிலாளர்கள் இதில் ஈடுபட்டனர். சில இடங்களிலிருந்த முக்கியமான யுத்த தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தப்பட்டது. வேலை நிறுத்தம் நான்கு நாட்கள் வரை நீடித்தது.

அயல் நாட்டாரின் ஆக்கிரமணத்திலிருந்து இதாலியை விடுவிக்க முயன்றுவரும் பிரிடிஷ் அமெரிக்கப்படைகளுடன் அவர்கள் ஒத்துழைப்பதை வெளிப்படுத்த வேலை நிறுத்தம் ஏற்பாடு செய்யப்பட்டது. வேலைநிறுத்தத்திற்கு முதலாளிகளில் சிலர் ஆதரவளித்தார்களென்றும் நம்பக்கூடியதாகயிருக்கிறது. ஆகையால் வேலை நிறுத்தத்தின் முக்கியத்வத்தைக் குறைத்துக் கூறமுடியாது. மற்ற ஆக்கிரமிப்பு நாடுகளில் போல் வடக்கு இதாலியிலும் ஜெர்மானியர்கள் மேற்கொண்ட அக்கிரமங்கள் எதிர்ப்பு இயக்கத்தை நசுக்கக்கூடவில்லை என்று புலப்பட்டுவிட்டது.

தொழிற்சாலைகள் நிறம்பிய வடக்கு இதாலியின் ஊக்கம் மிகுதியாகவும், முரட்டுத்தனமாகவுமிருக்கிறது. இந்த ஆர்வம் நாடெங்கும் பரவியிருக்கிறது. எதிரிக்கு ஒத்தாசை செய்யும் முறையில் தளவாட உற்பத்தியைக் குறைப்பதற்காக நடவடிக்கைகள் கையாளப்படுகின்றன. சமீபத்தில் நடைபெற்ற வேலை நிறுத்தம் விடுதலைபெறவேண்டுமென்ற நேசதேச, இதாலிய எண்ணங்களுக்கு அனுகூலம் செய்திருக்கிறது. யுத்தத்திலீடுபட்டு நடுங்கிக் கொண்டிருக்கும் நாடுகளுக்கும் இது வழிகாட்டியாகயிருக்கும்.

### கொடுமையின் திறமை.

வடக்கு இதாலியில் ஜெர்மனியின் திறமையுள்ள ஆக்ஷி கொடுமை பொருந்தியது. வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்ட தொழிலாளர்களை போலந்துக்கு தேசபிரஷ்டம் செய்வதாகவும் ஜெர்மானியர்கள் பயமுறுத்துகிறார்கள். எந்த கொடுமைகளையும் அனுபவிக்க தொழிலாளர்கள் தயாராகயிருக்கிறார்கள்.

ஸெப்டம்பர் மாதத்தில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டது முதல் எதிர்ப்பு இயக்கம் ஓயவே இல்லை. அது ஒருவாறு அடக்கியாளப்பட்டாலும் அது கபடமான வேலைகளையும் தாக்குதல்களையும் செய்வதுமாகப் பரிணமித்து வருகிறது. ஜெர்மன் கக்ஷியை ஆதரிக்கிறவர்களை சம்பாதிக்கும் முயற்சியில் முஸோலினியும், அவனுடைய புதிய பாஸிஸ்டு கக்ஷிக்காரர்களும் செய்யத்தகாத காரியங்களை மேற்கொண்டுவிட்டார்கள். தொழிற்சாலைகளை தேசிய மயமாக்கிவிடுவதென்ற திட்டம் பறைசாற்றப்படுகிறது. அநேக விரிவான சீர்திருத்தங்களைச் செய்வதாகவும் வாக்குக்கொடுக்கப்படுகிறது. இவையெல்லாம் ஜெர்மனிக்கு உதவி செய்வதை ஆமோதிக்கும் கோஷ்டியைத் தயாரிக்கும் எண்ணத்துடன் தான் நடைபெறுகின்றன.

இதாலியின் விடுதலைக்கான போரில் வடக்கு இதாலி இப்பொழுதும் பெரும் பங்கெடுத்துக்கொள்ளமுடியாது. ஆகிலும் மிலானிலும், டூரினிலும், பிளாரென்ஸிலும் வேலை நிறுத்தம் செய்தவர்கள் இதாலியில் எதிர்ப்பு தாகம் தணியவில்லையென்று வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

---

## அதிகரித்துவரும் வலிமைக்கு பிரிடன் ஆயுத சாலை.

### மிகுதியான தொழிற்சாலை முயற்சிகளின் வெற்றி.

ஏறக்குறைய ஐந்து வருஷங்களாக அதிகரித்துவரும் படை பலத்துக்கும், அடிக்கும் சக்திக்கும் பிரிடன் பெரிய ஆயுதசாலையாக இருந்துவருகிறது. இந்த ஆயுதங்களைப்பற்றிய தகவல்கள் எதிரிக்கு எட்டக்கூடாதென்பதினால் முயற்சிகள் பரம ரகஸியமாக வைக்கப்பட்டிருப்பதால் பிரிடிஷ் மக்களும், நேசதேசத்தார்களும் அவைகளைப்பற்றி ஒரு தகவல்களையும் அறியக்கூடவில்லை. பொது மக்களின் உபயோகத்துக்காகவும் சர்வதேசத்தாரின் சம்மந்தங்களுக்கு அனுகூலமாகவும் மிஸ்ட்டர் லிட்டில்டன் சில புள்ளி விவரங்களை வெளியிட்டிருக்கிறார்.

ரகங்களைப்பற்றியும், திட்டங்களைப் பற்றியும், தளவாடங்களைப்பற்றியும், வேலை நேரத்தைப் பற்றியும கவசம் பூண்ட படைகள், யுத்தக் கப்பல், விமானப் படை இவைகளைத் தயாரிக்க என்ன பொருள்கள் தேவையென்றும் அநேகர்கள் அறியக்கூடுமென்றாலும் மிஸ்ட்டர் லிட்டில்டன் வெளியிட்டிருக்கும் புள்ளி விவரங்கள் பிரிடிஷ் தொழிற்சாலைகள் இடைவிடாது, அபாரமான உற்பத்தியைச் செய்திருக்கின்றனவென்பதைக் குறிக்கப்படுகின்றன.

யுத்த ஆரம்பத்திலிருந்து இதுவரையில் பிரிடன் 90,000 விமானங்களைக் கட்டியிருக்கிறது. இப்பொழுது கட்டப்படும் விமானங்களில் ஐந்தில் நான்கு பாகம் போர் விமானங்கள். டாங்கிகளை அபரிமிதமாக உற்பத்தி செய்யும் நடவடிக்கை பின்புதான் ஆரம்பிக்கப்பட்டது. டாங்கிகள், கவசம் பூண்ட மோட்டார்கள், பீரங்கி ஏற்றிச் செல்லும் வண்டிகள் உள்பட 83,000 உருப்படிகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதைத் தவிர கவசமில்லாத 10 லக்ஷம் மோட்டார் வண்டிகளும் தயாரிக்கப்படுகின்றன. மிஸ்ட்டர் லிட்டில்டன் வெளியிட்ட மற்ற விபரங்களும் அபரிமிதமானவை. நாம் மதிக்கக்கூடாதபடி 7,000 மிலியன் தோட்டாக்களும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஜெர்மன் சிப்பாய்க்கும் 1,000 தோட்டாக்கள் வீதம் கொடுக்கக்கூடிய அளவுக்கு நமது தளவாட உற்பத்தி அதிகரித்திருக்கிறது.

மேலும், இந்தப் புள்ளி விவரங்களில் மேற்கிலிருந்து ஐரோப்பாவில் படைகளையிறக்க சாதகமான சிறிய படகுகளின் உற்பத்தி அளவும் மற்ற தளவாட உற்பத்தியின் ஒரு சிறிய அளவையும்கூட மிலியன்கள் கணக்கான பொது ஜனங்கள் அறிய மாட்டார்கள். ஆகையால் பெரிய எண்ணிக்கையுள்ள புள்ளி விவரங்களைக் காணக்கிடைப்பது உற்சாகத்தை ஊட்டுகிறது.

இந்தக் குறிப்புகள் யுத்த முயற்சிகளின் பூரா அளவையும் நிர்த்தாரணம் செய்யவில்லை. இறுதியில் கணக்கு முடிப்பதற்கு முன்னதாக கையிருப்புச் சாமான்களைக் கணக்கெடுக்கும்



பிரசுரமாகவும் இது இல்லை. எதிரியை படை பலத்தினாலும், ஆயுத பலத்தினாலும் தாக்கி அவனை மறுபடியும் தலை கிளப்ப முடியாமல் செய்ய முயற்சிக்க நமக்கு ஆர்வத்தையும் ஊக்கத்தையும் அவைகள் ஊட்டுகின்றன.

நம்முடைய சகல ஐசுவர்யங்களையும் உபயோகிப்பதும் மூவகைப்பட்ட படைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய எல்லாவிதமான தியாகங்களையும் செய்யவேண்டியதும் நமது கடமையாகும். தொழிற்சாலை முயற்சிகள் சாவதானமாகவும், துரிதமாகவும் நடைபெற்று வருகின்றன. அவைகளில் லக்ஷக்கணக்கான தொழிலாளர்கள் சிக்கலான சிலாக்கியமான அநேக யந்திரங்களையும், ஆயுதங்களையும் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டிருக்கிறார்கள். மேலும் அநேக தொழிலாளர் படைகள் தயாரிக்கப்பட்டு அவைகள் திறமையுடன் வேலை செய்து வருகின்றன. தொழிலாளர்களின் உற்பத்திசக்தி சென்ற 6 மாதங்களில் 2 சதவிகிதம் அதிகரித்துவிட்டது.

இந்த சிலாக்கியமான விளைவுகளுக்கு அநேக காரணங்களுண்டு. தொழிலாளர்களின் திறமையில் அபிவிருத்தி. முக்கியமாக ஸ்திரீகள் யந்திர வேலையில் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். வேலைக்காரர்களின் சாதுர்யம், யந்திர ஆயுதங்களின் மேன்மை தொழில்களின் பராமரிஷை, எல்லோருடைய ஒத்துழைப்பு, முதலியவைகள். இவைகளின் மூலம் தொழில் பயிற்சியின் அபிவிருத்தி ஏற்படுவதுடன் ஒருவருக்கொருவர் நல்லுணர்ச்சியுடனும், அமைதியுடனும் வேலைசெய்ய ஹேதுவாகயிருக்கிறது. சில சமயங்களில் உத்தியோகஸ்தர்களும் அரசாங்க இலாகாக்களிலிருந்து வரும் உத்திரவுகளை நிராக்ஷேபணையாகக் கீழ்படிந்து நடக்க வேண்டியதாகயிருக்கிறது. திட்டத்தை மாற்றிக்கொள்ளுவதற்கும் கொஞ்ச காலத்துக்கு முன் முகான்மையாக கவனிக்கப்பட வேண்டுமென்றே உத்திரவை ஒத்திப்போடும்படி செய்யப்படும் உத்திரவுக்கும் காரணங்கள் ரகஸியமாகயிருக்கவேண்டும். வரப்போகும் மாதங்களில் அநேக மாறுதல்கள் ஏற்படக்கூடும்.

ஏற்னெவே அநேக புதிய நிகழ்ச்சிக் குறிப்புகள் நிறுவப்பட்டிருக்கின்றன. இவைகளும் சிலாக்கியமானவைகள்தான். யுத்த அவசியத்துக்குத் தக்கவாறு துருப்புகள் புதிய உபாயங்களைக் கையாளவேண்டுவதுபோல் தொழிற்சாலைகளும் புதிய தளவாடங்களை சப்ளை செய்யத் தயாராகயிருக்கவேண்டும். மிஸ்ட்டர் லிட்டில்டன் சொல்லுகிறபடி இப்பொழுது யுத்த தளவாட உற்பத்தியில் அவசரம் தேவையில்லை. இதற்கு எதிர் முறையான நடவடிக்கைதான் அவசியம்.

---

## ஜப்பானின் பொருளாதாரத்தைக் கடலிலும் ஆகாய மார்க்கத்திலும் தாக்குவது.

### கடற்படை பலம் க்ஷீணித்து வருகிறது.

தயை தாக்ஷிண்யமன்னியில் ஜப்பான் விசாலமான கடலில் அநேக பிரதேசங்களைப் பிடித்திருப்பதால் அதன் கடற்படை வலிமை மிகவும் முக்கியமான பிரச்னையாகும். சென்ற ஆறு மாதங்களில் ஜப்பானின் கடற்படை பலம் துரிதமாக க்ஷீணித்து விட்டதற்கு ஜப்பானின் பொருளாதாரத்தை கடல் மூலமாகவும் ஆகாயத்திலும் அழிக்க நேசதேசத்தார்கள் முயன்று வருகிறார்களென்பது திருப்திகரமான நடவடிக்கையாகும். பஸிபிக்கில் அபாயத்துக்குட்பட்டு வெகுதூரம் செல்லும் பிரிடிஷ் நீர் மூழ்கிகள்தான் ஜப்பானின் கடற்படையின் பலஹீனத்துக்குக் காரணம்.

கப்பல் நஷ்டங்களை ஈடு செய்ய எஃகுக் கப்பல்களுடன் மரக்கப்பல்களையும் கட்டி உபயோகிப்பது என்ற ஜப்பானின் திட்டமும் ஓய்ந்துவிடவில்லை. பிரிடனுக்கும் அமெரிக்காவுக்கும் எஃகுக்கப்பல்களைக் கட்ட தளவாடங்களும் எஃகுக்கப்பல்களை அமைக்க கப்பல் கட்டும் நிலயங்களும் இருப்பது போல் ஜப்பானுக்கு அதிக வசதிகள் கிடையாது. 1943-ம் வருஷத்தில் மரக்கலங்களைக் கட்ட ஜப்பான் போட்ட திட்டத்தை 1944-ம் வருஷத்தில் பூர்த்தி செய்து விடுவதற்கு முன் ஜப்பானின் பொருளாதார நிலமையை நேசதேசத்தார்கள் பலமாக அழித்துவிடுவார்கள். கடல் போரினால் ஏராளமான எண்ணெய்க் கப்பல்களும் ஸப்ளைக் கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டுவிட்டதால் கடற்படையைக் காப்பாற்றுவது ஜப்பானுக்கு சங்கடமான பிரச்னையாகிவிட்டது. ஜப்பானிடமிருக்கும் கப்பற்படை யுத்தத்துக்கு அவசியமான ஜப்பானியப் படைகளை ஏற்றிச் செல்லுவதற்கும், எண்ணெயையும் இயற்கைப் பொருள்களையும் கொண்டு போவதற்கும் போதுமானதல்ல.

ஜப்பானின் பெரிய கிழக்கு ஆசியா பிரதேசம் பூராவும் கடற்படையை முற்றிலும் நம்பியிருக்கிறதென்றும் ஜப்பானியப் படைகள் நடமாடும் விசாலமான பரப்புகளில் போதுமான ரஸ்தாக்களும். இருப்புப்பாதைகளும் கிடையாதென்றும் நாம் ஞாபகப்படுத்திக் கொண்டால் ஜப்பானியர்களுக்கு ஏற்பட்டிருக்கும் கடற்படையின் பலஹீனம் சம்பந்தப்பட்ட மட்டில் பூகோள அமைப்பு நமக்கு சாதகமளித்து வருகிறதென்று நாம் அறிந்துகொள்ளலாம்.

மார்ச்சு மாதம் 8-ம் தேதியன்று மிஸ்ட்டர் அலெக்ஸாண்டர் ஆற்றிய சொற்பொழிவில் பிரிடிஷ் கடற்படையின் சக்தியைப் பற்றி உலகத்தாருக்கு அவர் அறிவூட்டினார். சமயம் வரும்பொழுது அமெரிக்க கடற்படையும் தெற்கு டொமினியன்களைச் சேர்ந்த கப்பற்படையும் பஸிபிக்கில் ஏற்கனவே நடமாடிக்கொண்டிருக்கும் பிரிடிஷ் கடற்படையும் ஒன்றுபட்டு ஜப்பானைத் தாக்குமென்று அவர் சொன்னார். பிரிடனின் கடலாதிக்கம் ஜப்பானின் இறுதி முடிவை சாதித்துவிடும்.

ஆகாய மார்க்கமாகவும் ஜப்பானின் பொருளாதார, தொழிற்சாலை பிராந்தியங்கள் பலமாகத் தாக்கப்படுகின்றன. தென் மேற்கு பஸிபிக்கிலுள்ள ஜப்பானிய கடற்படையையும் ஜப்பானியர்கள் ஆக்கிரமித்திருக்கும் நாடுகளிலுள்ள ஜப்பானிய ஸ்தானங்களையும் நேசதேச விமானங்கள் குறிதவறாமல் தாக்கிவருகின்றன. இந்த நடவடிக்கை அதிகரித்துவிடும். இறுதியில் ஜப்பானும் தாக்கப்படும். ஜப்பானின் மிகவும் முக்கியமான தேசமான வடக்கு இந்தோ சைனாவை நேசதேச வெடி விமானங்கள் தாக்கியதிலிருந்து அங்குள்ள சுரங்கங்களும் ஜப்பானுக்கு அவசியமான நிலக்கரி, மற்ற தாதுப்பொருள்களின் ஏற்றுமதியும் சீர்கெட்டுவிட்டன. இயற்கையாக அநேக இன்னல்களுக்குட்பட்ட ஜப்பானின் உற்பத்தியும் போக்குவரத்தும் நேசதேசத் தாக்குதலால் அநேக சிரமங்களுக்குட்படும்படி நேரிட்டுவிட்டது.

---

## டச்சுக் கிழக்கு இந்தியத் தீவுகளின் நிலைமை.

### (லண்டன் தந்தி).

ஜப்பானியப் படைகளினிடம் ஜாவாவிலிருந்தவர்கள் சரணடைந்த இரண்டாம் வருஷத்தில், ஆஸ்திரேலியாவிலுள்ள டச்சு கிழக்கு இந்தியத்தீவின் அரசாங்க பிரதிநிதிகள், ஜப்பானியர் ஆக்கிரமிப்பில் ஜாவாவின் நிலை எவ்வாறுள்ளது என்பதைப்பற்றி தெளிவாக எடுத்துக் கூறுகின்றனர். ஆசிய மக்களை விடுவிப்பதாய் கூறியுள்ள அவர்களின் வாக்கிற்கும், ஜப்பானிய சைனியங்கள், நிர்வாகிகள் முதலியோர் நடந்துகொள்ளும் முறைக்கும் நேர்மாறாய் உள்ளது.

ஒரு காலத்தில் செல்வம் மிகுந்து, செல்வ போகத்தில் நல்ல அரசாட்சியின் கீழ் வாழ்ந்த இத்தீவின் மக்களை விடுவிக்க வந்ததாய் சொல்லிக்கொள்ளும் ஜப்பானியர்கள், சவுக்கினால் அடித்தும், கீழ்ப்படியாதவர்களை கொலை செய்தும் இம்மாதிரியான ராக்ஷஸ முறைகளில் வேலை வாங்குகின்றனர். அவர்களால் ஏற்படுத்தப்பட்ட பங்கீடு முறையானது, பொருள் அற்று இருப்பதன் காரணமாய் இருக்கிறது. யுத்தத்திற்கு முன்பு முக்கியமான ஏற்றுமதிகளில் ஒன்றாயிருந்த அரிசியின் விலை இப்பொழுது ஜாவாவில் 5 மடங்கு அதிகப்பட்டு இருக்கிறது. வேலையாட்களுக்கு கொடுக்கப்படும் 8 அவுன்ஸ் அரிசியும், ஸோயா விதைகளும் அவர்களுக்குப் போதுமானதாகவே இல்லை. துணிகளும் மிகவும் அருமையாயும் விலை அதிகமாயும் உளது. திருட்டுத்தனமாய் உயர்ந்த விலையில் விற்கும் கடைகள் அதிகமாயுள்ளன.

ஸியாம், மலேயா முகாம்களில் நடத்தப்படுவதுபோல் யுத்தத்தில் பிடிக்கப்பட்ட கைதிகளையும், பொதுமக்களையும் மிகவும் கஷ்டப்படுத்தப்படுகின்றனர். வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாயுள்ளது; டச்சுக் கிழக்கு இந்தியத் தீவுகளிலுள்ளோர்களிலும் துரோகம் செய்வோரில்லை; அவர்களை விடுதலை செய்ய வந்தவர்களிடம் அவர்களும் வெறுப்புடனும், அவர்களை சுகப்படுத்துவதாய் சொல்வோரிடம் நம்பிக்கையின்றி நடந்துகொள்ளுகின்றனர்.

டச்சுக் கிழக்கு இந்தியத் தீவுகளின் நிலையில் மற்றொரு முக்கிய சம்பவமானது, ஜப்பானியர்களின் மூலப் பொருள்களின் தேவைகளும் ராணுவத் தேவைகளும் அதிகமாயுள்ளது. ஜப்பானியர்களிடம் போதுமான அளவுக்குமேல் ரப்பர் இருந்தாலும்கூட, எல்லா பெட்ரோல் எண்ணெயையும், டின் இன்னும் இதர உலோகங்களையும், தென் கடல்களில் கிடைக்கும் இதர பொருள்களையும் அவர்களே அடைய விரும்புகின்றனர். பஸிபிக்கிலும், இந்துமஹா சமுத்திரத்திலும் உள்ள அவர்களின் மக்களுக்கு வேண்டிய தேவைகளை அனுப்புவதற்கு முடியாமலேயே மிகவும் கஷ்டப்படுகின்றனர். ஜப்பானியர் அவர்களின் வியாபாரக் கப்பல்களின் எண்ணிக்கையும் குறைந்துவிடவே, இக்கஷ்டம் இன்னும் அதிகமாயுள்ளது. இதனின்றும் அந்தந்த நாட்டுப்பொருள் அந்தந்த நாடுகளுக்குப் போதும்படியாய் வைத்துக் கொள்ள அவர்கள் விரும்புவதன் காரணம் நன்கு தெரிகிறது. டச்சுக் கிழக்கு இந்தியத் தீவுகளின் மக்களின் நலத்திற்காக, அவர்கள் இவ்வாறு செய்யவில்லை. ஆனால் அங்குள்ள அவர்களின் ராணுவங்களின் தேவைக்காகவே இவ்வாறு செய்துள்ளனர். ஆனால் டச்சு மக்களின் தைரியமும், திடமும் குலைக்கப்படவில்லை. அவர்களின் தாய் நாட்டில் ஜெர்மானியர் செய்துவரும் அட்டூழியங்களுக்கு அவர்கள் பயந்தார்களில்லை. அதுவேபோல அதே உணர்ச்சியும் இத்தீவுகளில் உள்ளோரிடத்திலும் உளது. ஆக்கிரமித்திருக்கும் ஜப்பானியர்களையோ அல்லது, இந்த ஆசிய மக்களின் கொடும் ஆட்சியினிடமோ பயப்படப்போகிறவர்களுமில்லை.



## வெடிகுண்டை அகற்றுவது.

---

பிரிடிஷ் இஞ்ஜினியர் படைகளின் காப்டன் ஒரு நாள் போர்முனையில் மோட்டாரில் சென்றார். மற்றொருவர் அவரைக்கூப்பிட்டு திருகாணி முடுக்கி தேவை என்றார். அவருடைய இடது கக்ஷத்தில் தெர்மாஸ் டப்பிபோன்ற ஒரு சாமானை அவர் அடக்கியிருந்தார்.

"திருகாணி முடுக்கி" எதற்காக என்று காப்டன் கேட்டார்.

"இந்த சிசாவிலுள்ள யந்திரத்தை அகற்றவேண்டும்" என்று மற்றவர் பதிலுரைத்தார்.

"அது என்ன" என்று காப்டன் வினவினார்.

"இது என்ன வென்று கண்டுபிடிக்கத்தான் நான் முயலுகிறேன். நேற்றிரவு இதை ஜெர்மானியர்கள் போட்டார்கள்." என்று பதிலுரைத்தார். காப்டன் பெருமூச்சு விட்டுக் கொண்டு "இதைக் கீழேவைத்துவிடு. இதைச் சுட்டு வெடிக்கும்படி செய்துவிடுவோம்" என்று சொன்னார்.

"ஆமாம். இது வெடித்துவிடுவதற்காகத்தான் போடப்பட்டது. இது எந்த உபாயத்தினால் வெடிக்கிறதென்று கண்டுபிடிக்கவேண்டும்" என்று பதில் வந்தது.

காப்டன் தன்னுடைய சாமான் பெட்டியை எடுத்துக்கொண்டு, மோட்டாரை சிறிது தூரத்தில் வைத்துவிட்டு 20 நிமிஷநேரம் கவனித்தார். காப்டன் சொன்ன வரலாறு பின்வருமாறு.

"மணலில் உட்கார்ந்துகொண்டு வெடிகுண்டை கால்களுக்கிடையே இடுக்கிக்கொண்டு மிகவும் ஜாக்கிரதையாக திருகாணி முடுக்கியை அவன் உபயோகித்து வந்தான். ஒவ்வொரு பாகமாக அதை அக்கக்காகப்பிரித்து அவைகளை தன்னுடைய குல்லாயில் போட்டான். அவன் வேலை செய்யும்பொழுது உல்லாசமாக சீட்டி அடித்துக்கொண்டிருந்தான்.

"இங்கு ஒரு புதிய சாமான் இருக்கிறது. வந்து பாருங்கள், என்று என்னை அவன் கூப்பிட்டான்.

நான் ரொம்பவும் உஷாராக இருந்துவந்தேன். அவன் போட்ட சப்தத்தில் குண்டின் பிடிப்பு அறுந்துபோய் என் முகத்தின் சமீபத்தில் அது சென்றது.

"பாதகமில்லை. இதன் அந்தரங்கத்தை நாம் அறியவேணும். நீங்கள் இதை கெட்டியாகப் பிடித்துக்கொள்ளுங்கள். நான் மூன்று திருகாணிகளையும் கழட்டிவிடுகிறேன்" என்று அவன் சொன்னான்.

"நான் நடுங்கிக்கொண்டே மெதுவாக அங்கு சென்றேன். அவன் ஒவ்வொரு அவயமாக மூன்று அமைப்பையும் அகற்றினான்.

"உள் கூட்டில் சாம்பல் வர்ணமுள்ள வெடி மருந்து இருந்தது. திருகாணி முடுக்கியை அவன் திருப்பும்பொழுது எனக்குக் கலக்கம் உண்டாயிற்று. நாம் உள்ளேயிருக்கும் வெடி மருந்தை நோக்குமுன் அது வெடித்துவிடுமோ என்று பயந்தேன். அல்லது அதற்குள் வெடிக்க சக்தியற்றதாக மருந்து இருக்குமோவென்று நினைத்தேன். அந்த வேலை முடிவடைந்தது. மூன்று திருகாணிகளை அகற்றிய மூன்று நிமிஷங்களும் மூன்று யுகங்களாகத் தோன்றின.

"அவன் வேலையை முடித்தவுடன் நான் ஆச்வாசத்துடன் எழுந்திருந்தேன். சீட்டியடித்துக்கொண்டே அவன் எல்லா உருப்புகளையும் சட்டைப்பைகளில் போட்டுக்கொண்டான். 'நான் அவைகளை அழிக்க முற்பட்டிருக்கிறேன்.' என்று சொல்லி விடைபெற்றுச் சென்றான்.

"அவனை நான் மறுபடியும் காணக்கூடவில்லை. இது ஒரு விந்தையில்லை. ஏனென்றால் அவனைப்போல் துணிவுள்ளவர்கள் யுத்த காலத்தில் அதிக காலம் ஜீவித்திருக்கமுடியாது. அம்மாதிரியுவர்கள் இருக்கிறார்களென்று நாம் சந்தோஷப்படவேண்டும்.

"இந்த தீரச்செய்கைக்குபின் சேனைத்தலைவர் இவ்விதமான தெர்மாஸ் 'வெடிகுண்டுகளை கையாளக்கூடாதென்று உத்திரவிட்டார். 'எக்காரணத்தை முன்னிட்டும் இந்த வெடிகுண்டைத் தொடக்கூடாது. தரை மட்டத்திலிருந்து 15 டிகிரிகள் அதை உயர்த்தினாலும் அது வெடித்துவிடும்.' என்று உத்திரவிடப்பட்டது.

"நமது தீரர் அக்குண்டை 12 தடவைகள் உயரத்தூக்கி அதை அக்கக்காகப் பிரித்திருக்கிறார்.

"இந்த வெடிகுண்டு வெடிக்காததற்கு நாம் கடவுளிடம் வழிபடவேண்டும்."

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் ஸூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 191. (1-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1- 4-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 5- 4-44 | பூங்குடி | ... மாலை | 7.00 |
| 2- 4-44 | கீரனூர் | ... ,, | 7.00 | ,, | சத்தியமங்கலம் | ... ,, | 7.30 |
| ,, | நாஞ்சூர் | ... ,, | 7.30 | 6- 4-44 | மிரட்டுநிலை | ... ,, | 7.00 |
| 3- 4-44 | பூவரசகுடி | ... ,, | 7.00 | ,, | அரிமளம் | ... ,, | 7.30 |
| ,, | வேங்கடகுளம் | ... ,, | 7.30 | 7- 4-44 | உடையாளிப்பட்டி | ... ,, | 7.00 |
| 4- 4-44 | பெருங்களூர் | ... ,, | 7.00 | ,, | கிள்ளுகோட்டை | ... ,, | 7.30 |
| ,, | ஆதனக்கோட்டை | ... ,, | 7.30 | | | | |

### பிரஸங்கம் 192. (2-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 8- 4-44 | நார்த்தாமலை | ... மாலை | 7.00 | 12- 4-44 | பனையப்பட்டி | ... மாலை | 7.00 |
| 9- 4-44 | ,, | ... ,, | 7.00 | ,, | ராங்கியம் | ... ,, | 7.30 |
| 10- 4-44 | ,, | ... ,, | 7.00 | 13- 4-44 | களமாவூர் | ... ,, | 7.00 |
| 11- 4-44 | வெங்களூர் | ... ,, | 7.00 | ,, | நல்லூர் | ... ,, | 7.30 |
| ,, | கோனுபட்டு | ... ,, | 7.30 | 14- 4-44 | குடுமியாமலை | ... ,, | 7.00 |
| | | | | ,, | பரம்பூர் | ... ,, | 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 1— 4—44 | வெட்டம்விடுதி. | 10— 4—44 | நார்த்தாமலை. |
| 2— 4—44 | விராயாச்சிலை. | 11— 4—44 | கோனுபட்டு. |
| 4— 4—44 | பேராம்பூர். | 12— 4—44 | கரம்பக்குடி. |
| 8— 4—44 | நார்த்தாமலை. | 13— 4—44 | கீழாநிலை. |
| 9— 4—44 | ,, | 14— 4—44 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,650—5-4-44.

# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 8உ [ந. 192

தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CXCII.

## அஸ்ஸாமுக்கோ, இந்தியாவுக்கோ ஆபத்தில்லை.

### இந்திய சேனாதிபதியின் பூரண நம்பிக்கை கொண்ட யுத்த விமர்சனம்.

பர்மாப் போர்முனையில் ஜப்பானியர் இந்தியாவை நெருங்குவதற்கு 2 முக்கியமான வழிகளே இருக்கின்றன. அவையாவன:—(1) தெற்கே அரக்கானிலிருந்து சிட்டகாங், வங்காள மாகாணம் இவற்றை நோக்கி வரும் வழி. (2) மற்றொரு வழி வடக்கில் மிக்க மலைப்பாங்கான பிரதேசங்களின் வழியாக மணிப்பூரையும் அஸ்ஸாம் மாகாணத்தையும் நோக்கி வரும் வழியாகும்.

நான் ஏற்கனவே அரக்கானில் ஜப்பானியரது முயற்சிகள் தோற்றுவிட்ட விவரத்தை வர்ணித்திருக்கிறேன். இப் பகுதியில் நமது துருப்புகள் இன்னும் முன்னேறித் தாக்கி வருகின்றன. எதிரிகள் பிடிவாதமாக எதிர்க்கின்றனர். சிற்சில சமயங்களில் தற்கொலை புரிவதற்கொப்பான முறையில் அவர்களது எதிர்ப்பு இருக்கிறது. இப்படியிருப்பினும் நமது படைகள் மாங்டாவிலிருந்து பூதேடாங்கிற்குப் போகும் மிக்க ராணுவமுக்கியம் வாய்ந்த பக்கவாட்டு ரஸ்தாவிலிருந்து ஜப்பானியப் படைகளைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பின்னே தள்ளிவருகின்றன.

ஜப்பானியர் இந்த முக்கியமான பாதையில் தங்களுக்குள்ள பிடிப்பைப் பாதுகாத்துவர மிக்க கஷ்டப்பட்டுப் போராடி வருகின்றனர். ஆனால், நான் ஏற்கனவே சொன்னதுபோல அவர்கள் மேன்மேலும் தங்களது இடங்களை இழந்து வருகிறார்கள். இதில் அவர்களுக்கு மிகப் பெரிய நஷ்டமேற்பட்டு வருகிறது.

தெற்கேயுள்ள அரக்கான் போர் நிலைமை இதுதான். இது மிக்க திருப்திகரமான நிலைமையாகுமென்று நான் அபிப்பிராயப்படுகிறேன்.

### மணிப்பூர் பிராந்தியம்.

வடக்கேயுள்ள இரண்டாவது வழியில் விரோதிகள் பெரிய மலைகளையும் காடுகளையும் கடந்து இந்தியாவுக்குள் புக முயற்சி செய்கிறார்கள். இங்கு மலைகள் 200 மைல் நீளத்திற்கு மேல் இருக்கின்றன. இம்பாலுக்குத் தெற்கேயுள்ள சின் குன்றுகளிலிருந்து இம்பாலுக்குக் கிழக்கிலும் வடகிழக்கிலுமுள்ள சோம்ரா மலைக் குன்றுப் பிரதேசம் வரையில் ஒரே மலைகளும் காடுகளுமடர்ந்த பிரதேசமிருக்கிறது. இப்பிரதேசத்தில் நமக்குள்ள முக்கிய சப்ளைப் பாதை மணிப்பூர் ரோடிலிருந்து இம்பாலுக்கு கோஹிமா வழியாகச் செல்லும் ரஸ்தாதான்.

இந்த ரஸ்தா முக்கியமான போர் முனையை ஒட்டினாற்போல் அடுத்துச் செல்லுகிறது. இது ராணுவத்தினருக்குள்ள பிரதிகூலமாகும். ஆனால் பிரதேச அமைப்பைப் பொறுத்ததாக இந்த ரஸ்தா இருக்கிறது.

ஏனெனில், இந்தப் பகுதியில் மலைகள் தெற்கு வடக்காகப் போகின்றன. இவற்றின் இடையிலுள்ள பள்ளத்தாக்குகளின் வழியாகத்தான் துருப்புகளும் தளவாடங்களும் பெருவாரியான முறையில் செல்ல முடியும். இதன் காரணமாக எதிரியின் சிறு கோஷ்டிகள் இந்தப் போக்குவரத்துப் பாதையை எளிதில் தாக்கமுடிகிறது.

எதிரி படைகள் மலைகளின் வழியே செல்லும் பல ஒற்றையடிப் பாதைகள் வழியாகவும் ரஸ்தாக்கள் வழியாகவும் வரமுடியும். இவற்றைக் கால்நடையாக வருகின்றவர்கள் கடக்க முடியும். இம்மாதிரியான பாதைகள் பல இம்மலைப் பிரதேசத்திலிருக்கின்றன. இவற்றை எலலாம் பாதுகாக்க முயலுவது நமது பலத்தை வீணாகச் சிதறடிக்கவே உதவும். இதனால் நாம் எல்லாவிடத்திலும் பலஹீனமடைவோம்.

## எதிரியின் முக்கியமான தாக்குதல்.

வடக்கே மணிப்பூரிலிருந்து தெற்கே பர்மா எல்லைப்புறத்திலுள்ள டிடிம்-தாமு என்ற விடத்திற்குப் போகும் இந்தப் போக்குவரத்துப் பாதையை நோக்கியே எதிரிகள் முக்கியமாக முன்னேறி வருகின்றனர். இந்தப் பிரதேசத்தில்தான் தற்பொழுது மிக்க முக்கியமான போர் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

ஜப்பானியர் துரிதமான முடிவுக்காகப் போராடி வருகின்றனர். எதிரிகளுக்குப் பின்னால் நல்ல கட்டுப்பாடுடன் கூடிய போக்குவரத்துப் பாதையில்லை.

விமானங்களிலிருந்து நாம் படைகளை மத்திய பர்மாவில் இறக்கியிருக்கிறோம். இப்படைகள் மத்திய பர்மாவில் ஜப்பானியப் படைகளுக்குப் பின்புறத்திலிருந்து அபாயத்தை விளைவித்து வருகின்றன. இவை ரெயில்வேக்களை அழிக்கின்றன; நதிகளில் போக்கு வரத்து தடைபடும்படிச் செய்கின்றன. இவை விரோதி சப்ளை ஏற்பாடுகளைத் தாக்கி, தாமிருப்பதை எதிரிகள் உணரும்படிச் செய்துவருகின்றன. இதாலியில் போர் நடக்கும் பிரதேசத்துடன் ஒப்பிட்டால், இப்பிரதேசம் மிக்க விஸ்தீரணமானது. நமது படைகள் தமது வேலைகளை விஸ்தரிக்கையில், மணிப்பூரை நோக்கி முன்னேறிவரும் விரோதிகள் தனக்குப் பின்னால் ஏற்படும் அபாயத்தைப் போக்கிக்கொள்வதற்காகப் படைகளை அனுப்பவேண்டிய நிர்ப்பந்தமேற்படும். பர்மாவுக்குள் வேலை செய்யும் நமது துருப்புகளின் நிர்ப்பந்தத்தின் முழுசக்தி உடனே எதிரி படை வரிசைகளில் உணரப்பட மாட்டாது. ஆனால் இது சிறிது சிறிதாக நாளடைவில் தெரியவரும். இந்த நிர்ப்பந்தம் எதிரிகளுக்கு அதிகரித்துக்கொண்டே வரக்கூடும்.

ஜெனரல் ஸ்டில்வெல்லின் தலைமையிலுள்ள சீனர்களும், அமெரிக்கத் துருப்புகளும் ஹுகாங் பள்ளத்தாக்கில் போராடி தெற்கு நோக்கி வருவதால் எதிரியின் போக்குவரத்து லயன்களுக்கும் முன்னணி தளங்களுக்கும் அபாயமேற்படும்.

## எதிரிக்கு ஏராளமான நஷ்டம்.

இந்தப் படைகள் ரொம்ப வெற்றிபெற்றிருக்கின்றன. தென் கோடியில் போலவே இங்கும் ஜப்பானியருக்கு பலத்த நஷ்டம் உண்டாக்கப்பட்டது. அவர்கள் வெகுதூரம் வாபஸாகும்படி நிர்ப்பந்திக்கப்பட்டனர். அவர்கள் இன்னமும் வாபஸாகின்றனர்.

எதிரிக்கு தரப்படும் இந்த நிர்ப்பந்தங்களைத் தவிர நமது விமானப் படைகள், எதிரியின் போக்குவரத்துகளை விடாமல் தாக்கி வருகின்றன. எதிரிகளின் ரயில்வேக்களையும், நதிப் போக்குவரத்துகளையும், கிடங்குகளையும் அவை தாக்கி வருகின்றன. அவர்களுடைய ராணுவத்தை போர்முனையில் வைத்திருப்பதற்கு வேண்டிய எல்லா சாதனங்களையும் நமது விமானப்படை தாக்குகின்றன என்று சொல்லலாம். நமது விமானத் தாக்குதலின் கடுமையும் வேகமும் படிப்படியாக அதிகமாகின்றன. அதனால் எதிரிக்கு ஏற்பட்டிருக்கும் தாமதமும் நஷ்டமும் நமக்கு நன்றாகத் தெரிகின்றன.

எதிரிப் படைகள் சிண்ட்வினைத்தாண்டி இம்பால் மணிப்பூர் நோக்கி முன்னேறுவதற்கு முன்பு, டிடிம், தாமு பிரதேசங்களில் நமது துருப்புகளே நடவடிக்கை எடுத்துவந்தன. பூகோளப் படங்களை நன்றாகப் பார்த்தவர்களுக்கு இந்த இடங்கள் தெரிந்திருக்கலாம். இவ்விரண்டு இடங்களையும் நமது முன்னணி தளமான இம்பாலையும் சேர்க்க நாம் நல்ல ரோடுகளைப் போட்டிருக்கிறோம்.

## ஜப்பானின் நோக்கம்.

பருவ காலத்துக்குள் இம்பால்-கோஹிமா பிரதேசத்தில் தலைமை ஸ்திரமாக்கிக் கொண்டு பிறகு கல்கத்தாவிலிருந்து பிரும்மபுத்ரா வழியாக வடகிழக்கு அஸ்ஸாமுக்குச் செல்லும்



நமது ரயில் நதிப்போக்கு வரத்துகளைத் தாக்குவதேதான் எதிரிகளின் நோக்கமாகத் தெரிகிறது. இந்த லக்ஷியத்தையடைய எதிரிகள் பின்வரும் முறையில் தாக்குதலை ஆரம்பித்தனர்.

முதலில், தெற்கிலிருந்து இம்பாலைப் பிடிக்கக் கிளம்பினார்கள். பிறகு கிழக்கிலிருந்தும், வட கிழக்கிலிருந்தும் அவர்கள் இம்பால் நோக்கி முன்னேறினார்கள். தெற்கில், அதாவது சின் குன்றுகளில் டிடிம் பிரதேசத்தில், நமது முன்னணித் துருப்புகளுக்குப் பின்புறத்தில் சென்று அவர்களுக்குச் சப்ளை வரும் ரோடுகளில் தடைகள் ஏற்படுத்துவதே எதிரிகளின் நோக்கமென்று தெரிகிறது. இந்த வழியைப் பின்பற்றுவதில் அவர்களுக்கு ரொம்ப ஆசை. அரக்கானில் அவர்கள் இந்த முறையைத்தான் கையாண்டார்கள். ஆனால் அங்கு அவர்களுக்குப் பெரிய விபரீதம்தான் ஏற்பட்டது.

இங்கிருந்து அதாவது தெற்கிலிருந்து இம்பாலைத் தாக்க எதிரி உத்தேசித்திருப்பதாகத் தெரியவில்லை. டிடிம் குறிப்பிடத்தக்க கேந்திர ஸ்தானமல்ல. எனவே அதைப் பாதுகாக்க நாம் முயற்சி செய்யவில்லை. சரியான யுத்தமுறைப் பிரகாரம், பின் புறத்திலிருக்கும் ரோடுகளை அடைத்து வடக்கிலிருந்து தங்களை நெருக்க முயற்சிக்கும் எதிரிப்படைதான் தங்களுக்கு சரியான இலக்கு என்று நமது கமாண்டர்கள் முடிவு செய்தனர்.

## ஜப்பானியர்கள் அகப்பட்டுக்கொண்டார்கள்.

ஆகவே டிடிம் பிரதேசத்தில் நமது துருப்புகள் வடதிசையில் சென்றன. இவை கொஞ்ச காலமாக எதிரிகளைத் தாக்கிக்கொண்டும் பின் தள்ளிக்கொண்டும் வருகின்றனர். வடக்கில் இம்பாலிலிருந்து கீழே வந்த நமது துருப்புகள் அவற்றுக்கு உதவி புரிந்தன. இதனால் எதிரிக்கு இரண்டு பக்கங்களிலிருந்து நிர்ப்பந்தம் விளைவிக்கப்படுகிறது. அதாவது தெற்கிலிருந்தும் வடக்கிலிருந்தும்.

இந்த நடவடிக்கைகள் பெரும்பாலும் வெற்றிகரமாக முடிந்திருக்கின்றன. இப்போது இரண்டு படைகளும் சேர்ந்துவிட்டன; எதிரிக்கு பெருத்த சேதம் விளைவிக்கப்பட்டிருக்கிறது.

டிடிம் இம்பாலுக்கிடையே உள்ள ரோட்டில் எதிரியின் சிறு கோஷ்டிகள் இன்னுமிருந்துவருகின்றன. ஆனால் இவற்றை ஒழித்துவிட அதிகக் காலமாகாதுபோல் தோன்றுகிறது. இம்பாலுக்கு தெற்கே உள்ள நிலைமை இதுதான்.

தாமு பிரதேசத்தில் எதிரி முன்னேறவேயில்லை. தாமுவுக்கும் இம்பாலுக்குமிடையே உள்ள ரோட்டில் போக்குவரத்தைத் தடைசெய்ய எதிரி செய்த முயற்சி பலிக்கவில்லை. இந்த ரோட்டைத்தான் சென்ற பல மாதங்களாக நாம் அமைத்துவந்தோம். இது இரண்டாவது ரோட்டாகும். இங்கு எதிரிக்குச் சேதம் அதிகம்.

## இம்பால் இன்னும் நம்வசமே இருக்கிறது.

இம்பால் இன்னும் நம்வசமே இருக்கிறதென்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்; அதை இன்னும் ஜப்பானியர் பிடிக்கவில்லை; அது பலமாகக் காக்கப்பட்டுவருகிறது.

எதிரியின் சிறு கோஷ்டிகள் இம்பால் சமவெளிக்குள் புகுவது எப்பொழுதும் சாத்தியம். ஏனெனில் இச்சுற்றுப்புறத்தில் உள்ள பிரதேசத்தின் இயற்கை அமைப்பு இதைச் சுலபமாக்குகிறது.

பிரதேசத்தைக் கண்ணால் பார்த்தால்தான் அதன் கஷ்டத்தில் நம்பிக்கை பிறக்கும். ஆயினும் மேற்படி சமவெளியில் புகுவது மிகவும் முக்கியமானதாக இராது.

இம்பால் வீழ்ச்சி பிரமாதமான நஷ்டமல்ல என்று அமெரிக்க பத்திரிகை ஒன்று குறிப்பிட்டது தவறாகும். இம்பால் எதிரி கைக்குப் போகவேண்டுமென்று நமது தளகர்த்தர்கள் விரும்பவில்லை.

இம்பாலை நோக்கி முன்னேறுவதுடன் இம்பாலிலிருந்து மணிப்பூர் ரோட்டில் ரோட்டின் வடக்குப்பக்கமாக எதிரிப் படைகள் மேலும் இரண்டு தாக்குதல்களை நடத்தியிருக்கின்றன. இந்த இடம்தான் இப்பகுதியில் நமது முக்கியமான ரயில்வே ஸ்டேஷன். இந்த இரண்டு தாக்குதல்களும் அநேகமாக கொஹிமாவை நோக்கியே நடக்கின்றன.

இப்பகுதியில் எதிரிப் படைகள் சற்று முன்னேறியிருக்கின்றன. கொஹிமாவுக்கு வடக்கே உள்ள பிரதேசம் அத்தனையும் மலைகள் அடர்ந்தது; மிகவும் கரடுமுரடானது கஷ்டமானது, கோவேறு கழுதைகள் போன்ற மூட்டை தூக்கிச் செல்லக்கூடிய மிருகங்களையோ அல்லது போர்ட்டர்களையோதான் போக்குவரத்துக்கு உபயோகித்துக்கொள்ள வேண்டும். கொஹிமாவை நமது படைகள் பலமாகக் காத்துவருகின்றன.

## விமான ஆதிக்கம்.

இந்தப் போராட்டங்களிலெல்லாம் எதிரியைவிட நமக்கு விமானபலம் அதிகமாகவே இருந்துவந்திருக்கிறது. இரண்டு தினங்களுக்கு முன் விமானப்போரில் எதிரிக்குப் பெருத்த தோல்வியுண்டுபண்ணினோம். எதிரி விமானம் 30 போல் நாசமாக்கப்பட்டன. பர்மாவிலுள்ள மொத்த எதிரி விமான பலத்தைப் பார்க்குங்கால் இது அவனுக்குப் பெருத்த நஷ்டமாகும். ஏற்கனவே கூறுவதுபோல் ஹுகொங் பள்ளத்தாக்கில் ஜெனரல் ஸ்டில்வெல் படைகளும் சீனப்படைகளும் பிரிட்டிஷ் இந்தியப் படை உதவிகொண்டு முன்னேறி வருகின்றன. மிட்கியானவைச் சூழ்ந்துகொண்டுள்ள எதிரிக்கு இவர்கள் ஆபத்து பண்ணிவருகின்றனர்.

இத்தகைய போராட்டங்களில் முக்கியமாக இத்தகைய பிரதேசத்தில் ஆரம்பத்தில் எதிரி உட்புகுவது சகஜம். எதிரியின் திட்டமென்னவென்று அறிந்து தங்கள் படைகளை நமது கமாண்டர்கள் அணிவகுக்கும் வரை எதிரியை எதிர்த்துத் தடுப்பதென்பது சாத்தியமில்லை. சட்டெனப் பலன் கிட்டி வெற்றி யுண்டுபண்ணுவதையே இந்த உட்புகுதல் நம்பியிருக்கிறது.

எதிரியின் திட்டம் போதியளவு தெளிவாகப் புரியும் நிலைமைக்கு நாம் வந்து விட்டோம் இதைக்கொண்டு நமது படைகளை இந்த ஸ்தலங்களைப் பாதுகாக்க மாத்திரமின்றி எதிரியை விரட்டவும் முன்னேறிச் செல்லலாம். மிகவும் சிக்கலான இந்த ஸ்தலங்களில் நமது படைகளுக்குத் தக்க பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. இதில் போர்புரிய தீவிரமாகத் தேர்ச்சியளிக்கப் பட்டிருக்கின்றனர். அவர்கள் கட்டுப்பாடும், போரிடும் உத்வேகமும் மிகவும் சிறந்து விளங்குகின்றன.

## வெற்றியில் பூரண நம்பிக்கை.

இப்போது நடக்கும் சண்டையின் முடிவைப்பற்றி எனக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை என்பதை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஜப்பானியர் தாக்கவாரம்பித்தவுடனே ஒவ்வொரு தாக்குதலையும் நாம் தடுத்துவிட முடியாது. எதிரி உட்புகுவதனல் தாத்காலிகமாக நமது போக்குவரத்துகள் தடைப்படலாம். தாத்காலிகமாக இந்த நிலைமையை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. இருந்தாலும் அஸ்ஸாமின் பாதுகாப்புக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை. இந்தியப் பாதுகாப்புப் பற்றிச் சந்தேகமேயில்லை. முன்னேறுவதற்கான நமது போக்கு வரத்து வசதி நன்கு பாதுகாக்கப்படுமென்பது எனது நிச்சயம். முடிவில் எதிரி தனது பழைய இடத்திற்கும் அதற்கு அப்பாலும் துரத்தப்படுவான் என்பதும் நிச்சயம்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 27—3—44 (திங்கட்கிழமை). | நீஸ்டர் நதியின் அடிபாகத்திலுள்ள காமெண்ட்ஸ் போடொல்ஸ்கியை ருஷ்யர்கள் ஆக்கிரமித்தார்கள். |
| | நேசதேசத்தார்கள் அட்மிரால்டி தீவுக்கூட்டத்தைச் சேர்ந்த ஆமோ, நாரோவாத் தீவுகளை ஆக்கிரமித்தார்கள். |
| 28—3—44 (செவ்வாய்க்கிழமை). | ருஷ்யர்கள் கருங்கடல் துறைமுகமான நிகோலோயேவைப் பிடித்தனர். |
| | சீனர்கள் வடக்கு பர்மாவிலுள்ள ஹுகான் ளொயாங்கைப் பிடித்தார்கள். |
| 29—3—44 (புதன்கிழமை). | ருஷ்யர்கள் பிரத் நதியைத் தாண்டினார்கள். இதாலியில் காஸினோ பிரதேசத்தில் இரண்டு முனைகளிலிருந்து நேசதேசப் படைகள் பின்வாங்கின. |



### (A)-முக்கியமான சம்பவங்கள்—தொடர்ச்சி.

| | |
|---|---|
| 30—3—44 (வியாழக்கிழமை). | ருஷ்யர்கள் பூகோவினவின் தலைநகரமான செர்னுடியைப் பிடித்தார்கள். |
| | மிஸ்டர் சர்ச்சிலிடம் பூர்ண நம்பிக்கையிருக்கிறதென்று காமன்ஸ் சபையில் அபரிமிதமான வோட்டுகள் வித்தியாசத்துடன் தீர்மானம் நிறைவேறியது. 425 மெம்பர்கள் அதன் சார்பாகவும், 23 பேர்கள் விரோதமாகவும் வோட்டு செய்தார்கள். |
| 31—3—44 (வெள்ளிக்கிழமை). | ருஷ்யர்கள் கருங்கடல் துறைமுகமான ஒகாகோவைப் பிடித்தார்கள். |
| | அமெரிக்க கடற்படை ஜப்பானின் உள் நாட்டு அரணான பாலாத்தீவைத் தாக்கிற்று. |
| | நேசதேசத்தார்கள் அட்மிரால்டி தீவுக்கூட்டத்தில் பிடியாலுத் தீவைப் பிடித்தனர். |
| | வடக்கு சகாலினிலுள்ள எண்ணெய், நிலக்கரி முதலியவற்றை ருஷ்யாவுக்குத் தருவதாக ஜப்பான் ஒப்புக்கொண்டது. |
| 2—4—44 (ஞாயிற்றுக்கிழமை). | செம்படை ருமேனியாவுக்குள் புகுந்துவிட்டது. |
| 3—4—44. (திங்கட்கிழமை). | ருஷ்யர்கள் ஜாஸி—டொரோகாய் இருப்புப் பாதையைத் துண்டித்தார்கள். |
| | நேசதேசத்தார்கள் ஹங்கேரியின் தலைநகரமான புடாபெஸ்டின்பேரில் குண்டுகளைப் போட்டார்கள். |
| | நேசதேசத்தார்கள் மார்ஷல்ஸ் தீவுகளின் மற்றும் 11 பவளக்குன்றுகளைப் பிடித்தார்கள். |

### (B)-செய்திச் சுருக்கம்.

**ருஷ்யா.**—பிரத் நதியைத் தாண்டியபின் மார்ஷல் சுகாவ், கார்பேதியன் கணவாய்களுக்கு வந்துவிட்டார். இதிலிருந்து இரண்டு மார்க்கங்களில் முன்னேறக்கூடும். செர்ரட் குறுகலான வழியாக ருமேனியாவுக்கும், டான்யூப் நதியின் சமவெளிகளுக்கும் செல்லுவது ஒன்று. கார்பேதியன் கணவாய்கள் வழியாக ஸெக்கோஸ்லாவாகியாவுக்குச் செல்லுவது மற்றொன்று. கார்பேதியன் மலைகளில் யுத்தம் துவங்கிவிட்டது. ருஷ்யப் படைகள் ருமேனியாவுக்குள் புகுந்துவிட்டன. ஒடெஸ்ஸாவுக்காகவும் யுத்தம் துவங்கிவிட்டது. கருங்கடற்கரையிலிருக்கும் இத்துறைமுகத்தை நோக்கி ருஷ்யர்கள் வடக்கிலிருந்தும், வடகிழக்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும் மூன்று பகுதிகளாக முன்னேறுகிறார்கள். துண்டிக்கப்பட்ட ஜெனரல் மான்ஸ்டீனின் படையில் தெற்குப் பகுதியிலுள்ள படைகளின் தலைவரான வான்கிளீஸ்ட், வடமேற்கு மூலையில் ஒடெஸ்ஸாவிலிருக்கும் துருப்புகளும் நீஸ்டர் நதிக்குக் கிழக்கில் பாக்கியிருக்கும் படைகளும் தப்பி ஓடுவதற்கு மார்க்கத்தை ஏற்படுத்த உக்ரமாகப் போர் செய்துவருகிறார்.

போலந்துக்குள் ஒடெஸ்ஸா—லுவாவ் இருப்புப் பாதையிலிருக்கும் ஜெர்மனியின் முக்கிய அரணான டார்னேபோல் பிடிபட்டது.

**இதாலி.**—காஸினோப் பகுதியில் நேசதேசத்தார்கள் தற்காப்புப்போரை மேற்கொண்டுவிட்டார்கள். மொனஸ்டரி குன்றின் கிழக்குச் சரிவுகளையும், ஹாங்க்மான்ஸ் குன்றையும் ஜெர்மானியர்கள் திரும்பிப் பிடித்துவிட்டார்கள். நேசதேசத்தார்கள் மாரோன் மலையை ஆக்கிரமித்தனர்.

**விமானப்போர்.**—இந்த வாரத்தில் பிரன்ஸ்விக்கும், நூரன்பர்க்கும், ஹானோவரும், ஸ்டேயரும்(வியன்னா) தாக்கப்பட்டன. நூரன்பர்க்கத்தைத் தாக்கியபொழுது 1,000 விமானங்களில் 94 விமானங்கள் நேசதேசத்தாருக்கு நஷ்டமாகின. ஒரே நடவடிக்கையில் இவ்வளவு விமான நஷ்டம் இதுவரையில் ஏற்படவில்லை. இந்த நஷ்டம் விமானப் போரின் கடுமையை வெளிப்படுத்துகிறது. முதன் முதலாகப் பதுங்கிக்கிடந்த ஜெர்மன் விமானப் படை போர் துவக்கி ஏராளமான விமானங்களை இழந்தது.

**பர்மா.**—மணிப்பூர் ஸமஸ்தானத்தின் தலைநகரமான இம்பாலை நோக்கி பல வழிகளில் முன்னேறுவதென்று ஜப்பானியர்கள் திட்டம் போட்டிருக்கிறார்கள். வியாழக்கிழமையன்று நாகா மலைகளிலிருந்து இறங்கி, இம்பாலுக்கு வடக்கில் 30 மைல் தூரத்தில் இம்பால்—கோஹிமா இருப்புப்பாதையைத் துண்டித்துவிட்டார்கள். இம்பாலுக்கு வடக்கில் உக்ரூல் பிரதேசத்திலிருந்து ஜப்பானியர்கள் மறைந்துவருகிறார்கள். நாகா மலைகளில் ஜப்பானியப் படைகள் குவிந்துவருகின்றன. டாமு ரஸ்தா வழியாக முன்னேறவும் அவர்கள் முயற்சி செய்துவருகிறார்கள். சீனர்கள் ஷாடோஸுப்பிலிருந்து மொகாங் பள்ளத்தாக்கிலுள்ள லாபானுக்கு முன்னேறிவருகிறார்கள். நேசதேச கம்மாண்டோ விமானப்படைகள் மாண்டலே—மிக்டினா இருப்புப் பாதையில் 12 மைல்கள் பிரதேசத்தையும், காதாவுக்கும் போகும் ரஸ்தாவையும் பிடித்துக்கொண்டனர்.

வங்காளக்குடாக்கடலில் ஜப்பானிய நடமாட்டம் அதிகரித்து வருகிறது.

**பஸிபிக் போர்.**—டிரக் தீவுக்கு மேற்கில் 1,300 மைல்கள் தூரத்திலும், பிலிப்பைன் தீவிலிருந்து 700 மைல்கள் தூரத்திலும் உள்ள பாலா தீவுகள் தாக்கப்பட்டன. காரொலைன்ஸ் தீவுக்கூட்டத்தைச் சேர்ந்த பாகின் தீவு தாக்கப்பட்டது. அட்மிரால்டி தீவுகளிலுள்ள பிடியாலுத் தீவு ஆக்கிரமிக்கப்பட்டது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**25—3—44.** (சனிக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

இரவு.—(1 நேசதேச விமானம் காணப்படவில்லை).

ரயில்வே இலக்குகள்.—பிரான்ஸிலுள்ள ஆல்நோயி (Aulnoye).

இலக்குகள்.—லியான்ஸ் (Lyons) பிரதேசம் பெர்லின் (Berlin), மேற்கு ஜெர்மனியில் சில இடங்கள்.

**இதாலி (Italy).**

(ஒரு நேசதேச விமானம் காணப்படவில்லை).

கப்பற்கட்டுந்துறைகள்.—லெக்ஹார்ன் (Leghorn).

ரயில் பாலம்.—ரிக்னானோ (Rignano) கடற்கரை.

பீரங்கி ஸ்தாபனங்கள்.—காஸினோ (Cassino) பிரதேசம்.

**ருஷ்யா (Russia).**

(18 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய வியாபாரக்கப்பல்.—வீவாக் (Wewak).

ஸ்தாபனங்கள்.—டாகுவா (Dagua) கெய்ரிரு (Kairiru), காரோலைன்ஸ் தீவிலுள்ள பொனபி (Ponape).

ஜப்பானியர் ஆக்கிரமித்த தீவுகள்.—மார்ஷல்ஸ் (Marshalls).

**பர்மா (Burma).**

ஸப்ளை தளங்கள்.—புரோம் (Prome), மாங்டா (Maungdaw).

இலக்குகள்.—சின் மலைகள் (Chin Hills) நாகா மலைகள் (Naga Hills), சிண்ட்வின் (Chindwin), காபா (Kabaw).

**26—3—44.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—(6 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

ராணுவ ஸ்தாபனங்கள்.—பாஸ் டி கலே (Pas De Calais), செர்பர்க் (Cherbourg).

துறைமுக ஸ்தாபனங்கள்.—ஹாலந்திலுள்ள இஜ்முதீன் (Ijmuiden).

ரயில் இலக்குகள்.—வடக்கு பிரான்ஸ் (Northern France).

விமான நிலையங்கள்.—பாரீஸுக்கு (Paris) அருகில்.

இரவு.—(9 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

ஜெர்மனியிலுள்ள எஸ்ஸெனிலுள்ள க்ருப்ஸ் (Krupps) தொழிற்சாலை.

இலக்குகள்.—ஜெர்மனியிலுள்ள ஹனோவர் (Hanover) பெல்ஜியத்திலுள்ள கோர்ட்ரேய் (Courtrai).

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.



**இதாலி (Italy).**

போக்குவரத்துகள் எதிரி சைனியங்கள்.—காஸினோ (Cassino), ஆன்ஸியோ (Anzio).

**ருஷ்யா (Russia).**

(18 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

துறைமுகம், கடற்கரையிலுள்ள கப்பல்கள்.—நியூ கினியிலுள்ள வீவாக் (Wewak).

கப்பல்கள், துறைமுக ஸ்தாபனங்கள்.—தென் சீனாவிலுள்ள ஹெய்னன் (Hainan).

**பர்மா (Burma).**

துருப்பு முகாம்கள், இதர இலக்குகள்.—டிடிம்-இம்பால் (Diddim-Imphal) ரஸ்தா.

எதிரி சைனியங்கள் போக்குவரத்துகள்.—அரக்கான் (Arakan), மாயூ (Mayu), கலடான் (Kaladan) பிரதேசங்கள்.

இலக்குகள்.—சின மலைகள் (Chin Hills), சிண்ட்வின் (Chindwin).

பாலங்கள்.—பாங்ஸெய்க் (Hpaungzeik) மணிப்பூர் (Manipur) நதி.

**27—3—44.** (திங்கட்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—(38 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன; 21 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

விமான நிலையங்கள்.—தென்மேற்கு மத்திய பிரான்ஸ் (S. W. France).

ராணுவ இலக்குகள்.—பாஸ் டி கலே (Pas De Calais), வடக்கு பிரான்ஸ் (Northern France).

இரவு.—இலக்குகள்—ரூர் (Ruhr).

**இதாலி (Italy).**

(2 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன; 3 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

ரயில்வே பாலங்கள்.—போகிபான்ஸி (Poggibonsi), மார்ஸியானோ (Marscianno), ஸெட்டி பாக்னி (Sette Bagni).

விமான நிலையங்கள்.—ரிமினி (Rimini), போர்லி (Forli).

எதிரிக் கப்பல்கள்.—டால்மேஷியன் (Dalmatian) கடற்கரை.

இதாலியின் மேல்கரைவேவுபார்த்தல், யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியர் ஆக்கிரமித்த தீவுகள்.—மார்ஷல்ஸ் (Marshalls).

விமான நிலையங்கள்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul), வீவாக் (Wewak).

**பர்மா (Burma).**

(3 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

விமானச்சண்டைகள்.—வடக்கு பிரான்ஸ் (N. France)—(27 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

ரயில் இலக்குகள்.—காலின் (Kawlin).

துவியல் பிரதேசங்கள்.—கமெய்ங் (Kamaing).

எதிரி சைனியங்கள், போக்குவரத்துகள்.—அரக்கான் (Arakan), கலடான் (Kaladan), மாயூ (Mayu).

துருப்புகள், எதிரி சைனியங்கள், முகாம்கள், போக்குவரவு சாதனங்கள்.—சின் மலைகள் (Chin Hills), சிண்ட்வின் (Chindwin), வடமேற்கு பர்மா (N. W. Bnrma).

எண்ணெய்க் துவியல்கள்.—மத்திய பர்மா (Central Burma).

**28—3—44.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—(30 அச்சு விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன; இன்னும் 20 விமானங்கள் நாசமாக்கப்பட்டன; 5 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

பயிற்சி தளங்கள்.—சார்ட்ரெஸ் (Chártres), டிஜோன் (Dijone).

நடவடிக்கை தளம்.—பிரான்ஸிலுள்ள செட்டாடன் (Chateaudun).

விமான நிலயம்.—சாம்பாக்னி (Champagne).

இரவு.—சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

**இதாலி (Italy).**

ரயில்வேக்கள்.—வெரோனா (Verona), மெஸ்ட்ரி (Mestre).

ரயில்வே தளங்கள்.—மிலான் (Milan).

ரயில்வே பாலம்.—பெருகியா (Perugia).

ரயில் தளங்கள்.—மாண்டி பெஸ்காலி (Monte Pescali)

பாலம்.—மாக்னோ (Magno).

பாலம்.—செர்டால்டோ (Certaldo).

தொழிற்சாலை.—டிவோலி ('Tivoli).

பீரங்கி ஸ்தாபனங்கள், மோட்டார் போக்குவரத்துகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

பாலங்கள்.—கோஸெட்டா (Goseta).

துறைமுக் ஸ்தாபனங்கள்.—காஸ்டிக்லியோன் செல்லோ (Castiglioncello).

**ருஷ்யா (Russia).**

(24 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

வியாபாரக் கப்பல்கள்.—கெய்மானு (Kaimana).
விமான நிலயங்கள்.—காவியெங் (Kavieng).
விமான நிலயம், ஸ்தாபனங்கள்.—ரபால் (Rabaul).
பாலம்.—வீவாக் (Wewak).
ராணுவ நிலயங்கள்.—வின்யென் (Vinyen).

பர்மா (Burma).

ராணுவ இலக்குகள்.—சின் மலைகள் (Chin Hills), சின்ட்வின் (Chindwin), வட மேற்கு பர்மா (N. W. Burma).
ஸ்டோர்கள், தளங்கள்.—வடக்கு பர்மா (N. Burma).
ஜப்பானிய தலைமை ஸ்தாபனம்.—மானியின் (Monnyin).

**29—3—44.** (புதன்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

(39 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன; 18 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
பகல்.—ரயில்வே ஸ்தலம்—பிரனஸ்விக் (Brunswick).
இலக்குகள்.-பாஸ் டி கலே (Pas De Calais), வடக்கு பிரான்ஸில் சில இடங்கள்.
இரவு.—ரயில்வே இலக்குகள்—வெயரிஸ் (Vaires).
விமான இஞ்ஜின் தொழிற்சாலைகள்.—பிரான்ஸிலுள்ள லியான்ஸ் (Lyons).
இலக்குகள்.—மேற்கு ஜெர்மனி, கீல் (Kiel).
ரயில்வே தளங்கள்.—சொபையா (Sofia).

இதாலி (Italy).

(23 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).
ரயில்வே ஸ்தலங்கள்.-மிலான் (Milan), டூரின் (Turin), பொல்ஸானோ (Bolzano).
ஜப்பான் ஸப்ளைக் குவியல்கள்.—ஆல்பானோ (Albano) எரிக்கருகில்.
இலக்குகள்.—ரோமிற்கு (Rome) தெற்கு.
விமானச் சண்டைகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

ருஷ்யா (Russia).

(74 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ரயில் தளங்கள்.—நான்கிங (Nanking).
கடற்படை விமான தளங்கள்.—டிரக் (Truk).
விமான தளம்.—ரபால்.
ஜப்பானிய சைனியங்கள்.-பொகெய்ன்வில்லி தீவு.
பாகின் (Pakin) தீவு.

பர்மா (Burma).

ஸப்ளை பிரதேசங்கள்.—விக்டோரியா (Victoria) ஏரி.
ரயில் இலக்குகள்.—ஷ்வேபோ (Shwebo), முனிவா (Monywa).
படகுகள், இதர இலக்குகள்.—கலடான் (Kaladan), அரக்கான் (Arakan), சின் மலைகள் (Chin Hills), சிண்ட்வின் (Chindwin), வடமேற்கு பர்மா (N. W. Burma).
பீரங்கி ஸ்தாபனங்கள்.—காமெய்ங் (Kamaing) வடகிழக்கு பாகம்.

**30—3—44.** (வியாழக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—ஒரு தகவலும் இல்லை.
இரவு.-(94 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
தொழிற்சாலை ஸ்தலங்கள்.—நூரெம்பர்க் (Nuremburg).
இலக்குகள்.—மேற்கு ஜெர்மனி (Western Germany).
சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.
ரயில் ஸ்தலங்கள்.—பல்கேரியாவின் தலைநகரான சொபையா (Sofia).

இதாலி (Italy).

(21 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன; 12 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
விமான நிலயம்.—இமோட்ஸ்கி (Imotski).
மோட்டார் ரயில் இலக்குகள்.—ஆன்ஸியோ (Anzio) பிரதேசம்.
கப்பல் இலக்குகள்.—ஆன்ஸியோ பிரதேசம்.
கப்பல்கள், கப்பற்கட்டுந்துறைகள் ஸ்தாபனங்கள்.—லெக்ஹார்ன் (Leghorn).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

காரோலைன் ஸியிலுள்ள பாலா (Palau) தீவுகள்.
விமான நிலயம்.—வோலேய் (Woleai).
விமான நிலயம்.—பாபோ (Babo).
விமான நிலயம்.—காவியெங் (Kavieng), நமடானை (Namatanai).
ஸ்தாபனங்கள்.—ரபால் (Rabaul).
இலக்குகள்.—ஹாலன்டியா (Hollandia) வீவாக் (Wewak).
கடற்கரை இலக்குகள்.—பொகெய்ன்வில்லி (Bougainville).

பர்மா (Burma).

மோட்டார் போக்குவரத்துகள், எதிரி சைனியங்கள், போக்குவரத்துகள்.—அரக்கான் (Arakan), கலடான் (Kaladan), சின் மலைகள் (Chin Hills), சிண்ட்வின் (Chindwin).
பீரங்கி ஸ்தாபனங்கள்.-கமெய்ங் (Kamaing).
படகுகள்.—தென் பர்மா.
விமான நிலயம்.—அனிஸாகன் (Anisakan).



**31—3—44.** (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—(1 நேசதேச விமானம் காணப்படவில்லை).
வேவு பார்த்தல்—வடக்கு பிரான்ஸ்.
இரவு.—இலக்குகள்—மேற்கு ஜெர்மனி.

இதாலி (Italy).

பாலங்கள்.—ரோஸெடோ (Roseto), பெடாஸோ (Pedaso).
கப்பல்கள்.—டால்மேஷியின் கடற்கரை.
வேவு பார்த்தல்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.
போக்குவரத்து ஸாதனங்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

ருஷ்யா (Russia).

(86 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய கடற்படை தளம்.—காரோலைன் ஸியிலுள்ள டிரக் (Truk).
விமான நிலயம்.—டிமோரிலுள்ள பென்போ (Pnfoe).
தற்காப்பு பிரதேசங்கள்.-நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul).
இலக்குகள்.—பொகெய்ன்வில்லி (Bougainville).

பர்மா (Burma).

இலக்குகள்.—பின்லெபு (Pinlebu).
அரக்கான் (Arakan), மாயூ (Mayu), கலடான் (Kaladan), சின் மலைகள் (Chin Hills), சிண்ட்வின் (Chindwin).

**1—4—44.** (சனிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—தொழிற்சாலை இலக்குகள் போக்குவரத்துகள்—தென் மேற்கு ஜெர்மனி (South West Germany).
விமான நிலயங்கள்.—பிரெமென் (Bremen), ஹனோவர் (Hanover).
இரவு.—இலக்குகள்—ஹனோவர் (Hanover), கிரெபெல்டு (Krefeld), ஆச்சென் (Aachen)
சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

இதாலி (Italy), பால்கன் நாடுகள் (Balkans).

ரயில் தளங்கள்.—யூகோஸ்லாவியாவிலுள்ள பிராட் (Brod).
மோஸ்டார் (Mostar).
பிஹாக் (Bihac).
இலக்குகள்.—வரேஸா (Varesa).
மாம்பைன்டு (Mombined).
ரயில் ஸ்தாபனங்கள்.—போகிபான்ஸி (Poggibonsi), லெக்ஹார்ன் (Leghorn), ஆர்வியெட்டோ (Orvieto), வெல்டாரோ (Veldaro).
இலக்குகள்.—லெக்ஹார்ன் (Leghorn).
குவியல்கள்.—மாரிகோன் (Moricone).
கப்பல்கள்.—டால்மேஷியன் (Dalmatian).

ருஷ்யா ((Russia).

(40 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய நிலயங்கள்.—ஹாலண்டியா (Hollandia). (17 ஜப்பானிய விமானங்கள் நாசமாக்கப்பட்டன).
விமான நிலயம்.—மோம் (Moem), டிரங்க் (Trunk). (11 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

பர்மா (Burma).

காமேண்டைன் ரயில்வே ஸ்டேஷன்.—ரங்கூன் (Rangoon).
படகுகள், ஸ்டோர்கள், குவியல்கள், பீரங்கிகள்.—அரக்கான் (Arakan), வடமேற்கு பர்மா (N. W. Burma).
போக்குவரத்துகள்.—தென் பர்மா, மத்திய பர்மா (Central Burma).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**26—3—44.** (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**27—3—44.** (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

(8 அச்சு விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன). தென்மேற்கு வேல்ஸ்.

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**28—3—44.** (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**29—3—44.** (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

ஒரு தகவலும் இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

விமானச் சண்டைகள்.-அரக்கான் (Arakan).

**30—3—44.** (வியாழக்கிழமை).

**பிரிடன் (Britain).**

சில இடங்கள்.—கிழக்கு தென்கிழக்கு இங்கிலாந்து (S. and S. E. England).
லண்டன் (London) பிரதேசம்.

**ருஷ்யா (Russia),**

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**31—3—44.** (வெள்ளிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (FarEast).**

ஒரு தகவலும் இல்லை.

**1—4—44.** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**ருஷ்யா (Russia).**

ஒரு தகவலும் இல்லை.
நேசதேச சைனியங்கள்.—இம்பால் (Imphal) பிரதேசம்.

**2—4—44.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia),**

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

**வின்கேட்.** வின்கேட் போன்ற யுத்தவீரர்களைப்போற்றுவோம். பிரிடனின் மகத்தான கொரில்லாப் படைத்தலைவரும் காட்டுப் போரில் சிறந்தவருமான வின்கேட் இறந்துவிட்டார். யுத்த ராக்ஷஸனுக்கு அவர் இரையாகி விட்டார். அவர் சிறந்த பிரிடிஷ் தேசாபிமானி. அவர் கீர்த்திவாய்ந்த போர் வீரர். பர்மியர்களுக்கு நண்பர். பர்மாவின் பகோடாக்களை ரக்ஷிக்கவந்தவர் என்று அவர்கள் வின்கேட்டைப் பாராட்டுகிறார்கள். சிறிது காலத்திற்குள் அவர்களையும் அவர்களுக்குப் புனிதமான ஸ்தாபனங்களையும் ரக்ஷிக்கவந்தவரென்று அவர் கீர்த்தி பெற்றுவிட்டார்.

மார்ச்சு மாதம் 24-ம் தேதியன்று ஜப்பானியப்படை வரிசைகளுக்குபின் பர்மா எல்லைச் சரகத்திலுள்ள காடுகளைத்தாண்டி துருப்புகளைப் பார்வையிடச்சென்றபொழுது அகஸ்மாத்தாக புயல்காற்றினால் அகப்பட்டு அவருடைய விமானம் நொருங்கியதன் காரணமாக அவர் மாண்டார்.

வின்கேட் இறந்துவிட்டபோதிலும் அவருக்கு அபாரமான புகழ் கிடைத்துவிட்டது. அவருக்கு வயது 39 ஆகிறது. படிப்பாளர், வேதாந்தி, சூக்ஷ்ம புத்தியுள்ளவர், தீரச்செய்கையுள்ளவர். இந்த யுத்தத்தில் அரேபியாவில் சென்ற லாரென்ஸைப்போல் கீர்த்திபெற்றவர். அவர் ப்யூரிடன் மதத்தைச் சேர்ந்தவர். எங்கு சென்றாலும் அவரிடம் வேதபுஸ்தகம் கையிலிருக்கும். வேதபுஸ்த அபிப்பிராயங்களைத்தான் அவருடைய நண்பர்களுக்குப் போதிப்பார். கிரேக்க புராணங்களிலிருந்தும் மேற்கொள்கைகளைச் சொல்லுவார். வேதாந்தம், கலை, நூல்கள், சங்கீதம், வர்ணம், ராஜீயம், பொருளாதாரம் ஆகிய எல்லா விஷயங்களையும் பற்றிப் பேசத் திறமையுள்ளவர்.

போர்புரிவதுதான் இவருடைய வேலை என்று சொல்லுவதற்கில்லை. ஆகிலும் போர் புரிவது அவருடைய வாழ்க்கையின் முக்கிய நோக்கமாகும். அவர் ராணுவ மேதாவி. திட்டம் நிறுவுவதிலும் அவைகளைப் பயின்று பார்ப்பதிலும் அவர் தீரர்.

வின்கேட்ஸ் ஸர்க்கஸ் என்ற ஒரு புதிய யுத்த தந்திரத்தை கற்பித்த புகழும் அவருடையது. இந்த முறைப்படி எதிரியின் படைவரிசைகளுக்குப்பின் கிளைடர்கள் மூலம் துருப்புகளை இறக்கிக் காடுகளில் போர் துவக்கவேண்டும்.

இது பரிக்ஷார்த்தமாக நடைபெற்றதில்லை. இதேவிதமான நடவடிக்கை இதற்குமுன் வெற்றிகரமாகக் கையாளப்பட்டது. ஏற்கனவே அபிஸீனியாவிலிருந்து இதாலியர்களைத் துரத்தியடிக்க அவர் கொரில்லாப் படைகளைத் தயாரித்திருந்தார். இந்த படைகளின் உதவிகொண்டு பாலஸ்தீனத்தில் பயமுறுத்தும் கட்சியாரை எதிர்த்துப் போராடினார்.

அதிருஷ்டவசமாக அவர் மிஸ்டர் சர்ச்சிலின்அன்புக்குப் பாத்திரமானார். அவருக்குள்ள சூக்ஷ்மபுத்தியுடன் மிஸ்டர் சர்ச்சில் வின்கேட்டின் புத்திசாலித்தனத்தை அறிந்து அவரை க்விபெக் மகாநாட்டிற்கு அழைத்துச் சென்றார். அங்கு ஜெனரல் மார்ஷலின் அன்பையும் அவர் சம்பாதித்தார். பிறகு பர்மாவிலுள்ள ஜப்பானியர்களை எதிர்க்க அவர் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார்.

இந்தியாவுக்கு வந்தபின் அவர் இருவகைப்பட்ட போரை நடத்தவேண்டியிருந்தது. சந்தேகிகள், புரோபாகிகள், சேனையில் பழைய முறைகளை அனுஷ்டிக்கிறவர்கள், முதலியவர்களை அவர் எதிர்க்கவேண்டியதாயிற்று. மற்றொரு எதிரி ஜப்பான். இருவருடனும் ஒரே



சமயத்தில் போர்தொடுத்து சிறந்த வெற்றியைப் பெற்றார். தூஷணைசெய்ய சமயத்தை எதிர்பார்த்து நின்ற சந்தேகிகள் ஆச்சரியமடைந்தார்கள். ஜப்பானியர்களின் சாமார்த்தியமும் முறியடிக்கப்பட்டது.

பர்மாவின் மத்தியில் ஜப்பானிய ஸ்தானங்களுக்குப்பின் விமானங்கள் மூலமாக அவர் படைகளை இறக்கி, காடுகளில் ஒளிந்து கொண்டு எதிரியின் இருப்புப் பாதைகளையும், ரஸ்தாக்களையும், தளவாடக் குவியல்களையும், அவர்கள் அழித்தார்களென்றும், அநேக ஜப்பானியர்களைக் கொன்றுவிட்டு, உபயோகமுள்ள தகவல்களுடன் திரும்பி வந்தார்களென்றும் எல்லோரும் அறிவார்கள்.

இந்த யுத்தத்தில் இந்த நடவடிக்கை மயிர்க் கூச்சலிடும்படியாகவும் அபாயத்துடன் கூடியதாகவுமிருந்தது. அதன் விளைவுகள் அபாரமானவை. இந்த நடவடிக்கையைப் பின்பற்றி பலமான பிரிடிஷ், கூர்க்கா படை எதிரியின் பிரதேசத்தில் 200 மைல்களுக்கப்பாலிலுள்ள இண்டாவில் வைக்கப்பட்டுவிட்டது. 200 மைல்கள் நீளமுள்ள ஒரு தற்காப்பு ஸ்தலமும் எதிரியின் படைவரிசைகளுக்குப் பின்னாலுள்ள விமான நிலயமும் நமது வசமாகிவிட்டன.

பிரிகேடியராகயிருந்து மேஜர் ஜெனரல் பதவிக்குச் சென்றார். D. S. O. பட்டம் பெற்றார். சரித்திரத்திலும் கீர்த்தி பெற்றுவிட்டார். அவர் இறந்த போதிலும் அவருடைய புதிய முறை நிலைபெற்றிருக்கிறது. கபடமான எதிரிகளைத் தாக்கி வெற்றி பெறச்சென்ற அவருடைய படைகளுக்கு அவருடைய ஊக்கம் சக்தியை அளிக்கும். அவருடைய கீர்த்தியை இந்தியாவிலுள்ள நாம் பாராட்டவேண்டும். ஒரு வகையில் அவர்தான் நம்முடைய ரக்ஷகர். அவருடைய யுத்த தந்திரங்களைக் கையாண்டு வருவதால் நம்முடைய எல்லைச் சரகதிலிருந்து நாம் நம்முடைய எதிரியைத் துரத்தியடிக்க சௌகரிய மேற்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி

**போர் வீரனின் துயரம்.** வின்கெட்டின் துருப்புகளுக்கு லூயி மவுண்டுபேடன் பிரபு ஒரு செய்தி அனுப்பியிருக்கிறார். "வெற்றி பெறும் தருவாயில் வின்கேட் உயிர் துறந்தார். நேசதேசத்தார்கள் யுத்தத்தில் மிகவும் தீரமும் சுறுசுறுப்புமுள்ள ஒரு முக்கியஸ்தரை இழந்துவிட்டார்கள். படைக்கு லாயக்குள்ள சிறந்த ஊக்கமுள்ள தலைவரை அவர்கள் இழந்துவிட்டார்கள். என்னுடைய நண்பனையும் ஆதரவையும் நானிழந்துவிட்டேன்.

அவன் ஒரு தீபத்தை ஏற்றியிருக்கிறான். நாம் அதைக் கடைப்பிடித்து அதை முன் கடத்திச் செலலவேண்டும். ஜப்பானியர் வசமுள்ள தேசத்தின் மத்திக்கு நீங்கள் தீரத்துடனும் துணிவுகரமாகச் சென்றிருக்கும் நடைவடிக்லகயைப் பின்பற்றி பர்மாவைத் திருப்பிப் பிடிப்பதும், ஜப்பானின் இறுதி தோல்வியும் ஏற்படும். அவன் எங்களை வெகுமானித்தான். அவனுடைய லக்ஷியங்களை பின்பற்றுவீர்களென்று நான் நம்புகிறேன்.

வி வி வி வி வி

**பூர்ண நம்பிக்கை வாக்களிப்பு.** மிஸ்டர் சர்ச்சில் சிறந்த ராஜதந்திரியுடன் புத்திகூர்மையும் சாதுர்யமும் உள்ள ராஜ்ய நிபுணர். அவர் உத்சாகம் ஊட்டுவார், தலைமை வகிப்பார், கட்டளையிடுவார். ஒரு அல்பமான சம்பவத்தைப் பயன்படுத்தி அவர் தேசத்தின் ஒன்றுபட்ட ஆதரவை சம்பாதித்துவிட்டார். இந்த வாரத்தில் அவருக்கும் அவருடைய கோஷ்டிக்கும் கிடைத்த நம்பிக்கை வாக்களிப்பு அவருக்கு ஏற்பட்ட வெற்றியைக் குறிப்பிடுவதுடன் ஷின்வேல் கோஷ்டியாருக்கு அவமானம் அளிக்கக்கூடியதாகவுமிருக்கிறது. வெற்றி சம்பாதிப்பதில் தேசம் ஒன்றுபட்டிருக்கிறதென்பதையும் ருஜுப்பிக்கிறது. யுத்த முயற்சியில் பின் போக்குக்கட்சி, தொழிலாளர் கட்சியென்ற பாகுபாடு கிடையாதென்றும், ஒரே முகமாக தேசம் பூராவும் நிர்வாகத்தையும் பிரதம மந்திரியையும் ஆதரிக்கிறதென்றும் வெளியாகிவிட்டது.

இந்தியாவுக்கும் இது ஒரு படிப்பினையை கற்பிக்கிறது. எதிரி அதன் வாசற்படியில் வந்துவிட்டான். அப்பொழுதும் இந்தியாவிலுள்ளவர்கள் அபிப்பிராய பேதங்களை வெளியிட்டு வருகிறார்கள். இந்த சமயத்தில் ஒரு சிறிய கதையை வெளியிடலாமென்று நினைக்கிறேன். இந்திய நிலைமை பின்வருமாறு இருக்கிறது. ஒருவன் கிணற்றில் ஒரு நாணல் தட்டையைப் பிடித்துக்கொண்டு தொங்குகிறான். காலடியில் ஒரு சர்ப்பம் சீறுகிறது. உயர புலி கர்ஜித்து வருகிறது. அப்பொழுதும் கூட கிணற்றின் சுவற்றிலிருக்கும் தேன்அடையிலிருந்து சொட்டிக் கொண்டிருக்கும் தேனை அவன் நாவினால் உட்கொண்டு சந்தோஷப்படுகிறான்.

இந்த சிந்தனைகள் ஒரு புறமிருக்க பிரதம மந்திரியிடம் பூர்ண நம்பிக்கை இருக்கிறதென்று ஜனங்கள் வாக்களித்ததற்கு ஆடவ, ஸ்திரீ ஆசிரியர்களுக்குச் சமமான சம்பளம் வழங்கப்படவேண்டுமென்ற மசோதா ஒரு ஓட்டின் அதிகத்தினால் தோற்றுப் போனதுதான் காரணம். அரசாங்கத்தார் இந்தப் பிரச்னையின் குணப்பாகங்களைப் பற்றிக் கவனம் செலுத்தவில்லை

முடிவுக்குவர அவர்கள் காலம் வேண்டுமென்று பிரேரேபித்தார்கள். ஏனென்றால் அச்சமயத்தில் விசேஷ கமிஷன் ஒன்று ஆசிரியர்களின் ஊதியத்தைப் பற்றி சர்ச்சை செய்து வந்தது. ஆகிலும் ஷின்வேலைச் சேர்ந்த கோஷ்டியார்கள் பொருமையை இழந்தார்கள்.

ராஜீயக் கட்சிகளின் பிடிவாதத்தை அறிந்த பிரதம மந்திரி ஊக்கமான நடவடிக்கையை மேற்கொண்டார். எதிரியை முறியடிக்க வேண்டிய அவசியமிருக்கும் பொழுது வீண்காலம் கடத்துவதை அவர் சகிக்கமாட்டார். இந்த சமயத்தில் உள்நாட்டு விஷயமாகயிருந்தாலும் சரி, ராணுவ அவசியமாகயிருந்தாலும் சரி, ஜனங்கள் ஏகமனதுடனும் உறுதியுடனுமிருக்க வேண்டும். ஆக்ஷேபிக்கத்தக்க திருத்தப்பாட்டைத் தள்ளிவிடாவிட்டால் அவரும் அவருடைய நிர்வாகமும் ராஜினுமா செய்து விடுவதாக அவர் பார்லிமெண்டு சபையில் வெளியிட்டார்.

அதனின்றும் அபாரமான பலன் ஏற்பட்டது. மசோதாவைக் கொண்டுவந்த மிஸஸ் காஸாலட் கேயிரும் சம்பளத்தை சுமப்படுத்தவேண்டுமென்று பிரேரேபித்த தொழிலாளர் கட்சியும் மசோதாவுக்கு விரோதமாக வோட்டு செய்தார்கள்.

தேசம் பூராவும் தன்னை ஆதரிக்கிறதென்று கண்டு மிஸ்ட்டர் சர்ச்சிலுக்கு ஆனந்தம் உண்டாயிற்று. பூர்ண நம்பிக்கையை வெளிப்படுத்தும் வோட்டுகள் முடிவடைந்தவுடன் சர்ச்சில் புன்னகை கொண்டார். அரசாங்கக் கட்சியிலுள்ளவர்களெல்லோரும் உரக்க சிரித்தார்கள்.

வி வி வி வி வி

**ஸகாலின்.** திடீரென்று ருஷ்யாவுக்கு வடக்கு ஸகாலின் பிரதேசங்களையும் ஸகாலின் சமுத்திரத்திலுள்ள மீன் பிடிக்கும் பாத்தியதைகளையும் மற்றொரு ஐந்து வருடங்களுக்குத் தருவதாக ஜப்பான் ஒப்புக்கொண்டது. இதன் மூலம் ஜப்பானுக்கு நெருக்கடியான இச்சமயத்தில் ஸகாலினுள்ள நிலக்கரி, எண்ணெய், மீன் முதலிய உணவுப் பொருள்களையும், தாதுப் பொருள்களையும் அது இழந்துவிட்டது. இந்த நடவடிக்கைக்கு அவசியமென்ன? 1941-ம் வருஷத்தில் செய்த வாக்குறுதியை இவ்வளவு நாள் ஒதுக்கி வைத்துவிட்டு இப்பொழுது சலுகைகளைக் காட்ட வேண்டிய அவசியமென்ன? இதற்குக் காரணங்கள் நிதர்சனமானவை.

1941-ம் வருஷத்தில் ஏற்பட்ட தாமதத்திற்கு ஜெர்மன் வெற்றிகள் காரணமென்பது போல், இவ்வருஷத்தில் ருஷ்யாவுக்குக் கிடைத்துவரும் வெற்றிகள்தான் ஜப்பானின் திடீர் நடவடிக்கைகளுக்குக் காரணம். ஜெர்மானியர்கள் முன்னேறியபொழுது துரோக புத்தியுள்ள ஜப்பான் வாக்குறுதிகளை ஒத்தி வைத்ததும் ஸைபீரியாவின் எல்லைச் சரகத்தில் துருப்புகளைக் குவித்ததும் சகஜம்தான். இப்பொழுது ருஷ்யா முன்னேறிவரும்பொழுது ஜப்பான் ருஷ்யாவுடன் நட்பு கொண்டதாக வெளிப்படுத்துவதும் சுலபமான நடவடிக்கைதான்.

இந்த சம்பவத்தினின்றும் மற்றொரு தோற்றமுண்டாகிறது. இந்த யுத்தம் உலகமளாவியதென்று நிருபணமாகிவிட்டது. நீஸ்டர் நதியில் ஜுகாவ் அடித்த அடிகள் பஸிபிக் ஸமுத்திரத்தில் ஜப்பானுக்கு பீதியை உண்டாக்கிவிட்டது. அவனுடைய கூட்டாளி நழுவுகிறானென்ற தோற்றம் ஹிட்லருக்கு முதன்முதலாக இப்பொழுது உண்டாகிவிட்டது. கொள்ளைக் கூட்டத்தாரின் பெரும் பங்காளிக் கட்சியிலிருந்து நழுவும்பொழுது சிறிய நாடுகளும் விலகிக்கொள்ளவேண்டுமென்ற சூசகமேற்பட்டுவிட்டது. ஆகிலும் ஜெர்மன் ரகஸியப் போலீஸின் பிடிப்பிலிருந்து தப்ப முடியவில்லை. இந்த சம்பவத்தைப்பற்றி ஒரு ருஷ்யப் பத்திரிகைத் தெளிவாகக் கட்டுரை எழுதியிருக்கிறது.

"ஹிட்லரின் பைத்தியம் பிடித்த திட்டங்களில் ஜப்பானுக்கு இருந்த நம்பிக்கையை செம்படையின் வெற்றிகளும் பிரிடிஷ், அமெரிக்க ராணுவ நடவடிக்கைகளும் அழித்துவிட்டன.

"ஜெர்மன் ராணுவம் தோற்கடிக்க முடியாததென்ற தோற்றம் மறைந்துவிட்டது. ஜெர்மனியின் தோல்வியும் அழிவும் நிச்சயமென்று ஏற்பட்டுவிட்டது. ருஷ்ய சமஷ்டியை துண்டாக்க ஹிட்லர் செய்த முயற்சி வீணுகிவிட்டது.

" சர்வதேச அமைப்பில் ருஷ்யாவின் ஸ்தாபனம் யுத்தத்தின் பயனுல் வலுவடைந்துவிட்டது. ஹிட்லரை எதிர்த்து நிற்கும் மூன்று வல்லரசுகளின் கோஷ்டியின் ஐக்கியமும் பலமடைந்துவிட்டது.

" நிகழ்ச்சிகளின் போக்கு பலமாகயிருக்கிறது.

" நிகழ்ச்சிகளின் மூலம் கிடைத்த வெற்றிகளிலிருந்து ருஷ்ய ஜப்பானிய சம்பந்தங்கள் சௌகரியமாக நடந்தேறின. வடக்கு ஸகாலினிலுள்ள சலுகைகளை ஜப்பான் இழந்துவிட்டது."



**யுத்தப்போக்கு.** ஜெனரல் மான்ஸ்டீனின் படைகள் இரண்டு துண்டாக்கப்பட்டன. வினிஸ்டா, சாமெரின்கா, மோகிலேவ் நமது வசமானபின் இரு சேனைகளுக்குமுள்ள தொடர்பு அற்றுப்போய்விட்டது. இப்பொழுது மான்ஸ்டீன் வடக்குப் பாதியிலுள்ள சேனைகளை நடத்துகிறான். பலஹீனமாக உள்ள தெற்குப் பகுதிக்கு வான்கிளீஸ்ட் தலைமை வகிக்கிறான்.

பிரத் நதியை அடைய ருஷ்ய ஜெனரல்களான ஜுகாவும், கோனியேவும் போட்ட பந்தயத்தில் ஜுகாவ் வெற்றிபெற்றான். கோனியேவ் ஜுகாவிருக்குமிடத்திலிருந்து 10 மைல்களுக்குள் வந்துவிட்டான். கார்பேதியன் கணவாய்களின் நாச்சந்தியான கெல்சியாவிலுள்ள பிரெஸிமிஸலை நோக்கி ஜுகாவ் முன்னேறுகிறான். செர்னுடி அவன் கைவசமாகிவிட்டது. ஜுகாவ் இரண்டு பகுதிகளில் முன்னேறலாம். செர்ராட் குறுகலான வழியாக ருமேனியாவுக்கும் டான்யூபின் நதி சமவெளிகளுக்கும் செல்லலாம் அல்லது கார்பேதியன் மலைகளைத் தாண்டி ஸெக்கோஸ்லாவியாவிற்கும் போகலாம்.

பீரங்கிகளையும், விமானப் படையையும் உதவிகொண்டு ஜெர்மானியர்களை அயல் நாடுகளில் எதிர்த்துப்போராடவேண்டுமென்று ருஷ்யர்கள் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். இதுவரையில் அவர்கள் சொந்த நாட்டிலேயே போர் புரிந்ததால் ஆயுதங்களை அவர்கள் அபூர்வமாகத்தான் உபயோகித்துவந்தார்கள்.

இதுவரையில் ஜெர்மனி பிடித்திருந்த ருஷ்ய பிரதேசத்தைக் காப்பற்ற ஜெர்மனி முயன்றுவந்தது. இப்பொழுது ஜெர்மனிக்கு அனுப்பப்படும் உணவுப் பொருள்கள், எண்ணெய் முதலியவற்றை ஸப்ளை செய்யும் முக்கியமான பிரதேசத்தை ஜெர்மனி காப்பாற்ற வேண்டும். ருமேனியாவின் உதவிகொண்டு ஜெர்மனி கார்பேதியன் மலைகளிலிருந்து கருங்கடல் வரையிலுமுள்ள பிரதேசத்தைக் காப்பாற்றவேண்டும். இந்தக் கோட்டில் ஜெர்மனி பிரத், சொர்ட், டான்யூப் நதிகளின் கரைகளில் ஊன்றியிருக்கலாம். அதன் விலாப்பக்கத்தை ரக்ஷிக்க பல்கேரியாவின் உதவி வேண்டும்.

வி வி வி வி வி

**இதாலி.** நேசதேசத்தார்கள் காஸினோவில் தற்காப்பு யுத்தத்தை மேற்கொண்டுவிட்டார்கள். ஜெர்மானியர்கள் மொனுஸ்டரி குன்றையும், ஹாங்ஸ்மான்ஸ் குன்றையும் திரும்பிப் பிடித்தனர். நேசதேசத்தார்கள் மெர்ரோனு மலைகளைப் பிடித்தனர்.

காஸினோ போரைப்பற்றி அமெரிக்க யுத்த காரியதரிசி மிஸ்ட்டர் ஹென்றி ஸ்டிம்ஸன் பின்வருமாறு வியாக்கியானம் எழுதுகிறார். "காஸினோவைத்தாக்க நேசதேசத்தார் செய்த முயற்சி நின்றுவிட்டது. இறுதி கட்டடத்தின் போக்கு வெளிப்படவில்லை. காஸினோ முக்கியமான போர்முனையில்லை. இந்த முனையில் ஏற்படும் எவ்வித பிற்போக்கும் யுத்தப் போக்கைப் பாதிக்கப்போவதில்லை."

வி வி வி வி வி

**பர்மா போர்முனை.** மாட்சி தங்கிய மதராஸ் மாகாண கவர்னர் ஞாபகப்படுத்தியிருப்பதுபோல் இங்கு நேசதேசத்தாருக்கு வெற்றிகரமான போர் நடைபெறுகிறது. மணிப்பூருக்குள் ஜப்பானியர் பிரவேசித்ததென்பது அற்பமான நடவடிக்கை. இது முக்கியத்துவமில்லாதது. ராஜீய லக்ஷியங்களுக்காகப் போலித்தனமாக இந்நடவடிக்கை ஏற்பட்டது. பொய் வதந்திகளைப் பரவச்செய்கிறவர்களுக்குப் பண்டம் வழங்கப்பட்டது. ஆகிலும் பர்மாவைத் திரும்பிப் பிடிக்க நேசதேசத்தார்கள் செய்துவரும் முயற்சி பலமடைந்துவருகிறது. பஸிபிக்கில் ஜப்பானை முறியடிக்கும் மகத்தான போர் பஸிபிக் பூராவிலும் பரவிவருகிறது. ஜப்பானின் உள்நாட்டு அரணை நடவடிக்கைகள் சமீபித்துவிட்டன. ஜப்பானின் கடற்படை பலஹீனமடைந்துவிட்டது. அதன் விமானங்கள் ஆகாயத்தில் சஞ்சரிக்கக்கூடவில்லை. அதன் கடற்படை போருக்கு அழைக்கப்படுகிறது. சமீப காலத்தில் வங்காளவிரிகுடாவில் ஜப்பானிய நடவடிக்கை அதிகரித்துவிட்டபோதிலும் பிரிடிஷ் கடற்படை எந்த நிலைமையையும் சமாளிக்கத் தயாராக இருக்கிறது.

வி வி வி வி வி

**பஸிபிக் போர் விமர்சனம்.** பஸிபிக் யுத்தத்தைப்பற்றி அமெரிக்க யுத்த இலாகா பின்கண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கிறது.

" தெற்கு, தென்மேற்கு பஸிபிக்கில் முற்றுகைக்குள்ளான தீவுகளில் 1 லக்ஷம் ஜப்பானியர்கள் அபாயத்துக்குட்பட்டிருக்கிறார்கள். பீரங்கி பிரயோகத்தினுலும், பசிப்பிணியாலும், வியாதியாலும் அவர்களின் உயிருக்கு ஹானி ஏற்படும். மார்ஷல்ஸ், வடக்கு ஸாலமன்ஸ் தீவுகள்,

பிஸ்மார்க்கு கடல் பிராந்தியம் இவற்றிலுள்ள ஜப்பானியர்கள் கடல் மூலமாகவும், விமான மூலமாகவும் முற்றுகைக்குள்பட்டிருக்கிறார்கள். மேலும் அவைகள் நேர்முகமாகத் தாக்கப் படுகின்றன. இந்த பிராந்தியங்களிலிருக்கும் ஜப்பானியர்களுக்கு சமீப வாரங்களில் நீர்மூழ்கிகள் மூலமாகவும் படகுகள் மூலமாகவும் வந்து சேரும் சொற்பமான சாமான் ஸப்ளை களைத் தவிர வேறு பலமான உதவி வந்து சேரவில்லை. ஸப்ளைகளைக் கொண்டுவரும் 10 கப்பல்களில் ஒன்பது அழிக்கப்படுகின்றன. இரவில் முற்றுகையைத் தாண்டிச் செல்லும் படகுகளில் 50 சத விகிதம் மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றன.. பாக்கியிருக்கும் ஜப்பானியர்கள் தீரமாக நின்று தங்களிடமிருக்கும் யுத்த தளவாடங்கள், தீர்ந்துவிடும் வரையில் போர் புரிய வேண்டும். அல்லது அவர்கள் காடுகளுக்குள் தப்பி ஓடி பசிப்பிணியாலும், வியாதியாலும் பீடிக்கப்பட்டு உயிர் துறக்கவேண்டும். காட்டுப்போரில் ஜப்பானியர்களை அமெரிக்க காலாட் படைகள் தோற்கடிக்கின்றன. ஒன்றுக்கு 30 வீத அளவில் அவர்கள் ஜப்பானியர்களையும் கொலை செய்து வருகிறார்கள்.

வி வி வி வி வி

**செஞ்சிலுவை.**

செஞ்சிலுவை, ஸெயிண்ட் ஜானின் ஒன்றுபட்ட யுத்த இயக்கத்துக்காக 30 லக்ஷம் ரூபாயைத் திரட்ட மதராஸ் ஒரு இயக்கத்தைத் துவக்கியிருக்கிறது. இவ்விரண்டு சங்கங்களின் நோக்கங்கள் எல்லோரும் அறிந்தவை. ஸெயிண்ட் ஜான் சங்கம் தொழிலாளர்களுக்கு முதல் உதவியையும் தாதிகளின் ஒத்தாசையையும் வழங்குகிறது. செஞ்சிலுவைச் சங்கம் நோய் வாய்ப்பட்டவர்களுக்கும், காயம் பட்டவர்களுக்கும் ஆறுதலளித்து வருகிறது. யுத்தக் கைதிகளுக்கு சௌகரியங்களை அனுப்புவதும் இச் சங்கங்களின் அலுவல்களில் ஒன்றாகும்.

இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் செஞ்சிலுவை சங்கத்தின் செலவை பிரிடன் பொருத்துக் கொள்ளுகிறது. இந்தியா தன்னுடைய செலவைப் பொருத்துக் கொள்ள வேண்டியது நியாயமானது.

இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம் அநேக தேசங்களில் வேலை செய்து வருகிறது. நமது படைகள் மத்திய தரைக்கடலில், போர் புரிந்து வருகிறார்கள். அவர்களில் பெர்சியாவிலும், இராக்கிலும், ஏடனிலும், ஸிலோனிலும், தெற்கு ஆசியா கமாண்டின் வட்டாரத்துக்குட்பட்ட பிரதேசங்களிலும் நிலைபெற்றிருக்கிறார்கள். இதற்கு ஏராளமான பொருள் வேண்டும். இவ்வருஷத்தில் 300 லக்ஷம் ரூபாய் செலவாகும். மதராஸ் மாகாணம் 30 லக்ஷம் ரூபாய் களைக் கொடுத்தால்போதும்.

இந்தப் பணத்தை பூராவும் அரசாங்கத்தார் செலவழிக்க முடியாது. அரசாங்கத்தார் இது விஷயத்தில் மெதுவாகத்தான் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவார்கள். உதவி அதி சீக்கிரத்தில் அனுப்பப்படவேண்டும். ஆஸ்பத்திரியிலுள்ள நோய் வாய்ப்பட்டவர்களும், காயம் பட்டவர்களும் பொழுது போக்குவதற்காகப் புத்தகங்களும், பிங்பாங் பந்துக்களும், பேஸ்பந்தும் தேவைப்படும். கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் நமது ஸ்நேகிதர்களும், நமது குமாரர்களும், சகோதரர்களுமாகயிருக்கும் பொழுது இந்த அற்பமான தொகைகளுக்கு அரசாங்கத்தார் பொருளுதவவேண்டுமென்று சொல்லுவது பொருத்தமாகாது. இந்தியா தர்ம சிந்தனை உள்ள நாடு. மானிடவர்க்கத்தின் சிரமத்தைப் போக்கக்கூடிய இந்த நல்ல இயக்கத்துக்கு ஜனங்கள் தாராளமாக அனுவாதம் செய்யவேண்டும்.

வி வி வி வி வி

**காடெட்டுகளும் அவர்களின் யோக்யதையும்.**

அரசாங்க சபையில் இந்திய காடெட்டுகளை சேனையில் சேர்த்துக்கொள்ளும் விஷயமாக புகார் செய்யப்பட்டபொழுது, சேனைப்படைகளின் கம்பீர்யத்தை அவர் பாராட்டினாலும் தகுதியான ஆட்கள் முன்வரவில்லையென்று வருந்துவதாகவும் சேனாதிபதி விவரித்தார். இந்தியர் என்பதினால் ஒரு ஆபீஸருக்கு உயர்தர அதிகாரத்தை வழங்கவேண்டுமென்ற ஒரு கொள்கையை அவர் ஒரு பொழுதும் ஒப்புக்கொள்ள மாட்டார். ஐரோப்பியராகயிருந்தாலும் இந்தியராகயிருந்தாலும் யோக்யதையும் திறமையும் தான் மதிக்கப்படவேண்டும். ஏனென்றால் அவர்களிடம் அநேகர்களின் உயிர்கள் ஒப்படைக் கப்பட்டிருக்கின்றன. இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கத்தார் ஆட்களைத் தேர்ந்தெடுப்பதில் புதிய முறைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். விமானப் படையின் தரைப்படைகளுக்கும், விமானம் ஓட்டுவதற்கும் பரீக்ஷைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. உபயோகமற்றவர்களை நீக்கிவிடுவதற்கும் திறமையுள்ளவர்களுக்கு பயிற்சி அளிப்பதில் சிக்கனம் ஏற்படுவதற்கும் இந்த முறைகள் பயன்படும்.



# கார்பேதியன் மலை அரணின் தற்காப்பு.

## ஹங்கேரியில் ஜெர்மனி கையாண்ட நடவடிக்கைகளின் லக்ஷியம்.

(மான்செஸ்டர் கார்டியன்).

ஹங்கேரியில் ராணுவ நடவடிக்கைகளை ஜெர்மனி மேற்கொண்டதற்குக் காரணங்கள் ஸ்பஷ்டமானவை. ஹங்கேரி உறுதியுடனில்லாவிடில் கார்பேதியன் மலை அரணைக் காப்பாற்றுவது பத்திரமானதல்லவென்று ஜெர்மனி நினைத்தது. ஜெர்மானியர்கள் ஹங்கேரியை ஆக்கிரமணம் செய்திருக்கிறதை ஹங்கேரியர்கள் எவ்விதமாக ஒப்புக்கொள்ளுகிறார்களென்பதுதான் முக்கியமான பிரச்னை. 1,50,000 ஜெர்மன் துருப்புகள் ஹங்கேரியை ஆக்கிரமித்திருக்கின்றனவென்று சொல்லுவது மிகையாகச் சொல்லப்படுகிறதென்ற லண்டனிலுள்ள ராணுவ வட்டாரங்கள் அபிப்பிராயப்படுகின்றன. ஜெர்மனியின் ஆக்கிரமணத்தை ஹங்கேரி எதிர்த்துப் போராடுகிறதென்று கிளம்பும் பேச்சுகள் ஊர்ஜிதமாகவில்லை. அதன் நிர்வாகமும் ராணுவ அதிகாரிகளும் எதிர்த்துப் போர் செய்யவேண்டுமென்ற எண்ணம் கொண்டிருந்தார்களாவென்றும் நிச்சயமாகத் தெரியவில்லை.

யுத்தமானது ஹங்கேரியைப் பலமாகப் பாதிக்கவில்லை. பல்கேரியாவைத் தவிர மற்ற எந்த ஜெர்மன் ஆக்கிரமிப்பு நாட்டையும்விட குறைவாகத்தான் ஜெர்மன் படைகளுக்கு ஆஸ்திரியா துருப்புகளை அனுப்பியிருக்கிறது. கிழக்குப் போர்முனையில் ருஷ்யாவை எதிர்த்து ஏராளமான ஹங்கேரியப் படைகள் போர்புரிந்து வருகின்றனவென்று பிரமாதமாக பிரசாரம் செய்யப்பட்டது. அவைகள் இரண்டு அல்லது மூன்று டிவிஷன்களுக்கு மேற்போயிருக்காதென்று தோன்றுகிறது. ஆகையால் ஹங்கேரியின் ராணுவ வலிமை குன்றிவிடவில்லை. ஆகிலும் ஹங்கேரியப்படைகள் நவீன ராணுவ ஆயுதங்களைப் பெற்றிருக்கின்றனவாவென்பது சந்தேகாஸ்பதமானது.

ஜெர்மனியுடன் ஒத்துழைத்ததன்பயனாக ருமேனியா ஹங்கேரியைவிட அதிக நஷ்டம் அடைந்துவிட்டது. ஆகையினால்தான் ஜெர்மன் குறவளைப்பிடிப்பு ஹங்கேரிபேரிலும், ருமேனியாபேரிலும், வலுவடைந்துவிட்டது. அதிகத் துருப்புகளை இழந்துவிடாத ஹங்கேரி டிரான்ஸில்வேனியாவைப்பிடித்துக்கொள்ள இப்பொழுது முயற்சிக்குமென்று ருமேனியா பயப்படுகிறது. ஏற்கனவே படை பலமழிந்த ருமேனியா, ருஷ்யர்கள் ஊடுருவிச்சென்றுவிடாமல் கிழக்கு எல்லைச்சரகங்களைக் காப்பாற்றவேண்டிய சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஹங்கேரியாவை ஜெர்மனி ஆக்கிரமித்ததன்மூலம் டிரான்ஸில்வேனியாவில் ருமேனியா வசமிருக்கும் பாகம் ஜெர்மன் ரக்ஷணைக்குட்பட்டு பத்திரமாகயிருக்குமென்று ஜெர்மனி உறுதியளிக்கக்கூடும். யுத்தத்திலிருந்து வெளியேற ஹங்கேரியும், ருமேனியாவும் இப்பொழுது பிரியப்படலாம். ஆனால் இருநாடுகளிலுமுள்ள நிர்வாகங்கள் திடசித்தத்துடனிருக்கவில்லை. ஜெர்மானியர்கள் ஊக்கத்துடனும் வலிமையுடனுமிருந்து வருகிறார்கள். மேநாட்டு நேசதேசத்தார்களின் ஜனநாயக ராஜீயக்கொள்கையை அடிப்படையாகக்கொண்டு ஹங்கேரிய நிர்வாகமும் ருமேனிய யதேச்சாதிகாரமும் ஜெர்மனியை எதிர்த்து போராடப் போவதில்லை. இரண்டு நிர்வாகங்களும் ருஷ்யாவை எல்லா முறையிலும் எதிர்த்துப் போராடுகின்றன. கொள்கைகளில் அவர்கள் கோமிண்டர்னை எதிர்த்துப் போராடும் கக்ஷியைச் சேர்ந்தவர்கள். ராணுவ முறையில் போல்ஷீவிஸத்தை எதிர்த்துப் போராட அந்நாடுகள் பேருதவிசெய்து வருகின்றன. ஐரோப்பிய யுத்தம் போல்ஷீவிஸத்தை அழிக்கத்தான் நடைபெறுகிறதென்று அவர்கள் தங்களுடைய பிரஜைகளுக்கு பிரசாரம் செய்துவருகிறார்கள்.

### ஹங்கேரியர்களின் ஆலஸ்யம்.

இவ்விதமாக ஹங்கேரியர்களும் ருமேனியர்களும், காலம் கிரமித்து யுத்தத்திலிருந்து வெளியேறும் மார்க்கங்களை கற்பித்து வருகிறபோதிலும், அவர்கள் எதிரியை எதிர்த்து நிற்கவில்லையென்பதைத் தவிர வேறு தைரியமான நடவடிக்கையைக் கையாண்டார்கள் என்று சொல்லுவதற்கில்லை. இந்த நடவடிக்கை போதுமானதல்ல. ஹங்கேரியா சமயத்தை நழுவவிட்டுவிட்டது. ருமேனியாவுக்கும் அந்த கதிதான் ஏற்படும்.

கார்பேதியன் மலை அரணைக்காப்பாற்ற ஜெர்மானியர்கள் படைகளை அமைத்துவிட்டார் கள். ருமேனியர்களுக்கும் ஹங்கேரியர்களுக்குமிடையே போரை மூட்டிவிட அவர்கள் முயற்சி செய்துவிடக்கூடும். அவ்விதம் செய்யக்கூடுமானால் அவர்கள் ஹங்கேரியின் போக்குவரவு மார்க்கங்களைக் கைப்பற்றிவிடலாம். ஹங்கேரிய சேனையை உபயோகப்படுத்திக் கொள்ளலாம். ஹங்கேரியாவும், ருமேனியாவும் ஒத்துழைக்காமல் சும்மாவிருந்துவிட் டாலும் தென் கிழக்கு ஐரோப்பாவில் ஜெர்மனியின் முன்னேற்ற வேகம் தடைபடாது.

# ஹங்கேரி ஆக்கிரமிப்புச் சரித்திரம்.

ஜெர்மன் அரசாங்க கொடுங்கோன்மையான ஆட்சியும், தன் ஆதிக்கத்தை மிகவும் கடுமையாய்ச் செய்தலையும் ஹங்கேரி மக்கள் அனுபவிக்கின்றனர். பால் நாடுகளை உதவாமல் தன் அருகிலுள்ள நாடுகளை நசுக்கச் சமயம் பார்த்திருந்தார்கள். ஹங்கேரியர்கள் ஜெர்மனி, ஸெக்கோஸ்லாவாகியாவை ஆக்கிரமிக்க ஸுடெட் டென்லாந்தைப்பற்றி தன் வார்சு கொண்டாடுகையில் ஹங்கேரியும், ஸ்லோவாகியா, கார்பாதோ ரிதுவேனியா இவைகளின் மேல் கண் வைத்தது. 1938-ம் வருஷம் நவம்பர் 2-ம் தேதி நடந்த வியன்னா உடன்படிக்கைப்படி, ஜெர்மானியர், இதாலிய பிரதிநிதிகள் புது எல்லையை அளவெடுத்துக்கொண்டபொழுது ஹங்கேரியின் இஷ்டமும் பூர்த்தி செய்யப்பட்டது. அதன் விஸ்வாசமாய் ஹங்கேரி 1939-ம் வருஷம் பிப்ரவரியில் ஆண்டிகாண்டன் உடன்படிக்கையில் கையெழுத்திட்டது.

ஒரு உதவி கிடைத்தவுடன் ஹங்கேரி மேலும் தனக்கு வேண்டியவைகளைக் கேட்டது. 1939-ம் வருஷம் மார்ச்சு 14-ம் தேதி, பிரேக்கை கைப்பற்றுவதற்கு முதல் நாள் ஜெர்மானியர்கள் பிரேக்கை 'விட்டுவிடும்படி ஒரு பத்திரம் விடுத்தனர். மார்ச்சு 18-ம் தேதி கார்பாதோ ரிதுவேனியாவின் இதர பாகங்களை ஆக்கிரமித்துக்கொண்டு போலந்துடன் பொது எல்லை ஏற்படுத்திக்கொண்டது. இம்முறையில் ஜெர்மனி ஸ்லோவாகியாவின் பெரும் பாகங்களையும், கார்பாதோ ரிதுவேனியாவின் செழிப்பான பாகங்களையும் ஆக்கிரமித்துக்கொண்டது. ஸெக்கோஸ்லாவியாவிற்கும், ருமேனியாவிற்கும் இடையேயுள்ள ரயில்வேப் போக்குவரத்துகளையும் பிடித்துக்கொண்டு கோஸிஸிற்கு மேற்கிலுள்ள இரும்புச் சுரங்கங்களில் பாதிக்கு மேலும் கைக்கொண்டது. இதனை ஸ்திரப்படுத்தவும் நேர்முகமாக அந்த சாமான்களையும் ஜெர்மனிக்கு ஏற்றிச் சென்றது.

ஜெர்மனியின் அடுத்த ஆக்கிரமிப்புக்கென எடுத்துக்கொண்ட பகுதி ருமேனியா. ருமேனியர்கள் சமாதானத்துக்கு வர முயன்றனர். ஆனால் ஹங்கேரியர்கள் அந்த சமாதானத்தை உதறிவிட்டு, அவர்களின் நாட்டு எல்லையைப்பற்றித் தகராறில் இருக்கும்போது ஜெர்மானியர்களுக்கு ஹங்கேரியின் வழியாய் படைகளைச் செலுத்தி ருமேனியாவின் பகுதிகளையும் எண்ணெய்க் கிணறுகளுக்கு அருகிலுள்ள பகுதிகளையும் ஆக்கிரமிக்க முடிந்தது. இவ்விதமாய் 1940-ம் வருஷம் ஆகஸ்டு 30-ம் தேதி இரண்டாவது வியன்னா உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டு, ஹங்கேரிக்கு டிரான்ஸில்வேனியாவின் சில பகுதிகள் விடப்பட்டன. இம்முறை ஹங்கேரி மூவர் உடன்படிக்கையில் 1940-ம் வருஷம் நவம்பரில் கையெழுத்திட்டது.

1941-ம் வருஷம் ஏப்ரல் மாதம் ஹங்கேரி யுத்தத்தில் ஈடுபட்டது. ஜெர்மானியப் படைகள் தன் நாட்டின் வழியாய்ச் செல்ல அனுமதித்தன்னியில் தன் படைகளையும் யூகோஸ்லாவியாவிற்கு எதிரியாய் அனுப்பியது. யூகோஸ்லாவியாவிலிருந்து சில பகுதிகளான பராஞ்சா, பாகா, பிரெகுர்முர்ஜோ, மெர்முர்ஜி ஆகிய இப்பகுதிகளை திருட்டுத்தனமாய் கடந்தது. தவிர யூகோஸ்லாவியாவுடன் கடும் போரிடவேண்டியிருந்தது.

ருஷ்யாவின்மேல் தாக்குதல் ஆரம்பித்தது. ஜெர்மனி ஹங்கேரியிடம் பல உதவிகளை கோரிற்று. பொருளாதார உதவியன்னியிலும் ஹங்கேரியிடமிருந்து கிழக்கு அரங்கங்களில் போர்புரிய ராணுவ உதவியும் வேண்டுமென்று கோரிற்று. தனக்கு அதிக நாட்டின் ஆசையால் ஏற்பட்டுள்ள எதிரிகளுக்கு முன்பாக ஜெர்மனியின் உதவி முக்கியமெனக் கருதியும், தன் நாட்டில் ஒரு படை இருக்கவேண்டுமென விரும்பியும், ஜெர்மனியின் கோரிக்கையை ஹங்கேரி மறுக்கவில்லை. ருஷ்ய அரங்கத்திற்கு 9 பகுதிகளை ஹங்கேரி அனுப்பிற்று. ஸெர்பியா, ரோயெடியா இந்த இடங்களின் பங்கின் காலத்தில் உபயோகத்தில் மனிதர்களைவிட இது குறைந்ததுதான். இந்த இரண்டாம் சேனையினின்றும் சில பகுதிகளை வாபஸ் வாங்கிக்கொண்டது. ஆக்கிரமித்த பாகங்களையும் ஆக்கிரமிப்பையும் சமாளிக்கத்தான் இந்தச் சேனையையும் விட்டுவைத்ததேயன்றி யுத்தத்தில் ஈடுபட அப்படைகளை உபயோகிக்கவும் இல்லை.

ஹங்கேரியின் பழைய தைரியத்தை இந்த யுத்தத்தில் காணமுடியவில்லை. மாக்யர்கள் விமானப் படையெடுப்பிற்கு மிகவும் பயப்படுகிறார்கள். மேற்கு ஐரோப்பாவில் கஷ்டப்பட்டுள்ள இதர நாடுகளைப்போல் இவர்கள் கஷ்டப்படவில்லை. புலோயெஸ்டியிலுள்ள ருமேனிய எண்ணெய்க் கிணறுகளின்மேல் அமெரிக்க விமானங்கள் தாக்கியபொழுது ஹங்கேரியில் பெரும் பீதியுண்டாயிற்று. ஹங்கேரிய அரசாங்கம் உபயோகப்படுத்திய பெஸ்டர் லாயிட் (Pester Lloyd) என்ற பத்திரிகையில் விமானப் படையெடுப்புகளைப்பற்றி பல குறிப்புகள் எழுதியிருக்கின்றன. ஹங்கேரியின் பயத்தைப்பற்றியும், அரசாங்க எச்சரிக்கை இல்லாத காலத்தில் விமான பாதுகாப்பு குழிகளில் பதுங்க ஓடுவதையும் கவனித்து பின்வருமாறு எழுதுகிறது



"மேற்கு ஐரோப்பிய மக்களிடத்திலுள்ள சமாதானமும், நடவடிக்கைகளும் ஹங்கேரியின் தலைநகரான புடாபெஸ்ட் மக்களிடம் எதிர்பார்த்தல் முடியாது.

"தப்பிதமான கட்சியினருக்கு உதவி செய்ததின் பலனை இப்பொழுதுதான் உணர்கிறார்கள். முஸோலினியின் வீழ்ச்சியின்போதுதான் இதாலியுடன் சிநேகம் கொண்டாடப்பட்டு ஜெர்மனிக்கு மீண்டும் உதவி செய்வதாய் வாக்களிக்காமல் சிநேக முறை இருந்தது."

---

# ஆஸ்திரியாவின் சேர்மானம் பயன்படவில்லை.

(மான்செஸ்டர் கார்டியன்.)

1938-ம் வருஷம் மார்ச்சு மாதம் 11-ம் தேதியன்று இரவில் புதிதாக அமைக்கப்பட்ட ஜெர்மன் படை எல்லைச்சரகத்தைத் தாண்டி ஆஸ்திரியாவுக்குள் நுழைந்தது.

சில நாட்களுக்குள்ளாக அந்த நாடு ஆக்கிரமிக்கப்பட்டது. ஆஸ்திரியாவை ஜெர்மனியுடன் சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கை பூர்த்தியாகிற்று. தேசீய எதிர்ப்பன்னியிலும் அல்லது வெளி நாட்டினரின் உபயோகமுள்ள பதில் நடவடிக்கையன்னியிலும் யுத்தம் துவக்குவதற்குமுன் ராஜீய ராஜதந்திர முறையில் முதல்தரமான வெற்றியை ஹிட்லர் பெற்றான். ஐரோப்பிய தேச படம் மாறுதலடைந்தது. அத்துடன் அது நின்றுவிடவில்லை.

ஆஸ்திரியாவைக் கவர்ந்த லாபத்துடன் ரத்த வெள்ளமன்னியில் ஒரு தேசத்தைப் பிடித்துக்கொள்ளுவது நடைமுறையில் சாத்தியமானதென்று அவன் கண்டுகொண்டான். சமாதான முறையில் வெற்றிபெற அவர்கள் கையாண்ட நடவடிக்கையானது ஏகாதிபத்யத்தின் குறுகிய கால நோக்கத்தைச் சாதித்துக்கொள்ள சாதகமளிக்குமென்று அவர்கள் முடிவுக்கு வந்தார்கள். இரண்டு வருஷங்களுக்குமுன் அவர்கள் ரைன்லாந்தை ஆக்கிரமித்தது சரியான பரிக்ஷையில்லை. அது ஒரு ஒத்திகை நடவடிக்கை போன்றது.

ஆஸ்திரியாவில் நடவடிக்கை வேறுவிதமானது. அதை வெற்றிகரமாக முறியடித்ததிலிருந்து ஒரு ருஜுக் கிடைத்தது. கவசம் பூண்ட படைகளும் அவைகளுக்கு உதவியாக சமாதானத்தை வெளிப்படையாக கோஷித்துக்கொண்டிருக்கும் வலுவான சிறிய கோஷ்டியும் இருக்கும் பக்ஷத்தில் சோம்பேறித்தனமாக இருந்தவரும் உலகத்தை ஏமாற்றவும் சர்வதேச பத்திரத்தைக் கோறும் அதன் திட்டங்களை முறியடிக்கவும் அது போதுமானதென்று ஏற்பட்டது.

ஆஸ்திரியாவின் அந்தரங்க உணர்ச்சியை ஒட்டி இந்த சேர்மானம் நடைபெறவில்லையென்றும் ஜெர்மனியுடன் சேர்ந்துகொள்ள ஆஸ்திரியாவுக்குள்ள உரிமையை ஒட்டியும் அது முடிவுபெறவில்லையென்றும், சிறிது காலத்திற்குள்ளாக ஆஸ்திரியர்கள் அறிந்துகொண்டார்கள். ஆஸ்திரியா சம்பந்தமாக ஹிட்லர் கையாண்ட முறைகள் ஆஸ்திரியாவிலுள்ள தேசீய ஜனசமூகக் கட்சியார்களும் ஜெர்மனியுடன் ஒன்று சேரவேண்டுமென்று வற்புறுத்தியவர்களும் கனவு கண்ட முறைகளுக்கு முற்றிலும் மாறுபாடானவை.

ஆஸ்திரியாவை ஆக்கிரமித்தவுடன் ஜெர்மானியர்கள் கையாண்ட முதல் நடவடிக்கையிலேயே அவர்களுடைய கெட்ட எண்ணங்கள் புலப்பட்டுவிட்டன. பிராசீனமான அதன் பெயர் மார்க் என்று திருத்தியமைக்கப்பட்டது. இந்த மாறுதலை அமுலுக்குக் கொண்டுவர ஜெர்மானியர்கள் கொஞ்சம்கூடத் தயங்கவில்லை. படையெடுப்பை ஒட்டி ஜெர்மனியிலிருந்து அநேக உத்தியோகஸ்தர்கள் அங்குவந்து ஆட்சிபுரியத் தொடங்கினார்கள். அப்படி வந்தவர்களில் 40,000 பேர்கள் பொதுஜன இலாகாக்களில் எல்லா ஸ்தானங்களையும் வகிக்கிறார்கள். சிறிய நகரங்களில் நகர பரிபாலன சபையிலும் அவர்கள் அமர்ந்துவிட்டார்கள்.

ஆஸ்திரியாவிலுள்ள தேசீய ஜனசமூகக் கொள்கைக்காரர்கள் ஜெர்மனியில் வேலைக்கு ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் நாடுகளுக்கு அனுப்பப் அமர்த்தப்பட்டார்கள். அதன்பின் ஜெர்மன் அமுலுக்குட் ஆஸ்திரியாவிலுள்ள கட்சிகளும் திருத்தியமைக்கப்பட்டு ஜெர்மன் அமுலுக்குட் பட்டார்கள். ஆஸ்திரியாவிலுள்ள தொழிற்சாலைகள் ஜெர்மனியின் பட்டுவிட்டன. இதே சமயத்தில் ஆஸ்திரியாவிலுள்ள

கண்காணிப்புக்குட்பட்டன. தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்யும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. புதிய தொழில் முறைகளுக்கு ஜெர்மானியர்கள் பொருளீட்டினார்கள். ஜெர்மானியர்கள் பராமரிஷை செய்துவந்தார்கள். ஆஸ்திரியாவை ஜெர்மனி மயமாக்கும் முறைகள் பலமாகவும் பரிஷ்காரமாகவும் நடைபெறுகின்றன.

இவ்விதமாக தங்குதடையன்னியில் பூராவாக ஆஸ்திரியாவின் ஸ்வதந்திரம் அழிக்கப்பட்டதிலிருந்து ஆஸ்திரிய ஜனங்களுக்கு தாபமுண்டாகிற்று. டால்பஸ்ஸும் ஷுஷ்னிக்கும் ஆஸ்திரிய பாஸிதத்வமும் பயன்படாதபொழுது ஜெர்மன் தேசீய பொதுவுடமைக் கட்சி வெற்றிபெற்றது. ஜெர்மன் ஆட்சியின் பயனாக ராஜீய முறையில் ஆஸ்திரியாவில் பலமான தேசீய உணர்ச்சி உண்டாகிவிட்டது. ஜெர்மனியை எதிர்த்துப் போராடவேண்டுமென்ற எண்ணத்துடன் சுய ஆட்சி உரிமையை அடிப்படையாகக் கொண்ட ஜனநாயகமும் அமைக்கப்படவேண்டுமென்ற எண்ணமும் ஆஸ்திரியாவில் தோன்றிவிட்டது. ஆஸ்திரியாவுக்கு இப்பொழுது நல்ல படிப்பினை ஏற்பட்டுவிட்டது. ஜெர்மனியுடன் சேர்க்கையை விரும்பிய தேசீய பொதுவுடமைக் கட்சியைச் சேராதவர்களும்கூட இப்பொழுது சேர்க்கையை வெறுக்கிறார்கள்.

மாஸ்கோவில் மூன்று வல்லரசுகளும் ஆஸ்திரியாவின் சேர்க்கையை உதறித் தள்ளியும் ஆஸ்திரியா ஸ்வதந்திரமடைய உரிமைபெற்றதென்று உறுதியளித்தும் வெளியிட்ட அறிக்கை ஆஸ்திரியர்களுக்குப் புத்துயுரை அளித்தது. ஸ்வதந்திர உலகத்தில் ஆஸ்திரியாவைத் திருப்பி அமைப்பது மகத்தான பிரச்னையாகும். அதன் பத்திரத்தைப் பொருத்துத்தான் ஐரோப்பாவின் பத்திரம் நிலைத்திருக்கும். ஜெர்மன் ஆக்கிரமணத்தினால் ஆஸ்திரியாவில் ராஜீய முறையிலும் பொருளாதார முறையிலும் அநேக மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதால் ஆஸ்திரியாவின் ஸ்வதந்திரத்தை சாச்வதமாக அமைப்பதும் நிலைநாட்டுவதும் மிகவும் கஷ்டசாத்தியமான காரியமாகும்.

---

## ஜெர்மன் விமானப்படையை 60 நாட்களுக்குள் அழித்துவிட முடியுமா?

(E. கோல்ஸ்டன் ஷெப்பர்ட்).

இடைவிடாத வெடிகுண்டு வீச்சிலிருந்து சீக்கிரமாக அதிக பயன் ஏற்படாது என்று பிரிடனில் அபிப்பிராயம் உலாவி வருகிறது. ஜெர்மன் விமானப்படையை 30 அல்லது 60 நாட்களுக்குள்ளாக அழித்துவிடலாமென்று லண்டனிலுள்ள அமெரிக்க பிரமுகர் சொல்லுவதைக்கேட்டு பிரிடனில் உள்ளவர்கள் ஒரு கிழட்டுக் குதிரையைப் பந்தயம் ஓடும்படி செய்வது போலிருக்கிறதென்று அபிப்பிராயம் சொல்லுகிறார்கள்.

பலமான வெடிகுண்டு வீச்சு அதிகரித்துவிட்டதென்றும், இன்னும் அதிகரிக்குமென்றும், ஜெர்மனியின் சண்டை விமானபலம் விமானப்போரில் குலைந்துவிட்டதென்றும் நாம் நினைத்தாலும், விடாமுயற்சியின் பயனை அறியும் நாம், கூடிய சீக்கிரத்தில் வெற்றி கிடைத்துவிடும் என்று சொல்லப் பிரியப்படவில்லை. தன்னுடைய ஐச்வர்யங்களை விஸ்தாரப்படுத்திக்கொள்ள ஜெர்மனி அதிக சாமர்த்தியமுள்ளது. ஜெர்மனியின் விமானப்படையை அழித்துவிடுவோமென்ற நம்பிக்கைக்கு இரண்டு ஆதாரங்கள் இருக்கின்றன. முடிவான போர்களை நடத்த ஜெர்மனி அதன் விமானப்படையை அனுப்பக்கூடும். அல்லது போர்புரிய முன்வராவிட்டால் தரையிலிருக்கும் விமானங்களை நாம் அழித்துவிடலாம்.

ஜெர்மன் விமானப்படையை நிர்மூலம் செய்துவிடவேண்டுமென்று ஐரோப்பாவிலுள்ள விமானப்படைகளுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. அதாவது ஜெர்மன் விமானப்படை பலம் அதிகரிக்காமலும் முன்னணியிலிருக்கும் விமானங்களையும் சுட்டு வீழ்த்தியும் செய்துவிடவேண்டும். இவற்றில் எந்த நடவடிக்கையும் குறிப்பிட்ட கால அளவிலோ அல்லது குறிப்பிட்ட போர் பிராந்தியத்திலோ வெற்றியளிக்குமென்று சொல்லுவதற்கில்லை. ஜெர்மன் விமான உற்பத்தி தொழிற்சாலைகள் ஆக்கிரமிப்பு நாடுகளில் பரவலாக அமைக்கப்பட்டிருக்கின்றனவென்று கோயபல்ஸ் ஒரு சமயம் தற்புகழ்ச்சி செய்துவந்தான். இந்த அறிக்கையில் உண்மை இருக்கிறதென்றுதான் சொல்லவேண்டும். விமானத்தின் உருப்புகளைச் செய்யும் தொழிற்சாலைகளையும் விமானங்களைக்கட்டும் நிலயங்களையும் வெடிகுண்டுகளால் நொருக்குவதிலிருந்து உடன்காலத்தில் அதிக பலன் கிடைக்கவேண்டுமானால் மாரிகாலத்தில் ஜெர்மன் உற்பத்திசாலைகள் அபரிமிதமாக விமானங்களைக் கட்டிவிடாமல் தடங்கல் செய்துவிடவேண்டும்.



இந்த வருஷத்தில் வெடி விமானங்களைக் கட்டாமல் சண்டை விமானங்களைக் கட்டுவதில் ஜெர்மனி அதிக கவனம் செலுத்திவந்தது. அதற்கு சௌகரியமளித்தது. இந்த மாறுதல் 1942-ம் வருஷம் மாரிகாலத்தில் நடைபெற்றது. வெனீர் கால மத்தியில் மாதாமாதம் சராசரி 1,000 சண்டை விமானங்கள் கட்டப்பட்டன. அது இப்பொழுது 1,500-க்கு அதிகரித்துவிட்டது. 2,000-க்கு அது அதிகரிக்குமென்று ஜெர்மனி நம்பியிருந்தது. இவ்வருஷ ஆரம்பத்தில் வீனர் நியூஸ்டாட்டிலுள்ள பெரிய விமானம் கட்டும் தொழிற்சாலையை அமெரிக்க வெடி விமானங்களும் லீப்ஸிக், மூனிச், ஆக்ஸ்பர்க், ஆஸெர்ஸ்லென் முதலிய இடங்களிலுள்ள விமான உருப்புகளை உற்பத்தி செய்யும் சாலைகளை பிரிடிஷ் விமானங்களும் தாக்கியபொழுது இந்த நம்பிக்கை போய்விட்டது. ரீஜன்ஸ்பர்க்கும், பிரன்ஸ்விக்கும் பெர்லினிலுள்ள தொழிற்சாலை பிராந்தியங்களும் வெடி விமானங்களால் தாக்கப்பட்டன.

சென்ற சில மூன்று மாதங்களில் ஜெர்மன் விமான உற்பத்தி தொழிற்சாலைகள் பலமாகத் தாக்கப்பட்டன. பிரான்ஸிலுள்ள சில தொழிற்சாலைகள் மிகவும் கடுமையாகத் தாக்கப்பட்டன. ஆகிலும் கிழக்கு பிரஷயாவிலும், போலந்திலும், ஸெக்கோஸ்லாவாக்கியாவிலும் பால்டிக் நாடுகளிலும் அமைக்கப்பட்ட தொழிற்சாலைகள் அதிகமாக நாசமடையவில்லை. இந்த சாலைகளிலிருந்து அனுப்பப்படும் விமானங்கள் சென்ற மூன்று மாதங்களில் ஏற்பட்ட நஷ்டங்களை ஈடு செய்யப்போதுமானதில்லை. ஆகிலும் சென்ற ஆறு மாதங்களில் உற்பத்தி அதிகரித்து விட்டதால் இந்த உற்பத்திகள் சிறிது ஆறுதலையளிக்கக்கூடும். இந்த ஆறு மாதங்களில் ஜெர்மனி 7,000 அல்லது 8,000 விமானங்களைக் கட்டியிருக்கும். மேற்கு, தெற்குப் போர்முனைகளில் விமானப் போர்களில் அதன் பாதி பாகம் கூட அழிவுபடவில்லை. மேலும், மேற்கு ஐரோப்பாவில் முன்னணியில் 1,500 சண்டை விமானங்கள் கொண்ட விமானப் படையை ஜெர்மனி இன்றும் பெற்றிருக்கிறது.

இந்த சங்கியையுள்ள விமானப் படையும் பிப்ரவரி மார்ச்சு மாதங்களில் அதிகரித்திருக்கும் மகத்தான விமானத் தாக்குதலை சமாளிக்கப்போதுமானதல்ல. முற்போக்கான நடவடிக்கையை மேற்கொள்ள ஜெர்மன் விமானப் படை புதிய முறைகளைத் தேடிவருகிறது. சமீப காலத்தில் பெர்லினையும் மன்ஸ்டரையும் தாக்கச்சென்ற அமெரிக்க கனமான வெடி விமானங்களுக்கு எதிர்ப்பு ஏற்படாததற்கு விமானத் தாக்குதல் முறையில் மாறுதல்கள் மேற்கொள்ளப்பட்டது காரணமாகயிருக்கலாம். நேசதேச விமான தளங்களை ஜெர்மன் விமானப் படை தாக்க உத்தேசித்தாலும் சரி, அல்லது இரண்டாம் போர்முனை ஏற்படும் பொழுது படையெடுப்பைத் தடுக்க அது முயன்றாலும் சரி, நெடும் போக்கான திட்டத்தை மேற்கொள்ளவேண்டுமென்று அது முடிவுக்கு வந்துவிட்டது.

ஜெர்மன் விமானப் படையை 60 நாட்களுக்குள் அழித்துவிடவேண்டுமானால் நேசதேசத்தார்கள் அதை பலமான சண்டைக்கு இழுக்கவேண்டும். இரண்டாம் போர்முனையை ஏற்படுத்துவதன் மூலம் இதைச் செய்துவிடலாம். சென்ற மூன்று வருஷங்களாக பிரிடனிலுள்ள நாம் அறிந்திருப்பதுபோல அவ்விதமான தியாகம் செய்யாமல் ஜெர்மன் விமானப் படையின் அழிவை நாம் சாதிப்பதென்பது முடியாத காரியம்.

---

## ஜெர்மன் கடற்படை தலைவர் கடற்படையை புறக்கணித்துவிட்டான்.

### வீரர் தினத்தில் பேசிய பேச்சு.

(A. J. மாக்வின்னி).

ஜெர்மனியில் நடந்த வீரர் தினத்தன்று ஜெர்மன் கடற்படை தலைவர் அட்மிரல் காரல் டோனெட்ஸை முக்கிய பேச்சாளியாக நியமித்ததை நாம் இலேசாக எடுத்துக்கொள்ளக் கூடாது. யுத்தம் நடந்த 4 வருஷங்களில், ஜெர்மனியின் மக்கள் இறந்தோருக்காக நடத்தப்பட்ட தினங்களில் நான்கு முறை ஜெர்மன் மக்களின் முன் ஹிட்லர் பேசியுள்ளான். ஹிட்லர் கூறியவைகள் பின்வருவன ஆகும்:—

1940.—ஒரே வேலைக்காக நான் உயிர் வாழ்கிறேன்; வெற்றியில் கண்ணுங்கருத்துமாயிருந்து அதற்காகப் போரிடவே, அவசியமிருந்தால் என் உயிரையும் கொடுப்பேன்.

1941:—இங்கிலாந்து வீழ்ந்துவிடும்..

1942.—வருங்கோடை காலத்தில் ருஷ்யர்கள் முற்றிலும் தோற்கடிக்கப்பட்டு நிர்மூலமாகக்கப்படுவார்கள்.

1943.—இனி வரும் மாதங்களில் கிடைக்கும் வெற்றிகள் முடிவான வெற்றிக்கு அடிகோலுவதாகும். இவ்வருஷத்தில் எல்லா அரங்கங்களிலும் ஜெர்மானியர்களுக்கு தோல்வி ஏற்பட்ட போது ஹிட்லர் ஒன்றும் பேசவேயில்லை. "பெர்லின் குண்டுகளால் தாக்கப்படாதது" என்ற வீரவார்த்தைகள் பேசிய கோயரிங், ஆங்கிலோ, அமெரிக்க விமானங்கள் கொடுந்தாக்குதல்கள் புரிந்து குண்டு மாரிபொழிந்தபொழுது வெளியில் தலை நீட்டவில்லை. ராணுவத் தலைவர்கள், ருஷ்ய வெற்றிகளையும், இரண்டாம் போர்முனையின் விஷயம் நெருங்குகிறதையும் பொறுத்து, ஒன்றும் நம்பிக்கை வைக்க முடியவில்லை. டாக்டர் கோயபல்ஸ் விஷயங்களைப் பொறுத்து ஒன்றும் சொல்லாமலேயேயிருந்துவிட்டார்.

## ஜெர்மனியின் யு படகுகளின் எண்ணம்.

இருப்பினும் ஜெர்மானியர்கள் யு படகுகளைக்கொண்டு புதுத் தாக்குதல்கள் புரிந்து சில வெற்றிகளை அடையலாம் எனக்கருதுகிறார்கள். அட்மிரல் டோனெட்ஸின் "வீரர் தின"ப் பேச்சினின்றும் இவ்வாறு கருதவேண்டியிருக்கிறது.

டோனெட்ஸின் "வீரர் தின"ப் பேச்சை பிரித்துப் பார்த்தாலும் அவருக்குள்ள கஷ்டங்களை அறிதலும் வெகு சுலபமேயாகும். முடிவான வெற்றியை சீக்கிரத்தில் அடைய அவர் நம்பிக்கைகொள்ள முடியாது. ஆனால் கடலில் நடக்கும் யுத்தங்களை அவர் மறந்துவிட்டதாக நினைப்பது ஒரு பெரும் பிழையாகும். சென்ற யுத்தத்தில் அவனின் யு படகுகளை மூழ்கடித்த காலம் முதல் இந்த 25 வருஷங்களாக நூற்றுக்கணக்கான யூ படகுகளைக் கொண்டு பிரிட்டனைவென்று விடுவதாக வெறும் வார்த்தைகளை அவன் பேசினான். ஜெர்மானியர்கள் அவனிடம் நூற்றுக்கண்க்கான யூ படகுகளை கொடுத்தனர். மனிதர்கள், யுத்த தளவாடங்கள் இவைகளை வட யூ படகுகள் அதிகமாகவே கொடுக்கப்பட்டன. ஆனால் இந்த வெறும் வார்த்தைகளும், திட்டங்களும் வீணாகிவிட்டன. அவனின் சொந்த வார்த்தைகளான "பிரிட்டனை கடலில் தான் தோற்கடிக்க முடியும்" என்றவைகள் கோயரிங்கின் "பெர்லின் குண்டுகளால் ஒருக்காலும் தாக்கப்படமாட்டாது" என்ற வீண் வார்த்தைகளைப் போலவே கருதப்பட்டும், நினைக்கப்பட்டும் வருகின்றன.

யு படகுகளை அடுத்த தாக்குதலில் உபயோகப்படுத்துவார்கள் ஜெர்மானியர், என்று பிரிட்டன் ஒப்புக்கொள்ளுவது போல, டோனெட்ஸும் தன் மக்களிடம் காலம் மாறினும் மாறலாம், என்று ஒப்புக்கொள்ளவேண்டும். இதற்குப் பதிலாய் ஹிட்லர் ஜெர்மன் யுத்தத் தலைவர்களிடமும் விசுவாசமாயும் போரரங்கங்களுக்கும் உள் நாட்டு அரங்கத்திற்குமிடையே ஒற்றுமையும் வேண்டுமென அவர் விரும்புகிறார். ருஷ்ய வெற்றிகளுக்கு காரணம், அவர்களின் மனித பலமும், தளவாட பலமும் அதிகமானதாக இருக்கிறது என்று கூறிய அவன், ஜெர்மானிய கடற்படையால், பிரிட்டனிலிருந்து ருஷ்யாவிற்குச் சென்ற ஸப்ளைகளைத் தடுக்க-முடியவில்லை என்பதைக் கூறாமல் விட்டுவிட்டான்.

---

## அட்லாண்டிக் சாஸனத்தின் அன்வயம்.

### (டைம்ஸ் பத்திரிகை).

அட்லாண்டிக் சாஸனம் மிகவும் முக்கியமான பிரச்னை. இதைப்பற்றி பொது ஜனங்கள் தங்களுடைய கவனத்தைச் செலுத்தி வருகிறார்கள். சென்ற சிலவாரங்களில் அதன் யோக்கியத்தைப்பற்றியும் கருத்தைப்பற்றியும் விவாதம் எல்லா நாடுகளிலும் நடைபெற்று வருகிறது. இந்த சாஸனம் ஏற்படுத்தப்பட்ட இரண்டரை வருஷங்களுக்குப் பின்னும் அது நேசதேசத்தாரின் ஏகோபித்த அபிப்பிராயத்தை வெளியிடும் உபயோகமுள்ள தஸ்தாவேஜு என்று தோன்றிவிட்டது. கொள்கைகளின் முடிவை பிரதிபலிக்கிறதாக அது சொல்லவில்லை. மேற்கோளிலிருந்து கொள்கைகளைப் பிரித்துவிட முடியாதென்றாலும்,



எவ்வளவு உயர்வான பொதுப்படையான கொள்கைகளை நிறுவி அதன்படி அனுஷ்டித்தாலும் சர்வதேச நடவடிக்கைகளும், ஒரு தேசத்தின் நடவடிக்கைகளும் அதன் மூலம் தீர்மானம் செய்யக்கூடாதவை. பரஸ்பர விரோதமான அக்கரைகளுள்ள நாடுகளின் வலிமையையும் நாம் மதித்துப்பார்க்கவேண்டும். உள்நாட்டு ராஜீய வியவகாரங்களிலும் இவ்விதமான சர்ச்சை அவசியமாகும். இந்தக்கொள்கைகளை அனுஷ்டிக்கக்கூடிய ஜன சமூக, ராஜீய அமைப்புகளையும் நாம் கவனித்துப் பார்க்கவேண்டும்.

யுத்தத்துக்குப்பின் தேசங்களின் அமைப்புகளை நிர்த்தாரணம் செய்வதில் இரண்டு முக்கியமான கொள்கைகளைக் கடைப்பிடிக்கவேண்டும். முதலாவது சுயநிர்ணயக்கொள்கை. இந்தக்கொள்கையை 25 வருஷங்களுக்குமுன் நிறுவிய வில்ஸனைப் பின்பற்றி சாஸனத்தை அமைத்தவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். இரண்டாவதாக "நிர்ப்பயமாக ஜீவித்தல்" "வறுமையில்லாமல் ஜீவித்தல்" என்ற லக்ஷியங்களை நிச்சயமாக சாதித்துக்கொள்ளும் முறையில் முடிவுசெய்துவிட வேண்டும். முதலில் சொல்லப்பட்ட கொள்கையானது இரண்டாவது கொள்கையை சாதித்துக்கொள்ளுவதற்காகப் பணியவேண்டியிருக்கும். சென்ற அநேக நூற்றாண்டுகளில் எவ்விதமிருந்திருப்பினும், ஐரோப்பாவில் 20 அல்லது 30 சுய ஆட்சியுள்ள, ஸ்வதந்திரமுள்ள, ஒரு உயர்தர அதிகாரிக்கும் அடிபணியாத தேசங்களை அமைப்பது ஐரோப்பிய நாடுகளின் ராணுவ பத்திரத்துக்கும் பொருளாதார க்ஷேமத்திற்கும் ஒவ்வாதது. இந்த உண்மையை ஒருவரும் மறுக்கமுடியாது. இதை சுயநிர்ணய உரிமைக் கொள்கையின்படி உல்லங்கனம் செய்வதென்பது உயர்தர ராஜீயக் கொள்கையாகாது. ஆனால் ராஜீய முட்டாள்தனமாகும்.

ராஜீயக் கொள்கைகளை நிராக்ஷேபணையாகவும் தன்னிச்சையாகவும் எல்லா விஷயங்களுக்கும் அன்வயப்படுத்தமுடியாதென்பது அவைகளின் முக்கியகுணமாகும். இந்த குணமானது அட்லாண்டிக் சாஸனத்திலுள்ள கொள்கைகளுக்கும் அன்வயிக்கும். இதிலிருந்து அதன் கொள்கைகள் உபயோகமற்றவை என்று ஏற்படாது. இந்த சாஸனத்துக்கு முன்பே பொது ஜனங்களின் சம்மதத்தின்பேரில் நிர்வாகம் நடைபெற வேண்டுமென்ற கொள்கையிருந்து வருகிறது. ருஷ்யாவில் சமீபகாலத்தில் அரசியலில் ஏற்பட்ட மாறுதல்கள் ருஷ்ய சமஷ்டியிலுள்ள நாடுகளுக்கு இந்த உரிமை வழங்கப்பட்டிருக்கிறதென்பதை ஊர்ஜிதம் செய்யக்கூடியதாகயிருக்கின்றன. ஐரோப்பிய நாடுகள் சம்பந்தப்பட்டமட்டில் அட்லாண்டிக் சாஸனத்தின் கொள்கைகளை நடை முறையில் சாதித்துக்கொள்ள வேண்டுமானால் "வறுமையின்மை" "பீதியின்மை" என்ற மானிட வர்க்கத்தின் முக்கியமான லக்ஷியங்களை அடைய அதன் கொள்கைகளை விஸ்தாரப்படுத்த வேண்டும். இந்த லக்ஷியங்களை அடைவதற்கு யுத்தத்துக்கு முன் ஐரோப்பாவிலிருந்த பிளவுகளை மறுபடியும அமைக்கக்கூடாது. சர்வதேச சங்கத்தின் ஒப்பந்தத்தின்படி அவைகளுக்கு உபபலமிருந்தாலும் அவ்விதம் நடைபெறக்கூடாது. விசாலமான பரப்புகளில் சாச்வதமான, பொதுவான ராணுவமும், போக்குவரத்து மார்க்கங்களும் அமைக்கப்படவேண்டும். சாச்வதமான பொருளாதார ஒற்றுமையும் பொதுவான திட்டமும் எல்லாவிடங்களிலும் நிறுவப்படவேண்டும். இந்த லக்ஷியங்களை நாம் அடையாவிட்டால் நிகழ்ச்சிகளின் தடுக்கமுடியாத போக்கினால் அட்லாண்டிக் சாஸனத்தின் மற்ற கொள்கைகளும் உபயோகமற்றதாகிவிடும். இந்த லக்ஷியங்கள் கைகூடிவிட்டால் ஒற்றுமையை அடிப்படையாகக்கொண்ட சாஸனத்தின் கொள்கைகளை அமுலுக்குக் கொண்டுவரும் வேலை சாத்தியமாகிவிடும். சாஸனத்தில் காணப்படும் சுயநிர்ணய உரிமையை உதறிவிடுவதென்பதும் தயையின்மையை வெளிப்படுத்தும். அதற்குத்தகுந்த ஸிக்ஷையும் ஏற்பட்டுவிடும். திட்டமான ராணுவ பத்திரத்தையும் பொருளாதார அமைப்பையும் பாதிக்கக்கூடிய வகையில் அவைகளை மேற்கொள்ளுவதும் கெடுதலானது. இதை மேற்கொள்ளும் நாடுகளுக்கே அவைகள் தீங்கிழைத்துவிடும். சரியான நடவடிக்கையாதென்பதைப்பற்றி சந்தேகம் கிடையாது. நான்கு வருஷங்களுக்கு அதிகமாக துன்பத்தையும் கவலையையும் அனுபவித்த ஐரோப்பிய நாடுகள் யுத்தத்துக்குப்பின் தங்கள் தேசத்தின் பேராசை, சுயநிர்ணயம் என்ற குணங்களை வற்புறுத்துவார்களென்றும் புனருத்தாரணம் புனரமைப்பு என்ற தேவைகளை மதிக்கமாட்டார்களென்றும் மந்த புத்தியுடன் சொல்லுவது இயல்புதான். அவ்விதம் தோன்றினால் ஐரோப்பாவில் மற்றொரு ஹிட்லர் தோன்றுவது நிச்சயம். ஐரோப்பாவின் எதிர்கால க்ஷேமத்தைக்கோறி ஐரோப்பாவில் எவரேனும் அல்லது வெளி நாடுகளிலிருந்து எவரேனும் முன் வந்தாலும், முன்வராவிட்டாலும் புத்திசாலிகளுள்ள, ஒழுங்குள்ள, ஒன்றுபட்ட ஐரோப்பாவை அமைக்க வழிகாட்டக்கூடிய வகையில் பிரிட்டன் தன்னுடைய கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் நிறுவிக்கொண்டால், அதன் சுயநலத்தை பாராட்டுவதுடன் அதன் பொருப்பையும் தீர்த்துவிட்டதாக பிரிட்டன் உலகின் கண் நிற்கும்.

# யுத்தத்துக்குப்பின் உலக அமைப்பில் பிரிடனும், அமெரிக்காவும் ஒத்துழைக்கும்.

## ஸடெட்டினியஸ் பிரிடனுடைய எண்ணங்களை ஆராய்ச்சி செய்வார்.

(எட்வர்ட் மாண்ட்காமரி.)

அமெரிக்காவில் ஸமஸ்தான உதவி காரியதரிசியான மிஸ்ட்டர் எட்வர்ட் R. ஸ்டெட்டினியஸ் இங்கிலாந்துக்குச் சமீபத்தில் விஜயம் செய்வாரென்பதை லண்டனிலுள்ள ராஜதந்திர நிபுணர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து வருகிறார்கள். சில மாதங்களுக்கு முன்தான் ஸ்டெட்டினியஸ் ஸம்னர் வெல்ஸுக்குப் பதிலாக பதவி ஏற்றார். மிஸ்ட்டர் ரூஸ்வெல்ட்டின் சார்பாக உண்மைகளை அறியும் கோஷ்டியில் சேர்ந்துகொண்டு அவர் பிரிட்னுக்கு வந்தார். 1940-ம்ஆண்டு வசந்தகால ஆரம்பத்தில் மிஸ்ட்டர் கார்டல் ஹல் பிரிடனுக்கு வந்தார். அதன்பின் இப்பொழுதுதான் அமெரிக்க நிர்வாகத்தின் உயர்தர அதிகாரி ஒருவர் லண்டனுக்கு விஜயம் செய்யப் போகிறார். பிரிடிஷ் அயல் நாட்டு காரியாலயத்தில் அவருக்கு சமானமான அந்தஸ்துள்ள மிஸ்ட்டர் ரிச்சர்ட்லா அமெரிக்காவுக்கு இரண்டு தட்வை சென்றிருக்கிறார். 1943-ம் வருஷம் இலையுதிர் காலத்தில் க்விபெக்கில் மிஸ்ட்டர் ஈடன் மிஸ்ட்டர் ஹல்லையும், மற்றவர்களையும் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

மிஸ்ட்டர் ஸ்டெட்டினியஸ்ஸுடன் நிர்வாக இலாகாக்களிலுள்ள அநேக உயர்தர உத்தியோகஸ்தர்களும் வருவார்கள். ஒரே இலாகாக்களில் இரு நாடுகளில் வேலை செய்கிறவர்களுக்கும் ஒரே பிரச்னைகளைத் தீர்க்கவேண்டியவர்களுக்குமிடையே சம்பாஷணை நடந்து இரு தேசத்தாருக்கும் நல்லுணர்ச்சி ஏற்படும்படியான மார்க்கத்தைக் கற்பிக்க இந்த விஜயம் சாதகமளிக்கக்கூடும்.

மிஸ்டட்ர் ஸ்டெட்டினியஸ்ஸும் அவருடைய கோஷ்டியும் ஒரு பொதுவான விஷய அட்டவணையுடன் வருவார்கள். ஆகிலும் பிரிடனுக்கும், அமெரிக்காவுக்கும் சமமான அக்கரையுள்ள அயல் நாட்டு விஷயங்களின் அம்சங்களில் பிரிடிஷ் அரசாங்கத்தாரின் மனோநிலை எவ்விதமிருக்கிறதென்று சாத்தியமானவரையில் தீர விசாரிக்கத்தான் அவர் விஜயம் செய்கிறாரென்பது சந்தேகமில்லை.

பொதுவாக சர்ச்சை செய்யப்படவேண்டிய விஷயங்கள் ஏராளமாக இருக்கின்றன. ஏனெனில் சமீப கால நடவடிக்கைகளிலிருந்து ஒன்றுபட்ட பிரிடிஷ் அமெரிக்கக் கடற்படை, விமானப் படை போர் புரியும் உலகத்தின் எந்த யுத்த அரங்கத்திலும் இரு நாடுகளின் அக்கரைகளும் சம கோடாகச் செல்லுகின்றன.

பிரிடனுக்கும், அமெரிக்காவுக்குமுள்ள எதிர் காலத்திய சம்பந்தங்களிலும் இரு நாடுகளும் ஒன்றுபட்டு மற்ற வல்லரசுகளுடன் கலந்து ஆலோசிக்கும் விஷயங்களிலும் இந்த அம்சம்தான் அடிப்படையாக இருக்கவேண்டும். யுத்தம் முடிவடைந்து ஜெர்மனியும், ஜப்பானும் இறுதியில் பூர்ணமாக முறியடிக்கப்படும்பொழுது ஒன்றுபட்ட பிரிடிஷ் அமெரிக்க கடற்படையும் விமானப்படையும் எதிர்ப்பன்னியிலும் நிராக்ஷேபனையாகவும் உலகத்திலுள்ள எல்லா சமுத்திரங்களிலும், ஆகாயத்திலும் ஆதிக்கம் பெற்றுவிடும். இது தற்புகழ்ச்சி என்று நினைக்கவேண்டாம், உலகத்தின் வருங்கால நிலைக்கு மெத்த அவசியமான ராஜீய விஷயத்தைத்தான் நான் வெளிப்படுத்துகிறேன். பிரிடிஷ், அமெரிக்க கடற்படை விமான ஆதிக்கத்தை பிரிடனாவது, அல்லது அமெரிக்காவாவது மறைத்துச் சொல்லமுடியாது. அல்லது குறைத்துச் சொல்லமுடியாது. மேலும் இந்நாடுகளுக்கு ஏற்பட்டிருக்கும் பளுவையும், பொறுப்பையும் கடமைகளையும் அவைகள் உதறிவிடமுடியாது. நடைமுறையில் அவைகள் முடிவு பெறும்வரையும் செய்துவிட முடியாது. பிரிடனுக்கும், அமெரிக்காவுக்கும் வருங்காலத்தில் ஏற்படக்குடிய பிரச்னைகளை இந்தப் பொறுப்பை மனதில் வைத்துக்கொண்டு தான் அந்நாடுகள் தீர்த்துவிட வேண்டும்.

பிரிடனும், அமெரிக்காவும் சமாதானத்தை விரும்பும் நாடுகள். இரு நாடுகளும் தங்களிடமிருக்கும் சக்தியையும் சந்தர்ப்பங்களையும் சிறந்த முறையிலும் உலகம் பூராவிலும் சமாதானமும் சுபிக்ஷமும் ஏற்படும்படியாகவும் உபயோகித்துவருவார்கள். அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பொறுப்பையும் அவர்கள் நன்கு அறிவார்கள்.



ஆனால் இந்த சக்தியை தனித்தனியாக உபயோகிக்கமுடியாது. இரு நாடுகளும் ஒன்றுபட்டு ஒன்றுபட்ட திட்டங்களை நிறுவி அதன்படி காரியாம்சையில் செய்துமுடிக்க அந்நாடுகள் முற்படவேண்டும். இதை சாதித்துக்கொள்ள இரு அரசாங்கத்திலுள்ள அநேக இலாகா அதிகாரிகளும் நெருங்கி ஒத்துழைக்கவேண்டும்.

---

# "கிரெம்லின்" தொழிற்சாலை

ஜப்பானிய சிப்பாய் உயிர்துறந்தாலும் அவன் சக்ரவர்த்திக்கு உபயோகப்படக்கூடும் தேசிய உணர்ச்சியுள்ள ஜப்பானியரின் மதபோதனைகளின்படி யுத்தத்தில் உயிர்துறந்தவர்கள் சில்லரை தேவதைகளாக மாறிவிடுகிறார்கள். பிசாசுகளைப்போல் அவர்களின் ஆத்ம சக்தி எதிரியைத் தாக்கிவருகிறது. எதிரியின் ஒலிபெருக்கும் கருவியை நாசம் செய்துவிடுகிறார்கள். எதிரிப் படைகள் தங்களுக்குள் ஒருவரை ஒருவர் சுட்டுக் கொல்லும்படி தூண்டப்படுகிறார்கள். துருப்புகள் மனக்கிலேசமடைந்து தற்கொலையும் செய்துகொள்ளுகின்றன.

அட்டுத் தீவிலுள்ள படைகளை அமெரிக்கப் படைகள் அழித்தபின் அலூஷியன் தீவுகளிலுள்ள கிஸ்காவிலிருந்து சென்ற வேனீர் காலத்தில் ஜப்பானியர்கள் பின்வாங்கியதற்கு மேலே சொல்லிய பூதங்களின் கொரில்லாச்சண்டைதான் சாதகமாகயிருந்ததென்று ஜப்பானியர்கள் கொண்டாடுகிறார்கள். அரசாங்கத்தார் நடத்திவரும் 'ஜப்பான் டைம்ஸ் அண்டு அட்வெர்டைஸர்' என்னும் பத்திரிகையில் நான்கு அற்புதமான சம்பவங்கள் குறிப்பிடப்படுகின்றன.

ஜூலை 26-ம் தேதியன்று கிஸ்காவிலிருந்த இரண்டு ஜப்பானிய ரேடியோ டிடெக்டர் கருவிகள் கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் இரண்டு எஃகு மலைகள் வருவதைக் கண்டுபிடித்தன. கனமான மூடுபனியின் மத்தியில் பலமான பீரங்கிப் பிரயோகம் உண்டாகிற்று. அதன்பின் அந்த எஃகு பருவதங்கள் போய்விட்டன. அதன்பின் துருப்புகளை ஏற்றிச் செல்லுவதற்காக ஒரு ஜப்பானிய கடற்படை அடிபடாமல் துறைமுகத்துக்கு வந்தது. "அட்டுவில் இறந்த வீரர்களின் ஆன்மா எதிரியைக் கடலுக்குள் இழுத்துக்கொண்டுபோய் கப்பல்களிலிருந்த வெயர்லஸ் கருவிகளைக் கெடுத்ததினால் கடற்படை ஒருவரோடோருவர் போர்புரியும்படி நேர்ந்தது" என்று கிஸ்காவிலிருந்து வந்த ஜப்பானிய சிப்பாய்கள் சொல்லுகிறார்கள்.

கிஸ்காவைப் படைகள் காலி செய்யும்பொழுது அட்டுவிலிருந்த ரக்ஷக தேவதைகள் கடலில் அமைதி காணும்படிக்கும் மூடுபனியில் 15 அடி அகலத்துக்கு திருஷ்டிகோசரமாகும் படிக்கும் செய்தவையும்.

காலி செய்து போகும் துருப்புகள் அட்டுவுக்குத் தெற்கே சென்ற பொழுது அட்டுவிலிருந்த பூதங்கள் அங்கு வந்து அவர்களுக்கு நல்வழி ஆசி கூறினார்களாம். சிறிய படகுகளிலிருந்து ஜப்பானியக் கொடிகளை வீசினார்களாம். அவர்களைப் போற்றி ஒரு கர்ஜனையும் தூரத்தில் கேட்டதாம்.

கிஸ்காவிலிருந்த புராக்கள் முதல் சகலமானவைகளும் காலி செய்யப்பட்டபோதிலும், அதை ஆக்கிரமிக்கவந்த அமெரிக்கர்கள் அட்டுவிலிருந்து அங்கு வந்த பூதங்கள்கொண்ட சேனையுடன் போர்புரிய வேண்டியிருந்ததென்று எதிரி விளம்பரம் செய்து வருகிறான். தெற்கு பஸிபிக்கிலும் ஜப்பானிய பூதங்கள் எதிரியைத் தாக்கியிருக்கின்றனவாம். அநேகருக்கு புத்தி தடுமாற்றம் ஏற்பட்டுவிட்டது. சிலர் கிலிபிடித்து மனக்கிலேசமடைந்து தற்கொலை செய்துகொண்டார்களாம்.

இதற்குக் காரணத்தை பஸிபிக் போர்முனையில் ஈடுபட்டிருக்கும் அமெரிக்கர்கள் சொல்லுகிறார்கள். ஜப்பானியர்கள் உபயோகித்துவரும் புளித்த காடியை துருப்புகள் உட்கொள்ளுகிறார்களென்பதுதான் இதற்குக் காரணம்.

---

# ஜப்பான் ஒரே நாளில் தோல்வி அடையும்.

நமது தேசத்தைப் போல ஜப்பானையும் கடற் போரில் தான் முறியடிக்க முடியுமாதலால் ஜப்பானிய கடற்படை ஒரேநாளில தோல்வியடைந்துவிடும். இந்த உண்மையை ஜப்பானும்

உணர்ந்துவிட்டது. மார்ஷல்ஸ் காரலைன்ஸ், மேரியனஸ், தீவுகள், பிஸ்மார்க் தீவுக்கூட்டங்களுக்கும் ஜப்பானுக்குமிடையே உள்ள சமுத்திரங்கள் முதலியவற்றிலுள்ள ஜப்பானின் எல்லைப்புற ஸ்தானங்களை அமெரிக்க டாஸ்க் விமானப் படைகள் தாக்கி வரும்பொழுது ஜப்பானியக் கப்பல்கள் தலைகாட்டவில்லையென்று மாலுமிகள் சொல்லுகிறார்களென்று டைம்ஸ் பத்திரிகையின் கடற்படை நிருபர் எழுதுகிறார்.

டிரக்கில் ஜப்பானிய கடற்படையே காணப்படவில்லையென்று கடற் தளபதி ஸ்புருவன்ஸிடமுள்ள படைகள் ஏமாற்றம் அடைந்தார்களென்று கடற் தளபதி நிமிட்ஸ் சொல்லுகிறார். ஜப்பானியக் கப்பற்படைகளைத் தேடிச்சென்று மூன்று நாட்கள் வரையில் தெற்கு பஸிபிக்கில் நடமாடிய கடற் தளபதி மெரிலிடமுள்ள படைகள் ஒரே ஒரு ஜப்பானிய விமானத்தை மட்டும் சந்தித்தன. தெற்கு பஸிபிக்கிலுள்ள படைகளை எதிரி கைவிட்டுச் சென்றுவிட்டான் போல் தோன்றுகிறதென்று கடற் தளபதி சொல்லுகிறார். சமீப காலத்திய அனுபவத்திலிருந்து இதைத் தவிர வேறு விதமான முடிவுக்கு வரமுடியாது. அதன் சக்தியைப் பற்றி ஜப்பானிய ராணுவ அதிகாரிகள் மிகவும் தவறான அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்களென்பது தெளிவானது. ஜப்பானின் ஆரம்ப வெற்றிகளைக் கண்டு எதிரிகள் வீழ்ச்சி பெற்றுவிடுவார்களென்று ஜப்பான் நினைத்தது தான் இதற்குக் காரணம்.

இப்பொழுது ஜப்பானியப் படைகள் அகலக்கால் வைத்திருக்கும் நிலைமையை அடைந்துவிட்டன. சஞ்சாரிகளையும் நாசகாரிகளையும் ஜப்பானிய கடற்படை இழந்து பலஹீனமடைந்துவிட்டது. ஆகையால் தூர தேசங்களிலுள்ள ஜப்பான் கைப்பற்றிய நாடுகளை ஜப்பான் இனிமேல் காப்பாற்ற முடியாது. தாய் நாட்டுக்குச் சமீபத்தில் எதிர்த்துப் போராட ஜப்பான் தன்னுடைய படை பலத்தைத் திரட்டுகிறது. ஜப்பானுக்குச் சமீபத்திலுள்ள சமுத்திரங்களின் ஆதிக்கத்தை நேசதேசத்தார்கள் பெறவேண்டியது அவசியமென்பது பேரால் ஜப்பானிய கடற்படை எதிரியின் படையின் முன்னேற்றத்தைத் தடுக்கவேண்டும். நேசதேசத்தார்கள் இந்த நடவடிக்கையைத் தான் எதிர் பார்க்கிறார்கள்.

---

## ஸாலமன்ஸில் கொரில்லா யுத்தம்.

### *தெற்கு பஸிபிக்கில் நேசதேசத்தாரின் வலிமை அதிகரித்து வருகிறது.*

*(டெயிலி டெலிகிராப்).*

ஸாலமன்ஸ் தீவுகளிலிருந்து ஜப்பானியர்கள் இப்பொழுது துரத்தியடிக்கப்படுகிறார்கள். அங்கு பிரிடிஷ் ரெஸிடெண்டு கமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கும் கர்னல் ஒவன் நோயல், ஜப்பானியர்கள் ஸாலமன்ஸ் தீவுகளை ஆக்கிரமித்தபொழுது அங்கிருந்து வெளியேற மறுத்த ஆங்கிலேயர்களும், ஆஸ்திரேலியர்களும், நியூஸிலாந்து ஜனங்களும் வெற்றிகரமாக கொரில்லாப் போரை நடத்தி வருகிறார்களென்று சொன்னார். ஆஸ்திரேலியர்களும், நியூஸிலாந்து ஜனங்களும் உள்நாட்டு ஜனங்களுடன் சேர்ந்துகொண்டு காடுகளில் ஜப்பானியர்களின் படை வரிசைகளுக்குப்பின் சென்று, ஜப்பானியப் போக்கு வரத்து மார்க்கங்களைத் துண்டித்துவிட்டார்களென்றும் பொய்யான தகவல்களை வெளியிட்டு ஜப்பானின் திட்டங்களைக் கெடுத்துவிட்டார்களென்றும் அவர் விவரங்களை வெளியிட்டார்.

கர்னல் நோயல், ஆக்ஸ்போர்டில் பிறந்தவர். அவர் குடியேற்ற நாடுகளில் 18 வருடங்களாக வேலைபார்த்து வருகிறார். "1942-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் ஜப்பானியர்கள் வந்தபொழுது நமது ஜனங்கள் தாக்கினார்கள். இப்பொழுதும் அவர்கள் எதிர்த்துப் போராடுகிறார்கள்" என்று அவர் சொன்னார்.

கிரீன் தீவுகளிலிருந்த 1,150 பொது மக்கள் பூராவையும் கர்னல் நோயலும், அவரிடம் இருந்த ஆஸ்திரேலிய ஆபீஸர்களும், அமெரிக்க கடற்படையும் காலிசெய்தார்கள். ஜப்பானிய விமான நடவடிக்கையிலிருந்து பொது ஜனங்களுக்கு ஆபத்து உண்டாகுமென்று மதித்து அவர்களை வெளியேற்றுவதற்கு நேசதேசத் தலைவர்கள் திட்டம் வகுத்தார்கள். அப்பொழுது நியூஸிலாந்து துருப்புகள், தீவுகளில் இறங்கின. அமெரிக்க கடற்படை கப்பல்களையும், ஸப்ளைகளையும் அழித்தது. குடால்கனலில் ஐந்து கிராமங்களைப் பொறுக்கி அவைகளுக்கு ஜனங்களை கர்னல் நோயல் அனுப்பிவிட்டார்.



"ஜப்பானியர்கள் நன்றாய் உதை வாங்குகிறார்கள். அவர்கள் நம்முடைய முன்னேற்றத்தைத் தடுக்கமுடியாது" என்று ஸாலமன்ஸிலுள்ள உயர்தர அமெரிக்க கடற்படை அதிகாரிகள் என்னிடம் சொன்னார்கள். நேசதேசக் கடற்படையின் வலிமையைக் கவனிக்கும்பொழுது பஸிபிக்கில் நமது தலைவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் அபாரமான நம்பிக்கைக்கும், உற்சாகத்துக்கும் சரியான ஞாயமிருக்கிறதென்று சொல்லலாம். பின்னணி தளங்களிலும், முன்னணி தளங்களிலும் இருக்கும் பொருளாதார ஐசுவர்யம் எந்த முன்னேற்ற நடவடிக்கையையும் மேற்கொள்ளப் போதுமானது. இதே விதமாக தெற்கு பஸிபிக்கிலும் நமது வலிமை அதிகரித்து வருகிறது. சென்ற 12 மாதங்களில் தெற்கு பஸிபிக்கில் நேசதேசத்தாரின் வலிமை அபரிமிதமாக ஓங்கிவிட்டது. யுத்தக் கப்பல்களைப் பழுதுபார்ப்பதற்கும் யுத்த தளவாடங்களை விநியோகம் செய்வதற்கும் முதல்தரமான வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

நியூகினியாவிலிருக்கும் ரபால் என்னும் தளம் தினசரி நமது வெடி விமானங்களாலும், சண்டை விமானங்களாலும் சில சமயங்களில், கடற்படை பீரங்கிகளாலும் நொருக்கப்பட்டு வருவதால் அது ஜப்பானின் தற்காப்பு நிலையமாக இப்பொழுது இருக்கவில்லை. மற்ற எந்த இடத்திலும் காணக்கூடாதவண்ணம் தெற்கு பஸிபிக்கில் நேசதேசத்தாரின் ஒற்றுமைப்பு காணப்படுகிறது. அமெரிக்க கடற்படையும் விமானப்படை மாரீன் படைகளும் ஏராளமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கும்பொழுது நியூஸிலாந்துப் படைகள் வெல்லாலாவல்லாவிலிருந்த ஜப்பானியர்களை வெளியேற்றிவிட்டார்கள். டிரெஷரித் தீவுகளைப் பிடித்தார்கள். கிரீன் தீவுகளை ஆக்கிரமித்துவிட்டார்கள்.

---

## பர்மாவின்மேல் விமானப் படையெடுப்பு.

### *பெருமிதமான நடவடிக்கைகள்.*

ஜப்பானிய 18-ம் படையை எதிர்த்து நிற்கும், ஜெனரல் ஸ்டில்வெல்லின் ஹுகாங் சமவெளிப் படைக்கும், அமெரிக்க, சீனப்படைகளுக்கும் உதவியாய் ஒத்துழைக்க, ராயல் விமானப் படையும், அமெரிக்க ராணுவ விமான பாதுகாப்பு விமானங்களும் ஆயிரக்கணக்கான மனிதர்களையும், தளவாடங்களையும், சிறிய வண்டிகளையும் ஜப்பானியர் ஆக்கிரமித்த பர்மாக் காடுகளில் கொண்டுவந்து விடுத்தன. அதன்பின் ஏற்பட்டுள்ள நடவடிக்கைகள் நேசதேசப் படைகள் புரிந்தபோரில் இதுகாறும் இதுபோன்ற தீவிர நடவடிக்கைகள் இல்லையென்றே சொல்லவேண்டும்.

அமெரிக்கத் தலைவரான ஜெனரல் ஒல்டின் தலைமையின் கீழுள்ள ராயல் விமானப் படையைச் சேர்ந்த போக்குவரத்து விமானங்கள் விமானமிறங்குட் ஏற்பாடுகள் செய்த 12 மணி நேரங்களுக்குப் பின் முதல் டகோடாக்களை இறக்கின. அதன் பின் தான் விமான மார்ஷல் பால்ட்வின் படைகளை இறக்கினார்.

காட்டில் நடக்கும் யுத்தங்கள் அங்குள்ள போக்குவரத்து சாதனங்களைப் பொருத்து இருக்கிறது. ஆனால் போக்குவரத்து சாதனங்கள் அவ்வளவு நலமாயில்லை. பெரும் போக்குவரத்துகளுக்கு லாயக்கற்றவைகளாகவும் உள்ளன. பலதடவைகளில் காடுகளில் பல பாகங்கள் வெட்டப்படவேண்டியும் இருக்கின்றன.

இப்பொழுது நடந்த நடவடிக்கைகள் படைகள் தரைமீது போக்குவரத்துக்கு விடலாம் என்பதைக் காண்பிப்பதன்னியில் எதிரிகளின் பரந்த பிரதேசத்திலும் வைத்து பராமரிக்கலாம் என்பதையும் காண்பிக்கின்றது. இதுபோல விமானப் போக்குவரத்துகளில் மனிதர்களையும், தளவாடங்களையும் இறக்கியதுமில்லை. இவ்வளவு படைகளை எதிரியின் இடங்களில் இறக்கியதுமில்லை.

### *12 மணிகளில் விமானமிறங்குமிடங்கள் தயார் செய்யப்பட்டன.*

இந்நடவடிக்கைகள் மிகவும் சாதுர்யமாயும், கபடமாயும் திட்டம் போடப்பட்டு விமானமிறங்குமிடங்கள் கட்டப்பட்ட பின்புதான் நடந்தன. கொடும் காட்டுப் பிரதேசங்களில் மனிதர்களை இறக்கிவிடவில்லை. அக்காட்டில் கட்டப்பட்ட விமான நிலயத்திலிறக்கித்தான் விடப்பட்டனர். பிரிடிஷ், அமெரிக்கப் படைகள், 12 மணி நேரங்களில் விமானமிறங்குமிடங்களைக் கட்டினர்.

தரைப்படைகள் இறங்கிய முதல் நாளே நடிவடிக்கை நடத்தப்பட்டன. அமெரிக்கக் கிளைடர்கள் இதில் முக்கிய பங்கு எடுத்துக்கொண்டன. நிலாவெளிச்சத்தில் படைகளை இறக்கின. விமானப் போக்குவரத்துக்கு வழிகள் செய்தபோது இதர கஷ்டங்களையும் எதிர்க்க வேண்டியதாயிற்று. தூசிகள் அதிகமாய்க்கிளப்பப்பட்டு விமானங்கள் செல்வதற்கும் சிறிது கஷ்டமாய் இருந்தது. இக்கஷ்டத்தைப் போக்குவதற்கு விமானங்களை எதிர் எதிரான திசைகளில் இறக்கி சமாளிக்கப்பட்டது.

### ஜப்பானிய விமான தளங்களின் மேல் தாக்குதல்கள்.

இங்கிலாந்திலும் நேசதேச விமான பலத்தை பக்கத்திலுள்ள எதிர் விமான நிலயம் ஒன்றைத் தாக்கி அதன் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. மார்ச்சு மாதம் 8-ம் தேதி பிற்பகல் ஷ-போவே, போ முதலிய எதிரிகள் ஆக்கிரமித்த பிரதேசங்களின்மேல் மஸ்டாங் விமானிகள் படையெடுத்து, அங்கு நடக்கும் ஜப்பானிய நடவடிக்கைகளையும், அந்நாடுகளை பலப்படுத்து தலையும் நமக்கு கண்டுவந்து தெரிவித்தார்கள். அதன் பயனாய் பல எதிரி விமானங்கள் இறங்குமிடங்களிலேயே நாசமாக்கப்பட்டன. ஆனால் ஒரு பகுதி வேட்டை விமானங்கள் பறந்துசென்று தப்பிக்கொண்டன.

இரவு நெருங்கும் சமயத்தில் மிட்செல், முஸ்டாங், ராயல் விமானப்படையைச் சேர்ந்த ஹரிகேன்கள் இவைகள் பறந்து அதிகமான நஷ்டதை உண்டுபண்ணி, ஜப்பானிய விமானங்கள் இறங்கும்போதே அவைகளைத் தாக்கின.

இயற்கையான் கஷ்டங்களினிடையேயும் விமானத் தாக்குதல் என்ன என்பதை பர்மாவின்மேல் படையெடுத்து நேசக்கட்சியினர் நிருபித்திருக்கின்றனர். இம்முறைகளை அடிக்கடி கையாளுவதால், நேசதேச விமானப்படைக்கு நல்ல பலன் கிடைக்குமென்பது நிச்சயம்.

---

## பர்மாவிலிருந்து ஆஸ்திரேலியா வரையில் திட்டங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன.

### வெவ்வேறு கம்மாண்டுகளின் வட்டாரங்கள்.

(எகனமிஸ்டு).

பஸிபிக்போரும் பர்மாபோரும் இரண்டு தனிப்பட்ட சேனாதிபதிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. பர்மாவில் அரக்கானிலும், வடக்கு பர்மாவிலும் லூயி மவுண்ட் பேட்டன் பிரபு சேனாதிபதி. அவருக்கு அடுத்த ஸ்தானத்தை சீனாவிலுள்ள அமெரிக்கப் படைகளுக்கு சேனாதிபதியும், ஜெனரல் சியாங்கே ஷேக்குக்கு காரியதரிசியுமான ஜெனரல் ஸ்டில்வெல் வகித்துவருகிறார்.

பஸிபிக்கில் கடற் தளபதி நிமிட்ஸ் உயர்தர சேனாதிபதி. ஆஸ்திரேலியாவின் எல்லைப்புரத்திலுள்ள தீவுகளின் தற்காப்பு சம்பந்தப்பட்டமட்டில் இவருடைய வட்டாரம் ஜெனரல் மாக் ஆர்தரின் வட்டாரத்துடன் கலந்து விடுகிறது. இரண்டு உயர்தர சேனாதிபதிகளுக்கும் பொதுவான ஒரு எதிரியைத் தாக்குகிறோம் என்ற ஒரு தொடர்புதானிருக்கிறது. அவர்களுடைய தனிப்பட்ட ராணுவ நடவடிக்கைகள் யுத்த போக்குக்கு சாதகமளிக்கக்கூடியவையா என்ற யுக்தமான பிரச்னை உண்டாகுகிறது.

அவருடைய நடவடிக்கை திட்டத்தைப்பற்றி லூயி மவுண்ட் பேடன் பிரபு வெளிப்படையாக ஒரு அபிப்பிராயத்தையும் வெளியிடவில்லை. "தீவு தீவாகத் தாவிச் செல்லுவது பிரயோஜனமற்றது" என்று ஜெனரல் மாக் ஆர்தர் சொல்லியிருக்கிறார். கடற் தளபதி நிமிட்ஸும் ஜெனரல் ஸ்டில்வெல்லும் தங்களுடைய உருவான திட்டங்களைப்பற்றித் தெளிவாக உரைத்துவிட்டார்கள். அவர்கள் தங்களுடைய திட்டங்களின்படி ஒன்றுபட்டு வேலை செய்தாலும் செய்யாவிட்டாலும் இரு திட்டங்களையும் ஒன்றுபடுத்திவிடலாம்.



மார்ஷல்ஸ், காரோலைன் தீவுகளையும், டச்சு கிழக்கிந்தியத் தீவுகளையும் பிடித்துக்கொண்டு பிலிப்பைன் தீவுகளை இருவகைப்பட்ட நடவடிக்கை மூலம் தாக்குவதென்று கடற் தளபதி நிமிட்ஸ் திட்டம் போட்டிருக்கிறார். அங்கிருந்து அவர் தெற்கு சைனாவின் கடற்கரைகளைத் தாக்கி காண்டனைத் திருப்பிப் பிடித்து ஜப்பானைத் தாக்குவதற்காக அங்கே ஒரு பெரிய தளத்தை அமைத்து விடலாமென்று திட்டம் போடுகிறார். ஜெனரல் ஸ்டில்வெல் இந்த திட்டத்தை எதிர்க்கவில்லை. சைனாவிலிருந்து தரைப்படை, விமானப்படையின் உதவியன்னியில் கடற்படை மூலமாக துருப்புகளை இறக்குவது சாவதானமில்லையென்று அவர் அபிப்பிராயப்படுகிறார். குவாங்டங்கை ஒன்றுபட்டு தாக்கும் இந்த நடவடிக்கையில் ஏற்பட்டிருக்கும் அபிப்பிராயபேதமானது முகான்மையைப் பற்றியும் கால அளவைப்பற்றியும் உண்டாகியிருக்கும் தகவாலே ஒழிய வேறில்லை. முதன் முதலாக சைனாவுக்குப் போகும் ரஸ்தாவைத் திறந்துவிட வேண்டுமென்றும் அதன் வழியாக சைனாவுக்கு விமானங்களையும் போக்குவரத்து வண்டிகளையும் ஏராளமாக் கொண்டு போக வேண்டுமென்றும் ஜெனரல் ஸ்டில்வெல் சொல்லுகிறார். இந்த நடவடிக்கை பிலிப்பைன்ஸையோ அல்லது மற்ற இடத்தையோ கடற்படை தாக்கும் நடவடிக்கைக்கு விரோதமானதா?

ஜெர்மனியை முறியடித்தவுடன் தளவாடங்களின் ஸப்ளைகளுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடி தீர்ந்துவிடும். ஆகிலும் முகான்மையாக எந்த நடவடிக்கையைத் துவக்குவது என்ற பிரச்னை தோன்றிவிடக்கூடும். இரண்டு போர் முனைகளுக்குமிடையே அநேக மைல்கள் கொண்ட பரப்புயிருந்தபோதிலும் ஈசன்ஹவரும் அவருடைய வேலைக்காரர்களும் போன்ற அதிகாரம் பெற்ற ஒரு கோஷ்டி இங்கு அமைக்கப்பட்டு ஐச்வர்யங்களின் ஸப்ளைக்கு முதன்மையளிப்பதும் போரை முதலில் துவக்கும் ஸ்தலமும் யுத்த அவசியத்தைப் பொருத்தது என்று பொருப்புடன் சொல்லக்கூடவில்லையே என்பது வருந்தத்தக்கது. ஐரோப்பாவிலும் கூட சேனைத்தலைவர்களுக்குள் தொடர்பு கிடையாது. கிழக்குப் போர் முனைக்கும் மேற்குப் போர் முனைக்கும் திட்டங்களில் ஒற்றுமை கிடையாது. ஆகிலும் அநேக மகாநாடுகளில் அவைகள் விவாதிக்கப்படுகின்றன. ஜப்பானை எதிர்த்துத் தாக்கும் நடவடிக்கையில் விபரீதங்கள் ஏற்பட்டால் பர்மாவிலிருந்து ஆஸ்திரேலியா, மத்திய பஸிபிக் கடல் வரையில் நடவடிக்கைகளுக்குத் திட்டம் போடும் அமெரிக்க ராணுவ அதிகாரிகள் தான் இதற்கு ஜவாப்தாரிகள். அவர்கள் தான் குறைகளை நீக்கவேண்டும்.

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 192. (2-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 8- 4-44 | நார்த்தாமலை | ... மாலை | 7.00 | 12- 4-44 | பனையப்பட்டி | ... மாலை | 7.00 |
| 9- 4-44 | „ | ... „ | 7.00 | „ | ராங்கியம் | ... „ | 7.30 |
| 10- 4-44 | „ | ... „ | 7.00 | 13- 4-44 | களமாவூர் | ... „ | 7.00 |
| 11- 4-44 | வெங்களூர் | ... „ | 7.00 | „ | நல்லூர் | ... „ | 7.30 |
| „ | கோனுபட்டு | ... „ | 7.30 | 14- 4-44 | குடுமியாமலை | ... „ | 7.00 |
| | | | | „ | பரம்பூர் | ... „ | 7.30 |

### பிரஸங்கம் 193. (3-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 15- 4-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 19- 4-44 | ராமச்சந்திரபுரம் | ... மாலை | 7.00 |
| 16- 4-44 | குராக்காடு | ... „ | 7.00 | „ | ராயவரம் | ... „ | 7.30 |
| „ | கோட்டைக்காடு | ... „ | 7.30 | 20- 4-44 | வாளரமாணிக்கம் | ... „ | 7.00 |
| 17- 4-44 | தென்னதிரயன்பட்டி | ... „ | 7.00 | „ | வம்பல் | ... „ | 7.30 |
| „ | விசலூர் | ... „ | 7.30 | 21- 4-44 | விராலிமலை | ... „ | 7.00 |
| 18- 4-44 | மழையூர் | ... „ | 7.00 | „ | பொருவாய் | ... „ | 7.30 |
| „ | கரம்பக்குடி | ... „ | 7.30 | | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 8— 4—44 | நார்த்தாமலை. | 15— 4—44 | பொன்னமராவதி. |
| 9— 4—44 | „ | 16— 4—44 | தீத்தான்விடுதி. |
| 10— 4—44 | „ | 18— 4—44 | ராமச்சந்திரபுரம். |
| 11— 4—44 | கோனுபட்டு. | 19— 4—44 | ராயவரம். |
| 12— 4—44 | கரம்பக்குடி. | 20— 4—44 | ஆலங்குடி. |
| 13— 4—44 | கிழாநிலை. | 21— 4—44 | புதுக்கோட்டை. |
| 14— 4—44 | புதுக்கோட்டை. | | |

———

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—13-4-44.

69411

# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம் ஞு ஏப்ரல்மீ 15உ [ந. 193

தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CXCIII.

## மேன்மைதங்கிய மதராஸ் மாகாண கவர்னர் அவர்களின் வேண்டுகோள்.

கஷ்டப்படுவோர்க்கு உதவுதல் மனித சமூகத்தின் உன்னத லக்ஷியங்களில் ஒன்று. அதை நிறைவேற்றிவைக்க செஞ்சிலுவை செண்ட் ஜான் கூட்டு யுத்த ஸ்தாபனம் முயற்சிக்கிறது.

நோயாளிகளுக்கும், காயப்பட்டவர்களுக்கும் சௌகரியங்களையும், எதிரி வசமிருக்கும் கைதிகளுக்குத் தேவையான வசதிகளையும் இது அளிக்கிறது.

ஒப்புயர்வில்லாத தம் தாராளத் தன்மையையும், இந்தத் தலை சிறந்த திருப்பணியில் தமக்கு ஏற்பட்டுள்ள ஆர்வத்தையும் சென்னை மக்கள் ஏற்கனவே காண்பித்திருப்பது போலவே, மீண்டும் காட்டுவார்கள் என்னும் பூரண நம்பிக்கையுடன், அவர்களுக்கு இந்த வேண்டுகோளை நான் விடுக்கிறேன்.

(ஒப்பம்) ஆர்தர் ஹோப்,
சென்னை கவர்னர்.

## பிறர் துன்பங்களைக !

"பிறர் துன்பங்களைக"! என்பது ஒரு அழகிய சொற்றொடர்.

இதன் அமைப்பே, ஒருவருக்குள்ள கோபம், வெறுப்பு, பழிவாங்குந் தன்மை ஆகியவற்றைப் போக்கி, இரக்கம், கருணை, உதவி ஆகிய எண்ணங்களை ஊக்கும்.

மனித அமைப்பில், உள்ளம் நெகிழும் இன்பத் துறைகளில், நாள்தோறும் கொஞ்ச நேரமாவது, சில வாரங்களை செலவிட்டு, சென்னையிலுள்ள நாம் வாழுவதனால், நம் மனோபலம் கெட்டுப்போகாது.

விரைவில், திடீரென்று, ஒரு நாடு 5 லட்சம் பேர்களைப் பலி கொடுக்க, வருத்தத்தோடு அல்ல, பெருமிதத்தோடு எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது என்று இன்றையப் பத்திரிகைகள் கூறுகின்றன.

சென்ற நான்கு வருஷங்களாக ஏழு கடல்களிலும் மூன்று கண்டங்களிலும், அநேக தீவுக் கூட்டங்களிலும், ஆகாய வீதிகளிலும் ரத்தக் களறியாக்கிய இந்த யுத்தத்திற்கு பலியானவர்களுக்குத் துணையாக, இன்னும் 5 லட்சம் பேர்களைப் பலி கொடுக்க ஒரு தனி நாடு துணிந்திருக்கிறது.

இது எந்த நாடாயிருந்தாலும் பரவாயில்லை. இதே நிலையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் மற்ற பல நாடுகளுமுண்டு. இங்கே நேரும் சேதங்களில் பெரும் பகுதி, மரணங்கள் தான்.

என்றாலும், இன்னும் நூறாயிரக் கணக்கானவர்களுக்கு அதிகமான பேர்கள், கொல்லப்படாமல் இருக்கிறார்கள். உடனடியாக ஏற்படக் கூடிய மரணத்திற்கு இவர்கள் தப்பித்துக் கொள்ளுகிறார்கள். இவர்கள் எந்த நாட்டவராயிருந்தாலும் பரவாயில்லை. அவர்களும் மக்கள் இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள், வலியவர்கள், வீரர்கள். அவர்கள் நோய்ப்பட்டோ, காயப்பட்டோ, யுத்தக் கைதிகளாகவோ இருக்கலாம்.

அவர்களுக்கு இப்போதே கட்டாயம் தேவையா யிருப்பவை, உலகம் முழுவதிலும் செஞ்சிலுவையும் செண்ட் ஜானும் அளிக்கும் எல்லா வகை உதவிகளுந்தான். இந்த உதவிகளையும், இன்னும் அதிகமாகவும், அது வழங்கக் கூடும்.

இந்த மகத்தான ஸ்தாபனம் தன்னால் இயன்றவரை மிகச் சிறந்த முறையில் தொண்டாற்றிக் கொண்டுவருகிறது. ஆனால், போதுமான அளவிற்குத் தொண்டாற்ற அதனால் முடியாது. அதற்கு உதவி மிகவும் அவசியம். அந்த ஸ்தாபனம் இந்த வருஷத்தில் மட்டும் இந்தியாவிற்காக மட்டும், தான் எதிர்பார்க்கும் வேலையைச் செய்து முடிக்க, 3 கோடி ரூபாய் தேவையாயிருக்கிறது. இன்னும் எதிர் பாராத செலவுகளும் வந்து சேரும்.

இதற்கு சென்னை உதவும், அதுவும் கட்டாயம் உதவும். "பிறர் துன்பங்களைக."!

---

## வார யுத்தச் செய்திகள்

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 3—4—44 (திங்கட்கிழமை). | நேசதேச வெடி விமானங்கள் ஹங்கேரியின் தலைநகரமான புடாபெஸ்டு பேரில் பகலில் குண்டுமாரி பொழிந்தன. |
| | நேசதேசத்தார்கள் மார்ஷல்ஸ் தீவுகளில் 11 தீவுகளைப் பிடித்தார்கள். |
| 4—4—44 (செவ்வாய்க்கிழமை). | ருஷ்யர்கள் ஹோட்டினைப் பிடித்தனர். |
| | நேசதேசத்தார்கள் ருமேனியாவின் தலைநகரமான புகாரஸ்டு பேரில் குண்டுகளைப் பொழிந்தார்கள். |
| 5—4—44 (புதன்கிழமை). | நேசதேசத்தார்கள் ருமேனியாவிலுள்ள போலஸ்தி எண்ணெய் கிணறுகள் உள்ள பிரதேசத்தில்வெடிகுண்டுகளைப்போட்டார்கள். |
| | ருஷ்யர்கள் ஒடெஸ்ஸாவுக்கு சமீபத்திலுள்ள ராசியல்னயாவைப் பிடித்தார்கள். |
| 7—4—44 (வெள்ளிக்கிழமை). | ஜெனரல் கிராடு பிரெஞ்சுப் படைகளின் சேனாதிபதி உத்தியோகத்தை ராஜீனாமாச் செய்தார். |
| 8—4—44 (சனிக்கிழமை). | ருஷ்யர்கள் ஸெக்-ருமேனிய எல்லைச் சரகத்தை அடைந்தார்கள். |
| 9—4—44 (ஞாயிற்றுக்கிழமை). | ஜப்பானியர்கள் மணிப்பூர் ஸமஸ்தானத்தின் எல்லையிலுள்ள டாமுவைப் பிடித்தார்கள். |



### (B)-செய்திச் சுருக்கம்.

**ருஷ்யா.**—முதலாவது யூக்ரேனியப்படை கார்பேதியன் மலையடிவாரத்திலுள்ள ஸெக்—ருமேனிய எல்லைச் சரகத்துக்கு 200 கிலோமீடர் கொண்ட அளவிற்கு வந்திருக்கிறது. இந்த சேவையைப்பாராட்டி மார்ஷல் ஜுகாவின் படைகளுக்கு "கார்பேதியா" என்ற பெயர் வழங்கப்பட்டிருக்கிறது. அப்படைகள் பூகோவினா, ருமேனியா எல்லைச்சரகத்திற்கு சமீபத்திலுள்ள செரத் என்னுமிடத்தையும் பிடித்துக்கொண்டார்கள். ஸெக்கோஸ்லாவேகியாவின் எல்லைச் சரகத்தை அடைந்ததன் மூலம் செம்படை ஹங்கேரியர்கள் ஆக்கிரமித்திருக்கும் பிரதேசத்திற்கு வந்துவிட்டது.

இரண்டாவது யூக்ரேனியப் படைகளைச்சேர்ந்த துருப்புகள் ஜாஸிக்கு வடக்கில் பர்த் நதியை 170 கிலோமீடர் அகலத்திற்குத் தாண்டிவிட்டனர். பொடோஸானி, டொரோகாயி என்ற இடங்கள் பிடிக்கப்பட்டன.

ருஷ்யப்படைகள் ஒடெஸ்ஸாவுக்கு 7 மைல்களுக்குள் வந்துவிட்டன. குகாஸ்க் நதியின் இருகிளைகளின் மத்தியில் ஊடுருவிச்சென்று வருகின்றன. ஒடெஸ்ஸா முற்றுகைக்குள்ளாகிவிட்டது. ஜெர்மன் படைகள் தரை மூலமாகப் பின்வாங்க முடியாமல் ஆக்கர்மான் ரஸ்தா அடைபட்டுவிட்டது. ராஸ்டெல்னேயா என்னுமிடத்தில் ஐந்து அல்லது ஆறு ஜெர்மன் டிவிஷன் படைகள் துண்டிக்கப்பட்டுவிட்டன. ஸ்காலாப் பகுதியில் கடும்போர் நடைபெறுகிறது.

[கடைசியாக வந்த செய்தியில் ஒடெஸ்ஸா விழுந்துவிட்டதென்று கேள்விப்படுகிறோம். நிகோலேயெவ், ஒடெஸ்ஸா பிடிபட்டபின் செபாஸ்டபூலுக்கு ஆபத்து உண்டாகிவிட்டது. பெரிகாப் பிடிபட்டபின் அயர்வு ஏற்பட்டிருந்தது. இப்பொழுது கிரிமியா யுத்தம் துவங்கிவிட்டது.

ருமேனியாவிற்குள் சென்ற ருஷ்யப்படைகள் 200 கிராமங்களைப் பிடித்துவிட்டார்கள். இவ்விடங்களிலுள்ள பொது ஜனங்கள் எதிர்த்து நிற்கவில்லை. ஜெர்மானியர்கள் போலஸ்தி எண்ணெய்ப் பிரதேசங்களைப் பிடித்துவிட்டார்கள். அவர்களின் தலைமை காரியாலம் புகாரெஸ்டுக்கு மாற்றப்பட்டுவிட்டது.

ஸெக்கோஸ்லாவேகியாவுக்கான யுத்தம் கார்பேதிய மலைகளில் துவங்கிவிட்டது.

—பத்திராதிபர்.]

**இதாலி.**—காஸினோவுக்கு மேலேயுள்ள மாரோன் மலையைத் திரும்பிப் பிடிக்க ஜெர்மானியர் செய்த பிரயத்னம் வீணாகிவிட்டது. எதிரிகள் கார்ஸியானோ நதிப்பள்ளத்தாக்கில் பலமாகத் தாக்கிவருகிறார்கள். காஸினோவில் அமைதி நிலவுகிறது.

நேசதேசப் படைகள் ஆன்ஸியோ முன்னேறும் வாசலில் பாடிக்னியோனில் மற்றொரு கேந்திரஸ்தானத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

**விமான நடவடிக்கை.**—முதன் முதலாக புடாபெஸ்டும் புகாரெஸ்டும் தாக்கப்பட்டன. ஏப்ரல் 5-ம் தேதியன்று போலஸ்தி எண்ணெய்ப் பிரதேசங்கள் தாக்கப்பட்டன. ஜெர்மனியில் பெர்லின், மூனிக், ப்ரன்ஸ்விக் முதலிய இடங்கள் தாக்கப்பட்டன.

**பஸிபிக்போர்.**—மார்ஷல் தீவுகளில் மேலும் 11 பவழமலைகள் பிடிபட்டன. அட்மிரால்டி தீவுக் கூட்டத்தைச்சேர்ந்த ராம்பூடோ பிடிபட்டது.

காரொலைன் தீவுக்கூட்டம் தாக்கப்பட்டபொழுது எதிரியின் 25 கப்பல்களும் 160 விமானங்களும் நாசமாக்கப்பட்டன.

ஜப்பானியர்கள் நியூபிரிடனிலுள்ள காஸ்மாடா, ஹாப்கின்ஸ் முனையையும் காலிசெய்துவிட்டார்கள். அத்தீவின் பெரும்பாகம் நேசதேச வசமாகிவிட்டது.

**இந்தோ-பர்மா எல்லைச் சரகம்.**—கோஹிமாவுக்கு ஆபத்துண்டாகிவிட்டது. கோஹிமாவிலிருந்து இம்பாலுக்குப் போகும் ரஸ்தா துண்டிக்கப்பட்டுவிட்டது. இம்பால் அநேகமாக சுற்றி வளைக்கப்பட்டுவிட்டது. இம்பாலை ரக்ஷிப்பதற்காக 17-வது இந்திய டிவிஷன் இம்பாலுக்குத் திரும்பிவந்துவிட்டது.

சீனப் படைகள் மோஹாங் பள்ளத்தாக்கின் உயர் வரைகளில் மாராஸ்காடாங்கையும், மிகலாயிகார் டாங்கையும் பிடித்துவிட்டன.

ஜப்பானியர்கள் மணிப்பூர் ஸமஸ்தானத்தின் எல்லையிலுள்ள டாமுவைப் பிடித்தார்கள்.

## சத்துருவினுடையவும், சத்துருவினுல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**2—4—44.** (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—(116 *எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன. 33 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை*).

தொழிற்சாலை.—*ஆஸ்திரியாவிலுள்ள ஸ்டேயர்* (Stayer).

ரயில் ரோடுகள்.—*யூகோஸ்லாவியாவிலுள்ள பிராட்* (Brod), *மோஸ்டர்* (Mostar), *பிகாக்* (Bihca).

இதாலி (Italy).

ஸப்ளைக் துவியல்கள், துருப்பு முகாம்கள்.—*யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.*

ருஷ்யா (Russia).

(40 *எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன*).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

தூரக்கிழக்கு (Far East).

*டிரக்கிலுள்ள டப்லன்* (Dublon).

3 ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—*மார்ஷல்ஸ்* (Marshalls).

விமான நிலயங்கள்.—*ரபால்* (Rabaul).

படகுகள்.—*நியூ கினி* (New Guinea).

பர்மா (Burma).

எதிரி சைனியங்கள், படகுகள்.—*அரக்கான்* (Arakan), *கலடான்* (Kaladan), *மாயூ* (Mayu).

சைனியங்கள், டாங்கிகள் மோட்டார் போக்குவரத்து சாதனங்கள், இதர இலக்குகள்.—*சின் மலைகள்* (Chin Hills), *சிண்ட்வின்* (Chindwin), *வடமேற்கு பர்மா.*

தளவாடக் குவியல்கள்.—*இண்டா* (Indaw).

விமான நிலயம்.—*அனிஸாகன்* (Anisakan).

**3—4—44.** (திங்கட்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—ரயில் தளங்கள்—*ஹங்கேரியின் தலைநகரான புடாபெஸ்டு* (Budapest), *யூகோஸ்லாவியாவிலுள்ள நின்* (Knin), *பிராட்* (Brod), *டிர்னிஸ்* (Drnis).

இதாலி (Italy).

(26 *எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன. 13 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை*).

பாலம்.—*ஆர்வியெட்டோவிற்கு வடக்கு.*

ஸப்ளைக் துவியல்கள், துருப்பு முகாம்கள்.—*யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.*

ருஷ்யா (Russia).

(79 *எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன*).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—*ரபால்* (Rabaul).

இலக்குகள்.—*வீவாக்* (Wewak).

பேன்பராய் விமான நிலயம்.—*டிமோர்* (Timor).

பர்மா (Burma).

ரயில்வே ஸ்டேஷன்.—*யீயூ* (Yeu).

பாலங்கள்.—*டாங்கன்* (Tangon), *பாக்கான்* (Paukkan).

எண்ணெய் கிணறுகள், மின்சார ஸ்தாபனங்கள்.—*தென் பர்மா* (S. Burma), *யெனங்யாங்* (Yenangyaung) *உள்பட.*

கட்டடங்கள்.—*சாக்* (Chauk).

எதிரி சைனியங்கள் போக்குவரத்துகள்.—*அரக்கான்* (Arakan), *மாயூ* (Mayu), *கலடான்* (Kaladan).

இலக்குகள்.—*பூதிடாங்* (Buthidaung), *சின் மலைகள்* (Chin Hills).

பேகு (Pegu), மோல்மீன் Moulmein).

**4—4—44.** (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—(49 *எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன*).

*ருமேனியாவின் தலைநகரான புகாரெஸ்டு* (Bucharest).

ரயில் தளங்கள்.—*நின்* (Knin), *பிராட்* (Brod), *டிரனிஸ்* (Drnis).

இரவு.—கோலோன் (Cologne).

இதர இலக்குகள்.—*ஜெர்மனியிலுள்ள ரூர்* (Ruhr).

இதாலி (Italy).

எதிரி சைனியங்கள், போக்குவரத்துகள்.—*யுத்தம் நடக்கும் பிரதேசங்களில்.*

ருஷ்யா (Russia).

(42 *எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன*).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய சைனியங்கள்.—*மார்ஷல்ஸ்* (Marshalls).

ஜப்பானிய இலக்குகள்.—*நியூ கினியிலுள்ள ரபால்* (Rabaul), *வீவாக்* (Wewak), *டிமோரிலுள்ள கொபாங்* (Koepang), *லாடெம்* (Lautem).

பர்மா (Burma).

விமான நிலயம்.—*ஆங்பன்* (Aungban)—(24 *ஜப்பானிய விமானங்கள் நாசமாக்கப்பட்டன*).

ஜப்பானிய தலைமை ஸ்தாபனம்.—*நாகார்ன்* (Nagorn), *ஸாவர்ன்* (Sawarn).

ரயில்வே தளங்கள், படகுகள்.—*மோல்மீன்* (Moulmein).



எதிரி சைனியங்கள்.—*அரக்கான்* (Arakan), *மாயூ* (Mayu), *கலடான்* (Kaladan) *பிரதேசங்கள்.*

டாங்கிகள், மோட்டார் போக்குவரத்துகள்.—*சின் மலைகள்* (Chin Hills), *நாகா* (Naga Hills), *வடமேற்கு பர்மா* (N.W.Burma).

**5—4—44.** (புதன்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

எண்ணெய்க் கிணறுகள்.—*ருமேனியாவிலுள்ள புலோயெஸ்ட்டி* (Ploesti).

ரயில்வே ஸ்தலம்.—யூகோஸ்லாவியாவிலுள்ள *நிஷ்* (Nish).

ஜெர்மன் விமான நிலயங்கள்.—*பெர்லின்* (Berlin), *மியூனிச்* (Munich).

இலக்குகள்.—*வடக்கு பிரான்ஸ்*(N. France), *பாஸ் டி கலே* (Pas De Calais).

இரவு.—விமான தொழிற்சாலை.— *டூலான்* (Toulan).

இதாலி (Italy).

எதிரி சைனியங்கள், ஸப்ளை ஸ்தாபனங்கள்.—*இதாலியில் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.*

ருஷ்யா ((Russia).

(44 *எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன*).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

தூரக்கிழக்கு (Far East).

ஸ்டோர்கள்.—*வீவாக்* (Wewak).

விமான நிலயங்கள்.—*பொனுபி* (Ponape).

4 ஜப்பானிய சைனியங்கள்.—*மார்ஷல்ஸ்* (Marshalls).

ஜப்பானிய ஸ்தாபனம்.—*ஹாலண்டியா* (Hollandia).

பர்மா (Burma).

இலக்குகள்.—*கலடான்* (Kaladan), *அரக்கான்* (Arakan), *மாயூ* (Mayu).

எதிரி சைனியங்கள்.—*சின் மலைகள்* (Chin Hills), *சிண்ட்வின்* (Chindwin); *வடமேற்கு பர்மா* (N. W. Burma).

**6—4—44.** (வியாழக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—இலக்குகள்.—*பாஸ் டி கலே* (Pas De Calais), *வடக்கு பிரான்ஸ்* (N. France).

இரவு.—ஹாம்பர்க் (Hamburg).

இலக்குகள்.—*ரூர்* (Ruhr), *ரைன்லாந்து* (Rhineland).

இதாலி (Italy).

யூகோஸ்லாவியா (Yugoslavia).

மின்சார நிலயம்.—*டெர்னி* (Terni).

விமான நிலயம்.—*பெருகியா* (Pergugia).

ரயில் பாலம்.—*ஆர்வியெட்டோ* (Orvieto).

தொழிற்சாலை.—*போபோலி* (Popoli).

விமான நிலயங்கள்.—*ஸாக்ரெப்* (Zagreb), *பாஞ்சாலுகா* (Banjaluka).

போக்குவரத்துகள்.—*ரோம்* (Rome).

ருஷ்யா (Russia).

(45 *எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன*).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய தளம்.—*காரோலைன்ஸ்* (Carolines). (25 *ஜப்பானியக் கப்பலும், 160 விமானங்களும் நாசமாக்கப்பட்டன*).

எண்ணெய் வண்டி.—*ஸெமாயோ* (Semaoe) *தீவு.*

வியாபாரக் கப்பல்.—*வீவாக்* (Wewak).

படகுகள்.—*அலெக்ஸிஸ்ஷாபன்* (Alexishafen).

விமான நிலயம்.—*டிரக்* (Truk).

ஜப்பானிய சைனியங்கள்.—*பொனுபி* (Ponape).

பர்மா (Burma).

எதிரித் துருப்புகள், பீரங்கி ஸ்தாபனங்கள்.—*வடக்கு பர்மா* (N. Burma).

எண்ணெய்க் குவியல்கள்.—*மானிவெட்* (Manywet).

ரேடியோ ஸ்டேஷன்.—*மொகாங்* (Mogaung).

இலக்குகள்.—*பாஸ்ஸின்* (Bassein), *ஹென்ஸாடா* (Henzada).

இலக்குகள்.—*அரக்கான்* (Arakan); *கலடான்* (Kaladan); *சின் மலைகள்* (Chin Hills); *சிண்ட்வின்* (Chindwin); *வடமேற்கு பர்மா* (N. W. Burma).

**7—4—44.** (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

சுரங்கவெடி பாவுதல்.—*எதிரி ஜலப்பிராந்தியங்களில்.*

இதாலி (Italy).

எதிரி சைனியங்கள், கிட்டங்கிகள், குவியல்கள், டாங்கிகள்.—*யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.*

ருஷ்யா (Russia).

(92 *எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன*).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய தளங்கள்.—*காரோலைன்ஸ்* (Carolines); *மார்ஷல்ஸ்* (Marshalls).

படகுகள் எதிரி சைனியங்கள்.—*அரக்கான்* (Arakan), *மாயு* (Mayu), *கலடான்* (Kaladan) *பிரதேசங்கள்.*

இலக்குகள்.—*சிண்ட்வின்* (Chindwin), *சின் மலைகள்* (Chin Hills), *நாகா மலைகள்* (Naga Hills) *வடமேற்கு பர்மா* (N. W. Burma).

தளவாடக் குவியல்கள்.— *மோகாங்கிற்கு மேற்கு* (W. of Mogaung).

ரயில் இலக்குகள்.—தென் பர்மா (S.Burma). மத்திய பர்மா (Central Burma).
பீரங்கி ஸ்தாபனங்கள்.—மாலு (Malu) பிரதேசம்.

**8—4—44.** (சனிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—(148 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன; 58 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
விமானத் தொழிற்சாலைகள்.—பிரன்ஸ்விக் (Brunswick).
விமான நிலயங்கள்.—ரூரிற்கு வடக்கு (Ruhr North), பிராங்பர்ட் (Frankfurt).
இரவு.-ஜெர்மனியிலுள்ள எஸ்ஸேன்(Essen).
இலக்குகள்.—மேற்கு ஜெர்மனி (Western Germany).
சுரங்கவேடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

இதாலி (Italy).

விமான நிலயம்.—ரியெடி (Rieti).
பாலம்.—பாஸ்ட்டியா (Bastia).
தொழிற்சாலை.—பொபோலி (Popoli).
துவியல்கள் மோட்டார் போக்குவரத்துகள்.—நிக்ஸிக் (Niksic).
எதிரி சைனியங்கள் போக்குவரத்துகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

ருஷ்யா (Russia).

(71 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய தளங்கள்.-பிஸ்மார்க் (Bismarck).

பர்மா (Burma).

சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேமிக்குமிடங்கள்.—மாண்டலே(Mandalay).
விக்டோரி ஏரிக்கரையிலுள்ள துவியல்கள்.—ரங்கூன் (Rangoon).
போக்குவரத்துகள்.—சியாம் (Siam).
ரயில்வே ஸ்டேஷன்.—செயிங்மாய் (Chiengmai), தென் பர்மா (South Burma).
பெட்ரோல் சேமிப்பு.—இண்டா (Indaw).
இலக்குகள்.—அரக்கான் (Arakan), மாயூ (Mayu), கலடான்(Kaladan), சின் மலைகள் (Chin Hills), சிண்ட்வின் (Chindwin), மணிப்பூர் (Manipur).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**3—4—44.** (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**4—4—44.** (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**5—4—44.** (புதன்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**6—4—44.** (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

ஒரு தகவலும் இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

நேசதேச விமான நிலயம்.—நானிங் (Nanning), (9 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

**7—4—44.** (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia). தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**8—4—44.** (சனிக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**9—4—44.** (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**ருஷ்யப் போர்முனை.** மார்ச்சு மாதம் 4-ம் தேதிமுதல் மார்ச்சு 31-ம் தேதிக்குள் மார்ஷல் ஜுகாவிடமுள்ள முதல் யூக்ரேனியப் படைகள் ருஷ்யாவில் 41,940 கிலோமீடர் பிரதேசத்தை விடுதலை செய்துவிட்டன. வினிட்ஸா, காமெண்ட்ஸ்—போடோல்ஸ்கி, செர்னோவிட்ஸ் முதலிய மத்தியஸ்தானங்களையும், 57 நகரங்களையும், 11 இருப்புப்பாதை ஜங்க்ஷன்களையும், 4,448 சிறிய நகரங்களையும் கிராமங்களையும் பிடித்தன. ஜெர்மன் படைகளை இரு துண்டாகப் பிளந்துவிட்டன. ஸகாலா பிராந்தியத்தில்



15 டிவிஷன் ஜெர்மன் துருப்புகளை அழித்தன. ருமேனியாவுக்குள் புகுந்து ஜாஸ்ஸி—டொரோஷாய் இருப்புப்பாதையைத் துண்டித்தன. 50 கிராமங்களைப் பிடித்தன. ஒரு மாத அளவிற்குள் இந்த சேனை பிரமாதமான லாபங்களை அடைந்திருக்கிறது. அவைகள் இப்பொழுது ஜாஸ்ஸியையும் போலஸ்தி எண்ணெய் பிரதேசங்களையும் நோக்கி முன்னேறுகின்றன. கால சக்கரத்தின் சுழல் பதில் நடவடிக்கையைச் செய்துவிட்டது. இரண்டு வருஷங்களுக்கு முன் ஜெர்மன் படைகள் காகேசிய எண்ணெய் பிரதேசங்களுக்குச் செல்ல ருஷ்யாவில் முன்னேறின. இப்பொழுது ருஷ்யப்படைகள் ருமேனியாவிலுள்ள எண்ணெய் பிரதேசத்திற்காக அச்சு நாட்டார் வசமுள்ள ஐரோப்பாவுக்குள் முன்னேறிவருகின்றன.

மற்ற பகுதிகளிலும் ருஷ்யாவின் ஏராளமான முன்னேற்றம் கவனார்கமுள்ளது.

1. மூன்றுவது யூக்ரேனியப்படை ஒடெஸ்ஸாவுக்கு முன்னேறுகின்றன.

2. மற்றொரு ஸ்டாலின்கிராட் நடவடிக்கையை ஏற்பாடுசெய்ய ருஷ்யாவின் குதிரைப் படைகள் ஸகாலாப்பகுதியில் 1,80,000 ஜெர்மானியர்களைச் சுற்றி வளைத்துக்கொண்டிருக்கின்றன.

3. மார்ஷல் ஜுகாவ் போலந்தின் மத்தியிலுள்ள ஜெர்மன் தளமான லுவாவை நோக்கியும் பூகோவினவுக்குள்ளும் முன்னேறுகிறார்.

4. முதன்முதலாக பூடாபெஸ்டும் பூகாரெஸ்டும் குண்டுகளால் தாக்கப்பட்டன.

5. நிகோலேயேவ் பிடிபட்டதென்பது மற்றொரு பிரமாதமான சம்பவம். நிகோலேயேவ் என்பது பிரிடிஷ் போர்ட்ஸ்மத்தைப்போல கருங்கடலில் ஸெபாஸ்டபோலைக்காட்டிலும் முக்கியமான ருஷ்யத் துறைமுகம். ஜெர்மன் படைகள் தெற்கு முகமாகப் பின்வாங்கியிருப்பதால் கருங்கடல் பிரதேசம் மிகவும் முக்யத்வமுள்ளதாக ஏற்பட்டுவிட்டது. அநேக ருமேனிய டிவிஷன்கள் உள்பட 17-வது ஜெர்மன் படை கிரிமியாவில் துண்டிக்கப்பட்டுவிட்டது. அப்படைகள் கடல் மார்க்கமாகத்தான் தப்பி ஓடமுடியும். கருங்கடலில் ருஷ்யர்களிடம் ஒரு யுத்தக்கப்பலும், மூன்று சஞ்சாரிகளும், 12 நாசகாரிகளும், அநேக நீர்மூழ்கிகளுமிருக்கின்றன. அதைத்தாக்க ஜெர்மானியர்கள் 2 அல்லது 3 ருமேனிய நாசகாரிகளையும் சில மீன் வெடிப்படைகளையும்தான் உபயோகப்படுத்த முடியும்.

நிகோலேயேவிலிருந்து ருஷ்யர்கள் டான்யூப் நதிப்பள்ளத்தாக்கை தரை மூலமாகவும் கடல் மூலமாகவும் தாக்கக்கூடும். நிகோலேயேவிலிருந்து ருமேனியாவின் முக்கிய துறைமுகமான கான்ஸ்டன்ஸாவையும், பல்கேரியாக்கரையிலுள்ள வார்னாவையும் தாக்கிவிடலாம்.

மாரிகாலம் பூராவிலும் முன்னேறித்தாக்கி ருஷ்யர்கள் எதிரிகளைக் கலக்கிவிட்டார்கள். பெஸ்ஸாரபியாவைக் கைப்பற்றுவதற்கும் ஒடெஸ்ஸாவிலிருந்து எதிரியைத் துரத்தியடிப்பதற்கும் அவர்கள் சக்தியுள்ளவர்கள். கார்பேதிய மலைகள் மகத்தான இடையூறுகள். ஆகிலும் அவைகளை வடக்கிலும் வடகிழக்கிலும் யூக்ரேனின் பீடபூமிகள் வழியாகவும் தெற்குப் பக்கத்தில் டான்யூப் நதி சமவெளி வழியாகவும் சுற்றிச்சென்று தாண்டி விடலாம். மேலும் அம்மலைகளில் கடந்து செல்லக்கூடிய அநேக கணவாய்களுமிருக்கின்றன.

[கடைசியாக வந்த செய்தியில் ஒடெஸ்ஸா விழுந்துவிட்டதென்று கேள்விப்படுகிறோம். நிகோலேயெவ், ஒடெஸ்ஸா பிடிபட்டபின் செபாஸ்டபூலுக்கு ஆபத்து உண்டாகிவிட்டது. பெரிகாப் பிடிபட்டபின் அயர்வு ஏற்பட்டிருந்தது. இப்பொழுது கிரிமியா யுத்தம் துவங்கிவிட்டது.

ருமேனியாவிற்குள் சென்ற ருஷ்யப் படைகள் 200 கிராமங்களைப் பிடித்துவிட்டார்கள். இவ்விடங்களிலுள்ள பொது ஜனங்கள் எதிர்த்து நிற்கவில்லை. ஜெர்மானியர்கள் போலஸ்தி எண்ணெய்ப் பிரதேசங்களைப் பிடித்துவிட்டார்கள். அவர்களின் தலைமை காரியாலயம் புகாரெஸ்டுக்கு மாற்றப்பட்டுவிட்டது.

ஸெக்கோஸ்லாவேகியாவுக்கான யுத்தம் கார்பேதிய மலைகளில் துவங்கிவிட்டது.

—பத்திராதிபர்.]

வி வி வி வி வி

**ஜெர்மன் நடவடிக்கையின் தோற்றங்கள்.** யூக்ரேனிலும் பால்கன் நாடுகளிலும் ஜெர்மனியின் நிலைமை திருப்திகரமாகயில்லை. ஜெர்மனியின் அழுலுக்குட்பட்ட ஆஸாத் ஹைண்டு என்ற பத்திரிகையில் ருஷ்யர்கள் சிறிது முன்னேறியிருக்கிறார்களென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் ஜெர்மன் உள்நாட்டு ஒலிபரப்பில் உண்மை வெளியிடப்பட்டிருக்கிறது. "பஸ்ஸாரபியாவைத் தாக்குகிறவர்கள் ஐரோப்பாவின் வெளிப்படையான, ரகசியமான அரண்களைத் தாக்குவார்கள்" என்று ஒலிபரப்பில் சமீப காலத்தில் சொல்லப்பட்டது. யூக்ரேனில் ஸ்திரமாகக் குடியேறியிருந்த ஜெர்மானியர்கள் ஜெர்மனியில் வேலை செய்யத்தானுகவே திரும்பி வந்துவிட்டார்கள்.

இந்த அறிக்கையிலிருந்து யூக்ரேனில் ஜெர்மனி வைத்திருந்த ஆசை ஒழிக்கப்பட்டது. யூக்ரேனிலிருந்து அசோஷயமான தாதுப்பொருள்களும் உணவுப்பொருள்களும் கிடைக்குமென்றும் யுத்தத்தை நடத்த அது பேருதவி செய்யுமென்றும் ஜெர்மானியர்கள் எதிர்பார்த்தார்கள். யூக்ரேனில் ஸீமென்ஸ் யூக்ரேன் லிமிடெட் என்ற கம்பெனியையும் ரசாயன பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளையும் ஹெர்மான் கோயரிங்க் எஃகு கம்பெனியையும் ஜெர்மானியர்கள் ஸ்தாபித்து வந்திருக்கிறார்கள். 1942-ம் வருஷத்தில் கோயரிங்க பின்வருமாறு கூவினான். "யூக்ரேனிலுள்ள மகத்தான செழிப்பான பிரதேசம் நம் வசமிருக்கும் பொழுது நேசதேசத்தாரின் கடல் முற்றுகை என்ன செய்யக்கூடும்? அவர்கள் முற்றுகையைப் பற்றி பேசும்பொழுது எனக்கு சிரிப்புண்டாகுகிறது." இப்பொழுது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. டெய்லி எக்ஸ்பிரஸின் மாஸ்கோ நிருபர் பின்வருமாறு எழுதுகிறார்:

"1940-ம் வருஷம் ஜூன் மாதத்தில் பிரான்ஸுக்கு சமீபத்தில் பிரெஞ்சுப்படைகள் ஜெர்மன் டாங்கிகளை எதிர்த்து நிற்க முடியாமல் அடிபணிந்தன. அப்பொழுது ஒரே பீதியுண்டாகிற்று. ஸோல்ஜர்கள் போர்முனையை விட்டுச்சென்று, ஆயுதங்களை எறிந்துவிட்டு பொதுஜனங்களைப் போல் நடமாட ஆரம்பித்தார்கள். யூக்ரேனியப் போர்முனையில் அதே விதமான நடவடிக்கை காணப்படுகிறது.

"ராணுவ போலீஸ் உத்தியோகஸ்தர்களும், துருப்புகளும் ஸப்ளை இலாகாப்படைகளும் அநேக வருஷங்களாக யூக்ரேனின் உயர்வான உணவுப்பொருள்களை உட்கொண்டு கொழுப்படைந்திருந்தார்கள். இப்பொழுது அதை விட்டு ஓடி உயிரைக்காப்பாற்ற முயன்று வருகிறார்கள். படுக்கைகளும், மர சாமான்களும் வாட்கா திராக்ஷை ரசமுள்ள சீசாக்கள் உள்ள வண்டிகள் ரஸ்தாக்களில் கைவிடப்பட்டிருக்கின்றன. ரஸ்தாக்கள் போக்குவரத்துக்கு லாயக்கற்றவை என்றறிந்த ஸ்வான்தார்கள் வண்டிகளைப் போட்டுவிட்டு காடுகளுக்குச் சென்றுவிட்டார்கள். சில ஜெர்மானியர்கள் மூட்டை தூக்கிச் செல்லும் குதிரைகள் பேரில் இரண்டு மூன்று பேர்களாகச் சென்று வருகிறார்கள். ஜெர்மன் காலாட்படையும் அநேக இடங்களிலிருந்து பீதியடைந்து ஓட்டம் பிடித்து வருகிறது.

சில படைப்பகுதிகளில் தலைவர்களுக்கு சிப்பாய்கள் கீழ்ப்படிந்து நடக்கவில்லை. ஆயுதங்களை அவர்கள் போட்டுவிட்டார்கள். அவர்களிடமிருந்த தோட்டாக்களும் அற்றுப் போய்விட்டன. ஆகையால் அநேக ஜெர்மானியர்கள் சிப்பாய் வேலையை விட்டுவிட்டார்கள். ஜெர்மன் ஆபீஸர்களும் ஸோல்ஜர்களும் இராக் காலங்களில் ருமேனிய கிராமங்களுக்கு வந்து குடியானவர்களிடமிருந்து ஆடைகளைப் பெற்றுக்கொண்டு ருஷ்யப்படை வரிசைகள் வழியாக மாறு வேஷத்துடன் சென்று வருகிறார்கள். ஒரு கிராமத்தில் ஜெர்மன் படைப்பகுதியில் ஒன்று மாறு வேஷம் போட்டுக்கொண்டு வந்தது.

யூக்ரேனில் ஜெர்மனிக்கு இவ்விதமான கஷ்டமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஜெர்மானியர்களின் ஓட்டம் வலுவடைந்து வருகிறது. மார்ஷல் ஜுகாவின் படைகள் சிறிய கோஷ்டிகளாக பின்வாங்கும் ஜெர்மானியர்களுக்குப்பின் சென்று அவர்கள் பின்வாங்குவதைத் தடுத்து வருகிறார்கள்.

கதியின்றி ஹிட்லர் ருமேனியாவையும் ஹங்கேரியாவையும் பிடித்துவிட்டான். அவன் ஆச்சரியப்படும் முறையில் ஹிட்லர் இப்பொழுது எதிரிகளின் நாடுகளில் படையெடுப்பதில்லை. இப்பொழுது அவனுடைய சிநேகிதர்கள் பேரில் பாய்ந்து அந்நாடுகளை விழுங்கி வருகிறான். ஆகிலும் இந்த ஆக்கிரமணங்கள் அவனுக்கு அதிக சாதகமளிக்கப்போவதில்லை. இந்த நாடுகளின் ஆக்கிரமணத்திற்கு தோல்வியினால் ஏற்பட்ட நெருக்கடியும் பீதியும் காரணங்களேயல்லாது ராஜ்யங்களை சம்பாதிக்க வேண்டுமென்று ஆசை கொண்ட சேனையின் வலிமை காரணமல்ல. பால்கன் நாடுகளில் அமுல் நடத்த தென்கிழக்கிலுள்ள ஜெர்மன் தற்காப்பு அமைப்புகளை அவன் உபயோகப்படுத்தி வந்தான். அவைகள் பிளக்கப்பட்டபின் இப்பொழுது ராணுவ ஆட்சியை அந்நாடுகளில் ஸ்தாபித்திருக்கிறான். இது நல்ல காலத்துக்கல்ல. ஹிட்லரின் ராணுவ பலம் அழிந்து வருகிறது. ஹங்கேரியிலும் ருமேனியாவிலும் வைக்கப்பட்டிருக்கும் ஜெர்மன் படைகள் போலந்திலும், பால்டிக் நாடுகளிலும், கருங்கடல் பிரதேசத்திலும், இதாலியப் போர்முனையிலும் வருங்காலத்தில் துவக்கப்படும் இரண்டாம் போர்முனையிலும் போர் செய்ய உபயோகப்படமாட்டா.

வி வி வி வி வி

**M. மாலடாவின் ஒலிபரப்புப் பிரசங்கம்.** ருஷ்யாவில் அயல்நாட்டு கமிஸாரான M. மாலடாவ் ஜெர்மன் ஆதீனத்துக்குட்பட்ட நாடுகளுக்கு எச்சரிக்கையை ஒலிபரப்பு மூலம் விடுத்திருக்கிறார். முக்கியமாக ருமேனியாவுக்கு அனுப்பப்பட்டாலும் அது பல்கேரியாவுக்கும் ஹங்கேரிக்கும் ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றிற்கும் அது பொருந்தும். பயன்படக்கூடிய விளைவுகளைத்



தரக்கூடிய பிரச்னைகளில் பின்லாந்து கவனம் செலுத்தி வருவதால் மாலடாவ் அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ருஷ்யா முறியடிக்கப்படாவிட்டால் ஐரோப்பா நாசமாகி விடுமென்ற ஹிட்லரின் பிரசாரத்துக்கு மாலடாவின் அறிக்கை சரியான பதிலுரைத்திருக்கிறது. ஜெர்மனியின் தோல்வி நிச்சயமென்று சொல்லிவிட்டு, இது ராணுவ அவசியமான நடவடிக்கையென்றும் ருமேனியா அல்லது மற்றெந்த நாட்டின் தேசீய ஒற்றுமையும் ஜனசமூக அமைப்பும் பாதிக்கப்படாதென்றும் அவர் சொல்லியிருக்கிறார். ருமேனியா பேரில் படையெடுப்பதிலிருந்து தேசங்களைப் பிடித்துக்கொள்ளவேண்டுமென்ற எண்ணம் ருஷ்யாவிற்கு உண்டென்று தவறான அபிப்பிராயம் கொள்ளவேண்டாம். 1940-ம் வருஷ ஒப்பந்தப்படி நிர்த்தாரணம் செய்யப்பட்ட ருஷ்ய ருமேனிய எல்லைச்சரகத்தை மறுபடியும் அமைக்கத்தான் ருஷ்யா முயன்று வருகிறது. 1941-ம் வருஷத்தில் ருமேனியர்கள் இந்த ஒப்பந்தத்தை மீறித்தாக்கினார்கள். ருஷ்ய நடவடிக்கையைப்பற்றி வெளியிடப்பட்டிருக்கும் இந்த அறிக்கை சமயோசிதமானது. ஏனெனில் பிழைத்திருப்பதா அல்லது அழிந்துவிடுவதா என்ற முடிவை இப்பொழுது ருமேனியர்கள் யோசித்துப்பார்க்கவேண்டும். மாலடாவின் அறிக்கை பிரதேசங்களை ஆக்கிரமணம் செய்வதில்லை என்ற உறுதியை வெளியிடுவதோடு அட்லாண்டிக் சாஸனத்தின் கொள்கைகளைப் பின்பற்றியிருப்பதால் அதை நேசதேச நாடுகள் திருப்தியுடன் வரவேற்கிறார்கள். அதை மிஸ்டர் கார்டல் ஹல்லும், மிஸ்டர் சர்ச்சிலும் ஆமோதித்துவிட்டார்கள்.

அச்சு நாடுகளைப் பின்பற்றிவரும் நாடுகளுக்கு அறிவு கொஞ்சமேனுமிருந்தால் அவைகள் முன் எச்சரிக்கையுடன் காலதாமதமன்னியில் ருஷ்யாவின் உறவை நாடிவிடவேண்டும். இப்பொழுது ருஷ்யர்கள் தயை தாக்ஷண்யத்துடன் சலுகைகளைக் காட்டிவருகிறார்கள். கூடிய சீக்கிரத்தில் அவர்களின் மனப்பான்மை மாறிவிடக்கூடும். நாஸிகளின் அமுல் கூடிய சீக்கிரம் ஒழிந்துவிடும். ஐரோப்பா சீர்திருத்தியமைக்கப்படும்பொழுது ருஷ்யாவின் செல்வாக்கு மிகுதியாயிருக்கும். காலகதியைச் சரியாக மதித்து சுயேச்சையுடனிருந்துவரும் ஸ்விட்ஸர்லாந்தும்கூட ருஷ்யாவுடன் ராஜதந்திர சம்பந்தங்களை மறுபடியும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

வி வி வி வி வி

**ஜெர்மன் டம்பமும், பீதியும்.** மாலடாவின் ஒலிபரப்புப் பிரசங்கத்துக்குப் பதிலுரைக்கும் முறையில் ஜெர்மன் அயல்நாட்டு மந்திரியான வான் ரிப்பன்டிராப் பின்வருமாறு பேசியிருக்கிறான். "பிரிடிஷ் அமெரிக்க வெடி விமானங்களின் மிகவும் பலமான தாக்குதலுக்குப் பின்னும் நாம் பெர்லினைவிட்டு ஓடிவிடவில்லை. அதேவிதமாக நாம் ருமேனியாவையும் காப்பாற்றுவோம். எதிர்காலத்தில் குறைவான நஷ்டத்துடன் யுத்தத்தை முடித்துவிடலாமென்று மாலடாவ் உத்தேசிக்கிறான். ஆகையினால்தான் மிதமான ஷரத்துக்கள் என்று சொல்லி பின்லாந்தை யுத்தத்திலிருந்து வெளியேற்றிவிட ருஷ்யா பிரயத்தனம் செய்துவருகிறது."

ஆகிலும் அவனுடைய கூட்டாளியான கோயபல்ஸ் அவ்வளவு நம்பிக்கையுடனிருக்கவில்லை. ஏப்ரல் 5-ம் தேதியன்று அவன் ஒலிபரப்பில் பின் வருமாறு பிரலாபித்தான். "இன்று நம்முடைய தேசத்திற்கு ஏற்பட்டிருக்கும் சங்கடமான நிலைமையை 1918-ம் வருஷத்தில் ஜெர்மனிக்கு ஏற்பட்டிருந்த நிலைமையுடன் ஒப்பிடலாம். ஆகிலும் இந்த யுத்தத்தில் நாம் தோற்றுவிட்டால் ஜெர்மனியின் அழிவு நிச்சயமென்று இப்பொழுது ஜெர்மன் மக்கள் அறிவார்கள்".

வி வி வி வி வி

**ஸெக்கோஸ்லோவாக்கியா.** செம்படை ஸெக்கோஸ்லோவாக்கியா எல்லைச் சரகத்துக்கு வந்துவிட்டதென்ற செய்திக்குப்பின் ஸெக்கோஸ்லோவாக்கியாவின் ஜனாதிபதியான டாக்டர் பெனஷ் மார்ஷல் ஸ்டாலினுக்கு தன்னுடைய சந்தோஷத்தை அறிவித்து, தன்னுடைய நாட்டின் நட்பையும் உத்தரவாதம் செய்திருக்கிறார். ஸெக்கோஸ்லோவாக்கியாவின் தற்காப்பு மந்திரி பின்வருமாறு ஒலிபெருக்கியிருக்கிறார்.

"சமீப எதிர்காலத்தில் ஸெக்கோஸ்லோவாக்கியா குடியரசு ஜெர்மானியர்களிடமிருந்தும், ஹங்கேரியர்களிடமிருந்தும் விடுவிக்கப்படும் நேசப்படைகளுக்கு ஒத்தாசையளிக்கும் முறையில் ஸெக்கோஸ்லோவாக்கியா ஜனங்கள் எல்லோரும் எதிரியையும், அவனுடைய அமைப்புகளையும் அழிக்க தங்களாலியன்றதைச் செய்துவரவேண்டும். ஒத்துழையாமை, கபடமான நாசவேலை முதலியவற்றைக் கையாளுவதுடன் அவர்கள் நேர்முகமாக எதிரிகளை எதிர்த்தும் போராடவேண்டும். செம்படை ஸெக்கோஸ்லோவாக்கியா எல்லைச் சரகத்தை அடைந்துவிட்டதென்ற செய்தியை நன்றியறிவுடனும், சந்தோஷத்துடனும் ஸெக்கோஸ்லோவாக்கிய நிர்வாகம் வரவேற்கிறது. ஜெர்மன் ஹங்கேரிய அக்ரம ஆக்கிரமணத்துக்குட்பட்ட ஸெக்கோஸ்லோவாக்கியாதான் ஐரோப்பிய நாடுகளில் நேசதேசப் படைகளால் முதன் முதலாக விடுதலைப்பெறப்போகிறது."

**ஜெர்மனியின் உள்நாட்டு நிலைமை.** மரண தண்டனைக்குட்பட்டவர்களின் சங்கியை அதிகரித்து வருவதிலிருந்து ஜெர்மன் மக்களின் மன உறுதி குலைந்துவருகிறதென்று ஸ்பஷ்டமாகத் தெரியவருகிறது. ஹிம்லரின் கொடுமை பலமடைந்து வருகிறது. எதிர் பிரசாரத்துக்கும், எதிரியின் ஒலிபெருக்குகளைச் செவி கொடுப்பதற்கும் சில்லரைத் திருட்டுகளுக்கும், விபசாரச் சூதுக்கும் மரண தண்டனைதான் விதிக்கப்படுகிறது. ஆண், பெண் வித்தியாசம் கிடையாது. யுத்த சேவையும் பாராட்டப்படுவதில்லை. விமான எதிர்ப்பு ஒளிகளிலிருந்து திருடிச் சென்ற ஒரு ஸ்திரீ கொலை செய்யப்பட்டாள். ஒரு ஜோடி ஜோடுகளையும், சிகரெட்டுகளையும் திருடிச் சென்ற வேலையிலிருந்து பென்ஷன் கொடுக்கப்பட்ட ஒரு சிப்பாய்க்கும் அதே தண்டனை விதிக்கப்பட்டது.

வி வி வி வி வி

**ஆதிக்கமும், உயர்வும்.** ஹிட்லரின் ஐரோப்பாவின்பேரில் விமான நடவடிக்கை இடைவிடாது நடைபெற்றுவருகிறது. ஆனால் இப்பொழுது உயர்வான லக்ஷியங்கள் காணப்படுகின்றன. அவர்களுக்கு விமான ஆதிக்கம் ஏற்கனவே ஏற்பட்டுவிட்டது. இப்பொழுது விமானப்படையின் உயர்வை சம்பாதிக்க அவர்கள் முயன்று வருகிறார்கள். விமானப்படை இலாகாவின் உதவி நிர்வாகியான ஸர் ரிச்சர்ட் பெக் சொல்லியிருப்பதுபோல் இவ்விரண்டும் வேறுபட்டவை. விமான ஆதிக்கத்திலிருந்து நாம் ஆபிரிக்காவில் வெற்றிபெற்றோம். இந்த ஆதிக்கம் இப்பொழுது இதாலியிலும், பாஸ் டீ கலேயிலும் ரக்ஷிக்கப்பட்டுவருகிறது. அதன் விளைவாக இந்த பிராந்தியங்களில் நேசதேச விமான நஷ்டம் ஒரு சதவிகிதத்துக்குக் குறைந்துவிட்டது. ஆகிலும் ஜெர்மனி பேரில் செய்யப்படும் நடவடிக்கையில் விமானப்படை உயர்வு ஏற்பட்டிருந்தபோதிலும் விமான ஆதிக்கம் கிடைக்கவில்லை. ஆகையினால் விமான நஷ்டம் மிகுதியாகயிருக்கிறது. உதாரணமாக ஒரு மகத்தான விமானத் தாக்குதலுக்குப்பின் 10 லக்ஷம் டன்கள் எடைமானமுள்ள கட்டடத் தூள்கள் அப்புறப்படுத்தப்படுகின்றன. மூன்று அல்லது ஆறு மாதங்களுக்குள்ளாக ஹாம்பர்க்கிலுள்ளவர்கள் 400 மில்யன் மணி நேரங்கள்கொண்ட உற்பத்தியை இழந்துவிட்டார்கள். விமான யுத்தம் இப்பொழுது இடைவிடாமலும், ஜெர்மனியின் ஏதாவது ஒரு இடத்திலும் நடைபெறுவதால், ஜெர்மனிக்கு ஒரு நிமிஷம்கூட ஆச்வாசப்படுத்திக்கொள்ளும் அவகாசம் கிடைக்கவில்லை. இவ்வருஷத்தின் முதல் மூன்று மாதங்களில் ஜெர்மனிபேரில் நேசதேச விமானப்படைமட்டும் 48,000 டன்கள் மொத்த எடைமானமுள்ள வெடிகுண்டுகளைப் போட்டிருக்கிறது.

இவைகளையெல்லாம் கவனிக்கும்பொழுது மார்ச்சு மாதம் 25-ம் தேதி மிஸ்ட்டர் சர்ச்சில் ஆற்றிய ஒலிபரப்புப் பிரசங்கத்தின் சொற்கள் ஞாபகத்துக்கு வருகின்றன. அவர் சொன்னார், "யுத்தப்போக்கு தலைகீழாக மாறியிருக்கிறது. யுத்த முறைகளில் மிகவும் கோரமான முறைகளினால் எதிரிகளை அழிக்க முற்பட்டவர்களே இப்பொழுது பிரிடிஷ்—அமெரிக்க விமானப்படையின் பலமான தாக்குதலுக்குட்பட்டு தடுமாற்றம் அடைந்து துடித்துக்கொண்டிருக்கிறார்கள்.'

வி வி வி வி வி

**அமெரிக்க விமானப்படை.** டோக்கியோபேரில் குண்டு வீசிய வீரரான மேஜர் ஜெனரல் டூலிட்டில் மார்ச்சு 29-ம் தேதியன்று விமான யுத்தத்தைப்பற்றி மற்றொரு முக்கியமான அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். அவர் பின்வருமாறு சொல்லியிருக்கிறார் :—

1. சென்ற 8-வாரங்களில் பிரிடனிலிருந்து சென்ற 170,000 அமெரிக்க விமானிகள் 2,100 ஜெர்மன் விமானங்களை அழித்திருக்கிறார்கள்.

2. பிப்ரவரி மாதம் ஆரம்பத்திலிருந்து, பிரிடனிலிருந்து சென்ற அமெரிக்க விமானங்கள் 37,000 டன்கள் மொத்த எடைமானமுள்ள வெடி குண்டுகளை வீசியிருக்கின்றன. அவைகளில் 26,000 டன்கள் மொத்த எடைமானமுள்ள வெடி குண்டுகள் ஜெர்மனிபேரிலும், 11,000 டன்கள் மொத்த எடைமானமுள்ள வெடி குண்டுகள் ஆக்கிரமிப்பு நாடுகள்பேரிலும், வீசப்பட்டன.

3. பிப்ரவரி மாதம் 20-ம் தேதிக்குப்பின் தாக்கப்பட்ட லக்ஷியங்களில் 16 விமானங்களைக் கட்டக்கூடியதும், விமான உருப்புகளை உற்பத்தி செய்யக்கூடியதுமான தொழிற்சாலைகள் முக்கியமானவை. இவைகள் நாசமாக்கப்பட்டன அல்லது பலமாகப் பழுதுபட்டுவிட்டன. அவைகளின் உற்பத்தி ஓய்ந்துவிட்டது அல்லது பலமாகக் குறைவுபட்டுவிட்டது.

அமெரிக்க விமானப்படையின் அரிய சேவைகளை மதித்து அவைகளைப் பாராட்டி ஒலிபரப்புப் பேச்சில் மிஸ்ட்டர் சர்ச்சில் பின் வருமாறு சொல்லியிருக்கிறார் :—



"பிரிடனில் ஏராளமான படைகளை அமெரிக்கா குவித்துவிட்டதன் மூலம் அவர்கள் நம்மைத் தோற்கடித்துவிட்டார்கள். அவர்களுடைய விமான சக்தி ஸ்திதி மிதமாக இல்லை. அதன் சக்தி அதிகரித்துவருகிறது. ஜெர்மனியும், ஜப்பானும் சரணாகதி செய்யும் வரையிலும் அந்த சக்தி அதிகரித்துக்கொண்டேவரும்".

வி வி வி வி வி

**யூ படகு யுத்தம்.** இந்தப்போர் ஓய்ந்துவிடவில்லை. இதைப்பற்றியும் மிஸ்ட்டர் சர்ச்சில் ஒலிபரப்பு பிரசங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார். "நமக்கு ஏற்பட்ட மகத்தான அபாயமான யூ படகுத் தொந்தரவிலிருந்து நாம் வெற்றிகரமாக வெளியேறிவிட்டோமென்பதை பிரிடிஷ் மக்களாகிய நாம் சந்தோஷத்துடனும், நன்றியறிவுடனும் கொண்டாடவேண்டும்".

அமெரிக்கக் கடற்படையின் காரியதரிசியான கர்னல் பிராங்க் நாக்ஸ் வட அட்லாண்டிக்கில் கூடிய சீக்கிரத்தில் யூ படகுகளின் தாக்குதல் ஏற்படக்கூடுமென்றும், ஜெர்மனி யூ படகுகளைத் துரிதமாகக் கட்டிவருகிறதென்றும் எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்.

வி வி வி வி வி

**மணிப்பூர் பிராந்தியம்.** இம்பாலிலிருந்து கோஹிமாவுக்குப் போகும் ரஸ்தா துண்டிக்கப்பட்டுவிட்டதால் இம்பால் முற்றுகைக்குட்பட்டுவிட்டதென்றே சொல்லலாம். நாம் பலமாகத் தாக்கிவருகிறோம். இம்பாலைத் தற்காப்பு செய்வதற்காக 17-வது இந்திய டிவிஷன் இம்பாலுக்குப் பின்வாங்கிவிட்டது.

இந்தியாவின் வடகிழக்கு எல்லைச்சரகத்தில் இந்தியாவுக்கு மகத்தான அபாயம் ஏற்பட்டிருக்கிறதென்பதை நான் குறைத்துக் கூறவில்லை. ஆகிலும் மணிப்பூர் முக்கியமான போர் முனையென்றும், இந்தப் போர் முடிவு முக்கியமானதென்றும், சில வட்டாரங்களில் இச்சிறிய சம்பவத்தை மிகைப்படுத்திச் சொல்லுவதற்கு யாதொரு நியாயமுமில்லையென்று சொல்ல விரும்புகிறோம். இச்சிறிய பிற்போக்கான நடவடிக்கைகளை நாம் பிரமாதப்படுத்தினால் நாம் எதிரிக்கு ஒத்தாசை செய்வதுபோலாகும். ஜப்பானியர்கள் அவர்களுடைய ஒலிபரப்பில் இந்தியாவின்பேரில் படையெடுத்து டில்லிக்குச் செல்லுவதற்காக இந்த பலமான முற்போக்கான தாக்குதல்கள் செய்யப்படுகின்றனவென்று சொல்லிவருகிறார்கள். இம்பாலைத் தாக்க இப்பொழுது ஜப்பானியர்கள் செய்திருக்கும் முயற்சி தொந்தரவு நடவடிக்கைதான். அமெரிக்கப் பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறபடி 20,000 ஜப்பானியர்கள் சாவுப்பொறிக்குள் சென்றுவருகிறார்கள். ஜப்பானியர்களின் பலம் மிகுதியாக இருக்கலாம் ஆகிலும் நம்முடைய பலம் எதிரியைவிட அதிகமானது.

கவலைக்கிடமான இத்தருணத்தில் மற்றொரு பகுதியில் நமக்குக் கிடைத்திருக்கும் வெற்றிகளை நாம் மறந்துவிடமுடியாது. ஹுகாங் பள்ளத்தாக்கில் அமெரிக்கர்களும், சீனர்களும் சைனாவுக்குப்போகும் லேடோ ரஸ்தாவைக் காபந்து செய்துகொண்டு நூறு மைல்கள் முன்னேறி பர்மா ராஜ்யத்தில் 1,800 சதுர மைல்களைக் கைப்பற்றியிருக்கிறார்கள். ஹுகாங் பள்ளத்தாக்குக்கும், மொகாங் பள்ளத்தாக்குக்கும் மத்தியிலுள்ள கணவாயிலிருக்கும் ஜம்பூ பத்தை அவர்கள் கைப்பற்றியிருக்கிறார்கள். அதன்மூலம் வடக்குப் பர்மாவிலுள்ள காமேயிங், மொகாங், மிட்கினாவிலுள்ள முக்கியமான இருப்புப்பாதை நகி நிலயம் இவைகளுக்கு ஆபத்துண்டாகிவிட்டது. வடக்கில் மற்றொரு கேந்திர ஸ்தானமான ஸம்பராமமும் பிடிபட்டுவிட்டது. எதிரியின் பின்புரத்தில் விமானமூலம் படைகள் இறக்கப்பட்டபின் எதிரியின் முற்போக்குக்குத் தடங்கல் ஏற்பட்டுவிட்டது.

வி வி வி வி வி

**இந்திய விமானப்படை.** ஏப்ரல் 3-ம் தேதியன்று இந்திய விமானப்படை 11-வது ஆண்டுவிழாவைக் கொண்டாடிற்று. இந்தியப்படையின் வாலிபம் பொருந்திய இந்தப்படைக்கு வருங்காலத்தில் அதிக கீர்த்தி கிடைக்குமென்று நாம் ஆசி கூறுகிறோம். சென்ற சில வருடங்களுக்குள்ளாக அது அரிய சேவைகளைச்செய்து புகழ்பெற்றுவிட்டது. பர்மா முனையிலும் அது சிறந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. 1939-ம் வருஷத்திலிருந்ததைவிட இப்பொழுது இந்திய விமானப்படை அபிவிருத்தியடைந்திருக்கிறது. இன்று அதில் சிலாக்கியமான அநேக ரக விமானங்களிருக்கின்றன. இந்திய விமானிகளின் திறமையும் உயர்வானது. இந்தியாவில் அநேக விமானத்தளங்கள் அமைக்கப்பட்டிருப்பதால் யுத்தத்துக்குப்பின் பொதுஜன விமானப் போக்குவரத்துக்கு

அதிக சௌகரியமேற்படும். விமானிகளும், எஞ்ஜினியர்களும், தரைப்படைகளும், இந்தியாவிலும், பிரிடனிலும், கனடாவிலும் பயிற்சிபெற்றுவருகிறார்கள். இந்திய சர்வகலாசாலைகளிலும் விமானிகளின் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவிலுள்ளவர்கள் விமானங்களில் செல்லவும், விமானங்களை அதிகரிக்கவும் ஊக்கம்கொண்டிருக்கிறார்கள்.

---

## மறுபடியும் பர்த் நதிக்கரை.

**(டைம்ஸ் பத்திரிகை).**

மார்ஷல் கோனியே விடமுள்ள ருஷ்ய இரண்டாவது யூக்ரேனியப் போர்முனைப் படைகள் பஸ்ஸாரபியா வழியாக பர்த் நதிக்கு முன்னேறியிருக்கின்றன. 1941-ம் வருஷத்தில் ஜெர்மனியும் அதன் நண்பனான ருமேனியாவும் ருஷ்யாவைத் தாக்கியபொழுது ருஷ்யப் படைகள் நின்ற இடத்துக்கு மறுபடியும் அவைகள் வந்துவிட்டன.

எதிர்பாராமல் கடுமையில்லாத இந்த மாரிகாலம் பூராவும் ருஷ்யப் படைகள் முன்னேறித் தாக்கியிருக்கின்றன. இந்த நடவடிக்கை தீர்க்கதரிசிகளையும் கலங்கும்படி செய்துவிட்டது. பூமி நன்றாய் உலர்ந்துபோவதற்கு வெகுகாலம் பிடிக்கும். ஆகிலும் முன்கூடியே பனி உருக ஆரம்பித்து ரஸ்தாக்களை நாசம் செய்து யூக்ரேன் பிரதேசம் பூராவும் ஒரே சகதிமயமாகச் செய்த நிலைமையைவிட இப்பொழுது கெடுதலான நிலைமை ஏற்படுவது சம்பாவிதமில்லை. ருஷ்யப் படைகள் பெஸ்ஸாரபியா பூராவையும் ஆக்கிரமித்து ஒடெஸ்ஸா முனையிலிருந்து ஜெர்மன் படைகள் பின்வாங்க முடியாமலும் அல்லது அவைகளை சமுத்திரத்துக்குள் செல்லும்படியாகவும் செய்துவிடுவார்களென்பதில் ஐயமில்லை. ஆகிலும் பர்த் நதியைத் தாண்டி எதிரியின் படை வரிசையில் ஏற்பட்டிருக்கும் பிளவை அவர்கள் பலப்படுத்த முயலுவார்களென்றுதான் தோன்றுகிறது. ஊடுருவிச் செல்லுவதென்பது எதிரியின் படைவரிசைகளையும் சின்னாபின்னம் செய்துவிடக்கூடியது. மகத்தான நீஸ்டர் நதி தடுத்துவிட முடியாத ருஷ்யப் படைகளை பர்த் நதி தடை செய்யக்கூடுமென்று நாம் எதிர்பார்க்கக்கூடுமா? ருஷ்யாவின் போக்குவரத்து மார்க்கங்கள் மேலும் விஸ்தாரம் செய்யப்படுகின்றன என்பது ஒன்றுதான் ஜெர்மன் தற்காப்புகளுக்கு சாதகம் அளிக்கக்கூடும்.

### மகத்தான முட்டுக்கட்டை.

இதற்கு பாதகமாக ஜெர்மனியின் எதிர்ப்புக் குலைவும் சீர்கேடு அதிகரிப்பும் போக்குவரத்து சாமான்களின் நஷ்டமும் ஏற்படலாம். நதியின் இடது கரையில் சிறிது காலம்தான் அவர்கள் தங்கியிருக்கக்கூடுமென்று ஜெர்மானியர்களும் நம்பியிருக்கக்கூடும்.

பர்த் நதியை படகுகள், சிறிய கப்பல்கள் மூலமாகத் தாண்டிவிடலாம். நீஸ்டர், நீபர் நதிகளைப்போல் அது பெரிய நதியில்லை. அது மகத்தான முட்டுக்கட்டையாகவுமில்லை. அதற்கு சமகோடாகச் செல்லும் ஸோரத் நதியும் அவ்வித குணங்களுள்ளதுதான். ஆனால் அது வேகம் பொருந்தியது. இரண்டு நதிகளும் ராணுவ முக்யத்வமுள்ளவை. அவைகளின் நுனி பாகத்தில் அவைகள் மோல்டேவியா சமவெளியைத் தாண்டி டான்யூப் நதிக்குச் செல்லுகின்றன. இவ்விதமாக அவைகள் இயற்கையான தற்காப்பாகயிருக்கின்றன. அவைகளை கார்பேதிய மலைகளின் அரணுடன் சேர்த்து அமைத்துக்கொள்ளலாம். இது ஒரு பெரிய முட்டுக்கட்டை ஆகிலும் அதில் காணப்படும் கணவாய்கள் அபாரமானவை. சுலபமாகக் கடந்து செல்லக்கூடியவை. கார்பேதியன் மலைகளும் டிரான்ஸில்வேனியாவிலுள்ள ஆல்ப்ஸ் மலைகளும் குதிரைக் குளம்புபோன்ற வடிவமுள்ள ஒரு அரணை அமைத்துவிடுகின்றன. அதற்கு வடக்கிலும் வடகிழக்கிலும் பொயலான் யூக்ரேனிய உன்னதமான பிரதேசமும் கிழக்கிலும் தெற்கிலும் டான்யூப் நதி சமவெளியின் பிரதேசங்களும் இருக்கின்றன. இவ்விதமாக இது பெரிய இடையூறாகயிருக்கிறது.

இந்த மலைகளின் தெற்கு சரிவுகளில் பர்த் நதிக்கரையில் ருஷ்யர்களிருக்கும் ஸ்தானங்களிலிருந்து 200 மைல்களுக்கு அப்பாலில் ருமேனியாவின் மதிக்கத்தக்க எண்ணெய் பிரதேசங்களிருக்கின்றன. சாத்யமானவரையில் அவைகளைக் காப்பாற்ற எதிரி முயன்று வருவான். முக்கியமான எண்ணெய் ஸப்ளைக்கு ஆதாரமான இந்த பிரதேசத்தையும் இறுதியில் இழக்க அவன் தயாராகயிருப்பானென்று புலப்படுகிறது.



### ஜெர்மனியின் பின்வாங்குதல்.

ருஷ்யாவின் முன்னேற்றம் சிலாகிக்கத் தகுந்தது என்பதுடன் அதன் வேகம் ஜெர்மன் ராணுவ அதிகாரிகளைக் கலங்கும்படி செய்துவிட்டது. எதிரிகள் தன்னிச்சையாகவே பின்வாங்குகிறார்களென்று சொல்லப்படுகிறது. அவன் ருஷ்யப் போர்முனையில் பின்வாங்கிக்கொண்டு சென்று மேற்குப் பக்கத்தில் இறங்கக்கூடிய பிரிடிஷ் அமெரிக்கப் படைகளை எதிர்க்க ஆயத்தம் செய்துவருகிறான்.

தெற்குப் பகுதியில் ருஷ்யாவின் முன்னேற்றத்தை ஜெர்மானியர்கள் தடுக்கவில்லையென்பதிலிருந்து மேற்குப் பக்கத்தில் தயாராகிவரும் படையெடுப்பு ஏற்பாட்டைக் கண்டு ஹிட்லரும் அவனுடைய ராணுவ கோஷ்டியார்களும் பீதியடைந்துவிட்டார்களென்பது நன்றாய்ப் புலப்படுகிறது. எதிர்பாராதவண்ணம் ருஷ்யப் படைகள் அதிகமாக முன்னேறி வரும்பொழுதும் ஜெர்மன் படைகளுக்குத் தோல்விகள் சரமாரியாகக் கிடைத்துவரும் பொழுதும் ஜெர்மனி இதாலியில் 25 டிவிஷன் படைகளையும் மேற்குப் பக்கத்தில் 40,50 டிவிஷன் படைகளையும் வைத்திருக்கிறது.

எதிர்பார்த்ததற்கு உபரியான படைகளை ருஷ்யாவிற்கு அனுப்பவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டதென்று எதிரி ஒப்புக்கொண்டாலும் அவன் மேற்கிலுள்ள படைகளை கிழக்குப் போர்முனைக்கு அனுப்பத் துணியவில்லை.

ருஷ்யாவின் வெற்றிகளுக்கு நேசநாடுகள் கடல் மூலமாகவும், தரை மூலமாகவும், ஆகாய மூலமாகவும் பேருதவி செய்திருக்கின்றன. ஆகிலும் இறுதியில் வெற்றிக்குத் தேவையான பேருதவிதான் மிகவும் சிரமசாத்யமானதாகயிருக்கும்.

---

## பின்லாந்தின் பிடிவாதம்.

**(டெயிலி டெலகிராப்).**

ருஷ்யாவுடன் சமாதானப் பேச்சுகளை பின்லாந்து மறுபடியும் துவக்கி விட்டதாகத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. இதுவும் ஞாயம்தான். ஜெர்மனியுடன் பின்லாந்து இனிமேலும் நட்புக்கொண்டிருந்தால், ருஷ்யர்கள் பின்லாந்தின்பேரில் படையெடுத்தால் அதை ஒருவரும் காப்பாற்ற முடியாது. ருஷ்யா சமாதான நிபந்தனைகளை வெளியிட்ட மார்ச்சு மாதம் 1-ம்தேதிக்குப்பின் செம்படை தெற்கிலுள்ள ஆறு அரண்களை நொருக்கியிருக்கிறது. ஜெர்மனிக்கு ஆதீனமான மற்ற நாடுகளையும் தாக்க அது முன்னேறிவிட்டது.

1941-ம் வருஷம் இலையுதிர்காலம் முதல் பின்னிஷ் படைகள் ஒரு மகத்தான போரிலும் கலந்து கொள்ளவில்லையென்பது அதன் ராணுவ பலஹீனம். ஆகிலும் சில பின்னிஷ் துருப்புகள் ருஷ்யப்போர் முனையில் சில பகுதிகளில் ஜெர்மனியுடன் சேர்ந்து போர் புரிந்திருக்கிறார்கள். ஆக்கிரமிப்பு நாடுகளில் காவல் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். பின்னிஷ் சேனையின் பெரும் பாகம் இது வரையில் லெனின்கிராட்டிலும், காரிலியாவிலும் ருஷ்ய ரோந்துப்படைகளுடன் சில்லரைப் போர்களை நடத்துவதில் அமர்த்தப்பட்டிருந்தன. இவ்விதமான மந்தமான நடவடிக்கையிலும் ருஷ்யர்கள் பீரங்கி பிரயோகத்தினாலும், சட்டி பீரங்கிகளின் குண்டு வீச்சினாலும் பின்னிஷ் படைக்கு அதிக நஷ்டமேற்பட்டது. இதின் மூலம் யுத்தத்தின் முதல் வேனிர்காலம், இலையுதிர்காலத்தில் ருஷ்யப்படைகளுடன் செய்த போரில் பின்லாந்துக்கு ஏற்பட்ட நஷ்டங்களிலிருந்து அது சமாளித்து எழுந்திருக்கவில்லை. ஸ்டாலின்கிராட் போரிலிருந்து அதிகரித்துவரும் செம்படையின் யுத்தத்திறமையை அனுபவிக்காதவைகள் பின்னிஷ் துருப்புகள்தான். 1941-ம் வருஷத்தில் பின்னிஷ் படை திறமையுடனிருந்தது. 1944-ம் வருஷத்தில் அதின் வலிமை சந்தேகிக்கக்கூடியதாகயிருக்கிறது. பின்னிஷ் போர்முனையில் இவ்விதமான அமைதியான நிலைமை மேலும் அநேக மாதங்கள் வரையில் நீடித்திருக்குமென்று பின்லாந்து நம்பியிருக்கிறது. பின்லாந்தைத் தாக்குவதில் ருஷ்யா பலமான அநேக நடவடிக்கைகளை மேற்கொண்டு பின்னிஷ் படைகளை சிதற அடித்து பின்லாந்தின் முக்கியமான நகரங்களைக் கைப்பற்றி விடுவதாக உத்தேசித்திருக்கிறது. இந்த திட்டத்தைப் பூர்த்திசெய்ய நெடும் போக்கான சிக்கலான அநேக ஏற்பாடுகளை அது முன்கூடியே செய்து முடிக்கவேண்டும். லெனின்கிராட்டில் போரைத்துவக்குமுன் அவர்கள் ஆயத்தம் செய்ததுபோல சென்ற வருஷத்திலும், அதற்கு முன்னும் பின்லாந்துடன் போர் தொடுப்பதற்கும் ருஷ்யர்கள் தயார் செய்திருக்கிறார்கள்.

## விமானப்போரில் தோழர்கள்.

### பிரிடிஷ், அமெரிக்க விமானிகள் பரஸ்பர உதவி செய்து கொள்ளுகிறார்கள்.

பிரிடிஷ் விமானப்படையும் அமெரிக்க விமானப்படையும் சகோதர பாவத்துடன் ஒன்று பட்டு விட்டன என்று மிஸ்ட்டர் சர்ச்சில் பாராட்டுகிறார். லண்டனிலுள்ள வியாக்யானிகள் இதற்குப் பின் திறைபோன்ற சில விஷயங்களை விவரிக்கிறார்கள்.

அநேக வருஷங்களாக பிரிடிஷ் விமானத்தாக்குதலிருந்து ஜெர்மன் விமானப்படை பலம் அழிந்து வருகிறது. ராஸ்டாக்கிலுள்ள ஹெங்கல் தொழிற்சாலை, Fw. 190 விமானங்களைக் கட்டும் காஸ்ஸலிலுள்ள ஹென்ஷல் தொழிற்சாலை, எயிண்ட் ஹோவனிலுள்ள பிலிப்ஸ் தொழிற்சாலை, பெர்லினிலுள்ள மின்சார தளவாட உற்பத்திசாலை, ஸ்டட்கார்ட்டிலுள்ள பாஷ் மாக்னடோ தொழிற்சாலை, இன்னும் அநேக நிலயங்கள் நொருக்கப்பட்டன. எதிரியின் விமானப்படை உற்பத்தியை இவ்விதமாக நீண்ட நோக்கத்துடன் அழித்து வந்திராவிடில் இப்பொழுது நடைபெறும் பகல் தாக்குதல்கள் சிரமசாத்தியமாகவும் அதிக நஷ்டத்தை விளைவிக்கக்கூடியதாகவுமிருக்கும்.

இருட்டில் கண்டுபிடிக்கமுடியாத லக்ஷியங்களை பகலில் அமெரிக்க வெடிவிமானங்கள் குறி தவறாமல் தாக்குகின்றன. முக்கியமாக, மாறியன்பர்க்கிலுள்ள பாக் உல்ப் தொழிற்சாலை, ரீஜன்ஸ்பர்க்கிலுள்ள மெஸ்ஸர்ஸ்மிட் தொழிற்சாலை. பகலில் செல்லும் விமானங்களில் ஏற்றிச்செல்லக்கூடிய குண்டுகளின் பளுக்குறைவினால் பகலில் தாக்கமுடியாத விசாலமான பரப்புகளை இரவில் வெடி விமானங்கள் ஏராளமான வெடிகுண்டுகளை வீசி நொருக்கிவிடுகின்றன. விமானப்போரில் தரையிலிருக்கும் விமானங்களை அழிப்பதன் மூலமாகவும், விமானங்களைக்கட்டும் தொழிற்சாலைகளை நொருக்குவதன் மூலமாகவும் அமெரிக்க விமானப்படை எதிரியின் சண்டை விமானங்களின் வலிமையைக் குலைத்து விடுகின்றன. முக்கியமான தொழிற்சாலைகளை நொருக்குவதின் மூலம் பாம்பர் படைகள் விமானங்களைப் பழுது பார்ப்பதையும், கட்டுவதையும் கஷ்டசாத்தியமாகச் செய்துவிட்டதுடன் விமான உருப்புகள் குவிக்கப்படுவதையும் தடுத்துவிட்டன. ஸ்டட்கார்ட்டிலுள்ள டெயிம்லர் பென்ஸ் விமான உற்பத்திசாலை போன்ற விமான உருப்புகளைத் தயாரிக்கும் தொழிற்சாலையை வெற்றிகரமாகத் தாக்குவதிலிருந்து விமான உற்பத்தி பலமாக பாதிக்கப்படுகிறது. எஸ்ஸனிலுள்ள கிரப்ஸ் தொழிற்சாலையை அழித்ததிலிருந்து கிராங்க்ஷாப்ட் உற்ப்த்தி நின்று போயிற்று. விமான எஞ்ஜின்களை உற்பத்தி செய்யும் தொழிலுக்கு ஹானி அதிலிருந்து ஏற்பட்டது. இப்பொழுது பகல் சண்டை விமானங்களை இரவு நடவடிக்கைகளுக்கும் இரவுச்சண்டை விமானங்களை பகல் நடவடிக்கைகளுக்கும் ஜெர்மனி உபயோகப்படுத்திவருவதினால் ஜெர்மன் விமான தற்காப்பை அழிக்க பாம்பர்படையும் அமெரிக்க விமானப்படையும் ஒற்றுழைக்கின்றன. ஒன்று மற்றொன்றுக்கு ஏற்படும் எதிர்ப்பைத் தவிர்க்க உதவி செய்து வருகிறது.

கால நிலையில் சௌகரியமேற்படும் பொழுது இரவில் லக்ஷியங்களை குறிதவறாமல் தாக்குவதற்கும் பிரிடிஷ் விமானப்படை புதிய தந்திரத்தை சமீப காலத்தில் கையாண்டு வருகிறதென்று லண்டன் வியாக்யானிகள் குறிப்பிடுகிறார்கள். குறிதவ்றாமல் அடிக்கவேண்டிய அவசியமேற்பட்டிருக்கும் ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் நாடுகளைத்தான் பிரிடிஷ் வெடி விமானங்கள் முக்கியமாகத் தாக்கவேண்டும். இந்த இடங்களில் விமானத்தாக்குதலுக்கு எதிர்ப்பு கிடையாது. பிரான்ஸில் இரவுச்சண்டை விமானங்களின் எதிர்ப்பு காணப்படவில்லையென்பதிலிருந்து ஜெர்மனியை பிரிடிஷ் அமெரிக்க வெடி விமானங்கள் தாக்கியதின்பலன் சித்தித்து விட்டது. ஜெர்மனியைத்தற்காப்பு செய்வதில் ஜெர்மன் விமானப்படையின் 80 சத விகிதம் ஈடுபடவேண்டியிருக்கிறது.

---

## ஜெர்மனியை நேசதேச விமானங்கள் தாக்குவதைப் பற்றி ஜெனரல் மாண்ட்காமரி.

(டெயிலி மெயில் பத்திரிகை).

இங்கிலாந்தில் ஏதோ ஒரு இடத்திலுள்ள தலைமை காரியாலயத்தில் மார்ச்சுமீ 22-ம்உ பேசும்பொழுது, வடமேற்கு ஐரோப்பாவையும் ஜெர்மனியையும் வெடிவிமானங்கள் தாக்கி வருவதன் மூலமாக இரண்டாம் போர்முனை துவங்கிவிட்டதென்று அமெரிக்க நிருபர்களிடம் அறிவித்தார்.



ஜெர்மன் போக்குவரவு மார்க்கங்களையும் தொழிற்சாலைகளையும் நேசதேச வெடி விமானங்கள் உபயோகமுள்ள முறையில் தாக்கிவருகின்றனவென்றும் இந்த நடவடிக்கை திட்டப்படி நடப்பதால் இது வெற்றியளிக்குமென்றும் அவர் கூறினார்.

அதிக உத்சாகம் கொண்டு, அவருடைய நீலநிறமுள்ள கண்களில் ஒளி பெருக ஜெர்மனி மிகவும் பலமாகத் தாக்கப்படுகிறதென்று அவர் வர்ணித்தார்.

"போதுமான அளவு ஜெர்மானியர்கள் ஸ்தம்பிக்கும்படி விமானத் தாக்குதல் ஏற்பட்டபின் நாம் படைகளை இறக்குவோம்."

மேற்கு ஐரோப்பாவில் வெடிகுண்டு வீச்சு துருப்புகளுக்கு எவ்வளவு பயனளிக்கும் என்று பிரச்னம் பண்ணினபொழுது அவர் பின்வருமாறு பதிலுரைத்தார். "வெடிகுண்டு வீச்சின் மூலம் யுத்தத்திலீடுபட்டிருக்கும் தேசத்தின் வலிமை குலைக்கப்படுகிறது. போரில் ஈடுபடாத பிரிடிஷ் துருப்புகளின் மன உல்லாசம் சிறப்பாகயிருக்கிறது. போரில் கலந்து கொள்ளாத பிரிடிஷ் அமெரிக்கத் துருப்புகளுக்கு யுத்த அனுபவம் கிடைக்கவேண்டும். இது யுத்தம் ஏற்பட்டால்தான் சித்திக்கும்."

பிரிடிஷ், அமெரிக்கத் துருப்புகள் ஜெர்மானியர்களைவிட உயர்வான போர்வீரர்கள் என்பது அவருடைய அபிப்பிராயமென்றும் அவர் சொன்னார். அவர் மேலும் சொன்னதாவது :—

"ஜெர்மானியர்கள் ராணுவ ஜாதியார்கள். நாமும் அமெரிக்கர்களும் அந்த வகுப்பைச் சேர்ந்தவர்களல்ல. நாம் சுத்த வீரர்கள். இதுதான் நமக்கும் அவர்களுக்குமுள்ள வித்தியாசம். ஜெர்மானியர்கள் தங்களுக்குக் கிடைத்த கட்டளையின்படி கண்மூடித்தனமாக நடத்திக்காட்டுவார்கள். நமது துருப்புகள் நம்முடைய திட்டத்தின் போக்கையையும் அதை நடத்தும் முறைகளையும் நன்கு அறிவார்கள்."

---

## ஏஜியன் கடலில் விமான யுத்தம்.

(குருஸெடர் பத்திரிகை).

ஏஜியன் கடலிலும், அயோனியன் கடலிலும் வெடிவிமானத் தாக்குதல் ஏற்பட்டு பன்னிரண்டு மாதங்களாகிவிட்டன. ஒவ்வொரு நாளும் வெடிகுண்டு வீச்சு நடைபெறுகின்றது. சமீபகாலத்தில் ஆறு வாரங்களில் விானங்கள் 4,000 தடவைகள் பாய்ந்து சென்றன. இந்த விமானத் தாக்குதலின் மூலம் யுத்தத்திற்கு கிடைக்கும் சில லாபங்களை ஒரு நிருபர் எழுதுகிறார்.

ஏஜியன் கடலில் விமானத் தாக்குதல் நடைபெறுகிறது. இந்தக் கட்டுரையில் நேசதேசத்தாரின் சிலாக்கியமான திட்டத்தின் நடவடிக்கைகள் குறிப்பிடப்படுகின்றன. இறுதியில் ஹிட்லரின் ஐரோப்பிய அரணை நொருக்க இந்த நடவ்டிக்கைகள் உபயோகப்படும்.

கிழக்கு மத்தியதரைக் கடலில் ஜெர்மன் யுத்த தந்திரம் யாதெனில் கிரீட், ஸ்கார்பாண்டோ, ரோட்ஸ் முதலிய தீவுகளை உபயோகப்படுத்தி கிரீஸிலும் பால்கன் நாடுகளிலுமுள்ள அவர்களுடைய விலாப்பக்கத்தைக் காப்பாற்றுவதுதான். இந்த வெளிப்புற தற்காப்புகளுக்குப் பின், ஏஜியன் கடல்களிலும் அயோனியன் கடல்களிலும் அநேக சிறிய தீவ் அரண்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

கிரீட், ஸ்கார்பாண்டோ, ரோட்ஸ் தீவுகளில் பலமான ஜெர்மன் படைகள் காபந்து செய்துவருகின்றன. 1943-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்தில் கிரீட்டில் 35,000 துருப்புகளும் ரோட்ஸில் 7,000 துருப்புகளும் மற்ற தீவுகளில் 5,000 துருப்புகளும் வைக்கப்பட்டிருந்தன.

பால்கன் நாடுகளிலும், ஏஜியன் கடல்களிலும், அயோனியன் கடல்களிலும் நேசதேச விமானப்படைகள், தற்காப்புக்காக அரண்கள் அமைக்கப்பட்டிருக்கும் தீவுகளுக்கும் மற்ற

கேந்திர ஸ்தானங்களுக்கும் போகும் போக்குவரத்து மார்க்கங்களை அழிப்பதில் கவனம் செலுத்திவருகின்றன.

முக்கியமான எதிரியின் ஸப்ளை மார்க்கங்கள் பிரேயஸ்ஸிலிருந்தும் மற்ற கிரேக்கத் துறைமுகங்களிலிருந்தும் ஜெர்மனியின் எல்லைப்புற தற்காப்பு அரண்களுள்ள கிரீட்டுக்கும், ஸ்கார்பெண்டாவுக்கும் ரோட்ஸுக்கும் லேராஸுக்கும் செல்லுகின்றன. இன்னும் சில மார்க்கங்கள் வெளிப்புற அரணுக்கும் ஐரோப்பாவுக்கும் மத்தியிலுள்ள தீவுகளுக்குச் செல்லுகின்றன.

### வெடிவிமானங்களின் பலமான நடவடிக்கை.

பால்கன் நாடுகளிலுள்ள இருப்புப்பாதைகள் வழியாக தெற்கு நோக்கிச் செல்லும் ஸப்ளைகளை இதாலியிலிருந்து புறப்படும் நேசதேச வெடிவிமானங்கள் அழித்துவருகின்றன.

எல்லைப்புறத்திலுள்ள தீவுகளுக்கு ஸப்ளைகளைக் கொண்டுபோக எதிரி கடல் மார்க்கத்தை முக்கியமாக நம்பவேண்டும். ஒரு காலத்தில் எதிரி கப்பல்களை உபயோகப்படுத்திவந்தான்.

1943-ம் வருஷத்திலிருந்து நேசதேச விமானப்படையும் கடற்படையும் ஒன்றுபட்டு அநேக ஜெர்மன் கப்பல்களை மூழ்கடித்திருப்பதால் எதிரி இப்பொழுது சாமான் கப்பல்களின் கூட்டத்தைக் குறைத்துவிட்டான். நமது தாக்குதலைத் தவிர்க்க எதிரி ஊக்கமான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டும் பயன்படவில்லை. நேசதேசத்தாரின் விமான ஆதிக்கம் எதிரிகளைவிட மூன்று மடங்காக அதிகரித்திருக்கிறது. 1943-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் முதல் நவம்பர் மாதம் பாதி வரைக்கும் நேசதேச விமானப்படையும் ஆக்ஆக் பீரங்கிப்படையும் 303 விமானங்களை நொருக்கின. அவைகளில் சிலது அழிவுபட்டும் சிலது பழுதுபட்டும் போய்விட்டன. நேசதேசத்தாருக்கு 123 விமானங்கள்தான் நஷ்டமாகின.

ஏஜியன் கடல் நடவடிக்கைகள் இந்தப் புள்ளி விவரங்களைவிட அபரிமிதமானவை. நேசதேச விமானத் தாக்குதல் மூலம் எதிரி அவனுடைய அரண்களிலுள்ள படைகளை பலப்படுத்தவேண்டியதாகிவிட்டது. யூகோஸ்லாவிய, கிரேக்க தேசாபிமானப் படைகளுக்கு உத்சாகம் ஏற்பட்டது. இதாலியிலும், ருஷ்யாவிலும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் ஜெர்மன் படைகளுக்கு உதவவொட்டாமல் ஏராளமான துருப்புகள் இங்கு அடைபட்டிருக்கின்றன.

---

## எட்டாம் சேனை.

---

எட்டாம் படையைப்பற்றி ஒரு புத்தகத்தைப் பார்த்து ஒரு டெய்லி டெலகிராபின் ராணுவ நிருபர் ஒருவர் பின்வருமாறு கூறுகிறார். "தனியாய் போர் நடத்திய 16 மாதங்களில் எட்டாம் சேனை, தீரமான வீரர்களாலும் நல்ல மனோதிடமுடையாருமான 4 பெரும் வீரர்களால் நடத்தப்பட்டது. இடத்திற்குத் தகுந்த ஆளைப் பொருக்குவதுதான் இதன் சட்டதிட்டம். இந்த பல தலைவர்களின் நிலையையும் தீரத்தையும் நாம் அறிதல் அவசியம். இந்த நால்வரில் ஜெனரல் மாண்ட் காமரிதான் மிகவும் தகுதியானவர். அவரின் வசியமான தோற்றத்துடன் நல்ல திறனும் சேர்ந்து, முறைகளை அனுசரித்து எதிரிகளைத் தாக்கி, பலவாறு இந்த யுத்தத்தை ஒரு முகப்படுத்தினார்.

எட்டாம் சேனை, அலெக்ஸாண்டர், மாண்ட் காமரி, லிண்ட் ரஸல் இவர்களால் நடத்தப்பட்டு, அப்போதைக்கப்போது வேண்டிய அளவு ஸப்ளைகளையும் பெற்று தீரமாய் போர் நடத்தினர்.

### பெருமையுடன் கூடிய சமாசாரம்.

ஜெனரல் ஆச்சின்லெக் தடுக்கமுடியாதவைகளுடன் போரிட்டு வெற்றி பெற்றிருக்கிறார். சண்டைகளுக்குப் பின்னும் எட்டாம் சேனைதான் சேனையாகவே உணருகிறது. இந்த உணர்ச்சிதான் இனிவரும் நாட்களில் போரிடுவதற்கு ஊக்கமளிக்கிறது. ஒரு உத்தியோகஸ்தர் "எட்டாம் சேனையில் உழைப்பதே ஒரு தனி கௌரவம், அக்கௌரவம் மிகவும் போற்றத்தக்கது" என்று கூறுகிறார்.



அடுத்த சண்டையில் ஆச்சின்லெக் ரிட்சி இவர்களுக்கு எதிரியாய் ரோமலும் இதனையே செய்தார். சில வாரங்களுக்குப் பிறகு அவன் நிலைமை தடுமாறி நமது சுரங்கங்களின் வழியாய்ச் சென்று நமது யுத்த அரண்களுக்குப் பின் நிற்கவேண்டியதாயிற்று. அநேகமாய் அலெக்ஸாண்டிரியாவை அடைந்தான். ஆனால் தான் தோற்றதாகமட்டும் ஒப்புக்கொள்ளவில்லை.

நமக்கு ஏற்பட்ட தளவாட நஷ்டம், டாங்கிகளோடு டாங்கிகள் மோதவேண்டிய காலத்தில் ஜெர்மன் டாங்கிகளும், டாங்கிகளைச் சுடும் பீரங்கிகளாலும்தான் நஷ்டம் ஏற்பட்டது என சொல்லவேண்டும். அடுத்தாற்போன்ற விஷயமானது எதிர்த்தாக்குதலுக்கென சந்தர்ப்பம் வாய்த்தபோது, பிரிடிஷின் வெற்றிகளை நிலைப்படுத்தியதானது, பலமற்ற பிரிடிஷ் படைகளால் வெற்றி கிடைத்ததுதானாகும்.

ஜுன் மாதம் 4, 5 தேதிகளில் 50-ம் படைப் பகுதியைச்சேர்ந்த இரண்டாம் பட்டாலியன்கள், 32-ம் படையாலும் உதவி செய்யப்பட்டு, வடக்கிலிருந்து யுத்தம் புரிந்தது. 5-ம் இந்தியப் படை 22-ம் படையின் 4 ரெஜிமெண்டினாலும், 3 பீரங்கிப் படையாலும் உதவி செய்யப்பட்டு கிழக்கிலிருந்து தாக்கிற்று. இம்மூன்று படைகளும் எதிர்த்தாக்குதலுக்கு உபயோகப்படுத்தப்பட்டன. இந்தத் தோல்விக்குப் பின் நமது சமயோசித முயற்சிகள் பலனற்றுப் போனாலும், நமது யுத்த தந்திரங்கள் டொப்ருக் வீழ்ச்சியிலும் வளராமல் போய்விடவில்லை.

அதன்பின் ஜெனரல் ஆச்சின்லெக் நல்ல கியாதியடைந்தார். இம்முறை வெற்றி பெற்றதற்கல்ல. ஒரு பெரும் கஷ்டத்தினின்றும் விடுபட்டதற்காக ஜெனரல் ரிட்சிடமிருந்து யுத்த முறையை பெற்று, இவர் எல் அலமீனை நோக்கினார்.

---

## இதாலியில் இந்தியத் துருப்புகள்.

---

அபிஸினியா, வட ஆபிரிக்கா யுத்தங்களில், இந்திய 4-ம் சேனை, 5-ம் சேனை இவைகள் அடைந்த வெற்றிகளுக்குப்பின், தற்போது இதாலியில் நடக்கும் யுத்தத்தில் 8-ம் இந்தியப் படை அடைந்துவரும் வெற்றிகளாலும், அச்சுப்படையினரை எதிர்த்துப் போர்புரிய இந்தியப்படைகள்தான் உயர்ந்தவை என்பது வெளிப்படுகிறது. 4-ம், 5-ம் இந்தியப் படைகளைப் போல் 8-ம் இந்தியப் படையும், இந்திய பிரிடிஷ் சேனைகளோடு கூடியது. அநேகமாய் சில உத்தியோகஸ்தர்களும், சேனையும் புதிதாய் சேர்க்கப்பட்டாலும், உயர்ந்த திரண் படைத்த வீரர்களையும், தற்கால யுத்த முறைகளின்படி போரிடத்தக்கோராயும், இப்பொழுது அவர்கள் செய்யும் யுத்தமுறையிலேயே நெடுநாள் பயிற்சியடைந்தோரும் சேனையிலுள்ள ஒவ்வொருவரையும் நன்கு அறிந்துகொண்டு அவர்கள் நம்பிக்கை கொண்டுள்ள உத்தியோகஸ்தர்களையும் கொண்டுள்ளது இந்தப்படை. இந்தியச் சேனை மேற்பார்வையாளர் ஒருவர் ஒரு மஹாராட்டிர சுபேதார் சொல்லிய வார்த்தைகளை தானும் கூறினார். அதாவது "இந்தியச் சேனைகளிடத்தில் ஒரு வீரருக்கு வேண்டியதன் திடசித்தம் இவர்களிடத்தில் உள்ளது" என்பதுதான்.

### முக்கிய பாகம்.

சென்ற வருஷம் ஸெப்டம்பர் மாதத்தின் முதல் நேசதேசத் துருப்புகள் டிரிக்னோ, மோரோ, ஸாங்ரோ முதலிய இடங்களைக்கடந்து கிராமத்தின் மேல் கிராமமாய் போரிட்டபோது 8-ம் இந்தியப்படை, ஜெர்மானியர்களை வடமுகமாய் விரட்டுவதற்கு மிகவும் பாடுபட்டது. இந்தியப்படையும், பிரிடிஷாரும் ஒன்றுசேர்ந்து புரியாத பெரும் சண்டைகள் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். மலைப்பாங்கான பிரதேசங்களில் யுத்தம் புரியும் திறனுடையோராதலால் இவர்கள் மத்திய இதாலியின் பனி நிறைந்த மலைகளின் மேல் போரிட அனுப்பப்பட்டனர்.

இதாலியில் முதன் முதலில் பிரிடிஷ் அமெரிக்க ஐந்தாம் சேனையோடு சேர்ந்து ஸாலர்னோவிற்குள் புகுந்த இந்தியப் படையானது ஜோத்பூர் காலாட்படையேயாகும். 12 எல்லைப்புறப்படையைச் சேர்ந்த பட்டாலியன் ஒன்றும் ஜெர்மானியர்களை மலையினின்றும் விரட்ட அரும்பாடுபட்டனர். இம்மாதிரியாக சின்னாட்கள் போரிட்டும் வேவு பார்த்தும் நாட்டின் வழிகளினை நன்றாய் அறிந்து கொண்டதன்பின் டிரிக்னோ நதியின் எல்லையில் முதன் முதலாய் கடும்போர் புரிய விடப்பட்டனர். நல்ல எதிர்ப்புகளின் எதிரில் பஞ்சாப்படையும், எல்லைப்புறப்படையும் போரிட்டு ஜெர்மன் தற்காப்புகளை சிதற அடித்து நதியின் வடகரையை அடைந்தனர். ஸாங்ரோ நதியின் வழியாய் எதிரிகள் பின்வாங்கினர்.

ஸாங்ரோ நதியினிடத்தில் அடைந்த வெற்றியும் அப்படைக்கு மிகவும் போற்றத்தக்க தாகும். நவம்பர் 28-ம் தேதி போர் ஆரம்பித்தது. காலநிலை மாறுபட்டும், வெள்ளம் நிறைந்த நதியோடும், நல்ல தற்காப்பையும் கூடிய இந்தப் போரில் இவர்கள் முதன் முதலில் சமாளித்தனர். டிஸம்பர் மாதம் 1-ம் தேதி 8-ம் இந்தியப்படை எதிர்களை நிர்மூலப் படுத்தி நுழைந்துவிட்டதென்று வெளியிடப்பட்டது.

### மோரோவிற்குப் பின்.

மோரோ நதிக்குப்பின், இப்படை கிராமத்தின் மேல் கிராமத்தை கைப்பற்றிக்கொண்டே போனது, சீக்கியர்கள், கூர்க்கர்கள், பஞ்சாபிகள், பாதன்ஸ், மஹாராட்டிரர்கள், ராஜ புத்திரர்கள் இவர்கள் எல்லாம் இந்த 8-ம் சேனையிலிருந்துகொண்டு ஜெர்மானியர்களை எதிர்த்துப் போரிட்டனர். ஒவ்வொரு சமயமும் எதிரிகள் பின்வாங்குமாறு அத்தனை பெருமையுடன் போரிட்டிருக்கின்றனர்.

பிரிடிஷ் பட்டாளங்களும் யுத்தமிடும் இந்தியப்பட்டாளங்களுக்கு உதவியாயிருந்தன. இந்தக் கடும்போரில் பிரிடிஷ் பீரங்கிப்படையும் மஹாராட்டிர இயந்திர பீரங்கிப்படையும் காலாட்படையும் மிகவும் உதவி புரிந்தனர். எதிரிகள்போல் இந்தியர்கள் எதிர்க்க வேண்டியதை காலநிலையின் மாறுதல்கள் சீதோஷ்ணமாறுபாடு பனிக்கட்டியோடு கூடிய புயல், ஆகிய இவைகளை பிரிடிஷ் படைகளும் இந்தியப் படைகளும் எதிர்க்கவேண்டிய தாயிற்று. ஆனால் இந்தியத் துருப்புகள் இவைகளை லக்ஷியம் செய்யாமல் போரிட்டனர்.

---

## பாய்மரக்கப்பல்கள் ஆறு நீர்மூழ்கிகளை அழித்தன.

### (A. J. மாக்வின்னி).

நீர்மூழ்கிகளை எதிர்த்துப் போராடும் பிரிடனின் கியாதி பெற்ற இரண்டாவது துணைக் காவல் பாய்மரக்கப்பல்கள் ஒரு ரோந்து நடவடிக்கையில் ஆறு யூ படகுகளை அழித்தபின் லிவர்ப்பூலுக்குத் திரும்பியபொழுது நான் அங்கு சென்றிருந்தேன். எந்தப் போரிலும் எந்த தேசத்தின் கடற்படையும் ஒரு ரோந்து நடவடிக்கையில் இவ்விதமான கீர்த்தியைப் பெறவில்லை.

இந்தக் கப்பல்களில் புத்தி தெளிவு ஏற்பட்ட 51 ஜெர்மன் மாலுமிகள் வந்தார்கள். பிரிடிஷ் கடற்படையின் கோரமான பீரங்கி பிரயோகத்திற்குப்பின் அவர்கள் உயிர் தப்பினார்களென்பதைக்கண்டு அவர்கள் சந்தோஷித்தார்கள்.

அவர்கள் அமைதியுடனும் மரியாதையுடனும் நடந்துகொண்டார்கள். யுத்த ஆரம்பத்திலிருந்ததுபோல் அவர்கள் வீம்பு பேசவில்லை; தலை கொழுத்துப் பேசவில்லை. நாஸி முறைப்படி வணங்கவுமில்லை. அநேகம் தடவைகளில் யூ படகுகளிலிருந்து கைது செய்யப்பட்ட மாலுமிகள் கடற்கரையிலிறங்கும்பொழுது ஹிட்லருக்கு ஜே என்று சொன்னதுபோல் அவர்கள் ஆக்ரோஷத்துடன் கூக்குரலிடவில்லை.

### கப்பலின் மேல் தட்டின் பின்னணி அதிகாரிக்கு வணக்கம்.

51 நீர்மூழ்கிகளின் மாலுமிகளுக்குத் தலைவரானவர் தன்னுடைய நாவிகேடர்கள் சில்லறை உத்தியோகஸ்தர்கள், வேலைக்காரர்களுடன் ஒடும் வழிஙய சமீபித்தபொழுது கப்பலின்மேல் தட்டின் பின்னணி அதிகாரிக்குவணங்கினர்.

இந்த காப்டன் மேற்கொண்ட முடிவை மற்ற யூ படகு கம்மாண்டர்களும் ஏற்றுக் கொண்டிருக்கலாம். தண்ணீருக்குள்ளிருந்தபொழுது ஏராளமான வெடிவீச்சுக்குட்பட்டு நீர்மூழ்கி சமுத்திர மட்டத்துக்கு வந்தது. இந்த ரோந்தில் அழிக்கப்பட்ட ஆறு யூ படகுகளில் காப்டனின் யூ படகு மட்டும்தான் சமுத்திர மட்டத்தில் அழிந்தது. மற்றவைகள் நீர் மட்டத்தின் கீழிருக்கும்பொழுதே அழிக்கப்பட்டன. நீர்மூழ்கியை நீர் மட்டத்துக்குக் கொண்டுவந்து கடலில் குதித்து எதிரியின் தயையை வேண்டிக்கொண்டதால் இவர்கள் உயிர் தப்பினார்கள். மற்ற ஐந்து நீர்மூழ்கிகளிலிருந்த 250 பேர்களும் தண்ணீருக்குள் இறந்துவிட்டார்கள்.

புதிதான, எதிர்பாராத, ரகசிய யூ படகு ஆயுதத்தை ஜெர்மன் விஞ்ஞான சாஸ்திரிகள் கண்டுபிடித்தாலொழிய; தண்ணீருக்குள் மூழ்கிக் கிடக்கும் யூ படகுகளைவிட தரை மட்டத்திற்கு வரும் நீர்மூழ்கிகளுள்ள மாலுமிகளைக் காப்பாற்ற ஜெர்மனிக்கு சௌகரியம் குறைவென்றும் இப்பொழுது ருஜு ஏற்பட்டுவிட்டது. யூ படகு வேலைக்காரர்கள் இறந்து போனாலும் அல்லது எதிரி வசமாகி விட்டாலும் இரு வகையிலும் ஹிட்லர் அவர்களின் சேவையை இழந்துவிட்டான். அவர்களுக்கு பயிற்சியளிப்பதில் அவன் அதிக பிரயாசை



எடுத்துக்கொண்டும் பொருளைச் செலவு செய்துமிருக்கிறான். உயிர் துறந்தாலும் அல்லது கைது செய்யப்பட்டாலும் அவர்கள் ஹிட்லருக்கு இனி உதவ மாட்டார்கள். முழுகிப்போன நீர்மூழ்கியிலிருந்து பிழைத்து சமுத்திரத்தில் தத்தளிக்கிறவர்களை ரக்ஷிக்க ஜெர்மன் யுத்தக் கப்பல்களும் சாமான் கப்பல்களும் சமுத்திரங்களில் சஞ்சரிக்கவில்லை.

### உட்பெக்கர் என்ற கப்பலின் வேலைக்காரர்கள் காப்பாற்றப்பட்டார்கள்.

யூ படகுகளைத் தாக்கிய இந்த நடவடிக்கைகளில் உட்பெக்கர் என்ற கப்பல் மீன்வெடிக்கு இரையாகி பலமாகப் பழுதுபட்டது. ஆகிலும் அதன் பக்கத்தில் அநேக பிரிடிஷ் கப்பல்கள் நின்றன. ஒவ்வொரு ஆபீஸரும் வேலைக்காரனும் காப்பாற்றப்பட்டான். அவர்களுடைய சாதுர்யமும் அனுபவமும் நமக்கு இன்னும் கிடைக்கக்கூடியவை.

யுத்தக் கப்பல்களின் திரும்பி வருகையை பிரிடன் குதூகலத்துடன் அடிக்கடி வரவேற்பதில்லை. ஆனால் ஜெர்மன் யூ படகு மாலுமிகளின் மனப்பான்மையை நிலைநாட்டுவதற்காக ஜெர்மானியர்கள் அநேக காலமாகத் தளங்களுக்குத் திரும்பி வரும் யூ படகு மாலுமிகளுக்கு பித்தளை வட்டைகளும் பூமாலைகளும் சூட்டி வரவேற்பது வழக்கம்.

1939-ம் வருஷத்துக்குப்பின் இரண்டு தடவைகளில்தான் பிரிடனில் பலமான குதூகலமான வரவேற்பு உத்சவம் நடைபெற்றது. முதலாவது, பிளேட் நதிப்போரில் ஜெர்மன் கொள்ளைக் கப்பலான கிராப்ஸ்பியை வெற்றிகரமாக மூழ்கடித்துவிட்டு அஜாக்ஸ், எக்ஸிடர் என்ற இரண்டு நாசகாரிகள் துறைமுகத்துக்குத் திரும்பிவந்தபொழுது. இரண்டாவதாக பிரிடனின் இரண்டாவது துணைக்காவல் கப்பல்களின் தலைவரான காப்டன் F. J. வாக்கர் மூன்று D. S. O. பதக்கம் பெற்றவர். 51 யூ படகு மாலுமிகளுடனும் யூ படகுகளை அழித்த மற்ற சின்னங்களுடனும் மெர்ஸி துறைமுகத்துக்கு வந்தபொழுது அவர் வரவேற்கப் பட்டார்.

யூ படகு மாலுமிகளிடம் தோல்வி மனப்பான்மை அதிகரித்து வருகிறதென்று சொல்லுவது மிகையாகயிருக்கலாம். ஆகிலும் அவர்களுக்குக் கிடைக்கும் சொல்ப வெற்றிகளும், அவர்களை எதிர்த்துத் தாக்கும் பலமான நடவடிக்கைகளும், பிரிடன் கடலாதிக்கம் பெற்றுவிட்டதென்ற படிப்பினையை போதிக்கின்றன.

---

## வடக்கு பர்மா போரில் விமான மூலம் செல்லும் படைகளின் சேவை.

### (ஸண்டே டைம்ஸ் பத்திரிகை).

1942-ம் வருஷத்தில் ஆல்ஜியர்ஸுக்கும் ஓரானுக்கும் சமீபத்தில் கேந்திர ஸ்தானங்களில் விமான மூலம் படைகளிறங்கியதிலிருந்து எதிர்காலத்திய முன்னேற்ற நடவடிக்கைகளிலும் விமான மூலமாகச் செல்லும் படைகள் அரிய சேவையைச் செய்யக்கூடுமென்று எதிர் பார்க்கப்பட்டது.

ஸிஸிலிய யுத்தம் துவக்கப்பட்ட பின் கிளைடர் விமானங்கள் மூலமாகவும் குடைகள் மூலமாகவும் துருப்புகள் உதவிக்குச் சென்றன. இப்பொழுது வடக்கு பர்மாவிலுள்ள ஜப்பானியர்களை அவர்களுக்கு பின் புறத்திலிறங்கியிருக்கும் பிரிடிஷ் இந்தியத் துருப்புகள் தொந்தரவு செய்து வருகின்றன. இவ்விதமான நடவடிக்கைக்கு விமான ஆதிக்கம் மட்டுமிருந்தால் போதாது. டாங்கிகளையும் பீரங்கிகளையும் உதவிகொண்டு எதிர்த்து நிற்கக்கூடிய பலமான எதிர்ப்புப் படையையும் சமாளிக்கப் போதுமான கனமான முஸ்தீப்புகளை இட்டுக் கொண்டுபோகும் கிளைடர் விமானங்கள் வழிமறிப்பன்றியில் பத்திரமாகச் செல்லவேண்டும். விமான எதிர்ப்பு ஏற்படாமல் அவைகளுக்குச் சண்டை விமானங்கள் துணைக்காவல் புரிய வேண்டும். எதிரியின் தரையிலிருக்கும் படைகளும் அவைகளைத் தாக்காமல் காபந்து செய்ய வேண்டும்.

### விரிவான திட்டம்.

பர்மாவிலிருந்து வந்த ரிபோர்ட்டுகளிருந்து படைகளைக் கபடமாகக் கொண்டுபோக விமானங்களை உபயோகப்படுத்துவதென்ற விரிவான திட்டம் போடப்பட்டிருக்கிறது. ஐரோப்பியப் போர் முனைகளில் இந்த தந்திரத்தைக் கையாளுவதென்றால், அவைகளை எதிர்த்து நிற்கும் படைகளை முதலில் அழித்துவிடவேண்டும். எதிரியின் விமானக்கூட

யிருக்கும் மாகாணத்தை விமானத் தாக்குதல் மூலம் மற்ற பிரதேசங்களிலிருந்து துண்டித்துவிடவேண்டும். இதைச் சாதிக்கவேண்டுமானால் பகலும் இரவுமாக மாகாணத்தின் எல்லைப்புறங்களை ஓயாமல் விமானங்கள் நொறுக்கி வரவேண்டும்.

ஒரு நாள் பூராவும் பிரிட்டனிலுள்ள தளங்களிலிருந்து இடைவிடாமல் விமானத் தாக்குதல் நடைபெறுவதிலிருந்து குறிப்பிட்ட பிரதேசத்தில் ஏற்படக்கூடிய வெடிகுண்டு வீச்சும் அழிவும் புலப்படுகின்றன. பகல் தாக்குதல்களும் பலமாகவும் பலவகைகளிலும் நடைபெறக் கூடும். மேலும் மஸ்கிடோ விமானங்களும் இந்த விஷயத்தில் அரிய சேவையைச் செய்யக் கூடும். அதன் வேகமும் 4,000 ராத்தல் குண்டுகளை வீசும் சக்தியும் நிரந்தரமாகப் பகல் நடவடிக்கைகளை மேற்கொள்ள நேசதேசத்தார்களுக்கு அதிக வசதியளிக்கக்கூடும். 400 மைல்கள் வேகமும் 4,000 ராத்தல் எடைமானமுள்ள வெடிகுண்டுகளையும் இட்டுக்கொண்டு போகக்கூடிய இந்த வெடி விமானத்தைப்போல மற்ற எந்த வெடி விமானமும் உபயோகப்படாது.

# விமானப்படை ரக்ஷணையும் ஸப்ளைகளும் குறைவு.

## பர்மாவில் ஜப்பானியர்களின் சிரமங்கள்.

(ஸ்காட்ஸ்மான் பத்திரிகை).

சில நாட்களுக்குமுன் சிண்ட்வின் நதியைத் தாண்டிவிட்டதாகச் சொல்லப்பட்ட ஜப்பானியப்படைகள் தென்கிழக்கு அஸ்ஸாமில் இந்திய எல்லைச் சரகத்தைத் தாண்டி மணிப்பூர் ஸமஸ்தானத்துக்குள் வந்துவிட்டன. வடக்கு பர்மாவில் நடைபெறும் நடவடிக்கையிலிருந்து நேசதேசப்படைகளின் கவனத்தை வேறு பக்கம் திருப்ப ஜப்பானியர்கள் பதில் தாக்குதல் செய்திருக்கிறார்களென்று அதிகார முறையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஜப்பானிய பிரதம மந்திரி சொன்ன பிரகாரம் இந்த நடவடிக்கையில் ராஜீய லக்ஷியமும் இருக்கிறது.

ஜப்பானிய நடவடிக்கை இந்தியாவுக்கு அதிக அபாயத்தை விளைவிக்கக்கூடியதாகயில்லாத போதிலும் அதை துரிதமாகவும் வெற்றிகரமாகவும் துரத்தியடிக்கவேண்டியது அத்யாவசியம். அஸ்ஸாமிலுள்ள நமது இருப்புப்பாதை, நதி போக்குவரத்து மார்க்கங்களுக்கும் விமான தளங்களுக்கும் ஆபத்துண்டாகும்படியான கேந்திர ஸ்தானத்தை ஜப்பானியர்கள் அடைந்தாலொழிய இந்தியாவுக்கு அபாயம் ஏற்படாதென்று இந்திய சேனாதிபதியான ஜெனரல் ஆச்சின்லெக் சொல்லியிருக்கிறார். சென்ற இரண்டு வருஷங்களாக ஜப்பானியரின் தாக்குதலை சமாளிக்கப் போதுமான துருப்புகளை அனுப்பிப் பரிபாலிக்க வசதியளிக்கக் கூடிய ரஸ்தாக்களை காடடர்ந்த, மலைப்பாங்கான பிரதேசங்களில் அமைத்து வந்திருக்கிறோம். ஆகையினால் இறுதிப்போரில் நமக்கு வெற்றி என்பதில் பூர்ணமான நம்பிக்கையிருக்கிறது. ஆகிலும் ஆச்சின்லெக் சொன்ன பிரகாரம் நமது சேனைத்தலைவர்களுக்கு திருப்தி ஏற்படும் முறையில் நிலைமையில் தெளிவுபடுவதற்கு சிறிது காலதாமதம் ஏற்படும்.

### எதிரியின் சிரமங்கள்.

தேசத்தின் ஸ்தல அமைப்பு, விமான ரக்ஷணை, ஸப்ளைகளின் குறைவு முதலிய பலமான கஷ்டங்களை எதிரி அனுபவிக்கவேண்டும். ஆகிலும் நமக்கு படிப்பினை ஏற்படக்கூடிய முறையில் நாம் அறிந்துகொண்டபடி காடுகளின் வழியாக ஜப்பானியர்கள் கபடமாக முன்னேற சக்தி பெற்றவர்கள் என்பதை நாம் குறைத்து மதிக்கக்கூடாது. மணிப்பூர் ரஸ்தாவை எதிரி வெற்றிகரமாக அடைந்துவிட்டால் வடக்கு பர்மாவில் போர் துவக்கியிருக்கும் நமது படைகளுக்கு ஸப்ளைகளைக் கொண்டுபோகும் மார்க்கங்களைத் தாக்க எதிரிக்கு சௌகரியமேற்படும்.

ஆகையால் அபாயம் ஏற்படும் முன் எதிரிகளை அழித்துவிடவேண்டியதும் அல்லது துரத்தியடிக்க வேண்டியதும் அத்யாவசியமான வேலையாகும்.

அரக்கான் போர்முனையில் நம்மைத் துரத்தியடிக்க அவன் செய்த பிரயத்னம் வீணாகிவிட்டபின் மற்றொரு பக்கத்தில் அவனுடைய எண்ணத்தைப் பூர்த்திசெய்ய அவன் முயலுவது



சகஜம். வடக்கு பர்மாவில் நடைபெற்றிருக்கும் சம்பவங்களின் காரணமாக பதில் தாக்குதலைத் துவக்க அவன் கட்டாயப்படுத்தப்பட்டான்.

ஐராவதி நதியைத் தாண்டி மியட்கினாவுக்குத் தென்கிழக்கில் விமான மூலமாகயிறங்கி எதிரியுடன் துவந்து யுத்தம் செய்த பிரிட்டிஷ் படைகளைப்பற்றி ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

போரிலீடுபட்டிருக்கும் படைகளின் சங்கியையப் பற்றி ஒரு தகவலும் கிடைக்காததால் அந்த நடவடிக்கைகளின் பரிமாணத்தை மதித்துக் கூறமுடியவில்லை. சிண்ட்வின் நதியை ஜப்பானியர்கள் தாண்டிச்சென்றது பெரிய முன்னேற்ற நடவடிக்கையென்று டில்லியில் வெளியிட்ட பிரசுரத்தில் சொல்லியிருப்பதுபோல மேற்குப்பக்கத்தில் எதிரி தன்னுடைய பூரா பலத்தையும் உபயோகித்து வருகிறானென்று ஊகிக்கலாம். ஆகையால் அஸ்ஸாமுக்குள் ஊடுருவிச்சென்றிருக்கும் படைகள் ஜப்பானின் முன்னணிப்படைகளாகயிருக்கக்கூடும்.

# டச்சுக்கிழக்கிந்தியத் தீவுகளில் ஜப்பானின் அக்கிரமங்கள்.

## நாஸி நிர்வாக முறைகள்.

(ஜோஸப் கால்மர்.)

ஜாவாத் தீவை ஆக்கிரமித்த இரண்டாவது வருஷப் பூர்த்தி தினமான 1944-ம் வருஷம் மார்ச்சு மாதம் 8-ம் தேதியன்று ஜப்பானிய ராணுவ அதிகாரிகள் அவர்களின் நிர்வாகத்தைப் பற்றி ஒரு ரிபோர்ட்டை பிரசுரம் செய்தார்கள். அதில் சில வெளிப்படையான தகவல்களும், விஷயக்குறைவும், வெளிப்படையான அநேக புளுகுகளும் காணப்படுகின்றன.

பொது ஜனங்களின் க்ஷேமத்தைப் பரிபாலிப்பதும் யுத்த தளவாட உற்பத்தியை அதிகரிப்பதும் தான் நிர்வாகத்தின் முக்கியமான அலுவல்கள் என்று ரிபோர்ட்டில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. பெரிய ஆசியாவின் ஜப்பானிய மந்திரியான காசுவோ ஒக்கி இந்தத் தீவுகளை ஆக்கிரமித்த உடன் காலத்தில் இந்த லக்ஷியங்களை நிறைவேற்ற திட்டங்களை நிறுவினான். டச்சுக்கிழக்கிந்தியத் தீவுகளின் ஜனங்களின் அக்கரைகளுக்கு ஒத்ததாக ஒரு திட்டமும் நடைபெறவில்லை.

ஆஸ்திரேலியாவில் இப்பொழுதிருக்கும் டச்சுக்கிழக்கிந்தியத் தீவுகளின் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் சமீப காலத்தில் அங்கிருக்கும் நிலைமையைப்பற்றிய ருசிகரமான சில குறிப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள்.

### ஜப்பானிய பிரசாரம் வீணாகிவிட்டது.

டச்சுக்கிழக்கிந்தியத் தீவுகளிலுள்ள ஜனங்களுக்கு ஸ்வதந்திரம் அளிக்கப்பட்டதாகவும், அவர்களுடைய கதியை நிர்த்தாரணம் செய்துகொள்ள அவர்கள் உரிமை பெற்றுவிட்டார்களென்றும் அவர்கள் உணரும் படியாகச்செய்து விடவேண்டுமென்று ஜப்பானியர்கள் முயற்சி செய்து வருகிறார்கள். டோக்கியோவிலுள்ள ராஜீய வாதிகளின் இந்த பிரசாரம் முற்றிலும் வீணாகப்போய்விட்டது. ஏனெனில் டச்சுக்கிழக்கிந்தியத் தீவுகளில் ஆட்சிபுரியும் ஜப்பானியத் துருப்புகளின் அக்கிரமங்கள் டோஜோவின் திட்டங்களை சீர் கெடுத்துவிட்டன. ஐரோப்பாவில் நாஸிகளுக்கு ஜெர்மன் ரகசியப் போலீஸ் உதவுவதுபோல டச்சுக்கிழக்கிந்தியத் தீவில் காம்பிடே ஜப்பானியர்களுக்கு உதவியளித்து வருகிறது. இதுதான் ஜப்பானின் ராணுவ போலீஸ் படை. டச்சுக்கிழக்கிந்தியத் தீவுகளின் நிர்வாகத்தில் இவைகள் முக்கியமான பொறுப்பை வகித்து வருகின்றன.

ஸ்வதந்திரம் வழங்கியதாகப் பொருள்படும்படியாக 1943-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் இங்கு மத்திய நிர்வாக சபை அமைக்கப்பட்டது. அதன் அங்கத்தினர்களை 60 மிலியன் ஜாவா ஜனங்கள் தேர்ந்தெடுக்கவில்லை. ஜப்பானிய ராணுவ அதிகாரிகள் அவர்களை நியமித்திருக்கிறார்கள். ஜப்பானியர்களுடன் ஒத்துழைக்கக்கூடியவர்களைத்தான் ஜப்பானியர்கள் நியமனம் செய்திருக்கிறார்கள். உள்நாட்டு அங்கத்தினர்களடங்கிய இச்சபை ஆலோசனை சொல்லும் அதிகாரத்தைக்கூட பெற்றிருக்கவில்லை. இது வரையில் இச்சபை இரண்டு தடவைகள்தான் கூடியிருக்கிறது. அதாவது 1943-ம் வருஷம் அக்டோபர் மாதத்திலும்

1944-ம் வருஷம் மார்ச்சு மாதத்திலும் அது கூடி ஜப்பானிய ராணுவ அதிகாரிகளின் உத்தரவுகளை ஆக்ஷேபணையின்றியில் ஒப்புக்கொண்டிருக்கிறது.

அதன் நடவடிக்கைகளைப்பற்றி ஜப்பானியர்கள் பின் வருமாறு பிரசாரம் செய்து வருகிறார்கள். இந்தச் சபை ஜப்பானிய சேனையின் தீரச்செய்கைகளைப் பாராட்டியிருக்கிறது. விஷயக் குறிப்பிலுள்ள எல்லா சமாசாரங்களையும் அது சர்ச்சை செய்திருக்கிறது. உணவுப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்வது, விமானத் தாக்குதலின் பொழுது அனுஷ்டிக்க வேண்டிய எச்சரிக்கைகள், கடைகளிலும் தொழிற்சாலைகளிலும் சாரவேலை செய்பவர்களைக் கண்டு பிடிப்பது என்ற விஷயங்கள்தான் விவாதிக்கப்பட்டன.

### நாஸி முறைகள்.

மற்ற உற்பத்திகளைப்போல உணவுப்பொருள் உற்பத்தியும் நாஸிகளின் நடை முறையை ஒட்டியிருக்கிறது. எல்லா மதபேதமுள்ள ஜாதியார்களையும் ஒரு முகப்படுத்த அதிகார வர்க்கத்தார் கொண்ட சங்கங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, முஸ்லீம்கள் மாதாந்திரப்பட்டினி விரதத்தைக் கொண்டாடக்கூடாது. அவ்விதம் அவர்கள் செய்தால் அவர்களின் வேலை செய்யும் சக்தி குறைந்துவிடும். அதிலிருந்து யுத்த தளவாட உற்பத்தி குறைவுபடும்.

தேயிலை, காபிச்செடிகளைப் பயிரிடுவது நிறுத்தப்பட்டுவிட்டது. இதிலிருந்து அநேக வருஷங்கள் வரையில் மிகுதியான நஷ்டம் ஏற்படும். ஏனென்றால் தேயிலை, காபிச்செடிகள் அநேக வருஷங்களுக்குப் பிறகு தான் பலனைத்தரும். இதன் மூலம் டச்சுக்கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களில் இரண்டு முக்கியமான பொருள்கள் போய்விட்டன. சணலும் அரிசியும் தேயிலை, காபித் தோட்டங்களிலிருந்த பிரதேசத்தில் பயிரிடப்படுகின்றன.

சமாதான காலத்தில் டச்சுக்கிழக்கிந்தியத் தீவிலிருந்து முக்கியமாக அரிசிதான் ஏற்றுமதி செய்யப்பட்டது. இப்பொழுது உள்நாட்டு ஜனங்கள் யுத்தத்துக்கு முன்னிருந்ததைவிட ஐந்து மடங்கு விலை கொடுக்கவேண்டியிருக்கிறது. ஜப்பானியர்கள் தங்களுடைய சேனைக்கும் ஏற்றுமதிக்கும் யுத்தத்துக்கு முன்னிருந்த விலைக்கே வாங்கிவிடுவார்கள். அதாவது அவர்கள் பொருள்களை அபலாப்படுத்திக்கொள்ளுகிறார்களென்று பொருள்படும். ஜாவாவிலிருந்து ஜப்பானியர்கள் ஏராளமான அரிசியை ஏற்றுமதி செய்கிறார்கள். ஏற்றுமதி வருஷத்தில் 150,000 மெட்ரிக்டன்களாகயிருந்தது. இப்பொழுது 240,000 மெட்ரிக்டன்களுக்கு அதிகரித்திருக்கிறது. ஜனங்களுக்கு தினசரி எட்டு அவுன்ஸ் உணவுப்பொருள்தான் பங்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதில் மூன்றில் ஒரு பாகமாக அரிசி வழங்கப்படுகிறது. மூன்றில் மற்றொரு பாகம் சோயா அவரைக்காயும் மற்றொரு பாகம் ஒரு வகைப்பட்ட உருளைக் கிழங்கு போன்ற காஸ்ஸாவாக் கிழங்கும் கொடுக்கப்படுகின்றன. தென் கிழக்கு ஆசியாவில் அபரிமிதமாக ஜப்பானியரிடமிருக்கும் ரப்பர் கூட கப்பல் வசதிக்குறைவினால் ஏற்றுமதி செய்யக்கூடவில்லை.

உள் நாட்டிலும் வெளி நாடுகளிலும் நடைபெறும் வியாபாரம் ஜப்பானியர் வசமாகி விட்டது. ராணுவ அதிகாரிகள் எல்லாவற்றையும் அடக்கி ஆளுவதால் வியாபாரிகள் அவர்களிடமிருந்து அனுமதிச் சீட்டுபெறவேண்டும். பாங்கிகளெல்லாம் ஜப்பானியர்களின் கண்காணிப்புக்குட்பட்டுவிட்டன. உள் நாட்டு மக்களிடையே நிறுவப்பட்ட சிக்கன முறைகள் தெற்கு பிராந்தியத்திலுள்ள அபிவிருத்தி பாங்கிக்குச் சாதகம் செய்துவிட்டன. அந்த பாங்கு அந்நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு ஒரு ஏற்பாட்டையும் செய்வதில்லை. 1943-ம் வருஷத்தில் இந்த பாங்கி ஜப்பானிய அரசாங்கத்துக்கு 7,000 மிலியன் யென் நாணயங்களைக் கடனாகக் கொடுத்தது.

### கட்டாய சேவை.

தெற்கு நாடுகளிலுள்ள மனித பலம் பூராவும் விவசாயத்துக்கும் யுத்த தொழில் அபிவிருத்திக்கும் உபயோகப்படுத்தப்படுகிறது. கட்டாய சேவையின் மூலம் ரஸ்தாக்கள் அமைக்கப்படுகின்றன. உள் நாட்டிலுள்ள ஜப்பானிய ராணுவத் தலைவர்கள் ஆட்களைத் திரட்டுகிறார்கள். அவைகள் மேற்கொள்ளும் முறைகளை படை திரட்டுவதற்காகப் போடப்பட்ட உத்தரவுகளின் வாசகங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். அது பின் வருமாறு:—
"உடன் காலத்தில் தானாக ஆஜராகதவர்களை ஜப்பானிய ஸோல்ஜர்கள் அழைத்து வந்து சிக்ஷிப்பார்கள். இந்தத் தண்டனை இருவகைப்படும். அடித்து அரை உயிரைப் போக்குவது லேசான முறை. சிரச்சேதம் செய்வது கடுமையான சிக்ஷை." கட்டாய சேவைக்காகக் கையாளப்படும் முறைகளைத் தவிர ஜப்பானிய ஸோல்ஜர்கள் உள்நாட்டு ஸ்திரீகளையும் குழந்தைகளையும் தாக்குவார்கள். சகல விதமான கொள்ளையடிப்பும் கொடுமைகளும் கையாளப்படும். இதன் பயனாக உள்நாட்டு ஜனங்கள் ஜப்பானிய அக்கிரமக்காரர்களிடம் பலமான துவேஷ புத்தியை மேற்கொண்டிருக்கிறார்கள். டச்சு நிர்வாகத்துக்கு எதிரியாக வேலை செய்து வந்த டச்சுக்கிழக்கிந்திய தேசாபிமானிகளும் அவர்களின் கதி மோக்ஷத்தை யார் அளிக்கக்கூடுமென்று இப்பொழுது அறிந்து விட்டார்கள்.



உதாரணமாக, அங்கிருக்கும் அமிதக் கக்ஷியைச்சேர்ந்த தேசியத் தலைவர் சமீப காலத்தில் ஒரு வேண்டுகோளை விடுத்தார். அதில் அவர் பின் வருமாறு சொல்லியிருக்கிறார். தேசாபிமானமுள்ள ஒவ்வொருவரும் ஜப்பான் கிழக்கிந்தியத் தீவுகளை ஆக்கிரமித்தபொழுது அவர்களின் நம்பிக்கைகளையும் லக்ஷியங்களையும் அவர்களிழந்துவிட்டார்களென்று அந்நாட்டு மக்கள் அறியவேண்டுமென்று அவர் வற்புறுத்தினார். ஜப்பானியர் செய்துவரும் விடுதலை பிரசாரத்துக்கு இதைவிட தெளிவான மறு மொழியை அளிக்கமுடியாது.

---

## இந்தியச் சிப்பாய்களுக்குச் சம்பள உயர்வு.

நிர்வாக சபையில் இந்திய சேனாதிபதி வெளியிட்ட தீர்மானத்தின்படி அமர்க்களத்தில் போர் புரியும் சிப்பாய்க்கு இப்பொழுது மாதம் ஒன்றுக்கு ரூ. 37–8–0 சம்பளம் கொடுக்கப்படும். சிப்பாயின் சம்பளம் ரூ. 16 தான். 1942-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்தில் அது 18 ரூபாய்களுக்கு உயர்த்தப்பட்டது. யுத்தத்துக்குமுன் சிப்பாயின் திறமைக்காக வழங்கப்பட்ட ரூ. 2—8—0. 1942-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்தில் 3—8—0 ரூபாய்க்கு உயர்த்தப்பட்டது. ஒரு வருஷ சேவையைப் பூர்த்தி செய்தவர்களுக்கு இப்பொழுது ரூ. 8—8—0 உபரிச் சம்பளம் கொடுக்கப்படும். யுத்தத்துக்குமுன் ஒதுக்கி வைக்கப்பட்ட சம்பளம் ரூ. ஒன்றாகயிருந்தது. 1942-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் ரூ. 3 ஆக உயர்த்தப்பட்டது. அதில் ஒரு மாறுதலும் கிடையாது. போர்க்களத்திலுள்ள துருப்புகளுக்கு ரூ. 3 படி கொடுக்கப்பட்டது. 1942-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்தில் அது ரூ. 5 ஆக உயர்த்தப்பட்டது. இப்பொழுது அது 8 ரூபாயாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. போர்க்களத்திலிருக்கும் துருப்புகளுக்கு இப்பொழுது வழங்கப்படும் ஊதியம் பின்வருமாறு :—

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| சம்பளம் ... ... ... | 18 | 0 | 0 |
| யோக்கியதைச் சம்பளம் ... ... | 8 | 8 | 0 |
| ஒத்தி வைத்த சம்பளம் ... ... | 3 | 0 | 0 |
| படி ... ... ... | 8 | 0 | 0 |
| மொத்தம் ... | 37 | 8 | 0 |

இதைத் தவிர கடல் தாண்டிச்சென்றால் அவனுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 7 வீதம் உபரிச் சம்பளம் கொடுக்கப்படும். இதையும் சேர்த்தால் அவனுடைய சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூ. 44—8—0 ஆகிறது. இதைத் தவிர இந்திய சிப்பாய்க்கு அரசாங்கத்தாரின் செலவில் இட்வசதியும், ஆடைகளும், உணவுப்பொருள்களும் இனமாகக் கொடுக்கப்படுகின்றன.

---

## உங்களுக்குத் தெரியுமா?

ஜெனரல் மாக் ஆர்தர் மிஸ்ட்டர் சர்ச்சிலுக்கு ஒன்றுவிட்ட சகோதரர்களில் எட்டாவது சகோதரராகும்.

**விக்டோரியா** என்ற பிரிடிஷ் விமானம் தாங்கிக் கப்பல் அமெரிக்கக் கடற்படையோடு பஸிபிக்கில் 6 மாதங்கள் ஒத்துழைத்தது. அப்போது 30,000 மைல்கள் கடலில் போயிருக்கிறது.

பிரிடனில் விமான நிலயங்கள் 250,000 ஏகரா நிலங்களில் இருக்கின்றன. விமான நிலயங்களுக்காகவும், இதர விமானப் படையாட்களுக்காகவும், £ 165,000,000 பவுன்கள் செலவுக்கென திட்டம் போடப்பட்டிருக்கிறது. பிரிடிஷ் போஸ்ட் ஆபீஸில் சிக்கனக் கடிதத் துண்டுகளை உபயோகித்து 40,000,000 கூடுகளை மீதப்படுத்தியிருக்கிறது.

இளம் பெண்கள் கத்தோலிக்க சங்கத்தைப் போல, செம்ஸ்போர்ட், எஸ்ஸெக்ஸ் இவைகளிலுள்ள சங்கங்களில் வாரத்திற்கு 3 பென்ஸ் கொடுத்து யுத்த வேலையிலீடுபட்ட பெண்களும், இதர பெண்களும் குளிக்கவும், தலையைச் சுத்தம் செய்யவும், தனது ஆடைகளை வெளுக்கவும், தேய்க்கவும், விளையாடவும், கடிதம் எழுதவும், சிநேகிதர்களை அழைக்கவும் முடியும். 2,500 பிரிடிஷ் சாப்பாட்டு விடுதிகள் ஒரு நாளைக்கு 600,000 பேர்களுக்கு சாப்பாடு அளிக்கின்றன.

**பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.**

**அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டென்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.**

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 193. (3-வது பிரிவு).

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 15- 4-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | | 19- 4-44 | ராமச்சந்திரபுரம் | ... மாலை 7.00 |
| 16- 4-44 | சூரக்காடு | ... " 7.00 | | " | ராயவரம் | ... " 7.30 |
| " | கோட்டைக்காடு | ... " 7.30 | | 20- 4-44 | வளரமாணிக்கம் | ... " 7.00 |
| 17- 4-44 | தென்னதிரையன்பட்டி | ... " 7.00 | | " | ஏம்பல் | ... " 7.30 |
| " | விசலூர் | ... " 7.30 | | 21- 4-44 | விராலிமலை | ... " 7.00 |
| 18- 4-44 | மழையூர் | ... " 7.00 | | " | பொருவாய் | ... " 7.30 |
| " | கரம்பக்குடி | ... " 7.30 | | | | |

### பிரஸங்கம் 194. (4-வது பிரிவு).

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 22- 4-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | | 26- 4-44 | ஆரியூர் | ... மாலை 7.00 |
| 23- 4-44 | கீரப்பழனி | ... " 7.00 | | " | அன்னவாசல் | ... " 7.30 |
| " | ஆலூர் | ... " 7.30 | | 27- 4-44 | அண்டக்குளம் | ... " 7.00 |
| 24- 4-44 | புத்தாம்பூர் | ... " 7.00 | | " | கிள்ளனூர் | ... " 7.30 |
| " | வைத்திக்கோவில் | ... " 7.30 | | 28- 4-44 | கொடும்பாளூர் | ... " 7.00 |
| 25- 4-44 | வடவாளம் | ... " 7.00 | | " | விராலூர் | ... " 7.30 |
| " | செம்மட்டிவிடுதி | ... " 7.30 | | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 15—4—44 | பொன்னமராவதி. | 22—4—44 | திருமெய்யம். |
| 16—4—44 | தீத்தான்விடுதி. | 23—4—44 | மருதன்கோன்விடுதி. |
| 18—4—44 | ராமச்சந்திரபுரம். | 25—4—44 | வடகாடு |
| 19—4—44 | ராயவரம். | 26—4—44 | கரம்பக்குடி. |
| 20—4—44 | ஆலங்குடி. | 27—4—44 | குழிபிரை. |
| 21—4—44 | புதுக்கோட்டை. | 28—4—44 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—18-4-44.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம் ஏப்ரல் 22உ [ந. 194

தேசீய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CXCIV.

## "1944-ஆண்டில் பஞ்சம் ஏற்படுவதற்கில்லை".

## வங்காள கவர்னரின் உறுதி.

### முன்னேற்றமடைந்துள்ள சங்கங்கள், சேமிப்புகள், போக்குவரத்து சாதனங்கள்

கல்கத்தா அகில இந்திய ரேடியோ ஸ்டேஷனில் ஒலிபரப்பியபொழுது மேன்மை தங்கிய வங்காள கவர்னர் R. G. கேஸி, "1944-ம் வருஷத்தில் பஞ்சம் ஏற்படாமல் இருக்க நாங்கள் முயன்று அதில் வெற்றிபெற நினைத்துள்ளோம். அதன்படியே அக்காரியத்தில் ஜயமடைவோம்" என்று உறுதி கூறியுள்ளார்.

வங்காளத்திற்கு கவர்னராக சென்ற இரண்டு மாதங்களாக இருக்கிறேன். இந்தக் காலத்தில் வங்காளத்தின் பொது விஷயங்களை நன்கு அறியவேண்டும் என்றும், அதிலும் முக்கியமாய் உணவுப்பொருள் சம்பந்தமாய் நன்கு அறிந்துகொள்ள நான் முயற்சிக்கிறேன். இந்த மாகாணம் அடைந்த கஷ்ட நாட்களுக்குப்பின் நான் இந்த மாகாணத்திற்கு வந்திருக்கிறேன். வங்காளத்தைப் பார்த்து இன்றைய தினம் அங்கு ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை நன்கு அறிகிறேன். அதே சமயத்தில் பலர் மனதில் சோம்பலும், உடல் நலம் குன்றிய தன்மையை உணர்தலும் இல்லாமல் இருக்கிறது. எனவே வங்காளத்தின் கவர்னர் என்ற முறையில், இன்றைய நிலைமையைப்பற்றி உங்களுக்கு விரிவாய் எடுத்துச் சொல்லுதல் மிகவும் உபயோகப்படும் என நினைக்கிறேன். வங்காளத்தைப்பற்றி நான் அறிந்துள்ளது பழங்காரியங்களை விடுத்து, சில கொள்கைகளை என் மனதில் உண்டாக்கியிருக்கிறது.

### 1943-ம் வருஷத்திற்கும், 1944-ம் வருஷத்திற்குமுள்ள வித்தியாசம்.

வங்காளத்தின் முக்கிய உணவுப்பொருளான அரிசியின் குறைவு, குறைவான விளைச்சல், போக்குவரத்துகளிலுள்ள கஷ்டங்கள், யுத்தத்தால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, திடீரென ஏற்பட்ட நிலைமையைச் சமாளிக்க முடியாத அரசியல் ஆகிய இவைகளே சென்ற வருஷப்பஞ்சத்தின் முக்கிய காரணங்கள் என எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

இக்காரணங்கள் இன்று எவ்வளவு தூரமிருக்கின்றன? 1944-ல் பஞ்சம் இருக்காது என்று நான் சொல்லுவதின் காரணமென்ன என்று கேட்கப்பட்டேன். இம்மாதிரி நான் சொல்லுவதற்கு நான் அறிந்த 1913-ம் வருஷத்திற்கும், 1944-ம் வருஷத்திற்கும் உள்ள வித்தியாசம் என்னவென்பதுதான் நான் கேட்கப்பட்டேன். அதற்குப் பதில் கீழ்வருவதாகும்:—1943-ம் வருஷம் குறைவான விளைவினாலும், புயலினாலும் வங்காளத்தின் அரிசியில் குறைவு ஏற்பட்டது. ஆனால் இவ்வருஷம் நிறைய விளைவினால் போதுமான அரிசி உளது.

செய்வதாக நாங்கள் நினைக்கவில்லை. நெடுநாள் நீடித்ததானதும், நல்ல நிர்வாகத்தாலும் உடல் நலத்தாலும் நல்வாழ்க்கையிலும் நிலையானதை அடையவே நாங்கள் விரும்புகிறோம்.

### ஒத்துழைப்பிற்கும் நம்பிக்கை உண்டாக்குமாறு வேண்டுகோள்.

ஆனால் மனோநிலையின் சீர்திருத்தத்தைப் பற்றியதென்ன? கஷ்டங்களை நினைத்திருக்கும் பலரின் நிலை என்ன? தங்களிடத்தும், இதுகாறும் நடந்த கஷ்டங்களை இனிமேலும் வராமல் தடுக்கவும் நினைத்திருக்கும் நம் சக்தியின்மேலும் நம்பிக்கையற்றும் இருக்கும் அவர்களின் நிலை என்ன? இம்மாதிரி எண்ணங்கள் ஏற்படுவது சகஜமில்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் அது நியாயமானதல்ல என்றுதான் நான் சொல்லுகிறேன். நம்பிக்கையும் நான் வருங்காலத்தில், தலைமையாயிருக்கும் இந்த அரசாங்கத்தை நம்பிக்கைகொண்டு வேறு அதே கஷ்டம் இல்லாமல் தடுக்கமுயலவேண்டும். நம்பிக்கையுடன் நம் பாதையும் நேரேயிருக்கும் நம் எண்ணம் நல்லதாயிருக்கிறது.

என்னைப் பொருத்தவரையில் வங்காளிகள் தங்கள் தங்கள் வேலையைச் செய்ய மறுக்கமாட்டார்கள் என நம்புகிறேன். அத்தகைய கொடுமையை அனுபவித்த அம்மக்கள் தங்கள் முயற்சியில் ஈடுபட்டு பெருமையடைவார்கள் என நம்புகிறேன்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 10—4—44 (திங்கட்கிழமை). | ருஷ்யர்கள் கருங்கடலின் முக்கிய துறைமுகமான ஒடெஸ்ஸாவைப் பிடித்தார்கள். |
| | ருஷ்யர்கள் கிரிமியாவில் புதிய தாக்குதலைத் துவக்கி ஆர்மியான்ஸைப் பிடித்தார்கள். |
| | ஜப்பானியர்கள் நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடாவையும் ஹாப்கின்ஸ் முனையையும் காலி செய்தார்கள். |
| | அமெரிக்க விமானப்படையும் பிரிடிஷ் விமானப் படையும் பிரான்ஸிலும் பெல்ஜியத்திலுமுள்ள லக்ஷியங்களைப் பகலிலும் இரவிலும் தாக்கின. |
| 11—4—44 (செவ்வாய்க்கிழமை). | ருஷ்யர்கள் கிரிமியாவில் கெர்ச்சையும் ஜாங்கோயி என்ற முக்கியமான ரெயில்வே ஜங்க்ஷனையும் பிடித்தார்கள். |
| | அமெரிக்க வெடி விமானங்கள் பிரான்ஸிலும் பெல்ஜியத்திலுமுள்ள விமான தளங்கள் பேரில் வெகுடிண்டுகளைப் பொழிந்தன. |
| 12—4—44 (புதன்கிழமை). | ருஷ்யர்கள் கிரிமியாவிலுள்ள ஆக்மானேயை ஆக்கிரமித்தார்கள். |
| | அமெரிக்க வெடி விமானங்கள் பிரான்ஸிலும் பெல்ஜியத்திலுமுள்ள லக்ஷியங்கள் பேரில் வெடிகுண்டுகளைப் பொழிந்தன. |
| 13—4—44 (வியாழக்கிழமை). | ருஷ்யர்கள் ஸிம்பெராபூல், யூபாடோரியா, பியோடோஸியா முதலிய இடங்களைப் பிடித்தார்கள். |
| | ஐரோப்பியக்கோட்டை இரு பக்கத்திலிருந்தும் தாக்கப்படுகிறது. |
| 14—4—44 (வெள்ளிக்கிழமை). | அமெரிக்கர்கள் நியூ கினியாவிலுள்ள போகாட்ஜிம் என்னும் துறைமுகத்தைப் பிடித்தார்கள். |
| | மாஸ்கோவையும் ஸ்டாலின்கிராட்டையும் ரக்ஷித்த ஜெனரல் வாடேன் மாண்டார். |

### (A)-முக்கியமான சம்பவங்கள்—தொடர்ச்சி.

| | |
|---|---|
| 15—4—44 (சனிக்கிழமை). | நேசதேச கனமான வெடி விமானங்கள் ருமேனியாவின் தலைநகரமான புகாரெஸ்டு பேரிலும் போலஸ்தி எண்ணெய்க் கிணறுகள் பேரிலும் வெடிகுண்டுகளைப் பொழிந்தன. |
| | ருஷ்யர்கள் யூக்ரேனிலுள்ள டார்னோபோலைக் கைப்பற்றினார்கள். |
| 16—4—44 (ஞாயிற்றுக்கிழமை). | அமெரிக்க கனமான வெடி விமானங்கள் யூகோஸ்லாவியாவின் தலைநகரமான பெல்கிரேட் பேரில் வெடிகுண்டுகளைப் பொழிந்தன. |
| | ருஷ்யர்கள் கிரிமியாவில் ஸெபாஸ்டபூலின் வெளிப்புறத்தை அடைந்துவிட்டார்கள். |
| 17—4—44 (திங்கட்கிழமை). | பிரிடனிலுள்ள அயல்நாட்டு தூதர்கள் லண்டனை விட்டு வெளியேறக்கூடாதென்று பிரிடிஷ் அயல்நாட்டு காரியாலயத்திலிருந்து உத்தரவிடப்பட்டிருக்கிறது. |
| | இதாலியில் படாக்லியோ நிர்வாகம் ராஜீனாமாச் செய்துவிட்டது. |
| | நேசதேச விமானங்கள் பல்கேரியாவின் தலைநகரமான சோபியாவையும் யூகோஸ்லாவியாவின் தலைநகரமான பெல்கிரேட்டையும் தாக்கின. |

### (B)-செய்திச் சுருக்கம்.

**ருஷ்யா.**—ருஷ்யாவில் போரின் முடிவு சமீபத்துவிட்டது. கருங்கடல் கரையில் ஒடெஸ்ஸாவும், நீஸ்டர் நதியில் ஒவிடோபூலும் திரும்பிப் பிடிக்கப்பட்டன.

ஒரு வார யுத்தத்தில் கிரிமியாவின் பெரும் பாகத்திலிருந்து ஜெர்மானியர்கள் துரத்தி அடிக்கப்பட்டார்கள். ஸெபாஸ்டபூலின் விடுதலைக்காக யுத்தம் நடைபெறுகிறது. இவ்வாரத்தில் கிரிமியாவில் கீழ்க்கண்ட ஸ்தலங்கள் பிடிபட்டன. ஆர்மியான்ஸ்கி, ஜாங்கோயீ, ஆக்மானே, கர்ச், ஸிம்பராபோல், பிராடோஷியா, யூபாடோரியா, யால்டா, பாலக்லாவா. ருமேனியாவில் செம்படை பர்த் நதிக்கும் சாரத் நதிக்கும் நடுவில் 200 இடங்களைப் பிடித்திருக்கிறது. ஸுசாவும், கோனியேவும், ஸரத், டோரோசாயிக்கு மத்தியில் ஒன்று சேர்ந்துவிட்டார்கள். ஜெர்மானியர்கள் போலஸ்தீ எண்ணெய் பிரதேசத்தைப் பிடித்துக்கொண்டார்கள்.

ருஷ்யர்கள் ஜாஸிக்கு மேற்கிலுள்ள பாஸ்கானி, கார்பேதியன் மலையடிவாரத்திலுள்ள பால்டிசேனி, ஹூவாவுக்குத் தெற்கிலுள்ள டோர்னோபாலையும் ஆக்கிரமித்தனர்.

**இதாலி.**—காஸினோ போர் முனையில் அமைதி நிலவுகிறது. காரிக்லியானோ முனையில் பீரங்கிப்போர் நடைபெற்றது. முன்னேறும் வாசலில் எதிரியின் தாக்குதல்கள் துரத்தி அடிக்கப்பட்டன.

நேசதேசப்படைகள் பாண்டைன் சதுப்பு நிலங்களைத் திடீரென்று தாக்கினார்கள்.

**ஐரோப்பாவில் விமானப் போர்.**—பிரிடிஷ் இதாலிய விமான தளங்களிலிருந்து இருவகைத் தாக்குதல்கள் வலுவடைந்து வருகின்றன. தினசரி 2,000 விமானங்கள் ஈடுபடுகின்றன. படையெடுப்பு செய்யப்படும் கடற்கரையும் ஜெர்மன் தொழிற்சாலைகளும் தவிர, இந்த வாரத்தில் பால்கன் தலைநகரங்களான புடாபெஸ்ட், புகாரெஸ்ட், பெல்கிரேட் முதலிய இடங்களும் போலஸ்தீ எண்ணெய்ப் பிரதேசங்களும் தாக்குண்டன. மற்ற விமான நடவடிக்கை விவரங்கள் அடுத்த பகுதியில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

**பஸிபிக் போர்**—ட்ரக் பிரதேசத்தையும் அதைச் சுற்றியுள்ள தீவுக் கூட்டங்களையும் நொருக்கும் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. நியூ பிரிடனில் பெரும்பாகம் நமது

வசமாகிவிட்டது. ஜப்பானியர்கள் காஸ்மாடா, ஹாப்கின்ஸ் முனை இவைகளை விட்டு விட்டார்கள். மார்ஷல்ஸ் தீவுகளில் மேலும் நான்கு தீவுகள் பிடிபட்டன. நியூ கினியாவின் வடக்குக் கரையில் உள்ள ஆஸ்ட்ராலோப் விரிகுடாவில் உள்ள போகாட்சும் விழுந்து விட்டது.

**பர்மா எல்லைச்சரகம்.**—மோகாங் பள்ளத்தாக்கில் வாகாங், டிங்ரிங், மங்ஷீகாடான், செயின்ஷிங்யாங் பிடிபட்டன. ஆரம்பத்தில் கோஹிமா, இம்பாலை நோக்கி முன்னேறிய எதிரி மணிப்பூர் பிராந்தியத்தில் மேலும் முன்னேறவில்லை. ஆகிலும் அவன் பலமாக அடித்து துரத்தப்படுகிறான். கோஹிமா—டிமாபூர் ரஸ்தாவில் நேசதேசப்படைகளை துண்டிக்கக் கூடிய ஜப்பானிய இடையூறுகளும் மலைக்குன்றுகளும் சுத்தி செய்யப்படுகின்றன. இந்தப் பிராந்தியத்தில் ஜப்பானியருக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆறு மாதத்துக்குள் மணிப்பூர் பிராந்தியத்தில் தரைப்போரில் மட்டும் ஜப்பானியர்கள் 4,100 ஸோல்ஜர்களை இழந்திருக்கிறார்கள்.

தென்கிழக்கு ஆசியா கமாண்டின் தலைமை காரியாலயம் சிலோனுக்கும் கிழக்கு விமான கமாண்டின் தலைமை காரியாலயம் கல்கத்தாவுக்கும் மாற்றப்பட்டுள்ளன.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**9—4—44.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

**பகல்.**—(92 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன. அல்லது நாசமாக்கப் பட்டன).

**விமானத் தொழிற்சாலைகள்.**—போலந்தி லுள்ள போஸென் (Posen), டுடாவ் (Tutow), வார்னிமண்டி (Warnemunde), மேரியன்பர்க் (Marienburg).

**இரவு.**—(2 நேசதேச விமானங்கள் காணப் படவில்லை).

**ரயில்வே இலக்குகள்.**—பாரிஸ் (Paris), லில்லி (Lille).

**இலக்குகள்.**—மான்ஹீம் (Mannheim), மேற்கு ஜெர்மனி (Western Germany).

**சுரங்கவெடி பாவுதல்.**—எதிரி ஜலப்பிராந் தியங்களில்,

**ரயில்வே ஜங்ஷன்.**— போலந்திலுள்ள லோ (Lwow).

**இதாலி (Italy).**

**ரயில் போக்குவரத்துகள்.**—ரோம் பிரதேசம்.

**கப்பல்கள்.**—டால்மேஷியன் (Dalmatian) கடற்கரை.

**ரயில் இலக்குகள், பீரங்கி ஸ்தாபனங்கள், துறைமுகங்கள்.**—அங்கோனு (Ancona).

**ருஷ்யா (Russia).**

(30 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன).

**விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.**—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

**ஜப்பானிய சைனியங்கள்.**—மார்ஷல்ஸ் (Marshalls).

**விமான தளம்.**—ரபால் (Rabaul).

**படகுகள்.**—நியூ அயர்லாந்து (New Ireland).

**பர்மா (Burma).**

**ரயில்வே ஜங்ஷன்.**—யாடாங் (Ywataung).

**கப்பற்கட்டுந்துறைகள்.**—ரங்கூன் (Rangoon).

**போக்குவரத்துகள் ஸப்ளைகள்.**—அரக்கான் (Arakan), கலடான் (Kaladan), மாயூ (Mayu), சின் மலைகள் (Chin Hills), சிண்ட்வின் (Chindwin).

**சேமிப்புகள், ரயில்வே ஸ்தாபனங்கள்.**—ரங்கூன் (Rangoon), முனிவா (Monywa), மாண்டலே (Mandalay).

**10—4—44.** (திங்கட்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

**பகல்.**—(5 எதிரி விமானங்கள் சுட்டுத்தள் ளப்பட்டன).

**ரயில்வே தளங்கள்.**—நாமூர் (Namur).

**விமானத் தொழிற்சாலைகள்.**-எவேரி (Evere), விலோர்டி (Vilorde).

**விமானத் தொழிற்சாலைகள்.**—போர்க்ஸ் (Bourges).

**ராணுவ இலக்குகள்.**-பாஸ் டி கலே (Pas De Calais).

**இரவு.**—(22 எதிரி விமானங்கள் நாசமாக்கப் பட்டன).

**ரயில்வே இலக்குகள்.**—பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium).

**ரயில்வே தளங்கள் டெப்போக்கள்.**—பெல்ஜியத்திலுள்ள கெண்ட் (Ghent), பிரான்ஸிலுள்ள டூர்ஸ் (Tours), டெர்க்நியர் (Tergnier), ஆல்நாய் (Aulnoye), லேயான் (Laon).

**இலக்குகள்.**—ரூர் (Ruhr), ஹனோவர் (Hanover).

**சுரங்கவெடி பாவுதல்.**-எதிரி ஜலப்பிராந்தியங் களில்.



**இதாலி (Italy).**

(1 எதிரி விமானம் நாசமாக்கப்பட்டது. 2 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

**துறைமுகங்கள்.**—பொலோம்பினோ (Plombino), ஸான் ஸ்டெபானோ (San Stefano).

**ரயில்வே பாலங்கள்.**—ஆர்வியெட்டோ (Orvieto), ஆட்டிகிலியானோ (Attigliano), போகிபான்ஸி (Poggibonsi).

**பாலங்கள்.**—பானோ (Fano), போபோலி (Popoli), பால்கனோரா (Falconara).

**கப்பல்கள்.**—டால்மாஷியன் கடற்கரை.

**தொழிற்சாலை.**—மாரினு டி பிஸா (Marina Di Pisa).

**ருஷ்யா (Russia).**

(31 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட் டன).

**விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.**—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

**ஜப்பானிய தளம்.**—ரபால் (Rabaul).

நியூ கினியிலுள்ள ஹாலன்டியா (Hollandia).

**விமான நிலயம்.**—காரோலைன்ஸ் தீவிலுள்ள பொனுபி (Ponape).

**எதிரி வியாபாரக் கப்பல்கள்.**—காரோலைன்ஸ் கூட்டத்திலுள்ள வுலேய் (Woleai), குரைல்ஸ் தீவுக் கூட்டத்திலுள்ள மாடா (Matua), நேகோடான் (Nekotan).

**பர்மா (Burma).**

**பாலங்கள்.**—ஸிந்தீ (Sinthe), தியாபின் (Thiyabin).

**களஞ்சியப் பிரதேசங்கள்.**—மோல்மீன் (Moulmein).

**இலக்குகள்.**—மாலு (Mawlu), ஷ்வேகு (Shwegu), மிட்கினு (Myitkyina).

**ரயில்வே ஸ்டேஷன்.**—பெகு (Pegu),

**பீரங்கி ஸ்தாபனங்கள், துவியல்கள், படகுகள்.**-அரக்கான் (Arakan), மாயூ (Mayu), கலடான் (Kaladan), சின் மலைகள் (Chin Hills), சிண்ட்வின் (Chindwin).

**கட்டடங்கள், நீராவி யந்திரங்கள்.**—தென் பர்மா (S. Burma).

**11—4—44.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

**பகல்.**—(126 எதிரி விமானங்கள் சுட்டுத்தள் ளப்பட்டன; 80 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

**விமானத் தொழிற்சாலைகள்.**—ஆஸ்செர்ஸ்லெபென் (Oschersleben), பர்ன்ஸ்பெர்க் (Bernsburg).

**தொழிற்சாலை இலக்குகள்.**—ரோஸ்டாக் (Rostock), ஆர்ணிம்ஸ்வால்டி (Arnimswalde).

**இதர இலக்குகள்.**—ஜெர்மனி (Germany).

**விமானச் சண்டைகள்.**—பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium).

**விமான நிலயங்கள்.**—பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium).

**இரவு.**—ரயில்வே ஸ்டேஷன், சேனைகள், தளவாடங்கள் தயாரித்து சேகரிக்குமிடங் கள்—ஆச்சென் (Aachen).

**இலக்குகள்.**—ஹனோவர் (Hanover).

**இலக்குகள்.**—மேற்கு ஜெர்மனி (W. Germany).

**சுரங்கவெடி பாவுதல்.**—எதிரி ஜலப்பிராந் தியங்களில்.

**இதாலி (Italy).**

**போக்குவரத்து சாதனங்கள், துவியல்கள்.**—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

**கப்பல்கள்.**— டால்மேஷியன் (Dalmatian) கடற்கரை.

**ருஷ்யா ((Russia).**

(47 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன).

**விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.**—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

**ஜப்பானியர் ஆக்கிரமித்திருந்த தீவுகள்.**—மார்ஷல்ஸ் (Marshalls).

**ஜப்பானிய தளங்கள்.**—காரோலைன்ஸ் (Carolines).

**விமான நிலயம்.**—ரபால் (Rabaul).

**பாலம்.**—நட்டாலின் (Nattalin).

**இலக்குகள்.**—பான்மாக் (Banmauk), நாங்கான் (Naungkan).

**எதிரி சைனியங்கள்.**—அரக்கான் (Arakan), கலடான் (Kaladan), மாயூ (Mayu), சின் மலைகள் (Chin Hills), சிண்ட்வின் (Chindwin).

**12—4—44.** (புதன்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

**பகல்.**—3 தொழிற்சாலைகள்— ஆஸ்திரியாவிலுள்ள வெய்னர் (Weiner), நியுஸ்டாட் (Neustadt).

**ராணுவ இலக்குகள்.**—பிரெஞ்சு (French), பெல்ஜியம் (Belgium) கடற்கரைகள்.

**விமான நிலயங்கள்.**-கோர்ட்ராய் (Courtrai), காக்ஸிடி (Coxyde).

**ரயில்வே தளங்கள்.**—ஸெயின்ட் கிஸ்லெய்ன் (Ghislain), ஹொர்ஸின் (Hirsin).

**நீராவி யந்திர தளங்கள்.**—ஹெய்னி (Haine), ஸெயின்ட் பியர்ரி (St. Pierre).

**இரவு.**—(2 நேசதேச விமானங்கள் காணப் படவில்லை).

**ரயில்வே தளங்கள்.**—ஆஸ்னுபிர்க் (Osnabruck), புடாபெஸ்ட் (Budapest).

**சுரங்கவெடி பாவுதல்.**—எதிரி ஜலப்பிராந்தி யங்களில்.

### இதாலி (Italy).

(31 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன; 14 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

பாலங்கள்.—அட்டிகிலியானோ (Attigliano), ஆர்வியெட்டோ (Orvieto), செஸினோ (Cecina), ஆல்பெங்கா (Albenga).

ஸப்ளை தளங்கள் ரயில், ரஸ்தாப்போக்குவரத்து பாலங்கள், கப்பல்கள்.—இதாலி (Italy).

### ருஷ்யா (Russia).

(38 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

இலக்குகள்.—ரபால் (Rabaul), வீவாக் (Wewak), ஹன்ஸா பே (Hansa bay).

எதிரி சைனியங்கள்.—பொகெய்ன்வில்லி (Bougainville).

மாமோடி தீவு (Mamoti Atoll).

கடற்படை தளம்.—பாராமுஷிரோ (Paramushiro) ஷிமிஷு (Shimizu).

ஷியாகோடான் (Shiahkotan), மாடா (Matua).

### பர்மா (Burma).

ரயில்வே ஸ்டேஷன்.—மோல்மீன் (Moulmein).

புரோம் (Prome).

எதிரி ஸ்தாபனங்கள்.—மொகாங்கிற்கு வடக்கு.

இலக்குகள்.—காமெய்ங் (Kamaing) மித்கினா (Myitkyina).

டாங்னி (Taungni).

ரயில்வேப் பிரதேசம்.—மாலுவிற்கு வடக்கு.

எதிரி சைனியங்கள்.—அரக்கான் (Arakan), கலடான் (Kaladan), மாயு (Mayu), சின் மலைகள் (Chin Hills), சிண்ட்வின் (Chindwin).

படகுகள்.—தென் பர்மா (S. Burma).

ராணுவ முகாம்கள்.—நாகர்ன் ஸ்வர்ன் (Nagorn Sawarn).

போக்குவரத்துகள்.—தாங்கடட் (Thanngdut).

**13—4—44.** (வியாழக்கிழமை).

### ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

(51 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன; 44 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

விமானத் தொழிற்சாலை.—ஆக்ஸ்பர்க் (Augsburg), ஒபொர்ஹாஸென் (Oberhausen.

விமான நிலயங்கள்.-லெச்பெல்டு (Lechfeld).

தொழிற்சாலைகள்.—ஷூவெய்ன்பர்ட்.

விமானத் தொழிற்சாலைகள்.—கையர் (Gyer).

ரயில்வே இலக்குகள்.—வடக்கு பிரான்ஸ் (N. France), பெல்ஜியம் (Belgium).

ரயில்வே ஸ்தலம்.—நாமூர் (Namur).

இரவு.—இலக்குகள்—பெர்லின் (Berlin), மேற்கு ஜெர்மனி.

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

### இதாலி (Italy).

போக்குவரத்துகள்.—ஜெர்மன் சேனைக்குப் பின்.

பீரங்கி ஸ்தாபனங்கள், துவியல்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

### தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய தளங்கள்.—குரைல்ஸ் (Kuriles).

விமான நிலயங்கள்.—வீவாக் (Wewak), ரபால் (Rabaul).

### பர்மா (Burma).

ஸ்டோர்கள்.—மாக்வி (Magwe).

இலக்குகள்.—டாங்குப் (Taungup), கியாகுப் (Kyaukpu).

எதிரி போக்குவரத்துகள், பெட்ரோல் துவியல்கள், பாலங்கள்.—காலிமியோ.

மோட்டார் வண்டிகள்.-ஷூவெபோ அன்பக் ஈயு (Shwebo-onbauk-yeu).

எதிரி சைனியங்கள்.—கலடான், மாயூ, சின் மலைகள், சிண்ட்வின்.

**14—4—44.** (வெள்ளிக்கிழமை).

### ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமான நிலயங்கள், இதர ராணுவ இலக்குகள்.—பிரான்ஸ் (France) டென்மார்க் (Denmark).

விமான நிலயம்.—காஸ்ட்ரப் (Kastrup).

இரவு.—ஒரு தகவலும் இல்லை.

### இதாலி (Italy).

(4 எதிரிவிமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன; 5 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

விமான நிலயம்.—ரோமிலுள்ள வைடர்போ (Viterbo).

ரயில்வே தளங்கள்.-லெக்ஹான் (Leghorn).

ரயில்வே பாலம்.-கெர்டால்டோ (Certaldo), புஸைன் (Bucine) அராஸ்ஸோ (Arezzo), செஸினோ (Cecina), ஸ்போலெட்டோ (Spoleto), குயிலாஞோவா (Giulianova), நார்மி (Narmi).

ஸப்ளைக் துவியல்கள் விமானபீரங்கிஸ்தாபனங்கள் விமானமிறங்தும் இடங்கள்.—பர்பாரா (Furbara).

துறைமுகங்கள்.— லெக்ஹார்ன் (Leghorn) ஸான் ஸ்டெபானோ (San Stefano), பியாப்பினோ (Piombino).

### ருஷ்யா (Russia).

(24 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.



### தூரக்கிழக்கு (Far East).

ஸப்ளை தற்காப்பு ஸ்தலங்கள்.—வீவாக் பிரதேசம்.

ஸப்ளைக் துவியல்கள்.—பாரிட்டிவில்டி (Parittwlti) முனை.

ஸப்ளை பிரதேசங்கள்.—வாக்டி (Wakde), ஸாவா (Saua), கியெட்டா (Kieta), நமானுமா (Numanuma).

ஸப்ளை பிரதேசங்கள்.-பொர்பாப் (Porpop).

விமான நிலயம்.—ரபால் (Rabaul).

படகுகள்.—அடாலிக்லிகுன் (Ataliklikun).

### பர்மா (Burma).

எதிரித் துருப்புகள், மோட்டார் போக்குவரத்துகள், படகுகள்.—அரக்கான் (Arakan), மாயூ (Mayu), சின் மலைகள், (Chin hills) சிண்ட்வின் (Chindwin), தென் பர்மா (S. Burma).

**15—4—44.** (சனிக்கிழமை).

### ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

(18 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன. இன்னும் அநேகம் நாசமாக்கப்பட்டன. 30 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

ரயில்வே இலக்குகள்.—புகாரெஸ்டு (Bucharest).

எண்ணெய்க் கிணறு.—புலோயெஸ்ட்டி.

விமான நிலயம்.—ஜெர்மனி (Germany), ஜெர்மனி ஆக்கிரமித்த பிரதேசங்கள்.

இலக்குகள்.—வடக்கு பிரான்ஸ்.

இரவு.—ஒரு தகவலும் இல்லை.

### இதாலி (Italy).

போக்குவரத்துகள் பாலங்கள்.-யுத்தம் நடக்கும் பிரதேசம்,

### ருஷ்யா (Russia).

(78 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

கடற்கரை கிராமங்கள்.—நியூகினி கடற்கரை பொனுபி (Ponape).

இதர தீவுகள்.—காரோலைன்ஸ் (Carolines).

ஜப்பானிய டாங்கி.—ஆண்ட் (Ant).

ஜப்பானிய தளம்.—ரபால் (Rabaul).

### பர்மா (Burma).

விமான நிலயம்.—ஹெஹோ (Heho).

எதிரி தரைப்படைகள்.—ஈயூ (Yeu), ஷூவேபோ (Shwebo), மாலு (Mawlu).

ரயில் தளங்கள்.—பெகு (Pegu).

இலக்குகள்.—டாமு (Tamu), காலிமியோ (Kalemyo), பாங்கியின் (Paungeyin), ஹோமாலின் (Homalin), இண்டா (Indaw)

எதிரி சைனியங்கள்.—காமெய்ங (Kamaing), மாலு (Mawlu), மோனின் (Mohnyn).

மோட்டார் போக்குவரத்துகள்.—ஷூவேபு (Shwebo), ஹண்டர்ஸ்பே, மேல்சிண்ட்வின்.

இலக்குகள்.—அரக்கான் (Arakan) மாயூ (Mayu) கலடான் (Kaladan) சின் மலைகள், சிண்ட்வின்.

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**10—4—44.** (திங்கட்கிழமை).

### பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

### ருஷ்யா (Russia). தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**11—4—44.** (செவ்வாய்க்கிழமை).

### பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**12—4—44.** (புதன்கிழமை).

### பிரிடன் (Britain).

சில இடங்கள்.—தென் கிழக்கு இங்கிலாந்து, ஹோம் கௌன்டீஸ் (Home Counties), லண்டன் (London).

### இதாலி (Italy).

நேசதேச சைனியங்கள்—ஆன்ஸியோ (Anzio).

### ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**13—4—44.** (வியாழக்கிழமை).

### பிரிடன் (Britain).

தென்கிழக்கு இங்கிலாந்து (South East England), ஹோம் கௌன்டீஸ் (Home Counties).

### ருஷ்யா (Russia). தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**14—4—44.** (வெள்ளிக்கிழமை).

### பிரிடன் (Britain), ருஷ்யா (Russia). தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**15—4—44.** (சனிக்கிழமை).

### பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**16—4—44.** (ஞாயிற்றுக்கிழமை).

### பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

# யுத்தக் குறிப்புகள்.

**மலைகள் ஜெர்மனியைக் காக்குமா?** ஸுகோவ், கோனியேவ், மாலினோவிஸ்கி முதலிய ஜெனரல்களிடம் உள்ள படைகள் போலந்து, ருமேனியாவுக்குள் வெற்றிகரமாக முன்னேறி வருவதிலிருந்து ருஷ்ய யுத்தத்தின் முடிவு சமீபித்துவிட்டதென்று சொல்லலாம். வடக்கில் ஒரு சிறிய பாகம் மட்டும் நமது வசம் ஆகவில்லை. பனி உருகி ஜலம் வடிந்தவுடன் ரஸ்தாக்கள் கெட்டியாகி துருப்புகளின் சலனத்திற்கு லாயக்கானவுடன் அந்தப் பிரதேசமும் திருப்பிப் பிடிக்கப்படும். அதைத்தவிர ருஷ்ய பூமியில் நடைபெற்ற யுத்தம் அநேகமாக முடிந்துவிட்டது. ஜெர்மனிக்காக போர் கார்பேதியன் மலையடிவாரங்களின் வெளிப்பக்கத்தில் துவங்கிவிட்டது.

கார்பேதியன் மலைகள் ஜெர்மனியை ரக்ஷிக்குமா? ஐரோப்பிய கோட்டையை கார்பேதிய மலைப் போரினால் ரக்ஷித்துவிடலாம் என்றும் ஹிட்லர் நினைக்கிறான். மலைப்போரில் அவன் அதிக சமர்த்தன் என்றும் நினைக்கிறான். அவனைவிட மற்றவர்கள் இப்போரில் சாமர்த்திய சாலிகள் என்று அநேகந் தடவைகளில் காண்பித்திருக்கிறார்கள் என்பதை அவன் மறந்துவிட்டான்போலும். சமீப காலத்தில் ருஷ்யர்கள் அவனை காகஸஸில் முறியடித்திருக்கிறார்கள். அதற்குப்பின் பின்வாங்குவதும் சுற்றி வளைக்கப்படுவதும் சரண்புகுவதும் தவிர வேறு நடவடிக்கைகளை ஹிட்லர் காணவில்லை.

ஆபிரிக்கப் போரில் அவன் டுனிஸியாவில் உள்ள மலைகளை நம்பி இருந்தான். ஆனால் பிரிடிஷ், அமெரிக்கத் துருப்புகள் என்றும் மறக்கமுடியாத படிப்பினையை அவனுக்குப் போதித்தார்கள். ஆபிரிக்கக் கண்டத்திலிருந்து அவன் துரத்தி அடிக்கப்பட்டதுமில்லாமல் ஏராளமான சேனையையும் அவன் இழக்கவேண்டியதாயிற்று. ஸிஸிலியிலுள்ள மலைகளும் அவனைக் காப்பாற்ற முடியவில்லை.

இதாலியிலுள்ள அபினைன்ஸ் மலையடிவாரங்களில் அவன் உருக்கமாகப் போர்புரிந்து வருகிறான். இந்தப் பிராந்தியத்தில் நேசநாட்டாரின் மிதமான முன்னேற்றத்திற்கு பிரதேசத்தின் இயற்கை அமைப்பு காரணமேயொழிய ஜெர்மனியின் எதிர்ப்பு காரணமில்லை. மலைகள் போர்முனையின் குறுக்கே செல்வதால் நேசதேசத்தாரின் முன்னேற்றம் தடைபட்டிருக்கிறது.

ஆனால் கார்பேதியன் மலைகளின் அமைப்பு வேறுவிதமானது. இந்த மலைகள் குறுக்கே இருக்கவில்லை. முன்னேறிவரும் கோட்டிற்கு பக்கத்தில் செல்லுகின்றன. இங்கே கணவாய்கள் விரிவாகவும் தாழ்ந்தும் இருக்கின்றன.

வி வி வி வி வி

**ஹிட்லரின் கிழக்குப்போர்முனை நொருங்கிவிட்டதா?** அவ்விதம்தான் தோன்றுகிறது. நீஸ்டர், பக், பர்த் நதிக்கரையிலும் கருங்கடலிலும் கிரிமியாவிலும் கடும் போர் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எல்லா இடங்களிலும் போர்முனைகள் காலி செய்யப்பட்டிருக்கின்றன. தப்பி ஓடுவதற்காக நாஸிப்படைகள் கலைக்கப்பட்டு ஓடுகின்றன. போர்முனையே கிடையாது. சிறிய படைப் பகுதிகளும் பின்வாங்கும் படைகளும்தான் காணபபடுகின்றன.

வி வி வி வி வி

**‘வசிக்குமிடம்’.** இந்தச் சங்கடத்தை மறைத்துச்சொல்ல கோயபல்ஸ் நூதனமாக வசிக்குமிடம் இருக்கிறதென்று சொல்கிறான். இதன் அர்த்தம் விளங்கவில்லை. அவன் சொல்லுகிறபடி ஜெர்மனியைச்சுற்றி போடப்பட்டிருக்கும் வளையம் முறிபட்டுவிட்டதென்றும் வசிக்க தேச வசதி ஏற்பட்டுவிட்டதென்றும் சொல்லப்படுகிறது. சம்பவங்களை ஆராய்ச்சி செய்யும்பொழுது கூடிய சீக்கிரத்தில் ஜெர்மனிக்கு வசிக்குமிடமே இல்லாமல் போய்விடும் என்று தோன்றுகிறது. கொஞ்ச காலத்துக்குமுன் பர்லினிலிருந்து ஸ்டாலின்கிராடு, காகஸஸ்வரையிலும் வாசஸ்தலத்தை விஸ்தாரம் செய்யவேண்டுமென்று ஜெர்மனி போட்ட திட்டமானது இப்பொழுது கார்பேதியன் மலையடிவாரத்துக்குச் சுருங்கிவிட்டது.

வி வி வி வி வி

**குயிஸ்லிங்குகளின் கூட்டம்.** ஒன்றும் புரியாமல் ஹிட்லர் தன்னுடைய குயிஸ்லிங்குகளை பெர்க்கஸ் காடனுக்கு வரும்படி அழைத்திருக்கிறான். முஸோலினியும் அவனுடைய காவல் கூடத்திலிருந்து கொண்டுவரப்பட்டிருக்கிறான். ருமேனியாவின் சர்வாதிகாரியான அண்டோனஸ்கு, ஹங்கேரியின் பிரதம மந்திரியான ஸெஸ்டோஜே, விச்சியின் பிரதம மந்திரியான லவால, நார்வேயின் குயிஸ்லிஙகான் விடுகன், குரோஷியாவிலுள்ள பாவலிச், பொஹிமியாவிலுள்ள டாக்டர் ஹாச்சா, பெர்லினில் உள்ள ஜப்பானிய அயல்நாட்டு தூதர் ஆகிய எல்லோரும் வந்திருக்கிறார்கள்.



**பெர்லினில் கோயபல்ஸின் ஆட்சி.** ஆச்சரியப்படத்தக்க முறையில் ஜெர்மனியின் பொய்ப் பிரசாரகரான கோயபல்ஸ், ஹிம்லரால் சாதிக்க முடியாத ஒரு காரியத்தைச் செய்ய பெர்லினின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். உலகத்திலேயே மிகவும் அதிகமாக குண்டுவீச்சுக்குட்பட்ட பெர்லினில் ஒழுங்கீனம் ஏற்பட்டுவிட்டது. எஸ்ஸெஞ்ஸர் நாஷனல் ஸீடங் என்னும் பத்திரிகையில் வழக்கம்போல் நாஸி சின்னங்களும் வணக்க முறைகளும் மதிக்கப்படவில்லை என்று தெரியவருகிறது. ‘ஹிட்லருக்கு ஜே’ என்று சொல்லும் குரலின் த்வனி குறைந்துவிட்டது. நாஸிகள் செய்யும் வந்தனம் அலக்ஷிய புத்தியுடனும் உத்ஸாக மின்மையோடும் செய்யப்படுகிறது. நகர நிர்வாக அமைப்பு சீர்கெட்டுவிட்டது. விமானத் தாக்குதலுக்குப்பின் ஆடவர்களும் ஸ்திரீகளும் உதவி செய்வதற்குச் செல்லுகிறதில்லை. ஹிம்லரின் வதை மூலமாகவும் ஹிட்லரின் மெய்க்காப்பாளர் மூலமாகவும் நடைபெற்ற நாஸி அமுல் பயன்படவில்லை. ஜெர்மன் மக்களின் மனோவுறுதியை நிலைநாட்ட ஒரு கோமாளி அமர்த்தப்பட்டிருக்கிறான். டைம்ஸ் பத்திரிகையில சொல்லியிருப்பது போல கோயபல்ஸின் புளுகுகள் இப்பொழுது சுவாரசியத்தை இழந்துவிட்டன. அவைகள் இனிமேல் பயன்படாது. அவனுடைய கோமாளிப்பேச்சு ஒப்பாரியாக மாறிவிட்டது. ‘தாஸ்ரெக்’ என்னும் பத்திரிகையில் அவன் எழுதியிருக்கும் கட்டுரையில் ஜெர்மனியின் தற்போதைய நிலைமை 1918-ம் வருஷத்தைப்போல பயங்கரமாக இருக்கிறதென்று அவன் விவரித்திருக்கிறான்.

வி வி வி வி வி

**எதிர் காலத்தில் ஐரோப்பா.** ஐரோப்பாவின் ராஜீய அமைப்பில் ஜெர்மனி செய்திருக்கும் பெருதவியைப்பற்றி நாஸி கக்ஷிக்காரர்களுக்கு கோயபல்ஸ் அறிமுகப்படுத்திய போதிலும் வருகாலத்தில புதிய உலகத்தை அமைக்க அவர்களுக்கு சந்தர்ப்பமேற்படுமாவென்பது சந்தேகாஸ்பதம். இதே சமயத்தில் நேசநாடுகளும் இந்த வேலையை மேற்கொண்டிருக்கிறார்கள். M. மாலடாவ் திடீரென்றும் எதிர்பாராத முறையிலும் பத்திரிகை நிருபர்களை அழைத்து ஒரு அறிக்கையை வெளியிட்டதிலும் ருமேனியாவுக்குள் புகுந்ததற்கு தேசங்களைப் பிடிக்கவேண்டுமென்ற எண்ணம் கிடையாது என்றும் இதாலியில் பிரிடிஷாரும் அமெரிக்கர்களும் நுழைந்த மனோபாவத்துடன் ருமேனியாவை விடுவிப்பதுதான் ருஷ்யாவின் முக்கியமான நோக்கம் என்றும் ருமேனியர்களுக்கு அவர் அனுப்பிய ஒலிபரப்புச் செய்தியிலும் இதுதான் விசேஷம். 1940-ம் வருஷத்தில் ஏற்பட்ட எல்லைச்சரகத்தை அமைக்கவேண்டுமென்றும் குயிஸ்லிங்குகளைப்பற்றிய நடவடிக்கைகளை ருஷ்யாவே மேற்கொள்ளுமென்றும் அது வற்புறுத்துகிறது இதே சமயத்தில் ருமேனியாவின் ஒற்றுமையையும் ஜனசமூக அமைப்பையும் ருஷ்யா கௌரவப்படுத்தும். டைம்ஸ் பத்திரிகையில் மாலடாவின் அறிக்கை யுத்த காலத்திய முக்கியமான சாஸனமென்றும் அட்லாண்டிக் சாஸனத்தின் ஷரத்துகள் மறுமுறை வெளியிடப்பட்டிருக்கின்றனவென்றும் எழுதப்பட்டிருக்கிறது. இந்த எச்சரிக்கையை குயிஸ்லிங்குகள் எவ்வளவுதூரம் பயன்படுத்திக்கொள்ளுவார்களென்று அறியக்கூடவில்லை. ஆகிலும் அவர்களின் பழைய அக்கிரம ஆக்கிரமண நடவடிக்கையை சீர்திருத்திக்கொள்ளுவதற்கும் பொதுவான சீர்கேட்டிலிருந்து அவர்களைக் காப்பாற்றிக்கொள்ளுவதற்கும் இதுதான் சரியான சந்தர்ப்பம்.

பூகாரெஸ்டும் பூடாபெஸ்டும் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டபின் ஜெர்மனியின் அமுலுக்குட்பட்ட நாடுகளில் குழப்பம் உண்டாகிவிட்டது. தலைநகரங்களிலிருந்து ஏராளமான ஜனங்கள் வெளியேறுகிறார்கள். இந்த நிர்வாகசபைகளை ஜெர்மனி இனிமேல் நீடித்து அடக்கியாள முடியுமென்று தோன்றவில்லை. முக்கியமான சந்தர்ப்பம் ஏற்படும்பொழுது உபயோகிப்பதற்காக படைகளையும் தளவாடங்களையும் குவித்து வைத்திருப்பதாக ஜெர்மானியர்கள் பொய்பிரசாரம் செய்துவருகிறார்கள். சமயம் வரும்பொழுது பால்கன் நாடுகளிலுள்ள ஜெர்மன் படைகள் செம்படை முதுகில் குத்திவிடாமல் தடுத்துவிடுமென்று அவர்கள் சொல்லிவருகிறார்கள். எதிர்காலத்தில் முதுகில் குத்திவிடாமல் தடுக்கவேண்டுமென்ற ஏற்பாட்டில் இப்பொழுது நேர்முகமாகத் தாக்கப்படுகிறார்களென்பதை ஜெர்மனி மறந்துவிட்டது.

வி வி வி வி வி

**இரண்டாம் போர்முனை?** எதிரியின் அபிப்பிராயப்படி ஆரம்பிக்கபடாத இரண்டாம் போர்முனை முதல்போர் முனையாக மாறிவிட்டது ருஷ்யப் போர்முனையில் நாஸிகளின் யுத்த தந்திரம் அழிக்கப்படுகிறது. ஆகிலும் இந்தப் போர்முனையின் முக்கியத்வம் குறைந்துவருகிறது. இதன்மூலம் பிரிடனில் செய்யப்பட்டுவரும் ஆயத்தங்களுக்கும் எதிரியின் ஐரோப்பாவை பிரிடிஷ், அமெரிக்க வெடிவிமானங்கள் நொருக்கி வருவதற்கும் நமது பாராட்டை அறிவிக்கிறோம். விமானத் தாக்குதல் புகாரெஸ்டிலும், புடாபெஸ்டிலும் ஜெர்மனியைச் சுற்றிலும் அதிகரித்து வருவதிலிருந்து ஜெர்மன் வியாக்யானிகள் திகைகொண்டு எது முதல் போர்முனை, எது இரண்டாம் போர்முனை என்று சொல்லக்கூடவில்லை.

**தோஷாரோபணம்.** இரண்டாம் போர்முனை ஆரம்பிக்கப்படாததால் அதைப் பற்றி பொருப்பற்ற சில ஜனங்கள் பரிகாசமாகப் பேசத் தொடங்கிவிட்டார்கள். இந்த நடவடிக்கை காலக்கிரமத்தில் அவநம்பிக்கையையும், தைரியக்குறைவையும் உண்டுபண்ணக்கூடியதாகவும் யுத்த முயற்சிகளை பாதிக்கக்கூடியதாகவுமிருப்பதால் நம்முடைய வாசகர்களுக்கு நாம் எச்சரிக்கை விடுக்கிறோம்.

முதலாவதாக, இரண்டாம் போர்முனை துவக்கப்படும் காலம் வெகு காலத்துக்குமுன் நிர்த்தாரணம் செய்யப்பட்டுவிட்டது.

இரண்டாவதாக, யுத்த அவசியத்தை முன்னிட்டு தேதி ரகஸியமாக வைக்கப்பட்டிருக்கிறது.

மூன்றாவதாக, ரகசியம் வெளிப்படாமலிருப்பதாலும் ரகசியத்தைத்தான் அறிந்து கொள்ள முடியாததாலும் குறைகூறுகிறவருக்குக் கோபம் வருகிறது.

நான்காவதாக, குறைகூறுகிறவருடன் எதிரியும் சேர்ந்துவிட்டான். அவனுக்கும் ஒரு தகவலும் எட்டவில்லை. எப்பொழுது, எந்த இடத்தில் இரண்டாம் போர்முனை துவக்கப்படுமென்றும் அதன் குணமும் வலிமையையும் எவ்விதமென்றும் எதிரிக்கு புலப்படவில்லை. இந்தக் காரணத்தினால்தான் கிழக்குப் போர்முனையின் நிலைமையை சமாளிக்க மேற்கு முனையிலிருந்து ஒரு சிறிய படைப்பகுதியைக்கூட அனுப்பக்கூடவில்லை.

ஐந்தாவதாக, ருஷ்யர்கள் இந்த ரகசியங்களை அறிவார்கள். ஆகையினால்தான் இரண்டாம் போர்முனையைப்பற்றி ருஷ்யப் பத்திரிகைகளில் கொஞ்சமேனும் கிளர்ச்சி காணப்படவில்லை.

வி வி வி வி வி

**ஹாலந்தில் பிரவாகப் பெருக்கு.** படையெடுப்பு ஏற்பட்டால் ஹாலந்தின் அணைகளை வெட்டி வெள்ளப்பெருக்கு ஏற்படுத்திவிடுவதாக ஜெர்மனி பயமுறுத்துகிறது. வெனிஸைப்போல ஹாலந்தும் சமுத்திர மத்தியில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஹாலந்தின் ஜலாசயங்களும் கால்வாய்களும் அயல்நாட்டாரின் ஆக்கிரமணத்திலிருந்து அதை இதுவரையில் ரக்ஷித்திருக்கின்றன. தற்காப்புக்காக உபயோகப்பட்ட சாதனம் இப்பொழுது அதை அழித்துவிட உபயோகப்படும். ஹாலந்தின் ஒரு பாகத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுவிட்டதென்று ஸ்விஸ் பத்திரிகைகள் வெளியிடுகின்றன. அவ்விதமிருந்தால் வெள்ளப்பெருக்கேற்பட்ட நாடுகள் அநேக வருஷங்கள் வரையில் விவசாயத்துக்கு லாயக்குப்படாது. ஜெர்மனி அலக்ஷிய புத்தியுடனிருக்கிறது. ஆகிலும் சிக்ஷாகாலம் வரும் பொழுது ஜெர்மனி நஷ்ட ஈடு செய்யவேண்டும். இந்த நடவடிக்கையில் ஹாலந்து கஷ்டப்படுகிறது.

வி வி வி வி வி

**நேசநாடுகளும், நடுநிலைமை வகிக்கும் நாடுகளும்.** யுத்தத்தின் மிகவும் நெருக்கடியான இறுதி கட்டம் வந்துவிட்டது. ஹிட்லருக்கு ஆதீனமான நாடுகள் சம்பந்தமாகவும் யுத்தத்தை நீடிக்கச் செய்யக்கூடிய நடவடிக்கைகளை கையாளும் நடுநிலைமை வகிக்கும் நாடுகளைப் பற்றியும் குறிப்பான நடவடிக்கைகளை நிறுவ நேசதேசத்தாருக்கு சமயம் வந்துவிட்டது. ஸ்பெயின் திருட்டுத்தனமாக எண்ணெய் இறக்குமதி செய்கிறது. துருக்கி ஜெர்மனிக்கு மிகுதியான குரோம் தோலை சப்ளை செய்கிறது. ஸ்வீடன் எதிரிக்கு பால் பேரிங்குகளை சப்ளை செய்கிறது. இந்த நாடுகள் சம்பந்தமாக நேசதேசத்தார்கள் கடுமையான நடவடிக்கையை ஆரம்பித்திருக்கிறார்கள். பிரிடனும் அமெரிக்காவும் சேர்ந்து ஸ்வீடனுக்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். அமெரிக்க அயல் நாட்டு மந்திரியான மிஸ்டர் கார்டல் ஹல் நடுநிலைமை வகிக்கும் நாடுகளின் எதிர்கால க்ஷேமம், நேசதேசங்களின் வெற்றியைப் பொருத்தது என்றும், எதிரிக்கு அவர்கள் அளிக்கும் உதவி அவர்களுக்கே நாசத்தை விளைவிக்கும்படியாக உபயோகிக்கப்படுமென்றும் ஸ்பஷ்டமாக சொல்லியிருக்கிறார். அந்நாடுகளுக்கு நேசதேசத்தார்கள் தீங்கு இழைப்பார்கள் என்று எண்ணுவதற்கில்லை. அட்லாண்டிக் கடல் சாஸனம் மாஸ்கோ அறிக்கை, கெய்ரோ டெஹரான் முடிவுகள் எல்லாம் ஸர்வ தேச நீதிமுறைகளையும் நியாயத்தையும் உத்தரவாதம் செய்தன. அமெரிக்கா, பிரிடன், ருஷ்யா, சைனா ஆகிய நாடுகள் ஒன்றுபட்டு சாசுவதமான சமாதானத்தை ஏற்படுத்தும்.

வி வி வி வி வி

**வாடுடின்.** மாஸ்கோ, ஸ்டாலின்கிராட் வீரரான வாடேின் உயிர் துறந்ததற்காக வருந்துகிறோம். அவர் கடைசியாக ஜெர்மானியர்களை 1939-ம் வருஷத்திய போலிஷ்-எல்லை சரகத்துக்கு துரத்தி அடித்தார். பீரங்கியை உபயோகிப்பதில் அவர் மிகவும் சமர்த்தர். புதிய ராணுவ திட்டங்களை அவர் கற்பித்திருக்கிறார். அவரைப் பாராட்டும் முறையில் ருஷ்யாவின் உயர்தர கௌரவ அடையாளமான ஸுவராவ் பதக்கம் அவருக்கு வழங்கப்பட்டது.



வி வி வி வி வி

**விமான நடவடிக்கை.** இரண்டு வாரங்களுக்கு முன்னிருந்து நாஸிகள் ஆக்கிரமித்து இருக்கும் ஐரோப்பாவில் மிகவும் பலமாக ஒரு புதிய விமான நடவடிக்கை துவங்கிவிட்டது. ஜெர்மனியின் விமான உற்பத்தி நிலயங்களும் படையெடுப்பைச் செய்யக்கூடிய மேற்குக்கரைப் பிராந்தியங்களும் தினசரி 1,500, 2,000 விமானங்களால் தாக்கப்படுகின்றன. பிரிடனிலிருந்தும் இதாலியிலிருந்தும் செல்லும் விமானங்கள் ஐரோப்பாவில் பல இடங்களில் குண்டுகளை வீசுகின்றன. ஹங்கேரியா, ருமேனியா முதலிய நாடுகளின் தலைநகரங்கள் தாக்கப்பட்டதிலிருந்து மற்ற பால்கன் நாடுகளுக்கும் பீதி உண்டாகிவிட்டது. ஐரோப்பிய நாடுகளெல்லாம் பிரிடிஷ் அமெரிக்க வெடி விமானங்கள் பகலிலும் இரவிலும் எந்த இடத்திற்கும் செல்லக்கூடும் என்று அறிவார்கள். விமானப் போரின் தற்போதிய மாறுதல்களைப்பற்றி வியாக்கியானம் எழுதும்போது பாம்பர் படையின் சேனாதிபதியான ஸர் ஆர்தர் ஹாரிஸ் பின்வருமாறு எழுதுகிறார் :

“கிழக்குப் போர்முனையைவிட மேற்குப் போர்முனையில் நான்கு மடங்கு அதிகமான ஜெர்மன் சண்டை விமானங்கள் இருக்கின்றன. ஜெர்மன் யுத்த தொழிற்சாலைகளும் நகரங்களும் நொருங்கி தவிடுபொடியாகும் பொழுது போர்முனையிலிருக்கும் ஜெர்மன் படைகள் 1943-ம் வருஷம் இருந்ததுபோல் 1944-ல் முஸ்தீப்புகளைப் பெற்றிருக்குமென்று எதிர்பார்க்க முடியாது. ஜெர்மன் படைகளுக்கு விமான ரக்ஷணையையும் உதவியையும் அளித்துவந்த விமானப்படையை பிரிடிஷ் வெடி விமானம் அழித்துவிட்டதுபோல ஜெர்மன் துருப்புகளுக்கு வழங்கக்கூடிய ஆயுதங்களையும் அது நாசம் செய்துவிடும். பிரிடிஷ் அமெரிக்க வெடிகுண்டு வீச்சிலிருந்து ஒரு பலன் ஏற்பட்டிருக்கிறது. ஜெர்மன் சேனைக்கும் ஜெர்மன் விமானப் படைக்கும் உள்ள ஒற்றுமை குலைக்கப்பட்டது. ஒவ்வொன்றும் இப்பொழுது தன்னந்தனியே போர்புரிய வேண்டும். இந்த யுத்த முறைக்கு ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் திட்டம் வகுக்கவில்லை. அநேக தடவைகளில் முக்கியமாக 1944-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் திடீரென்று பிரிடிஷ் அமெரிக்க வெடிவிமான நஷ்டம் குறைவுபட்டபொழுது பகல் இரவாக ஓயாமல் வெடிவிமானத் தாக்குதலை எதிர்த்துப் போராடியதிலிருந்து ஜெர்மன் விமானப்படை சோர்ந்து விட்டதென்று ருசுவாயிற்று”.

வி வி வி வி வி

**யூ படகு யுத்தம்.** மிஸ்ட்டர் சர்ச்சிலும் ரூஸ்வெல்டும் மார்ச்சு மாதத்திய யூ படகு நடவடிக்கையைப்பற்றி கூட்டறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த மாதத்தில் யூ படகுகள் பேரன்ட்ஸ் கடலிலிருந்து இந்து மகா சமுத்திரம் வரையில் நடமாடி வடக்கு மார்க்கம் வழியாக ருஷ்யாவுக்குப் போகும் சப்ளைகளை வழிமறிக்க முயன்றன. இந்த மாதத்தில் பிப்ரவரி மாதத்தைவிட நேசதேசக் கப்பல்களுக்கு தூர சமுத்திரங்களில் அதிக நஷ்டம் ஏற்பட்டது. யூ படகுகளும் குறிப்பிட்ட அளவுக்கு மூழ்கடிக்கப்பட்டன.

வி வி வி வி வி

**பாலா தீவிலிருந்து நடவடிக்கை.** ட்ரக் தீவுகளுக்கு மேற்கிலுள்ள பாலா தீவுகளிலிருந்து ஜப்பானிய கடற்படை மறைந்துவிட்டது என்பது கவனிக்கத்தகுந்தது. ஒரு ராணுவ வியாக்யானி சொல்லுவதுபோல தென்மேற்குப் பஸிபிக்கில் ஜப்பானியப் பூண்டே கிடையாது. அந்த சமுத்திரம் அமெரிக்க ஏரியாக மாறிவிட்டது. தென்மேற்கு பஸிபிக்கில் உள்ள ஜப்பானிய தளங்களுக்கு சப்ளைகளைக் கொண்டு போன டோக்யோ எக்ஸ்பிரஸ் என்னும் கப்பல்கள் இப்போது வடக்கு ஸாலமன்ஸ் தீவுகள், பிஸ்மார்க் தீவுகள், காரலைன் தீவுகளிலிருந்து சாமான்களை அகற்றுவதில் உபயோகப்படுத்தப்படுகின்றன.

பாலா தீவுகள் டோக்யோவிற்கு தெற்கில் 1,350 மைல்கள் தூரத்தில் இருக்கின்றன. பிலிப்பைன் தீவுகளிலிருந்து அவைகள் மூன்றில் ஒரு பங்கு தூரத்தில் இருக்கின்றன. மத்திய பஸிபிக்கில் உள்ள தளங்களை எதிரி அனுபவிக்கமுடியாமல் செய்வதற்காகத்தான் பாலா தீவுகள் தாக்கப்பட்டன.

இந்த நடவடிக்கைகளில் தளபதி நிமிட்ஸிடம் உள்ள கடற்படைகளும் ஜெனரல் மாக் ஆர்தரிடம் உள்ள விமானப்படைகளும் ஒத்துழைத்தன. ஜப்பானுக்குச் செல்லும் கடல் மார்க்கத்திலுள்ள ஜப்பானிய தளங்களெல்லாம் கடல் மூலமாகவும் ஆகாய மூலமாகவும் தாக்கப்படுகின்றன. அமெரிக்க டாஸ்க் படைகளைக் கண்டு பாலா தீவிலிருந்து ஜப்பானியக்

கப்பற்படை ஓட்டம் பிடித்தது என்பது ட்ரக் தீவுகளில் எதிரி கையாண்ட முறையின் தொடர்ச்சியாகும். 1942-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் கூடல்கனுர் பிராந்தியத்தில் நடை பெற்ற கடல் போரில் தோல்வியுற்றபின் ஜப்பானியக் கடற்படை நேசதேசக் கடற்படையை எதிர்க்கத் துணியவில்லை.

மார்ஷல்ஸ் தீவிலும் ட்ரக் தீவிலும் பாலா தீவிலும் ஜப்பான் புத்திசாலித்தனமாக போர்புரியாமல் பின்வாங்கிவிட்டது.

வி வி வி வி வி

**பஸிபிக் யுத்தம்.** ஏப்ரல் 11-ம் தேதி "டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகையில் பஸிபிக் போரைப்பற்றி பின்கண்ட விவரம் காணப்படுகிறது. அட்மிரால்டி தீவுகளையும் ரபாலுக்கு வடமேற்கிலுள்ள செயிண்ட் மாதியாஸ் போன்ற தீவுகளின் ஆக்கிரமணம் பூர்த்தியாகிவிட்டதால் 1,00,000 ஜப்பானியர்கள் ஸப்ளைகள் இல்லாமல் துண்டிக்கப்பட்டுவிட்டார்கள். அவர்களுக்கு சப்ளைகளைக் கொண்டு போகும் கப்பல்களில் 10-ல் 9 ஆகாய நடவடிக்கையாலும் கடல் நடவடிக்கையாலும் மூழ்கடிக்கப்படுகிறது. போகன்வில்லா தீவில் எம்பிரஸ் அகஸ்டா விரிகுடாவுக்குச் செல்ல ஜப்பானியர் செய்த முயற்சி பயன்படவில்லை. பிலிப்பைன் தீவுகளிலிருந்து நியூகினியாவின் வடக்குக் கடற்கரை ஓரமாக ஸப்ளை மார்க்கத்தை ஸ்தாபிக்க ஹாலண்டியா என்னுமிடத்தில் ஒரு பலமான விமான தளத்தை ஜப்பான் அமைத்தது. சென்ற வாரத்தில் ஹாலண்டியா விமானதளம் அநேகம் தடவைகள் தாக்கப்பட்டது. அதிலிருந்த 288 விமானங்கள் அழிக்கப்பட்டன. அதற்கு வடக்கில் ட்ரக் தீவுகள் இடைவிடாது தாக்கப்படுகின்றன. ரபாலை துண்டித்ததுபோல் ட்ரக் தீவையும் துண்டித்துவிடுவதென்று அமெரிக்கர்கள் திட்டம் போட்டிருக்கிறார்கள்.

வி வி வி வி வி

**ஜப்பானின் அற்பமான வெற்றி.** கடைசியாக வந்த தகவல்களிலிருந்து மணிப்பூர் ஸமஸ்தானத்தைச் சேர்ந்த இம்பால் சமவெளி நமது வசமே இருந்துவருகிறது. மலைப்பிரதேசங்களிலும் நாம் முன்னேறித் தாக்கிவருகிறோம். கோஹிமா—டிமாபூர் ரஸ்தாவிலிருந்து ஜப்பானியர்களை விரட்டியடிக்கும் நடவடிக்கைகளும் திருப்திகரமாக நடைபெற்றுவருகின்றன. உண்மைகள் இப்படியிருக்க மவுண்ட்பேட்டன் தலைமைக் காரியாலயம் கோஹிமாவின் வீழ்ச்சியை ஒப்புக்கொண்டுவிட்டது என்று டோகியோ ஒலிபரப்பில் துணிவுகரமாகச் சொல்லப்படுகிறது. இது அச்சு நாட்டாரின் முறையே. இந்த அபாண்டமான புளுகுகளைக் கேட்டு நமக்கு அருவருப்பு உண்டாகிவிட்டது.

வி வி வி வி வி

**தென்கிழக்கு ஆசியா கமாண்டின் தலைமை காரியாலயம்.** தென்கிழக்கு ஆசியா கமாண்டின் தலைமை காரியாலயம் புதிய டில்லியிலிருந்து ஸிலோனுக்கு மாற்றப்பட்டிருப்பதில் ஒரு ஆச்சரியமுமில்லை. ஏனெனில் தெற்கு ஆசியா கமாண்ட் என்பது பர்மாவிலிருந்து தெற்கு நோக்கி இந்தியாவை விலக்கி ஸிலோனை உட்படுத்தி இருக்கிறது. இந்தியா எவ்வளவு முக்கியத்வம் உள்ளதாக இருந்தபோதிலும் அது சப்ளைகளை அனுப்பும் தளம்தான். மேலும் ஸிலோன் தெற்கு ஆசியா கமாண்டின் மத்தியஸ்தலம். முக்கியமான கடற்படை நிலயமும்கூட. ஆகையால் காரியாலயம் மாற்றப்பட்டதிலிருந்து தென்கிழக்கு ஆசியாவில் ஜப்பானியர் ஆக்கிரமித்திருக்கும் நாடுகளைத் திரும்பிப் பிடிக்க பலமான நடவடிக்கைகள் சமீப காலத்தில் ஆரம்பிக்கப்படும் என்பதை குறிப்பிக்கிறது.

வி வி வி வி வி

**மகத்தான நடவடிக்கைகளுக்கு பூர்வாங்கம்.** பிரிடனிலும் இந்தியாவிலும் பத்திரத்தைக் கோரி அநேக கடுமையான நடவடிக்கைகள் கையாளப்படுகின்றன. அவைகளை கவனிக்கும் அளவில் ஐரோப்பாவில் இரண்டாம் போர் முனை துவக்கப்படுமென்றும் தென் கிழக்கு ஆசியாவில் ஜப்பானியரைத் தாக்க புதிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுமென்றும் தோன்றுகிறது. பிரிடனில் அயல் நாட்டு ராஜ தந்திரிகளும் ஸோல்ஜர்களும் பிரிடனை விட்டுச் செல்லக் கூடாது என்று ஒரு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அவர்களுடைய காகிதப் போக்கு வரத்துகள் தணிக்கைக்கு உட்படவேண்டும். இந்த விதிகள் அமெரிக்கா, ருஷ்யா, பிரிடிஷ் டொமீனியன் நாடுகளுக்கு அன்வயிக்காது. இந்த விதிகள் அயர்லாந்துக்குப் பொருந்தும். இந்தியாவிலும் அரசாங்கத்தார் உத்தியோகப் பற்றற்றவர்களுக்கிடையே நடைபெறும் கடித, தந்திப் போக்குவரத்துக்களை தணிக்கைக்கு உட்படுத்திவிட்டார்கள். இதன் காரணம் தெளிவானது. இது சம்பந்தமாக புதிய டில்லியிலிருந்து அரசாங்கத்தார் ஒரு பிரகடனத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.



யுத்தத்திலீடுபட்டிருக்கும் எந்த தேசத்திற்கும் ராணுவ பத்திரம் அவசியமானது. எதிரி ஒரு தேசத்தின் எல்லைச் சரகத்திற்கு கடற்கரைக்கும் வந்துவிட்டபொழுது இதன் அவசியம் அதிகரித்துவிட்டது. எதிரி தற்காப்பு முறையை மேற்கொண்டு அவனுடைய எதிரியைத் தாக்கும் பொழுது இதன் முக்கியத்வம் அதிகரித்துவிட்டது. ஏனென்றால் தற்காபபிலிருந்து எதிரி அப்போதுதான் தாக்குதல் ஆரம்பிக்கப்படக்கூடிய தளத்திலிருந்து உபயோகமுள்ள தகவலை அறிந்துகொள்ள அதிக பிரயத்தனம் செய்யக்கூடும். இந்தியாவில் அப்பேர்ப்பட்ட நிலைமை உண்டாகிவிட்டது. ஜப்பானியரை முன்னேறித்தாக்க அது முக்கிய தளமாக இருப்பதுடன் அதிலிருந்து நடவடிக்கைகளும் மிகுதியாக ஆரம்பிக்கக்கூடும்.

வி வி வி வி வி

**எச்சரிக்கை.** பிரகடனத்தில் மேலும் சொல்லுவதாவது, அனுவசியமான வதந்திகளைப் பேசக் கூடாதென்றும் அனுவசியமான கடிதப் போக்குவரத்து நடைபெறக்கூடாதென்றும் விரிவான பிரசாரம் செய்யப்பட்டிருந்தபோதிலும் அதிகார வட்டாரத்திலும் உத்தியோகப்பற்றற்றவர்களிடமும் அநேகர் ராணுவம் சம்பந்தமான விஷயங்களைப்பற்றி எழுதப்படும் கடித போக்குவரத்துக்கள் மூலம் அனுவசியமாக வதந்திகளைக் கிளப்புவது, ஏராளமான கெடுதலை விளைக்குமென்று அறிந்துகொள்ளவில்லை. ராணுவ ரகசியங்களை வெளியிடுவதனால் இந்திய நேசதேச ஸோல்ஜர்கள், மாலுமிகள், விமானிகள் முதலியவர்களுக்கு ஆபத்து உண்டாகுவதுடன் இந்தியப் பொதுமக்களின் உயிருக்கும் சொத்து சுகங்களுக்கும் பத்திரமின்மை ஏற்படும்.

ராணுவ பத்திரம் அவசியமென்று பொது மக்கள் பத்திரிகைகளின் பெரும் பாகம் அறிந்துவருகிறது. ஆகிலும் ஒரு சிறிய பகுதியின் யோசனைக் குறைவினாலும் அஜாக்கிரதையாலும் ராணுவ பத்திரம் போதுமான அளவு காப்பாற்றப்படவில்லை.

பத்திரத்திற்கு குறைவை உண்டு பண்ணக்கூடிய கடிதப் போக்கு வரத்தை செய்ததாக குற்றவாளிகள் என்று கண்டு பிடிக்கப்பட்டவர்களுக்கு கடுமையான சிக்ஷை விதிக்கப்படும் என்று பிரகடனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

---

## ஹிட்லரின் கடைசி பிடிப்பு.

(லெப்டினண்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக்).

பக் நதியிலிருந்து நீஸ்டர் நதிக்கு மார்ஷல் கோனியேவின் துருப்புகள் அதிவேகமாக முன்னேறியதற்கு வான்மான்ஸ்டீனின் சேனை இரண்டு துண்டாகப் பிளக்கப்பட்டதுதான் காரணம். மிகவும் கியாதிவாய்ந்த இந்தப்படை இரண்டு துண்டாக்கப்பட்டு ஒன்று மார்ஷல் வான் மான்ஸ்டீனுடையவும் மற்றொன்று வான் கிளீஸ்டினுடையவும் சேனாதிபத்யத்துக்குட்பட்டுவிட்டதென்பதிலிருந்து இந்த சந்தேகம் ஊர்ஜிதப்படுகிறது. கிழக்குப்பக்கத்தில் அரண் இவ்விதமாக பிளக்கப்பட்டுவிட்டதென்பது துக்ககரமான செய்தியென்று ஹிட்லர் ஒப்புக்கொண்டு புதிய நிலைமையைச் சமாளிக்க படை வரிசைகளைத் திருத்தியணிவகுக்கத் துவக்கம் செய்துவிட்டான். அவனுடைய உத்தேசம் பின்வருமாறு.

பர்த், டான்யூப் நதிப் பள்ளத்தாக்குகளில் வான்கிளீஸ்ட் கூடுமானவரையில் பலமாக எதிர்த்துப் போராடவேண்டும். அவனுடைய முன்னணிப் படைகளின் எந்தப் பாகமும் துண்டிக்கப்படும் படியாக அகப்பட்டுக்கொள்ளாமல் மார்ஷல் கோனியேவ், ஜெனரல் மாலினோவிஸ்கியின் படைகளை முன்னேறவொட்டாமல் சாத்தியமானவரையில் தடுத்துவிடவேண்டும். அந்த பிராந்தியத்தில் காலஹரணம் செய்வதிலிருந்து அந்தப் பிராந்தியத்தின் போருக்குமட்டுமில்லாமல் பொதுப்படையாக யுத்தப்போக்குக்கும் முக்கியத்வம் உண்டு. கூடுமானவரையில் போலஸ்தியிலுள்ள எண்ணெய் சுத்திகரிக்கும் சாலைகளைத் தன் வசம் வைத்துக்கொள்ளவேண்டுமென்று ஹிட்லர் நினைக்கிறான். மேலும் ருஷ்ய கடற்படையும் விமானப்படையும் கருங்கடலின் மேற்குக்கரையோரமாகச் செல்லும் போக்குவரத்துகளை அதிக பலமாகத் தாக்குமுன் கிரிமியாவிலுள்ள ஜெர்மன் படைகளுக்கு கடல் மூலமாகத்தப்பி ஓடுவதற்கும் வசதியளிக்கவேண்டுமென்று அவன் விரும்புகிறான்.

வான் மான்ஸ்டீனின் படைப்பகுதிகள் லுவாவுக்கும் கார்பேதியன் மலைகளுக்கும் மத்தியில் பத்திரமான இடங்களுக்குப் பின்வாங்கிவிடவேண்டும். அப்படைகளின் ஒரு பகுதி சாவதானமாக தென்மேற்கு நோக்கிச்சென்று ஹங்கேரிக்குச் செல்லும் கார்பேதிய கணவாய்களைக் காபந்து செய்யவேண்டும்.

இதே சமயத்தில் ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் ஒரு லக்ஷம் துருப்புகளைத் திரட்டி ஹங்கேரிக்கு அனுப்பியிருக்கிறார்கள். அவைகள் ஹங்கேரியர்களை பயமுறுத்தின. கார்பேதியன் கணவாய்களை ஆக்கிரமித்துக்கொண்டு மான்ஸ்டீனின் அடிபட்ட படைகள் பின் வாங்குவதற்கு வசதியேற்படுத்தின. மான்ஸ்டீனின் படைகள் வடமேற்கு முகமாகப் பின்வாங்க முடியாமல் மார்ஷல் ஜுகாவின் படைகள் அவைகளைத் துரத்திவருகின்றன.

யுத்த ஆரம்பத்தில் 2½ வருஷங்கள் வரையில் ஜெர்மனி முன்னேறித் தாக்கிவந்தது. முதலில் பிரிடனும் அதன்பின் நேசநாடுகளும் ஜெர்மனியின் தாக்குதல்களால் ஏற்பட்ட பிளவை மூடக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்ததுடன் எதிர்த்தாக்கல் செய்ய சம்பாரங்களைத் திரட்டி வந்தன. எல்அலாமீனிலும் ஸ்டாலின்கிராட்டிலும் ஜெர்மனியின் முன்னேற்றம் தடைபட்டது. இப்பொழுது பிளவுகளை மூடும் நடவடிக்கையை ஜெர்மனி மேற்கொள்ளவேண்டியதாகிவிட்டது. ஆகிலும் நேசநாடுகளைப் போலல்லாமல் அதன் பலஹீனத்தை மறைத்துக்கொள்ள ஜெர்மனிக்கு வேறு வழியில்லை. ஹங்கேரிக்கு அனுப்பப்பட்ட லக்ஷம் துருப்புகளும் புதிதாக ஆயுதம் பூண்ட ஹங்கேரிய சேனைகளும் காப்பாற்றிவிடுமென்று நம்பப்படுகிறது. இந்த உதவிப்படையும் பயன்படாவிட்டால் அதற்குப்பின் உபரி படைகள் எங்கிருந்து வரக்கூடும்.

இரண்டாம் போர்முனைத் தாக்குதலை எதிர்பார்த்துக் கொண்டு மேற்கு ஐரோப்பாவில் 50 டிவிஷன் துருப்புகள் நிலைபெற்றிருக்கின்றன. இன்னும் 25 டிவிஷன் துருப்புகள் ஜெனரல் அலெக்ஸாண்டரின் படைகளை எதிர்த்துப் போராடுகின்றன. யூகோஸ்லாவியாவில் டிடோ 15 ஜெர்மன் டிவிஷன்களுக்கு ஓய்வுகொடுக்கவில்லை. இந்தப் படைகளில் ஒன்றையும் மற்றொரு பிளவை உண்டுபண்ணும் அபாயத்துக்குட்படாமல் வேறு இடங்களுக்குக் கொண்டுபோக முடியாது. ஆகையால் கிழக்குப் போர்முனையிலுள்ள ஜெர்மன் ஜெனரல்கள் தங்களிடமுள்ள படை பலத்தைக்கொண்டு சமாளித்து நிற்பார்களென்றும் பிரிடனிலிருந்து ஏற்படக்கூடிய பிரிடிஷ் அமெரிக்கப் படையெடுப்பைத் தடுக்க ஹிட்லர் பாக்கியிருக்கும் எல்லாப் படைகளையும் காவு கொடுப்பானென்றும் தோன்றுகிறது. என்னுடைய அபிப்பிராயத்தை வேறுவிதமாகச் சொல்லுகிறேன். மேற்குப் போர்முனையைத் துவக்கவேண்டுமென்று ஹிட்லர் துடித்துக்கொண்டிருக்கிறான். இதுதான் அவனுக்கு அந்திய காலத்தைக் குறிப்பிடுகிறது. ஆகிலும் ஊன்றிக்கொள்ள அவனுக்கு வேறு இடம் ஒருபக்கத்திலுமில்லை.

## ஜெர்மன் படைகள் பின்வாங்குவதற்கு எல்லை.

(டெயிலி டெலகிராப்).

ஒரு பக்கத்தில் ஜெர்மன் படைபலம் அழிந்துவரும்பொழுது மற்றொரு பக்கத்தில் அதற்கு பலமான அடிகள் விழுந்து வருகின்றன.

இரண்டாம் போர்முனையின் அடையாளமாக விமானத்தாக்குதல் பலமாக நடைபெற்று வருகிறது. கடல் மூலமாகவும் தரை மூலமாகவும் படையெடுப்பு பலம் அதிகமாகிவிட்டது. எப்பாடுபட்டும் இந்தத் தாக்குதலை சமாளிக்க ஜெர்மனி தன்னுடைய படைபலத்தைத் திரட்டவேண்டும். கிழக்குப் போர்முனையில் யுத்தப்போக்கின் விளைவுகள் தெளிவுபட்டுவிட்டன. ஜெர்மன் விமானப்படை அநேகமாக மறைந்துவிட்டது. ஜெர்மனியின் தரைப் படை பலம் குறைந்துவருவதுடன் அவைகளை செம்படை முறியடித்துவிட்டது. செம்படை தங்குதடையன்னியில் வேகத்துடன் முன்னேறிவருகிறது. ஒரே மூச்சாக ஜெர்மனிக்குச் சென்று விடவேண்டுமென்று ஸ்டாலின் எண்ணம் கொண்டிருக்கிறான். இது ருஷ்யாவின் யுத்த தந்திரம் மட்டும் அல்ல. இது நேசதேசத்தாரின் ஒன்றுபட்ட லக்ஷியமும்தான். கிழக்குப் போர்முனையில் ஜெர்மனிக்கு மிகவும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுவிட்டதிலிருந்து இரண்டாம் போர்முனையைத் துணிவுகரமாகத் துவக்க சந்தர்ப்பமும் வாய்த்துவிட்டது. இதை நாம் ஜாக்கிரதையுடன் துவக்கிவிட்டால் ஸ்டாலினின் வெற்றி பூர்த்தியாகிவிடும்.

எல்லாவிடங்களிலும் வான் கிளீஸ்ட், வான்மான்ஸ்டீனின் படைகள் பின்வாங்குவதற்கு இனிமேல் இடம் கிடையாது. இனிமேல் அப்படைகள் நிலைத்துநின்று போர் புரியத்தான் வேண்டும். பொருளாதார, ராஜீய அவசியங்களை ஒட்டி பின்வாங்குவதற்கு வரம்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. போலஸ்தியின் அபரிமிதமான எண்ணெயும், ஹங்கேரி, ஆஸ்திரியா, காலிஷியாவிலுள்ள குறைவான எண்ணெயும் சேர்ந்து சேர்மான எண்ணெய் உள்பட ஜெர்மனியின் மொத்த எண்ணெய் ஸப்ளையின் பாதிக்குக் குறைவான ஸப்ளையைத் தருகின்றன. வடக்கு ஸைலீஷ்யாவில் சேர்க்கை எண்ணெய் சாலைகளும் மற்ற யுத்த தளவாட உற்பத்தித் தொழிற்சாலைகளுமிருக்கின்றன. ருமேனியாவிலும், ஹங்கேரியிலும் இருக்கும்



தேவைக்கு உபரியான கோதுமையும், பார்லியும் யூக்ரேனை இழந்ததினால் ஏற்பட்ட உணவுப் பொருள்களில் நஷ்டத்தை சரிக்கட்டக்கூடும். ஜெர்மனியின் விமான உற்பத்தி தொழிற்சாலைகளுக்குத் தேவையான பாக்ஸைட் ஹங்கேரியில் கிடைக்கிறது. மேலும் புடாபெஸ்டிலிருந்து நாலாபக்கமும் செல்லும் இருப்புப்பாதைகள் பால்கன் நாடுகளையும், ஜெர்மனியையும் போஷிக்கின்றன. இவையெல்லாவற்றையும் ஜெர்மனி இழந்தால் அதன் யுத்தத்தை நடத்தும் சக்தி குலைந்துவிடும்.

இதே சமயத்தில் 4,00,000 ருமேனியத் துருப்புகளின் உதவியன்னியில் பின்வாங்கிவரும் குறுகலான போர்முனையைக் காப்பாற்ற வான்கிளீஸ்ட் பிரயத்னம் செய்ய முடியாது.. 3,50,000 ஹங்கேரியத் துருப்புகளின் உதவியன்னியில் வான் மான்ஸ்டீனும் சமாளித்து நிற்கமுடியாது. பின்லாந்து சம்பந்தமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள்தான் மற்ற நாடுகளுக்கும் பொருந்துமென்று அவ்விருவர்களும் அறியவேண்டும். சமாதானப் பேச்சுகளைத் துவக்கியவர்கள் யுத்தத்திலிருந்து வெளியேறிவிடுவார்கள். இதே சமயத்தில் ஜெர்மனி அதன் சிறிய நண்பர்களையும், அதன் பொருளாதார இருப்பிடங்களையும் காப்பாற்ற முயற்சி செய்யும். இந்தப் போர்முனையைத்தான் வான்க்ளீஸ்டும் வான் மான்ஸ்டீனும் அடைந்துவிட்டார்கள். போரில் வெற்றி பெறுவதற்கும், இரண்டாம் போர்முனையைத் துவக்க வசதி ஏற்படுத்துவதற்கும் இவ்விடத்தில் செம்படை ஜெர்மன் படைகளை முறியடிக்கவேண்டும்.

## கோயபல்ஸ் ஜெர்மனியைக் காப்பற்ற முடியாது.

### போல்ஷீவிக் பூச்சாண்டி தந்திரம் பயன்படவில்லை.

கிழக்குப் போர் முனையில் யுத்தப்போக்கு ஜெர்மனிக்கு பாதமாக மாறிவிட ஆரம்பித்தது முதல் கோயபல்ஸ் போல்ஷீவிக் பூச்சாண்டியைக் கிளப்பிக்கொண்டேயிருக்கிறான். அவனுக்கு மூன்று வகைப்பட்ட லக்ஷியம் உண்டு (1) நடுநிலைமை வகிக்கும் நாடுகளின் தயவை சம்பாதிப்பது. (2) நேசதேசத்தார்களிடையே பிளவையும் மனஸ்தாபத்தையும் உண்டு பண்ணுவது. (3) ஜெர்மனிக்கு ஆதீனமான நாடுகளுக்கு உத்சாகம் ஊட்டுவது.

அவனுடைய பிரயத்னம் முற்றிலும் பயன்படவில்லையென்று அவன் இப்பொழுது பகிரங்கமாக ஒப்புக்கொண்டுவிட்டான். ஜெர்மானியர்கள் எவ்வளவு பிரோத்ஸாகம் செய்தபோதிலும் நடுநிலைமை வகிக்கும் நாடுகளும் எதிரிகளும் அவநம்பிக்கையுடனிருக்கிறார்களென்று அவன் சொல்லுகிறான். ஹங்கேரியை அடிபணியச் செய்ததற்கும் அங்கு கோயபல்ஸின் முயற்சி பலிக்காததுதான் காரணமென்றும் அவன் சொல்லியிருக்கலாம். மானிடவர்க்கத்திற்காக நன்மை செய்யவேண்டுமென்ற அவனுடைய முயற்சியைப் பயன்படாமல் செய்ததற்கு யூதர்கள்தான் காரணமென்று அவன் புகார் செய்கிறான். ஜெர்மன் மக்களை இவ்வளவு காலம் அவன் ஏமாற்றி வந்த போதிலும் மற்ற எல்லோரையும் அவன் ஏமாற்ற முடியாதென்பதை கோயபல்ஸ் இப்பொழுது கண்டுபிடித்துவிட்டான்.

நாஸிகளின் பேராசையைப் பூர்த்தி செய்துகொள்ள போல்ஷீவிக் பூச்சாண்டியைக் கிளப்பி விடுவதென்ற தந்திரம் ரொம்பவும் சாதாரணமானதால் ஒருவரும் ஏமாந்துவிடமாட்டார்கள். எந்த உபாயத்தை மேற்கொண்டாலும் ஜெர்மனிக்கு ஏற்படும் தோல்வியைத் தவிர்க்க முடியாதென்று கோயபல்ஸ் இப்பொழுதுதான் கண்டுபிடித்திருக்கிறான். ஜெர்மனிக்கு ஏற்பட்டிருக்கும் பரிதாப நிலையில் கோயபல்ஸுக்கு வேறு உபாயம் ஒன்றும் தோன்றவில்லையென்று நன்றாய்ப் புலப்படுகிறது. அடிவானத்தில் ஜெர்மனி என்ற ஒரு பயங்கரமான தோற்றம்தான் காணப்படுகிறது. நேசநாடுகள் நடுநிலைமை வகிக்கும் நாடுகளின் ஒத்தாசையுடன் இந்த பீதி நீங்கும் வரையில் தங்களுடைய முயற்சிகளைத் தளர்ச்சி செய்யமாட்டார்கள்.

## ஐரோப்பாவில் புதிய உலக அமைப்புத் திட்டம் குலைந்து விட்டது.

### ஹிட்லரின் நண்பர்கள் விலங்கிடப்பட்டிருக்கிறார்கள்.

(டெயிலி ஹெரால்ட் பத்திரிகை).

ருமேனியாவின் மார்ஷல் அண்டோனெஸ்குவும் ஹங்கேரியின் தளபதி ஹோர்தியும் ஹிட்லரின் தலைமை காரியாலயத்திற்குச் சென்றிருக்கிறார்கள்.

ஹோர்தி அகப்பட்டுக்கொண்டுவிட்டான். ருஷ்யாவிலிருந்து ஹங்கேரியத் துருப்புகளை பின்வாங்க அனுமதிக்க வேண்டுமென்று ஹிட்லரிடம் தெரிவிக்க அவன் சென்றான். இதற்கு மாறாக ஜெர்மன் துருப்புகள் ஹங்கேரியாவை ஆக்கிரமிக்கச் சென்றதையும் அவன் கைது செய்யப்பட்ட நிகழ்ச்சிகளையும் அவன் கண்ணுற்றான்.

நாஸி கவர்னருக்குட்பட்டு குயிஸ்லிங்க் பிரதம மந்திரியை நியமிக்கச் சம்மதிக்கும்படி அவன் கட்டாயத்துக்குட்பட்டான். அவனுடைய சம்மதமன்னியில் அவன் பெயரை உபயோகித்து உத்தரவுகள் பிறப்பிவிக்கப்பட்டிருக்கலாம். அது எவ்விதம் நடைபெற்றிருப்பினும் அக்கரையில்லை.

தனக்கு என்ன நேரிடுமென்று நன்ருய் அறிந்தே அன்டோனெஸ்கு ஹிட்லரிடம் சொல்லுகிருன். ருமேனிய சேனையையும் ருமேனிய ஸமஸ்தான நிர்வாகத்தையும் ஜெர்மனியின் அமூலுக்குட்படுத்த வேண்டுமென்று ஹிட்லர், அவனுக்கு உத்தரவு பிறப்பிப்பானென்றும் அவன் அறிவான். அவன் அங்கு சென்றிருப்பதால் உத்தரவிற்குப்பணிவதென்று அவன் தீர்மானமும் செய்துவிட்டானென்று தோன்றுகிறது. அவன் கீழ்ப்படியாவிட்டாலும் அதிலிருந்து ஒரு குதாவடையும் ஏற்படாது.

ஜெர்மானியர்கள் பிரக்யாதிபெற்ற இரும்பு ரக்ஷகப்படையின் தலைவரான ஹோரியா ஸிம்ரா என்ற குயிஸ்லிங்கைத் தயாராக வைத்திருக்கிருர்கள். ஹங்கேரி சென்ற வழியை ருமேனியாவும் பின்பற்றிவிடும். அடுத்தாற்போல் பல்கேரியா பின் தொடரும். இந்தக் கோஷ்டியில் ஸ்லோவேகியாவும் குரோஷியாவும் சேர்ந்துவிடும்.

புதிய உலக அமைப்புத் திட்டம் குலைந்துவிட்டது. ஜெர்மனியின் அமூலுக்குட்பட்ட நாடுகள் மறைந்து விட்டன. பால்கன், டான்யூப் பிராந்தியத்திலுள்ள நாடுகளின் ஆட்சியை ஜெர்மனி நேர்முகமாக நடத்திவருகிறது. இனிமேல் அந்நாடுகள் ஜெர்மனிக்கு விசுவாஸத்துடன் ஆதரவளிக்காதென்று ஜெர்மனி சந்தேகம் கொண்டுவிட்டது.

பால்கன் நாடுகளில் 1918-ம் வருஷம் இலையுதிர் காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் ஜெர்மானியர்களின் மனதைக் கலக்கிவருகின்றன. இந்த யுத்தத்தில் அவ்விதமான அபாயம் ஏற்படாமல அவர்கள் பார்த்துக்கொள்ளுவார்கள். ஹிட்லரின் நேசநாடுகளின் பேரில் நம்பிக்கை வைக்க முடியாததால் அவர்களுக்கு இப்பொழுது விலங்கு போடப்பட்டிருக்கிறது.

---

## பிரிடனின் யந்திர சாதன உயர்வு.

### தெர்மியானிக் வால்வுகளின் முக்கியத்வம்.

பிரிடனில் யந்திரவேலையின் உயர்வை ருஷ்யா மிகுதியாகப் பாராட்டுவதிலிருந்து யுத்தத்துக்குப்பின் இரண்டு நேசநாடுகளுக்குள்ள பாந்தவ்யம் பலப்படுவதற்கு இது முக்கியமானதென்று டெயிலி எக்ஸ்பிரஸின் மாஸ்கோ நிருபரான அலரிக் ஜேகப் எழுதுகிருர்.

பிரிடனிடமிருந்து அநேக விஷயங்களைக் கற்றுக்கொள்ளவேண்டுமென்று ஒப்புக்கொள்ளும் ருஷ்யர்கள் பிரிடிஷ் தொழிலாளரின் விசேஷ சாமர்த்தியத்தைப் பாராட்டுகிருர்கள். அவர்கள் ஒவ்வொருவரின் உற்பத்தி சக்தி உத்தம பக்ஷமானதென்று அவர்கள் கருதுகிருர்கள். பிரிடனிலிருப்பதுபோல் ருஷ்யாவிலுள்ள 190 மிலியன் ஜனத்தொகைக்குத் தக்கவாறு தொழிற்சாலை நிபுணர்களிருந்தால் யுத்தத்துக்குப்பின் ஏற்படக்கூடிய அநேக பிரச்னைகள் மறைந்துவிடுமென்றும் அவர்கள் அறிவார்கள். அலாரிக் ஜேகப் மேலும் சொல்லுகிருர்.

"பிரிடனைப் பின்பற்றி ருஷ்யா பின்கண்ட உற்பத்தி முறைகளை நிறுவ உத்தேசித்திருக்கிறது. மின்சார சக்தியின் உதவிகொண்டு லெகுவான தொழிற்முறைகளை ஆரம்பிப்பது, விமான உற்பத்தியை வலுப்படுத்துவது, டெலிவிஷன், ரேடியோ அமைப்புகளை பரிஷ்காரம் செய்வது, இருப்புப்பாதைகளுக்கு மின்சாரசக்தி அமைப்பது, கப்பல் கட்டுதல், வீடு கட்டுதல், நகரபரிபாலன சபைகளுள்ள நகரங்களிலிருப்பது போல் கட்டடங்களை அமைத்தல், கடற்படையின் வலிமையை அதிகரிப்பது.

#### பிரிடனின் கலைஞானத்தில் ஆழ்ந்த பக்தி.

தொழிலபிவிருத்தியைத் தவிர ருஷ்ய மக்கள் பிரிடனின் கலைஞானத்திலும் அக்கரை கொண்டிருக்கிருர்கள். நம்முடைய நூல்களையும் நமது நாடகசாலை நடவடிக்கைகளையும் நம்முடைய விளையாட்டுகளையும், பிரிடனின் வாழ்க்கை முறைகளையும் கற்றுக்கொள்ள ருஷ்யர்கள் பிரியப்படுகிருர்கள்! பிரிடனின் கொள்கைகளையும் அவர்கள் ஏற்றுக்கொள்ள ஆசைப்படுகிருர்கள். பிரிட்டனின் யுத்த முயற்சிகளைக்கண்டு, மேனாட்டாரிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டிய விஷயங்கள் அநேகமிருக்கின்றனவென்று அவர்கள் அறிந்துவிட்டார்கள்.



யுத்தகால ஆராய்ச்சியின்மூலம் யுத்தத்துக்குப்பின் உபயோகப்படக்கூடிய தொழில் முறைகளில் ரேடியோ தொழில் முறையைப்பற்றிதான் லண்டனிலுள்ள பிரமுகர்கள் விசேஷமாகப் பேசிவருகிருர்கள். இந்த ஸ்தாபனத்தில் பிரிடிஷ் விஞ்ஞான சாஸ்திரிகள் நேசதேசத்தாரின் யுத்த முயற்சிக்கு அளவுகடந்த ஒத்தாசைசெய்யும் முறையில் அபிவிருத்தி செய்திருக்கிருர்கள். இந்த முன்னேற்றம் யுத்தத்துக்குப்பின் உலகம் பூராவிலுமுள்ள சாதாரண குடும்பங்களுக்கும் பிரயோஜனமளிக்கக்கூடும். இந்த சந்தர்ப்பத்தில் தெர்மியானிக் வால்வின் உபயோகத்தைக் கவனிப்போம். யுத்தத்துக்குப்பின் இந்த வால்வையொட்டி அநேக புதிய தொழிற்சாலைகளும் சேவைகளும் ஸ்தாபிக்கப்படக்கூடுமென்று ஒரு நிபுணர் சொல்லுகிருர். முதன் முதலாக முக்கியமாக இந்த வால்வ் சமையல் செய்வதற்கும் உஷ்ணப்படுத்துவதற்கும் உபயோகப்படுத்தும். ஒலிபெருக்கும் ஸ்டேஷனிலுள்ள ஒலி பெருக்கும் கருவி சப்தத்தைப் பெருக்குவது போல் தெர்மியானிக் வால்வ் உஷ்ணத்தை உண்டுபண்ணும். இதை இரண்டு வகைகளில் உபயோகப்படுத்தலாம். மூன்று நிமிஷங்களுக்குள் ஒரு போஜனத்தைத் தயாரித்துவிடலாம். இரண்டாவதாக குறைந்த செலவில் வீடுகளை உஷ்ணப்படுத்திக் கொள்ளலாம்.

இதே முறைகளை மர சாமான்களையும் பிளாஸ்டிக்கிலிருந்தும், கண்ணாடியிலிருந்தும் சொராமிக்கிலிருந்தும் தட்டுமுட்டு சாமான்களையும் குறைந்த செலவிலும் சீக்கிரமாகவும் செய்ய உபயோகப்படுத்தலாமென்று லண்டனிலுள்ள தொழிற்சாலை நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிருர்கள். தெர்மியானிக் வால்வுகளின் பரிமாணம் ஏற்ற வித்தியாசமுள்ளது. ரேடியோ ஒலிபெருக்கில் உபயோகப்படும் 4,00,000 வாட்ஸ்கள் உள்ள சக்தியை சமாளிக்க நான்கு அடி நீளமும் 1 அடி 8 அங்குலம் குறுக்களவுமுள்ள வால்வுகளிருக்கின்றன. உயர்தரமான மின்சார சலனத்தை ஆகர்ஷிக்க ஒரு அங்குல நீளமும் முக்கால் அங்குல குறுக்களவுமுள்ள வால்வுகளுமிருக்கின்றன. மூன்று நிமிஷங்களில் சமையல் செய்து முடிக்கக்கூடிய குக்கரில் இந்த வால்வு ஒன்பது அங்குல நீளமுள்ளதாகயிருக்கும்.

---

## ஜப்பானைத் தாக்க ஏராளமான கப்பல்கள்.

### புதிய கடற்படை தூரக் கிழக்கிலுள்ள பிரிடிஷ் கடற்படையின் வலிமையை அதிகரித்துவிட்டது.

(A. J. மாக்வின்னி).

கடல் யுத்தத்தில் நமது கவனம் ஒரு போர் பிராந்தியத்திலிருந்து மற்ருெரு போர் முனைக்கு மாறிமாறிச்சென்று வருகிறது. ஆகிலும் தாக்குதலின் வலிமை அதிகரித்து வருவதால் சரித்திரத்திலேயே மிகவும் கடுமையான போர்கள் நடந்துவரும் பிராந்தியங்களைப் பற்றிப் பூர்ணமான ஒரு அபிப்பிராயத்தை நாம் வெளியிடக்கூடியதாகயிருக்கிறது. இந்தக் கடல் போர் 125 மிலியன் சதுர மைல்கள் கொண்ட பிரதேசத்தில் நடைபெற்று வருகிறது. இன்றைய நிலைமையை விமர்சனம் செய்வோம்.

இந்துமகா ஸமுத்திரம் 2,83,50,000 சதுர மைல்கள் பரப்புள்ளது. பிரிடிஷ் நீர்மூழ்கிகள் மலாக்கா ஜலசந்தியிலும் அதைச் சுற்றிலும் ஜப்பானியக் கப்பல்களைத் தாக்கிவருகின்றன. ஆகிலும் சென்ற சில மாதங்களில் இந்துமகா ஸமுத்திரத்தில் பிரிடிஷ் கடற்படையின் நீர்மூழ்கிகளின் பலம் மட்டும் அதிகரிக்கவில்லையென்று ஜப்பான் அறியக்கூடும். ஜப்பானியர் வசமுள்ள பிரதேசங்களில் இறுதியில் கடல் மூலமாகப் படைகளையிறக்க தென் கிழக்கு ஆசியா கம்மாண்டுக்கு சக்திவாய்ந்த கடற்படையின் உதவிவேண்டும். தூரக் கிழக்கில் இந்த பலம் அதிகரித்திருக்கிறதென்பதற்கு ருஜுக் கிடைத்திருக்கிறது. சமீபத்தில் மிஸ்டர் சர்ச்சில் ஆற்றிய ஒலிபரப்பு சொற்பொழிவில் பின்வருமாறு அவர் வெளியிட்டார். "அமெரிக்கக் கடற்படையுடன் போர் தொடுக்காமல் ஜப்பானியக் கடற்படை மேற்குப் பக்கம் வந்தால் அதை எதிர்த்துப் போராட கடற்தளபதி சொமர்வில்லிடம் இந்துமகா ஸமுத்திரத்தில் ஒரு பெரிய கடற்படை இருக்கிறது."

#### பேர்லினின் பாத்தியம்.

இதே சமயத்தில் ஜப்பானியக் கடற்படை மேற்கு திசைக்கு வந்தாலும் சரி வராவிட்டாலும் சரி, இந்துமகா ஸமுத்திரத்திலுள்ள பிரிடிஷ் படைகள் ஜப்பானிய நீர்மூழ்கிகளின் தாக்குதலை எச்சமயத்திலும் எதிர் பார்க்கவேண்டும். இந்துமகா ஸமுத்திரத்தில் ஜெர்மன் நீர்மூழ்கிகளும் சஞ்சாரம் செய்கின்றன என்று ஜெர்மனி பாத்தியம் கொண்டாடுகிறது.

பஸிபிக் கடல் 6,39,86,000 சதுர மைல்கள் பரவியிருக்கிறது. ஒரு வருஷத்துக்கு முன் எதிர்பார்த்ததற்கு மேலாக ஜப்பான் பேரில் அதிக சீக்கிரத்தில் வெற்றி கிடைத்துவிடுமென்று

மிஸ்டர் சர்ச்சில் பூரண நம்பிக்கைகொள்ளுவதற்கு, ஜப்பானின் விமானந்தாங்கிகள், லேசான சஞ்சாரிகள், நாசகாரிகள், சாமான் கப்பல்கள் முக்கியமாக எண்ணெய்க் கப்பல்கள் இவைகளின் பலம் மேன் மேலும் குறைந்து வருவது தான் காரணம். சென்ற அநேக மாதங்களில் பஸிபிக்கிலுள்ள எல்லைச் சரக தற்காப்பு அரண்களைத் தற்காப்பு செய்ய ஜப்பான் சக்தியற்றதென்று ஆஸ்திரேலிய அமெரிக்கப் படைகள் வெளிப்படுத்திவிட்டன. ஜப்பானின் கடற்படை பலம் குலைந்துவரும்பொழுது நேசதேசத்தாரின் கடல், ஆகாய, கப்பற்படை பலம் அதிகரித்து வருகிறது. கடற்படை மூலமாகக் கொண்டு வரப்பட்ட விமான ரக்ஷணையுடன் கடல் மூலமாக ஜப்பான் அதன் சிலாக்கியமான படைகளை இனிமேல் கொண்டு போகமுடியாது. நேசதேசத்தார்களுக்கு இந்த வசதி ஏற்பட்டிருக்கிறது.

மத்தியதரைக்கடல் 11,45,000 சதுர மைல்கள் பரவியிருக்கிறது. மத்தியதரைக்கடலின் குறுக்கே மத்திய கிழக்குக்கும் தூரக்கிழக்குக்கும் சாமான் கப்பல்களை அனுப்ப நேசதேசத்தாருக்கு வசதி ஏற்பட்டிருக்கிறது. இந்த மார்க்கமாகச் செல்லுவதினால் கப்பல்களுக்கு அநேக நாட்கள் பிரயாணம் குறைந்துவிட்டது. இதன் மூலம் போக்குவரத்துக்கு அநேக கப்பல்கள் மீதப்பட்டுவிட்டன.

மத்தியதரைக்கடலில் ஜெர்மனியிடம் E. படகுகள் என்று சொல்லப்பட்ட மோட்டார் கப்பல்களிருக்கின்றன. மேலும் அங்கே ஜெர்மன் யூ படகுகளும் சஞ்சாரம் செய்கின்றன. மத்தியதரைக் கடற்கரை பூராவிலும் பிரான்ஸின் தெற்குக் கரையிலும், வடக்கு இதாலியிலும், கிரீஸிலும் கிரீட்டிலும் டோடிகானீஸிலும் ஜெர்மன் விமானதளங்களிருக்கின்றன. மத்தியதரைக்கடலில் சமீபத்தில் நடைபெற்ற மகத்தான நடவடிக்கைகளில் பிரிடிஷ் கடற்படைக்கு நஷ்டம் ஏற்பட்டது என்பதை நாம் ஒளிமறவு செய்யவில்லை. சில கப்பல்கள் பழுதுபட்டுமிருக்கின்றன. ஆகிலும் மத்தியதரைக்கடலில் செல்லும் நேசதேசக் கப்பல்கள் துறைமுகங்களுக்குச் சமீபத்தில் செல்லுவதால் தாத்காலிமாகப் பழுதுபார்ப்பதற்கு அவைகளைத் துறைமுகங்களுக்குச் சுலபமாக இழுத்துச் செல்லக்கூடும். மத்தியதரைக்கடலில் ஏராளமான கப்பல்கள் சஞ்சாரம் செய்வதால் மூழ்கடிக்கப்பட்ட கப்பலில் உள்ள ஜனங்களை ரக்ஷிக்கக்கூடிய வசதி அதிகரித்துவிட்டது.

அட்லாண்டிக் கடல் 3,15,30,000 சதுர மைல்கள் பரவியிருக்கிறது. பிரிடிஷ் கடற்படையும், விமானப்படையும், நீர்மூழ்கிகளைத் தாக்கும் படைகளும் ஒவ்வொரு வாரமும் யூ படகுகளை மூழ்கடித்து வருகின்றன. பலமான துணைக் காவல்கொண்ட சாமான் கப்பல்களைத் தாக்குவதில் யூ படகு தலைவர்கள் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளுகிறார்கள். பெர்லினின் வீண் வெருட்டல்களைவிட, ஜெர்மன் விஞ்ஞான சாஸ்திரிகள் அட்லாண்டிக் கடல் போரின் போக்கை மாற்றக் கூடிய சக்தி வாய்ந்த நூதனமான நீர்மூழ்கி ஆயுதத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்களென்பதற்கு ஒரு ஹேஷ்யமும் காணப்படவில்லை.

## ஜப்பானின் கடற்படை நஷ்டம்.

கடல் போர் நடைபெற்றுவரும்பொழுது எதிரியின் கப்பல் நஷ்டங்களை நாம் ஜாக்கிரதையுடன் மதித்துப் பார்க்க வேண்டுமென்று அனுபவத்திலிருந்து தெரிய வருகிறது. இந்த படிப்பினை முக்கியமாக நீர்மூழ்கிகளை அழிக்கும் போருக்கு அன்வயிக்கும். ஒரு யூ படகை மூழ்கடித்துவிட்டதாகச் சொல்லும் பாத்தியதையை கடற்படை இலாகா ஒத்துக்கொள்ளுமுன் ஆக்ஷேபிக்க முடியாத ருஜுவை சமர்ப்பிக்கவேண்டுமென்று மான்செஸ்டர் கார்டியனின் கடற்படை நிருபர் எழுதுகிறார்.

அமெரிக்காவிலும் இந்த அபிப்பிராயம் காணப்படுகிறது. தங்களுக்குக் கிடைத்த சகலவிதமான ரிபோர்ட்டுகளையும் ஜாக்கிரதையுடன் பரிசீலனை செய்தபின் 1943-ம் வருஷம் அக்டோபர் மாதம் முடிய ஜப்பானுக்கு ஏற்பட்ட கப்பல் நஷ்டங்களின் குறிப்பை, சமீப காலத்தில் அமெரிக்கக் கடற்படை இலாகா வெளியிட்டிருக்கிறது. இது மிகவும் சிக்கலான நடவடிக்கையாகயிருந்திருக்கும். ஏனெனில் இந்த போர்களில் விசேஷ பங்கெடுத்துக் கொண்ட விமானங்கள் லக்ஷியங்களுக்கு விளைந்த நஷ்டங்களைக் கவனிக்கும் வரையில் அந்த இடத்தில் நிலைபெற்றிருக்கக்கூடவில்லை. பயிற்சி பெற்ற கடற்படை உற்று நோக்காளரும் எதிரியின் கப்பல் எந்த ரகத்தைச் சேர்ந்ததென்று ஆகாயத்திலிருந்து கண்டுபிடிக்க முடியாது.

### மற்றொரு இடுக்கண்.

பஸிபிக்கில் நடந்த கடல் போர்களெல்லாம் இரவில் நடைபெற்றனவென்பது மற்றொரு இடுக்கண். மேலும் ஜப்பானின் முக்கிய தளங்கள் வெகு தூரத்திலிருப்பதால் அவைகளை



உற்று நோக்குவது சாத்தியமில்லை. மேலும் தரை நிலயங்களில்லாமல் கிழக்கு ஆசியாவில் சார வேலை செய்வதென்பது சாத்தியமற்றது.

1942-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் குடால்கனூர் போரில் இரண்டு ஜப்பானியக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டனவென்பது சந்தேகமில்லை. அவைகள் காங்கோ ரகத்தைச் சேர்ந்தவைகள். அகாகி, காபா, டியுகாகு, ஹிருயு, சொரியூ, ரியூசுவே, என்ற ஆறு விமானந்தாங்கிக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டிருக்கவேண்டும். ரியூசுவே என்ற கப்பலை 1942-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் கிழக்கு ஸாலமன்ஸுக்கு அருகில் அமெரிக்க வெடி விமானங்கள் மூழ்கடித்ததாகச் சொல்லுவது இப்பொழுது ஊர்ஜிதமாகிவிட்டது.

ஜப்பான் 24 சஞ்சாரிகளை இழந்து விட்டதென்று கடற்படை இலாகா வெளியிட்டிருக்கிறது. ஏற்கனவே பாத்தியம் கொண்டாடும் நஷ்டக் கணக்குக்கு இது மிகவும் குறைவானது. அந்தக் கணக்கை ஒப்புக்கொண்டால் சென்ற அக்டோபர் மாதம் முடிய ஜப்பான் 40 கப்பல்களை இழந்திருக்கவேண்டும்.

### சஞ்சாரிகளும், நாசகாரிகளும்.

யுத்த ஆரம்பத்தில் ஜப்பானிடம் 35 சஞ்சாரிகளும் கடற்கரையைக் காபந்து செய்யும் சில பழைய கப்பல்களும் சமாதான காலத்தில் பயிற்சியளிக்க உபயோகப்பட்ட மற்ற கப்பல்களுமிருந்தன. இவைகளைத் தவிர ஜப்பான் 10 அல்லது 12 புதிய கப்பல்களை ரகசியமாகக் கட்டி முடித்திருக்கும்.

இதே விதமாக நாசகாரிகளின் நஷ்டத்தையும் நாம் ஜாக்ரதையுடனும் சொல்லவேண்டும். அக்டோபர் முடிய 100 நாசகாரிகளை மூழ்கடித்துவிட்டதாக பாத்தியம் கொண்டாடப்பட்டது. இந்த நஷ்டத்தை கடற்படை குறைத்துச் சொல்லி 62 நிச்சயமாக மூழ்கடிக்கப்பட்டதென்றும் 18 மூழ்கி இருக்கலாமென்றும் கணக்கிட்டிருக்கிறார்கள்.

சமீப சில மாதங்களில் ஏராளமான கப்பல் நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கிறபடியால் மேலே சொல்லியிருக்கும் புள்ளி விபரங்கள் நம்முடைய நிலைமையை பாதித்து விட்டது. ஆகிலும் எதிரிக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டம் பலமானது. விருத்தியடைந்துவரும் நேசதேசப் படைகளைத் தாக்க ஒரு கடற்படையை நிர்மாணிக்கப் போதுமான விமான தாங்கிகளையும், சஞ்சாரிகளையும் நாசகாரிகளையும் திரட்டுவது ஜப்பானுக்கு கஷ்டமாகிவிட்டது. டிரக் தீவையும் மேரியனாத் தீவுகளையும் சமீபத்தில் நேச தேசத்தார்கள் தாக்கியபொழுது ஜப்பானியக் கடற்படை எதிர்த்துப் போராடாததற்கு இதுதான காரணமென்று தோன்றுகிறது.

## யுத்த தந்திர நடவடிக்கை.

### இந்தோ—பர்மா முனையில் ஜப்பானியரின் முன்னேற்றம்.

(டைம்ஸ் பத்திரிகை).

தாக்குதலை சமாளித்து நிற்க பதில் தாக்குதல் செய்வதுதான் சிலாக்கியமான நடவடிக்கை என்று ஜப்பானியப் படைகளின் ராணுவ அதிகாரிகள் அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். இந்தோ—பர்மா போர்முனையில் ஜப்பான் சமீபகாலத்தில் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைக்கு இது தான் அடிப்படையான காரணமென்றும் சொல்லப்படுகிறது.

இடது விலாப்பக்கத்தில் அரக்கானிலும் வலது பக்கத்தில் தூரவடக்கு பர்மாவிலும் ஜப்பானுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைத் தவிர்க்க ஜப்பான் மத்திய முனையில் பதில் தாக்குதல் செய்யத்துவக்கிவிட்டது.

அவனுக்குப் பூர்ணமான வெற்றி கிடைத்தால் வட கிழக்கு அஸ்ஸாமிலுள்ள நேசதேசப் படைகளுக்கு உதவியளிக்கக்கூடிய போக்குவரத்து மார்க்கங்களுக்கு அபாயம் விளைவிக்க அவனுக்கு வசதி ஏற்படும். நம்மைச் சின் மலைகளைக் காலி செய்து விடும்படி செய்துவிடுவதென்ற அறு குறையான வெற்றி கிடைத்தால் எல்லைச் சரகத்திலுள்ள எதிரியின் தற்காப்பு அரண் பலப்பட்டுவிடும். விலாப்பக்கங்களைத் தாக்கிவரும் படைகளுக்கு உதவியாக அனுப்பப்படும் நமது படைகளும் விமான பலத்தையும் இங்கு போர் புரியும்படியாகச் செய்துவிடுவதன் மூலம் விலாப்பக்கத்திலுள்ள ஜப்பானியப் படைகளுக்குச் சிறிது சௌகரியமேற்படும். ஜப்பானியப் படைகளின் சிறிய கோஷ்டிகள் எல்லைச் சரகத்தைத் தாண்டி மணிப்பூர் ஸமஸ்தானத்துக்குள் நுழைந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. இது பிரமாதமான காரிய

மில்லை. அப்படைகளை எதிர்த்து நிற்கக்கூடிய பிரதேசம் கரடுமுரடான மலைகளும் அடர்ந்த காடுகளுமுள்ளது. இங்கே தொடர்ச்சியாக தற்காப்புகளை அமைப்பது சாத்தியமில்லை. ஆகிலும், இந்த நடவடிக்கையை பிரமாதப்படுத்தி எதிரிகள் பிரசாரம் செய்யக்கூடும்.

### தொந்தரவு நீடிக்காது.

இவ்விதமாக முன்னேறும் நடவடிக்கைகளுக்குச் சிறந்த முஸ்தீப்புகளுள்ள பெரும் படைகள் உதவியளித்தாலொழிய அவைகள் பிரயோஜனமற்றவை. மேலும் இந்த முன்னேற்றம் நீடித்திருக்காது. எதிரியின் முக்கியமான தாக்குதலின் வலிமையையும், திசையையும் நம்முடைய போக்குவரத்துகளுக்கு ஆபத்து உண்டுபண்ணுவதற்கும் நம்மைச் சின்மலைகளிலிருந்து பின்வாங்கும்படி செய்வதற்கும் முன்னதாக அவன் எந்த தேசத்தின் வழியாக முன்னேறிப் போர் புரியவேண்டுமென்பதையும் நாம் கவனித்துப் பார்க்கவேண்டும்.

எதிரி முன்னேற முயற்சி செய்துவரும் பிராந்தியம் டாமுக்கு சமீபத்தில் 20 மைல்கள் அகலமும், சிண்ட்வின் நதிக்கும், இந்தியாவையும் பர்மாவையும் பிரிக்கக்கூடிய மலைகளுக்கும் மத்தியிலுள்ள சின்மலைகளில் 60 மைல்கள் அகலமும் உள்ள பிரதேசங்கள். சமகோடாகச் செல்லும் மலைகளுக்குமிடையேயும் அடர்ந்த காடுகளுள்ள மலைக்குன்றுகளுக்குமிடையிலும் கனமான தளவாடங்கள் செல்லக்கூடிய மார்க்கங்கள் கிடையாது.

சிண்ட்வின் நதியிலுள்ள தாமந்தி, ஹோமலின் முதலிய இடங்களிலிருந்து கஷ்டசாத்தியமான சோமரா குன்றுகள் வழியாக ஜப்பானிய சிறிய படைப் பகுதிகள் முன்னேறியிருக்கின்றனவென்று தென் கிழக்கு ஆசியா கமாண்ட் வெளியிட்டிருக்கிறது.

மேலும், மணிப்பூரிலுள்ள இம்பாலுக்குச் செல்லும் மோட்டார் ரஸ்தாவின் முகப்பிலுள்ள டாமுவுக்கு 20 மைல்கள் தூரத்திலுள்ள நதியின் கரையிலிருக்கும் தாங்கடட் என்னுமிடத்தில் ஜப்பானியர்கள் ஏராளமான படைகளைக் குவித்திருப்பதிலிருந்து பர்மாவிலிருந்து இந்தியாவுக்கு வரும் கணவாயைப் பிடித்துக் கொண்டு மணிப்பூர் பள்ளத்தாக்குகளுக்கு வந்துவிடுவதென்று ஜப்பானியர்கள் எண்ணம் கொண்டிருக்கிறார்களென்று தோன்றுகிறது. (டாமு இப்பொழுது ஜப்பானியர் வசமாகிவிட்டது).

எதிரி டிட்டிம்மை நேர்முகமாகத் தாக்குகிறானா, அல்லது இந்தப் பிராந்தியத்தில் நமது முன்னணி ஸ்தானமான டிட்டிம்மை எதிரியின் சுற்றிவளைக்கும் நடவடிக்கையை சமாளித்து நிற்க நாம் காலி செய்துவிட்டோமாவென்பதும் தெளிவாகப் புலப்படவில்லை. நிலைமை தெளிவுபடும் வரையில் இது நமக்கு புலப்படாது.

இது ஒரு யுத்த தந்திர நடவடிக்கை. இருதரப்பாரும் தங்களுடைய யோசனையை எதிரி அறிந்துகொள்ளாமல் ரகசியமாக வைத்துக்கொள்ளவேண்டும். இங்கு நேசதேசத்தாருக்கு சௌகரியமளிக்கக்கூடிய ஒரு அம்சமிருக்கிறது. இந்தப் பிராந்தியத்தில் ஜப்பானியர்களைவிட நம்மிடமிருக்கும் விமானப்படை சங்கியையிலும் போரிடும் சக்தியிலும் உயர்வானது.

---

## பஸிபிக்கில் ஜப்பானியர்கள் தற்காப்பு யுத்தம் செய்து வருகிறார்கள்.

### அமெரிக்க கடற்படையுடன் பிரிடிஷ் கடற்படையும் சமீப எதிர் காலத்தில் சேர்ந்துவிடும்.

(டைம்ஸ் பத்திரிகை).

அட்மிரால்டி தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த ஜப்பானின் கடைசி அரணான லோரெங்கா பிடிபட்டபின் சிறந்த போரின் ஒரு கட்டம் முடிவடைந்தது.

பிப்ரவரி மாதம் 29-ம் தேதியன்று லாஸ் நீக்ரோஸ் தீவிலுள்ள மோமோட் விமான தளத்தைப் பிடித்தபொழுது இந்தப் போர் ஆரம்பமாகிற்று. இந்த விமான தளத்தை அமெரிக்க குதிரைப் படைகள் திடீரென்று பலமாகத் தாக்கின. அவர்கள் வேவு பார்ப்பதற்காக அனுப்பப்பட்டார்கள். எதிர்பாரதபடி அவர்கள் ஜப்பானிய தற்காப்புகளை ஊடுறுவிச் சென்று, அடிக்கடி ஏற்பட்ட பலமான எதிர்த் தாக்குதல்களை சமாளித்து நின்று, உதவிப் படைகள் வந்தபின் தீவின் சதுப்பு நிலமுள்ள பாகங்களைத் தவிர மற்ற பிரதேசத்தைக் கைப்பற்றினார்கள்.

அட்மிரால்டித் தீவுகளின் மிகப் பெரிய தீவான மானஸ்ஸில் படைகள் மார்ச்சு மாதம் 15-ம் தேதியன்று இறங்கின. எதிரிகள் வெறிபிடித்தவர்கள் போல் போர்புரிந்த போதிலும்



நேசதேசப் படைகள் கடலிலும், ஈகிள் துறைமுகத்தையும் அதை நோக்கி நிற்கும் மலைக் குன்றுகளையும் லோரெங்கா என்ற விமானதளத்தையும் ஆக்கிரமித்திருக்கிறார்கள். அங்கிருந்த ஜப்பானியப் படைகள் உள்நாட்டிலுள்ள மலைகளுக்கும், காடுகளுக்கும் சென்று விட்டன. அங்கே அவைகள் வேட்டையாடப்படுகின்றன. இந்த விமான தளங்களும், துறைமுகமும் நேசதேச வசமிருப்பதால் நியூ ஐயர்லாந்திலுள்ள காவியங்கிலும் நியூ பிரிடனிலுள்ள ரபாலிலுமுள்ள எதிரியின் தளங்களுக்கு வடக்கிலிருந்தும், வடகிழக்கிலிருந்தும் வரும் கடல் மார்க்கங்கள் நேசதேசத்தாரின் கண்காணிப்புக்குக்குட்பட்டுவிட்டன. காரொலைன்ஸிலிருந்தும் அல்லது கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்தும் அவைகளுக்கு ரக்ஷணையளிப்பதோ அல்லது உதவியளிப்பதோ சாத்தியக் குறைவானதென்று தோன்றுகிறது.

தெற்குக் கடலின் ஆதிக்கத்தை இழந்துவிட்டதிலிருந்து ஏற்படக்கூடிய அபாயங்களை ஜப்பானிய நிர்வாகம் நன்கு அறிந்து விட்டது. ஜெனரல் டோஜோ அடிக்கடி எச்சரிக்கைகளையும் போதனைகளையும் விடுத்திருப்பதிலிருந்து இது விஷயத்தில் ஒரு சந்தேகமும் கிடையாதென்று நிச்சயமாகிவிட்டது. மிகுதியாகக் கப்பல்களும், விமானங்களும் தேவையென்று அவர் விடுத்திருக்கும் வேண்டுகோள் சகஜமாக தொழிற்சாலை, கப்பற்தளங்களின் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்லும் நடவடிக்கைகளை ஒத்ததல்ல. கடல் தாண்டி ஜப்பான் கைப்பற்றியிருக்கும் நாடுகளில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் ஜப்பானியப் போர் வீரர்களின் ரக்ஷணைக்கு அவசியமான கடற்படைகளுக்கு கடலிலும், ஆகாயத்திலும் அபாரமான நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையும் டோஜோவின் வேண்டுகோள்கள் ஒப்புக்கொள்ளுகின்றன.

எதிரியின் கப்பல்களும், தென்மேற்கு, மத்திய பஸிபிக் போர் முனைகளிலுள்ள சிறிய போர்க் கப்பல்களும், விமானப்படையும் தினசரி அழிக்கப்பட்டு வருவதுடன் அமெரிக்க நீர்மூழ்கிக் கூட்டங்கள் கிழக்கு இந்திய, சீன, ஜப்பானிய சமுத்திரங்களில் துருப்பேற்றிச் செல்லும் கப்பல்களையும், எண்ணெய்க் கப்பல்களையும், சாமான் கப்பல்களையும் அழித்து வருகின்றன. பிரிடிஷ் நீர்மூழ்கிகள் சுமட்ராவுக்கருகிலும், நிகோபார் தீவுக்கருகிலும் மலாக்கா ஜலசந்திக்கருகிலும் வெற்றிகரமான நடவடிக்கைகளைக் கையாண்டு வருகின்றனவென்று கடற்படை இலாகாவிலிருந்து சமீபகாலத்தில் வெளியிட்ட அறிக்கை திருப்திகரமானது. நேசதேசத்தார்கள் தங்களுடைய கடற்படை வலிமையின் மூலம் ஜப்பானுக்கு உண்டுபண்ணியிருக்கும் சங்கடத்தை ஆக்கிரமிப்பு நாடுகளில் சிறிய மரக்கப்பல்களையும் படகுகளையும் கட்டுவதன் மூலம் ஜப்பான் தீர்த்துவிட முடியாது. படகுகளும் சிறிய கலங்களும் துருப்புகளையும் சாமான்களையும் ஒரு துறைமுகத்திலிருந்து மற்றொரு துறைமுகத்துக்கு இராக்காலங்களில் கடற்கரை ஓரமாகச் சென்றோ அல்லது ஜலசந்தியைத் தாண்டியோ எதிரிகளின் ரோந்துப் படைகளிடம் அகப்பட்டுக் கொள்ளாமல் எடுத்துச்செல்லக்கூடும். ஆகிலும் அவைகள் விமானத் தாக்குதலையும் லேசான யுத்தக் கப்பல்களின் எதிர்ப்பையும் சமாளித்து நிற்கமுடியாது. சென்ற ஆறு மாதங்களில் அவைகளை உபயோகித்ததிலிருந்து கடும் தரைப்போரில் ஏற்பட்ட நஷ்டங்களைவிட மிகவும் அதிகமான உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கிறது. அவைகளும் எதிரி சில சமயங்களில் துணிவுகரமாக அனுப்பும் பெரிய கப்பல்களும் முற்றுகைக்குள்ளான தீவுகளுக்குக் கொண்டுபோகும் ஸப்ளைகள் வரவரக் குறைந்து வருகின்றபொழுது ஜப்பானிய கடற்படை போர் முனையிலிருந்து பூராவாக மறைந்துவிட்டது போல் தோன்றுகிறது. 1942-ம் வருஷம் நவம்பர் மாத மத்தியில் கூடால்கனாலுக்கு சமீபத்தில் நான்கு படைகள் முறியடிக்கப்பட்டும் இரண்டு படைகள் அழிக்கப்பட்டுவிட்டபின், ஜப்பானியர்கள் ஒவ்வொரு தீவாக இழந்து விட்டார்கள். சில தீவுகள் கைப்பற்றப்பட்டன. சில் தீவுகள் அழிக்கப்பட்டன. ஜப்பானியக் கடற்படை டிரக்கிலிருந்து பின்வாங்கி விட்டது. ஜப்பானைச் சுற்றியிருக்கும் சமுத்திரங்களையும் சீன சமுத்திரத்தையும் காப்பாற்ற அது மூலதனமாக வைக்கப்பட்டிருக்கிறதென்று ருஜுக் கிடைத்திருக்கிறது.

முன்பின் யோசனையில்லாமல் அது எதிர்த்த பிரிடிஷ் கடற்படை அதைத் தற்காப்பு யுத்தம் செய்யும்படி கட்டாயப்படுத்தி விட்டது. தூரக்கிழக்கிலுள்ள அமெரிக்க கடற்படையுடன் பிரிடிஷ் கடற்படையும் சேர்ந்து விட்டால் ஜப்பானின் கடற்படை பலம் பூர்ணமாக மறைந்துவிடும்.

---

## இந்தியாவைப்பற்றி பாரஸீக தூது கோஷ்டித்தலைவரின் அபிப்பிராயம்.

"மிகவும் பிராசீனமான நாகரீகத்தையும் கலைஞானத்தையும் நிலைநாட்டிவரும் இந்தியாவும், இரானும் யுத்தத்துக்குப்பின் அமைக்கப்படும் உலகத்தில் முக்கியமான பங்கெடுத்துக்

கொள்ளுமென்றும், ஒரு தேசம் மற்றொரு தேசத்தினிடமிருந்து அநேக விஷயங்களைக் கற்றுக்கொள்ளவேண்டுமென்றும் மேன்மை தங்கிய ஆஷ்கார் ஹீக்மத் என்னும் பாரஸீக கலைஞான தூது கோஷ்டியின் தலைவர் இந்தியாவில் மூன்று வாரங்கள் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு அவருடைய அபிப்பிராயங்களை வெளியிடும் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்".

அவருடைய அறிக்கையின் பூரா விவரமும் பின்வருமாறு. "நாங்கள் இந்தியாவில் மூன்று வாரங்கள் வரையில் சுற்றுப் பிரயாணம் செய்தோம். இந்த அவகாசத்தில் வடக்கிலும் தெற்கிலுமுள்ள முக்கியமான ஒன்பது ஸர்வகலாசாலைகளையும் அநேக கல்வி, கலைஞான ஸ்தாபனங்களையும் பார்வையிட்டோம். நாங்கள் வாசகசாலைகளையும், கண்காக்ஷிகளையும், தொழிற்சாலைகளையும் விவசாய ஸ்தாபனங்களையும் புராதன ஞாபகார்த்தச் சின்னங்களையும் கண்ணுற்றோம். மேலும் ஆங்காங்குள்ள அதிகாரிகளுடன் கலந்து விவாதித்தோம்.

"யுத்த கால கஷ்டங்களையும் பொருட்படுத்தாமல் இந்தியாவிலுள்ள கல்வி ஸ்தாபனங்களும், கலைஞான ஸ்தாபனங்களும் யுத்தத்துக்கு முன்னிருந்ததுபோல் பரீஷ்காரமாக நிலைபெற்றிருப்பதுடன் அவைகள் முற்போக்கை அடைந்து வருகின்றனவென்பதையும் கண்டு நாங்கள் வியப்புற்றோம். ஒவ்வொரு சர்வகலாசாலையிலிருந்தும் அநேச வாலிபர்கள் தங்களுடைய நாட்டிற்காகப் போர் செய்யச் சென்றிருக்கிறார்கள். நல்ல தளவாடங்களுள்ள விஞ்ஞான ரசாயன சாலைகளில் இந்திய விஞ்ஞான சாஸ்திரிகள் தீங்கிழைக்கும் எதிரியை எதிர்த்துப் போராடும் யுத்த முயற்சிக்குப் பேருதவி செய்து வருகிறார்கள். அப்படியிருந்தும் கலைஞானம், விஞ்ஞான சாஸ்திரங்களின் படிப்பு முன்போல் நடைபெற்று வருகிறது. இந்தியா யுத்தத்திலீடுபட்டிருக்கும்பொழுதும் இந்தியா யுத்தத்தின் கஷ்டங்களுக்கு உட்படவில்லையென்று விளங்குகிறது. இந்த சௌகரியமான நிலைமை ஏற்பட்டிருப்பதற்கு நேச தேசப்படைகளுக்கும், நிர்வாகத்துக்கும் பிரிடிஷ் இந்தியா, இந்திய ஸமஸ்தான மக்களுக்கும் நமது புகழுரை உரித்ததாகும்.

### ஜனங்களின் உயர்வான மனவுறுதி.

இந்திய மக்களின் சிறந்த மனவுறுதியை நாங்கள் கண்ணாரக் கண்டோம். நாங்கள் சுற்றுப்பிரயாணம் செய்து கொண்டிருந்தபொழுதுதான் ஜப்பானியர்கள் அஸ்ஸாம் எல்லையைத் தாண்டி இந்தியாவிற்குள் நுழையத் துணிந்தார்கள். ஆகிலும் நாங்கள் சென்ற இடங்களிலெல்லாம் யுத்த முயற்சிகளிலும் யுத்த முயற்சி இல்லாத நடவடிக்கைகளிலும் அபரிமிதமான நம்பிக்கையிருப்பதைக் கண்டோம்.

"இந்தியாவிற்கு வந்த தூது கோஷ்டிகளில் எங்களுடையதுதான் முதன் முதலாக வந்த கலைஞான தூது கோஷ்டி. இவ்விதமான அநேக கோஷ்டிகள் வரவேண்டுமென்று நாங்கள் ஆசைப்படுகிறோம். நேர்முகமாக இந்தியாவின் கல்வி, கலைஞான ஸ்தாபனங்களை ஆராய்ச்சி செய்யும்படி எங்களுக்கு வசதியளித்ததற்காக இந்திய அரசாங்கத்துக்கு நாங்கள் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறோம். எங்களை இந்தியாவுக்கு அனுப்பிய நிர்வாகத்துக்கும் நாங்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். மாக்ஷி தங்கிய இரானின் ஷாவும் அவருடைய நிர்வாகமும் ஐக்கிய நேசநாடுகளுடன் கலந்து நின்று இறுதி வெற்றிக்காகப் போராடுவதில் மிகுதியான பங்கெடுத்துக் கொண்டிருக்கிறது.

இந்நாட்டில் நாங்கள் சிறிது காலம் தங்கியிருந்தபோதிலும் நாங்கள் அநேக விஷயங்களை அறிந்திருக்கிறோம். அநேகர்களை சந்தித்துப் பேசியிருக்கிறோம். எங்கள் தூது கோஷ்டியின் லக்ஷியத்துக்கு அவைகள் உபயோகமுள்ளதாகயிருக்கும். ஒரே விதமான ஜாதியையும், கலைஞானத்தையும் பெற்றிருக்கும் கிழக்கிலுள்ள இரண்டு மகத்தான பிராசீனமான தேசங்களான இந்தியாவும், இரானும் அநேக நூற்றாண்டுகளாக அவர்களிடையே நிலவி வரும் பாந்தவ்யத்தை புதுப்பித்து பலப்படுத்திக் கொள்ளவேண்டுமென்றும் யுத்தத்துக்குப் பின் நாகரீகத்துக்கும் மனித வர்க்கத்துக்கும் இரு நாடுகளும் பேருதவி செய்யவேண்டுமென்றும் நாங்கள் விரும்புகிறோம்.

### மாணவர்கள், நூல்கள், பொருள்களை மாற்றிக்கொள்ளுதல்.

நாங்கள் சென்ற இடங்களிலெல்லாம் எங்களுக்கு நல்வரவு கிடைத்தது. இந்திய சர்வகலாசாலைகளுக்கும் டெகரானிலுள்ள எங்களுடைய சர்வகலாசாலைக்குமிடையே மாணவர்களையும், ஆசிரியர்களையும் பரிவர்த்தனை செய்துகொள்ளுவதற்கும் கடிதப் போக்குவரத்து, நூல்கள், பொருள்களைப் பரிவர்த்தனை செய்துகொள்ளுவதுபோன்ற நடவடிக்கைகளை அபி



விருத்தி செய்வதற்கும் இந்திய கலாசாலைகளிலுள்ள அதிகாரிகள் எங்களுக்கு வசதியளிப்பதாக உறுதி கூறினார்கள். யுத்தத்தின் கொடுமைகளை உலகம் அனுபவித்து வரும்பொழுதும் ஜனசமூகத்தின் கலைஞானம், நாகரீகம் என்ற ஸ்தாபனங்களுக்கு ஹானியேற்பட்டு வரும் பொழுதும் கலைஞானத்தையும் கலைஞான தூதுகோஷ்டிகளையும் பற்றிப் பேசுவது பொருத்தமில்லாததாகத் தோன்றலாம். ஆகிலும் பாரஸீகப் பழமொழி சொல்லுவதுபோல் "எதிர்கால விஷயங்களை யோசிப்பவர்கள் சிறந்தவர்கள்." ஈச்வர அனுக்கிரஹத்தினால் இறுதியில் வெற்றி நமக்குத்தான் என்பது நிச்சயம். யுத்த நாசத்திற்குப்பின் சமாதானமும் பத்திரமும் உள்ள ஒரு புதிய உலகம் அமைக்கப்படும். மிகவும் பிராசீனமான நாகரீகத்தையும், கலைஞானத்தையும் நிலைநாட்டிவரும் இந்தியாவும், இரானும் யுத்தத்துக்குப் பின் அமைக்கப்படும் உலகத்தில் முக்கியமான பங்கெடுத்துக்கொள்ளும். ஒரு தேசம் மற்றொரு தேசத்தினிடமிருந்து அநேக விஷங்களைக் கற்றுக்கொள்ளவேண்டும்.

---

## லெ ஸாயிர் பத்திரிகையைப்பற்றிக் கேலி.

---

பிரஸ்ஸல்ஸில் ஜெர்மன் கண்காணிப்புக்குட்பட்டு அச்சிடப்படும் லெ ஸாயிர் என்ற பத்திரிகைக்குப்பதிலாக பெல்ஜியத்திலுள்ள எதிர்த்து நிற்கும் கோஷ்டியார் சமீபகாலத்தில் தங்களுடைய பதிப்பை வெளியிட்டபொழுது அது ஒரு பெரிய பரிகாசத்தை வெளியிட்டதுடன் நாஸிக் கொடுங்கோன்மை ஆக்ஷிக்குப்பலமான கண்டனத்தை விடுத்தது. அது சாதுர்யமாகவும் அருவருப்புடனும் அவர்களைக் கேலி செய்தது.

பதில்வெட்டான சஞ்சிகை உண்மையான சஞ்சிகையை எல்லாவகைகளிலும் ஒத்திருந்தபடியால் பத்திரிகை விற்பனை சாலைகளில் 35,000 முதல் 40,000 காபிகள் வரையில் விக்ரயம் செய்யப்பட்டன. அதன் பின்தான் ஜெர்மானியர்கள் அதன் உண்மையை அறிந்தார்கள். கபட வேலை செய்கிறவர்கள் விநியோகத்துக்குத் தயாராக யிருந்த ஜெர்மன் பத்திரிகைகள் எல்லாவற்றையும் அபகரித்துச் சென்றுவிட்டார்கள்.

இந்தப் போலி சஞ்சிகையில் "சமயோசிதமான தந்திரம்" என்று ஒரு தலையங்கம் பெர்லினிலிருந்து வெளியிடப்பட்டதாகக் காணப்படுகிறது. அதன் அடியில் கையொப்பமிட்ட ஜெர்மன் ராணுவ வியாக்யானி பின் வருமாறு கட்டுரையைத் துவக்குகிறார். "உத்தியோக முறையில் வெளியிடப்படும் ராணுவ பிரகடனத்தை நன்றாய் அறிந்துகொள்ளுவதற்கு நமக்கு நிகுதியாகத் தகவல்களைக் கொடுக்கும் ஆதாரங்களை ஆராய்ச்சி செய்வோம்." பிறகு அவைகளின் ஜாபிதா பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. பெர்லினிலுள்ள அபாரமான தகவல்களை அறியக்கூடிய ராணுவ வட்டாரங்கள், பொதுப்படையான தகவல்களை அறியும் பெர்லினிலுள்ள ராணுவ வட்டாரங்கள், ஆகாசத்திலிருக்கும் கோளங்கள், உயர்தர அதிகாரிகள், ஜெர்மனியின் தலை நகரத்தில் காணப்படும் பிரமுகர்கள், சாதாரண மனிதர்கள், போர் முனையிலிருக்கும் சிப்பாய்.

அதன்பின் ஒரு பெரிய கதையைச் சொல்லிவிட்டு அக்கட்டுரையில் பின்வருமாறு முடிக்கப்படுகிறது. "மிகவும் குறைவான மதிப்புப்படி ருஷ்ய சேனை இதுவரையில் 1941-ம் வருஷம் ஜூன் மாதம் முதல் $6\frac{1}{2}$ தடவைகள் அழிக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு பிரமாதமான காரியமில்லை. அசைந்து கொடுக்கக்கூடிய தற்காப்பு யுத்த முறையில் பலமான உதைகள் கொடுக்கப்படும்பொழுது ருஷ்யப்படைகள் பூராவும் 19-வது அல்லது 20-வது தடவை அழிக்கப்பட்டிருக்கும். அப்பொழுது நாம் நினைக்கிறபடி இந்த யுத்தத்தில் ஜெர்மனி வெற்றி பெற்றுவிட்டதா என்று நாம் யோசித்துப்பார்க்கவேண்டும்.

இதைப்படித்தபின் பெல்ஜியத்தில் ஜனங்கள் வெகு நேரம் உறக்க நகைத்தார்கள்.

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 194. (4-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 22- 4-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | 26- 4-44 | ஆரியூர் | ... மாலை 7.00 |
| 23- 4-44 | கீரப்பழணி | ... ,, 7.00 | ,, | அன்னவாசல் | ... ,, 7.30 |
| ,, | ஆலூர் | ... ,, 7.30 | 27- 4-44 | அண்டக்குளம் | ... ,, 7.00 |
| 24- 4-44 | புத்தாம்பூர் | ... ,, 7.00 | ,, | கிள்ளனூர் | ... ,, 7.30 |
| ,, | வைத்திக்கோவில் | ... ,, 7.30 | 28- 4-44 | கொடும்பாளூர் | ... ,, 7.00 |
| 25- 4-44 | வடவாளம் | ... ,, 7.00 | ,, | விராலூர் | ... ,, 7.30 |
| ,, | சம்மட்டிவிடுதி | ... ,, 7.30 | | | |

### பிரஸங்கம் 195 (5-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 29- 4-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | 2- 5-44 | பள்ளிவாசல் | ... மாலை 7.00 |
| | | | ,, | பில்லமங்கலம் | ... ,, 7.30 |
| 30- 4-44 | ஆலங்குடி | ... ,, 7.00 | 3- 5-44 | பொ. புதுப்பட்டி | ... ,, 7.00 |
| ,, | ராசியமங்கலம் | ... ,, 7.30 | ,, | வேந்தம்பட்டி | ... ,, 7.30 |
| | | | 4- 5-44 | அம்புக்கோவில் | ... ,, 7.00 |
| 1- 5-44 | திருமெய்யம் | ... ,, 7.00 | ,, | ரெகுநாதபுரம் | ... ,, 7.30 |
| ,, | மேலூர் | ... ,, 7.30 | 5- 5-44 | அரிமளம் | ... ,, 7.00 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 22—4—44 | திருமெய்யம். | 29—4—44 | வெட்டம்விடுதி. |
| 23—4—44 | மருதன்கோன்விடுதி. | 30—4—44 | எம்பல். |
| 25—4—44 | வடகாடு | 2—5—44 | குடுமியாமலை. |
| 26—4—44 | கரம்பக்குடி. | 3—5—44 | ராயவரம். |
| 27—4—44 | குழிபிறை. | 4—5—44 | கீழாநிலை. |
| 28—4—44 | புதுக்கோட்டை. | 5—5—44 | அரிமளம். |

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—26-4-44.

புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம் ஞூ ஏப்ரல் மீ 29உ [ந. 195

தேசீய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CXCV.

## மின்னல் வேகத்தில் ருஷ்ய முன்னேற்றம்.

(டெயிலி டெலிகிராப்).

ருஷ்யத் தாக்குதல் பெர்காப் முதல் கெர்ச்சு வரையில் மிகவும் வேகமாய் நடத்தப்பட்டு கிரிமியா காலி செய்யப்படுகிறது. எதிரிகளுக்கு கஷ்டம் அதிகம். செபாஸ்டபூல் முகாம் அவர்களுடையது. அங்கு எதிரியின் சைனியங்கள் ஆயிரக்கணக்கில் வந்துசேரவே முடியாது

ஆனால் அந்த பாகத்தை தங்கள் கையில் வைத்துக்கொள்ளவோ அல்லது கடல் வழியாய் அவர்களை வெளிபடுத்தவோ அவர்கள் நினைத்திருப்பது இன்னதென விபரமாய்த் தெரியவில்லை. எவ்விதத்திலும், பெரும் ருஷ்யப் படைகள் வேறு இடங்களுக்கு வேலைக்கு அனுப்பப்படுவது நிச்சயம். அவ்வாறு பிரயோஜனமற்ற காரியத்திற்கல்ல. ருமேனியாவிலுள்ள எதிரிகளுக்கு பயம் ஏற்பட்டிருந்தாலுங்கூட இதர ருஷ்யத் துருப்புகள் பிரத்திற்கும் ஸிராத்திற்கும் இடையில் போயும், கார்பேதியாவரை சென்றும் இருந்தாலும் இதற்குமேல் வடக்கில் லோவிற்கும் கோபெல்லிற்கும் இடையில் நிலைமை மாறுபட்டிருக்கிறது. இங்கு ரயில்வேக்களால் ஸப்ளை முதலியன கிடைக்கப்பெற்று ஜெர்மானியர்கள் சிறிது பலத்துடன் இருக்கிறார்கள். இந்த தளவாட, சேனை முதலிய உதவிகள், சிறிதுகாலம் தாமதித்து வந்ததினால், ஒரு சிறிய அளவுதான் ஜெர்மானியர்கள் காப்பாற்றப்பட்டார்களேயன்றி, மேலும் காப்பாற்றிக்கொள்ள இவர்களின் உதவியைக்கொண்டிருப்பது ஜெர்மன் படைகள் டார்னோபோலிற்கு போவதினின்றுமே வெளிப்படத் தெரிகிறது. இம்முனை இரண்டு முன்னேற்றங்கள் உள. முதலாவது ருஷ்யர்களை போலந்திற்கு புகவிடாமல் தடுப்பது ஒன்று. இரண்டாவதாக அவர்களின் எதிர் தாக்குதலுக்கு தயாராயிருப்பதும் நம் படை ஷிட்டோமிர் சென்ற இடத்தில் போரிட்டு வெற்றிபெற்றபோது செய்ததுபோன்ற தற்காப்பு யுத்தத்தில் ஈடுபட வேண்டியிருப்பதுமாகும். போக்குவரத்துகள் எதிரிகளுடையதை ஒத்துப்பார்ப்பின் மிகவும் குறிப்பிடத்தக்கனயாகும் எனவே கிழக்கு அரங்கத்தில் எல்லாம் முடிந்துவிட்டன எனக்கருதுவதும் முட்டாள்தனம். பிரிபட், கார்பேதியன் இவ்விடங்களில் எதிரி தாக்குதல் புரிந்தால் அப்போது யூக்ரேனைவிட்டு ருமேனியாவிற்குள் நுழையும் ருஷ்யர்களுக்கு கஷ்டம் ஏற்படும். எதிரி தனக்கு ஏற்பட்டிருக்கும் தோல்விகளிற்கு மேல் புதிதாய் வெற்றியடைய முடியாது. ஆனால் ருஷ்யர்களை கடலிலே வைத்திருப்பதாக நினைக்கலாம். ஆனால் மேற்கிலிருந்து நேசதேச படையெடுப்பு ஏற்படுகிறது. எனவேதான் கிரிமியா வெற்றியடைந்ததின் முக்கியமென கருதப்படுகிறது. இதனால் ருஷ்யர்கள் யூக்ரேனின் நான்காம் இடத்தைவிட்டுப் புறப்பட்டு சாவதானமாய் முன்னேறுவதாகும்.

எதிரிகளுக்குத் தந்திரமாய் ஜெயம்பெற நினைப்பதும் முடியாமல்போக இன்னும் சில சாதனங்கள் உள. உதாரணமான வடக்கு அரங்கத்தில் நடவடிக்கை ஆரம்பிக்க காலம் நெருங்குகிறது. தொடர்ச்சியான நேசதேச விமானத் தாக்குதல்கள் எதிரிகளின் போக்குவரத்துகளின் மேல் நடந்துவருகின்றன. புடாபெஸ்ட் மீண்டும் தாக்கப்படுகிறது. எல்லாவற்றையும் விட ஒவ்வொரு மணியிலும் கர்னல் நாக்ஸ் கூறும் "நேசநாட்டிற்கு ஒத்திகைபோன்ற காலம் நெருங்குகிறது" என்ற வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 18—4—44 (செவ்வாய்க்கிழமை). | 2,000 அமெரிக்க வெடி விமானங்கள் பட்டப் பகலில் ஜெர்மனியைத் தாக்கின. |
| | ருஷ்யர்கள் சரித்திரத்தில் கீர்த்தி பெற்ற பாலக்லாவா என்னும் கிரிமியாவிலுள்ள நகரத்தைத் திரும்பிப்பெற்றனர். |
| 19—4—44 (புதன்கிழமை). | 2,000 அமெரிக்க வெடி விமானங்கள் ஒன்று பட்டுத்தாக்கின. |
| 20—4—44 (வியாழக்கிழமை). | நேசதேசக் கடற்படை சுமத்ராவிலுள்ள ஜப்பானிய தளங்களின் மீது பீரங்கிப் பிரயோகம் செய்தது. |
| | நேசதேச விமானங்கள் வடக்கு பிரான்ஸின் பேரில் பகலில் மூன்ருவது தடவை வெடி குண்டுகளை வீசின. |
| 21—4—44 (வெள்ளிக்கிழமை). | நேசதேசத்தார் பர்மாவில் கோஹிமா பிரதேசத்தில் முன்னேறுகிறார்கள். துருக்கி அச்சுநாடுகளுக்கு குரோம் ஏற்றுமதியை நிறுத்திவிட்டது. |
| 22—4—44 (சனிக்கிழமை). | பின்லாந்து மாஸ்கோவின் சமாதான ஷரத்துகளை நிராகரித்துவிட்டது. |
| 23—4—44 (ஞாயிற்றுக்கிழமை). | நேசதேசத்தார்கள் டச்சு நியூகினியாவில் ஹாலந்தியாவைப் பிடித்தனர். |
| | நேசதேச விமானப்படை ஹிட்லரின் ஐரோப்பிய அரணை பகலில் நொருக்கிவிட்டது. |
| 24—4—44 (திங்கட்கிழமை). | நேசதேசத்தார்கள் நியூகினியாவில் உள்ள ஹம்போல்ட் விரிகுடாப் பிரதேசத்தை பூராவும் ஆக்கிரமித்தனர். |
| | அமெரிக்க வெடி விமானங்கள் தெற்கு ஜெர்மனியில் உள்ள விமான தளங்களைத் தாக்கின. |

### (B)-செய்திச் சுருக்கம்.

**ருஷ்யா.**—ஜெர்மானியர்கள் எஸ்தோனியாவில் நார்வாக்கு தென்மேற்கில் பதில் தாக்குதலைத் துவக்கியிருக்கிறார்கள். போலந்தில் ஸ்டானிஸ்லாவில் ருஷ்ய முன்னேற்றத்தை எதிர்த்து போராடுகிறார்கள். கிரிமியாவில் ஸெபாஸ்டபூலுக்காக போர் நடைபெறுகிறது. ருஷ்ய விமானப்படை எஸ்தோனியாவின் தலைநகரமான டாலினுக்கு கிழக்கே 85 மைல்களில் உள்ள கோஹிட்லாவில் இருக்கும் எண்ணெய் சுத்திகரிக்கும் தொழிற்சாலையின் பேரில் குண்டுகளைப் பொழிந்தது. கார்பேதியன் மலை அடிவாரங்களில் கடும்போர் நடைபெறுகிறது.



**இதாலி.**—நீண்டகாலமாக காணப்பட்ட அமைதிக்குப்பின் அமெரிக்கப் படைகள் ஆன்ஸியோ முன்னேறும் வாசலில் உள்ள ஜெர்மன் ஸ்தானங்களை வெற்றிகரமாகத் தாக்கின. சில்லரைச் சச்சரவுகளும் நடைபெறுகின்றன.

**விமானப் போர்.**—மூன்று நாட்களாக வடக்குப் பிரான்ஸில் உள்ள லக்ஷியங்கள், முக்கியமாக போக்குவரத்து மார்க்கங்கள் தாக்குண்டன. ஏப்ரல் 19-ம் தேதியன்று 2,000 வெடி விமானங்கள் ஜெர்மன் விமானப் படையையும் தொழிற்சாலைகளையும் தாக்கின. ஹாம், கோலோன், டஸ்ஸல்டார்ப், ப்ரன்ஸ்விக், வீனர், நியூஸ்டாட் முதலிய இடங்கள் தாக்கப்பட்டன.

**பஸிபிக் போர்.**—ட்ரக் தீவு கூட்டத்திலுள்ள மோயனும், டப்லானும் தாக்கப்பட்டன. மார்ஷல்ஸ் தீவுகளிலுள்ள எரிட்டப்பும், ஔரும் பிடிபட்டன.

டச்சு நியூகினியாவின் வடக்குக் கடற்கரையில் பெரிய ஜப்பானிய தளமான ஹாலந்தியா பிடிபட்டது.

**இந்துமஹா சமுத்திரம்.**—விமானம் தாங்கும் கப்பல்களில் சென்ற நேசதேச வெடி விமானங்களும் சண்டைக் கப்பல்கள், சஞ்சாரிகள், நாசகாரிகள் கொண்ட ஒரு பெரிய கடற்படையின் உதவி கொண்டு டச்சு கிழக்கு இந்தியத் தீவுகளைச் சேர்ந்த வடக்கு சுமத்ராவில் சபாங், லாஙகா, என்ற விமான தளங்களைத் திடீரென்று தாக்கின. படைமுகாம்கள், விமானம் இருக்குமிடங்கள், ஓர்க்ஷாப்புகள், ஒலி பெருக்கும் நிலயம் முதலியவற்றின் பேரில் குண்டுகள் வீழ்ந்தன. இரண்டு எதிரி நாசகாரிகளும் ஒரு துணைக்காவல் கப்பலும் மூழ்கடிக்கப்பட்டன.

**பர்மா போர் முனை.**—எதிரிகள் இம்பாலுக்கு வடக்கிலுள்ள நான்ஷிங்ஸ் என்ற மலைப் பிரதேசத்திலிருந்து துரத்தி அடிக்கப்பட்டார்கள். கோஹிமா எதிரி வசமிருந்து விடுவிக்கப்பட்டது. இம்பால் கடுமையாக ரக்ஷிக்கப்படுகிறது.

பிஷன்பூர் ரஸ்தாவில் ஜப்பானியத் தாக்குதல்கள் துரத்தி அடிக்கப்பட்டன.

சீனத்துருப்புகள் மோகாங் முனையில் முன்னேறுகின்றன.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**16—4—44.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—பல்கேரியாவின் தலைநகரான பெல்கிரேட் (Belgrade).

இரவு.—ஒரு தகவலும் இல்லை.

**இதாலி (Italy).**

கப்பல்கள்.—டால்மேஷியன் (Dalmatian) கடற்கரை.

இலக்குகள்.—ரோமை (Rome)ச்சுற்றிலும்.

**ருஷ்யா (Russia).**

(62 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஸப்ளை பிரதேசங்கள்.-டிமோரிலுள்ள ஸோ (Soe).

விமான நிலயங்கள்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul).

நிலயங்கள்.—ரபால் (Rabaul).

டுமேலியோ ஸிலியோ (Tumleo Seleo).

ஆலி (Ali) தீவு.

கிராமங்கள் பைவானக் பிரதேசங்கள்.—நியூகினி கடற்கரை.

எதிரி ஸ்தாபனங்கள்.-ஈடென் (Eten), ஈபாரா (Para), டிரக் (Truk)கிலுள்ள சில தீவுகள்.

**பர்மா (Burma).**

எதிரிக் கப்பல்கள்.—பிளேர் (Blair) துறைமுகம்.

ஸப்ளை துவியல்கள்.—டாஙகுப் (Taungup).

ஹேஹோ (Heho).—மத்திய பர்மா (Central Burma).

**17—4—44.** (திங்கட்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—ரயில்வே ஸ்தாபனம்—பல்கேரியாவிலுள்ள ஸொபையா (Sofia), யூகோஸ்லாவியாவிலுள்ள பெல்கிரேட் (Belgrade).

இலக்குகள்.—பாஸ்டி கலே (Pas de Calais), வடக்கு பிரான்ஸ் (Northern France).

இரவு.—இலக்குகள்.—ஜெர்மனியிலுள்ள கொலோன் (Cologne).

சுரங்கவெடி பாவுதல்.-எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

ரயில்வே ஜங்ஷன், கடற்கரை.—ருமேனியாவிலுள்ள கான்ஸ்டான்ஸா (Constanza).

**இதாலி (Italy).**

போக்குவரத்துகள், ஸப்ளை லயன்கள்.—ஆன்ஸியோ (Anzio).

### ருஷ்யா (Russia).

(36 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம், கப்பல்கள்.—ஹாலன்டியா (Hollandia), டப்லன் (Dublon).
பேபான் (Fefan), மோயென் (Moen).
கப்பல்கள்.—ரோடி (Roti).
டிமோரிஉள்ள சொபாங் (Koepang).
விமான நிலயம், ஸப்ளை ஸ்தாபனங்கள்.—ஹன்ஸாமடாங் (Hansamadang), நியூகினி (New Guinea), நியூ அயர்லாந்து (New Ireland), நியூ பிரிடன் (New Britain).

### பர்மா (Burma).

விமான நிலயம்.—ஹீஹோ.
எதிரி இலக்குகள்.—அரக்கான் (Arakan), கலடான் (Kaladan), மாயு (Mayu), சின் மலைகள் (Chin Hills), சிண்ட்வின் (Chindwin) காபா (Kabaw) பள்ளத்தாக்குகள்.

**18—4—44.** (செவ்வாய்க்கிழமை).

### ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

(13 எதிரி விமானங்கள், 3 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
பகல்.—இலக்குகள்—பெர்லின் (Berlin), பாஸ் டி கலே (Pas de Calais).
ரயில்வே தளங்கள்.—சார்லிரோய் (Charleroi).
விமான உற்பத்திசாலைகள்.—அரேனியன்பர்க் (Oranienburg), ராதினவ் (Rathenow).
ராணுவ இலக்குகள்.—பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium).
இரவு.—ரயில்வே தளங்கள்—நாய்ஸி லி செக் (Noisy-Le-Sec), ஜியோவிஸி (Juovisy), ரோவென் (Rouen), டெரோமெர் (Teromer).
இலக்குகள்.—பெர்லின் (Berlin), மேற்கு ஜெர்மனி (Western Germany).
சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

### இதாலி (Italy).

மோட்டார் போக்குவரத்துகள்.—காஸினோ (Cassino), சிவிட்டா வெச்சியா (Civitavecchia).
கப்பல்கள் போக்குவரத்துகள்.—பெஸ்கார் (Pescar) அன்கோனா (Ancona).

### ருஷ்யா ((Russia).

(70 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம், ஸப்ளை பிரதேசங்கள்.—கை (Kai) தீவுகள்.
விமான நிலயம்.—ரபால் (Rabaul).
துவியல்கள்.—ரடாவால் (Rataval), டாபுவோ (Tobuo).
கடற்கரை இலக்குகள்.—நியூகினி (New Guinea).
பாட்டரிகள்.—மாமகடா (Mamagata), புகா (Buka).
பாலங்கள்.—கியெட்டா (Kieta).
துறைமுகம்.—நுமானுமா (Numanuma).
எதிரி சைனியங்கள்.—சாய்சுவேல் (Choiseul).

### பர்மா (Burma).

எண்ணெய்க் கிணறுகள்.—யெனங்காங் (Yenangaung).
ரயில்வே லைன்கள்.—மாண்டலே (Mandalay) முதல் ஷுவேபோ (Shwebo).
இலக்குகள்.—அரக்கான் (Arakan), மாயூ (Mayu), கலடான் (Kaladan), சின் மலைகள் (Chin Hills), சிண்ட்வின் (Chindwin).
ரயில்வே தளங்கள்.—யுவாடாங் (Ywataung).

**19—4—44.** (புதன்கிழமை).

பகல்.—விமானத் தொழிற்சாலை காஸாஸல் (Kassel).
எதிரி விமானத் தொழிற்சாலை.—எஸ்ச்வெக் (Eschwege), படர்பான் (Paderborn), கூடெர்ஸ்லோ (Guterslou), லிப்ஸ்டட் (Lippstadt), வெர்ல் (Werl).
இரவு—ரயில்வே ஜங்ஷன் ரெஸிகினி (Rezecne), குல்பென் (Gulbene).

### இதாலி (Italy).

ரயில்வே தளம்—பியாம்பினோ (Piombino), அங்கோனா (Ancona).
ரயில் ரோடுகள், பாலங்கள் இதர போக்குவரத்துகள்.—பெஸ்கார் (Pascar), அங்கோனா (Ancona).
துறைமுகங்கள்.—லெக்ஹார்ன் (Leghorn), பியாம்பினோ (Piombino), ஸான் ஸ்டெபானோ (San Stefano).

### ருஷ்யா (Russia).

(65 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

சுமத்திராவிலுள்ள சாபங (Sabang).
விமான நிலயம்.—ரபால் (Rabaul).
பாலங்கள்.—நியூ கினி (New Guinea).
பொனபி.—(Ponape).
ஜப்பானிய சைனியங்கள்.—மார்ஷல்ஸ் (Marshalls).

### பர்மா (Burma).

இலக்குகள்.—அரக்கான் (Arakan), மாயூ (Mayu), கலடான் (Kaladan), சிண்ட்வின் (Chindwin), சின் மலைகள் (Chin Hills).



**20—4—44.** (வியாழக்கிழமை).

### ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

(4 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன; பல நாசமாக்கப்பட்டன; 9 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
பகல்.—இராணுவ இலக்குகள்—பாஸ் டி கலெஸ் (Pas de Calais), வட பிரான்ஸ்
இரவு.—ரயில்வே இலக்குகள்—கொலோன் (Cologne) ஜெர்மனி (Germany).
ரயில்வே தளம்.—லாசாப்பெல் (La-Chapelle), லென்ஸ் (Lense).
இதர இடங்கள்.—பிரான்ஸ் (France).
ரயில்வே லயன்.—பிரஸ்ஸல்ஸ் (Brussels), நாமூர் (Namur).
இலக்குகள்.—பெர்லின் (Berlin).

### இதாலி (Italy).

ரயில் தளங்கள்.-பானோ (Fano), அங்கோனா (Ancona).
பாலங்கள்.—கார்ஸா (Carsa).
துறைமுகம்.—வெனிஸ் (Venice).
கடற்படைதளங்கள்.—மான்பால்கோன் (Monfalcone).
பாலம்.—அரெஸ்ஸா (Arezzo), புஸைன் (Bucine).
பாலங்கள்.—செஸினா (Cecina), செர்ட்டால்டோ (Gertaldo).
துறைமுகம்.—லெக்ஹார்ன் (Leghorn).

### ருஷ்யா (Russia).

(69 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).
விமானச்சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

தீவுகள்.—டிரக் (Truk).
விமான நிலயம், ஸ்தாபனங்கள்.—ரபால் (Rabaul).
ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—பாலாஸ் முனை (Palas Point).
விமான நிலயம்.—ஸடாவான் (Satawan).

### பர்மா (Burma).

இலக்குகள்.—அரக்கான் (Arakan), மாயு (Mayu), சின் மலைகள் (Chin Hills), சிண்ட்வின் (Chindwin).

**21—4—44.** (வெள்ளிக்கிழமை).

### ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—ராணுவ இலக்குகள்—பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium).
இலக்குகள்.—பாஸ் டி காலே (Pas de Calais), பிரான்ஸ் (France).
இரவு.—இலக்குகள்-கொலொன் (Cologne).

### இதாலி (Italy).

ரயில் போக்குவரத்துகள்.—மத்திய இதாலி (Central Italy), போக்புன்ஸ் (Foggibonsi), புஸீனி (Bucini), ஆர்வியட்டோ (Orvieto), ஸான் ஸ்டெபானோ (Stefano).
ரயில்வே லயன்கள்.—பிளாரென்ஸ்விற்கு (Florance) தெற்கு.
துருப்பு முகாம்கள்.-பான்பி பார்மியா (Fonbi Formia).

### ருஷ்யா (Russia).

(54 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).
விமானச்சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

எதிரி கப்பல்.—ஹாலண்டியா (Hollandia).
விமான நிலயம்.—ரபால் (Rabaul).
ஸப்ளை பிரதேசம்.—மடாங் (Madang).
பொசெய்ன்வில்லியிலுள்ள புகா (Buka).

### பர்மா (Burma).

இலக்குகள்.—அரக்கான் (Arakan), மாயு (Mayu), சின் மலைகள் (Chin Hills), சிண்ட்வின் (Chindwin).

**22—4—44.** (ஞாயிற்றுக்கிழமை).

### ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—சேனைகள் யுத்த தளவாடங்கள், தயார்செய்து சேருமிடங்கள் ஹாம் (Ham) ரயில் ஸ்தலங்கள், விமான நிலயங்கள்.—பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium).
இரவு.—(42 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
இலக்குகள்.—பிரான்ஸ்விக் (Brunswick), டஸைல்டார்ப் (Dusseldorf).
ரயில்வே தளங்கள்.—லேயான் (Laon).
இலக்குகள்.—மான்ஹீம் (Mannheim).

### இதாலி (Italy).

லான்ஸியானோ (Lanciano).
கப்பல்கள்.—டால்மாஷியன் (Dalmatian).

### ருஷ்யா (Russia).

(52 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியர் ஆக்கிரமித்திருந்த தீவு.—டிரக் (Truk), மார்ஷல் (Marshalls) தீவுக் கூட்டம்.
ஜப்பானிய தளம்.—ரபால் (Rabaul).
ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—கடற்கரை ஓரமாகள் வீவாக் (Wewak).

### பர்மா (Burma).

இலக்குகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள், கலடான் (Kaladan), அரக்கான் (Arakan) மாயு (Mayu), சின் மலைகள் (Chin Hills), சிண்ட்வின் (Chindwin), வடக்கு பர்மா (North Burma).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**17—4—44.** (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia).
தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**18—4—44.** (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

லண்டன் (London). (2 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

ருஷ்யா (Russia).
தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**19—4—44.** (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

லண்டன் (London). (எச்சரிப்பு மட்டும்).

ருஷ்யா (Russia),
தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**20—4—44.** (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia),
தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**21—4—44.** (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

பிரிடன் (Britain),
தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**22—4—44.** (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

சில இடங்கள்.—கிழக்கு இங்கிலாந்து (South England).

ருஷ்யா (Russia),
தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**23—4—44.** (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia),
தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

**ஓய்வு.** இந்த வாரத்தில் அமைதி காணப்படுகிறது. நியூகினியாவில் ஹாலண்டியா விழுந்ததும் இடைவிடாத விமானத் தாக்குதலையும் தவிர வேறு முக்கியமான நிகழ்ச்சிகள் கிடையாது. அநேக மாதங்களாக வெற்றிக்குப் பின் வெற்றிகளை வெளியிட்டு வந்த ருஷ்ய பிரகடனங்களும் ஓய்ந்து போய் விட்டன.

ஓய்விலிருந்து யுத்த நடவடிக்கை நின்றுவிட்டதாக ஆகாது. அமைதி என்ற வியாஜத்தின் பேரில் ருஷ்யர்கள் வேனிற்கால எதிர்ப்புக்கு ஆயத்தம் செய்துவருகிறார்கள். வடக்கு இதாலியில் படைகளை இறக்க ஆயத்தம் செய்யப்படுகிறது. கோஹிமா விடுவிக்கப்பட்டபின் மணிப்பூர் பிராந்தியத்திலிருந்து ஜப்பானியர்களை பூராவாக வெளியேற்றும் நடவடிக்கைகள் தொடரும். புதிய டில்லியிலிருந்து சிலோனுக்கு தென் கிழக்கு ஆசியா கமாண்டு மாற்றப்பட்டதென்பது எதிரிகள் சொல்லுகிறபடி ஓட்டம் பிடித்ததல்ல. அந்த சமயத்தில் சுமத்ராவிலுள்ள ஸ்பாங் விமான தளம் திடீரென்று தாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பிரிடனும் அமெரிக்காவும் சும்மா இருக்கவில்லை. வருங்காலத்திய படையெடுப்புக்காக மகத்தான ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன. எதிரியின் கடற்கரையிலுள்ள போக்குவரத்துகள் அழிக்கப்படுகின்றன.

டிர்பிட்ஸ் என்னும் கப்பலை முடமாக்கினதும் 25 யூ படகுகளை அழித்ததும் படையெடுப்புக்கான நடவடிக்கைகளின் அம்சமேயொழிய தனிப்பட்ட நடவடிக்கைகள் அல்ல.

படையெடுப்பு ஏற்படும் என்றும் எதிரியும் சொல்லிவருகிறான். வேவுபார்க்கும் நடவடிக்கை மூலம் இங்கிலீஷ் கால்வாயில் பிரிடிஷ், அமெரிக்க, பிரெஞ்சு, இதாலிய கடற்படை குவிந்துவிட்டதாக கண்டுபிடித்திருக்கிறார்கள். லண்டனிலிருந்து தினசரி ரயில் வண்டிகள் துருப்புகளை ஏற்றிக்கொண்டு கடற்கரையில் உள்ள துறைமுகங்களுக்குச் செல்லுகின்றன. மிஸ்டர் டொனல்ட் நெல்ஸன் சொல்கிறபடி இவ்விதமான படையெடுப்புப் படைகளை எந்த தேசமும் அல்லது தேசங்களும் குவிக்கவில்லை. இப்பொழுது, சரித்திரத்திலேயே மிகவும் பலமான நடவடிக்கை துவக்கமாகும்.

மிகவும் கபடமான எதிரியான ஜப்பான், நிலைமையை அறிந்து, சகாலினில் உள்ள தனது உரிமைகளை ருஷ்யாவுக்கு தானம் செய்துவிட்டது. ருமேனியாவை விஸ்தாரம் செய்யவேண்டுமென்ற எண்ணம் வீணாகப் போனபின்னும் ஹிட்லரின் பேராசைக்கு 5 லக்ஷம் ஜனங்களை தியாகம் செய்த பின்னும் அண்டோனஸ்கு சாத்தியமானால் கட்சி மாறமுயலுகிறான்.



மற்றொரு பக்கத்தில் நாஸிகளின் கொடுமைக்குட்பட்ட ஸெக்கோஸ்லவேகியா விடுதலை நிச்சயம் என்றறிந்து ருஷ்யர்களை வரவேற்கிறது. அவர்களுக்கு ரகசியமாக உதவியளித்து வருகிறது.

துருக்கியும் காலப்போக்கை நன்றாய் மதித்து பிரிடனுடைய உறவை புதுப்பித்துக் கொண்டுவருகிறது. எதிரிக்குச் செல்லும் குரோம் ஸப்ளையை நிறுத்திவிட்டது.

வி வி வி வி வி

**ஜெர்மனிக்கு ஆதீனமான நாடுகளில் அதன் விளைவுகள்.** பிரிடிஷ், அமெரிக்க விமான தாக்குதல்களுடையவும் ருஷ்ய சேனையின் முன்னேற்றத்தினுடையவும் விளைவுகள் பால்கன் நாடுகளில் எவ்வாறு இருக்கின்றன என்று பார்ப்போம். வெகு அழகாக மிஸ்ட்டர் விக்ஹாம் ஸ்டீட் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்.—"ஹங்கேரியில் குழப்பமான நிலை காணப்படுகிறது. ருமேனியாவில் திகைப்பும் கதியின்மையும் நிரம்பியிருக்கிறது. பல்கேரியாவின் மனப்பான்மை இருவகைப்பட்டிருக்கிறது."

சமீபகாலத்திய அறிக்கைகளும் நேசதேச நடவடிக்கைகளும் நேசதேசத்தாரின் எண்ணங்களை தெளிவுபடுத்துகின்றன. ஜெர்மன் ரகசியப் போலீஸின் ஆஞ்ஞைப்படி ஹங்கேரியில் மிகுதியான அக்ரமங்களைச் செய்துவரும் ஜெர்மானியருக்கும் மாகியாருக்கும் மிஸ்ட்டர் ஈடன் எச்சரிக்கை விடுத்திருக்கிறார். அதே விதமாக ஹிட்லருடன் சேர்ந்து யுத்தம் செய்வதை பால்கன் நாடுகள் இச்சமயத்தில் நிறுத்தாவிடில் அவர்களெல்லோரும் ஹிட்லருடன் அழிந்துவிடுவார்கள் என்று மாலடாவ் போதனை செய்துவருகிறான். ஸோபியா பேரில் குண்டு வீசியதன் மூலம் கிரேஸிலும், மாஸிடோனியாவிலும் பல்கேரியர்கள் செய்துவரும் அக்ரமங்களை அவர்கள் நிறுத்தாவிட்டால் அவர்களுக்கு இதே விதமான சிக்ஷை ஏற்படும் என்று ஞாபகப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்நாடுகள் அச்சு நாட்டாரின் கோஷ்டியைவிட்டு விலகிக்கொண்டால் அவர்களுடைய தேசத்தின் எதிர்கால க்ஷேமம் பாதிக்கப்படமாட்டாதென்று உறுதி கூறப்படுகிறது. ருமேனியாவின் ஜனசமூக ஸ்தாபனங்களையும் தேசத்தின் ஒற்றுமையையும் அழிப்பதாக ருஷ்யாவுக்கு உத்தேசம் இல்லை என்று மாலடாவ் வெளியிட்ட அறிக்கை அட்லாண்டிக் சாஸனத்தின் கொள்கைகளை ருஷ்யாவும் ஒப்புக்கொண்டது என்பதை வெளிப்படுத்துகிறது. லண்டனில் பிரீசர்ச்சு மஹாநாட்டில் பேசியபொழுது மிஸ்ட்டர் ஈடன் பின் வருமாறு சொன்னார். "உலகத்தில் சுதந்திரமுள்ள அநேக ஜாதியார்கள் இருப்பார்கள். உலக சமாதானத்தை நிலைநாட்டும் பொறுப்பை பெரிய வல்லரசுகள் ஏற்றுக்கொண்டாலும் மற்ற எல்லாவல்லரசுகளும் அவர்களாலியன்றதை செய்யவேண்டும்."

### ஜெர்மனியின் கடுமையான அடக்குமுறை.

ஜெர்மனி ஆக்கிரமித்து இருக்கும் ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரியிலிருந்து நம்பத்தகுந்த தகவல்கள் கிடைக்கவில்லை. நாஸிகளின் கடுமையான தணிக்கை முறைகளால் அந்நாடுகளின் உண்மையான நிலைமை அறிமுகமாக இல்லை. ஆகிலும் ஜெர்மனி ஹங்கேரியை ஆக்கிரமித்ததற்கு அந்நாட்டில் ஜெர்மனிக்கு எதிர்ப்பு அதிகரித்துவிட்டதென்றும் M. மாலடாவின் அறிக்கைக்கு ருமேனியாவின் எதிரொலி என்னவென்று பல்கேரியா யூகோஸ்லோவியாவுடன் மனஸ்தாபங்களைத் தீர்த்துக்கொண்டதா என்றும் டிமிட்ராவின் புத்திமதியைக்கேட்டு மார்ஷல் டிடோவின் படைகளுக்கு ஒத்தாசை செய்கிறதா என்றும் கண்டுபிடிப்பது சிரமசாத்தியமென்றும் நாம் அறிவோம்.

### வருங்காலம் மிகவும் நெருக்கடியானது.

அடுத்த சில வாரங்களில் இந்நாடுகளில் அதிக நெருக்கடி ஏற்படும். விடுதலை செய்யும் படைகள் அந்நாடுகளின் வாசலுக்கு வந்துவிட்டதால் அந்நாடுகள் இப்பொழுது தங்களுடைய எண்ணங்களை வெளியிடலாம். ஜெர்மானியர்கள் பழிவாங்கிவிடுவார்கள் என்ற பீதியினால் அவர்கள் துணியவில்லை என்று சொல்லிவந்த ஜவாப்பு இனிமேல் பயன்படாது. ஜெர்மனியின் பதில்வாங்கும் முறை ஒழிந்துவிடவில்லை என்றாலும் விடுதலை செய்யும் படைகள் சமீபத்துவிட்டதாலும் நாஸிகளிடம் இருக்கும் எல்லாப்பலத்தையும் போர்முனையில் ஈடுபடுத்த வேண்டியிருப்பதாலும் பதில் முறைகள் அவ்வளவு கடுமையாக இருக்காதென்று எதிர்பார்க்கலாம். மேலும் அந்நாடுகளின் எதிர்கால க்ஷேமத்தை உத்தேசித்து சிறிது தியாகம் செய்வது பிரமாதமான காரியமில்லை. இப்பொழுது நாஸிகளின் அக்கிரமங்களுக்கு உட்பட்டு அவர்கள் அனுபவித்துவரும் கஷ்டங்களைவிட நாஸிகளின் ஆதிக்கத்தை களைந்துவிட்டால் அவர்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்கள் அதிகமாக இருக்காது.

**எதிர்காலத்துக்காகத் திட்டம்.** நேசதேச வெற்றி நிச்சயம் என்று கண்டுகொண்ட ராஜதந்திரிகளான சர்ச்சிலும் கார்டல்ஹலும் யுத்தத்திற்குப் பிந்திய உலக அமைப்பை நிறுவுவதில் கவனம் செலுத்திவருகிறார்கள். அவர்களுடைய முக்கியமான நோக்கங்கள் இருவகைப்படும். ஒன்று உலகத்தின் எல்லா பாகங்களிலும் சுதந்திரஸ்தாபனங்களை அமைப்பது. இரண்டாவது அக்கிரம யுத்தத்தை ராணுவ பலத்தினால் தடுத்து அவைகளை நிலைநாட்டுவது.

வி வி வி வி வி

**சாம்ராஜ்யத்தின் அற்புதச் செய்கை.** சமாதானத்தை நிலைநாட்டுவதில் பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகள் முக்கியமான பங்கு எடுத்துக்கொள்ளும் என்று சர்ச்சில் நம்புகிறார். 1939-ம் வருஷத்தில் இங்கிலாந்து ஜெர்மனியுடன் போர் தொடுத்தபொழுது அயர்லாந்தைத்தவிர மற்ற சாம்ராஜ்ய நாடுகள் ஒரே முகமாக யுத்தத்தில் ஈடுபட்டன.

மன்னர் யுத்தத்தில் ஈடுபட்டால் சாம்ராஜ்யமும் ஒத்துழைக்கவேண்டும் என்ற மேற்கோள் மறுபடியும் ஸ்தாபிக்கப்பட்டது. அப்பொழுது மிகவும் நெருக்கடியான சமயம். ஆகிலும் ஒவ்வொரு சாம்ராஜ்ய நாடும் தயங்கவிலலை. மிஸ்ட்டர் சர்ச்சில் சொலலுகிறார் "ஒரு நாடும் சந்தேகப்படவில்லை, பீதியடையவில்லை. இருட்டிலிருந்து வெளிச்சமுண்டாயிற்று. இந்த வெளிச்சம் ஒருநாளும் மறையாது."

பூமண்டலத்தின் மூலைகளிலிருந்து படைகள் திரளுவதற்கும் ரெக்ரூடிங் முகாம்களுக்கு அவைகள் இருபது நாள் பிரயாணம் செல்லுவதற்கும் சில படைகள் போர்முனைக்குச் செல்லுமுன் 14,000 மைல்கள் கடற்பிரயாணம் செய்வதற்கும் காரணங்கள் என்னவென்று மிஸ்ட்டர் சர்ச்சில் கேட்கிறார். சுய ஆட்சி உரிமையுள்ள நிர்வாகங்கள் தங்களுடைய சொந்த அலுவல்களை கவனியாமல் பிராசீனமான தேசத்தையும் உத்தமமான கொள்கைகளையும் ஸ்தாபிக்கவும் பொதுவான எதிரியை முறியடிக்கவும் உதவிசெய்ய முன்வந்ததற்கு காரணம் என்ன? மிஸ்ட்டர் சர்ச்சில் தானே பதிலுரைக்கிறார். அவர்கள் மனோபாவம்தான் காரணம். அதை அறிந்தால்தான் மனிதர்கள் உலக நடவடிக்கைகளை லக்ஷியம் செய்யாமல் உயர்வான லக்ஷியங்களைக் கடைப்பிடித்து தங்களுடைய உயிரையும் தங்களுடைய ஐசுவரியங்களையும் அர்ப்பணம்செய்ய சம்மதப்படுவார்கள்.

பிரிடிஷ் சாம்ராஜ்யம் ஒன்றுபட்டிருப்பதற்கு அநேக சக்திகள் வேலைசெய்கின்றன. அவைகளுள் சுயநலம் என்பது ஒன்று. மிஸ்ட்டர் சர்ச்சில் சொல்கிறார்:—"இதைக்கண்டு தவரான அபிப்பிராயம் கொள்ளவேண்டாம். அவைகளைத்தவிர பிரயோசனமுள்ள சில காரியங்களைச் செய்யும்படிக்கும் அவர்களை சில சக்திகள் தூண்டுகின்றன."

வி வி வி வி வி

**தற்காப்பிலிருந்து முன்னேறித் தாக்கும் நிலைமை.** அமெரிக்காவின் கடற்படை வலிமையின் அபிவிருத்தியைப் பற்றி கடற்தளபதி யெர்னஸ்ட் J. கிங் எழுதியிருக்கும் குறிப்பு சுவாரசியமானது. அவர் அமெரிக்க கடற்படையின் தளபதி, கடற்படை நடவடிக்கைக்கும் உயர்தர அதிகாரி. அவர் உத்தியோக முறையில் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். இரண்டு வருஷங்களுக்கு முன் அமெரிக்கா கடற்படை இரண்டு சமுத்திரங்களில் நடமாட போதுமானதாக இருக்கவில்லை. பெர்ல் ஹார்பர் நடவடிக்கை சமயத்தில் அட்லாண்டிக் சமுத்திரப்போரின் அவசியத்திற்காக கப்பல்கள் சென்றதால் பஸிபிக்கில் கடற்படையின் பலஹீனம் ஏற்பட்டது. ஆகிலும் 1943-ம் வருஷ முடிவில் யூ படகுகளை அழிக்கும் யுத்தம் நேசதேசத்தார்களுக்கு வெற்றிகரமாக திரும்பிவிட்டது. இதற்குள்ளாக பஸிபிக் கடற்படையும் தயாராகிவிட்டது. அதனால் அமெரிக்கா பஸிபிக்கில் முன்னேறித்தாக்கி பவழக்கடலிலும் மிட்வே தீவுகளிலும் வெற்றி பெறவும் கூடல்கனார், அலுஷியன், ஸாலமன்ஸ், கில்பர்ட்ஸ், மார்ஷல்ஸ், காரலைன்ஸ் தீவுகள் பேன்றவைகளை கைப்பற்றவும் வசதி ஏற்பட்டது. தென்மேற்கு சமுத்திரத்தில் கடல் மார்க்கங்கள் நமது வசமாயின.

பெர்ல் ஹார்பர் நடவடிக்கைக்குப்பின் ஆறு யுத்தக் கப்பல்களும் 50 விமானந்தாங்கிக் கப்பல்களும் கட்டப்பட்டிருக்கின்றன. மேலும் ஜப்பானியர்கள் நிபுணர்கள் என்று சொல்லப்பட்ட இருவகைப்பட்ட யுத்த தந்திரத்திலும் நமக்கு உபயோகமுள்ள அனுபவம் கிடைத்திருக்கிறது. தரைப்படையும், கடற்படையும், விமானப்படையும் ஒத்துழைக்கபயிற்சிபெற்றுவிட்டன. ஒவ்வொரு படையின சங்கிய்யையும் மேலோங்கிவிட்டது. இன்று அமெரிக்க நீர்மூழ்கிகளும் விமானங்களும் யுத்தக்கப்பல்களும் சஞ்சாரிகளும் மத்திய தென்மேற்கு பஸிபிக் சமுத்திரங்களில் எதிர்ப்பன்னியில் சஞ்சரிக்கின்றன.



ஐரோப்பாவிலும் பஸிபிக் கடலிலும் இன்னும் நீண்ட ரஸ்தாக்களைக்கடக்கவேண்டும். ஆகிலும் ஒற்றுமை, வலிமை, அனுபவம் என்ற பலத்துடனும் நம்பிக்கையுடனும் வெற்றிபெற வெகுதூரம் செல்லவேண்டும் என்ற ஆர்வத்துடனும் நாம் அந்த ரஸ்தாவில் செல்ல முற்பட்டுவிட்டோம்.

வி வி வி வி வி

**ஸ்வீடன்.** ஜெர்மனிக்கு ராணுவ ஸப்ளைகளை அனுப்பக்கூடாது என்று ஸ்வீடனுக்கு நேசதேசத்தார்கள் அனுப்பிய வேண்டுகோளுக்கு ஸ்வீடன் இணங்கவில்லை. ஸ்வீடனின் நிலைமை கடினமானதென்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். ஸ்வீடனை ஜெர்மனி தாக்குவது சாத்தியமில்லை என்றாலும் ஸ்வீடனின் பூகோள அமைப்பு அதை ஆபத்துக்கு உட்படுத்திவிடும்.

ஸ்வீடனுக்கு மற்றொரு சங்கடமும் ஏற்படும். படையெடுப்பு ஒருபுறமிருக்க ஜெர்மனியிடமிருந்து அதற்கு கிடைக்கும் நிலக்கரியும், கல்கரியும் நின்றுவிடும். ஸ்வீடனில் உற்பத்தி செய்யப்படும் ஷேல் எண்ணெய்யைத் தவிர அதற்கு எண்ணெயும் கிடையாது.

மேலும் ஜெர்மனியிலிருந்து வியாபார இரும்பு, பொடாஷ், உப்பு, கால்ஸியம் கார்பைட் சேர்மானப்பட்டு முதலியவற்றை ஸ்வீடன் இறக்குமதி செய்கிறது.

கிழக்கு ஜெர்மனியில் உள்ள தொழிற்சாலைகளுக்கு ஜெர்மனி ஸ்வீடனிலிருந்து இரும்பை இறக்குமதி செய்கின்றது. மிஸ்ட்டர் கார்டல் ஹல் சொல்லும் பிரகாரம் ஸ்வீடன் போன்ற நடுநிலைமை வகிக்கும் நாடுகள் எதிரிக்குத் தளவாடங்களை அனுப்புவதால் தான் யுத்தம் நீடித்து வருகிறதென்று சொல்லக்கூடும்.

இது விஷயத்தில் இச்சமயத்தில் நேசநாடுகள் ஒன்றும் செய்வதற்கு இல்லை. ஸ்வீடனின் பூகோள அமைப்பினால் அது நேசநாடுகளைவிட ஜெர்மனியைக் கண்டுதான் அதிகமாக பயப்படவேண்டும். ஆகிலும் நேசதேசத்தாரின் அதிருப்தியை சம்பாதித்தால் அதன் விளைவுகள் யுத்தத்திற்குப்பின் உண்டாகுமென்பதை ஸ்வீடன் நன்றாய் அறியக்கூடும்.

---

## ஜெர்மனியைச் சுற்றிலும் விமான நடவடிக்கை.

(டெயிலி டெலிகிராப் பத்திரிகை).

ருஷ்ய யுத்த அரங்கத்தில் நடக்கும் கெடுதல்களை நிறுத்த ஜெர்மன் தலைவர்கள் ஹங்கேரியை சின்னாட்களுக்குமுன் ஆக்கிரமித்தனர். ருஷ்ய சேனை ருமேனியாவிற்குள் நுழைந்துவிட்டது. நேசதேச குண்டுபோடும் விமானங்கள் இதாலிய தளங்களிலிருந்து புடாபெஸ்ட்டைத் தாக்குகிறது. டான்யூப் சமவெளியைத் தன்னகத்தே கொண்டிருக்கச் செய்துள்ள திட்டங்களைத் தகர்த்தெறியவும், முடிவான சிதைவுக்குக் கெடுதலான சகுனமாகும் இந்த இருபுறமும் செய்யப்படும் தாக்குதல்கள்.

ஐரோப்பாவின் ரஸ்தா சந்திப்பு என்று புடாபெஸ்ட் காரணங்களுடன் பெயரிடப்பட்டிருக்கிறது. டான்யூப்பின் இருபுறத்திலும் வியென்னாவிலிருந்து ரயில்வே லயன்கள் அங்கு கூடுகின்றன கூடி தென்கிழக்கு ஐரோப்பாவை ஜெர்மனியுடன் சேர்க்கிறது. புடாபெஸ்டிலிருந்து பிரிடனையும், ரயில்வே லயன்களின்மூலம்தான் ருமேனியா, பல்கேரியா இவைகளைப் பிடித்திருக்கும் ஜெர்மனி துருப்புகளுக்கு ஸப்ளைகளும், யுத்த தளவாடங்களும் போகவேண்டும். யூகோஸ்லோவாக்கியாவிலும், இதாலியிலும் உள்ள ஜெர்மன் படைகளுக்கு வேண்டிய ஸப்ளைகளும் புடாபெஸ்ட்டின் வழியாய்ப் போகவேண்டும்.

இப்பொழுது ருஷ்யப் படைகள் 250 மைல்கள் தூரத்தில்தான் இருக்கின்றன. புடாபெஸ்ட்டின் ரயில்வே ஸ்தாபனங்கள் மிகவும் சீர்கேடான நிலையில் செய்யப்படுகின்றன. ருமேனியாவிலிருக்கும் நிர்கதியானதும், பின்வாங்குவதுமான ஜெர்மன் படைகளுக்கு இந்த ரயில்வேக்கள் உதவியளிக்க முடியாது. 15-ம் அமெரிக்க விமானப்படை பகலில் செய்த நடவடிக்கைகளாலும், பகலில் போட்ட குண்டுகளாலும், தளங்களும், சேமிப்புகளும் நிர்மூலமாக்கப்பட்டிருக்கின்றன. 12 மணிகளில் ராயல் விமானப்படையைச் சேர்ந்த குண்டுபோடும் விமானங்கள் பெரிய ஸ்டீல் தொழிற்சாலையையும், தளவாடத் தொழிற்சாலையையும் தாக்கியிருக்கின்றன. ஹங்கேரி அரசாங்கம் இந்தக் கொடுந்தாக்குதல்களால் ஏற்பட்ட நஷ்டங்களைக் கவனித்து ரயில்வேக்களையும், ரஸ்தாக்களையும் நகரின் எல்லையிலிருந்து மூடிக்கொண்டு யுத்தகாலத்தில் சைனியங்களை சரிவர நடத்த ஏற்படுத்தும் சட்டத்தைக் கையாள ஆரம்பித்திருக்கிறது. அத்தனை நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மார்ஷல் கோனிவின் சேனை ருமேனியாவிற்குள் நுழைவதும், மார்ஷல் ஷுகோலோவை நோக்கி முன்னேறுவ

தாலும், ஜெர்மன் துருப்புகளின் வேகக்குறைவையும், தளவாடங்கள் கிடைக்காததையும் உண்டாகும் மார்ச்சு மாதத்தில் செய்த ருஷ்யத் தாக்குதல்களுக்கு உதவியாய் ராயல் விமானப்படை 20,000 டன்கள் நிறையுள்ள குண்டுகளை ஜெர்மனியின்மேல் போட்டது. அமெரிக்க விமானப்படைகள் புரிந்த 15 பகல் தாக்குதல்களும் மிகவும் உதவியாயிருந்தன என ருஷ்யர்கள் போற்றுகிறார்கள்.

ஜெர்மனியைச் சுற்றிலும் தாக்குதல் செய்யும் விமானத்தாக்குதல் வட்டமாயுள்ளது அந்த வட்டம் நெருங்குகிறது. ருஷ்யர்கள் தங்கள் அரங்கங்களை நேசதேச விமானதளங்களை நெருக்கிக்கொண்டுவரலாம். அந்த முன்னேற்றமும் இதாலியிலிருந்தும், பிரிடனிலிருந்தும் குண்டுபோடும் விமானங்களால் உதவி செய்யப்படும். ராயல் விமானப்படை புடாபெஸ்ட்டைத் தாக்கும்போதே, வட நார்வேயிலுள்ள ஆல்டரியிலுள்ள நிந்தைக்குரிய டிர்பிட்ஸை விமானப்படைகள் தாக்கிவருவதாக நமக்குத் தகவல் கிடைக்கிறது. தாக்குதல்கள் "முழுப் பலனையும் உண்டாக்கவில்லை" என்ற ஜெர்மானியர்களின் வாக்குமூலமே நம் நேசதேசப் படைகளால் செய்யப்பட்ட தாக்குதல்களை வெளிப்படுத்துகின்றன. ஸ்வீடனிலிருந்து கிடைக்கும் தகவல்களினின்றும் எதிரிகளுக்கு ஏற்பட்டுள்ள கஷ்ட நஷ்டங்களை வெளிப்படுத்துகின்றன.

இந்த விமானப்படையெடுப்பு வட்டம் ஜெர்மனியைச் சுற்றிலுமுள்ளதில் கிழக்கில் சிறிது வெளியிருந்தது. இருப்பினும் தாக்குதல் வேகமாகவே நடந்தது. புடாபெஸ்ட்டும், புகாரெஸ்ட்டும் மத்தியில் இருந்த காரணத்தினால் அதன் போக்குவரத்துகள் நிர்மூலமாக்கப்பட்டு அதன் நாடுகளுக்கும் கஷ்டத்தை உண்டுபண்ணுகிறது. இவ்விதமாய் வட்டமிட்டு புரியும் தாக்குதல்களின் பயனுவது லப்ட்வாப் விமானப்படையை நிர்மூலமாக்குவதேதான். புடாபெஸ்ட்டில், அமெரிக்கர்களைத் தாக்கச்சென்ற விமானங்களில் பாதிக்குமேல் நாசமாக்கின.

---

## எதிரியின் மார்ச்சு மாத கடற்படை நஷ்டம்.

### பஸிபிக்கில் ஜப்பானியர்களுக்கு அதிகமான கப்பல் நஷ்டம்.

யூ படகுகளின் யுத்தத்தில் மிகவும் கஷ்டமான நாட்கள் என்று சொல்லப்படும் மார்ச்சு மாதத்தில் எதிரியின் கடற்படை நஷ்டம் அதிகமானதென்றே சொல்லவேண்டும். விபரம் இன்னும் சரியாய்க் கிடைக்கவில்லை. ஆனால் அதைப்பற்றிய அறிக்கை கூடிய சீக்கிரம் கொடுக்கப்படும். நமது கடற்கரை படைகள் ஒருமித்து யூ படகுகளின் ஸப்ளைகளைத் தகர்த்து வருகின்றன. இங்கிலீஷ் கால்வாயின் வழியாய் ஸப்ளை கொண்டுவர நினைக்கும் எதிரிக்கப்பல்கள் பிரெஞ்சுக் கடற்கரையிலே மூழ்கடிக்கப்பட்டும், நாசமாக்கப்பட்டுமிருக்கின்றன.

மார்ச்சு மாதம் 3-ம் தேதி, செர்பர்க் தீபகற்பத்தினருகில், ராயல் கடற்கரை விமானப் படையாலும், கோஸ்டல் கமாண்ட் விமானங்களாலும், 2 கவசம் பூண்ட பெரும் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. 2 வியாபாரக்கப்பல்கள் பிரிஸியன் தீவுகளின் அருகில் மார்ச்சு மாதம் 29-ம் தேதி போபைட்டர்களால் நாசமாக்கப்பட்டன. இவைகளுடன் ஒரு யூ படகு ஒன்று இங்கிலீஷ் கால்வாய் மார்ச்சு 15, 16-ம் தேதிகளில் கடற்கரை விமானங்களால் நாசமாக்கப்பட்டது. இன்னும் பல தாக்கப்பட்டு நெருப்புக்கிரையாக்கப்பட்டன.

மத்தியதரைக் கடலில் மார்ச்சு 20-ம் தேதி பிரெஞ்சுப் படைகளால் 3 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. பாரோஸ் தீவுகளில் போபைட்டர்களால் 2 ஸப்ளைக்கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன. 2 ஸப்ளைக்கப்பல்களும், பெரிய வியாபாரக் கப்பலும், மார்ச்சு 13-ம் தேதி இதாலியன் கிழக்குக் கரையில நாசகாரிகளால் மூழ்கடிக்கப்பட்டன. ஒரு படகு ஒன்று கடற்கரை படையோடு மோதியபோது மார்ச்சு 15-ம் தேதி எட்ரியாடிக்கில் மூழ்கடிக்கப்பட்டது.

#### ஜப்பானிய நஷ்டங்கள்.

முக்கியமாக மார்ச்சு மாதத்தில், பஸிபிக் பிரதேசத்தில் ஜப்பானியர்கள் அடைந்துள்ள நஷ்டம் அதிகமானது. அதாவது விமானந்தாங்கிக் கப்பல் ஒன்று மார்ச்சு மாதம் 2-ம் தேதி பஸிபிக் கடற்படையைச் சேர்ந்த மீன்வெடிகளால் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டது. நேசதேச வேவுபார்க்கும் படையால் மார்ச்சு 23-ம் தேதி நாசகாரி ஒன்று மூழ்கடிக்கப்பட்டது; வேவுபார்க்கும் படகும், இதர 3 படகுகளும் நாசமாக்கப்பட்டன. மார்ச்சு 21-ம் தேதி ஜப்பானியர்களுக்கு மிகவும் கஷ்டத்தைக் கொடுத்த கருநாள் என்றே சொல்லவேண்டும். ஏனெனில், H. M. ஸப்மரின்கள் தூரக்கிழக்கு ஜலப்பிராந்தியங்களில், 7 வியாபாரக் கப்பல்களை மூழ்கடித்தன. அதில் இரண்டு மிகவும் சாதாரணமான நிறையுள்ளதாகும்.



பெரிய ஸப்ளைக்கப்பல் ஒன்றும், சாதாரண ஸப்ளைக்கப்பல் ஒன்றும் மீன் வெடியால் தாக்கப்பட்டு நாசமாக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. சிறிய கப்பல் ஒன்று பீரங்கிகளால் தாக்கப்பட்டு கடற்கரையில் ஒதுக்கப்பட்டும் 5 மணி நேரங்கள் சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்தது. இந்தப்பிரதேசத்தில் இன்னும் பல கப்பல்கள் நாசமாக்கப்பட்டதாய் செய்தி கிடைக்கிறது வீவாக்கின் அருகில் இவைகளன்னியில் 2 போக்குவரத்துக்கப்பல்கள் 6,000 டன்கள் நிறையுள்ளதென்றும், 4,000 டன்கள் நிறையுள்ளதென்றும் நேசதேச விமானங்களால் மூழ்கடிக்கப்பட்டன. நியூகினியில் மார்ச்சு 20-ம் தேதி 3,000 டன்கள் நிறையுள்ள வியாபாரக்கப்பல் ஒன்று நாசமாக்கப்பட்டது. மார்ச்சு 15-ம் தேதியிலும் 11, 12-ம் தேதிகளிலும் இப்பிரதேசங்களிலுள்ள ஜப்பானியத் துருப்புகளுக்கு ஸப்ளைகள் கொண்டு சென்ற, 10,000 டன்கள் நிறையுள்ள வியாபாரக்கப்பல் ஒன்றை இதர 3 பெரும் வியாபாரக்கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன.

மார்ச்சு 3-ம் தேதி நேச நாட்டிற்கு பெரும் வெற்றியுடைய நாட்களில் ஒன்று. 3 சிறிய கப்பல்களும், ஸப்ளை படகுகளும் மூழ்கடிக்கப்பட்டதன்னியில் இரண்டு கடற்கரையிலுள்ள கப்பல்களும், பெரிய ஸப்ளைக்கப்பல் ஒன்று 7,000 டன்கள் நிறையுள்ளதுமான ஒரு கப்பலும் மூழ்கடிக்கப்பட்டது. இந்த பெரும் நஷ்டங்களுடன் எதிரி ஒவ்வொருநாளும் சிறிய கடற்கரைக்கப்பல்களும், ஸப்ளைக்கப்பல்களும், படகுகளும், இந்தப்பிரதேசங்களில் நஷ்டமாகின்றன.

---

## ஜெர்மனியின் மூலபலம் குறைந்துவிட்டது.

### பால்கன் நாடுகளுக்குச் சிறிது உதவிதான் கிடைத்துவருகிறது.

(மான்செஸ்டர் கார்டியன்).

ஜெர்மன் ருமேனியப் படைகள் நிலைநின்று போர் புரியக்கூடிய கோடான செரத் நதியிருக்கும் ருமேனியாவுக்குள் செம்படை வெகுதூரம் முன்னேறியிருப்பதிலிருந்து ருமேனியாவுக்கும் ஹங்கேரிக்கும் ஜெர்மனி செய்துவரும் ராணுவ ஒத்தாசையின் அளவைப் பற்றிய தகவல்கள் முக்கியமாகக் கிடைத்துவிடுகின்றன.

அங்காராவில் ஒன்றுக்கொன்று முரணான ரிபோர்ட்டுகள் கிடைத்துவருகின்றன ஒரு சாரார் சொல்லுகிறபடி ஹங்கேரி வழியாக ருமேனியாவுக்கு 27 டிவிஷன் துருப்புகள் சென்றிருக்கின்றனவாம் அவைகளில் சில டிவிஷன்கள் ருமேனியாவில் தங்கியிருக்கக்கூடும். மற்றொரு ரிபோர்ட்டின்படி ஜெர்மனிக்கு ஆதீனமான நாடுகளுக்கு அது 15 டிவிஷன் துருப்புகளை அனுப்பியிருக்கிறதென்று சொல்லப்படுகிறது.

நேசதேச ராணுவ வட்டாரங்களில் இந்தப் புள்ளி விவரங்கள் நம்பப்படவில்லை. மற்ற போர்முனைகளிலிருந்து ஜெர்மனி அனுப்பக்கூடிய அளவுக்கு இவைகள் உபரியானவை என்றும் போர்முனைக்கு இவ்வளவு படைகளைக்கொண்டுபோவதற்குத் தேவையான ஜெர்மன் போக்குவரத்து சக்திக்கு இது அதிகமானதென்றும் அவர்கள் அபிப்ராயப்படுகிறார்கள். பால்கன நாடுகள், டென்மார்க், மேற்கு ஐரோப்பாவின் பல பாகங்களிலிருந்து அனுப்பக்கூடிய படைகளை ஜெர்மனி திரட்டி ருஷ்யாவிலிருந்து பின்வாங்கிவரும் ஜெர்மன் படைகளுக்கும் ருமேனிய, ஹங்கேரியப்படைகளுக்கும் ஒத்தாசைசெய்ய அனுப்பியிருக்கக்கூடுமென்றும் ஆகிலும் அப்படைகள் 8 அல்லது 10 டிவிஷன்களுக்கு மேற்போகாதென்றும், அவர்கள் அபிபிராயப்படுகிறார்கள்.

மத்திய ஐரோப்பாவில் ஜெர்மனியிடம் ஏராளமான படைகளிருக்கின்றனவென்றும் ஐரோப்பாவில் எந்த இடத்தில் நெருக்கடி ஏற்பட்டாலும் அங்கு படைகள் துரிதமாக அனுப்பப்படுமென்றும் கேள்விப்பட்டிருக்கிறோம். இதாலியிலும், பால்கன் நாடுகளிலும், மற்ற போர்முனைகளிலுமுள்ள படைகளுக்கு உதவியளிக்க மூலபலத்திலிருந்து படைகள் அனுப்பப்பட்டபின் மூலபலம் மெலிந்துபோய்விட்டதென்றும் புதிதாகச் சேர்க்கப்பட்டவர்களை பழக்கி சேனையில் சேர்ப்பதற்கு மட்டும்தான் அவைகள் போதுமானவையென்றும் நேசதேச ராணுவ நிபுணர்கள் கூறுகிறார்கள். ஆகையால் கிழக்குப் போர்முனைக்கு உபரிப் படைகளை அனுப்பவேண்டுமானால் மேற்கு ஐரோப்பாவிலிருந்துதான் அவைகளை அனுப்பவேண்டும். அவ்விதம் செய்தால் நேசதேசப் படையெடுப்பை சமாளிக்க அவைகள் சக்தியை இழந்துவிடும். அல்லது ஜெர்மன் மக்களை அடக்கியாள ஹிம்லர் உபயோகித்துவரும் S. S. துருப்புகளைக் குறைத்துவிடவேண்டும். அந்த இரு படைகளில் எதைக் குறைத்துவிட்டாலும் அதிலிருந்து நாஸிகளுக்கு அபாரமான கெடுதல்கள் ஏற்படக்கூடும். ஆகையால் ஜெர்மன் ராணுவ அதிகாரிகளும் நாஸிக் கட்சியை சேர்ந்தவர்களும் சங்கடமான நிலைமையிலிருக்கிறார்களென்பது தெளிவுபடுகிறது.

# அமெரிக்காவின் அயல்நாட்டுக் கொள்கையின் அபிவிருத்தி.

(விக்ஹாம் ஸ்டீட்).

கார்டல் ஹல் சமீபத்தில் ஆற்றிய சொற்பொழிவை பொதுவான நிலைமையுடன் அமைத்துப் பார்க்க நாம் முயற்சி செய்திருக்கிறோமாவென்று பார்ப்போம். அது சிறந்த சொற்பொழிவு. பிரிடனில அதைக் கேள்வியுற்றவர்களும், படித்தவர்களும் அது அமெரிக்க நேசதேசத்தாரின் கொள்கைகளைத் தெளிவுபடுத்துகிறதென்று அபிப்பிராயம் கொண்டார்கள்.

நேசதேசத்தாரின் கொள்கைகளில் அமெரிக்காவின் கொள்கைகளும் முக்கியமான பங்கெடுத்துக்கொள்ளும். சென்ற யுத்தத்திலும் அவ்விதம்தான் இருநதது. அதன்பிறகு இன்னல்களும் வித்தியாசங்களும் ஏற்பட்டன. அவைகள் மறுபடியும் தலைகாட்டாமல் நாம் பார்த்துக்கொள்ளவேண்டும். ஜனாதிபதி வில்ஸன் ஐரோப்பாவில் மிகுந்த செல்வாக்கு அடைந்ததற்கு அவனிடம் சிறந்த கொள்கைகளிருக்கின்றனவென்று ஜனங்கள் நம்பிக்கை கொண்டிருந்தார்கள். ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவின் கூட்டாளிகளாக யிருந்தார்களே ஒழிய நேசநாடுகளாகயில்லை. அவர்களிடம் விரிவான திட்டங்கள் கிடையாது. பாரிஸ் சமாதான மகாநாட்டிற்குப்பின் ஐரோப்பாவிலும் உலகம் பூராவிலும் நடந்தேறிய குழப்பத்துக்கு ஜனாதிபதி வில்ஸனின் கொள்கைகள் சர்வதேச சங்கத்தாருக்கும் ஸ்பஷ்டமாகயில்லாததும் அமெரிக்க காங்கிரஸிலுள்ளவர்கள் அதை வலுப்படுத்த பிரியப்படாததும்தான் காரணங்கள்.

## அமெரிக்காவின் கொள்கைகள்.

சமாதான உடன்படிக்கையைப் புரக்கணித்துவிட்டு சர்வதேச சங்கத்தில் சேர மறுத்ததன் மூலம் அமெரிக்கா நம்மைக் கைவிட்டுவிட்டதென்று புகார் செய்வது உபயோகமற்றது. ஞாயமற்றது. ஆகிலும், அமெரிக்காவின் நடவடிக்கைக்குக் காரணமான விஷயங்களை ஆராய்ச்சி செய்து அவைகள் தற்போதிய நடவடிக்கைகளுக்கு எவ்வளவு சாதகமளிக்கக் கூடியவையென்று பார்ப்பது உபயோகமுள்ள நடவடிக்கையாகும்.

இந்த சந்நிவேசத்துடன்தான் நாம் கார்டல் ஹல்லின் ஒலிபரப்பு பிரசங்கத்தை ஆராய்ச்சி செய்யவேண்டும். அமெரிக்க, நேசதேசக் கொள்கைகளைப்பற்றி அது குறிப்பான அபிப்பிராயத்தை வெளியிடவில்லை, வெளியிடுவதாகவும் உத்தேசிக்கவில்லை. கார்டல் ஹல் ஜனநாயகக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி ரூஸ்வெல்டின் அயல்நாட்டு மந்திரி. இவ்வருஷத்தில் ஜனாதிபதியின் தேருதல் நடைபெறும். கட்சிப்பிரதி கட்சிகளிடையே மனஸ்தாபங்கள் அதிகரிக்கும். நவம்பர் மாதத்தில் ஜனாதிபதியுடையவும் காங்கிரஸ் அங்கத்தினர்களின் தேருதலும் நடைபெறக்கூடும். ஆகையால் கார்டல் ஹல்லின் அபிப்பிராயம் புதிதாக வரப்போகும் ஜனாதிபதியையும் காங்கிரஸ்ஸையும் கட்டுப்படுத்துமென்று நாம் சொல்லுவதற்கில்லை. ஆகிலும், ஜாக்கிரதையுள்ள, மிதக் கட்சியைச்சேர்ந்த, தீர்க்கதரிசியான இந்த அமெரிக்க ராஜதந்திரியானவர் அமெரிக்க ஜனங்களிடம் இருகட்சிகளும் ஒப்புக்கொண்டு தேருதல் சங்கடத்தை ஒழிக்கக்கூடிய நடவடிக்கையின் அடிப்படையான கொள்கைகளை ஸமர்ப்பிக்க முயன்றிருக்கிறார் என்று நாம் சொல்லக்கூடும்.

எந்த அந்நிய நாட்டாரும் எந்த ஆங்கிலேயரும் கார்டல் ஹல்லின் சிபார்சுகள் சரியானவையென்றும் தவறானவையென்றும் சொல்லுவதற்கில்லை. உலகத்தின் சமாதானத்தையும் க்ஷேமத்தையும் விரும்பும் பிரிடிஷாரும் மற்ற அயல்நாட்டார்களும் அமெரிக்க பொதுமக்கள் ஒப்புக்கொள்ளக்கூடியவை என்று கார்டல் ஹல் நினைத்து விடுத்த அபிப்பிராயங்களைப்பற்றி சிந்தனை செய்யலாம். இந்த யுத்தம் துவங்கியபின் அமெரிக்கர்களின் மனோபாவம் குறிப்பான முறைகளில் விருத்தியடைந்துவருகிறதென்று அவர் நம்புகிறார். தனிப்பட்ட நடவடிக்கையை மேற்கொள்ளுவதைவிட, உலகத்தின் விடுதலையை நிலைநாட்ட அவசியமானது. மற்றநாடுகளுடன் ஒத்துழைப்பதுதான் சிறந்ததென்ற அறிவும் தீர்மானமும் ஏற்பட்டுவிட்டதென்றும் தீங்கிழைக்கக்கூடிய ஸ்தாபனங்களுக்குச் சலுகை காட்டுவதைவிட சுதந்திர நிர்வாகங்களும் நாஸி, பாஸிஸ்டு நிர்வாகங்களும் ஒரே சமயத்தில் நிலைபெற்றிருக்கமுடியாதென்றும் அவர் சொல்லியிருக்கிறார்.

## நாஸிகளை அழித்துவிடுவதென்று அமெரிக்கா தீர்மானித்துவிட்டது.

மிஸ்ட்டர் கார்டல் ஹல் பின்வருமாறு சொல்லுகிறார் :—

"இந்த இரண்டு அம்சங்களையும் தெளிவுபட அறிந்துகொண்டால் அமெரிக்கா நிர்வாகத்தின் அயல்நாட்டுக்கொள்கைகள் புலனாகும். அமெரிக்கர்கள் நேசதேசத்தாருடன் ஒன்றுபட்டு எதிரிகளை முறியடிக்கவும் நாஸி, பாஸிஸ்டு ஸ்தாபனங்களை அழிக்கவும் தங்குதடையன்னியில் போர்புரிவார்கள். வெற்றிகிடைத்தபின்னும் நேசதேசத்தார்களுடனும், சமாதானத்தையும் சுதந்திரத்தையும் விரும்பும் மற்ற தேசங்களுடனும் அமெரிக்கா சேர்ந்து



கொண்டு சமாதானத்தையும் சுதந்திரத்தையும் நிரந்தரமாக நிலைநாட்டக்கூடிய ஸ்தாபனங்களை அமைத்து அவைகளை பரிபாலிக்கவும் முயற்சி செய்வதாகத் தீர்மானம் செய்திருக்கிறார்கள்."

இந்த அறிக்கைகளை யொட்டி அவர் ஜனங்களுக்கு ஒரு எச்சரிக்கையையும் விடுத்திருக்கிறார். "அமெரிக்க சர்வதேச சங்கத்தின் ஒத்துழைப்பிலிருந்து அடிக்கடி வெளியேற முடியாது. சர்வதேச அமைப்பின் பொருப்பிலிருந்தும் அது சுலபமாக விலகிக்கொள்ள முடியாது" என்றும் அவர் சொன்னார். நடுநிலைமை வகிக்கும் நாடுகள், பிரெஞ்சு தேசிய விடுதலைக்கமிட்டி, இதாலியின் எதிர்காலம், இவைகளைப்பற்றி சில விஷயங்களைச் சொல்லிவிட்டு மிஸ்ட்டர் கார்டல் ஹல் பின்கண்ட மற்றொரு விஷயத்தையும் ஜனங்களுக்கு ஞாபகப்படுத்தினார். உலகத்திலுள்ள சுதந்திர நாடுகளெல்லாம் தன்னந்தனியே விலகிநின்றதனால் நாச ஸ்திதியை அடைந்துவிட்டார்கள்.

## வெற்றியும் நிரந்தரமான சமாதானமும்.

அமெரிக்காவும், பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகளும், ருஷ்யாவும், சைனாவும் தங்களுடைய அக்கரைகளை ஒன்றுபடுத்தி ஒற்றுமைக்காதபோனால் வெற்றியை நிரந்தரமான சமாதானத்தை நிறுவ் உபயோகப்படுத்தமுடியாது. சிறிய வல்லரசுகளின் உரிமைகளுக்கும் அக்கரைகளுக்கும் பாதகமன்னியில் இந்தப்பெரிய நான்கு தேசங்களுக்குமிடையே ஏற்படும் ஒற்றுமையும் ஒற்றுழைப்பும்தான் எதிர்காலத்திய நடவடிக்கைகளுக்கும் சர்வதேச ஸ்தாபன அமைப்புக்கும் முக்கியமான அடிப்படையான திட்டங்களாகும். ஏனெனில் நிரந்தரமான சமாதானத்தையும் சுயேச்சையாகயிருக்கும் ஸ்தாபனங்களையும் ஏற்பாடுசெய்வது அடிப்படையான கொள்கைகளின் பலத்தைப்பொருத்திருக்கும். அவ்விதமில்லாவிட்டால் சமாதானத்தை நிலைநாட்ட அமைக்கப்படும் ஸ்தாபனங்கள் ஏட்டுச்சுரைக்காயாகத்தானிருக்கும், மற்றொரு அக்கிரமப் போரைத்துவக்க பின்னும் ஒருவர் தோன்ற சநதர்ப்பமளிக்கக்கூடியதாகும்.

அமெரிக்க ஜனங்கள் நல்லறிவுள்ளவர்களென்பது சென்ற வருஷம் அக்டோபர் மாதத்தில் கார்டல் ஹல்லும் மிஸ்ட்டர் ஆந்தனி ஈடனும், M. மாலடாவும் சீன அயல்நாட்டுதூதரும் சேர்ந்து வெளியிட்ட அறிக்கையை கட்சிப்பிளவன்னியில் அமெரிக்க காங்கிரஸ் ஆமோதித்ததிலிருந்து வெளியாகிறது. அதன்பின், சமாதானத்தை நிலைநாட்டக்கூடியதும் அக்கிரமப் போரைத் தடுக்கக்கூடியதுமான சர்வதேச ஸ்தாபனத்தின் அமைப்பையும் ஸ்வரூபத்தையும் நிர்த்தாரணம் செய்வதற்கும், மற்ற சுதந்திர நாடுகளுடன் பிரிடனும் அமெரிக்காவும் கூட்டாளிகளாகநின்று உழைக்க பொருளாதார, கூட்டுறவு ஸ்தாபனங்களை அமைப்பதற்கும் அமெரிக்கா ஏற்பாடு செய்துவருகிறது. அப்படி ஸ்தாபிக்கக்கூடிய சர்வதேச ஸ்தாபனம் ஒருவர் மற்றொருவரைப்பொருத்தும், அதில் சேராத நாடுகளைப் பொருத்தும், ஒப்பந்தத்துக்குப் புறம்பாக பலாத்காரத்தை பிரயோகிக்கமாட்டாதென்று வாக்குறுதி செய்துகொள்ளவேண்டும். இந்த ஏற்பாடுகளில் சமாதானத்தை நிலைநாட்டப் போதுமான படைகளை வைத்துக்கொள்ளவும் சட்டவரம்புக்குட்பட்ட விவாதங்களைத் தீர்த்துவைக்க சர்வதேச நியாயஸ்தலத்தையும் அமைக்கவும் திட்டம் போடவேண்டும்.

## அமெரிக்க ஜனங்களின் ஒன்றுபட்ட தீர்மானம்.

நாஸி தத்துவத்தையும் பாஸி தத்துவத்தையும் அதன் மூலசக்தியையும் அழிக்கத் தீர்மானம் செய்திருக்கும் நேசதேசத்தார்களைப்போல அமெரிக்கர்களும் ஒன்றுபட்ட மனப்பான்மையுடனிருக்கிறார்களென்று காண்பிக்க காங்கிரஸ் சபைகளின் ஒத்தாசைவேண்டுமென்று அவர் வற்புறுத்தினார். எல்லா அம்சங்களிலும் ஆனால் ஒரு உபரி விபரத்துடனும், கார்டல் ஹல்லின் திட்டம் அமெரிக்காவின மாஜி குடியாசு ஜனாதிபதியான வில்லியம் ஹவார்ட் டாப்ட் 30 வருஷங்களுக்குமுன் சமாதானத்தை நிலைநாட்ட நிறுவிய சங்கத்துக்கு ஒப்பிடக்கூடியது. ஆகையால் அமெரிக்கர்களின் பழைய நோக்கங்களே இப்பொழுது மறுபடியும் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஜெர்மன் பிடிப்பிலிருந்து ஐரோப்பா விடுதலைபெற்றபின் ஜனநாயகம் அநேக காரியங்களை சாதிக்குமென்றும் விடுதலைபெற்ற நாடுகள் ராஜிய ஜனநாயகத்துக்கு முற்போக்கான ஜனசமூக, பொருளாதார ஜனநாயகமுறையை அமைத்துக்கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுமென்றும் மிஸ்ட்டர் கார்டல் ஹல் நம்புவதாகவும் சொன்னார். சமாதானத்தை நிறுவுவதும் நிலைநாட்டுவதும் அவசியமென்று மிஸ்ட்டர் கார்டல் ஹல் நம்புகிறாரென்பதற்கு இது அடையாளமென்று நான் சொல்லுகிறேன்.

அக்கிரமப் போர் தொடுக்கிறவர்களைத் தடுக்கவும் அவர்களை சிக்ஷிக்கவும் போதுமான ஏற்பாடுகளைச் செய்தால்மட்டும் சாச்வதமாக சமாதானத்தை நிலைநாட்டிவிடலாமென்று நான் நம்பவில்லையென்று வெகுநாட்களுக்குமுன் சொல்லிவிட்டேன். சர்வதேச சங்கம் நிலைகுலைந்ததற்கு அது சமாதான ஏற்பாட்டைச் செய்யாமல் யுத்தத்தைத்தடுக்கும் ஏற்பாட்டை தீவிரமாகக் கையாண்டதும், சமாதானம்தான் முற்போக்கான சீர்திருத்தம் செய்யக்கூடிய முகான்மையான நடவடிக்கையென்றும் அதுதான் யுத்தமென்பது இழிவான,

காட்டுமிராண்டிகளின் நடவடிக்கையென்று அறிவூட்டக்கூடியதென்றும் அச்சங்கம் அறியாததுதான் காரணங்களாகும். இந்த யுத்தம் உண்மையில் யுத்தமல்லவென்றும் பேராசைகொண்டு ரெத்தவெறிபிடித்த கொள்ளைக்கூட்டத்தாரை அழிக்கும் பொதுப்படையான கொள்கையை நிலைநாட்ட நடைபெறுகிறதென்றும் நான் அபிப்பிராயப்படுகிறேன். அவர்களை அடியோடு அழித்துவிட்டு சமாதான முறைகளை நிறுவ முற்படவேண்டுமென்பது தான் நேசதேசத்தாரின் உண்மையான நடவடிக்கையாகும். இந்த அபிப்பிராயத்தை நாம் மனதில் ஊறுத்திக்கொண்டால் தற்போதிய யுத்தத்தின் எல்லா அமசங்களும் ஒரு பூர்ணமான மகத்தான பிரயத்தனத்தில் அவரவர்களுக்கு உரித்ததான ஸ்தானத்தை வஹித்ததாக மதிக்கப்படும்.

## பிரிடனில் மிஸ்ட்டர் ஸ்டெட்டினியஸின் சம்பாஷணைகள்.

(டைம்ஸ் பத்திரிகை).

பிரிடிஷ் அதிகாரிகளுடன் மிஸ்ட்டர் ஸ்டெட்டினியஸ் செய்துவரும் விவாதங்களைப் பற்றி சமீப, எதிர்காலத்திய பிரச்னைகளெல்லாம் சர்ச்சை செய்யப்படுகின்றனவென்று டைம்ஸ் பத்திரிகையின் ராஜதந்திர நிருபர் எழுதுகிறார். சமீபகாலத்தில் அவசரமான பிரச்னைகளில் பிரான்ஸ், இதாலி; ருமேனியாவின் ராஜீய அபிவிருத்தியும் ஒன்ருகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. பலாத்காரமாக துண்டிக்கப்படுவதற்கு முன ஜெர்மனியிடமிருந்து விலகிக்கொள்ள இப்பொழுது ருமேனியாவுக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கிறது. சமீபகாலத்திய பிரச்னைகளில் யுத்தத்திலீடுபடாமல் ஜெர்மனிக்கு யுத்த தளவாடங்களை அனுப்பிவரும் நாடுகளும் சேர்க்கப்படவேண்டும். முக்கியமானவைகள் ஸ்பெயினும், துருக்கியும். அவர்களின் ஏற்றுமதி நடவடிக்கையைப்பற்றி நேசதேசத்தார்கள் கடுமையாக ஆக்ஷேபித்திருக்கிறார்கள். அவைகள் ஜெர்மனியின் வீழ்ச்சியைத் தடுத்துவிட முடியாது. யுத்தத்துக்குப்பின் தங்களுடைய அக்கரைகளையும் சீர்படுத்திக்கொள்ள முடியாது.

அமெரிக்காவும் பிரிடனும் பரிபூர்ணமான நல்லுணர்ச்சியுடன் விரிவான திட்டங்களை நிறுவ முன்வரக்கூடுமென்பதை தற்போதிய விவாதங்கள் உறுதிப்படுத்துகின்றன. ஐரோப்பாவில் நீதி முறையை ஸ்தாபிப்பதற்கும் பத்திரத்துக்காக சர்வதேச ஸ்தாபனத்தை அமைப்பதற்கும் அவசியமான நெடும்போக்கான திட்டங்களைப்பற்றி யோசிக்கும்பொழுது விவாதங்கள் தாத்காலிகமாகவும் விரிவான சர்ச்சையுடன் கூடியதாகவுமிருக்கும். இந்த விஷயங்களில் முடிவான திட்டம் போடுவது எல்லாதேசத்தார்களும் ஒன்றுபட்டு ஆலோசிக்கப்படவேண்டும். இப்பொழுது நடைபெறும் விவாதங்கள் மூன்று வல்லரசுகளும் மாஸ்கோவில் வெளியிட்ட அறிக்கைகளைப் புறக்கணிக்கக்கூடியவையல்ல. ஒன்றுபட்ட போர் பிராந்தியங்களில் பிரிடனும் அமெரிக்காவும் ஒன்றுபட்டு மேற்கொள்ளவேண்டிய அலுவல்களில் இருதரப்பாரும் நெருங்கி ஒத்துழைக்கவேண்டும். பொதுவாக இப்பொழுது நடைபெறும் சம்பாஷணைகளில் அபிப்பிராயபேதங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. இவைகள்மூலம் கபடமாக உள்ள விஷயங்கள் தெளிவுபடுத்தப்படுகின்றன. எல்லோரும் அங்கீகரிக்கக்கூடிய சிபார்சுகளில் ஒவ்வொரு அரசாங்கமும் எவ்வளவு சலுகை காட்டக்கூடுமென்பதும் தெளிவுபடுத்தப்படுகிறது. முடிவான திட்டங்களை நிறுவக்கூடாததற்கு யுத்தம் ஜயித்தபாடில்லை என்பதும் மற்ருெரு காரணமாகும். யுத்தத்தில் வெற்றி பெருமுன் ஐரோப்பாவில் என்ன மாறுதல்கள் ஏற்படுமென்பதை ஒருவரும் சொல்லமுடியாது.

இப்பொழுது நடைபெறும் சம்பாஷணைகள் ஒப்பற்ற மகத்தான ராணுவப்படையெடுப்பு ஏற்படும் தருவாயில் நடைபெறுகின்றன. இந்த மகத்தான கஷ்ட சாத்தியமான தாக்குதலில் வெற்றி நிச்சயம் என்று இரு நிர்வாகங்களும் பூர்ணமான நம்பிக்கை கொண்டிருப்பதற்கு அடையாளமாக ஐரோப்பாவின் புனருத்தாரன திட்டத்தில் ஒருவர் மற்ருெருவருடைய மனப்பான்மையை அறிய முன் வந்துள்ளார்கள். இந்த சம்பாஷணைகள் ஆராய்ச்சி, ஒத்றுப்பார்த்தல் செய்யும் நடவடிக்கைகளே ஒழிய முடிவான திட்டங்களைப்போடும் பேச்சுகளல்ல.

## சஞ்சல புத்தியுள்ள நாடுகள்.

### பல்கேரியாவில் நாஸிகளை ஆயுதம்பூண்ட படைகள் எதிர்த்து நிற்கின்றன.

### பால்கன் நாடுகளும் பின்னிஷ் சமாதானப் பேச்சுக்களும்.

(வியோனுர்ட் கிர்ஷென்.)

பின்லாந்து சமாதானம் செய்துகொள்ளப்போகிறதென்று கடைசியாக வந்த தகவல்களில் துருக்கி மிகுந்த அக்கரைகாட்டி வருகிறது. இந்த வதந்திகளைப்பற்றி ருமேனிய, ஹங்கேரியப் பத்திரிகைகள் தாராளமாக விவாதித்து வருகின்றன. ருமேனியாவும் ஹங்கேரியும் இதில் அக்கரை கொண்டிருக்கின்றன நாஸிகளை கைவிட்டுச் செல்லுவதற்கு இந்த வதந்திகள் அவர்களுக்கு வழியைக் காண்பிக்கக்கூடும். ஜெர்மனியின் ஆதீனத்துக்குட்பட்ட நாடுகளில் மிகுதியான குழப்பம் ஏற்பட்டுவிட்டது. ஜனங்கள் விசித்திரமான முறையில் நடந்து கொள்ளுகிறார்கள். அக்கிரம ஆக்கிரமணத்தைத் தவிர்க்கத்தான் அவர்கள் யுத்தத்தில் ஈடுபட்டார்களென்று வெளிப்படுத்திவருகிறார்கள். இன்று அக்கிரமப் போர் துவக்கியவர்கள் தற்காப்பற்றவர்களாக ஆகிவிட்டார்கள். இது விசித்திரமாகத் தோன்றக்கூடும். ஆகிலும் இது உண்மையானது. ஹங்கேரியாவைப்போல் மற்றெந்த நாடும் ருஷ்யப் போர்முனையில் கலந்துகொள்ளவில்லையென்று பலமாகச் சொல்லிவரவில்லை. ஹங்கேரியைப் புண்படுத்தும்படியாக ருஷ்யா ஒன்றும் செய்துவிடவில்லை. ருஷ்யாவுக்கும், ஹங்கேரிக்கும் பொதுவான எல்லைச் சரகம் கிடையாது. இருவருக்கும் மனஸ்தாபங்களும் கிடையாது.



பின்லாந்தும், ருமேனியாவும் தங்களுக்கும் ருஷ்யாவுக்கும் மனத்தாங்கல் இருக்கிறதென்று நினைத்துப் போருக்குச் சென்றன. இந்தத் துணிவுகரமான நடவடிக்கையில் அவர்களுக்கு வெற்றியை உத்தரவாதம் செய்ய ஜெர்மனி சக்தியுள்ளதென்று அவைகள் எண்ணியிருந்தன. இப்பொழுது ஏராளமான கஷ்ட நஷ்டங்களை அனுபவித்தபின் அவைகள் செய்த தவறுதலை உணர்ந்து இப்பொழுது யுத்தத்தைவிட்டு வெளியேற அவைகள் முயர்சி செய்து வருகின்றன. பின்லாந்து அச்சுநாட்டாரின் கட்சியிலிருந்து விலகிக் கொண்டால் அதன் பயன்கள் கவனர்கமுள்ளவை. இதாலிய நடவடிக்கைக்குப்பின் ஜெர்மனி எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் தங்கள் நாடுகளில் ஏற்படாதென்று ஜெர்மனிக்கு ஆதீனமான நாடுகள் நம்பியிருக்கின்றன. ஆகையால் பின்லாந்து நழுவி விடுவதிலிருந்து என்ன விளைவுகள் ஏற்படுமென்பதை அவர்கள் ஆவலுடன் கவனித்து வருகிறார்கள். இதாலி கட்சிமாறியபொழுது அதற்கு ஏற்பட்ட சிக்ஷை பின்லாந்துக்கும் கிடைக்குமாவென்று அவர்கள் கவனித்து வருகிறார்கள்.

### "தாராளமான" சமாதான ஷரத்துக்கள்.

யுத்தத்திலிருந்து வெளியேற பின்லாந்து செய்துவரும் சமீப காலத்திய முயற்சிகளை உற்று நோக்கவரும் துருக்கிய ராஜ தந்திர வட்டாரங்கள் பின்லாந்துக்கு ருஷ்யா இப்பேற்பட்ட தாராளமான ஷரத்துக்களைக் கோரியிருக்கிறதென்றும், பின்லாந்தின் தற்போதிய நிலைமையில் அது அவைகளை நிராகரிக்கக்கூடாதென்றும் எக்காலத்திலும் எந்த நாட்டிற்கும் ருஷ்யா இப்பேற்பட்ட தாராளமான ஷரத்துகளை அனுப்பவில்லையென்றும் நம்புகின்றன. அங்காராவில் சமீபத்தில் கிடைத்திருக்கும் இந்தத் தகவல் பின்லாந்தின் நடவடிக்கைகளை ஜாக்ரதையுடன் கவனித்து வரும் மத்திய ஐரோப்பாவிலிருந்து வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்த யுத்தத்தில் பல்கேரியா என்ற மற்ருெரு நாடும் கலந்து கொண்டிருக்கிறது. ஆகிலும் அது மும்முரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. சென்ற சில நாட்களாக பல்கேரியாவுக்கு ருஷ்யா கடுமையான எச்சரிக்கைகளை விடுத்திருக்கிறது. இந்த எச்சரிக்கைகள் ருஷ்ய ஒலிபரப்பு நிலயங்கள் மூலம் பிரசுரிக்கப்படுகின்றன. முக்கியமாக ரேடியோ டிப்ளிஸ் பல்கேரியா பேரில் பூர்ணகவனம் செலுத்தி வருகிறது. ருஷ்யா பல்கேரியாவுடன் போர் தொடுக்கவில்லை. ருஷ்யாவின் நட்பை இழந்து விடுவதன் மூலம் ஜனங்களின் அனுதரவையும் பகிரங்கமான புரட்சியையும் விலைக்கு வாங்கும் அபாயத்துக்குள்ளாக பல்கேரியாவின் எந்த நிர்வாகமும் தயாராகவில்லாததுதான் இதற்குக் காரணம்.

பல்கேரியாவில் அதிகாரம் வகிக்கும் உத்தியோகஸ்தர்கள் ஆயாசமடைந்துவிட்டார்களென்ற ஹேஷ்யங்கள் புலப்படுகின்றன. நம்பத்தக்க இடங்களிலிருந்து இஸ்தான்பூலுக்கு எட்டும் தகவல்களில் சமீபகாலத்தில் உயர்தர பல்கேரிய ஆபீஸர்கள் குயிஸ்லிங் மனப்பான்மையுள்ள செர்பிய ஆபீஸர்களைச் சந்தித்துப் பேசி பல்கேரியாவின் நிர்வாகத்தை எதிர்த்துப் புரட்சி ஏற்பட்டால், கொரில்லாப் படைகளை எதிர்த்துப் போராடும் படைகளுடன் சேர்ந்து பல்கேரிய ஆபீஸர்களும் மற்ற சிப்பந்திகளும் போர்புரியக் கூடுமாவென்று அறிய முயற்சி செய்து வருகிறார்களென்று சொல்லப்படுகிறது.

### பல்கேரியப்படைகள் நழுவுகின்றன.

ஜெர்மனியுடன் உறவு கொள்ளவேண்டுமென்று நினைத்திருந்த பல்கேரிய சேனையிலுள்ள உயர்தர அதிகாரிகள் பல்கேரியாவில் புரட்சி ஏற்படுமென்றும் அதன் மூலம் பல்கேரிய ஜெர்மன் நட்புக்கு அவர்கள்தான் காரணமென்று அவர்கள் பேரில் குற்றம் சாட்டப்படுமென்றும் அவர்கள் பீதியடைந்து விட்டார்களென்று தோன்றுகிறது இந்தத் தகவல்கள் பல்கேரியாவிலுள்ள உயர்தர அதிகார வட்டாரத்திலிருந்து வெளிவருவதால் இது பல்கேரியாவின் மனப்பான்மையை வெளிப்படுத்துவதுடன் பல்கேரியாவில் சமீபகாலத்தில் ஒரு சம்பவம் ஏற்படுமென்றும் கோடி காட்டுகின்றன. பல்கேரிய சேனையிலுள்ள கீழ்தர

ஆபீஸர்களும், ஸோல்ஜர்களும் பிரதேசங்களிலுள்ளவர்களிடம் அனுதாபம் காட்டி வருகிறார்கள். ஸெர்பியாவிலும் யூகோஸ்லாவியாவிடமிருந்து பல்கேரியா கைப்பற்றிக் கொண்ட நாடுகளிலும் அநேக பல்கேரிய டிவிஷன் துருப்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த நாடுகளில் பல்கேரியப் படைகள் எதிர்ப்பை சமாளிக்க வேண்டியிருக்கிறது. அடிக்கடி அவர்கள் கொரில்லாப் படைகளுடன் சண்டை போடுகிறார்கள். பல்கேரிய சேனையிலுள்ள கீழ்தர உத்தியோகஸ்தர்களும் துருப்புகளும் சேனையை விட்டு பிரிந்து சென்று நிர்வாகத்தை எதிர்த்து போராடும் ஜெர்மன் துருப்புகளை எதிர்த்துப் போராடும் கொரில்லாப் படைகளுடன் சேர்ந்து விட்டார்கள் என்று தெரியவருகிறது. ஒரு ஜெர்மன் படைப்பகுதியை அழித்த போருக்குப்பின் அவர்கள் பீரங்கிகள், கைத்துப்பாக்கிகள், வெடி மருந்துகள் போன்ற அநேக லாபங்களை அடைந்தார்கள். இம்மாதிரியான சச்சரவுகளிலும் தாக்குதல்களிலும் தான் எதிர்ப்பைத் தொடர்ச்சியாக நடத்தப் போதுமான ஸப்ளைகளை அவர்கள் சம்பாதித்துக் கொள்ளுகிறார்கள். மேற்சொல்லியவையெல்லாம் பல்கேரியாவுக்கு வெளியே நடைபெறும் நடவடிக்கைகள். பல்கேரியாவிலேயே அநேக நிகழ்ச்சிகள் சம்பவிக்கின்றன.

### ஆயுதம்பூண்ட படைகளின் எதிர்ப்பு.

பல்கேரியாவில் பொதுஜன சேவகர்களும், தொழிற்சாலை ரயில்வே வேலைக்காரர்களும், கடை வியாபாரிகளும் ஏராளமாக அதிக வேலை செய்ய மறுத்துவிட்டார்கள். ராணுவ சட்டப்படி அவர்கள் கட்சியைவிட்டு ஓடியவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு அவர்கள் விசாரணை செய்யப்படுவார்களென்று அரசாங்கத்தார் அவர்களை பயமுறுத்தி வருகிறார்கள். இவ்விதமாக ஜனசமூகத்தை எதிர்த்து நிற்கும் கட்சியைச் சேர்ந்தவர்களென்று குற்றம் சாட்டப்பட்ட அநேகர்கள் தண்டனைக்குட்பட்டிருக்கிறார்கள். புதிதாகப் போலீஸ் படை அமைக்கப்பட்ட பின்னும் நம்பிக்கை வைக்கக்கூடாத கவர்னர்களை நீக்கிப் புதிய நிர்வாகிகளை அமைத்த பின்னும் புளாடிவில், கார்லோவா, கர்சான்லிக், எலினு என்ற மாகாணங்களில் கவசம் பூண்ட கோஷ்டிகளின் எதிர்ப்பு நின்றுவிடவில்லை.

ஜெர்மானியர்களையும் ஜெர்மனியை ஆதரித்து நிற்கிறவர்களையும் எதிர்த்து நிற்கக்கூடாதென்று பல்கேரியர்களுக்கு எச்சரிக்கை செய்யும் எண்ணத்துடன் டார் கோஷ்டியில் பொதுஜன மத்தியில் இருபது பொது உடைமைக் கட்சிக்காரர்கள் சமீபகாலத்தில் தூக்கிலிடப்பட்டார்கள். இந்த மாகாணங்களிலுள்ள ஜனங்கள் கொரில்லாப் படைகளுக்கு வாசஸ்தலத்தையும் உணவுப்பொருள்களையும் கொடுத்து உதவி வருகிறார்கள். ஆனால் ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் நாடுகளில் எதிர்ப்பு பலமாகி விட்டது. வளர்ச்சி பெற்றும் வருகிறது. ஜனவரி மாதத்தில் குறைந்த பக்ஷம் ஒரு உயர்தர அதிகாரியும் மற்ற 24 ஜெர்மன் போலீஸ் அதிகாரிகளும் கொல்லப்பட்டனர். அவர்கள் கொரில்லாப் படைகளுடன் நடத்திய போரில் உயிர் துறந்தார்கள். இருப்புப் பாதைகள் இடைவிடாது தாக்கப்படுகின்றன. ஜனவரி மாதக் கடைசியில் செவ்கெலிக்கும், ஸ்காபின்ஜிக்கும் மத்தியிலுள்ள இருப்புப்பாதை பழுதாக்கப்பட்டதின் மூலம் போக்குவரத்து தடைபட்டது.

ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் நாடுகளில் நடைபெற்று வரும் நிகழ்ச்சிகளைப்பற்றி சுருக்கமாகச் சொல்லியிருக்கிறோம்.

வசந்தகாலம் வந்துவிட்டது. கெயிரோ மகாநாடும் டெஹ்ரான் சம்பாஷணைகளும் முடிந்து மூன்று மாதங்களாகிவிட்டன. இந்த வருஷத்தில் அச்சு நாடுகளுக்கு அந்திய காலம் கிட்டிவிடும். அவைகளைப் பலமாகத் தாக்கும் காலம் நெருங்கிவிட்டது. மகத்தான படையெடுப்பை ஜெர்மானியர்கள் கவலையுடன் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தாக்குதலை சமாளிக்க வேண்டிய சமயத்தில் மேலே விவரித்த தொந்தரவுகளுக்கும் அவர்கள் ஈடுகொடுக்கவேண்டும்.

---

## பால்கன் நாடுகளின் ராஜீய வியவகாரங்களில் துருக்கி சேர்க்கப்படவில்லை.

(லியோனார்ட் கிர்ஷென்).

என்னுடைய முன் அறிக்கையில் ஹங்கேரிய பிரச்னையையும், துருக்கியில் ஏற்படும் அதன் எதிரொலிகளையும்பற்றி நான் சர்ச்சை செய்திருக்கிறேன். இப்பொழுது ருமேனியா, பல்கேரியா ஆகிய இரண்டு பால்கன் நாடுகளைப்பற்றி ஆராய்ச்சி செய்வோம்.

இந்தக் கட்டுரையை எழுதும்பொழுதும் ஒன்றும் தெளிவாகயிருக்கவில்லை. பல்கேரியாவையும், ருமேனியாவையும் ஜெர்மனி ஆக்கிரமித்துவிட்டதா, இல்லையா என்று விளங்கவில்லை. ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டன என்று சொல்லும் தகவல் உண்மையாகவிருந்தாலும்



இல்லாவிட்டாலும் ஒன்று ஸ்பஷ்டமாகப் புலப்படுகிறது. ஜெர்மனியின் நேசநாடாகப் போர்புரிந்துவரும் ருமேனியாவில் ஜெர்மன் படைகள் ஏற்கனவே வந்துவிட்டன. பல்கேரியாவிலும் ஜெர்மன் துருப்புகளிருக்கின்றன. இந்த இரண்டு நாடுகளிலும் ஜெர்மனி செய்யக்கூடியதெல்லாம் உபரிப் படைகளைக் கொண்டுவந்து, அந்நாடுகளில் ஜெர்மனிக்குள்ள பொருளாதார, ராணுவ, ராஜீயப் பிடிப்பை மேலும் பலப்படுத்திக்கொள்ளுவதுதான். அதாவது ஜெர்மன் ரகசியப் போலீஸாரின் அமுல் அதிகரித்துவிடும்.

ருமேனியாவும், பல்கேரியாவும் யுத்தத்திலிருந்து வெளியேற வெகு காலமாகப் பிரயத்தனம் செய்துவருகின்றன. செவாப், ஸ்டிர்பெ இளவரசர் ஆகியவர்கள் சமாதானம் பேச முயன்றார்கள். ஆகிலும் இவைகளெல்லாம் பிரயோஜனமற்றவை. இது வரையில் ஜெர்மானியர்களை எதிர்த்து நிற்கும் தருணம் வந்துவிடவில்லை என்று இரு நாட்டு மக்களும் சொல்லி வருகிறார்கள். இப்பொழுது ருஷ்யர்கள் உட்புகுந்துவிட்டதால் அத்தருணம் வந்துவிட்டது. அவர்கள் ஏதாவது நடவடிக்கைகளை மேற்கொள்ளுவார்களா? இந்தப் பிரச்னைதான் எல்லோருடைய மனதிலும் தோன்றியிருக்கிறது. அவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசித்திருந்தால் அவர்கள் இப்பொழுது கலகம் செய்யவேண்டும். இல்லாவிட்டால் அது காலம் கடந்ததாக ஆகிவிடும். ருஷ்யர்கள் வந்துவிடுமுன் அந்நாடுகளை ஜெர்மானியர்கள் பூராவாக ஆக்கிரமித்துவிடுவார்கள். அப்பொழுது ஒருவரும் வாய்திறக்க முடியாது.

### துருக்கியின் அயல் நாட்டுக் கொள்கை.

இவ்வளவு சிக்கலான சந்தர்ப்பத்தில் துருக்கியின் நிலைமை என்னவென்று பார்ப்போம். நான் துருக்கியில் மூன்று வருடங்கள் வசித்தேன். துருக்கியர்கள் பால்கன் நாடுகளுடன் தொடர்பை நிலைநாட்டிக்கொள்ள முயன்றுவந்திருக்கிறார்கள். துருக்கியர்கள் வெறுப்புடன் நோக்கும் பல்கேரியாவுடனும் அவர்கள் நட்புக்கொள்ள ஆவலுள்ளவர்கள். பால்கன் நாடுகளில் ஒற்றுமையதிகம் என்ற அபிப்பிராயத்துடன் துருக்கியின் அயல்நாட்டு நடவடிக்கைகள் நிறுவப்படுகின்றன. இறுதியில் சமாதானம் செய்ய மத்தியஸ்தம் சென்ற துருக்கி முற்றட்டு, பிரிட்டனுக்கு நண்பனாகயிருந்து யுத்தத்துக்குப்பின் பால்கன் நாடுகளின் ஒற்றுமையை நிலைநாட்ட அது முயன்றுவருகிறது.

பால்கன் நாடுகளின் சமஷ்டியை ருஷ்யர்கள் ஆமோதிக்கவில்லையென்று நமக்குத் தெரியும். ருஷ்யாவின் எல்லைப் புரகத்திலுள்ள ரக்ஷணை நாடுகளாகயிருக்கும் பால்கன் நாடுகளிடமிருந்து ருஷ்யர்கள் விசேஷமான அனுபவம் பெற்றிருக்கிறார்கள். ஆகிலும் பால்கன் நாடுகளுக்கு உதவிசெய்தால் அவைகள் ஹிட்லரிடமிருந்து விலகிக்கொள்ளுமென்ற எண்ணத்துடன் ருஷ்யா தன்னுடைய மனப்பான்மையைத் தளர்ச்சி செய்திருக்கிறது.

சமீபகாலத்தில் ஹிட்லர் பால்கன் நாடுகளுக்குள் புகுந்துவிட்டபின் துருக்கி பூராவாகத் துண்டிக்கப்பட்டுவிட்டது. அது இனிமேல் ஒன்றும் செய்யமுடியாது. அற்பமான விஷயத்தை வெளியிடுவோமானால் ஸோபியா, புகாரெஸ்டு, புடாபெஸ்டிலுள்ள அனடோலியா பத்திரிகை நிருபர்கள் இனிமேல் செய்திகளை அனுப்பமுடியாது. ஸோபியாவிலும், பெர்லினிலுமுள்ள பத்திரிகை நிருபர்கள் திரும்பி அழைக்கப்பட்டுவிட்டார்கள். புடாபெஸ்டிலும், புகாரெஸ்டிலுமுள்ள நிருபர்களையும் கூடிய சீக்கிரம் திருப்பி அழைத்துவிடுவார்களென்று தோன்றுகிறது.

### ஜெர்மனியின் தணிக்கைக்குட்படவில்லை.

ஹங்கேரியை ஜெர்மனி ஆக்கிரமித்த தகவலை முதன் முதலாக வெளியிட்டவரும், ஜெர்மனியின் கபடமான வேலையைக் கவிழ்த்தவரும், புகாரெஸ்டிலுள்ள அனடோலியா பத்திரிகை நிருபரான இஹ்லான் டீஜெமால் காராபுக்காக் என்பவர். ஜெர்மானியரின் தணிக்கைக்குட்படாமல் மார்ச்சு மாதம் 19-ம் தேதி சாயங்காலமே நிருபர் தகவலை வெளிப்படுத்திவிட்டார். மார்ச்சு 20-ம் தேதியன்று துருக்கியிலுள்ள அயல் நாட்டு நிருபர்கள் இந்தச் செய்தியைப் பகிரங்கப்படுத்தினார்கள். அன்று சாயங்காலமே தகவல் உலகம் பூராவிலும் பரவிவிட்டது.

துருக்கியிலுள்ளவர்கள் நடுக்கம் கொண்டார்கள். இதைப்பற்றி நான் பத்திரிகை நிருபர் என்ற ஹோதாவில் ஒரு வியாக்கியானத்தையும் சொல்லப்போவதில்லை. ஆகிலும் பொதுஜன அபிப்பிராயத்தை வெளியிடத்தான்வேண்டும். ஹிட்லர் போன்ற ஒருவன் தலைமை வகிக்கும் பெரிய வல்லரசுக்கும், சிறிய வல்லரசுக்குமிடையே ஏற்படும் நட்பை ஒப்பிட்டுப் பார்க்கத்

துருக்கிக்கு அரிய சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. துருக்கியிலுள்ள விமான தளங்களை பிரிடனுக்குக் கொடுக்கவேண்டுமென்று துருக்கியைக் கட்டாயப்படுத்தும்படி நடவடிக்கைகளை பிரிடன் மேற்கொள்ளவில்லை.

இதைப்பற்றி துருக்கிய நிர்வாகத்தின் அபிப்பிராயம் யாதென்று காட்டக்கூடிய மற்றொரு விஷயத்தைக் கூறுவோம். மாஜி பிரதம மந்திரியான கல்லே புடாபெஸ்ட்டிலுள்ள துருக்கிய அயல் நாட்டுத் தூதரின் காரியாலயத்தில் சரண்புகுந்து ரக்ஷணையளிக்கப்பட்டார். கல்லே துருக்கிக்குச் செல்லுவதற்குப் போக்குவரத்து வசதிகளையளிக்கவேண்டுமென்று துருக்கி நிர்வாகம் ஜெர்மன் அதிகாரிகளிடம் மன்றாடிவருகிறது.

---

# இதாலியத்தொழிலாளர்கள் பலவந்தமாகக் கொண்டுபோகப்படுகிறார்கள்.

(டெயிலி டெலிகிராப்பின் சூரிக் நிருபர் எழுதுகிறார்).

இதுவரையில் ஜெர்மனியின் கட்டாய ஆள் சேமிப்புக்குட்படாத பதினாயிரக் கணக்கான இதாலியத் தொழிலாளர்கள் இப்பொழுது பலாத்காரமாக ஜெர்மனிக்குக் கொண்டுபோகப் படுகிறார்கள்.

இவ்விதமாக அயல்நாடுகளுக்கு அப்புறப்படுத்தப்படுகிறவர்கள் அநேக கஷ்டங்களுக்குள்ளாக்கப்படுகிறார்கள். ஜெர்மன் ராணுவமும் புதிய பாஸிஸ்ட்டு பத்திரிகைகாரர்களும் யந்திர வேலை நிபுணர்களையும் மற்ற தொழிலாளர்களையும், அவர்கள் வீட்டிலும் சிற்றுண்டி, சாலைகளிலும் பொதுஜன சாலைகளிலும் வளைத்துக்கொள்ளுவார்கள். இந்த நடவடிக்கைகள் விசேஷமாக இரவில்தான் நடைபெறும். ஆகிலும் ஒரு நாளில் அரைக் கணமேனும் தொழிலாளர்கள் பத்திரமாகயிருக்கமுடியாது.

பலாத்காரமாகச் சேர்க்கப்பட்டவர்கள் காவல் முகாம்களில் கூட்டம் கூட்டமாக அடைக்கப்படுகிறார்கள். பிறகு ஜெர்மன் தொழிற்சாலை ஸ்தானங்களுக்குச் செல்லும் ரயில்வண்டித் தொடர்களில் அவர்கள் அடைக்கப்படுகிறார்கள். ரயில்வண்டித்தொடர்களில் அடைக்கப்படுமுன் அவர்கள் பலமான பந்தோபஸ்துடன் நடத்திச்செல்லப்படுகிறார்கள், அல்லது மோட்டார் லாரிகளில் கொண்டுபோகப்படுகிறார்கள். இதாலிய ரயில்வே சிப்பந்திகளின் உதவியுடனும் ஆமோதனத்தின் பேரிலும் சிலர் வழியில் தப்பி ஓடிவிடுகிறார்கள். அவர்கள் மாக்விகளிருக்கும் பிரான்ஸுக்குச் செல்லுகிறார்கள்.

இவ்விதமான பலாத்கார சேமிப்பு ஒருபுறமிருக்க, தொழிற்சாலைகளில் வேலை செய்துவரும் தொழிலாளர்களும் அங்கிருந்து பலாத்காரமாகக் கொண்டுபோகப்படுகிறார்கள். பாஸிதத்வத்தை எதிர்க்கும் மனப்பான்மையுள்ளவர்களென்று சந்தேகப்படக்கூடியவர்கள் முதலில் வெளியே அனுப்பப்படுகிறார்கள். இந்த நடவடிக்கையின் மூலம் நாசவேலையிலிருந்து ஏற்படும் அபாயத்தைக் குறைக்கவும் பொதுவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முயற்சிகள் செய்யப்படுகின்றன.

ஜெர்மன் தொழிற்சாலைகளில் தொழிலாளர்களின் பலம் குறைந்துவிட்டதால் சில மாதங்களுக்குமுன் அவசியமென்று தோன்றாத அநேக அபாயகரமான நடவடிக்கைகளை நாஸி அதிகாரிகள் மேற்கொள்ளவேண்டியிருக்கிறது. ட்ரிபூண்-டி ஜெனிவா என்னும் பத்திரிகையில் மிலானிலிருந்து வந்த ஒரு அறிக்கையில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது. ஜெர்மனியிலுள்ள விமான உற்பத்தி தொழிற்சாலைகளில் தேவையான தொழிலாளர்களின் 70 சதவிகிதத்துக்குப் பதிலாக 10 சதவிகிதம்தான் நிலைபெற்றிருக்கிறார்கள். மேலும் எஞ்சினியர்களின் குறைவும் ஏற்பட்டிருக்கிறது.

இதாலியை ஆக்கிரமித்திருக்கும் நாஸி அதிகாரிகள் அங்குள்ள இஞ்சினியர்கள் தாங்களாகவே ரிபோர்ட்டு செய்துகொள்ளவேண்டுமென்றும் தவறினால் அவர்கள் அரெஸ்டு செய்யப்பட்டு அயல் நாட்டிற்கு அனுப்பப்படுவார்களென்றும் பிரசுரித்திருக்கிறார்கள். மார்ச்சு மாதம் 20-ம் தேதியன்று 10,000 இதாலியத் தொழிலாளர்கள் மிலானைவிட்டு ஜெர்மனிக்குச் சென்றார்கள். அதற்குப்பின் பத்து நாட்கள் கிரமித்து இன்னும் அநேகக்கூட்டங்கள் சென்றன. 5,00,000 ஜனங்களைக் கொண்டுபோவதாக ஜெர்மனி உத்தேசித்திருக்கிறது.



# பஸிபிக்போரை நீடிக்கச் செய்யும் அம்சங்கள்.

(டெயிலி டெலிகிராப்பில் N. C. பிரைட்வுட்).

வரப்போகும் ஆறு மாதங்களில் மத்திய, தென்மேற்கு பஸிபிக் பிராந்தியங்களிலிருந்து ஜப்பானியர்களைத் துரத்தியடிக்கும் வேகத்தைப் பொருத்துத்தான் தூரக்கிழக்குப் போரின் நீடிப்பு தீர்மானிக்கப்படும். எட்டு மாதங்களுக்குள்ளாகவே தரையிலிருக்கும் விமான தளங்களிலிருந்து வெடி விமானங்கள் ஜப்பானையே தாக்கக்கூடும். சில உற்று நோக்காளர்கள் இதன் காலவரம்பை 18 மாதங்கள் என்று சொல்லுகிறார்கள்.

நேசதேசத்தார்கள் சைனாவின் கடற்கரைக்குச் செல்ல முயலுகிறார்கள். அங்கிருந்தும் பிலிப்பைன்ஸ் தீவுகளிலிருந்தும் ஏற்படக்கூடிய ஒன்றுபட்ட தாக்குதல் மூலம் தான் ஜப்பானிய ராணுவ சக்தியை அழிக்கமுடியும்.

நேசதேசத்தார்கள் முக்கியமான தீவுகளைக் கைப்பற்றிக்கொண்டே முன்னேறுவார்கள். அமைக்கப்பட்ட விமானதளங்களும் பிரதேசங்களும் புதிதாக விமானதளங்களைப்பிடிக்க பாய்ச்சல் ஸ்தலங்களாக உபயோகிக்கப்படும்.

வடக்கு நியூகினியாவிலிருந்து கிளம்பி ஆசியா கண்டத்துக்கு மத்தியிலுள்ள தீவுகளைப் படிகளாக உபயோகித்துச் செல்லவேண்டும். மத்திய பஸிபிக்கில் துருப்புகளைக்கொண்டு போவது மிகவும் அபாயம் பொருந்திய காரியம். தீவுக்கூட்டங்களுக்கிடையே விசாலமான கடல்களிருக்கின்றன. ஆகிலும் ஒன்றுபட்ட நேசதேச நடவடிக்கைகளின் மூலம் டிரக்குத் தீவிலும் பாலாத்தீவுகளிலும் நமக்கு விசேஷ லாபங்கள் கிடைத்திருக்கின்றன. அதே நடவடிக்கைகள் மூலம் நாம் சைனாவின் கடற்கரையை அடைந்துவிடலாம்.

ராணுவ அதிகாரிகள் ஒன்றுபட்ட யுத்த முயற்சியைப் பரீஷ்காரமாக அமைத்திருக்கிறார்களென்பது தெளிவானது. இனிமேல் தெற்கு, தென்மேற்கு, மத்திய பஸிபிக் என்ற தனிப்பட்ட மூன்று போர்முனைகள் கிடையாது. பஸிபிக் கடல் போர் ஒரே ஒரு போர்முனை. அதில் துருப்புகள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் சலனம் செய்யும்.

நியூகினியாவைத் தாண்டி மாக் ஆர்தர் முன்னேறிவிட்டால் மத்திய பஸிபிக்கிலுள்ள ஜப்பானியத் தீவுகளின் தற்காப்பை அவன் அழித்துவிடுவான். அவனுக்கு உதவிசெய்ய மத்திய பஸிபிக்கில் அமெரிக்க கடற்படை தாக்குதல செய்யக்கூடும். இந்துமஹா சமுத்திரத்தில் சக்தி வாய்ந்த பிரிடிஷ் கடற்படை நடமாடுவதினால் எதிரியின் கடற்படை விமானப்படையின் அமைப்புகள் சீர்கெட்டு விட்டன. பர்மாவிலுள்ள ஜப்பானியர்களை நேசதேசத்தார்கள் பலமாகத் தாக்கினால் அமெரிக்க கடற்படைக்கும் ஜெனரல் மாக்ஆர்தருக்கும் உதவி ஏற்படும். இப்பொழுது மௌண்ட் பேட்டனின் படைகளை ஜப்பானியர்கள் தாக்கி வந்தபோதிலும் தென்கிழக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் ஏற்படக்கூடிய தாக்குதலை சமாளிக்க விமானப்படையையும் தரைப்படையையும் ஜப்பான் அனுபபவேண்டும். இப்பேர்ப்பட்ட மகத்தான அபாயங்களை அலக்ஷியம் செய்வதென்பது யுத்த முறைகளை எதிர்த்து நின்றதுபோலாகும்.

வருங்காலத்தில் நேசதேச விமானப்படை முக்கியமான நடவடிக்கையை மேற்கொள்ளும். அவைகள் ஜப்பானின் முதுகெலும்மை முறித்துவிடும். நமது முன்னணி தளங்களுக்குப் பின் ஜப்பானிய ஆக்கிரமிப்புத் தீவுகளும் படைகளுமிருக்கின்றன. நாம் ஆசியா கடற்கரையை அடைந்தவுடன் இவைகள் அதிகரித்துவிடும். எதிரி வசமுள்ள இந்தத் தீவுகள் நமது முன்னேற்றத்துக்கு இடையூறாகயிருக்கமுடியாது. இதே சமயத்தில் ஜப்பானின் தாய் நாட்டைக் காப்பாற்ற மகத்தான விமானப்படைகளை ஜப்பான் வைத்திருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இதன் மூலம் அதற்கு அந்தியகாலம் ஏற்பட்டு விட்டது. பாக்கியிருக்கும் விமானப்படையை பஸிபிக் சமுத்திரத்தின் விசாலமான பரப்புகளுக்கு அனுப்பவேண்டியதாகயிருக்கிறது. ஜப்பானியர்களின் தற்காப்பு வட்டாரம் குறுகிவிட்டபோதிலும் அவைகளைக் காப்பாற்ற எதிரியிடம் போதுமான விமானப்படையில்லையென்று சம்பவங்கள் வெளிப்படுத்துகின்றன.

## பிரிடிஷ் மக்களுக்கு 106 ருஷ்ய ராணுவப் பதக்கங்கள்.

(டெயிலி மெயில்).

பிரிடிஷ் ராணுவப் படையினருக்கு சமீபகாலத்தில் ஸ்டாலின் 106 ராணுவ கௌரவ அடையாளங்களை வழங்கியதிலிருந்து பிரிடன் அளித்துவரும் உதவியையும் ருஷ்யாவில் பிரிடனின் முக்கியமான ராணுவ, கடற்படை நிபுணர்களின் அரிய சேவையையும் எவ்வளவு தூரம் ருஷ்யா பாராட்டுகிறதென்றும் வெளிப்படுகிறது.

இந்தப் பதக்கங்கள் வழங்கப்பட்ட அரிய சேவைகள் ரகசியமாக வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகிலும் ருஷ்யாவின் உயர்தர கௌரவ அடையாளங்களும் பதக்கங்களும் வழங்கப் பட்டிருக்கின்றன.

கௌரவ அடையாளம் பெற்றவர்களில் கடற்தளபதி ஸர் ராபர்ட் பர்னட்டு ஒருவர். இவர் ஆர்டிக் கடல் வழியாகச் சென்ற துணைக்காவல் கப்பல்கள் ஈடுபட்ட அநேகப் போர்களில் வெற்றி பெற்றிருக்கிறார். ஷார்ன்ஹார்ஸ்டை மூழ்கடித்த சஞ்சாரிகளுக்கு அவர் தலைமை வகித்தார். அவர் ருஷ்யாவின் உயர்தர கௌரவ அடையாளமான சுவராவ் கௌரவ அடையாளம் பெற்றார்.

ரெட் ஸ்டார் என்ற கௌரவ அடையாளம் காப்டன் கைமாண்டுக்கு வழங்கப்பட்டது. டன்கர்க்கிலிருந்து பின்வாங்கிய துருப்புகளைப் பத்திரமாகக் கொண்டுபோகும் வேலையிலீடுபட்டபின் அவர் ருஷ்யாவிலுள்ள பிரிடிஷ் கடற்படை ஸ்தாபனத்தின் தலைமையை வகித்தார்.

இந்த ஜாபிதாவில் சாமான் கப்பல்களில் சென்ற 15 ஆபீஸர்கள், மாலுமிகளின் பெயரும் சேர்க்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தைரியத்துடன் ருஷ்யாவுக்கு யுத்த தளவாடங்களைக் கொண்டு போயிருக்கிறார்கள்.

பிரிடிஷ் வீரர்களை ருஷ்யா பாராட்டுவதிலிருந்து பிரிடனுக்கும் ருஷ்யாவுக்குமுள்ள ஒன்றுபட்ட நோக்கங்களும் நடவடிக்கைகளும் வலுவடைந்துவிட்டன.

---

## கடல், ஆகாயப்போரில் புதிய ஆயுதம்.

### பாரக்கூடா விமானங்கள்.

(*A. J.* மாக்பின்னி).

ருஷ்யாவின் நிலப்போரின் வேகத்துடன் நேசதேச வெடிவிமானங்களும் சண்டை விமானங்களும் ஆயிரக்கணக்காகச் சென்று ஹிட்லரின் ஐரோப்பாவை இடைவிடாது வெடிகுண்டுகளால் தாக்கி நொருக்கி வரும்பொழுது கடற்போரிலீடுபட்டிருக்கும் விமானப்படைகளின் நடவடிக்கை நமது கவனத்தை அதிகமாகக் கவரவில்லை. இப்பொழுது பாரக்கூடா விமானங்கள் தோன்றி கடற்போரிலும் நேசதேசத்தாரின் வலிமை குன்றிவிடவில்லையென்றும் யுத்த தந்திரத்திலும் யந்திர அமைப்பிலும், உற்பத்தியிலும், ரகத்திலும் முன்னேற்றம் அடைந்திருக்கின்றனவென்றும் ஜெர்மனிக்கு ஞாபகப்படுத்துகின்றன. யூ படகுகள் தொடர்ச்சியாக அழிக்கப்படுவதிலிருந்தும் நேசதேச சாமான் கப்பல் கூட்டங்களுக்கு பலமான ரக்ஷணை ஏற்பட்டுவிட்டதிலிருந்தும் நேசதேசக் கப்பற்படைக்குக் கிடைத்துவரும் விமானப்படை ரக்ஷணை உறுதியாக விருத்தியடைந்துவருகிறதென்று ருஜுவாகிவிட்டது. புதிய விமானங்கள் கட்டப்பட்டிருக்கின்றனவென்றும கடலில ரக்ஷணைக்குச் செல்லும் சண்டை விமானங்களின் ரகமும் விமானம் தாங்கிச்செல்லும் கப்பல்களின் உற்பத்தியும் அதிகரித்துவிட்டனவென்றும் அத்தாக்ஷிகள் கிடைத்திருக்கின்றன. இவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்டும் நாம் தற்காப்பு முறையில்தான் இருக்கிறோமென்று தோன்றுகிறது. ஆகிலும் பிரிடிஷ் கடற்கரை வெடிவிமானப்படையும் விமானந்தாங்கிக் கப்பல்களிலிருந்து புறப்படும் சண்டை விமானங்களும் சாமான் கப்பல்களுக்குப் பலமான துணைக்காவல் புரிவதிலிருந்து யூ படகுகள் கப்பல்களை வேட்டையாடும் முறை தலைகீழாக மாறி யூ படகுகள் வேட்டையாடப்படுகின்றன என்ற நிலைமை தோன்றியிருக்கிறது.



### மகத்தான நடவடிக்கைகளுக்கு முஸ்தீப்புள்ளது.

பாரக்கூடா விமானங்கள் கட்டப்பட்டதிலிருந்து அநேக மாதங்களாக கடல், ஆகாயப்போரை பலமாக நடத்த ஆயத்தங்கள் செய்யப்பட்டனவென்று புலப்படுகிறது. கடல் ஆகாயப்போரில் மூல புருஷரான பிரிடனும் கடல் விமானங்களை உபயோகிப்பதில் புதிய முறைகளையும் கண்டுபிடித்திருக்கிறதென்றும் நாம் அறியவேண்டும். பின்னும் அநேக காலம் வரையில் முடமாக்கப்பட்ட 50,000 டன்கள் எடைமானமுள்ள ஜெர்மன் யுத்தக் கப்பலான டிர்பிட்ஸைத் தாக்கிய விமான நடவடிக்கை புதிய பருந்துப் பாய்ச்சல் விமானத்தின் சக்தியையும் அதன் வெற்றிகரமான நடவடிக்கையையும் வெளிப்படுத்தி விட்டது. விமானந் தாங்கிக் கப்பல்களில் நூதனமான விமானங்கள் செல்லுகின்றனவென்றும் கனமான சண்டை விமானங்களுடன் கடற்படை பயன்படும்படியாக முன்னேறித் தாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள சக்தியுள்ளதென்றும் தெளிவாக புலப்படுகிறது. டிர்பிட்ஸைத் தாக்கியதிலிருந்து கடல் விமானப்படையின் அசையும் சக்தியின் உயர்வுக்கு சந்தேகமற ருஜுக் கிடைத்து விட்டது. அடுத்தபடியாக எங்கு தாக்குதல் ஏற்படுமென்று ஜெர்மானியர்கள் ஊகித்துக்கொண்டிருக்கிறார்கள்.

பாரக்கூடா விமானம் தோன்றியதிலிருந்து கடல் விமானங்களை விருத்தி செய்யும் முறைகளையும் நாம் ஆராய்ச்சி செய்து திருப்திகரமாக பயன்படும்படி செய்துவிட்டோமென்று தோன்றுகிறது.

### சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து இருந்தன.

புதிய மீன்வெடி விமானம் பிரிடனில் ஏராளமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆரம்பகாலத்தில் அதை உற்பத்தி செய்வதில் அதிக சிரமங்கள் ஏற்பட்டன. இடாலியக் கடற்படையை எதிர்த்துப் போராடும் நடவடிக்கையில் அது கலந்து கொள்ளுமென்று எதிர்பார்க்கப்பட்டது. அப்பொழுது சில மாறுதல்கள் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டது. பாரக்கூடா விமானம் மிகவும் சிலாக்கியமாக அமைக்கப்பட்டது. போரைத் துவக்க சகல விதமான ஆயத்தங்களும் தயாராகயிருந்தபொழுது முஸோலினியின் கடற்படை சாவதானமாக நேசதேசக் கடற்படையிடம் சரண் புகுந்தது.

பாரக்கூடா விமானங்களுக்கு சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. காத்திருந்ததின் பயனாக பாரக்கூடா விமானங்கள் டிர்பிட்ஸைத் தாக்கி அதை முடமாக்கின. அடிபட்ட சண்டைக் கப்பலை விமானப்படை இம்முறையில் தாக்குமென்று ஜெர்மனி ஒருபொழுதும் நினைத்திருக்கவில்லை. நேசதேசத்தாரின் யுத்த தந்திரங்களையும் அவர்களின் புதிய உற்பத்தி முறைகளையும் கண்டு ஜெர்மானியர்கள் மறுபடியும் வியப்புறுகிறார்கள்.

---

## விமானப் படையின் கற்பனையான நிகழ்ச்சி.

### (ஏப்ரல் மாதம் 2-ம் தேதியன்று டில்லி அகில இந்திய ஒலிபரப்பில் வெளியிடப்பட்டது).

(தென் கிழக்கு ஆசியா கமாண்டின் ராணுவ முக்யஸ்தவம்).

தரைப்படைகளுடன் விமானப்படை ஒத்துழைத்தால், ஏற்படக்கூடிய விளைவுகளைத் தெளிவுபடுத்தும் விமானப்படையின் ஆதிக்கம் சென்ற மாதத்தில் நன்கு அறிவிக்கப் பட்டது. எதிரிகளின் படைவரிசைகளுக்குப் பின் 200 மைல்கள் தாண்டி, வடக்குப் பர்மாவில் ஒரு தளத்தை மேஜர் ஜெனரல் வின்கேட்டும், அவருடைய ஜனங்களும் பிடித்த தென்பது ராணுவ சரித்திரத்தில் புகழ்பெற்ற நடவடிக்கையாகும். இந்தச் சம்பவம் உலகத் தாரின் விமான யுத்ததந்திரிகளுடைய கவனத்தைக் கிழக்குப் போர்முனைக்குத் திருப்பி விட்டது.

இந்த நடவடிக்கையின் பூராவிவரங்களும் உங்களுக்கு அறிமுகமானவையே. சந்திர வெளிச்சமுள்ள ஒரு இரவில் சின் மலைகளைத் தாண்டி, கிளைடர்கள் கொண்ட ஒரு விமானப் படை சென்றது. சென்ற வருஷத்திய துணிவுகரமான நடவடிக்கைகளில் குறிப்பிடப்பட்ட இறங்குமிடங்களில் கிளைடர்கள் அவிழ்த்துவிடப்பட்டு அவைகள் கீழே இறங்கின. அவை

களிலிருந்து அமெரிக்க எஞ்ஜினியர்கள் குதித்தார்கள். பிரிடிஷ் துருப்புகள் அவர்களுக்கு ரக்ஷணை செய்துவந்தார்கள்.

12 மணி நேரத்திற்குள் உபயோகமுள்ள இறங்குமிடம் தயாரிக்கப்பட்டுவிட்டது. அடுத்த நாள் சாயங்காலம் துருப்பேற்றிச் செல்லும் டாகோடா விமானங்களும் C-47 விமானங்களும் அதில் வந்திறங்கின. ஜப்பானியர்கள் குறுக்கிடவேயில்லை. இந்தத் திடீர் நடவடிக்கை ஒரு வாரம் வரையில் நடைபெற்றது. இந்த அந்தராளத்தில் அந்தப் பிரதேசத்தை ரக்ஷிக்க ஸ்பிட்பையர் விமானங்கள் வந்துவிட்டன. முதல் நாள் இரவில் ஏற்பட்ட க்ளைடர்களின் நஷ்டத்தைத்தவிர வேறு நஷ்டமன்னியில் நம்முடைய படைகள் விமான மூலம் இறங்கிவிட்டன.

இந்த நடவடிக்கையின் துணிவு, விமான தளங்களே இல்லாதபொழுது முன்னணி ஸ்தலத்தை ஏற்படுத்திய அமெரிக்க க்ளைடர் விமானிகளின் சாதுர்யம், அடுத்த சில இரவுகளில் நமது படைகள் குவிந்தது. எல்லாம் எதிரியின் பலமான விமானப் படையினால் பயன்படாமல் செய்திருக்கக்கூடும். ஜப்பானியர்களிடம் ஏராளமான வேவுபார்க்கும் விமானங்களிருந்திருந்தால் அவர்கள் நம்முடைய படைவரிசைகளையும், ஸ்தானங்களையும் முன்னதாகவே கண்டுபிடித்திருப்பார்கள். அப்பொழுது அறுகுறையாக உள்ள ஒரு பிரிடிஷ் படையை ஏராளமான ஜப்பானியப் படைகள் எதிர்த்திருக்கும் இந்த நடவடிக்கையின் பிற்போக்கு நமது மனோதைரியத்தைக் குலைத்திருக்கும். ஆனால் ஜப்பானியரிடம் மிகுதியான வேவுபார்க்கும் விமானங்களில்லை. அவர்கள் நம்முடைய ஸ்தானங்களையும் கண்டுபிடிக்கவில்லை. இதற்குக் காரணம் யாது? தரைப்படைகளுடன் ஒத்துழைக்கும் கர்னல் காக்ரேனின் விமானப்படையைச் சேர்ந்த சண்டை விமானங்கள் நான்கு நாட்களில் ஜப்பானிய விமான தளங்களிலுள்ள 63 விமானங்களை அழித்துவிட்டன. நமது விமானப் படை முன்னேறி எதிரியின் தளங்களிலுள்ள விமானங்களை வெடிகுண்டுகளால் துளைத்தும், தீக்கிரையாக்கியும் செய்துவிட்டன. எதிரி உபரிப் படைகளைக் கொண்டுவந்து நம்முடைய படைகளின் இருப்பைக் கண்டுபிடிப்பதற்குள் நம்முடைய படைகள் குவிந்துவிட்டன. விமானதளமும் தற்காப்பு செய்யப்பட்டது. அதன்பின் நமது துருப்புகள் பரவி வடக்கு பர்மாவில் மகத்தான நடவடிக்கைகளை மேற்கொண்டுவிட்டன.

இது விமானப் படையின் கற்பனையான நடவடிக்கை. தைரியத்துடனும், துணிகரமாகவும் மேற்கொள்ளப்பட்டது. சரித்திரத்தில் ஒரு புதிய பகுதி ஏற்பட்டுவிட்டது. இறங்கும் படைகளுக்குத் தடங்கல் ஏற்படாமல் ஜப்பானிய விமானதளத்திலிருந்த விமானங்களை நொருக்கியதிலிருந்து மற்றொரு மிகவும் முக்கியமான சாதகம் ஏற்பட்டிருக்கிறது. நொருக்கப்பட்ட விமானப்படை மணிப்பூர் ரஸ்தாவையும், இம்பால் ஸ்தானங்களையும் தாக்க உத்தேசித்திருந்த நடவடிக்கைகளுக்கு ஒத்தாசை செய்ய சேமித்து வைக்கப்பட்டிருந்தன. ஜப்பானிய தரைப் படைகள் அப்பொழுது ஒரு தரைப்போரைத் துவக்கத் தயாராகயிருந்தன. இந்தச் சமயத்தில் அவர்களுடைய வெடி விமானப்படை ஒரே நாளில் அழிந்துவிட்டது.

ஒரே நடவடிக்கையில் நாம் இரண்டு காரியங்களை சாதித்துக்கொண்டோம். வின்கேட்டின் படைகள் ரக்ஷிக்கப்பட்டன. எதிரியின் முன்னேறித் தாக்கும் படைகளின் விமானப்படை அழிக்கப்பட்டது.

மூன்று வாரங்கள் கிரமித்து ஜப்பானியர்கள் வெடி விமானங்களைத் திறட்டிக்கொண்டு சென்ற திங்கள், செவ்வாய்க்கிழமையன்று வடக்கு பர்மாவில் நம்மைத் தாக்கினார்கள். இந்த நடவடிக்கையில் எதிரியின் 30 விமானங்கள் அழிக்கப்பட்டன. மேலும் ஆறு விமானங்கள் நாசமடைந்திருக்கலாம். சண்டை விமான நஷ்டங்களை ஜப்பான் சுலபமாக ஈடுசெய்துவிடும். ஆகிலும் மூன்று வாரங்களாக ஜப்பான் சிரமப்பட்டுத் திறட்டியிருக்கும் விமானப்படையில் 11 சண்டை விமானங்கள் அழிந்துவிட்டன. அதாவது, அவர்கள் முன்பு இருந்த ஸ்தானத்துக்குத் திரும்பிவிட்டார்கள். அகப்பட்டுக்கொண்டிருக்கும் 18-வது டிவிஷன் துருப்புகளுக்கும் இம்பாலில் முன்னேறிவரும் துருப்புகளுக்கும் உதவியளிக்க ஜப்பானிடம் வெடி விமானங்கள் கிடையாது.

ஆகையால் எல்லா இடங்களிலும் பர்மாப் போரில் காடுகளும், புதர்களும், மலைகளும் நிரம்பிய தரையில் போர்புரியும் தரைப்படைகளுக்கு விமானப்படையின் உதவி மிகவும் முக்கியமானதென்பதை அறியக்கூடும். விமானப்படை உதவியன்னியில் அரக்கானில் நாம் முன்னேற முடியாது. பிரிடிஷ் அமெரிக்கத் துருப்புகளும் பர்மாவின் மத்திய பிரதேசத்



திற்குச் சென்றிருக்கமுடியாது. இன்று நம்முடைய விமானப்படை ஆதிக்கம் பெற்றிருக்கிறது. அதன் முக்கியத்வம் வருங்காலத்தில் அதிகரிக்கும். ஐரோப்பாவிலும் புதிதான விமான தந்திரங்களைக் கையாள வசதியிருக்கிறது. பர்மா பிராந்தியங்களில் நமக்கு அதிக வசதி ஏற்பட்டிருக்கிறது.

அரக்கான் போரும் வின்கேட்டின் துணிவுகரமான நடவடிக்கையும் இரண்டு படிப்பினைகளைப் போதிக்கின்றன. இரண்டு நடவடிக்கைகளிலும் தரையிலுள்ள சங்கடங்களை விமானப்படை நிவர்த்தி செய்தது. இரண்டு மாத நடவடிக்கைகளைப்பின்பற்றி விரிவான கற்பனையான நடவடிக்கைகளும் துணிவுகரமான திட்டங்களும் ஏற்பட்டு வெற்றி சீக்கிரம் கிடைப்பதற்கு வழியைத்தேடவேண்டுமென்று நினைக்கிறேன். பர்மா என்ற சொக்கட்டான் பலகையில் நாம் நமது ராணிக்காயை வெற்றிகரமாக உபயோகத்திருக்கிறோம். இதேவிதமாக அநேக நடவடிக்கைகளையும் நாம் கையாளவேண்டும்.

---

# உணவுப் பொருளும் யுத்த சாதனம்தான்..

(மார்ச்சு மாதம் 27-ம் தேதியன்று டில்லியிலுள்ள அகில இந்தியா ஒலிபரப்பில் இந்திய அரசாங்கத்தின் பங்கீடு ஆலோசகரான மிஸ்டர் W. H. கிர்பி பேசியது).

பொருளைவிட தினசரி முக்யத்வமுள்ளதாகவும் யுத்த தளவாடங்களைப்போல் அவசியமானதுமான ஒரு விஷயத்தைப்பற்றி சிறிது காலம் பேசவிரும்புகிறேன். நான் உணவுப் பொருளைப் பற்றியும் உயர்ந்த பிறப்பினராகயிருந்தாலும் சரி, ஹீனமான தொழில்களைச் செய்துவந்தாலும்சரி எல்லோருக்கும் தேவையான உணவுப்பொருளின் பங்கீட்டின் அவசியத்தைபபற்றியும் நான் பேசப்போகிறேன். ஒவ்வொருவருடைய தேக ஆரோக்கியத்தையும் தேகவலிமையையும் காப்பாற்றிக்கொள்ளத் தேவையான உணவுப்பொருள்களைப் பெற ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

யுத்த காலத்திலும் அல்லது பொருளாதார அல்லது மற்ற காரணங்களினால் நெருக்கடி ஏற்படும்பொழுதும், நட்டப்பு நிகழ்ச்சிகளால் உண்டுபண்ணப்பட்ட கூடுமான நிலைமையின் மூலம் ஒரு தேசமக்களின் வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. இந்த நிலைமை முக்கியமாக ஜனங்களின் உணவுப்பொருள் நிலைமையைப் பாதிக்கக்கூடும். இந்தியாவில் அத்யாவசியமான உணவுப்பொருள்களின் குறைவு உண்டாகியிருப்பதற்கு ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு ஸமஸ்தானத்திலும் தேவைக்குமேல் எவ்வளவு உபரி உணவுபபொருள்களிருக்கின்றனவென்று குறிப்பாக கண்டுபிடிக்க முடியாததும் உணவுப்பொருள்கள் குறைவாகயிருக்கும் மாகாணத்திற்கும் ஸமஸ்தானத்திற்கும் எவ்வளவு பொருள்கள் தேவையென்று நிஷ்கர்ஷையாகக் கண்டுபிடிக்க முடியாததும் தான் காரணங்கள். இந்தியாவிலும் உலகம் பூராவிலும் உணவுப் பொருள்களின் குறைவு ஏற்பட்டிருப்பதற்கு மேலும் அநேக காரணங்கள் உள. ஆகிலும் ஒவ்வொருவரும் சமமான உணவுப்பொருள் ஸப்ளையைப் பெறும்படியாக உணவுப்பொருள் நிலைமையை கட்டுப்பாடுசெய்ய உபயோகமுள்ள ஒரு முறையைக் கையாளவேண்டுமென்பதில் ஐயமில்லை. உணவுப்பொருள் பங்கீடு முறையில் பங்கீடு சீட்டுகளை வழங்குவதின் மூலம் இந்த விநியோகம் நடைபெற்றுவருகிறது.

இந்த நடவடிக்கைகள் திருப்திகரமாக நடைபெறக்கூடுமானால் அநேக கடினமான பிரச்னைகள் தீர்ந்துவிடும். புதிய உலக ஆரம்பத்திற்கு இடையூறாக யிருப்பவைகள் அப்புறப்படுத்தப்பட்டுவிடும். "அப்பேர்ப்பட்ட யுகம் எப்படியிருக்கும்" என்று ஒரு பிரச்னையை விடுக்கலாம். உணவுப்பொருள் பங்கீடு முறை என்பது ஜனங்களின் உட்கொளளும் சக்தியை அமைக்கக்கூடிய ஒரு கெஜக்கோல். மேலும் ஒவ்வொருவரும் வாங்கிச் சாப்பிடக்கூடிய அளவிற்கு விலைவாசிகளையும் நிர்த்தாரணம் செய்து சாமான்களின் ஸப்ளையையும் அது உத்தரவாதம் செய்துவிடுகிறது. மேலும் பங்கீட்டின் மூலம் அளவுகடந்து சாமான்களை சேமித்து வைப்பதும் அநியாய லாபம் சம்பாதிப்பதும் தடுக்கப்படுகிறது. இவ்விதமாக மாகாணத்திலோ, அல்லது ஸமஸ்தானத்திலோ உபரியாகயிருக்கும் உணவுப்பொருள்களை உத்தம பக்ஷ

மான அளவுக்கு உணவுப்பொருள்கள் குறைவாகயிருக்கும் நாடுகளுக்கு அனுப்ப வசதி ஏற்படுகிறது. இவ்விதமாக் நிருதியாகவும் துரிதமாகவும் ஸப்ளைகள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அனுப்பப்படாவிட்டால் உணவுப்பொருள் குறைவாகயிருக்கும் நாடுகள் கடுமையான வறுமைக்குள்ளாவார்கள். மேலும் இன்னும் ஒரு முக்கியமான விஷயம் உணவுப் பங்கீட்டில் காணக்கூடியது. ஜனங்களின் நம்பிக்கையை அது நிலைநாட்டிவிடுகிறது. இது அவசியமென்பதை ஒருவரும் குறைத்துச் சொல்லமுடியாது.

எல்லா மாகாணங்களிலும் பிரதானமான ஸமஸ்தானங்களிலும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பங்கீடு முறையையும் அல்லது ஆரம்பிக்கப்போகும் நடவடிக்கைகளையும் பற்றி நான் சொல்ல வேண்டுமென்று நீங்கள் பிரியப்படுவீர்கள். நான் எல்லா மாகாணங்களையும் பெரிய ஸமஸ்தானங்களையும் பார்வையிட்டிருக்கிறேன். அங்கிருக்கும் உத்தியோகஸ்தர்களின் ஒத்தாசையினால் எல்லாப்பங்கீடு முறைகளையும் ஸவிஸ்தாரமாக ஆராய்ச்சி செய்திருக்கிறேன். உணவுப்பொருள் கட்டுப்பாடு திட்டங்களில் ஏற்படும் கணக்கிடமுடியாத சிரமங்களை நிர்வாகங்கள் தீர்த்துவிடுவதில் காண்பித்துவரும் சாதுர்யத்தையும் உத்சாகத்தையும் கண்டு நான் சந்தோஷமடைந்தேன்.

இன்று 25 மிலியன் ஜனத்தொகை உள்ள 130 நகரங்களில் உணவுப் பங்கீடு திட்டம் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது, அல்லது கூடிய சீக்கிரம் ஆரம்பமாகும். இன்னும் ஒரு வருஷத்திற்குள் இந்தப் புள்ளி விபரங்கள் இரட்டித்துவிடும்.

உணவுப்பொருள் பிரச்னையைப்பற்றிய சொற்பொழிவை முடிக்குமுன் உணவுப்பொருள் வியாபாரிகளுக்கு சில வார்த்தைகளைச் சொல்லவேண்டுமென்று விரும்புகிறேன். வியாபாரிகளின் சொந்த நடவடிக்கைகளில் நாங்கள் தலையிடப்போவதில்லை. பொது ஜனங்களுக்கு அவசியமான உணவுப்பொருள்களின் ஸப்ளைக்கு உத்தரவாதம் செய்யவேண்டியதில் அரசாங்கத்தார் முக்கியமான பொறுப்பை மேற்கொள்ள வேண்டியபொழுது, உணவுப்பொருள் சேமிப்பு, விநியோகம் இவற்றிற்கு இன்னல்களை விளைவிக்கக்கூடிய எந்த வியாபாரியையும் அரசாங்கத்தார் சும்மா விடமாட்டார்கள். ஆகையினால் உணவுப் பங்கீடு திட்டத்தில் மனதாரவோ அல்லது உதவியளிக்கும் முறையிலோ ஒவ்வொரு வியாபாரியும் முக்கியமான பங்கெடுத்துக்கொள்ளவேண்டும். வியாபாரத்திலிருந்து எவ்வளவு லாபம் கிடைக்குமென்று அவன் ஆலோசனை செய்யக்கூடாது. உணவுப்பொருள்களின் தரம் உயர்வாகயிருக்க வேண்டுமென்றும், அளவுகள் சரியாகயிருக்கவேண்டுமென்றும், அரசாங்கத்தாரின் கட்டளைப்படி விலைவாசிகள் நிர்த்தாரணம் செய்யப்படவேண்டுமென்றும், அவன் கவலைப்படுவதன் மூலம் பொதுமக்களின் க்ஷேமத்திற்கும் நம்பிக்கைக்கும் அவன் பாத்திரமாவான். அரசாங்கத்தார் விலைவாசி கட்டுப்பாடுபோன்ற கட்டுப்பாடு உத்தரவுகளைப் பிறப்பித்தவுடன் சாமான்கள் மறைந்துவிடுமென்று அடிக்கடி சொல்லப்படுகிறது.

சாமான்களை மறைத்து வைப்பது யார்? அரசாங்கத்தாரல்ல, உட்கொள்ளுகிறவரல்ல, பிறருக்கு சங்கடம் ஏற்படும் பொழுது அநியாய லாபம் சம்பாதிக்க வேண்டுமென்று எண்ணம் கொண்டிருக்கும் வியாபாரிகள்தான் அதற்குக் காரணம்.

உணவுப் பங்கீட்டு திட்டத்தில் இந்த கபடமான நடவடிக்கைகள் மறைந்துவிடும். அநியாய லாபம் சம்பாதிக்கிறவர்கள் அவர்கள் செய்த குற்றங்களுக்குத் தக்கவாறு சிக்ஷிக்கப்படுவார்கள்.

## உத்தியோகப்பற்றற்றவர்களுடையவும், பத்திரிகைகளுடையவும் ஒத்துழைப்பு அவசியம்.

உணவுப்பொருள் ஆலோசனை கமிட்டியின் அவசியத்தைப் பற்றி சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். ஜனங்களுக்கு உணவுப்பொருள்களை விநியோகம் செய்வதென்பது மிகவும் முக்கியமான பிரச்னையாதலால் உணவுப் பங்கீடு முறையை தனிப்பட்ட நபர்கள் எவ்விதம் ஏற்றுக்கொள்ளுகிறார்களென்றும், நிறுவப்பட்ட உத்தரவுகள் பிரயோஜனமுள்ளவைகளாகயிருக்கின்றனவாவென்றும் அல்லது அவைகளிலிருந்து ஜனங்களுக்கு சிரமம் ஏற்பட்டிருக்கிறதாவென்றும் அப்படி சிரமம் ஏற்படும் கேஸ்களில் சட்டதிட்டங்களைத் திருத்தி



யமைக்கவேண்டாமாவென்றும் நாம் அவசியம் அறிந்துகொள்ளவேண்டும். இவ்விதமான சந்தர்ப்பங்களில் உத்தியோகப் பற்றற்றவர்களடங்கிய ஒரு உணவுப்பொருள் ஆலோசனைக் கமிட்டியை ஸ்தாபித்தால் அது நமக்கு உதவியளிக்கக்கூடும். பொதுஜன க்ஷேமத்திலும் சேவையிலும் அக்கரையுள்ள கியாதிபெற்ற ஆடவர்களையும் ஸ்திரீகளையும் இந்தக் கமிட்டியில் மெம்பர்களாகச் சேர்த்துக்கொள்ளவேண்டும். ஒரு வைத்திய நிபுணரும் தேகத்துக்குரிய சத்துப்பொருள்களில் நிபுணரான ஒருவரும் இந்தக் கமிட்டியிலிருக்கவேண்டும். மேலும் உணவுப் பங்கீடு திட்டங்களைப்பற்றி ஒழுங்கான முறையில் பிரசாரம் செய்யப்படவேண்டும். முக்கியமாக பத்திரிகைகளில் பத்திராதிபர்களின் கட்டுரைமூலமும் விளம்பரங்கள் மூலமும் வெகு சீக்கிரத்தில் ஏராளமான ஜனங்களுக்கு மிகுதியான தகவல்களை வெளிப்படுத்திவிடலாம். வெயர்லஸ் மூலமாகவும் இது நடைபெறக்கூடும். இந்தியா பூராவிலும் பத்திரிகைகள் அநேகமாக உணவுப்பொருள் பங்கீடு திட்டத்திற்கு ஒத்தாசை செய்துவருகின்றன. முக்கியமாக பொதுமக்களின் க்ஷேமத்திற்காகத்தான் அரசாங்கத்தார் இம்முறைகளை மேற்கொள்ளுகிறார்களென்று அறிந்தபின் பத்திரிகைகளின் ஆதரவு அதிகரித்திருக்கிறது. உணவுப் பங்கீடு அதிகாரிகளுடன் இந்திய பத்திரிகைகள் பூர்ணமாக ஒத்துழைக்கின்றனவென்பதில் நாம் சந்தோஷப்படுகிறோம்.

என்னுடைய சொற்பொழிவைச் செவியுறும் தொழிலாளிகளுக்கும் மற்ற முதலாளிகளுக்கும் ஒரு பிரச்னையை விடுக்கிறேன். உங்களுடைய தொழிற்சாலையில் ஜாதி மத வித்தியாசமன்னியில் ஆரோக்கியமான, புஷ்டியான, பாகம் பண்ணப்பட்ட உணவை வாங்கி சந்தோஷமாகவும் உல்லாசமாகவும் சாப்பிடும்படியாக தொழிற்சாலை பண்டகசாலையை ஏற்படுத்தியிருக்கிறீர்களாவென்று கேட்கிறேன்.

இது வியவகரிக்கக்கூடிய விஷயமென்பதை நான் நன்கு அறிவேன். ஆகிலும் உலகம் பூராவிலும் தொழிலாளர்கள் சிறந்த வாழ்க்கை முறைகளையும் நல்ல உணவுப்பொருள்களையும் அடையவேண்டுமென்று முயற்சி செய்துவருகிறார்கள். நிலைமையில் அபிவிருத்தி ஏற்பட்டால்தான் தொழிலாளர்கள் சந்தோஷமாக வசிப்பார்கள். தொழிலாளிக்குச் சாதகமாக உற்பத்தியும் அதிகரிக்கும். பங்கீடு செய்யும் அதிகாரி தொழிற்சாலை வேலைக்காரர்களுக்கு சமையல் செய்யப்பட்ட உணவைத்தான் விநியோகம் செய்வார்.

உணவுப்பொருள் கட்டுப்பாட்டின் பேரில் அதிக சிரத்தை எடுத்துக்கொள்ளப்படுகிறதென்று அநேகர்கள் குறை கூறுகிறார்கள். அவர்களை நான் ஒரு கேள்வி கேட்கிறேன். அடுத்த வருஷத்திலோ, மூன்று அல்லது ஐந்து வருஷங்கள் கழித்தோ இந்தியாவின் உணவுப்பொருள் நிலைமை எவ்விதமிருக்குமென்று அவர்கள் அறியக்கூடுமா? என்று கேட்கிறேன். வரப்போகும் நெருக்கடியை சமாளித்து நின்று சுலபமாக வேலை செய்யக்கூடிய பரிஷ்காரமான, திறமையுள்ள நிர்வாக, விநியோக சமூகத்தை இப்பொழுதே நிறுவுவது அவசியமில்லையா. நாம் எல்லோரும் கஷ்டகாலத்தை சமாளித்து நிற்கத் தயாராகயிருந்தால் சங்கடம் ஏற்படும்பொழுது அதன் சக்தி குலைந்து அது சாதாரண நடவடிக்கையை ஒத்ததாக மாறிவிடக்கூடும். இந்தியாவிலுள்ளவர்கள் நெடும்போக்கான திட்டங்களைப் போடுவதில் அதிக சாமர்த்தியசாலிகளில்லை. ஆகிலும் நாம் அநேக விஷயங்களை துரிதமாகக் கற்றுவருகிறோம். "முன் எச்சரிக்கையுடன் இருப்பது நல்ல முன்யோசனைபுடனிருப்பது போன்றது" என்ற பழமொழி உண்மைதான். ஆகையினால் உணவுப்பொருள் முனையிலுள்ள எல்லோரும் நம்முடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டு, அசௌகரியங்களைப் பொருட்படுத்தாமல் உணவுப்பொருள் யுத்தத்தில் வெற்றிபெறவேண்டும்.

முடிவாக, பொதுமக்களின் சேவைக்காகத் திறமையுடன் வேலைசெய்ய ஊக்கமுள்ள உணவுப் பங்கீடு நிர்வாகத்தைச் சேர்ந்த ஆர்வமுள்ள உத்யோகஸ்தர்களுக்கும் சிப்பந்திகளுக்கும் என்னுடைய மனமார்ந்த புகழுரையைக் கூறுகிறேன். உணவுப்பொருளை உட்கொள்ளுகிறவர்களுக்கும் நான் ஒன்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். பங்கீட்டு முறையின் அவசியத்தை நீங்கள் அறிந்துவிட்டீர்களானால், உங்கள் தேசத்திலுள்ள பங்கீடு முறையை வெற்றிகரமாக நடத்துவதற்கு நீங்கள் பேருதவி செய்யக்கூடுமென்று நான் நம்புகிறேன்.

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் ஸுபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 195. (5-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 29– 4–44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | 2– 5–44 | பள்ளிவாசல் | ... மாலை 7.00 |
| | | | ,, | பில்லமங்கலம் | ... ,, 7.30 |
| 30– 4–44 | ஆலங்குடி | ... ,, 7.00 | 3– 5–44 | பொ. புதுப்பட்டி | ... ,, 7.00 |
| ,, | ராசியமங்கலம் | ... ,, 7.30 | ,, | வேந்தம்பட்டி | ... ,, 7.30 |
| | | | 4– 5–44 | அம்புக்கோவில் | ... ,, 7.00 |
| 1– 5–44 | திருமெய்யம் | ... ,, 7.00 | ,, | ரெகுநாதபுரம் | ... ,, 7.30 |
| ,, | மேலூர் | ... ,, 7.30 | 5– 5–44 | அரிமளம் | ... ,, 7.00 |

### பிரஸங்கம் 196. (6-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6– 5–44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | 10– 5–44 | வெள்ளனூர் | ... மாலை 7.00 |
| 7– 5–44 | கீழாநிலை-புதுப்பட்டி | ... ,, 7.00 | ,, | செம்பாட்டூர் | ... ,, 7.30 |
| ,, | கீழாநிலை | ... ,, 7.30 | 11– 5–44 | மலம்பட்டி | ... ,, 7.00 |
| 8– 5–44 | பெருமாநாடு | ... ,, 7.00 | ,, | போராம்பூர் | ... ,, 7.30 |
| ,, | புல்வயல் | ... ,, 7.30 | 12– 5–44 | மலைக்குடிப்பட்டி | ... ,, 7.00 |
| 9– 5–44 | சடயம்பட்டி | ... ,, 7.00 | ,, | தலையானூர் | ... ,, 7.30 |
| ,, | ஒலியமங்கலம் | ... ,, 7.30 | | | |

### [யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

29— 4—44 வெட்டம்விடுதி.
30— 4—44 ஏம்பல்.
2— 5—44 குடுமியாமலை.
3— 5—44 ராயவரம்.
4— 5—44 கீழாநிலை.
5— 5—44 அரிமளம்.
6— 5—44 பொன்னமராவதி.
7— 5—44 கொடும்பாளூர்.
9— 5—44 போராம்பூர்.
10— 5—44 கீழாநிலை-புதுப்பட்டி.
11— 5—44 ஆலங்குடி.
12— 5—44 புதுக்கோட்டை.



# குப்பனும் சுப்பனும். (2)

*(By Mr. S. Panchapagesan, Director, Sri Brahadambal Gana Sabha, Western Palace, Pudukkottai).*

(Contributed For National War Front Propaganda).

## "GROW MORE FOOD AND STILL MORE FOOD",

(குப்பனும், சுப்பனும் சந்தையில் சந்தித்தல்).

குப்பன்.—ஏ! சுப்பண்ணே! ஒங்க ஊர்ச்சேதி என்னங்க.

சுப்பன்.—ஒண்ணுமில்லீங்க. போன வாரங்க தேசிய முன்னணி நிலயத்திலிருந்து ஒத்தரு எங்கூருக்கு வந்திருந்தாருங்க.

கு.—என்ன எப்போதும் போலத்தானே பேசியிருப்பாக.

சு.—சண்டைச் சங்கதிகளைச் சொன்னதோடு சில சங்கதிங்களைப்பத்தி தனியாக எங்களுக்கெல்லாம் எடுத்துச் சொன்னுக.

கு.—என்னுங்க அப்படி விசேஷமாச் சொன்னது. சொல்லுங்க. கேட்டுக்கிணுவம்.

சு.—நம்ம ஊட்டுக்கொல்லைகள்ளே பயிர்குழிங்களைப் போட்டு காகரிங்களை அதிகப் படுத்தனும்னு சொன்னுக.

கு.—அத்தான் எப்பவும் யாரும் சொல்லிட்டிருக்காகளே.

சு.—அப்படியில்லீங்க. யாரும் சொன்னாலும் அவுங்க ஊக்கமா அதிலே ஒரு சங்கதி சொன்னுக.

கு.—என்ன புதுச்சேதி யண்ணே அது.

சு.—இப்போ நாம செடிங்க பயிற்குழிங்க இதுகளுக்கு தண்ணி ஊத்ரோமோயில்லீங்களோ!

கு.—அதிலேகூட சந்தேகமாண்ணே வந்துச்சு உனக்கு.

சு.—இல்லீங்கண்ணே. அப்படி தண்ணி உத்ரதிலே அதுங்க வேருங்க மண்ணிலேருந்து பதி பட்டு போய்த்ரும். அத்தை தடைப்படுத்த ஒருவழி சொன்னுக.

கு.—அதுக்குத்தான் இப்ப பூவாளியிருக்குதே அத்தைங்காட்டியும் இம்புட்டு இம்புட்டு ஊத்திணுப்போவுது.

சு.—பூவாளி, பெரிய பாத்திங்களா இருந்துச்சுன்னு எந்த மூலேங்க. சின்னச்செடிங்களுக்குத் தான் அதுங்க ஏத்தது.

கு.—அதுக்கு வங்களாக்கள்ளே வச்சிருக்காங்களே அது மாதிரி வம்புக்குளாங்களை நீட்டி விட்டா போச்சுதுங்க.

சு.—அது மாதிரிண்ணே எல்லாக் குடியானவங்களும் பண்ண முடியுமாண்ணே. இந்தக் காலத்லே வம்புக்குளாய் வக்கெத்தான் முடியுங்களா இல்லாட்டி அதை நீட்டிவிடத் தான் முடியுங்களா? அம்புட்டுக்கும் பணம் எம்புட்டு பிடிக்கும்?

கு.—முடியாட்டின்னு பாத்தியைக்கட்டி எப்போதும் போலே தண்ணியை இரைக்கவேண்டியதுதான்.

சு.—அப்படியில்லீங்கண்ணே! அதுக்கு அவுக ஒருவழி சொன்னுக. நாம தண்ணிபாச்ச மண்தூம்பு வக்கிறோமோ இல்லீங்களோ அது மாதிரி தூம்புங்கள்ளே எக்கண்டமும் நிதானமாக தொளைங்களே சிறசாப்போட்டு எந்த எடத்திலே பாத்திங்க இருக்குதோ அதுங்களைச் சுத்தியும் அடியிலேயும் ஒரு அடி ஆளத்துக்கு குழி பரிச்சு இந்தத் தூம்புங்களே ஏத்தம் தாழ்வில்லாமே ஒரு தூம்புக்கும் இன்னொன்றுக்கும் மத்திங்கள்ளே எடைவிளியில்லாமையும் வைக்கணுமாம்.

கு.—வச்சுட்டா தண்ணியை எங்கே ஊத்தவது? அது எங்கணே பாயும்?

சு.—பொறுங்க. தண்ணியை ஊத்ர எடத்திலேருந்து தூம்புங்கள் கொஞ்சம் கொஞ்சமாய் சாய்வா பள்ளத்லே இரக்கி வைக்கணுமாம். அப்பத்தான் தண்ணியை ஊத்தினால் தூம்புங்க வழியா எக்கண்டமும் ஓடுமாம்.

கு.—அப்படி ஓடிச்சானு என்ன?

சு.—அப்படி ஓடிச்சான்னு நல்லாக் கவனிச்சிட்டு அதுக்குச் சரியா மட்டம் கட்டி மரேதான் தூம்புங்க மேலே மண்ணைப்போட்டு மூடிட்ருணுமாம்.

கு.—அப்படின்னு. தூம்புங்கள்ளே தண்ணியைவிட்டா அப்படியே தண்ணி இறுத்துக் கிட்டல்லவா போய்த்ரும். செடிங்களுக்கு தண்ணி வராதே.

சு.—அப்படித்தானுங்க அவுக சொன்னுக. பூமி தண்ணியை இறுத்துச்சுன்னு அந்த பூசாரம் பூறவும் பூமிலே பறவிக்கிட்டு செடிகளின் வேர்களுக்கு நல்ல ஊட்டத்தைக் கொடுக்குமாம்.

து.—செடிங்க நல்லா வளருமாண்ணே.

சு.—ரொம்பவும் நல்லா வளந்து நாம சும்மா தண்ணியை மேலே ஊத்திவந்தா அதிலே கிடைச்கிற பலனைவிட அரை மடங்கு அதிகமாயே பலங்கொடுக்குதாம்.

து.—ஏது இந்த முறைங்க நல்ல முறையாத்தான் தோத்துது. ஆனா இம்புட்டு பிரயாசை எடுத்துக்கிட்டு காரியங்களை செய்யவேண்டியிருக்குதே. எனக்கு ஒரு யூகம் தோத்துது.

சு.—என்னண்ணே, அத்தையும் சொல்லுங்களேன்.

து.—இதுங்காட்டியும் பூமிங்களைத் தோண்டிக்கினு தூம்புங்களை புதைச்சிக்கிட்டு கிடக்கிறதுக்கு பெரிய பாத்திங்களா போடராப்லே நீளமாப் பாத்திங்கபோட்டு ரெண்டு பக்கிட்டும் தண்ணி பாயராப்லே வச்சோம்னா வேறுங்க தண்ணியைத்தானா இளுத்துக்குங்களே.

சு.—நீங்க சொல்ர ரோசனை சரிதானுங்க. ஆனா நாம தூம்புகளை அடியிலே புதைச்சுட்டா வாக்கால் போடர எடத்லேயும் எக்கண்டமும் செடிங்களைப் போட்டுடலாம் இம்பட்டுண்டு எடத்லே வெகு நல்லாப் பயிர் பண்ணிட்டலாம்.

து.—ஆமாங்க. ஆமாங்க. நீங்க சொல்ரதுதான் சரிங்க. இப்ப புரிஞ்சுச்சு. வேறு ஏதாச்சும் சொன்னுகளோ?

சு.—இன்னொரு சேதி நம்ம செடிகொடிங்களுக்கு எப்படி எரு போடரது இன்னு சொன்னுக.

து.—என்ன பாரி அண்டு கம்பெனிலிருந்து வாங்கிப் போடுங்கன்னு சொல்லியிருப்பாக.

சு.—இல்லேண்ணே பசா செலவில்லாமே நாமே எறு தயாரிக்கலாம்னு ஒரு முறை சொன்னுக. கேட்டுக்க. செடிகொடிங்கள்ளேருந்து உளுர தளையிருக்குதா.

து.—ஆமா.

சு.—அதுங்களை சேமிச்சு. நம்ம ஊட்டுக்கொல்லெங்கள்ளே கொஞ்சம் தள்ளினப்லே ஒரு குளியைப் போட்டு அதுலே கொட்டி. அதுங்கமேலே மண்ணைப் போட்டு நல்லா கெடிச்சுப் போடணுமாம்.

து.—ரொம்பத் தளைங்க, 5, 6 கூடைக்கு இருந்துச்சுன்னா?

சு.—பெரிய குளியா வெட்டி அதிலே போட்டு மண்ணை மேலே கொட்டி கெடிச்சு அதுக்கும் மேலே கொஞ்சம் தளையைக்கொட்டி அதேமாதிரி மண்போட்டு கெடிச்சு நல்லா மூடி மாட்டு சாணிங்களை தெளிச்சு மொளுவி வச்சு ஒரு மாதத்துத்துக்கு அங்கிட்டு பிரிச்சு எடுத்தா அம்புட்டும் நல்ல எருவாயித்ருமாம். அதுங்களை மரம் செடிகொடிங்களுக்கு போட்டா நல்ல பலனைக் கொடுக்குமாம்.

து.—போன வாரம் எங்கிட்டேருந்து சேதிங்களை நீ அறிஞ்சிக்கினே இந்தவாட்டி ஒன்னாலே விஜயமா இரண்டு தெரிஞ்சிக்கிட்டேனுங்க.

சு.—அடுத்த வாரம் அவுக மறை வர்ரதா சொல்லிட்டு போய்த்திருக்காக. ஏதாச்சும் சொன்னா கேட்டுகினு வார்ரேன்.

து.—(கும்பிட்டு) தேசீய யுத்த முன்னணி நிலயத்தாருங்க நல்லாரிக்கணும். அவுங்க இதுங் காட்டிம் அண்ணே நமக்கு சேதிகளை சளுவாச் சொல்லாட்டி நாம்ம முளிச்சிட்டிருக்க வேண்டியதாண்ணே.

சு.—ஆமாங்க அவுங்களும் நம்மை முன்னுக்குக் கொண்டாரனும்னுதானே பாடுபடராக. கொஞ்சம் பாக்கு இருந்துச்சுன்னா கொண்டாண்ணே சந்தைக்குப் போய்த்தாரணும்.

து.—இந்த விலைலே நீங்க பாக்கு கேக்ரீங்களே பாத்துப் போடுங்க (கொடுத்தல்).

சு.—அது சரிங்க இந்தப் பாக்கு விலையை ஏண்ணே ஏத்திட்டானுங்க.

து.—பாக்குக்கு வரி போட்டுட்டாக. வியாபாரிங்க என்னபண்ணுவாக. விலையை ஏத்திட்டாக.

சு.—இதுக்கு ஏண்ணே வரி. இது கூடவா சண்டைக்கு போவுது.

து.—இல்லேண்ணே. சண்டைக்குப் போனாத்தான் வரிபோடணுங்களா. இதிலேருந்து நமக்கு ஒரு படிப்பினை இருக்குதே அதைக் கவனிச்சீங்களா?

சு.—என்னாங்க.

து.—வரிபோட்டு விலை யேறிப்போனதாலே இம்புட்டுண்டு சொத்தைப்பாக்காயிருந்திச்சின்னா கூட நாம் போட்டுகிட்டரம். விலை ஏரலேன்னா நாம அப்படி செஞ்சுக்குவுமா. எரிஞ்சிட்டு நல்ல பாக்கா பொறக்குவம்.

சு.—ஆமாங்கண்ணே. இதுவும் நல்ல வளிதானுங்க. நம்ம பண்டங்களை வீணா யெறியாமே யிருக்க இது நல்ல வளிதானுங்க. சரிங்க நேரமாயிருச்சு. இப்படி மண்ணெண்ணெய், மொளவாய் இதுங்களை வாங்கிட்டு ஊரெப்பாக்க பொக்குனு பரிஞ்சிட்ரேன்.

து.—சரிங்கண்ணே. அடுத்த வாரம் கண்டுக்குவம். [இருவரும் செல்லல்] (தொடரும்)

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—3-5-44.

## புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம் வருஷம் மேமீ 6உ [ந. 196

தேசீய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் **CXCVI.**

## ஸ்டாலினின் மே தின அறிக்கை.

### காயமுற்றுத் திரும்பும் ஜெர்மன் படைகளை ஜெர்மனிக்குச் சென்று நிர்மூலமாக்குவோம்.

ருஷ்யப்படைகளின் பெரு வெற்றிக்கிடையே இன்று நம்மக்கள் கூடுகின்றனர். ஸ்டாலின் கிராட்டில் ஜெர்மானியர் தோற்கடிக்கப்பட்டபின் ருஷ்யப்படைகள் இடைவிடாது முன்னேறித் தாக்கிவருகின்றன.

அமெரிக்காவும், பிரிடனும் ருஷ்யப்படைகளின் வெற்றிக்கு உதவியாக இதாலியில் ஜெர்மானியர்களைத் தாக்கி ஜெர்மன் துருப்புகள் கவனத்தை ருஷ்யப் போர்முனையிலிருந்து திருப்பிவிட்டார்கள். நேசதேசத்தார்கள் ருஷ்யாவுக்குத் தாதுப் பொருள்களையும், யுத்த தளவாடங்களையும் அனுப்புவதுடன் நேசதேச விமானங்கள் ஜெர்மன் நகரங்கள் மீது வெடி குண்டுகளைப் பொழிந்து ஜெர்மனியின் ராணுவ சக்தியை அழித்துவருகிறார்கள்.

செம்படையின் வெற்றியை எதிரியின் பலமான பதில் தாக்குதல் உபயோகமற்றதாகச் செய்ய முடியாததற்கு ருஷ்யா பூராவும் சேனையை ஆதரித்ததுதான் காரணமாகும். எதிரியுடன் செம்படை தீரத்துடன் போர் புரிந்திருக்கிறது. ஆகிலும் ருஷ்யப் பொதுமக்கள் சும்மாயிருந்துவிடவில்லை. யுத்தகால சிரமங்களையும் பொருட்படுத்தாமல் ருஷ்யர்கள் ஏராளமாக யுத்த தளவாடங்களையும், வெடிமருந்துகளையும், ஆடைகளையும், உணவுப்பொருள்களையும் தயார் செய்து போர் முனையிலுள்ள படைகளுக்கு வழங்கியிருக்கிறார்கள். சென்ற வருஷத்தில் ருஷ்யாவின் உற்பத்தி சக்தி அதிகரித்திருக்கிறது. நூற்றுக்கணக்கான புதிய தொழிற்சாலைகளும், சுரங்கங்களும், டஜன் கணக்கான மின்சாரசாலைகளும், இருப்புப்பாதைகளும், பாலங்களும் யுத்தத்திற்கு உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. மிலியன் கணக்கான ருஷ்யர்கள் கடசல் பிடிக்கும் யந்திரங்களைக் கையாளுவதில் ஈடுபட்டிருக்கிறார்கள். அநேகர்கள் சிக்கலான தொழில்களில் பயிற்சி பெற்று நிபுணர்களாகிவிட்டார்கள்.

### அச்சு நாடுகளின் சிதைவு.

செம்படையின் பலமான அடிகளிலிருந்தும் அச்சு நாடுகளின் சக்தி நொருங்கிவருகிறது. ருமேனியா, ஹங்கேரி, பின்லாந்து, பல்கேரியா முதலிய நாடுகளில் பீதியும் குழப்பமும் அதிகரித்திருக்கிறது. ஹிட்லரைப் பின்பற்றும் அந்த நாடுகள் இப்பொழுது அநேகமாக பூராவும் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டன. ஜெர்மனி யுத்தத்தில் தோற்றுவிட்டதென்று அவைகள் அறிந்துவிட்டன. நாசத்திலிருந்து தப்பித்துக்கொள்ள ருமேனியாவுக்கும், ஹங்கேரிக்கும், பின்லாந்துக்கும், பல்கேரியாவுக்கும் ஒரே ஒரு வழிதான் உண்டு. அவைகள் ஜெர்மனியை விட்டுப் பிரிந்து யுத்தத்திலிருந்து விலகுவதேதான் அவர்களுக்கு உதவும்.

அவைகள் ஜெர்மன் தொடர்பைத் துண்டித்து விலகிக்கொள்ளுவது சாத்தியமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. ஜெர்மன் ஆக்ஷியிலிருந்து விடுதலை பெறும் நடவடிக்கையை அந் நாடுகளே தான் மேற்கொள்ளவேண்டும். அவைகள் அவ்விதம் செய்தால்தான் ஜனநாயக நாடுகளின் நல்லபிப்ராயத்தை அவைகள் சம்பாதித்துக்கொள்ளும்.

### ருஷ்யரின் உத்தேசம்.

வெற்றிகரமாகப் போர்புரிந்து செம்படை ருஷ்ய பிரதேசத்தில் நான்கில் மூன்று பாகத்தை மீட்டுக்கொண்டது, அதாவது 400 கிலோ மீடர்கள் முன்னேறியிருக்கிறது. ருஷ்ய பூமியில் ஜெர்மன் பூண்டில்லாமல் துரத்தியடிப்பதும் கருங்கடலிருந்து பாரண்ட்ஸ் கடல் வரையிலுமுள்ள கோட்டின் ஓரமாக ருஷ்ய எல்லைச் சரகத்தை அமைப்பதும்தான் ருஷ்யாவின் உத்தேசம். ருஷ்ய பூமியிலிருந்து எதிரிப்படைகளைத் துரத்தியடிப்பதுடன் நமது காரியம் நின்றுவிடக்கூடாது.

இப்பொழுதிருக்கும் ஜெர்மன் படையை காயமுற்றுத்திரும்பி குகைக்கு ஓடும் மிருகத்திற்கு ஒப்பிடலாம். ஜெர்மன் படைகள் ஜெர்மனிக்குச் சென்று அங்கு ஆச்வாசம் செய்வதாக உத்தேசித்திருக்கின்றன. ஆகிலும் குகையிலிருக்கும் காயமுற்ற மிருகமும் அபாயகரமானது தான்.

நமது நாட்டையும், நமது நேசதேசத்தாரையும் அடிமைத்தனத்துக்குக்குட்படாமல் தடுத்துவிடுவதற்கு காயமுற்றுத் திரும்பும் ஜெர்மன் மிருகத்தைத் துரத்தியடித்து அதன் நாட்டிலேயே அதை அழித்துவிடவேண்டும்.

எதிரிகளைத் துறத்திச்செல்லும் பொழுதே நாம் ஜெர்மனியின் பந்தத்திலிருந்து போலிஷ் ஜனங்களையும், ஸெக்கோஸ்லாவாக்கியர்களையும் மேற்கு ஐரோப்பாவில் நேசதேச நாடாகயுள்ள இதர நாட்டாரையும் விடுவிக்கவேண்டும். ருஷ்யாவிலிருந்து எதிரிகளைத் துரத்தியடிப்பதைவிட இது மிகவும் சிரமசாத்தியமான வேலையாகும்.

இந்தக் காரியம் நிறைவேற ருஷ்யாவும், பிரிடனும், அமெரிக்காவும் ஒன்றுபட்டு கிழக்கே நம்படைகளும் மேற்கில் நேசப்படைகளும் தாக்கவேண்டும்.

ஹிட்லரின் ஜெர்மனியை அழிக்கவேண்டுமானால் இவ்விதமான ஒன்றபட்ட நடவடிக்கை அவசியமாகும்.

நண்பர்களுக்கும், செம்படையைச் சேர்ந்த தரைப்படை, கடற்படைக்கும், ஸார்ஜண்டுகளுக்கும், ஆபீஸர்களுக்கும்: ஜெனரல்களுக்கும், கொரில்லாப்படையில் சேர்ந்திருக்கும் ஆடவர்களுக்கும் ஸ்திரீகளுக்கும், ஜெர்மனியின் கொடுங்கோன்மைக்குட்பட்டு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் அல்லது ஜெர்மனியின் அமுலுக்குட்பட்டு ஜெர்மனியில் காவல் முகாமில் அடைபட்டிருக்கும் சகோதர சகோதரிகளுக்கும், மே தினமாகிய இன்று என்னுடைய பாராட்டை அறிமுகப்படுத்துகிறேன்.

ருஷ்யாவின் சுதந்திரத்துக்கும், விடுதலைக்கும் உயிர் துறந்தவர்களுக்கு சாஸ்வதமான புகழ்!உண்டாகட்டும். ஜெர்மன் அக்கிரமக்காரர்களுக்கும் அழிவுண்டாகட்டும்.



## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 24—4—44 (திங்கட்கிழமை). | நேசதேசத்தார்கள் தெற்கு ஜெர்மனி பேரில் 5,00,000 எரி வெடிகளைப் பொழிந்தார்கள். |
| 25—4—44 (செவ்வாய்க்கிழமை). | கோபன்ஹேகனில் நாசவேலை நடைபெறுகிறது. ஜெர்மன் டாங்கிகள் தெருக்களில் நடமாடுகின்றன. |
| 26—4—44 (புதன்கிழமை). | நேசதேசத்தார்கள் நியூ கினியாவிலுள்ள மாடாங்கைப் பிடித்தார்கள். யூகோஸ்லாவியர்விலுள்ள ஜெனரல் டிடோவின் படைகள் ஏட்ரியாடிக்கடலில் கார்குலாவைப்பிடித்தார்கள். |
| 27—4—44 (வியாழக்கிழமை). | நேசதேச வெடிவிமானங்கள் 24-மணி நேரத்திற்குள் ஐரோப்பா பேரில் 8,000 டன்கள் எடைமானமுள்ள வெடி குண்டுகளைப் பொழிந்தன. செம்படை ஜாஸ்ஸிக்குத் தெற்கில் பிரத் நதியைக் கடந்தது. |
| 29—4—44 (சனிக்கிழமை). | அமெரிக்க வெடி விமானங்கள் பகலில் பெர்லினை பலமாகத் தாக்கின. |
| 30—4—44 (ஞாயிற்றுக்கிழமை). | ருஷ்யாவுக்கு உதவியளித்ததற்காக நேச நாடுகளுக்கு ஸ்டாலின் வந்தனம் தெரிவிக்கிறார். |
| 1—5—44 (திங்கட்கிழமை). | டான்ஜியரிலும், ஸ்பெயினிலும் உள்ள அச்சு நாட்டு தூதர்களை வெளியேற்றி விடுவதாக ஸ்பெயின் ஒப்புக்கொண்டது. |

### (B)-செய்திச் சுருக்கம்.

**ருஷ்யா.**—இங்கு அமைதி நிலவுகிறது. ஸெபாஸ்டபூலிலும், லுவாவிலும், க்லாட்ஸ் பகுதியிலும் சில்லரைச் சண்டைகள் நடைபெறுகின்றன.

நீஸ்டர் நதியின் தாழ்வரைகளில் டிகினுவுக்கும், போஸாரிக்கும் தெற்கில் செம்படை விரிவான ஒரு புதிய தாக்குதலைத் துவக்கியிருக்கிறது.

போலிஷ் நாசவேலைப் படைகள் லுவாவுக்குப் போகும் ரஸ்தாவிலுள்ள பிரெஸிமிசல், சானேக் முதலிய இடங்களிலுள்ள இருப்புப்பாதை பாலங்களைத் தகர்த்துவிட்டன.

ருஷ்ய கடற்படை கருங்கடலில் நடமாடிக்கொண்டிருக்கிறது.

**இதாலி.**—சில இடங்களில் சில்லரைச் ச்சரவுகள் நடைபெறுகின்றன.

நேசதேசக் கடற்படை, விமானப் படை உதவிகொண்ட யூகோஸ்லாவியா கொரில்லாப் படைகள் டால்மேஷியா கடற்கரைக் கருகில் மால்ஜாத் தீவிலிறங்கிவிட்டார்கள். ஏட்ரியாடிக் கடலிலுள்ள கோர்குலாத்தீவையும் பிடித்தனர். கடற்கரையிலுள்ள மோஜர் கோராட், ஸாண்ட்ஜாக், சுவேதி, இவான் செலினு, இவானுக், சாபோவிசி என்ற இடங்களையும் கைப்பற்றியிருக்கிறார்கள்.

**விமானப்போர்.**—இந்த வாரத்தில் கீழ்கண்ட லக்ஷியங்கள் தாக்குண்டன. கால்ஸ் ரூஹி மூனிச், போலஸ்தி, புகாரெஸ்டு, பிரெடரிக்ஷாபன், ஆல்னேயி, மாண்ட்ஸென், ஸ்டட்கார்ட், பெர்லின், படையெடுப்புக்கு லாயக்குள்ள கடற்கரை பிரதேசங்கள் சேர்ந்தாற்போல் 10-நாட்களாக 1,000 வெடி விமானங்கள் 8,000 டன்கள் எடைமானமுள்ள வெடி குண்டுகளைப் பொழிந்தன. 24-மணி நேரத்திற்குள் 5,000 தாக்குதல்கள் ஏற்பட்டன.

**பஸிபிக் கடல்.**—அமெரிக்கப் படைகள் மார்ஷல்ஸ் தீவைச்சேர்ந்த உஜேலாங்க் என்னும் தீவைப்பிடித்தனர்.

ஆஸ்திரேலியர்கள் நியூ கினியாவிலுள்ள மாடாங், அலெக்ஸிஸ்ஷாபன் முதலிய இடங்களைப்பிடித்தனர். ஹூவான் தீபகற்பத்திலிருந்து ஜப்பானியர்கள் துறத்தியடிக்கப்பட்டார்கள்.

**பர்மாப் போர்முனை.**—இம்பாலுக்குத் தென் மேற்கில் பிஷன்பூருக்கு மேற்கிலுள்ள ஸில்சார் பாதையை ஜப்பானியர்கள் இரண்டு இடங்களில் துண்டித்துவிட்டார்கள். இம்பாலைத் தாக்கும் வேகம் தணிந்துவிட்டது. நாம் இப்பொழுது முன்னேறித் தாக்கிவருகிறோம். இம்பாலுக்கு வடக்கில் ஐந்து மைல்கள் தூரத்திலுள்ள காங்க்ரோ தோங்க்பி என்னும் இடம் நேசதேச வசமாகிவிட்டது.

கோஹிமாவில் மாகாணக் கமிஷனரின் விடுதியைச் சுற்றி கடும் போர் நடைபெறுகிறது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**23—4—44.** (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமானத் தொழிற்சாலைகள்—ஆஸ்திரியாவிலுள்ள வெய்னர் நியூஸ்டாட் (Weiner Neustadt).

விமான நிலயம்.—வியென்னாக்கு (Vienna) அருகே.

விமான தளம்.—பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium).

இரவு.—ஜெர்மனியிலுள்ள மான்ஹீம் (Mannheim).

தளவாடங்கள்.—பெல்ஜியத்திலுள்ள வில்வோர்டி (Vilvorde).

இதாலி (Italy).

(51 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன. 17 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

பாலங்கள்.—அட்டிகிலியானோ (Attigliano).

ரயில் தளங்கள்.—செஸினா (Cecina).

துறைமுக ஸ்தாபனங்கள்.—அங்கோனா (Ancona).

யுத்த தளவாடக் குவியல்கள்.—வால்மோன்டோன் (Valmontone).

பீரங்கி ஸ்தாபனங்கள்.—காஸினோ (Cassino), ஆன்ஸியோ (Anzio).

விமான நிலயம்.—ரியெட்டி (Rieti), போலிக்னோ (Foligno), பெருகியா (Perugia).

ரயில்வே இலக்குகள்.—டுப்ரோவ்னிக் (Dubrovnik), வலோனா (Valona).

கப்பல்கள்.—ஏஜியான் (Aegean).

இலக்குகள்.—ஸான் ஸ்டெபானோ (San-Stefano) பியாம்பினோ (Piombino), ஜினோவா (Genoa), பார்மா (Parma).

ருஷ்யா (Russia).

51 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

மோயென் (Moen), ஈடன் (Eten), பாரம் (Param).

எதிரி சைனியங்கள்.-மார்ஷல்ஸ் (Marshalls).

விமான நிலயம் —வீவாக் (Wewak).

ரபால் (Rabaul).

பர்மா (Burma).

மேமியோ (Maymyo).

ரயில்வே.—மோல்மினிற்கும் (Moulmein), மார்ட்டபனிற்கும் (Martaban) இடையில்.

எதிரி போக்குவரத்துகள்.—வட பர்மா (North Burma).

இலக்குகள்.—மாயு (Mayu), கலடான் (Kaladan), அரக்கான் (Arakan).

**24—4—44.** (திங்கட்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

(103 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன. 55 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

பகல்.—விமானத் தொழிற்சாலைகளும், இதர தொழிற்சாலைகளும்—பிரையெட்ரிக்ஷாபன் (Friedrichshafen).

விமான நிலயங்கள்.—மியுனிச் (Munich).

ரயில்வே தளங்கள்.—புகாரெஸ்ட் (Bucharest).

ரயில் தளங்கள்.—புகாரெஸ்ட் (Bucharest), புலோயெஸ்டி (Ploesti).

விமானத் தொழிற்சாலை.—பெல்கிரேட் (Belgrade).

ரயில்வே தளங்கள்.—லோவெய்ன் (Louvain), அமீன்ஸ் (Amiens).

கப்பற்கட்டுந்துறைகள், கப்பல்கள்.-டியெப்பி (Dieppe).

இரவு.—(29 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இலக்குகள்.—கார்ல்ஸ்ரூ (Karls Ruhe), மியூனிச் (Munich), டஸ்ஸல்டார்ப் (Dusseldorf).



ரயில்வே டெப்போக்கள்.—சாம்பிளி (Chambly).

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

இதாலி (Italy).

(29 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன. 16 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

ரயில் போக்குவரத்துகள்.—மத்திய இதாலி (Central Italy).

கப்பல்கள்.—லெக்ஹார்ன் (Leghorn).

தரைமீதுள்ள விமானங்கள்.—காஸினோ (Cassino) ரஸ்தா.

ரயில் போக்குவரத்துகள்.— அவெஸ்ஸானோ (Avezzano).

கப்பல்கள்.—யுகோஸ்லாவ் (Yugoslav) கடற்கரை.

ருஷ்யா ((Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—வீவாக் (Wewak), ரபால் (Rabaul).

விமான நிலயம்.—டொபெரோ (Tobero).

துருப்பு ஏற்றிய படகுகள்.—நானூனுமா (Nananuma).

கடல் விமான தளம்.—டிரக் (Truk).

ஜப்பானிய தளங்கள்.—மார்ஷல்ஸ் (Marshalls).

ராராமுஷிரு (Raramushiru), ஷிமுஷூ (Shimushu).

பர்மா (Burma).

(2 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இரண்டு பாலங்கள்.-பிங்கெய்ங் (Pyingaing).

எதிரித் துருப்புகள், பீரங்கி ஸ்தாபனங்கள், படகுகள்.—வுந்தோ (Wuntho), சின் மலைகள் (Chin Hills), மேல் சிண்ட்வின் (Upper Chindwin).

இலக்குகள்.-கமெய்ங் (Kamaing), மொகாங் (Mogaung), மிட்கினா (Myitkyina).

விமான நிலயம்.-ஹெஹோ (Heho), ஆங்க்பாக் (Aungbach).

**25—4—44.** (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

(15 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன; 12 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

பகல்.—ராணுவ இலக்குகள்— தென்மேற்கு ஜெர்மனி (S. W. Germany).

விமான நிலயம்.—நான்ஸி (Nancy), மெட்ஸ் (Metz), டிஜோன் (Dijon).

ராணுவ இலக்குகள்.—பாஸ் டி கலே (Pas De Calais).

2 விமான நிலயங்கள்.-பெல்ஜியம் (Belgium).

இரவு.—கொலோன் (Cologne).

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

ரயில் ஸ்தலம்.—பாரிஸுக்கு மேற்கு.

விமான நிலயம்.—பிரான்ஸ் (France).

இதாலி (Italy).

விமானத் தொழிற்சாலை.—டூரின் (Turin).

ரயில்வே தளம்.—பெர்ரரா (Ferrara).

பாலம்.—பார்மா (Parma).

எதிரி ரயில் போக்குவரத்துகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்களுக்கு வடக்கு.

தளவாடக் குவியல்கள்.—வால்மான்டி (Valmonte).

பெரிய மோட்டார் படகுகள்.—எல்பஸன் (Elbasan).

கப்பல்கள்.—ஏஜியான் (Aegean).

ருஷ்யா (Russia).

(79 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

விமானச்சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய தளம்.—நியூகினி (New Guinea), நியூ பிரிடன் (New Britain), மார்ஷல்ஸ் (Marshalls).

பர்மா (Burma).

விமான நிலயம்.—ஹெஹோ (Heho), ஆங்பாங் (Aungbang).

எதிரி சைனியங்கள்.—கொஹிமா (Kohima), இம்பால் (Imphal), டிடிம் (Tiddim) ரஸ்தா.

**26—4—44.** (புதன்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—ராணுவ இலக்குகள்—பிரன்ஸவிக் (Brunswick).

விமான நிலயம்.—பிரான்ஸ் (France).

ராணுவ இலக்குகள்.—பெல்ஜியம் (Belgium).

ரயில்வே தளம்.—லோவெயன் (Louvain), சென்ட் கிஸ்லெய்ன் (St. Ghislain).

துணைக்காவலோடு கூடிய கப்பல்கள்.—நார்வே (Norway).

இரவு.—தொழிற்சாலை இலக்குகள்.—எஸ்ஸென் (Essen), ஷுவெய்ன்பர்ட் (Schweinfurt).

ரயில்வே தளம்.—வில்லெனினியுவி (Villeneneuve).

இலக்குகள்.—ஹாம்பர்க் (Hamburg).

சுரங்கவெடி பாவுதல்.—எதிர் ஜலப் பிராந்தியங்களில்.

இதாலி (Italy).

பாலங்கள், குவியல்கள்.—ஆன்ஸியோ (Anzio) முனை.

கப்பல்கள்.—ஏஜியான் (Agean).

ருஷ்யா (Russia).

(22 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).
விமானச்சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்த (Far East).

ஒரு தகவலும் இல்லை.

பர்மா (Burma).

எதிரி சைனியங்கள்.—கொஹிமா (Kohima), இம்பால் (Imphal), டிடிம் (Tiddim).
இலக்குகள்.—அரக்கான் (Arakan), மாயூ (Mayu), கலடான் (Kaladan), சின் மலைகள் (Chin Hills).

**27—4—44.** (வியாழக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—ராணுவ ஸ்தாபனங்கள்.—வடக்கு பிரான்ஸ் (Northern France).
ஜெர்மன் விமான நிலயங்கள்.—நான்ஸி (Nancy), டூல் (Toul).
சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார்செய்து சேகரிக்குமிடங்கள்.—பிய்ன்வில்லி (Blainville), சாலானேப் சர் மார்னி (Chalone-Sur-Marne).
இலக்குகள்.—பெல்ஜியம் (Belgium).
ரயில்வே தளங்கள்.—ஹெய்னி செயின்ட் பிரி (Haine St. Pierre).
இரவு.—(36 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
ரயில்வே தளங்கள்.—பெல்ஜியத்திலுள்ள மண்ட்ஸென் (Montzen).
ரயில்வே ஜங்ஷன்கள்.—ஆல்னுயி(Aulnoye).
இலக்குகள்.—பிரியெட்ரிக்ஷாபன் (Friedrichshafen), ஸ்டட்கார்ட் (Stuttgart).
சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

இதாலி (Italy).

பாலங்கள், துவியல்கள்.—ஆன்ஸியோ (Anzio).
கப்பல்கள்.—ஏஜியன் (Aegean).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

பர்மா (Burma).

எதிரி சைனியங்கள்.–கொஹிமா (Kohima), இம்பால் (Inphal).
ரயில்வே ரஸ்தா.—ஷ்வெபோ (Shwebo), யுவாடாங் (Ywataung).
ஸ்டோர் துவியல்கள்.—காலிமியோ (Kalemyo).
படகுகள், எதிரி சைனியங்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

**28—4—44.** (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமான நிலயம்—பிரான்ஸ் (France).
ராணுவ ஸ்தாபனங்கள்.—செர்பர்க் (Cherbourg).
விமானங்கள் சரிபார்க்குமிடங்கள்—டூர்ஸ் (Tours).
ஜெர்மன் சைனியங்கள்.–பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium).
இரவு.—விமானத் தொழிற்சாலை—நார்வேயிலுள்ள ஆஸ்லோ (Oslo), ஹாம்பர்க் (Hamburg).

இதாலி (Italy).

(5 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன; 15 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
துறைமுகங்கள்.–புலோம்பினோ (Plombino), ஆர்பெட்டெல்லோ (Orbetello), ஸான்ஸ்டெபானோ (Sanstefano).
பாலங்கள்.—ஆர்வியெட்டோ (Orvieto), இன்கிஸா(Incisa), அரெஸ்ஸோ (Arezzo).
பீரங்கி ஸ்தாபனகள், ரயில் இலக்குகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.
துறைமுகம்.—ஜினோவா (Genoa).

ருஷ்யா (Russia).

(71 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).
விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—வீவாக் (Wewak).
எதிரி சைனியங்கள்.—நியூ கினி (New-Guinea).
இலக்குகள்.—ரபால் (Rabaul), கூவாம் (Guam), காரோலைன்ஸ் (Caroline).

பர்மா (Burma).

எதிரி சைனியகள்.—கொஹிமா (Kohima), இம்பால் (Imphal).
இலக்குகள்.—அரக்கான் (Arakan), மாயூ (Mayu), கலடான் (Kaladan), சின் மலைகள் (Chin Hills).

**29—4—44.** (சனிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

(88 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன 77 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
பகல்.—தொழிற்சாலை ராணுவ இலக்குகள்—பெர்லின் (Berlin).
ராணுவ இலக்குகள்.–பெல்ஜியம் (Belgium), வடக்கு பிரான்ஸ் (Northern France).
கப்பல்கள்.—டூலான் (Toulon).
இரவு.—ஒரு தகவலும் இல்லை.



இதாலி (Italy).

(12 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன. 11 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
பாலம்.—டெர்னி (Terni).
பாலங்கள்.—அட்டிகிளியானோ (Atigliano), பாண்டிஸீவ் (Pontesieve).
இலக்குகள்.—டால்மேஷன் (Dalmatian) கடற்கரை.
ஸ்தாபனங்கள்.—போர்ட் இல்ரூஸ் (Port Ilruz).
துறைமுக ஸ்தாபனங்கள்.—ஜினோவா (Genoa).
(50 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

டச்சு நியூகினியிலுள்ள வட்கி (Wadke).
ஜப்பானிய கப்பல்.—ஜில்வைன் பே (Geelvine Bay).
ஸ்டோர் இலக்குகள்.—காண்டர் (Condar).
ஜப்பானிய தளம்.—மார்ஷல்ஸ் (Marshalls).

பர்மா (Burma).

(2 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
விமானச் சண்டைகள்.—ஹெஹோ (Heho), ஆங்பன் (Aungban), விமான நிலயம்.
விமான நிலயம்.—காங்காங் (Kangaung), மெய்க்டிலா (Meiktila).
ஸப்ளைக் குவியல்கள்.—காலிவா (Kalewa).
பாலங்கள்.-புவேபோ (Puowbwe), காலிவா (Kalewa).
இலக்குகள்.—புரோம் (Prome), அரக்கான் (Arakan), மாயூ (Mayu), சலடான் (Kaladan), நாகா (Naga), மித்தா (Myittha), மாண்டலே (Mandalay).

## *விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.*

**24—4—44.** (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

பல இடங்கள்.—தெற்கு, மேற்கு இங்கிலாந்து. (5 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**25—4—44.** (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

லண்டன் (London).

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**26—4—44.** (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

லண்டன்.—(London) பிரதேசம். (விமான எதிர்ப்பு எச்சரிப்பு மட்டும்).

ருஷ்யா (Russia).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—அஸ்ஸாம் (Assam). (3 ஜப்பானிய விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

**27—4—44.** (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

சிறிது எதிரி விமான நடவடிக்கைகள்.—இங்கிலாந்து. (1 எதிரி விமானம் நாசமாக்கப்பட்டது).

ருஷ்யா (Russia), தூரக்கிழக்த (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**28—4—44.** (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**29—4—44.** (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு பட்டணம்.—மேற்கு இங்கிலாந்து. (3 ஜெர்மன் விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**30—4—44.** (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.
விமான தளம்.—நியூகினியாவிலுள்ள அய்டாபி (Aitape).

---

# *யுத்தக் குறிப்புகள்.*

---

**யுத்த நிலைமை.** இவ்வாரத்திலும் அமைதி நிலவுகிறது. ருஷ்ய பிரகடனங்களிலும் ஒரு தகவலும் காணப்படவில்லை. இதாலியப் போர் முனையில் சில்லரைச் சச்சரவுகள்தான் நடைபெறுகின்றன. இந்தியப் போர் முனையில் முக்கியமான சம்பவங்கள் ஒன்றும் நடைபெறவில்லை. பஸிபிக்கில் நியூ கினியாவில் மாடாங்கும் அலெக்ஸிஸ்ஷர்பனும் விழுந்ததைத் தவிர விமான நடவடிக்கைகள்தான் நடைபெறுகின்றன

ஆகிலும் நேசதேசத்தார்கள் சும்மா இருக்கிறார்கள் என்று நினைப்பது தவறு. விரிவான பலமான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. நடைபெறப்போகும் மகத்தான படையெடுப்புக்கு ஆராய்ச்சி முறையிலோ, தயாரிப்பு முறையிலோ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கிழக்குப் போர்முனையில் நீஸ்டர் நதியின் தாழ்வரைகளில் ருஷ்யர்கள் புதிய தாக்குதலைத் துவக்கியிருக்கிறார்கள். போலந்திலுள்ள எதிர்ப்புப் படைகள் மும்முரமாக வேலை செய்ய ஆரம்பித்துவிட்டன. ஏட்ரியாடிக் கடற்கரையில் நேசதேசத்தாரின் உதவி கொண்ட கொரில்லாப்படைகள் முக்கியமான தீவுகளையும், கடற்கரையிலுள்ள ஸ்தானங்களையும் பிடித்து வருகின்றன. பர்மா போர்முனையில் பருவ காலத்திற்குள் இம்பாலைப் பிடித்துவிடவேண்டும் என்று ஜப்பானியர்கள் ஊக்கமாகச் செய்த தாக்குதல்கள் துரத்தியடிக்கப்பட்டன.

வி வி வி வி வி

**பலமான விமானத் தாக்குதல்.** யுத்தத்தின் மிகவும் முக்கியமான நடவடிக்கை மேற்கு ஐரோப்பாவில் நடைபெறும் விமானத் தாக்குதல் தான். இந்த நடவடிக்கை நாளுக்குநாள் வலுவடைந்துவருகிறது. ஏப்ரல்மீ 24உ அன்று 1,000 லங்காஸ்டர் விமானங்கள் வடக்கு இதாலி, பிரெஞ்சு ஆல்ப்ஸ் மலைகளைத்தாண்டி 2,000 மைல்கள் சென்று திடீரென்று வேறு பக்கம் திரும்பி மியூனிச்பேரில் 5 லக்ஷம் எரி வெடிகளைப் பொழிந்தன. மியூனிச்சும், கார்ல்ஸ்ரூஹியும் இருபக்கத்திலிருந்து தாக்கப்பட்டன எதிரி ஏமாற்றமடைந்தான்.

ஏப்ரல் 27-ம் தேதி அன்று 5,000 வெடி விமானங்களும், சண்டை விமானங்களும் 24-மணி நேரத்திற்குள் 5,000 தடவை தாக்கி 8,000 டன்கள் எடைமானமுள்ள குண்டுகளைப் பொழிந்தன; இப்பேர்ப்பட்ட மகத்தான தாக்குதல் 10-வது நாளில் ஏற்பட்டது. ஏப்ரல்மீ 29உ அன்று அமெரிக்க வெடி விமானங்கள் பெர்லினை பகலில் தாக்கி 1,800 டன்கள் எடைமானமுள்ள குண்டுகளைப் பொழிந்தன. விமானப்படை சீப் மார்ஷல் ஸர் ஆர்தர் டெட்டர் ஒரு சமயம் சொன்னதுபோல யுத்தத்தின் முற்போக்கை அறியவேண்டுமானால் குண்டுவீசும் முறையை கவனிக்கவேண்டும். விமான நடவடிக்கையை நாம் தினசரி கவனிக்கும்பொழுது நேசநாட்டாரின் திட்டம் நன்றாய்ப் புலப்படுகிறது. நேசதேச வெடி விமானங்கள் விமானங்களையும், விமான உருப்புகளையும், உற்பத்தி செய்யும் எதிரியின் தொழிற்சாலைகளையும் சென்ற இரண்டு வாரங்களாக நொருக்கி வருவதுடன், விமானத் தாக்குதல் மற்ற மூன்று லக்ஷியங்களுக்கும் பரவியிருக்கிறது. இங்கிலீஷ்கால்வாய்க் கடற்கரையிலும், வடக்கு பிரான்ஸிலும், பெல்ஜியத்திலும், மேற்கு ஜெர்மனியிலும் உள்ள விமான நிலய போக்குவரத்துகளும், குறிப்பிடமுடியாத ராணுவ இலக்குகளும் தாக்கப்படுகின்றன. போக்குவரத்து நிலயங்களை அழித்துவிடுவதன்மூலம் படையெடுப்புக்கு சௌகரியம் ஏற்படுத்திக்கொள்ளும் உத்தேசத்துடன் இந்த விமானத் தாக்குதல்கள் நடைபெறுகின்றன.

சென்ற வாரத்தில் தாக்கப்பட்ட ஆகன் என்பது பிரெஞ்சு ஜெர்மன் எல்லைச்சரகத்திலுள்ள சீசாக் கழுத்துபோன்ற பாகம். அதன் வழியாகத்தான் கடற்கரையிலுள்ள படைகளுக்கு ஜெர்மனியிலிருந்து சாமான்கள் கொண்டுபோகவேண்டும்.

எதிரி நிலைமை பயங்கரமாக இருக்கிறதென்று ஒப்புக்கொண்டபின், பெர்லின் ஒலிபரப்பில் பின்வருமாறு சொல்லப்பட்டது. "ஜெர்மனியைத் தாக்கும் மகத்தான விமான நடவடிக்கை துவங்கிவிட்டது. ஜெர்மன் விமானப்படையை ஆகாயத்தில் சஞ்சரிக்கவொட்டாமல் தடுக்க வேண்டுமென்று எதிரிகள் திட்டம் போட்டிருக்கிறார்கள். வெடி விமானங்களோடு துணைக்கு வரும் வெகுதூரம் செல்லக்கூடிய சண்டை விமானங்கள் மிகப் பெரியவைகள்."

இந்த அபாயத்தை சமாளிக்க கடற்கரையிலுள்ள ஜெர்மன் சண்டை விமானங்களின் சங்கியை சென்ற வருஷத்தில் 25 சத விகிதம் பாக்கியிருந்ததுபோக இப்பொழுது 75 சத விகிதத்திற்கு அதிகரித்து இருக்கிறது. இதிலிருந்து ஜெர்மனியின் பலவகைப்பட்ட விமான உற்பத்தி சக்தி அதிகரித்து இருக்கிறதென்று பொருள்படாது. கிழக்குப் போர்முனையில் உள்ள சண்டை விமானங்கள் மேற்குப் போர்முனையில் உள்ள தற்காப்புகளைப் பலப்படுத்தக் கொண்டுவரப்பட்டுவிட்டன. நேசதேசப் படையெடுப்பு ஏற்படும்பொழுது அவைகளை உபயோகிக்கும் உத்தேசத்துடன் எதிரி விமானங்களை சேமித்துவைக்கிறான். ஆகிலும் அவைகளை நேசதேச விமானத் தாக்குதல்கள் பலஹீனப்படுத்திவிடுகின்றன. விமானத் தாக்குதல் வலுவடைந்து வரும்போது நேசதேசத்தாருக்கு விமான நஷ்டமும் பலமானதாக இருக்கிறதென்று சொல்லிப் பொதுமக்களுக்கு ஜெர்மன் வியாக்யானிகள் ஆறுதல் அளிக்கிறார்கள். இவ்வருஷத்தின் முதல் மூன்று மாதங்களில் 20,000 பிரிடிஷ், அமெரிக்க விமானிகள் அழிக்கப்பட்டார்கள் என்று சமீபத்தில் பெர்லினிலிருந்து ஒலிபரப்பப்பட்டது. இது மிகையான புள்ளி விவரம். "விமான யுத்தத்தில் ஒரு கட்சியினருக்குமட்டும் வெற்றி கிடைக்காது. இரு கட்சியினருக்கும் நஷ்டம் ஏற்படத்தான்கூடும்" என்று ஜெர்மானியர்கள் சொல்லுவது பொருத்தமான சமாதானமாகாது. ஜெர்மானியருக்கு எவ்வளவு ஆறுதல் ஏற்பட்டாலும் நேசதேசத்தாருக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டாலும் விமானத் தாக்குதலின் பலம் குறைவுபடப்போவதில்லை. நேசதேசத்தாரின் விமானத் தாக்குதல் நாளுக்கு நாள் ஓங்கிவருகிறது. நாஸிகளை முறியடிக்கும் வரையில் இது அதிகரித்துக்கொண்டேவரும்.



வி வி வி வி வி

**ருஷ்யப் போர்முனை.** ஸெபாஸ்டபூல், லுவாவ், காலாட்ஸ் என்ற மூன்று ஜெர்மன் தற்காப்புகளில் போர் நடைபெறுகிறது.

ருஷ்யர்கள் கிரிமியா பூராவையும் ஒருவாரத்திற்குள் ஆக்கிரமித்ததென்பது அற்புதமான நடவடிக்கை என்றாலும் ஸெபாஸ்டபூலில் அவர்களுடைய முன்னேற்றம் தடைபடுமென்று எதிர்பார்க்கலாம். ஸெபாஸ்டாபூலில் அகப்பட்டுக்கொண்டிருக்கும் துருப்புகளை கடல் மூலமாகக் கொண்டுபோக சௌகரியம் ஏற்படுவதற்காக காலங்கடத்த ஜெர்மானியர்கள் இங்கு எதிர்ப்பை பலப்படுத்துகிறார்கள். ஆகிலும் ஸெபாஸ்டபூலின் வீழ்ச்சி சீக்கிரத்தில் ஏற்பட்டுவிடும். அங்கு இருக்கும் ஜெர்மன் விமானப்படை முடமாக்கப்பட்டுவிட்டது. நகரம் தீப்பற்றி எரிகிறது. ருஷ்யக் கடற்படை கடல் மூலமாகத் தாக்கி வருகிறது.

ஸெபாஸ்டபூல் வீழ்ந்து விட்டால் அங்கிருக்கும் ருஷ்யப்படைகள் ருமேனியாவில் போர் புரியும் ருஷ்யப் படைகளுக்கு ஒத்தாசை செய்யும். ருஷ்யக் கடற்படை டான்யூப் நதி மார்க்கத்தில் நடவடிக்கைகளைத் துவக்கும்.

வி வி வி வி வி

**லுவாவ்.** போலந்து சமவெளிகளினுடையவும், காலீஷியன் எண்ணெய்ப் பிரதேசத்திற்கும் தலைப்பில் இருக்கும் லுவாவ் முக்கியமான அரண். இந்தப்பகுதியில் ருஷ்யர்களுக்குக் கிடைத்த வெற்றியின்மூலம் அதன் பலம் குறைந்துவிட்டது. லுவாவை, டார்னுபூல், புரோடி, கோவல் என்ற மூன்று அரண்கள் ரக்ஷிக்கின்றன. டார்னுபோல் விழுந்துவிட்டது. மற்ற இரண்டும் சுற்றி வளைக்கப்பட்டுவிட்டன. டார்னுபோல் தளத்திலிருந்து ருஷ்யர்கள் லுவாவை சுலபமாகத் தாக்கலாம். லுவாவ் விழுந்துவிட்டால் ஸெக்கோஸ்லோவாக்கியாவுக்கும், போலந்துக்கும் போகும் மார்க்கம் திறக்கப்பட்டுவிடும்.

வி வி வி வி வி

**காலாட்ஸ் வாசற்படி.** இந்த இடைவெளிப் பிரதேசம் காலாட்ஸ் நகரத்திற்கும் பாஸ்கனி நகரத்திற்கும் மத்தியிலுள்ள டான்யூப் நதிப் பிரதேசத்தில் உள்ள சதுப்பு நிலங்களில் இருக்கும் ஜெர்மன் தற்காப்பு அரண். அதன் பத்திரத்தைப் பொறுத்து புகாரெஸ்ட், போலந்திய எண்ணைப் பிரதேசம், மத்திய ருமேனியாவின் க்ஷேமம் நிலைபெற்றிருக்கிறது. டிராஸ்போலை அடைந்திருக்கும் ருஷ்யர்கள் காலாட்ஸுக்கு சமீபத்தில் உள்ள கிஷினேவையும், பாஸ்கானியையும் ஆபத்துக்குள்ளாக்கியிருக்கியிருக்கிறார்கள்.

ருஷ்யாவின் சமீப முன்னேற்றத்தைக் கண்டு ஜெர்மானியர்கள் பீதி அடைந்துவிட்டார்கள். ரிப்பன்டிராப் பின்வருமாறு சொல்லுகிறான். "நாம், பெர்லினை இழந்தாலும் இழப்போம். ஆனால் ருமேனியாவை நம்முடைய தாய் நாட்டைப்போல் ஜெர்மன் ஸோல்ஜர்கள் ரக்ஷிப்பார்கள் என்று நம்புங்கள்." காலாட்ஸ் மிகவும் முக்கியமான போர்முனை. இதைத் தற்காப்பு செய்ய ஜெர்மானியர்கள் தீவிரமான முயற்சி செய்வார்கள். ருஷ்யர்கள் தரை மூலமாகவும், ருஷ்யக் கடற்படை நதியிலும் தாக்குதலைச் செய்யக்கூடும். ஆகிலும் அநேகர்கள் ஊகிக்கிறபடி டான்யூப் நதிக்கரையில்தான் முடிவான யுத்தம் நடைபெறும். இந்த நடவடிக்கைகளில் பிரிடிஷ் அமெரிக்கா விமானப்படை சிறந்த நடவடிக்கையை எடுத்துக் கொள்கிறது. அவைகள் ஹங்கேரியையும், ருமேனியாவையும் தாக்குகின்றன. டார்னுசெவரின், பிராஸோ முதலிய இடங்களில் சப்ளை மார்க்கங்களைத் துண்டித்து விடுகின்றன. டான்யூப் நதியில் சுரங்க வெடிகளைப் பாவுகின்றனர்.

வி வி வி வி வி

**பர்மாப் போர்முனை.** பர்மாப் போர்முனையைப்பற்றி ஜப்பானியர்கள் விடுக்கும் செய்திகள் உண்மைக்கு விரோதமானவை. ஜப்பானியப்படைகள் இந்தியாவுக்குள் நுழைந்து தொடர்ச்சியாக சிறந்த வெற்றிகளைப் பெற்றுவருகின்றன என்று டோஜோ பீத்திக்கொள்ளுவது இனிமேல்தான் நடைபெறவேண்டும். இம்பால் பிரதேசத்தில் மகத்தான போர் கூடிய சீக்கிரம் நடைபெறுமென்று டோக்கியோ ஒலிபரப்பில் சொல்லப்பட்டது, இன்னும் நடைபெறவில்லை. தற்போதிய யுத்த நிலைமை பின்வருமாறு.

1. எதிரி நம்முடைய ஸ்தானங்களுக்கு பின்சென்று நிலைநிற்க வசதி பெற்றிருக்கிறான்.

2. இந்த கபட நடவடிக்கைமூலம் அவன் சாசுவதமான ஒரு லாபத்தையும் சம்பாதித்துவிடமுடியாது. அதைப் பெறவேண்டுமானால் அவன் நம்மை எதிர்த்துப் போராடவேண்டும்.

3. படைபலத்திலும், முஸ்தீப்பிலும், விமானப்படையிலும் நேசநாடுகளுக்கு ஆதிக்கம் இருக்கிறது.

4. 700 சதுர மைல்கள் கொண்ட இம்பால் சமவெளியைச் சுற்றி 5,000 அடி உயரமுள்ள மலைகள் இருக்கின்றன. சமவெளி நேசதேச வசம் இருக்கிறது. மலைகளில் வீற்றிருக்கும் ஜப்பானியர்கள் சமவெளியைச்சுற்றி வளைத்துவிட்டதாகச் சொல்லலாம். ஆகிலும் இம்பால் முற்றுகைக்குள்ளாகிவிட்டதென்று சொல்லுவதற்கில்லை. சமவெளியில் இறங்க ஜப்பானியர்கள் செய்த எல்லாப் பிரயத்தனங்களும் தூரத்தி அடிக்கப்பட்டன. கோஹிமாவை எதிரி தாக்கியபோதெல்லாம் அவன் முறியடிக்கப்பட்டான். கோஹிமாவை விலக்கிவிட்டு அஸ்ஸாம் இருப்புப்பாதையில் உள்ள டிமாபூருக்குச் செல்ல எதிரி செய்த பிரயத்தனமும் வீணாகிவிட்டது.

பருவகாலம் வருமுன் இம்பாலைப் பிடித்துவிடவேண்டும் என்று ஜப்பானியர்கள் முயற்சிக்கிறார்கள். இதைத் தடுத்துவிடவேண்டுமென்று நேசநாட்டார்கள் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். மவுண்ட் பேடன் பிரபு இதை உறுதிப்படுத்துகிறார். அவர் பின்கண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். "பர்மாப் போர்முனை என்பது அரக்கானிலிருந்து சிண்ட்வின், ஹுகாங் வழியாக யூனுன் வரையில் 800 மைல்கள் பரவியிருக்கிறது. இது காடடர்ந்த பிரதேசம். இதற்குள் படைகள் முன்னேறுவதைத் தடைசெய்யமுடியாது. இம்பால் பிரதேசத்தில் எதிரி ஊடுருவிச் சென்றிருக்கிறான் என்றால் நாமும் பர்மா பிரதேசத்தில் முன்னேறியிருக்கிறோம். எதிரியை அசைய முடியாமல் செய்து அவனுடைய போக்குவரத்து மார்க்கங்களை துண்டிக்கும் வேலையில் நாம் இப்பொழுது ஈடுபட்டிருக்கிறோம். எதிரி முன்னேறியபின் லெடோ ரஸ்தாவின் அமைப்பு துரிதப்பட்டுவிட்டது. இம்பாலில் உள்ள நம்மைத் தாக்கியதில் எதிரி பெரிய தவறுதல் செய்திருக்கிறான். லெடோ போர்முனையில் நம்மைத் தாக்க எதிரி படைபலத்தை உபயோகித்திருந்தால் சீனப்படைகளை மீட்கினாவிற்கு முன்னேறவொட்டாமல் தடைசெய்திருக்கலாம். இங்கு நேசதேசத்தாரின் நடவடிக்கைகள் வெற்றிகரமாக முடியுமென்பதில் சந்தேகமில்லை. எதிரியைத் தாக்கி நாம் அவனை அழித்துவிடுவோம்.

**உண்மையா, கட்டுக்கதையா ?** ஜெர்மனியில் ஏதோ ஒரு இடத்தில் ஹிட்லரும், முஸோலினியும் கூடிப்பேசியதாகக் கேள்விப்படுகிறோம். முஸோலினியின் சித்த ஸ்திதியும், தேக ஸ்திதியும் சரியாயில்லாததால் அவ்வித சந்திப்பு ஏற்பட்டிருக்கமுடியாது என்று சில வதந்திகள் உலாவுகின்றன. முஸோலினியின் விடுதி இருக்கும் கோமோ மாகாணத்தின் ஜனங்கள் முஸோலினியை அநேக காலமாகப் பார்க்கவில்லை. அவனுடைய வைத்தியர்கள் அவனை இப்பொழுது கவனிக்கவில்லை. இதாலியத் துருப்புகளை அவன் கிரேஸியானியுடன் சென்று பார்வையிட்டதாகச் சொல்லப்படுகிறது. அவன் ஜெர்மானியரால் கைதி செய்யப்பட்டுவிட்டான். ஆகையால் முஸோலினி திடீரென்று ஆவிர்ப்பவித்து நடவடிக்கையில் ஈடுபட்டான் என்பது சந்தேகாஸ்பதம்.

இந்த சந்திப்பைப்பற்றி அச்சுநாட்டாரின் வழக்கம்போல் ஜெர்மன் அறிக்கை நிலயம் பிரகடனம் செய்கிறது. சந்திப்பு குதூகலமாக நடைபெற்றது. இருவருக்குள் எல்லா விஷயங்களிலும் நல்லுணர்ச்சி ஏற்பட்டது. இருவரும் இறுதிவெற்றியில் நம்பிக்கை கொண்டார்கள். தரைப்படை, கடற்படை, விமானப்படை ஒன்றுமில்லாத முஸோலினி இதற்கு ஒத்தாசை செய்வதாக ஒப்புக்கொண்டான். ஹிட்லர் போல்ஷிவிசத்தையும் மேற்கு ஐரோப்பிய முதலாளிகளையும் தூஷித்து ஐரோப்பாவில் புதிய உலக அமைப்பை நிறுவுவதாக உத்தரவாதம் செய்தான்.

**ஸ்வீடன்.** ஜெர்மனியுடன் தான் செய்துகொண்ட ஒப்பந்தத்தை ரத்து செய்யமுடியாது என்ற காரணத்தினாலும், நேசநாடுகள் 17 சதவிகிதம் பொருள்களை இறக்குமதி செய்யும்பொழுது ஜெர்மனி 83 சதவிகிதம் பொருள்களை இறக்குமதி செய்வதாலும் ஜெர்மனிக்கு சப்ளைகளை அனுப்பவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறதென்று ஸ்வீடன் அனுப்பியிருக்கும் பதில் நேசநாடுகளுக்கு திருப்தி அளிக்கவில்லை. ஜெர்மனியிடம் பயந்து அது வியாபாரத்தை நடத்திவரலாம். மிஸ்டர் கார்டல் ஹல் சொன்னதுபோல யுத்தப்போக்கு நேசதேசத்தாருக்கு சாதமாக மாறிவிட்டதால் ஸ்வீடன் இனிமேல் ஜெர்மனியைக் கண்டு பயப்படவேண்டியதில்லை. அதன் கட்டாயத்திற்கும் உட்படவேண்டியதில்லை. ஜெர்மனிக்கு அனுப்பும் ஒவ்வொரு உதவியும் யுத்தத்தை அனாவசியமாக நீடித்துவிடும். ஆகையால் அமெரிக்காவுக்கும், ஸ்வீடனுக்கும் ஏற்கனவே ஏற்பட்டிருந்த ஒப்பந்தபடி கிடைத்த சௌகரியங்களை ஸ்வீடன் இழந்துவிடும் என்று ஸ்வீடனுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. தற்போதைய நிலைமையில் நேசநாட்டாரிடமிருந்து முக்கியமான சாமான்களைப் பெற்றுவரும் நடுநிலைமை வகிக்கும் நாடுகள் ஜெர்மனியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை ரத்து செய்யவேண்டுமென்று ருஷ்யா சொல்லிவிட்டது.



பிரிடிஷ் பொருளாதார யுத்த மந்திரி இலாகாவின் பார்லிமெண்டரி காரியதரிசியான டாக்டர் டிங்கிள் புட் ஏப்ரல் 26 தேதியன்று காமன்ஸ் சபையில் பின்வருமாறு பேசினார். "ஜெர்மனியின் பால்பேரிங் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை நேசதேச விமானப்படை பகலில் 20 தடவையும், இரவில் 35 தடவையும் தாக்கியிருக்கின்றன. அதன்மூலம் இந்த முக்கியமான உற்பத்தி அதிகமாக குறைந்துவிட்டது. இதை ஸ்வீடன் ஈடுசெய்வதை பிரிடன் அனுமதிக்கப்போவதில்லை".

**ஸ்பெயினும், அயர்லாந்தும்.** ஜெர்மனிக்கு உல்ப்ராம் சப்ளையை நிறுத்தும்படி ஏற்பாடு செய்ய ஸ்பெயினுடன் சம்பாஷணைகள் நடைபெறுகின்றன.

அமெரிக்காவிலிருந்து கோதுமை, காகிதம் முதலியவற்றை ஏற்றிவரும் அயர்லாந்துக் கப்பல்களுக்கு அனுமதிச் சீட்டு கொடுக்கப்படமாட்டாதென்று அயர்லாந்துக்கு மற்றொரு உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறது.

**டென்மார்க்.** இங்கே நாசவேலை விரிவாகவும், பலமாகவும் நடைபெறுகிறது. தினசரி 20 முதல் 40 சம்பவங்கள் நடைபெறுகின்றன. டென்மார்க்கில் பிரிடிஷ் பாராசூட் துருப்புகள் இறங்கினவென்றும் சொல்லப்படுகிறது. இதைக் கண்டுபயந்து டென்மார்க்குக்கும், ஸ்வீடனுக்கும் உள்ள போக்குவரத்தை ஜெர்மானியர்கள் துண்டித்துவிட்டார்கள்.

**பிரிடனின் ஆறுவது வருஷ யுத்த வரவுசெலவு திட்டம்.** அதன் அம்சங்கள் குறிப்பிடத்தக்கவை:—

(1) செலவு 5,937,000,000 பவுன்களுக்கு அதிகரித்திருக்கிறது.

(2) 3,102,000,000, பவுன் வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது.

(3) வருமானத்தில் 2,000,000,000 பவுன் வரிவிகிதத்திலிருந்து கிடைக்கும். இது செலவில் 52 சதவீதத்திற்குச் சரிக்கட்டும்.

(4) நூதன வரிகள்கிடையாது.

---

## டான்யூப் பள்ளத்தாக்குக்காகப் போர்.

(டைம்ஸ் பத்திரிகை).

ஜெர்மனியை முறியடிக்கும் இறுதி யுத்தம் டான்யூப் நதிப் பள்ளத்தாக்கில்தான் நடைபெறுமென்று அநேக ஊக புத்தியுள்ளவர்கள் ஜோஸ்யம் சொல்லியிருக்கிறார்கள்.

இறுதிப்போருக்கு இதுதான் தகுதியான பிரதேசம் என்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது, மற்ற நாடுகளின் சுதந்திரத்தை நாஸிகள் முதல் முதலில் அழித்தது டான்யூப் நதியின் பேரிலுள்ள மகத்தான நகரத்தில்தான். மேலும் நாஸிகளின் கொடுமையின் அபிவிருத்தி இந்த நதி போகும் இடங்களில் தான் நடைபெற்றது. இரண்டாவது, நவீன கவசம் பூண்ட முஸ்தீப்புகளுடன் நடைபெறும் யுத்தத்துக்கு அவசியமான தாதுப் பொருள்களும், காகஸஸ் மலைகளைப் பிடித்து அதிக எண்ணெயை சம்பாதித்து விடலாமென்று நினைத்த ஹிட்லருக்கு அவசியமான எண்ணெய்க் கிணறுகளும் டான்யூப் நதியின் தாழ்வரைகளிலிருக்கும் போலஸ்தியிலிருக்கின்றன.

எதிரியிடமிருந்து இந்த நதிப் பள்ளத்தாக்கைக் கைவசப்படுத்தவும், கிழக்கிலிருந்து மத்திய ஐரோப்பாவுக்குப் போகும் மார்க்கங்களைத் திறந்துவிடவும், பள்ளத்தாக்கிலுள்ள பொருளாதார ஐசுவர்யங்களை எதிரிக்குக் கிட்டவிடாமல் தடுக்கவும் ஒரு பெரிய போர் இப்பொழுது துவக்கப்பட்டிருக்கிறது. மார்ஷல் கோனேவ் பிரத் நதியையும், செரத் நதியையும் தாண்ட முயற்சி செய்து வருவதால் எதிரி காலட்ஸ் நகரத்திலும், கார்பேதியன் மலைகளுக்கும் கடலுக்கும் மத்தியிலுள்ள இடைவெளியிலும் ராணுவச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்துவிட்டான். இந்த வெளியின் மூலம்தான் எதிரிகள் டான்யூப் நதிக்கு முன்னேறக்கூடும். அதற்கு மேற்குப் பக்கத்தில் புகாரெஸ்டிலுள்ள பொது ஜனங்கள் அநேக நாட்களாக அங்கிருந்து வெளியேறி வருகிறார்கள்.

இதேசமயத்தில் மத்தியதரைக்கடலிலும் யூக்ரேனிலும் நேசதேசத்தாரின் ஒன்றுபட்ட போர் நடைபெறுகிறதென்பதைக் காட்டக்கூடிய வகையில் தெற்கு இதாலியிலுள்ள தளங்களிலிருந்து வெடி விமானங்கள் புறப்பட்டு பலமான தாக்குதல்களைச் செய்து வருகின்றன. அவைகள் புடாபெஸ்டையும், புகாரெஸ்டையும் பலமாகத் தாக்கியிருக்கின்றன. அவைகள் போலஸ்தியிலுள்ள எண்ணெய் சுத்திகரிக்கும் சாலைகளைப் பழுதுபடுத்தியிருக்கின்றன. நதியில் சுரங்கவெடிகளைப் பாவிவிட்டதின் மூலம் நதியில் செல்லும் போக்குவரத்துகளுக்கு நஷ்டம் ஏற்பட்டது. அமெரிக்க வெடிவிமானங்களும் பிரிடிஷ் சுரங்கவெடி பாவும் வெடி விமானங்களும் உள்ள மத்தியதரைக்கடல் நேசதேச விமானப் படைகள் பிறர் உதவியன்னியில் எல்லா நடவடிக்கைகளையும் சமாளிக்கப் போதுமான சக்தியுள்ளவை. அப்படி உதவி அவசியமென்று ஏற்படும்பொழுது கிரிமியாவிலிருக்கும் விமானத்தளங்களிலுள்ள ருஷ்யர்கள் போலஸ்தி எண்ணெய் பிரதேசத்திற்கு 400 மைல்களுக்குள் வந்துவிடுவார்கள். கருங்கடல் கரையிலுள்ள கான்ஸ்டன்ஸா என்னும் துறைமுகத்தை வெடி குண்டுகளால் தாக்கி அவர்கள் சமீபத்தில் வந்து விட்டார்களென்று ஜெர்மானியர்களுக்கு ருஷ்யா ஞாபகப்படுத்திவிட்டது. எந்த நிமிஷத்திலும் போலஸ்தியிலுள்ள முக்கியமான எண்ணெய் ஸப்ளை தளம் அழிந்து போய் விடும். இந்தப் பருவ காலத்திற்குள்ளாகவே அது ருஷ்யர் வசமாகிவிடும். இந்த சமயத்தில் ராணுவ அவசியத்திற்காக தென்கிழக்கு ஐரோப்பாவிலுள்ள எண்ணெய் பூராவையும் சேமித்துவிடவேண்டுமென்று கோயரிங் உத்தரவு பிறப்பித்திருக்கிறான். சுரங்வெடிகளின் மூலம் டான்யூப் நதியில் போக்குவரத்து நின்று விட்டதென்று சொல்லுவதன் மூலம் நேசதேச விமானப் படை எதிரியின் போக்குவரத்து மார்க்கங்களை வெற்றிகரமாகத் துண்டித்து விட்டதென்று புடாபெஸ்டிலிருந்துவந்த ஒலிபரப்புச் செய்தியில் ஒப்புக்கொள்ளப் படுகிறது. ருஷ்யப் படைகள் காலாட்ஸ் இடைவெளிக்கு முன்னேறி வருகின்றன. இது வரையில் ருஷ்யப் படைகளை எதிர்த்து நிற்க சக்தியற்ற எதிரிப் படைகள் இப்பொழுது இந்தத் தாக்குதலைச் சமாளிக்கவேண்டும். ஸப்ளைகளைப் பெறுவதற்காக இந்த நடவடிக்கையில் சிறிது ஓய்வு காணப்படுகிறது. ருமேனியாவை ரக்ஷிப்பதற்கு தோல்வியடைந்து பின் வாங்கிவரும் படைகளுக்கு ஏராளமான உபரிப் படைகளை எதிரி அனுப்பவேண்டும். யூகோஸ்லாவியா, கிரீஸ் போன்ற நாடுகளிலிருந்துதான் அவன் உதவிப்படைகளைக்கொண்டு போகக்கூடும். அந்நாடுகளிலும், யூகோஸ்லாவியாவின் ஆக்கிரமணத்தை அவன் பூர்த்தி செய்யக்கூடவில்லை, கிரீஸ் மக்களின் மனஉறுதியைக் குலைத்துவிடமுடியவில்லை. அங்கிருந்து துருப்புகளை வேறு இடத்திற்குக் கொண்டுபோனால் கொதித்துக்கொண்டிருக்கும் பாத்திரத்தின் மூடியை அகற்றியது போலாகும்.

போலஸ்திக்கும், புகாரெஸ்டுக்கும் போவதற்கு ஆகாய மார்க்கத்தில் நேசதேச விமானங்கள் யூகோஸ்லாவியா வழியாக சப்தமிடுவதைக் கேட்டு மார்ஷல் டிடோவின் படைகளுக்கு உத்சாகம் ஏற்படுகிறது. ஏற்கனவே டான்யூப் நதியைக் குறித்து நேசதேசப் படைகள் குவிந்துவிட்டன. ரைன் நதியை நோக்கி மற்றொரு படை முன்னேறும் பொழுது டான்யூப் நதிப்பிரதேசத்திலும் தாக்குதல் அதிகரிக்கும்.

---

## ஹிட்லரின் ஐரோப்பியக் கோட்டையைத் தாக்க பிரிடன் ஆயத்தம் செய்துவருகிறது.

**(A. J. மாக்வின்னி).**

1940-ம் வருஷத்தில் பிரிடிஷ் படைகள் டங்கர்க்கிலிருந்து பின்வாங்கியபின் பிரிடனின் தெற்குக் கரைகளில் ஜெர்மன் துருப்புகள் இறங்கியிருந்தால் அதைத்தடுக்க பிரிடனிடம் குறைவான கடற்படை பலம்தானிருந்தது. டங்கர்க் நடவடிக்கையில் 70 பிரிடிஷ் நாசகாரிகள் பழுதுபட்டு அநேக மாதங்கள் வரையில் கப்பற்கட்டும் தளங்களில் பழுது பார்க்கப்பட்டன. இதன் மூலம் பாக்கியிருக்கும் 100 நாசகாரிகள் உலகம் பூராவிலுமுள்ள கடல் மார்க்கங்களை ரக்ஷிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இங்கிலீஷ் கால்வாயில் மீன் பிடிக்கும் கப்பல்கள், மீன்பிடிக்கும் இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்டு ஜெர்மன் படைகளின் படையெடுப்பை ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்து நின்றுகொண்டிருந்தன. அக்காலத்தில் பிரிடிஷ் கடற்படை எங்கெந்த இடங்களில் வைக்கப்பட்டிருந்தனவென்பதற்கு உத்தியோக முறையில் ஒரு தகவலும் வெளிவரவில்லை. இங்கிலீஷ் கால்வாயில் 20 முதல்தர நாசகாரிகளும், சிறிய கப்பல்களும், கவசம்பூண்ட இழுப்புப்படகுகளுடன் ஜெர்மனியின் படையெடுப்பை எதிர்பார்த்து நின்றன என்று நான் மதிப்பிடுகிறேன்.

ஆனால் அக்காலத்தில் ஜெர்மனியின் கடற்படை மிகவும் சக்திபெற்றிருந்தது. பிரிடன் பேரில் படையெடுப்புக்கு ஜெர்மனி சகலவிதமான ஆயத்தங்களையும் செய்து முடித்துவிட்ட



தென்று சொல்லப்பட்டது. ரைன் நதியில் செல்லும் படகுகளும் பெரிய டச்சுப் படகுகளும் துருப்புக்களை ஏற்றிக்கொள்ளவும் ஜெர்மன் கடற்படையின் துணையுடன் பிரிடனுக்குக் கடல்தாண்டிச் செல்லவும் தயாராக யிருந்தன.

### நாஸிகள் கடற்கரையிலேயே நிற்கும்படி செய்யப்பட்டார்கள்.

இங்கிலீஷ் கால்வாயில் அப்பொழுது இரவில் ரோந்து வேலைசெய்த பிரிடிஷ் கடற்படை உத்தியோகஸ்தர்கள் இப்பொழுது எல்லா சமுத்திரங்களிலும் சஞ்சாரம் செய்துவருகிறார்கள். அவர்கள் எங்கேயிருந்தாலும், சில பிரிடிஷ் நாசகாரிகளும், சிறிய கப்பல்களும், கவசம்பூண்ட மீன்படகுகளும், சில மோட்டார் மீன்வெடிப் படகுகளும் ஜெர்மானியர்களை கடற்கரையிலேயே நிலைநாட்டிவிட அற்புதச் செய்கையை ஸ்மரித்து அவர்கள் சம்பாஷணை செய்துவருகிறார்கள்.

புதிய பலப்பெருக்கும் பழைமையான வீரமும் பொருந்திய பிரிடிஷ் கடற்படை இப்பொழுது போர்க் கப்பல்களையும், பீரங்கிகளையும், டாங்கிகளையும், சாமான் வண்டிகளையும், உணவுப்பொருள்களையும், யுத்த தளவாடங்களையும் எந்த இடத்திற்கும் எந்த சமயத்திலும் எடுத்துச் சொல்லச் சக்தி பெற்றிக்கிறதென்பதை பிரிடனிலுள்ள எவரும் ஆக்ஷேபிக்க முடியாது. படைகளை இறக்குவதிலுள்ள அபாயங்களை எல்லோரும் அறிவார்கள். ஆகிலும் படைகள் நிச்சயமாக இறக்கப்படுமென்பதை ஒருவரும் சந்தேகிக்கவில்லை.

ஸிஸிலியிலும், இதாலியிலும், வடக்கு ஆபிரிக்காவிலும், இந்தியாவிலும், ஸிலோனிலும் நேசதேசப்படைகள் இறக்கிய நடவடிக்கையை இது கடற்படையின் சகஜமான வேலையென்று எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

### மகத்தான நிகழ்ச்சி.

இதுவரையில் உலகமறிந்திராத எதிர்காலத்திய மகத்தான இருவகைப்பட்ட நடவடிக்கையை பிரிடனிலுள்ளவர்கள் படையெடுப்பு என்று அபூர்வமாகத்தான் சொல்லுகிறார்கள். சிலர் இது ஐரோப்பாவின் விடுதலைக்கான நடவடிக்கையென்று சொல்லுகிறார்கள். சிலர் "ஹிட்லரின் ஐரோப்பாவைத்தாக்கும் மகத்தான முயற்சி" என்கிறார்கள். சிலர் இது மகத்தான நிகழ்ச்சி யென்கிறார்கள்.

இந்த நடவடிக்கையில் ஈடுபடும் ஆயிரக்கணக்கான கப்பல்களுக்கு ஆபத்து உண்டாகுமென்பதில் ஐயமில்லை. உலகத்திலேயே மிகப்பெரிய கடற்படையின் முன்னேற்றத்தைத் தடுக்க ஹிட்லர் வெடி விமானங்களையும், கடற்கரையிலுள்ள பீரங்களிலிருந்து குண்டுகளையும், மீன் வெடிகளையும், கப்பல் பீரங்கிகளிலிருந்து வெடிகுண்டுகளையும், தோட்டாக்களையும், சுரங்கவெடிகளையும், சிறிய நீர்மூழ்கிகளையும் உபயோகிக்கக்கூடும்.

இந்த நடவடிக்கையில் அநேகப் பெரிய கப்பல்கள் மூழ்கடிக்கப்படுமென்றும் அநேக தீரர்கள் உயிர்துறக்கவேண்டுமென்றும் தெரிந்தபோதிலும் டங்கர்க்குக்கு எதிர்முறையான மற்றொரு நடவடிக்கையை மேற்கொண்டால் வெற்றிகரமாக முடியுமென்று பிரிடனிலுள்ளவர்கள் உறுதியுடனிருந்துவருகிறார்கள்.

அட்லாண்டிக்கிலும், மத்தியதரைக்கடலிலும், மற்ற சமுத்திரங்களிலும் அநேக அபாயங்களுக்குட்பட்ட பிரிடிஷ் சாமான் கப்பலின் மாலுமிகள் ஐரோப்பாவின் விடுதலைக்குப் பாடுபட ஆயிரக்கணக்காக முன்வருகிறார்கள். முன்னணியில் போர்புரிய சக்தியற்ற விருத்தாப்பியர்கள் துறைமுகங்களிலுள்ள படகுகளையும், சிறிய கப்பல்களையும் ஓட்டவும் படையெடுப்புக்குத் தயாராகயிருக்கும் கப்பல்களில் வேலைசெய்யவும் முன்வருகிறார்கள்.

### உணவுப்பொருள் சேமிப்புகள் ஏராளமாக இருக்கின்றன.

பிரிட்னில் ஏராளமான படைகளும், யுத்த தளவாடங்களும் குவிக்கப்பட்டிருப்பதுடன், பிரிடன் நேசதேசங்களுக்கு உணவுக் களஞ்சியமாகவும் மாறிவிட்டது. தேசத்தின் முக்கியமான 8,000 இடங்களில் உணவுப்பொருள்கள் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் இரண்டாம் போர்முனைக்கு அனுப்பப்படும் ஸப்ளைக் கப்பல்களைத்தவிர விடுதலை செய்யப் போர்புரியும் சேனைகளுக்கும், அவர்களுக்கு ஒத்தாசை செய்கிறவர்களுக்கும் பிரிடனிலுள்ள பொதுஜன ஊழியர்களுக்கும் விடுதலை பெற்ற ஜனங்களுக்கும் போதுமான உணவுப்பொருள்களின் ஸப்ளை உத்தரவாதம் செய்யப்படுகிறது.

யுத்தக் கப்பல்களையும் ஏராளமான சாமான் கப்பல்களையும் தவிர 50 ரகங்கள் உள்ள பிரிடிஷ் படை இறக்கும் படகுகளும் இந்த மகத்தான கடற்படை நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொள்ளும். பிரிடன் 50 ரகப் படகுகளைக் கட்டியிருப்பதிலிருந்து சங்கடத்திலகப்பட்டுக் கொண்டிருந்த பிரிடன் இப்பொழுது மகத்தான தாக்குதலைத் துவக்கத் தயாராகயிருக்கிறதென்பது வெளியாகுகிறது. ஹிட்லர் பிரிடனில் படையெடுக்க உத்தேசித்த காலத்திலேயே இந்தப் படகுகளைக்கட்ட திட்டம் போட்டாகிவிட்டது.

டங்கர்க் நடவடிக்கைக்கு ஆறுமாதத்திற்குள்ளாகவே பெரிய படையிறக்கும் படகுகள் மெர்ஸி நதியில் பரீக்ஷை செய்யப்பட்டுவந்தன. அதன்பின் ஆயிரக்கணக்கான படகுகள் பிரிடிஷ் கடற்கரை பூராவிலும் தொழிற்சாலைகளிலும் உள்நாட்டில் தங்குமிடங்களிலும் கட்டப்பட்டுவந்தன. அமெரிக்காவிலும் உற்பத்தியை ஆரம்பிக்க பிரசுரங்கள் அட்லாண்டிக் கடல்தாண்டி அனுப்பப்பட்டன.

அதன் பிறகு அநேக சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. படைகளை இறக்கும் படகுகளிலுள்ள பழமையான அசௌகரியங்கள் இப்பொழுது நீக்கப்பட்டுவிட்டன. ஆகிலும் ஐரோப்பாவில் படைகளை இறக்க அவைகளை உபயோகிக்கும் நோக்கம் மட்டும் போய்விடவில்லை.

---

# ஸெக்கோஸ்லாவாக்கியாவைப்பற்றி சில குறிப்புகள்.

ஸெக்கோஸ்லாவாக்கியா எல்லைச் சரகத்தை அடைந்ததற்காக ஸ்டாலின் மார்ஷல் ஜுகாவுக்கும் காரியாலயத் தலைவரான மார்ஷல் வாசிலேவ்ஸ்கியுக்கும் வெற்றி அடையாளங்களை வழங்கியிருக்கிறார். ஸெக்கோஸ்லாவாக்கிய எல்லைச் சரகத்தை அடைந்தது ராணுவ முக்கியத்வமுள்ளது என்பதுடன் ஐரோப்பாவின் எதிர்கால ராஜீய விஷயங்களுக்கு ஏற்படும் விளைவுகள் மிகுதியானவை. ஐரோப்பாவின் கிழக்குப்பாதியையும் மேற்குப் பாதியையும் சேர்க்கும் பாலம் ஸெக்கோஸ்லாவாக்கியா என்று சொல்லுவது பொருத்தமான பேச்சு. யுத்தத்துக்குப்பின் அதன் எல்லைச் சரகங்கள் திருப்பியமைக்கப்பட்டு விட்டால் அதன் ராஜ்யம் ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, ருமேனியா, ருஷ்யா, போலந்து முதலிய நாடுகளின் எல்லைச் சரகத்தை தொட்டுவிடும். டான்யூப் நதி மூலமாக ஸெக்கோஸ்லாவாக்கியாவுக்கும், ஜெர்மனிக்கும், ஆஸ்திரியாவுக்கும், ஹங்கேரிக்கும், ருமேனியாவுக்கும் தொடர்பு ஏற்பட்டிருக்கிறது. யூகோஸ்லாவியாவுடனும், பல்கேரியாவுடனும் அதற்கு சம்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

1943-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 12-ம் தேதியன்று ருஷ்யாவுக்கும், ஸெக்கோஸ்லாவாக்கியாவுக்கும் ஏற்பட்ட ஒப்பந்த ஷரத்துகள் நடைமுறையில் பூர்த்தியடைந்துவிடும் போல் தோன்றுகிறது. இந்த உடன்படிக்கையின் மூலம் ஜெர்மனி கிழக்குப் பக்கத்தில் விஸ்தாரம்செய்ய முயலுவது தடைபட்டது. மேலும் எதிர் காலத்திய சமாதானத்திற்கு திட்டங்களை நிறுவ ஒத்துழைக்கும் அமெரிக்கா, பிரிடன், ருஷ்யாபோன்ற சமஷ்டியிலும் ஸெக்கோஸ்லாவாக்கியா சேர்ந்துவிடும்.

ஸெக்கோஸ்லாவாக்கியா எல்லைச் சரகத்துக்கு செம்படை வந்துவிட்டதிலிருந்து அதன் விளைவுகள் போலந்திலும் உண்டாகி அந்நாடு ருஷ்யாவுடன் சமாதானப் பேச்சுகளைத் துவக்க அதற்கு ஊக்கமளிக்கக்கூடும். ஸெக்கோஸ்லாவாக்கிய-ருஷ்ய ஒப்பந்தப்படி ஜெர்மனியின் ஆக்கிரமிப்புக்குட்பட்ட எந்த நாடும் இந்த ஒப்பந்தத்தில் சேர்ந்துகொள்ளலாமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அழைப்பு போலந்துக்குத்தான் அனுப்பப்பட்டது போலந்து உடன்படிக்கையில் சேர்ந்துகொள்ளாவிட்டால் உடன்படிக்கையின் சௌகரியங்கள் பூராவும் அதற்குக் கிட்டிவிட்டது.

### நாஸிகளின் புதிய உலக அமைப்புக்கு ஆபத்து.

ருஷ்யாவுடனும் ஸெக்கோஸ்லாவாக்கியாவுடனும் போலந்து சுலபமாக உடன்படிக்கையைச் செய்துகொள்ளலாம். ஏனெனில் அம்மூன்று நாடுகளும் பிரிடனும் அமெரிக்காவும் பொதுவான ஒரு எதிரியை எதிர்த்துப் போராடுகிறார்கள். ஸெக்கோஸ்லாவாக்கியாவை விடுவிப்பதும் அதன் சிதைவுக்குக் காரணமான நாஸி திட்டத்தை அழிப்பதும்தான் மெத்த அவசரமான வேலை. ஸெக்கோஸ்லாவாக்கியாவை ஜெர்மானியர்கள்தான் துண்டாடினார்கள். பொஹிமியாவும், மொரிவியாவும் ஜெர்மனியின் ரக்ஷணைக்குட்பட்டு ஜெர்மனியுடன் சேர்ந்துகொண்டன. ஸ்லோவாகியாவில் பொம்மை ஸ்வதந்திர நிர்வாகம் அமைக்கப்பட்டது. கார்பேதியா ஓரத்திலுள்ள ருஷ்யாவைச் சேர்ந்த தெற்கு ஸ்லோவேகியாவும் ருதேனியாவும் ஹங்கேரிக்குக் கொடுக்கப்பட்டன. மூனிச் ஒப்பந்தத்துக்குப்பின் போலந்துக்கு டெஷன் நகரமுள்ள ஆல்ஸாவைக் கொடுக்கும்படி ஹிட்லர் ஸெகோஸ்லாவாக்கியாவைக் கட்டாயப்படுத்தினான். இந்த சிதைவு நாஸிகளின அக்கிரம முறைப்படி நடைபெற்றது. ஒரு வலுமிக்க ஜனநாயகமுள்ள தேசத்தை அழித்துவிடவேண்டும். இதை சாதிக்க ஒரு சிறிய தேசத்துக்கும் மற்ற சிறிய தேசத்துக்கும் சண்டையை மூட்டி விட்டார்கள். நாஸிகள் கக்ஷியை பலப்படுத்துவதற்காக போலந்துக்கும், ஹங்கேரிக்கும் தேசத்தின் பெரிய பாகங்கள் வழங்கப்பட்டன.



### ருதேனியா.

செம்படை எல்லைச்சரகத்தை அடைந்து விட்டபடியால் ஸெகோஸ்லாவாக்கியாவின் உள்நாட்டு நிலைமையை இப்பொழுது ஆராய்ச்சி செய்வது நலம். கிழக்கிலிருந்து மேற்கு வரையில் ருதேனியா, ஸ்லோவேகியா, மொராவியா, பொஹிமியா என்ற நான்கு மாகாணங்கள் அதிலிருக்கின்றன. ஆகையால் செம்படை ருதேனியாவுக்கு சமீபத்தில் வந்து விட்டது.

இரண்டாவது வியன்னா தீர்மானத்திற்குப்பின் ஹிட்லர் ருதேனியாவையும் ஸ்லோவேகியாவின் சில பாகங்களையும் ஹங்கேரிக்குக் கொடுத்தான். ஆகிலும் 1943-ம் வருஷம் ஜூன் மாதம் 8-ம் தேதியன்று டாக்டர் பெனஷ் சொன்னபிரகாரம் ருதேனியா ஸெக்கோஸ்லாவாக்கியா குடியரசிலிருந்து தனிப்பட்டிருக்கவில்லை. இந்த விஷயத்தை அமெரிக்காவும், பிரிடனும், ருஷ்யாவும் மற்ற நேசநாடுகளும் ஒப்புக்கொண்டிருக்கின்றன. லண்டனிலுள்ள தேசீய ஸெக்கோஸ்லாவாக்கிய சபையில் இரண்டு ருதேனியர்களிருக்கிறார்கள். ருதேனிய ஸோல்ஜர்கள் ருஷ்யாவிலும், பிரிடனிலுமுள்ள ஸெகோஸ்லாவாக்கிய சேனையில் சேர்ந்திருக்கிறார்கள். செம்படையுடன் ஒத்துழைக்கும் செம்படையின் தலைவரான ஜெனரல் ஸ்வோபடா ஸெக்கோஸ்லாவாக்கிய எல்லைச் சரகத்துக்கு வந்திருக்கும் மார்ஷல் ஜுகாவின் முன்னணிப் படையாகயிருந்து இப்பொழுது ருதேனியா கொரில்லாப்படைகளுடன் சம்பந்தம் ஏற்படுத்திவிட்டார். இந்த கொரில்லாப்படைகள் சதாகாலமும் ஹங்கேரியர்களுடனும், விகார்லட் மலைகளிலுள்ள ஜெர்மானியர்களுடனும் போர் நடத்திவருகின்றன. அவர்கள் டாட்ராமலைகளிலுள்ள போலிஷ் கொரில்லாப்படைகளுடனும் தொடர்ப்பு ஏற்படுத்தியிருக்கிறார்கள். ருஷ்யாவின் முன்னேற்றத்துக்கும் ருதேனியாவிலுள்ள ஹங்கேரிய ஆட்சியை முறியடிப்பதற்கும் அவர்கள் பேருதவி செய்யக்கூடும்.

### ஸ்லோவேகியா.

ஸெக்கியர்களின் கொடுமையிலிருந்து ஸ்லோவேகியர்களை விடுதலை செய்கிறோம் என்ற வியாஜத்தின் பேரில் 1939-ம் வருஷத்தில் ஸ்லோவேகியாவைத் தனிப்பட்ட ஸ்வதந்திர நாடாக ஜெர்மனி அமைத்தது. நிர்வாகத்தை நடத்துவதற்கும், ருஷ்யப் போர் முனைக்குப் படைகளை ஸப்ளை செய்வதற்கும் ஜனாதிபதி டிசோவும், பிரதம மந்திரி டுகாவும் குயிஸ்லிங்குகளாக ஜெர்மனிக்குக் கிடைத்தார்கள். ஜெர்மனிக்கு வெற்றிகள் கிடைத்து வந்தவரையில் அவர்கள் ஜெர்மனிக்குச் சாதகமாக வேலைசெய்து வந்தார்கள். இப்பொழுது ஜெர்மனிக்குப் பாதகமாக யுத்தப்போக்கு மாறிவிட்டதால் ஜெர்மனியின் செல்வாக்கு குறைந்துவிட்டது. டிசோவும் அவனுடைய பரிவாரங்களும் தங்களுடைய பாத்தியங்களைக் கொண்டாடி ஹங்கேரிக்குக் கொடுத்த ராஜ்யத்தை ஸ்லோவேகியாவுடன் திருப்பிச் சேர்த்துவிட வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். மேலும் அச்சுநாடுகளுடன் விஸ்வாஸம் உள்ளதுபோல் வெளிப்படையாகப் பாசாங்கு செய்துகொண்டு ஹங்கேரி பேரில் அதற்குள்ள பாத்தியங்களை ஸெக்கோஸ்லாவாக்கியாவிற்கு மாற்றிவிட ஸ்லோவேகிய நிர்வாகம் பிரயத்தனம் செய்துவருகிறது. சமீபகாலத்தில் ஸெக்கோஸ்லாவாக்கியாவிற்கும் பெனஷுக்கும் எதிரிடையாக நடைபெறும் பிரசாரமும் குறைவுபட்டு வருகிறது. சென்ற ஏப்ரல் மாதத்தில் ஸெகோஸ்லாவாக்கியாவுக்கு டாக்டர் பெனஷ் அனுப்பிய ஒலிபரப்புச் செய்தியில் தற்போதிய ஸ்லோவேகிய நிர்வாகத்தைச்சேர்ந்த தூதர்கள் குடியரசுக்குத் தாங்கள் இழைத்த துரோகத்துக்கு ஞாயமிருக்கிறதென்று சொல்ல அவரை சந்தித்துப் பேசினார்கள் என்று சொன்னார்.

### ஜெர்மனியின் ரக்ஷணைக்குட்பட்ட நாடு.

ஐரோப்பாவில் ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் நாடுகளில் பொஹீமியாவும், மெரொவியாவும் மிகவும் கலகம் செய்யும் நாடுகள். இந்த நாடுகளில் ஸெக்கோஸ்லாவாக்கியர்கள் எதிர்த்துப் போராடுகிறார்களென்பது ஜெர்மானியர்க்ள் கலகத்தை அடக்க ஹெட்ரிக், ஹிம்லர், பிராங்க் போன்றவர்களை அனுப்பியதிலிருந்தே தெளிவுபடுகிறது.

ஸெக்கியர்களும், ஸ்லோவேகியர்களும் ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்கள். கிருஸ்து சகாப்தம் ஆரம்பமான நூற்றாண்டுகளில் அவர்கள் ஒரே மன்னரின் ஆட்சிக்குட்பட்டிருந்தார்கள். ஒன்பதாவது, பத்தாவது நூற்றாண்டுகளில் மாகியார்கள் படையெடுத்து ஸ்லாவ் ஜனங்களின் ஒற்றுமையைக் குலைத்தார்கள். அதன் மூலம் ஸ்லோவேகியர்கள் 1,000 வருடங்கள் வரையில் அடிமைப் பட்டார்கள். ஸெக்கியர்கள் புத்துயிர் பெற்றபொழுது ஸ்லோவேகியாவிலும் புரட்சி ஏற்பட்டது. இரண்டும் ஒன்று சேர்ந்து ஜெர்மன்-மாகியார் ஆக்ஷியை ஒழித்து விட்டன. 1918-ம் வருஷத்தில் அவர்கள் மசாரிக்கை தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். ரைன் நதியைத் தாண்டியிருக்கும் நாடுகளில் ஸெக்கோஸ்லாவாக்கியாதான் சிறந்த ஜனநாயக ஆக்ஷியுள்ள நாடு. மகத்தான போர்களில் அது பின்வாங்கி விட்டது. நெருக்கடி சமயத்தில் பிரான்ஸ் போன்ற மகத்தான பழமையான ஜனநாயகங்களும் நிலை பெற்றிருக்க முடியவில்லை. ஆகிலும் நாஸிகளின் கொடுமைக்குட்பட்ட நாடுகளில் முதன்மையான நாடாகிய ஸெக்கோஸ்லாவாக்கியாதான் நாஸிகளின் ஆக்ஷியை முதன் முதலில் ஒழித்துவிடும்.

## பிரவிக்குணம்.

மகான் என்று பெயர் பெற்ற பிரெடெரிக் அவனுடைய சந்ததிக்கு சில மேற்கோள்களை விடுத்தார். இந்தக் கொள்கைகளை பிரஷ்யர்கள் கௌரவித்து வந்திருக்கிறார்கள்.

"யுத்தத்தில் மனச்சாக்ஷிக்கு சிறிது இடம் கொடுத்தாலும் காரியம் கெட்டுப்போய் விடும். நீதி என்ற பதங்களைக்கண்டு மயங்கி விடாதே. இதைப்பொருட்படுத்தியிருந்தால் நான் ஒரு காரியத்தையும் சாதித்திருக்க முடியாது."

"நடவடிக்கையும் போக்கிரித்தனமும் ஒன்றுதான்."

"ஏதாவது ஒரு காரியத்தைச் செய்து கொண்டிருக்கவேண்டுமென்பது சிறந்த நடவடிக்கை. நமக்குச் சௌகரியமான காரியங்களைச் சம்பாதிக்க நமக்கு எப்பொழுதும் உரிமை உண்டு என்று நம்பியிருக்கவேண்டும்."

"நாம் எக்காலத்திலும் மற்றவர்களை ஏமாற்றிவிட முயலவேண்டும்."

"உனக்கு லாபம் கிடைக்கக்கூடிய உடன்படிக்கையைச் செய்து கொள்ளுவதில் வெட்கமடையாதே."

"உன்னுடைய அக்கரைக்குத் தேவைப்படும்பொழுது அந்த உடன்படிக்கையை உதறிவிட சிறிதும் தயங்காதே."

"பிரஷ்யா அதிக லாபம் சம்பாதித்தபின்தான் அதன் வாக்குறுதியைக் காப்பாற்றும் நடவடிக்கைகளை அது யோஜிக்கத் துவங்கும்.

---

## போலிஷ் நாசவேலை இயக்கத்தின் நடவடிக்கை முறை.

"சென்ற வருஷம் பிப்ரவரி மாதத்தில் இங்கிலாந்தை விட்டுச் சென்று, ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் போலந்தில் 12 மாதங்கள் வசித்துவிட்டுத் திரும்பி வந்திருக்கும் ஒருவரின் வரலாற்றைக் கேட்க விரும்புகிறேன் என்று சொல்லி, போலந்தின் அறிக்கை மந்திரியான புரொபஸர் காட், மிஸ்ட்டர் ஜார்ஜ் ஜூர் என்னும் வாலிபமுள்ள போலந்தியரை டைம்ஸ் பத்திரிகையின் ராஜதந்திர நிருபருக்கு அறிமுகப்படுத்தினார்.

ஜெர்மனியின் ஆக்கிரமணத்துக்குட்பட்டு கொடுமைகளை அனுபவித்த போலந்திலிருந்து புத்துயிர் பெற்றிருக்கும் போலந்தை ஜார்ஜ் ஜூர் உருவெடுத்திருக்கிறார். அவன் தைரியசாலியென்று சொல்லத் தேவையில்லை. அவன் மிகவும் அமைதியுள்ளவன். ஆகிலும் அவன் மிகவும் ஊக்கமுள்ளவன், திறமையுள்ளவன். அவனிடம் தேசாபிமானம் குடிகொண்டிருக்கிறது. இந்த ஜ்வாலை பலமாகவும், உறுதியாகவும் அவனிடம் ஓங்கி நிற்கிறது. திறமையுடன் வேலை செய்யவேண்டுமென்ற மற்றொரு ஆவேசமும் அவனிடமிருந்துவருகிறது.

அவன் போலந்தின் கபடமான இயக்கத்தில் கலந்துகொண்டவன். போலந்திலிருந்து தப்பி ஓடுமுன்னும், பிறகு 20 மாதங்கள் வரையில் போலந்திலிருந்தபொழுதும் அவன் எதிர்த்துப் போராடியிருக்கிறான். போலந்தின் எதிர்ப்பு இயக்கத்தில் இரண்டு முக்கியமான குணங்கள் காணப்படுகின்றன. ஒன்று தேசாபிமானம்; இதுதான் முக்கியமான சக்தி. அதை நடத்தும் முறையில் எதிர்பார்ப்பதற்கு அதிகமான திறமை.

அவனுக்கும், அவனுடைய சகாக்களுக்கும் எதிர்ப்பு இயக்கம் ஒரு படிப்பினையைக் கற்பித்தது. நிச்சயமாகத் திறமையில்லாவிட்டால் நாச வேலைகள் பயன்படாது. திறமையின்மையிலிருந்தும், அபஜயத்திலிருந்தும் ஏற்படும் விளைவுகள் அபாரமானவை.

### போலிஷ் தேசாபிமானிகள்.

ஜூர், பிரிடனிலிருந்து போலந்துக்கும், அங்கிருந்து பிரிடனுக்கும் எவ்விதம் சென்றான் என்பதைப்பற்றி ஒரு தகவலையும் வெளியிடமுடியாது. ஆகிலும் அவன் பிரிடனிலிருந்து துரிதமாகப் போலந்துக்குச் சென்றானென்று மட்டும் சொல்லக்கூடும். மேலும் அவனுடைய நோக்கமென்னவென்றும், ஜெர்மானியர்களுள்ள அவனுடைய நாட்டில் அவன் எவ்விதம் காலம் கடத்தினானென்றும், அவன் எங்கு சென்றானென்றும் சொல்லக்கூடாது. அவ்விதம் வெளியிட்டால் மற்ற தேசாபிமானிகளின் உயிர்களுக்கு ஆபத்து உண்டாகிவிடும்.

போலிஷ் எதிர்ப்பு சேனையின் சேனாதிபதியான போலீஷ் பிரதிநிதியிடம் போகும்படி ஜெனரல் சிகார்ஸ்கி அவனை அனுப்பினான். லண்டனுக்கும், போலிஷ் நிர்வாகத்தினுடையவும், அரசாங்க சபையினுடையவும் மற்றொரு பாகம் போலந்தில் எதிர்ப்பு இயக்கமாக அமைக்கப்பட்டிருக்கிறது. போலிஷ் பிரதிநிதி எதிர்ப்பு இயக்கத்தின் தலைவர். அவருக்கு உதவி பிரதம மந்திரி அந்தஸ்து உண்டு. போலந்திலுள்ள தேசீய ஒற்றுமை சபையை பிரிடனிலுள்ள போலிஷ் அரசாங்க சபைக்கு ஒப்பிடலாம். இதில் ஜன சமூகக்கொள்கைக்



காரர்களும், விவசாயிகளும், கிருஸ்தவ ஜனநாயகக் கொள்கைக்காரர்களும் சேர்ந்து ஒன்றுபட்டிருக்கிறார்கள். எதிர்ப்பு இயக்கத்தின் நிர்வாகியான போலிஷ் பிரதிநிதிக்கு இச்சபை ஆலோசனைகளைச் சொல்லும்.

போலந்தில் சேனாதிபதியின் அமுலுக்குட்பட்ட சேனை, ஜெனரல் ஸோஸ்ன்கோவிஸ்கியிடமுள்ள அயல்நாடுகளில் வசிக்கும் படைகளைவிட மிகுதியானது.

### எதிர்ப்பு போலிஷ் நிர்வாகம்.

ஜூர் கட்டளையின்படி எதிர்ப்பு போலிஷ் சாம்ராஜ்யத்தின் எல்லைப் பாகங்களையும் ஆராய்ச்சி செய்தான். போலிஷ் எதிர்ப்புப் படைகள் பயிற்சி பெறுகின்றன. ஆகிலும் அவைகளுக்குப் போதுமான தளவாடங்கள் கிடையாது. வாலிபர்கள் கவாத்து செய்வதும், ஆயுதங்களின் உபயோகப் பயிற்சியும் ரகசியமான நடவடிக்கைகள். ஆகிலும் இந்த நடவடிக்கைகள் திருப்திகரமாக நடைபெறுகின்றன. போலந்தின் நாகரீகத்தை அழித்து போலிஷ் மக்களை முட்டாள்களாகச் செய்துவிடவேண்டுமென்று ஜெர்மனி கையாண்டுவரும் அக்கிரமங்களையும் போலிஷ் மக்கள் எதிர்த்துப் போராடுகிறார்கள். இதைப்பற்றியும் பூரா விவரங்களையும் நாம் வெளியிடமுடியாது. ஆகிலும் போலிஷ் ஜனங்கள் தங்களுடைய கலை ஞானத்தைப் பாதுகாக்க வெற்றிகரமாகப் போர்புரிந்துவருகிறார்கள்.

ஆரம்பக் கல்வியைத் தவிர வேறுவிதமான படிப்பை போலிஷ் ஜனங்கள் கற்றுக் கொள்ளக்கூடாது. தொழிலபிவிருத்திக்குத் தேவையான படிப்புகளை அவர்கள் கற்கலாம். உயர்தரப் படிப்பு சாலைகளும், கலாசாலைகளும் மூடப்பட்டுவிட்டன. ஆகிலும் உயர்தரப் படிப்பு கபடமாகப் போதிக்கப்படுகிறது. விஞ்ஞான சாஸ்திரங்களிலும், கலாசாலைப் படிப்பு கபடமாகப் போதிக்கப்படுகிறது. மற்ற சில கலை ஞானங்களிலும் மாணாக்கர்களில் மூன்றில் இரண்டு பாகம் கொண்டவர்களுக்குக் கல்வி கற்றுக்கொடுக்கப்படுகிறது. இது சில சமயங்களில் அறைகுறையாகயிருக்கலாம். ஆகிலும் அதன் தரம் அதிக உயர்வானது. இதற்கு போலந்துக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியில் போலிஷ் யுவர்களிடம் உண்டாகியிருக்கும் உத்வேகம்தான் காரணமாகும்.

போலிஷ் எதிர்ப்பு இயக்கத்தை அடக்கியாள வார்ஸாவிலும், கிராகோவிலும், மற்ற போலிஷ் நகரங்களிலும் சென்ற அக்டோபர் மாதத்திலிருந்து ஜெர்மனி செய்துவரும் அக்கிரமங்களை ஜூர் கண்ணாரக் கண்டார். ஆடவர்களும், ஸ்திரீகளும் தினசரி வளைத்துக்கொள்ளப்பட்டு, போலிஷ் ஜனங்களுக்குப் பீதியை உண்டுபண்ணும்பொருட்டு பொது ஜனங்களின் மத்தியில் கொலை செய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்டவர்களை நிர்வாணமாக லாரிகளில் ஏற்றி கொலைக்களத்திற்குக் கொண்டுபோனார்கள். அவர்களுடைய கைகளைப் பின்புறத்தில் சேர்த்துக் கட்டிவிட்டார்கள். அவர்கள் தேசாபிமான மேற்கோள்களைக் கூச்சலிடாமலிருக்கும்பொருட்டு பசைகளைத் தடவி அவர்களுடைய வாய்கள் தாளிடப்பட்டன. ஒலிபெருக்கும் கருவிகளை அமைத்து அவைகள் மூலமாக, எதிர்ப்பு ஓய்ந்துவிடாததால் பிணையாளிகளாகயிருந்த அநேகர்கள் கொல்லப்பட்டார்கள் என்றும் பகிரங்கப்படுத்தப்படுகிறது.

அவர்களைக் கொலை செய்யுமுன் போலந்து மக்களின் இரத்தத்தை அறுத்து காயம்பட்ட ஜெர்மன் ஸோல்ஜர்களுக்கு சிகிச்சைக்காக உபயோகப்படுத்தினார்கள்.

---

## ருஷ்யத் தொழிலாளர்களுக்கும் சமமான அந்தஸ்து.
## ஜெர்மனியின் குறிப்பிடத்தக்க சீர்திருத்தம்.

(டைம்ஸ் பத்திரிகை).

1942-ம் வருஷ வெற்றிகளுக்குப் பின் இப்பொழுது ஜெர்மனியின் தற்காப்பு மந்திரி சபை ஒரு முக்கியமான தொழிலாளர் சம்பந்தப்பட்ட உத்தரவைப் பிரசுரித்திருக்கிறது.

ஜெர்மன் யுத்த தளவாட உற்பத்தியிலும், தொழிற்சாலைகளிலும், வியவசாயத்திலும், ரஸ்தா அமைப்பிலும், இடிந்த கட்டடத்தூள்களை அப்புறப்படுத்துவதிலும், மற்ற சேவைகளிலும் ஈடுபட்டிருக்கும் மிலியன்கள் கணக்கான ருஷ்ய தொழிலாளர்களுக்கும் சமமான அந்தஸ்து அளிக்கப்படவேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

இது வரையில் உத்தியோக தோரணையிலும், நடை முறையிலும் ஜெர்மானியர்கள் அயல் நாடுகளிலிருந்து வந்து வேலையிலீடுபட்டவர்களை, அயல்நாட்டுத் தொழிலாளர்களென்றும், கிழக்கிலிருந்து வந்த தொழிலாளர்களென்றும் வேற்றுமைப்படுத்தியிருந்தார்கள். தொழிற்சாலைகளும், முதலாளிகளும் ஜெர்மானியருக்கும், அயல்நாட்டுத் தொழிலாளர்களுக்கும் சமமான ஊதியத்தை வழங்கி வந்தார்கள். ஆகிலும் அயல்நாட்டு வேலைக்காரர்களுக்கு வரி விகிதம் ஏற்படுத்தப்பட்டிருந்ததால் அவர்களின் வருமானம் குறைவுபட்டது. 1942-ம்

வருஷத்திற்குப் பின் ஜெர்மன் மந்திரி சபையார் ருஷ்ய வேலைக்காரர்களுக்கு உபரி வரி விகிதம் ஏற்படுத்தினார்கள். இதன் மூலம் அவர்களின் பாக்கி வருமானம் ஒரு வாரத்திற்கு 10, அல்லது 17 மார்க்குகளுக்குக் குறைந்துவிட்டது. மற்றொரு உத்தரவின்படி இடவசதிக்கும், சாப்பாட்டிற்கும் வாராவாரம் $10\frac{1}{2}$-மார்க்குகளைப் பிடித்துவிடவேண்டுமென்று முதலாளிகளுக்கு உத்தரவிடப்பட்டது. அவர்களுடைய மீதம் $10\frac{1}{2}$-மார்க்குக்குக் குறைவுபட்டால் பூரா மீதத்தையும் முதலாளிகள் பிடித்துவிடவேண்டும். இவ்விதமாக அதம பக்ஷமான ஊதியத்தைப் பெரும் ருஷ்யர்களுக்கு ஒன்றும் மீதிப்படாது. அதிகச் சம்பளம் பெறும் ருஷ்யர்களுக்கு வாராவாரம் $16\frac{1}{2}$-மார்க்குகள் தான் கிடைக்கக்கூடும்.

ருஷ்யர்கள் கட்டாயப்படுத்தப்பட்டால்தான் அதம பக்ஷமான வேலையைச் செய்து வந்தார்கள். ஜெர்மனியின் யுத்த முயற்சி அவசியமும் சேனைகளைத் திரட்டவேண்டிய அவசியமும் சேர்ந்து தொழிலாளர்களின் குறைவை உண்டுபண்ணிவிட்டது. இப்பொழுது ஜெர்மானியர்கள் போட்டிருக்கும் உத்தரவுகளின்படி ஜெர்மனியின் மகத்தான தொழிலாளர் பிரச்னையைத் தீர்க்க ஜெர்மனி ருஷ்யத் தொழிலாளர்களுக்குச் சலுகை காட்டியிருக்கிறது. இனிமேல் மற்ற அயல்நாட்டு வேலைக்காரர்களைப்போல ருஷ்யர்களும் சமமான ஊதியம் பெறுவார்கள். அதிக வேலை செய்கிறவர்களுக்கு வெகுமானம் அளிக்கப்படும். அவர்களை பிரோத்சாகப்படுத்த அவர்களுக்குப் பொழுது போக்கு வசதிகளும் மற்ற உரிமைகளும் வழங்கப்படும். அவர்கள் அணிந்திருந்த கேவலமான (ஆஸ்டு) அடையாளத்துக்குப் பதிலாக ருஷ்யர்கள் கௌரவத்துடன் அணிந்துகொள்ளக்கூடிய மற்றொரு அழகிய அடையாளம் அவர்களுக்கு வழங்கப்படும். இந்த சீர்திருத்தத்தைப் பூர்த்தி செய்ய ஜெர்மனி தினசரி 10 மிலியன் மார்க்குகளைச் செலவழிக்கவேண்டும்.

---

## எதிரியின் சமுத்திரங்களில் சுரங்கவெடி பாவுதல்.

(விங் கமாண்டர் *L. V.* பிரேசர்).

பகல் இரவாக நடைபெறும் பிரிடிஷ் அமெரிக்க விமானத் தாக்குதல்களை, சமாளிக்க ஜெர்மனியின் மனிதபலமும், பீரங்கி பலமும் ஈடுபடவேண்டியிருக்கும்பொழுது சுரங்கவெடிகளைப் பாவும் வேலையில் ஈடுபட்டிருக்கும் பிரிடிஷ் விமானப்படையின் 10 சதவிகிதத்தின் அபாயத்தை நிவர்த்திசெய்ய பீரங்கிகளும், மனிதர்களும் ஜெர்மானியரால் ஒத்திவைக்கப்படுகின்றன. நான்கு வருடங்களுக்குமுன் பிரிடிஷ் விமானப்படை எதிரியின் கடல்களில் சுரங்கவெடிகளைப்பாவிவிட்டது. சுரங்கவெடிகளைப்போடும் வேலை பகிரங்கமானதல்ல. மோன், எடர் அணைகளை உடைத்ததுதான் பகிரங்கமான நடவடிக்கை. ஆகிலும் அதனினும் மிகுதியான விளைவுகள் ஏற்படுகின்றன. பிரிடிஷ் விமானப்படைகள் போட்ட சுரங்கவெடிகள் இதுவரையில் 500 கப்பல்களை மூழ்கடித்திருக்கின்றன, அல்லது பழுதுபடுத்தியிருக்கின்றன. மிலியன்கணக்கான டன் எடைமானமுள்ள கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றன.

பிஸ்கே விரிகுடாவிலிருந்து நார்வே கடற்கரைவரையில் ஜெர்மனி சுரங்கவாரிக் கப்பல்களை வைத்திருக்கும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. நூற்றுக்கணக்கான லங்காஸ்டர், ஹாலிபாக்ஸ், ஸ்டர்லிங், வெல்லிங்டன் விமானங்கள் எதிரியின் கடலுக்கும் எதிரியின் கப்பல்களிருக்கும் ஸ்தலங்களுக்கும் செல்லும் கடல் மார்க்கங்களில் சஞ்சரிக்காமல் தடுக்க அநேக யுத்தக் கப்பல்களை ஜெர்மனி வைத்திருக்கவேண்டியதாகிவிட்டது. துறைமுகங்களையும் கப்பல்துறைகளையும் உயர்தரப் பயிற்சிபெற்ற விமான எதிர்ப்பு பீரங்கிப்படையாளர்கள் ஆயிரக்கணக்காக நின்று தற்காப்பு செய்யவேண்டியதாகிவிட்டது.

### ரகசியமான அபாயத்தைப் பாவுவது.

இருப்புப் பாதைகள் வழியாகவும், ரஸ்தாக்கள் மூலமாகவும் அதிக சிரமத்துடன் கொண்டுபோகக்கூடிய ஸப்ளைகளை எதிரி ஐரோப்பிய கடற்கரை ஓரமாகவும் உள்நாட்டிலுள்ள நதிகள் மூலமாகவும் கொண்டுபோக முயற்சி செய்துவருகிறான். இந்தப் போக்குவரத்து மார்க்கங்களில் பிரிடிஷ் விமானப்படை சுரங்கவெடிகளை ஏராளமாகப் பாவிவிடும்.

1940-ம் வருஷத்தில் ஜெர்மனி நார்வேயிலும் டென்மார்க்கிலும் படையெடுத்தபின் சுரங்கவெடிகளைப் பாவுவதற்கு விரிவான ஸ்தல வசதி கிடைத்தது. இவ்வருஷம் ஆகஸ்ட் மாதத்திற்குள் ஹாண்ட்லி பேஜ் ஹாம்டன் விமானங்கள் 5 லக்ஷம் மைல்கள் மொத்தமாகச் சென்று ரூருக்குத் தாதுப்பொருள்களைக் கொண்டுபோகும் எதிரியின் கப்பல்கள் செல்லும் மார்க்கங்களில் ஏராளமான சுரங்கவெடிகளைப் போட்டுவிட்டன. ஜெர்மானியர்கள் ருஷ்யாவைத் தாக்கச்சென்றபொழுது பால்டிக் கடலில் போடப்பட்ட சுரங்கவெடிகளும் ஸ்டெட்டினில் போடப்பட்ட வெடிகுண்டுகளும் ஜெர்மனியின் துருப்புகளையும் வெடிமருந்துக் குவியல்களையும் அழித்தன. ருஷ்யப் படைகளுக்குமுன் பின்வாங்கிவரும் ஜெர்மன் ஜெனரல்



கள் ஸ்பானிஷ் எல்லைச் சரகத்திலிருந்து டான்சிக் வளைகுடாவரையிலுமுள்ள கடற்கரையை இரவு தவறாமல் பிரிடிஷ் விமானப் படை தாக்கிவரும் கஷ்டத்தை அனுபவிக்கவேண்டியதாகிவிட்டது. ஸ்வீடனிலிருந்தும் நார்வேயிலிருந்தும் ஜெர்மனிக்குப் போகும் இரும்பு ஸப்ளைத் தடைபட்டது. ஆக்கிரமிப்பு பிரான்ஸுக்கு ஸப்ளைகளை எடுத்துச்சென்று பின்பு கொள்ளை சாமான்களுடன் திரும்பிவரும் கப்பல்களை கடற்கரையோரமாக பிரிடிஷ் விமானங்கள் தாக்கின.

ஆகாய யுத்தத்தில் தற்காப்பிற்காக சண்டை விமானங்களைக் கட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டபொழுதும் பிரிடிஷ் விமானப்படை நீண்ட கால நோக்கத்துடன் வெடிவிமானங்களைத் தயார் செய்ததுபோல, சுரங்கவெடிகளைப் பாவும் திட்டமும் அதே காலத்தில் நிறுவப்பட்டது.

ஆரம்ப காலத்தில் மற்ற அலுவல்களுக்காகக் கட்டப்பட்ட விமானங்களைத் திருத்தியமைக்கவேண்டியதாயிற்று. அந்நாளில் சுரங்கவெடிகளைப் பாவச்சென்றவர்கள் அபாரமான கஷ்டங்களை அனுபவிக்கவேண்டியதாயிற்று. அப்பொழுது கடுங்குளிருள்ள பருவ காலத்தில் ஆறுமணிநேரங்கள் வரையில் விமானிகள் சென்றார்கள். உஷ்ணமான தேத் தண்ணீரைக் குடிக்கக்கூட அவர்களுக்கு வசதியில்லை. தேத்தண்ணீர் கூஜாக்களைத் திறந்தவுடன் தேத்தண்ணீர் திடீரென்று கெட்டியாகிவிடும். அவர்கள் எதிரிகளின் சமுத்திரங்களுக்குச் சென்றவுடன் ஒரு மலையின் உச்சி உயரத்துக்கு இறங்குவார்கள். கடல் மார்க்கங்களுக்குச் சென்று, சுரங்கவெடிகளைப் போட்டுவிட்டு அவர்கள் தாயகம் திரும்பிவிடுவார்கள். விளைவுகளை உற்று நோக்க அவர்கள் தங்குவதில்லை. சில மாதங்களுக்குப் பின் நடுநிலைமை வகிக்கும் நாட்டிலிருந்து ஜெர்மனிக்கு நிக்கல், இரும்பு உலோகத்தை ஏற்றிச்சென்ற ஒரு கப்பல் ஸ்வீடன் அல்லது டென்மார்க்கு கடற்கரைக்கருகில் மூழ்கிவிட்டதென்ற தகவல் வெளிப்படும். அப்பொழுது நமது சுரங்கவெடி கப்பலை மூழ்கடித்து விட்டதென்று நாம் அறிந்து கொள்ளுவோம்.

இந்த அற்பமான ஆரம்பத்திலிருந்து பிரிடனின் சுரங்கவெடி பாவும் வேலை முன்னேற்றமடைந்திருக்கிறது. விமானமூலமாகப் போடப்பட்ட சுரங்கவெடிகள் ஏராளமான நஷ்டங்களை விளைவித்திருக்கின்றன. கீல் கால்வாயில் இரும்பு உலோகம் ஏற்றிச்சென்ற ஒரு கப்பல் சுரங்கவெடி பேரில் மோதி மூழ்கியதால் அநேக மாதங்கள் வரையில் கீல் கால்வாய் அடைபட்டுக்கிடந்தது. ருஷ்யப்போர்முனைக்கு துருப்புகளையும் சாமான்களையும் ஏற்றிச்சென்ற 18,000 டன்கள் எடைமானமுள்ள கப்பல் பால்டிக் கடலில் சுரங்கவெடியின் பேரில் மோதி தூள்தூளாகிவிட்டது. வடக்கு நார்வேயிலுள்ள ஜெர்மன் விமானப்படைக்கு முஸ்தீப்புகளையும் தரைவேலைக்காரர்களையும் ஏற்றிச்சென்ற துருப்பேற்றிச்செல்லும் கப்பல் காட்டிகாட்டில் சுரங்கவெடிபேரில் மோதி மூழ்கிற்று. ஷார்ன்ஹாஸ்ட்டும் நீஸ்நாவும் பிரெஸ்ட் துறைமுகத்திலிருந்து பால்டிக் கடலுக்குத்தப்பி ஓட முயன்றபொழுது சுரங்கவெடிகளால் பழுதுபடுத்தப்பட்டன.

### யூ படகு நஷ்டம்.

பால்டிக் கடலில் சென்ற சாமான் படகுகளுக்கும் இந்த கதிதான் ஏற்பட்டது. வெடிவிமானப்படைகள் ஏராளமாகச் சுரங்கவெடிகளைப் பாவும் பிராந்தியத்திற்கு சமீபத்திலுள்ள துறைமுகங்கள் மூடப்பட்டுவிட்டன. இதன்மூலம் நாஸிகளின் ஸப்ளை மார்க்கங்களின் முக்கியமான மார்க்கங்களில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. இது யுத்த முறையில் அதிக முக்கியத்வம் பொருந்தியது.

வெடிவிமானப்படைகள் போடும் காந்தக் கண்ணிகளின் சக்தியை யூ படகுத் தலைவர்களும் நன்கு அறிந்து விட்டார்கள். நீர்மூழ்கி மாலுமிகளுக்கு கீல் வளைகுடாவில் சிறந்த பயிற்சியளிக்கும் தளமிருந்தது. பிரிடிஷ் சுரங்கவெடிகள் அந்த முகாமை கிழக்குப்பக்கம் போகும்படி தள்ளிவிட்டன. இப்பொழுது டான்சிக் வளைகுடா முதல் தரமான யூ படகு பயிற்சி முகாமாக மாறிவிட்டது. சுரங்கவெடி பாவுகிறவர்களை ஹிட்லர் ஏமாற்றிவிட்டதாக நினைத்தான். ஆகிலும் கடல் விமானப்போரில் நேசதேசத்தாரின் யுத்த தந்திரமும் முன்னேற்றம் அடைந்துவிட்டது. கனமான பெரிய வெடிவிமானங்கள் கனமான பெரிய சுரங்கவெடிகளைத் தூக்கிச்சென்று வருவதால் டான்சிக் வளைகுடாவும் நமது விமானிகளின் இலக்குக்குட்பட்டுவிட்டது.

1940-ம் வருஷத்தில் முதல் முதலாகச் சுரங்கவெடிகளைப் பாவச்சென்ற ஹாண்ட்லி பேஜ் ஹாம்ப்டன் விமானங்களுக்குத் தலைமை வகித்தவர்தான். இப்பொழுது வெடிவிமானப் படையின் சேனாதிபதியாகயிருக்கிறார்.

இதுதான் நமக்கு அறிமுகமான விளைவுகள். மற்ற விளைவுகளை யுத்தம் நின்றபின்தான் நாமறியக்கூடும். இன்று எந்தக்கடல் மார்க்கத்திலும் கடற்கரையோரங்களிலும் நாஸி ஸப்ளைக் கப்பல்கள் அபாயத்திற்குட்படாமல் நடமாடமுடியாது.

## இதாலிய நிர்வாகத்தின் புதிய அமைப்பு.

(டெயிலி டெலிகிராப்).

முஸோலினி ராஜிநாமாச் செய்ததிலிருந்து நேசதேசத்தார்கள் விரும்பியபடி விரிவான இதாலிய நிர்வாகத்தை அமைப்பதற்கு முற்போக்காக மார்ஷல் படோக்ளியோ ராஜிநாமாச் செய்தான். இந்த நடவடிக்கையின் மூலம் ஜனநாயகக் கக்ஷிகளுக்குச் சலுகை காட்டப் பட்டிருக்கிறது. அந்தக் கக்ஷிகள் தேசத்தின் அலுவல்களில் பொறுப்பெடுத்துக்கொள்ளுவ தென்றால், நிர்வாகத்தின் அங்கத்தினர்களை வேறு அலுவல்களைச் செய்ய ஏவக்கூடாதென்றும் அரசாங்க அமைப்பையே புதுப்பிக்க வேண்டுமென்றும் விரும்பின.

இவ்விதமான சௌகரியமான மாறுதல்களைச் செய்ய அநேக காரணங்களிருந்தன. நேச தேசத்தார்கள் ரோமுக்குள் நுழைந்தவுடன் தேசத்தின் லெப்டினண்ட் ஜெனரல் என்ற அதிகாரத்தை மன்னர் இளவரசரிடம் ஒப்படைத்து விடுவதாக வாக்குறுதி செய்தார். ருஷ்யா படோக்ளியோ நிர்வாகத்தை அங்கீகரித்ததைக்கண்டு இதாலிய பொதுவுடமைக் கக்ஷி படோக்ளியோ அரசாங்கத்துடன் சேர்ந்து ஒத்துழைக்க முற்பட்டது.

இதாலியில் கக்ஷிகளுக்குள் ஒற்றுமை ஏற்பட்டதற்கு ருஷ்யாவின் வற்புறுத்தல்தான் காரணமென்று இதாலியிலுள்ள ஆலோசனை சபையின் ருஷ்ய அங்கத்தினரின் பேச்சுக்களை நாம் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் மாஸ்கோவில் 23 வருடங்கள் வசித்து விட்டு இதாலிக்குத் திரும்பி வந்திருக்கும் ஸீனர் டாக்லியாட்டியின் செல்வாக்கு சக்தியுள்ளதாகயிருந்தது. இதற்குமுன் ஒத்துழைக்க மறுத்தவர்களெல்லாம் இப்பொழுது நிர்வாகத்தின் அங்கத்தின ராக சேர்க்கப்படுவார்கள். இது வரையில் மிகவும் சிரமசாத்தியமான காரியங்களை நடத்தி வந்த மார்ஷல் படோக்ளியோவின் பொதுஜன இலாகா மந்திரிகளும் தனிக்கக்ஷியாகயிருந்து நிர்வாகத்தில் பங்கெடுத்துக்கொள்ள உரிமை பெற்றவர்கள்.

இது வரையில் நிர்வாகத்திலிருந்து ஒதுங்கி நின்றவர்களின் யோக்கியதாம்சத்தை விசாரணை செய்யவேண்டியதில்லை. இதாலிய நிர்வாகத்தைத் திருத்தியமைப்பதற்கு அவர்கள் இடையூறுகளை உண்டுபண்ணவில்லை என்பதிலிருந்து அவர்களும் சிறந்த ஜனப்பிரதிநிதிகளென்றும் தேசபக்தர்களென்றும்தான் சொல்லவேண்டும்.

இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கும் நிர்வாகமும் தாத்காலிகமானதுதான். இதாலி விடுதலைபெற்றவுடன் காலத்தில் அவர்களுடைய நிர்வாகத்லதை அமைத்துக்கொள்ள இதாலிய மக்களுக்கு உரிமை உண்டு. ஆகிலும் இந்தப் புதிய நிர்வாகம் விடுதலை பெறுவதற்கு அதிக பிரயாசை எடுத்துக்கொள்ளுமென்றும் அதன் மூலம் விடுதலை கூடிய சீக்கிரம் கிட்டிவிடு மென்றும் நம்பப்படுகிறது.

---

## யுத்தத்திற்குப்பின் உலகத்தின் நிலை.

### *1918—19 யுத்தத்தினின்றும் அறிந்துகொண்ட புத்தி.*

(டைம்ஸ்).

யுத்தத்தினால் ஏற்படும் கஷ்டக்கோட்டின் எல்லையை அடைந்துள்ளோம். நெருங்கும் போதே, வெற்றியின் நிலையையும் முடிவையும் பற்றி புதிதாய் அதைரியப்படுத்துவதன்னியில் பின் நடக்கும் நடவடிக்கைகள் நிச்சயப்படுத்தும்.

1918-19-ம்ஆண்டு அடைந்த அனுபவங்களை அனுபவிக்க முடியாது என்பது வெளிப்படை. மிஸ்ட்டர் கார்டல் ஹல்லின் பேச்சு, மிஸ்ட்டர் ஸெட்டினியஸின் லண்டன் வருகை, சாம்ராஜ்ய பிரதம மந்திரிகளின் கூட்டான வருகை, உலக தொழிலாளிகள் ஆபீஸ் இவைகளின் வேனிற் கால சந்திப்பும், U. N. R. R. A. உண்டாக்கப்பட்டிருப்பதும், 1918-19-ம் வருஷத்தில் கிடைத்த பாடத்தின், நன்மையை அடைவேயாம்.

நாம் எந்த நாஸி மக்களுடன் போரிடுகிறோம் என்பதை அறிந்தது இதுவரையிலும் போதவில்லை இனியும் போதாது. யுத்தமிடும் நேசநாட்டுகளின் எண்ணம், நடுநிலைமை வகிக்கும் நாடுகளின் நினைவு, எதிரிகளின் சமாளிக்கும்பலம் இவைகள் எல்லாம், நேசநாட்டினர் ஹிட்லரின் கொடுமையின் "புதுமுறையை" அழித்து வேறுமுறைகளை உண்டாக்க முயலுவதில் உள்ள தாத்பரியத்தை அறிவிக்க இருக்கும் வெற்றியை அடைய முடியும் எனத் தெரிவிக்கின்றன.

திட்டங்களை விரிவாய் போடும் காலம் நெருங்கவில்லை. இப்பொழுது வேண்டியதாவது இம்முறைகளைப்பற்றிய பத்திரமும், இம்முறைகளை அனுசரிப்பதென எல்லோரும் ஒருமனப்பட்டு செய்யும் வாக்குத்தத்தமும்.

யுத்த ஆரம்பத்தில் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் இருமுறைகளை கூறியுள்ளார். அவை பயமற்ற வாழ்க்கையும் தேவையற்ற வாழ்க்கையுமாகும். இவைகளையே Mr. புரூஸ் அமெரிக்க



வியாபார சபையில் பேசியபோது எடுத்துக்கூறியுள்ளார். இதில் முதலிலுள்ளதை ஐக்கிய நாடுகள் தன்னகத்தேகொண்டுள்ளன என்பது ருசுப்பிக்கத்தக்கவிஷயம்.

உலகத்திலுள்ள நாடுகளில் ஏற்படும் கஷ்டங்களைத்தவிர்க்க ஒரு கூட்டம் கூட்டி, அங்கு மனோநிடம் முதல் பொருள் முதலியன வரையில் அவைகளைப்பற்றி ஆலோசித்து, இக்கஷ்டங்களைப் போக்கும் முறைகளை கண்டுபிடிப்பதேயாம். முடிவுக்கு வருவதற்கு கால தாமதம் ஏற்படாதுயென Mr. புரூஸ் நம்புகிறார். ஏனெனில் பிற்கால உலகத்தின் நலன் இவைகளைப் பொருத்திருக்கிறது. அவரின் பிரசங்கத்தில் மேற்கூறியதில் இரண்டாவதான தேவையினின்றும் சுதந்திரமாயிருப்பதுபற்றி வெகுநேரம் பேசினார். மிஸ்டர் புரூஸின் கொள்கைகளுக்கும், I. L. O. கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கென குறிக்கப்பட்ட தீர்மானங்களுக்கு ஒற்றுமையுள்ளது. விரிவான முறையில் வெற்றி பெறுவதென்பது எல்லா நாட்டிலும் இம்முறைகள் கையாளப்படுவதால் மட்டுமல்ல, இம்முறைகளை கையாளுவதில் ஏற்படும் சுலபவழிகளில் உள்ளது. பெரும் தேசம் ஒன்று தன்நாட்டு சாமான்களை பிறநாட்டிற்கு விற்றுவிடுவதில் மட்டும் கண்ணும் கருத்துமாயிருந்து, அந்நகரத்தின் விலையுயர்விற்குத் தகுந்தாற்போல் வாங்கும் நாணய உயர்வு ஏற்படாமல் வியாபாரம் நடத்தினாலும், பிற நாட்டு சாமான்களைத்தான் வாங்கிக்கொள்ளாமல், அந்நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தை உண்டாக்கினாலும் முடிவு மிகவும் கஷ்டமானதாயிருக்கும்.

மிகவும் கஷ்டமான பிரச்னைகளையும், எல்லா நாடுகளும் பொதுப்பட்ட எண்ணத்தோடு வேலையை நடத்தியும், வேலையை கொடுத்தும், நடத்துவதுடன் ஒருவரோடு ஒத்துழைத்தால், கஷ்டமின்றி வெகு சுலபமாய் தீர்க்கலாம் என்பது மட்டும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியது முக்கிய விஷயமாகும்.

---

## பர்மா யுத்தத்தில் நேசதேசத்தினரின் குறியும், ஜப்பானியருடைய குறியும்.

### *ராணுவ நிருபர் லெப்டினெண்ட் ஜெனரல் H. G. மார்ட்டின்.*

(டெயிலி டெலிகிராப்).

பர்மா அரங்கத்தில் இந்த யுத்த காலத்தில் ஜப்பானியர்களும், நேசதேசத்தினரும் தனித் தனியே அவர்கள் திட்டங்களைப் போட்டிருந்தனர். சைனாவிலுள்ள அமெரிக்க குண்டு போடும் விமானப் படைக்கு ஜப்பானியர் பயந்து அஸ்ஸாமில் அவர்கள் முன்னேற பயந்தனர். பஸிபிக்கில் நடந்த நடவடிக்கைகளில் அவர்கள் அடைந்த நஷ்டங்களையும், இழந்த மதிப்பையும் திரும்பப்பெற விரும்பினர். அதற்காக வேண்டிய திட்டங்களையும் போட்டனர்.

ஜனவரி மாத ஆரம்பத்தில், கிழக்கு ஆசியா அரங்கத்தலைவர் அரக்கானிற்குள் ஒரு படையை அனுப்பினர். அதன் காரணம் அக்யாபைப் பெறவும், ஜப்பானியத் துருப்புகளை வடக்கு ஆபிரிக்காவிலிருந்து அரக்கானிற்கு திரும்பவும்தான் இத்திட்டம். ஏனெனில் வட பர்மாவில் வேறு திட்டங்கள் உள.

நம் அரக்கான் தாக்குதல்களை எதிர்த்து ஜப்பானியர்கள் தங்களுக்கு பெறும் நாசத்தை தேடிக்கொண்டனர். பிப்ரவரி மாத ஆரம்பத்தில் மாயூவிற்கு கிழக்கில் இந்திய 7-ம் படைப் பகுதியை வட்டமிட்டும், அதற்கு மேற்கிலுள்ள 5-ம் இந்தியப் படைப் பகுதியையும் வட்டமிட்டும், நம் ரிசர்வுகளை அரக்கானுக்குக் கொண்டுபோகும்படி செய்து அஸ்ஸாம் அரங்கத்தில் நம்மை பலக்குறைவாகும்படி செய்து தாக்க நினைத்தனர்.

7-ம் படைப் பகுதியின் பெருந்தாக்குதல்களின் பயனாய் ஜப்பானியர்களின் திட்டங்கள் நிலைகுலைந்தன. மார்ச்சு மாத ஆரம்பத்தில் அஸ்ஸாம் அரங்கத்தில், சிண்ட்வினிலிருந்து மணிப்பூர், இம்பால், டிமாபூர் ரஸ்தா இவைகளின் மேல் ஜப்பானியர்களின் தாக்குதல் ஏற்பட்டது. இத்தாக்குதலில் ரஸ்தா துண்டிக்கப்பட்டது. சில்சாருக்கு செல்லும் அஸ்ஸாம் வங்காள ரயில்வேயின் மேற்கில் வேறொரு பாதை இருந்தாலும்கூட இந்த முக்கிய வழி மூடப்பட்டது மிகவும் சிக்கலாய் முடிந்தது. ஜூன் 15-ம் தேதிக்குள் பருவக்காற்று பலமாய் ஆரம்பிக்கும் முன், ஒரு முடிவை அடைய ஜப்பானியர் விரும்பினால் அவர்கள் இன்னும் பெருங்காரியங்கள் செய்யவேண்டும். அவர்கள் காடுகளை விட்டுச்சென்று, மணிப்பூரில் தங்கி, அங்கிருந்தே ஸப்ளைகளையும், விமானநிலையங்களையும் உண்டுசெய்துகொண்டு, டாமுவிலிருந்து, சிண்ட்வினிற்கு இந்த பருவகாலத்திற்கென வேறொரு பாதையை உண்டு பண்ணிக்கொள்ளவேண்டும். ஆனால் இனி நடப்பவைகள் வேறு விதமாய் நடக்கும் என்பதை நாம் தக்க காரணங்களுடன் நம்பலாம். நாட்டைவிட்டு வெளி வந்தாலும் ஜப்பானியர்களுக்கு கஷ்டம் ஏற்படும். காட்டினுள் இருந்தாலும் மலேரியா ஜுரத்தால் கஷ்டப்படுவார்கள். இறுதியில் மான்ஸூன் காட்டைத் தாக்கி அதனாலும் கஷ்டப்படுவார்கள்.

# முகம்மதியருக்கு மெக்காபோல் ஜப்பான் யாவருக்கும் புனித யாத்திரை ஸ்தலமாயுள்ளது.

(பார் ஈஸ்ட் ந்யூஸ் லெட்டர்).

பல நூற்றாண்டுகளாக பர்மாவிலிருந்து வந்த புத்த மத சம்பந்தமான புராதன ஞாபகச் சின்னங்களை ஜப்பானிய சைன்யங்கள் ஜப்பானுக்கு கப்பல்களில் ஏற்றுமதி செய்கின்றன. ஜப்பானியர் இம்மாதிரி செய்ய ஆரம்பிக்குமுன் சில கஷ்டங்களை அனுபவிக்க இருந்தாலும், டாக்டர் பாமாவும் அவருடைய நிர்வாகமும் செய்த ஏற்பாட்டினால் இம்மாதிரி செய்யப்படுகிறது.

இம்மாதிரி புராதன புண்ணிய ஞாபகச் சின்னங்களை சேகரிப்பது ஜப்பானியர்களின் திட்டங்களில் ஒரு பகுதியாகும். இதிலும் ஒரு முறையுள்ளது. சென்ற வருஷத்தில், பாங்காங்கிலுள்ள உள் எமாரால்ட் புத்தரின் கோவிலில் புதைக்கப்பட்டதிலிருந்து புத்தரின் சாம்பலை சியாம் அரசாங்கத்திடமிருந்து ஜப்பானியர் பெற்றனர். கம்போடியாவிலுள்ள ஆங்கர்வாட்டிலிருந்தும், இதர ஸ்தாபனங்களிலிருந்தும் ஜப்பானியர்கள் இந்தோ-சீனாவில் 23 பெட்டிகள் நிறைந்த விலை மதிப்புள்ள வஸ்துக்களை கொள்ளையிட்டிருக்கின்றனர்.

ஆனால் பர்மாவிலிருந்து எடுத்துச் செல்லும் புத்த சின்னங்களை ஜப்பானியர்கள் இன்னும் முடிவு செய்து விடவில்லை. பர்மாவில் பல புண்ணியமான ஞாபகச் சின்னங்கள் உள. ஷ்வேடாகன் என்ற கோவில், புத்தரின் தலையிலிருந்து வந்த எட்டு மயிர்களைச் சேகரித்து வைத்த களஞ்சியம் என்று சொல்லப்படுகிறது. கீழ் பர்மாவில் மற்றொரு கோவிலில் 2 மயிர்களும், அரக்கானில் ஒரு கோவிலில் புத்தரின் பல் ஒன்றும் உள. கௌதம புத்தருக்கு முன்னிருந்த மூன்று புத்தர்களைப்பற்றிய சின்னங்களும் ஷ்வேடாகனில் உள. இவைகள்தான் பர்மாவில் உள்ள சின்னங்களில் மிகவும் புனிதமானவைகள் என்று புத்த மதத்தைச் சேர்ந்தோர்களால் கருதப்பட்டு வருகிறது. ஜப்பானியர்கள் இவைகளையோ, அல்லது இதர வேறு புராதீனமற்ற சின்னங்களையோ எடுத்துச்சென்றதாகச் சொல்லப்படவில்லை.

ஜப்பானியர்கள் புதிதாய் கைக்கொள்ளும் இவைகளின்மேல் தனிப்பட்ட கவனம் செலுத்துகிறார்கள். ஏனெனில் ஜப்பானில் புதிதாய் ஒரு கோவில் ஒன்று கட்டி அங்கு இவைகளைச் சேகரித்து வைக்கப்போகிறார்கள். யுத்த ஆரம்பத்தில் விமானத்திலிருந்து போட்ட குண்டுகளால் நிர்மூலமாகிய ரங்கூனிலிருந்த புத்த கோவில் போன்ற ஒரு கோவிலை ஜப்பானில் அவர்கள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

ஒரு நாள் ஷ்வேடாகனில் உள்ள கோவிலில் ஆயிரக்கணக்கான பர்மியர்கள் சேகரிக்கப்பட்டு தொழுக விடப்பட்டனர். ரங்கூனிலுள்ள ஷ்வேடாகன் என்ற கோவில் மிகவும் புராதனமானது. கண்டியிலுள்ள புத்தர் பல்லிருக்கும் கோவிலைவிட முதன்மையானது. நிச்சயமாய் ஜப்பானிலுள்ள புத்தக் கோவில்கள் எல்லாவற்றையும்விட முக்கியமானது. அதன் கட்டடம் மிகவும் பெரியது. இந்தக் கோவிலின் அடி தளம் சுற்றிலும் கால் மைல் விஸ்தீர்ணமுள்ளது. அதன் உயரம் செயிண்ட் பால்ஸ் கோவிலைவிட அதிகமானது. பூராக்கோவிலும் முலாம் பூசப்பட்டு, புத்த மதத்தைச் சேர்ந்த பலராலும் கொண்டுவரப்பட்ட தங்கத் தகடுகளால் அலங்கரிக்கப்பட்டது. கோவிலின் உச்சியில் தங்கத்தாலும், முலாம் பூசப்பட்டதுமான குடையொன்று வைரத்தினாலும், வைடூரியத்தினாலும், மரகதங்களாலும், நீலமணிகளாலும் அலங்கரிக்கப்பட்டு, வைக்கப்பட்டுள்ளது. ஜப்பானியர்கள் இச்சின்னங்களை எடுத்துச் சென்றபோது நடத்திய சடங்குகளின்போது 40 ஆயிரம் மக்கள் இச்சடங்கிற்கு வந்திருந்ததாகச் சொல்லப்படுகிறது. உண்மையில், ஜப்பானை ஆசியாவிலுள்ள எல்லா மதத்தார்களுக்கு புனித ஸ்தலமாய், முகம்மதியர்களுக்கு மெக்காவைப்போல் செய்ய முயலுகிறார்கள். கம்போடியாவிலிருந்து 23 பெட்டிகள் நிறைந்த விலையுயர்ந்த வஸ்துக்களை எடுத்துச் சென்றிருக்கின்றனர். உயர்ந்த அழகுள்ள சித்திரங்களையும் சித்திர வேலைப்பாடையும் உடையதாய் கருதப்படும் வட சீனாவிலுள்ள டாடாங்குகைகளை ஜப்பானியர்கள் அநேகமாய் நாசமாக்கிவிட்டனர். ஆக்கிரமித்தது முதல் சிலங்கும், வட சீனாவிலுள்ள இதர பாகங்களிலுமுள்ள பல சாமான்களை இவர்கள் கவர்ந்து சென்றுமிருப்பார்கள். இவ்வாறு கொண்டுசெல்லப்பட்டவைகளில், டவகர் ராணியின் வாயிலிருந்த முத்து ஒன்றும் சேர்ந்ததாகும்.

18 மாதங்களுக்கு அல்லது 2 வருஷங்களுக்குமுன்பு, மங்கோலியாவில் உலகோர் கவராமல் செங்கிஸ்கானினின் சந்ததியாரால் காப்பாற்றப்பட்டுவந்த அவன் உடலைக் கவர்ந்துவர ஒரு படையொன்று அனுப்பப்பட்டது. அவர்கள் கெங்கிஸ்கான் புதைக்கப்பட்ட இடத்தைக் கண்டுகொண்டார்களானாலும், அவனின் உடல் மிகுதியை மங்கோலியர்கள் ஏற்கனவே அப்புறப்படுத்திவிட்டார்கள்.



இவைகளில் எல்லாம் கொள்ளையிடும் தன்மையிருந்தாலும், ஜப்பானியர்களின் ராஜிய விஷயம் வெளிப்படையானது. அவர்கள் பர்மாவில் செய்ததுபோல மத சம்பந்தமான சாமான்களை சேகரிக்கவும், அல்லது சில ஜாதியாரால் கொண்டாடப்பட்டவைகளை சேர்க்கவும் விரும்புகிறார்கள்.

ஜப்பானியர்கள் கொடுமையுடையவர்கள். இந்த ராஜிய, மத விஷயங்களைச் சரியாய் கவனிக்காமலிருப்பது குற்றமேயாகும். சில ஆண்டுகளுக்குமுன் ஜப்பானியர்கள் முஸ்லிம் உலகத்தாரை ஏமாற்றியபோது ஜப்பானில் முஸல்மான்கள் இல்லை என்றே சொல்லப்பட்டது. ஜப்பான் முஸல்மான் தேசமுமல்ல, இஸ்லாமிய நாகரிகங்களை உடையதுமல்ல. ஜப்பானியர்கள் சீக்கிரம் அதை செய்தார்கள். கோரிகள் கட்டினர். கோமில் ஒன்றும், டோக்கியோவில் ஒன்றும்கட்டினர். வெளிநாட்டு ஆபீஸிலிருந்தும், யுத்த ஆபீஸிலிருந்தும் பலர் முகம்மதியர்களாக ஆக்கப்பட்டனர். ஜப்பானில் இருந்த உண்மையான முகம்மதியர்கள் இந்தியாவிலிருந்து வந்த சில இந்தியர்களும், மத்திய ஆசியாவிலிருந்து வந்த சில டார்டார் ஜாதியினருமாகும்.

ஆனால் ஜப்பானியர்கள் புத்த மதத்தின் வழியாய்த்தான் வேலை செய்தனர். புத்த மதத்தலைவர்களாய் அவர்கள் வெளிக்குக் காட்டிக்கொண்டு இருந்தாலும் 1868-ம் வருஷத்தில் புதிதாய் திரும்பவும் உயிர் கொடுக்கப்பட்ட ஷிண்டோயிஸ்ட் மதத்தால் புத்த மதக் கோவில்கள் க்ஷீனதிசையடைந்திருக்கிறது. 1870-ம் வருஷத்தில், புத்தமதக் கோவில்களை நாஸப்படுத்தினர். டஜன் கணக்கில் புத்தக் கோவில்கள் இடிக்கப்பட்டு அங்குள்ள பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டன. பல பாதிரிகளும், சந்யாஸிகளும் கொல்லப்பட்டனர். கலை, நாகரீகம் சம்பந்தப்பட்டவரை புத்த மதத்திற்கு கடமைப்பட்டவர் ஜப்பானியர்கள். ஆனால் இன்றைய தினம் இவர்கள் செய்பவை ஷிண்டோயிஸ்ட் மதத்தின் காரணமாய் ஜப்பானியர்கள் பௌத்தர்கள் அல்ல. ஆனால் அம்மாதிரி அவர்கள் வேஷம் போடுகின்றனர். பர்மா, ஸியாம், சீனா ஏசியாவில் உள்ளவைகள் ஆகிய பல புத்தக் கோவில்களிருந்து அவர்கள் புத்தமத சின்னங்களைச் சேகரிப்பது ஜப்பானை புத்த மதத்தைச் சேர்த்தது என வெளிக்குக் காட்டவேயாம். இது தற்கால சரித்திரத்தில் மிகவும் அபாயகரமானதான ராஜிய கொள்ளை என்றே சொல்லவேண்டும். தாத்காலிகமாய் ஜப்பானியர் இதில் வெற்றியடையலாம், அவர்கள் ஆக்கிரமித்துள்ள தேசத்திலுள்ள மக்கள் ஏமாற்றப்படலாம். ஆனால் முடிவில் ஜப்பானியர்கள் தோல்வியுறுவார்கள். அவர்களுக்கு உதவியாயிருக்கும் பாதிரிகளும் இந்தத் தலைவர்களுடன் தங்கள் காரியத்தில் தோல்வியுறுவார்கள். அதற்குக் காரணம் அவர்கள் மீற முடியாத தடையொன்று உளது. ஜப்பானியர்கள் அவர்கள் அரசரின் மதத்தை மாற்றமுடியாது. ஜப்பானிய பௌத்தர்களும், ஜப்பானிய கிருஸ்துவர்களும் இந்த மத சம்பந்தமான பிரச்னையை தீர்த்திருக்கிறார்கள். மூன்றாயிருந்த இதனை நான்காக மாற்றியிருக்கிறார்கள். அவர்கள் புத்தரை ஷிந்தோ மதக்கடவுளோடு ஒன்று சேர்ந்துவிட்டார்கள். ஆனால், உலகத்திலுள்ள மற்றவர்களும் இந்த உளறுபடியான விஷயத்தை ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

---

## சீனாவுக்கு கடல் மார்க்கமாகச் செல்லக்கூடும்.

சீனாவுக்குச் செல்லும் கடல் மார்க்கத்தைப்பற்றி காப்டன் ஓபர்க் என்ற கடற்படை நிருபர் எழுதியிருக்கும் கட்டுரை ஒன்று ஸ்டாக்ஹோமில் வெளிவரும் டிட்னின்சன் என்ற பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

சம்பவங்களை நோக்கும்பொழுது அமெரிக்க கடற்படை ஜப்பானிய கடற்படையுடன் போர் தொடுக்கத் தயாராகயிருக்கிறது என்று புலப்படுகிறது. கடல் போரைத்துவக்க சரியான காலம் வரவில்லையென்று ஜப்பானியர்கள் நினைக்கிறார்கள் போலும். காலதாமதம் அதிகரித்துக்கொண்டே போனால் அமெரிக்க கடற்படை அதிக அனுபவம் பெற்றுவிடும். அமெரிக்கர்கள் ஏராளமான தீவுகளையும் கைப்பற்றிவிடுவார்கள். மேற்கில் வெகுதூரத்தில் போர் நடந்தால் அங்கு ஈடுபட்டு பழுதுபட்ட கப்பல்களை அமெரிக்கர்கள் பேர்ல் துறைமுகத்துக்குப் பழுதுபார்க்கக் கொண்டுபோவது கஷ்ட சாத்தியமாகிவிடும். டிரக் விழுந்துவிட்டாலும் யாப், பாலாத்தீவுகளை நாம் கைப்பற்றிவிட்டால் அவைகளை பாய்ச்சல் ஸ்தலமாக அமெரிக்கர்கள் உபயோகிக்கலாம். காரலைன் தீவுகளிலிருந்து பிலிப்பைன்ஸ் தீவுகள் வரையிலுள்ள கடல்மார்க்கங்கள் அமெரிக்கர்களுக்குத் திரக்கப்பட்டுவிடும். ஜப்பானியர்களின் நடவடிக்கைகள் மெக்ரோனீஷியாவுக்குத் தெற்கேதான் நடைபெறக்கூடும். பிலிப்பைன்ஸ் தீவுகளில் படைகளை இறக்க அமெரிக்கர்களுக்கு யாதொரு தடங்கலும் ஏற்படாது. அப்பொழுது ஜப்பானியர்களின் கடல் மார்க்கங்கள் பிலிப்பைன்ஸ் தீவுகளுக்கு மேற்குப் பக்கத்திற்குச் செல்லவேண்டும். அப்பொழுது மார்ஷல்ஸ் தீவுகளிலிருந்து பாலா வரைக்கும்

அமெரிக்கர்களுக்கு விரிவான தளம் கிடைக்கும். தெற்கிலிருந்து ஜப்பானைத் தாக்க அமெரிக்காவுக்கு வசதி கிடைக்கும்.

### பார்மோஸாவிலிறங்குவது.

கிழக்கு பிலிப்பைன்ஸ் தீவுகளில் அமெரிக்கர்களுக்குத் தளம் ஏற்பட்டால் அவர்கள் பார்மோஸாத் தீவில் படைகளை இறக்குவதற்கு சௌகரியமேற்படும். பிலிப்பைன்ஸ் தீவுகளுக்குக் கிழக்கிலுள்ள கடல் மார்க்கம் மூடப்பட்டுவிட்டால் பார்மோஸாவைச் சுற்றிலுமுள்ள சமுத்திரம் சீசாக் கழுத்துபோன்றதாக ஆகிவிடும். அதன் வழியாகத்தான் ஜப்பானிலிருந்து அதன் ஆக்கிரமிப்பு நாடுகளுக்கு போக்குவரத்துக் கப்பல்கள் செல்லவேண்டும். இதற்கு முன்னதாக அமெரிக்க கடற்படையை ஜப்பான் முறியடிக்காவிட்டால் தென்கிழக்கு ஆசியாவிலுள்ள ஜப்பானியர்களின் நிலைமை மிகவும் கேவலமாகிவிடும்.

1942-ம் வருஷம் வேனிற்காலத்தில் மால்டாவுக்குச் சண்டை விமானங்களை அனுப்பியது போல இப்பொழுது பார்மோஸாவுக்குத் தெற்கிலுள்ள சமுத்திரங்களிலிருந்து விமானந்தாங்கிக் கப்பல்கள் மூலம் சைனாவுக்கு விமானங்களை அனுப்பலாம். சைனா கடற்கரையில் படைகளை இறக்குவதற்குமுன் அமெரிக்கர்கள் லூஸானின் வடக்கு பாகத்திலும் பார்மோஸாவிலும் அநேக விமான தளங்களை சம்பாதித்து அங்கிருந்து விமானப்படை ரக்ஷணையைப் பெறவேண்டும். லூஸானிலுள்ள தளங்களிலிருந்து கிழக்கு சீனக் கடலிலுள்ள ஜப்பானியக் கடற்படையை பலமாகத்தாக்கிவிடலாம். இதன் மூலம் சீனாவிலுள்ள ஜப்பானியத் தரைப் படைகளுக்கு சிரமம் ஏற்படும்.

### அமெரிக்காவின் திட்டங்கள்.

ஜப்பானியர்களுக்கு கடல் வெற்றி கிடைத்துவிட்டால் அதன் மூலம் அமெரிக்காவின் முன்னேற்றம் தடைபடும். நிரந்தரமாக இல்லாவிட்டாலும் நீண்டகாலத்துக்கு இந்த நிலைமை ஏற்படும். ஜப்பானியர்களை முறியடித்துவிட்டால் அமெரிக்காவின் திட்டங்களைப் பூராவாக அமுல் நடத்திவிடலாம். ஜப்பானியர் வசம் இன்றும் குவாம், டிரக், மற்றத் தீவுகளிருக்கின்றன. மார்ஷல்ஸ் தீவுகளைவிட்டு ஜப்பானியர்களைத் துரத்தியடித்ததுபோல் அவ்வளவு சுலபமாக கடற்படை பீரங்கிகளின் உதவிகொண்டு ஜப்பானியர்களை காரோலைன்ஸ், மாரியனாஸ் தீவுகளிலிருந்து துரத்தியடித்துவிட முடியாது.

அமெரிக்கர்கள் பிலிப்பைன்ஸ் தீவுகளை நோக்கிவரும்பொழுது, மேற்கிலிருந்தும், தென் மேற்கிலிருந்தும், பர்மாவிலிருந்தும், சைனாவையும் தாய்லாந்தையும் நோக்கித் தாக்குதல் ஏற்பட்டால் கிழக்கிலிருந்து ஏற்படும் அமெரிக்கத் தாக்குதலுக்கு ஆதரவு கிடைக்கும். மேலும் அலூஷியன் தீவுகளிலிருந்து குரைல்ஸ் தீவுகளை அதிக வலுவுடன் தாக்குவதன் மூலமும் அமெரிக்காவுக்கு ஒத்தாசை செய்யலாம்.

போதுமான துருப்புகளிருந்தாலும் ஐரோப்பிய யுத்தம் முடிவடையுமுன் ஏராளமான துருப்புகளைச் சீனாவுக்குக் கொண்டுபோகப் போதுமான கப்பல்கள் இருக்கின்றனவாவென்பது சந்தேகம். கடல் மார்க்கமாகச்சென்று நேசதேசத்தார்கள் சீனத் துறைமுகங்களிறங்கி சீனர்களுடன் தொடர்பு ஏற்படுத்தினாலொழிய சீனாவிலிருந்து ஜப்பானியர்களைத் துரத்தியடிக்கும் முயற்சியில் சீனர்கள் அதிக முன்னேற்றம் அடைந்துவிடுவார்களென்று எதிர்பார்ப்பதற்கில்லை.

---

## மனிதர்கள் கூடச்செல்லும் மீன் வெடி.

(டைம்ஸ் பத்திரிகை).

யுத்தத்தை நடத்தும் சாதனங்களை அபிவிருத்தி செய்வதிலும், மனித வர்க்கத்தின் மற்ற ஒவ்வொரு நடவடிக்கைகளிலும், ஆயுதங்களை அதிகப்படுத்துவது அதிகரித்துவந்தபோதிலும் தனிப்பட்ட நபர்களின் முயற்சிக்கும், தீரத்துக்கும், சாதுர்யத்துக்கும் சந்தர்ப்பங்கள் கிடைக்காமலிருக்கவில்லை.

யந்திர அமைப்பு மூலமாக ஒருவர் செல்லக்கூடிய சண்டை விமானம் தயாரிக்கப்பட்டது. மிஸ்டர் சர்ச்சில் சொன்னபிரகாரம் அவைகளின் மாலுமிகள் நவீன யுத்தத்தில் ஈடுபட்டுப் புகழ்பெற்றவர்களில் தாங்களும் சேர்ந்தவர்களென்று தங்களுடைய தனிப்பட்ட திறமையைக் காட்டியிருக்கிறார்கள்.

### சிறிய நீர்மூழ்கி.

கடலில் தொழிலபிவிருத்திமூலம் சிறிய நீர்மூழ்கிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சமீப காலத்தில் அவைகள் ஆர்க்டிக் கடலிலுள்ள கப்பல்களைத் தாக்கிப் புகழ்பெற்றன. இதை வினா மனிதர்கள் கூடச்செல்லும் மீன் வெடியும், மற்றொரு அற்புத உற்பத்தியாகும். அவைகளின் இருப்பைப்பற்றியும், மத்தியதரைக்கடலில் அவைகள் ஈடுபட்டபொழுது இவைகளை ஓட்டிய மாலுமிகளைப்பற்றியும் நாம் இப்பொழுது சில தகவல்களை அறிவிப்போம்.



இந்த ஆயுதம் வேலை செய்யும்பொழுது எடுக்கப்பட்ட ஒளிப்படத்திலிருந்து இதற்கு இப்பொழுது வழங்கப்பட்டிருக்கும் பெயர் பொருந்தாது. மீன் வெடி என்பது எதிரியின் கப்பல் பேரில் போடப்பட்டு, கப்பலில் விழுந்தவுடன் வெடித்துக் கப்பலைப் பிளந்துவிடும் ஆயுதம் என்று விளங்கும். அதன் வடிவம் மட்டில் மீன் வெடியை ஒத்திருக்கிறதே ஒழிய அதன் மற்ற அமைப்புகள் நீர்மூழ்கியைப் போன்றவையே. ஆனால் நீர்மூழ்கியைப் போலில்லாமல் அதன் மாலுமிகள் அதின்பேரில் உட்கார்ந்து செல்லுகிறார்கள். அவர்கள் நீந்திச் செல்லுவதற்கு உபயோகப்படும் உடைகளைத் தரித்திருந்தபோதிலும் அவைகள் உஷ்ணத் தண்ணீரில் செல்லக்கூடிய ஆடைகள்தான். கடுமையான சீதோஷ்ணத்தில் அதை ஓட்டிச் செல்ல மாலுமிகள் எஸ்கிமோக்களைப்போல் திடகாத்திரமுள்ளவர்களாயிருக்கவேண்டும். இந்த நீர்மூழ்கிக்கு மாலுமிகள்தான் பூதக்கண்ணாடிகள்.

இந்த மாலுமிகள் லக்ஷியத்திற்குப் பக்கத்தில் வரும் வரையில் தண்ணீர் மட்டத்தின் பேரில் தலைகளைக் காண்பித்துக்கொண்டு கடலில் செல்லுவார்கள். பிறகு தண்ணீருக்குள் மூழ்கி வெடிக்கும் மருந்தை அதன் அடிப்பக்கத்தில் அமைத்துவிட்டு அவர்கள் சென்றுவிடுவார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் மீன் வெடி வெடித்துவிடும். அவர்களும் அபாயத்திலிருந்து தப்பித்துக்கொண்டுவிடுவார்கள். இந்த உபாயத்தை ராபர்ட் புல்டன் நீர்மூழ்கிகளில் அமைக்கவேண்டுமென்று 140 வருஷங்களுக்கு முன் சிபார்சு செய்தார். இதை ஸெயிண்ட் வின்ஸண்ட் பிரபு அங்கீகரிக்கவில்லை. புல்டன் நீர்மூழ்கியைக் கட்டினார். ஆகிலும் அதில் கப்பலைத் தாக்கக்கூடிய மீன் வெடியை அமைக்கவில்லை. லெப்டினண்ட் கிரீன்லாந்தும், ஸப் லெப்டினண்ட் டோவும், அவர்களுடைய சிநேகிதர்களும் இந்தப் புதிய சாதகத்தை அமைத்திருக்கிறார்கள். அவர்களுக்குக் கிடைத்த புகழ்மாலைக்கும் அவர்கள் யோக்கியதையுள்ளவர்கள்தான்.

---

## மின்சார விளக்கு பல்புகளின் விலை நிர்த்தாரணம்.

### விலைவாசி ஜாப்தா தொங்கவிடப்படவேண்டும்.

அளவுகடந்த சேமிப்பு, அநியாய லாபக்கொள்ளை முதலியவற்றைத் தடுக்கும் சட்டப்படி இந்தியா கெஜட்டின் விசேஷ பதிப்பில் மத்திய நிர்வாகம் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. இந்த அறிக்கையின் ஷெடியூலில் விவரிக்கப்பட்ட மின்சார விளக்கு பல்புகள் சம்பந்தமாக வியாபாரிகளும் உற்பத்தி செய்கிறவர்களும் விதிக்கக்கூடிய உத்தம பக்ஷமான விலைவாசிகள் நிர்த்தாரணம் செய்யப்பட்டிருக்கின்றன.

மற்றொரு உத்தரவின்படி மின்சார பல்பு வியாபாரிகள் ஏழு நாட்களுக்குள் பல்புகள் பேரில் விலையை ஒட்டிவிடவேண்டும். இது சாத்தியமில்லாவிடில் விலைவாசிகளடங்கிய அட்டவணையை வியாபாரஸ்தலத்தின்முன் தொங்கவிடவேண்டும். மே மாதம் 1-ம் தேதிக்குப்பின் கிட்டங்கியிலிருந்து அனுப்பப்படும் பல்புகளடங்கிய பெட்டிகள் பேரில் உற்பத்தி செய்கிறவர்கள் அவைகளின் விலையை அச்சடித்துவிடவேண்டும்.

இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பல்புகளின் உத்தமபக்ஷவிலை பின்வருமாறு :—

இறக்குமதி செய்யப்பட்ட பல்புகள் :—

| | கல்கத்தாவில் விலை. | | | மற்ற இடங்களில் விலை. | | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
| 15, 30 வாட் வாகுவம் பல்பு ... ... | 1 | 4 | 0 | 1 | 5 | 0 |
| 40 ,, ,, ,, ... ... | 1 | 6 | 0 | 1 | 7 | 0 |
| **வாய்வு நிரப்பிய பல்புகளின் விலை.—** | | | | | | |
| 40 வாட் உள்ள பல்பு ... ... | 1 | 8 | 0 | 1 | 10 | 0 |
| 300 வாட் பல்பு ... ... ... | 8 | 7 | 0 | 8 | 14 | 0 |
| **உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் எல்மி பல்புகள்.—** | | | | | | |
| 15, 30 வாட் வாகுவம் பல்பு ... ... | 1 | 0 | 0 | 1 | 1 | 0 |
| 40 வாட் வாகுவம் பல்பு ... ... | 1 | 2 | 0 | 1 | 3 | 0 |
| **வாய்வு நிறப்பிய பல்புகள்.—** | | | | | | |
| 40 வாட்ஸ் ... ... ... | 1 | 3 | 0 | 1 | 4 | 0 |
| 300 வாட்ஸ் ... ... ... | 6 | 11 | 0 | 7 | 0 | 0 |

| | ரூ. அ. ப. | | ரூ. அ. ப. |
|---|---|---|---|
| **மற்ற பல்புகள்.**—(இந்தியாவில் எந்த இடத்திலும்). | | | |
| 60 வாட்கள் வரையிலுள்ள வாகுவம் பல்புகள் ... | 2 0 0 | to | 2 4 0 |
| **வாய்வு நிறப்பிய பல்புகள்.**— | | | |
| 40 வாட்கள் முதல் 300 வாட்கள் வரை ... | 2 4 0 | to | 12 8 0 |

வாய்வு நிரப்பப்பட்ட 30 வாட்களுள்ள பல்பின் விலை ரூ. 2 8 0 ஆக நிர்த்தாரணம் செய்யப்பட்டிருக்கிறது.

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபிஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 196. (6-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 6- 5-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 10- 5-44 | வெள்ளனூர் | ... மாலை | 7.00 |
| 7- 5-44 | கீழாநிலை-புதுப்பட்டி | ... ,, | 7.00 | ,, | செம்பாட்டூர் | ... ,, | 7.30 |
| ,, | கீழாநிலை | ... ,, | 7.30 | 11- 5-44 | மலம்பட்டி | ... ,, | 7.00 |
| 8- 5-44 | பெருமாநாடு | ... ,, | 7.00 | ,, | பேராம்பூர் | ... ,, | 7.30 |
| ,, | புல்வயல் | ... ,, | 7.30 | 12- 5-44 | மலைக்குடிப்பட்டி | ... ,, | 7.00 |
| 9- 5-44 | சடயம்பட்டி | ... ,, | 7.00 | ,, | துலையானூர் | ... ,, | 7.30 |
| ,, | ஒலியமங்கலம் | ... ,, | 7.30 | | | | |

### பிரஸங்கம் 197. (1-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 13- 5-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 17- 5-44 | பூங்குடி | ... மாலை | 7.00 |
| 14- 5-44 | கீரனூர் | ... ,, | 7.00 | ,, | சத்தியமங்கலம் | ... ,, | 7.30 |
| ,, | நாஞ்சூர் | ... ,, | 7.30 | 18- 5-44 | மிரட்டுநிலை | ... ,, | 7.00 |
| 15- 5-44 | பூவரசகுடி | ... ,, | 7.00 | ,, | அரிமளம் | ... ,, | 7.00 |
| ,, | வேங்கடகுளம் | ... ,, | 7.30 | 19- 5-44 | உடையாளிப்பட்டி | ... ,, | 7.00 |
| 16- 5-44 | பெருங்களூர் | ... ,, | 7.00 | ,, | கின்னுகோட்டை | ... ,, | 7.30 |
| ,, | ஆதனக்கோட்டை | ... ,, | 7.30 | | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 7— 5—44 | கொடும்பாளூர். | 13— 5—44 | வெட்டம்விடுதி. |
| 9— 5—44 | பேராம்பூர். | 14— 5—44 | விராயாச்சிலை. |
| 10— 5—44 | கீழாநிலை-புதுப்பட்டி. | 16— 5—44 | கோனாபட்டு. |
| 11— 5—44 | ஆலங்குடி. | 17— 5—44 | காரம்பக்குடி. |
| 12— 5—44 | புதுக்கோட்டை. | 18— 5—44 | குழிபிறை. |
| | | 19— 5—44 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—9-5-44.


# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம் வருஷம் மேமீ 13உ [நெ. 197


தேசீய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் **CXCVII.**

## கார்பேதியன் மலைகள்.

(நியூஸ் குரானிகிள் பத்திரிகை).

1900 வருஷங்களுக்கு முன் ரோமன் படை ஒன்று கார்பேதிய மலைகளின் பனி உறைந்திருக்கும் சிகரங்களுக்குச் சமீபத்தில் சென்றது. அவர்கள் மலைகளைத் தாண்டிச் சென்று டேசியர்கள் என்ற முரட்டு சுபாவமுள்ள ஜாதியார்களைப் பழிவாங்கவேண்டுமென்று முயற்சித்தார்கள்.

அவர்களின் லக்ஷியத்திற்கு சமீபத்தில் ஒரு குறுகலான பள்ளத்தாக்கில் டேசியப் படைகள் ரோமன் படைகளைத் தாக்கின; சேனை சிதிலமாக்கப்பட்டது.

இது ஒரு ராணுவ நிகழ்ச்சி. அதற்குப் பின் இந்தக் கணவாய் வழியாக அநேக படையெடுக்கும் படைகள் போர் முரசுடனும், முஸ்தீப்புகளுடனும் செல்ல முயன்றிருக்கின்றன. இந்த மலைகளில் செல்லும் கணவாய்களில் கோத்களும், ஹூணர்களும், மொகலாயர்களும், ஸ்லாவ்களும் கடும்போர் செய்திருக்கிறார்கள்.

இந்த வாசற்படியில் இப்பொழுது மற்றொரு சேனை தாக்கிவருகிறது. முன்னேறிவரும் செம்படையை ஐரோப்பாவின் இரண்டாவது பெரிய மலைகள் தடை செய்கின்றன. அதன் பின் ஹங்கேரியின் சமவெளிகளும், தெற்கு ஜெர்மனி வரையில் பரவியிருக்கும் டான்யூப் நதியின் செழிப்பான பிரதேசமும் இருக்கின்றன.

800 மைல்கள் வரையில் அரை வட்டமாக உள்ள கார்பேதியன் மலைகள் ஐரோப்பிய மத்திய பிரதேச மலைத்தொடர்களின் கிழக்குப் பார்ச்வமாகயிருக்கின்றன. அதன் அகலம் 7 முதல் 230 மைல்கள் வரையிலிருக்கிறது. அவைகள் 72,600 சதுர மைல்கள் பரவியிருக்கின்றன. ஆல்ப்ஸ் மலையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இதன் சிகரங்கள் உன்னதமானவையல்ல. இதன் உன்னதமான சிகரம் 8,737 அடிதான்.

ருஷ்யாவுக்கும், ஹங்கேரிக்கும் மத்தியிலுள்ள சிகரங்கள் 3,500 அடிக்குமேல் உயரமாகயில்லை. ஆகிலும் அவைகள் பலமான இடையூறுகள்.

படையெடுக்கும் படைகள் கடந்து செல்லக்கூடிய கணவாய்கள் குறுகலானவை; சுலபமாகத் தற்காப்பு செய்யக்கூடியவை. 1915-ம் வருஷத்தில் ஆஸ்திரோ—ஹங்கேரியர்களுக்கும், ருஷ்யாவுக்கும் நடைபெற்ற கடும்போரில் ஆயிரக்கணக்கான ருஷ்யர்கள் மாண்டார்கள். ஒவ்வொரு கணவாயின் உச்சியிலும் ஆயிரக்கணக்கான மரச்சிலுவைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இப்பொழுது மிகவும் பலமான சேனை எதிர்பட்டிருக்கிறது. அவர்கள் பழைய சீர்கேட்டையும் மறக்கவில்லை.

அநேக முறையில் ரோமன், கோத், ஹுணர்களின் காலத்திலிருந்து கார்பேதியன் மலைகளில் ஒருவிதமான மாறுதலும் ஏற்படவில்லை. கடல் மட்டத்துக்கு 4,000 அடி உயரம் வரையிலும் மலைச்சரிவுகளில் புங்கமரங்களும், தேவதாரு விருக்ஷங்களும் அடர்த்தியாகயிருக்கின்றன. அதற்குப் பிறகு குன்றிப்போன தேவதாரு மரங்களும், புதர்களுமிருக்கின்றன.

மனிதர்கள் சஞ்சாரமில்லாத இடங்களில் கரடிகளும், ஓநாய்களும், சிவிங்கிகளும், விவசாயிகளின் குழந்தைகளுக்கு, ஆபத்து உண்டுபண்ணுகின்றன. அவர்களின் தாய் தகப்பன்மார்கள் பிசாசுகளையும், ஓநாய்களையும் ஈச்வரன் சிருஷ்டித்தாரென்று மூடபக்தியுடன் நம்பியிருக்கிறார்கள்.

---

## வார யுத்தச் செய்திகள்

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

2—5—44 (செவ்வாய்க்கிழமை). நேசதேச கடல் விமானப் படைகள் டிரக் என்ற ஜப்பானிய தளத்தைத் தாக்கின. எதிரியின் 126 விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன.

3—5—44 (புதன்கிழமை). நேசதேசத்தார்கள் இந்தோ-பர்மா எல்லைச் சரகத்தில் இம்பால் பிராந்தியத்தில் முன்னேறுகிறார்கள்.

4—5—44 (வியாழக்கிழமை). நேசதேசத்தார்கள் ஐரோப்பாவில் எதிரியின் போக்குவரவு மார்க்கங்களை நொருக்குகிறார்கள்.

5—5—44 (வெள்ளிக்கிழமை). சாம்ராஜ்ய நாடுகளின் பிரதம மந்திரிகள் ஜெர்மனிக்கு அனுப்ப வேண்டிய யுத்த நிறுத்த ஷரத்துக்களை ஆமோதித்தனர்.

நேசநேச வெடி விமானங்கள் இதாலியில் எட்ரியாடிக் கடல் கரையிலுள்ள பெஸ்காரா அணையை தகர்த்தனர்.

6—5—44 (சனிக்கிழமை). இதாலிய தளங்களிலுள்ள பிரிடிஷ் வெடி விமானங்கள் ருமேனியாவிலுள்ள போலஸ்தி எண்ணெய்ப் பிரதேசங்கள் பேரில் குண்டுகளைப் பொழிந்தன.

7—5—44 (ஞாயிற்றுக்கிழமை). நேசதேச வெடி விமானங்கள் பெர்லினையும், புகாரெஸ்டையும் பகலில் தாக்கின. செம்படை ருஷ்யாவில் ஸெபாஸ்டபூலிலுள்ள அரண்களை ஊடுருவிச்சென்றது.

8—5—44 (திங்கட்கிழமை). நேசதேச விமானங்கள் பெர்லினை பட்டப் பகலில் இரண்டாவது தடவை தாக்கின. 119 ஜெர்மன் விமானங்கள் அழிக்கப் பட்டன.

### (B)-செய்திச் சுருக்கம்.

**ருஷ்யா.**—கிரிமியாவிலுள்ள ஜெர்மன் விமான தளங்களும் இருப்புப்பாதை ஜங்ஷன்களும் வெடி விமானங்களால் நொருக்கப்பட்டன. அநேக பகுதிகளில் சில்லரைச் சச்சரவுகளும், முக்கியமாக லுவாவ் பகுதியில், நடைபெறுகின்றன. லக்ஷம் டன்கள் மொத்த எடைமானமுள்ள 80 ஜெர்மன் கப்பல்களை கருங்கடலில் ருஷ்யக் கடற்படையும், ருஷ்ய விமானப் படையும் மூழ்கடித்திருக்கிறது. ஜெர்மன் படைகள் பதில் தாக்குதல் செய்கின்றன.



**இதாலி.**—சில்லரைச் சச்சரவுகள் நடைபெறுகின்றன. நேசதேசத்தாரின் தாக்குதலுக்குப் பயந்து ஜெர்மானியர்கள் பாண்டைன் சதுப்பு நிலங்களில் வெள்ளப் பெருக்கு உண்டுபண்ணிவிட்டார்கள்.

**விமானப் போர்.**—படையெடுப்புக்கு முற்போக்காக பிரான்ஸில் மெயிலி என்னுமிடத்தில் உள்ள தளவாடக் குவியல்கள் பேரில் மே மாதம் 4-ம் தேதி அன்று விமானத்தாக்குதல் நடைபெற்றது. போக்குவரத்துகளையும், உற்பத்தி நிலயங்களையும் தாக்கும் நடவடிக்கைகள் பலமடைந்துவிட்டன. இந்த வாரத்தில் பாஸ் டி கலே பிராந்தியமும், புடாபெஸ்டும், புகாரெஸ்டும், பிராஸாவ், பிட்டெஸ்டி, க்ரயோவா, காம்பினு, டர்னஸெரின் முதலிய இடங்கள் தாக்கப்பட்டன. கடைசி 5 நிலயங்களும் ருமேனிய இருப்புப் பாதையில் முக்கியமான தளங்கள்.

**கடல் போர்.**—ஏப்ரல் 30-ம் தேதி அன்று நான்கு சாமான் கப்பல்களும் ஐந்து துணைக் காவல் கப்பல்களும் கொண்ட ஒரு ஜெர்மன் கடற்படையை விமானந் தாங்கிக் கப்பல்களில் சென்ற வெடி விமானங்களும், சண்டை விமானங்களும் லபாடன் தீவுகளுக்குத் தென் மேற்கில் போடோவிற்குச் சமீபத்தில் எதிர்த்தன. ஜெர்மன் நாசகாரிகளுக்கும், கனடிய லேசான கப்பல்களுக்கும், பிரெஞ்சுக் கடற்கரைக்குச் சமீபத்தில் உஷாந்த் தீவுக்கு அருகில் போர் நடந்தது. ஒரு ஜெர்மன் நாசகாரி தீப்பற்றி தரை தட்டியது.

**பஸிபிக் கடல் போர்.**—யுத்தக் கப்பல்களும், சஞ்சாரிகளும், நாசகாரிகளும், விமானந் தாங்கிக் கப்பல்களும், கொண்ட ஒரு பெரிய கடற்படை இரண்டு நாட்களாக காரலைன்ஸ் தீவுகளிலுள்ள ட்ரக்கை பலமாகத் தாக்கின. 800 டன்கள் மொத்த எடைமானமுள்ள வெடிகுண்டுகள் வீசப்பட்டன. 125 எதிரி விமானங்கள் நஷ்டமாயிற்று. நேசதேசப் படைகள் ஹாலந்தியாவுக்கு சமீபத்தில் டொரேன் விரிகுடாவிலும் டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளிலுள்ள டெம்டாவிலும் இறங்கின.

**சீனு.**—சீனர்கள் செச்சௌவுக்கும் சினியாங்குக்கும் மத்தியில் போகும் பீகிங்-ஹாங்கௌ இருப்புப் பாதையை அடைய தீவிரமான முயற்சி செய்கிறார்கள். இதன்மூலம் வடக்கு சைனுவுக்கும் ஆக்கிரமிக்கப்பட்ட மத்திய சைனுவுக்கும் தொடர்பு ஏற்படுத்த ஜப்பான் உத்தேசித்திருக்கிறது.

**பர்மா.**—வங்காளக் குடாக்கடலில் சஞ்சாரம் செய்துவரும் பிரிடிஷ் நீர்மூழ்கிகள் அந்தமான் தீவுகளுக்குச் சமீபத்திலும் மற்ற தூரக்கிழக்கு சமுத்திரங்களிலும் ஜப்பானியக் கடற்படையைத் தாக்கின. ஒரு ஜப்பானிய நாசகாரியும், நான்கு சாமான் கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன. போர்ட் பிளேரிலுள்ள இலக்குகளும் தாக்கப்பட்டன.

நேசதேசப்படைகள் இந்திய எல்லைச் சரகத்துக்கு சமீபத்தில் உள்ள பாலட்வாவிலிருந்து பின்வாங்கினார்கள். கோஹிமாவைச் சுற்றியும் கோஹிமா போர்முனையிலும் ஜப்பானியர்கள் பலமாகத் தாக்கப்படுகிறார்கள். மோகாங் பள்ளத்தாக்கில் சீனர்கள் முன்னேறி வருகிறார்கள்.

---

### சத்துருவினுடையவும், சத்துருவினுல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**30—4—44.** (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

(18 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன. 5 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

பகல்.—ராணுவ இலக்குகள்.—வடக்கு பிரான்ஸ் (N. France).

ரயில்வே தளங்கள்.—நான்டீஸ் (Nantes). காஸிகோர்ட் (Gassicourt), பெதூன் (Bethune).

விமான நிலயம்.—கார்மில்லிஸ் (Cormilles).

விமானத் தொழிற்சாலை.—ஆல்னே (Aulnay)

விமான நிலயங்கள்.—லியான்ஸ் (Lyons), கிளெர்மாண்டபெர்ராண்ட் (Clermont-ferrand).

ராணுவ இலக்குகள்.—பாஸ் டி கலே (Pas De Calais).

இரவு.—தளவாடக் குவியல்கள்.—மெய்ன்டெனன் (Maintenon).

ரயில்வே தளங்கள்.—பாரிஸ் (Paris), ஸொமெய்ன் (Somain).

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

ரயில்வே ஜங்ஷன்.—பிராஸ் லிட்டோவெஸ் (Birest Litovst).

**இதாலி (Italy).**

(12 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன; 5 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

ரயில் தளங்கள்.—மிலான் (Milan), காஸ்டெல் (Castel), மாகியோர் (Maggiore), அலெக்ஸாண்டிரியா (Alessandria).
விமானத் தொழிற்சாலைகள்.—வாரிஸி (Varese), மிலான் (Melan), பிரஷியா (Brescia).
விமான நிலயம்.—ரெஜியோ (Reggio), எமிலியா (Emilia).
ரயில் போக்குவரத்துகள்.—மத்திய இதாலி (Central Italy).
துறைமுகங்கள்.—ஜினோவா (Genoa), லெக்ஹார்ன் (Leghorn), மான்பால்கோன் (Monfalcone).

ருஷ்யா (Russia).

(43 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).
விமானச் சன்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

(18 ஜப்பானிய விமானங்கள் நாசமாக்கப் பட்டன.
நியூகினிக்கருகிலுள்ள ஸ்கோவ்டன் தீவுகள் (Schovten).
விமான நிலயங்கள், ஸப்ளைத் துவியல்கள்.—வீவாக் (Wewak).
இலக்குகள்.—ரபால் (Rabaul).
பொகெய்ன்வில்லியிலுள்ள வாக்டி (Wakde).
டச்சு நியூகினியாவிலுள்ள சொரங் (Sorong).
டவுன்.—டில்லி (Dilli).

பர்மா (Burma).

ஜப்பானிய தளம்.—காலிவா (Kalewa).
காமெய்ங் (Kamaing).
எதிரி சைனியங்கள், படகுகள், ரயில்வே இலக்குகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.
விமான நிலயங்கள்.—ஹெஹோ (Heho), ஆங்பன் (Anngban).

1—5—44. (திங்கட்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).
பகல்.—ரயில்வே தளங்கள்—ஹெய்னி (Haine), ஸெயின்டபியெரி (St. Pierre), நாமூர் (Namur).
இதர ரயில்வே தளங்கள்.—பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium).
சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார்செய்து சேமிக்குமிடங்கள்.—பிரஸ்ஸல்ஸ் (Brussels), ரெய்ம்ஸ் (Rheims).
இரவு.—(10 நேசதேச விமானங்கள் காணப் படவில்லை).
மோட்டார் தொழிற்சாலைகள்.—லியான்ஸ் (Lyons).
விமான தொழிற்சாலை.—பாரிஸ் (Paris).
ரயில்வே தளம்.—பெல்ஜியம் (Belgium).
ஜெர்மனியிலுள்ள லட்விக்ஷாபன் (Ludwigshafen).

ரயில்வே ஜங்ஷன்.—ஆக்கிரமித்த போலந்திலுள்ள லோ (Lwow).

இதாலி (Italy).

ரயில் இலக்குகள்.—ரோம் (Rome).
தொழிற்சாலைகள்.—போபோலோ (Popolo).
துவியல்கள்.—ஸிடிமிக்லியனோ (Stimigliano).
ரயில்வே ஸ்தாபனங்கள்.—இதாலியின் (Italy) தென்கரை, மேல்கரை.
கப்பல்கள்.—புலோக்கா (Ploca) துறைமுகம்.
மோட்டார் போக்குவரத்துகள், வண்டிகள்.—மெட்கோவிக்கின் (Metkovic) வடமேற்கு.
இலக்குகள்.—ஸ்பெஷியா (Spezia), ஜினோவா (Genoa).
ஸ்தாபனங்கள்.—லெக்ஹார்ன் (Leghorn), அலெஸ்ஸாண்டிரியா ( Alessandria).

ருஷ்யா (Russia).

விமானச்சன்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய கடற்படை தளம், விமான தளம்.—டிரக் (Truk).
போனபி (Ponape).
ஸப்ளை தளங்கள்.—வீவாக் (Wewak).
ஜப்பானியக் கப்பல்கள்.—பியாக்கன் (Biakl) தீவு.
விமான நிலயம், ஸப்ளை பிரதேசங்கள்,—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul).
காரோலைன்ஸ் தீவுகளிலுள்ள வொலேய் (Woleai), மாரியான் (Mariaon).

பர்மா (Burma).

என்ணெய்க் கிணறு ஸ்தாபனங்கள்.—யெனங்யாங் (Yenangyaung).
இலக்குகள்.—அரக்கான் (Arakan), கலடான் (Kaladan), மாயூ (Mayu), சின்ட்வின் (Chindwin) சமவெளி.

2—5—44. (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).
பகல்.—ரயில்வே போக்குவரத்துகள்.—பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium).
ரயில்வே ஜங்ஷன்கள்.—டிராக்னியர் (Tregnier) லெமான்ஸ் (Lemans), ஆல்னுய் (Aulnoye).
ராணுவ இலக்குகள்.—பாஸ் டி கலே (Pas De Calais).
விமான நிலயம்.—டச்சு பெல்ஜியம் (Dutch Belgium) எல்லை.
இரவு.—ராணுவ இலக்குகள்—லெவார்க்குஸன் (Leverkusen).
ரயில்வே ஜங்ஷன், ரயில்கள்.—லோ (Lwow), ஸாம்போர் (Sambor).



இதாலி (Italy).

(6 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
ரயில்வேப் போக்குவரத்துகள்.—வடக்கு இதாலி (North Italy), மத்திய இதாலி (Central Italy).
பாலங்கள்.—ஆர்வியிட்டோ (Orvieto) மார்ஸியானோ (Marsciano), காம்போ டி மார்ட்டி (Campo De Marte), பிக்குல்லி (Ficulle).
ரயில் தளங்கள்.—காஸ்டல் மாகியோர் (Castel Maggiore).
துறைமுகம்.—ஸ்பெஸியா (Spezia).
கப்பல்கள்.—டால்மேஷியன் (Dalmatian) கடற்கரை.
ஜினோவா (Genoa), பியாஸென்ஸி (Piacenze).

ருஷ்யா (Russia).

(38 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன).
விமானச் சன்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

(126 ஜப்பானிய விமானங்கள் 2 நாட்களில் சுட்டுத்தள்ளப்பட்டன).
ஜப்பானிய கடற்படை தளம்.—டிரக் (Truk).
ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—நியூகினியிலுள்ள ஹன்ஸா பே (Hansa Bay).
இலக்குகள்.—ரபால் (Rabaul).
பாலங்கள்.—ஸாலமன்ஸிலுள்ள பொகெய்ன்வில்லி (Bougainville).

பர்மா (Burma).

எதிரி ஸ்தாபனங்கள்.—மாண்டலே (Mandalay).
போக்குவரத்து ஸ்தானங்கள்.—மாண்டலே (Mandalay), முனிவா (Monywa), ஸகெய்ங் (Sagaing).
ரயில்வே தளங்கள்.—மேமியோ (Maymyo), மாண்டலே (Mandalay).
எதிரி சைனியங்கள் படகுகள்.—அரக்கான் (Arakan), மாயூ (Mayu), கலடான் (Kaladan).

3—5—44. (புதன்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).
பகல்.—ராணுவ ஸ்தாபனங்கள்.—பாஸ் டி கலே (Pas De Calais).
ராணுவ இலக்குகள்.—வடக்கு பிரான்ஸ் (Northern France), பெல்ஜியம் (Belgium).
இரவு.—(49 நேசதேச விமானங்கள் காணப் படவில்லை).
தளவாடங்கள் ஸ்டோர் துவியல்கள்.—மெய்ல்லி (Mailly).
துவியல்கள்.—காட்டியாயுடின் (Chateaudun).
இலக்குகள்.—லட்விக்ஷாபன் (Ludwigshafen).

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.
ருமேனியாவின் தலைநகரான புகாரெஸ்ட் (Bucharest).
ஜெர்மன் துருப்புகள்.—ருஷ்யாவிலுள்ள ஸெபாஸ்டபூல் (Sebastapol).

இதாலி (Italy).

போக்குவரத்துகள் பாலங்கள்,—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

ருஷ்யா ((Russia).

(24 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன).
விமானச் சன்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய, யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பான் ஸ்தாபனங்கள்.—நியூகினியிலுள்ள ஹன்ஸா பே (Hansa Bay)
பைவாக் பிரதேசங்கள்.—உலிகான் (Uligan).
படகுகள்.—ஹாட்ஸ்பெல்ட் (Hatzfeldt) துறைமுகம்.
ஸ்டோர் இலக்குகள்.—குராய்ஸியெல்ஸ்முனை. (Cape Croisielles)
இலக்குகள்—ரபால் (Rabaul).
விமானம் ஓடுமிடங்கள்.—டியூக் ஆப் யார்க் (Duke of York) தீவு.
படகுகள்.—கிராயே (Kerauia Bay)

பர்மா (Burma).

எதிரி சைனியங்கள், படகுகள், ரயில்வே, இலக்குகள்.—அரக்கான் (Arakan), மாயு (Mayu), கலடான் (Kaladan), சின் மலைகள் (Chin Hills), சின்ட்வின் (Chindwin).
விமான நிலயங்கள்.—திடா (Thedaw), காங்கான் ((Kangaun).

4—5—44. (வியாழக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).
பகல்.—(9 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன.;, 3 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
விமான நிலயம்.—ஹாலந்து (Holland).
போக்குவரத்துகள் பாலங்கள்.—பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium).
இரவு.—இலக்குகள்—மேற்கு ஜெர்மனி (Western Germany).
சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.
ஹங்கேரியின்.—தலைநகரான புடாபெஸ்ட் ((Budapest), ருமேனியாவின் தலைநகரான புகாரெஸ்ட் (Bucharest).
என்ணெய்க் கிணறுகள்.—புலோயெஸ்ட்டி (Ploesti).
ரயில்வே தளங்கள்.—டேர்னு (Turnu).

**இதாலி (Italy).**

(4 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

பாலங்கள்.—குரோஸ்ஸெடோ (Grosseto), ஆல்பினு (Albina), பாப்பிரியானோ (Fabriano).

ரயில் போக்குவரத்துகள்.—டெர்னி ஸுல் மோனே (Terni-Sulmona).

எதிரி சைனியங்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

**ருஷ்யா (Russia).**

(74 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய தளம்.—குரைத்தீவுகளிலுள்ள பாராமுஷிரோ (Paramushiro).

இலக்குகள்.—நாரு (Nauru), பொனுபி (Ponape).

மிதமாயுள்ள ஜப்பானிய தளம்.—மார்ஷல்ஸ் (Marshalls).

விமான நிலயம்.—வேக் (Wake), நியூகினியிலுள்ள வீவாக் (Wewak).

ஸப்ளைக் குவியல்கள்.—ஹன்ஸா பே (Hansa Bay).

ஜப்பானிய படகுகள்.—ஹனேவர் (Hanover).

கட்டடங்கள்.—ரபால் (Rabaul).

**பர்மா (Burma).**

ரயில்வே தளங்கள்.—மாண்டலே (Mandalay), மேமியோ (Maymyo).

ரயில் போக்குவரத்துகள் படகுகள் துருப்பு ஸ்தாபனங்கள்.—அரக்கான் (Arakan), கலடான் (Kaladan), மாயூ (Mayu), சின் (Chin Hills) மலைகள், சிண்ட்வின் (Chindwin), சமவெளி.

**5—5—44.** (வெள்ளிக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—ரயில் ஸ்தலங்கள்.—காம்ப்ராய் (Cambrai), ஸோமெய்ன் (Somain).

ராணுவ இலக்குகள்.—பாஸ் டி கலே (Pas De Calais), வடக்கு பிரான்ஸ் (N. France).

ஜெர்மன் சைனியங்கள்.—யூகோஸ்லாவியாவிலுள்ள பாட்கார்ஸியா (Podgorcia).

இரவு.—ரயில்வே தளங்கள்— பிராஸோப் (Brasov), புலோயெஸ்ட்டி (Ploesti), கிராயோவா (Craiova), காம்பினு (Campina), டர்னுஸெவெரின் (Turnu Severin).

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

எதிரிக் கப்பல்கள்.—கருங்கடல்.

**இதாலி (Italy).**

போக்குவரத்துகள், பீரங்கி ஸ்தாபனங்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

கப்பல்கள்.— டால்மாஷியன் (Dalmatian) கடற்கரை.

**ருஷ்யா (Russia).**

(62 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயம், ஸப்ளை தளங்கள்.—வீவாக் (Wewak).

விமான தளம்.—ஷாட்டென் (Shoten) தீவிலுள்ள மோக்மர் (Mokmer).

படகு.—மானம் (Manam) தீவு.

இலக்குகள்.—லாவெய் முனை (Cape Lavai), லாகா (Laga).

விமான நிலயம், ஸப்ளை பிரதேசங்கள்.—ரபால் (Rabaul).

பீரங்கி ஸ்தாபனம்.— பொகெய்ன்வில்லியிலுள்ள புகா (Buka).

**பர்மா (Burma).**

எதிரி சைனியங்களும், ஸப்ளைக் குவியல்களும்.—அரக்கான் (Arakan), கலடான் (Kaladan), மாயு (Mayu), சிண்ட்வின் (Chindwin), வடமேற்கு பர்மா (N. W. Burma).

ஸப்ளைகள்.— பின்பா-ஹாபின் (Pinbaw-Hopin).

மோட்டார் போக்குவரத்துகள்.—காலிவா (Kalewa), டிடிம் (Tiddim).

நீராவி யந்திரங்கள், சேமிப்புகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

**6—5—44.** (சனிக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—ராணுவ ஸ்தாபனங்கள்—பாஸ் டி கலே (Pas De Calais), வடக்கு பிரான்ஸ் (N. France).

இரவு.—சுரங்கவெடி பாவுதல்—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

போக்குவரத்துகள்.—ரோம் (Rome) பிரதேசத்தைச் சுற்றிலும் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

கப்பல்கள்.—டால்மாஷியன் (Dalmatian) கடற்கரை.

**ருஷ்யா (Russia).**

(41 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயம், இதர இலக்குகள்.—வீவாக் (Wewak), ஹன்ஸா பே (Hansa Bay).

இலக்குகள்.—நியூ அயர்லாந்திலுள்ள காவியங் (Kavieng), போர்பாப் (Borpop).



விமான நிலயம், ஸப்ளை பிரதேசங்கள்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul).

விமான நிலயம்.—பொகெய்ன்வில்லியிலுள்ள காஹிலி (Kahili).

ராணுவ நிலயங்கள், விறகுக் குவியல்கள்.—டிமோரிலுள்ள கோபாங் (Koepang), காரோலைன்ஸ் தீவிலுள்ள பொனுபி (Ponape).

ஜப்பானிய சைனியங்கள்.—மார்ஷல்ஸ் (Marshalls).

**பர்மா (Burma).**

ஸ்டோர் பிரதேசங்கள்.—காலிமியோ (Kalemyo).

ஸைபாங் பாலம்.—டாமு (Tamu)க்கருகில்.

மற்றொரு பாலம்.—பாங்ஸெய்க் (Hpaunkzeik).

இலக்குகள்.—கமெய்ங் லாங்கின் (Kamaing Lonkin) ரஸ்தா.

பீரங்கி ஸ்தாபனங்கள், ரஸ்தா, நதிப் போக்குவரத்துகள்.—அரக்கான் (Arakan), கலடான் (Kaladan), நாகா மலைகள் (Naga Hills) வடமேற்கு பர்மா (N. W. Burma).

இலக்குகள்.—நாம்கிவின் (Namkwin) நலாங் (Nalong).

படகுகள், சேமிப்புகள், ரஸ்தா போக்குவரத்துகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**1—5—44.** (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**2—5—44.** (செவ்வாய்க்கிழமை).

**பிரிடன் (Britain).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**3—5—44.** (புதன்கிழமை).

**பிரிடன் (Britain).**

கடற்கரை இலக்குகள்.—பிரிடன் (Britain). (5 ஜெர்மன் விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**4—5—44.** (வியாழக்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**5—5—44.** (வெள்ளிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**6—5—44.** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**தூரக்கிழக்கு (Far East).**

இந்தியாவிலுள்ள பிஷென்பூர் (Bishenpur). (3 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

**7—5—44.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

## யுத்தக் குறிப்புகள்.

**அடிக்கத் தயார்.** வேனிர் காலம் துவங்கிவிட்டபொழுது நேசதேசப்படைகள் ஹிட்லரின் ஐரோப்பியக் கோட்டையைக் கிழக்கிலிருந்தும், மேற்கிலிருந்தும், தெற்கிலிருந்தும் தாக்கத் தயாராகயிருக்கின்றன. மேற்குப் பக்கத்திலுள்ள நேசநாடுகளின் சார்பாகப் பேசியபொழுது வாஷிங்டனிலுள்ள பிரிடிஷ் அயல் நாட்டுத் தூதரான ஹாலிபாக்ஸ் பிரபு பின்வருமாறு சொல்லுகிறார். "சரித்திரத்தில் இதுவரையில் நடைபெற்றிராத மகத்தான ராணுவ நடவடிக்கையை நாம் ஆரம்பிக்கப் போகிறோம்". மே தினத்தன்று பேசியபொழுது காயமுற்ற ஜெர்மன் மிருகத்தை அதன் குகையிலேயே அழித்துவிடுவதென்று ருஷ்யா தீர்மானித்திருக்கிறதென்று மிஸ்டர் ஸ்டாலின் வாக்குறுதி செய்திருக்கிறார். மத்தியதரைக்கடல் பிரதேசத்திலுள்ள தற்காப்புகளைப் பார்வையிட்ட ரோமல், படையெடுப்பு கூடிய சீக்கிரம் நடைபெறுமென்று சொன்னான். டாஸ்ரெக் என்னும் பத்திரிகையில் நேசதேசத்தார்கள் படையெடுப்பைத் துவக்கத் தயாராக இருக்கிறார்கள் என்று கோயபல்ஸ் ஜெர்மானியர்களுக்கு அறிவித்தான்.

வி வி வி வி வி

**கோரமான வேனிர் காலங்கள்.** 1940 முதல் 1943-ம் வருஷம் முடிய நான்கு வேனிர் காலங்களிலும் கோரமான சம்பவங்கள் நடைபெற்றன. 1940-ம் வருஷ வேனிர் காலத்தில் பிரான்ஸ் வீழ்ச்சிபெற்றது. 1941-ம் வருஷ

வேனிர் காலத்தில் ஹிட்லர், லெனின்கிராட், மாஸ்கோவின் வாசற்படிக்கு முன்னேறியிருந்
தான். 1942-ம் வருஷத்தில் அவன் வால்கா நதிக்கரைக்கும், காகஸஸ் மலையடிவாரங்
களுக்கும் முன்னேறிவிட்டான். ஹிட்லர் அப்பொழுது வெற்றியின் உச்சநிலையை அடைந்
திருந்தான். அதற்குப்பின் ஸ்டாலின்கிராட் நிகழ்ச்சி நடைபெற்றது. 1943-ம் வருஷம்
வேனிர் காலத்தில் ஹிட்லர் பின்வாங்க ஆரம்பித்தான். குர்ஸ்க்கில் சிறிது காலம் சமாளித்து
நின்றான். இப்பொழுது ஐந்தாவது வேனிர் காலம் வந்துவிட்டது. ருஷ்யாவின் நான்கில்
மூன்று பாகத்தை இழந்திருக்கிறான். அவனுடைய எல்லைச் சரகத்தில் அவனுக்கு ஆபத்து
உண்டாகியிருக்கிறது.

வி வி வி வி வி

**ஹிட்லரின் திட்டம் யாது?** இது ஒரு உபயோகமற்ற பிரச்னை. வேட்டையாடப்பட்ட
பிராணி எதிர்த்து நின்று சண்டைபோடவேண்டும்;
அல்லது தப்பி ஓடும் மார்க்கத்தைக் கண்டுபிடிக்கவேண்டும். ஹிட்லர் அவனுடைய தளகர்த்
தர்களுடனும், கூட்டாளிகளுடனும், முக்கியமாக ராஜீய முறையில் செல்வாக்கில்லாததும்,
ராணுவ முறையில் உதவியளிக்க சக்தியற்றதுமான முஸோலினியுடனும் செய்துவரும் சம்பா
ஷணைகள் ஆடம்பரமே ஒழிய வேறில்லை. ருஷ்யாவைக் கைவிட்டு விட்டு இதாலியில் ஏன்
ஹிட்லர் போர் நடத்துகிறானென்ற பிரச்னை கிளம்புகிறது. தாய் நாட்டிற்கு சமீபத்திலுள்ள
நாடுகளிலிருக்கும் துருப்புகளைக் கலைத்து தூரதேசத்திலிருக்கும் இதாலிய பிரதேசத்தைத்
தற்காப்பு செய்ய எதற்காக அவைகளை அனுப்பிவருகிறான். கிழக்குப் போர்முனையில் போர்
தொடுப்பதைவிட மேற்கு வல்லரசுகளுடன் நான் போர் புரிவேனென்று அவன் சொல்லு
கிறான்போல் தோன்றுகிறது.

ஹிட்லர் ஒரு விசித்திர புருஷன். அவனுடைய முறைகளை எளிதில் கண்டுபிடிக்க
முடியாது. ஹிட்லர் தன்னுடைய யோசனைகளை விவரித்துச் சொல்லுவதில்லை என்று
கோயரிங் சமீபத்தில் சொல்லியிருக்கிறான். இந்த விசித்திர புருஷனின் யோசனைகளின்
விவரங்களை அறிந்துகொள்ளுவது சுலபமானதல்ல. ஏனெனில் அந்தத் திட்டங்களில் பகுத்
தறிவும், நீதி முறையும் காணப்படவில்லை.

ஹிட்லரின் தற்போதய ஒத்திகைகள் வீண் ஜம்பமென்று தோன்றுகிறது. பலமிருக்கிற
தாக அவன் வெளிக்காட்ட முயலுகிறான். உண்மையில் அவனுடைய பலம் குறைந்து
விட்டது. இதே சமயத்தில் நேசதேசத்தார்களிடையே கலகத்தையும் உண்டுபண்ண முயலு
கிறான். கிழக்குப் போர்முனையில் ருஷ்யாவிலிருந்ததுபோல் மேற்கிலும், தெற்கு ஐரோப்பா
விலும் மற்றொரு அபாயம் உண்டாகியிருக்கிறதென்று ஜெர்மானியர்களிடம் சொல்லிவரு
கிறான்.

வி வி வி வி வி

**ருஷ்யாவில் அதிசயம்.** யுத்தத்தில் அநேக அதிசயங்கள் காணப்படுகின்றன.
ருஷ்யப் போர்முனையில் ஒரு மாதகாலமாக ஓய்வு
காணப்படுகிறது. யூக்ரேனின் சதுப்பு நிலங்களில், கடுமையான மாரிகாலத்தில் முன்னேறிய
செம்படை வேனிர்காலத்துவக்கத்தில் அயர்ந்துவிட்டது. இதற்கு இரண்டு காரணங்களுள.
போக்குவரவு அசௌகரியம், காலவரம்பு. முன்னேறும் படைகள் தங்களுடைய சொந்த
நாட்டில் உணவுப் பொருளைத் தேடிக்கொள்ளலாம். ஆகிலும் உபரிப்படைகளும், ராணுவ
ஸப்ளைகளும் பின்புறமிருந்துதான் வரவேண்டும். படை வரிசைகளுக்குப்பின் ரஸ்தாவையும்,
இருப்புப்பாதை மார்க்கங்களையும் அமைக்கும் வரையில் செம்படை காத்துக்கொண்டிருக்க
வேண்டும். ருஷ்யர்கள் தங்களுடைய தளங்களிலிருந்து வெகுதூரம் முன்னேறிவிட்டார்கள்.

இரண்டாம் போர்முனை ஏற்பட்டு இரு பக்கத்திலிருந்து அடிகள் விழும் காலத்தை
ருஷ்யா ப்ரதீக்ஷித்துக்கொண்டிருக்கிறது.

வி வி வி வி வி

**பதில் தாக்குதல்.** தாத்காலிகமாக ஏற்பட்டிருக்கும் அயர்வை அவலம்பித்தும்,
தங்களுக்கு உள்ள நல்ல போக்குவரவு மார்க்கங்களை
உபயோகித்தும், ஜெர்மானியர்கள் அவ்வப் பிரதேசத்தில் பதில் தாக்குதலைச் செய்துவரு
கிறார்கள். ஆகிலும் அவைகள் வீணாகப்போய்விட்டன.

அதே சமயத்தில் ருஷ்ய விமானப் படையும், கருங்கடல் கடற்படையும் எதிரியை
அடிக்கடி பலமாகத் தாக்கிவருகின்றன.

வி வி வி வி வி

**பொருளாதார யுத்தம்.** ஜெர்மனிக்கு அனுப்பும் குரோம் ஸப்ளையை துருக்கி நிறுத்தி
விடுவதாக முடிவு செய்தது. ஜெர்மனியை முறியடிக்க
முற்போக்கான நடவடிக்கையாகும். ஸப்ளையில் சிறிது குறைவேற்படுமென்று ஜெர்மனி



எதிர்பார்த்ததே ஒழிய பூராவும் நிறுத்தப்பட்டுவிடுமென்று அது எதிர்பார்க்கவில்லை.
கிரீஸிலிருந்தும், யூகோஸ்லாவியாவிலிருந்தும் கிடைக்கும் குரோம் ஸப்ளைக்கு கொரில்லாப்
படைகளிடமிருந்தும் ஆபத்து உண்டாகிவிட்டது. நிகோபோலிலிருந்து கிடைத்த மாங்கனீஸ்
போய்விட்டது. பின்லாந்திலிருந்து கிடைக்கும் நிக்கல் எந்த சமயத்திலும் நின்றுபோய்
விடும். ஸ்பெயின் இனிமேல் உல்ப்ராமை அனுப்பாது. இந்தத் தாதுப்பொருள்களெல்லாம்
எஃகை உறுதிப்படுத்துவதற்கு உபயோகமுள்ளவை. இந்தப் பொருளாதார சிக்கேட்டி
லிருந்து ராஜீய விளைவுகளும் உண்டாகக்கூடும். துருக்கியின் முடிவிலிருந்து ஒன்று வெளிப்
படுகிறது. ஜெர்மனியைக்கண்டு இனிமேல் எந்த நாடும் பயப்படாது. நடுநிலைமை வகிக்கும்
நாடுகளை ஜெர்மனி பயமுறுத்தும் காலம் போய்விட்டது.

வி வி வி வி வி

**நீலப்படை.** ருஷ்யப் போர்முனையிலிருந்து நீலப்படை வாபஸ் வாங்கப்
பட்டது என்று ஸ்பானிஷ் அயல்நாட்டுக் காரியாலயத்
திலிருந்து வெளிவந்ததை நாம் பூராவும் நம்புவதற்கில்லை. ஏனெனில் அந்தப் படைக்கு
ஆட்கள் சேர்க்கப்படுகிறார்கள் என்று இஸ்வெஸ்டியா என்னும் பத்திரிகையில் எழுதப்பட்டி
ருக்கிறது. ஆகிலும் ஸ்பெயின் சொல்லுவதில் ஓரளவு உண்மையிருப்பினும் அது நேசதேசத்
தாரின் ராஜதந்திர வெற்றியைக் குறிப்பிடுகிறது. இதற்கு மாட்ரிட்டிலுள்ள பிரிடிஷ் அயல்
நாட்டு தூதரின் முயற்சிகளும், நடுநிலைமை வகிக்கும் நாடுகளின் ஒழுங்கீனமற்ற நடவடிக்கை
களை நேசதேசத்தார்கள் அனுமதிக்கமாட்டார்கள் என்ற அறிக்கையும்தான் காரணங்க
ளாகும்.

வி வி வி வி வி

**விமானப்போர்.** ஜெர்மன் இருப்புப்பாதை போக்குவரத்து மார்க்கங்களை
நேசதேச விமானப்படை பலமாக நொருக்கியிருப்ப
தால் ஜெர்மனி யுத்த தளவாடங்களை அவைகள் மூலம் கொண்டுபோக முடியவில்லை. மே
மாதம் 4-ம் தேதியன்று பிரிடிஷ் விமானப்படை பிரான்ஸில் மெயிலியிலுள்ள சாமான் குவி
யல்களைத் தாக்கிற்று. இதிலிருந்து எதிரியின் தளவாடக் குவியல்களை நொருக்கும் புதிய
நடவடிக்கைகள் படையெடுப்புக்கு முற்போக்காக நடைபெறுகின்றனவென்று தோன்று
கிறது.

ஜெர்மன் யுத்த தளவாட உற்பத்திசாலைகள் உள்நாட்டில் பத்திரமான இடங்களில்
அமைக்கப்பட்டிருக்கின்றனவென்று பெர்லின் வியாக்யானிகள் சொல்லிவருகிறார்கள். இது
தவறென்று சமீப காலத்திய விமானத் தாக்குதல் முறைகள் ருஜுப்பிக்கின்றன. அமெரிக்க
விமானங்கள் போசனைத் தாக்கியபொழுது 1,600 மைல்கள் பறந்து சென்றன. பிரிடனி
லிருந்து புறப்படும் விமானங்கள் போலந்திலும், கிழக்கு பிரஷியாவிலுமுள்ள லக்ஷியங்களைத்
தாக்க சக்தியுள்ளவைகள். தெற்கு இதாலியிலுள்ள பாக்கியா விமான தளத்திலிருந்து
போலஸ்தி, புகாரெஸ்ட், புடாபெஸ்ட், ஸோபியா முதலிய இடங்கள் தாக்கப்படுவதிலிருந்து
பால்கன் நாடுகளும் தெற்கு ஜெர்மனியின் பெரும்பாகமும் நமது விமானிகளின் குண்டுவீசும்
வட்டாரத்துக்குட்பட்டவையென்று புலப்படுகிறது.

வி வி வி வி வி

**கடல் யுத்தம்.** விமான நடவடிக்கையை உலகத்தார் கவனித்து வரும்
பொழுது நேசதேசக் கடற்படையும் பலமான நட
வடிக்கைகளைக் கையாண்டு வருகிறது. ஏப்ரல் மாத ஆரம்பத்தில் பிரிடிஷ் கடல் விமானி
கள் எதிரியின் டிர்பிட்ஸ் என்னும் கப்பலை ஆல்டன் துறைமுகத்தில் தாக்கினார்கள். ஏப்ரல்
மாத மத்தியில் பிரிடிஷ் கடற்படை விமானிகள் ஸுமத்ராவிலுள்ள ஜப்பானிய தளமான
சுபாங் பேரில் குண்டுகளைப் பொழிந்தார்கள். ஏப்ரல் மாதம் பூராவும் பிரிடிஷ் யுத்தக்
கப்பல்கள் துணைக்காவல் புரியும் வேலையிலும், சுரங்கவெடிகளைப் பாவுவதிலும் ஈடுபட்
டிருந்தன.

வி வி வி வி வி

**பர்மாப் போர்முனை.** சமீபத்தில் கிடைத்த தகவல்களிலிருந்து கோஹிமா பிராந்
தியத்திலும் இம்பால் பகுதியிலும் ஜப்பானியர்களுக்
குப் பலமான அடிகள் கிடைத்து வருகின்றன. மோகாங் பள்ளத்தாக்கில் சீனர்கள் முன்
னேறி வருகிறார்கள். சமீபத்தில் ஜப்பான் பின்வருமாறு சொல்லிற்று. "ஜப்பானியப்
படையை இனிமேல் ஒருவரும் முறியடிக்க முடியாது. இந்தியாவில் பூர்ணமான வெற்றி
பெற்றுவிட்டதாக ஜப்பான் பிரகடனம் செய்யும் நாள் சமீபவித்துவிட்டது. அதன் இறுதி
வெற்றி மூலம் யுத்தத்தின் முடிவையும் அது சம்பாதித்துவிடும்." என்ன பேராசை.
அவைகள் பலன்படவில்லை. ஜப்பானியர்களுக்கு யாதொரு வெற்றியும் கிடைத்துவிடவில்லை.

அஸ்ஸாம் போர்முனையில் நேசதேசத்தாருக்கு சௌகரியங்கள் கிடைத்துவிட்டன. டிமாபூர்—கோஹிமா ரஸ்தா திறக்கப்பட்டு விட்டது. கோஹிமாவின் கஷ்டம் நிவாரணம் செய்யப்பட்டுவிட்டது. இப்பொழுது ஜப்பான் நம்பிக்கையை இழந்துவிட்டது.

வி வி வி வி வி

**இந்தியச் சிறிய கப்பல்கள்.** அவைகள் பர்மா கடலில் மேன்மையை அடைந்து வருகின்றன. அவைகளைத் தாக்க ஜப்பான் துணியவில்லை. இச்சிறிய கப்பல்கள் எதிரியின் துறைமுகங்களுக்குச் சென்று நங்கூரம் பாய்ச்சி நின்று கொண்டிருக்கும் கப்பல்களைத் தாக்கியிருக்கின்றன.

வி வி வி வி வி

**வங்காளக் குடாக்கடல்.** பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த நீர்மூழ்கிகள் அந்தமான் தீவுக்கருகிலும் தூரக்கிழக்கு சமுத்திரங்களிலுமுள்ள ஜப்பானியக் கப்பல்களைத் தாக்கி வெற்றி பெற்றிருக்கின்றன.

வி வி வி வி வி

**இந்தியத் துருப்புகள்.** ஏப்ரல் 9-ம் தேதி வெளிவந்த இந்திய நியூஸ் லெட்டரில் இந்தியப்படைகள் உலகத்திலுள்ள எந்த நாட்டிலும் வசிக்க சக்தி பெற்றவர்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. வடக்கு ஆபிரிக்காவின் சதுப்பு நிலங்களிலும், பாலைவனங்களிலும், மத்திய கிழக்கிலும் அவர்கள் உத்சாகத்துடன் போர் புரிந்தார்கள். இதாலிய பருவகால மழையிலும், கடும் பனியிலும் போர்புரிய சக்தியுள்ளவர்களென்று அவர்கள் காண்பித்திருக்கிறார்கள். சென்ற ஆறு மாத மாரிகாலத்தில் இருவர் தான் குளிரினால் இறந்தார்கள். இது புது வருஷத்துக்கு முந்திய நாள் எட்ரியாடிக் கடற்கரையில் நேர்ந்தது. இறந்தவர்கள் அசட்டு தைரியத்துடன் வெளியில் நின்றார்கள். காஸினோ போர்முனையில் அநேக நாட்கள் வரையில் அகழில் தங்கியிருந்தபோதிலும் அங்கு ஒரு சிலருக்குத்தான் வியாதி உண்டாயிற்று. இந்திய வைத்திய இலாகாப்படையின் கர்னல் சொல்லுகிறபடி நேசதேசத்தார்களுக்குள் இந்தியர்கள்தான் வியாதியினால் குறைவாகப் பீடிக்கப்பட்டார்கள். இன்ப்ளுவென்ஸா ஜுரத்தினால் வருந்தியவர்கள் ஒரு சிலர்தான். ஒருவருக்கும் டைபஸ் ஜுரம் வரவில்லை. ஒருவரும் குண்டுவீச்சின் அதிர்ச்சிக்குட்பட்டு கலங்கிவிடவில்லை.

மற்றொரு கர்னல் காயமுற்ற இந்திய ஸோல்ஜரின் சுயநலமற்ற நடவடிக்கையைப்பற்றி வியாக்யானம் செய்திருக்கிறார். "அவனுடைய காயத்திலிருந்து ரத்தம் பெருகிக்கொண்டிருந்தாலும் அவன் பிறருக்கு முதலில் சிகிச்சை செய்யப்படட்டும் என்று சொல்லுவான்".

---

## கிரிமியாவில் "யாரோ பிசகு செய்துவிட்டனர்". அச்சுத் துருப்புகள் ஒடுங்கின.

**(விக்ஹாம் ஸ்டீட்)**

90 வருஷங்களுக்கு முன் நடந்த கிரிமியா யுத்தத்தில் பிரிடிஷ் எதிரிப்படைகளின் தாக்குதலைப்பற்றி டெனிஸன் என்றவர் எழுதியுள்ள செய்யுளில் "யாரோ பிழைசெய்து விட்டார்" என்ற ஒரு வரியுள்ளது.

எல்லா ஸ்வதந்திர நாடுகளும் அறிந்துள்ள காரணங்களின்படி, நடந்துவரும் இப்போதைய கிரிமியா யுத்தத்தில் ஜெர்மனியின் யுத்த முறைகளுக்கு அந்த வரி மிகவும் பொருத்தமாய் விளக்கிக்காட்ட உதவியாயிருக்கிறது. ஜெர்மன், ருமேனியப்படைகள் வேகமாய் ஒடுங்கியதும், ஓடியதும் ஆகிய இவைகள் தவிர சில முக்கியமான ராணுவ நடவடிக்கைகள் பல உள. ருஷ்ய முன்னேற்றத்தின்முன் நிற்காமல் அவர்கள் பயங்கொண்டு ஸெபாஸ்டோபோலின் வழியாய் தப்பிப்போக யத்தனித்தனர். கிரிமியா தீபகற்பத்தில் அவர்கள் காலிசெய்ய முடியாமல் தங்கவேண்டிய காரணம் என்னவென்றால் "யாரோ பிழைசெய்து விட்டார்கள்" என்பதுதான்.

2 வருஷங்களுக்குமுன் கிரிமியாவைப் பிடித்த மான்ஸ்டீன் என்பவன் இம்மாதிரி நடப்பதை விரும்பியிருக்க மாட்டான். அல்லது ஜெர்மன் தலைவர்கள் ருஷ்யர்கள் தடுத்திருந்த பெரிகாப் பூசந்தியைத் திறக்க நேரிடும் வரையில் ஜெர்மன் தாக்குதல்களை நடத்தச் சொல்லியிருப்பான்.

ருஷ்யப் படைகளால் ஜெர்மன் சைனியம் சூழப்பட்டு நாசமாகாமலும், அல்லது நஷ்டப்படாமலும், ஜெர்மன் தலைவருக்கு தனிப்பட ஏற்பட்ட புத்திசாலித்தனத்தால் காப்பாற்றினார்.



ஏதோ சில பிழைகள் ஏற்பட்டுள்ளன என்ற மனவேதனை ஜெர்மன் மக்கள் அனைவர் மனதிலும் பதிந்துள்ளது. ருஷ்யாவில் ஹிட்லர் அடைந்த வெற்றிகள் எல்லாம் போய் விட்டன என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். ருமேனியா தோற்கடிக்கப்படும் அல்லது சரணடைய வேண்டியிருக்கும் என்பதும் தெரியும். இவைகள் தவிர, பல்கேரியா, ஹங்கேரி இந்நாடுகள் நேசதேச விமானப்படை பலத்தை அறிந்திருக்கின்றன என்றும், ஜெர்மன் விமானப்படையின் பலமின்மையும், ஜெர்மன் யுத்த தொழிற்சாலைகள் நிலைத்திருக்க முடியாது என்றும் தெரியும்.

ஜெர்மனியில் அடிமையாக்கப்பட்டிருக்கும் ஆயிரக்கணக்கான வேறுதேச வேலையாட்கள் விடுவித்துக்கொள்ள விரும்புவதே ஜெர்மனியில் மனச்சோர்வையும், குழப்பத்தையும் அதிகப்படுத்துகின்றன.

"புதிதாயும் டங்கர்க்கில் முடிந்ததைப்போலவும்" தான் பிரிடனின் மேற்கு ஐரோப்பியத் தாக்குதல் முடியும் என்ற நம்பிக்கையான வார்த்தைகளை ஹிட்லர் ஒரு சமாதானமாகச் சொல்லுகிறான்.

தாக்குதலின்மேல் ஏற்படும் எதிர்ப்பு மிகவும் பயங்கரமாயும், கொடுமையும் இருக்கும் என்பதில் யாரும் சந்தேகப்படவேயில்லை. பிரிடிஷ் வீரனாவது நகரில் உள்ள பெரிய ராஜதந்திரியாவது, அல்லது எந்தப் பத்திரிகையாவது யாரும், சீக்கிரத்திலும், சுலபமாயும் வெற்றி கிடைக்கும் என்று உறுதி சொல்லவில்லை. ஹிட்லரின் முன்னைய நம்பிக்கையான வார்த்தைகளான ருஷ்யச் சைனியங்கள் நாசமாக்கப்பட்டன என்ற வார்த்தைகள் போலவே இப்போதும் இந்த வார்த்தைகள் பிரிடிஷாரில் நம்பிக்கையை கெடுக்கப்போவதில்லை.

ஹிட்லரின் தற்போதைய நம்பிக்கையான வார்த்தைகளான நேசதேச மேற்கு ஐரோப்பியத் தாக்குதல் டங்கர்க்போல முடிவடையும் என்பதை ஜெர்மன் சைனியங்கள் நிரூபிக்கவில்லையானால், ராணுவத்தலைவர்களின் மேல் ஜெர்மானியர்களுக்குள்ள நம்பிக்கையும் இந்த யுத்தத்தினால் குறைந்து மதிப்புக்குறைவாகும்.

---

## நேசதேச நிர்வாகங்களும் அயல் நாட்டுத் தூதர்களின் உரிமைகளுக்கு வரம்பும்.

அயல் நாட்டுத் தூதர்களின் உரிமைகளைக் கட்டுப்படுத்தியதிலிருந்து ஐரோப்பிய படையெடுப்பு சமீபித்து விட்டதென்ற நிச்சயமான சின்னங்கள் காணப்படுகின்றன என்று லண்டனிலும் வெளிநாடுகளிலும் அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். ஏராளமான முகாந்திரங்களிருந்ததால்தான் பிரிடன் இந்த அடக்கு முறையைக் கையாண்டதென்று பிரிடிஷ பொது மக்கள் அறிந்து விட்டார்கள். இந்த நடவடிக்கைக்கு முன் ஆதாரம் கிடையாது. அதுபோல ஐரோப்பாவிலும் இவ்விதமான நிலைமை எக்காலத்திலும் ஏற்பட்டதில்லை.

படையெடுப்புக்கான ஆயத்தங்களின் இறுதி கட்டங்களில் சாத்யமான வரையில் பிரிடன் தன்னந்தனியே நிற்கவேண்டுமென்ற அவசியத்தை அறிந்த நடுநிலைமை வகிக்கும் நாடுகளும் நேசதேச நாடுகளும் பிரிடிஷ் நிர்வாகத்தின் நடவடிக்கைகளை ஆமோதித்து விட்டார்கள்.

லண்டனிலுள்ள நேசதேச நிர்வாகங்கள் பாதிக்கப்பட்டு விட்டன. இப்பொழுது அமெரிக்காவிலுள்ள மிஸ்டர் மாசாரிக் என்ற செக் அயல்நாட்டு தூதர் திரும்பிவரமுடியாது. செக்கோஸ்லோவேக்கியாவின் விடுதலைக்காக ருஷ்யாவுக்கு அனுப்பப்படவேண்டிய மந்திரி லண்டனை விட்டுச் செல்லமுடியாது. யூகோஸ்லாவிய மன்னர் நிர்வாகம் கெயிரோவுக்குத் திரும்பி வரமுடியாது. பிரெஞ்சு விடுதலைக்கமிட்டியின் காரியதரிசியான மிஸ்ட்டர் ஆன்ட்ரி பிலிப் ஆல்ஜியர்ஸுக்குப் புறப்பட முடியாது.

இந்தத் தடை உத்தரவிலிருந்து ருஷ்யாவும், அமெரிககாவும் டொமினியன் நாடுகளும் விலக்கப்பட்டிருக்கின்றன. லண்டனில் ராஜ தந்திர முறையில் சம்பாஷணைகளை முடித்துக் கொண்டு வாஷிங்டனுக்குத்திரும்பிச்செல்ல மிஸ்ட்டர் ஸ்டெட்டினியஸ் அனுமதிக்கப்படுவார். சென்ற சில நாட்களில் அவர் பொருளாதார பிரச்னைகளில் கவனம் செலுத்தி, குத்தகைக்கடன் திட்டங்களை பிரிடனின் உற்பத்தி மந்திரியுடனும் உணவுப் பொருள் இலாகா மந்திரியுடனும் சர்ச்சை செய்தார். யுத்தத்துக்குப்பின் ஐரோப்பாவுக்கு உணவுப்பொருள் சப்ளை செய்வதைப்பற்றியும் விசேஷ கவனம் செலுத்தப்பட்டது.

உள்நாட்டிலும், அயல் நாடுகளிலும் ஆக்ஷேபிக்கக்கூடாத நிர்வாகங்களுள்ள விடுதலை பெற்ற நாடுகளில் பொதுஜன நிர்வாகத்தை மறுபடியும் அமைப்பதற்கு அடிப்படையான கொள்கைகளை வெளியிடும் செக்கோஸ்லோவேகியாவின் தலைவரான டாக்டர் பெனஸும்,

ஹாலந்து, நார்வேயின் நிர்வாகங்களும், பிரெஞ்சு தேசிய விடுதலைக் கமிட்டியும் சமர்ப்பித்த திட்டங்களை ஐரோப்பிய ஆலோசனை சபை விவாதித்து வருகிறது. முன்னேறும் நேசதேச ராணுவப் படைகள் பொதுஜன நிர்வாகத்தை விடுதலை பெற்ற நாடுகளின் பிரதிநிதிகளடங்கிய நிர்வாகத்தினிடமும் நாட்டிலுள்ள முக்கியமான ஜனநாயகக் கக்ஷிகளிடமும் ஒப்படைக்க வேண்டுமென்பது தான் முக்கியமான கொள்கை. அயல் நாடுகளிலுள்ள நிர்வாகங்கள் அதன் பின் ஒவ்வொன்றாகத் தாயகம் திரும்பிச் செல்லும். நேசதேச கஷ்ட நிவாரண புனருத்தாரணக் கமிட்டியுடன் ஒத்துழைக்கும் பொதுஜன வெல்பேர் மந்திரி முதலில் திரும்பிச் செல்லுவார். அதன்பின் உள்நாட்டு வியவகார, நியாய இலாகா மந்திரிகள் திரும்புவார்கள்.

---

## கடலில் விமானப் படையினரின் ரக்ஷணை: பிரிடிஷ் விமானப் படையிடம் கடற்படையும் உண்டு.

உலகத்தின் அநேக பாகங்களில் ஆயிரக்கணக்கான பிரிடிஷ் விமானங்கள் சஞ்சரிப்பதுடன் பிரிடிஷ் விமானப்படைக்கு அநேக வேகம் பொருந்திய படகுகள் கொண்ட கப்பற் படையுமிருக்கிறது. இந்த நீராவிப் படகுகள் இந்தியாவிலும் ஸிலோனிலுமுள்ள தளங்களிலிருந்து சஞ்சாரம் செய்கின்றன. இந்தப் படகுகளை பிரிடிஷார்கள் ஓட்டுகிறார்கள். கடலில் இறங்கும்படி நேர்ந்த நூற்றுக்கணக்கான விமானிகளையும் விமானப்படை வேலைக் காரர்களையும் இந்தப் படகுகள் காப்பாற்றியிருக்கின்றன.

ஜனங்களை ரக்ஷிக்கப் படகுகளை உபயோகிப்பதென்ற திட்டம் யுத்தத்துக்கு முன்பே நிறுவப்பட்டது. இந்தப் படகுகளைத் திருத்தியமைப்பதில் ஷா என்பவர் அதிக முயற்சி எடுத்துக்கொண்டார். அவர் சாகும் வரையில் அவர் அராபியாவின் லாரன்ஸ் என்று அழைக்கப்பட்டார். அவருடைய வாழ்க்கையில் அந்த காலம்தான் மிகவும் சிறந்ததென்று அவர் அபிப்பிராயப்பட்டிருந்தார். 1929-ம் வருஷத்தில் ஆகாயப்படை இலாகாவுக்கு கடல் விமானங்களுக்கு உதவியளிக்க வேகம் பொருந்திய ஒரு படகைக் கட்டவேண்டுமென்று அவர் சிபார்சு செய்தார். இதன் பயனாக படகுகளைக் கட்டும் வேலையில் அவர் ஏவப்பட்டார். துரதிருஷ்ட வசமாக அவர் செய்த முயற்சியின் பயனை அவர் அனுபவிக்கவில்லை. ஆகிலும் அவருடன் ஒத்துழைத்து திட்டம் போடுவதிலும் பரீக்ஷை பார்ப்பதிலும் முயற்சி எடுத்துக் கொண்டவர் இப்பொழுது ஸிலோனிலிருக்கும் விமானப்படை கடல் உதவி சேவைப்படையில் ப்ளைட் லெப்டினெண்டாக வேலை செய்துவருகிறார்.

யுத்தம் துவங்கியவுடன் கடற்படை விமானப் படையைச் சேர்ந்த இந்தப் படகுகள் ரக்ஷணையளிக்கும் வேலைக்கு அமர்த்தப்பட்டன. யுத்தம் ஆரம்பித்த சில மாதங்களில் இந்தப் படகுகள் அநேக மனிதர்களைக் காப்பாற்றியிருக்கின்றன.

1940-ம் வருஷம் மே மாதத்தில் பிரிடிஷ் வெடி விமானங்கள் வெகு தூரம் செல்ல முயன்றன. அந்த வருஷம் வேனிற் காலத்தில் பிரிடனுக்காக நடைபெற்ற விமானப் போர் நடைபெற்றபொழுது ரக்ஷகப்படைகளை அதிகப்படுத்துவது அவசியமென்று தோன்றிற்று. பிரிடனில் இது வெற்றிகரமாக முன்னேற்றமடைந்ததென்பது அங்கிருக்கும் சேவைப்படைகள் 1,300 ஜனங்களைக் காப்பாற்றியிருக்கிறார்களென்பதிலிருந்தே வெளிவரும்.

யுத்தம் எகிப்துக்கும், பர்மாவுக்கும், தூரக்கிழக்குக்கும் பறவியபொழுது, விமானப் படை கடல் ரக்ஷகப் படையின் நடவடிக்கையும் விரிவடைந்தது. வேகம் பொருந்திய படகுகள் மத்தியதரைக்கடலிலும் இந்துமஹா சமுத்திரத்திலும் பிரிடனுக்கு சமீபத்திலுள்ள கடல்களிலும் சஞ்சாரம் செய்துவந்தன.

படகுகளின் அமைப்பைப்பற்றிய விவரங்கள் தாத்காலிகமாக பரம ரகசியமாக வைக்கப்பட்டிருந்தாலும் அவைகள் அதிவேகமாகச் செல்லக்கூடியவை என்று மட்டும் சொல்லலாம். ஒரு காலத்தில் அதன் மேல் தட்டுகள் கடலில் சுலபமாகக் கண்டுபிடிக்கக்கூடிய மஞ்சள் வர்ணம் பூசப்பட்டிருந்தன. மானிடவர்க்கத்தினிடம் தயை என்னும் குணமில்லாத எதிரிக்கு அவைகள் சுலபமான லக்ஷியங்களாகப் புலப்பட்டன. இன்று யுத்தக் கப்பல்களைப்போல் அவைகளுக்கும் சாம்பல் வர்ணம் பூசப்பட்டிருக்கிறது. அவைகள் மலைப்பாங்கான கடல்களில் அதிக வேகத்துடன் செல்லுகின்றன. ரக்ஷணை வேலையில் ஒவ்வொரு விநாடியும் முக்கியமானவை. வெயர்லஸ்ஸில் ஹீனத்வனியில் தகவல் கிடைத்தால் அதிலிருந்து படகுகள் துரிதமாகச் செல்லவேண்டுமென்று குறிப்பிடப்படும். "நாங்கள் அவர்களை உயிருடன் காப்பாற்றி விடுகிறோம்" என்பதுதான் பிரிடிஷ் கடற்படையின் பெருமையுள்ள மேற்கோள்.

ரக்ஷகப்படைகளை உபயோகமுள்ளதாக அமைப்பது மிகவும் சிக்கலானது. ஆகிலும் இது பரீஷ்காரமாக நடைபெற்றுவருகிறது. "எங்களைக் காப்பாற்றுங்கள்" என்ற தகவல்



கிடைத்தவுடன் ஆபத்திற்குள்ளாகியிருக்கும் விமானமிருக்கும் இடத்தைக் குறிப்பாகத் தெரிந்து கொள்ளுவதற்காக தேடுவிமானம் அனுப்பப்படும். இதே சமயத்தில் படகுகளையும் தயார் செய்து விடுவார்கள். தேடும் விமானம் விசாலமான கடலிலுள்ள சிறிய படகைக் கண்டு பிடிக்கவேண்டும். பிறகு கடற்படை தளத்துக்குத் தகவல் அனுப்பப்படும். சில சமயங்களில் விமானி அவனுடைய படகை மிதக்கவிட முடியாமல் அவனுடைய உடுப்பின் உதவியால் தண்ணீரில் மிதந்து கொண்டிருப்பான். அந்த சந்தர்ப்பத்தில் தேடும் விமானம் ஒரு சிறிய படகை அவனுடைய உதவிக்குப் போடக்கூடும். உணவுப்பொருள்களையும் போட்டு விடலாம். ரக்ஷணை செய்யும் படகு வரும் வரையில் தேடும் விமானம் அடிக்கடி ரோந்து செய்து கொண்டிருக்கும். விமானம் தண்ணீருக்குள் மூழ்கிய சிறிது நேரத்திற்கெல்லாம் விமானிகள் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள். சில சமயங்களில் விமானிகள் படகுகளில் அநேக காலம் அங்கும் இங்கும் அடிபட்டுக் கஷ்டப்பட்ட பின்னர்தான் ரக்ஷிக்கப் படுகிறார்கள். களைப்புற்றவர்களையும் காயம் பட்டவர்களையும் கவனிப்பதற்கு முயற்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு படகிலும் வைத்திய அறையில் நான்கு டோலிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 8 டோலிகளை படகு வேலைக்காரர்களின் அறையிலும் மற்றும் இரண்டை படகுத் தலைவரின் அறையிலும் அமைத்து விடலாம்.

### படகு அமைப்பை அபிவிருத்தி செய்ய திட்டங்கள்.

பிரிடிஷ் விமானப் படையைச்சேர்ந்த விமானக் கடல் ரக்ஷகப்படையைச்சேர்ந்த படகுகள் இப்பொழுது வங்காள விரிகுடாவிலும் அரக்கான் கடற்கரைக்கருகிலும் நடமாடிக் கொண்டிருக்கின்றன. இங்கிருக்கும் படகுகளின் சங்கியை குறைவாகயிருந்தபோதிலும் கடலில் இறங்கும்படி கட்டாயப்படுத்தப்பட்ட விமானிகளை அவைகள் அநேகம் தடவைகளில் காப்பாற்றியிருக்கின்றன. ஜப்பானியர்களை விமானப்படை தாக்கும் நடவடிக்கை பலமடைந்துவருவதால் ரக்ஷகப்படையின் சேவையும் அதிகரித்துவிடும். இப்பொழுது அவைகளை அபிவிருத்தி செய்யக்கூடிய திட்டங்கள் நடைபெறுகின்றன.

விமானிகளின் ரக்ஷணை வேலையில் துணிச்சல்தான் மிகுதியாகயிருக்கவேண்டும். இந்தப் படகுகளின் தலைவர் "தினசரிக் கந்தாயம்" என்று சொல்லும் நடவடிக்கை இங்கு கிடையாது என்று சொல்லுகிறார். இந்த பிராந்தியத்தில் நீரோட்டம் விசித்திரமானது. இன்று சுலபமாகச் செல்லக்கூடிய மார்க்கத்தில் மற்றொரு சமயம் மணல் குன்றுகள் தோன்றிவிடும். இந்த சமுத்திரங்களில் படகுகளை ஓட்டிச் செல்லுவதற்கு அதிக புத்திசாலித்தனம் வேண்டும்.

படகுகள் அநேகம் தடவைகளில் கடற்பலமில்லாத சமுத்திரங்களில் செல்லவேண்டி யிருக்கின்றன. இப்பொழுது வங்காளக் குடாக்கடலில் விரிவான அளவுகள் எடுக்கப்படுகின்றன. படங்கள் வெகு சீக்கிரத்தில் உபயோகமற்றுப்போய் விடுகின்றன. சமீபத்தில் ஆராய்ச்சி செய்ததில் கங்கை நதியின் முகத்வாரத்தில் ஒரு பெரிய தீவிருப்பதாகக் காணப்படுகிறது. "இது சென்ற பருவ காலத்திற்குப் பின் மறைந்துவிட்டது என்றும் அதற்கு சமீபத்தில் மற்ற மூன்று தீவுகள் தோன்றினவென்றும், இந்த சம்பவங்கள் அடிக்கடி நடைபெறுகின்றன வென்றும் படகுத் தலைவர் சொன்னார்.

படகுகள் எதிரியின் கடற்கரைக்கு சமீபத்திலும் செல்லுகின்றன. சமீபகாலத்தில் ஒரு படகுத் தலைவரும் அவருடைய வேலைக்காரர்களும் அக்யாபுக்குத் தெற்கில் சமீப தூரத்திலுள்ள பௌல் தீவுக்குத் துணிவுகரமாகச் சென்றார்கள். சரியான சமயத்தில் படகிலிருந்த இரண்டு இஞ்ஜின்களும் கெட்டுப்போய்விட்டன. படகு கடற்கரையை சமீபித்து விட்டது. நிச்சயமாக எதிரி வசம் அகப்பட்டுக்கொள்ளுவோமென்ற எண்ணம் தோன்றிய உடன் ஒரு இஞ்ஜின் அகஸ்மாத்தாகப் பழுது பார்க்கப்பட்டு, அந்தப் படகுத் திரும்பிப்போய்விட்டது.

மற்றொரு சமயத்தில் ஒரு ஜப்பானிய வேவுபார்க்கும் விமானம் நதியின் முகத்வாரத்தில் சுட்டு வீழ்த்தப்பட்டது. ரக்ஷணைப் படகுகள் அதன் விமானியைத் தேடிச்சென்றார்கள். துரதிருஷ்ட வசமாக அவர்களின் லக்ஷியத்தைப்பற்றி அவர்களுக்கு உத்தரவிடப்படவில்லை. ஜப்பானிய விமானம் நொறுங்கிய இடத்தில் அவர்கள் அநேக காலம் தேடிய பின் மேஜோடுகளுடன் உள்ள இரண்டு கால்களை மட்டும் அவர்கள் கண்டார்கள். மாலுமிகளின் உத்சாகம் போய்விட்டது. அவர்களுடைய மேற்கோளை அவர்கள் பூர்த்தி செய்யக்கூடவில்லையே என்ற வருத்தமுண்டாகிற்று. அவர்கள் மறுபடியும் தேடிச் சென்றபொழுது ஜப்பானியர்களின் அடையாளமுள்ள சாமான்களைக் கண்டார்கள். அவர்களுக்கு மறுபடியும் உத்சாகம் உண்டாகிற்று. "உயிருடன் மீட்பது" என்ற மேற்கோள் எதிரிக்கு அன்வயிக்காது என்று ஏற்பட்டு விட்டது.

தளத்திற்கு வந்தவுடன் சமீபத்திலுள்ள அறிக்கை ஆபீஸரிடமிருந்து சர்ச்சைக்கு அனுப்ப லாயக்குள்ள பொருள்கள் அகப்பட்டனவாவென்ற உத்தரவு வந்திருந்தது. காகிதப்

பார்ஸலை உடைத்து அதில் இருமேஜோடுகளையும் அதற்குள் கால்களையும் கண்ட மாத்திரத்தில் அந்த ஆபீஸர் எவ்விதம் ஆச்சரியமடைந்தாரென்பதை வெளியிடமுடியாது.

### சிலோனிலும் தென் இந்தியாவிலும்.

சிலோனிலும் தென் இந்தியாவிலும் ரக்ஷணைப் படகுகள் சிலோனுக்கு சமீபத்திலுள்ள சமுத்திரங்களில் அநேகர்களை ரக்ஷித்து இருக்கின்றன. அவைகள் இந்துமஹா சமுத்திரத்திலும் வெகு தூரம் சென்றிருக்கின்றன. ஒரு சமயத்தில் கடாலினு கடல் விமானம் கொழும்புக்குத் தெற்கில் 500 மைல்கள் தூரத்தில் சமுத்திரத்தில் விழுந்துவிட்டது. ஒரு படகு அதன் வேலைக்காரர்களைத் தேட 20 மணி நேரம் சுற்றுப்பிரயாணம் செய்தது. கடைசியில் பின்னும் இருபது நிமிஷங்கள் வரையில் சஞ்சாரம் செய்யப்போதுமான எண்ணெயுடன தளத்துக்குத் திரும்பி வந்தது.

அதிக வேகம் பொருந்திய ரக்ஷகப் படகுகள் ஒரு நூதன முறையைக் கண்டு பிடித்திருக்கின்றன. சிலோனில் காடுகளில் நொறுங்கிவிழும் விமானிகளின் ரக்ஷணைக்கு அவைகள் பேருதவி செய்து வருகின்றன. காடுகள், பொட்டல்கள், வழியாகச் செல்லுவதைவிட கடல் மார்க்கமாக சமீப பிரதேசத்துக்குச் செல்லுவது சுலபமானது.

சில காலத்திற்கு முன் ஒரு வெடி விமானம் சிலோனில் காடுகளில் நொறுங்கிவிழுந்தது. அதிலிருந்த விமானிகள் மீட்கப்பட்ட பின் அவர்களுக்குக் காபந்து செய்வதென்று முடிவு செய்யப்பட்டது. ரக்ஷகப் படகுகள் காவலாளர்களை ஏற்றிச்செல்ல முன்வந்து பிரிடிஷ் விமானிகளின் ஒரு பெரும் படையை ஏற்றிச்சென்றன.

துரதிருஷ்ட வசமாக அன்று கடல் கொந்தளித்துக்கொண்டிருந்தது. படையிலிருந்தவர்கள் சிறந்த மாலுமிகளாக இல்லை. ஒரு சிறிய படகுதான் படைகளையிறக்கக் கிடைத்தது. ஒவ்வொருவருக்கும் தண்ணீரில் மிதக்கும் ஆடை முன் ஜாக்கிரதையுடன் வழங்கப்பட்டது. துப்பாக்கிகளையும் வெடி மருந்துகளையும் கரைக்குக் கொண்டுபோவது சிரம சாத்தியமாயிற்று.

படகுகளில் 11 பேர்கள் செல்லுகிறார்கள். அவர்கள் குதூகலத்துடன் அதில் வாழ் நாளைக்கடத்துகிறார்கள். "நாங்கள் குதூகலப்படாமல் பின் என்ன செய்வது" என்று படகிலிருந்த மாலுமி ஒரு சமயம் கேட்டார். எங்களுடைய வேலை ருசிகரமானது. துணிவு கரமான, மயிர்க்கூச்சலிடக்கூடிய அநேக சம்பவங்கள் நடைபெறுகின்றன. மேலும் கடலில் கொசுக்கடி என்ற உபாதி கிடையாது.

---

# இதாலியில் என்னுடைய சேவை.

## நிர்வாகத் தலைவரான மார்ஷல் படோக்ளியோவின் அறிக்கை.

1943-ம் வருஷம் ஜுலை மாதம் 25-ம் தேதி முதல் இதுவரையில் இதாலியில் நடைபெற்ற சம்பவங்களை நாம் ஆராய்ச்சி செய்வோம். ஜுலை 25-ம் தேதியன்று மாக்ஷி தங்கிய மன்னர் பாஸிஸ்டு கிராண்டு சபையின் அபிப்பிராயப்படி முஸோலினியை ராஜினமா செய்யும்படி உத்தரவிட்டபொழுது நான் அதிகாரத்துக்கு வந்தேன்.

ரோமில் என்னுடைய நிர்வாகம் அமுல் நடத்திய $1\frac{1}{2}$ மாதத்தில் நிர்வாகம் கீழ்கண்ட நடவடிக்கைகளைக் கையாண்டது.

(1) பாஸிஸ்டு கக்ஷி, கிராண்டு சபை, பாஸிஸ்டு சங்கம், நகர பரிபாலன சபைகள் கலைக்கப்பட்டன.

(2) அநியாயமாக சம்பாதிக்கப்பட்ட சொத்துக்களைப் பொருத்து ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது.

(3) 50 மாகாண பாஸிஸ்டுத் தலைவர்களை விலக்கிவிட்டு அவர்களுக்குப் பதிலாக நிபுணர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

(4) அரசாங்க உத்தியோகங்களிலும் மற்ற ஸ்தானங்களிலுமுள்ள பாஸிஸ்டு கக்ஷிக் காரர்கள் வெளியேற்றப்பட்டார்கள்.

(5) முக்கியமான அபாயம் விளைவிக்கக்கூடிய பாஸிஸ்டுத் தலைவர்கள் கைதி செய்யப் பட்டார்கள்.

(6) பாஸிஸ்டு சேனை இதாலிய சேனையுடன் சேர்க்கப்பட்டது.

### தொடர்பு ஏற்பட்டது.

இந்த நடவடிக்கைகளை ஆக்ஷேபித்த ஜெர்மானியர்கள் இதாலிக்கு அநேக டிவிஷன் ஜெர்மன் துருப்புகளை அனுப்பினார்கள். அவைகளை எதிர்த்து நிற்க நம்மிடம் படைபலமில்லை. நமது படைகளின் சேனாதிபதி என்ற முறையில் முஸோலினி நமது படைகள் எல்லாவற்றையும் இதாலிக்கு வெளியேயுள்ள நாடுகளுக்கு அனுப்பிவிட்டான்.



36 டிவிஷன்கள் இதாலிக்கு வெளியே இருந்தன. துர்பலமான, முஸ்தீப்புகளில்லாத 12 டிவிஷன் துருப்புகள்தான் இதாலியில் காபந்து செய்துவந்தன.

சாமான்களின் குறைவினாலும், ஜனங்கள் விரும்பாததாலும் யுத்தத்தை நடத்த முடியாமல் போய்விட்டதால் யுத்த நிறுத்தம் செய்ய பிரிடிஷாருடனும், அமெரிக்கர்களுடனும் சம்பாஷணையைச் செய்ய நாங்கள் தூதர்களை அனுப்பினோம்.

### குற்றம் சாட்டுவது சரியல்ல.

யுத்த நிறுத்தம் செய்யக் கோரியதில் நாங்கள் அளவுகடந்து காலஹரணம் செய்து விட்டோமென்று எங்கள் பேரில் குற்றம் சாட்டுகிறார்கள். இது சிறுபிள்ளைத்தனம். ஒரு முடிவுக்கு வருவதற்கு எதிரித்தரப்பாரும் உடன்படிக்கையை ஒப்புக்கொள்ளவேண்டும். ஸெப்டம்பர் மாதம் 3-ம் தேதிவரையில் நேசதேச உயர்தர ராணுவ அதிகாரிகள் எங்களுடைய கோரிக்கையை அங்கீகரிக்கவில்லை. யுத்தத்தை நிறுத்திவிட்டோம் அல்லது நாங்கள் சரணாகதி செய்து விட்டோமென்று நாங்கள் ஒருவர்மட்டும் சொல்லியிருந்தால் நாங்கள ஜெர்மானியரின் கொடுமைக்குட்பட்டிருப்போம். எங்களுக்கு பிரிடனிடமிருந்தும், அமெரிக்காவிடமிருந்தும் யாதொரு உதவியும் கிடைத்திருக்காது.

ரோமை ரக்ஷிக்க நாங்கள் 6 டிவிஷன் படைகளைத் தயார் செய்திருந்தோம். ஸெப்டம்பர் மாதம் 8-ம் தேதி சாயங்காலம் இதாலி யுத்தத்தை நிறுத்திவிட்டதென்று சொன்ன மாத்திரத்தில் நகரத்திற்குச் சமீபத்தில் வைக்கப்பட்டிருந்த ஜெர்மன் படைகள் திடீரென்று ரோமைத் தாக்கின.

நாங்கள் பலமாகச் சிறிதுகாலம் போராடிய பின் சில காரணங்களினால் எங்களுடைய தற்காப்புகள் முறிபட்டுவிட்டன.

ரோமில் தங்கியிருந்தால் ஜெர்மனியிடம் அகப்பட்டுக்கொள்ளுவோம் என்று தோன்றிற்று.

### வேலை நிறுத்த திட்டம்.

ஆகையால் அரச குடும்பத்தாரும், நானும் இன்னும் சில மந்திரிகளும், டிரிபோலி, பெஸ்காரா வழியாக பிரிண்டிஸிக்குச் சென்றோம்.

ரோமில் நான் ஆறு வாரங்கள வரையில் நிர்வாகத்தை நடத்தியபொழுது ராஜீயக் கக்ஷிகளின் மதிப்புள்ள தலைவர்கள் எல்லாம் எனக்கு ஆதரவளித்து வந்தார்கள்.

இதற்கு ருஜு. பின்வருமாறு. ஜெர்மன் தூதர்களின் சூழ்ச்சி மூலமாக ஸெப்டம்பர் முதல்தேதியன்று வேலை நிறுத்தம் செய்வதென்று ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆகஸ்டு 31-ம் தேதியன்று கக்ஷித்தலைவர்கள் எல்லோரும் சேர்ந்து பத்திரிகைகளில் ஒரு அறிக்கையை வெளியிட்டார்கள். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யக்கூடாதென்றும் அரசாங்கத் துக்கு விரோதமாக ஒரு நடவடிக்கையையும் மேற்கொள்ளக்கூடாதென்றும் அதில் வேண்டுகோள் செய்யப்பட்டிருந்தது.

சில காலத்துக்குப்பின் பிரிண்டிஸியிலிருக்கும்பொழுது அமெரிக்காவிலிருந்த ஸ்பார்ஸா பிரபுவிடமிருந்து எனக்கு ஒரு தந்தி கிடைத்தது. நேசநேசத்தாரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நானிருக்கும் வரையில் என்னுடைய நிர்வாகத்தை ஆக்ஷேபிப்பது குற்றச் செய்கை என்று அவர் கருதுவதாகவும் உள்நாட்டு வியவகாரங்களெல்லாவற்றையும் யுத்தம் முடிந்தபின் தீர்த்துக்கொள்ளவேண்டுமென்றும் அதில் காணப்பட்டிருந்தது.

### நல்லெண்ணமுள்ளவர்கள்.

இந்தத் தகவலைக்கண்டு உத்சாகம்கொண்டு என்னுடைய உத்தேசத்தைப் பூர்த்திசெய்ய முற்பட்டு ஜெர்மனியுடன் போர்தொடுத்து நேசதேசத்தாருடன் சேர்ந்து போர்தொடுக்கும் ஸ்தானத்தை அடைந்தேன். ஸ்பார்ஸாவின் அறிக்கையில்கண்ட விஷயங்கள் எவ்வளவு தூரம் நிறைவேறின என்பதை விவரித்துக்கூறவேண்டிய அவசியமில்லை.

என்னைப்போல யுத்த முயற்சியை அதிகப்படுத்தவேண்டுமென்றும் தேசத்தின் புனருத் தாரணத்துக்கு வழிதேடவேண்டுமென்றும் விருப்பமுள்ள, நல்லெண்ணம்கொண்டவர்களைக் கொண்டு என்னுடைய அரசாங்க சபையை அமைத்துவிட்டேன். கீழ்க்கண்ட கொள்கைகளைப் பூர்த்திசெய்ய நடவடிக்கைகளைக் கையாண்டோம்.

(1) 22 வருஷகாலமாக எட்டுக்கால் பூச்சியைப்போல இதாலியின் அமைப்பையும் நடவடிக்கைகளையும் வியாபித்திருக்கும் விரிவான சிக்கலான பாஸிஸ்டு அமைப்பை ஊக்க மாகச் சின்னபின்னம் செய்வது. அதே சமயத்தில் எல்லா ஸ்தாபனங்களிலிருந்தும் பொறுப் புள்ள ஸ்தானங்களிலிருந்தும். பாஸிஸ்டு கக்ஷியைச் சேர்ந்தவர்களை அப்புறப்படுத்துவது. இந்தக் கொள்கையை அனுஷ்டித்து பாஸிஸ்டு அமைப்பைக் கலைத்துவிடவேண்டுமென்றும்

அதற்கு ஒரு கமிஷனர் நியமிக்கப்படவேண்டுமென்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன் பிரகாரம் டிடோஸானிபோனி கமிஷனராக நியமிக்கப்பட்டார்.

(2) யுத்தத்தில் வெற்றிபெறுவதற்காக நேசதேசத்தார்களுடன் நல்லெண்ணத்துடனும் விஸ்வாசத்துடனும் ஒத்துழைப்பது. இந்த விஷயத்தில் அரசாங்கமும் நமது படைகளும் மேற்கொண்ட நடவடிக்கைகளை நேசதேச நிர்வாகங்கள் ஒப்புக்கொண்டிருக்கின்றன. மாகாணங்களின் நிர்வாகத்தை அரசாங்கத்தினிடம் ஒப்படைத்ததன் மூலம் காமன்ஸ் சபையில் இதைப்பற்றி மிஸ்டர் சர்ச்சில் சொற்பொழிவாற்றியதின் மூலம் இது வெளியாகுகிறது.

(3) நம்முடைய கோச சக்திக்குத் தக்கவாறு ஊதியம், தொழிலாளர்களின் நிலைமை முதலியவற்றை அபிவிருத்தி செய்வது. இதற்கு அனுகுணமாக, ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அதன் மூலம் தொழிலாளர்கள், விவசாயிகள், வேலைக்காரர்களின் ஊதியம் நிர்த்தாரணம் செய்யப்பட்டிருக்கிறது. பென்ஷன்தார்களுக்கும் பாதிரிமார்களும் கொடுக்கப்படும் உபகாரச் சம்பளம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

(4) உணவுப்பொருள்களை துரிதமாகவும், நியாயமுறையிலும் விநியோகம் செய்ய தேசத்தை ஒழுங்குப்படுத்திவருவது. போக்குவரத்து மார்க்கங்கள் குறைவாயிருப்பதிலிருந்து இத்துறையில் அநேக சிரமங்கள் இருக்கின்றன. ஆகிலும் இந்த நிலைமையைக் கூடிய சீக்கிரம் சீர்திருத்திவிடுவோமென்று நம்பிக்கைகொண்டிருக்கிறோம். இந்த விஷயத்திலும், நேச நாடுகள் தாராளமாக நமக்கு உதவியளித்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றியைச் செலுத்துகிறேன்.

(5) இதாலியின் தொழிற்சாலைகளையும், ரஸ்தாக்களையும், இருப்புப்பாதைகளையும் தந்திப் போக்குவரத்தையும், டெலிபோன் அமைப்பையும் மறுபடியும் ஸ்தாபிப்பது. ஏராளமான நஷ்டம் ஏற்பட்டபோதிலும் எங்களிடம் பொருளாதாரக் குறைவு ஏற்பட்டிருந்தபோதிலும் நாங்கள் புனருத்தாரண வேலையில் சிறிது முன்னேற்றமடைந்துவருகிறோம்.

(6) யுத்த அவசியத்துக்குட்பட்டு பத்திரிகைகளுக்கு பிரசார உரிமையை வழங்குவது. இந்த சுதந்திரத்தை நாம் ஏற்கனவே இழந்திருந்தால் எங்குபார்த்தாலும் குழப்பமான நிலைமையை உண்டுபண்ணியிருக்கக்கூடும். ஆகிலும் அமைதி ஏற்படுமென்றும் நமது முக்கியமான பிரச்னைகளை பத்திரிகைகள் அமைதியுடனும், காம்பீர்யத்துடனும் உபயோகமுள்ளவகைகளிலும் சர்ச்சை செய்வார்களென்றும் நான் நம்புகிறேன்.

(7) யுத்தம் முடிவடையும் வரையிலும் அதாவது இதாலிய மக்கள் தன்னிஷ்டப்படி அபிப்பிராயங்களை வெளியிட உரிமைபெறும் வரையிலும் இதாலியின் நிர்வாக அமைப்பு சம்பந்தமான விவாதங்களும் ஷரத்துகளும் ஒத்திவைக்கப்படவேண்டும்.

### நேசநாடுகள்.

இதுதான் உள்நாட்டு விஷயம். அயல் நாடுகள் சம்பந்தப்பட்டமட்டில் எங்களுடன் விரோதம் கொள்ளாத நாடுகளுடன் நட்பை விருத்திசெய்துகொண்டோம். யுத்தத்தில் நாங்கள் விரோதித்துக்கொண்ட நாடுகளுடன் மறுபடியும் பரஸ்பர நல்லெண்ணத்தையும் நல்லுணர்ச்சியையும் சம்பாதிக்க முயலுகிறோம்.

எங்களுடைய நடவடிக்கையின் விளைவுகள் வருங்காலத்தில்தான் வெளியாகும். பல வகைப்பட்ட குறைபாடுகள் எங்கள் நடவடிக்கையிலிருப்பதாகச் சொல்லக்கூடும். நடவடிக்கையிலீடுபட்டவர்கள்தான் தவறுதலைச் செய்வார்கள். ஆகிலும் துன்புற்ற இதாலியிடம் எங்களுக்குள்ள அன்பையும் அதைப் புனருத்தாரணம் செய்ய முயற்சிக்க எங்களுக்குள்ள ஊக்கத்தையும் ஒருவரும் சந்தேகிக்கமுடியாது.

---

## பீட்மாண்ட் இளவரசர் ஹம்பர்ட்.

### (டைம்ஸ் பத்திரிகை).

நேசதேசத்தார்கள் ரோமுக்கு வந்தவுடன் முடியைத்துறந்துவிட்டு சுகவாசியாகயிருக்க விக்டர் இமானுவல் மன்னர் முடிவுசெய்துவிட்டார். அவருடைய அதிகாரங்கள் அவருடைய குமாரரிடம் ஒப்படைக்கப்படும். மார்ஷல் படோக்ளியோவின் நிர்வாகத்துடன் ஒத்துழைக்க இது முக்கியமான நடவடிக்கையென்று நினைத்து எதிர் கக்ஷிக்காரர்களும் இதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பங்களில் தேசத்தின் லெப்டினெண்ட் என்ற பட்டப்பெயருடன் நிர்வாகத்தை வகிக்கப்போகும் பீட்மாண்டின் இளவரசரான ஹம்பர்ட் சர்வதேசங்களின் கவனத்தையும் கவர்ந்துவிட்டார் என்று டைம்ஸ் பத்திரிகையின் நேபிள்ஸிலுள்ள விசேஷ நிருபர் எழுதுகிறார்.



இவர் வயது முதிர்ந்தபின் 20 வருஷங்கள் வரையில் அதிக கியாதி பெறுததற்கு அநேக காரணங்கள் உண்டு. அவருக்கு யௌவன பருவம் வந்தபொழுது பாஸித்வம் மேலோங்கி நின்றது. இதாலிய மக்களின் மனோபாவத்தை அவன்தான் அறியக்கூடுமென்று ஒரு ஐதீகத்தை ஸ்தாபித்த முஸோலினி, மன்னரையும் அவருடைய பிள்ளையையும் ஆதரிக்கவில்லை.

ஷியில் (Shi) ஏறிச்செல்லுகிறவர் என்ற ஒரு முறையில்தான் ஹம்பர்ட் ஜனங்கள் முன் தோன்றிவந்தார். ஸம்ஸ்தான வியவகாரங்களை அறிந்துகொள்ளவும், நிர்வாகத்தின் நுட்பங்களை அறிந்துகொள்ளவும் அவருக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. அவருக்கு ஜெனரல் பதவி வழங்கப்பட்டது. ஆகிலும் அவர் காரியாலயத்திலேயே வேலைசெய்து வந்தார். அவர் பாஸிஸ்டுகளை வெறுத்துவந்தார். அவர் அரசுரிமையைப் பெருவதென்பது கிராண்டு பாஸிஸ்டு சபையின் அபிப்பிராயத்தைப் பொருத்ததென்று உத்தரவிடப்பட்டபின் அவர் ஒரு கைதிபோலாகிவிட்டார். இளவரசராக இருக்கவேண்டுமென்றால் அவர் அவர்கள் சொல்படி நடந்துகொள்ளவேண்டும்.

இப்பொழுது பாஸித்வம் வீழ்ச்சிபெற்றுவிட்டதாலும், அவருடைய தகப்பனாரின் சாதுர்யமான ராஜீய சூழ்ச்சியினாலும், அவர் மறுபடியும் தன்னுடைய பிறப்புரிமையைப் பெற்றுவிட்டார். இப்பொழுது அவருக்கு 40 வயது. அவருடைய நடவடிக்கைகளைப் பொருத்து அநேக காரியங்கள் நடைபெறக்கூடும். இதாலியில் ஜனநாயக் கொள்கைகள் பரவி வரும்பொழுதும் ஒரு நிர்வாகம் ஆக்ஷி புரிந்துவரும்பொழுதும் லெப்டினெண்ட் ஜெனரலுக்கு ஒரு பும்ஸத்வமும் இருக்காது. ஆகிலும் அரசாங்கம் ராஜீனாமாச் செய்யும் பொழுது அவருடைய உபயோகம் வெளிப்படும். அவர் நேபிள்ஸுக்கு வரும்பொழுது நெல்ஸன் முதல் முதலில் ஹாமில்டன் சீமாட்டியைச் சந்தித்த விரிகுடாவை நோக்கியிருக்கும் விடுதியில் வசிப்பார். இங்குதான் அவர் டைம்ஸ பத்திரிகையின் நிருபருக்கு பேட்டியளித்தார். அவர் பிறர் மனதைக் கவரக்கூடிய வகையில் ஆங்கில பாஷையை லாகவத்துடன் பேசுவார்.

“முஸோலினியிடம் நீங்கள் எப்பொழுதாவது சச்சரவு செய்ததுண்டா” என்று நிருபர் வினவினார். இளவரசர் அருவருப்படைந்ததுபோல் விளிக்கை செய்தபின் சொல்லுகிறார். “ஜனங்களின் உணர்ச்சியை அறிவதில் அவன் வெகு ஸமர்த்தன். அவர்களை எவ்விதம் புரோத்சாகப்படுத்துவதென்று அவன் நன்கு அறிவான். இனிது நடைபெறும் நிகழ்ச்சிகளின் புகழையும் அவன் ஏற்றுக்கொள்வான். முதலில் அவனை தேசம் பூராவும் ஆதரித்தது. அவனுடைய சக்தியை அவன் அறிந்து அதை சாதுர்யமாகவும் உபயோகித்து வந்தான்.

மிகவும் நாஜூக்கான ஒரு கேள்வியைக் கேட்கலாமாவென்று நிருபர் கேட்டார். இளவரசர் புன்சிரிப்புடன் அதை ஆமோதித்தார். “பிரிடன்பேரிலும், பிரான்ஸ் பேரிலும் இதாலி போர் தொடுக்காமல் மன்னர் தடுத்திருக்கக்கூடாதா என்று நாங்கள் ஆங்கிலத்தில் பேசிக்கொள்ளுவதுண்டு” என்றார் நிருபர். இளவரசர் தலையை ஆட்டிக்கொண்டு இது சாத்தியமற்றது என்று பதிலுரைத்தார். அவர் மேலும் சொன்னதாவது “முஸோலினியை எதிர்த்து நிற்க அவர் முயன்றிருந்தால் ஜெர்மானியர்கள் நம்பேரில் பாய்ந்திருப்பார்கள். சென்ற செப்டம்பர் மாதம் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அப்பொழுதே ஆரம்பமாகியிருக்கும். அப்பொழுது ஜெர்மனி ருஷ்யாவுடன் போர் தொடுக்கவில்லை. ஜெர்மன் படை பலம் பூராவாகயிருந்தது. பாஸி தத்வத்துக்கும், நாஸி தத்வத்துக்கும் ஒற்றுமையிருந்ததால் இதற்கு மாறான நடவடிக்கைக் கையாளுவது இயலாத காரியமாகும். மேலும் இதாலிய மக்களும் இந்த நடவடிக்கையை விரும்பவில்லை. ஒருவரும் ஆக்ஷேபிக்கவில்லை. இதாலிய பார்லிமெண்டைக் கூட்டவேண்டுமென்று ஒருவரும் வற்புறுத்தவில்லை. முஸோலினியை தேசம் பூராவும் ஆதரித்தது.”

லெப்டினண்ட் ஜெனரல் பதவியைப்பற்றி நாங்கள் விவாதித்தோம். இதாலியின் சரித்திரத்தில் நுட்பமான ஞானம் இருப்பதாக இளவரசர் வெளிக்காட்டினார். இதாலியில் ராஜீய உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறதென்றும் ஆனால் இதாலிய ஜனங்கள் நடை பழகும் முன் அவர்கள் ஓட்டம் பிடிக்கவேண்டுமென்று நேசதேசத்தார்கள் எதிர்பார்ப்பதாகவும் அவர் அறிவித்தார்.

“அநேக காலத்திற்குப்பின் பொது ஜனங்கள்தான் கண்டபடி பேச்சுகளைப் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்கள் ஆதாரமற்ற அநேக வதந்திகளைக் கிளம்பி மன்னருக்கு அவமானம் உண்டாகும்படி நடந்துகொள்ளுகிறார்கள். நேசதேசத்தாரின் ராணுவ நிர்வாகத்தை ஆதரிக்கலாம். அல்லது நேர் முகமாக இதாலிய நிர்வாகத்தையே ஸ்தாபித்திருக்கலாம். இதாலிய மக்களை குழப்பமான நிலையில் விட்டுவிடுவது நேசதேசத்தாரின் அக்கரைகளுக்கு ஒவ்வாதது.” அதன்பின் அவருக்குக் கோபம் மூண்டதுபோல் சமிக்ஞை செய்தார்.

குறைவான முஸ்தீப்புகளுள்ள பெரிய சேனையைவிட சிறிய பலமான படையை அமைப்பது சிலாக்கியமென்று நாங்கள் இருவரும் முடிவுசெய்தோம் "இவையெல்லாம் நேசதேசத்தாரின் நடவடிக்கையைப் பொருத்தது". நேசதேசத்தார் வசம் கைதியாக நல்ல பயிற்சி பெற்ற இதாலிய ஸோல்ஜர்களிருக்கிறார்களென்றும், இதாலியிலிருந்து ஜெர்மனியர்களை அப்புறப்படுத்த அவர்களை உபயோகிக்கலாமென்றும் இளவரசர் சொன்னார்.

யுத்தக் கைதி முகாம்களில் அநேக ஸோல்ஜர்கள் சிறிய ஆயுதங்களுடனிருக்கிறார்கள். நாட்டில் ஒழுங்கை ஸ்தாபிக்கவும், அநியாய லாபம் சம்பாதிக்கிறவர்களை அடக்கியாளவும் அவர்களை உபயோகிக்கலாம்.

அவருடன் சம்பாஷணை செய்தபின் அவர் அரசியல் அமைப்புகளை மதிக்கும் முறையில் பயிற்சியளிக்கப்பட்டவர் என்று தோன்றிற்று. ஆகிலும் வலுமிக்க உள்ள நிர்வாகத்தின் உபயோகத்தையும் அவர் மதிக்கவில்லை. பொது மக்களின் ஒவ்வொரு அபிப்பிராயத்தையும் நாம் மதிக்கவேண்டுமென்றும் அவைகள் பார்லிமெண்டு மூலமாகவும் பொதுஜனத் தேர்தல் மூலமாகவும் பிரதிபலிக்கவேண்டுமென்றும் அவர் சொன்னாலும் ராஜீய விஷயங்கள் தெருக்களிலும் பொதுஜன சஞ்சார ஸ்தலங்களிலும் கிளர்ச்சியை உண்டுபண்ணிவிடாதபடி அடக்கியாள ஆயுதம் தாங்கிய படைகளுமிருக்கவேண்டுமென்பதையும் அவர் ஆதரித்தார்.

ராஜ வம்சத்தின் மற்றொரு கிளையிலுள்ளவர்களிடம் படோக்ளியோ அனுதாபம் காட்டி வந்தபோதிலும் அவனுக்கு அனுபோகமில்லாத ஒரு வேலையை அவன் ராஜ விசுவாசத்துடனும் சந்தோஷத்துடனும் செய்து வருகிறாரென்று மார்ஷல் படோக்ளியோவைப் பாராட்டிவிட்டு அவர் பேட்டியை முடித்துவிட்டார்.

## படோக்ளியோவின் புதிய நிர்வாகம்.

இதாலிய அபிப்பிராயப்படி முதலில் கஷ்ட சாத்யமென்று நினைத்த புதிய படோக்ளியோ நிர்வாகம் இப்பொழுது அமைக்கப்பட்டதென்பது உண்மையறிவும் இதாலியரின் மனப்பான்மையும் ஒன்றுபட்டு விட்டனவென்று கியார்ணலிடி இதாலியா என்னும் பத்திரிகையின் மாஜி லண்டன் நிருபரான C. M. பிராவ்செரோ டெயிலி டெலகிராப் பத்திரிகையில் எழுதியிருக்கிறார். ராஜீயக்கொள்கைகளிலும் அனுபவத்திலும் வேறுபட்ட அநேகர்கள் இந்த நிர்வாகத்தில் கலந்து கொண்டிருக்கிறார்களென்று இதாலியிலுள்ளவர்கள் கருதுகிறார்கள்.

அநேக காரணங்களைப்பொருத்து இந்த நிர்வாகம் தாத்காலிகமாக அமைக்கப்பட்டதுதான். வடக்கு இதாலியிலுள்ள பிரமுகர்கள் இதில் கலந்துகொள்ளாதபோனால் இது பிரதிநிதித்வமுள்ளதாக ஆகாது என்று சொல்லுவது பொருத்தமான காரணமாகும். இதாலியில் ஜனநாயகத்துக்குச் சமமாக தாராள கக்ஷியைச் சேர்ந்த பெனடெட்டோ குரோஸியும் இந்த நிர்வாகத்தில் சேர்ந்துகொண்டிருக்கிறார்.

புகழ் மிகுந்த இந்த வேதாந்தியின் ஜீவிய சரித்திரத்தை எழுதுவது அவசியமில்லை. ஆகிலும் ராஜீய நோக்கங்களிலிருந்து ஆராய்ச்சி செய்யும்பொழுது ராஜீய வியவகாரங்களில தலையிட்டுக்கொள்ளும்படி அவரை அவருடைய ஸ்நேகிதர்களும் சந்நிவேசங்களும் கட்டாயப்படுத்திவிட்டன. ஆயுள் பூராவும் ராஜீய வியவகாரங்களில் பற்றன்னியில் அவர் காலம் கடத்தியிருக்கிறார். 1920-ம் வருஷத்தில் மட்டும் அவர் ராஜீய வியவகாரங்களில் தலையிட்டார். சென்ற யுத்தத்துக்குப்பின் இதாலியில் குழப்பமான நிலைமை ஏற்பட்டிருந்தபொழுது அவர் கல்வி இலாகா மந்திரி பதவியை ஏற்றுக்கொண்டார்.

ஸ்பார்ஸா நேபிள்ஸுக்கு வந்தபின் குரோஷி மன்னரை விரோதிக்கிறவர் என்ற அபகீர்த்தி அவருக்குக் கிடைத்தது. இதாலியின் ஏகாதிபத்தியத்திற்கு பலமான அஸ்திவாரம் மன்னர் ஆக்ஷிதானென்று குரோஷி எப்பொழுதும் நம்பியிருப்பவர். முஸோலி அதிகாரம் வகிக்க முன் வந்ததற்கு முன் சில வருஷங்களில் ஸ்பார்ஸா அயல்நாட்டு காரியதரிசியாகவும் பாரிஸில் அயல்நாட்டு தூதராகவுமிருந்ததை விட, அவர் தன்னிச்சையாகவே 1926-ம் வருஷம் முதல் கல்வியை உத்தேசித்து அயல் நாடுகளில் வசித்து வந்தார்.

சென்ற அக்டோபர் மாதத்தில் அவர் இதாலிக்குத் திரும்பி வந்தார். ஜனங்கள் எதிர்பார்த்தபடி அவரிடம் அதிக சக்தியிருக்கவில்லை. அவருடைய தலைமையில் ராஜீய விஷயங்களில் தெளிவு ஏற்படுமென்றும் அயல்நாடுகளில் அவருக்குக் கிடைத்த அனுபவம் உபயோகமுள்ளதாகயிருக்குமென்றும் சிலர்கள் நினைத்திருந்தார்கள்போலும். ஸ்பார்ஸா சிறந்த கலைஞான நிபுணர்தான். ஆகிலும் அவருடைய ராஜீய வியவகார புகழுக்கு அவருடைய அயல்நாட்டு நண்பர்கள்தான் காரணமாகும். இதாலிய ஜனங்களிடம் அவருக்கு அதிக



செல்வாக்குக் கிடையாது. இதாலிக்கு வந்தபின் அவர் செய்த பிழைக்கும் இதுதான் காரணமாகும். இந்தப் பிழையினால்தான் இதாலியில் அநேக மாதங்களாக குழப்பமும் நெருக்கடியும் நிலைபெற்றிருந்தது. இதைத் தீர்த்து வக்க பால்மிரோ டாக்ளியாட்டி என்ற ருஷ்ய பொதுவுடைமைக் கொள்கைக்காரர் குறுக்கிட வேண்டியதாயிற்று.

இந்த நிர்வாக சபையிலுள்ள மற்ற மெம்பர்கள் ராஜீய வட்டாரங்களில் அதிகப் புகழ் பெற்றவர்களில்லை. நிர்வாகத்திலும் அவர்கள் அனுபவம் பெற்றவர்களில்லை. ஒருவர் டாக்ளியாட்டி. 23 வருடங்களுக்குமுன் அவர் ருஷ்யாவுக்குச் சென்று பொது விமானக் கொள்கைகளில் நன்றாய்ப் பயிற்சிபெற்று கோமிண்டர்னில் அங்கத்தினராகச் சேர்ந்து இப்பொழுது அவர் தாயகம் திரும்பி விட்டார். விடுதலை பெற்ற இதாலியிலுள்ள புதிய தலைவர்களுக்கு தத்வ போதனைசெய்ய அவருக்கு சந்தர்ப்பம் ஏற்படும்.

மார்ஷல் படோக்ளியோ அயல்நாட்டு இலாகாவைத்தானே வகித்து வருகிறாரென்பதில் ஒரு ஆச்சரியமுமில்லை. இதாலிக்கும் நேசநாடுகளுக்கும் மற்ற நாடுகளுக்குமுள்ள சம்பந்தங்களை விக்டர் மன்னர் சூத்ரதாராகப்பின் புறமிருந்து நடத்திவைப்பார். யுத்த இலாகாவும் கடற்படை இலாகாவும் மார்ஷல் படோக்ளியோவினுடையவும் கடற்தளபதி டி கோர்டனுடையவும் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் நேசதேசத்தார்கள் விரும்பும் ராணுவ ஒத்துழைப்பு தொடர்ச்சியாக உத்தரவாதம் செய்யப்படும்.

## கிரேக்கக் கக்ஷிகளுக்கிடையே ஒற்றுமை.

(டைம்ஸ் பத்திரிகை).

கிரீஸின் ராஜ்ய நிலைமையில் மாறுதல் காணப்படுகிறது. சென்ற சில மாதங்களாக தொந்தரவும் கவலையும் உண்டுபண்ணிய சிக்கல்கள் திருப்திகரமாகத் தீர்ந்து விட்டனவென்று நம்பக்கூடியதாகயிருக்கிறது.

M. ஸெளடரால் ராஜீனாமாச் செய்ததும் சகல விதமான ராஜீயக் கக்ஷிகளிடையவும், கொரில்லாப் படைகளுடையவும் பிரதிநிதிகளைச் சேர்த்துக்கொள்ளும் உத்தேசத்துடன் M. ஸோபகிளீஸ் வெனிஸீலாஸ் புதிய நிர்வாகத்தை அமைத்ததும் ராஜீய, ஜனசமூக கிளர்ச்சிகளைச் சாந்தப்படுத்தும் முறைகள், அயல்நாட்டாரின் ஆக்கிரமிப்பிலிருந்து பிராசீனமான ராஜீய அமைப்புக்கு ஆட்டம் கண்டுவிட்டது. மூன்று கோஷ்டிகளுக்கிடையே பலமான சச்சரவுகளும் உண்டாகிவிட்டன.

முதலாவதாக, அயல்நாட்டில் நிலைபெற்றிருக்கும் கிரேக்க நிர்வாகமும் அதன் உத்தியோகஸ்தர்களும் கிரீஸிலுள்ளவர்கள். அவர்கள் நாட்டின் உண்மையான நிலைமையை அறிந்துகொள்ளவில்லையென்று அவர்கள் பேரில் குற்றம் சாட்டுகிறார்கள். ஆகிலும் அவர்கள் மற்ற நேசதேசத்தாருடன் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டு கிரேக்கர்களின் சார்பாக மகத்தான சேவைகளைச் செய்து வருகிறார்கள். இரண்டாவதாக பழமையான அபிப்பிராயங்கள் கொண்ட அநேக ராஜீய வாதிகள் கிரீஸில் வசித்து வருகிறார்கள். அவர்களுக்கு ராஜீய அனுபவமிருந்தபோதிலும் கிரீஸின் அநேக பாகங்களில் அவர்களுக்கு மிகுதியான செல்வாக்கு இருந்தபோதிலும் அவர்கள் புதிய ராஜீயக்கொள்கைகளில் கலந்துகொள்ளவில்லையென்று அவர்கள்பேரில் கொரில்லாப்படைச் சங்கங்கள் குற்றம் சாட்டுகின்றன. மூன்றாவதாக, கொரில்லாப்படை சங்கங்கள் தேசிய விடுதலைக்காக உபயோகமுள்ள வேலையைச் செய்து வருகின்றன. கிரேக்க மக்களின் தேசிய லக்ஷியங்களின் பிரதிநிதிகள் அவர்கள்தானென்று அவர்கள் பாத்தியம் கொண்டாடுகிறார்கள்.

### மூன்று கொரில்லாப்படைக் கக்ஷிகள்.

கிரீஸில் மூன்று கொரில்லாப்படை சங்கங்கள் முக்கியமானவை. தேசிய விடுதலை முன்னணி (E. A. M.) ராணுவ அமைப்புள்ளது. கிரேக்க ஜனரஞ்சக விடுதலைச்சேனை (E. L. As.)யில் அநேகர்கள் சேர்ந்திருக்கிறார்கள். கிரேக்க ஜனநாயக விடுதலை சேனை (E. D. E. S.)க்கு கர்னல் செர்வாஸ் தலைமை வகிக்கிறார். எக்கா என்னும் ராணுவ ராஜீயப்பற்றற்ற சங்கத்திற்கு கர்னல் ஸாரோன் தலைவர்.

சமீப காலத்தில் (E.A.M.) சங்கம் தேசிய விடுதலை ராஜீய கமிட்டி (P. E. E. T.) என்ற ஐந்து பேர் கொண்ட ஒரு சிறிய கமிட்டியை அமைத்தது. "மலைகளின் கமிட்டி" என்று இதை பொது ஜனங்கள் அறிவார்கள். இந்தக் கமிட்டிக்கு அநேக வருஷமாக தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டிருந்த வெனிஸாலிட் கக்ஷியின் லெப்ட்விங்கைச் சேர்ந்த கர்னல் பாஸிக்ஜான் தலைவர்.

இந்த அங்கத்தினர்களில் ஒருவர் பொதுவுடைமைக் கக்ஷியைச் சேர்ந்தவர். M. ஸோடரான் ராஜீனாமாச் செய்தபின் புதிய நிர்வாகம் அமைக்கப்பட்டபொழுது (P. E. E. T.)

கமிட்டியார்கள் மற்ற ராஜீயக் கக்ஷிகளுடன் ஒத்துழைக்கவும் புதிய நிர்வாகத்தில் கலந்து கொள்ளவும் சம்மதித்துவிட்டார்கள்.

நமக்குக் கிடைத்திருக்கும் தகவல்களிலிருந்து கொரில்லாப்படைச் சங்கங்களின் பிரதிநிதிகள் மன்னருடனும் M. வெனிஸெலாஸுடனும் கலந்து ஆலோசனை செய்ய கெயிரோவுக்குப் போகிறார்களென்று தெரியவருகிறது. இப்பொழுது M. வெனிஸெலாஸிடமுள்ள நிர்வாக இலாகாக்களில் சிலவற்றை அவர்களிடம் ஒப்படைக்கவும் கூடுமென்று தோன்றுகிறது.

கிரீஸின் ராஜீயச் சிக்கல்கள் தீர்ந்து எதிரிகளை இறுதியில் முறியடிப்பதற்குத் தேவையான கிரேக்க ஒற்றுமை ஏற்படும் பக்ஷத்தில் கிரேக்க நண்பர்களெல்லாம் குதூஹலமடைவார்கள்.

பழைமையான ராஜீய பழக்க வழக்கங்களையும், ஐதீகங்களையும் புதிய நிலைமைக்கும் நூதனமான அபிப்பிராயங்களுக்கும் பொருத்துவதுதான் சிரமசாத்தியமான பிரச்னையாகும். இந்த ஏற்ற வித்தியாசங்களை மிதமான நோக்கத்துடனும் பகுத்தறிவுடனும் ஆராய்ச்சி செய்தால் சமரசம் ஏற்படக்கூடும். கிரீஸில் தற்போதிய ஜனசமூக நிலைமையில் இந்த வித்தியாசங்கள் பலமாகவும் வேரூன்றியும் நிற்கவில்லை.

---

## பின்லாந்தின் தவறு.

### ருஷ்யாவின் யுத்த நிறுத்த ஷரத்துக்களை பின்லாந்து நிராகரித்ததைப் பற்றி டைம்ஸ் பத்திரிகை.

யுத்தத்தை நிறுத்தவும், யுத்தத்திலிருந்து பின்லாந்து விலகிக்கொள்ளவும் ருஷ்யா அனுப்பிய ஷரத்துக்களை பின்னிஷ் நிர்வாகம் நிராகரித்துவிட்டது. ஜனங்களின் துயரத்தை ஒழிப்பதற்கும் சாச்வதமாகவும் கௌரவமாகவும் தேசீய சுதந்திரத்தைப் பெறவும் வாய்த்த சந்தர்ப்பத்தை பின்னிஷ் நிர்வாகம் உபயோகப்படுத்திக்கொள்ளவில்லையென்று எல்லோரும் துக்கிக்கிறார்கள்.

யுத்தத்தின் தற்போதிய நிலைமையில் பின்னிஷ் தலைவர்களின் புத்தியின்மையைப் போன்ற நடவடிக்கையை அந்த நிர்வாகமும் ஏற்றுக்கொண்டதென்பது துக்கிக்கக்கூடியது. இந்த விவாதங்களை நடத்தியதில் அவர்களிடம் கெட்ட எண்ணம் குடிகொண்டிருந்ததென்று நாம் சந்தேகிக்க வேண்டியிருந்தது. தற்போதிய பின்னிஷ் நிர்வாகத்தில் 1942-ம் வருஷம் ஜூன் மாதத்தில் ஹிட்லரின் வேண்டுகோளுக்கிணங்கி அவன் கக்ஷியில் சேர்ந்து போர் தொடுக்க முடிவு செய்ததற்குப் பொறுப்பாளிகளான, டான்னர் போன்ற அநேக மந்திரிகளிருக்கிறார்கள். அவர்களை உத்தியோகங்களிலிருந்து வெளியே துரத்தாமல் அவர்களுடன் பேரம் செய்ய ருஷ்யா முற்பட்டதென்பது கூடிய சீக்கிரத்தில் வழி கண்டுபிடிக்கவேண்டுமென்று ருஷ்யா விரும்பிற்று என்பதை வெளிப்படுத்துகிறது.

#### மிதமான ஆனால் தத்வமான ஷரத்துகள்.

இவ்வாரக் கடைசியில் அயல்நாட்டு உதவி மந்திரியான Mr. விஷின்ஸ்கி விவாதப் போக்கைப்பற்றியும் அதன் முடிவுகளைப்பற்றியும் வெளியிட்டிருக்கும் விருத்தாந்தத்திலிருந்து ருஷ்யர்கள் பின்லாந்து சம்பந்தமாக பொறுமையையும், மிதபுத்தியையும், நல்லுணர்ச்சியையும் காட்டியிருக்கிறார்களென்று தெரியவருகிறது. ஒவ்வொரு சிக்கலான கட்டத்திலும் ருஷ்யா பிரிடிஷ் நிர்வாகத்தின் ஆலோசனைகளைக் கேட்டுக்கொண்டு சில அம்சங்களில் அவர்களுடைய ஆலோசனையையும் ஏற்றுக்கொண்டது. அமெரிக்க நிர்வாகங்களும் தங்களுடைய அபிபிராயங்களையும் வெளியிட்டிருக்கிறார்கள். ஹெல்ஸிங்கியைத்தவிர மற்றெல்லா இடங்களிலும் இந்த ஷரத்துக்கள் மிதமானவை யென்றும் நிலைமைக்குரியதென்றும் மதிக்கப்படுகின்றன. 1940-ம் வருஷ உடன்படிக்கையை ஒட்டி சில தேசங்களின் புனரமைப்பு நடைபெறவேண்டும். ருஷ்யாவுக்கு ஏற்பட்ட நஷ்டங்களுக்கு பின்லாந்து ஈடு செய்யவேண்டும். ஜெர்மன் துருப்புகளை காவல்படுத்தவேண்டும் அல்லது நாட்டை விட்டு வெளியேற்றவேண்டும். மற்ற ஷரத்துக்களின்படி சமாதான கால அளவிற்கு பின்லாந்தின் துருப்புகளைக் குறைத்து பாக்கியைக் கலைத்துவிடவேண்டும்.

ருஷ்யா சம்பந்தப்பட்டமட்டில் அது ஹாங்கோவிலுள்ள அதனுடைய பாத்தியங்களை இழந்துவிடும். எந்தக் காலத்திலும் பின்லாந்தை ருஷ்ய ராணுவம் ஆக்கிரமிப்பதாக உத்தேசிக்கவில்லை. இறுதியாக பதிலுரைக்கும்பொழுது, ருஷ்யாவின் யோசனைகள் முக்கியமாக சில டெக்னிகல் காரணங்களைக்கொண்டு ஒப்புக்கொள்ள முடியாதவை என்றும் இந்த ஷரத்துக்கள் பின்லாந்தின் தேசீய சுதந்திரத்தைப் பாதிப்பதுடன் அதன் சக்திக்கு அதிகமான பளுவை அதன் பேரில சுமத்துகிறதென்றும் பின்னிஷ் நிர்வாகம் சொல்லிவிட்டது. பதிலைக் கவனிக்கு



மளவில் ஜனங்களுக்கு எவ்வித ஆபத்து நேரிட்டபோதிலும் தங்களுடைய முட்டாள்தனத்தை அவர்கள் விடப்போவதில்லை என்று தெளிவுபடுகிறது.

நாம் கண்டிப்பாய் சில முடிவுகளுக்கு வரக்கூடும். பின்லாந்தின் நிர்வாகிகள் பொது மக்களின் அக்கரையைப் பொருட்படுத்தாமல் ஜெர்மனியுடன் சேர்ந்து போர் புரியப் பிரியப்படுகிறார்கள். ஜனங்கள யுத்தத்தில் சோர்வடைந்துவிட்டார்களென்று தோன்றுகிறது. சமாதானம் அடையவேண்டுமென்ற எண்ணம் பலமாகவும் விரிவாகவும் காணப்படுகிறது. இதை அறிந்துதான் பிப்ரவரி மாதத்தில் பின்னிஷ் நிர்வாகம் சமாதானப் பேச்சுகளைத் துவக்கியது. இதைத் திருப்திகரமாக முடித்துக்கொள்ளுவதைவிட அதை முறியடிக்க அவர்கள் உபாயங்களைத் தேடிவந்தார்களென்பதற்கு ஏராளமான ருஜுக் கிடைத்திருக்கிறது.

#### பின்லாந்தில் நாஸிகளின் ஆதிக்கம்.

ஹெல்ஸிங்கியில் ஜெர்மனியின் பலாத்காரம் அதிகரித்துவிட்டது. ஜெர்மன் உதவிப் படைகள் பின்னிஷ் துறைமுகங்களுக்கும் இருப்புப்பாதை நிலயங்களுக்கும் அனுப்பட்டிருக்கின்றன. ஜெர்மனியின் ஆலோசனைகள் கவனிக்கப்படுகின்றன. அங்கிருக்கும் பாஸிஸ்டு கக்ஷிக்காரர்கள் நடவடிக்கைகளைத் துவங்கத் தயாராகயிருக்கிறார்கள். யுத்த ஆர்வமுள்ள கக்ஷிகள் மாஸ்கோவின் ஷரத்துகளை நிராகரித்ததன்மூலம் வெற்றிபெற்றுவிட்டன. இதன் பயனை மற்றவர்கள் அனுபவிப்பார்கள். விவாதத்திற்குப் பதிலாக கடுமையான வருந்தத்தக்க நடவடிக்கைகள் கையாளப்படும். சரியான சமயத்தில் சமாதான யோசனைகளைவிடுக்க முன் வருவாரென்று நினைத்திருந்த பீல்ட் மார்ஷல் மானர்ஹீம் பொதுமக்கள் அதிகமான தியாகங்களைச் செய்யவும் கடுமையான நடவடிக்கைகளுக்கும் தயாராகயிருக்கவேண்டுமென்றும் ஒரு பிரகடனம் வெளியிட்டிருக்கிறார். எதிர்காலம் மிகவும் கடுமையாக இருக்கும் இந்த நடவடிக்கையை மேற்கொண்டால் பின்லாந்து அதிக கஷ்ட நஷ்டத்துக்குள்ளாகும். இப்பொழுதிருக்கும் நிர்வாகத்தினிடமிருந்து பின்னிஷ் மக்கள் சுபிக்ஷமான எதிர்காலத்தை எதிர்பார்க்கமுடியாது. இப்பொழுதும்கூட மற்றவர்கள் இந்த அழிவைத் தடுத்துவிடக்கூடும்.

---

## வின்கேட் பார்த்தவேலையில் ஜெனரல் லெண்டெய்னி அமர்ந்திருக்கிறார்.

(டைம்ஸ் பத்திரிகை).

அட்மிரல் மௌண்ட் பேடனின் உதவி தளபதியான ஜெனரல் ஸ்டில்வெல்லின் படை வடக்கிலிருந்து முன்னேறி வருவதுடன் சேர்ப்பதால் ஜெனரல் வின்கேட் போட்ட திட்டம் அவர் இறந்தபின் மாறுதலடையவில்லை என்பது ஜெனரல் லெண்டெய்னியை நியமித்ததிலிருந்து வெளிப்படத் தெரிகிறது.

நமக்குக் கிடைத்துள்ள சொற்ப சமாசாரத்திலிருந்து, சிண்டிட் படைப்பகுதிகள் எதிரிகளின் போக்குவரத்துகளை மிகவும் நாசப்படுத்தின என்பது தெரிகிறது. நமது விமானங்கள் ஜப்பானியர்களுக்கு வெகுதூரமான மித்கினா, மொகாங் முதலிய இடங்களின் தளங்களில் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இருப்பினும் மலைப்பாங்கான பிரதேசத்தில் சரியான விமானமிறங்குமிடத்தையும் பிடித்திருக்கின்றனர் என்பது மட்டும் நிச்சயம்.

இந்த நடவடிக்கைகள் மழையுடன் போட்டிபோட்டு நடத்துவதாக இருக்கிறது. ஆனால் காலநிலை மாறுபட்டு சாதகமாக இருக்கும் காலத்தில் நேசதேச வெற்றிகள் இம்பால், கொஹிமா ஆகிய இடங்களில் வெற்றி அடைந்து மேம்பட்ட தளவாடங்களோடு எதிர்ப்பு ஏற்பட்டால் தோல்வியுறும்படியான ஜப்பானியர்களின் வெற்றியைவிட மேம்பட்ட வெற்றியாயிருக்கும் என்பதில் ஐயமில்லை. நாம் அடைந்த நஷ்டங்களைவிட ஜப்பானியாகள் பர்மாவில் மிகவும் அதிகமான நஷ்டத்தை அடைந்துள்ளார்கள்.

ஜெனரல் லெண்டெய்னி, சிண்டிட்களின் தலைவராய், வின்கேட்டின் மனப்பான்மையுடையவராய் அவரின் திட்டங்களின்படியே இப்போது நடவடிக்கைகள் நடத்துகிறார். நான்காம் கூர்க்கப் படையைச் சேர்ந்த இந்த சேனையைச் சேர்ந்தவர் பர்மா யுத்தத்தில் போரிட்டு D. S. O. பட்டத்தை அடைந்தவர்.

---

## ஸுமத்ரா படையெடுப்பின் முக்கியத்வம்.

சுமத்ராவின் வட எல்லையிலுள்ள புலோவே என்ற தீவிலுள்ள ஸபாங் தளத்தை மிகவும் வெற்றிகரமாய் தாக்கிய விஷயம் கிழக்கு யுத்த அரங்கங்களில் நடக்கும் போரில் ஒரு புதிய மாறுதலை ஏற்படுத்தியுள்ளது.

இதுவரையிலும் அமெரிக்க கடற்படையே ஜப்பானியர்களை எதிர்த்து நேசதேச கடற்படைத் தாக்குதல்களை புரிந்து வந்தது. இந்த வெற்றிகரமானது சரியாய்த் திட்டம் போடப்பட்டதுமான தாக்குதலுக்குப் பின் பிரிடிஷ் கிழக்கு கடற்படை, நன்றாய் பலப்படுத்தப்பட்டு

ந்துமஹா சமுத்திரத்தில் இறங்கி முக்கியமான பெரும் போர்களை நடத்திவருகிறது தென் கிழக்கு ஆசியா கமாண்ட் தலைமை ஆபீஸை அட்மிரல்மௌண்ட் பாடன் சிலோனிற்கு மாற்றிய 4 நாட்களுக்குப் பிறகு செய்த இந்தத் தாக்குதல்கள் ஜப்பானியர்களைத் திடுக்கிடச்செய்தன.

எதிரி தளத்தின்மேல் செய்த தாக்குதல்கள் எதிரிக்கு மிகவும் நாசத்தை உண்டு பண்ணியிருக்கவேண்டும். 4 பெருங் கப்பல்கள் தீக்கிரையாயின. 22 எதிரி விமானங்கள் ஸுமத்ராவிலுள்ள லோங்கா விமான நிலயத்தில் நாசமாக்கப்பட்டன. அடுத்தாற்போல் நமக்கு ஒரு விமானந்தான் நஷ்டம். அதன் விமானியும் நமது ஸப்மரீன்களின உதவியால் மிகவும் தந்திரமாய்க் காப்பாற்றப்பட்டிருக்கிறார்.

### எதிரி வாபஸ்.

இந்த முக்கியமான யுத்த அரங்கத்திலும், மலாக்கா ஜலஸந்தியிலும் ஜப்பானியக் கப்பல்கள் இல்லாமல் இருப்பது குறிப்பிடத்தக்க விஷயம். இதனின்றும் எதிரிகள் தங்களிடத்திலுள்ள கப்பல்களை வாபஸ் வாங்கிக்கொண்டு, அவைகளை அவைகளிடத்திலுள்ளபடைகளையே உபயோகித்து தற்காத்துக்கொண்டும், இன்னும் கிடைக்கும் விமானங்களாலும் ஜப்பானியர்கள் தற்காத்துக்கொள்ளுமாறு விடுத்திருக்கின்றனர்.

ஸபாங்கை இத்தாக்குதலுக்கு முதலிடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதே இன்னும் முக்கியமான விஷயமாகும். சிங்கப்பூருக்கு செல்லும் குறுக்கான பாதையில் உள்ளது ஸபாங். மலேயா அந்தமான் முதலிய இடங்களை நோக்கியோ, அல்லது முக்கியமான ஸுமத்ராவை நோக்கியோ செல்லும் நேசதேசப் படைகள் இதனைத்தாண்டினால் கஷ்டம் ஏற்படும். எனவே இத்தீவு முதலில் தாக்கப்பட்டது: இதனை தாக்கியதினின்றும், இந்துமஹா சமுத்திரத்தில் தங்களை தற்காத்த நிலைமை மாறி தாக்குதலில் முனைந்திருப்பதை வெளிப்படுத்துகிறது. ஏற்படவிருக்கும் மான்ஸுன் மழைகளினால் இண்டோ பர்மா எல்லைப்புறங்களில் பெரும் நடவடிக்கைகள் நடத்தாவிட்டாலும், "தென் சமுத்திரத்தில்" இதர பாகங்களில் நடவடிக்கைகள் நடக்குமெனபது மட்டும் நிச்சயம்.

எதிர்த்து நிற்கும் தீவுகளில் நேசதேசத்தினர் இலக்காக உபயோகப்படுத்தும் பலம் மிகவும் பலஹீனமாயிருக்கின்றன. பல, பலப்படுத்தப்படமுடியாமல் இருக்கின்றன. இந்த தைரியமானதும் வெற்றிகரமானதுமான விமானத் தாக்குதல் வெறும் விளையாட்டு நடவடிக்கை அல்ல. பலமான பெரும் நடவடிக்கைகளுக்கு முற்போக்காகும்.

---

## ஸியாமின் அழுகைக் குறல்.

மலேயா, டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் போன்ற நாடுகளில் மிலியன்கள் கணக்கான ஜனங்கள் பசிப்பிணிக்குள்ளாகும் தருவாயிலிருக்கும்பொழுது, ஒரு மிலியன் டன்கள் எடைமானமுள்ள அரிசியை எவ்விதம் விநியோகம் செய்வதென்று ஸியாம் முழித்துக்கொண்டிருக்கிறது. ஜப்பானின் சாமான் கப்பல்களின் நஷ்டத்தை ஈடுசெய்ய மரக்கலங்கள் ஏராளமாகக் கட்டப்பட்டு வந்தபோதிலும் ஜாவாவுக்கும், சிங்கப்பூருக்கும்கூட அரிசியை ஏற்றிச் செல்ல கப்பல்கள் கிடைப்பதறிதாகி விட்டது. இந்த நெருக்கடியின் பயனாக ஸியாம் நாணயத்தின் செலாவணிக்கு மதிப்புக் குறைந்துவிட்டது.

ஏப்ரல் மாதம் 6-ம் தேதியன்று பாங்காக் ஒலிபரப்பில் பொதுமக்கள் ஆயாசமுமடைந்து தோல்வி மனப்பான்மையுமடைந்து விட்டார்களென்று சொல்லப்பட்டது. ஸியாமியப் பொருளினால் சொல்பமான சாமான்களைத் தான் வாங்க முடிகிறதென்பதையும் எல்லா சாமான்களின் விலைவாசியின் அதிகரிப்பையும் கண்டு ஒவ்வொருவரும் அதிருப்தியடைந்துவிட்டார்களென்றும் சொல்லப்பட்டது. செலாவணியின் மதிப்பு மிகவும் குறைந்துவிட்டதால் அது இனிமேல் நிலைபெற்றிருக்க முடியாது. விலைவாசிகள் உத்தம பக்ஷத்திற்கும் நோட்டுகள் உபயோகமற்ற காகிதமாக ஆகும் வரையிலும் உயர்ந்துவிடுமென்று ஜனங்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டது. இதிலிருந்து தேசத்தில் பொருளின், குறைவு ஏற்பட்டுவிட்டதென்று பொருள்படும்.

அரசாங்கத்தார் பழைய நோட்டுகளின் உபயோகத்தை நிறுத்திவிட்டு புதிய நோட்டுகளை அச்சுப் போடுவார்களென்ற பீதியிருந்தது. ஜப்பானிலிருந்தும் மற்ற எந்த இடத்திலிருந்தும் இறக்குமதி கிடையாதென்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. ஏராளமான அரிசி மீதமிருக்கிறதைக் கண்டு அரசாங்கம் கஷ்டப்படுகிறதென்றும் அரிசியை விற்பனை செய்ய அரசாங்கத்தார் ஏற்பாடு செய்யக்கூடவில்லையென்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. உபரியாக 1 மிலியன் டன்கள் எடைமானமுள்ள அரிசியிருந்த போதிலும் அரிசியின் விலை அதிகரித்துக் கொண்டே போகிறது. அவைகளை மாகாணங்களுக்கு அனுப்பிவிடுவதென்ற நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்ட பின் அதன் செல்வாக்குக் குறைந்துவிட்டதென்பதை இது வெளிப்படுத்துகிறது. இந்த நெருக்கடியை உத்தேசித்துத்தான் அரசாங்கம் பெச்சாபுனி



புதிய தலைநகரத்தை அமைத்தது போலிருக்கிறது. இந்த நடவடிக்கை பரம ரகஸியமாக வைக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் பாங்காக்கிலில்லையென்றும் ஸியாமுக்குத் தலைநகரமில்லையென்றும் அரசாங்கம் சொல்லி நிறுத்திவிட்டது. இதே சமயத்தில் பாங்காக் ஒலிபரப்பு மூலம் அரசாங்கத்தார் ஒழுங்கு முறையையும், ஐக்கியதையும், சகிப்புத் தன்மையையும், புத்திசாலித் தனத்தையும் பரிபாலிக்க வேண்டுமென்றும் ஜனங்களுக்கு எச்சரிக்கை செய்யப்படுகிறது. பலமுள்ள சோல்ஜர்களைத் தயாரிக்க உறுதியுள்ள குழந்தைகளை உண்டுபண்ணவேண்டுமென்றும் வற்புறுத்தப்படுகிறது. அநியாய விலைக்கு சாமான்களை விற்கும் வியாபாரிகள் நிந்திக்கப்படுகிறார்கள். ஸியாமில் அகாலத்தில் பலமான மழை பெய்ததென்றும் சொல்லப்பட்டது. பசிபிக் யுத்தம் துவங்கி, பின் நிர்வாகத்திற்கு எதிர்ப்பு பலப்பட்டுவிட்டதென்றும் அதின் எதிரிகள் அதிகரித்து தேசமெங்கும் பரவியிருக்கிறார்களென்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. அவர்கள் எதிரியின் சாரர்கள் என்றும் அவர்கள் பேரில் குற்றம் சாட்டப்பட்டது.

---

## ஸ்பிட்பையர் மார்க் XII.

### தாழப்பறந்து செல்லும் சண்டை விமானம்.

(டெயிலி மெயில்).

யுத்த அவசியத்துக்கும் சமாதான காலத்துக்கும் பொருந்தும்படியாக பிரிடிஷ் விமான உற்பத்தி திட்டங்கள் முதல் முதலாகப் போரில் ஈடுபட்டிருக்கும் ரோல்ஸ் ராய்ஸ் கிரிப்பான் என்ஜினுள்ள விமானங்கள் மூலம் வெளி வந்திருக்கின்றன.

இந்த விமானங்கள் ஸ்பிட்பையர் ரகத்தைச் சேர்ந்தவைகள். இதுதான் ஸ்பிட்பையர் மார்க் XII.

இப்பொழுது பிரிடனில் ஒரு மட்டத்தில் மணிக்கு 450 மைல்கள் பறந்து செல்லக்கூடிய சண்டை விமானங்களிருக்கின்றன. இவைகளும் டெம்பஸ்ட் என்ற சண்டை விமானங்களும் வெகு உயரத்தில் ரக்ஷணையளிக்கவும் போர் புரியவும் லாயக்குள்ளவை.

ஸ்பிட்பையர் XII என்ற விமானம் குறைவான உயரத்தில் உபயோகமுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள சக்திபெற்றது. இதில் அநேக புதிய ஏற்பாடுகள் காணப்படுகின்றன. சுருக்கிக்கொள்ளக்கூடிய வால்பக்கத்திலுள்ள சக்கரமுள்ள ஸ்பிட்பையர் விமானம் இப்பொழுதுதான் கட்டப்பட்டிருக்கிறது. இந்த சாதனம் விமான அமைப்பின் அழகை அதிகரித்து விடுவதுடன் அதன் வேகத்தையும் ஜாஸ்தியாக்கி விட்டது. அதிலிருக்கும் கிரிப்பான் என்ஜினின் சக்தியை உபயோகப்படுத்திக்கொள்ள அதில் நான்கு அங்குலமுள்ள ரோடொல் புரொபெல்லர் இருக்கிறது. விமானத்தின் கூடு கனமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன் கட்டப்பட்ட ஸ்பிட்பையர் விமான ரகத்தைப்போல் இதிலும் இறக்கைகள் நுனியில் குறைக்கப்பட்டிருப்பதால் அதன் வேகமும் சலன சக்தியும் அதிகரித்திருக்கிறது.

இந்தப் புதிய சண்டைவிமானம் தரையிலிருந்து நடவடிக்கை துவக்கப்படவேண்டிய உயரத்திற்கு ஒரு நொடிப்பொழுதில் கிளம்பிவிடும். இந்த வசதியானது வெடிவிமானங்களை வழிமறிப்பதற்கும் சேனையுடன் ஒத்துழைப்பதற்கும் சௌகரியமளிக்கும்.

மாஸ்டாங் சண்டை விமானங்களைக்கட்டிவரும் அமெரிக்கர்கள் ரோல்ஸ்ராய்ஸ் மெர்லின் என்ஜினை உபயோகித்ததுபோல் கிரிப்பான் என்ஜின்களையும் உபயோகிக்கக்கூடும்.

பிரிடிஷ் விமானப்படையின் போக்குவரத்துப் பகுதி அமெரிக்க விமானங்களின் மூலம் மாதாமாதம் 3 மிலியன் மைல்கள் தூரம் பிரயாணிகளையும் சாமான்களையும் ஏற்றிச்செல்லும் விமானங்கள் மூலம் கடந்து செல்லுகிறது. மற்ற பாதி அட்லாண்டிக் கடல் தாண்டியும் மற்ற இடங்களிலும் செல்லும் விமானப் படையினால் கடந்து செல்லப்படுகிறது. பிரிடனிலிருந்து நாலாபக்கமும் செல்லும் மார்க்கங்கள் 20,000 மைல்கள் வரையில் பரவியிருக்கின்றன. இந்தப் போக்குவரத்துக்கு நான்கு எஞ்சின்களுள்ள லிபரேடர் விமானங்களும் இரண்டு மோட்டார் உள்ள டாகொடா விமானங்களும் உபயோகப்படுகின்றன.

---

## "கக்கூ, கக்கூ" என்ற சப்தம் ஹிட்லரின் பிறந்தநாள் கொண்டாட்ட தினத்தின்போது ஒலிபரப்பியபோது அந்த ஒலிபரப்பின் இடையே கேட்டது.

(டெயிலி டெலகிராப்).

லக்ஸம்பர்க் ஒலிபரப்பில் நேசதேச விமானங்களுக்கு தவியாய் யோசனையின்றி ஹிட்லரின் 55-ம் வருஷப்பிறப்பில் சில வேடிக்கையான, சம்பவங்களை நடத்தின.

ஹிட்லரின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கென தனியாய்க் குறிக்கப்பட்ட நிகழ்ச்சிகளை ஜெர்மனியிலிருந்து அஞ்சல் செய்தபொழுது லுப்ட்வாப் படையைச் சேர்ந்த லெப்டி

னெண்ட் கர்னல் கிராப் என்பவர் மிகவும் உற்சாகமாய் ஹிட்லருடன் தான் சந்தித்ததைப்பற்றி பேசும்போது, நேசதேச விமானங்கள் வருவதை தெரியப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

தவறுதலாகவோ அல்லது வேண்டுமென்ரோ, ரேடியோ திருகுபவன் இடையே "கக்கூ, கக்கூ" என்ற சப்தத்தை உண்டாக்கினன்.

பின்வரும் விஷயம் நடந்தது. கர்னல் கிராப் பின்வருமாறு கூறினர். "ஜெர்மனியின் சரித்திரத்திலேயே பெரியவரான ஹிட்லருடன் நேரில் பேசும் அதிர்ஷ்டம் கிடைத்தவர்களுக்கு" என்று கூறும்போது இடையில் கக்கூ, கக்கூ என்ற சப்தம் கேட்டது. கர்னல் கிராப் அவரை அறிவார். அப்போதும் கக்கூ, கக்கூ என்று சப்தம் ஏற்பட்டது.

இப்போது ஒலிபரப்பு மாற்றப்பட்டது. மூச்சற்ற ஒரு ஒலிபரப்பாளன் ஒலிபரப்புக்கருவி முன் வந்து "நேசதேச விமானங்கள் நெருங்கி வருவதால் ரேடியோவை நிறுத்துகிறேம்" என்று சொன்ஞன்.

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறேம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 197 (1-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 13- 5-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 17- 5-44 | பூங்குடி. | ... மாலை | 7.00 |
| 14- 5-44 | கீரனூர் | ... ,, | 7.00 | ,, | சத்தியமங்கலம் | ... ,, | 7.30 |
| ,, | நாஞ்சூர் | ... ,, | 7.30 | 18- 5-44 | மிரட்டுநிலை | ... ,, | 7.00 |
| 15- 5-44 | பூவரசகுடி | ... ,, | 7.00 | ,, | அரிமளம் | ... ,, | 7.00 |
| ,, | வேங்கடகுளம் | ... ,, | 7.30 | 19- 5-44 | உடையாளிப்பட்டி | ... ,, | 7.00 |
| 16- 5-44 | பெருங்களூர் | ... ,, | 7.00 | ,, | கிள்ளுகோட்டை | ... ,, | 7.30 |
| ,, | ஆதனக்கோட்டை | ... ,, | 7.30 | | | | |

### பிரஸங்கம் 198 (2-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 20- 5-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 24- 5-44 | குழிபிறை | ... மாலை | 7.00 |
| 21- 5-44 | குடுமியாமலை | ... ,, | 7.00 | ,, | செவலூர் | ... ,, | 7.30 |
| ,, | பரம்பூர் | ... ,, | 7.30 | 25- 5-44 | களமாவூர் | ... ,, | 7.00 |
| 22- 5-44 | வெங்களூர் | ... ,, | 7.00 | ,, | நல்லூர் | ... ,, | 7.30 |
| ,, | கோனுபட்டு | ... ,, | 7.30 | 26- 5-44 | பனையப்பட்டி | ... ,, | 7.00 |
| 23- 5-44 | நச்சாந்துபட்டி | ... ,, | 7.00 | ,, | ராங்கியம் | ... ,, | 7.30 |
| ,, | விராச்சிலை | ... ,, | 7.30 | | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 13—5—44 | வெட்டன்விடுதி. | 20—5—44 | பொன்னமராவதி. |
| 14—5—44 | விராச்சிலை. | 21—5—44 | தீத்தான்விடுதி. |
| 16—5—44 | கோனுபட்டு. | 23—5—44 | வடகாடு |
| 17—5—44 | கரம்பக்குடி. | 24—5—44 | ராயவரம். |
| 18—5—44 | குழிபிறை. | 25—5—44 | கீழாநிலை. |
| 19—5—44 | புதுக்கோட்டை. | 26—5—44 | பாப்பாபட்டி. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—16-5-44.


# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம் ஞூ மேமீ 20உ [ந. 198


தேசீய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறர். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CXCVIII.

## கணக்கு முடித்துக்கொள்ளும் காலம் நெருங்கிவிட்டது.

(டைம்ஸ் பத்திரிகை).

தூரக்கிழக்கில் ஜப்பானை உறுதியுடன் நெருங்கிவரும் நடவடிக்கை பலமாக முன்னேற்றமடைந்துவருகிறது. ஐரோப்பாவிலும் கணக்கு முடிக்கும் காலம் சமீபித்துவிட்டது.

பிரிடனிலிருந்தும், இதாலியிலிருந்தும் நடைபெறும் விமானத்தாக்குதல் உன்னத ஸ்திதியை அடைந்துவிட்டது. வரப்போகும் வாரங்களில் இது இன்னமும் அபிவிருத்தியடையும்.

நீர்மூழ்கிகளைப் பலமாகத் தாக்கும் ஆடம்பரமற்ற நடவடிக்கைகள் வெற்றிகரமாக நடைபெறுகின்றன. ஐரோப்பா பூராவையும் ஆக்கிரமித்திருக்கும் நாஸிப் படைகளை மகத்தான முறையில் தாக்க நேசதேசத்தார் நிறுவியிருக்கும் திட்டங்கள் பூர்த்தியாகி வருகின்றன. இந்த யுத்தத்தில் மிகவும் சிறந்த நடவடிக்கையான ருஷ்ய முன்னேற்றத்தில் ஓய்வு காணப்படுகிறது. இந்த முன்னேறித்தாக்கும் போர் சென்ற ஜூலை மாதத்தில் ஜெர்மனி குர்ஸ்க்கைத் தாக்கி தன்னுடைய சக்தியை இழந்துவிடும் வரையில் ருஷ்ய சேனைத் தலைவர்கள் காத்திருந்தபின் துவக்கமாயிற்று. இந்த முன்னேற்ற யுத்தம் இலையுதிர்கால பருவ மழையிலும், மாரிகாலத்திய கடுங் குளிரிலும் பனியிலும், வசந்த காலத்தில் பனி உருகியபொழுதும் பரிஷ்காரமாக நடைபெற்றது. ருஷ்யர்கள் ஏராளமான பிரதேசங்களைக் கைப்பற்றியிருக்கிறர்கள். ஒரு புறத்தில் பழைய ருஷ்ய எல்லைச் சரகத்தையும் ருஷ்யப் படை தாண்டிவிட்டது. மற்றொரு பக்கத்தில் ஜெர்மனியின் ஆதீனத்துக்குட்பட்ட ஒரு தேசத்தின் எல்லைச் சரகத்தையும் அது கடந்துவிட்டது. ஜெர்மன் சேனைக்கு அது அபார நஷ்டம் உண்டுபண்ணியிருக்கிறது. ருஷ்யப் போரில் தெற்குப் பாதியில் போர் புரிந்த ஜெர்மன் படைகளின் பாதிபாகம் அழிக்கப்பட்டுவிட்டது. எதிரிக்குச் சொந்தமான போக்குவரத்து தளவாடங்களை ஏராளமாக அது கைப்பற்றியிருக்கிறது. எதிரியிடம் ஆதிக்யமிருந்ததுபோக இப்பொழுது அவன் சாமான்களுக்குத் திண்டாடுகிறன்.

ருஷ்யப் போர்முனையில் ஓய்வு ஏற்பட்டதற்கு எதிரியின் எதிர்ப்பு காரணமில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. (1) கார்பேதிய மலைகளிலுள்ள பனி உருகிவிட்டது. (2) வெகுதூரம் பரிசிரமப்பட்டு முன்னேறியிருப்பதால் புதிய தாக்குதல்களைத் துவக்குமுன் படைகளைத் திருத்தியமைக்கவும் புதிய முஸ்தீப்புகளைப் பெறவும் அவசியமேற்பட்டிருக்கிறது. அடுத்தபடியாகத் தாக்குதல் எங்கு நேரிடுமென்று முன்கூட்டிச் சொல்லுவது சாவதானமில்லை.

பிரிபெட் சதுப்பு நிலங்களுக்கு வடக்கிலும், கார்பேதிய மலைகளுக்கும் டான்யூப் நதிக்கு மிடையில் ருஷ்யாவுக்கு முக்யமானதும் ஜெர்மானியருக்கு அத்யாவசியமானதுமான லக்ஷியங் களிருக்கின்றன. பிரிபெட் சதுப்பு நிலங்களுக்கு இருபக்கத்திலும் நடைபெறும் போர் சிறந்த லாபங்களை அளிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ருஷ்யாவின் பலம் அதிகமாக யிருப்பதால் இதைவிட அதிகமான நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்ளலாம். இன்னும் அநேக மகத்தான தாக்குதல்களும் ருஷ்யாவின் நேசதேசத்தாரின் திட்டங்களுக்கு அனுகுண மாகவே நடைபெறுமென்பது நிச்சயம்.

ருஷ்யப் போர்முனையில் ஓய்வு ஏற்பட்டிருப்பதால் பிரிடிஷ் அமெரிக்க விமானப்படை யின் தாக்குதல் அதிகரித்துவிட்டது. அமெரிக்க வெடிவிமானங்களின் பகல் நடவடிக்கை துரிதமாக அதிகரித்து வருகிறது. வெகுதூரம் செல்லும் வெடி விமானப்படைக்கு சக்தி யுள்ள சண்டை விமானங்களின் துணையை அமைத்துவிட்டபடியால் விமானப்படையில் நிலைமை மேன்மையை அடைந்துவிட்டதென்று சொல்லலாம். நீண்ட கால யுத்த திட்டத்துக் குறிய தாக சமீப காலத்தில் ரேடியோ லொகேடர்களை உண்டுபண்ணும் தொழிற்சாலைகளும் டிரோ ணியர் விமானங்களைக் கட்டும் தொழிற்சாலைகளும் தாக்கப்பட்டன. அதை விட பிரான்ஸி லுள்ள ஜெர்மன் போக்குவரத்து மார்க்கங்களும் பலமாகத் தாக்கப்படுகின்றன.

சமீப காலத்தில் எதிரி பகல் காலத்தில் போர் தொடுக்க முன் வருகிறதில்லை. இதைவிட முக்கியமான சமயங்களில் அவைகளை உபயோகிக்க ஜெர்மனி விமானங்களை பத்திரப்படுத்தி வருகிறதென்று அவருடைய பிரமுகர்கள் பீத்திக்கொள்ளுகிறார்கள். இந்தப் பேச்சிலும் சிறிது உண்மையிருக்கிறது. ஆகிலும் இது ஏழ்மைத் தனத்தைக் காண்பிக்கிறது. பலமான நெருக்கடி ஏற்பட்டிருந்தால்தான் இந்த தந்திரத்தைக் கையாள முகாந்திரமிருக்கிறது. ஜெர்மனியிடமிருக்கும் சண்டை விமான பலத்தை சமீப எதிர்காலத்தில் நாம் ஒழிக்கவேண்டும். ஆகிலும் இப்பொழுது ஜெர்மன் விமானப்படை அமெரிக்க விமானங்களின் பகல் தாக்குதலை சமாளிக்கத் துணிந்துவிடாது. இப்பொழுது அதற்கு பலமான நஷ்டம் விளைவிக்கப்படு கிறது. முக்யமாக இருப்புப் பாதை ஜங்ஷன்களும், ரெயில்வண்டித் தொடர்கள் நிற்குமிடங் களும் தாக்கப்படுகின்றன. அநேக தடவைகளில் தாக்கச்செல்லும் பறக்கும் கோட்டை விமானங்களுக்கு எதிர்ப்பே ஏற்படுகிறதில்லை.

இன்னும் மகத்தான சம்பவங்கள் நடைபெறப் போகின்றன. புத்திசாலியான எந்த உற்று நோக்காளரும் எதிர் காலத்தில் அனுபவிக்கவேண்டிய சிரமங்களையும் செய்யவேண்டிய தியாகங்களையும் குறைத்துக்கூற முடியாது. மகத்தான நீண்ட கால யுத்தத்தில் தாத்காலிக மாக பிற்போக்குகளும் திருப்தியில்லாத சிறிய சம்பவங்களும் நடைபெறக்கூடுமென்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. ஜெர்மானியர்கள் கடும்போரை நடத்துவார்கள். அவர்களுடைய ராணுவ சாமர்த்தியம், யுத்த தளவாடங்கள், அரண்கள் அனுகூலமளிக்கக்கூடிய வகையில் நேசதேசத்தாரின் வேலைகளை கஷ்ட சாத்யமாகவும், அபாயத்துக்குட்பட்டதாகவும் அவர்கள் செய்து வருவார்கள். ஆகிலும் சந்தர்ப்பத்துக்கேற்றவாறு நேசதேசத்தாரின் சாதுர்யமும் ஊக்கமும் அதிகரித்துவிடும். வரப்போகும் நடவடிக்கைகளில் வெற்றி நிச்சயமென்று அவர்கள் பூர்ணமான நம்பிக்கையுடனிருந்து வருகிறார்கள். எதிரிக்கு நாசம் ஏற்படும்படியான நடவடிக்கைகளைத் துவக்க அவர்கள் தகுதியான நிலைமையை அடைந்திருக்கிறார்கள்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 9—5—44 (செவ்வாய்க்கிழமை). | ருஷ்யப்படை ஸெபாஸ்டபூலைப் பிடித்தது. ருஷ்யர்கள் கிரிமியா பூராவையும் சுத்தி செய்துவிட்டார்கள். 2,000 நேசதேச விமானங்கள் ஹிட்லரின் ஐரோப்பியக் கோட்டையைத் தாக்கின. நேசதேசப் படைகள் அஸ்ஸாம் போர்முனையின் எல்லா பகுதிகளிலும் முன்னேறுகிறார்கள். |
| 10—5—44 (புதன்கிழமை). | நேசதேசப் படைகள் கிழக்கு இதாலியில் பாலெனுவை ஆக்கிரமித்தன. |



### (A)-முக்கியமான சம்பவங்கள்—தொடர்ச்சி.

| | |
|---|---|
| 11—5—44 (வியாழக்கிழமை). | நேசதேச வெடி விமானங்கள் ஹிட்லரின் ஐரோப்பாவைத் தாக்கின. |
| 12—5—44 (வெள்ளிக்கிழமை). | நேசதேசப் படைகள் இதாலியில் முன்னேறித் தாக்க ஆரம்பித்தன. யுத்தத்திலிருந்து விலகிக்கொள்ளும்படி ஹங் கேரி, ருமேனியா, பல்கேரியா, பின்லாந்து முதலிய நாடுகளுக்கு நேசதேசத்தார்கள் இறுதி எச்சரிக்கை அனுப்பியிருக்கிறார்கள். |
| 13—5—44 (சனிக்கிழமை). | 2,000 நேசதேச வெடி விமானங்கள் ஐரோப் பாவில் எண்ணெய் உற்பத்தி செய்யும் நிலயங்களைத் தாக்கின. நேசதேசப் படைகள் இதாலியில் ஸான் ஸபாஸ்டினோ, வெண்டோஸா, ஸான் ஆன் ஜெலோவைப் பிடித்தன. |
| 14—5—44 (ஞாயிற்றுக்கிழமை). | நேசதேசப் படைகள் இதாலியில் கஸ்டாவ் அரணைப்பிளந்தன. |
| 15—5—44 (திங்கட்கிழமை). | சீனப்படைகள் சால்வீன் நதியை 100 மைல் நீளத்திற்குத் தாண்டிவிட்டார்கள். நேசதேசப் படைகள் இதாலியில் ஆஸோனி யாவைக் கைப்பற்றினார்கள். |
| 16—5—44 (செவ்வாய்க்கிழமை). | நேசதேசப் படைகள் ஸ்பிக்னோ, ஸான் ஜியார் ஜியா, காஸ்டெல் நூவோ முதலிய இடங் களைப் பிடித்தன. |
| 17—5—44 (புதன்கிழமை). | சாம்ராஜ்ய பிரதம மந்திரிகளின் மகாநாடு முடிவடைந்தது. யுத்தத்திலும் சமாதான காலத்திலும் மற்ற தேசங்களுடன் பூர்ண மாக ஒத்துழைப்பதென்று அது முடிவு செய்திருக்கிறது. |

### (B)-செய்திச் சுருக்கம்.

**ருஷ்யா.**—கருங்கடலிலுள்ள முக்கிய தளமான ஸெபாஸ்டபூல் விழுந்துவிட்டது. இங்கு ஜெர்மானியர் போர் புரிந்ததில் 20,000 பேர்கள் உயிர் துறந்தார்கள். 24,361 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

கிரிமியா பூராவும் சுத்தி செய்யப்பட்டது. கிழக்குப் போர் முனையில் புதிய தாக்குதலைத் துவக்க வசதி ஏற்பட்டிருக்கிறது.

**இதாலி.**—இந்த வார ஆரம்பத்தில் ஜெர்மானியர்கள் நேசதேசத்தாரின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் இதாலியின் குறுக்கே செல்லும் ரஸ்தாவின் மேலுள்ள பாலெனு, லெட்டோ பாலெனு என்னும் இடங்களிலிருந்து பின்வாங்கினார்கள். அதற்குப்பின் நேச தேசத்தார்கள் பத்து மைல்கள் முன்னேறி 50 சதுர மைல்கள் கொண்ட பிரதேசத்தை வியாபித்து விட்டார்கள்.

5-ம் படையும், 8-ம் படையும் கஸ்டாவ் கோடு என்னும் ஜெர்மன் தற்காப்புகளைத் தாக்கத் துவக்கியிருக்கிறார்கள். தென் மேற்கிலுள்ள கெயிடா வளைகுடாவிலிருந்து வடமேற்கிலுள்ள பெஸ்காரவுக்குத் தெற்கிலிருக்கும் சமவெளிகள் வரையில் இக்கோடு செல்லுகிறது. வியா காஸிலினாவையும், வியா அப்பியாவையும் கைப்பற்றுவதுதான் லக்ஷியம். நேசதேசப்படைகள் ராபிடோ நதியைக் கடந்து காஸ்டல் பார்டியையும், ஸான்ஸபாஸ்டினோ, வென்டோஸாவை யும் பிடித்தனர்.

**விமான நடவடிக்கை**—விமானத் தாக்குதலின் பலம் அதிகரித்து வருகிறது. மே 9-ம் தேதியன்று 4,000 விமானங்களும் மே மாதம் 10-ம் தேதியன்று 2,000 விமானங்களும்

சென்றன. விமானந்தாங்கிகளில் சென்ற பாரக்கூடா விமானங்கள் நார்வேயில் கிரீஸ்டியன் ஸண்ட்டுக்கு சமீபத்தில் இரண்டு ஜெர்மன் துணைக்காவல் கப்பல் கூட்டத்தைத் தாக்கின. 24-மணி நேரத்துக்குள்ளாக பெர்லின் இரண்டாவது தடவை தாக்கப்பட்டது. 119 ஜெர்மன் விமானங்கள் நாசமாக்கப்பட்டன.

இந்த வாரத்தில் புகாரெஸ்டும் மற்ற போக்குவரத்து நிலயங்களும் தாக்கப்பட்டன.

**சைனு.**—பீபிங்-ஹாங்கௌ இருப்புப்பாதை வழியாக முன்னேறிய ஜப்பானியப் படைகள் யெங்சங்கையும், சிபெங்கையும் பிடித்தார்கள். அவர்கள் லோயாங் என்னுமிடத்தில் லுங்கை இருப்புப்பாதையைத் துண்டித்து விட்டார்கள்.

**பர்மா.**—அரக்கானில் எதிரிகள் பலமாகத்தாக்குகிருர்கள். நேசதேசப் படைகள் பூ தேடாங்கிலிருந்து பின்வாங்கின. பூ தேடாங்க்-மாங்க்டா ரஸ்தா நேசதேச வசமானபின் பூ தேடாங்கின் முக்யவத்வம் போய்விட்டது. கோகிமா பிராந்தியத்தில் ஜப்பானியர்கள் தாங்கள் பிடித்த ஸ்தானங்களை நழுவவிடாமல் செய்ய கடும்போர் செய்து வருகிருர்கள். நிலைமையைப்பற்றி திடஸ்தமாக ஒன்றும் சொல்லக்கூடவில்லை.

அஸ்ஸாம் பள்ளத்தாக்கில் செல்லும் மார்க்கத்துக்கு உண்டாகியிருந்த அபாயம் நீங்கி விட்டது. நாகா தேசத்திலிருந்து ஜப்பானியர் அப்புறப்படுத்தப்பட்டனர்.

இம்பால் போர்முனையில் சில்லரை வெற்றிகள் கிடைத்தன. இந்தப் பிராந்தியத்தில் எதிரி திடீர் தாக்குதல் செய்தான். இங்கு நமது படை பலத்தின் சாதுர்யமும் யுத்த சக்தியும் எதிரியை முறியடித்துவிட்டன.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினுல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**7—5—44.** (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—தொழிற்சாலை, ராணுவ இலக்குகள்—புகாரெஸ்ட் (Bucharest), பெர்லின் (Berlin).

ரயில்வே தளங்கள்.—பிரான்ஸிலுள்ள நாண்டிஸ் (Nantes).

யுத்த தளவாடக் குவியல்கள்.—லேமான்ஸ் அருகிலுள்ள லெமான்ஸ் (Lemans).

ரயில்வே தளங்கள்.—நாமூர் (Namur).

இரவு.—விமான நிலயங்கள், யுத்த தளவாடக் குவியல்கள் இதர ராணுவ இலக்குகள்—அட்லாண்டிக் (Atlantic) கடற்கரை, பிரான்ஸிலுள்ள நார்மண்டி கடற்கரை.

மருந்து தொழிற்சாலை.—லெவெர்குஸான் (Leverkusen).

ரயில்வே தளங்கள்.-பிரஸ்ஸெல்ஸ்(Brussels).

ராணுவ இலக்குகள்.—பாஸ் டி கலே (Pas De Calais).

### இதாலி (Italy).

ரஸ்தா, ரயில் இலக்குகள் தளவாடக் குவியல்கள் பாலங்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

எதிரிக் கப்பல்கள்.—சிவிட்டா வெச்சியா (Civita Vecchia), போர்ட்டோ பெர்ராட்டோ (Porto Ferrato), டால்மேஷியன் (Dalmatian) கடற்கரை.

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய தளங்கள்.—பாரமுஷிரோ (Paramushiro), ஷும்ஷு (Shumshu).

கடல் விமான தளம், விமான நிலயங்கள்.—பொனுபி (Ponape) தீவு.

விமான தளங்கள்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul), நியூ கினியிலுள்ள வீவாக் (Wewak).

### பர்மா (Burma).

எதிரி சைனியங்கள், ரயில் போக்குவரத்துகள்.—அரக்கான் (Arakan), மாயு (Mayu), கலடான் (Kaladan) பிரதேசங்கள்.

எண்ணெய்க் கிணறுகள்.—லெட்பாடனின் வடக்கு (North of Letpadan).

**8—5—44.** (திங்கட்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

(119 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன. 9 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

பகல்.—இலக்குகள்—பெர்லின் (Berlin), பிரன்ஸ்விக் (Brunswick).

புகாரெஸ்ட் (Bucharest).

எண்ணெய்க் கிணறுகள்—ருமேனியாவிலுள்ள புகாரெஸ்ட் (Bucharest).

இரவு.—ரயில்வே தளங்கள்—ஹெய்னி செயிண்ட் பியெர்ரி (Haine St. Pierre).

விமான நிலயம், கடல் விமான தளம்.—பிரஸ்ட் (Brest).

ராணுவ இலக்குகள்.—பிரான்ஸின் கடற்கரை, ஆஸ்னுபிரக் (Osnabruck).



சுரங்கவேடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

எதிரிக் கப்பல்கள்.—ஸெபாஸ்டபோல் (Sebastopol)

### இதாலி (Italy).

போக்குவரத்துகள்.—ரோமிற்கு (Rome) அருகிலுள்ள ரஸ்தாக்கள், யூகோஸ்லாவியா (Yugoslavia).

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

### பர்மா (Burma).

இலக்குகள்.—மாயூ (Mayu), அரக்கான் (Arakan), கலடான் (Kaladan), சின் மலைகள் (Chin Hills) பிரதேசங்கள்.

**9—5—44.** (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—ரயில்வே தளங்கள்.—வடக்கு பிரான்ஸிலுள்ள (N. France) வாலன்ஸியென்னி (Valencienne).

போக்குவரத்துகள் ஸ்தலங்கள்.—லோ கண்ட்ரீஸ் (Low Countries).

ரயில் தளங்கள்.—பெல்ஜியத்திலுள்ள லீஜ் (Liege), தியான்வில்லி (Thionville).

விமான நிலயங்கள். — செயிண்ட் டிஸியர் (St. Dizier), லில்லி (Lille), வெண்டிவில்லி (Vendeville), பெல்ஜியத்திலுள்ள பொரென்னிஸ் (Forennes).

இலக்குகள்.—நார்மண்டி கடற்கரை. —

இரவு.—(7 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இலக்குகள்.—பிரெஞ்சு கடற்கரை, கென்னிவில்லியர்ஸ் (Gennevillier).

தொழிற்சாலைகள்.—அன்னிஸி (Annecy).

பேர்லின் (Berlin).

சுரங்கவேடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

### இதாலி (Italy).

மத்தியதரைக்கடல் (Mediterranean).

ரயில்ரோட் பாலங்கள்.-இன்ஸிஸா (Incisa).

ஸப்ளைக் குவியல்கள், இதர இலக்குகள்.—ஜினேவா (Genoa), லெக்ஹார்ன் (Leghorn).

விமான நிலயங்கள்.—கிரீட் (Crete).

விறகுக் குவியல்கள்.—பிராஸ் (Peros).

### ருஷ்யா (Russia).

(14 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

இலக்குகள்.-குவாம் (Guam). (25 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

எதிரிக் கப்பல்கள்.-டிரக்கின் மேற்கு (Truk), ஆரோ (Aroe) தீவு.

விமான நிலயங்கள், ஸப்ளை பிரதேசங்கள்.—நியூ பிரிட்டனிலுள்ள ரபால் (Rabaul).

விமானச் சண்டைகள்.—ஸ்கௌட்டன் (Scouten) தீவு. (12 ஜப்பானிய விமானங்கள் நாசமாக்கப்பட்டன.)

### பர்மா (Burma).

ஜப்பானிய முனை.—நிங்தவுகாங் (Ningthoukhong).

இலக்குகள்.—அரக்கான் (Arakan), கலடான் (Kaladan), மாயூ (Mayu), சிண்ட்வின் (Chindwin).

**10—5—44.** (புதன்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—ரயில்வே பாலம்—ரோவென் (Rouen).

ரயில் தளங்கள்.—டோவாய் (Douai).

ராணுவ இலக்குகள்.—பாஸ் டி கலே (Pas De Calais).

இலக்குகள்.-பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium).

விமானத் தொழிற்சாலை.-வியென்னு (Vienna).

இரவு.—(15 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

ரயில் தளங்கள்.—பிரான்ஸிலுள்ள லென்ஸ் (Lens), லில்லி (Lille), பெல்ஜியத்திலுள்ள கெண்ட் (Ghent), கோர்ட்ராய் (Courtrai).

ராணுவ இலக்குகள்.—பிரெஞ்சுக் கடற்கரை, லட்விக்ஷாபன் (Ludwigshafen).

சுரங்கவேடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

ஹங்கேரியின்.—தலைநகரான புடாபேஸ்ட் (Budapest).

### இதாலி (Italy).

போக்குவரத்து பாலங்கள் எதிரி சைனியங்கள்—இதாலி (Italy).

### ருஷ்யா ((Russia).

(45 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்-நியூ கினியிலுள்ள வீவாக் (Wewak).

விமான நிலயங்கள்.—காரோலைன்ஸ் (Carolines).

போனுபி (Ponape).

மீதமாயுள்ள ஜப்பானிய தளங்கள்.-மார்ஷல் (Marshalls).

### பர்மா (Burma).

படகுகள், ஸப்ளை குவியல்கள், இதர ராணுவ இலக்குகள்.-அரக்கான் (Arakan), கலடான் (Kaladan), மாயூ (Mayu) பிரதேசங்கள்.

**11—5—44.** (வியாழக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

(18 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன; 26 நேசதேச விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

பகல்.-11 ஜெர்மன் ராணுவங்கள் யுத்த தளவாடங்கள் தயார்செய்து சேமிக்குமிடங்கள்.—பெல்ஜியம் (Belgium), பிரான்ஸ் (France), லக்ஸம்பர்க் (Luxemburg), மேற்கு ஜெர்மனி (Western Germany).

இரவு.—(16 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

ரயில்வே தளங்கள்.-போலோன் (Boulogne), லோவெய்ன் (Louvain).

ராணுவ இலக்குகள்.—பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium).

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில், லப்லின் (Lublin).

இதாலி (Italy).

ஜெர்மன் சைனியங்கள்.—காஸ்டாவ் (Gustav).

போக்குவரத்துகள், ஸப்ளைக் குவியல்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

ருஷ்யா (Russia).

(32 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமானமிறங்குமிடங்கள்.—குரைல்ஸ் (Kuriles).

துறைமுகம்.—முரிலோ (Murilo).

பர்மா (Burma).

ரங்கூன் மாண்டலே ரயில்வே.—ஏலா (Ela), பியு (Pyu).

ரயில்வேஸ்டேஷன்.-மேமியோ (Maymyo).

இலக்குகள்.—அரக்கான் (Arakan), கலடான் (Kaladan), மாயு (Mayu), சின் மலைகள் (Chin Hills).

**12—5—44.** (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

(150 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன. 52 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை);

பகல்.—எண்ணெய் நிறைந்த ஸ்தலங்கள்.—ஜெர்மனியிலுள்ள லிப்ஸிக் (Leipzig), செக்கோஸ்லொவாக்கியாவிலுள்ள பிரக்ஸ் (Brux).

இதர இலக்குகள்.—ஜெர்மனி (Germany).

விமான நிலயங்கள், ரயில்வேகள், ராணுவ இலக்குகள்.—பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium).

இரவு.—ரயில்வே தளம்—லோவெய்ன் (Louvain), ஹாஸ்ஸெல்ட் (Hasselt).

இலக்குகள்.—மேற்கு ஜெர்மனி (Westren-Germany).

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

இதாலி (Italy).

துறைமுகம்.—பியாம்பினோ (Piombino), ஸான் ஸ்டெபானோ (San Stefano).

இரண்டு ஜெர்மன் தலைமை ஸ்தாபனங்கள்.—இதாலி (Italy).

போக்குவரத்துகள் ஸப்ளைகள்.—இதாலியின் எதிரிகள் இருக்குமிடங்கள்.

ருஷ்யா (Russia).

(20 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—பாம்ஸ் (Boms), காஹிலி (Kahili).

பாலம்.—கிரெபெர்ஸ் (Crepers)நதி.

களஞ்சியங்கள்.—டப்லன் (Dublon).

விமான நிறுத்தும் ஷெட்டுகள்.—டிரக் (Truk).

பர்மா (Burma).

விமான நிலயங்கள்.—மெய்க்டிலா (Meiktila), ஹெஹோ (Heho).

போக்குவரத்துகள்.—அரக்கான் (Arakan).

எதிரி சைனியங்கள்.—கொஹிமா (Kohima), பிஷென்பூர் (Bishenpur), பாலெல் (Palel).

இலக்குகள்.—மொகாங் (Mogaung), கமெய்ங் (Kamaing).

தொழிற்சாலைகள்.—ரங்கூன் (Rangoon), பெஸ்ஸின் (Bassein).

**13—5—44.** (சனிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

(63 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன; 22 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

பகல்.—ரயில்வே தளங்கள்—நாமூர் (Namur), டூர்னே (Tournai).

கூட்டம் கூடுமிடங்கள்.-டோடௌ (Totow).

சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார்செய்து சேமிக்குமிடங்கள்.—ஆஸ்னுபிரக் (Osnabruck).

ராணுவ இலக்குகள்.—ஸ்டெட்டின் (Stettin),

இரவு.—ரயில்வே ஜங்ஷன்—பெரெஸ்ட் (Brest), போலொடெஸ்க் (Polotsk), நார்வா (Narwa).

இதாலி (Italy).

யூகோஸ்லாவியா (Yugoslavia).

(15 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன, 8 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

ரயில் போக்குவரத்துகள்.—வடக்கு மத்திய இதாலி (North and Central Italy).



பீரங்கி ஸ்தாபனங்கள் மோட்டார் போக்குவரத்துகள் பாலங்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

ரஸ்தாப் போக்குவரத்து.—யூகோஸ்லாவியா (Yugoslavia).

ரயில் ஸ்லதங்கள்.—ஆர்வியெட்டோ (Orvieto), ஆராஸோ (Arezzo).

ருஷ்யா (Russia).

(35 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச்சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.-டிமோரிலுள்ள பென்போய் (Penfoie).

விமான நிலயம், முகாம் பிரதேசங்கள்.—பொகெய்ன்வில்லி (Bougainville).

விமான தளங்கள்.—வீவாக் (Wewak).

பர்மா (Burma).

இலக்குகள்.—டிடிம் (Tiddim) ரஸ்தா.

போக்குவரத்துகள்.—வட பர்மா (North Burma).

முகாம்.—டாங்பா (TaungBaw).

காட்கியோ (Katkyo), மித்கினா (Myitkyina).

பெரிய தொழிற்சாலை —பாஸ்ஸின் (Bassein).

நீராவி யந்திரங்கள் சேமிப்புகள்.—மத்திய பர்மா (Central Burma).

ஸப்ளைகள்.—மித்கினா (Myitkyina) கமாய்னோ (Kamaino).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**8—5—44.** (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia),

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**9—5—44.** (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia),

தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**10—5—44.** (புதன்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia),

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**11—5—44.** (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

மத்தியதரைக்கடல் (Mediterranean).

நேசதேச கப்பற்கூட்டம்.—மேற்கு மத்தியதரைக்கடல்.

ருஷ்யா (Russia),

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**12—5—44.** (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia),

தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**13—5—44.** (சனிக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia),

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**14—5—44.** (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

பிரதேசங்கள்.—தெற்கு, தென்மேற்கு இங்கிலாந்து.

(13 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

ருஷ்யா (Russia),

தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

# யுத்தக் குறிப்புகள்.

**ஸெபாஸ்டபூலின் விழ்ச்சி.** கருங்கடல் துறைமுகமான ஸெபாஸ்டபூல் விழுந்து விட்டது. வெற்றியைப் பாராட்டும் முறையில் அதில் ஈடுபட்ட படைகளுக்கு ஸெபாஸ்டபூல் என்ற பெயர் வழங்கப்பட்டது. மாஸ்கோவில் உள்ள 324 பீரங்கிகள் 24 தடவை குண்டுகளைப்போட்டு வெற்றியைக் கொண்டாடின. வெற்றியைப் பாராட்டி மாஸ்கோ ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறது.

"நமது நாட்டின் விடுதலைக்காகவும், ஸ்வதந்திரத்துக்காகவும் நடைபெற்ற போரில் உயிர் துறந்தவர்களுக்கு அழியாப்புகழ் கிடைக்கட்டும். எதிரிக்கு அழிவு ஏற்படட்டும்."

இரண்டு வருஷங்களுக்கு முன்பு (Batum) பாடத்திலுள்ள எண்ணெயைக் கவருவதற்கு "ஸெபாஸ்டபூல்" பாய்ச்சல் ஸ்தலம் என்று நினைத்து ஜெர்மானியர் 3,00,000 துருப்புகளை அந்த இடத்தில் காவு கொடுத்தார்கள். காகஸஸ்ஸுக்கு சமீபத்தை அடைந்த ஜெர்மன் படைகள் அங்கு நிலைபெற்றிருக்க முடியவில்லை. ஸெபாஸ்டபூலின் வெற்றி ருஷ்யாவின் யுத்த தந்திரத்தை வெளிப்படுத்துகிறது. இரண்டு வருஷங்களுக்கு முன்பு அதைக் கைப்பற்ற ஜெர்மானியர்கள் நேர்முகமாக அதைத் தாக்கினார்கள். ருஷ்யர்கள் இதைச்சுற்றி வளைத்துக் கொண்டு கர்ஸான், நிகோலெயேவ், ஒடெஸ்ஸா முதலியவற்றை முதலில் கைப்பற்றிக் கொண்டார்கள். பிறகு ஸெபாஸ்டபூல் தானுகவே விழுந்து விட்டது.

இந்த நகரத்தைக் காலி செய்யுமுன் ஜெர்மானியர்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டது. இதைத் தற்காப்பு செய்ய முயன்றதில் 20,000 ஜெர்மானியர்கள் கொல்லப்பட்டார்கள். 24,361 பேர்கள் கைதி செய்யப்பட்டார்கள். அதிலிருந்த படைகளுக்கு போர் புரியுங்கள் அல்லது இறந்துவிடுங்கள் என்று உத்தரவு கிடைத்திருந்தது. கிரிமியா யுத்தம் பூராவிலும் எதிரி பக்கத்தில் 60,000 ஆபீஸர்களும், ஸோல்ஜர்களும் இறந்தனர். 51,587 ஆபீஸர்களும், மனிதர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

12-வருஷங்களுக்கு முன்பு மேமீ 5வ அன்று உலகத்திலேயே மிகவும் பேராசை பிடித்து இகழ்ச்சி பெற்ற நெபோலியன் ஸெயிண்ட் ஹெலினாவில் இறந்தான். அவனைப்பற்றி வெளியிட்ட அபிப்பிராயங்கள் இப்பொழுது ஹிட்லருக்கும் பொருந்தும். அப்பொழுது இருந்த ஒருவர் நெபோலியனைப்பற்றி பின் வருமாறு எழுதியிருக்கிறார். "இவன் 10 மிலியன் ஜனங்களை அக்கிரமமாக அழித்தவன். உலகத்தின் உரிமைகளையும், ஸ்வதந்திரத்தையும் அழிக்க முற்பட்டவன். இவனுடைய பேராசை பைத்தியம் பிடித்தவனுடைய மனப்பான்மை போன்றது." இன்று ஹிட்லர் அவனுக்கு மேற்பட்டுவிட்டான். ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் இந்தத் தகவலை ஜெர்மானியர்களுக்கு அறிவிக்கும் பொழுது போர்முனை நீஸ்டர் நதியின் முகத்துவாரத்திலிருந்து பின்புறமாக அமைக்கப்பட்டுவிட்டதால் ஸெபாஸ்டபூல் ராணுவ முக்கியத்தை இழந்துவிட்டது என்று சொன்னார்கள்! இந்தப் புளுகை ஒருவரும் நம்பமாட்டார்கள். ஏமாந்து விடும் ஜெர்மானியருங்கூட இதை ஆதரிக்கமாட்டார்கள். ஸெபாஸ்டபூலைப் பிடிப்பதற்கும் அதைப் பரிபாலிப்பதற்கும் மிலியன்கள்கணக்கான ஜெர்மன் ருமேனிய சேனைகளை காவு கொடுத்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

ஸெபாஸ்டபூல் முக்கியத்துவத்தை இழந்துவிடவில்லை. இதைப் பிடித்தவுடன் கிரிமியா சுத்தி செய்யப்பட்டுவிட்டது. இங்கு போர் புரிந்த படைகள் டான்யூப் நதிப்பிரதேசத்திற்கும், ருமேனியாவுக்கும், ஸெக்கோஸ்லாவேகியாவுக்கும், போலந்துக்கும் செல்லக்கூடும்.

இதற்குப்பின் இரண்டு போர்முனைகளில் போர் ஆரம்பிக்கும் என்றும் தோன்றுகிறது. பால்கன் நாடுகளில் ஒரு தாக்குதல் ஏற்படலாம். கருங்கடல் பக்கத்திலுள்ள ஜெர்மன் படைகளின் விலா பக்கம் ஆபத்துக்குள்ளாகிவிட்டது. ஸெபாஸ்டபூலைப் பிடித்தபின் நாம் பெர்லினுக்கு நிச்சயமாப் போவோம் என்று ருஷ்ய வியாக்யானி சொல்லியிருக்கிறார்.

வி வி வி வி வி

**ருஷ்ய வெற்றிக்கு பிரிடிஷாரின் உதவி.** ருஷ்ய வெற்றிக்கு ருஷ்யாவின் யுத்த தந்திரம் காரணமென்றாலும் வெற்றிக்கு பிரிட்டிஷார் செய்திருக்கும் உதவியை நாம் மறக்க முடியாது. 1941-ம் ஆண்டு அக்டோபர்மீ 1வ முதல் 1944-ம் ஆண்டு மார்ச்சுமீ 31வ முடிய பிரிடனும் சாம்ராஜ்யமும் ருஷ்யாவுக்கு 5,031 டாங்குகளையும், 6,778 விமானங்களையும் 80 மிலியன் பவுன்கள் பொருமானமுள்ள தாதுப் பொருள்கள், உணவுப் பொருள்கள், யந்திரங்கள், தொழிற்சாலை முஸ்தீப்புகள், மருந்து வசதிகள், இதர வசதிகளையும் ஸப்ளை செய்திருக்கின்றன என்று மேமீ 10வ அன்று காமன்ஸ் சபையில் மிஸ்டர் சர்ச்சில் வெளியிட்டார். சென்ற ஆறு மாதங்களில் மட்டும் பிரிடிஷ் கடற்படையின் துணைக்காவலுடனும், எதிரியின் நடவடிக்கையினால் இரண்டு சதவிகித நஷ்டத்துடனும், 12,50,000 டன்கள் எடைமானமுள்ள யுத்த தளவாடங்கள் ஆர்க்டிக் கடல் மார்க்கமாய் ருஷ்யாவுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

வி வி வி வி வி

**கஸ்டாவ் அரணில் தாக்குதல்.** எட்டாம் படையும், ஐந்தாம் படையும் இதாலியின் குறுக்கே செல்லும் எதிரியின் கஸ்டாவ் தற்காப்பு அரணைத் தாக்க ஆரம்பித்து விட்டார்கள். தென்மேற்கில் கேயடா வளைகுடாவிலிருந்து வடகிழக்கில் பெஸ்காராவுக்கு அடியில் உள்ள சமவெளிகள் வரையிலும் தாக்குதல் நடைபெறுகிறது. முக்கியமாக காஸினோ மார்க்கத்தையும் அப்பயன் வழியையும் குறித்து கடும் போர் நடைபெறுகிறது. இது ஒரு மகத்தான போர் துவக்கமே ஒழிய தனிப்பட்ட சில்லரைப் போரல்ல. இரண்டாம் போர்முனை நடவடிக்கையில் இது முதல் தாக்குதலாக இருக்கும். இதாலியிலுள்ள நேசதேசப் படைகளின் சேனாதிபதியான ஸர் அலெக்ஸாண்டர் பின் வருமாறு சொல்லுகிறார்.

"இன்று நமது நிலைமை கெடுதலாக இருக்கிறது. நாளைய தினம் நமக்கு வெற்றி தோன்றும். நேசதேசத்தாரின் விமானத் தாக்குதலின் வலு நாளுக்கு நாள் வலுவடைவதிலிருந்து ஜெர்மனியின் சேனைகள் அழிந்து வருகின்றன. நேசதேசப் படைகள் கடலிலும், தரையிலும், ஆகாயத்திலும் எதிரியைத் தாக்கி முடிவாக அவனை ஒழித்துவிடத் தயாராக இருக்கிறது.



"கிழக்கிலிருந்தும், மேற்கிலிருந்தும், வடக்கிலிருந்தும், தெற்கிலிருந்தும் அடிகள் விழப் போகின்றன. இந்த அடிகள்மூலம் நாஸிகளின் இறுதி அழிவும் ஐரோப்பாவில் மறுபடியும் ஸ்வதந்திரமும் எல்லா தேசங்களுக்கும் சமாதானமும் ஏற்படும்.

"இதாலியிலுள்ள நமக்குத்தான் முதலில் அடிக்கும் கௌரவம் வாய்த்தது. நாம் முதலில்தாக்குவதற்கு நியாயமான சரியான முகாந்திரம் இருக்கிறது. நம்முடைய முயற்சியில் வெற்றி கிடைக்கும்படி கடவுள் அருள் புரிவாராக."

வி வி வி வி வி

**ஓய்வு, சுருசுருப்பு.** இந்த வாரத்திலும் யுத்தத்தில் ஓய்வு காணப்படுகிறது. ஆகிலும் பூரணமான ஓய்வில்லை. ஸெபாஸ்டபூலின் வீழ்ச்சியும், கஸ்டாவ் அரணில் வெற்றிகளும் இவ்வாரத்திய முக்கியமான நடவடிக்கைகள். சென்ற சில வாரங்களில் நடவடிக்கையே இல்லை என்று சொல்லுவதும் பொருத்தமானதல்ல. ஏனென்றால் பகலிரவாக வெடிவிமானங்களும் சண்டை விமானங்களும் இங்கிலாந்துக் கடற்கரையை விட்டுப் புறப்பட்டு ஆயிரக்கணக்காகச்சென்று குண்டுகளைப் போட்டுவிட்டுத் திரும்பி வந்திருக்கின்றன. அந்தக்குண்டுவீச்சுகளின் மூலம் அட்லாண்டிக் கடலிலிருந்து கருங்கடல் வரையிலும் உள்ள எதிரியின் தொழிற்சாலை நகரங்களும் போக்குவரவு மார்க்கங்களும் நொருங்கியிருக்கும் பொழுது ஓய்வு என்று சொல்வதும் சரியான விவரணம் அல்ல. ஆகிலும் சிறிது சுருசுருப்புக் குறைவு நிலவுகிறது. இரண்டாம் போர்முனையை நாம் சதாகாலமும் எதிர் பார்த்து நிற்கிறோம். ஐரோப்பா பூராவிலும் நிம்மதிக்குறைவு ஏற்பட்டிருக்கிறது. நேசதேசத்தார்கள் கடைசி எச்சரிக்கையாக அச்சு நாட்டுக்குட்பட்ட தேசங்களுக்கு இறுதிக் கடிதம் ஒன்று அனுப்பியிருக்கிறார்கள்.

வி வி வி வி வி

**எச்சரிக்கை.** எச்சரிக்கையின் வாசகம் பின்வருமாறு:—"ஹங்கேரியத் தலைவர்களின் கெடுதலான நடவடிக்கைகளால் ஹங்கேரிய ஜனங்கள் ஜெர்மனியின் ஆக்கிரமண அவமானத்தை அனுபவிக்கிறார்கள். யுத்தத்தில் ஜெர்மானியருடன் இன்னும் சேர்ந்துகொண்டிருக்கும் ருமேனியா ஜனங்களுக்கு நாசத்தை உண்டு பண்ணுகிறது. பல்கேரிய—பின்லாந்து நிர்வாகங்கள் ஜெர்மனிக்கு உதவிசெய்து ஜெர்மன் கட்சியை ஆதரித்து வருகின்றன.

இந்த தேசங்களின் ஜனங்கள் கீழ்கண்ட உண்மைகளை அறியவேண்டுமென்று பிரிடிஷ்—ருஷ்ய—அமெரிக்க நிர்வாகங்கள் நினைக்கிறார்கள் :—

"(1) ஹங்கேரிய—ருமேனிய—பல்கேரிய—பின்லாந்து நிர்வாகங்கள் நாஸிகளின் தோல்வி நிச்சயம் என்று நன்கு அறிந்து யுத்தத்தை விட்டு விலகிக்கொள்ளவேண்டுமென்று எண்ணம் கொண்டிருந்தபோதிலும் அவைகளுடைய நடவடிக்கையிலும் மனப்பான்மையிலும் அவைகள் ஜெர்மனியின் யுத்த முயற்சிக்கு ஒத்தாசை அளித்து வருகின்றன.

"(2) யுத்தத்திலிருந்து விலகிக்கொண்டு ஜெர்மனியுடன் ஒத்துழைக்காமலிருப்பதற்கும், தங்களால் இயன்ற அளவு நாஸிப்படைகளை எதிர்த்து ஐரோப்பியப் போரை நீடிக்காமல் செய்வதற்கும், தங்களுடைய இறுதித் தியாகங்களைக் குறைத்துக்கொள்வதற்கும், நேசதேச வெற்றிக்கு உதவுவதற்கும், அத்தேசங்கள் சக்திபெற்று இருக்கின்றன.

"(3) ஜெர்மனியுடன் சேர்ந்துகொண்டு யுத்தத்தில் அவைகள் பங்கெடுத்துக்கொண்ட பொறுப்பிலிருந்து அந்நாடுகள் தப்பிக்கமுடியாது. ஆகிலும் ஜெர்மனியுடன் ஒத்துழைத்தது எவ்வளவு தூரம் அவைகள் யுத்தத்தை நீடிக்கின்றனவோ, அதற்குத் தகுந்தவாறு அவைகள் பயனை அனுபவிக்கவேண்டியிருக்கும். அவர்களுக்கு விதிக்கப்படும் ஷரத்துகளும் அதிக கடுமையாக இருக்கும்.

"(4) ஆகையால் நேசதேச வெற்றிக்கு அவர்கள் உதவிசெய்ய சமயம் வாய்த்திருக்கிற பொழுது அந்த வெற்றியை எதிர்த்துப் போராடும் நாசம் விளைவிக்கக்கூடிய கொள்கையை மேலும் கையாளுவதா அல்லது விட்டுவிடுவதா என்பதை அவைகள் இப்பொழுது முடிவு செய்யவேண்டும்".

வி வி வி வி வி

**சாம்ராஜ்யம் தயாராயிருக்கிறது.** அச்சுநாடுகளுக்கு எச்சரிக்கை செய்ததுடன் சாம்ராஜ்ய நாடுகளும் விடுதலைக்கான இறுதிப்போரைத் துவக்க தயாராக இருக்கின்றன. சாம்ராஜ்ய நாடுகளின் பிரதம மந்திரிகள் ஒன்றுகூடி உருவான நடவடிக்கையை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். சாம்ராஜ்யப் படைகள் போரைத்துவக்க துடித்துக்கொண்டிருக்கின்றன. பிரிடிஷ் பார்லிமெண்டு சபையில் வியாழக்கிழமையன்று கனடாவின் பிரதம மந்திரியான மிஸ்டர் மாகென்ஸி கிங் சொற்பொழிவு ஆற்றியபொழுது பின்வருமாறு சொன்னார்.

"இன்று ஐரோப்பாவின் விடுதலைக்காக சகாக்களுடன் சேர்ந்து போர்புரிய கனடியப் படை உத்தரவை எதிர்பார்த்து நிற்கிறது. கூடிய சீக்கிரத்தில் கனடியப் படைகள் ஜப்பானைத் தாக்கும் இறுதிப் போரில் பங்கெடுத்துக்கொள்ளும். ஸ்வதந்திரத்துக்காக கனடா முடிவான போரை நடத்தும்." மாகென்ஸி கிங்கின் அபிப்பிராயம் மற்ற சாம்ராஜ்யப் படைகளுக்கும் பொருந்தும்.

வி வி வி வி வி

**நாஸிகளின் ஆயத்தங்கள்.** டோக்கியோ ஒலிபரப்பில் வரப்போகும் படையெடுப்பு "இரண்டாம் போர்முனை கானல்" என்று சொல்லிய போதிலும், ஜெர்மானியர்கள் அபாயத்தை உணர்ந்துவிட்டார்கள். யுத்தத்தில் வெற்றிபெற முடியாது என்று நாஸிகள் அறிவார்கள். ஆகிலும் யுத்தத்தை மற்ெருரு மாரிகாலம் வரையில் இழுத்துவிட்டு சமாதானம் செய்துகொள்ளலாமென்று அவர்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். நேசதேசத்தார்களுக்குப் பலமான நஷ்டம் விளைவித்துவிடலாம் என்றும் அவர்கள் எண்ணுகிறார்கள். சாம்ராஜ்யத்தின் புதிய துருப்புகளைவிட நன்றாய்ப் பயிற்சிபெற்ற ஜெர்மன் படைகள் உயர்வானவை என்றும் அவைகளுடைய சேனாதிபதிகள் சிறந்தவர்களென்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். பொசுக்கு வேலையையும், பூரணமான அழிக்கும் முறைகளையும், ரகசிய ஆயுதங்களையும், கோட்டைகளையும், திடீர் தாக்குதல்களையும் அவர்கள் நம்பியிருக்கிறார்கள். மேலும் நேசதேசத்தார்களிடையே மனஸ்தாபத்தை உண்டுபண்ணிவிடலாம் என்றும் ஜெர்மனி நம்பியிருக்கிறது. ஒன்றுபட்ட தாக்குதல்கள்மூலம் ஜெர்மனி நொருக்கப்படும் என்று ஸ்டாலின் சமீபத்தில் சொன்னதை அவன் மறந்துவிட்டான்போலும்.

இதே சமயத்தில் எதிரியும் தயாராக இருக்கிறான். ஜெர்மன் துருப்புகள் மேற்குப் போர்முனையில் குறிப்பிட்ட ஸ்தானங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. நேசதேசப் படைகள் இறங்கியபின் அவைகளை முன்னேறவொட்டாமல் தடுத்துவிடலாமென்று ஜெர்மனி திட்டம் போட்டிருக்கிறது. தற்காப்பு செய்யவேண்டிய கடற்கரை நீளமாக இருப்பதால் படைகளிறங்குவதை எதிர்பார்த்து அதைத் தடுக்க முடியாதென்று ஜெனரல் டிட்மாரும் மற்ற பொறுப்புள்ள ஜெர்மன் வியாக்யானிகளும் அபிப்பிராயப்படுகிறார்கள். தற்காப்பிற்காக கடற்கரை அநேக வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு ஒன்றுக்கொன்று தொடர்பு உள்ளதாகவும் அமைக்கப்பட்டிருக்கிறது.

நார்வேயில் ஜெனரல் பாகன்ஹாரிஸ்டினின் தற்காப்புகள் வடக்குப் பக்கத்தில் மலைகளிலும் தெற்குப் பக்கத்தில் தற்காப்பு அரணிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

டென்மார்க்கில் ஜெனரல் ஹென்னகன் கடற்கரையோரமாக பலமான பீரங்கிகளை அமைத்திருக்கிறான். தரையில் அகிழ்களும் குழிகளும் வரிசை வரிசையாய் வெட்டப்பட்டிருக்கின்றன.

ஹாலந்தில் கோட்டைகள் பயன்படாவிட்டால் தேசத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்படுத்திவிடுவதாக ஜெனரல் கிருஸ்டியன்ஸன் உத்தேசித்திருக்கிறான். அவனுடைய முக்கியமான படைகள் இந்த வட்டாரத்தில் மிகவும் பலஹீனமான ஷெல்ட் என்னுமிடத்தில் குவிக்கப்பட்டிருக்கின்றன.

பெல்ஜியத்திலும் பிரான்ஸிலும் ஜெர்மனிக்குப் போகும் ரஸ்தாக்களில் கனமான தற்காப்புகளும், அகிழ்களும், குழிகளும், காவல் முகாம்களும், சுரங்க வெடிகளும் வெள்ளப் பெருக்குகளும், அழிக்கும் சாதகங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

முதலெடுப்பில் படைகளையிறங்கவொட்டாமல் தடுக்க அவர்கள் முயற்சிப்பார்கள். அடுத்தபடியாக அவைகளை முன்னேறவொட்டாமல் செய்ய உபரிப்படைகளை அனுப்புவார்கள். மூன்றாவது கட்டத்தில் நேசதேசப்படைகள் முன்னேறி அவர்களைச் சுற்றிவளைக்கும்பொழுது சுற்றிவளைக்கப்படாமல் தப்பித்துக்கொள்ள விமானங்கள் மூலம் படைகளைப் பின்புறத்திலிறக்குவார்கள்.

மேற்குப் போர்முனையைப் பலபடுத்த எதிரி இதாலியிலிருந்து பின்வாங்க உத்தேசித்திருக்கிறான் என்று தோன்றுகிறது. பாண்டைன் சதுப்பு நிலங்களில் வெள்ளப்பெருக்கு உண்டாக்கியதும் கஸ்டாவ் அரணிலிருந்து பின்வாங்கியதும் இதை சூசிப்பிக்கின்றன.

விமானத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட போக்குவரத்து மார்க்கங்களுள்ள மேற்கு பிராந்தியத்திற்கு ஏராளமான போக்குவரத்து வேலைக்காரர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

துருப்புகளை நிறுத்திவைப்பதற்கு விசேஷமான முகாம்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அங்கிருந்து அபாயம் உண்டாகும் ஸ்தலங்களுக்கு துருப்புகள் எளிதில் செல்லக்கூடும். இந்தப்படை முகாம்கள் பாரிஸிலிருந்து ஹாலாந்து வரையில் இருக்கின்றன. அவைகளையும் நேசதேச விமானப்படைகள் தாக்கிவருகின்றன.



இந்தப்படை முகாம்களில் ஏராளமான யுத்த முஸ்தீப்புகளையும் எதிரிகள் சேமித்து வைத்திருக்கிறார்கள். அவைகளையும் நேசதேச விமானங்கள் நொருக்கிவருகின்றன.

ஆகிலும் துரதிருஷ்டவசமாக இரண்டாம் போர்முனையில் ஜெர்மனிக்கு உதவிசெய்ய விமானப்படை பலம் கிடையாது. முன்னணி தளங்களை நேசதேசத்தாரின் விமானத் தாக்குதலின்மூலம் ஜெர்மனி இழந்துவிட்டதென்பது ஒரு காரணம். ஜெர்மன் விமானப் படையில் பாக்கியிருக்கும் விமானங்கள் ஜெர்மனியைத் தற்காப்பு செய்ய ஜெர்மனிக்குச் சென்றுவிட்டன. மேற்குக் கடற்கரையிலிருந்து விமானம் சுடும் பீரங்கிகளில் பெரும்பாகம் ஜெர்மனிக்குக் கொண்டுபோகப்பட்டது. மேற்குப் போர்முனையில் பீரங்கிகள், காலாட் படையின் உதவிகொண்டுதான் ரண்ஸ்ட்டெட் தற்காப்புகளை பலப்படுத்தியிருக்கிறான்.

ஜெர்மனியை ரக்ஷிக்க முயலும் ரோமல் பின்வருமாறு திட்டம் வகுத்திருக்கிறான் :—

(1) அட்லாண்டிக் போர்முனையை சுரங்க வெடிகள் மூலமாகவும், காவல் ஸ்தலங்கள் மூலமாகவும், பீரங்கிகள் மூலமாகவும் தற்காப்பு செய்யவேண்டும்,

(2) இதாலியை மலைப் பிராந்தியங்களின்மூலம் காபந்து செய்யவேண்டும்,

(3) ருஷ்யப் போர்முனையில் அமைதியை ஏற்படுத்துவது,

(4) ஜெர்மனியை விமானப்படை மூலமாய் ரக்ஷிப்பது.

வி வி வி வி வி

**விமானப் போர்.** விமானப் போர் வலுவடைந்து வருகிறது. 1,000 முதல் 2,000 விமானங்கள் வரையில் இப்பொழுது தாக்கி வருகின்றன. மே மாதம் 10-ம் தேதியன்று 4,000 விமானங்கள் பறந்து சென்றன. இந்தத் தாக்குதல்களில் போலஸ்தி பலமாகத் தாக்கப்பட்டிருக்கிறது. அதன் எண்ணெய் உற்பத்தி சக்தி 25 சத விகிதத்துக்குக் கீழாக குறைந்து விட்டது. மத்தியதரைக்கடல் பிரதேசத்திலுள்ள விமான தளங்களிலிருந்து சென்ற விமானங்கள் 2 மிலியன் டன்கள் எடைமானமுள்ள வெடிகுண்டுகளைப் போட்டிருக்கின்றன. போலஸ்தியிலுள்ள இருப்புப்பாதை நிலயங்களும் எண்ணெய் சுத்திகரிக்கும் சாலைகளும் எண்ணெய் பிரதேசங்களும் அழிக்கப் பட்டுவிட்டன.

வி வி வி வி வி

**முற்றுகையைத் தாண்டிச்செல்வது.** பிரபுக்கள் சபையில் பொருளாதார யுத்த மந்திரியான கிரான் போர்ன் பிரபு பின்வருமாறு பேசியிருக்கிறார்.

"ஜெர்மனிக்குக் கள்ளத்தனமாகக் கொண்டுபோகப்பட்ட சாமான்களின் சப்ளை நின்று போய்விட்டது. முற்றுகையைத் தாண்டிச் சென்ற 15 ஜெர்மன், ஜப்பானியக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. அவைகள் விளக்கன்னியிலும் வெயர்லெஸ் இல்லாமலும் துறைமுகங்களுக்குச் செல்லாமலும் சென்றன. அவைகளில் 45,000 டன்கள் எடைமானமுள்ள ரப்பரும், 150 டன்கள் எடைமானமுள்ள டங்க்ஸ்டனும், 25,000 டன்கள் எடைமானமுள்ள தாவர எண்ணெயும், குனைனும் கொண்டுபோகப்பட்டன."

வி வி வி வி வி

**தகுதியான புகழுரை.** இவ்வாரத்திய யுத்தக் குறிப்புகளை, பிரிடிஷ் பிரதம மந்திரிக்கும் தேசத்திற்கும் மிஸ்ட்டர் மாகன்ஸி கிங் விடுத்த புகழுரையுடன் முடிப்போம். பிரிடிஷ் பார்லிமெண்டு சபையின் ஒன்றுபட்ட கூட்டத்தில் சென்ற வியாழக்கிழமையன்று பிரிடிஷ் பிரதம மந்திரிக்குப் பின்கண்ட புகழ் மாலையை அவர் சூட்டினார். "பிரிடிஷ் மக்களின் தலைவர் பதவியையும் மனித வர்க்கத்தின் ஸ்வதந்திரத்துக்குப் பாடுபடுவதற்குத் தலைமை வகிக்கும் பதவியையும் நீங்கள் ஒப்புக்கொண்டு நான்கு வருடங்கள் முடிந்துவிட்டன. நீங்களும் உங்களுடைய சகாக்களும் இந்நாட்டை மிகவும் நெருக்கடியான சமயத்திலிருந்து காப்பாற்றி பிரகாசம் தோன்றும்படியாகத் தலைமை வகித்திருக்கிறீர்கள்.

"நீங்கள் உங்களுடைய நாயகத்தை விரிவான நோக்கத்துடனும் தைரியத்துடனும், புராணத்துக்கு யோக்யமான வகையில் நடத்திவருகிறீர்களென்பதில் உலகம் பூராவிலும் நம்பிக்கை உண்டாகியிருக்கிறது.

"பிரிடிஷ் மக்களின் அஞ்சா நெஞ்சத்துடன் செய்த எதிர்ப்பின் மூலம்தான் உலகத்திலுள்ள ஸ்வதந்திரப்படைகளைத் திரட்ட சௌகரியமேற்பட்டதென்பதை உலகத்திலுள்ள எல்லா ஸ்வதந்திர நாடுகளும் மறக்க முடியாது. பொதுவான லக்ஷியத்தையடைய ஸ்வதந்திரமுள்ள ஜனங்கள் ஒன்றுபடுவார்களென்பதற்குப் பிரிடன் தான் சிறந்த உதாரணம்".

# நேசதேச வெடி குண்டு வீச்சு விவரம்.

| | மொத்த எடை டன்கள். | விமானம் மாதா மாதச் சராசரி டன்கள். |
|---|---|---|
| 1940 ... | 12,795 | 1,066 |
| 1941 ... | 31,185 | 2,598 |
| 1942 ... | 45,285 | 3,773 |
| 1943 ... | 1,57,160 | 13,096 |
| 1944—ஜனவரிமீ முதல் மார்ச்சுமீ முடிய. | 1,35,472 | 45,157 |

*1944-ம் வருஷத்திய மகத்தான நடவடிக்கைகள்.*

| | டன்கள். |
|---|---|
| பிரன்ஸ்விக்:(ஜனவரி 14) ... | 2,000 |
| பெர்லின் (ஜனவரி 20) ... | 2,300 |

*1944-ம் வருஷத்திய மகத்தான நடவடிக்கைகள்—cont.*

| | |
|---|---|
| பெர்லின் (பிப்ரவரி 15) ... | 2,500 |
| லீப்சிக் (பிப்ரவரி 19) ... | 2,300 |
| ஸ்டட்கார்ட் (மார்ச்சு 15) ... | 3,000 |
| பிராங்க்பர்ட் (மார்ச்சு 22) ... | 3,000+ |
| பெர்லின் (மார்ச்சு 24) ... | 2,500+ |

*1944-ல் பிரளயம்.*

| | டன்கள். |
|---|---|
| ஜனவரி ... | ... 40,000 |
| பிப்ரவரி ... | ... 37,300 |
| மார்ச்சு ... | ... 58,172 |

"ஜெர்மனியை பலமாகத் தாக்கும் மகத்தான நடவடிக்கை ஆரம்பமாகிவிட்டது. ஜெர்மன் விமானப்படையை ஆகாயத்தில் தலை கிளப்பாமல் தடுப்பதுதான் எதிரியின் முக்கியமான லக்ஷியம். இதை சாதிக்க எதிரி பிரிடனிலிருந்தும் இதாலியிலிருந்தும் நம்மைத் தாக்கி நம்முடைய படைகளை சிதற அடித்து வருகிறான். வெடிவிமானங்களின் துணைக்காக ஏராளமான வெகுதூரம் செல்லும் சண்டை விமானங்கள் கூடவருகின்றன. ஒரு நாள் கூட இடைவெளியன்னியில் எதிரி பகலிலும், இரவிலும் நம்மைத் தாக்கிவருவதிலிருந்து எதிரி விமான நடவடிக்கையை பலப்படுத்திவிட்டானென்று நிச்சயமாய் புலப்படுகிறது."

(பெர்லின் ஒலிபரப்பு, ஏப்ரல் 14, 1944).

---

# ஜெர்மானியர் ஆக்கிரமித்துள்ள ஐரோப்பாவில் நேசதேச விமானத் தாக்குதல்.

## *ராயல் விமானப்படை இரவில் குறிப்பிட்ட இடத்தில் குண்டுபோடுகிறது.*

தற்கால ஆங்கில அமெரிக்க விமானப்படையெடுப்பானது, ஜெர்மனியையும், ஆக்கிரமித்த ஐரோப்பாவையும் தாக்கிவருவதில் ஒருவிதமான புது முறையை இரவுகளில் குண்டுபோடும்போது கையாளுகிறார்கள் என்பது தெளிவு. குறித்த இடத்தில் இரவுகளில் குண்டுபோடுவதென்பது, நன்றாய் பாதுகாக்கப்பட்டு குறியாளர்களைக்கொண்ட வேகமாய்ச் செல்லும் தனிப்பட்ட குண்டுபோடும் விமானங்களால் மட்டுமல்ல, பெரும் பலமுடைய விமானங்களாலும் கையாளப்பட்டுவருகிறது. ஜியுவிஸி என்ற இடத்தை தாக்கியபின் எடுத்தனவைபோன்ற விமானத்திலிருந்து எடுத்த போட்டோ படங்களிலிருந்து ராயல் விமானப்படை இரவுகளிலும் குறிப்பிட்டபடி குண்டுகளைப் போடுவது பலன்தருவதாயும் மிகவும் கொடூரமாயுமுள்ளது என்பதை வெளிப்படுத்துகிறது. ராயல் விமானப்படை இரவிலும் அமெரிக்க விமானங்கள் பகலிலுமாக ஒத்துழைப்பதால் மிகவும் பயனுடையதும் கொடுமையானதுமான தாக்குதல் நடத்தப்பட்டுவருகிறது. ராயல் விமானப்படை இரவுகளில், உழைப்பதானது, பெரிய தொழிற்சாலையுடைய நகரங்களைத் தாக்குவதுமட்டுமல்ல, ஒரு வருஷத்திற்குமுன் நல்லகால நிலையிலும் நிலவிலும் மட்டும் செய்துவந்த தாக்குதல்களன்னியில் மற்றைய இரவுகளில் செய்ய முடியாததான குறிப்பிட்ட இடத்தில் குண்டுபோடும் முறையில் வெற்றிகரமாய் நூற்றுக்கணக்கான டன்கள் நிறையுள்ள குண்டுகளைக் குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் போட்டும்வருகிறது.

இந்தவிதமாய் புதுமுறையில் இரவுகளில் குண்டுபோடுவதானது சென்ற பிப்ரவரி மாத முதல் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ராயல் விமானப் படையைச் சேர்ந்ததும், சரியான முறைகளில் தயார் செய்யப்பட்டதுமான இடம் குறிக்கும் விமானங்கள், குண்டுபோடும் விமானங்களுடன்சென்று, விளக்குகளின் மூலம் இடங்களைக் குறிப்பதைப் பொருத்திருக்கிறது. இந்த குண்டுபோடும் முறையில் வெற்றிகிடைப்பது தொழிற்சாலைகள்போன்ற குறிப்பிட்ட இடங்களைத் தாக்குவதற்கென வேண்டிய குண்டுகளைச் சேகரிப்பதையும் பொருத்திருக்கிறது, இம்முறை. இம்மாதிரி குண்டு வீச்சால் ஒரு தனிப்பட்ட இடம் முற்றிலும் நாசமாக்கப்படுகிறது.



## *சிறிய இலக்குகள் பெரும் பயன்கள்.*

சென்ற பிப்ரவரி, மார்ச்சு மாதங்களில் இரவுகளில் குறிப்பாய் குண்டுபோடுவது வெற்றிகரமாய் நடத்தப்பட்டது. மார்ச்சு மாதம் 10-ந்தேதியன்று இரவு, லங்காஸ்டர் விமானங்கள் தென்பிரான்ஸுக்குப் பறந்துசென்று, திரும்பு காலையில், ஆயிரம் மைல்கள் பறக்கவேண்டிய போது, இதர கட்டடங்களிருந்து கண்டுபிடிப்பது கஷ்டமான கட்டடமான லார் காமரி தொழிற்சாலையை தாக்கச் சென்றது. இரவிலோ அல்லது பகலிலோ இதுகாறும் தாக்கப்படாத தாக்கப்பட்ட முறையில் சிறிய இலக்கு இது என்றே சொல்லவேண்டும். இப்புது முறையைக் கையாண்டு லங்காஸ்டர் விமானங்கள் இந்த இரு கட்டடங்களையும் தாக்கிற்று. இதனால் ஜெர்மானியர்களுக்கு விமானங்களுக்கு ஸப்ளையாகும் பெரும் ஊசிகள் செய்யும் தொழிற்சாலையான இது நாசமாக்கப்பட்டது, ஒரு பெரும் நஷ்டமேயாகும். தொழிற்சாலை அழிக்கப்பட்டது பொதுவாய் இந்தவிதத் தாக்குதல்கள் பிப்ரவரி, மார்ச்சு மாதங்களில் ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும் மேற்குப் பாகத்திலுள்ள விமானத் தொழிற்சாலைகளின்மேல் நடத்தப்பட்டன. ஜெர்மனியிலுள்ள பல தொழிற்சாலைகள் நாசமாக்கப்பட்டபின் அவர்களுக்கு வேண்டியவைகளை செய்யவும், விமானங்களைச் சரிபார்க்கவும் உபயோகமாய் இருந்தவை லிபோகெஸ் ஆல்பெர்ட் முதலிய இடங்களிலிருந்த பல தொழிற்சாலைகளாகும்.

குறிப்பிட்ட தாக்குதல்கள் பல நிலவுகளில் நடத்தப்பட்டன. இரவுகளில் தாக்க கஷ்டமாயிருந்தவிடங்களில் இப்படி செய்யப்பட்டன. இருப்பினும் இரவுகளில் குண்டு போடப்பட்டு ஜெர்மனியில் தொழிற்சாலைகள் நாசமாக்கப்பட்டபோது ஒருவித எதிர்ப்பும் இல்லை.

## *குறிப்பிட்ட இடத்தில் இரவுகளில் குண்டுபோடுவது "உபரியாய்" செய்யப்படும் வேலை.*

குறிப்பிட்ட இடத்தில் இரவுகளில் குண்டுபோடுவது "உபரியாய்ச்" செய்யப்படும் வேலையாகும்.

மேற்கிலுள்ள ஹிட்லருக்கு உதவியான ரயில் போக்குவரத்துகளை ஒழிப்பதற்கென செய்த பிரான்ஸிலுள்ள ரயில்வே தளங்களைத் தாக்கியதானது மிகவும் முக்யத்வம் உடையதாகும். இதுகாறும் உபயோகப்படுத்தாத அத்தனை அளவு விமானங்கள் மார்ச்சு மாதம் 7-ந்தேதி பிரான்ஸிலுள்ள லாடிராப்பிஸ் ரயில்வே தளங்களைத் தாக்கியபோது உபயோகப்படுத்தப்பட்டன. இது முதலில் சிறிதாய்க் கருதப்பட்டாலும் பின்பு நடந்த குறிப்பிட்ட இடத்தில் குண்டுபோடப்படும் தாக்குதல்களுக்கும், விமான தாக்குதல்களுக்கும் முன்னறிவிப்பாயிருந்தது. இம்மாதிரி செய்வதால் குறிப்பிட்ட ஒரு தொழிற்சாலை போதுமான குண்டுகளால் நாசமாக்கப்படுவதன்னியில் ஜெர்மன் தொழிற்சாலைகள், அவைகளுள்ள அளவு நிலங்களைமட்டும் தாக்கும் குண்டுகளை அளவின்படி உபயோகப்படுத்தவும் உபயோகப்படுகிறது. முதலில் பயனில்லை எனக் கருதவும் காரணமாயிருந்தது.

முன்பெல்லாம் ரயில்வே தளங்கள் தாக்கப்பட்டாலும்கூட கூடிய சீக்கிரத்தில் சரிபார்க்கப்பட்டன. ஆனால் இந்த ரயில்வே தளங்களையும் இதர நீராவி யந்திர ஷெட்டுகளையும், சரிசெய்யமுடியாமல் தாக்கப்பட்டுவருகிறது.

---

# சண்டை விமானங்கள் ஜெர்மனியைப் பகலில் தாக்குவதற்கு வழியைக் கற்பிக்கின்றன.

*(விமான நிருபர்).*

அமெரிக்க கனமான வெடிவிமானங்கள் பெர்லினுக்குச் செல்லுவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று விமானங்களை வ்யூகரசனை செய்யும் முறை. இரண்டாவது அபாரமான உற்பத்தி சக்தி. மேலும் வெடிவிமானங்களைவிட சண்டை விமானங்களை உற்பத்தி செய்வதில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது.

எதிரியின் சண்டை விமானங்களை வெடிவிமானங்கள் வழிமறித்துத்தாக்கி அவைகளை நஷ்டப்படுத்திவிடுகின்றன. ஒரு வருஷத்துக்குமுன் ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவை பிரிடிஷ் 8-வது விமானப்படையைச் சேர்ந்த வெடிவிமானங்கள் தாக்கத்துவங்கிய பொழுது அது இந்த சிரமத்தை அனுபவித்தது. ஒரு சிறிது காலம் வரையில் சாமர்த்தியமாக அமைக்கப்பட்ட விமானங்களின் ஒன்றுபட்ட குண்டுவீச்சு மூலம் ஜெர்மன் விமானங்களை அவைகள் சமாளித்து வந்தன. காலக்கிரமத்தில், ஜெர்மன் சண்டை விமானங்கள் கூட்டமாக

வரும்பொழுதும் வெடிவிமானங்களுக்கு உபரி உதவிப்படை அவசியமென்று தெரியவந்தது. இவ்விதமான ரக்ஷணையை அமைப்பதில் அமெரிக்கர்கள் சிறந்த நடவடிக்கையைக் கையாண்டிருக்கிறார்கள்.

பிரிடனிலிருந்து பெர்லினுக்குச் செல்லவேண்டிய விமானங்கள் 500 மைல்கள் சென்று திரும்பி வரவேண்டும். 300 மைல்கள் தூரம் வரையில் போகும்பொழுதும் திரும்பிவரும் பொழுதும் அவைகள் எதிரியின் தாக்குதலை சமாளிக்கவேண்டும். இவ்விதமான நடவடிக்கைக்குத் துணைக்காவல் படையை அனுப்புவதென்பது 1939-ம் வருஷத்தில் சாத்யமாக இருந்திருக்காது. 1,000 மைல்கள் செல்லக்கூடியதும் 600 மைல்கள் வரையில் போர் புரியப்போதுமான வெடிமருந்துகளை ஏற்றிச்செல்லக்கூடியதுமான சண்டை விமானம் மிகவும் பெரியதாகவும் கனமுள்ளதாகவுமிருக்குமாதலால் அவைகள் ஜெர்மன் தளங்களிலிருந்து புறப்படும் சிறிது தூரம் செல்லும் ஒருவர் போகக்கூடிய சண்டை விமானத்துக்கு ஒப்பிடமுடியாது.

## 1940-ம் வருஷத்தில் இந்த பிரச்னை தீர்க்கப்பட்டது.

ஒருவர் ஏறிச்செல்லும் சண்டை விமானத்தை வெகுதூரம் ஓட்டிச்செல்லுவதற்காக அதில் வசதிகளை அமைப்பது என்ற முடிவுக்கு பிரான்ஸிலிருந்து பிரிடன் வெளியேறியபின் அது வந்தது. அதன்பின் பிரிடனிலுள்ள தளங்களிலிருந்துதான் விமானங்கள் புறப்படவேண்டுமென்ற நிச்சயம் உண்டாகிற்று. அமெரிக்கா இந்த திட்டத்தில் கவனம் செலுத்தி விமானத்தின் வெளிப்பக்கத்தில் எளிதில் தள்ளிவிடக்கூடிய டாங்கை அமைத்தது. இந்த டாங்கிகள் முட்டை வடிவமுள்ளவைகள். இறக்கைகளுக்கு அடிப்பக்கத்தில் நுனியில் அமைக்கப்பட்டவை. ஸ்பிட் பையர் விமானத்தில் இந்த டாங்கி ஆப்பு வடிவமாக உள்ளது. விமானத்தின் கூட்டிற்கு அடியில் இறக்கைகளின் மத்திய பாகத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றது. அவைகளில் 90 அல்லது 150 காலன் பெட்ரோலை நிரப்பிவிடலாம்.

சண்டை விமானம்போர் தொடுக்கவேண்டியபொழுதும் அவைகளிலுள்ள எண்ணெய் அற்றுப்போன உடனும் பழைய செருப்புகளைப்போல் எண்ணெய் டாங்கிகளைக் கீழே தள்ளிவிடலாம். டாங்கிகளை உதறிவிட்டபின் அவைகள் முன்போல வேகத்தையும் சலனசக்தியையும் பெற்றுவிடும். சக்தியை இழந்துவிடாமல் அது வெகுதூரம் செல்லும் சக்தியைப் பெற்றுவிட்டது.

எதிரியுடன் போராட சண்டை விமானத்தில் வெடிமருந்து இருக்கும் வரையில்தான் அது உபயோகப்படும். வெடிமருந்து அற்றுப்போனவுடன் அது ஊருக்குத் திரும்பிவிடும். ஆறு தடவைகள் வெடிமருந்து சுடும் பொத்தானைத் தட்டியபின்தான் வெடிமருந்து அற்றுப் போய்விட்டதென்று விமானிகள் அறிவார்கள். வெடிமருந்துக் குறைவு சங்கடத்தை விளைவித்தது. இந்தக் கஷ்டத்தை நிவர்த்திக்க போர்புரியும் சண்டை விமானங்கள் தோட்டாக்களையும் குண்டுகளையும் பிரயோகம் செய்தபின் வீட்டுக்குத் திரும்பும் சமயத்தில் வேறு சண்டை விமானங்கள் அவைகளின் ஸ்தாபனத்தை எடுத்துக்கொள்ள அனுப்பப்பட்டன.

## மிகுதியான விமானங்கள் அவசியம்.

இப்பொழுதுதான் விமானப்படையின் உற்பத்தி அதிகரிக்கப்படவேண்டும். நீண்ட பிரயாணத்தில் வெவ்வேறு கட்டடங்களில் கூட்டம் கூட்டமாகத் துணைக்காவல் விமானங்களை அனுப்பவேண்டுமென்றால் அதற்கு ஏராளமான சண்டை விமானங்கள் தேவைப்படும். பகலில் ஜெர்மனியைத் தாக்கும் கனமான வெடிவிமானங்கள் நூற்றுக்கணக்காகச் செல்லுகின்றன. அவைகளை வழிமறித்துத் தாக்க ஜெர்மானியர்கள் ஏராளமான சண்டை விமானங்களை அனுப்பிவருகிறார்கள். பெர்லினுக்குச் சென்ற ஒரு விமானி, அவர்களுடைய விமானக் கூட்டம் பெர்லின் பேரில் பறந்தபொழுது 150 ஜெர்மன் சண்டை விமானங்கள் அவைகளைத் தாக்கின என்று சொன்னான். பிரயாணத்தில் தூரதேச நடவடிக்கையை ரக்ஷித்து வரும் மஸ்டாங்க் விமானங்களும் ஏராளமாக அனுப்பப்படவேண்டும்.

ஆரம்ப காலத்தில் லைட்னிங் விமானங்களும், தண்டர்போல்ட் விமானங்களும் துணைக் காவல் வேலையைச் செய்துவந்தன. ஜெர்மனியின் பேரில் போர் புரிவதற்காக அதன் பலத்தை உபயோகிக்காமல் செய்ய பிரிடிஷ் ஸ்பிட் பையர் விமானங்கள் வடக்குக் கடல் தாண்டி ஆக்கிரமிப்பு ஐரோப்பாவுக்குச் செல்லும் வரையில் காபந்து செய்துவந்தன.

சண்டை விமானப்படையின் உதவியினால்தான் ஜெர்மனியின் பலமான தற்காப்புள்ள பாகங்களும் பகலில் கனமான வெடிவிமானங்களின் தாக்குதலுக்கு உட்படுத்தப்படுகின்றன. 18 மாத காலமாக பிரிடிஷார்கள் இரவில் செய்துவரும் தாக்குதலுக்குச் சமானமான பகல் தாக்குதலைத் துவக்க அவைகள் சாதகமளிக்கின்றன.



# புதிய நாசம் விளைவிக்கக்கூடிய சுரங்க வெடிகள்.

## சுரங்கவெடி பாவும் நடவடிக்கையை பிரிடன் பலப்படுத்துகிறது.

பலஹீனமாகவுள்ள பிராந்தியங்களுக்கு கடற்கரை ஓரமாகச் செல்லும் ஜெர்மன் துணைக்காவல்கொண்ட சாமான் கப்பல்கள் ஏப்ரல் மாதத்தில் பலமாகத் தாக்கப்பட்டன. கடல் போரைப்பற்றி A. J. மாக்வின்னி விமர்சனம் செய்தபொழுது ஜெர்மன் கப்பல்கள் ஆகாயத்திலிருந்தும், சக்திவாய்ந்த பிரிடிஷ் மோட்டார் மீன்வெடிப்படகுகள் மூலமாகவும், மோட்டார் பீரங்கிப் படகுகள் மூலமாகவும், 'கடற்கரையிலிருக்கும் வெகுதூரம்' சுடும் பீரங்கிகள் மூலமாகவும் தாக்குதலுக்குட்பட்டவையென்பது எல்லோருமறிந்த விஷயம் என்று சொல்லியிருக்கிறார்.'

பிரிடன் எவ்வளவு தூரம் சுரங்கவெடி பாவும் நடவடிக்கையை ...ல்படுத்தியிருக்கிறதென்று ஜெர்மானியர்களுக்கு இது வரையில் அறிமுகப்படுத்தப்படவில்லை. ஏப்ரல் மாதம் மத்தியில் ஜெர்மன் ஓவர்ஸீஸ் அறிக்கை நிலயத்திலுள்ள கடற்படை நிபுணர் ஜெர்மன் மக்களிடம் அவர்களுடைய கப்பல்கள் பிரிடனின் புதிய, நாசம் விளைவிக்கக்கூடிய சுரங்கவெடிகளின் மூலம் மகத்தான ஆபத்துக்குட்பட்டு விட்டனவென்று சொல்லியிருக்கிறார்.' ஒரே ஒரு பிராந்தியத்தில் மட்டும் பிரிடன் 12 வெவ்வேறு விதமான சுரங்கவெடிகளைப் பாவியிருக்கிறதென்றும் இவ்விதமான சிக்கலான அபாயத்தைத் தவிர்க்க எந்த சுரங்கவாரிக்கப்பல்களும் உபயோகப்படாதென்றும் அந்தக் கடற்படை நிருபர் எழுதுகிறார்.

கப்பல்களும் விமானங்களும் சுரங்கவெடிகளைப் பாவுகின்றன. ஜெர்மனியின் குறுகலான, முக்கியமான கடல் மார்க்கங்களுக்கு ஏற்பட்டிருக்கும் புதிய அபாயம் பிரிடிஷ் சுரங்கவெடிகளை நூதனமுறையில் தயார்செய்துவரும் பிரிடிஷ் கடற்படையின் நடவடிக்கையிலிருந்து ஏற்படுகிறது. பிரிடிஷ் விமானப்படை சுரங்கவெடிகளைப் பாவியபோதிலும் இந்த நடவடிக்கைக்கு பிரிடிஷ் கடற்படைதான் திட்டங்களை நிறுவுகிறது. பிரிடிஷ் விமானப்படையைச் சேர்ந்த வெடி விமானங்கள் ஜெர்மனிக்குச் சமீபத்திலுள்ள சமுத்திரங்களில் 90 சதவிகிதம் வெடி குண்டுகளைப் போடுகின்றன. சுரங்கவெடி பாவுவதில் 10 சதவிகிதம் பங்கெடுத்துக்கொண்டாலும் பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள் சுரங்கவெடிகளின் மூலம் மூழ்கடிக்கப்படும் ஜெர்மன் கப்பல்களின் 30 சதவிகிதத்துக்கு பொறுப்பாளிகளாகயிருக்கின்றன.

சில பிரிடிஷ் கப்பல்கள் சுரங்கவெடிகளைப்போட ஹிட்லரின் கடற்கரைக்கருகில் சென்றிருந்தன. அதன் மாலுமிகள் திரும்பிவந்தபொழுது ஜெர்மானியர்கள் கடற்கரையில் செய்திருக்கும் விளக்கணைப்பு ஏற்பாடுகளைப்பற்றியும் கடற்கரையில் ரோந்து செய்துவரும் மோட்டார்களின் வெளிச்சத்தைப்பற்றியும் பூரா விபரங்களையும் அறிந்து வந்தார்கள். இதுதான் நடவடிக்கையின் விபரம். ஜெர்மன் ஸோல்ஜர்களும், மாலுமிகளும், விமானிகளும் படையெடுப்பு ஏற்படும்பொழுது துருப்புகளிறங்குவதைத் தடுக்கக்கூடுமோவென்று ஜெர்மன் மக்கள் கவலைப்படுகிறார்கள்.

---

# டிரெஸ்டனில் ஜெர்மனிக்கு எதிராகக் கலகம்.

(டெயிலி டெலிகிராப்).

டிரெஸ்டனில் ஜெர்மனிக்கு விரோதமாகக் கலகம் ஏற்பட்டபின் சுட்டுக்கொல்லப்பட்ட அநேகர்களின் சவங்கள் மற்றவர்களுக்கு எச்சரிக்கை செய்யும் முறையில் தெருக்களில் சிதறிக்கிடந்தன.

இந்த விருத்தாந்தத்தை நகரத்துக்கு வந்த நடுநிலைமை வகிக்கும் தேசத்தைச் சேர்ந்த சுற்றுப்பிரயாணி வெளியிட்டார். ஆகிலும் அவரை நகரத்திற்குள் பிரவேசிக்கக்கூடாதென்று தடுத்துவிட்டார்கள். அவர் தன்னுடைய அலுவல்களை ஸ்டேஷனிலேயே கவனித்துவந்தார். அவருடன் நெருங்கிப்பழகின ஜெர்மானியர் இந்த சம்பவத்தைப்பற்றிச் சொன்னாராம். கலகத்துக்குக் காரணம் யாதென்று சொல்லக்கூடவில்லை: ஆகிலும் நகரத்தில் ஜெர்மானியர்களுக்கு விரோதமான மனப்பான்மை வலுவடைந்துவருகிறதென்று புலப்படுகிறது.

தோல்வி மனப்பான்மையை ஒழிக்க நாஸிகள் கடுமையான அடக்கு முறைகளைக் கையாண்டு வருகிறார்களென்பதற்கு அபரிமிதமான ருஜு கிடைத்துவருகிறது. "ஜெர்மனியில் தோல்வி மனப்பான்மையைக் குறைத்து போர்" என்ற தலையங்கத்துடன் ஜர்னல் டீ

ஜெனிவா என்னும் பத்திரிகையில் ஒரு கட்டுரை வெளி வந்திருக்கிறது. அதில் பின் வருமாறு எழுதப்பட்டிருக்கிறது. "இப்பொழுதிருக்கும் நிலைமையில் ஜெர்மனியில் கைது செய்யப்படுவது பிரமாதமான காரியமில்லை. தொழிற்சாலையிலோ, தெருவிலோ, அல்லது உணவுப்பொருள் கடையின் வாசற்படியிலோ வாய்தவறி அல்லது பலமாக ஒரு குறையைச் சொல்லிவிட்டாலும், சாயங்காலம் வெடிகுண்டு வீச்சேற்படும்பொழுது, அல்லது பொழுது விடிந்தவுடன் கட்டடங்களின் பாழின் முன்னிற்று கொண்டிருக்கும்பொழுதும் ஹிட்லருக்கு ஜே என்று கல்லலாகச் சொன்னாலும், குற்றவாளியின் பிராணன் போய்விடும். அவன் அத்துடன் உலகத்திலிருந்து மறைந்துவிடுவான். இதற்குமுன் கொல்லப்பட்டவர்களைப்பற்றிய தகவல்கள் பந்துக்களுக்கு அறிவிக்கப்பட்டது. இப்பொழுது அதுவும் நின்றுவிட்டது".

"தெற்கு ஜெர்மனியிலுள்ள ஒரு பெரிய நகரத்தில் ஒரு வாரத்தில் மூன்று தடவை கொலைகள் செய்யப்படுகின்றன. இந்த நகரத்திலும் அவ்விதம் நடைபெறுகிறது. ஆகிலும் பெர்லினிலுள்ளவர்களையும், வியன்னாவிலுமுள்ளவர்களையும்விட இந்த நகர வாசிகள் பாக்கியம் பெற்றவர்கள் போல் தோன்றுகிறது.

"பொது மக்களில் நாசவேலைக்காரர்களும், தோல்வி மனப்பான்மையுள்ளவர்களும், நிர்வாகத்தையும், ஜெர்மன் ஏஜெண்டுகளையும் தாஷிக்கிறவர்களும் கொலை செய்யப்படுகிருர்கள். கொரில்லாப் படைகளும் ஜெர்மன் தொழிலாளர்களையும் வியாபாரிகளையும் கொலை செய்து வருகிருர்கள்."

---

## டென்மார்க்கில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் முக்யத்வம்.

டென்மார்க்குடன் நியாயமான போக்குவரத்துகள் இன்றும் தடைப்பட்டிருக்கின்றன இந்த விசித்திரமான தோற்றத்துக்குப் பின் என்ன நடைபெறுகிறதென்பதைப்பற்றிய தகவல்கள் ரகசியமாக டென்மார்க்கிலுள்ளவர்களிடமிருந்து வெளிவருகிறதென்று ஸ்டாக்கோமிலுள்ள மாஞ்சஸ்டர் கார்டியனின் நிருபர் எழுதுகிருர்.

இந்தத் தகவல்களிலிருந்து புதிய முறையில் நாசவேலை கையாளப்படுகிறதென்றும் ஜெர்மனியின் கொடுமையும் அதிகரித்திருக்கிறதென்றும் தெரியவருவதைத் தவிர மற்ற விவரங்கள் தெளிவாகப் புலப்படவில்லை. ஜெர்மானியர்கள் நிர்வாக அமுலை பலப்படுத்தவில்லையென்றும் டேனிஷ் போலீஸ்காரர்கள்தான் பந்தோபஸ்து செய்து வருகிருர்களென்றும் ஹேஷ்யங்கள் புலப்படுகின்றன.

ஊகிக்குமளவில் நிகழ்ச்சிகள் மூன்று வகைப்படும். ஜெர்மனி எதிர்ப்பு இயக்கத்தை அடியோடு ஒழிக்க முயற்சி செய்துவருகிறது. நேசதேசப் படையெடுப்பை சமாளிக்க ராணுவ ஆயத்தங்கள் அவசரமாகச் செய்யப்படுகின்றன. ஸ்வீடனைத்தாக்க ஜெர்மனி தயார் செய்துவருகிறது.

ஸ்வீடனின் ராணுவ லக்ஷியங்களைக் காட்டக்கூடிய லக்ஷம் தேசப்படங்கள் ஒரு ஜெர்மன் கப்பலில் மார்ச்சு மாதம் 28-ம் தேதியன்று ஆஸ்லோவுக்குக் கொண்டுவரப்பட்டதென்று நார்வேயிலிருந்து தகவல்கள் கிடைத்தபோதிலும் ஸ்வீடன் பேரில் தாக்குதல் ஏற்படுவது சாத்தியமில்லையென்று தோன்றுகிறது. இந்தப் படங்கள் 7 அல்லது 8 டிவிஷன் துருப்புகளுக்குப் போதுமானவை. சமீபகாலத்தில் நார்வேயிலுள்ள ஜெர்மானியர்கள் ஸ்வீடிஷ் எல்லைச்சரகத்திற்குச் சமீபத்திலுள்ள ரஸ்தாக்களிலும் பாலங்களிலும் சுரங்கவெடிகளைப் பாவினுர்களாம்.

ஆகிலும் நன்ருய்த் தயாராகயிருக்கும் ஸ்வீடனைத் தாக்கப்போதுமான சேனையை அனுப்ப ஹிட்லருக்கு இயலாது. ஏற்கனவே அவன் ஏராளமான போர்களை நடத்த வேண்டியிருக்கிறது. மேலும் ஸ்வீடிஷ் மக்கள் முன் ஜாக்கிரதையுடனிருந்துவருகிருர்கள். டேனிஷ் மக்களின் கதியைப்பற்றி ஸ்வீடிஷ் மக்கள் மிகுதியான கவலை கொண்டிருக்கிருர்கள். எல்லைச்சரகங்களை மூடிவிட்டு ஜெர்மன் ரகசியப் போலீஸையும் S. S. படைகளையும் ஒரு நாட்டிற்குள் அனுப்பினுல் அங்கு என்ன நடைபெறும் என்பதைப்பற்றி மற்ற நாடுகளில் நமக்குச் சிறந்த அனுபவம் கிடைத்திருக்கிறது.



## பிரான்ஸில் படுகொலை.

பிரான்ஸை ஆக்கிரமித்திருக்கும் ஜெர்மானியர்கள் செய்துவரும் அக்கிரமச் செய்கைகளைப் பற்றி பிரான்ஸிலிருந்து பின்கண்ட விவரங்கள் கிடைத்திருக்கின்றன.

ஏப்ரல் மாதம் 1-ம் தேதியன்று இரவில் ஜெர்மன் S. S. படைப்பகுதி ஒன்று வடக்கு பிரான்ஸில் லிலிக்கு சமீபத்திலுள்ள ஆஸ்க் என்னும் கிராமத்திலுள்ள எல்லா ஆண் மக்களையும் அழித்துவிட்டார்கள். இந்த நிகழ்ச்சி பின்வருமாறு நடைபெற்றது.

பெல்ஜியத்திலிருந்து துருப்புகளை ஏற்றிவந்த ஒரு ஜெர்மன் ரெயில்வே எஞ்ஜினும் இரண்டு தொடர் வண்டிகளும் ஆஸ்க் ரெயில்வே ஜங்ஷனுக்கருகில் பாதையைவிட்டுக் கீழே இறங்கிவிட்டன. ரெயில் வண்டியிலிருந்து குதித்த ஜெர்மன் ஸோல்ஜர்கள் ஸ்டேஷன் ஆபீஸரையும், அவருடைய உதவி வேலைக்காரரையும், சமிக்ஞை காட்டுகிறவரையும் உடன் காலத்தில் சுட்டுக்கொன்ருர்கள். அதன்பின் சேனைத்தலைவரின் உத்தரவுப்படி அவர்கள் கிராமத்திற்குள் புகுந்து கதவுகளையும், ஜன்னல்களையும் தவிடுபொடியாக்கி ஜனங்களை அப்புறப்படுத்தினுர்கள். அந்த கிராமத்தின் பாதிரி உள்பட 20 பேர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். மற்றவர்கள் காவலுடன் ரெயில்வே ஸ்டேஷனுக்குக் கொண்டுபோகப்பட்டு நாசவேலைநடந்த இடத்திலேயே பகிரங்கமாக துப்பாக்கிகளாலும், யந்திர பீரங்கிகளாலும் கொலை செய்யப்பட்டார்கள்.

கிராமப் பாதிரியார் சாகும் தருவாயிலிருந்த ஒருவருக்கு சரம சமயத்தில் வேதம் ஓதிக்கொண்டிருந்தபொழுது முதலில் சுட்டுக் கொல்லப்பட்டார். 86 பேர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அநேகர்களுக்குப் படுகாயம் ஏற்பட்டது.

ரயில்பாதையைவிட்டு விலகியபொழுது ஜெர்மானியர்கள் பேரில் சுடப்பட்டது என்ற ஜெர்மன் அறிக்கையை அங்கு வெளிவரும் பத்திரிகை பிரசுரிக்க மறுத்தது.

---

## லவால் உபரியாக 3 லக்ஷம் பிரெஞ்சு மக்களை வெளிநாடுகளுக்கு அனுப்புகிருர்.

லவாலும், டீட்டும் ஜெர்மனிக்கு வேலைசெய்ய அனுப்புவதாக உத்தேசித்திருக்கும் 3 லக்ஷம் தொழிலாளர்களில் ஆயிரக்கணக்கான உத்தியோகஸ்தர்களும் சேர்க்கப்படுவார்களென்று பிரான்ஸிலிருந்து நம்பத்தக்க தகவல் கிடைத்திருக்கிறது. இந்த உத்தியோகஸ்தர்கள் ரஸ்தாக்கள், கோட்டைகள் முதலியவற்றில் வேலையில் அமர்த்தப்படுவார்கள்.

அயல்நாடுகளுக்குத் தொழிலாளர்களை அனுப்புவதை ஆக்ஷேபிக்கும் காரியக்கமிட்டி வியாபாரிகளுக்கு கீழ்கண்ட வேண்டுகோளை அனுப்பியிருக்கிறது. "முதலாளிகளே, உங்களை ரக்ஷித்துக்கொள்ளுங்கள். வருங்காலத்தில் பிரான்ஸிலிருக்கும் ஜெர்மானியர்களுக்கு உதவிசெய்ய முயற்சி செய்யக்கூடிய பிரெஞ்சு வியாபாரிகளுக்குத்தான் தேவைப்படும் தொழிலாளர்கள் கிடைக்கக்கூடும். ஜெர்மனியரிடம் வேலைக்கு அமர்ந்திருக்காதவர்கள் ஜெர்மனிக்கு அனுப்பப்படவேண்டும்." இந்த வேண்டுகோளிலிருந்து அவர்களின் உற்பத்தியில் 70 சதவிகிதத்தை பிரெஞ்சு தொழிற்சாலைகள் ஜெர்மானியர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று வெளிப்படுகிறது.

பாரிஸிலுள்ள ஜெர்மன் அதிகாரிகளிடம் விஷியின் அயல்நாட்டு தூதராகயிருக்கும் பெர்னுண்டு டிபிரான் 1943-ம் வருஷத்தில் ஜெர்மானியர்கள் கையாண்ட அடக்கு முறைகளைப் பற்றி விஷிக்கு அனுப்பிய ரிபோர்ட் எதிர்ப்பு இயக்கத்தின் தலைவரிடம் அகப்பட்டிருக்கிறது. சென்ற பன்னிரண்டு மாதங்களில் 52,000, பிரெஞ்சு மக்கள் ஜெர்மன் ரகசிய போலீஸை எதிர்த்திருக்கிருர்கள். 30,000 பேர்களுக்குப் பலவகைப்பட்ட காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. 860 பேர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். காராக்கிரஹத்தில் அநேக காலம் வரையிலும் கஷ்டங்களையும், கொடுமைகளையும் அநுபவித்தான பின் 10,000 பேர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். பாக்கியிருக்கும் 12,700 பேர்களைப்பற்றி அத்தூதர் ஒரு தகவல்களையும் வெளியிடக்கூடவில்லை. விசாரணையன்னியில் பிணையாளிகளாகயிருந்த அவர்கள், சுட்டுக் கொல்லப்பட்டிருக்கவேண்டும். பிரினன் மேலும் சொல்லுகிருர். பிரெஞ்சு பொதுமக்களை

ராணுவக் கோர்ட்டுகள் முன் ஆஜர்படுத்துவதில்லை. குற்றவாளிகளைவிட அவர்கள் கடுமையான சிக்ஷைக்குட்படுத்தப்பட்டு காவலில் வைக்கப்படுகிறார்கள். தினசரிக் கைதி செய்யப்படுகிறவர்களின் சங்கியை அதிகரித்து வருகிறது. ஜெர்மனியில் காவல் முகாம்களுக்கு அனுப்பப்படும் பிரெஞ்சுக்காரர்களின் தொகையும் அதிகரித்துவருகிறது.

எதிர்ப்பு இயக்கத்தார்கள் மேலும் சொல்லுகிறார்கள். போர் நிறுத்தம் செய்யப்பட்டபின் அதமபக்ஷமாக 80,000 பிரெஞ்சுக்காரர்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

---

## ஜெர்மன் ரகசிய போலீஸை எதிர்த்துப் போராடும் அடிமைகள்.

(பிரான்ஸிஸ் பில்டிங்).

அதிகாலையில் கடுங்குளிரில் வெடவெட என்று ஆடிக்கொண்டும் கந்தை உடுத்தும், க்ஷவரம் செய்துகொள்ளாமலும், பசிப்பிணியுடனும் பிரெஞ்சுக்காரர்களின் கோஷ்டி ஒன்று அவர்களின் காவலாளர்களின் ஆக்ஞைப்படி வரிசையாக நின்றுவிடுகிறது. அவர்கள் நாஸிகளின் தொழிலாளர் முகாமில் அன்று பூராவும் வேலைசெய்யவேண்டும். ஆகாரக் குறைவும், ஊதியக் குறைவும், அபாரமான வேலையும் ஏற்பட்டு தாய்நாட்டிலிருந்து நூற்றுக் கணக்கான மைல்கள் தாண்டி வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கு குதூஹலப்பட ஒரு காரணமும் கிடையாது. ஆகிலும் அவர்கள் அருவருப்புடன் புன்னகை செய்கிறார்கள். அவர்களுக்குக் காபந்து செய்கிறவர்கள்தான் வியசனப்படுகிறார்கள். பிரெஞ்சுக்காரர்கள், அவர்களை த்வேஷிக்கிறார்களென்றும் மதவெறிபிடித்த நாஸிகளும் பிரெஞ்சுக்காரர்களை தூஷிக்கிறார்களென்றும் அவர்கள் அறிவார்கள். அநேக மாதங்களாக ஒரு சிறிது சகிப்புத் தன்மை உண்டாகியிருக்கிறது. வாயைவிட்டு குறைவுகளை வெளியிடுகிறவர்களெல்லோரையும் சுட்டுக்கொன்றுவிடமுடியாது. ஆகிலும் பிரெஞ்சுக்காரரின் வாயை அடக்குவதைவிட அவனை சுட்டுக் கொல்லுவது சுலபமானது.

இன்று காலையில் அவர்கள் அநேக விஷயங்களை வெளியிடுகிறார்கள். அவர்களைக் காபந்துசெய்யும் படைகள்தான் வாயை மூடிக்கொண்டிருக்கின்றன. ஒருவன் ஒரு கால் முடமாகவும், முகத்தில் வைகல்யத்துடனும் சந்தோஷமாகயிருக்கலாமென்று ஒரு பிரெஞ்சுக்காரர் சொல்லும்பொழுது அதற்கு ஆக்ஷேபனை கிடையாது. வருஷத்தின் கடைசி நாள் என்று ஞாபகம் வரும்பொழுது மற்றொருவர் காவல்காரர்களுக்கு ஆசிகூறிவிட்டு வேலைக்குச் செல்லவேண்டுமென்று அருவருப்புடன் சொல்லுகிறார். அவர்கள் செல்லும்பொழுது பிரெஞ்சுக்காரர்கள் உரக்க சம்பாஷணை செய்துகொண்டே போகிறார்கள். கூடிய சீக்கிரம் உயிர் துறக்கப்போகும் ஸ்ரீமான்களின் குழந்தைகளுக்காக ஒரு நிதியை ஏற்படுத்த வேண்டுமென்று அவர்கள் முடிவு செய்துவிடுகிறார்கள்.

காவல் வேலை செய்கிறவர்களை கிழக்குப் போர்முனைக்கு அனுப்பப் பொருக்கிவிட்டார்கள். பிரெஞ்சுக்காரர்கள் பலமான நாசவேலையை மேற்கொண்டு ஜெர்மானியர்களைக் கலக்கி வருகிறார்கள். இதேவிதமாக ஜெர்மனியிலுள்ள 6-ம் படையினரும் 8 மிலியன் அயல்நாட்டு வேலைக்காரர்களும் ஜெர்மனியின் கொடுங்கோன்மையை எதிர்த்து வருகிறார்கள்.

இந்த நடவடிக்கைகளைப்பற்றிய விவரங்கள் ஜெர்மனியிலிருந்து தப்பித்து ஓடிவரும் கைதிகளிடமிருந்தும் தொழிலாளர்களிடமிருந்தும் வெளிவருகின்றன. காவல் படையின் ஒழுங்கும் மனப்பான்மையும் வேறுபடுகின்றன. சில நாஸி அடிமை முகாம்களில் பரிகாசம் செய்கிறவர்கள் தோட்டாக்கள் மூலமும் அடிகள் மூலமாகவும் அடக்கியாளப்படுகிறார்கள். அஸ்தமனம் ஆனவுடன் தொழிலாளர் அடிமைகளும், யுத்தக் கைதிகளும் துணிவுகரமாகப் பேசவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் துணிவுபடுகிறார்கள்.

ஒரு வயலில் பிரெஞ்சு யுத்தக் கைதிகள் "புருஷனைப் பறிகொடுத்த வியவசாயின் மனைவி" என்ற ஒரு கீதத்தை எல்லோரும் சேர்ந்து பாடிக்கொண்டே வேலைசெய்யத் துவக்கினார்களென்று தப்பித்து ஓடிவந்த ஒரு குடியானவன் சொன்னான். மற்றொரு முகாமில் காவல் படைகள் பிரெஞ்சுக்காரர்களின் கேலியிலிருந்து வாட்டமுற்றார்கள். இந்த விருத்தாந்தம் பின்வருமாறு. "டைபஸ் தொத்துவியாதிக்குப் பயந்து, பேனகள் புழுத்திருந்தவர்களை அதிகாரிகள் ஒதுக்கிவைத்தபொழுது நாங்கள் ஸோல்ஜர்களுடனும் நல்ல வியாபாரம் செய்தோம். எங்களிடம் இந்தப் பேனகள் ஏராளமாகயிருந்தன. ஒவ்வொன்றும் ஐந்து மார்க்குகள் வீதம் நாம் அவைகளை ஜெர்மன் ஸோல்ஜர்களுக்கு விற்றோம்."



இது மிகவும் கோரமாயிருக்கிறது. இதேவிதமாகத்தான் அன்பையும் ஒழுக்க முறையையும் பரிகரிக்கும்படி செய்து ஆயுதங்களாலும் பேச்சுகளாலும் பிறரை அவமானப்படுத்தும் நாஸிகளின் மதமும் கோரமானது. எல்லா சம்பவங்களும் அவ்வளவு கோரமானவையல்ல. ஒரு முகாமில் கைதிகளிடம் உள்ள அறையில் ஜெனரல் டிகாலின் உருவப்படமிருந்தது. அவர்கள் அதை எவ்விதம் சம்பாதித்தார்களென்பது விசித்திரமான நடவடிக்கை. ஒரு காவல்காரர் சொல்லுகிறார். "ஒரு பிரெஞ்சுக்காரரை நிர்வாணமாக ஒரு அறையில் அடைத்துவிட்டு மறுநாள் அவனை நோக்கினால் அவன் பூரா ஆடைகளுடனும் சட்டைப் பைகளில் சுருட்டுடனும் காணப்படுவான்".

அதிகாரிகள் படத்தை அப்புறப்படுத்த உத்தரவிட்டார்கள். இதைப்பற்றி பலமான விவாதம் நடைபெற்றது. இறுதியில் கைதிகள் வெற்றி பெற்றார்கள்.

ஹிட்லர் ஜெர்மனிக்குக் கொண்டுவந்திருக்கும் அடிமைகள்தான் உலகத்தின் சரித்திரத்திலேயே மகத்தான ஆறும் படையினர். அதைச் சேர்ந்த $1\frac{1}{4}$ மிலியன் பிரெஞ்சுக்காரர்களைப்பற்றி நான் அநேக நடவடிக்கைகளை வெளியிடக்கூடும். ஆகிலும் ஐரோப்பாவின் எல்லா பாகங்களிலிருந்தும் ஜெர்மனிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கும் போலந்தியர்களும், ருஷ்யர்களும், யூக்ரேனியர்களும் கிரேக்கர்களும் மற்ற தேசத்தார்களும் ஜெர்மானியர்களை வெறுப்பதிலும் உயிரையும் பொருட்படுத்தாமல் நாசவேலை செய்வதில் உறுதியுடனும் இருப்பதிலும் ஒன்றுபட்டிருக்கிறார்கள்.

நாசவேலை தனிபட்ட முறையிலும் ஒற்றுமையில்லாமலும் நடைபெறவில்லை. அது திட்டப்படிக்கும் உருவாகவும் நடைபெறுகிறது. பிரான்ஸிலுள்ள எதிர்ப்பு இயக்கம் ஜெர்மனியிலுள்ள தொழிலாளர்களுக்கும் கைதிகளுக்கும் உத்தரவுகள் அனுப்பியிருக்கிறது. "ஜெர்மனிக்குக் கட்டாய சேவைக்கு அமர்த்தப்பட்ட பிரெஞ்சுத் தொழிலாளருக்கு" என்று அதில் விலாசம் எழுதப்பட்டிருக்கிறது. அயல்நாட்டு வேலைக்காரர்கள் ஜெர்மனி பூராவிலும் பரவியிருக்கிறார்கள். அவர்கள் ஆயுத உற்பத்தி சாலைகளிலும், சிகை அலங்கார விடுதிகளிலும் சிற்றுண்டி சாலைகளிலும் வேலைசெய்து வருகிறார்கள்.

அவர்களின் வாழ்க்கை முறைகள் சிலாக்கியமானவையல்ல. விஷிக்கு அனுப்பப்படும் ரிபோர்ட்டுகளில் 7 கஜ நீளமும், 5 கஜ அகலமும், 3 கஜ உயரமும் உள்ள அறைகளில் மோட்டுப் பூச்சியும், விரிப்புகளுமில்லாமல் வைக்கோல் மெத்தைகளில் 16 முதல் 20 மனிதர்கள் தூங்குகிறார்களென்று சொல்லப்படுகிறது. வழங்கப்படும் உணவுப்பொருள் கெடுதலானது.

ஸைலீஸியாவிலுள்ள ரசாயன உற்பத்திசாலையில் 11 மணி நேரம் வேலைசெய்யும் 5,000 தொழிலாளர்களுக்கு ஒருவேளை போஜனமும் காலையில் போலிக் காபியும்தான் வழங்கப்படுகின்றதென்று சொல்லப்படுகிறது.

வாலண்டியராக வேலைசெய்யும் தொழிலாளர்களைவிட 5 லக்ஷம் பிரெஞ்சு யுத்தக் கைதிகளின் நிலைமை இழிவானது. அவர்கள் வாலண்டியர்களுடன் பேசுவதில்லை. அவர்களுக்கு ஊதியம் கிடையாது. அவர்களின் ஆஜர் கணக்கு காலையிலும், இரவிலும் பராமரிக்கை செய்யப்படும். சாயங்காலத்தில் அவர்களுடைய மேஜோடுகளும் சல்லடங்களும் அகற்றப்பட்டு அவர்கள் அறைகளில் இரவு பூராவும் அடைக்கப்படுவார்கள். வாலண்டியர்களும் கட்டாயப்படுத்தி சேர்க்கப்பட்டவர்களென்று கைதிகள் அறிந்துகொண்டபின் இவர்களுக்குமிடையே உள்ள சம்பந்தங்கள் வலுப்படுகின்றன. இதேவிதமாகத்தான் பலவகைப்பட்ட தேசத்தார்களுக்கும் உள்ள சம்பந்தங்கள் அந்யோந்யமாகயிருக்கின்றன.

சமீபகாலத்தில் ஒழுங்கு முறைகள் அவ்வளவு நெருக்கடியாக இல்லை. வேலையில்லாத தினங்களில் அவர்கள் டவுனுக்குள் செல்லுவதை ஒருவரும் தடைசெய்ய முடியாது. ஸ்ட்ட் கார்ட்டிலுள்ள நகரங்களின் தெருக்களில் ஒரே குழப்பமாக இருக்கிறது. அயல்நாட்டார்கள் சிற்றுண்டிசாலைகளுக்கும் சினிமாக் கொட்டகைகளுக்கும் செல்லக்கூடாது. தளவரிசைகள் பேரில் அவர்கள் நடக்கக்கூடாது. ஜெர்மன் பொது மக்களுடன் முக்கியமாக ஸ்திரீகளுடன் அவர்கள் சம்பாஷிக்கக்கூடாது. ஆனால் இந்தக் கடைசித்தடை உத்தரவை அமுல் நடத்த முடியவில்லை. ஜெர்மன் ஸ்திரீகள்தான் பிரெஞ்சுக்காரர் தப்பி ஓடுவதற்கு ஒத்தாசை செய்திருக்கிறார்கள்.

கூடியசீக்கிரம் 6-ம் படையினருக்கு சந்தர்ப்பம் ஏற்படும். ஜெர்மனியின் தலைநகரத்தில் பெருகிவரும் வெறுப்பு வெள்ளம் அணைகளை உடைத்துக்கொண்டு வெள்ளப்பெருக்கு ஏற்படுத்திவிடும்.

## நியூ கினியாப் போரில் தரையிலும், கடலிலும், செல்லும் டாங்கிகளின் சேவை.

ஹாலந்தியாவின் சமீபத்திலுள்ள செண்டானி ஏரியின் வடக்குக் கடற்கரையிலுள்ள மூன்று விமானதளங்களில் இரண்டைக் கைப்பற்றிய நடவடிக்கையில் அமெரிக்கத் துருப்புகளை ஏற்றிச்சென்ற தரையிலும், கடலிலும் செல்லக்கூடிய டாங்கிகள் அரிய சேவை செய்தன என்று டெயிலி டெலிகிராபின் விசேஷ நிருபர் எழுதுகிறார்.

அவர் மேலும் சொல்லுகிறார்: "விமான தளங்களுக்குக் கிழக்கிலுள்ள ஹம்போல்ட் விரிகுடாவிலிருந்து போயர் ரஸ்தா வழியாகவும், சகதி வழியாகவும், காடுகள் வழியாகவும் சென்றபின் டாங்கிகள் 20-மைல் நீளமுள்ள ஏரியின் கிழக்குக்கோடியில் தண்ணீரில் மிதக்க ஆரம்பித்தன.

அவைகள் சதுப்பு நிலங்கள் வழியாகவும், கடல்தாண்டியும் நீந்திச்சென்று செண்டானி விமான தளத்திற்கு தென்கிழக்கில் கரை சேர்ந்தன. கடற்கரையிலிருந்து அவைகள் ஏற்றிச் சென்ற காலாட் படையுடன் அவைகள் போர்புரியத் துவங்கி பீரங்கி வைப்புகளையும் அகழ்களையும் கைப்பற்றிக்கொண்டு அரை மைலிலிருக்கும் செண்டானி, சைகிளாப்ஸ் விமான தளங்களைக் கைவசப்படுத்தின. சைக்ளாப்ஸில் 100 ஜப்பானியர்கள் கொல்லப்பட்டார்கள்.

### ஆச்சரியப்படக்கூடிய அம்சம்.

ஹாலந்தியா விமானக்கூட்டம் செண்டானி விமானதளத்திலிருந்து 1½-மைல் தூரத்திலிருக்கிறது.

நேசதேசப்படைகள் ஹம்போல்ட் விரிகுடாவிற்குத் தெற்கில் 90 மைல்கள் தூரத்திலிறங்கியபொழுது அங்கு ஒரு ஜப்பானியர்கூட காணப்படவில்லை. ஆகிலும் 75 பேர்கள் உட்கொள்ளக்கூடிய சூடான ஆகாரம் மட்டும் தயாராகயிருந்தது.

அமெரிக்கர்களுடன் சென்ற பிரிடிஷ் விமானிகளும் தரைப்படையினரும் 42-மணி நேரத்திற்குள் அதைச் சீர்படுத்திவிட்டார்கள்.

நியூ கினியாப் போரில் புதிர்போன்ற விஷயம் யாதெனில், மாடாங்குக்கும் டானு எர்மெரா விரிகுடாவுக்கும் மத்தியிலுள்ள 60,000 ஜப்பானியர்கள் எங்கு சென்றார்களென்று புரியவில்லை.

ஹம்போல்ட் விரிகுடாவிலும் ஹாலந்தியா விமான தளங்களிலும் சில நூற்றுக்கணக்கான ஜப்பானியர்கள் காணப்பட்டார்கள். ஆகிலும் கடற்கரை ஓரமாக உள்ள ஸ்தானங்களிலிருந்து எதிரி மறைந்துவிட்டான்.

---

## ஜெனரல் மாக் ஆர்தரின் புது நடவடிக்கைகளின் வெற்றி.

(லண்டன் தந்தி).

ஜெனரல் மாக் ஆர்தர் 3 அம்சங்களில் செய்துவரும் புது நடவடிக்கைகள் செவ்வனே நடைபெற்றுவருகின்றன. நியூ கினியிலுள்ள தீவில் டச்சுக்காரருக்குரியதானதும் ஜப்பானிய தளமானதுமான ஹாலண்டியாவினுள் 400 மைல்களுக்கப்பாலிலிருந்த நேசப்படைகள் நுழைந்தது எதிரிகளுக்கு அதிர்ச்சியை உண்டுபண்ணிற்று. முதன்முதலில் விமானத்திலின்றும் எதிர்ப்பும் ஏதும் ஏற்படவில்லை. கடலிலிருந்தும் இதுகாரும் ஏதும் நடவடிக்கைகள் நடக்க கஷ்டமில்லை. இதர இடங்களிலும் மிகவும் கஷ்டமான பிரதேசங்களிலும்கூட வெற்றிகாரமாய் படைகள் இறங்கி, இலக்கான விமான தளங்களைப் பிடித்திருக்கின்றனர்.

இந்தவிதமான தாக்குதலை ஜப்பானியத் தலைவர்கள் எதிர்பார்த்திருக்கவேண்டும். ஜப்பானியர்களுக்கு 1,200 விமானங்களும், நமக்கு 160 விமானங்களும் நஷ்டமாகியிருக்கின்றன. எனவே ஜப்பானியர்கள் அதிகப்பட்ட விமானங்கள் நஷ்டமடைந்திருப்பதற்கு, ஜெனரல் மாக் ஆர்தரும் அட்மிரல் நிமிட்ஸும் சேர்ந்து ஏற்படுத்திய "விமான சரக்கூடத்தை" ஜப்பானியர் எதிர்க்காமல் இருப்பதே முகாந்திரமாயிருக்கிறது.

மற்றொரு விதமாய் ஒப்பிட்டுப்பார்த்தலும் முக்கியமாய் இருக்கிறது. தென்மேற்கு பஸிபிக்கில் முனைந்துள்ள பெரிய கப்பற் கூட்டம் ஒன்றும், இறங்குமிடத்தில் பெரும் படை பகுதிகளும் நடவடிக்கைக்கெனவிடப்பட்டிருக்கின்றன. வெற்றிச் சக்கரம் இன்னும் முற்றிலும் சுழலவில்லையெனினும், ஜப்பானியர்கள் 1942-ம் வருஷத்தில் ஆஸ்திரேலியாவின் மேல் படையெடுக்க நியூ கினியில் தங்கியதுமுதல் இந்த சக்கரம் நேசக்கட்சிக்கு மிகவும் திருப்திகரமாய் திரும்பியிருக்கிறது.



நேசதேச விமான, தரைப்படைகள் டச்சு பிரதேசங்களிலும், அட்டாபியிலுமாக உள்ள கடற்கரை தளங்களிலிருந்து நடவடிக்கைகள் நடத்தவும், ஜப்பானியர்கள் அட்டாபி முதல் மடாங் வரையிலும் இல்லாமல் விரட்டப்பட்டிருக்கின்றனர். ஜெனரல் மாக் ஆர்தர் 60,000 பேர் இருக்கலாம் எனக்குறிப்பிடுகின்றார். இதுபோல் இதற்குமுன் மடாங் முதல் ஸாலமன்ஸ் வரையிலும் 700 மைல்களில் நடந்த நடவடிக்கைகளில் 8,000 பேர்கள் முற்றிலும் நிர்மூலமாக்கப்பட்டிருக்கின்றன.

குரைல்ஸ் முதல் மாரியானுல் வரையிலுமுள்ள 1,000 மைல்களுக்கு மேலுள்ள பிரதேசத்திலுள்ளதும் அட்மிரல் கிங் சொல்லுவதுபோன்ற "ஜப்பானியர்களில் நடுவான தற்காப்புகள்" தாக்கப்படுமென்பது அமெரிக்க கடற்படைகளும், விமானப்படைகளும் விரிவாகிவருவதிலிருந்து தெரிகிறது. அந்த வளையில் சில இடங்கள் இருக்கின்றன. அங்கு நுழைதல் அபாயகரமானதாகும். விமானங்களின் நடவடிக்கைகளின் பயனாய் தளங்களிலிருந்துள்ள தூரம் குறைவுபட்டிருக்கிறது.

பேர்ல் துறைமுக நாட்களில் ஜப்பானியர்கள் நினைத்ததுபோலல்லாமல் வேறு பெருந் தாக்குதல்கள் நடைபெற ஏதுவிருக்கிறது. இருப்பினும் இன்னமும் டோக்கியோவிலிருந்து நாம் வெகுதூரத்திலிருக்கிறோம்; ஆனால் ஜப்பானியர்கள் நம்பியுள்ள விமானங்களும் கப்பல்களும் முன்னேறும் ஒவ்வொரு அடியிலும் அதிகப்பட்ட நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டுவருகிறது.

---

## பர்மாவிலும், பஸிபிக்கிலும் நேசதேசத்தாரின் முன்னேற்றம்.

(டெயிலி மெயிலில் லிட்டல் ஹார்ட் செய்த யுத்த விமர்சனம்).

ஜெனரல் ஸ்டில்வெல்லின் படைகளை எதிர்த்து நிற்கும் ஜப்பானிய 18-வது டிவிஷன் துருப்புகளின் பலம் இந்தப் படைகளின் தாக்குதல் மூலமாகவும் அவைகளுக்குப்பின் இறங்கிய வின்கேட்டின் துருப்புகளின் தாக்குதல் மூலமாகவும் குறைந்துவிடவில்லை. போக்குவரத்துகளைத் துண்டிக்கும் இந்த நடவடிக்கையைப்பற்றி ஒரு தகவலும் கிடைக்காததால் அதன் விளைவுகள் யாதென்று மதிப்பிட நமக்கு சாத்யமில்லை.

எந்நிலைமையிலும் மிட்கினாவைப் பிடித்த பின்னும் முன்னேறிவரும் படைகளுக்குப் பின்னால் அமைக்கப்படும் லேடோ ரஸ்தாவிலிருந்து சைனாவுக்குச் செல்லும் பழைய பர்மா ரஸ்தாவை அடைவதற்கு ஸ்டில்வெல் மறுபடியும் இப்பொழுது சென்றிருக்கும் தூரத்தைக் கடந்து செல்லவேண்டும். இந்தப் போரில் முக்கியமான இடுக்கண் யாதெனில் நாம் இயற்கையாகக் கரடு முரடான ஒரு பிரதேசத்தில் படையெடுக்கவேண்டியிருப்பதினால் நாம் உபயோகமுள்ள முறையில் நமது வசமுள்ள படைகளின் பெரும் பாகத்தை இங்கு அனுப்பக்கூடவில்லை.

பஸிபிக்கில் நடைபெறும் போரின் அளவையும், வேகத்தையும் கவனிக்கும்பொழுது இங்கும் நடவடிக்கைகள் விசேஷமான பலனளிக்கக்கூடுமென்று எதிர் பார்ப்பதற்கில்லை. ஆகிலும் இந்தப் போர்முனையில் ஒரு வித்தியாசம் காணப்படுகிறது. இதிலிருந்து உபயோகமுள்ள பலனேற்படுமென்று தோன்றுகிறது. நமது பலப்பெருக்கு அதிகரிக்கும்பொழுது ஜப்பானை வேறு பக்கத்தில் தாக்கும் யுத்த தந்திரப்படி நமது கடற்படையையும் விமானப் படையையும் உபயோகிக்க இங்கு வசதி ஏற்பட்டிருக்கிறது. கால, தேச சந்நிவேசத்தைக் கவனிக்கும்பொழுது பஸிபிக்கில் நேசதேசத்தாரின் முன்னேற்றம் மெதுவாகத்தான் நடைபெறுகிறது. முயற்சிக்குத் தக்க பலன் இங்கு கிடைக்கவில்லையென்று தோன்றுகிறது. நேசதேச பதில் தாக்குதல் துவங்கி ஒரு வருஷமும் ஒன்பது மாதங்களும் ஆகிவிட்டன. ஆஸ்திரேலியாவை நோக்கியிருக்கும் ஜப்பானிய எல்லைச் சரக தற்காப்பு அரண்களை நாம் திரும்பிப் பிடித்தபாடில்லை.

ஆரம்ப காலத்தில் ஜெனரல் மாக் ஆர்தர் ஸாலமன்ஸ் தீவுகளிலுள்ள தெற்குக் கோடியில் தாக்குதலைத் துவக்கினர். 1942-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 8-ம் தேதியன்று குடால்கனாலில் படைகளிறங்கின. இந்தத் தீவைப் பிடிக்க ஆறு மாதங்கள் ஆகிற்று. பிறகு ஜூன் மாதத்தில் தான் நியூ ஜார்ஜியாத் தீவுக்கூட்டத்தில் படைகளிறங்கின. மூன்று மாதங்களுக்குப் பின் தான் அது பிடிக்கப்பட்டது.

...சமயத்தில் நியூகினியாவில் நமது நடவடிக்கை மெதுவாகவும் அதிக சிரமத்துடன் முரட்டுத்தனமான எதிர்ப்புடனும் நடைபெறுகின்றது. ஒரு வருஷ யுத்தத்

திற்குப்பின் நாம் சென்ற ஸெப்டம்பர் மாதத்தில் லேயைத் திரும்பிப் பிடித்ததன் மூலம் நியூ கினியாவின் தென்கிழக்குக் கோடி நமது வசமாயிற்று. அக்டோபருக்குப்பின் முன்னேறித் தாக்கும் வேகம் அதிகரித்திருக்கிறது. முன்னேற்றத்தின்பொழுது நியூ கினியாவிலுள்ள ஜப்பானிய தளங்களையும் அதைச் சுற்றிலுமுள்ள தீவுகளையும் படைகள் சுற்றி வளைத்துச் சென்று அவைகளிலகப்பட்டுக்கொண்ட படைகளுக்கு ஸப்ளைகள் போகாமலும் துண்டித்துவிட்டன. அவைகள் அடைபட்டு அகப்பட்டுக்கொண்டிருக்கின்றனவெனறே சொல்லலாம். நேசதேசப்படைகள் அதிகரிக்கும்பொழுது இந்த முறைகள் விஸ்தாரம் செய்யப்படும். இருதரப்பாருக்கும் முக்கியமானது கடற்படைதான்.

---

## பர்மா அரங்கத்தில் யுத்தம்.

(அலான் ஹூர்ஹெட்).

இந்தியா அரங்கத்திலும், பர்மா அரங்கத்திலிருந்து 2 சேனையைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள், ஒருவர் பிரிடிஷார், மற்றவர் அமெரிக்கர், லண்டனுக்கு விமானத்தில் வந்திருக்கின்றனர்.

ஐந்து மணி நேரங்கள் அவர்கள் பேசியதில் வினா, விடை முறையில் இங்கு சில விஷயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

வினா.—ஜப்பானியர் முன்னேறி இந்தியாவைப் படையெடுப்பார்களா?

விடை.—அது ஒரு பெரும் தாக்குதல் எனச்சொல்லலாம். 40 மைல்கள் இந்தியாவிற்குள் அவர்கள் நுழைந்திருக்கின்றனர். ஆனால் இந்தியாவை முற்றிலும் படையெடுக்கப் போதுமான படை முதலியன அவர்களிடம் இல்லை.

வினா.—எனவே அவர்கள் என்ன செய்ய முயலுகிறார்கள்?

விடை.—அநேகமாய் 3 காரியங்கள். முதலாவதாக அங்குள்ள ஸ்டில்வெல்லின் படைகளுக்கு ஸப்ளை அனுப்பாமல் நம்மைத் தடுத்தல், இரண்டாவதாக, நம்மை பர்மாவினுள் நுழையாது தடுத்தல், மூன்றாவதாக விளம்பரத்திற்கெனவும் ஒரு பெருமையடையவும் இந்திய மண்ணில் போரிடுகிறோம் எனச்சொல்லிக்கொள்ளுதலும்.

வினா.—நாம் என்ன செய்ய முயலுகிறோம்?

விடை.—அநேகமாய் 3 காரியங்கள். முதலாவதாக, சீனாவிற்கு ஒரு பாதை ஒன்று போடுவது. இரண்டாவதாக, வட பர்மாவை சுத்தம் செய்தல், மூன்றாவதாக ஜப்பானியரைக் கொல்லுதல்.

வினா.—யார் வெற்றிபெற்று வருகின்றனர்?

விடை.—நாம் சரியான நிலையிலிருக்கிறோம். ஜப்பானியர்களுக்கில்லாத விமான பலம் நமக்கு இருப்பதால் ஸ்டில்வெல், வின்கேட் படை இவைகளுக்கு வேண்டிய ஸப்ளைகளைச் செய்து வருகிறோம். ஸ்டில்வெல்லைச் சேர்ந்த ரயில் ரஸ்தாப் போக்குவரத்துப் பாதைகள் நெருக்கப்படவில்லை. நாம் பர்மாவிற்குள் நுழைந்து விட்டோம். எதிரிகளைக்கொன்று வருகிறோம்.

வினா.—இப்பொழுது என்ன நடைபெறுகிறது?

விடை.—சொல்லுவது எளிதல்ல. மலைப்பாங்கான இடங்களிலுள்ள நதிகளின் அருகிலுள்ள காடுகளில் தொடர்ச்சியான யுத்த அரங்கங்கள் இல்லை. எந்த விதத்திலும் வேகமானதும், நிச்சயமானதுமான முடிவை அடையமுடியாது. குளிர்காலத்தில்தான் தெரியும்.

வினா.—ஜப்பானியர்களிடத்தில் ஏதாவது மாறுதல் ஏற்பட்டுள்ளதா?

விடை.—வீர சொர்க்கம், அல்லது கியாதி அடைந்த முன்னைய பெரும் வயதடைந்தவர்கள் போன்றவர்களுக்குப் பதிலாய் புதிதான படையில் சேர்ந்தவர்களை எதிர்த்து போர் போகிறோம். ஆனால் அந்த வீரர்க்கும் இருக்கிறார்கள். அவர்கள் இச்சச்சரவில் போராடுகிறார்கள். திடீரென அவர்கள் அதிர்ச்சியடையும்போது எல்லா—



கும். அவர்கள் அதன்பின் தங்கள் மூளையை உபயோகப்படுத்தியும் நம்மிடம் சரணடைகிறார்கள்.

வினா.—இந்தியாவிலிருந்து பர்மாவிற்குப்போகும் சமாசாரத்தைச் சோதித்து அனுப்புவதுபற்றி என்ன சொல்லலாம்?

விடை.—கஷ்டம் இருவிதமானது. ஒன்று தூரம், இரண்டாவது கலப்பான தலைவர்கள் இந்தியா தன்னைப் பாதுகாக்கும் பிரச்னைகளைக்கொண்டிருப்பதால் இந்தியத் தற்காப்புப் பற்றிய விஷயங்களைச் சிறிதளவு கம்மி செய்கிறார்கள். அதாவது கிழக்குத் தலைமை சோதிப்பின் மூலம் தபால்கள் முதலிய அனுப்பப்பட்டு வருவதால் ஜெனரல் ஆச்சின்லெக்கின் தலைமை ஆபீஸுக்கு ஆயிரக்கணக்கான மைல்களுக்கு இவைகள் போகவேண்டியிருக்கிறது. ஜெனரல் ஸ்டில்வெல் தனிமையில் உள்நாட்டில் போர் நடத்துவதால் சோதிப்பை அங்கேயே வைத்துக் கொண்டிருக்கிறார். யுத்தம் இத்தனை பரந்ததாய் இருப்பதாலும், போக்குவரத்துகள் சுலபமில்லையாதலாலும், ராஜீய வியவகாரங்கள் சிக்கலாயிருப்பதாலும், ஒரேவிதமான சமாசாரத்தை பெறுவது சுலபமல்ல. தற்போதைய சோதிக்கப்பட்ட சமாசாரங்கள் எல்லாம் இந்தியாவில் சோதிக்கப்பட்டவை அல்ல. கிழக்கு ஆசிய தலைமை ஆபீஸில்சோதிக்கப்பட்டவைகளாகும்.

வினா.—மாண்ட் பாட்டன் தலைமை ஸ்தாபனம் ஏன் சிலோனிற்கு மாற்றப்பட்டுள்ளது?

விடை.—இந்த விமான, கடற்படை யுத்தத்திற்குத் தகுந்த துறைமுகங்களும் விமான நிலயங்களும் சிலோனில் அமைந்திருப்பதால் இவ்வித மாறல் நெடுநாட்களுக்கு முன்பே திட்டம் போடப்பட்டவைகளாகும்.

வினா.—வருங்காலத்தின் நிலைதான் என்ன?

விடை.—இருவிதமாய் கொள்கைகள் உள்ளன. முதலாவதாக, நாம் பர்மாவை ஜயித்து, பர்மா ரஸ்தாவைத் திறந்துவைத்து ஸப்ளைகளை சீனாவுக்கு அனுப்புதல். இரண்டாவதாக, அந்த பர்மா ரஸ்தா மிகவும் நூதனமாய் இருப்பதால், நாம் ஜப்பானியர்களைக் கடல் மூலமும், விமானங்களின் மூலமும்தான் எதிர்க்கவேண்டும். அதுவேபோல சீனாவுக்கு ஸப்ளைகளும், கடல் மூலம்தான் அனுப்பவேண்டும்.

வினா.—பொதுவாய் உள்ள தேவைகள் என்ன?

விடை.—அதிகப்பட்ட மனிதர்கள், சப்பல்கள், தளவாடங்கள் ஐரோப்பிய யுத்தம் இவ்வருஷத்தில் நின்றுவிடுமென்றும், அதன்பின் நம் தேவைகள் நமக்குக் கிடைக்கும் என்று நாம் வெகுவாய் நம்புகிறோம்.

---

## பர்மாப் போர்முனையின் முக்கியத்வம்.

### ஸர் கீத் முர் டாக், ஆஸ்திரேலிய பத்திரிகை ஆசிரியர்.

ஜப்பானிய யுத்தப் போக்கை மதிப்பதிலும் ஜப்பானியருடன் போர் தொடுப்பதிலும் நாம் பழமையான மனப்பான்மையையும பழக்கவழக்கங்களையும் உபயோகிக்காமல் ஜாகரதையுடனிருக்கவேண்டும். அதன் அநாகரீகத்திலும், கொடுமைகளிலும், வியாதிகளிலும் யுத்த முறைகளிலும் இந்த யுத்தம் மற்ற யுத்தங்களிலிருந்து வேறுபட்டது. அதன் பல பகுதிகளிலும் பல வேறு யுத்த தந்திரங்கள் கையாளப்படுகின்றன.

பர்மாப் போர்முனையில் நாம் கொரில்லாப் போரை நடத்த வெகுகாலம் பயின்று நியூ கினியாவில் வெற்றிபெற்றோம். அஸ்ஸாமில் வெற்றிபெறுவதற்கு நாம் அதிக பிரயத்னமும், தியாகங்களும் செய்யத் தயாராகயிருக்கவேண்டும். சுபடமாக முன்னேறுவதிலும் உறுதியாகச் சண்டைபோடுவதிலும், ஜப்பானிய ஸோல்ஜர் தேர்ச்சி பெற்றவன் என்பதினால் வட கிழக்கிலுள்ள ரஸ்தாக்களையும், இருட்டுப் பாதைகளையும், நதி மார்க்கங்களையும் திரும்பி[illegible]என்பது கஷ்ட சாதயமான நடவடிக்கையாகும். அப்பமான திட்டங்களும், மகத்[illegible]ங்களும் கவனத்துடன் அமைக்கப்படவேண்டும். இது இரண்டாம் பக்ஷமான

போர்முனைதான். எந்நிலைமையிலும் அரக்கானிலும், மணிப்பூர் அஸ்ஸாம் பிராந்தியத்திலும் இந்திய எல்லைச் சரகத்தில் ஒரு அரணை அமைத்து நிலைபெற்றிருப்பதுதான் நமது முக்யமான லக்ஷியம்.

பர்மாவைத் தரைமூலமாகச் சென்று திரும்பிக் கைப்பற்றுவதென்று நினைப்பது முட்டாள்தனம். ஒரு தேச படத்தை எடுத்து அதில் தெற்கு வடக்காக உள்ள கரடுமுரடான மலைகளையும் நமக்குக் கிடைத்திருக்கும் போக்குவரத்து வசதிகளையும் உற்றுப் பாருங்கள்.

பெரிய தாக்குதலைத் துவக்க இந்த மார்க்கங்கள் உபயோகமற்றவை. இந்த மார்க்கத்தின் வழியாக வடக்கு பர்மாவில் முன்னேறிவரும் ஸ்டில்வெல்லிடமுள்ள அமெரிக்க சீனப் படைகளுக்கும் தெற்குக் கோடியில் முன்னேறும் வின்கேட்டின் படைகளுக்கும் ஆஸ்ஸாமிலுள்ள துருப்புகளுக்கும் ஸப்ளைகள் கொண்டுபோகப்படுகின்றன. மேலும் சைனாவுக்கு எண்ணெயைக் கொண்டுபோகும் விமானங்கள் இதன்வழியாகத்தான் செல்லுகின்றன. விமானங்களில் நிறப்பப்படும் எண்ணெயும் இந்த ரஸ்தாவழியாகத்தான் செல்லுகிறது. ஜப்பானியர்களுக்கு ரெங்கூனிலிருந்து ஆரம்பமாகி, நதிகளும், ரஸ்தாக்களும் இருப்புப் பாதைகளும் சமகோடாகச் செல்லுகின்றன. ஒவ்வொன்றின் வழியாகவும் ஒரு சேனைக்கு ஸப்ளைகளைக் கொண்டுபோகக்கூடும்.

இவ்விதமான ஸப்ளை மார்க்கங்களின் வசதியால் ஜப்பான் திடீரென்று மலைகளையும் குன்றுகளையும் தாண்டி இப்பால் சமவெளியைச் சுற்றிலும் ரஸ்தா மூலமாகக் கொஹிமாவிற்கும் சென்று கொஹிமாவைச் சுற்றி வளைத்துக்கொள்ளுவார்களென்றும் நாம் அறியக்கூடாமலில்லை. ஆனாலும் சாதாரண யுத்த முறைகளினால் இந்த நடவடிக்கைகளை நாம் தடுத்திருக்க முடியாதென்று சொல்ல விரும்புகிறேன்.

நகரங்கள் சுற்றி வளைக்கப்பட்டதையும், ரஸ்தாக்கள் துண்டிக்கப்பட்டதையும் நாம் சரிப்படுத்த வேண்டுமென்பது அவசியம். இதைப்பூர்த்தி செய்துவிடுவோமென்பதில் நமக்குப் பூர்ணமான நம்பிக்கை உண்டு. நம்முடைய படைகளைக் காப்பாற்றுமுன் பருவகால மழையும், காற்றும் ஆரம்பித்துவிட்டாலும் நாம் துருப்புகளுக்கு விமான மூலம் ஸப்ளைகளை அனுப்பக்கூடும். ஆனாலும் மற்றொரு விஷயம் கவனிக்கமுள்ளது. மனித பலத்தினாலும் முஸ்தீப்புகளின் உயர்வினாலும் ஜப்பானியர்களை முறியடிக்கும் வரையில் அவர்கள் முரட்டுத்தனமாகவும் விடாப்பிடிப்புடனும் போரை நடத்துவார்கள்.

இது இரண்டாவது அல்லது மூன்றாவது போர்முனையென்றுதான் சொல்லவேண்டும். ஜப்பானியப் படையை எதிர்த்து இங்கிருந்து வெகுதூரத்தில் கடும்போர் நடைபெறவேண்டும். ஆகிலும் இங்கு ஏற்பட்டிருக்கும் அபாயம் பலமாகயிருக்கிறது.

டிமாபூர் இருப்புப்பாதையை இழந்துவிட்டாலும் நமக்குப் பின்னும் அநேக வசதிகளிருக்கின்றன. ஜப்பானியர்களின் பேராசை இத்துடன் நின்றுவிடாது. பிரம்மபுத்ரா நதியையும் மிட்கினாவை நோக்கி முன்னேறி வரும் ஸ்டில்வெல்லின் அமெரிக்கப் படைகளுக்கு ஸப்ளைகளைக் கொண்டுபோகும் ரஸ்தாவையும் கைப்பற்றிவிட ஜப்பான் எண்ணம்கொண்டிருக்கிறது. இந்தப் பகுதியில் ஸ்டில்வெல்லும் வின்கேட்டின் படைகளும் ஜப்பானிய சேமிப்புகளைச் சுற்றி வளைத்து அநேகத்தை அழித்து வருகிறார்கள். ஆகிலும் பிரும்மபுத்திராவும் அதன இருப்புப்பாதையும் மிகவும் முக்யமானவைகள். நம்மிடம் விமானப்படை ஆதிக்கமும் போக்குவரத்து விமானங்களும் வெடிவிமானங்களுமிருக்கின்றன. அவைகள் ஜப்பானியப் படைவரிசைகளுக்கும் சண்டை விமானங்களுக்கும் பின் வெகுதூரம் சென்றுவிடக்கூடும்.

ஜப்பானிய விமானம் கட்டுப்படுவதே கிடையாது. நம்முடைய ஆபீஸர்களும் ஸோல்ஜர்களும் உத்சாகத்துடனிருந்து திறமையுடன் போர்புரிந்துவருகிறார்கள். அவர்களுக்கு எவ்விதம் நாம் புகழுரைப்பது. அவர்களுக்கு நாம் என்ன சலுகை காட்டக்கூடும். வெகுதூரமும் ஸ்தல அமைப்பும் சங்கடம் விளைவிக்கக்கூடிய கடுமையான உஷ்ணமுள்ள பிராந்தியங்களில் அவர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அவர்கள் மிகவும் கஷ்ட சாத்யமான கடுமையான போரை நடத்திவருகிறார்கள். நம்முடைய யுத்த தந்திரத்திற்கு அமெரிக்க ரஸ்தாவும் அதன் எண்ணெய்க் குழாய்களும் உதவியளிக்கக்கூடுமாவென்பது வியவகரிக்கக்கூடிய விஷயம். அமெரிக்க சேனையைச் சேர்ந்த இஞ்சினியர் படைகளும் சைனாவுக்கு உதவிசெய்ய உசிதகாலத்தில் ரஸ்தாவை அமைத்துவிட முடியுமாவென்பது சந்தேகாஸ்பதமாகயிருக்கிறது. இதற்குக் காரணம் மலைகள் அபாரமாக உயரமாகயிருப்பதுடன் அவைக[illegible] ஜப்பானிய விமானப்படையினால் தாக்கப்படக்கூடும். அது வேறு கதை.



## நியூ கினியா நிகழ்ச்சியின் கால அட்டவணை.

தெற்குப் பக்கத்தில் ஜப்பானின் முன்னேற்றம் நியூ கினியாவில் முடிந்தது. ஆஸ்திரேலியாவைத் துண்டிப்பதற்கு இடையூராக நியூ கினியாத் தீவு இருந்தது. அதேவிதமாக ஆஸ்திரேலியாவிலிருந்து நேசதேசத்தார்கள் முன்னேறவொட்டாமல் தடுக்க அதை தளமாக உபயோகிக்கவும் ஜப்பான் முயன்றது.

நியூ கினியாவை நேசதேசத்தார்கள் திருப்பிப் பிடிக்க முயன்ற நடவடிக்கையின் கால அட்டவணை இங்கு அச்சிடப்பட்டிருக்கிறது.

| | | |
|---|---|---|
| ஸெப்டம்பர் | 1, 1942 | மில்னி விரிகுடாவில் நேசதேசத்தாரின் வெற்றி. |
| டிசம்பர் | 10, 1942 | கோனாவில் வெற்றி. |
| டிசம்பர் | 14, 1942 | பூனாவில் வெற்றி. |
| ஸெப்டம்பர் | 12, 1943 | ஸலாமுவாத் திரும்பிப் பிடிபட்டது. |
| ஸெப்டம்பர் | 17, 1943 | லே பிடிபட்டது. |
| அக்டோபர் | 2, 1943 | பின்ஷேபனில் வெற்றி. |
| ஜனவரி | 2, 1944 | சைதார் பிடிபட்டது. |
| ஏப்ரல் | 13, 1944 | போகாட்ஜிம் பிடிபட்டது. |
| ஏப்ரல் | 22, 1944 | ஹாலந்தியாவில் நேசதேசப்படையிறக்கம். |
| ஏப்ரல் | 27, 1944 | மடாங் விழுந்தது. |

*ஜப்பானிய நஷ்டங்களைப்பற்றி மிஸ்டர் கர்டின்.*

தென்மேற்கு பஸிபிக்கில் ஜப்பானுக்கு ஏற்பட்ட நஷ்டங்களைப்பற்றி ஆஸ்திரேலிய பிரதம மந்திரியான மிஸ்டர் கர்டின் பின்கண்ட விவரங்களை வெளிப்படுத்துகிறார்.

1,00,000 முதல் 1,50,000 ஜப்பானியர்கள் மாண்டார்கள்.
5,000 முதல் 6,000 ஜப்பானிய யுத்தக் கப்பல்கள் நாசமாகிவிட்டன.
140 முதல் 170 ஜப்பானிய யுத்தக் கப்பல்கள் மூழ்கின.
200 முதல் 270 ஜப்பானிய சாமான் கப்பல்கள் மூழ்கின.

## ஜப்பானியர்களுடன் போர் புரியும் முறை.

ஜானி ஜாக்ஸன் துணிவுகரமாக லேயில் வேவு பார்ப்பதற்காக ஒருவர் செல்லக்கூடிய விமானத்தில் சென்றான். அவனுடைய சகோதரர் சுட்டுத்தள்ளப்பட்டு கடலில் விழுவதை அவர் கண்டார். அவருடைய விமானமும் சுடப்பட்டு தீக்கிரையாகிற்று. அவர் காடுகள் வழியாகவும் சென்று ஒரு அமெரிக்கப் பருந்துப் பாய்ச்சல் விமானத்தை சந்தித்தார். அதில் ஏறிக்கொண்டு ஜப்பானியச் சண்டை விமானங்கள் தாக்கிவந்த மோர்ஸ்பித் துறைமுகத்துக்குத் துணிவுகரமாகச் சென்றார். அந்த நடவடிக்கையில் அவருக்கு தேக அசௌக்கியம் ஏற்பட்டது. ஆகிலும் ஜப்பானிய சிரோ விமானப்படையை எதிர்க்க அவர் தன்னுடைய சண்டை விமானத்தை ஓட்டிச் சென்றார். அதில் அவர் உயிர் துறந்தார்.

(நியூ கினியா கால அட்டவணைக் குறிப்பில் ஜார்ஜ H. ஜான்ஸ்டன் எழுதியிருக்கிறார்).

**பிரகிருத யுத்தத்தில் அயல்-நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.**

**அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.**

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 198. (2-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 20- 5-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | 24- 5-44 | குழிபிறை | ... மாலை 7.00 |
| 21- 5-44 | குடுமியாமலை | ... ,, 7.00 | ,, | செவலூர் | ... ,, 7.30 |
| ,, | பரம்பூர் | ... ,, 7.30 | 25- 5-44 | களமாவூர் | ... ,, 7.00 |
| 22- 5-44 | வெங்களூர் | ... ,, 7.00 | ,, | நல்லூர் | ... ,, 7.30 |
| ,, | கோனுபட்டு | ... ,, 7.30 | 26- 5-44 | பனையப்பட்டி | ... ,, 7.00 |
| 23- 5-44 | நச்சாந்துபட்டி | ... ,, 7.00 | ,, | ராங்கியம் | ... ,, 7.30 |
| ,, | விராச்சிலை | ... ,, 7.30 | | | |

### பிரஸங்கம் 199 (3-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 27- 5-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | 31- 5-44 | மழையூர் | ... மாலை 7.00 |
| 28- 5-44 | குராக்காடு | ... ,, 7.00 | ,, | கரம்பக்குடி | ... ,, 7.30 |
| ,, | கோட்டைக்காடு | ... ,, 7.30 | 1- 6-44 | வாளரமாணிக்கம் | ... ,, 7.00 |
| 29- 5-44 | தென்னதிரயன்பட்டி | ... ,, 7.00 | ,, | எம்பல் | ... ,, 7.30 |
| ,, | விசலூர் | ... ,, 7.30 | 2- 6-44 | விராலிமலை | ... ,, 7.00 |
| 30- 5-44 | ராமச்சந்திரபுரம் | ... ,, 7.00 | ,, | பொருவாய் | ... ,, 7.30 |
| ,, | ராயவரம் | ... ,, 7.30 | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 20— 5—44 | பொன்னமராவதி. | 27— 5—44 | திருமெய்யம். |
| 21— 5—44 | தீத்தான்விடுதி. | 28— 5—44 | மருதன்கோன்விடுதி. |
| 23— 5—44 | வடகாடு | 30— 5—44 | குடுமியாமலை. |
| 24— 5—44 | ராயவரம். | 31— 5—44 | கீழாநிலை-புதுப்பட்டி. |
| 25— 5—44 | கீழாநிலை. | 1— 6—44 | ஆலங்குடி. |
| 26— 5—44 | பாப்பாபட்டி. | 2— 6—44 | புதுக்கோட்டை. |

---

## கும்மிமெட்டு.

(*By Mr. S. Malayappan, President, Catholic Action Society, Pudukkottai*).

1. சிறப்போங்கும் சென்னை ராஜ தானியின்
செங்கற்பட்டு என்னும் தாலுக் காவில்
மறையோர் புகழும் மாமகி பன் வெகு
மதிப்பு பெற்ற ஜமே தாராம்.

2. எக்ஸ்ட்ரா அஸிஸ்டெண்ட் ரிக்ரூட் டிங்கு
ஆபீ சரான ரா கண் ணையிரம்
தக்கோன் ஜமேதார் தவப்புதல் வனும்
செக்கன் சுபேதார் சுப்ர மண்யம்.

3. காசினோ என்ற நாலா யிரம்மைல்
களுக்கப் பாலுள்ள போர் நாட்டில்
நாசிகள் செய்சூட்சி சுரங்க வெடிதன்னை
நேச நாட்டி னருட நீக்க.

4. சேற்றுப் பூமியதில் திடகாத்ர மாயவர்
பார்த்துப் பத்திரமாய் பரித்துத் தோண்ட
கூற்றுவன் வைத்ததோர் கொல்லும் வெடியதை
கூர்ந்து பார்த்தார் வெகுசடு தியிலே.

5. வெடிக்கும் சமயத்தில் வேகத்தைத் தீர்க்கதில்
வீழ்ந்து மாய்ந்தார் பலர்உயிர் கார்க்க
படிக்கும் பாடல்கேட்கும் பரிதாபம் அந்த
பால சுபேதார் ரா சுப்ர மண்யம்.

6. தியாக மூர்த்தி சுபேதார் சுப்ரமண்யம்
திருவிளக் காகத் திகழ்ந் திடவே
திசைகள் எட்டுடன் கோணம் பதினாறும்
தீதில் சுப்ரமண்ய நாமம் புகழ.

69411

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—23-5-44.